
பெரியபுராணம்



64-வது நாயனார் - தெய்வத்திரு

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

பெரியபுராணம்

64-வது நாயனார்

தெய்வத்திரு

திருமுருக **கிருபானந்த வாரியார்** சுவாமிகள்

வெளியீடு

குகஸ்ரீ வாரியார் பதிப்பகம்

132 / 107, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002. தொலைபேசி : 2845 7666
Email : guhashri@gmail.com
Web : www.variyarswamigal.com

நூற் குறிப்பு

நூல்	:	பெரியபுராணம்
ஆசிரியர்	:	திருமுருக **கிருபானந்தவாரியார்** சுவாமிகள்
உரிமை	:	பதிப்பகத்தாருக்கு
பதிப்பு	:	8வது பதிப்பு 2016
தாள்	:	டி.என்.பி.எல். வெள்ளைத்தாள்
அளவு	:	டெம்மி சைஸ் 1/8
எழுத்து	:	10.5 புள்ளி
பக்கம்	:	688
படிகள்	:	2000
விலை	:	ரூ. 320/–
பதிப்பகம்	:	**குகஸ்ரீ வாரியார் பதிப்பகம்** **132/107, சிங்கண்ண தெரு,** **சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.** **போன்: 044 - 28457666**
கணிப்பொறி அச்சு	:	**ஸ்ரீ ஜெயம் கிராஃபிக்ஸ்** **16/146, ஆற்காடு ரோடு,** **வளசரவாக்கம், சென்னை - 600 087.** **போன்: 044 - 4284 6363**
அச்சிட்டோர்	:	**ஸ்ரீ வாரி கார்ட்ஸ்** **8, கணபதி தெரு,** **சென்னை - 600 014.** **போன்: 044 - 45516454**

உ

முருகா

முன்னுரை

உலகெ லாம்உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்திவ ணங்குவாம்.

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி.

எந்தை கந்தவேள் திருவருள் துணைகொண்டு, பலகாலும் அன்பர்கள் பலர் விரும்பி வேண்டிக்கொண்டதனாலும், பண்டை நல்வினைப் பயனாலும், திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்தை உள்ளுந்தொறும் இனிக்கும் தெள்ளுதமிழ் மணக்கும் இச்செந்தமிழ் நாட்டு அன்பர்கள் பலரும் படித்துப் பயன்பெறும் பொருட்டு, இன்றியமையாத சில இனிய பாடல்களுடன் உரைநடையாக எழுதலானேன். முருகவேள் முழு முதற்கருணை முன்னின்று முடிக்குமாக.

அன்பன்

உ

முருகா

அண்ணாச்சிக்கு அர்ப்பணம்

"**தொ**ண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" ஔவை அருளிய ஔடத மொழி இது. தொண்டு என்பது என்ன? பயன் கருதாது செய்யும் உதவி. இன்னது செய்தால் இன்னது கிடைக்கும் என்ற குறியெதிர்ப்பில்லாது - கைம்மாறு கருதாது ஓர் உள்ளுருக்கத் தோடு செய்யும் உதவியே தொண்டாகும்.

அத்தகைய தொண்டியற்றி இந்நாள் எங்களைத் தூக்கிப் பிடிக்கும் தூயவரே ஓட்டல் சரவணபவன் பி.ராஜகோபால் அண்ணாச்சி அவர்கள். வாரியார் சுவாமிகளின் நினைவினை காலகாலம் நிலைக்கச் செய்துள்ள கருணை வாரிதி அவர். ஊட்டிவிட்ட கையை உதறி விடுகின்ற இக்காலத்தில், சுவாமியால் அணுத்துணைப் பயனும் பெறாது சுவாமிக்காக வாழும் அப்பழுக்கற்ற அந்த ஜீவனின் ஆசையே ஆலயமாக காங்கேய நல்லூரில் கால் கொண்டுள்ளது. தன் ஞானத் தந்தை மோனத் தவமிருக்கும் தலத்தில், வானத்தை மூட்டும் கோபுரமெழுப்பி வருங்காலமும் சுவாமியை வழிபடச் செய்துள்ள அந்த வள்ளியம்மை நாயகனை வாழ்த்த என் வாயொன்று போதாது.

அன்னை வடிவாயமைந்த சுவாமிகள் அமரத்துவம் பெற்ற பிறகு, என்னை வளர்க்க, எங்குலத்தைத் தான் வளர்க்க புன்னையடி ஊரிலிருந்து புறப்பட்டு வந்த புண்ணியரன்றோ என் ஆராதனைக்குரிய அண்ணாச்சி அவர்கள்!

குடைநிழலளிக்கும் அந்தக் கொற்றவனின் பெருமையை எந்த அடைமொழிக்குள்ளும் அடக்கிவிட முடியாது.

பாலூட்டும் பருவத்திலிருந்து என்னைத் தாலாட்டி வளர்த்த தந்தையாரான வாரியார் சுவாமிகளின் திருப்புகழைத் திசை யெங்கும் பரவச் செய்துள்ள அண்ணாச்சியின் குடும்பத்திற்கு

இற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உந்தனோடு
உற்றோமே ஆவோம் உமக்கே ஆட்செய்வோம்

என்றுகூறி, பனித்த கண்களுடன் நன்றியைப் படைத்துக் கொள்கிறேன்.

அந்நாளில் தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார் பெருமானைச் சிறப்பித்த அநபாயச் சோழனைப்போல் இந்நாள் தொண்டர்பிரான் வாரியார் சுவாமிகளைச் சிறப்பிக்க வந்த அண்ணாச்சி அவர்கள், தன்னைப் பெறாத தந்தைக்கு அன்பு அறாத நெஞ்சோடு ஆலயம் எழுப்பி, குடமுழுக்கு விழா வெடுக்கும் இந்நாளில் இந்தத் தொண்டர் புராணமான பெரியபுராணம் வெளிவருவது ஒரு சிறப்பே.

ஐம்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் வாரியார் சுவாமிகள் திருப்புகழமிர்தத்தில் வரைந்தருளிய இந்தப் பெரிய புராணத்தை அச்சேற்ற ஊண் உறக்கம் மறந்து உழைத்தவர் வாரியார் சுவாமிகளின் வாஞ்சைக்குரியவரான தருமபுரி புலவர் **க. தியாகசீலன்.** அவருடைய உழைப்பைத் தம் அருள் ஞானச் சிரிப்போடு சுவாமிகள் அங்கீகரிப்பதை என்னால் உணர முடிகிறது.

தொண்டர்கள் பெருமையைத் தொகுத்துக் கூறும் இந் நூலினைத் தொண்டர்க்குத் தொண்டராகத் திகழும் கயிலைப் புனிதர் பி.ராஜகோபால் அண்ணாச்சி அவர்களுக்கு அர்ப் பணிப்பதில் வாரியார் சுவாமிக்கே ஓர் ஆனந்தம் பிறக்கும். ஏனெனில்,

சரவணப வாவென்னும் சாந்தஉண வில்லம்
பரவும் படிநடத்தும் பண்பன் - தரமார்
இராசகோ பாலன் இனிதுபல் லாண்டு
தராதலத்தில் வாழ்க தழைத்து.

என்று வாழ்த்தியவர் அல்லவா அவர்.

யான் வாழும் நாளும் வாழிய அண்ணாச்சி.

கோடிலிங்கம்

தொண்டர்தம் பெருமை

ஈசனைப் போற்றிப் பூசனை செய்த பேசவொண்ணாப் பெருமையுடையவர். ஐம்பெரும்பூதங் கலங்கினும் தன்னிலை மாறாதவர். கோதிலாத குணப் பெருங்குன்றத்தைப் போன்றவர். கேடும் ஆக்கமும் கெட்ட திருவினராகி ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கி வாழ்ந்தவர். திருநீறு, கண்டிகை பூண்டு, வீரமும் ஈரமும் உடையவராகிக் குறைவிலா நிறைவுடையவர். அவர்தான் கருவாழ்வு தவிர்த்துப் பெருவாழ்வு வாழ்ந்த என் தாத்தா வாரியார் சுவாமிகள்.

பெரியபுராணத்தின் பிழிவே வாரியார் சுவாமிகள் என்னலாம்.

அடியார்க்கு அன்னம் பாலித்த இளையான்குடிமாறன், சிறப்புலி, முனையடுவார், மூர்க்கர், இடங்கழியார், திருவிளக்குத் தொண்டு செய்த நமிநந்தியடிகள், கலியன், கணம்புல்லர், திருக்குளம் வெட்டிய திருநாளைப் போவார், தண்டியடிகள், சித்த சுத்தியுடன் அஞ்செழுத்தை நித்தம் ஓதிய சோமாசிமாறன், மீனை நிவேதித்த அதிபத்தர், அடியார் தொண்டு செய்த கணநாதர், நேசர், சுந்தரரின் பேர் சொல்லி நின்ற பெருமிழலைக் குறும்பர், நாளொன்றுக்குப் பாவொன்று பாடிய ஐயடிகள் காடவர்கோன், திருமந்திரம் மொழிந்த திருமூலர், கோவை பாடிக் கோயில் புதுக்கிய காரி, உள்ளத்தால் வழிபட்ட வாயிலார், மனக்கோயில் கட்டிய பூசலார், யாழிசைத்த நீலகண்ட யாழ்ப்பாணர், தொண்டர்க்கு ஆடையும் துறவியர்க்குக் கீளாடையும் தந்த அமர்நீதி, ஆடை தோய்த்துக் கொடுத்த திருக்குறிப்புத் தொண்டர், கோயில் களுக்குக் குங்கிலியம் (தூபம்) இட்ட கலயர், மலர்த்தொண்டு செய்த முருகர், உருத்திர மந்திரஞ் செபித்த உருத்திர பசுபதியார், குழலூதிப் பசு மந்தையைப் பராமரித்த ஆனாயர் – இன்னும் பலர் தத்தம் அளவில் ஓரொரு தொண்டு செய்து, நாயனார் என்னும் தகுதி பெற்றுக் கோயில்களுக்குள் கொலுவிருக்கின்றனர்.

இத்தனைத் தொண்டுகளையும் ஒருங்கே செய்து 64வது நாயனாராகத் திகழ்பவர் நம் வாரியார் சுவாமிகள். ஞானசம்பந்தரைப்போல் நாளும் தமிழ் வளர்த்து, அப்பரைப்போல் உழவாரப் பணி செய்து, சுந்தரரைப்போல ஏழையர்க்கு உதவி, மணிவாசகரைப் போல் சைவ சமயத்தைக் காத்து வந்த காருண்யசீலரான நம் வாரியார் சுவாமிகள் வழங்கிய இப்பெரியபுராணத்தை ஆன்மீக உலகுக்கு அர்ப்பணிக்கிறேன்.

குகஸ்ரீ வாரியார் பதிப்பகம் என்னும் நிறுவனத்தை நிறுவி அதன்வழி இந்தப் பெரியபுராணம் போன்ற ஞானக் கருவூலங்களை உலகுக்கு அளிக்கும் கருவியாக என்னைப் பயன்படுத்தி ஆன்மீக உலகமும், இலக்கிய உலகமும் என் பெயரை உச்சரிக்கச் செய்துள்ள என் தந்தையார் ம. கோடிலிங்கத்துக்கு என்ன கைம்மாறு செய்ய வல்லேன்?

பிறவி என்பது உண்டாயின் என்றும் அவருக்கு மகளாகப் பிறக்கப் பெருமான் அருள்வானாக.

தீபா மயிலப்பன்
குகஸ்ரீ வாரியார் பதிப்பகம்

சேக்கிழார்

தூக்கு சீர்த்திருத் தொண்டர் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்லபிரான் எங்கள்
பாக்கி யப்பய னாய்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னி இருத்துவாம்.

சான்றோர் பலர் வாழுஞ் சால்புடையது தொண்டை நன்னாடு. பாலாறு சூழப் பல்வளமும் பெருகிப் பெருமைமிக்கது. அந்நாட்டில் இருபத்தி நான்கு கோட்டங்கள் உண்டு; அவற்றுள் புலியூர்க்கோட்டத்தைச் சேர்ந்த குன்றைவள நாட்டில் விளங்குவது குன்றத்தூர் என்னும் நற்றவப்பதி. அவ்வூரில் சேக்கிழார் என்னுந் திருமரபு சிறந்திருந்தது.

சோழ மன்னன் முற்காலத்திலே தொண்டை மண்டலத்தில் குடியேற்றும் பொருட்டுத் தேர்ந்தெடுத்த நாற்பத்தெண்ணா யிரம் நற்குடிகளுள் கூடல்கிழான், புரிசைகிழான், வெண்குளப் பாக்கிழான் என்று கூறும் மரபினருடன் சேர்த்து எண்ணத் தக்கது இந்தச் சேக்கிழார் மரபு. இத்திருமரபிலே செந்தமிழ் நாடு உய்ய அருள் மொழித்தேவர் அவதரித்தார். (சேக்கிழார் என்றது குடிப்பெயர்; தாய் தந்தையர் இட்ட பேர் அருள் மொழித்தேவர் என்பதாம்.) அவருடைய தம்பி பாலறா வாயர்.

சேக்கிழார் சுவாமிகள் அவதரிக்கத் தவஞ் செய்தது வேளாளர் குலம். அக்குலத்தின் பெருமை ஆராலும் அளத்தற்கரியது. வேள் என்ற சொல் மண், விருப்பம் என்ற இரு பொருள்களை உடையது. வேளாளர் என்பது மண்ணை உழுது ஆள்பவர் என்றும், உலகிலுள்ள உயிர்கட்கு உபகாரத்தைச் செய்பவர் என்றும் பொருள்படும். ஆறு சமயங்கட்குந் தலைவியாகிய உமை யம்மையார் காஞ்சியம்பதியில் வழிபட்டபோது சிவபெருமான் தந்தருளிய இருநாழி நெல்லை அம்பிகை தமது மக்களாகிய வேளாண் மரபினருக்குத் தந்தனர். அவர்கள் அதனைப் பெற்று உலகமே வயலாகவும், கடல் ஏரியாகவும், வருணன் கம்புகட்டியாகவும், பலராமன் கலப்பையாகவும், இயமனிடமுள்ள கிடாவும், ஈசனிடமுள்ள விடையும் உழவு மாடுகளாகவும்,

ஆண்டுதோறும் விதையைத் தப்பாமல் அளந்து தருபவர் கச்சியம்பதிக் காமபீடத்தில் எழுந்தருளியுள்ள அறம் வளர்த்த அம்மையாராகவும் இருக்கப் பெற்று எறும்பு முதல் இமையவர் வரை உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் உணவு பெற்று உய்ய உழவு புரிந்து உதவுவர்.

பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் அவளுடைய கணவன் உயிரிழக்க, அங்ஙனம் அவன் மாய்ந்ததற்குக் காரணம் தாமாக இருந்ததால் வேளாள மன்றத் தலைவர்கள் எழுபது பேரும் தீக்குழி வீழ்ந்து உயிர் துறந்து திருவாலங்காட்டுத் தேவன் திருவடி சேர்ந்து வாய்மையைக் காத்தனர். இத்தகைய காராளர் வயலை உழுது கையார நட்ட முடி திருந்தினால், பாராளும் மன்னர் பசும்பொன் முடி திருந்தும். அன்றியும் அவர்கள் ஏரடிக்குஞ் சிறு தாற்றுக்கோலே தரணியாளும் தனிமன்னர் செங்கோலுக்குத் துணைபுரிவது. அறுபது தனி நாயன்மாருள் பதின்மூவர் வேளாளராவர். ஆதலினால் சீராலும் பேராலும் உயர்ந்த காராளரது சிறப்பை ஆராலும் அளக்கற் பாலதன்று.

அக்காலத்துச் சோழவள நாட்டை இனிது அரசு புரிந்து வந்தவர் அநபாயசோழர். அம் மன்னர்பிரான் அன்பும் அறனும் வாய்மையும் தூய்மையும் வீரமும் தீரமும் உடையவர். அம் மன்னரிடம் அருள்மொழித்தேவருடைய தந்தையார் அமைச்சராக இருந்தார். சோழர் அமைச்சரை ஒருசமயம் "கடலினும் பெரியது எது?" "உலகினும் பெரியது எது?" "மலையினும் பெரியது எது?" என்ற மூன்று வினாக்களை வினாவினார். அமைச்சர் தமது இல்லமடைந்து விடையறியாராய் வாட்டமுற்று இருந்தார். கலை பயின்றுவந்த நமது அருள்மொழித்தேவர் குறிப்பறிந்து, தந்தையாரது தாள்மலர் தொழுது, "தந்தையே! ஏன் திருமுகம் சோர்ந்துளது?" என்று வினாவினார். அவர் அரசன் வினவிய வினாக்களைக் கூறி அதற்கு விடையறியாது வருந்துவதாகக் கூறினார். அதுகேட்ட அடிகள் புன்முறுவல் பூத்து ஏடும் எழுத்தாணியும் எடுத்துத் திருவள்ளுவரது திருக்குறளிலிருந்தே கீழ்வரும் மூன்று பாக்களை எழுதித் தந்தையாரிடம் தந்தார்.

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

. நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது

இத்னை அமைச்சர் அரசரிடம் தந்தார். சோழ மன்னர் பெரிதும் மகிழ்ந்து, "மூன்று கேள்விகட்கும் திருக்குறளிலேயே விடை கண்ட திறம் மிகவும் விழுமியது" என்று பாராட்டினார். அமைச்சர் 'இங்ஙனம் கண்டது அடியேனல்லன்; அடியேனது புதல்வன் அருள்மொழித்தேவனே" என்றார். அதுகேட்ட அநபாய மன்னர் அதிசயித்து அத்தகைய அரும்புதல்வரைக் காண விரும்பி 'அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்' என்றபடி எல்லா வகையான விருதுகளும் அனுப்பி அருள்மொழித்தேவரை அரசவைக்கு அழைத்து, அவரை மிகவும் உபசரித்து முதல் மந்திரிப் பதவியை நல்கினார். அருள்மொழித்தேவர் மிக மிகத் திறமையுடன் அவ்வமைச்சுத் தொழிலை நடாத்தி அறநெறியை எங்கும் பரப்பினார். அவரது அறிவாற்றலைக் கண்ட மன்னர் பெரிதும் மகிழ்ந்து அவருக்குச் செங்கோல் ஒச்சும் தலைமையும், 'உத்தமச் சோழபல்லவன்'' என்ற பட்டமும் வழங்கினார். அருள்மொழித் தேவர் மதிநலமும் ஒழுக்க நலமும் அன்புநலமும் உடையராய் உலகெலாம் போற்ற விளங்கினார். சோழநாட்டில் உள்ள திருநாகேச்சுரம் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானிடம் சேக்கிழாருக்கு அளவற்ற அன்பு விளைந்தது. அம் மூர்த்தியையே தனது வழிபடு மூர்த்தியாகக் கொண்டார். அதனால், தமது பிறப்பிடமாகிய குன்றத்தூரிலே மாடவீதியும் திருக்கோயிலும் திருநாகேச்சுரத்தில் உள்ளதுபோலவே அமைத்து அதற்குத் திருநாகேச்சுரம் என்று பேரிட்டு, நித்திய நைமித்திக வழிபாடுகள் புரிவித்து மகிழ்ந்தார்.

இவ்வாறு, சேக்கிழார் இமசேது பரியந்தம் நன்னெறி நிறுவி வருங் காலத்தில், காமச்சுவை நிரம்பிய சிந்தாமணி என்னும் நூலைச் சைவசமயிகளும் அதன் தமிழின் இனிமை கருதிக் கற்றுத் தமது பொன்னே போன்ற வாணாளை வீணாளாகக் கழிப்பா ராயினார்கள். அது நெற்குத்தி உண்ணாது உமிக்குத்திக் கை வருந்துவது போலும், கறவைப் பசு நிற்க மலட்டுப் பசுவைக் கறந்து உளந் தளர்வது போலும், பூஞ்சோலை வழியிருக்கக் குழியில் விழுந்து சேற்றில் சிக்கித் தவிப்பதுபோலும், கரும்பிருக்க இரும்பை மென்று பல்லுடைத்துக் கொள்வதுபோலும், விளக்கிருக்க மின்மினியை நாடுவதுபோலும் ஆகும்.

கலகமிடும் அமண்முருட்டுக் கையர் பொய்யே
கட்டிநடத் தியசிந்தா மணியை மெய்யென்று
உலகிலுளோர் சிலர்கற்று நெற்குத் துண்ணாது
உமிக்குத்திக் கைவருந்திக் கறவை நிற்க
மலடுகறந் துளந்தளர்ந்து குளிர்பூஞ் சோலை
வழியிருக்கக் குழியில்விழுந் தளறு பாய்ந்து
விலைதருமென் கரும்பிருக்க இரும்பை மென்று
விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்து நொந்தார்.

அநபாயமன்னரும் அந்தச் சீவகசிந்தாமணியை மெய்ந்நூல் என்று எண்ணிப் பாராட்டிக் கேட்பாராயினார். அதனை யறிந்து சேக்கிழார் வருந்தினார். "மந்திரிக்கழகு வரும்பொருள் உரைத்தல்" என்றபடி, அமைச்சராகிய அவருக்கு மேல்வருந் தன்மை தெரிந்தது. அரசனைத் திருத்துவது அமைச்சனது கடமையே யன்றோ? அரசன் தீவழி செல்வானாயின் உலகமும் அவ்வழி செல்லும். "அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்." கூன்பாண்டியன் சமண் சமயம் புகுந்ததனால் பாண்டிநாடும் அச்சமண் இருளால் மூடப்பட்டது. ஆதலின், அரசனைத் திருத்தி நல்வழிப்படுத்த எண்ணினார்.

"தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்"

என்று அமைச்சரது தன்மையைக் கம்பர் கூறுவதும் ஈண்டு சிந்தித்தற்குரியது.

சேக்கிழார் மன்னரைச் சந்தித்து, "அரசரேறே! நீர் தெய்வநல மிக்க சைவசமயியாய் இருந்தும், இருமைக்கும் நன்மை செய்யாத அவகதையைக் கேட்டுப் போது கழிக்கின்றீர். இம்மை மறுமை வீடு என்னும் மும்மைக்கும் நன்மை பயக்கும் சிவகதையைக் கேட்டு உயிருக்கு உறுதி தேடுவாய்" என்றார். மன்னர், "ஐயா! இது அவகதை யாயின் சிவக்கதை யாது? அதன் அருமையும் பெருமையும் யாவை? அதனைக் கூறியவர் யார்? கேட்டவர் யாவர்? உய்வு பெற உரைத்திடுவீர்" என்று கேட்டார். சேக்கிழார், "வேந்தரே! திருவாரூரிலே கருமூலம் அகற்றுந் திருமூலநாதராம் சிவபெருமான் அடியெடுத்துக் கொடுக்க, சமயகுரவர் நால்வருள் ஒருவராகிய சுந்தர மூர்த்தி நாயனார் பதினொரு பாக்களால் திருத்தொண்டத் தொகை பாடியருளினார். அத்திருத் தொண்டத்தொகைக்குத், திருநாரையூரிலே நம்பியாண்டார் நம்பி, பொல்லாப்பிள்ளையார் பொருள் கூற, அப் பிள்ளையார்பால்

இளமையிலேயே வேதாகமங்களைக் கேட்டிருந்த நம்பியாண்டார் நம்பி வகையாக ஓர் அந்தாதி பாடியருளினார். அந்த நம்பி யாண்டார் நம்பிஅந்தாதியைத் திருமுறை கண்ட ராஜராஜ அபயகுலசேகர சோழமன்னரும், சிவாலய தேவர் முதலியோரும் எடுத்து இனிது பாராட்டினார்கள்'' என்றார்.

மன்னன் மகிழ்ந்து, ''அதனை ஓதியருளும்'' என்ன, சேக்கிழாரடிகள் திருத்தொண்டத்தொகையையும், நம்பியாண்டார் நம்பி அந்தாதியாகிய வகையையும் கூறி, விரித்துப் பொருள் கூறியருளினார். வளவர்கோன் கேட்டு உள்ளம் உருகிச், சிவபெருமானது திருவருள் திறத்தையும் திருத்தொண்டர்களின் அன்பின் திறத்தையும் எண்ணி எண்ணி இதயம் மகிழ்ந்து, சேக்கிழாரை நோக்கி, "இப்புண்ணிய மெய்வரலாறுகளை விரித்து உலக மெல்லாம் உணர்ந்து தெளிந் துய்யப் பெருங்காவியமாகப் பாடித் தருவீர்!'' என்று பொன்னும் மணியும் தந்தார்.

அறஞ் செய்தற்காகும் அச்செல்வத்தை அருள்மொழித்தேவர் பெற்றுக்கொண்டு மன்னர்பெருமான்பால் விடை பெற்றுக் கொண்டு தில்லையம்பதியை அடைந்தார். தில்லையின் எல்லை வந்தவுடனேயே வாகனத்தினின்றும் இறங்கி அம்பலவாணரை நினைந்து மண்மேல் வீழ்ந்து, உடல் புளகித்து, உள்ளம் உருகி, திருவருள் மயமாகிச் சிவகங்கையில் முழுகி, பொன்னம்பலஞ் சென்று ஆனந்தத் தாண்டவம் புரியும் அம்பலவாணரைத் கண் குளிரக் கண்டு, பேரானந்தமுற்றுத், தொடுமணற் கேணிபோல் கண்ணீர் பெருக, ''அம்பலவாணரே! அடியேன் உமது திருத்தொண்டர்களது மெய்வரலாறுகளைப் பாடி முடிக்க அடியெடுத்துத் தர வேண்டும்'' என்று வேண்டினார்.

அப்பொழுது வானில் அருள்நாத ஒலியாக **"உலகெலாம்"** என்ற ஓர் அருள்வாக்கு யாவருங் கேட்க எழுந்தது. அதனைக்கேட்ட தில்லைவாழ் அந்தணரும் ஏனோரும் அதிசயித்தனர். பரிவட்டமும் திருநீறும் தரப்பட்டன. அவற்றைப் பெற்ற அடிகள் சமய குரவர்களையும் சேவித்து ஆயிரக்கால் மண்டபம் எய்தி, திருவருளைச் சிந்தித்துத் தவவொழுக்கத்துடன் இருந்து, "உலகெலாம்'' என்று இறைவன் அடியெடுத்துக் கொடுத்ததையே முதலாக வைத்து மிகமிக இனிய செந்தமிழ்ப்பாடல்களாகப் பாடி 4286 திருப்பாடல்களால் முடித்துத் **"திருத்தொண்டர்புராணம்"** என்று அதற்குப் பேரிட்டு, அம்பலவாணர் திருவடியில் வைத்து வழிபட்டார்.

சேக்கிழார் தில்லைக்கு எழுந்தருளியபின், அநபாயமன்னர் பலப்பல தூதர்களையும் ஒற்றர்களையும் அவ்வவப்போது அனுப்பிப் புராணம் எவ்வளவு வரை பாடியாயிற்று? இன்னும் முடிய எத்தனை நாளாகும்?" அதற்கு நாம் செய்யத் தக்க பணிகள் யாவை?" என்று கேட்டுக் கொண்டே இருந்தார். தூதர்கள் 'பாதி முடிந்ததென்றும், நாளை முடியும்' என்றும் கூறுவர்; பின்னர், தூதர் 'புராணம் முடிவு பெற்றது' என்று கூறினர். அங்ஙனம் கூறிய தூதர்கட்கெல்லாம் பொன்னும் மணியும் ஆடையும் வழங்கினார். பரிவாரங்களுடன் தில்லைக்குப் புறப்பட்டார். அநபாயசோழர் வரவு தெரிந்து தில்லைமா நகரத்து அன்பர்களும், மூவாயிரம் அந்தணர்களும், சேக்கிழாரும் அரசரை எதிர்கொண்டு அழைத்து உபசரித்தார்கள். மன்னர்பெருமான் தனது மந்திரியாகிய சேக்கிழாருடைய சிவநல உருவையும், தவநலத் திருவையும் கண்டு, அவரது அடிமலர்மேல் வீழ்ந்து வணங்கினார். கனகசபையில் எல்லோருமாகச் சென்று சேவித்தார்கள். "சோழனே! 'உலகெலாம்' என்று நாமே அடி யெடுத்துக் கொடுக்க, நம் அன்பன் சேக்கிழான் திருத்தொண்டர்களது இனிய வரலாறுகளை விரித்துப் புராணம் பாடினான்; அதனை நீ கேட்டு உய்வு பெறுக" என்று ஓர் அசரீரி வாக்கும், அம்பலவாணர் சிலம்பொலியும் பொன்னம்பலத்திலே அனைவருங் கேட்க எழுந்தன.

வேந்தர்கோமான் மனமிக மகிழ்ந்து, திருத்தொண்டர் புராணத்தைக் கேட்கும்பொருட்டுத் திசைகள்தோறுமுள்ள அன்பர்கட்கும், அறிஞர்கட்கும் ஓலைகள் அனுப்பினார். திருக்கோயிலையும், திருவீதிகளையும் நன்கு அலங்கரிக்கச் செய்தார். உலகில் எல்லாப் பக்கங்களிலிருந்தும் வடமொழி, தென்மொழி வல்ல புலவர் பெருமக்களும், சிற்றரசர்களும், அடியார்களும், பிறரும் வந்து சிதம்பரத்தில் குழுமினார்கள்.

கனகசபைக்குமுன் கோமயத்தால் மெழுகித் தூப தீபங் கொடுத்து அறுகால்பீடம் இட்டு அதன்மேல் பசும்பட்டு விரித்து நறுமலர் தூவி அதன்மேல் திருத்தொண்டர் புராணத்தை எழுந்தருளப் புரிந்தனர். மன்னர்பெருமான் அருண்மொழித் தேவரை அடிபணிந்து "தேவரீரே திருத்தொண்டர் புராணத்தை வாசித்துப் பொருள் அருளிச் செய்வீர்" என்று வேண்டினார். சேக்கிழார் பெருமான் அப்பேரவையின் நடுவே அமர்ந்து, அம்பலவாணர் ஆனந்தத் தாண்டவம் புரிந்த நாளும், திருஞானசம்பந்தர் திருவவதாரம் புரிந்த நாளும், திருவாய்

மலர்ந்து அழுது திருஞானப் பாலைப் பருகிய நாளும் திருவாதிரை நாளாகும். ஆதலின், சித்திரை மாதம் திருவாதிரை நாளில் திருத்தொண்டர் புராணத்தை அரங்கேற்றத் தொடங்கினார். அடுத்த சித்திரைத் திருவாதிரை நாளன்று புராணம் இனிது முடிவு பெற்றது. இடையிடையே மூவர் தேவாரமும், திருமந்திரமும், காரைக்காலம்மையார் அருளிய திருப் பாடல்களும், சேரமான் பெருமாள் அருளிய அருட்பாடல்களும், ஐயடிகள் அருளிய திருப்பாக்களும் பொருள் விரித்துப் பேசப் பட்டன. அரசர் பெருமான் நாடோறும் புராணம் கேட்போர் அனைவருக்கும் இனிய நல்லுணவு வழங்கினார். திரு முறைகளையும், திருத்தொண்டர் புராணத்தையும் எழுதுவோரும், பாராட்டுவோரும், ஆங்காங்கு நிறைந்துள்ள கவிநயங்களைக் கண்டு மகிழ்வோரும், சேக்கிழாரடிகளின் தெய்வப் புலமையை வியந்து புகழ்வோரும், இன்பக் கண்ணீர் வடித்து அழுவோருமாக அன்பர்கள் விளங்கினர். பல்லாயிரக்கணக்கான அடியார்கள் ‘அரகர’ என்று முழங்கும் ஓசை எழுகடல் ஓசையை அடக்கியது.

திருத்தொண்டர் புராணத்தைத் தில்லைவாழ் அந்தணர்கள் சிவமூலமந்திரத்தால் அருச்சித்துத் தூபதீபம் காட்டி வழிபட்டு ஐந்தாவது வேதமெனப் பாராட்டினார்கள். அநபாய மன்னர் அத்திரு முறையைப் பட்டினால் சூழ்ந்து பொற்றட்டில் ஏந்தி யானையின் சிரத்தில் வைத்துச் சேக்கிழார் பெருமானையும் அவ்வழகிய யானை மேல் ஏற்றித் தானும் ஏறி இருகரத்தாலும் கவரி வீசி, “இதுவன்றோ நான் செய்த தவப்பயன்” என்று மகிழ்ந்தார். விண்ணவர் பூமாரி பொழிந்தனர். அவ்வாறு திருவீதி வலமாக வரும் போழ்து சிதம்பரம் பூலோக கைலாசமாகப் பொலிவுற்றது. எல்லா வீதிகளிலும் வாழையும், கமுகும் நாட்டி, தோரணங்கள் அமைத்து, மனைகள்தோறும் பூரணகும்பங்கள் வைத்து, மலர் மாலைகளைத் தூக்கித், திருவிளக்கு ஏற்றி, இன்னிசைப் பாடல்கள் ஓதி அன்பர்கள் ஆரவாரித்தனர். ‘திருமுறைத் தமிழ் பாடிய மூவரும் ஒருருவாக முளைத்தனர்’ என்பார் சிலர். ‘வாணி தேவி வெண்டாமரைப் பூவையும் மறந்தனள்; சங்கப் புலவோர் பாவையும் மறந்தனள்; பதுமத்தோன் நாவையும் மறந்தனள்; குறுமுனியாம் தமிழ்த் கோவையும் மறந்தனள். தெய்வச் சேக்கிழார் நாவில் குடிகொண்டனள்’ என்பார் சிலர். ‘கருங்கடலைக் கரத்தால் நீந்தலாம்; கடற்கரையின் நொய்மணலை எண்ணி அளவிடலாம்; பெருங்கடல்மேல் வரும் அலைகளையும் எண்ணலாம்; அக் கடலில்வாழ் மீனையும்

அளவிடலாம்; விண்ணுறை உடுக்களையும் அளவிடலாம். திருத்தொண்டர் புராணத்தை யாரே அளவிடவல்லார்? நம் சேக்கிழார்க்கே எளிதாகும்; அமரர்க்கும் அரிதாகும்' என்பார் சிலர்.

கருங்கடலைக் கைநீத்துக் கொளவெளிது முந்நீர்க்
கடற்கரையின் நொய்மணலை எண்ணிஅள விடலாம்
பெருங்கடன்மேல் வருந்திரையை ஒன்றிரண்டென் றெண்ணிப்
பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிட லாகும்
தருங்கடலின் மீனைஅள விடலாகும் வானத்
தாரகையை அளவிடலாம் சங்கரன்தாள் தமது
சிரங்கொள்திருத் தொண்டர்புரா ணத்தைஅள விடநம்
சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கும் அரிதே.

திருவோலக்கம் முடிந்தபின் திருத்தொண்டர் புராணத்தைக் கனகசபையில் வைத்தனர். சேக்கிழாரடிகளுக்குத் "தொண்டர் சீர் பரவுவார்" என்ற திருநாமமும், ஞானமுடியும் சூட்டிச் சோழர் பெருமான் வணங்கினார்.

திருஞானசம்பந்தர் தேவாரம்	3
திருநாவுக்கரசர் தேவாரம்	3
சுந்தரர் தேவாரம்	1
திருவாசகம்	1
திருவிசைப்பா, திருப்பல்லாண்டு	1
திருமந்திரம்	1
திருமுகப்பாசுரம் முதலிய திருநூற்கோவை	1
	11

சம்மிதாமந்திரம் பதினொன்று ஆதலின் மேலேகண்ட திருமுறைகளைப் பதினொன்றாக நம்பியாண்டார் நம்பி முன்னே வகுத்து வைத்தனர். அப் பதினொரு திருமுறைகளுடன் திருத்தொண்டர் புராணத்தைப் பன்னிரண்டாவது திருமுறையாகச் சேர்த்துச் செப்பேடு செய்து பொன்னம்பலத்தில் வைத்தனர்.

பின்னர், சேக்கிழார் பெருமான் தில்லையிலேயே இருந்து, அம்பலவாணரை வழிபட்டுத் தவவாழ்வில் தலைசிறந்து நின்றார். அநபாய மன்னர் அருள்மொழித்தேவருடைய தம்பியாகிய பாலறா வாயர் குன்றத்தூரிலே தமது பெயரால் திருக்குளம் அமைத்துத் திருநாகேச்சுவரப் பெருமானை வழிபட்டுக் கொண்டிருப்பதை அறிந்து அவரை வரவழைத்து அமைச்சுப் பதவியைத் தந்து 'தொண்டைமான்' என்ற பட்டத்தையும் வழங்கி அரசுபுரிந்தார். சேக்கிழார் பெருமான் உலகெலாமுய்ய அலகிலாப் புகழுடைய அடியவர் பெருமையை விளக்கி அம்பலவாணர் திருவடி நீழலிற் சேர்ந்தார்.

திருமலைச் சிறப்பு

அருட்பெருஞ் சோதியரும், ஆதியும் நடுவும் ஈறும் அற்ற அநாதி மலமுத்தரும், திருவருளே வடிவாகக் கொண்டவரும், பிறப் பிறப்பில்லாத பெருந்தகையும், முழுமுதற் பரம்பொருளும், முக் கண்ணுடைய மூவாமுதல்வரும், வேதாகமங்கள் காணாத வித்தகருமாகிய சிவபெருமான், எமையாண்டருளும் இமயவல்லி யம்மையுடன் நவமணிப் பீடத்தின்மீது எழுந்தருள விளங்குவது திருக்கைலாய மலை. அங்கு மூவருந் தேவரும் பாடிப் பரவுவர்; அரம்பையர் ஆடுவர்; நாரதாதி முனி கணத்தர் யாழினை முழக்குவர்; வேதவோசையும் சங்கநாத வோசையும் ஓதவோசை போல் எப்பொழுதும் முழங்கிக் கொண்டிருக்கும். எண்ணில்லாத கதிர்கள் ஒருங்கே உதித்ததுபோல் ஞானஒளி வீசி எழில்மிகத் திகழ்வது அக்கயிலைமால்வரை. அக் கைலைமலையின்கண் பலகோடி பூதங்கள் வாழும். ஒவ்வொரு பூதமும் வேண்டு மாயின் ஐம்பெருந் தொழிலும் செய்யும்; நீடு தேவர் நிலைகளை நாட்டும். அத் திருமலையில் வேத்திரப் படை தாங்கித் திருநந்திதேவர் காவல் புரிவர், தேவர்களும், மூவர்களும், முனிவர்களும், கணங்களும் பெருமானை வழிபட அணியணியாக வந்து காலங்கருதி நிற்பர்; துதித்து அருள்பெறுவர்.

அத் திருக்கைலாய மலையின் அடிவாரத்தில், பத்தராய முனிவர் பல்லாயிரவரும் சுத்த யோகிகளும் சூழ உபமன்னிய முனிவர் இருப்பார். அவர் பரமேசுவரன் தர பாற்கடலுண்டவர்; கண்ணபிரானைத் திருவடி தீட்சை தந்து உபதேசித்து உய்வித்தவர். அளவற்ற மகிமையும், திருத்தொண்டும் பெற்றவர்.

யாத வன்துவ ரைக்குஇறை யாகிய
மாத வன்முடி மேல்அடி வைத்தவன்
பூத நாதன் பொருவருந் தொண்டினுக்கு
ஆதி அந்தம் இலாமை அடைந்தவன்.

இத்தகைய உபமன்னியமுனிவர், முனிகணஞ்சூழச் சிவ பெருமானுடைய திருவருட் பெருமையைக் கூறிக்கொண்டிருந்த போது, ஆங்கு ஆயிரஞ் சூரியருடைய ஒளிபோல ஒரு பேரொளி தோன்றியது. அதனைக் கண்ட அருந்தவ முனிவர்கள், "இது என்ன அதிசயம்" என்றார்கள். உபமன்னியர், சிவபெருமானைச் சிந்தித்து, ஆலாலசுந்தரர் திருக்கைலாய மலையினின்றும் அரனார் ஆணை யால் நீங்கி மண்ணுலகம் வாழத் தென்திசையில் திருவவதாரஞ் செய்து, மீட்டும் கயிலைக்கு எழுந்தருளி வருகின்றனர் என்பதனை உணர்ந்து, எழுந்து சிரமீது கரமலர் கூப்பிக் கண்ணருவி பாயத் தொழுது அதனை நோக்கி நடந்தார். அருகிருந்த முனிவர்கள், "ஐயனே! அரனாரையன்றி மறந்தும் புறந் தொழாத தேவரீர் இங்கு இவ்வாறு இறைஞ்சியது என்ன?" என்று கேட்டனர். அவ்வண்ணம் ஆர்வத்துடன் கேட்ட அருந்தவர்கட்கு உபமன்னிய முனிவர் கூறுவாரயினார்.

சிவபெருமான் ஒருசமயம் தமக்கு நேராக அமைந்திருந்த சுத்த வித்தியா மயமான நிலைக்கண்ணாடியில் தோன்றும் தமது சுந்தரச்சாயா வடிவை "சுந்தரா வருக" என்று அழைத்தருளினார். அக்கண்ணாடினியின்று சுத்த வித்யாமய சிவரூபம் மூன்று கண்களும் நான்கு தோள்களும் பிறைமுடியுமாக வெளிப்பட்டு சிவபெருமானை வணங்கியது. மற்றைய உருத்திரர்களினும் சிறந்த அவ்வுருத்திரர் சுந்தரர் என்னுந் திருநாமத்துடன், கோடி சூரியப் பிரகாசத்துடன் திருமலர் எடுத்துத் திருமாலை தொடுத்துச் சூட்டுதலும், திருநீற்றுப் பாத்திரந் தாங்கிப் பெருமான் அருகே நிற்றலு மாகிய திருவணுக்கத் தொண்டு புரிந்துகொண்டிருந்தார்.

அவ்வண்ணமே உமையம்மையார் அக் கண்ணாடியில் தமது திருவுருவ சாயையை அழைக்க அது இரண்டு திருவுருவங்களாக வெளிப்பட்டன. அனிந்திதை, கமலினி என்னும் அவ்விரு அழகின் கொழுந்துகள் போன்ற சத்திகள் அம்மைக்கு ஏவல் புரிந்து கொண்டிருந்தனர்.

மாலயனாதி வானவர் யாவரும் அமிர்தம் வேண்டித் திருப்பாற்கடலைத் கடையத் தொடங்கினர். கணபதியை வணங்காத காரணத்தால் ஆலாலவிடந் தோன்றியது. அதன்

வெம்மையைத் தாங்காத விட்டுணுமூர்த்தி, முதலிய விண்ணவர் அனைவரும் அஞ்சி, வெள்ளிமலைக்கு வந்து, "எம்பெருமானே! தேவரீரே முழுமுதற் பெருந்தலைவர். அடியேங்கள் செய்த முயற்சியால் முதலில் விளைந்தது உமக்கே உரியது. நஞ்சினால் அஞ்சினோம் ஆண்டருளும்'' என்று வேண்டினர். முக்கட் பெருமான் அவர்களை "அஞ்சன்மின்'' என்று அருள்புரிந்து, திருநீற்றுக் கோயிலை ஏந்தி அருகே நிற்கும் சுந்தரரை நோக்கிச், "சுந்தரா! அவ்விடத்தை இவ்விடத்திற்குக் கொணர்தி'' என்று பணித்தருளினார். சுந்தரர் சென்று யாராலும் அணுக முடியாத பெரும் வெப்பத்தைத் தரும் ஆலாலவிடத்தைத் தமது ஒருகரத்தால் எடுத்து நாவற்பழம்போல் திரட்டிக் கொணர்ந்து கண்ணுதற் பெருமானிடந் தந்தார். அதனைச் சிவபிரான் உள்ளும் புறமும் உள்ள உயிர்களெல்லாம் உய்ய கண்டத்தில் தரித்து நீலகண்டராக விளங்கினார். அதனால், சுந்தரர் "ஆலால சுந்தரர்'' என்னுஞ் சிறப்புப்பெயர் எய்தினார்.

சிவபெருமான் தமிழுலகம் உய்ய வேதாகமங்களின் சாரங்களைத் திரட்டித் தமிழ் வேதமாக இச் சுந்தரரைக் கொண்டு பாடுவிக்கவும் திருத்தொண்டத் தொகையை வெளிப்படுத்தவும் திருவுளங் கொண்டருளினார். அதற்குரியவர் ஆலால சுந்தரரே எனவுங் கருதினார். கைலையினின்றே பாடுவித்தால் மண்ணுலகம் உணராது எனவும், ஆன்மாக்கள் பக்குவப்பட்டு உய்வு பெற வேண்டுமெனவுந் திருவுளத்து எண்ணினார். காரணமின்றி மண்ணுலகிற்கு சுந்தரரை அனுப்புதல் முறைமையன்று எனவும் கருதினார். ஒருசமயம் ஆலால சுந்தரர் திருநந்தனவனம் போய் மலர் பறிக்கும்போது அம்பிகையின் சேடியராகிய அனிந்திதை கமலினி என்னும் இருவரும் ஆங்கு வந்து மலர் பறித்தனர். சிவபெருமான் திருவருள் ஏவ, சுந்தரருடைய கண்ணுங்கருத்தும் அம்மங்கையர்பால் சென்றன. காமதகனம் நிகழ்ந்த இடமாகிய கைலையில் காமாதி குற்றங்கள் நிகழ இடமே இல்லை. பரமேசுரனுடைய திருவருள் அங்ஙனந் தூண்டியது. அந் நங்கையரும் இவரை நோக்கினர். பின்னர், கருத்தைத் திருத்திக் கொண்டு சுந்தரர் திரு மாலை தொடுத்துக் கருமாலை யகற்றுங் கண்ணுதற் பெருமானிடம் எய்தினார். அங்கிங்கெனாதபடி எங்கும் பரிபூரணமாய் நிறைந்துள்ள நிமலன், "சுந்தரா! நீ மாதர்மேல் மனம் வைத்தனை; ஆதலின், பூதலத்திற் பிறந்து, அவருடன் காதலின் கலந்தணைவாய்'' என்று கட்டளை யிட்டருளினார்.

(அன்பர்கள் இங்கே சிந்திக்கத்தக்கவை சிலவுள; சுந்தரரைப் பெருமான் மாதர்மேல் மனம் வைத்ததற்குச் சபித்தாரில்லை; "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்றபடி எண்ணத்தை முற்றுவிப்பான் அருள்புரிந்தார். அன்றியும் எண்ணங்கட்கு பிறப்பு உண்டு என்பதையும், அவாவே பிறப்புக்கு வித்து என்பதையும் உணர்த்தியருளினார். மாதர்மீது பார்வையைச் செலுத்திய ஆலாலசுந்தரர் அந்த உலகத்தைத் துறந்து இந்த உலகத்திற்கு வந்தார் என்றால் இந்த உலகத்திலிருந்து கொண்டு பார்வையைப் பாவையர் மேல் முறையின்றிச் செல்லுமாயின் எந்த உலகத்திற்குப் போவது? என்பதனையும் ஈண்டுச் சிந்தித்து உய்வுபெற வேண்டும். எல்லாப் புலன்களிலும் சிறந்தது கட்புலன் என்பதும், அக் கட்புலன் தூய்மையாக இருத்தல் வேண்டும் என்பதும் அன்பர்கள் அறிந்து கொள்ளுதல் வேண்டும். மறந்தும் பார்வை நெறிதவறி நடக்கக்கூடாது.)

ஆதி மூர்த்தி அவன்திறம் நோக்கியே
மாதர் மேல்மனம் வைத்தனை தென்புவி
மீது தோன்றியம் மெல்லிய லாருடன்
காத லின்பங் கலந்தணை வாயென.

அதுகேட்ட ஆலாலசுந்தரர் அஞ்சி ஐயன் அடிமலர் மீது விழுந்து தொழுது அழுது, "என்னை ஆளுடை ஈசனே! நின் திருவடியை நீங்குஞ் சிறியேன் உலகில் மானுடனாய் மையல் பூண்டு மயங்கும்போது தடுத்தாட்கொள்ளும்" என்று வேண்டினார்.

கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கினான்
செய்ய சேவடி நீங்குஞ் சிறுமையேன்
மையன் மானுட மாய்மயங் கும்வழி
ஐய னேதடுத் தாண்டருள் செய்யென.

திங்களை முடித்த எங்கள் நாயகர் "அங்ஙனமேயாகுக; நின்னை மாயை தொடரலுற்றபோது தடுத்தாட் கொள்வோம்" என்று திருவருள் புரிந்தார். அதன்பின் அம் மூவர்களும் மண்ணுலகில் தென்திசையில் வந்து அவதரிப்பாராயினார்கள். இவ்வாறு, உபமன்னியர் கூற, முனிவர்கள் தொழுது, "தபோதனரே! எட்டுத்திசையினும் தென்திசை சிறந்தது என்பதற்கு என்ன காரணம்?' என்று வினாவினார்கள்.

உபமன்னியர், "முனிவர்களே! கூறுதும்- எத்திசையினும் சிறந்தது தென்திசை. எனது தந்தையாராகிய வியாக்கிரபாதனார்

நெடிது காலம் பெருந்தவம் புரிந்து திரு நடனங் கண்ட பொன்னம்பல முள்ளது இத்திசையிலேயாம். ஐம்பூதத் திருத்தலங்களும், ஆயிரத் தெட்டு சிவமூர்த்தங்களும் உள்ளதும் அத் திசையிலேயாம். பூமியின் இதய கமலமாகிய திருவாரூரும் அங்கு விளங்குகின்றது. உலகெலாம் ஈன்ற உமையம்மையார் கம்பையாற்றில் மா வடியில் வழிபட்ட கச்சியம்பதியும், நந்திதேவர் தவமியற்றிய திருவையாறும், மண்ணும் விண்ணும் அழியும் உகாந்த காலத்தும் அழியாது மிதக்குந் திருத் தோணிபுரமும், பிறவும் திகழ்வதும் அத் திசையிலேயாகும். ஆதலினால், பூதலத்தில் தென்திசை சிறந்த புண்ணிய திசையாகும். இனி, திருத்தொண்டத் தொகை தோன்றிய திருவாரூரின் பெருமையைச் சிறிது கூறுதும், கேண்மின்கள்" என்று கூறலுற்றார்.

(பெரிய புராணத்திற்கு முதல்நூல் திருத்தொண்டத் தொகையாகும்; அத் திருத்தொண்டத் தொகையை நம்பியாரூரர் திருவாரூரில் திருவாய் மலர்ந்தருளினார். ஆதலின், திருத்தொண்டத் தொகை தோன்றுதற்குத் தவம்புரிந்த திருத்தலம் திருவாரூர். எனவே, திருவாரூர் சிறப்பு முதலில் கூறப்படுவதாகின்றது.)

மநுநீதிகண்ட புராணம்

பலர் புகழ் நிறைந்த மலர்தலையுலகில் "சித்திக்கு ஒரு விதையாக" விளங்குவது தென்னாடு. தென்னாட்டில் காவிரி நதியால் வளம் பெற்று உளங்குளிரத் திகழ்வது சோழ வளநாடு ஆகும். முத்தமிழ்ப் பயிலும் இத்திருநாட்டிற்குத் தலைநகராகவும், சோழ மன்னர்கள் தொன்றுதொட்டு அரசுபுரிந்து வந்ததாகவும், நிலமகள் திருமுகம் போன்ற சோணாட்டிற்குத் திலகம்போல் அழகு செய்வ தாகவும், பொலிவு செய்வது திருவாரூர். தியாகேசப் பெருமான் எழுந்தருளிய திருத்தலம்; திருமகள் வழிபட்டதனால் கமலாலயம் என்றும் பேர்பெற்றது.

சொன்ன நாட்டிடைத்தொன்மையின் மிக்கது
மன்னு மாமல ராள்வழி பட்டது
வன்னி யாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னி யார்திரு வாரூர்த் திருநகர்.

திருவாரூரில் இடையறாது "வேதவோசையும், வீணையி னோசையும், சோதிவானவர் தோத்திர வோசையும், மாதர் ஆடல்

மணி முழவோசையும், கீதவோசையுமாய்க் கிளர்வுறும்" அறச் சாலைகளும், மலர்ச் சோலைகளும், அரிய நீதிகளும், பெரிய வீதிகளும், சிறந்த காவணங்களும், உயர்ந்த ஆவணங்களும், ஞானமடங்களும் நிறைந்திருந்தன. செந்தமிழ்ப் பாடல்களைக் கிள்ளைகள் பாடும்; பூவைகள் கேட்கும்.

இத்தகைய நலம்பலவுடைய ஆரூரை, ஆதித்தன் குலத்திலே வந்த மனுச்சோழர் என்னும் மன்னர் பெருமான் அறநெறி வழு வாது ஆண்டுவந்தார். அம் மனுவேந்தருக்கு இன்சொல்லும், கனிந்த உள்ளமும், சிவபக்தியும், அறப்பண்பும் அணிகலன்களாக அமைந்திருந்தன. அவர் இடமறிந்து, காலமறிந்து, செயலறிந்து ஒரு கருமத்தைச் செய்வார். மதிநுட்ப மிக்க அமைச்சர் பலர் அவரைச் சூழ்ந்திருந்தனர். மன்னுயிர்களைத் தன்னுயிரெனக் கருதி,

'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்."

என்ற திருமொழிக்கு இலக்கியமாக விளங்கினார். தூய்மையும், வாய்மையுமுடைய அத் திருமன்னர் நாடோறும் தியாகராஜப் பெருமான் திருக்கோயிலுக்குச் சென்று மன மொழி மெய் என்ற மூன்று கரணங்களாலும் வழிபடுவார். அவருடைய கரம் ஈந்து சிவந்தது. அவர் உள்ளம் பல கலைகளை ஆய்ந்து சிவந்தது. எண்ணில்லாத அறங்களைப் புரிந்து மகம் பல ஆற்றினார். புற்றிடங் கொண்ட புராந்தகருடைய வழிபாட்டிற்கு வேண்டிய பல சாதனங் களின் பொருட்டு நிலங்களையும் ஊர்களையும் இறையிலியாக வைத்தார்.

இங்ஙனம், அலகிலாப் புகழுடன் உலகெலாம் புரக்கும் மநுநீதி மன்னருக்கு மகப்பேறு வாய்த்திலது. தனக்குப் பிறகு நீதி நெறியை நிலைநிறுத்தி ஆளும் மன்னனைப் பெறாது உலகிலுள்ள உயிர் கள் துன்புறுமே என்று தான் துன்புற்றார். மேலும் பலப்பல அறங்களைச் செய்தார். தனது மனைவியாருடன் விரதம் பல நோற்றார். காலையும், மாலையும் தியாகேசப் பெருமானைத் தொழுது, "அருட்கடலே! ஆலமுண்ட நீலகண்டரே! முருக வேளைப் பெற்ற முழுமுதற் கடவுளே! எனக்குப் பின் இவ் வையக மாளும் புதல்வனைத் தந்தருள்வீர்" என்று வேண்டினார்.

வேண்டுவார் வேண்டுவதே வழங்கும் வள்ளல் பெருமான் திருவருள் புரிந்தருளினார். வலம்புரிச் சங்கு ஆணிமுத்தினைக்

கருக் கொண்டதுபோல் மன்னருடைய மனைவியார் கருவுற்றனர். திருவருளால் கரு வளர்ந்து, நாளுங் கோளுஞ் சிறந்திருக்குந் தருணத்தில், அதிதி வயிற்றில் உபேந்திரன் பிறந்ததுபோலும், சகுந்தலை வயிற்றில் பரதன் பிறந்தது போலும், பாற்கடலில் சந்திரன் பிறந்தது போலும் ஒரு சிறந்த ஆண் மகவு பிறந்தது. வானவர் பூமாரி பொழிந்தனர். பாவலர் பாமாரி பொழிந்தனர். மன்னர் பொன்மாரி பொழிந்தார். அந்தணர் அருள்மொழி மொழிந்தனர். எல்லா இலக்கணங்களும் அமைந்த அருமைப் புதல்வனைக் கண்டு அரசர் அளவற்ற மகிழ்ச்சி உற்றார். ஏழுநாள் கள் வரை செல்வங் குவிந்துள்ள கருவூலத்தை வறிஞர் வேண்டு மளவும் எடுத்துக்கொண்டு போகத் திறந்து விட்டார்; சிற்றரசர் கள் ஏழாண்டு திறை செலுத்த வேண்டாம் என்றார்; சிறைச் சாலையைக் காலி செய்தார். குழந்தையைத் தங்கத் தொட்டிலில் இட்டு, தியாகராஜப் பெருமானுடைய திருநாமமாகிய வீதிவிடங்கன் என்ற பேர் சூட்டினார். வளர்பிறைமதிபோல் மைந்தர் வளர்ந்தார்.

வீதிவிடங்கர் ஐந்தாம் ஆண்டிலே பயிலத் தொடங்கினார். குருபக்தியின் மிக்க அவர் கல்விக் கடலின் கரை கண்டார். நீதிநூல், ஆயுள்நூல், பொருள்நூல், இசைநூல், அறிவுநூல் முதலிய எல்லாக் கலைகளும் நிரம்பப் பெற்று, அரசர்க்குரிய விற் பயிற்சி, மற்பயிற்சியும் நிரம்பப் பெற்றார். சிங்கக் குருளை போன்ற வன்மையும், சிறந்த வின்மையும், ஆழ்ந்த அறிவும், அமைதியும், அடக்கமும், பொறுமையும் உடையவராய் இளம்பரிதிபோல் விளங்கினார். நாடோறும் எழுந்தவுடன் தாய் தந்தையரை அன்புடன் தொழுவார்; பிறவிப்பிணி தொலைய வேண்டுமே என்று அழுவார். அடியவர் திருவடிமேல் விழுவார். நற்குணமும் நல்லொழுக்கமும் உடையவரான திருக்குமாரர் இளவரசுப்பட்ட மடையும் பருவத்தை அடைந்தார்.

ஒருநாள் வீதிவிடங்கருக்குச் சிவாலயம்போய்ச் சிவபெருமானை வழிபடவேண்டுமென்ற எண்ணம் உண்டாகியது. தாயையுந் தந்தையையும் பணிந்து ஆலயம் போக விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார். செம் பொற்தேரேறிச் செல்லும் அரசிளங்குமரரை நண்பர்களும், உறவினரும் சூழ்ந்து சென்றனர். சகல விருதுகளும் உடன் சென்றன. ஆடலும் பாடலும் நிகழ்ந்தன. வீதியில் எள்ளிட இடமின்றி மக்கள் திரண்டு மொய்த்தனர். மன்னர் மகனைக் கண்டு இளம் மங்கையர் பலர் மயங்கினர்.

அவ்வாறு செல்லும்பொழுது, தருமமானது தயவு இன்றி சோதிக்க வந்தது போன்று, ஒரு பசுவின் கன்று, ஒருவர் கட்புலனுக்கும் படாதபடி அதிவிரைவில் துள்ளிக் குதித்து வந்து தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டு, குடல் சரிந்து, உடல் முறிந்து, உயிர் துறந்தது. கன்றின் தாயாகிய அறிவுள்ள பசு அங்கு வந்து, தன் கன்றின் இளமை உடல் நொறுங்கி இறந்திருப்பதைக் கண்டு, பொறுக்க முடியாத துன்பமுற்றுக் கதறியழுது மூர்ச்சித்து விழுந்தது. அதுகண்ட வீதிவிடங்கர் நடுநடுங்கித் தேரை விட்டுக் குதித்து, இறந்த கன்றையும், அது குறித்து அலறும் தாய்ப்பசுவையும் பார்த்து, "அந்தோ! கெட்டேன். சிவபெருமானே! பெரும் பாவத்தைச் செய்து விட்டேன். அகிலாண்ட நாயகா! தேவரீரைச் சேவிக்க எண்ணிய பாவியாகிய அடியேன் நடந்தல்லவா வரவேண்டும். அரச போகத்தால் மதிமயங்கிய யான் தேரேறி வந்தது பெருந்தவறு. ஐயோ! அப் பெரிய பாவச் செயலால் இக் கன்று மாண்டதே. பசுவதை பெரும்பாவமன்றோ? குற்றமற்ற குலத்திற் பிறந்த நான் கொடும் பாவத்தைப் புரிந்து விட்டேனே; மநுநீதிச் சோழராகிய என் பிதாவினுக்குப் பெரும்பழியைத் தேடி வைத்தேன். என் செய்வேன்? இந்தக் கன்று ஒருவரும் அறியாமல் எப்படி வந்தது? நான் பகற்குருடனானேன். இனி, நான் இவ்வுலகில் வாழேன். அடைக்கலம் புகுந்த ஒரு புறாவுக்காக உடற்சதை யெல்லாம் அறுத்துத் தந்து தானும் துலையேறிய சிபியின் மரபில் வந்த நாயேன் குலத்திற்குக் கொடும்பழி தேடிக் கொண்டேன். இப்பழி பாவத்தினின்றும் நான் எப்படிக் கரையேறுவேன்" என்று துடிதுடித்தார்.

அமைச்சரும் ஆர்வலரும் அவரைத் தொழுது, "இளங்கோவே! வருந்த வேண்டா. தாங்கள் வேண்டுமென்று இப்பாவஞ் செய்யவில்லையே? கன்றுக்கு ஆயுள் முடிந்தபடியால் இத்தனைப் பேர் கண்ணுக்குந் தோன்றாமல் வந்து தானே தேர்க்காலில் வீழ்ந்து மாண்டது. அதற்குத் தாங்கள் என்ன செய்ய முடியும்? "எல்லாம் சிவன் செயல்.'' தாங்கள் இதற்காக உயிரை விடுவது நியாயமாகாது. அறநூல் வல்ல ஆன்றோரை அடுத்து இதற்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ளும். அதுதான் முறை. எங்கள் சொல்லைத் தள்ளாதேயும்" என்று பலப்பல நியாயங்களைக் கூறி வீதிவிடங்கரை அழைத்துக் கொண்டு விதிநூல் வல்ல பெரியோர்பால் சென்றனர்.

பசு மூர்ச்சை தெளிந்து எழுந்து, தாரை தாரையாகக் கண்ணீர் பெருக, "அம்மா அம்மா என்று அழும். மீண்டும் துன்பத்தால்

துடித்து விழும். "என் கண்ணே! சற்றுநேரத்திற்குமுன் பால் குடித்து அழகாக என் முன் விளையாடினையே! ஐயோ! உன் இளமையான உடம்பு இப்படி முறிந்து மாண்டனையே! உன் மீது தேர் ஏறினாப் போல் தோன்றுகின்றதே, நீ எவ்வாறு துடித்தனையோ? இனி உன் அழகிய முகத்தைக் காணும் நாளும் உளதாமோ? உன்னைப் பெறுதற்கு நான் எத்தனையோ நாள் தவம்புரிந்தேனே. எத்தனையோ நாள் புல்லும் தண்ணீரும் உட்கொள்ளாமல் பட்டினி கிடந்தேனே. என் அருமைக் குழந்தாய்! பெற்ற வயிறு பற்றி எரிகின்றதே. உன்னைக் கொன்றவர் இன்னார் என்று தெரியவில்லையே. உன்னைக் காணுந்தொறும் என் மடியில் பால் சுரக்க என் உடம்பு பூரிக்குமே. நான் என்ன பாவஞ் செய்தேனோ? கொலையும், புலையும் களவும், பொய்யும் அணுவளவும் இல்லாத கருணை நிறைந்த இந்த ஊரில் நெஞ்சம் அஞ்சாமல் உன்னைக் கொன்றவன் யாரோ? தெய்வமே! நான் என் செய்வேன். என் தலையீற்றுச் சேங்கன்று உன் திருவடிக்கு வந்ததோ? இந்நகரை ஆளுகின்ற மன்னர் பெருமான் நீதி தவறாதவர். இதனை அவருக்கு அறிவிப்பேன்" என்று புலம்பியது.

குடிகளுக்கு குறை ஏற்பட்டால் அரசனுக்கு அறிவிக்குமாறு அரண்மனை வாயிலில் ஓர் ஆராய்ச்சி மணி கட்டி வைக்கப் பட்டிருந்தது. அது இதுகாறும் ஒருநாளும் அசைந்த தின்று. பசுவானது பரிதாபமுடன் ஓடிவந்து தனது கோட்டால் அம்மணியைக் 'கணீர்' என்று அடித்தது. "பழிப்பறை முழக்கோ? பாவத்தின் ஒலியோ? வேந்தன் வழித்திரு மைந்தன் ஆவிகொளவரும் மறலியூர்திக் கழுத்தணி மணியின் ஆர்ப்போ?" என்று யாவருந் துணுக்குற்று அஞ்சி ஏங்க அம் மணியின் ஓசை எங்குங் கேட்டது.

கருணையே ஒரு வடிவம் எடுத்ததுபோன்ற மனுச்சக்கரவர்த்தி, அவ்வோசையைக் கேட்டு நடுநடுங்கி எழுந்து, "ஆருக்கு என்ன குறையோ? ஒருநாளும் அசையாத மணியை இன்று அசைத்து அடித்தது ஆரோ" என்று ஓடிவந்தார். காவலர் தொழுது, 'இப்பசு இதனை அடித்தது' என்றனர். கண்ணீர் சொரிந்த வண்ணமாய் கதறிப் பதறி நிற்கும் அப்பசுவை அரசர் கண்டு வருந்தினார். அருகில் நிற்கும் அமைச்சர்களை இகழ்ந்து நோக்கி, 'நும் அமைச்சுத் திறம் இருந்தவாறு என்னே? இப்பசுவுக்குத் தீங்கு செய்த பாதகன் யார்? ஏன் இது அழுகின்றது?'' என்று வினாவினார். அருகில் நின்ற அமைச்சன் அஞ்சி, "வேந்தர் வேந்தே! இப்போதுதான் நானும் கேள்வியுற்றேன். நமது செல்வப்

புதல்வர் தேரேறிச் சென்றபோது இப்பசுவின் கன்று எப்படியோ ஒருவர் கண்ணுக்கும் படாமல் துள்ளிச் சென்று தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டு மாண்டு விட்டது. அதனால், இத் தாய்ப்பசு அளவற்ற அல்லற்பட்டு ஆராய்ச்சி மணியை அசைத்தது" என்றான்.

வெந்த புண்ணில் விடந்தடவிய வேல்நுழைந்தாற்போல் அச் சொல் அரசருடைய செவியில் நுழைந்தது. அங்ஙனமே மூர்ச்சித் தார்; அருகிருந்தார் தெளிவித்தனர். அந்தப் பசு எவ்வளவு துன்ப முற்றதோ அவ்வளவு துன்பத்தை அரசருமடைந்தார். "ஐயகோ! என் அரசாட்சி நன்று நன்று; எனது அரசாட்சியில் இதுகாறும் ஒரு சிறிய உயிருக்கும் தீங்கு நேர்ந்ததில்லை. பசுவுக்குக் கன்றினிடம் அளவற்ற அன்பு உண்டன்றோ? இந்தப் பசுவின் கண்களில் அருவி போல் நீர் வருகின்றதே. இதைக் கண்டும் இன்னும் என் உயிர் பிரியவில்லையே. "மணியை அசைத்தால் மன்னன் மனத்துயரை நீக்குவான்" என்று கருதியன்றோ இது மணியை அசைத்தது. பசு உலக மாதாவன்றோ? சிவபெரு மானுக்குப் பஞ்ச கவ்யந் தருவதும், திருநீற்றுக்கு அனுகூலமாக சாணத்தைத் தருவதும் பசுவேயன்றோ? சாதுவான உயிராயிற்றே? பசுக்கொலை மிகப்பெரிய பாவமன்றோ? இதற்கா நான் பிள்ளையைப் பெற்றேன்? பிள்ளை யில்லாமல் நெடிது காலம் தவங்கிடந்தேன். தியாகராஜப் பெருமான் திருவருளால் பிள்ளையைப் பெற்றேன். நற்குணங்கள் யாவும் பொருந்திய நல்ல பிள்ளையைப் பெற்றேன் என்று எண்ணி எண்ணி இதயம் மகிழ்ந்தேனே? என் தலையில் இடி விழுந்தது. அந்தோ! இப்பாவி மகன் ஏன் தேரேறிச் சென்றான்? சென்றவன் எச்சரிக்கையாகச் செல்லவேண்டாவோ? இப்பசுவின் துயரை என்ன செய்து ஆற்றுவேன். இப்பிறப்பில் அணுவளவும் நான் குற்றம் புரிந்ததில்லை. முற்பிறப்பில் செய்த வினை இங்ஙனம் வந்து மூண்டது போலும். என் செங்கோல் கொடுங்கோலாக ஆனதே?"

> மன்னுயிர் புரந்து வையம் பொதுக்கடிந் தறத்தி னீடும்
> என்னெறி நன்றா லென்னும் என்செய்தால் தீரு மென்னும்
> தன்னிளங் கன்று காணாத் தாய்முகங் கண்டு சோரும்
> அந்நிலை யரச னுற்ற துயரமோ ரளவிற் றன்றால்.

என்று இவ்வண்ணம் பலவாறு பன்னிப் பன்னிப் புலம்புவார்; திசைகளையெல்லாம் திகைத்துப் பார்ப்பார்; உயிரற்ற உடல்போல் அசையாது நிற்பார்; தன்னுயிரை வெறுப்பார்; பதினாயிரந் தேள்கள் கொட்டியதுபோல் பரதவிப்பார்; பதைத்து உருகுவார்;

கீழே விழுந்து உருளுவார். அரசருடைய அல்லலைக் கண்டு கல்லும், புல்லும் உருகின; அமைச்சராதியோர் அலறினார்கள். வானவர் மருண்டனர்; மண்ணவர் உருண்டனர். மந்திரிமார்கள் மன்னரை வணங்கி, "அரசே! எமது சொற்களைக் கேட்டருளும். தாங்கள் கருணைக்கடல். அதனால், இவ்வாறு துன்புறுகின்றீர். தங்கள் புதல்வர் அறிந்து இத்தவறு செய்தாரில்லை, அவர் அருள் வடிவம். ஓர் எறும்புக்குந் தீங்கு செய்யாதவர். செடி கொடிகள் காற்றினால் அசையக் கண்டாலும் கண்ணீர் ததும்ப அவைகளை அணைத்து அலக்கணுறுவார். கருணை மிக்க அவர்மீதுங் குற்றமில்லை. விதியினால் ஏவப்பெற்ற கன்று பல்லாயிரம் பேரையுந் தாண்டிவந்து தானே தேரில் சிக்கி உயிர் விட்டது. அதற்கு அவர் என்ன செய்வார்? எல்லாம் அறிந்த தங்கட்கு நாங்கள் அதிகம் கூறவேண்டா. அறியாமல் நேர்ந்த இக்கொலைக்கு ஏற்ற பரிகாரந் தேடுவதே முறை" என்றனர்.

அதுகேட்ட அரசர், "அமைச்சர்களே! நன்று கூறினீர்; நடுநிலை தவறாதவர்க்கு இது நியாயமாகாது. தனக்கென்றால் ஒரு நியாயம்; பிறர்க்கென்றால் ஒரு நியாயமா? நீங்கள் பட்ச பாதகமாய்ப் பேசுகின்றீர்.

> மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
> தானதனுக்கு இடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
> ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
> ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனோ.

தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவராலும், கள்ளராலும், விலங்குகளாலும், தீங்கு நேராவண்ணம் குடிகளைத் தன்னுயிர் போல் தருமநெறி தவறாமல் காப்பதன்றோ மன்னனது கடமை. என் மகன் செய்தான் என்று பிராயச்சித்தம் செய்வித்தும், மற்றவன் செய்தால் மரண தண்டனை விதித்தால் தருமஞ் சலியாதோ? தீராப் பழியும் பாவமும் ஆகாவோ? எப்போதும் உயிர்க்கு இறுதி நேர்ந்தாலும் உறுதியினின்றுந் தவறாத நீவிர் ஏன் இப்படிக் கூறுகின்றீர்? அதுவும் யான் செய்த வினையே போலும், "மனுச்சோழன்" என்ற பேரைத் தாங்கிய நான் அணுவளவும் அம் மனுநெறியினின்றும் வழுவுவேனோ? வழுவினால் இருபத்தெட்டு கோடி நரகமும் என்னை வாவென்று அழைக்குமே? கன்றை யிழந்த பசுவைப் போல் நானும் மகனை இழந்து வருந்துவதே நியாயமாகும்" என்றார்.

மதிநலம் படைத்த மந்திரிகள் கேட்டு மனந் திடுக்கிட்டு, மன்னர்பெருமானைப் பணிந்து கூறுவார்கள். "மாநிலங் காக்கும் மகிபரே! கேட்டருளும். தாங்கள் கூறுவது நியாயமாகாது. பசுவதை புரிந்தோர்க்கு அறநூல்களில் பிராயச்சித்தம் வகுக்கப்பட்டுள்ளது. இறந்த பசுவின் தோலைப் போர்த்துக்கொண்டு பசுமந்தையில் வசித்தும், கோநீரால் குளித்தும், பசுவைத் காத்தும், பசு தானம் புரிந்தும், பசுக்கள் புல் மேயும்போது வெயிலில் இருந்தும், பசு மழையில் நனையும்போது தானும் நனைந்தும், பட்டினி கிடந்தும், உயிர் புரக்குமாறு சிறிது காய்கனிகளை அருந்தியும், பன்னிரண்டு ஆண்டுகள் இருக்க வேண்டுமென்பதே கழுவாயாகும். அதனை விட்டு மகனைக் கொல்வது முறையன்று. மேலும் இளங்கோ, பசுவின் கன்றை வேண்டுமென்று தெரிந்து கொல்லவில்லை. தானேவந்து தேரில் வீழ்ந்து இறந்தது" என்றனர்.

மனுச்சோழர், "அமைச்சர்களே! பசு வதைக்குக் கழுவாய் அறநூலில் கூறியிருப்பதை நான் அறிவேன். அது உயிரில் விருப்பமுள்ளவனுக்கும், காமிய கருமங்களைச் செய்பவனுக்கும் விதித்த சாமானிய தருமமேயாகும். சிவகதியடைய விரும்பியவர்க்கும், பற்றற்றவர்க்கும் விதியாகாது. பசுவின் கன்று மாண்டதற்கு என் மகனே காரணம். என் மகனுக்குப் பிராயச்சித்தம் விதிப்பேனாயின் அதனால் பசுவின் துயரம் நீங்குமோ? கடப் பாரையை விழுங்கிவிட்டுச், சுக்கு நீருண்டதுபோலுமே யாகும். தன் அருமைக் கன்றை இழந்து பசு அலறுவதுபோல் என் ஒரு மைந்தனை இழந்து நான் அலறவேண்டும். அதுவே சிறந்த நீதி. சாமான்ய நீதி, விசேட நீதி என்று நீதி இருவகைப்படும். விசேட நீதியை அனுசரிக்கும் என்னிடத்துச் சாமானிய நீதியைக் கூற வேண்டா" என்றார்.

அமைச்சர்கள், "அண்ணலே! தாங்கள் கூறுவது நியாயமே; ஆயினும், சிந்திக்கத் தக்கது ஒன்று உளது. ஆறறிவு படைத்த மனிதனை மனிதன் கொன்றால் தான் மரணதண்டனை விதிக்க அறநூல் விதித்துள்ளது. இது ஐயறிவு படைத்த பசுவின் கன்று. உயிர்களில் தாரதம்யம் உண்டு. ஐயறிவு படைத்த கன்றின் கொலை குறித்து ஆறறிவு படைத்த மைந்தனைக் கொல்வது சிறந்த நீதி யாகாது" என்றனர்.

நீதியின் நுட்பமறிந்த நிருபர், "அமைச்சர்களே! நுமது மதி நுட்பம் சால அழகியது. அறிவு என்பது உடம்பினைக் குறித்த தன்று. உயர்வு, தாழ்வு உடம்பையும், பிறப்பையும் சேர்ந்ததன்று.

மனிதனுக்குப் பகுத்தறிவு இல்லையேல் விலங்குதான். விலங்கு அவ்வறிவு வாய்க்கப்பெறுமேல் அது மனிதன் தான். மனிதரில் விலங்குண்டு. மனிதரில் மனிதனுண்டு. மனிதரில் தேவருண்டு அதுபோல விலங்கில் விலங்குண்டு; விலங்கில் மனிதருண்டு. விலங்கில் தேவருண்டு. திருவானைக்காவில் சிவபெருமானுக்கு வெயிலும், சருகுகளும் படாவண்ணம் பந்தர் செய்த சிலந்தியையும், முப்போதும் பெருமானைப் பூசித்த யானையையும் விலங்கென்று கூறலாமா? உயர்வு தாழ்வு அறிவைக் குறித்ததே யாகும். தன் கன்று மாண்டது குறித்து அழுது, "யாராவது தமக்குத் தீங்கு செய்வாராயின் இம்மணியை அசைத்தால் நான் நேரில் அவர்க்கு நியாயம் வழங்குவேன்'' என்று வாயிலில் கட்டிய மணியை அசைத்து என்னிடம் அறிவித்து நியாயத்தை எதிர் பார்த்து நிற்கும் இப்பசுவையும், இதன் கன்றையும் ஐயறிவு படைத்த விலங்கென்றோ கூறுவது? இவ்வறிவு மனிதருக்கும் உண்டாகாதே. ஆதலினால், மனிதக் கொலைக்கு ஏற்ற தண்டனையே இதற்குரியதாகும். எனவே, என் மகனைக் கொல்வது சிறந்த நீதியும் நெறியுமாகும்'' என்றார்.

மீளவும், மந்திரிகள் அரசனைப் பணிந்து, "அரசரே! சற்று நிதானியும். இதுகாறும் பசு வதைக்காக மனிதனைக் கொன்றதாக வரலாற்றிலும் வழக்கிலும் இல்லை'' என்றனர். மன்னர், "இது காறும் ஆராய்ச்சி மணியைப் பசு அடித்ததாக வரலாற்றிலும் வழக்கிலும் இல்லை. பசுவின் உடம்பில் எல்லாத் தேவர்களும் வாழ்கின்றனர். அன்றியும், திருவாரூர் சிவராஜதானி. இங்கு பிறக்கும் எல்லா உயிர்களும் சிவ கணங்களேயாகும். பசுவின் துயரை நீக்குந் திறமையில்லாத நான் அதன் துன்பத்தை அடைதலே செய்யத் தக்கதாம். ஆதலினால், மகனை இழந்து நான் வருந்துவேன்'' என்று நியாயத் தீர்ப்புக் கூறினார். அதுகேட்ட அமைச்சர்களும், கற்றாரும், உற்றாரும், மற்றாரும் கைநெரித்து மனங்கலங்கி வருந்தித் திகைத்து நின்றார்கள்.

மநுச்சோழர் காவலரை அனுப்பி மகனை வரவழைத்துக் கொலை புரிந்தார்க்குரிய நிலையில் நிறுத்தி விசாரித்துத், தன் மந்திரிகளுள் ஒருவராகிய கலாவல்லபரை நோக்கி, "மந்திரீ! இவனைப் பசுவின் கன்று மாண்ட இடத்தில் படுக்க வைத்து நீ தேரேறி இவன்மேல் தேரை நடத்திக் கொல்லக்கடவாய்'' என்று கட்டளையிட்டார். அம் மந்திரியார் அங்கிருந்து நீங்கி, "அந்தோ நான் என் செய்வேன்? தவமிருந்து பெற்ற தனிமகனை நான் எப்படிக் கொல்வேன். 'அமிர்தத்தைக் கமரில் விட்டுவா'' என்று

கட்டளையிட்டது போல் அரசர் கட்டளையிட்டாரே. அரசர் கட்டளையை மறுப்பதும் குற்றம். சிறுமகனைக் கொல்வதும் குற்றம். இக்கட்டளை எனக்குத்தானா இட வேண்டும்? நான் என்ன பாவஞ் செய்தேனோ? சிவசிவா! சங்கரா! அரசன் எனக்குந் தந்தையன்றோ? அப்படியாயின், அரசன் மகன் அடையுந் தண்டனையை நான் அடைவேன். அரசன் மகனுக்காக நானே உயிரை விடுவேன்'' என்று துணிந்து கன்றிறந்த இடம்போய் தன்னுயிரைத் தானே துறந்து இறந்தனர். இதனைத் தூதர் மன்னரிடம் ஓடிக் கூறினர்.

அருள் நிறைந்த அரசர் கோமான் அதுகேட்டு அலறினார். துன்பத்திற்கு மேல் துன்பமெய்தினார். "பழிக்குமேல் பழியும் பாவத்திற்கு மேல் பாவமும் உண்டாகியதே. அந்தோ! அன்புள்ள என் அமைச்சன் மாண்டானே. அவன் மாண்டதற்கு நானன்றோ காரணம். மகன் பசுவின் கன்றைக் கொன்றான்; நான் மந்திரியைக் கொன்றேன். தியாகேச! இப்படியும் என்னைச் சோதிக்கலாமா? என்னையனே! என் நெறிதவறாத அரசாட்சி முறிவு பெற்றதே. இனி அழுது பயன் என்னை? கன்றுக்காக மகனைக் கொன்று, மந்திரிக்காக நான் உயிரை விடுவதுமே செய்யக் கடவன'' என்று முடிவு செய்து, மகனை முகம் நோக்காமல், பசுவின் கன்று இறந்த இடத்திற்போய் படுக்குமாறு கட்டளை யிட்டார். அம்மகன் தந்தையின் நியாயத்துக்கு உள்ளம் உவந்து சென்று கன்று இறந்த இடத்தில் மல்லாந்து படுத்துக் கண்களை மூடிச் சிவச்சிந்தையுடன் இருந்தார்.

அதுகண்ட அந்நகர மாந்தரனைவரும் "ஆ ஆ" என்று அலறி யழுதனர். "தெய்வமே! இக்குழந்தையைக் காத்தருள்'' என்று கைகூப்பித் தொழுதனர். வீதிவிடங்கருடைய தாயார் கேட்டுத் தரைமேல் வீழ்ந்து தளர்ந்து அழுதனர். மனுச்சோழர் சிவ பெருமானைச் சிந்தை செய்து தேரேறி மகன் உடம்பில் தேர்ச் சக்கரம் ஏறுமாறு வருகின்றார். வானும் மண்ணுங் கலங்கின. தேவர்கள் இவ்வதிசயத்தைக் கண்டு திகைத்து நின்றனர்.ஒரு குலத்திற்கு ஒரே மைந்தன் என்று கருதாது தருமநெறியைக் காத்தலே தக்கதென்று கருதிய அம் மனுவேந்தருடைய அரசாட்சியின் திறத்தை ஆரே அளக்கவல்லார்?

ஒருமைந்தன் தன்குலத்துக்கு உள்ளானென் பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி உறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்.

நீதி தவறாத நிருபர், "தியாகேசா! நீ என் மனதிலிருந்து உணர்த்திய வண்ணம் நீதியைச் செலுத்துகின்றேன். குற்ற வாளிகளைத் தண்டிப்பது அவர்க்கு மறுமையில் நரகம் எய்தாதிருக்கும் பொருட்டேயாகும். அத் தண்டனையைக் கண்டு மற்றவர் குற்றஞ் செய்யாது உய்யும் பொருட்டுமாகும். ஆதலின், நான் என்மகன் மீதுள்ள கருணையினால் அவனுக்குக் கொலைக் குற்றம் இப்பிறப்பிலேயே கழியும் பொருட்டும் மறுமையிலும் நரக வேதனை சாராதிருக்கும் பொருட்டும் தண்டிக்கின்றேன். இல்லையேல் குற்றம் ஒன்றுக்கு ஆயிரமாகப் பெருகி மறுமையில் குற்றஞ் செய்தோர் துன்புறுவார். கருணைக் கடலே! என் மக னுடைய ஆவி குற்றமகன்று நன்மையடைக" என்று தியாகராஜப் பெருமானைத் தியானித்து மகன்மீது தேரைச் செலுத்தினார். வீதி விடங்கருடைய உடம்பு சக்கரத்தில் அகப்பட்டு அரைபட்டது.

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்

அதுகண்ட மண்ணவர் கண்மாரியும், விண்ணவர் பூமாரியும் பெய்தனர். தேவரும் கணங்களும் புடைசூழ மழவிடை மீது மணி கண்டப் பெருமான் உமையம்மையாரோடு தோன்றியருளினார். அகக்கண்ணால் கண்ட ஆண்டவனை அரசர் புறக்கண்ணாலும் கண்டார். செஞ்சடையில் விளங்கும் பிஞ்சு மதியையும், பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறும், மரகதக் கொடிபோன்ற மங்கை நல்லாளையும் கண்குளிரக் கண்டு கை கூப்பி,

பூதநா யகனே போற்றி புராரியே போற்றி ஞான
போதநா யகனே போற்றி புண்ணியப் பொருப்பே போற்றி
நாதநா யகனே போற்றி நங்கைநா யகனே போற்றி
வேதநா யகனே போற்றி விமலனே போற்றி போற்றி

என்று துதித்தார். சிவபெருமான் கருணை மழை பொழிந்து, "மனுச்சோழ! நினது செங்கோல் வாழ்க. நின்புகழ் உலகெலாம் ஓங்குக" என்று அருள்புரிந்தார். அவ் வருள்மழையால், இறந்த ஆன்கன்றும், சிறந்த கோன் கன்றும், மதிமந்திரியும், உயிர் பெற்று எழுந்தனர். "முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளு ளதோ?"

சிவபெருமான், "நெடுங்காலும் நிலவுலகை நீதிவழுவாது அரசு புரிந்து நமது சிவபதம் அடைவாய்" என்று அருள்புரிந்து

மறைந்தருளினார். எழுந்த அரசிளங்குமாரர் தந்தையார் தாள்மலர் மேல் வீழ்ந்தார். மைந்தனை எடுத்து மார்போடு அணைத்து மனம் மகிழ்ந்து, "என் கண்ணே! உன்னால் காணக்கூடாத கண்ணுதற் கடவுளைக் கண்டேன்; நீயே எனது குல விளக்கு; உன்னை யொப்பார் விண்ணிலும் மண்ணிலும் இல்லை'' என்றார். மந்திரியார் தொழ அவரையும் தழுவி அவருடைய அன்பைப் பாராட்டினார். தன் கன்றைக்கண்டு பசு மடி சுரந்து மோந்து மகிழ்ந்து நின்றது. கன்று பால் உண்டு பரிந்து நின்றது.

அடிபணிந்த திருமகனை ஆகமுற எடுத்தணைத்து
நெடிதுமகிழ்ந் தருந்துயர நீங்கினான் நிலவேந்தன்
மடிசுரந்து பொழிதீம்பால் வருங்கன்று மகிழ்ந்துண்டு
படிநனைய வரும்பசுவும் பருவரல்நீங் கியதன்றே

இவ் வதிசயத்தைக் கண்டு எல்லோரும் இன்பக்கடலில் மூழ்கினர். அரசமாதேவியார் அளவற்ற ஆனந்தமுற்று மகனை அணைத்து மகிழ்ந்தனர். எல்லோருமாகத் திருக்கோயிலுக்குப் போய்ப் பெருங்கருணை புரிந்த பிறைமுடிப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்வித்து வாயார வாழ்த்தி, தலையாரக் கும்பிட்டு, நெஞ்சார நினைத்து, முறைப்படி வழிபாடு செய்தனர். இவ் வரசாட்சித் திறத்தை உலகெலாம் புகழ்ந்து போற்றின. பின்னர், மன்னர் மகனுடன் அரியணை மீது இருந்து தண்ணளியுடன் மண்ணக மெல்லாம் மாட்சிமையுற ஆட்சி புரிந்தார்.

(இவ் வரும் பெருங் கருணைவரலாற்றை அன்பர்கள் இராமலிங்க அடிகள் எழுதிய மனுமுறை கண்ட வாசகத் தினாலும், அதன் நுட்ப திட்பங்களை ஆறுமுகநாவலர் எழுதிய சூசனத் தாலும் படித்து இன்புறுக. இவ் வரிய நீதியினை வியந்து கற்புநலமிக்க கண்ணகி, பாண்டியனிடம் வழக்குரைத்தபோது மிக மிக அழகாக எடுத்துக் கூறுமாறும் அன்பர்கள் படித்து இன்புறுக.

"தேரா மன்னா! செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன்; அன்றியும்
வாயில் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகும்நீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியில் மடித்தோன்."

"வீதிவிடங் கப்பெருமான் மெய்யருளைச் சிந்தித்து
நீதிநெறி நித்தம் நினை."

திருக்கூட்டச் சிறப்பு

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருவாரூரிலே, புற்றிடங் கொண்ட ஆதிதேவர் அமர்ந்திருக்கும் திருக்கோயிலில் ஒரு புடை "தேவாசிரியன்" என்னும் பெயருடைய திருமண்டபம் ஒன்று விளங்கும். திருமூலநாதரைச் சேவிக்க வரும் மால், அயன், இந்திரன் முதலிய இமையவர்கள் அங்கு அளவற்ற அன்புடன் குழுமியிருப்பர். ஆயிரங் கால்களையுடைய அத் திருமண்டபம் அளவற்ற மகிமையுடையது. இன்னும் அம்மணிமண்டபத்தில் பற்பல சிவனடியார்கள் கூடியிருப்பர். அவ்வடியார்கள் உடம்பிலணியுந் திருநீறுபோல் உள்ளமும் தூய்மையுடையவர்கள்; அவர்கள் தமது திருமேனியினின்று வீசும் ஒளியினால் திசைகளை விளக்குபவர்கள்; பேசவொண்ணாப் பெருமையுடையவர்கள்; ஐம்பெரும் பூதங் கலங்கினும் எம்பெருமானை மறவாதவர்கள்; அன்பின் உறைப்புமிக்க திருத்தொண்டின் நெறி நின்றவர்கள்; கோதிலாத குணப்பெருங் குன்றனையர்கள்.

கேடும் ஆக்கமுங் கெட்ட திருவினார்
ஒடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

திருநீறுங் கண்டிகையும் பூண்டவர்கள்; ஈரமும் வீரமும் பூண்டவர்கள்; குறைவிலா நிறைவுடையவர்கள்; விருப்பும், வெறுப்பும் அற்றவர்கள்; அசையாத உள்ளமும், அன்பின் வெள்ளமும் உடையவர்கள்; தைலதாரைபோல் இடையறாது இறைவனை நினைக்குந் திருவுடையவர்கள்; கருவாழ்வு தவிர்த்த பெருவாழ்வு பெற்றவர்கள்; மருளாளர் காணாத அருளாளர்கள்; சீலமும் தவக்கோலமுங் கொண்டவர்கள். இத்தகைய திருத் தொண்டர்களைத் துதித்த ஆலால சுந்தரரது அவதாரத்தையும், அவரது வரலாற்றையும், அவரால் கூறியருளப் பெற்ற திருத்தொண்டத் தொகையின்முறையே திருத்தொண்டர்களது தூய வரலாறுகளையும், உங்களுக்குத் திருவருள் உணர்த்த உரைப்போம்'' என்று உபமன்னிய முனிவர் திருவாய் மலர்ந்தருளிச் செய்வாராயினார்.

பெரியபுராண விளக்கம்

காண்டம் 2 சர்க்கம் 13 திருவிருத்தம் 4286 தனி அடியார்கள் 63 தொகை அடியார்கள் 9.

திருமறையோர் புராணம்	13	குயவர் புராணம்	1
சிவவேதியர் புராணம்	5	செக்கார் புராணம்	1
மாமாத்திரர் புராணம்	1	பரதவர் புராணம்	1
முடிமன்னர் புராணம்	6	சான்றார் புராணம்	1
குறுநில மன்னர் புராணம்	5	ஏகாலியர் புராணம்	1
வணிகர் புராணம்	5	வேடர் புராணம்	1
வேளாளர் புராணம்	13	புலையர் புராணம்	1
ஆயர் புராணம்	2	பாணர் புராணம்	1
சாலியர் புராணம்	1	மரபறியாதவர் புராணம்	13

திருமறையோர் 13

தில்லைவாழ்ந்தணர்
குங்கிலியக்கலயர்
முருக நாயனார்
உருத்திர பசுபதி நாயனார்
சிறப்புலி நாயனார்
கணநாத நாயனார்
பூசலார் நாயனார்
சண்டேசுர நாயனார்
சோமாசிமாற நாயனார்
நமிநந்தி நாயனார்
திருஞான சம்பந்த நாயனார்
அப்பூதி நாயனார்
திருநீலநக்க நாயனார்

ஆதிசைவர் (சிவவேதியர்) 5

முப்போதும் திருமேனி தீண்டுவார்
புகழ்த்துணை நாயனார்
சுந்தரமூர்த்தி நாயனார்
சடைய நாயனார்
இசைஞானியார்

மாமாத்திரர் 1

சிறுத்தொண்டர்.

முடிமன்னர் 6

கோச்செங்கட்சோழர்
புகழ்ச்சோழர்
மங்கையர்க்கரசியார்
நின்றசீர்நெடுமாறர்
சேரமான் பெருமாள்
இடங்கழியார்

குறுநில மன்னர் 5

நரசிங்க முனையரையர் மெய்ப்பொருள் நாயனார்
கூற்றுவ நாயனார் ஐயடிகள் காடவர்கோன்
கழற்சிங்க நாயனார்

வணிகர் 5

காரைக்காலம்மையார் அமர்நீதி நாயனார்
மூர்த்தி நாயனார் இயற்பகை நாயனார்
கலிக்கம்ப நாயனார்

வேளாளர் 13

மூர்க்க நாயனார் திருநாவுக்கரசு நாயனார்
செருத்துணை நாயனார் சாக்கிய நாயனார்
வாயிலார் நாயனார் மானக்கஞ்சாற நாயனார்
கோட்புலி நாயனார் விறன்மிண்ட நாயனார்
சத்தி நாயனார் முனையடுவார் நாயனார்
அரிவாட்டாய நாய்யனார் ஏயர்கோன்கலிக்காம நாயனார்
இளையான் குடிமாற நாயனார்

ஆயர் 2

திருமூல நாயனார் ஆனாய நாயனார்.

சாலியர்	*1*	நேச நாயனார்
குயவர்	*1*	திருநீலகண்டர்
செக்கார்	*1*	க்லியநாயனார்
பரதவர்	*1*	அதிபத்த நாயனார்
சான்றார்	*1*	ஏனாதி நாயனார்
ஏகாலியர்	*1*	திருக்குறிப்புத் தொண்ட நாயனார்
வேடர்	*1*	கண்ணப்ப நாயனார்
புலையர்	*1*	திருநாளைப்போவார் நாயனார்
பாணர்	*1*	திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்

மரபறியாதவர் 13

குலச்சிறையார்	பரமனையேபாடுவார்
தண்டியடிகள்	சித்தத்தைச் சிவன்பால் வைத்தார்
கணம்புல்லர்	திருவாரூர்ப்பிறந்தார்
எறிபத்தர்	பொய்யடிமையில்லாதபுலவர்
காரியார்	முழுநீறுபூசிய முனிவர்
பெருமிழலைக்குறும்பர்	அப்பாலும் அடிசார்ந்தார்
பத்தராய்ப்பணிவார்	

குருவருளால் முத்திபெற்றவர் 11

திருஞானசம்பந்தர்	திருநீலகண்டயாழ்ப்பாணர்
திருநாவுக்கரசர்	பெருமிழலைக்குறும்பர்
திருமூலர்	கணம்புல்லர்
நின்றசீர்நெடுமாறர்	அப்பூதியடிகள்
மங்கையர்க்கரசியார்	சோமாசிமாறர்
குலச்சிறையார்	

சிவலிங்கத்தால் முத்தி பெற்றவர் 31

எறிபத்தர்	கலியனார்
குங்குலியக்கலயர்	காரியார்
முருகனார்	திருநீல நக்கர்
கண்ணப்பர்	அதிபத்தர்
ஆனாயர்	பூசலார்
அரிவாட்டாயனார்	கணம்புல்லர்
மூர்த்தியார்	கோட்புலியார்
சண்டேசுரர்	நமிநந்தியடிகள்
திருநாளைப்போவார்	கழற்சிங்கர்
சேரமான் பெருமாள்	வாயிலார்
சாக்கியனார்	செருத்துணையார்
கூற்றுவனார்	புகழ்த்துணையார்
தண்டியடிகள்	ஐயடிகள் காடவர்கோன்
சிறப்புலியார்	கோச்செங்கட் சோழர்
உருத்திர பசுபதியார்	சுந்தரமூர்த்தி நாயனார்
கலிக்காமர்	

அடியார் வழிபாட்டால் முத்தி பெற்றவர் 21

திருநீலகண்டர்	ஏனாதிநாதர்
இயற்பகையார்	புகழ்ச்சோழர்
மூர்க்கனார்	மானக்கஞ்சாறர்
சிறுத்தொண்டர்	இளையான்குடிமாறர்
திருக்குறிப்புத் தொண்டர்	காரைக்காலம்மையார்
விறன்மிண்டர்	நரசிங்க முனையரையர்
இடங்கழியார்	கலிக்கம்பர்
முனையடுவார்	நேசனார்
சத்தியார்	இசைஞானியார்
அமர்நீதியார்	சடையனார்
மெய்ப்பொருளார்	

இயற்றமிழும் இசைத் தமிழும் வல்லவர் 4

திருஞானசம்பந்தர்	காரைக்காலம்மையார்
திருநாவுக்கரசர்	சுந்தரமூர்த்தி நாயனார்

இசைத்தமிழ் வல்லவர் 4

திருநாளைப்போவார்	திருநீலகண்டயாழ்ப்பாணர்
ஆனாயர்	பரமனையே பாடுவார்

இயற்றமிழ் வல்லவர் 5

ஐயடிகள் காடவர்கோன்	பொய்யடிமையில்லாத புலவர்
திருமூலர்	சேரமான் பெருமாள்
காரியார்	

சமயகுரவர் வயதும் நட்சத்திரமும்

அப்பர்	81	சித்திரை சதயம்
சம்பந்தர்	16	வைகாசி மூலம்
சுந்தரர்	18	ஆடி சுவாதி
வாதவூரர்	32	ஆனி மகம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராணம்

இருமுதலை யடைந்துநரை முடியசைய ஆவணமொன் றேந்திப் போந்த
ஒருமுதலை நவநீத புரியானை வழக்கேற்றி யுரைத்த கோவை
அருமுதலை குழவிதர மறையொழுகுங் கனிவாயால் அமுதப் பாடல்
தருமுதலை யடிபணிந்து கருமுதலை வேரினொடுந் தள்ளு வோமே.

சோழ வள நாட்டினுக்கும், தொண்டை நாட்டினுக்கும் இடையே உள்ள நடுநாட்டின் கிளையாக விளங்குவது திருமுனைப்பாடி நாடு. மிகவும் பெருமை பெற்ற அத்திரு நாட்டிலே தெய்வநலமும் சைவநெறியும் ஏனைய வளமும் பொருந்தித் திருநாவலூர் விளங்கியது. அதில் பொதுவாக ஏனைய மரபினர்களும், சிறப்பாக ஆதிசைவர்களும் இனிது வாழ்ந்தனர். சிவபெருமானை முப்போதும் திருமேனி தீண்டிச் சிவாகம முறைப்படி வழிபாடு செய்யும் ஆதிசைவர் திருமரபில் சடையனார் என்பவர் தோன்றினார். அவர் இளமையிலிருந்தே எல்லா நற்குணங்களும் தாமே அமையப் பெற்றவர். கற்பு நலமிக்க இசைஞானியார் என்ற அம்மையார் அவருக்கு வாழ்க்கைத் துணைவியாராக அமைந்திருந்தனர்.

கண்ணுதற் பெருமான் கட்டளையிட்டபடி ஆலாலசுந்தரர் இசைஞானியார்பால், "தீதகன்று உலகமுய்யத் திரு அவதாரஞ் செய்தார். "பாற்கடலிலே பனிமதி தோன்றியது போலத் தோன்றிய திருமகவைக் கண்டு தாய்தந்தையர் மகிழ்ந்து தம்பிரான் அருளால் பிறந்த குழந்தைக்கு நம்பியாரூரர் என்று நாமம் சூட்டினர்.

நம்பியாரூரருக்கு நவரத்தின ஆபரணங்களும், இரத்தினச் சுட்டியும், அரை ஞாணும், பஞ்சாயுதமும், சதங்கையும் பூட்டி அழகுக்கு அழகு செய்தனர். ஆரூரர் வீதியில் தளர் நடையிட்டுத் தேருருட்டி விளையாடுவார் ஆயினார். நரசிங்க முனையர் என்னும் அந்நாட்டினை ஆளும் மன்னர் இத்திருப் புதல்வரைக் கண்டு காதல் கூர்ந்தனர். தனது நண்பராகிய சடையனாரையும் இசை ஞானியாரையுந் தொழுது ஆரூரரைத் தனக்கு மகனாகத் தருமாறு வேண்டினர்.

"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள."

என்ற பொய்யாமொழிக்கிணங்க சடையனார் உடனே உயிரினு மினிய தன்மைந்தரை மன்மைந்தராகத் தந்தனர். ஆரூரர் நரசிங்கமுனையருடைய அரும் பெரும் காதன் மைந்தராக அந்தணர் திருவும் அரசர் திருவும் ஒருங்கே பொலிய மிகவும் செல்வமாக வளர்ந்தனர்.

உரிய காலத்தில் உபநயனஞ் செய்து முப்புரிநூல் சாத்தினர். ஆரூரர் அளவில் தொல்லைகள் ஆய்ந்து திருமலி சிறப்பின் ஓங்கி திருமணப் பருவமாகிய பதினாறாவது ஆண்டினை அடைந்தார். சடையனார் தமது திருமைந்தருக்குத் திருமணஞ் செய்யக் கருதினார். திருநாவலூருக்கு அருகில் புத்தூர் என்ற ஊரில் சடங்கவி சிவாசாரியார் என்பாரது புதல்வியே தக்கவர்என்று முடிவு செய்தார். குலம் கோத்திரம் மணம் அறிவு முதலிய எல்லா நலங்களிலும் ஒத்த அக்கன்னிகையை மணம் பேசுமாறு தக்கவர் களை அனுப்பினார். நம்பியாரூரரது நற்குணங்களை முன்னரேயே அறிந்த சடங்கவியாரும் அகமும் முகமும் மலர்ந்து பெண்தர இசைந் தார். திருமணநாள் குறித்து உறவினருக்கும் நண்பினருக்குந் திருமண ஓலை அனுப்பினார்கள். புத்தூரில் திருமணத்திற்குரிய சிறந்த ஏற்பாடுகள் யாவும் அமைத்துக்கொண்டிருந்தனர்.

சுந்தரர் மன்னர் கோலமும் வைதிக கோலமும் விளங்க சிவமூர்த்தியைச் சிந்தித்து நண்பரும், உறவினருஞ் சூழப் புரவி மேலூர்ந்து புத்தூரினை யடைந்தார்.

மன்னவர் திருவுந் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள நம்பியா ரூரர் நாதன்
தன்னடி மனத்துட் கொண்டு தகுந்திரு நீறு சாத்திப்
பொன்னணி மணியார் யோகப் புரவிமேற் கொண்டு போந்தார்

சங்கங்கள் முழங்கின; வேதகீதங்கள் பாடினர்; மாதர்கள் ஆடினர்; மங்கல வாத்தியங்கள் கடல்போல் ஒலித்தன; மணம் வந்தபடியால் அவ்வூர் அன்று தொட்டு "மணம்வந்த புத்தூர்" எனப் பேர் பெற்றது. தோரணங்களும் வாழை கமுகுகளும் நாட் டப்பட்டன; மனைகள்தோறும் பூரண கும்பம் வைத்தனர். வீதிகள் பன்னீரால் தெளிக்கப்பட்டுச் சந்தனத்தால் மெழுகப்பெற்றன.

கண்களெண் ணிலாத வேண்டுங் காளையைக் காண என்பார்
பெண்களில் உயர நோற்றாள் சடங்கவி பேதை என்பார்

மண்களி கூர வந்த மணங்கண்டு வாழ்ந்தோம் என்பார்
பண்களில் நிறைந்த கீதம் பாடுவார் ஆடு வார்கள்

சடங்கவி சிவாசாரியார் எல்லோரையும் வரவேற்றார். எல்லோரும் நன்கு உபசரிக்கப் பெற்றார்கள். மணத்தொழில் தொடங்கப்பெற்றது. திருமணப் பந்தரில் நிறைந்த கூட்டம்;

அப்பொழுது, முன் திருக்கைலாய மலையில், "மையன் மானுடமாய் மயங்கும் வழி ஐயனே தடுத்தாண்டருள் செய்" என்று சுந்தரர் கேட்டுக் கொண்டவாறு எம்பெருமான் தடுத்தாட் கொள்வான் கருதினார்.

ஆலுமறை சூழ்கயிலை யின்கணருள் செய்தே
சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்
மேலுற வெழுந்துமிகு கீழுற அகழ்ந்து
மாலுமய னுக்கும்அரி யார்ஒருவர் வந்தார்.

தளர்ந்த வயதும், தலைமிசை இருந்த சந்திரனே நரைமயிராகியது போன்ற வெளுத்த தலை மயிர் முடியும், செவியில் வடிந்த குழையும், மார்பினில் புரிநூலும், தோளில் உத்தரீயமும், வெயிலை மறைக்குங் குடையும், தருப்பை முடிந்த மூங்கில் தடியும் விளங்க அழகு கிழவடிவு கொண்டதுபோன்ற திருவடிவுடன், சிவபெருமான் மணத்தொழில் தொடங்கும் பந்தரிடை வந்து 'யான் கூறும் இந்த மொழியை யாவரும் கேண்மின்' என்று அருளிச் செய்தனர். அவரது திருமேனியின் பொலிவைக் கண்ட அந்தணர் களும் நம்பி ஆரூரரும், 'ஐயா! உமக்கு நல்வரவு; நாங்கள் செய்த தவப்பயனால் உங்கள் வரவு எமக்குக் கிடைத்தது; தாங்கள் சொல்ல எண்ணியதைச் சொல்லி அருள்வீர்" என்றார்கள். முந்தை மறையாயிரம் மொழிந்த முக்கட் பெருமான் மணமகனை நோக்கி, 'அப்பனே! உனக்கும் எனக்கும் உள்ள தொடர்பு காரணமாக ஒரு பெருவழக்கு உளது; அதனை முடித்த பின்னர் உனது திருமணத்தைச் செய்க' என்று அருளிச் செய்தனர். ஆரூரர், 'ஐயனே! நன்று; உமக்கும் எனக்கும் வழக்கு உளதாயின் அதனை முடித்தலது இவ்வதுவை செய்யேன்; அது என்ன வழக்கு? இன்னதெனத் தெரியுமாறு விளக்கமாகக் கூறும்' என்றார்.

ஆவதிது கேண்மின்மறை யோரெனடி யான்இந்
நாவல்நக ரூரன்இது நான்மொழிவ தென்றான்
தேவரையு மாலயன் முதல்திருவின் மிக்கோர்
யாவரையும் வேறடிமை யாவுடைய எம்மான்.

இந்த அவையிலுள்ள அனைவருங் கேளுங்கள். இந்த நம்பியா ரூரன் என்னுடைய அடிமை' என்று பரமன் பகர்ந்தனர். மாலய னாதி வானவர் அனைவரையும் தனியடிமையாகவுடைய பெருமானுடைய இந்த எதிர்பாராத சொல்லைக் கேட்ட அனைவரும் திகைத்துப் போயினர். 'இவர் என்ன நினைந்தார்' என்று அவர்பால் நெருங்கினர்; சிலர் சிரித்தனர்; சிலர் சினந்தனர்; நம்பியாரூரர் கீழவரை நோக்கி, 'இந்த ஐயருடைய சொல் மிகவும் நன்றாக இருக்கின்றது' என்று இகழ்ச்சியாகக் கூறிச் சிரித்தனர்.

அவ்வாறு சிரித்த தனது அன்பனை நோக்கிப் பெருமான் தோளிலிருந்த உத்தரியத்தைத் தாங்கிக் கொண்டு அருகிற்சென்று, 'அந்தக் காலத்தில் உனது பாட்டன் எனக்கு எழுதிக்கொடுத்த அடிமை ஓலை இதோ இருக்கின்றது; வெறும் வாய்வார்த்தை மட்டுமன்று. அங்ஙனமிருக்க நீ எள்ளி நகையாடுவது சரியன்று' என்று அருளிச் செய்தனர்.

நம்பி ஆரூரருக்குப் பண்டைப் பிறப்பின் தொடர்பினால் உள்ளம் உருகியது; 'ஐயனே! ஆசில் அந்தணர்கள் வேறு ஓர் அந்தணர்க்கடிமை என்பது எங்கும் கிடையாது; இன்று புதிதாக நீர் சொல்லக் கேட்டனம்; பித்தனோ மறையோன்?' என்றார்.

எம்பெருமான் 'அப்பனே! நான் பித்தனும் ஆக; அல்லது பேயனும் ஆக; இன்னும் நீ எத்தனை இகழுரை கூறினாலும் நான் அதற்கு நாண மாட்டேன். என்னை நீ இன்னும் சிறிதும் தெரிந்துகொள்ளவில்லை. வித்தகம் பேசவேண்டாம்; எழுந்து பணி செய்' என்று அருளினார்.

ஆரூரருக்கு அவருடைய வடிவுஞ் சொல்லும் உள்ளத்தை ஒரு புறம் உருக்கினாலும், அடிமை என்ற சொல் ஒருபுறம் சினத்தை மூட்டியது. 'ஐயனே! எங்கே! அந்த ஓலையைக் காட்டும்' என்றார்.

அரனார், 'அடிமையாகிய நீ ஓலையைக் காட்டென்றால் நான் காட்டுவனோ? சபையிலுள்ள பெரியோருக்குக் காட்டி மெய்ப் பித்தபின் நீ வேலை செய்' என்றனர்.

ஆரூரர் அந்த ஆவணத்தை வலிதில் பறிக்கச் சென்றார். எம்பெருமான் காவணத்திடையே ஓடினார். சுந்தரர் ஓடி அவரைத் தொடர்ந்து பற்றினார். அவரைத் தவிர ஆலமுண்ட நீலகண்டரை யார் தொடர்ந்து எட்டவல்லார்? சுந்தரர் அவர் திருக்கரத்திலிருந்த அடிமை ஓலையைப் பறித்து, 'அந்தணர்

அடிமையாகி ஏவல் செய்தல் என்ன நியாயம்?' என்று கூறி ஓலையைக் கிழித்து எறிந்தார்.

அருமறை முறையிட்டு இன்னும் அறிவதற்கு அரியான் ஒருமுறை "முறையோ" என்று ஓலம் இட்டனர். அருகில் நின்றவர் இருவரையும் விலக்கி, "ஐயரே! எங்கும் எக்காலத்திலும் நடந்திராத தன்மையைக் கொண்டு வழக்காடுகின்றீரே? நீர் யார்? உமது ஊர் எது? கூறும்" என்று கேட்டனர்.

ஆண்டவன். "நான் இவனது தலைவன்; எனது ஊர் திருவெண்ணெய்நல்லூர்; அது இருக்கட்டும். இவன் அறநெறியின்றி வலாற்காரஞ் செய்து என் கையிலிருந்த அடிமை ஓலையைக் கிழித்ததனாலேயே அடிமை யென்பது உறுதியாயிற்று" என்று அருளிச் செய்தனர்; ஆரூரர் அவரை நோக்கி, "ஓகோ! நீர் பழைய மன்றாடி போலும்! நீர் திருவெண்ணெய்நல்லூராயின் உமது பிழைமலி வழக்கை அங்ஙனமே பேசி முடிவு செய்வோம்; வாரும்" என்றார்.

வேதமுங் காணாத விமலன், "அங்ஙனமே செய்வோம்; திருவெண்ணெய்நல்லூரிலுள்ள ஆன்றோர் முன் கூறி உறுதி செய்வேன்" என்று கோலூன்றி நடந்தனர்.

காந்தத்திற்குப் பின் இரும்பு ஈர்க்கப்படுவதுபோல் எம்பிரான் பின் நம்பியாரூரர் சென்றார். "இது என்ன ஆகுமோ" என்று திருமணத்திற்கு வந்திருந்த அனைவரும் உடன் சென்றார்கள்.

திருவெண்ணெய்நல்லூரை அடைந்தார்கள். அங்குக் குழுமியுள்ள அந்தணர்களது சபையிற்போய், இறைவன், 'ஐயன்மீர்! இந்த நாவலூரான் என் அடிமை; அடிமையென்று காட்டிய ஆளோலையை வலிதில் பற்றிக் கிழித்துவிட்டனன். இது என் வழக்கு' என்று அருளிச் செய்தார். அவையில் உள்ளோர், "ஐயா! மறையவர் அடிமையாதல் என்பது இந்த உலகில் இது வரையிலும் இல்லை; உமது உரை என்ன நியாயம்?" என்று கேட்டனர். 'அறிவின்மிக்க ஆன்றோர்களே! நான் கூறுவது முற்றிலும் உண்மை; பொய்மையன்று. இவன் கிழித்த ஓலை இவன் பாட்டன், தானும் தன் வழித் தோன்றல்களும் அடிமை என்று எனக்கு எழுதித் தந்தது' என்றனர். சபையோர்கள் சுந்தரரை நோக்கி, 'இவர் காட்டிய அடிமை ஓலையை வலிய வாங்கிக் கிழித்தது முறையாகுமோ? அதனால் உமக்கு வெற்றி வருமோ? இவர் யார்க்கும் ஏற்கும்படி கூறினார். உமது கருத்து யாது' என்று கேட்டனர்.

நம்பிஆரூரர், "எல்லா நூல்களையும் உணர்ந்த அறிஞர்களே! என்னை ஆதிசைவன் என்று நீங்கள் அறிவீர்கள். என்னை இவர் அடிமை என்று சாதிப்பாராகில், அது மனத்திற்கெட்டாத மாயையே; நான் என்ன சொல்ல வல்லேன்? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை'' என்றார். சபையோர்கள் கிழவரை நோக்கி, "ஐயரே! இவரை உமது அடிமை என்பதை எம்முன் உறுதி செய்யும். ஒரு வழக்கை உறுதி செய்வதானால் ஆட்சி, எழுத்து, சாட்சி என்ற மூன்று வேண்டும்.

ஆட்சியில் ஆவ ணத்தில் அன்றிமற் றயலார் தங்கள்
காட்சியில் மூன்றி லொன்று காட்டுவாய் என்ன முன்னே
மூட்சியில் கிழித்த ஓலை படியோலை மூல ஓலை
மாட்சியில் காட்ட வைத்தேன் என்றனன் மாயை வல்லான்.

அனுபவம், எழுத்து, சாட்சி என்ற மூன்றில் ஒன்றைக் காட்டினால் இவர் உமது அடிமையாகும்' என்றார்கள். மாயையில் வல்ல மணிகண்டர், 'முன் இவன் கிழித்த ஓலை மூல ஓலையைப் பார்த்து எழுதிய படி ஓலையே யாகும்; இப்படிக் கிழித்தெறிவான் என்பது தெரிந்தே அப்போது நான் மூலவோலையைக் காட்டவில்லை. மூலஓலை இதோ வைத்திருக்கின்றேன்.' என்று அருளிச் செய்தனர். அவையினர், 'அதனைக் காட்டும்' என்றனர். எம்பிரான், 'முன்கிழித்ததுபோல் இவன் இதையுங் கிழியா வண்ணம் தடுப்பீராயின் காட்டுவோம்' என்றனர். அவர்கள், 'அங்ஙனமே யாகுக' என்றனர். பெருமான் ஓலையை எடுத்தனர். அப்பொழுது சபையோர் கட்டளைப்படி கருணீகன் வாங்கி அதனை எல்லோருக்குங் கேட்குமாறு படித்தான்.

அருமறை நாவல் ஆதி சைவன்ஆ ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் கியானு மென்பால்
வருமுறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கிவை என்எ ழுத்து

(திருநாவலூர், ஆதிசைவகுலம், ஆரூரனாகிய நான், திருவெண்ணெய்நல்லூர் பித்தனுக்கு நானும் என் சந்ததிகளும் வழிவழியாக அடிமை செய்ய உள்ளும் புறமும் ஒத்து எழுதிக் கொடுத்தேன். இப்படிக்கு ஆரூரன்.)

பின்னர், அந்த ஓலையில் சாட்சிகளாகக் கையெழுத்திட்டவர்கள் தங்கள் கையெழுத்தென்றே ஒப்புக்கொண்டார்கள். மறையோர்கள், "அப்பா! ஆரூரா! இது உமது பாட்டன் கையெழுத்துத்

தானே? பார்த்துச் சொல்லும்' என்றார்கள். கிழவர் சிரித்து 'பாட்டனையே இவன் பார்த்திருக்க மாட்டானே?' இவனா பாட்டன் கையெழுத்தைச் சரிபார்க்கத் தக்கவன்? நன்று நன்று; இவனுடைய பாட்டன் எழுதிய வேறு எழுத்தைக் கொணர்ந்து ஒத்துப் பாரும்' என்று அருளினர். அவ்வண்ணமே வேறு அவர் எழுதிய சுவடியைக் கொணர்வித்து ஒப்புநோக்கினர். இரண்டும் ஒத்து இருந்தன. மறையவர்கள், 'ஆரூர! நீர் இவருடைய அடிமை தான். இனி தப்புதற்கு வழியில்லை. தோற்றுவிட்டீர். இவருக்கு நீர் தொண்டு செய்யும்' என்று கூறி முடிவு செய்தனர்.

ஆரூரர், 'விதிமுறை இதுவாயின் யான் மறுப்பனோ?' என்று இசைந்தார். சபையோர்கள் கிழவரை நோக்கி, 'ஐயரே! நீர் காட்டிய ஓலையில் உம்மை எங்கள் ஊர் என்று குறிப்பிடப் பட்டுளது. நாங்கள் கிழவராகிய உம்மை இதுகாறும் கண்ட தில்லை. இங்கே உமது வீடும், வாழ்க்கையும் எங்கே? காட்டும்' என்று வினாவினார்கள். வழக்கினால் வென்ற வள்ளல், 'ஓகோ! என்னை ஒருவரும் அறியீரோ? ஆனால் என்னுடன் வாருங்கள்; எனது இருப்பிடத்தைக் காட்டுவேன்' என்று அத்தனை பேருந் தொடர்ந்துவர, திருவெண்ணெய்நல்லூரில் உள்ள திருவருள்துறை என்னும் திருக்கோயிலுக்குள் நுழைந்தனர். நுழைந்த அவரைக் காணவில்லை. அனைவருந் திகைத்தனர்.

நம்பியாரூரர், என்னை அடிமை கொண்ட அந்தணர் ஆலயத்துட் புகுந்தது என்ன அதிசயம்!' என்று எண்ணி, அளவற்ற அன்புடன் தனியே தொடர்ந்து அவரை அழைத்தனர். உடனே எம்மையாளுடைய ஈசனார் அம்மையோடு தருமவிடைமேல் தோன்றிக் காட்சியளித்தனர்.

"முன்புநீ நமக்குத் தொண்டன் முன்னியே வேட்கை கூரப்
பின்புநம் ஏவ லாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னை தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர்முன்னர் நாம்தடுத் தாண்டோம்" என்றார்.

'அன்பனே! முன்னமேயே நீ நமக்குத் தொண்டன்; உள்ளத்தில் எழுந்த விருப்பத்தின் காரணமாக நமது கட்டளைப்படி மண்ணில் வந்து பிறந்தனை; மாயை உன்னைத் தொடர்ந்து பற்றாதபடி நாம் தொடர்ந்து உன்னைத் தடுத்து ஆட்கொண்டோம் என்று இறைவன் திருவாய் மலர்ந்தருளினார். தாய்ப்பசுவின் குரலைக் கேட்ட இளங்கன்று போல் அலறினார்; கண்ணருவி பெருகியது; உள்ளம் உருகியது; சொற்கள் குழறின; உடல் புள்கமுற்றது;

அடியற்ற மரம்போல் நிலமிசை வீழ்ந்தார். விண்ணவர் மலர்மழை பொழிந்தனர்; எங்கும் மறைகள் முழங்கின. "என் அருமை ஆண்டவரே! நீரே வந்து வலிய என்னை ஆட்கொண்டீரே" என்று ஆரூரர் கூறினார். செந்தமிழுலகம் உய்யும் பொருட்டுச் சிவபெருமான், "சுந்தரா! நீ நம்முடன் வன்சொற்களைப் பேசிய படியால் வன்தொண்டன் எனப்படுவாய்; நமக்கு அன்பிற் சிறந்த அருச்சனை பாட்டேயாகும்; ஆதலினால், தமிழ்ப்பாடல்களைப் பாடுவாய்" என்று கட்டளையிட்டருளினார்.

தேடிய அயனும், மாலும் ஐந்தெழுத்தும் பாடிய பொரு ளாயுள்ள பரமன் இங்ஙனம் கூற, ஆரூரர், "வேதியனாகி வந்து என்னை வழக்கினால் வென்று அடிமை கொண்ட ஆதியே! அரனே! கோதிலா அமுதே! தேவரீரது குணப்பெருங்கடலைச் சிறியேன் யாதினை யறிவேன்? என்சொல்லிப் பாடுவேன்?" என்றார். அத்தன், "அன்பனே! என்னை முன்னை பித்தன் என்றனை யன்றோ? பித்தனென்றே பாடுதி" என்று அருள் புரிந்தார். கடல்மடை திறந்த வெள்ளம் போலே நம்பியாரூரர் நாவிலிருந்து தமிழ்வெள்ளம் அணைகடந்து வரத் தொடங் கியது.

பித்தாபிறை சூடீபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனைத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே.

என்று பதிகம் பாடினார். வலிய ஆட்கொண்ட தூமறை பாடும் வாயார், "தொண்டனே! இன்னும் நமது புகழினை யுணர்ந்து உலகமுய்யப் பலவகையாகப் பாடு" என்று கருணைபுரிந்து திருவுரு மறைந்தனர். அனைவரும் அதிசயித்துப் பாராட்டிப் பரவினர். பின்னர் புத்தூர் சடங்கவி சிவாசாரியரது புதல்வியார் நம்பியாரூ ரரையே சிந்தை செய்துகொண்டிருந்து சிலகாலத்திற்குப்பின் சிவபத முற்றனர்.

ஆளுடையநம்பி அரனாரரால் ஆட்கொள்ளப் பெற்றபின், திருநாவலூர் சென்று ஆங்கு எழுந்தருளியுள்ள பரமன் மீது பதிகம் பாடி, அண்மையிலுள்ள திருத்துறையூர் சென்றார். பெண்ணை நதியில் முழுகி, திருக்கோயிலுட்சென்று, தலைமாலையணிந்த தலைவனை வணங்கித், தவநெறியைத் தாரும் என்று வேண்டினார்.

மலையாரரு வித்திரண் மாமணி யுந்திக்
குலையாரக்கொணர்ந் தெற்றியோர் பெண்ணை வடபால்
கலையா ரல்குற் கன்னியர்ஆடுந் துறையூர்த்
தலைவாஉனை வேண்டிக்கொள் வேன்தவ நெறியே.

தவநெறியை இறைவன் தரப்பெற்றார். அருகிலுள்ள திருத் தலங்களை வணங்கிக்கொண்டு அம்பலத்தாடும் ஆனந்தக் கூத்தரைத் தரிசிக்குங் காதலினால் புறப்பட்டார்.

திருவதிகைக்கு அருகில் வந்தார். அத்திருவதிகை, திருநாவுக் கரசுநாயனார் உலகம்போற்றும் உழவாரப்படைகொண்டு திருத் தொண்டு செய்து அருள்பெற்றது என்று அதனை மிதிக்க அஞ்சினார்; திருவதிகைக்குள் செல்லாது அருகிலுள்ள சித்தவடம் போய்த் தங்கினார்.

கெடிலநதியில் நீராடி, அதிகை மேவும் அண்ணலைத் திசைநோக்கித் தொழுதார். இரவு சித்தவடம் மடத்தில் பரிசனங் கள் அனைவருந் துயில்செய்ய, தாம் திருவதிகைத் தேவரைத் தியானித்த வண்ணமாகப் பள்ளிகொண்டிருந்தார்.

திருவதிகை வீரட்டானத்து உறையுந் தேவதேவர் கிழவேதியர் வடிவந் தாங்கி, மடத்துள் வந்து சுந்தரருடைய தலையின்மீது திருவடியை வைத்துத் தூங்குபவர்போல் அமைந்தருளினார். நம்பியாரூரர் எழுந்து, “ஐயரே! உமது பாதத்தை ஏன் என் தலைமேல் வைத்தீர்?” என்று கேட்டார். இறைவர், “அப்பனே! தளர்ந்த கிழப்பருவத்தினாலே திசைதெரியாமல் கால் உன்மீது பட்டு விட்டதுபோலும்” என்றார். நம்பியாரூரர் வேறு ஒரு புறத்தில் போய்ப்படுத்துக் கொண்டார். ஐயன் அங்கும்போய் அவர் சென்னியின்மீது திருவடியை வைத்தருளினார். வன்தொண்டர் எழுந்து, “என்ன ஐயா, பலகாலும் இப்படி என்னை மிதிக்கின்றீரே? நீர் யார்?” என்றார். எம்பிரான், “என்னை நீ அறிந்திலையோ” என்று மறைந்தருளினார். உடனே, சுந்தரர் திடுக்கிட்டு, “அதிகை மேவும் அமலனே! ஆலமுண்ட அண்ணலே! இந்த இரவில் இங்கு எளியேன் பொருட்டு எழுந்தருளி, வேதாகமங்களுங் காணாத உமது திருவடிகளைச் சிறியேன் சென்னியில் வைத்தருளினீரே! எனது தவமே தவம்!” என்று துதித்து,

தம்மானை யறியாத சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்

கைம்மாவி னுரியானைக் கரிகாட்டி லாடல்
உடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்
தம்மான்தன் அடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போலி யானே.

என்ற திருப்பதிகம் பாடினார்.

அங்கிருந்து புறப்பட்டு, மாவலியை அடக்கிய வாமன மூர்த்தி வழிபட்ட திருமாணிக்குழியையும், திருத்தினை நகரையும் வழி பட்டுத் திருப்பதிகங்களைப் பாடி, இடையில் உள்ள தலங்களையும் வணங்கி எல்லை மிதித்தவுடன் பிறவி இல்லை யென்று தொல்லை மறைகள் புகழும் தில்லையம்பதி அடைந்தார். தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தைக் கண்டவுடன் ஆறாக் காதலுடன் மண்மிசை வீழ்ந்து பணிந்தார்; உள்ளம் உருகினார். சிதம்பரத்தில் உள்ள அடியார்கள் எதிர்கொண்டு பணிந்தார்கள்.

வேதவொலியும், ஆகம கீதவொலியும், தேவார நாதவொலியும், ஆடலொலியும், வேள்விப்புகையும் மிகுந்த திருவீதியை வணங்கி அடியார்களும் முனிவர்களும் நெருங்கியுள்ள திருக்கோயிலுக்குள் சென்று பொன்னம்பலத்திற்குமுன் நின்று திருநடேசப்பிரானைக் கண்குளிரக் கண்டார். மதுவுண்ட வண்டுபோல் கூப்பிய கரத்துடன் அசைவற்று நின்றார்.

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமா னந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

பன்முறை மண்மிசை வீழ்ந்து பணிந்தார்; கண்ணருவி பெய்தார்; பதிகம்பாடித் துதிசெய்தார். அப்போது, “அன்பனே! நமது திருவாரூருக்கு வருக!'' என்று அருள்வாக்கு வானத்தில் எழுந்தது. அதனைக் கேட்ட சுந்தரர் அம்பலவாணர் திருவருளை வியந்து, எம்பெருமான் கட்டளையைச் சிரமேற் தாங்கித் தொழுது பிரியாவிடை பெற்றுப் புறப்பட்டார்.

கொள்ளிடநதியைத் தாண்டிச் சீகாழிக்குச் சேர்ந்தார். அம்மை திருமுலைப்பாலுண்ட எம்மையாளுடைய திருஞானசம்பந்த மூர்த்திகள் அவதரித்த தலமாதலின், அதனைத் கால்கொண்டு மிதிக்க அஞ்சி, எல்லையிலிருந்து வணங்கினார். சீகாழி மேவிய

சிவபெருமான் அங்கே காட்சிகொடுத்து அருளினார். "சாதலும் பிறத்தலும் தவிர்த்து" என்று தொடங்கி, "காதில் வெண்குழை யனைக் கடல்கொள மிதந்த கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே'' என்று முடித்துத் திருப்பதிகம் பாடினார். திருக்கோலக்கா, திருப்புன்கூர் தரிசித்து காவிரியில் மூழ்கி, மாயூரம், அம்பர்மாகாளம், திருப்புகலூர் முதலிய திருத் தலங்களைச் சேவித்துக்கொண்டு திருவாரூருக்கு அருகில் வந்தார்.

நீராருஞ் சடைமிசை நிலவணிந்த நிமலன் தேராருந் தெருவுடைய திருவாரூர்வாழ் அன்பர்களது கனவில், "ஆராத காதலுடன் நாம் அழைக்க நம்பியாரூரன் வருகின்றான்; அவனை எதிர்கொண்டு அழையுங்கள்'' என்று பணித்தருளினார். திருவாரூர் வாழ் திருத்தொண்டர்கள் எம்பிரானால் தடுத்தாட் கொள்ளப்பெற்ற சுந்தரரது பெருமையை வியந்தனர்; நகரை நன்கு அலங்கரித்தனர்; வீதிகள் எங்குந் தோரணங் கட்டினர்; வீடுகள்தோறும் மணி விளக்கும் பூரண கும்பமும் வைத்தனர்; கடல் திரண்டதுபோல் ஆரூரன்பர்கள் எதிர்கொண்டு நம்பியாரூரரை அழைத்தனர். நாயனார், "கரையுங் கடலும்" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். திருக்கோயிலுள் நுழைந்து, தேவாசிரியன் மண்டபந் தொழுது புற்றிடங்கொண்ட புரா தனனைப் போற்றினார். உருகி உருகி உள்ளத்தில் அன்பு வெள்ளம் பெருகிப் பெருகி ஆராக் காதலுடன் துதித்தார். அப்பொழுது, "சுந்தரனே! உனக்கு நம்மைத் தோழராகத் தந்தோம்; நாம் முன்பு தடுத்தாட்கொண்ட காலத்து நீ புனைந்திருந்த திருமணக் கோலத்துடன் எப்போதும் இருந்து மண்மிசை விளையாடுவாய்" என்று ஒரு வாக்கு அனைவருங் கேட்க வானில் எழுந்தது.

(இந்த இடம் அன்பர்கள் நன்கு சிந்திக்கத் தக்கது. "நான் உன்னைத் தோழனாக்கிக்கொண்டேன்" என்றும், "இன்று முதல் நீ எனது தோழன்" என்றும், "நான் உன் தோழன்" என்றும் பெருமான் கூறவில்லை. "தோழராக நம்மை உனக்குத் தந்தோம் என்பதில் எத்துணை ஆழம் உளது! "தந்ததுன் தன்னை" என்பார் மணிவாசகர். மாலயனாதி வானவர்கள் யாவரும் ஈசனுடைய அடிமைகளே; குபேரன் அரிதில் முயன்று தோழரானார். சுந்தரரை இறைவன் வலிதில் தாமே தோழராக்கிக் கொண்டார்.)

இறைவனுடைய அருள்மொழியைக் கேட்ட நம்பி ஆரூரர், ''பெருமானே! நின் கருணைத் திறத்தினை என்னென்று புகழ்வேன்? வலிய ஆட்கொண்ட வள்ளலே! என்று துதித்தார்.

அன்று தொட்டு அவரை அடியவர்கள் "தம்பிரான் தோழர்" என்றே அழைப்பாரா யினார்கள். திருமணக்கோலத்துடன் விளங்கி, நாடோறும் புற்றில்மேவும் புண்ணியனையும், தியாகேசனையும் இனிது சேவித்துத், தமிழ் மாலைகளால் இறைவனை அலங்கரித்து வருவார்.

முன்னே திருக்கைலாயமலையில் ஆலாலசுந்தரர் விரும்பி நோக்கிய, உமையம்மையாரது சேடிகள் இருவரில் ஒருவராகிய கமலினியம்மையார், திருவாரூரில் உருத்திரகணிகையார் மரபிலே அவதரித்தனர். பரவையார் என்ற திருப்பேர் கொண்டு பனிமதியென வளர்ந்தார்.

மானிளம் பிணையோ தெய்வ வளரிள முகையோ வாசத்
தேனிளம் பதமோ வேலைத் திரையிளம் பவள வல்லிக்
கானிளங் கொடியோ திங்கட் கதிரிளங் கொழுந்தோ காமன்
தானிளம் பருவங் கற்குந் தனியிளந் தனுவோ என்ன

அழகு ஒரு வடிவம் பெற்றதுபோலும், அறிவின் சிகரம் போலும், அன்பின் கருவூலம் போலும் விளங்கினார். இசையில் மிகவும் வல்லமை பெற்றிருந்தார். நாடோறும் தோழிகளுடன் வன்மீகநாதரை உள்ளங் குழைந்து உருகி வழிபாடு புரியும் நியமம் உடையவர்.

ஒருநாள் பரவையார் தோழியர் சூழ வானிலிருந்து இறங்கிய மின்னற்கொடிபோல் திருக்கோயிலுக்கு வந்தார். அடியார்கள் சூழ சுவாமி தரிசனஞ் செய்ய வந்த சுந்தரர் பண்டை ஊழ் கூட்டு விக்கப் பரவையாரைப் பார்த்தார். காதல் வெள்ளங் கரை புரண்டு ஓடியது.

கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேனென் றதிசயித்தார்.

"மலர்மிசை வாழும் பிரமன் அரிதின் முயன்று செய்த மணி விளக்கோ? உலகமூன்றும் செய்த புண்ணியத்தின் புது மலரோ? என்னை ஆட்கொண்ட எந்தைபிரான் திருவருளோ?" என்று பலப்பல எண்ணி நின்றார்.

பரவையாரும் பண்டைவிதி கூட்டுவிப்ப ஆரூரரை நோக்கினார்; கனலினுமிக்க கற்புடைய அம்மையின் உள்ளக் கோயிலுள் சுந்தரர் எழுந்தருளினார்.

முன்னேவந் ததிர்தோன்று முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ
என்னேயென் மனந்திரித்த இவன்யாரோ எனநினைந்தார்.

இவ்வாறு உள்ளம் பறிகொடுத்துப் பரமனைச் சேவிக்க உட்புகுந்தார். தம்பிரான்தோழர் அருகிலிருந்த அடியவர்களை “இவர் யார்?” என்று வினாவினார். “சுவாமீ! இவர் பரவையார் என்பவர்; தேவர்களும் சேர்தற்கரியவர்; உருத்திரகணிகையர்” என்றனர். சுந்தரர் திருக்கோயிலினுட் சென்று சிவபெருமானைத் தொழுது, பரவையாரைத் தேடினார். “எந்தையாரருள் எந்நெறிச் சென்றதே” என்று வாடினார். தேவாசிரியன் மண்டபம் போய், “பரமன் பரவையைத் தருவார்” என்று இருந்தார். பரவையார் ஒரு வழியாகத் தமது இருக்கை சேர்ந்தார். பரவையாம் அமுதினைத் தரவேண்டிக் கடலைக் கடையச் செல்வதுபோல் கதிரவன் மேற்கடலிற் புகுந்தான். அஞ்செழுத்தினை நினையாத வஞ்சகர் நெஞ்சம்போல் உலகம் இருள்சூழ்ந்தது. திருநீற்றின் திருவொளிபோல் திங்கள் தோன்றியது. திங்களும் தென்றலும் அவருக்குத் துன்பஞ் செய்தன.

பிறந்த தெங்கள் பிரான்மல யத்திடைச்
சிறந்த ணைந்தது தெய்வநீர் நாட்டினில்
புறம்ப ணைத்தடம் பொங்கழல் வீசிட
மறம்ப யின்றதெங் கோதமிழ் மாருதம்.

“ஏ தமிழ்த் தென்றலே! இந்தக் கொடுமையை நீ எங்கே கற்றுக் கொண்டனை” என்று கூறி வருந்திக் கொண்டிருந்தார்.

பரவையார் தமது திருமாளிகை சேர்ந்து தண்ணிலா மாடத்தில் மலர்ப்பள்ளிமேல் வைகி ஆரூரரை எண்ணி அயர்வார்; அருகிருந்த சேடியை நோக்கி, “நாம் கோயிலில் கண்ட அருளாளர் யார்?” என்று கேட்டார். அவள் தொழுது, “அம்மையே! இருவர் தேடும் ஒருவர் வலிதில் ஆட்கொண்ட சைவமுதல் திருத்தொண்டர்; தம்பிரான் தோழர்; திருநாவலூர் ஆதிசைவர்” என்றனள். பரவையார் கேட்டு, “அவர் எம்பிரான் தமரோ?” என்று மேலும் அன்பு வளரக் காதல் நோயினால் கலங்கினார்.

இருவரையும் இம்மண்ணுலகில் பிறக்குமாறு கட்டளையிட்ட இறைவர் திருவாரூர்வாழ் அடியவர் கனவில் தோன்றி, “நாளை

பரவையைச் சுந்தரனுக்கு மணஞ் செய்மின்" என்று கட்டளை யிட்டு, நம்பியாரூரர்பால் வந்து, "பரவையை உனக்கு மணஞ் செய்யுமாறு அடியவர்க்கு ஆணையிட்டோம்" என்று அருளிச் செய்து, பரவையார்பால் சென்று, "நாளை உன்னை நம்பியாரூரன் மணங்கொள்வான்" என்று அருள்புரிந்தார்.

அடுத்தநாள் அரனார் ஆணையின்படி அடியார்கள் மிகமிகச் சிறப்பாகத் தம்பிரான் தோழருக்கும் பரவையாருக்கும் திருமணஞ் செய்தனர். நம்பியாரூரர் பரவையார்பால் பன்னாளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினார்.

ஒருநாள் அன்பர் புடைசூழ நம்பியாரூரர் திருக்கோயிலை யடைந்து தேவாசிரியன் மண்டபத்தில் சிறந்த திருத்தொண்டர்கள் கூடி இருப்பதனைக் கண்டார். "இத்திருத்தொண்டர்கட்கு அடியேன் தொண்டனாக ஆகும் நாள் என்றோ?" என்று எண்ணி ஏங்கி உள்ளே சென்று, இறைவனது திருவடிகளை வணங்கி வாழ்த்தினார். கண்ணுதற்கடவுள் அவருக்குக் காட்சி தந்து, "சுந்தரனே! நமது அடியவர் பெருமையைக் கேள்.

பெருமையால் தம்மை யொப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார் ஊனமேல் ஒன்று மில்லார்
அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்ப மார்வார்
இருமையுங் கடந்து நின்றார் இவரைநீ யடைவா யென்று

அருள்புரிந்து, "நமது அடியார்களை வணங்கி அவர்கள்மீது பதிகம் பாடு" என்று பணித்தருளினார். சுந்தரர் பெருமானைப் பணிந்து, "திருத்தொண்டர்களது பெருமை இத்தன்மையது; இன்ன பண்புடையது என்று எவ்வாறு சிறியேன் உணர்ந்து பாடுவேன்? இதற்குரியவன் யானோ? பாடும் பரிசினை யருள்வீர்' என்று வேண்டினார்

எல்லையில் அருள்பெற்று உலகெலாம் உய்ய பரம்பொருள், "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்தருளினார். மறையாயிரம் மொழிந்த மலர்வாயால் அடியெடுத்துக் கொடுக்கப் பெற்ற ஆரூரர், தேவாசிரியன் மண்டபம்போய் அங்குக் குழுமியுள்ள அடியார் களைப் பன்முறை பணிந்து, கண்ணீர் சொரிய "திருத்தொண்டத் தொகை" என்னும் திருப்பதிகத்தை இனிது பாடினார்.

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்

இல்லையே யென்னாத இயற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாரூரில் நாள்தோறும் முப்போதும் தியாகேசப்பெருமானை வழிபட்டுக் கொண்டு வந்தார். வேளாளர் குலமணியாகிய குண்டையூர்க்கிழார் என்பவர் நம்பியாரூரர்பால் அன்பு பூண்டு, அவரும் அடியாரும் அமுது செய்யும்பொருட்டுப், பரவையார் வீட்டிற்கு நெல்லும், பருப்பும், சர்க்கரையும் பிற உணவுப் பொருள்களும் தந்து மகிழ்வாராயினார். மழையின்றி எங்கும் பஞ்சம் ஏற்பட்டது. வயல்கள் விளையாமையால் வழக்கம்போல் சுந்தரருடைய அமுதுக்கு நிரம்ப உணவுப் பொருள்கள் வழங்குதற்கு முடியாமையால் ஒருநாள் மிகவும் உள்ளம் வருந்தி உணவின்றி உறங்கினார். கண்ணுதற் பெருமான் கனவில் தோன்றிச், 'சுந்தரன் பொருட்டு உனக்கு நெல் தந்தோம்' என்று அருளிச் செய்து, குபேரனிடம் கட்டளையிட, குண்டையூர் முழுவதும் மலைபோல் நெல் குவிக்கப்பட்டது. பொழுது விடியும்பொழுது குண்டையூர்க்கிழார் எழுந்து, நெல் மலையைக் கண்டு அதிசயித்துச், சிவபெருமானைச் சிந்தித்து 'இதனை எவ்வாறு எடுப்பது? யாவராலும் எடுக்கலாகாது' என்று கருதிச், சுந்தரரிடம் அறிவிக்கும்பொருட்டுத் திரு வாரூருக்குச் சென்றார். இதனைச் சிவபிரான் அறிவிக்க சுந்தரமூர்த்தி நாயனாரும் எதிரே வந்தார்.

குண்டையூர்க்கிழார் அடிகளை வணங்கிப், 'பெருமானே! தேவரீருக்கு அடியேன் புரிந்துவருந் தொண்டுக்கு இன்று தடைவர, பொன்மலையுடைய புராதனன் நென்மலை அருளினார். அது மனிதரால் எடுக்க முடியாது' என்று கூறினார். ஆரூரர் குண்டையூர் போய் விண்ணளவாக ஓங்கியுள்ள நெற்குவியலைப் பார்த்து வியப்படைந்து, அருகிலுள்ள கோளிலி என்னும் திருத்தலத்திற்குச் சென்று, நெல்லினைத் திருவாரூருக்குச் சேர்க்குமாறு திருப்பதிகம் பாடியருளினார்.

நீள நினைந்தடியேன் உனைநித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள்வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவைஅட்டித் தரப்பணியே.

விடையவர் திருவருளால் 'இன்றிரவு நமது பூதங்கள் பரவை வீடு மட்டுமின்றித் திருவாரூர் முழுவதும் நிறையுமாறு நெல் மலையைக் கொணர்ந்து சேர்க்கும்' என்று வானில் ஓர் ஒலி எழுந்தது. அதுகேட்ட தம்பிரான் தோழர் எம்பிரானை வணங்கித் திருவாரூர் சேர்ந்தார். தியாகேசனை வணங்கிப், பரவையாரிடம் நிகழ்ந்தது கூறி மகிழ்ந்தார். அன்றிரவு குன்றவில்லியின் உத்தரவின் வண்ணம் பூதகணங்கள் நென்மலையை எடுத்துப் பரவையார் வீட்டினை நிறைத்துத், திருவாரூர் முழுவதும் நிறைத்தன. விடிந்தபின் பரவையார் திருவருளின் தன்மையைக் கண்டு அதிசயித்து, அவரவர்கள் வீட்டின் எல்லைக்குள் . உள்ள நெற் குவியலை அவரவர்களே எடுத்துக்கொள்ளுமாறு பறை அறை வித்தனர். திருவாரூர் மக்கள் அனைவரும் திருவருளையும் பரவையாரது பரிவையும் புகழ்ந்து போற்றினார்கள்.

திருநாட்டியத்தான் குடியில் வாழ்கின்ற கோட்புலிநாயனார், சுந்தரமூர்த்தி நாயனார்பால் சென்று, திருவடி தொழுது, தம்முடைய ஊருக்கு எழுந்தருளுமாறு வேண்டினார். அவர் அதற்கு இசைந்ததனால் மகிழ்ந்து தன் ஊர் போயினார். பின்னர் தம்பிரான் தோழர் தியாகப் பெருமானை வணங்கி, விடைபெற்றுக் கொண்டு, பிற திருத்தலங்களையும் வணங்கிக் கொண்டு, திருநாட்டியத்தான் குடியை அடைந்தார். கோட்புலியார் வீதியையும் வீட்டினையும் அலங்கரித்து எதிர்கொண்டு வணங்கித் தமது மனைக்குஅழைத்துக் கொண்டு சென்று, பொற்பீடத்து இருத்தித் திருவடியை நீரால் விளக்கி, அப் பாத தீர்த்தத்தை வீடுமுழுவதுந் தெளித்து, நறுமலர்களினால் அருச்சித்தார். தூப தீபங்காட்டி, மலர்மாலை சூட்டி வழிபட்டு திருவமுது செய் வித்தார்.

சேனாபதியாகிய அக்கோட்புலியார் தமது அருமைப் புதல்விகளாகிய "சிங்கடியார்"; "வனப்பகையார்" இருவரையும் வணங்கச்செய்து, தாமும் வணங்கி "எம்மை ஆட்கொள்ளும் எந்தையே! அடியேனது புதல்விகளை அடிமைகளாகக் கொண்டு அருள்புரிய வேண்டும்" என்று விண்ணப்பம் புரிந்தார். சுந்தரர் அவ்விருவரையும் தமது புதல்வியராகக் கொண்டு, மடித்தலத்தில் வைத்துக், கருணையுடன் உச்சிமோந்து, வேண்டியவை தந்து, சிவாலயத்திற்கு அவர்களுடன் சென்று, கோட்புலிநாயனாரைச் சிறப்பித்தும், தன்னைச் சிங்கடியப்பன் என்று வைத்தும் திருப்பதிகம் பாடினார். திருவலிவலம் சென்று "வலிவலந்தன்னில் வந்து கண்டேனே" என்று பாடித் திருவாரூர் சேர்ந்தார்.

பங்குனி உத்திரத் திருநாள் வந்தது. அக்காலை பரவையார் புரியுந் தானதருமங்கட்கு வேண்டும் செல்வத்தைக் கருதி, திருப்புகலூர் சென்றார், அங்கு எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கிக், கோயிலின் முன்றிலில் தங்கினார். திருவருளி னால் துயில்வர, அருகிருந்த செங்கற்களைக் கொணர்வித்து அடுக்கி, அதன்மேல் ஆடையை விரித்துப் படுத்துக் கண் துயின்றார். உடன் வந்த அன்பர்களும் படுத்து உறங்கினர். உறங்கி விழித்துப் பார்க்கச் செங்கற்கள் அனைத்தும் பொற்கற்களாகத் திகழ்ந்தன. அதுகண்டு அனைவரும் அதிசயிக்க இறைவனுடைய திருவருளைச் சிந்தித்துத், திருப்பதிகம் பாடினார்.

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்கினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேஎந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே.

அங்கிருந்து பொற்குவையுடன் புறப்பட்டுத் திருப்பனையூர் அருகில் செல்லும்போது, நிறைநதியும் குறைமதியும் அணிந்த நிமலன் நிருத்த கோலத்துடன் காட்சி யளித்தருளினார். "அரங்கி லாட வல்லாரவரே அழகியரே" என்று பாடித் திருவாரூரை அடைந்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் நன்னிலம், திருவீழிமிழலை, அரிசிற்கரைப்புத்தூர், நறையூர்ச் சித்தீச்சுரம், திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், சிவபுரம், திருக்கலய நல்லூர், திருக்குடந்தை, திருவலஞ்சுழி, திருநல்லூர், திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருவையாறு, திருப்பூந்துருத்தி முதலிய திருத்தலங்களை வணங்கிக் கொண்டும், திருப்பதிகங்கள் பாடிக்கொண்டும் சென்று, திருவாலம்பொழில் போய்ப் பெருமானை வழிபட்டுத் தங்கினார். அன்றிரவு கனவில் பரமன் தோன்றி, "மழபாடிக்கு வர மறந்தனையோ?" என்று கூறி யருளினார். நம்பியாரூரர் விழித்தெழுந்து காவிரியைக் கடந்து வடகரைபோய்த், திருமழபாடி யடைந்து சிவ்பெருமானை அன்புடன் போற்றி,

"மன்னே மாமணியே மழ பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே"

என்று பாடினார். காவிரியின் இருமருங்கிலுமுள்ள தலங் களைத் தரிசித்துக் கொண்டு, திருவானைக்காவினை அணுகி வணங்கினார். திருப்பாச்சிலாச்சிரமம் சேர்ந்து, 'இறைவனைத் தொழுது பொன் வேண்டினார். இறைவன் உடனே தாராமையால் "இவரலாது இல்லையோ பிரானார்" என்று பாடினார். இறைவன் பொற்குவை யளித்தார். திருப்பைஞ்ஞீலியையும் திரு ஈங்கோய் மலையையுந் தரிசித்துக் கொங்குநாடு சென்றார். காவிரிக்குத் தென்கரையில் விளங்கும் கொடுமுடி சென்று "மற்றுப் பற்றெனக்கின்று" என்னும் நமச்சிவாயப் பதிகம் பாடினார். பேரூர், சென்று திருநடனகோலந் தரிசித்தார். திருவெஞ்ச மாக்கூடல், திருக்கற்குடி, திருவாறை மேற்றளி, இன்னம்பர், புறம்பயம் ஆகிய தலங்களுக்குப் போய், அருகிலுள்ள திருக் கூடலையாற்றூர் செல்லாமல் விருத்தாசலம் செல்லுவாராயினார். வழியில் இறைவர் ஓர் அந்தணனாகி வந்தனர். ஆரூரர் அவரை நோக்கி, "ஐயரே! திருமுதுகுன்றூருக்கு (விருத்தாசலம்) வழி எது?" என்று கேட்டார். ஆண்டவர் 'இது கூடலையாற்றூருக்குப் போம்வழி' என்று கூறி வழிகாட்டிக் கொண்டு முன்னே சென்றனர். தம்பிரான்தோழர் அவரைத் தொடர்ந்து கொண்டு போயினார். பெருமான் உடனே மறைந்தனர். 'அடிகளின் வழிபோந்த அதிசயம் அறியேனே' என்று சுவாமிகள் பதிகம் பாடிக், கூடலையாற்றூர் போய் வழிபட்டுத் திருமுதுகுன்ற மடைந்தார்.

விருத்தாசலத்தில் பொன் வேண்டுமென நினைத்துப் பதிகம் பாடினார். பரமன் பன்னீராயிரம் பொன்னை யருளினார். வன்தொண்டர், 'எந்தையே! இப்பொன்னைத் திருவாரூரில் உள்ளவர் அதிசயிக்க அங்கு வரச் செய்ய வேண்டும்' என்றார். 'சுந்தரனே! இப்பொன்னை மணிமுத்தாநதியிலிட்டுத் திருவாரூர்க் கமலாலயக் குளத்தில் எடுத்துக் கொள்' என்ற ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. அதைக் கேட்ட ஆரூரர் பொன்னில் மச்சம் வெட்டி எடுத்துக் கொண்டு மணிமுத்தாநதியில் புகவிட்டு, "என்னையனே! எளியேனை வலிதில் ஆட்கொண்ட திருவருளை இதில் அறிவேன்' என்று கூறித் தில்லையம்பதி செல்லப் புறப்பட்டார். இடையில் கடம்பூர் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு சிதம்பரம் சேர்ந்தார். நடேசமூர்த்தியைக் கண்குளிரக் கண்டு, பேரூரில் கண்ட நடனக்காட்சியைச் சிறப்பித்துப் பாடி,

விடைபெற்றுக் கொண்டு, கருப்பறியலூர் போய் தரிசித்தார். மண்ணிப் படிக்கரை, திருவாளொளிபுற்றூர், கானாட்டுமுள்ளூர், எதிர்கொள்பாடி, வேள்விக்குடி முதலிய திருத்தலங்களைச் சேவித்துக் கொண்டு திருவாரூரை யடைந்தார்.

பூங்கோயிலிற் சென்று புற்றிடங்கொண்ட புண்ணியனைப் போற்றிப் பரவையார் திருமாளிகைக்குச் சென்றார். பரவையார் பணிந்து உபசரித்தார். பின்னர், ஒருநாள் தம்பிரான் தோழர், "மாதே! பழமலையப்பர் தந்த பொன்னை நதியிலிட்டேன். அதனை இங்குக் கமலாலயக் குளத்தில் எடுத்துத் தருவேன் வா' என்றார். பரவையார் 'இது என்ன அதிசயம்?' என்று புன்முறுவல் பூத்தார். சுந்தரர் பரவையாருடன் கமலாலயக் குளத்தினை அணுகி ஈசான திசையில் இறங்கி, அன்று இட்டதனை எடுப்பார்போல் தடவினார். பரமேச்சுரன் பாடலை விரும்பித் திருவிளையாடலாக பொன் வருவியாதொழிந்தனர். பரவையார் 'ஆற்றிலிட்டுக் குளத்தில் தேடுகின்றீரோ?' என்று கூறினார். வன்தொண்டர் 'பழமலை நாதரை நினைத்துப் 'பொன்செய்த மேனியினீர்' என்று பதிகம் பாடலும், பொன் கிடைத்தது. அப்பொற்றிரளை எடுத்துக் கரை சேர்த்தார். பரவையாரும் பிறரும் கண்டு அதிசயித்தனர். மாற்றுரைத்துப் பார்க்க, மாற்றுக் குறைந்திருந்தபடியால், மீண்டும் பதிகம் பாட மாற்று உயர்ந்தது. பொன் குவியலைப் பரவையார் வீட்டிற்கு அனுப்பிவிட்டுத் திருக்கோயில் சென்று தியாகேசனைத் தொழுது பாடினார்.

நம்பியாரூரர் எம்பிரானுடைய திருத்தலங்களை வணங்க விரும்பி, மீண்டும் அடியார்களுடன் புறப்பட்டு வன்மீக நாதரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, திருநள்ளாறு, திருக்கடவூர், கடவூர்மயானம், திருவலம்புரம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருநனிபள்ளி, திருச்செம்பொன்பள்ளி, திருநின்றியூர், திருநீடூர், திருநாளைப்போவாருக்கு நந்திதேவர் விலகிய திருப்புன்கூர் முதலிய திருத்தலங்களை வணங்கிக் கொண்டு, திருஞான சம்பந்தருக்குப் பொற்றாளந் தந்த திருக்கோலக்காவை வணங்கி,

"நாளும் இன்னிசை யால்தமிழ் பரப்பும்
ஞான சம்பந்த னுக்குல கவர்முன்
தாளம் ஈந்தவன் பாடலுக்கு இரங்கும்
தன்மை யாளனை"

என்று திருப்பதிகம் பாடியருளினார். சீகாழியை வலமாகச் சென்று வணங்கித் திருக்குருகாவூருக்குச் செல்லுவாராயினார்.

வன்தொண்டருக்கு அப்போது பசியுந் தாகமும் உண்டாகியது. அதனையறிந்த அருட்கடலாம் ஆண்டவர் வழியிலே குளிர்ந்த ஒரு பந்தரையுண்டாக்கி அதிலே அந்தணராகித் தண்ணீரும் பொதிசோறும் வைத்துக்கொண்டு பரவை கேள்வரைப் பரிவுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். தம்பிரான் தோழர் அடியார் களுடன் அப் பந்தரிற் சென்று மறையவராக நின்ற இறையவர ருகில், "சிவாய நம", "சிவாய நம" என்று செபித்துக் கொண்டிருந் தார். ஆலமுண்ட அண்ணல், "ஐய! சாலப் பசித்திருக்கின்றீர்; இப் பொதிசோறு தருகின்றேன். காலந் தாழ்க்காது உண்டு பசி யாறும். தண்ணீரும் பருகி இளைப்பாறும்" என்று பரிந்து பகர்ந் தார். ஆரூரர் அதனை வாங்கி அடியார்களுடனும் எண்ணிறந்த பரிசனங்களுடனும் உண்டார். உண்டும் அப் பொதிசோறு குறையாது பெருகிக் கொண்டே இன்னும் எத்துணைப்பேர் வரினும் பசியாறுதற்கு ஏற்றதாய் வளர்ந்திருந்தது. திருவருள் போன்ற குளிர்ந்த நீரையும் பருகிப் பெருமானருகில் படுத்து உறங்கினார். ஏனையோரும் உறங்கினார்கள். சடையிற் கங்கையை மறைத்த விடையவர் பந்தருடன் மறைந்தார். வன்தொண்டர் கண்விழித்து எழுந்து பந்தரையும் அந்தணரையுங் காணாது, வந்தவர் எந்தைபிரான் என்று உணர்ந்து குருகாவூர் சென்று, "இத்தனை யாமாற்றை யறிந்திலேன்" என்று எடுத்துத் திருப்பதிகம் பாடினார்.

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக உண்பலிக் குழல்வானே
காடுநல் லிடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

பின் திருக்கழிப்பாலை, சிதம்பரம், திருத்தினைநகர் முதலிய திருத்தலங்களைச் சேவித்துத், தமது பிறப்பிடமாகிய திருநாவலூர் சென்று பெருமானை வணங்கிச் சிலபகல் அங்குத் தங்கியிருந்தார்.

நம்பியாரூரர் தொண்டநாட்டிலுள்ள திருத்தலங்களையுஞ் சேவிக்க விரும்பி, தொண்டர்களுடன் புறப்பட்டுத், திருக்கழுக் குன்றஞ் சென்று தொழுது, திருக்கச்சூர் சென்று ஆலக்கோயி னுள்ளே புகுந்து, கண்ணார்ந்த இன்னமுதைக் கையாரத் தொழுது பாடி வழிபட்டு வெளிவந்து மதிற்புறத்தில் நின்றார்.

அமுதுசெய்து தரும் பரிசனங்கள் வ்ந்து சேராமையால் பசியுடன் இருந்தனர். வன்தொண்டரது பசியைத் தீர்க்கத் திரு வுளங் கொண்ட பரமன் ஒரு வேதியராகி ஓடு ஒன்றை ஏந்தி

அன்பரிடம்போய், "ஐயா! நீர் பசித்திருக்கின்றீர்போலும்; சற்று இங்கு இரும்; உமக்குச் சோறு இரந்து தருவேன்" என்று கூறித் திருக்கச்சூரிலுள்ள மனைகள்தோறும் போய் அக் கடும்பகலில் அன்னம் இரந்து கொண்டு வந்து, "ஐயா! இந்தாரும்; பசி தீர உண்ணும்." என்று அளித்தனர்.

ஆரூரர் அவருடைய அருள் திறத்தைப் பாராட்டித் தொழுது வாங்கி அடியார்களுடன் அருந்தினார். உடனே, இரந்தளித்த எம்பிரான் கரந்தருளினார். மறையவர் மறைதலும் 'இறையவரே அவர்' என்று உணர்ந்து, எந்தையின் இன்னருளை வியந்து திருப்பதிகம் பாடினார். அங்கிருந்து புறப்பட்டு, அடியார் எதிர் கொள்ளக் காஞ்சி நகரம் போய், உள்ளங்குழைந்து ஏகாம்பர நாதரையும், காமாட்சியம்மையாரையும் பணிந்தார். திரு மேற்றளியைச் சேவித்தார். திருவோணகாந்தன் தளியில் பதிகம் பாடிப் பொன்பெற்றார். அநேகதங்காவதம், திருப்பனங்காட்டூர், திருமாற்பேறு, திருவல்லம் முதலிய தலங்களை வணங்கித் திருக்காளத்தி அடைந்தார்.

திருக்காளத்தியில் மலையெழு கொழுந்தாகிய மணிகண்டரை என்புருகப் பாடி வழிபட்டார். கண்ணுதலுக்கு அருகிலுள்ள கண்ணப்பரைத் தொழுது சிலபகல் அங்குத் தங்கினார். அங்கிருந்தவாறே திருக்கைலை, திருக்கேதாரம், திருப்பருப்பதம், காசி முதலிய வடக்கே யுள்ள திருத்தலங்களை மனக்கண்ணால் பார்த்துத் திசைநோக்கித் தொழுது திருப்பதிகங்களைப் பாடிய ருளினார்.

தம்பிரான்தோழர் எம்பிரான் வாழும் திருக்காளத்திமலையி னின்றும் புறப்பட்டு இடையில் உள்ள திருத்தலங்களை எல்லாம் வணங்கிக்கொண்டு 'ஈது சிவலோகம் என்றென்றே மெய்த் தவத்தோர் ஓதும்' திருவொற்றியூரை அடைந்தார். கடல் ஒருசமயம் பொங்கிவர, சிவபெருமான் 'ஒற்றியிரு' என்று கடலைப் பணித்தார். அதனால், 'ஒற்றியூர்' எனப்படும். திருவொற்றியூரில் கறைமிடற் றண்ணலாம் இறைவனை முப்போதும் தப்பாது வழிபட்டுக்கொண்டிருந்தார்.

முன்னே திருக்கைலாயமலையில் சுந்தரரை விரும்பி சேடியர்கள் இருவரில் ஒருவராகிய 'அனிந்திதையார்' என்பார் சிவபெருமானுடைய ஆணைப்படி, தொண்டை நாட்டிலே ஞாயிறு என்ற ஊரிலே வேளாண் மரபிலே 'ஞாயிறுகிழார்' என்ற சிவனடியவருக்குத் திருமகளாக அவதரித்தனர். ஞாயிறுகிழார்

தனது புதல்வியார்க்குச் 'சங்கிலியார்' என்று பேரிட்டனர். பண்டைத் தவச்சார்பினால் இளமையிலிருந்தே அவர் உமை யம்மையார்பால் பக்தி மிகுந்து இனிது வளர்ந்தனர். அம்பிகையைச் சிந்தித்த வண்ணமாகவே விளையாடியும், கலைபயின்றும், மங்கைப் பருவமடைந்தனர். ஒருநாள் ஞாயிறுகிழார் தமது மனைவியை நோக்கிப் 'பெண்ணே! நமது தவத்தால் பிறந்த புதல்வி குணம் அழகு முதலிய நலங்களின் மிகுத்து விளங்குகின்றாள். உலகில் ஒருவரும் அவளுக்கு நிகரில்லை. அவளுக்குத் திருமணம் புரியுங் காலம் அணுகியுளது. என் செய்வோம்?' என்றார். மனைவியார், 'நமது குலமுய்யத் தோன்றிய செல்வியின் நலங்களுக்கேற்ற நாயகனைத் தேடித் திருமணஞ் செய்யும்' என்று கூறினார்.

சங்கிலியார் அவ் வுரையைக் கேட்டு, 'என்னே! இவர்கள் எனக்குப் பொருந்தாத வுரையைப் பேசுகின்றனர். நான் நம்பனருள் பெற்ற ஒருவருக்கு உரியேன். இத்தன்மை யன்றி வேறு எத்தன்மையாக முடியுமோ?' என்று எண்ணி மயங்கி மண்மிசை வீழ்ந்தனர். அருகில் நின்ற தாயுந் தந்தையும் பதைத்து மகளை எடுத்து அணைத்து, பனிநீர் தெளித்து மயக்கந் தெளிவித்தனர். உணர்ச்சி பெற்ற புதல்வியை நோக்கி, 'அம்மா! உனக்கு என்ன வந்தது? என்று வினாவினார்கள். சங்கிலியார், 'அம்மே! அப்பா! இப்போது நீங்கள் என் திருமணங் குறித்துப் பேசியது எனக்கு இசையாது; நான் சிவனருள் பெற்ற திருவாளர் ஒருவருக்கு உரியவள். ஆதலின் இந்த எண்ணத்தை விட்டுவிடுங்கள். யான் இனி திருவொற்றியூரை யடைந்து திருவருள் நெறியில் நிற்பேன்' என்றனர். அதனைக் கேட்ட தாய் தந்தையர் அச்சமும், அதிசய மும் அடைந்து, அவ் வுரையை மறைத்து ஒழுகினார்கள்.

இத் தன்மையை அறியாமல் இவர் குலத்திற் கொத்த ஒருவன் சங்கிலியாரை விரும்பி திருமணம் பேசுமாறு சிலரை அனுப்பினான். வந்தவர்கள் தந்தையாரிடம் தமது கருத்தைக் கூறினர். ஞாயிறுகிழார் சங்கிலியார் கருத்தை வெளியிட முடியாமையாமல், 'திருமண விஷயமாய் இப்போது ஒன்றும் பேசுவதற்கில்லை' என்று ஒருபோக்காகக் கூறியனுப்பினார். மணம் பேச அனுப்பினவனும் பேச வந்தவர்களும் மாண்டு போயினர். அதனையறிந்த ஞாயிறுகிழாரும் அவர் மனைவியாரும் மனம் மருண்டனர். 'நமது பெண் தெய்வத் தன்மை பொருந்தினவள். உலகில் உய்ய வேண்டும் என்ற எண்ணமுடையவர்கள் சங்கிலி யார்பால் உரைக்கத் தகாத உரையை உரைத்திடார்கள் என்ற

உண்மையை உலகறியத் திருவருள் உணர்த்தியதுபோலும். இனி, இவள் கருத்தின்படி திருவொற்றியூரில் சிவத்தொண்டு செய்ய விடுவோம்' என்று கருதினர். அத் தன்மையை வெளிப்படக்கூறி, உறவினருடன் கூடி சங்கிலியாரைத் திருவொற்றியூருக்கு அழைத்து வந்து, கன்னிமாடம் ஒன்று அமைத்து அதில் இருத்தினர். வழிபாட்டிற்கு வேண்டிய நிதிகளையும் அங்கு அமைத்தனர். தந்தையார் திருமகளைப்பயபக்தியுடன் வணங்கித், 'தாங்கள் திருத்தொண்டு புரிந்துகொண்டு இரும்' என்று கூறி, அவரை விட்டுப் பிரியும் வேதனையால் கண்ணீர் சொரிந்து விடை பெற்றுக் கொண்டு தங்கள் ஊருக்குச் சென்றனர்.

சங்கிலியார் முக்காலங்களிலும் திருக்கோயிலுக்குச் சென்று முக்கட் பெருமானை ஆரா அன்புடன் வழிபடுவர். முற்பிறப்பில் செய்த மலர்மாலைத் தொண்டு புரியுங் கருத்துடையராகித், திருக்கோயிலில் மலர்மண்டபத்தில் திரையிட்டு மலர் தொடுத்து மாலைகளாக்கி மணிகண்டர்க்குத் தந்து பணிவிடை புரிந்து வந்தனர்.

திருவருளினால் வந்த சுந்தரமூர்த்தி நாயனார் ஒருநாள், முந்தை ஊழ் கூட்டிவைக்க திருக்கோயில் சென்று படம்பக்க நாதரை வழிபட்டுத் திரும்பினார். திரும்பியவர் திருத் தொண்டர்கள் புரியும் சிறந்த தொண்டினைப் பார்த்துக் கொண்டு மலர் மண்டபத்திற்குள் சென்றார். அங்கே திரைமறைவில் அன்பு என்ற நாரில் பஞ்சாட்சரமாகிய மலரை வைத்து உள்ளத்தில் ஒரு மாலை தொடுத்துக்கொண்டு, புறத்தே மலர்களைத் தொடுக்கும் அடியார்களைக் தொழுதார். சங்கிலியார் தாம் தொடுத்த மாலைகளைத் திரையை நீக்கி இறைவருக்குச் சாத்தும்படி தந்து மீண்டும் மின்னற்கொடிபோல் மறைந்தனர். அவ்வாறு மறைந்த அத்திருவாட்டியை விதியினால் மதிவடிவாகிய ஆரூரர் கண்டார்.

அன்பு நாரா அஞ்செழுத்து நெஞ்சு தொடுக்க அலர்தொடுத்தே
என்புள் ளுருக்கும் அடியாரைத் தொழுது நீங்கி வேறிடத்து
முன்பு போலத் திரைநீக்கி முதல்வர் சாத்துப் பணிகொடுத்து
மின்போன் மறையுஞ் சங்கிலியார் தம்மை விதியாற் கண்ணுற்றார்.

கோவாத முத்தனைய பாவையிடம் உள்ளம் பறிகொடுத்து, உள்ளம் உருகி, நம்பியாரூரர் புறத்திற்போய், அருகில்நின்ற அடி யார்களை நோக்கிப், "பொன்னையும் மணியையும் அமிர்தத்திற் கலந்து, சந்திர கலையிற் குழைத்துச் செய்த மின்னற் கொடி

போன்ற அப் பெண்மணி என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள். அவ் வழகின் கொழுந்து யார்?" என்று கேட்டார். "பெருமானே! அவர் சங்கிலியார்; தவவொழுக்கம் பூண்டவர்; சிவபெருமானுக்கு மிகுந்த அன்புடன் திருத்தொண்டு செய்பவர்; கன்னிகை" என்று அருகில் உள்ளவர் கூறினர். அதனைக் கேட்டு, "இருவரால் இப்பிறவியை எம்பெருமான் அருளால் எய்துவித்தார்; மருவும் பரவையொருத்தி; இவள் மற்றையவளாம்'' என மருண்டார். "என்னுயிரையும் மலரையும் சேர்த்துக் தொடுக்கும் இப்பெண்ணரசைப் பிறைமுடிப் பெருமான்பாற் பெறுவேன்" என்று எண்ணித் திருக்கோயிலுக்குள் சென்று சிவமூர்த்தியை வேண்டுவார்.

"எம்பெருமானே! தேவரீர் மலைமகளாம் மங்கையை ஒரு பால் கொண்டு மகிழ்ந்ததோடு, கங்கையைச் சடையில் மறைத் தருளுங், காதலுடையவரே! இங்கு உமக்கு மலர்தொடுத்து, அடி யேனுடைய உள்ளத் தொடையை அவிழ்த்த மதிமுக வனிதையாஞ் சங்கிலியைத் தந்து என் வருத்தத்தை மாற்றி யருளும்" என்றார்.

மங்கை யொருபால் மகிழ்ந்ததுவு மன்றி மணிநீண் முடியின்கட்
கங்கை தன்னைக் கரந்தருளுங் காத லுடையீர் அடியேனுக்
கிங்கு நுமக்குத் திருமாலை தொடுத்தெ னுள்ளத் தொடையவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத் தந்தென் வருத்தந் தீருமென.

இவ்வாறு நயம்படவுரைத்த நம்பியாரூரர் திருக்கோயிலுக்குப் புறம்போய் ஒருபுறமிருந்து, "இறைவனே! எண்ணமெல்லாம் உமக் கடிமையாம் என்று எண்ணும் என் நெஞ்சின் திண்ணமெல்லாம் உடைவித்தாள்; செய்வதொன்றும் அறியேன்; அண்ணலே!" என்று தளர்வார்.

கதிரவன் மேற்கடலில் மறைந்தனன். உம்பருய்ய உலகுய்ய ஓல வேலை விடமுண்ட தம்பிரானார் வன்தொண்டர் தம்பால் எய்தினார். "சுந்தரா! இம்பருலகில் யாவருக்கும் எய்தவொண்ணா இருந்தவத்துக் கொம்பை உனக்குத் தருகின்றோம். கொண்ட கவலை ஒழிக" என்று அருள்புரிந்தார். ஆரூரர் அரனாரை ஆரா அன்புடன் தொழுது, ''ஐயனே! அன்றும் வலிதில் திரு வெண்ணெய் நல்லூரில் ஆட்கொண்டீர். ஒன்றுமறியா நாயேனை இன்று வந்து அருள்புரிந்தீர்" என்று பரவினார்.

பொங்கரவணிந்த அங்கணர் சங்கலியார் கனவில் தோன்றினார். கனவில் சங்கிலியார் கண்ணுதலைத் தொழுது, "எந்தையே! மாலயனாதி வானவர்க்கெட்டாத தேவரீர் எளியாளாகிய என் கனவில் தோன்றிய நும் திருவருளை என் சொல்லி ஏத்துகேன?" என்று தொழுதனர். சங்கரனார் சங்கிலியாரை நோக்கி, "தவம் வந்து சாரும் சங்கிலியே! கேள்; நம்பியாரூரன் நின்னை விரும்பினன்; அவன் சால என்பால் அன்புடையான்; மேருமலையினும் மேம்பட்ட தவமுடையவன்; திருவெண்ணெய் நல்லூரில் நம்மால் ஆட்கொள்ளப் பெற்றவன்; உன்னைத் தருமாறு என்னை வேண்டினான். ஆதலினால், நீ அவனை மணஞ் செய்துகொள்" என்று அருளிச் செய்தார்.

சாருந் தவத்துச் சங்கிலிகேள் சால என்பால் அன்புடையான்
மேரு வரையின் மேம்பட்ட தவத்தான் வெண்ணெய் நல்லூரில்
இயாரும் அறிய யானாள உரியான் உன்னை எனையிரந்தான்
வார்கொள் முலையாய் நீயவனை மணத்தால் அணைவாய்
மகிழ்ந்தென்றார்.

சங்கிலியார் இறைவனைத் தொழுது, 'எம்பிரானே! தேவரீர் அருளிச் செய்தவருக்கு மனைவியாக ஆவதற்கு உரியேன். உமது கட்டளையைச் சென்னிமேற் கொண்டேன். ஆனால், ஒன்று கூற விரும்புகிறேன். தாங்கள் குறிப்பிட்டவர் திருவாரூரில் மிகவும் மகிழ்ச்சியுடன் இருப்பவர் என்பதை அறிந்தருளும்' என்று நாணி நயமாக நவின்றனர். இறைவர் இருவருடைய எண்ணங்களையும் திருவுளத்தெண்ணி, 'பாவாய்! சுந்தரன் 'உன்னைப் பிரிந்து போகேன்' என்று சபதம் புரிந்து தருவான்' என்று கூறியருளினார்.

பின்னர், பெருமான் வன்தொண்டரிடம் வந்து, 'அன்பனே! சங்கிலியிடம் நின் கருத்தினையுரைத்து மணம்புரிந்து கொள்ளுமாறு கூறினோம். அதற்கு அவள் தன்னைப் பிரியாமலிருக்க ஒரு சபதம் புரிந்தால் இசைவேன் என்றனள். இனி நாம் உனக்கு என் செய்ய வேண்டும்?' என்று புன்னகையுடன் கூறியருளினார் சுந்தரர். 'எந்தை எழுந்தருளியுள்ள பிறதலங்களையும் வழிபட விரும்பும் அடியேனுக்கு, இது விலக்காகும்' என்று எண்ணி, இறைவனை வணங்கி, 'தேவ தேவ! அடியேன் மங்கையவள் தனைப் பிரியாவகை சபதஞ் செய்யும் பொருட்டுச் சங்கிலியுடன் யான் வரும்போது, தேவரீர் எங்குமிருப்பவராயினும் சிவலிங்கத்தில் விளங்கித் தோன்றாமல் அடுத்துள்ள மகிழ மரத்தின் கீழ் விளங்கித் தோன்றி இருந்தருளல் வேண்டும்' என்றார்.

ஆலமுண்ட அண்ணல், 'அவ்வண்ணமே செய்வோம்' என்று அருளினார். 'இனி எனக்கு ஒரு குறைவுமில்லை' என்று இறைஞ்சி மகிழ்ந்தார் தோழர். சிவபெருமான் தொண்டரிடம் திருவிளை யாடல் செய்யக் கருதியோ? சங்கிலியாரது அடிமைத்தனத்தின் பெருமையோ? அறியோம். அந்த இருளில் மீண்டும் சங்கிலியார் கனவில் தோன்றி, 'பெண்மணியே! நமது தோழன் சபதஞ் செய்து தர இசைந்துளான். ஆனால், நமது திருக்கோயிலில் இலிங்கத்தின் முன் செய்யவந்தால், நீ அதற்கு இசையாது மகிழமரத்தின் கீழ் சபதஞ் செய்து தருமாறு கேட்டுச்சபதஞ் செய்துகொள்' என்று இயம்பியருளினார்.

சங்கிலியார் பரமனைப் பணிந்து, 'அம்பிகை மகிழும் அண்ணலே! இந்த இரகசியத்தைக் கூறியதால் என் அடிமை தவமுடையது' என்று மகிழ்ந்து போற்றினர். மாதொரு கூறன் மறைந்தார். மாதரசி கண்விழித்து எழுந்தனர். கனவில் கண்ணுதற்கடவுள் அருளிய திருவருளை எண்ணி அதிசயித்தனர். தன் அருகில் துயிலும் பாங்கியரை எழுப்பித் தன் கனவு நிலையைக் கூறினர். பாங்கியர் கேட்டுப் பரிவும் பயமும் எய்தினர்.

திருப்பள்ளி யெழுச்சிக்கு மலர் தொடுத்துக் கொடுக்கும் வைகறைப் பொழுதும் அணுகியது. சங்கிலியார் சேடியருடன் நீராடித் திருக்கோயிலுக்குச் சென்றனர். தம்பிரான் தோழரும் அதே சமயத்தில் சபதம் புரியும்பொருட்டு அடியார்களுடன் இவருடைய வரவை எதிர்நோக்கி நின்றார். சங்கிலியார்பால் சென்று இறைவனது திருவருள் திறத்தினைக் கூறினார்.

சங்கிலியார் உடன்பட்டார் போல் மறுமொழி ஒன்றுங் கூறாது நாணத்துடன் ஒதுங்கித் திருக்கோயிலுக்கு உள் புகுந்தனர்.

ஆரூரர் அவர்பின் சென்று, 'அணங்கரசே! நான் உன்னைப் பிரியேன் என்று சபதம் புரிய சிவமூர்த்திக்கு முன் வருக' என்றார். சங்கிலியாருடைய தாதியர்கள் கனவுநிலையைக் கேட்டவர்கள் ஆதலின் சுந்தரரைப் பணிந்து கூறுவார்கள்.

'ஐயனே! தாங்கள் இதற்காக இறைவர் திருமுன்பு சபதஞ் செய்வது தகாது' என்றனர்.

வன்தொண்டர் மணிகண்டர் செய்ததை யறியாது, 'பெண்மணிகளே! யான் வேறு எங்கே சபதஞ் செய்ய வேண்டும்? கூறுங்கள்' என்றார்.

சேடியர், 'மகிழின்கீழ் சபதம் புரிந்துகொடும்' என்றனர். ஆரூரர் அதுகேட்டு மன மருண்டார். 'இனி இதனை மறுக்கில் திருமணம் நிகழாது; ஆதலின் உடன்படுவோம்' எனத்துணிந்தார். 'சரி, மகிழடிக்குச் செல்வோம்' என்று சங்கிலியாருடன் சென்றார். மலர் மணம் நிறைந்த மகிழ மரத்தை மும்முறை வலம்வந்து 'உன்னை நான் பிரியேன்' என்று சபதம் புரிந்தார். 'பரமன் ஆணையினாலே பாவியேன் இது கண்டேன்' என்று சங்கிலியார் மனங் கலங்கினர்.

திருநாவலூரர் சபதஞ் செய்தபின் திருக்கோயிலுட் சென்று எழுத்தறியும் பெருமானை இறைஞ்சி, 'எம்பிரானே! நீர் செய்தது மிகவும் அழகாக இருக்கின்றது' என்று கூறிச் சென்றார். வன்தொண்டர் சென்றபின் சங்கிலியார் மலர்மண்டபம்போய்த் திருமாலைத் தொண்டினைத் செய்து பரமனைப் பணிந்து விடியுமுன் தமது கன்னிமாடஞ் சேர்ந்தனர்.

அன்றிரவே திருவொற்றியூரில் உறையுந் திருத்தொண்டர் கனவில் மாணிக்கத் தியாகர் எழுந்தருளி, 'நமது கட்டளைப்படி நம்பியாரூரனுக்குச் சங்கிலியை உலகறிய திருமணஞ் செய்து கொடுப்பீராக' என்று பணித்தருளினார். மண்ணிறைந்த பெருஞ் செல்வத் திருவொற்றியூர் அன்பர்கள் மறுநாள் மகிழ்ச்சியுடன், விண்ணவர் பூமழை பொழிய, கண்ணிறைந்த பெருஞ்சிறப்புடன் கல்யாணஞ் செய்தனர். கண்ணுதலருளால் சங்கிலியாரை மணந்து கொண்ட வன்தொண்டர் அம் மாதரசியுடன் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று காதலுடன் வாழ்ந்தார். (இன்பமுடை யார்க்கு ஊழி ஒரு கண்மாகும்; துன்பமுடையார்க்கு ஒரு கணம் ஊழியாகும்.) பேரின்பமுற்றுப் பிறைசூடிப் பெருமானை வழி பட்டுக் கொண்டு சிலகாலம் திருவொற்றியூரில் இனிது இருந்தார்.

இவ்வாறு தம்பிரான் தோழர் திருவொற்றியூரில் சங்கிலியா ருடன் மகிழ்ந்து ஒற்றிமேவும் நெற்றிக்கண் நிமலனை முப்போதும் போற்றி, எப்போதும் தமிழ்மாலை சாற்றிக் கொண்டிருந்தார். தமிழ்ச் சங்கமுள்ள பொதியமலையிலே பிறந்து, சந்தனக் காவில் குளிர் சாரலில் வளர்ந்து இனிமை பெற்ற தென்றலாகிய தமிழ் மாருதம் வீசத் தொடங்கியது.

அப்போது திருவாரூரில் வீதிவிடங்கருக்கு நிகழும் வசந்த விழாவைச் சேவிக்க விழைந்தார். வீதிவிடங்கர் திருவீதி பவனி வருவதையும் அத்தருணம் பரவையாரது ஆடல் பாடலையும் முன் கண்டு கேட்டார் போலக் கருதினார். பூங்கோயில் அமர்ந்த

புற்றிடங் கொண்ட பெருமானை நினைந்து நினைந்து உருகினார். அவரைக் கண்டு மகிழவேண்டுமென்ற காதல் பெருகியது.

பத்திமையு மடிமையையுங் கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோ யதுவிதனைப் பொருளறிந்தேன் போய்த்தொழுவேன்
முத்தினைமா மணிதன்னை வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே.

*ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே.

என்ற திருப்பதிகம் பாடினார். சங்கிலியாருக்குச் செய்த சத்திய மாகிய சங்கிலி அவரைத் தடுக்கின்றது. திருவாரூர் தியாகேசன் மீதுள்ள காதல் ஈர்க்கின்றது. சத்தியத்திற்கும் பத்திமைக்கும் இடையே கிடந்து துடிப்பார்.

ஒருநாள் தியாகப் பெருமானைக் காணவேண்டுமென்ற அன்பு கடல்போல் பெருக, ஒற்றியப்பனைத் தொழுது புறப்பட்டார். எல்லையைக் கடந்து ஓர் அடி வைத்தார். இருகண்களும் மறைந்தன. அங்ஙனமே மூர்ச்சித்து வீழ்ந்தார்.

காலடி வைத்ததும் கண்மறைந்த இடம் இப்போதும் 'காலடிப் பேட்டை' என்று திருவொற்றியூருக்கு அருகில் வழங்கப் படுகின்றது.

மூர்ச்சை தெளிந்து எழுந்தார். செய்வது இன்னதென்று அறியாமல் திகைத்தார். சங்கிலியார்பால் கூறிய சத்தியம் மறந்ததனால் வந்தவினை என்று எண்ணினார். இறைவனை நினைந்து உருகுவார்.

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்படற் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்

★ இத்திருப்பாடலைத் தாயுமானார் எடுத்துப் பாராட்டுகின்றனர்.
"என்னுடைய தோழனுமாய் என்ற திருப்பாட்டின்
நன்னெறியைக் கண்டுரிமை நாஞ்செய்வ தெந்நாளோ"

ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே.

என்ற திருப்பதிகம் பாடுவார். "பெருமானே! பிறைசூடீ! முக் கண் பெருமானே! அடியேன் கண்ணிழந்து எவ்வாறு வாழ்வேன்? மகத்திற் புக்க சனிபோலாயினீரே! வீட்டில் பெண்களை நான் அழைத்தால், 'குருடா! அழையேல் போ' என்று கூறுவாரே? அதை அடியேன் எவ்வாறு தரிப்பேன். ஒருவன் கோல் பற்றி கறகற என்று இழுக்கலாமா? எந்தையே! கருணைக்கடலே!"

மகத்தில் புக்கதோர் சனியெனக் கானாய்
மைந்த னேமணி யேமண வாளா
அகத்தில் பெண்டுகள் நானொன்று சொன்னால்
அழையல் போகுரு டாஎனத் தரியேன்
முகத்தில் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன்
முக்க ணாமுறை யோமறை யோதீ
உகைக்குந் தண்கடல் ஓதம்வந் துலவும்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே.

என்று துதித்தார்.

ஆரூரைத் தொழும் ஆர்வத்தினால் புறப்பட்டு, அருகிலுள்ளார் வழிகாட்ட, திருமுல்லைவாயில் என்னுந் திருத்தலத்தினையடைந்தார். திருமுல்லைவாயிலில் எழுந்தருளிய தேவதேவரைத் தொழுது, ஆரா அன்புடன் துதித்தார். "பாசுபதா! பரஞ்சுடரே! சங்கிலிக்காகச் சிறியேனுடைய கண்களை மறைத்தீர். கருணைக் கடலே! சேய் செய்த குற்றத்தைத் தாய் பொறுப்பது கடனன்றோ? தொண்டைமானுக்குத் தண்ணருள் புரிந்த தயாநிதியே! அடியேனுடைய அல்லலை அகற்றுவாய்' என்று வேண்டி,

திருவுமெய்ப் பொருளுஞ் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள்என் றெண்ணி
ஒருவரை மதியா துறாமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.
சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச்
சூழ்கொடி முல்லையால் கட்டிட்டு

எல்லையில் இன்பம் அவன்பெற வெளிப்பட்டு
அருளிய இறைவனே என்றும்
நல்லவர் பரவும் திருமுல்லை வாயில்
நாதனே நரைவிடை யேறீ
பல்கலைப் பொருளே படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.

என்ற திருப்பதிகம் பாடினார்.

அங்கிருந்து புறப்பட்டு, இறைவனை ஏத்திய வண்ணமாக திருவெண்பாக்கஞ் சென்றார். அங்குள்ள அடியார்கள் சகல மேள தாளங்களுடன் வரவேற்று உபசரித்தனர். வன்தொண்டர் திருக்கோயிலை வலம் வந்து சந்நிதியில் போய் கைகூப்பித் தொழுது, "எம் பெருமானே! என்னை ஆட்கொண்ட எந்தையே! கோயிலினுள்ளே இருக்கின்றீரோ? 'மகிழமரத்தில் இரு' என்று அடியேன் கூறியபடி இருந்து, என்னைச் சத்தியம் புரியச் செய்த சம்புவே! உள்ளே இருக்கின்றீரோ? என் கண் கொண்ட கருணைக் கடலே" என்று கேட்டார். இறைவன் ஓர் ஊன்றுகோலைத் தந்து, 'உளோம் போகீர்' என்று கூறியருளினார். எம்பெருமான் தன்னை அயலானைப்போல், இணக்கமில்லாமல் இவ்வாறு கூறி யருளியதைக் கேட்டு, மெத்த மனம் நொந்து பாடுவார்.

பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம்என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளா யேஎன்ன
உழையுடையான் உள்ளிருந்து ளோம்போகீர் என்றானே.

பொன்னவிலுங் கொன்றையினாய் போய்மகிழ்க்கீ ழிருவென்று
சொன்னஎனைக் காணாமே சூளுறவு மகிழ்க்கீழே
என்னவல்ல பெருமானே இங்கிருந்தா யோஎன்ன
ஒன்னலரைக் கண்டாற்போல் உளோம்போகீர் என்றானே.

மான்றிகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்களெல்லாம்
தோன்றஅருள் செய்தளித்தாய் என்றுரைக்க உலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயில் இங்கிருந்தா யோஎன்ன
ஊன்றுவதோர் கோலருளி உளோம்போகீர் என்றானே.

கல்லைக் கனிவிக்கும் கனிவுடைய இச்செந்தமிழ்த் திருப்பதி கத்தைப் பாடிப் புறப்பட்டார்.

"என்னுடையபிரான் அருள் இதுபோலும்' என்று வழி நடந்து காரைக்காலம்மையாரால் தலையாலே வலம்வந்து வழிபட்ட

திருவாலங்காட்டினை அடைந்தார். அத்திருத்தலத்தைக் கால்களினால் மிதிக்க அஞ்சி, அருகிலுள்ள பழையனூரில் தங்கினார். 'முத்தா முத்தி தரவல்ல முகிழ் மென்முலையாள் உமைபங்கா' என்று எடுத்துத் தமிழ்மாலை சாத்தினார். அங்கிருந்து புறப்பட்டு இடையே உள்ள திருவூறல் என்னும் திருத்தலஞ் சென்று, பெருமானை வழிபட்டுக், கன்னிமதில் மணிமாடக் காஞ்சிமா நகர் அணைந்தார்.

தேனிலவு பொழிற்கச்சித் திருக்காமக் கோட்டத்தில்
ஊனில்வளர் உயிர்க்கெல்லாம் ஒழியாத கருணையினால்
ஆனதிரு அறம்புரக்கும் அம்மைதிருக் கோயிலின்முன்
வானில்வளர் திருவாயில் வணங்கினார் வன்தொண்டர்.

கச்சியம்பதியை அடைந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் கண் பெறுங் குறிப்பினாலே நேரே இறைவருடைய திருக்கோயிலுக்குச் செல்லாமல், அறம் வளர்த்த அம்மையாகிய காமாட்சியம்மை எழுந்தருளிய காமகோட்டஞ் சென்று தொழுதார். "என்னம்மையே! இரு நாழி நெல்கொண்டு முப்பத்திரண்டு அறங்களையுஞ் செய்யும் காமாட்சியே! கண்ணிழந்து கவல்கின்றேன். ஐயன் அருளாதிருக்கின்றனர். அகிலாண்டநாயகியே! தேவரீர் அப்பாவிடம் சொல்லி அருள்புரியும்" என்று துதித்தார்.

பின்னர் உலக முழுதும் அளித்தழித்து ஆக்கும் ஏகம்பருடைய சந்நிதிக்கு அடியார் வழிகாட்டச் சென்றார்.

விண்ணாள்வார் அமுதுண்ண மிக்கபெரு விடமுண்ட
கண்ணாளா கச்சியே கம்பனே கடையானேன்
எண்ணாத பிழைபொறுத்திங் கியான்காண எழிற்பவள
வண்ணாகண் ணளித்தருளா யெனவீழ்ந்து வணங்கினார்.

"விண்ணோர்க்கு அமுதளித்த விடமுண்ட விமலா! அருள் பொழியும் கண்ணா! திருக்கச்சி மேவும் திருவாளா! சிறியேனுடைய குற்றத்தைப் பொறுத்தாள்வாய்; உனது செம்பவளத் திருமேனியைக் கண்டுகளிக்க கண் தந்தருள்வீர்'' என்று வேண்டினார். மலைபயந்தமங்கை மலரிட்டுப் பூசித்த மலரடியை நினைந்து, மிக்க அன்புடன் பணிந்து நின்றார்.

அம்மையின் அருள்துணைபுரிய அம்மையின் பாகமாகிய இடக்கண்ணை ஏகம்பநாதர் ஈந்தருளினார். மாலு மயனுங் காணாத மாதேவர் தழுவக்குழைந்த தயாபரர் தமது தேவியின் திருமுலைச்சுவடு விளங்குந் திருக்கோலத்தைக் காட்டியருளுதலும்

வன்தொண்டர் கண்டு, கரைகடந்த களிப்புற்று, மண்மிசை வீழ்ந்து பணிந்தார். எழுந்து ஆடுவார்; இசை பாடுவார்; ஐயனது அழகை நாடுவார்.

ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்உடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
யென்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே

என்ற திருப்பதிகத்தை ஓதினார்.

அடியார்களுடன் கச்சியில் தங்கி, மீண்டுந் திருவாரூரைக் காணும் வேட்கையினால் புறப்பட்டார். அப்போது "திருவாரூர் சென்று தியாகேசனைப் பணியும் நாள் என்றோ" என்று ஏங்கிப் பாடுவார்.

அந்தியு நண்பகலும் அஞ்சுபதஞ் சொல்லி
முந்தியெழும் பழைய வல்வினை மூடாமுன்
சிந்தைபரா மரியாத் தென்திரு வாரூர்புக்
கெந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே.

கொன்றை அணிந்தார் கோவில்தொறும் சென்று திருப்பதிகம் பாடித்தொழுது கொண்டு, திருவாமாத்தூர் வந்தார். அங்கு எழுந்தருளியுள்ள இறைவனைப் பணிந்து பதிகம் பாடினார். அத்துடன் தொண்டைநாடு கடந்து சோழநாட்டையடைந்தார். திருவறத்துறை சென்று பணிந்து 'கல்வாயகிலும்' என்னும் திருப்பதிகம் பாடினார்.

அடியார்களுடன் காவிரி நதியையடைந்து அதில் முழுகினார். பின் திருவாவடுதுறை சென்று எம்பெருமானை வழிபட்டார். ஒரு கண்ணிலாமை குறித்து வருந்துவார். "என் பிழையைப் பொறுப்பாய்; அடியேனுக்குத் தேவரீரல்லால் வேறு உறவு இல்லை; ஆதலால், அஞ்சல் என்று அருள்வாய்" என்று துதித்துப் பாடுவார்.

குறைவிலா நிறைவே குணக்குன்றே
கூத்தனே குழைக்கா துடையானே

உறவிலே னுனையன்றி மற்றடியே
னொருபிழை பொறுத்தா லிழிவுண்டே
சிறைவண்டார் பொழில்சூழ் திருவாரூர்ச்
செம்பொனே திருவா வடுதுறையுள்
அறவனே யெனைஅஞ் சலென்றருளா
யாரெனக் குறவம ரர்களேறே.

அங்கிருந்து புறப்பட்டுத் திருத்துருத்தி சென்றார். அப்போது உடம்பில் பிணி வந்து துன்புறுத்தியது. நம்பியாரூரர் திருத்துருத்திக்கோயிலில் போய், "மருந்தீசா! மலைமகள் நேசா! பிணியால் வாடுகிறேன்'' என்று போற்றினார். கண்ணுதற் பெருமான், "அன்பனே! வடகுளத்தில் குளிப்பாய்'' என்று அருள் புரிந்தார். ஆரூரர் அத்திருக்குளத்தில் மூழ்கி எழுந்தார். உல கிலுள்ளோர் யாவரும் அதிசயிப்ப இரத்தினமணி போன்ற ஒளிமிக்க திருமேனியைப் பெற்றார். திருக்கோயிலிற் சென்று பதிகம் பாடினார்.

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடிபடக் கரையொடுந் திரைகொணர்ந் தெற்றும்
அன்னமாங் காவிரி யகன்கரை யுறைவார்
அடியிணை தொழுதெழும் அன்பரா மடியார்
சொன்னவா றறிவார் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
என்னைநான் மறக்குமா றெம்பெரு மானை
என்னுடம் படும்பிணி யிடர்கெடுத் தானை.

இவ்வாறு, இடையில் உள்ள திருத்தலங்களை யெல்லாம் வணங்கிக் கொண்டு திருவாரூருக்கு அருகில் எய்தினார். சிறிது தொலைவில் திருவாரூரை ஒரு கண்ணினால் கண்டார். நன்கு காணப் பெறாதவரானார். உடனே, மண்மிசை வீழ்ந்து வணங்கி னார். மாலைப்பொழுதில் திருவாரூர் சேர்ந்து, 'பரவையுண் மண்டளி' என்னும் தூவாயர் திருக்கோயிலிற் சென்று தொழுது, "இறைவனே! என் துயர் களைந்து கண்காணக் காட்டாய்'' என்று வேண்டி திருப்பதிகம் பாடினார்.

தூவாயா தொண்டுசெய் வார்படு துக்கங்கள்
காவாயே கண்டுகொண் டாரைவர் காக்கிலும்
நாவாயா லுன்னையே நல்லன சொல்லுவேற்
காவாவென் பரவையுண் மண்டளி யம்மானே.

எதிர்கொண்டு உபசரித்த திருத்தொண்டர்களுடன், திருமூலட்டானத்திற்கு அர்த்தயாமத்திற் சென்றார். எதிரில் வந்த அன்பர்களை நோக்கி ஏதிலார்போல் வினவி, காதல் புரி கைக்கிளையாற் திருப்பதிகம் பாடுவார்.

பறக்குமெங் கிள்ளைகாள் பாடுமெம் பூவைகாள்
அறக்கணென் னத்தகும் அடிகளா ரூரரை
மறக்ககில் லாமையும் வளைகணில் லாமையும்
உறக்கமில் லாமையும் உணர்த்தவல் லீர்களே.

சீர்பெருகு தேவாசிரியன் மண்டபஞ் சென்று தொழுதார். கோலமிக்க கோபுரத்தைத் தொழுது பூங்கோயிலிற் புக்கு அளவற்ற காதலினால் மண்மிசை வீழ்ந்தார். மீண்டும் எம்பிரானை ஒருகண்ணாற் கண்டு அவர் அடங்காமையால், "எம்பிரானே! எளியேனை இடர்க்கடலினின்று எடுத்து மற்றைக் கண்ணையுந் தருவாய்" என்று வேண்டுவார். தோழமையால் வற்புறுத்திக் கேட்பார். "பெருமானே! பிறைசூடீ! கருணாமூர்த்தி! நின் திருவடிக்கு எப்போதும் அடிமையாகிப், பிறதேவரை ஒரு பொருளாக எண்ணாமல் ஆட்பட்டு அடிமை செய்யும் அடியார்கள், தங்கள் அல்லலைக் கூறினால் அயலார்போல் தேவரீர் அடியாரிடரை யகற்றாது வாளாக இருக்கலாமா? அங்ஙனமிருந்தால் வாழ்ந்து போதீர்; சுவாமீ! அடியேன் என்னகுற்றம் செய்துவிட்டேன்? உம்மைக் கண்டு மகிழும் பொருட்டுத்தானே சத்தியம் தவறினேன். சங்கிலியால் சத்தியம் புரியும்போது மகிழடியில் இருக்குமாறு அடியேன் வேண்டிய வேண்டுதலைத் தேவரீர் சங்கிலிக்குத் தெரிவித்து விட்டீர். அதனால், வந்த விளைவுதானே இது. கருணா மூர்த்தி! அப்படியே குற்றமானாலும் பொறுத்துக் கொள்வது தங்கள் கடன்தானே. மூன்று கண்களையுடைய நீர்அடியேனுக்கு மற்றை ஒரு கண்ணையுந் தராது மறுத்தீரேல் அந்த பழி உமக்கேதான்" என்று பலப்பல கூறிப் பாடுவார்.

மீளா வடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தான் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே.

விற்றுக் கொள்வீர் ஒற்றியல்லேன் விரும்பி யாட்பட்டேன்
குற்ற மொன்றுஞ் செய்த தில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே.

இவ்வாறு வன்தொண்டர் வாது செய்து திருப்பதிகம் பாடியதும் சிவபெருமான் திருவுளமிரங்கிக் கருணை நோக்கால் பார்த்தருளினார். கண்ணைத் தந்தருளினார். கண்மலர் பெற்ற அடிகள் பாதமலர் மீது வீழ்ந்தார். பலகாலும் பணிவார். மகிழ்ச்சிக் கடலில் முழ்கினார்.

விழுந்தும் எழுந்தும் பலமுறையால் மேவிப் பணிந்து மிகப்பரவி
எழுந்த களிப்பி னாலாடிப் பாடி யின்ப வெள்ளத்தில்
அழுந்தி இரண்டு கண்ணாலும் அம்பொற் புற்றி னிடையெழுந்த
செழுந்தண் பவளச் சிவக்கொழுந்தின் அருளைப் பருகித் திளைக்கின்றார்

பரமனைப் பலகாலும் பரவி நெடுநேரம் போற்றி அன்பர் களுடன் தேவாசிரியன் மண்டபத்தை அடைந்தார்.

நம்பி ஆரூரர் பிரிந்தபின் நங்கை பரவையார், தனித்திருந்து தளர்வார். அவர்க்கு இரவு பகலாகவும் பகல் இரவாகவும் ஆயின. பிரிவுத் துன்பம் அவரைப் பெரிதும் வருத்தியது.

ஆரூரரைக் கண்டு வருமாறு சிலரை அனுப்பிவைத்தார். அவர்கள் நம்பியாரூரரைக் கண்டு திரும்பி வந்து, பரவையாரைப் பணிந்து பகர்வார். "அன்னையே! ஆரூரர் திருவொற்றியூரில் சங்கிலியார் என்ற அம்மையை மணந்து இன்புற்று இனிதிருக்கின் றார்" என்றனர். அதனைக் கேட்ட அம்மை மிகவும் வெகுண்டு தளர்ந்தார்.

மென்பூஞ் சயனத் திடைதுயிலு மேவார் விழித்து மினிதமரார்
பொன்பூந் தவிசின் மிசையினிரார் நில்லார் செல்லார் புறம்பொழியார்
மன்பூ வாளி மழைகழியார் மறவார் நினையார் என்செய்வார்
என்பூ டுருக்கும் புலவியோ பிரிவோ இரண்டி னிடைப்பட்டார்.

இவ்வாறு அம்மை உறங்காமலும் உலவாமலும் அளவற்ற அலக்கணுற்றுப் புலந்திருந்தார்.

சுந்தரருடைய பரிசனங்கள் பரவையார் திருமாளிகையை யடைந்து உள்ளே செல மாட்டாது தடையுற்றனர். சிலர் திரும்பி வந்து வன்தொண்டரை வணங்கிப், "பெருமானே! நாங்கள் அன்னை பரவையார் திருமாளிகை யடைந்தோம். தேவரீர் திரு வொற்றியூரில் சங்கிலியாரை மணந்த தன்மை யாவும் அறிந்த அன்னையாருடைய ஏவலர்கள் எங்களைத் திருமாளிகையிற் புகுதாவண்ணம் தடுத்துத் தள்ளிவிட்டனர்" என்றனர். அதுகேட்ட ஆரூரர், "இனி இதற்கு என்செய்வோம்" என்று எண்ணி,

உலகியல்பு கற்ற தக்கார் சிலரை நோக்கிப், பரவையார் சினத்தை மாற்றி ஆறுதல் கூறி வருமாறு அனுப்பினார்.

நம்பி அருளால் சென்ற அவர் நங்கை பரவையார்பால் போந்து அவரைப் பணிந்து, "அன்னாய்! எங்கள் தம்பிரான் தோழர் வந்துளார். அவர் திறத்தில் தாங்கள் முனிவுறலாமா? தாங்களோ கருணைக்கடல்; எம்பிராட்டிக்கு இது தகுமோ?" என்று பலவும் எடுத்துரைத்தனர்.

அதுகேட்ட பரவையார் சினந்தணியாது, "அவர் விஷயமாக இங்கு ஏதாவது நீங்கள் பேசுவீராயின் எனதுயிர் பிரியும்" என்றனர்.

அதனால் வந்தவர் அஞ்சியகன்று ஆரூரர்பால் அணைந்து பரவையார் பகர்ந்ததைப் பணிவுடன் கூறினர்.

சுந்தரர் சிந்தாகுலக் கடலுள் அழுந்தினார். அதனைக் கடத் தற்குப் புணையுந் துணையுமின்றித் தளர்வார். அருகிலுள்ளார் அனைவரும் துயில்கொண்டனர். உலகம் சலிப்பின்றிக் கிடந்தது. எங்கும் பேரிருள்; பேயும் உறங்கும் பெருங் கங்குலில் பெரிதும் வருந்துவார். இறைவனை நினைந்து உருகுவார். "மலைமகள் கொழுந! அடியேனைத் தடுத்தாட்கொண்ட அருட்கடலே! பரவையின் ஊடலை மாற்றி அடிமையை யாள்வீர்" என்று வேண்டினார்.

காமாக்ஷியம்மை தழுவக் குழைந்த கண்ணுதற் கடவுள் நெடி யோனும் காணா அடிகள் படிதோய வந்து தோன்றியருளினார். அந்திவண்ணரைக் கண்ட சுந்தரர் எழுந்து எம்பிரானைப் பன் முறையும் பணிந்து, மிகவும் மகிழ்ந்து துதித்து நின்றார்.

இறைவர் நண்பரை நோக்கி, "உனக்கென்ன குறை கூறுதி" என்று கேட்டருளினார். நம்பியாரூரர், "என்னாண்டவனே! தேவரீர் திருவுளம் யாவும் அறியுமே. தாங்களே அருள் புரியத் திருவொற்றியூரில் சங்கிலியை அடியேன் மணந்து கொண்டேன். அதனையறிந்த பரவை முனிவுகொண்டனள். அடியேன் அவள்பால் சென்றால் உயிர் துறப்பேன் என்று கூறுகின்றனளாம். இதற்கு எளியேன் என் செய்வேன். அடிமையின் அல்லலை யகற்றுவது ஆண்டான் கடமையன்றோ? தோழனாகிய தொண்டனேன் துயர்நீங்கப் பரவையின் புலவியை மாற்றி யருளும்" என்று வேண்டினார்.

நாய னீரே நானுமக்கிங் கடியே னாகில் நீரெனக்குத்
தாயி னல்ல தோழருமாந் தம்பி ரானா ரேயாகில்
ஆய அறிவு மிழந்தழிவேன் அயர்வு நோக்கி யவ்வளவும்
போயிவ் விரவே பரவையுறு புலவி தீர்த்துத் தாருமென

வேண்டுவார் வேண்டுவதே நல்கும் விமலன் அன்பரை நோக்கி, "அன்பனே! நீ துன்பத்தை விடு; யாம் உனக்கு ஒரு தூத னாகி இப்பொழுதே பொன்செய் மணிப்பூண் பரவைபால் போகின்றோம்" என்று அருள்புரிந்தார். தோழர் மிகவும் மகிழ்ந்து துதித்து நின்றார்.

அண்டர் வாழக் கருணையினால் ஆல காலம் அமுதாக
உண்ட நீலக் கோலமிடற் றொருவர் இருவர்க் கறிவரியார்
வண்டு வாழு மலர்க்கூந்தல் பரவை யார்மா ளிகைநோக்கித்
தொண்ட னார்தந் துயர்நீக்கத் தூத னாரா யெழுந்தருள.

தேவாசிரியன் மண்டபத்தில் கூடியிருந்த தேவர் யாவரும் சேவித்து உடன் போவாராயினார்கள். அரனார் அவர்களைப் புறத்தே நிற்கச் செய்ய அணுக்கரான பூதகண நாதர்களும் மூவா முனிவர்களும் சிவயோகிகளும் முன்னே சென்றனர். அருகில் பெரிய தேவர்களும், முனிவரரும் நண்பனான குபேரனும் சென்றனர். விண்ணவர் பூமழை பொழிந்தனர். முனிவர் வேத கீதம் மொழிந்தனர். மாலுமயனுங் காணாத மலரடியைக் காண்பதற்கு இது தகுந்த காலம் என்று அவரை அழைப்பது போல் சிவபெருமான் திருவடியில் உள்ள சிலம்பு இனிது ஒலித்தது. இறைவர் இவ்வாறு திருவாரூரில் திருவீதியில் அடியவர் தொடரவும், சடையில் அரவு தொடரவும், கொன்றைத் தொடையலில் வண்டு தொடரவும், மறைகள் தொடரவும் வன்தொண்டர் மனமுந் தொடர வருவாராயினார். திருவீதியில் அழகரவர் மகிழுஞ் செல்வத் திருவாரூர் ஒரு வீதியிலே சிவலோகம் முழுதுங் காண உளதாயிற்று.

பரமன் பரவையார் திருமாளிகை யருகிற் சென்று, உடன் வந்தார்கள் அனைவரையும் வெளியே நிறுத்தித், தம்மை அர்ச்சிக்கும் ஆதி சைவ முனிவர் திருக்கோலங்கொண்டு, கதவைத் தட்டிப், "பரவாய்! கதவு திறவாய்" என்று அழைத்தருளினார்.

துயிலின்றித் துயரால் அயரும் அம்மை, "பாதிமதி புனைந் தாரைப் பூசிக்கும் பண்புடையார் பாதியிரவில் நம்பால் எய்தியது என்னோ?" என்று பயந்து, பாதியில் உமையைக் கொண்ட பரமர்

என்று அறியாது பாதிமதி போன்ற முகமுடைய பரவையார் பதைத்து வந்து கதவைத் திறந்தார். தூதாய் நின்ற நாதரைத் தொழுது, "எந்தையே! எல்லாம் உறங்கும் இவ்வேளையில் இங்கு எய்தியது எதன் பொருட்டு?" என்று கேட்டனர்.

கங்கைநீர் கரந்த வேணியைக் கரந்த கண்ணுதல், "நங்காய்! நான் உரைப்பதை மறுக்காமல் புரிவாயாயின் நான் வந்த கருமத்தைப் புகல்வேன்" என்றார்.

பரவையார், "சுவாமீ! தாங்கள் கூறுவது எனக்கு இசையுமாயின் செய்வேன்; இயம்பி யருளும்" என்றார்.

பிறைசூடிய பெருமான், "பெண்மணி! நம் நம்பியாரூரன் இங்கு வர நீ இசைதல் வேண்டும்" என்று அருளிச் செய்தார்.

நங்கையார் "நம் பெருமை சால நன்று" என்று எண்ணி உரைப்பார். "அடிகேள்! அவர் என்னைப் பிரிந்து போய் திருவொற்றியூரில் சங்கிலியினால் தொடக்குண்டார். அவருக்கு இங்கு என்ன வேலை? தாங்கள் இதன்பொருட்டு இந்த இருள்மிக்க இரவில் வந்து கூறியது மெத்த அழகு" என்றார்.

பரமர் பரவையாரைப் பார்த்து, "பாவாய்! ஆரூரன் புரிந்த குற்றத்தை மனத்திற் கொள்ளற்க; பொறுமை கடலினும் பெரிது. ஆதலின், சினம் தணிவாய். உனக்கு ஆறுதலை புரியும் பொருட்டே நான் வந்தது. வேண்டிக் கேட்டுக் கொள்ளு கின்றேன். மறுப்பது தகாது; ஆரூரன் வர இசைவாய்" என்றார்.

தையலார் ஐயரை நோக்கி, "தாங்கள் இக் கருமத்தைக் குறித்து வருவது தங்கள் பெருமைக்கு ஏற்றதன்று; ஒற்றியூரில் உறுதிபெற்ற அவர் வர நான் இசையேன். நீரும் போய் வாரும்" என்று கூறினார்.

இறைவர் தோழரது வேட்கையைக் காணும் திருவிளை யாடலை மேற்கொண்டு, தமது உண்மையைக் காட்டாது திரும்பினார். நாதரைத் தூதராக அனுப்பியபின் நம்பியாரூரர், "அறிவிலேன்; என் ஐயரைத் தையல்பால் போக விட்டேனே" என்று புலம்பிக் கொண்டும், "இந்நேரம் எம்பிரான் சென்றிருப் பார்; மாதேவரைக் கண்டு மாது மறுத்திடாள். ஒருவேளை மறுப்பாளோ? அப்படி மறுத்தாலும் என் துன்பங் கண்டு வந்தருளிய இறைவர் எப்படியும் சமாதானம் புரிந்தே வருவார்" என்று பலப்பல எண்ணி அரவு புனைந்தார் வரவு நோக்கி

யிருந்தார். பெருமானை எதிர்கொள்ளச் சிறிது செல்வார்; விமலனைக் காணாது மீள்வார். இருப்பார். உள்ளம் ஒருவழிப்படாது எழுந்து நிற்பார். உலாவுவார். "எம்பிரான் இத்துணை நேரம் தாழார்" என்று எழுவார்; மீளவும் மயங்கி விழுவார்.

வேளை எரித்த விமலன் மீள வருவதைக் கண்டார்; மடை திறந்த வெள்ளம்போல் ஓடினார். இறைவன் இணையடி மலரைச் சென்னிமேற் சூடினார். "கருணைக்கடலே! அன்று அடியேனை வலிதில் வந்து ஆட்கொண்டதற்குத் தக்கவாறே இன்றும் பரவையின் வெகுளியை மாற்றி அருள்புரிந்தீர்" என்றார். சிவபெருமான், "அன்பனே! நாம் போய் பரவையிடம் உன்னை வரவேற்குமாறு கூறி வேண்டினோம். அவள் சினந் தணிந்தாளில்லை. நாமே வேண்டவும் மறுத்தனள்" என்றார். ஆரூரர் அதுகேட்டு நடுங்கினார்.

"தேவதேவ! தேவரீர் கூறியும் பரவை மறுத்தனளோ? நன்று நன்று; அமரர் வேண்ட ஆலமுண்டருளினீர்; மூவர் உய்ய முப்புர மெரித்தீர்; பாலனுக்காகக் காலனை உதைத்தீர்; அடியேனுடைய அடிமை உனக்கு மிகைபோலும்! என் அடிமையை வேண்டாவிடில் என்னை ஏன் அன்று வலிய ஆட்கொண்டீர்? சிறியேன் துயர்படக் கண்டீர். பரவைபால் என்னை மேவுமாறு செய்யீராயின் உயிர் விடுவேன்" என்று வீழ்ந்தார்.

வானவ ருய்ய வேண்டி மறிகடல் நஞ்சை யுண்டீர்
தானவர் புரங்கள் வேவ மூவரைத் தவிர்த்தாட் கொண்டீர்
நான்மறைச் சிறுவர் தம்மைக் காலனைக் காய்ந்து நட்டீர்
யான்மிகை யுமக்கின் றானால் என்செய்வீர் போதா தென்றார்.

ஆவதே செய்தீர் இன்றென் அடிமைநீர் வேண்டா விட்டால்
பாவியேன் றன்னை யன்று வலியஆட் கொண்ட பற்றென்
நோவுமென் னழிவுங் கண்டீர் நுடங்கிடை யவள்பால் இன்று
மேவுமா செய்யீ ராகில் விடுமுயிர் என்று வீழ்ந்தார்.

தோழரது துயரைக்கண்டு தரிக்காத இறைவர், "அன்பனே! வருந்தாதிரு; நாம் மீண்டும் போய் அவளை வேண்டி இப்போதே உன்னை வரவேற்குமாறு செய்வோம்" என்று கூறியருளினார். ஆரூரர் பெரிதும் மகிழ்ந்து சிறிது தூரம் சென்று வழிவிட்டார். முன்பு உடன் செல்லாதாரும் முறைமையில் சேவித்து வர, அரவணிவார் பரவையார் பொன்மாளிகையிற் சென்றார்.

அங்கே பரவையார், இறைவர் மீண்டபின், "அந்தோ! கெட்டேன். மறையவராக வந்தவர் நம் இறைவர்போலும். இப்போது உணர்ந்தேன். எம்பிரான் கட்டளையை மறுத்தேனே பாவியேன் தவறு செய்தேன்" என்று பதைபதைத்தார். கண் துயிலாது கலங்கினார். "வேழமுரித்த விமலர் தோழர் பொருட்டு அர்ச்சகர் கோலங் கொண்டு வந்ததை உணராது ஒழிந்தேனே" என்று வாடினார்; வருந்தினார். தோழியருடன் வாயிலில் நின்று வழிநோக்கிய விழியுடன் இருந்தார்.

இறைவர் தமது வடிவுடனேயே தேவர் யோகியர் மூவர் முனிவர் முதலியோர் சூழ திருமாளிகையுள் புகுந்தார். அத் தருணம் அத் திருமாளிகை திருக்கைலாயம்போல் திகழ்ந்தது. பரவையார் விரைவில் சென்று நடுங்கி சிவனார் செய்ய சீரடிமேல் வீழ்ந்து பயபக்தியுடன் வழிபட்டார். "பரவையே! நாவலூரன் உரிமையால் ஏவ மீண்டும் உன்பால் வந்தோம். முன்போல் மறுக்காதே. நின் பிரிவினால் பெரிதும் வருந்தும் வன் தொண்டனை வரப்பெறுவாய்" என்று அருளிச்செய்தார்.

பரவையார் கண்ணீர் சொரிந்து பரிந்து சென்னிமேல் கரங்கூப்பி, "மறையவராகி வந்தது தேவரீரோ? அடியேன் செய்த மாதவந்தான் யாதோ? கருணைக்கடலே! உமது மாலயன் காணா மலரடி வருந்த ஓர் இரவு முழுவதும் அன்பர்க்காக அங்கும் இங்கும் உழல்வீரானால் அடியேன் இசையாது என்செய்கேன்" என்றார்.

துளிவளர் கண்ணீர் வாரத் தொழுதுவிண் ணப்பஞ் செய்வார்
ஒளிவளர் செய்ய பாதம் வருந்தவோ ரிரவு மாறா
தளிவரும் அன்பர்க் காக அங்கொடிங் குழல்வீ ராகில்
எளிவரு வீரு மானால் என்செய்கேன் இசையா தென்றார்.

நம்பர், "நங்காய்! நின் பெருந்தன்மைக்கு ஏற்றவாறு கூறினாய்; நன்று" என்று கூறியருளி மீண்டார். மாலயன் காணாத மணிகண்டர் தூதராகித் தொண்டர்க்கு அருள் செய்த தொழில் கண்ட பூதியில் நீடும் பூதகணநாதர் வீதியில் ஆடிப்பாடி நெருங்கிச் செல்கின்றார். அன்பரைப் பரவைபால் விரைவில் அனுப்பும் பொருட்டுச், சென்னியில் விளங்கும் கங்கை ததும்ப விரைந்து வன்தொண்டர்பால் வந்தார்.

நம்பியாரூரர், "இந்தமுறை எம்பெருமான் என்னுயிரை நல்கச் சென்றார். எவ்வாறு மீள்வரோ?" என்று ஏங்கியிருந்தார். இறைவர்

வருதலைக் கண்டு, மூவுலகும் போற்றும் சேவடிமேல் வந்து வீழ்ந்தார். "பரமனே! பரவைபால் என் கொண்டு வந்தீர்?" என்று ஆவலுடன் வினாவினார். இறைவர், "அன்ப! அவள் சினத்தைத் தணிவித்தோம். இனி அவள்பால் செல்லலாம்" என்று அருள் புரிந்தார். ஆரூரர் அளவற்ற ஆனந்த மெய்தினார். "பந்தமும் வீடும் நீர் அருள் செய்யும்படி செய்தீர்; எந்தையே! இனி எனக்கென்ன குறையுளது" என்று பணிந்தார். வீதிவிடங்கர், "பரவைபால் நண்ணுதி" என்று பரிந்து கூறித் திருக்கோயிலுக்குள் சென்றார்.

துயிலுணர்ந்த பரிசனங்கள், சந்தனம் பன்னீர் தாம்பூலம் பூமாலை முதலியன தாங்கி நிற்ப, பரவையார் மாளிகையை நன்கு அலங்கரித்தனர். வாயிலின்முன் திருவிளக்கும் நிறைகுடமும் வைத்தனர். எங்கும் பூமாலை தொங்கவிட்டு, நறுமலர் இறைத்து சந்தனந் தெளித்து, தோகையர் சூழத் திருவாயிலின்முன் எதிர் வரவு ஏற்க நின்றனர். தம்பிரான்தோழர் பரவையார் திருமாளிகை சென்றார். கணவரைக் கண்டு காதல்வெள்ளங் கரைகாணாது பொங்க நாணமும் அச்சமும் கொண்டு பரவையார் பணிந்தார். சுந்தரர் செந்தளிர்க் கரத்தால் அவரை எடுத்து உள்புகுந்தார். இறைவர் தம்பொருட்டுச் செய்த கருணைத்திறத்தைப் பாராட்டிப் பேசி, "ஒருவருள் ஒருவர் மேவும் நிலைமையில் உயிர் ஒன்று ஆனார்."

நாடோறும் பூங்கோயில் புக்குப் புற்றிடங் கொண்டாரைப் போற்றி செய்துகொண்டு வன்தொண்டர் வாழ்ந்தார்.

நம்பியாரூர் நெஞ்சில் நடுக்கமின்றி எம்பிரானை ஒரு பெண்பால் தூதுவிட்டார் என்ற தன்மையை ஏயர்கோன் கலிக்காம நாயனார் கேட்டார். கலிக்காமர் பொன்னி நாட்டில் திருப்பெரு மங்கலத்தில் வாழ்பவர்; வேளாண்மரபு தழைக்க வந்த பெருந்தகை; ஏயர்கோக்குடியில் வந்தவர். அக்குடி சோழரிடம் சேனாபதியாகும் சிறப்பு பெற்றது. திருப்புன்கூரில் எழுந்தருளி யுள்ள சிவலோக நாதருடைய திருவாலயத் திருப்பணிகளைச் செய்து இன்புறும் அன்பர். பரவைபால் பரமனைத் தூதுவிட்ட செய்தியைக் கேட்ட கலிக்காமர் உள்ளம் கொதித்தார்; "இப்படி நெஞ்சம் அஞ்சாமல் செய்யும் ஒருவனும் உளனோ?" என்று அதிசயித்தார்; அஞ்சினார். "அகிலாண்டஙகட்கும் தனிப்பெருந் தலைவனாகிய எம்பிரானை ஓர் அடியவன் பெண்ணிடம் தூது அனுப்பிய தன்மை நன்று நன்று; இத் தகாத செயலைச்

செய்தவனும் ஒரு தொண்டனோ? என்னே பாவம்! இப் பெரும்பிழையைக் கேட்ட பேயனேன் உயிர் இன்னும் பிரியாமல் இருக்கின்றதே? அந்தோ! பெண்ணிடஞ் செல்லும் பெருங் காதலால் ஒருவன் ஏவ, வேதாகமங்களுக்கும் எட்டாத எங்கள் பெருமானுடைய திருவடிக் கமலங்கள் வருந்த வீதியில் போவதும் வருவதுமாக ஓர் இரவு முழுவதும் உழன்றனவே? பெண்காதலைத் துறந்தவர்க்கே அருள்புரியும் பெருமான் பெண் காதலுக்கு அனுகூலம் புரிந்தனரே. ஆண்டவர் அடியார் வேண்டுவதை நல்கும் பெற்றியால் இசைந்தால் மாலயன் காணாத அம் மாதேவரை மாதுபால் ஏவலாமோ? இது தகுமோ? இது முறையோ? இதனைச் செய்து உள்ளம் நடுங்காத அவனை நான் காணும் நாள் என்றோ? அரிவை காரணமாக ஆளுடைப் பரமரை இரவிலே தூது அனுப்பியவனைக் காண்பேனாயின் என்ன விளையுமோ?'' என்று சீற்றமும் செற்றமும் கொண்டார்.

இன்னணம் ஏயர்கோன் எண்ணி முனிவு கொண்டிருப்ப தனைச் சுந்தரமூர்த்தி நாயனார் கேட்டார். குற்றத்தை ஒப்புக் கொள்வாராகிக் கண்ணுதற் கடவுளைச் சிந்தித்து, “எம்பெரு மானே! ஏயர்கோன் கலிக்காமருடைய சினத்தை மாற்றி யருள்புரிவீர்'' என்று விண்ணப்பம் புரிந்தார். கருணைக் கடவுளாகிய பெருமான் ஏயர்கோன் கலிக்காமரையும் நம்பி யாரூரையும் ஒற்றுமைப்படுத்தும் பொருட்டுக், கலிக்காமருக்குச் சூலைநோயைத் தந்தருளினார்.

ஏதமில் பெருமைச் செய்கை ஏயர்தம் பெருமான் பக்கல்
ஆதியார் ஏவுஞ் சூலை யனல்செய்வேல் குடைவ தென்ன
வேதனை மேன்மேற் செய்ய மிகவதற் குடைந்து வீழ்ந்து
பூதநா யகர்தம் பொற்றாள் பற்றியே போற்று கின்றார்.

இறைவர் ஏவிய சூலை நெருப்பினால் காய்ச்சிய வேல் குடைவதுபோல் பெருந்துன்பத்தைத் தந்தது. கலிக்காமர் அந் நோயைப் பொறுக்கமாட்டாமல் துள்ளித் துடித்து வீழ்ந்தார். “ஈசனே! பவரோக நாசனே! அடியவர் நேசனே! பிணியின் பெருந் துன்பத்தைத் தாங்க முடியவில்லையே'' என்று வேண்டினார். முக்கட்பெருமான் அவர்முன் தோன்றி, “அன்பனே! உன்னை வருத்தும் இச் சூலைநோயை வன்தொண்டன் மாற்றுவன். அவனை யன்றி இந்நோய் தீராது'' என்று அருளினார்.

கலிக்காமர் சிவபெருமானைத் தொழுது, “எம்பெருமானே! உமது கருணை நன்றாக இருக்கின்றது. என் தந்தை, தந்தைக்குத்

தந்தை, எங்குலமுழுவதும் வாழையடி வாழையாக உமது அடிமைகள். அத்தகைய பரம்பரை அடிமையாகி மேம்பட்ட அடியேனுடைய சூலையை, அண்மையில் நீர்போய் வலிந்து அடிமை கொண்ட ஒருவனோ வந்து தீர்ப்பது?

எம்பிரான் எந்தை தந்தை தந்தையெங் கூட்ட மெல்லாம்
தம்பிரா னீரே யென்று வழிவழி சார்ந்து வாழும்
இம்பரின் மிக்க வாழ்க்கை என்னைநின் றீருஞ் சூலை
வம்பென ஆண்டு கொண்டான் ஒருவனோ தீர்ப்பான் வந்து.

அதனினும் இந்தச் சூலையினால் அடியேன் வருந்துவதே நன்று. வன்தொண்டனுக்கு நீர் புரியுங் கருணை நன்று. அவனுக்கே நன்மை செய்யும்'' என்றார். சிவபெருமான் திருவுருவம் மறைந்தருளினார்.

பரமன் பரவைகேள்வர்பால் வந்து, "அன்பனே! நம் ஏவலாலே ஏயர்கோனுக்கு எய்திய சூலைப்பிணியை நீ போய்த் தீர்ப்பாய்" என்று பணித்தருளினார். நம்பியாரூர் ''அங்ஙனமே'' என்று பணிந்தார். சூலையைத் தீர்க்கும் பொருட்டுத் தாம் வருவதைக் கலிக்காமருக்கு அறிவிக்குமாறு அடியார்களை ஏவினார்.

சூலையினாலும், சிவபெருமான் கூறிய சொற்களினாலும் வருந்தியுள்ள கலிக்காமர், வன்தொண்டரது வரவைக்கேட்டு மிகவும் வருந்தினார். எங்கள் நாதனைத் தூதனாக ஏவியோன் வந்து சூலை தீர்க்கும் குற்றத்தை நான் ஏற்கமாட்டேன். இனி அவன்வந்து இந்நோயைத் தீர்க்குமுன், என்னைப்பற்றிய பாதகச் சூலையை இவ் வயிற்றினோடுங் கிழிப்பன்" என்று உறுதி செய்து உடைவாளை எடுத்து வயிற்றைக் கிழித்தார். சூலையும் உயிரும் பிரிந்தன.

அவருடைய அருமை மனைவியார் கணவனது தன்மையைக் கண்டு கலங்கி, கணவனுடன் உயிர்விடக் கருதும்போது, 'தம்பிரான் தோழர் வந்தனர்' என்று பரிசனங்கள் கூறினர்.

அடியவரை வரவேற்கும் திறனறிந்த திருத்தேவியார், ஒருவரையும் அழாதவகை தடுத்துக், கணவரது திருமேனியை ஒருபுறம் ஒளித்து வைத்துப், பரிசனங்களை எதிர்கொள்ளுமாறு ஏவினார். வீதி, வீடு முதலியவற்றை அலங்கரிக்குமாறு கட்டளையிட்டார். வாயிலுக்குமுன் நிறைகுடம் விளக்கு முதலியன வைத்து பூமாலைகளைத் தொங்கவிட்டு, எதிர்கொள்வாராயினார். அம்மையாரால் ஏவப்பெற்றோர் நம்பியாரூரரை எதிர்கொண்டு அழைத்து

வந்து, திருவடியை விளக்கி ஆசனத்தில் எழுந்தருளச்செய்து நறுமலர்களினால் அர்ச்சித்து வழிபட்டார். ஆரூரர் அவர்களை நோக்கி, ஏயர்கோனது சூலையை நீக்கி அவருடன் அன்பு செய்யும் பொருட்டு வந்தேன்" என்றனர்.

அம்மையாரது கட்டளைப்படி அருகிலிருந்தவர் சுந்தரரை வந்தனைசெய்து 'சுவாமீ! அவருக்கு ஒன்றும் துன்பமில்லை. உள்ளே துயில்கின்றார்' என்றனர். சுந்தர மூர்த்திநாயனார், 'ஆயினும் அடியேன் அவரைக் காணவேணும்' என்றார். ஏவலர் செய்வதறியாது ஏயர்கோனைக் காட்டினர். குருதி சோரக் குடர் சரிந்து மாய்ந்துகிடந்த கலிக்காமரைக் கண்டார். துணுக்குற்றார். நானும் இவரைத் தொடர்ந்து சென்று கூடுவேன் என்று, ஏயர்கோனது திருமேனியில் பொருந்தியிருந்த வாளைப் பற்றினார்.

ஆளுடைய ஐயன் திருவருளினால் கலிக்காமர் பிழைத் தெழுந்து, "அந்தோ! கெட்டேன்! அன்பரே!" என்று சுந்தரரது திருக்கரத்தில் உள்ள வாளைப் பிடித்தார். வன்தொண்டர் ஏயர் கோனது மலரடியில் வீழ்ந்து வணங்கினார். ஏயர்கோனும் வன்தொண்டரது திருவடியில் வீழ்ந்து வணங்கினார். அந்த அதிசயத்தையும் அன்புத் திறனையுங் கண்ட விண்ணவர் தண்மலர் மாரி பொழிந்தனர். இருவரும் தழுவி இடைவிடா நட்பு கொண்டு, மிக்க மகிழ்ச்சியுற்றனர். இருவரும் அருகில் உள்ள திருப்புன்கூர் சென்று சிவலோகநாதனை வழிபட்டனர்.

அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்ற னாருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொழிற் றிருப்புன் கூருளானே.

என்ற திருப்பதிகம் பாடினார். சிலநாள் அங்கிருந்தார். பின்னர் ஏயர்கோன் கலிக்காமருடன் திருவாரூர்போய்த் தியாகேசரை வணங்கினார். ஏயர்கோன் பின் தமது பெருமங்கலக்குடி சென்று திருத்தொண்டு புரிவாராயினார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரில் இருந்தபோது, கொடுங் கோளூரிலே சேரமான் பெருமாள் நாயனார் அரசு புரிந்து

வந்தனர். அவருக்கு 'பெருமாக்கோதையார்', 'கழறிற்றறிவார்' என்ற திருநாமங்களும் உண்டு. பாணபத்திரருக்கு நவநிதி தருமாறு மதுரை சோமசுந்தரப் பெருமான் திருமுகம் கொடுத்தருளப் பெற்ற பெருந்தகை. உலகியல்பும் அரசியல்பும் உறுதியல்ல என்று உணரப் பெற்றவர். வண்ணான் மேலிருந்த உவர் மண்ணின் வெண்மை யைக் கண்டு, அது திருநீற்றினை நினைவு செய்தபடியால், யானை மீதினின்றுங் கீழ் இழிந்து 'அடிச்சேரன் அடியேன்' என்று தொழுதவர். அத்துணைச் சிவபக்தியும் அடியார் பக்தியும் உடையவர். 'நீடும் உரிமைப் பேரரசின் பயனும், நிறைதவமும், தேடும் பொருளும், பெருந்துணையும் தில்லைத் திருச் சிற்றம்பலத்துள் ஆடுங் கழலே' எனத்தெளிந்தவர். அதனால், சஞ்சிதவின்ன யகற்றும் குஞ்சித பாதத்தை அனவரதமும் கூடும் அன்பால் அர்ச்சித்து வருபவர். பூசையின் முடிவில் நடராஜப் பெருமான் அவருடைய அன்புக்கு உளமுவந்து சிலம்பொலி கேட்குமாறு அருள்புரிவார்.

இவ்வண்ணம் சிவநெறியில் ஒழுகும் சேரர் பெருமாளுக்கு, ஒருநாள் வழிபாட்டின் முடிவில் வழக்கம்போல் அம்பலவாணரது ஆடற்சிலம்பொலி கேளாதொழிந்தது. அதனால், அவர் அளவற்ற வேதனையடைந்தார். 'அந்தோ! என்பால் ஏதோ பிழை நேர்ந்துளது. எம்பிரான் சிலம்பொலி கேட்டிலது. இனி இவ்வுடம்பால் யாது பயன்? இனி ஒருகணமும் வாழேன். பொன்னம்பலவாணா! உன் பொன்னடிக்கு வருகின்றேன்' என்று கூறி உடைவாளை உருவித் திருமார்பில் நாட்டினார்.

உடனே சிவபெருமான் சிலம்பொலியை மிகவும் இனிமை யாகக் கேட்குமாறு அருள்புரிந்தார். சிலம்பொலி கேட்டலும் சேரமான் பெருமாள் பெரிதும் உவந்து உடைவாளை அகற்றிச் சிரமலர் மேற் கரமலர் கூப்பித் தொழுவார்; மண்மிசை விழுவார்; மீண்டும் எழுவார்; இறைவன் திருவருளை எண்ணி எண்ணி என்புருகி அழுவார். 'மாலும் அயனும் மறைகளுங் காணாத மாமணியே! திருவருள் புரியக் காலந் தாழ்த்த காரணம் என்னை?' என்று கேட்டார்.

வன்தொண்டப் பெருமானைச் சேரர் பெருமாளுக்கு அறிவித்து நட்பு செய்விக்கத் திருவுளங்கொண்ட இறைவர், 'சேரனே! நமது நம்பியாரூரன் திருத்தில்லையில் வந்து இனிய தண்டமிழ்ப் பதிகம் பாடுதலால், அதன் இனிமையில் ஈடு

பட்டிருந்தேன். அதனால், இங்குச் சிலம்பொலி கேட்பிக்கச் சிறிது காலந் தாழ்த்தது' என்று வானொலியாகக் கூறியருளினார்.

சேரமான் பெருமாள், 'என்னே! இறைவருடைய கருணை? செந்தமிழில் அவருக்கு இருக்கும் அன்புதான் என்னே! தில்லைச் சிதம்பரம் சென்று பொன்னம்பலத்துள் ஆடுவார் பூங்கழல் வணங்கி, தம்பிரான் தோழராம் நம்பியாரூரரையுங் கண்டு வருவேன்' என்று எண்ணினார். அமைச்சர்களிடம் தமது கருத்தை உரைத்து, நன்னாள் பார்த்துப் பரிசனங்கள் புடைசூழப் புறப்பட்டார். திருவஞ்சைக் களத்துறையுந் தேவரைத் தொழுது விடைபெற்றுச் செல்லுவார். நால்வகைச் சேனைகளும் பூமி நெளிய உடன் சென்றன. கொங்குநாடு கடந்து சோழ வள நாட்டை அடைந்தார். ஆங்காங்கு அடியார்கள் எதிர்கொண்டு உபசரிக்க அரனார் மேவுந் தலங்களை வணங்கிக்கொண்டு காவிரியை அடைந்தார். அன்புடன் அதில் முழுகினார். இன்புடன் திருநீற்றிலும் முழுகினார். வடகரை ஏறினார். தணியாக் காதலுடன் பணிவார் வினையகற்றும் தில்லை யம்பதியை அடைந்தார். எல்லையிலேயே யானையினின்றும் இறங்கித் தொழுதார். தில்லை மூவாயிரம் அந்தணர்களும் எதிர் கொண்டனர். தில்லை நகரை வலம்வந்து, கோபுரவாயிலில் வணங்கிக் கண்ணீர் மல்கிக் கரையிலாக் காதலுடன் கனக சபையைக் கண்டு, ஞானவெளியிலே ஆனந்தத் தாண்டவம் புரியும் நடராஜமூர்த்தியைத் தரிசித்தார். இன்பக்கடலில் அழுந்தினார். "பொன்வண்ணத் திருவந்தாதி" பாடியருளினார்.

> பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி பொலிந்திலங்கும்
> மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை வெள்ளிக்குன்றந்
> தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் மால்விடை தன்னைக்கண்ட
> என்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மாகிய ஈசனுக்கே.
>
> *- பொன்வண்ணத் திருவந்தாதி*

எம்பிரானது சிலம்பொலி கேட்டு மகிழ்ந்தார். சிலநாள் தங்கியிருந்தார். எந்தை சுந்தரரைக் காணும் விழைவுடன் புறப் பட்டார். சீகாழி முதலிய திருத்தலங்களை வணங்கிக் கொண்டு திருவாரூரை அடைந்தார். அதுசமயம் ஆரூரர் நாகைக்காரோணம் பாடி நாகைமேவும் நாகாபரணரிடம், அம் பொன்மணிப்பூண், நவமணிகள், ஆடை, சாந்தம், வெற்றிக்குதிரை, கவசம் முதலிய பெற்று திருவாரூரை யடைந்திருந்தார். அரசர் பெருமானாரை அந்தணாளர் பெருமான் எதிர்கொண்டார். சேரன்கோன்

வன்தொண்டர் மலரடிமேல் வீழ்ந்து வணங்கினார் சேரர் கோனைச் சுந்தரரும் வணங்கித் தழுவினார். இருவரும் என்பும் உருக உயிர் ஒன்றி உடலும் ஒன்றாகக் கலந்தனர். அதுகண்ட அடியார்கள் 'அரஹர' என்று ஆரவாரஞ் செய்தனர். சுந்தர மூர்த்திசுவாமிகட்குச்'சேரமான் தோழர்' என்னும் திருநாமம் அப்போது ஏற்பட்டது. வன்தொண்டர் வாரமுடன் சேரருடைய மலர்க்கரத்தைப் பற்றிக்கொண்டு பூங்கோயிலுட் சென்றார். தேவாசிரியனைத் தொழுது உள்ளே சென்று உள்ளுவார் உள்ளியவெல்லாம் வழங்கும் வள்ளலாகிய தியாகேசப் பெரு மானைப் பன்முறையும் பணிந்தார்கள். அத்தருணம் சேரமான் பெருமாள் மும்மணிக் கோவை பாடி அருளினார்.

சுந்தரர் பின்னர் தமது தோழருடன் பரவையார் திருமாளிகை சென்றார். நிறைகுடம், திருவிளக்கு, திருத்தொங்கல், நறும்புகை முதலிய அமைத்துப் பரவையார் எதிர்கொண்டு, பொற்பலகைமீது இருத்திக் கொழுநனார்க்கும் தோழருக்கும் பூசனை புரிந்தார். சேரர் பெருமானுக்கும் உடன் வந்தார்க்கும் சிறந்த விருந்தமைத்து இனிய உணவுகளைப் படைத்தார் பரவையார். உடனிருந்து உண்ணுதற்கு சேரமான் அஞ்சினார். தம்பிரான் தோழர் அவரை வேண்டி இருவரும் இருந்து அறுசுவையுண்டி அருந்தினர். சந்தனம், தாம்பூலம், மலர்மாலை முதலியவைகளைப் பரவையார் நல்கினார். விற்கொடியுடைய வேந்தர் திருநாவலூர் வேந்தரைத் தொழுதார். அவரும் இவரைத் தொழுதார். 'தனது தவம் பலித்தது' என்று சேரர்கோன் சிந்தை மகிழ்ந்தார். சேரமான் பெருமாளைத் தோழராகத் தந்த சிற்சபேசனைத் தொழுதார் வன்தொண்டர். இன்னணம் இருவரும் ஒருமனமுடன் திருவாரூரில் சிலபகல் தங்கி புற்றிடங் கொண்டாரைப் போற்றி செய்திருந்தார்.

கன்னித் தமிழ்நாடு சென்று மதுரை முதலிய திருத் தலங்களைச் சேவிக்க வேண்டுமென்று நம்பியாரூரர் எண்ணி னார். சேரர் கோனும் பாணபத்திரரைத் திருமுகங் கொடுத் தனுப்பிய மதுரைச் சொக்கலிங்கரைக் கண்டு மகிழவேண்டு மென்று விரும்பி உடன் செல்லத் துணிந்தார். இருவரும் எழுந்து ஆரூர் மேவும் ஒருவரைப் பணிந்து பிரியாவிடைபெற்றுப் புறப்பட்டனர். கீழ்வேளூர் சென்று தாழ்மடைத் தலைவரை வணங்கினர். அங்கிருந்து கடற்கரையில் விளங்கும் நாகை சென்று திருக்காரோணச் சிவக்கொழுந்தைச் சிந்தை நிறைந்த அன்புடன் பணிந்தனர். சிலநாள் அங்குத் தங்கியிருந்தனர். பின்னர், இருவரும் புறப்பட்டுத் திருமறைக்காடு சென்றனர். அங்கு திருநாவுக்கரசரும்,

சீகாழிச் சிவக்கன்றும் திறக்கவும் அடைக்கவும் திருப்பதிகம் பாடியருளிய திருவாயிலை அடைந்து, அந்நாயன் மார்கள் இருவரையும் நினைந்து கண்ணருவி பொழிந்து, மறைகள் பூசித்த மணிகண்டரைக் கண்டு தொழுதனர்.

யாழைப்பழித் தன்னமொழி மங்கையொரு பங்கன்
பேழைச்சடை முடிமேற்பிறை வைத்தானிடம் பேணில்
தாழைப்பொழி லூடேசென்று பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங் குண்ணும்மறைக் காடே.

என்ற திருப்பதிகத்தை வன்தொண்டப் பெருமான் பாடினார். சேரமான் பெருமாள் திருவந்தாதி பாடினார். சிலநாள் தங்கி யிருந்தனர். அங்கிருந்து புறப்பட்டுத் தென்திசையாகச் சென்று அகத்தியான் பள்ளியை வணங்கினர். பின்னர், கோடிக்கோயில் சென்று கோடிக்குழகரைக் கண்டு சேவித்தனர். அங்கே அருகில் ஒரு குடிகளும் இல்லாது இறைவர் தனியே இருந்தார். அதுகண்டு ஆரூரர் வருந்தினார். "என்னையனே! இந்தக் கானலிடைத் தன்னந் தனியாய் எவ்வாறு உறைகின்றீர்? துணை ஒருவருமில்லையே? கடற் காற்று கடிதாக வீசுகின்றதே'' என்று கூறிக் கண்ணீர் சொரிந்து திருப்பதிகம் பாடினார்.

கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேல்
குடிதான் அயலே இருந்தால் குற்றமாமோ
கொடியேன் கண்கள் கண்டன கோடிக்குழகீர்
அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே.

பாண்டி நாட்டு யாத்திரை

அங்கிருந்து புறப்பட்டுச் சோழநாட்டில் சிவத்தலங்களை யெல்லாம் சேவித்துப் பாண்டிநாட்டினை அடைந்தார். திருப்புத்தூர் மேவுந் தேவதேவரைத் தொழுது மங்குல் தவழும் மணிமாட மதுரையம்பதி வந்தணைந்தார். அந்த இரு சைவ மாணிக்கங்களைப் பாண்டி மன்னன் முறைப்படி வரவேற்றனன். ஏற்கனவே பாண்டியனது திருமகளை மணஞ்செய்து ஆங்குத் தங்கியிருந்த சோழ மன்னனும் எதிர்கொண்டு இறைஞ்சினன். இவ்வாறு சேரர், பாண்டியர், சோழர் என்று மன்னர் மூவரும் கூடி உடன்வர தம்பிரான்தோழர் திருக்கோயிலை வலம் வந்து, உட்புகுந்து அங்கயற் கண்ணம்மையையும் ஆலவாயண்ணலையும் அன்புடன் பலகாலும் பணிந்து பாமாலை சாத்தினார். சேரமான்பெருமாள் சோமசுந்தரக் கடவுளைக் கண்ணாரக் கண்டு

"அடியேனையும் ஒரு பொருளாகக் கொண்டு திருமுகம் அனுப்பிய கருணைக்கடலே!" என்று மொழி குழறத் துதித்து வழிபட்டனர். பாண்டிப்பெருமான் சேரரையும் நாவலரையும் திருமாளிகைக்கு எழுந்தருளச் செய்து குறைவற உபசரித்தனன்.

திருநாவலூரர் சிலநாள் அங்குத் தங்கி மூவேந்தருடன் பிற தலங்களை வணங்கும்பொருட்டுப் புறப்பட்டார். வழியில் அடியார்கள் திருப்பூவணம் என்னும் திருத்தலத்தைக் காட்டினர். உடனே, ஆரூரர் "பூவணம் ஈதோ" என்று வியந்து திருப்பதிகம் பாடினார்.

திருவுடை யார்திரு மாலய னாலும்
உருவுடை யாருமை யாளையோர் பாகம்
பரிவுடை யாரடை வார்வினை தீர்க்கும்
புரிவுடை யாருறை பூவண மீதோ.

திருப்பூவணம் போந்து திருக்கோயிலை வலம்வந்து சிவ பெருமானை வழிபட்டார். மீண்டும் வந்து சொக்கப்பெருமானை வணங்கினார். திருவாப்பனூர், திருவேடகம், திருப்பரங்குன்றம் முதலிய திருத்தலங்களை அடைந்து மூவேந்தருடன் பாவேந்தராம் பரவைகேள்வர் பரமபதியைப் பணிந்தார். மதுரையில் சிலநாள் தங்கிவிட்டுப் பிறதலங்களை வணங்க விரும்பிச் சேரர்கோனுடன் புறப்பட்டார். சோழனும் பாண்டியனும் பிரியாவிடை தந்து வழி விட்டனர். சேரர்கோனுடன் செந்தமிழ்க்கோன் இடையிலுள்ள திருத்தலங்களை வணங்கிக் கொண்டு திருக்குற்றாலஞ் சென்றார். குறும்பலாவின் கீழ் வாழும் குற்றாலத்தப்பரைத் தொழுது, செல்வர் மேவும் திருநெல்வேலி வந்தார். நெல்லையப்பரை நிறைந்த அன்புடன் தொழுது, திருவிராமேச்சுரம் சேர்ந்தார். அங்குறையும் இராமலிங்கத்தைப் பதிகம் பாடிப் பணிந்தார். அங்கிருந்த வண்ணமே ஈழநாட்டில் விளங்கும் மாதோட்டத் திருக்கேதீச்சுரத்தை வணங்கித் திருப்பதிகம் பாடினார்.

திருச்சுழியல் சென்று, கருக்குழியில் வீழாமல் காத்தருளும் கண்ணுதற் கடவுளைக் கண்டு மகிழ்ந்தார். அன்று இரவு சுந்தரர் கனவில் சிவபெருமான் ஓர் அழகிய காளையாய், திருக்கரத்தில் பொற்செண்டு தாங்கி, திருமுடியில் சுழியம் பொலிய, எங்குமில்லாத எழிலுடன் தோன்றி, "அன்பனே! கானப்பேர் யாம் இருப்பது" என்று கழறி மறைந்தருளினார். வன்தொண்டர் கனவு தெளிந்து எழுந்து இறைவருடைய கருணையை எண்ணி அதிசயித்தார். கழறிற்றறிவாருக்குக் கனவின் திறத்தைக் கூறி

அவருடன் புறப்பட்டார். 'தொண்டரடித் தொழலும்' என்னும் தமிழ்ப்பதிகம் பாடி, 'காளையார் தமைக்கண்டு தொழப் பெறுவ தென்றுகொலோ' என்று ஏங்கித், திருக்கானப்பேர் வந்தார். காளையார் கோவில் என்னும் அப்பதியில் எழுந்தருளியுள்ள எம்பிரானை ஆராக்காதலுடன் வணங்கினார். சிலநாள் அங்குத் தங்கி திருப்புனவாயில் சென்று தமிழ்மாலை சாத்தினார். பின்னர், சோழநாட்டினை அடைந்து பாம்பணிநகரில் பாதாளீச்சுரரைப் பணிந்து திருவாரூர் சேர்ந்தார். திருவாரூரில் வாழும் அடியார்கள் எதிர்கொண்டனர். இருவரும் திருக்கோயிலுட் சென்று தியாகமணியைத் தொழுது பரவையார் மாளிகையை அடைந்தார். பரவையார் பணிந்து ஏத்தி இனிய உணவுகளை அமைத்து உபசரித்தார். சிலபகல் சென்றது.

கேரள நாடாளும் சேரமான்பெருமாள் தோழரைத் தமது நாட்டுக்கு எழுந்தருளுமாறு பலகாலும் பணிந்து வேண்டினார். ஆரூரரும் இசைந்தார். பரவையார்பால் விடைபெற்றுத், தியாகேசனைத் தொழுது திருவாரூரை விடுத்து மேற்பால் செல்வார்.

காவிரியின் தென்கரையிலே சென்று திருக்கண்டியூரை யடைந்தார். ஆங்குறையும் அண்ணலைத் தொழுது, வடகரையில் விளங்கும் திருவையாற்றினைக் கண்டார். உடலும் உள்ளமும் உருகி கைகூப்பித் தொழுதார். கடல்போன்ற வெள்ளம் பெருக் கெடுத்தோடும் காவிரியைக் கடக்கமாட்டாராய் வருந்தினர். மிகப்பெரிய வெள்ளம்; இருகரையும் உடைத்துக் கொண்டு யானைகளைப்போல் எழுந்து வீசும் அலைகளுடன் செல்லுங் காவிரியில் ஓடமும் நாவாயும் செல்லுதற்கரியவாயின. அப்போது நம்பியாரூரர் திருவையாறடிகளை நோக்கி, "என்னாண்டவனே! இந்த வெள்ளத்தில் எதிர்த்து நீந்த மாட்டேன். அடியேன் என் செய்வேன்? இப்பெரிய வெள்ளத்தைக் கடந்து உன்னை எவ்வாறு காண்பேன்?'' என்று அன்புடன் வேண்டி தீந்தமிழ்ப்பதிகம் ஓதினார்.

கதிர்க்கொள் பசியை யொத்தேநான் கண்டே னும்மைக் காணாதேன்
எதிர்த்து நீந்த மாட்டேன்நான் எம்மான் தம்மான் தம்மானே
விதிர்த்து மேகம் மழைபொழிய வெள்ளம் பரந்து நுரைசிதறி
அதிர்க்குந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ.

அப்பதிகம் பாடுதலும், ஐயாற்றில் மேவும் ஐயன் கன்று தடை யுண்டு எதிரழைக்கக் கதறிக் கனைக்கும் பசுவைப்போல் சராசரங்

கள் எல்லாம் கேட்க, "ஓலம்" என்று அருள்புரிந்தார். உடனே காவிரி வெள்ளம் வழிவிட்டது.

மன்றில் நிறைந்து நடமாட வல்லார் தொல்லை ஐயாற்றில்
கன்று தடையுண் டெதிரழைக்கக் கதறிக் கனைக்கும் புனிற்றாப்போல்
ஒன்றும் உணர்வால் சராசரங்கள் எல்லாங் கேட்க ஓலம்என
நின்று மொழிந்தார் பொன்னிமா நதியும் நீங்கி நெறிகாட்ட.

விண்ணிடை முட்டிச் சென்ற வெள்ளம் மேற்புறத்தில் பளிங்கு மலைபோல் நின்றது. கீழ்ப்புறத்தில் மணல்பரப்பு தோன்றியது. அந்த அதிசயத்தைக் கண்ட அடியார் கண்மழை பொழிந்தனர். சேரமான் நம்பியாரூரரைத் தொழுது நின்றார். வன்தொண்டர் சேரமானைத் தொழுது, 'இது உம்பர்நாதர் உமக்கு அளித்த அருளின் திறம்' என்றார். காவிரி கடந்து திருவையாறகலாத செம்பொற்சோதியைக் கண்குளிரக் கண்டு பணிந்தார். எம்பிரானது திருவருளின் திறத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்தார். மீண்டும் தென்கரை அடைய காவிரி வெள்ளம் முன்போல் செல்லலுற்றது. ஆரூரர் அன்பருடன் இடையில் உள்ள தலங்களையெல்லாம் தொழுதுகொண்டு கொங்கு நாட்டை அடைந்தார்.

கொங்குநாட்டினர் வரவேற்று வணங்க, அதனைக் கடந்து, மலைநாட்டினை எய்தினார். அந்நாட்டு மக்கள் அதிக மகிழ்ச்சி யுடன் தத்தம் ஊரை அலங்கரித்து எதிர்கொண்டு தொழுது உபசரித்தனர். கொடுங்கோளூருக்கு அருகில் வந்தார். அதனை யறிந்த அமைச்சர்கள் ஆங்காங்கு நிறைகுடங்களும், திருவிளக்கு களும் வைத்துப், பூமாலைகளை நிரம்பத் தொங்கவிட்டு, வாழைக் கமுகுகள் நாட்டி, தோரணம் கட்டிப், பொன்னுலகம்போல் புனைந்து யானைகளும் குதிரைகளும் புடைசூழ மிகுந்த மகிழ்ச்சியுடன் வந்து எதிர்கொண்டனர். ஆடலும் பாடலும் நிறைந்தன. சேரர்கோன் தோழருடன் நகருள் நுழைந்து அரண் மனை நுழையாமல் திருவஞ்சைக்களம் சென்று நஞ்சுண்ட நாதனைத் தொழுதார். ஆரூரர் அஞ்சைக்களத்து ஐயனை "முடிப்பது கங்கை" என்ற திருப்பதிகம் பாடிப் பரவினார்.

பெண் யானைமீது தம்பிரான் தோழரை ஏற்றி, அவருக்குப் பின் தாமும் ஏறி வெண்சாமரம் வீசிக்கொண்டு கடல் போல் மேளங்கள் முழங்க, மங்கையர் வாழ்த்த அரண்மனை புகுவார்.

நல்ல தோழர் நம்பெருமாள் தமக்கு நம்பி இவரென்பார்
எல்லை யில்லாத் தவம்முன்பென் செய்தோம் இவரைத் தொழவென்பார்
செல்வம் இனியென் பெறுவதுநஞ் சிலம்பு நாட்டுக் கெனஉரைப்பார்
சொல்லுந் தரமோ பெருமாள்செய் தொழிலைப் பாரீர் எனத்தொழுவார்.

இவ்வாறு மங்கல கீதம் பாடி மாதர்கள் பரவினார்கள். சேரமான்பெருமாள் சுந்தரரைச் செம்பொன் மாளிகையில் கொண்டுபோய்ச், சிங்காசனத்தில் இருத்தினார். பொற்கலயங் களில் தேவிமார் நீர்வார்க்க ஆரூரரது அடிமலரை விளக்கத் தொடங்கினார். தம்பிரான் தோழர், "இதுதகாது" என்று பாதத்தை எடுத்தார்.

மன்னர் மண்மிசை வீழ்ந்து, "யாம்புரியும் வழிபாட்டினை ஏற்றருள வேண்டும்" என்று இரந்து வேண்டினார். வன்தொண்டர் மறுக்காதிருந்தார். கழறிற்றறிவார் திருவடியைப் பூசித்து வழிபாடு செய்தார். பின்னர், இருவரும் இனிய உணவருந்தினர். பின்னே சந்தனம், பனிநீர், தாம்பூலம், பூமாலைகள் தந்தனர். ஆடல், பாடல், இன்னிசைகள், விநோதங்கள் முதலியன அவ்வப்போது நிகழச் செய்தனர். இவைகளையெல்லாம் வன்தொண்டர் கண்டுங் கேட்டுங் களித்தார். நாட்கள் சில நடந்தன.

நாவலர் பிரான் திருவாரூர் தேவர்பிரானை ஒருநாள் மிக நினைந்து உருகுவார். ஆரூர் மேவும் அண்ணலைக் காண அவர் கண்கள் துடித்தன; காதல் வெள்ளம் பெருகியது.

பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி வொண்ணா
வெம்மா னையெளி வந்தபி ரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே.

என்று திருப்பதிகம் பாடினார். உடனே, அடியார்களுடன் புறப்பட்டார். சேரமான்பெருமாள் அவரை வணங்கி, "எந்தையே! இன்று உமது பிரிவாற்றேன்; என்செய்கேன்" என்றார். நாவலூரர், "நண்புடையீர்! ஒன்றும் நீர் வருந்தாதீர்; உமது பதியின்கண் இருந்து பகைவரை ஒடுக்கி அரசுபுரியும்" என்றுரைத்தார்.

அதுகேட்ட அரசர் மீண்டும் பணிந்து, 'இந்தப் பாரோடு விசும்பாட்சியாவது அடியேனுக்கு உமது திருவடியே; நீர் இங்கிருந்து அரசாளும்" என்று வேண்டினார். வன்தொண்டப் பெருமான், "என்னுயிர்க்கு இன்னுயிராம் எழில் ஆரூர்ப் பெருமானை வன்னெஞ்சக் கள்வனேன் மறந்திரேன்; மதியணிந்தார் இன்னருளால் அரசளிப்பீர். இரும்" என்று கூறி இறைஞ்சினார். பெருமாள் மறுக்க மாட்டாராய் கருவூலத்துள்ள பொன், முத்து, இரத்தினம், ஆடைகள் அனைத்தையும் பொதிசெய்து கொணருமாறு அமைச்சருக்குக் கட்டளை யிட்டார். அமைச்சர்கள் அவ்வண்ணமே கருவூலத்தில் அதுவரை யிருந்த பொருள்கள் எல்லாவற்றையும் பொதிசெய்து ஆட்கள்மீது வைத்து ஆரூரருடன் செல்லச் செய்தார். சேரர்கோவும் ஆரூரரும் ஒருவரை யொருவர் தொழுதும், அழுதும், தழுவியும் விடை கொண்டு பிரிந்தனர்.

வன்தொண்டர் மலையும், ஆறும், வனமும் கடந்து மலை நாட்டை விடுத்தார். கொங்குநாட்டை அடுத்தார். திருமுருகன் பூண்டி வழியே செல்கின்றார். சிவபெருமான் சுந்தரருக்குத் தாமே பொன் தருவது வழக்கம். பிறர் தரப்பெறுதல் ஏற்றதன்று என்று எண்ணி, அதனைப் பறித்து மீட்டும் தருமாறு திருவுளங் கொண்டார் போலும். பூதகணங்களை நோக்கி 'நீங்கள் வேடர்வடிவாகச் சென்று வன்தொண்டனுடன் செல்லும் பண்டாரங்களைப் பறித்து வாருங்கள்' என்று பணித்தருளினார்.

பூதங்கள் வேடவடிவங் கொண்டு வில்வளைத்து, வெந்தழல் பொழிய விழித்து, மிகவும் தெழித்து இடிஇடித்ததுபோல் முழக்கி, "அடியுங்கள்; பிடியுங்கள்; கொல்லுங்கள்; செல்வமெல்லாம் தந்துவிட்டுச் செல்லுங்கள்" என்று கூறி பொருள்களையெல்லாம் பறித்துக் கொண்டனர். பறிகொடுத்த பரிசனங்கள் ஆரூரர்பால் வந்தனர். வேடுவர் ஆரூரரிடஞ் செல்லாமல் சென்றனர்.

அதுகண்ட ஆரூரர் திருமுருகன்பூண்டியில் உள்ள திருக் கோயிலுக்குள் சென்றார். எம்பிரானை அன்புடன் தொழுதார். "சுவாமீ! வெருவுற வேடுவர் பறிக்கும் வெஞ்சுரத்தில் நுண்ணிடை யுடைய என்தாயுடன் எதற்காகத் தேவரீர் இங்கிருக்கின்றீர்?" என்று கூறி இனிய பதிகம் பாடுவார்.

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் விரவ லாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண் டாற லைக்குமிடம்
முடுகு நாறிய வடுகர்வாழ் முருகன் பூண்டிமா நகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடு மெத்துக்கிங் கிருந்தீரெம் பிரானிரே.

இவ்வண்ணம் பாடியதும் பறிக்கப்பட்ட பொருள்கள் யாவும் திருவாயிலுக்குமுன் விண்ணளவாகக் குவிந்திருந்தன. பழையபடியே ஏவலர்களைக் கொண்டு அவைகளை எடுப்பித்துத் தெய்வமணங் கமழும் திருவாரூரை யடைந்தார்.

நம்பியாரூரரது பொன்மேனியானது பத்தியாகிய மூலத்தினின்றும் எழுந்து, அன்பு என்னும் தண்ணீரில் இனிது வளர்ந்து, இருவினையாகிய களைகளை எடுக்கப்பெற்றுச், சிவபோகமாகிய கதிர் தோன்றி முதிர்ந்து முறுகி விளைந்தது.

படியில் நீடும் பத்திமுதல் அன்பு நீரிற் பணைத்தோங்கி
வடிவு நம்பி யாரூரர் செம்பொன் மேனி வனப்பாகக்
கடிய வெய்ய இருவினையின் களைகட் டெழுந்து கதிர்பரப்பி
முடிவி லாத சிவபோகம் முதிர்ந்து முறுகி விளைந்ததால்.

ஆலமுண்டாரது அணுக்கத் தொண்டராம் வன்தொண்டர் திருவாரூரில் இருக்கும்போது, ஒருநாள் சேரமான்பெருமாளை நினைந்து அவரைக் காணவேண்டுமென்ற விருப்பம் எழுந்தது. உடனே எழுந்தார். பூங்கோயில் சென்று புற்றிடங்கொண்டார் பொன்னடியில் விழுந்தார். விடைபெற்றார். புறப்பட்டு வழியில் உள்ள திருத்தலங்களையெல்லாம் வணங்கிக் கொண்டே சென்றார். கொங்குநாட்டினை அடைந்தார். திருப்புக்கொளியூர் அவிநாசியிலே செல்வார். அங்கே ஒரு வீட்டில் மங்கலஒலி கேட்டது; அதற்கு எதிர்வீட்டில் அழுகை ஒலிகேட்டது. கருணை வடிவாகிய ஆரூரர் ஆங்குறையும் மறையவரை நோக்கி, "இப்படி இந்த வீடுகளில் எதிரிடையாக இரண்டொலி நிகழக் காரணம் யாது?" என்று வினாவியருளினார்.

அந்தணாளர் அவரைப் பணிந்து, "ஐயனே! இந்த இரு மனைகளிலும் பிறந்த ஐந்து வயதுடைய குழந்தைகள் மடுவில் குளித்தனர்; பெருமுதலை ஒருமதலையை விழுங்கி விட்டது. மங்கல ஒலி கேட்கும் மனையில் பிழைத்த பிள்ளைக்கு இன்று பூணூலிடுகின்றனர். இந்த வீட்டில் 'அந்தோ! நமது மைந்தன் இருந்தால் அவனுக்கும் உபநயனம் புரியலாமே?' என்று அழுகின்றனர்" என்று புகன்றனர்.

அருள்வடிவாம் ஆரூரர் அழுகையொலியுடைய மனைக்கு நேரே நின்றார். நெடுநாள்களாக நம்பியாரூரரைக் கண்டு வணங்க விரும்பியிருந்த மறையவரும் அவரது மனைவியும் மகனை இழந்த சோகம் நீங்கி, ஓடிவந்து பணிந்தனர். துன்பம் நீங்கி முகமலர்ந்து

தொழுகின்ற அவர்களை ஆரூரர் கண்டார். "மகனை இழந்து வருந்தியது நீங்கள்தாமோ?" என்று கேட்டார்.

மீண்டும் அவர்கள் அடிபணிந்து, "சுவாமீ! அதுமுன்னே நிகழ்ந்தது; இப்போது அதுபற்றி என்னை? தேவரீரது திருவடியை வணங்குதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தோம். எங்கள் தவப்பயன் இன்று கைகூடியது. தேவரீரை எழுந்தருளப் பெற்றோம்" என்று மகிழ்ச்சியுடன் கூறினர்.

ஆரூரர் "ஆகா! இவ்ர்களது அன்புதான் யாதோ? மகனை யிழந்து வருந்திய இவர்கள், என்னைக் கண்டதும் அதனை மறந்து மகிழ்ந்து உபசரிக்கின்றனர். அந்த மகனை அழைத்துக் கொடுத்து அவிநாசி யப்பரை வணங்குவேன்" என்று திருவுளங்கொண்டார். அருகில் நின்றவரை, "ஐயா! இவர்களது புதல்வனை முதலை விழுங்கிய மடு எங்கே?" என்று கேட்டார். அருகில் நின்றார் காட்ட அடியார் கணங்களுடன் அப்பொய்கைக் கரையை அடைந்தார்.

உரைப்பார் உரைஎன் றெடுத்ததிருப் பாட்டு முடியா முன்னுயர்ந்த
வரைப்பான் மையில்நீள் தடம்புயத்து மறலி மைந்தன் உயிர்கொணர்ந்து
திரைப்பாய் புனலில் முதலைவயிற் றுடலிற் சென்ற ஆண்டுகளும்
தரைப்பால் வளர்ந்த தெனநிரம்ப முதலை வாயில் தருவித்தான்.

உரைப்பார் உரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளி யூர்அவி நாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே.

என்ற திருப்பதிகம் பாடியருளினார். அப்பதிகம் முடியுமுன் அம் முதலை வயிற்றில் பிரமன் உடலையும், இயமன் உயிரையும் விட்டனர். இறந்த நாள்தொட்டு அதுவரை வளர்தற்குரிய திரு மேனியுடன் அம்மதலையை முதலை கரையின்கண் கொணர்ந்து உமிழ்ந்தது. சேயை ஓடி தாய் எடுத்துவந்து, உயிர் தந்த உத்தமருடைய திருவடியில் பணிவித்துக் கணவனுடன் பணிந்தனள். வானோர் மலர்மழை பொழிந்தனர். மண்ணோர் துதிமொழி மொழிந்தனர். அதிசயித்தார்கள்; ஆடினார்கள்; பாடினார்கள்; ஆரூரர் அம்மகனுடன் சென்று அவிநாசியப்பரை வணங்கினார். பின்னர், அத்திருமகனுக்குச் சுந்தரர் உபநயனம் தாமே இருந்து செய்வித்தார். அனைவரையும் உய்வித்தார்.

சேரர்கோனைக் காணும் விருப்பால் வன்தொண்டர் புறப்பட்டுக் காடும் மலையும் கடந்து மகோதைக்கருகில் வருகின்றார். சிவனடியார்கள் ஓடிச் சேரர்கோனை வணங்கி, "நம்பியாரூரர் அவிநாசியில் முதலையுண்ட மதலையை வருவித்து வழங்கி இங்கு வருகின்றார்" என்று கூறினார்கள். அதுகேட்ட பெருமாக்கோதையார்அவர்க்குக் காசுந் தூசும் வழங்கினார்.

செய்வ தொன்றும் அறியாது சிந்தை மகிழ்ந்து களிகூர்ந்தென்
ஐயன் அணைந்தான் எனையாளும் அண்ணல் அணைந்தான் ஆரூரிற்
சைவன் அணைந்தான் என்துணையாந் தலைவன் அணைந்தான் தரணியெலாம்
உய்ய அணைந்தான் அணைந்தான்என் றோகை முரசம் சாற்றுவித்தார்.

நல்ல அமைச்சரை அழைத்து நகரை அலங்கரிக்கச் செய்தார். யானைமீது சென்று எதிர்கொண்டு ஆரூரரை அடிதொழுதார். அவரும் இவரைத் தொழுதார். சேரர்கோன் தோழரைத் திருவாரூரின் நலம்வினவி, அவரை அரச யானைமீது ஏற்றி, தாம் பின்புறம் இருந்து வெண்குடை கவித்தார். அன்பர் குழாங்கள் "அரகரா" என்று ஆழிபோல் ஆர்த்தனர். சங்கினங்கள் முழங்கின; முழவங்கள் அதிர்ந்தன; அந்தணரும் வந்தியரும் பாடினர்; செந்திருவனையவர் ஆடினர். அரண்மனை வாயிலில் இருவரும் யானை விட்டிறங்கி உட்புகுந்தனர். நாவலர் பெருமானைச் சேரர்பெருமான் மணி யாசனத்து இருத்தி வழிபாடு புரிந்தார்.

பெருமாக்கோதையாருடன் திருநாவலூரர் மலைநாட்டிலுள்ள சிவத்தலங்களை யெல்லாம் சேவித்து மகிழ்ந்தார். இவ்வண்ணம் மகோதையில் சிலநாள் தங்கி இருந்தார். ஒருநாள் சேரர்பெருமான் திருமஞ்சனத் தொழிலில் ஈடுபட்டிருந்தார். அப்போது நம்பியாரூரர் திருவஞ்சைக்களத்தில் இறைவனை வணங்கிக் கொண்டிருந்தார். அவனிவாழ்வில் வெறுப்புற்றுத் திருக்கைலை செல்லுதற்கு எண்ணினார்.

வெறுத்தேன் மனைவாழ்க் கையைவிட் டொழிந்தேன்
விளங்குங் குழைக்கா துடைவே தியனே
இறுத்தாய் இலங்கைக் கிறையா யவனைத்
தலைபத் தொடுதோள் பலஇற்று விழக்
கறுத்தாய் கடல்நஞ் சமுதுண்டு கண்டங்
கடுகப் பிரமன் தலைஐந் திலும்ஒன்
றறுத்தாய் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே.

திருக்கைலையில் சிவபெருமான் ஆரூரரை அழைக்குமாறு திருவுளங் கொண்டார். மாலயனாதி வானவரை நோக்கி, "நமது ஆரூரனை அயிராவணம் என்னும் வெள்ளையானை மீது ஏற்றி அழைத்து வாருங்கள்" என்று கட்டளை யிட்டருளினார். வானவரும், திருமாலும், பிரமனும், இந்திரனும் பரமனைப் பணிந்து, அயிராவணமுடன் திருவஞ்சைக்களம் எய்தினர். திருவாயிலின் முன்னின்று சுந்தரரைத் தொழுது எம்பிரான் ஆணையை அறிவித்தனர். ஆரூரர் தன்னை மறந்து நின்றார். மாலயனாதி வானவர் பூமழை பொழிந்தனர். விண்மிசை வேழமீது செல்லும் ஆரூரர் சேரர் கோவை நினைந்தார். சேரமான்பெருமாள் தம்பிரான் தோழரது செயலை அறிந்து, அருகிலிருந்த ஒரு புரவியின் செவியில் சிவமந்திரங்கூறி விண்மிசைச் செலுத்தி அயிராவணத்தை வலம் வந்து முன்சென்றார். சேரருடைய படைவீரர் விண்மிசை நோக்கி அவர் திருவுருவம் மறைதலும், அன்பினால் உடைவாள் கொண்டு தம்உடலை வீழ்த்தி, வீரயாக்கையைக் கொண்டு, விண்மீது படர்ந்து, சுந்தரரையும் சேரமான்பெருமாளையும் வணங்கி முன்னே சென்றனர். திருக்கைலாய மலையை நோக்கிச் செல்லும் ஆரூரர் திருப்பதிகம் பாடுவார்.

தானெனை முன்படைத்தா னதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர் கொள்ள மத்தயானை யருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை யுத்தமனே.

இந்திரன் மால்பிரமன் எழி லார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்த யானை அருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவ னாரென எம்பெருமான்
நந்தம ரூரன் என்றான் நொடித் தான்மலை யுத்தமனே.

திருக்கைலைமலை சேர்ந்து திருக்கோபுரவாயிலில் யானையினின்றும் குதிரையினின்றும் இழிந்து மணிவாயிலை அடைந்தார். திருஅணுக்கன் வாயிலில் சேரர்கோன் தடையுண்டு நின்றார். நம்பியாரூரர் எம்பிரான் திருமுன்பு சென்று, தணியாக் காதலுடன் பலகாலும் பணிந்து பரவினார். தேவதேவர், "ஆரூரனே! வந்தனையோ" என்று அருள்புரிந்தார்.

அடிய னேன்பிழை பொறுத்தெனை
　　ஆண்டுகொண் டத்தொடக்கினை நீக்கி
முடிவிலா நெறி தரும்பெருங்
　　கருணையென் றரத்ததோஎன முன்னர்ப்

படியு நெஞ்சொடு பன்முறை
பணிந்தெழும் பரம்பரை ஆனந்த
வடிவு நின்றது போன்றின்ப
வெள்ளத்து மலர்ந்தனர் வன்றொண்டர்.

"என்னையனே! அடியேன் பிழை பொறுத்தனை; தடுத்தாட் கொண்டனை; முடிவிலா இன்பத்தை வழங்கினை; உமது கருணை தான் என்னே!'' என்று துதித்து, ''சேரர்பெருமான் வந்து திருவாயிலில் நிற்கின்றார்'' என்று விண்ணப்பஞ் செய்தார். சிவபெருமான் புன்முறுவல் செய்து திருநந்திதேவரை நோக்கி, "சேரர்கோனை அழைத்துவா" என்று அருளினார். திருநந்திதேவர் அழைக்க, சேரமான் பெருமாள் சென்று சிவமூர்த்தியைக் கண்டு தொழுது பேரின்ப வெள்ளத்தில் மூழ்கினார். கண்ணுதற்கடவுள் புன்னகை புரிந்து, ''சேரனே! இங்கு நாம் அழையாமுன் நீ எவ்வாறு வந்தனை?'' என்று அருள்புரிந்தார். கழறிற்றறிவார், ''ஐயனே! ஆரூரரை வணங்கி யானைமுன் வந்தேன். தேவரீருடைய கருணை வெள்ளம் இங்கு அடியேனைக் கொணர்ந்து ஓதுக்கியது; அதனால், திருமுன்பு வரப்பெற்றேன். மற்றொரு விண்ணப்பம் உண்டு; தேவரீர் மீது ஞானவுலா ஒன்று பாடியுளேன். கேட்டருளும்" என்றார். பெருமான் "சொல்லுக" என்றார். சேரர்பெருமான் அத் திருவுலாவை ஓதினார். எம்பிரான் கேட்டுத் திருவுளம் மகிழ்ந்தார். நம்பியாரூரரையும் சேரர் பெருமாளையும் சிவகணங்கட்குத் தலைவராகுமாறு பணித்தார். ஆலாலசுந்தரர் அரனாரைத் தொழுது முன்புரிந்த திருத் தொண்டினை மேற்கொண்டார். சேரர் கோன் கணநாதராய் விளங்கினார்.

மண்ணுலகில் வந்து பிறந்த பரவையாரும் சங்கிலியாரும் வல்வினைத் தொடக்கு நீங்கியவுடன் அம்பிகையின் அருளாலே கமலினி அனிந்திதையாராகி முன்போல தேவிக்குத் திருத்தொண்டு புரிவாராயினார்கள்.

வன்தொண்டர் வழியில் ஓதிய திருப்பதிகத்தை வருணன்பால் தர, வருணன் அதனைத் திருவஞ்சைக்களத்தினில் கொணர்ந்து சேர்த்தனன். சேரமான் பாடிய திருக்கைலாய ஞானவுலாவைக் கைலையில் கேட்ட மாசாத்தனார் திருப்பிடவூரில் வெளியிட்டனர். அதனால், அந்நூல்கள் உலகவர்க்குப் பயன்பட்டன.

விளக்கம்

பெரியபுராணமாகிய மாபெரும் காப்பியத்திற்குத் தலைவர் நம்பியாரூரர். இவருடைய வரலாற்றின் இடையில் கோத்த நன்மணிகளே ஏனைய அடியார்களது புண்ணிய வரலாறுகள். பெரியபுராணத்திற்கு மூலம் திருத்தொண்டத் தொகை. அதனை உலகம் உய்யப் பாடியருளிய பரமாசிரியர் நம்பியாரூரர். அவரது அவதாரத்திற்குக் காரணம் திருத்தொண்டத் தொகை பாடியதே. நம்பியாரூரரைத் தமிழுலகிற்கு அனுப்பித் திருத்தொண்டத் தொகையைப் பாடுவித்து மன்பதைகளை உய்யக் கொள்ள வேண்டு மென்பது பரமகருணாநிதியாகிய சிவபெருமானது திருவுளத்து எழுந்த திருவருளின் நோக்கம். என்னே எம்பிரானது கருணை!

சுந்தரருடைய பெருமை அந்தமில்லாதது. சிற்றறிவுடையவர்களால் இத்தன்மைத்து என்று சொற்றிறத்தால் கூறும் பெற்றியதன்று.

"ஆரூர நின்பெருமை அயன்மாலும் அளப்பரிதே"

என்பார் இராமலிங்க அடிகள்.

உபமன்னிய முனிவர் திருப்பாற்கடலை யுண்டவர். மாதவன் முடிமேல் அடிவைத்தவர். கருமாலறுப்பவர்; திருமாலுக்கும் குரு. தவசீலர்கள் போற்றும் தன்மையர். அத்தகைய உபமன்னிய முனிவரும் வணங்கி வழிபடும் பெருமை படைத்தவர் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

பிரம விட்டுணுவும் தேவரும் முனிவரும் அஞ்சி ஓடிய ஆலகாலவிடத்தை நாவல்பழம்போல் திரட்டிக்கொணர்ந்து சிவபெருமானிடம் தந்த பேராற்றல் படைத்தவர். அதனால், ஆலால சுந்தரர் என்னும் திருநாமம் பெற்றார்.

திருக்கைலாயமலையில் சிவபெருமானுடைய அருகில் திருநீற்றுக்கோயிலைத் தாங்கிநிற்கும் பெரும்பேறு பெற்ற இவரைக் கொண்டு திருத்தொண்டத் தொகை பாடுவிக்கப் பரமன் கருதினார். காரணமின்றிக் கைலையினின்றும் மண்ணுலகிற்கு அனுப்புதல் கூடாதன்றோ? ஆதலினால், ஆலாலசுந்தரரது கருத்தினையும் கண்களையும் அனிந்திதை கமலினி எனும் இரு மாதர்மணிகளின் மீது செலுத்துவித்தருளினார். காமனை எரித்த ஞான பூமியில் காம எண்ணம் உண்டாகாதன்றோ? நுட்பமாக

நுனித்து உணராதார் சுந்தரர் காமுற்று நோக்கினார் என்பர். காமதகனம் புரிந்த இடத்தில் காமத்திற்கு வலி ஏது? கண்ணுதற் கடவுளது திருவருள் அங்ஙனந் தூண்டியது. மாதவஞ் செய்த தென்திசை வாழவும், தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரவும் போதுவார் அவர்மேல் போக்கினார். ''ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே'' இக் கருத்தைச் சேக்கிழாரடிகள் இனிது கூறுமாறு காண்க.

மாத வஞ்செய்த தென்திசை வாழ்ந்திட
தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப்
போது வாரவர் மேல்மனம் போக்கிடக்
காதல் மாதருங் காட்சி எண்ணினார்

அன்றியும் எத்துணைப் பெரியவர்களேயாயினும் மாதர் மேல் மனம் வைத்தவர் தமது உயர்நிலையினின்றும் தாழ்வுறுவர் என்பதனையும் எம்பெருமான் உணர்த்துவாராயினார். திருக்கை லாய மலையிலிருந்த சுந்தரர் ஒரு கண நேரம் சிறிது பார்வையைப் பாவையர் மீது செலுத்தியதனால் அவ்வுலகைவிட்டு இவ்வுலகிற்கு வந்தார் எனின், இவ்வுலகினின்று அங்ஙனம் செலுத்துவோர் எவ்வுலகிற்கு ஏகுவது என்பதனையும் அன்பர்கள் சிறிது உற்று நோக்குக. ஆவி ஈடேற வேண்டும் என்ற கருத்தும் கவலையும் உடையார்க்கு இது சிந்தனைக்கு வாராமற் போகாது.

அங்ஙனம் அரிவையர் மீது கண்மலர் செலுத்திய ஆலால சுந்தரரை இறைவர் சபித்தாரில்லை. அவர் விரும்பியதை அருளினார். அவரை மணந்து மருவி மகிழ அருள் புரிந்தார். ஆனால், அத்தன்மை காமனை எரித்த நிலையில் நிகழாது ஆதலின் மண்ணுலகிற்கு அனுப்பினார். ''வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்'' என்பது தமிழ்மறை. மண்ணு லகிலும் தவஞ் செய்தது தமிழகம். ஐம்பூதத் திருத்தலங்களும் ஆறு படைவீட்டுத் திருத்தலங்களும், ஆன்றோர் பலர் அவதரிக்கும் பெருமையும் கொண்டது தமிழகமே யன்றோ?

ஆலாலசுந்தரர் அவதரிக்க தவமிகச் செய்த தமிழகத்தில் தனிச் சிறப்புடையது திருமுனைப்பாடி நாடு. அந்நாட்டின் அணிகல மாகத் திகழ்வது திருநாவலூர். சடையனாரும், இசைஞானியாரும், ஆதிசைவ மரபுமே அவரைப் பெறுவதற்குத் தனித்தவஞ் செய்தவர். இவருடைய பிள்ளைத் திருநாமம் ஆரூரர். அது சடையனாருடைய பிதாவின் பேர். தந்தையின் நாமத்தை மைந்தனுக்குச் சூட்டும் வழக்கம். அப்பொழுதே இருந்ததாக

இதனால் விளங்குகின்றது. சுந்தரருடைய நாமங்கள்: ஆரூரர், வன்தொண்டர், தம்பிரான் தோழர், வனப்பகையப்பன், சிங்கடியப்பன், திருநாவலூரர், சேரமான் தோழர் என்பன.

நரசிங்க முனையர் என்னும் சிற்றரசர் இவரைப் பெற்றோரிடம் கேட்டுப் பெற்று வளர்ப்புப் பிள்ளையாக வளர்த்தனர். இதனால் சடையனாருடைய வள்ளன்மை விளங்குகின்றது. தனக்கு ஒரே திருமகனாக இவர் இருந்தும், தவத்தின் எல்லையாகத் தோன்றி யிருந்தும் இச் செல்வப் புதல்வரை அரசர் இரந்தவுடன் தந்து விட்டனர்.

மணம்வந்த புத்தூரில் வாழ்ந்த சடங்கவி சிவாச்சாரியா ருடைய புதல்வியை மணம் பேசினார்கள். ஆறு அங்கங்களில் தேர்ந்து அவ்வங்கங்களை தன்வசமாக்கினவர் ஆதலின் அவருக்கு இப் பெயர் ஏற்பட்டது.

அக்காலத்தில் மணமகள் வீட்டிலேயே திருமணம் செய்யும் வழக்கம் இருந்தது என்பதும் காணப்படுகின்றது. இறைவர் தடுத் தாளும் மாட்சிமையுடையது இவ் வரலாறு. இறைவர் ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாதவர். அவரைப் பேராயிரம் பரவி வானோர் ஏத்துவர். வெகுகோடி நாமங்களால் அடியார் வழுத்துவர். அத் திருநாமங்களுள் முடிமணியாக விளங்குவது 'பித்தன்' என்று திருநாமம். தான் எழுதி வந்த அடிமை ஆவணத்திலேயே அத் திருநாமத்தை இறைவர் எழுதி வந்தார். என்ன அதிசயம்! தன்னைத்தானே பித்தன் என்று எழுதி வருவாராயின் அந்த நாமத்தில் அவருக்கு இருக்கும் இன்பந்தான் யாதோ? பித்தன் என்றவுடன் அத்தன் உளம் குளிரும். கல்லையும் கட்டியையும் விட்டெறியும் சித்தம் மாறுபட்ட பித்தனா அவன்? அன்று அன்று; கருணையின் முதிர்ந்து முதிர்ந்து சென்ற இடத்தில் நெகிழும் நெகிழ்ச்சியின் எல்லை பித்து. மயங்கிய பித்து அன்று அது. எத்துணைப் பெரிய குற்றம் புரியினும் அக் குற்றத்தை நினையாது அனுகூலமே புரியும் கருணையுள்ளத்தின் சிகரம் பித்து. "பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு" என்ற பழமொழியை ஈண்டுச் சிந்திக்க.

வழக்கு தீர்க்கும் நியாயசபையின் திறமும் ஆவணம் எழுதும் முறையும் வழக்கைத் தீர்க்கும் தன்மையும் இதில் மிக அழகாக அமைந்துள்ளன. பரமனுடன் வழக்குப் பேசி வன்மை பேசினாராதலின் சிவபெருமானே "வன்தொண்டன்" என்னும் நாமத்தைச் சூட்டினார். "பித்தா என்றே பாடு" என்று அருள்

புரிந்தனர். சடங்கவியார் புதல்வி நம்பியாரூரையே ஒழியாது தியானஞ் செய்து எளிதில் சிவலோகம் எய்தினார்.

சிவபெருமான் கிழவடிவங்கொண்டு வந்து சித்தவடம் திருமடத்தில் துயில்கொள்ளும் நம்பியாரூரைப் பலகாலும் சென்னியில் திருவடி மிதித்தும் ஆரூரர் சினங் கொள்ளாது தாம் வேறு இடத்தில் தலைவைத்துத் துயில் கொள்ளும் பொறுமை நமது சிந்தனைக்குரியது.

திருவாரூரிலே சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளை நோக்கி, "உனக்கு நம்மைத் தோழமையாகத் தந்தோம்" என்று அருளிச் செய்தார். "உன்னைத் தோழமையாகக் கொண்டோம்" என்று கூறவில்லை. "தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்" என்றமையால் இறைவரது கருணையின் எளிமை புலப்படுகின்றது.

நம்பியாரூரர் பரவையாரை மணந்து சிவயோக போகந் துய்த்தார். ''பன்னாளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினார்'' என்பார் சேக்கிழார் சுவாமிகள்.

நம்பியாரூரரது திருவவதாரம் திருத்தொண்டத் தொகையைப் பாடும் நிமித்தம் நிகழ்ந்தது. அதனை இறைவர் முடிக்கின்றார். தேவாசிரியன் திருமண்டபத்தில் திருத்தொண்டர் குழுமி யுள்ளனர். அத்தொண்டர்களது பெருமையை இறைவரே புகழுமாறு காண்க.

பெருமையால் தம்மை யொப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார் ஊனமேல் ஒன்று மில்லார்
அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்ப மார்வார்
இருமையுங் கடந்து நின்றார் இவரைநீ யடைவாய் என்று.

"தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று இறைவரே அடியெடுத்துக் கொடுக்கும் பெரும்பேறு பெற்றவர் திருத்தொண்டர்.

சிவபெருமான் தந்த நெல்மலையினைப் பரவையார் திருவாரூரில் உள்ளார் அனைவரையும் எடுத்துக் கொள்ளுமாறு கூறிய கொடைத்தன்மை வியத்தற்குரியது.

திருநாட்டியத்தான்குடி கோட்புலியார், நம்பியாரூரரை அழைத்து வனப்புமிக்க தனது புதல்வியரைக் காட்டி மணந்து கொள்ளுமாறு கூறினார். சுந்தரர் பற்றற்றவர். பரவையாரும் சங்கிலியாரும் கைலையில் கண்டு சிவபிரான் திருவருள் தூண்ட

விரும்பிய அனிந்திதை கமலினி. ஆதலின், அவ்விருவரையும் மணந்து கொண்டார். சிங்கடி, வனப்பகை எனும் இரு இளம்பெண்களை வலிதில் தந்தையார் தந்தும், அவ்விருவரையும் மகண்மையாகக் கொண்டார். ஊடுவது கூடுவதற்கு இன்பம் ஆதலினால் திருப்பாச்சிலாச்சிரமத்தில் சுந்தரர் விரும்பிய பொருளை இறைவர் தரத் தாழ்ந்தனர். சுந்தரர் சிந்தை நொந்து, "இவரலாது இல்லையோ பிரானார்" என்று ஊடிப் பாடுகின்றார். அவ்வாறு தோழரைப் பாடவைப்பதில் விரிசடைக் கடவுளுக்கு விருப்பம் போலும்.

திருமுதுகுன்றத்தில் இறைவர் தந்த பன்னீராயிரம் பொன்னை மணிமுத்தா நதியில் இட்டுத் திருவாரூர் குளத்தில் எடுத்த ஆரூரரது ஆற்றலை ஆரே அளக்கவல்லார்?

உளத்திலொரு துளக்கமிலோம் உலகுய்ய இருண்டதிருக்
களத்துமுது குன்றர்தரு கனகம்ஆற் றினிலிட்டு
வளத்தின்மலிந் தேழுலகும் வணங்குபெருந் திருவாரூர்க்
குளத்திலெடுத் தார்வினையின் குழிவாய்நின் றெனையெடுத்தார்

என்பார் சேக்கிழாரடிகள்.

பாடுவார் பசிதீர்ப்பது பரமனது கருணையின் தொழில். ஆதலின், ஆரூரர் குருகாவூர் குறுகும்போதும், திருக்கச்சூர் ஆலக்கோயிலிலும் கட்டமுது தந்தும், மனைதோறும் சென்று இரந்து தந்தும் பசியாற்றி அருள்புரிந்தார்.

சங்கிலியார் திருமணம் மிகவும் இனிமையான பகுதி. உண்மை யின் உயர்வை இதில் இறைவர் காட்டுகின்றார். எத்துணை சிறந்தவராயினும் உண்மையினின்றும் வழுவினாராயின் துன்புறுவர். தமது தோழராக இருந்து ஆரூரர் சத்தியத்தைத் துறந்து திருவாரூர் செல்லப் புறப்பட்டவுடனே இறைவர் இருகண்களையும் மறைத்து விட்டார். இதனால், இறைவரது நடுநிலையும் விளங்குகின்றது.

கண்ணிழந்த நம்பியாரூரர் திருமுல்லைவாயிலில் இறைவர் ஒன்றுமே அருளாதிருந்ததும், திருவெண்பாக்கத்தில் ஊன்றுகோல் மட்டும் வழங்கி "உளோம் போகீர்" என்று கூறியதும், காஞ்சி புரத்தில் இடக்கண்ணை மட்டும் அருளியதும், பின்னர் திருவாரூரில் வலக்கண்ணையும் தந்ததும் படிமுறையாகத் திருவருள் சுரக்கும் தன்மையைத் தெரிவிக்கின்றன.

கச்சியில் காமாக்ஷியை முதலில் தொழுது அம்மையை வேண்டியபடியால், அம்மை இறைவருக்கு விண்ணப்பம் தந்து தனது கூறாகிய இடக்கண்ணை அருள்புரியச் செய்தனர் என்ற குறிப்பு நுனித் துணரற்பாலது.

“மாதராசையை விட்டவர்க்கே அருளுவோம்” என்று மறைகள் கூறிய மாதேவரை மாதுபால் தூது ஏவிய ஆரூரரது பெருமைக்கு அளவில்லை. அவருடைய அன்பின் திறம் போற்றுதற்குரியது.

> மோக மறுத்திடில்நாம் முத்தி கொடுப்பதென
> ஆகமங்கள் சொன்ன அவர்தம்மை - தோகைபால்
> தூதாகப் போகவிடும் வன்றொண்டர் தொண்டுகளை
> ஏதாகச் சொல்வே னியான்.

ஏயர்கோன் கலிக்காமரது சிவபக்தி இமயமலையினும் உயர்ந்தது. இறைவரை அரிவைபால் தூது ஏவிய செயலைக் கேட்டு அவர் உள்ளம் பொறுக்கவில்லை. அவ்வண்ணம் தூது ஏவிய சுந்தரரால் தனது சூலைவலி தீர்வதிலும் இறப்பதே மேல் என்று குற்றுடை வாளால் உயிர் துறந்தனர்.

ஏயர்கோன் கலிக்காமரது மனைவியார் அடியார்களை வரவேற்கும் பெற்றி மகளிர் சிந்தனைக்குரியது. இறந்த கணவனாரது திருமேனியை மறைத்துவைத்துத் துன்பத்தை வெளிக்காட்டாது மாளிகையை அலங்கரித்துச் சுந்தரரை அன்புடன் வரவேற்கும் அம்மையின் அன்பின் திறம் எம்மனோரால் அளவிடற்பாற்றோ?

சேரமான்பெருமாள் மிகமிகச் சிறந்த சிவபக்தியும் அடியார் பக்தியும் உடையவர். உயிர்கள்மாட்டு அளவற்ற கருணை யுடையவர். அரசபோகத்தைத் துரும்பாகக் கருதியவர். அவர் எல்லா வுயிர்களது துன்பங்களையும் நீக்க வேண்டுமென்று கருதி அவ்வுயிர்கள் பேசும் மொழிகளை எல்லாம் அறிய இறைவர்பால் வரம்பெற்றவர். அதனால், அவருக்குக் ‘கழறிற்றறிவார்” என்ற திருநாமம் ஏற்பட்டது.

உவர்மண் சுமந்து சென்ற ஏகாலி மழையினால் கரைந்த உவர்மண் திருநீறுபோல் தோன்ற, பட்டங் கட்டிக்கொண்டு பவனிவரும் சேரர் யானையை விட்டிறங்கி மண்மிசை வீழ்ந்து பணிந்தனர் என்றால் அவருக்குத் திருநீற்றின் மீது இருந்த பெருமதிப்பு நினைத்தற்குரியது. “அடிவண்ணான்” என்று ஏகாலி

வணங்கிக் கூறியும் "அடிச்சேரன்" என்று எதிர்மொழி கூறித் "திருநீற்றை நினைப்பித்தீர்" என்று கூறிய அவர் தாழ்வு என்னும் தன்மையை மறக்கலாகாது. பூஜையின் முடிவில் நடேசப் பெருமானது சிலம்பொலி கேட்கும் பெருமை பூண்டவர். அத்தகையாருக்கு ஆரூரரை அறிவித்து நட்பு கொள்ளச்செய்த சிவபெருமானது அருளாடல் மகிழ்தற்குரியது.

சேரர் ஆரூரருக்குத் தந்த நிதிகளைத் திருமுருகன் பூண்டியில் சிவகணங்களைக் கொண்டு பறித்துப் பின்தந்த இறைவரது செயல், தமது அன்பருக்குத் தாமே பொருள் தரவேண்டும் என்ற கருணைத் திறத்தைக் காட்டுகின்றது.

திருவையாற்றிலிருந்து திருமழபாடி செல்லும்போது காவிரி யாற்றின் வெள்ளம் விலகி வழிவிட்ட தன்மை ஐம்பெரும் பூதங்களும் அடியார்க்கு அடங்கிப் பணிசெய்யும் என்பதனைத் தெரிவிக்கின்றது.

சுந்தரர் வரலாற்றில் மிகமிக உயர்ந்த பெருமையையுடையது முதலைவாய்ப்பட்ட மதலையை எழுப்பியது. அரவு தீண்ட இறந்த மதலையை எழுப்பிய திறத்தினும், எலும்பைப் பெண்ணாக்கிய திறத்தினும், எலும்பும், முதலையும், நீரும் இல்லாத நிலையில் அம் மதலையை வருவித்து வழங்கிய வன்மை மிகமிக அற்புதமானது. இதனைச் சிவப்பிரகாசரும் வியந்துரைக் கின்றனர்.

போதமுண்ட பிள்ளை யென்பு பொருகண் மாதுசெய்ததோ
காதல்கொண்டு சொல்லின் மன்னர் கன்மிதப்ப வுய்த்ததோ
வாய்திறந்து முதலை கக்க மகனைநீ யழைத்ததோ
யாதுநம்பி யரிது நன்றெ னக்கியம்ப வேண்டுமே.

- நால்வர் நான்மணி மாலை

திருவஞ்சைக்களத்தில் இருந்த நம்பியாரூரர் திருக்கைலை செல்ல வேண்டுமென்று கருதியவுடன், சிவபெருமான் பணித்தருளிய வண்ணம், இந்திரன் மால் பிரமன் இமையவர் முதலிய சிறந்தவர்கள் யாவரும் அயிராவணத்துடன் வந்து வர வேற்று அழைத்துச் சென்றனர். அந்தக் காட்சி மிகவும் மாட்சி யுடையது. "அக்காட்சியைக் காணும்பேறு அடியேன் பெற் றேனில்லையே" என்று அருட்பிரகாச வள்ளலாரும் வருந்து கின்றனர்.

வான்காண இந்திரனும் மாலயனும் மாதவரும்
தான்காண இறையருளால் தனித்தவள யானையின்மேல்
கோன்காண எழுந்தருளிக் குலவியநின் கோலமதை
நான்காணப் பெற்றிலனே நாவலூர்ப் பெருந்தகையே.

- திருவருட்பா

தனக்கு எய்தும் நன்மையெல்லாம் தமது நண்பர்களும் எய்த வேண்டும் என்பது ஆன்றோர் கருத்து. ஆதலின், ஆரூரர் கைலை செல்லும்போது தமது தோழர் சேரர்பெருமாளும் வரவேண்டும் என்று திருவுளம் பற்றினார். நட்பின் தகைமை அங்கு நன்கு வலியுறுத்தப் பெறுகின்றது.

அன்றியும் வன்தொண்டர் வரலாற்றில் இன்னும் சிறந்த கருத்துக்கள் உய்த்துணரக் கிடக்கின்றன. அவையெல்லாம் அரும் பெரும் மணிகள் போன்றன. அத்தனையும் விளக்குதற்கு எழுத்தோ சொல்லோ இடம்பெற மாட்டா. அன்பர்கள் ஊன்றிச் சிந்தித்து நோக்கி உணரற்பாலன. திருவருளைச் சிந்திப்பார்க்கு ஒரு சிறிது விளங்கும்.

மலர்மிசை அயனு மாலும் காணுதற் கரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூர் ஆவணப் பழமை காட்டி
உலகுய்ய ஆண்டு கொள்ளப் பெற்றவர் பாத முன்னித்
தலைமிசை வைத்து வாழுந் தலைமைநம் தலைமை யாகும்.

மநுநீதிச்சோழர் வரலாற்று விளக்கம்

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்" என்ற திருவாக்கின்படி இவ்வுலகிற்கு அரசனே உயிர். அரசன் நடுவுநிலை தவறாமல் நன்னெறி காத்து நானிலம் ஆளுதல் வேண்டும். அரசன் செங்கோல் சாயுமேல் உலகின் நலம் சாய்ந்துவிடும்.

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்.

என்பார் திருவள்ளுவ தேவர்.

தக்கவழியில் மக்களைச் செலுத்தி, இன்னாரை ஒறுத்து, இனியாரை ஆதரித்து, காண்டற்கு இனியனாய், காட்சிக்கு எளியனாய், கனியமுதமன்ன கருணைக்கு உறையுளாய் மன்னன் வாழ்தல் வேண்டும். அத்தகைய மன்னன் வாழும் நாட்டில் மழைவளம் மிகும்.

மேலும், அரசன், தன்னாலும், தன் பரிசனங்களாலும், பகைவர் களாலும், கள்வர்களாலும், விலங்கினங்களாலும் குடிகளுக்குத் தீங்கு நேராவண்ணம், தாயிற் சிறந்த தண்ணளியுடன் காக்கவேண்டும். இந்த நெறியை மேற்கொண்டு, நடுவு நிலை மைக்கு ஒரு பொற் சிகரமாக விளங்கிய மன்னர் மநுநீதிச் சோழர்.

பெரியபுராணத்திற்கு மூலம் திருத்தொண்டத்தொகை; அது தோன்றுவதற்குத் தவஞ்செய்த இடம் திருவாரூர். அத்திருவாரூரின் பெருமையை விளக்குவது மநுநீதிச்சோழ மன்னரது வரலாறு. இவ் வரலாறு மிகமிக விழுமியது. மன்னரது நீதி வியக்கத்தக்கது; உன்னுந்தொறும் உன்னுந்தொறும் உள்ளத்தை உருக்குவது.

திருவாரூர் - இலக்குமிதேவி வழிபட்ட திருத்தலம். திரு இலக்குமி; ஆர் - அருமை; ஊர் - தலம்.

“சொன்ன நாட்டிடைத் தொன்மையின் மிக்கது
மன்னு மாமல ராள்வழி பட்டது”

செங்கோன்மையின் தகைமை முழுவதும் அமையப் பெற்றவர் இம் மன்னர்பிரான்.

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்.

என்பது பொதுமறை.

எல்லா உயிர்களையுங் காப்பது பொது; பசுக்களையும், பெண் களையும், அந்தணர்களையும், சிவனடியார்களையும் காப்பது சிறப்பு.

இம் மன்னர்பிரான் பசுவின் துயரை நீக்கும் பொருட்டுத் தன் மகனையும் தண்டித்த தலையாய நீதியை யுடையவர்.

ஆவையும் பாவையும் மற்றற வோரையும்
தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையும்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவு மறுமைக்கு மீளா நரகமே. - திருமூலர்

பசு உலகமாதா; தன் கன்றுக்கேயன்றி உலகிலுள்ள மக்களுக் கும் பால் தந்து உதவிசெய்யும் பெருமை யுடையது பசு. பசுவின் உடம்பில் எல்லாத் தேவர்களும் வாழுகின்றனர். பசுவின் சாணம்

பரிசுத்தமானது. திருநீறு பசுவின் சாணத்தில் உண்டாகின்றது. வேள்விக்குரிய நெய் பசுவினால் கிடைக்கின்றது. அதனாலன்றோ திருஞானசம்பந்தர், "வாழ்க.... ஆனினம்" என்று அருளிச் செய்தார். பசு வாழ்ந்தால் பதினாலு உலகமும் வாழும். "ஆவினுக் கருங்கலம் அரனைந்தாடுதல்" என்பார் அப்பமூர்த்திகள். இத்தகைய பசுவின் துன்பத்தைப் போக்க மன்னர் தன் மகனையுங் கைவிட்டார்.

பசுவின் கொலைபுரிந்தோர்க்குப் பிராயசித்தம் புரியுமாறு அறநூல் கூறுகின்றது. அங்ஙனமிருக்க பசுவின் கன்றை அறியாமல் கொன்ற காரணம்பற்றி ஆறறிவு படைத்த தன் மகனைக் கொல்லுதல் நியாயமோ? எனின், நியாயமே. உலகிலுள்ள ஏனைய பசுக்களைக் கொன்றவர்க்குப் பிராயசித்தம் செய்வித்தல் முறை. இந்தப் பசுவுக்கு அது முறையாகாது. இந்தப்பசு, தன் கன்று இறந்ததை நோக்கி எல்லையற்ற துன்பத்தையெய்தி, மெய்பதைத்து, இதனை அரசனுக்கு அறிவித்து நியாயம் பெறவேண்டும் என்று கருதி, அரசனுடைய அரண்மனை வாயிலில் கட்டியிருக்கும் ஆராய்ச்சிமணியைத் தன் கோட்டினால் அடித்தது. அரசனுக்கு நேரே தமது குறைகளை அறிவிக்க விரும்புவோர் அம்மணியை அடித்தல் வேண்டும். அதனை அறிந்து பசு இவ்வாறு செய்தது. அதனால், அது பசுவேயாயினும், மனிதனுக்குள்ள தன்மை அதன் பாலிருந்தது. பசு, மனிதன், தேவன் முதலிய பகுப்பு உடம்பினால் ஏற்படுவதன்று. உணர்வினாலேயே ஏற்படுகின்றது. இவை தக்கவை, இவை தகாதவை என்று எண்ணிப் பாராத மனிதன் விலங்கேயாவான். அவற்றை அறியும் விலங்கு தேவருக்கு நிகராகும்.

தக்க இன்ன தகாதன இன்னவென்
றொக்க உன்னல ராயின் உயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்னெறி
புக்கவேல் அவ்வி லங்கும்புத் தேளிரே.

உடம்பைக் கொண்டு மனிதன், விலங்கு, என்று தீர்மானிக்கக் கூடாது. அறிவைக் கொண்டுதான் நிச்சயிக்க வேண்டும். இந்தப் பசு மனிதனுக்குள்ள அறிவையுடையதாக இருந்ததால் அதன் கன்றைக் கொன்ற பாவம் மனிதக் குழந்தையைக் கொன்றதோடு ஒக்கும். அதனால், அரசர் தன் மகனைத் தண்டித்தார்.

"எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெற்றித் தாம்இடரால்
வெவ்வுயிர்த்துக் கதறிமணி யெறிந்துவிழுந் ததுவிளம்பீர்"

என்று மன்னர் கூறுகின்றார்.

அன்றியும் திருவாரூர் சிவலோகம் ஆதலின், அங்குப் பிறந்த உயிர்கள் யாவும் சிவகணமே யாதலின் இத்தண்டனை நியாயம் என்று மன்னர் கருதினார்.

போற்றிசைத்துப் புரந்தரன்மால் அயன்முதலோர் புகழ்ந்திறைஞ்ச
வீற்றிருந்த பெருமானார் மேவியுறை திருவாரூர்த்
தோற்றமுடை யுயிர்கொன்றான் ஆதலினால் துணிபொருடான்
ஆற்றவுமற் றவற்கொல்லும் அதுவேயா மெனநினைமின்.

தன் குலத்திற்கு ஒருமகன் என்று கருதாமலும், அமைச்சர் பலர் தடுத்தும், கண்ணோடாது செங்கோன்மையைச் செலுத்து வாராயினார்.

பிற உயிர்களது துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதி, அத் துன்பத்தைப் போக்க முயலுதலே சான்றாண்மையாகும். மன்னர் பசுவினுக்கு நேர்ந்த துன்பத்தை அருகிலுள்ளார் கூறக் கேட்ட வுடன் பசுவுக்குள்ள துன்பத்தைத் தான் அடைந்தார். ஏங்கினார்; இரங்கினார்; துடித்தார்; விடந்தலைக்கு ஏறியதுபோல் மிகுதியும் துன்பங்கொண்டார். இதுவே அரசனது பண்பு.

அவ்வுரை கேட்ட வேந்தன் ஆவுறு துயர மெய்தி
வெவ்விடந் தலைக்கொண் டாற்போல் வேதனை அகத்து மிக்கிங்கு
இவ்வினை விளைந்த வாறென்று இடருறும் இரங்கும் ஏங்கும்
செவ்விதென் செங்கோல் என்னும் தெருமரும் தெளியும் தேறான்.

மநுநீதிச்சோழர் தான் பலகாலந் தவமிருந்து பெற்ற நற்குண நல்லொழுக்கம் அமைந்த மகன் செய்த குற்றத்தை மகன் என்று பாரபட்சமாக மன்னித்தாரில்லை. அன்றியும் பசு கன்றை இழந்து எவ்வாறு துயருறுகின்றதோ அவ்வாறு தானும் மகனை இழந்து துயருற வேண்டும் என்று கருதினார். எத்துணைப் பெரிய நீதி!

மகன் மாண்டால் தன்குலம் பழுதுபட்டுவிடுமே என்றும் நீர்க்கடன் செய்து தனக்கு மறுமைப் பயனை விளைவிக்க சந்ததி யற்றுவிடுமே என்றும், தனக்குப்பின் உலகிற்கு அரசனில்லாமல் போய்விடுமே என்றும் வாடினாரில்லை. நீதி ஒன்றையே நாடினார். குற்றம்புரிந்தவரை அரசன் தண்டிப்பது, குற்றம் புரிந்தவன் நரக வேதனை எய்தாதிருக்கும்பொருட்டு, அந்த ஆன்மாவும் அத் தண்டனையால் அவ்வினை நீங்கப் பெற்று நன்மையடையும்; மகன் என்ற பட்சத்தால் அரசநீதி பிழை படுமேல், பல்லாயிரமடங்கு மிகுதியான தண்டனையைத் தெய்வநீதி விதிக்கும்.

மன்னர் மதியமைச்சனை நோக்கி, கன்று இறந்த இடத்தில் மகனைப் படுக்க வைத்துத் தேரேறிச் செலுத்திக் கொல்லுமாறு பணித்தார். அவ்வண்ணம் செய்ய அஞ்சிய அமைச்சர் தானும் அரசருக்கு மகன் முறையாதலின் அக்குற்றத்திற்குத் தண்டனையாகத் தன்னுயிரை நீக்கிக் கொண்டார். அது தற்கொலையா காதோ எனின் ஆகாது. கருணை காரணமாக நிகழ்ந்தது. உற்ற இடத்து உயிர் வழங்கும் பெற்றியும் பேரன்பும் உடையவர் அமைச்சர். அவரது அன்பின் திறந்தான் என்னே! மகனையும் கொல்ல மனம் வரவில்லை; மன்னரது நீதிக் கட்டளையை மறுக்கவும் முடியவில்லை; இரண்டிற்கும் இடையில் தன்னுயிரையே தியாகம் புரிகின்றார்.

அதனையறிந்த அரசர் பெரிதும் வருந்தினார். "நானே இதனைச் செய்திருத்தல் வேண்டும். மந்திரியின் மரணத்திற்கு நான் காரணனாக ஆயினேன். கன்றின் மரணத்திற்காக மகனைக் கொன்று, மந்திரியின் மரணத்திற்காக நான் மாள்வேன்" என்று கருதினார்.

ஆவுக் காயினும் அந்தணர்க் காயினும்
ஏவர்க் கேனும் எளியவர்க் காயினும்
சாவப் பெற்றவ னேதகை வானுறை
தேவர்க் குந்தொழு தேவர்க ளாகுவர்.

என்று கூறுவார் ஸ்ரீராமர்.

ஆனபடியால் ஆவின்பொருட்டு இத்துணைப் பெரிய மனதினாலே நினைக்கவும் முடியாத - ஏன்? இதுவரை யாரும் செய்திராத செயற்கருஞ் செயலை மன்னர் செய்யத் துணிந்தார்.

ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளான்என் பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்.

பாண்டியன்பால் கண்ணகிதேவி தன்னாட்டின் பெருமையைக் கூறுமிடத்து இச்செய்தியை மிகவும் பாராட்டிப் பேசுகின்றனள்.

"வாயில் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகும்நீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியில் மடித்தோன்"

மன்னருடைய நீதிநெறியைக் கண்டு மகிழ்ந்த பாதிமதி யணிந்த வீதிவிடங்கப் பெருமான் சோதிவிடை மீது மாதொரு கூறனாய் தோன்றி அருள்புரிந்தார். அக்காலை முதலில் பசுவின் கன்றும், அடுத்து அரசன் கன்றும், இறுதியில் மந்திரியும் உயிர் பெற்றனர். அந்த அழகும் சிந்தனைக்கு உரியது. பசுவின் கன்று முன் எழாமல் மகன் எழுந்திருந்தால் மீண்டும் அரசர் மகனைத் தண்டனை செய்யக் கருதியிருப்பார். மன்னர் மகன் எழாமுன் மந்திரி உயிர் பெற்றிருந்தால் மீண்டும் தான் இறந்திருப்பார். ஆதலின், இத்தனைக்குங் காரணமாக இருந்த கன்றை இறைவர் முதலில் எழுப்பினார். மந்திரி மரணத்துக்கு காரணமாக இருந்த மன்னன் மகனை இரண்டாவது எழுப்பினார். முடிவில் மந்திரியை எழுப்பி அருள்புரிந்தார்.

இவ் வரலாற்றினால் அரசநீதியின் பெருமை மிக நன்றாக விளங்குகின்றது.

"மன்னன் கோன்முறை யரசு செய்க"

"வேந்தனும் ஓங்குக"

தில்லைவாழ் அந்தணர் புராணம்

"தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"

(திருத்தொண்டத் தொகை)

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

தில்லைச் சிதம்பரம் விராட் புருஷனுக்கு இருதயத் தானமாம். அங்குச் சிவஞான வெளியில் நடேசமூர்த்தி அநவரத ஆனந்தத் தாண்டவம் புரிவர். அவரது குஞ்சிதபாதம் வணங்குவோர்க்குச் சஞ்சித வினைகள் துகள்பட்டு ஒழியும். பொன்னம்பலவாணரை முப்போது மட்டுமின்றி எப்போதும் போற்றி வழிபடும் திருவுடையவர்கள் தில்லை மூவாயிரம் அந்தணர்கள். அவர்கள் திருநீறு புனைந்து உள்ளும் புறமும் மாசற்று விளங்குபவர்கள். பெருமை மிகுந்தவர்கள். அம்பலவாணரது திருத்தொண்டுகளைப் புரிந்து கொண்டு தவம் செய்பவர்கள். முத்தழல் வளர்த்து எத்தலத்துக்கும் நன்மை செய்பவர்கள். நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் ஓதுபவர்கள். மாசிலா மரபில் வந்தவர்கள். மாறிலா ஒழுக்கம் பூண்டவர்கள். அறுதொழில் ஆட்சியாலே அருங் கலியை நீக்குபவர்கள். திருநீற்றையே செல்வமாகக் கொண்டவர்கள். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களிலும் குற்றமற நிற்பவர்கள். தானமும் தவமும் செய்பவர்கள். குறைபாடு இல்லாதவர்கள். உலகெலாம் புகழ்ந்து போற்றும் மானமும் பொறையும் தாங்கி மனையறம் புரிந்து வாழ்பவர். எம்பிரானைப் போற்றும் நலத்தை இம்மையில் இனிது பெற்றவர்கள். ஆதலின், இனிப் பெறும்பேறு ஒன்றும் இல்லாத வர்கள். தமக்குத்தாமே நிகரானவர்கள். தென்தமிழ்ப் பயனாய் உள்ள திருத்தொண்டத் தொகை பாடுமாறு வன்தொண்டருக்குத் திருவருள் புரிந்த சிவபெருமானது திருவாக்கால் "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று முதலடியாக எடுத்துக் கொடுக்கப் பெற்ற நற்றவமுடையவர்கள். அளவற்ற பெருமையும் அருமையும் படைத்து இருமையும் ஒருமையில் எய்தி நின்றவர்கள் தில்லைவாழ் அந்தணர்கள்.

திருநீலகண்ட நாயனார் புராணம்

''திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்''

எல்லையில்லாப் பெருமை கொண்டது தில்லையம்பதி; அவ்வளம்பதியில் குயவர் குலத்திலே தோன்றிய ஒருவர் இருந்தார். அவர் பொன்னம்பலவாணரது பூங்கழலை மறவாது வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கவர். பொய்கடிந்து அறம்புரிபவர். சிவ பிரானுடைய மெய்யடியார்க்கான திருத்தொண்டுகளை அன்புடன் செய்வார். அருந்ததியின் மிக்க கற்புடைய மனைவியா ரோடு இல்லறத்தில் இனிது வாழ்பவர். சைவநலம் பேணும் தகவுடையவர். மட்கலம் செய்யும் தொழிலால் வாழ்வு நடத்து பவர். சிவனடியார்களுக்குத் திருவோடு தந்து அன்புசெய்வார். உலகெலாம் உய்ய எம்பிரான் ஆலகாலவிடத்தை உண்டு தரித்த கண்டத்தைச் சதா நினைந்து நினைந்து உருகுவார். ''அந்தக் கண்டம் இல்லையானால் எல்லாத் தேவர்கட்கும் மனிதர்கட்கும் கண்டம் வந்திருக்குமே? எல்லா உலகங்கட்கும் வாழ்வு தந்தது எந்தையின் கண்டம் ஒன்றேயன்றோ? அதன் பெருமையை யாரால் அளக்க முடியும்'' என்று எண்ணுவார். அத்திருக் கண்டத்தைத் தொழுவார். இடையறாது ''திருநீலகண்டம்'' “திருநீலகண்டம்” என்று கூறுவார். அதனால், அவரை எல்லோரும் திருநீலகண்டர் என்றே அழைப்பாராயினார்கள்.

இளமையின் மிகுதியடைந்த அவர் இன்பத்துறையில் எளிய ரானார். திருவினும் உருவின் மிக்க மனைவியார் இருந்தும் அவர் உள்ளத்தில் வெள்ளம்போல் எழுந்த அவாவினால் ஒரு பரத்தையை மருவி வந்தார். அதனை அறிந்த மனைவியார் மானம் மிக்கவர். ஆதலினால், ஊடல் கொண்டனர். கணவனுக்கு வேண்டி எல்லாப் பணிவிடைகளும் புரிந்து கூடலுக்கு மட்டும் இசையாதிருந்தனர். நாயனார் மனைவியாரது பிணக்கை நீக்கும் பொருட்டு நயமொழிகள் பலகூறி இரந்து அணைய முயன்றார். அம்மையார், “தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்” என்று ஆணையிட்டனர். அன்பர்க்குக் காதல் மிகுதியுண்டு. எனினும் திருநீலகண்டத்தினிடம் வைத்த அன்பு அதனினும் மிகுதி. திருநீலகண்டத்தின் மீது ஆணை; எம்மைத் தீண்டாதீர்” என்ற

சொல்லைக் கேட்டவுடன் உள்ளம் பெயர்ந்தது. உடம்பு விலகி நின்றது. "எம்மை" என்று பன்மையாகக் கூறியபடியால் இனி இவரையேயன்றி ஏனைய மாதர்களையும் என் மனத்திலும் தீண்டேன் என்றார். மனைவியாரை ஏதிலார் போல நோக்கினார்.

ஆதியார் நீலகண்டத் தளவுதாம் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணை கேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி
ஏதிலார் போல நோக்கி எம்மையென் றதனால் மற்றை
மாதரார் தமையும் என்றன் மனத்திலுந் தீண்டேன் என்றார்.

கற்பு மிக்க மனைவியாரும் திருநீலகண்டரும் அன்று தொட்டுக் கூடல் ஒன்று மட்டுமின்றி இல்லறம் புரிந்து வந்தனர். அம்மையார் கணவருக்கு வேண்டிய யாவும் செய்வார். தமக்குள் நேர்ந்த இத்தன்மை அயலார் அறியாவண்ணம் ஒழுகி வந்தனர். இளமை யில் மிகுந்திருந்த அவ்விருவரும் இவ்வாறு அந்த ஆணையைக் காப்பாற்றி வாழும்போது ஆண்டுகள் பல கடந்தன. வளமலி இளமை நீங்கியது. மெய்கலப்பு இல்லாமல் வாழ்ந்த படியால் வடிவுறு மூப்பு வந்தது. தளர்வொடு சாய்ந்து நின்றனர். எனினும் அன்பு தம்பிரான் திறத்து சாயாதிருந்தனர்.

திருநீலகண்டநாயனாரது சிறந்த ஒழுக்கத்தின் பெருமையை உலகிற்கு உணர்த்த வேண்டும் என்று சிவபெருமான் திருவுளங் கொண்டார். ஒரு சிவயோகியாகப் புறப்பட்டு வந்தார். திருநீறு தரித்த திருமுகமும், புன்முறுவலும், ஓடு ஏந்திய திருக்கரமும் உடையராய் வந்த விமலன் நாயனாரது திருமனை சென்றார். வந்தவரைச் சிந்தையன்புடன் வரவேற்று நாயனார் வழிபட்டு, "எம்பிரானே! அடியேன் இயற்றும் பணி யாது? உத்தரவு செய்யுங்கள்" என்று பயபக்தியுடன் வினாவினார்.

சிவயோகியார், "அன்பனே! இதோபார் என் கையில் உள்ள இந்த ஓட்டினை உன்பால் கொடுத்து வைக்கக் கருதி வந்தேன். இதை நீ சேமித்து வைத்திருந்து மீண்டும் நான் வேண்டும்போது கொடுப்பாயாக. இந்த ஓட்டைச் சாமானியமாகக் கருதற்க. இதற்குச் சமானமே இல்லை. இது எல்லாவற்றையும் தன்பால் வந்தவுடன் தூய்மை செய்ய வல்லது. பொன்னினும் மணியினும் போற்றுதற் குரியது. மிகவும் பெருமையுடைய ஓடு. அருமையாக வைத்திருந்து தருவாய்" என்று கூறித் தந்தார்.

திருநீலகண்டநாயனார் "அவ்வண்ணமே செய்வேன்" என்று தொழுது வாங்கி தமது வீட்டில் ஒருபுறம் காவல் உள்ள இடத்தில்

சேமித்து வைத்தார். எம்பெருமானைத் தொழுதார். பெருமானும் அன்பர்பால் விடைபெற்று நீங்கிப் பொன்னம்பலம் அடைந்தார்.

பலநாட்கள் கழிந்தன. நாயனாரது தூயநிலையை உலகு உணர்ந்து உய்யும்பொருட்டு அத்திருவோட்டை வைத்திருந்த இடத்தினின்றும் இறைவர் மறைத்தருளினார். முன்புபோல் சிவயோகியாகித் தொண்டர்பால் வந்தார். அண்டர்நாதனைத் தொண்டர் எதிர்கொண்டு வரவேற்று, திருவடிகளைப் பூசித்து மிகவும் நேசித்து வணங்கி நின்றார். எல்லாம்வல்ல எம்பெருமான், "அன்பனே! முன் உன்பால் தந்த திருவோட்டைத் தருக" என்று அருளினார். "இதோ கொணர்கின்றேன்" என்று நாயனார் கூறி வீட்டிற்குள் சென்று வைத்த இடத்தில் பார்த்தார்; ஓடு ஆங்கு இல்லை. திகைத்து நின்றார்; மனைவியாரைக் கேட்டார்; மற்றவர் களையும் கேட்டார்; வீடு முழுவதும் தேடினார்; மிகவும் வாடினார். "என் செய்வேன்? பெரியார்க்கு என் சொல்வேன்" என்று நாடினார். ஒன்றுந் தோன்றாதவராகி நின்றார். சிவயோகி யார், "ஏனப்பா! இத்தனைத் தாமதம்? விரைவில் கொண்டுவா. நான் அவசரமாகப் போகவேண்டும்" என்றார்.

திருநீலகண்டர் வந்து அவரைத் தொழுது, "ஐயனே! சிறியேன் பிழையைப் பொறுத்தருளல் வேண்டும். தேவரீர் தந்த திரு வோட்டைக் காப்புள்ள இடத்திலேயே வைத்தேன். அதைக் காண வில்லை. எங்குத் தேடியுங் காணேன். அது பழைய ஓடு; அதனினும் சிறந்த நல்ல திருவோட்டைத் தருவேன். ஏற்றுக் கொண்டு எளியவனது குற்றத்தை மன்னித்தருள்வீர்" என்று பணிந்தார். உடனே சிவயோகியாருக்குச் சீற்றம் பொங்கியது. "என்ன சொன்னாய்? என் ஓடு கெட்டுவிட்டதா? நன்றாக இருக் கின்றது. பொன் ஓடே தந்தாலும் எனக்கு வேண்டாம். நான் கொடுத்த மண் ஓட்டைக் கொண்டுவா" என்றார்.

திருநீலகண்டர் :- சுவாமீ! கருணைக்கடலே! தங்கள் திருவோடு கெட்டுவிட்டது. எங்குத் தேடியும் காணவில்லை. என் செய்வேன்? வேறு நல்ல ஓடு தருகிறேன் என்றாலும் இசையாது மாறுபட்டு கோபிக்கின்றீர். என் உள்ளமும் உணர்வும் அழிகின்றன.

சிவயோகி :- அப்பா! என் சிறந்த திருவோட்டைக் கவர்ந்து கொண்டனை. அது உன்பால் வைத்த அடைக்கலப்பொருள் அன்றோ! அடைக்கலப்பொருளை அபகரித்த நீ என்னதான் செய்ய மாட்டாய். பழிபாவத்திற்கு அஞ்சுவையோ? ஓட்டை விட்டுப் போவேன் என்று எண்ணற்க. இந்த ஊரார் அனைவரும்

காண உன்னை வளைத்து ஓட்டைப் பெறுவேன். என்னை என்ன என்று கருதினாய்? உன்னை விடேன்; விடேன்.

திருநீல :- எம்பெருமானே! சிறியேன் திருவோட்டைக் களவு செய்தேனல்லேன். களவு என்பதை அடியேன் கனவிலும் கருதாத வன். ஐயனே! அடியேன் என் செய்வேன்? பொறுத்தருளும்.

சிவ :- உள்ளபடியே ஓடு கெட்டுவிட்டதானால் உனது மகனைப் பற்றிக்கொண்டு குளத்தில் மூழ்கிப்போ.

திருநீல :- பெருமானே! தாங்கள் அருளிச் செய்தவாறு செய்வதற்குப் புதல்வன் இல்லையே? அடியேன் என் செய்வேன்? சொல்லும்.

சிவ :- குற்றமில்லை. உனக்கு மகன் இல்லையானால் உனது மனைவியாரது கரத்தைப் பற்றிக் குளத்தில் முழுகுவாய்.

திருநீல :- ஆண்டவரே! எங்களுக்கு ஒரு சபதம் உண்டு. அதனால், அடியேன் அவளைத் தீண்டுவதற்கில்லை. அடியேன் மட்டும் முழுகி உண்மையை உரைப்பேன்.

சிவ :- உனது கூற்று நன்று நன்று. நான் தந்த திருவோட்டைத் தரவும் இசையவில்லை. உனது மனைவியின் கரம்பற்றிப் புனல் முழுகி உண்மையை உரைக்கவும் மறுக்கின்றனை. உனது ஒழுக்கம் மிகவும் நன்று. இதுதான் நீ அடியார்க்கு திருவோடளிக்கும் திருத் தொண்டு போலும். உன் மனம் மிக வலியது. தில்லைவாழந்தணர் களது அவையில் உன் தன்மையைக் கூறி நியாயத்தைப் பெறுவேன்.

சிவயோகியார் நடந்தார்; அன்பரும் அவரைத் தொடர்ந்தார். மூவருங் காணாத முழுமுதல், அந்தணர் அவைக்களம் போய், "பெரியோர்களே! இந்த வேட்கோவன் நான் கொடுத்த திருவோட்டையும் தர மறுக்கின்றான். ஓடு கெட்டுவிட்டதாம். உள்ளபடியே கெட்டுவிட்டதாயின், மனைவியைப்பற்றிக் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்யச் சொன்னால் அதையும் மறுக்கின்றான். நீங்களே நியாயத்தைக் கூறுங்கள்" என்று அருளினார். கங்கையை யுந் திங்களையும் பொங்கரவையும் மறைத்துவந்த இறைவரது சொற்களைக் கேட்ட மறையவர்கள் திருநீலகண்டரை நோக்கி "நீர் உமது சொல்லைக் கூறும்" என்று வினாவினார்கள்.

நாயனார், "தூய மாமறையோர்களே! பொன்னினும் மணி யினும் சிறந்த திருவோடு ஒன்று இவர் என்பால் தந்தது உண்மை.

அதனை மிகவும் காப்புடைய இடத்தில் வைத்திருந்தேன். எம்பிரான் திருவிளையாடலோ? அவர் புரியும் சோதனையோ? எனது பண்டை வினையின் வாதனையோ? அதைத் தேடியும் காணவில்லை. எளியேனது தூய்மையும் வாய்மையும் இந்த ஊரவர் அறிந்ததே. மனத்தாலும் பிழை செய்யேன். ஓடு கெட்டுவிட்டது. என் செய்வேன்?'' என்றார்.

அந்தணர்கள், “ஐயா! இவர் தந்த ஓடு கெட்டுவிட்டதானால், தந்தவர் “மனைவியைப்பற்றி நீரில் முழுகிக் கூறும்'' என்று கூறுவா ரானால், நீர் அவ்வண்ணம் மனைவியைப்பற்றிப் புனலிடை முழுகிக் கூறுவதுவே நியாயம்'' என்று தீர்ப்புக் கூறினார்கள்.

அருந்தவம் புரியும் தொண்டர் அதனைக் கேட்டுத், தமது தீண்ட மாட்டாத தன்மையைக் கூறாதவராகிப் “பொருந்திய வகையால் முழுகித் தருகிறேன்'' என்று கூறிப் பெருந்தவ முனிவரோடு தனது இல்லத்தினை அடைந்தார். மனைவியாரை அழைத்துக்கொண்டு, திருப்புலீச்சுரத்திற்குமுன் ஒரு சோலைக்கு நடுவேயுள்ள திருக்குளத்தில் மூங்கில் தண்டின் ஒரு முனையை மனைவியாரும், மற்றொரு முனையைத் தாமும் பற்றிக்கொண்டு புனலில் முழுகுவாராயினார். தண்டின் இருதலையும் பற்றி முழுகத் தொடங்கிய அடியவரை ஆண்டவர் நோக்கி, “அப்பா! என்ன இது? உன் மனைவியின் கரத்தைப்பற்றி முழுகாமல் கோலைப்பற்றி முழுகுகின்றனை? நான் இதற்கு இசையேன்'' என்றார்.

மாது சொன்ன சூளால் இளமை துறந்த பெரியவர் தனக்கும் தன் மனைவிக்கும் முன் நேர்ந்த பிணக்கையும், திருநீலகண்டத் தின் மீது மனைவியார் ஆணையிட்டதையும், அன்று தொட்டு இன்று வரை மாதர் யாரையும் சிந்தையாலும் தீண்டாது இருந்த தகையையும் உலகில் உள்ளவர் யாவரும் கேட்க உரைத்தனர். குளக்கரையில் நின்று இத்தன்மையைப் பார்த்துக் கொண்டிருந்த அனைவரும் அதுகேட்டு அதிசயித்தனர். பின்னர், குலால மன்னர் தண்டின் முனையைப்பற்றி இல்லாளுடன் வாவியின் மூழ்கி எழுந்தார்.

வாவியின் மூழ்கி யேறுங் கணவரும் மனைவி யாரும்
மேவிய மூப்பு நீங்கி விருப்புறும் இளமை பெற்றுத்
தேவரும் முனிவர் தாமும் சிறப்பொடு பொழியுந் தெய்வப்
பூவின்மா மழையின் மீள மூழ்குவார் போன்று தோன்ற.

நாயனாரும் அவரது கற்பின் மிக்க தூய மனைவியாரும் சூள் செய்த தருணத்தில் இருந்த இளமையைப் பெற்று எழுந்தனர். அவர்களது திருமேனியில் அழகின் ஒளி வீசியது. அருள்வெள்ளம் பெருகியது. இமையவரும் இருடியரும் தெய்வ மலர்மழை பொழிந்தனர். துதியுரை மொழிந்தனர். பூமழையில் முழுகிய அத் திருவாளர்களைக் கண்ட எல்லோரும் தொழுதனர். அந்த அதிசயங் கண்டார், அனைவரும் வழக்கிட்ட சிவயோகியாரைக் கண்டாரில்லை. "அவர் எங்கே?" என்று மருண்டனர். அலைபுனற் சடையெம் அண்ணல் மலைமகளோடு விண்மேல் விடைமீது காட்சி தந்தருளினார். அண்டருங் காணாத நீலகண்டரைத் திருநீல கண்டநாயனாரும், அவரது திருத்தேவியாரும் கண்டு பன்முறை பணிந்து போற்றினார்கள். அருகிலிருந்தோரும் தொழுதனர்.

சிவபெருமான், "வென்ற ஐம்புலனால் மிக்கீர்! என்றும் இந்த இளமை நீங்காது நம் அருகில் இருப்பீர்களாக" என்று அருள் புரிந்து எழுந்தருளினார். திருநீலகண்டநாயனார் தமது அன்பின் மிக்க மனைவியாருடன் என்றுமகலாத இளமை பெற்றுச் சிவலோக மெய்திப் பேரானந்தப் பெருவாழ்வில் இன்பமுற்றார்.

விளக்கம்

திருநீலகண்ட நாயனார் நடராஜப் பெருமானைச் சேவித்து விட்டுத் திரும்பி வரும்போது, மழைபொழிய அதற்கு அஞ்சி ஒரு பரத்தை வீட்டுத் திண்ணையில் ஒதுங்கினார் என்றும், அந்தப் பரத்தை தாம்பூல எச்சிலை சாளரத்தின் வழியே வெளியில் கொட்டினாள் என்றும், அது அவர் மீது விழ "திருநீலகண்டம்" என்று கூறினார் என்றும், அதுகேட்ட அவள் அஞ்சி நாயனாரை உள்ளுக்குள் அழைத்து நீராட்டிப் புதிய ஆடைகள் தந்து பூசித்து மன்னிப்புக் கேட்டு வணங்கி அனுப்பினாள் என்றும், அதனை யறிந்த நாயனாரது மனைவியார் கணவரை ஒழுக்கம் தவறினார் என்று மாறுபடக் கருதிப் பிணங்கித் திருநீலகண்டத்தின் மீது ஆணையிட்டார் என்றும் சிலர் எழுத்தாலும் சொல்லாலும் கூறுவர். அதுபற்றி சிறிது விளக்குதும்.

மேற்கூறிய கூற்றுக்குப் பெரியபுராணத்தில் ஆதாரமில்லை.

ஆனதங் கேள்வர் அங்கோர் பரத்தைபால் அணைந்து நண்ண
மானமுன் பொறாது வந்த ஊடலால் மனையின் வாழ்க்கை
ஏனைய எல்லாம் செய்தே உடனுறை விசையா ரானார்
தேனலர் கமலப் போதில் திருவினும் உருவின் மிக்கார்.

என்பார் தெய்வச் சேக்கிழார். "இளமை மீதூர இன்பத்துறையில் எளியரானார்" என்றும் கூறியருளினார். நாயனார் பரத்தைபால் அணைந்து வரவில்லையானால் குற்றமில்லாத நற்றவக் கணவன் மீது வீணாக ஐயுற்று ஆணையிட்டு அவரது வாழ்நாள் முழுவதை யும் அவமாக்கிய அம்மையை இறைவன் ஆட்கொள்ள மாட்டார். அவரைப் பெருங்குற்றம் சாரும். குற்றமில்லாத குணவதியாகும் அம்மை. அதனாலன்றோ, "அவர் தங்கள் மனைவியாரும் அருந்ததி கற்பின் மிக்கார்" என்பார் நமது தொண்டர் சீர்பரவு வார். குற்றமில்லாத கொழுநனைக் குற்றமுடையவராகத் தேர்ந்து தெளியாமல் இத்துணைப் பெரிய ஆணையிட்டால் அவரை உலகம் ஒப்புக்கொள்ளாது.

அன்றியும், நாயனார் இன்பவேட்கையின்றிப் பக்திப் பாத்திரமே பூண்டிருந்தாராயின், அம்மையின் ஆணை கேட்ட மாத்திரத்தில், "சட்டி சுட்டது கை விட்டது" என்று பெண்ணாசை விட்டிருப்பாராயின், அவருக்கு அது பெருமையாகாது. பசியில் லாத ஒருவனை நோக்கி இந்த அன்னத்தை அருந்தாதே என்று ஆணையிடுவானாயின், நல்லது என்று பசியிலான் அருந்தா திருப்பின் அதில் என்ன பெருமையுளது? மிகப் பசித்த ஒருவனை நோக்கி ஆணையிட்டபோது அவன் அந்த ஆணைக்குக் கட்டுப் பட்டு உணவை வெறுத்திருப்பதே பெருமையும் அருமையும் ஆகும். நன்கு உற்று நோக்குங்கள்.

ஆதலின், நாயனார் திருவினும் உருவின்மிக்க மனைவி இருந்துங் கூட அவர் ஒரு பரத்தையை விரும்பினார். அவருடைய மனம் காதற் புயலினால் அலைந்தது; பரத்தையை அணைந்து வந்தார். தவறு செய்தார். அந்தத் தவறினால்தானே வாழ்நாள் முழுவதும் பெண்ணலமுறாது நிற்கும் தன்மை ஏற்பட்டது. அல்லா மலும் அவருக்கு இன்பத்துறையில் அளவற்ற வேகமிருந்தது. ஆனால், அதனினும் கோடிமடங்கு திருநீலகண்டத்தின் மீது பக்தியின் வேகமிருந்தது. ஆண்டவன்மீது இருந்த அன்புவேகம் இன்ப வேகத்தை வென்றது. அடியுடன் அவ்வேகம் தகர்த்தெறியப் பெற்றது. அதன் வேருடன் அழிந்தது. வாசனைகூட இல்லாமல் ஒழிந்தது. துறந்து ஓடினார் இல்லை. துறந்து ஓடி வனத்தில் வாழ்ந்த காசிபர், விஸ்வாமித்திரர், சரத்வந்தர் முதலியோரும் பெண்ணாசையால் மயங்கித் தியங்கினார்கள். திருமகளைவிட எழில் நலமிக்க மனைவியாருடன் ஒரு வீட்டில் இரவும் பகலும் பழகி வாழ்ந்த இவர் அவரை மனத்தினாலும் தீண்டாது வீரவாழ்க்கை நடாத்தினார். நன்கு சிந்தியுங்கள். இவரது பெருமை

எத்துணை விழுமியது? மாலயனாலும் அளக்க முடியாத திறம் படைத்தவர். மாதராசை யாரை விட்டது? இந்திரன், சந்திரன், அயன், மால் அனைவரையும் அது மயக்கியது. அது மட்டுமன்று. மனைவியார் இருந்துங்கூட அவர்கள் புலன்களை வென்றாரில்லை. இவர் மனைவியார் சூள் பகர்ந்தவுடன் அவரையேயன்றி ஏனைய மாதர்களையும் மனத்தினாலும் தீண்டாது வாழ்ந்த பேராண்மையை என்னென்றுரைப்பது? எந்த எழுத்தால் எழுதுவது? மாற்றமும் மனமுங் கடந்து நிற்கின்றது. ஆ! என்னே! இவரது பெருமை? அதனாலன்றோ இளமை வயதுடைய இவரைச் சேக்கிழாரடிகள் "பேதியா ஆணை கேட்ட பெரியவர்" என்று கூறுகின்றனர். இறைவனும் கூட "வென்ற ஐம்புலனால் மிக்கீர்" என்று அழைப்பாராயினார்.

நிற்க, திருத்தொண்டத்தொகையில் முதலாவதாகப் புகழும் பெற்றி இவருக்கே அமைந்தது. தில்லைவாழ் அந்தணர் தொகையடியாராவார். தனியடியார் அறுபத்து மூவரில் முதலில் நிற்பவர் திருநீலகண்டரே. அன்றியும் "தில்லைவாழ் அந்தணர்" என்பது இறைவர் வாக்கு. நம்பியாரூரர் அடுத்து எடுத்து வணங்கியது இவரையேயன்றோ? உற்று நோக்குமின்கள்.

ஓடு ஓடு என்று இறைவர் இவரைப் பலகால் விரட்டி ஓட்டியும் ஓடாமல் நின்று, தமது சபதங் கெடாதவாறு தண்டினைப் பற்றி மூழ்கிய சத்தியநெறியும் சிந்தித்தற்பாலது.

அன்றியும் கணவனுக்கும் மனைவிக்கும் அந்த ஊடல் மிக விரைவில் தணியும். இவர்களது மெய்ம்மையான ஊடல் வயது தளர்ந்தும் தளராது நின்றது. கணவனுக்கும் மனைவிக்கும் ஏதாவது சிறிது பூசல் நேருமாயின் உடனே அயல்வீடு அறியும். இவர்கள் தமக்கு உள்ள பிணக்கை இறுதிவரையும் உறுதியுடன் அயலறியாமல் வாழ்ந்த திறத்தை நோக்கினால் உள்ளம் விம்மிதமடைகின்றது. என்னே மனையறத்தின் மாண்பு? அம்மையின் கற்பின் பொற்பு எத்துணை உயர்வுடையது? மனைவியின் சிறுமையைப் பறைசாற்றி மகிழும் ஆடவரும், கணவனது கொடுமையைத் தூற்றித் தூற்றி இகழும் மகளிரும் உற்று நோக்குக.

பட்டினத்து அடிகள் மூன்று நாயன்மார்களை எடுத்துப் பாராட்டினார். அவற்றுள் நடுநாயகமாக இவரை அமைத்த அருமையையும் உய்த்துணர்க.

நாயனாருடைய மனைவியார் விழுமிய கற்புடையவர்; பிறனை மருவிய நாயகியை நாயகன் தீண்டாது விலக்குவதுபோல், பிற பெண்ணை மருவிய நாயகனை நாயகியும் தீண்டாள். அவளுடைய புனிதம் போற்றுதற்குரியது. பெண்ணுரிமை இதனால் இனிது விளங்குகின்றது.

தோன்றாள் பிறனோக்காள் தோகையரைக் காணவொட்டாள்
ஈன்றாள் எனஅன் பியற்றுவாள் - மான்றேயோர்
காரிகையைக் கண்ணுற்ற காந்தனுடன் சேராளே
சீரியகற் போவாத் திரு.

அம்மையாருடைய கற்பின் திறம் மிகமிகச் சிறந்தது. அதனாலன்றோ எமது அருள்மொழித்தேவர், "அருந்ததிக் கற்பின் மிக்கார்" என்று புகழ்கின்றார்.

இயற்பகை நாயனார் புராணம்

"இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்"

கங்கையின் மிக்கது காவிரியாறு; இரு கரைகளிலும் பல சிவாலயங்களை உடையது. "ஏழ்தலம் புகழ் காவேரி" என்பார் அருணகிரியார். பரம்பொருள் பல்வேறு வடிவந் தாங்கிப் பல்வேறு சமயங்கட்கும் அருள்புரிவதுபோல், காவிரியும் பல்வேறு கால்களாகப் பிரிந்து பலவளம் பெருக நிலவளஞ் செய்யும் தண்ணளியுடையது. இத்தெய்வமாநதி கடலோடு கலப்பதால் அப்புணரியும் புனிதமாகிப் பொலியும். காவிரி கடலில் கலக்குந் துறையில் பல நலங்களும் பொலிவுறத் திகழ்வது காவிரிப்பூம்பட்டினம். அந்நகரில் உள்ளவர்கள் தமக்கு வேண்டும் பொருள்களை வேண்டி வேறு இடங்களுக்குப் புகார். ஆதலின், அந்நகரத்திற்கு மற்றொரு பேர் புகார். மிகச் சிறந்த நகரம். சாயாவனம் என்னும் சிவாலயத்தைத் தன்னகத்தே கொண்ட திருப்பதி.

அத்திருநகரத்தில் வணிகர் குலத்தில் அவதரித்தவர் இயற்பகையார். சிவபெருமானுடைய திருவடியை எப்பொழுதும் நினைந்து உருகி அன்பு செய்பவர். அளவிலாத செல்வ வளமை யுடையவர். அரனடியார்கள் யாவரேயாயினும் யாது கேட்பினும் இல்லையென்னாமல் ஈந்து உவக்கும் இயல்புடையவர். இல்லற மாகிய நல்லறத்துள் நின்றவர். தமது உடம்பும் உயிரும் உறுபொருளும் எல்லாம் சிவனடியார்க்கே உரியன என்று அடிமைத்திறம் பூண்டு அருள்நெறியைக் கடைப்பிடித்து வாழ்ந்து வந்தவர். தமது பக்கம் உள்ள பொருள் யாதாயினும் அடியவர்க்கே உரியது என்னும் சிறந்த மனப்பான்மையுடன் இருந்தவர்.

இவருடைய அளவிடப்படாத அடிமைத் திறத்தை உலகமெல்லாம் அறிந்து உய்யக் காட்டுமாறு சிவபெருமான் திருவுளங் கொண்டார். தமது இடப்பாகத்தில் எழுந்தருளியுள்ள உமாதேவியார் அறிந்தோ? அறியாமலோ? அறியோம். திருமேனி நிறைய திருவெண்ணீறு புனைந்து தூர்த்த வேடங்கொண்டு வேதியராகிக் காவிரிப்பூம்பட்டினத்தை யடைந்தார். காமனை எரித்த கண்ணுதற் கடவுள் காமமுற்றவனைப்போல் வணிகர் வீதியில் விளங்கும் இயற்பகையாருடைய பொன்மாளிகையிற்

புகுந்தார். அடியார்களை வழிபடுவதே இயல்பாகவுடைய இயற்பகையார், "எம்பெருமானுடைய திருத்தொண்டர் எழுந்தருளினார்" என்று, எதிர் சென்று தொழுது, அழைத்து வந்து ஆசனந் தந்து திருவடியைப் பூசித்து மலரிட்டு அர்ச்சித்து, "தேவரீர் இங்கு எழுந்தருளியது எமது முன்னோர்கள் புரிந்த மாதவமே" என்று துதித்தார்.

செய்தவத்தால் வந்த கைதவமறையோர், "அப்பனே! அம்பலவாணருடைய அடியார்கள் வேண்டியவை அனைத்தும் மறுக்காமல் நீ வழங்குகின்றனையாம். உனது வண்மையைக் கேள்வியுற்று, உன்பால் ஒரு பொருளை வேண்டி நான் வந்தேன்; நான் கேட்க இருக்கும் அப்பொருளை நீ தர இசைவாயாகில் அதனை நான் கூறுவேன்" என்றார்.

என்ன அவ்வுரை கேட்டியற் பகையார்
யாதும் ஒன்றும்என் பக்கல் உண்டாயின்
அன்ன தெம்பிரான் அடியவர் உடைமை
ஐயம் இல்லைநீர் அருள்செயும் என்ன
மன்னு காதலுன் மனைவியை வேண்டி
வந்த திங்கென அங்கணர் எதிரே
சொன்ன போதிலும் முன்னையின் மகிழ்ந்து
தூய தொண்டனார் தொழுதுரை செய்வார்.

இயற்பகையார் "என் ஐயனே! அடியேனுடைய பக்கத்தில் உள்ள பொருள் எதுவாயினும் அது ஈசனடியார்க்கே உரியது; அணுத்துணையும் ஐயமில்லை அருள்புரிவீர்" என்றார்.

மறையவராகிய இறையவர் "நிலைபெற்ற காதலுடைய உனது மனைவியை வேண்டி வந்தேன்" என்றனர்.

இயற்பகையார் அதனைக் கேட்டு முன்னையினும் பன் மடங்கு மகிழ்ந்தார். முகமலர்ந்தார். பணிந்தார். "எம்பெருமானே! இது அடியேனிடம் உள்ள பொருளே; இல்லாத பொருளைக் கேட்டு அடியேனை அவலப்படச் செய்யாமல் உள்ள பொருளையே கேட்டருளினீர். சிறியேன் செய்த தவமே தவம்" என்று கூறினார். உள்ளே சென்றார். கற்புநெறி வழுவாத மனைவியை நோக்கிப் "பெண்மணியே! உன்னை இன்று இந்த மெய்த்தவ முனிவருக்குத் தந்தேன்" என்றார். அம்மையார் சிறிது கலங்கினார். பின்னர் தெளிவுற்றார். "அடியேனுடைய உயிருக்கு நாதராகிய தாங்கள் பணித்த கட்டளையை யான் செய்வதைத்

தவிர வேறு எனக்கு என்ன உரிமையுளது?'' என்று கூறிக் கணவனாரை வணங்கினார். இயற்பகையாரும் எதிரே அவரை வணங்கினார். திருவினும் சிறந்த அம்மையார் சென்று மாதவரை வணங்கித் திகைத்து நின்றார். இயற்பகையார் மிக்க மகிழ்ச்சி யுடன் அடியவரை வணங்கி, "ஐயனே! இனி அடியேன் செய்ய வேண்டிய பணிவிடை யாது? பணித்தருளும்'' என்று பகர்ந்தார்.

அருந்துணையாகிய அமலர், "அப்பனே! இம்மங்கையை யான் அழைத்துப் போக உனது சுற்றத்தினராலும் இந்நகரத்தினராலும் இடையூறு நேராவண்ணம் நீ எனக்குத் துணையாக வருக'' என்று அருளிச் செய்தார். இயற்பகையார், "என்னை உடையவரே! இது அடியேனே அறிந்து செய்யக் கடவது; தாங்கள் பணிக்குமளவு தாழ்த்தது பிழை. இதோ வருகின்றேன்'' என்று தனியிடம் போய், பொற்சரிகையாடையும் பூங்கச்சும் புனைந்து, வாளும் பலகையும் ஏந்தி வந்து பணிந்தனர். துணையிலாதவர் முன்னே செல்ல, அவருக்குத் துணையாகச் சென்றார்.

இவ்வாறு, முன்னே மறையவரும் இடையே அம்மையாரும் பின்னே இயற்பகையாரும் செல்வதையும், மனைவியை வந்த அந்தணருக்குத் தந்ததையும் அறிந்த அம்மையாரைச் சேர்ந்த உறவினரும், இயற்பகையாரைச் சேர்ந்த உறவினரும் சீறினார்கள். என்னே இவன் மதி! இவனுக்குப் பித்துப் பிடித்துவிட்டது. இப்படிச் செய்தவர் யாருமில்லையே? இவன் அறிவில்லாமல் தந்தாலும் நம் குலக்கொடியை ஒருவன் கொண்டு போவதா? நன்று, நன்று; பாவையையும் பழியையும் மீட்போம்'' என்று ஆர்த்து எழுந்தார்கள். வேல், வில், வாள், சுரிகை முதலிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு வாயு வேகமாகச் சென்று நகரங் கடந்துபோய் இரு மருங்கும் வளைத்துக் கடலைப்போல் பொங்கித் தடுத்தார்கள். "அழிதகனே! போகாதே நில்; எமது குலமகளை விட்டுப் பழியை நீக்கிச் செல்'' என்று கூவினார்கள்.

திரிபுரம் எரித்தவர் அஞ்சினவரைப்போல் அம்மையாரை நோக்கினார். அம்மையார், "இறைவனே! நீர் அஞ்ச வேண்டா. இயற்பகை வெல்லும்'' என்றார். இயற்பகையார் "பெருந்தகையே! வருந்தற்க. இவர்களை யான் ஒருவனே உமது ஆசீர்வாதத்தால் கொன்று நீக்குவேன்'' என்று கூறி, மிக்க வீரத்துடன் நின்றார். அவருடைய விழிகளில் கனற்பொறிகள் சிதறின. சுற்றத்தாரை நோக்கி, "வீணே நீங்கள் என் வாளால் மடியாதீர்; ஓடியுய்மின். இன்றேல் உமது உயிரை இவ்வாள் உண்ணும்'' என்றார்.

உறவினர், "ஏட! நீ என்ன செய்தாய்? இவ்வாறு மானமின்றிப் பேசுகின்றாய். நாட்டவர் பழியையும் பார்க்கின்றாயில்லை. பகைவரது நகையையும் நோக்கி நாணுகின்றாயில்லை. உன் போக்கு நன்றாயிருக்கின்றது. பத்தினியைப் பார்ப்பானுக்கு அளித்து வீரம் பேசுகின்றனை. உன்னைக் கொன்று நாங்களும் உயிர்விடுவோம். எங்கள் கண்ணெதிரே நீ இவ்வாறு செய்ய நாங்கள் பொறுக்க மாட்டோம்" என்றனர்.

இயற்பகையார் மிகவும் சினந்து, "உங்களை விண்ணுலகத்தில் விடுத்து இவரைப் போகவிடுவேன்" என்று எழுந்தார். சுற்றத்தினர் நற்றவரைச் சென்று தடுத்தனர். இயற்பகையார் கறங்குபோல் சுழன்று நாற்றிசைகளிலும் பரந்து வந்தவர்களை வாளினால் வெட்டித் தாள்களையும் தோள்களையும் துணித்துப் போரிட்டார்.

சொரிந்தன குடல்க ளெங்கும் துணிந்தன உடல்க ளெங்கும்
விரிந்தன தலைக ளெங்கும் மிடைந்தன கழுகு மெங்கும்
எரிந்தன விழிக ளெங்கும் எதிர்ப்பவ ரொருவ ரின்றித்
திரிந்தனர் களனி லெங்கும் சிவன்கழல் புனைந்த வீரர்.

உதிர ஆறு ஓடியது. கிளைஞரோடு வந்தவர்களில் ஓடியவரே உய்ந்தனர்; ஓடாது நின்றவர் யாவரும் மாண்டனர். வாளுடன் வென்ற வீரர், "ஐயனே! இனி நீர் புறப்படும். இப்பூங்காவனம் கடக்கும்வரை உடன் வருவேன்'' என்றார். இருவரால் அறியவொண்ணா ஒருவர் தொண்டர் பின்தொடர்ந்து வரச் சென்று சாய்க்காட்டின் அருகில் மேவினார். "அன்பனே! இனி நீ திரும்பலாம்" என்று அருளினார். இயற்பகையார் மறையவர் மலரடியை தலையாரக் கும்பிட்டு, "அருள் பெற்றேன்" என்று கூறி மீண்டார். செயற்கருஞ் செய்கை செய்த தொண்டர் மீண்டு ஏகியதை ஆண்டவர் மகிழ்ந்து நோக்கி, "பொய்தரும் உள்ளம் இல்லான்; திரும்பிக்கூட பார்க்காமல் போகின்றான்" என்று எண்ணி மீளவும் தொண்டனாரை அழைப்பாராயினார்.

இயற்பகை முனிவா ஓலம்! ஈண்டுநீ வருவாய் ஓலம்!
அயர்ப்பிலா தானே ஓலம்! அன்பனே ஓலம்! ஓலம்!
செயற்கருஞ் செய்கை செய்த தீரனே ஓலம்! என்றான்
மயக்கறு மறையோ லிட்டு மாலயன் தேட நின்றான்.

இறையவருடைய ஓலத்தைக் கேட்ட இயற்பகையார், "ஐயனே! அடியனேன் இதோ வந்தேன்; வந்தேன். பிழைத்தவர் இருப்பா ராயின் அவர்களையும் இவ்வாளுக்கு இரையாக்குவேன்" என்று

ஓடி வந்தார். மறையவர் மறைந்தார். முனிவரைக் காணார்; மனைவியைக் கண்டார். திகைத்தார். நாற்றிசையும் நோக்கினார். வானவெளியில் வெள்ளிமலை போன்ற விடைமேல் மரகதக் கொடியுடன் பவளக்குன்றென வந்தருளிய கண்ணுதற் கடவுளைக் கண்டார். ஆனந்த வெள்ளத்துள் அழுந்தினார்; ஓடினார்; பாடினார்; மாலயன் காணா மலரடிமேல் வீழ்ந்து வணங்கினார்.

சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லை வந்தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையி லின்ப வெள்ள மெனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடுஞ் சேவடி போற்றி என்ன

துதித்தார். அடியார்க்கெளிய அமலனார், "அன்பனே! உனது அளவற்ற அன்புக்கு மகிழ்ந்தனம். உனது மனைவியோடும் நம்முடன் வருக" என்று அருளிச் செய்தார். வானவர் பூமழை பொழிந்தனர். மண்ணுள்ளோர் மாமொழி புகன்றனர். திருவளர் சிறப்பின் மிக்க தொண்டரும் மருவிய தெய்வக் கற்பின் மங்கையும் எம்பிரானுடன் சென்று அருகில் எப்போதும் சிவலோகத்தில் கும்பிட்டு உறையும் பெருமை பெற்றனர். தொண்டருடைய வாளினால் மாண்ட சுற்றத்தவர்கள் சுவர்க்க உலகம் பெற்று இன்புற்றார்கள்.

விளக்கம்

இயற்பகையார், தனக்கு உரிமையில்லாத பொருள்களை யெல்லாம் "என்னுடையது" "என்னுடையது" என்பது உலக இயல். அந்த உலக இயலுக்குப் பகையானவர். உரியனவாகாதவை களை உரிமையாகக் கொள்வதே உலகப்பித்து; அப்பித்தை விலக்கி இறைபால் பித்துக் கொண்டவர் இவர். "வெறிவென்றவரோடு உறும் வேலவனே" என்பார் அருணகிரிநாதர். இயற்பகை பித்தனானால்" என்பார் இவருடைய தமர்.

அன்றியும் எதிர்மறையாகக் கொண்டு எல்லாப் பொருள் களும் அடியவர் உடைமை என்னும் உண்மை இயலுக்கு பகைமையில்லாதார்; இயல் பகையார் - உண்மையியலைப் பகைக்காதவர் எனினும் அமையும்.

இயற்பகையார் எல்லோரினும் யாவற்றிலும் இனியராகிய எண்டோள் முக்கட்பிரான்பால் அளவிறந்த அன்பு பூண்டவர்; அரனடியாரை அரனாகவே கருதுபவர். தனது உயிர், உடல்,

உடைமை யாவும் அரனாருக்கும், அரனார் அடியார்க்குமே உரியவை என்று வாழ்ந்தவர்.

"அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ?"

என்ற அருமைத் திருவாக்கினைப் பின்பற்றியவர். அதனால், திருநீறும் உருத்திராக்கமும் பூண்டுவந்த அடியார், உயிரினும் இனிய மனைவியைக் கேட்பவும் மறுக்காது வழங்கினார். அடியவர் வடிவில் வந்த இறைவர் உன்பால் ஒன்று வேண்டி வந்தனம் என்று கேட்டருளியபோது, இயற்பகையார் "தருகிறேன்" என்று கூறினாரில்லை. அங்ஙனம் கூறினால் உடைமைக்குத் தானே உடையவராகின்றார். "யாதுமொன்றும் என்பக்கல் உண்டாகின் அன்னது எம்பிரான் அடியவர் உடைமை" என்று கூறும் அருமைப் பாட்டை நோக்குக.

"மனைவியைக் கேட்ட அடியவரைச் சிவனடியார் என்று கூறலாமோ? அது பிறன்மனை நயந்த பாதகம் ஆகாதோ? பிறன்மனை நயந்தவரை அடியார் எனக் கோடல் எங்ஙனம் பொருந்தும்?" எனின் கூறுதும்.

எவரேனும் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போது
வுகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
யிரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராத தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

என்ற திருவாக்கின்படி அடியவரைக் கண்டவுடன் அழலிட்ட மெழுகுபோல் உருகித் தன்வயமழிந்து நிற்கும் அன்பு மயமானவர் இயற்பகையார். அன்பு மிகுந்தபோது ஆராய்ச்சிக்கு இடமேது?

கம்பாநதி பெருக்கெடுத்தபோது இறைவருக்கு அதனால் ஊறு நேரும் என்று எண்ணிய உமையம்மையார் சிவலிங்கத் திருமேனியைத் தழுவினாரன்றோ? கங்கையை முடித்த கண்ணுதற் கடவுளுக்கு இச்சிறு வெள்ளத்தால் ஊறு உண்டாகாதென்ற ஆராய்ச்சி அங்கே தலைப்படவில்லை என்பதனை அறிக. உலகங் கட்கெல்லாம் ஒரு துணையாக உள்ள இறைவருக்கு துணையில் லையே? என்றும், பசிதாகமில்லாத பரம்பொருள் பசித்திருக்கின்

றனரே? என்றும் அன்பினால் உருகிய கண்ணப்பர் திறமும் இத்தன்மையதே.

இறைவர் மனைவியைக் கேட்டபோது "தருகிறேன்" என்று கூறினாரில்லை. "இது எனக்கு முன்பு உள்ளதே வேண்டி எம்பிரான் செய்தபேறு!' என்று கூறினார். மனைவியார்பால் சென்று "விதிமணக் குலமடந்தை! இன்று உன்னை இம்மெய்த் தவர்க்கு நான் கொடுத்தனன்" என்கின்றார். மனைவியார் தன்னைக் கணவன் உடைமை என்று கருதி இருந்தார் ஆதலின், "கொடுத்தேன்" என்றார்.

மனைவியார் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" எனப் பயின்றவர். முதலில் "இது என்னே?" என்று கலங்கினார். பின் "கணவன் கட்டளையை நிறைவேற்றுவதே தன் கடன்" என்று உணர்ந்து தெளிந்தார்.

"இன்று நீர் எனக்கு அருள் செய்தது இதுவேல் என் உயிர்க்கு ஒருநாதர் நீ உரைத்தது ஒன்றும் நான் இனிச் செய்பணி" என்றே இறைஞ்சினார். இயற்பகையார் மனைவியாரை எதிர் வணக்கம் செய்தார். அடியவர்க்குத் தந்தபடியால் மனைவி என்ற கருத்தை நீக்கி வணங்கிய பண்பு சிந்தனைக்குரியது.

உலகியலுக்கு உட்பட்ட சுற்றத்தவர் எதிர்த்துப் போரிட்டு மாண்டனர். இயற்பகையார் திருக்கரத்து மாண்டதனால் அவர்கள் அனைவரும் வானிடை இன்புற்றனர்.

இவருடைய வரலாற்றைச் சமயக் கண்கொண்டு காணமாட் டாத சிலர் பலவாறு பேசி அல்லலுறுவர். அது இரத்தினப் பரிட்சை தெரியாத ஒருவன் இரத்தினத்தை மதிப்பிட வந்தது போலும். எல்லாம் வல்ல இறைவர் இவரைச் "செயற்கருஞ் செய்கை செய்த தீரனே" என்று அழைப்பாரானால் இவருடைய பெருமை அளக்கற்பாற்றோ?

மனைவியைத் தந்தால் நம்மை உலகம் பழிக்குமே என்று நாணினாரில்லை. உலகத்தை இவர் நோக்கவில்லை. யானை வாகனத்தைக் கண்ட ஒருவன் மரம் என்று நோக்கும்போது யானை தோன்றாததுபோல் என்று அறிக.

இயற்பகையார் அடியவருடன் மனைவியாரை வழிவிட்டுத் திரும்புகின்றபோது, ஒரு சிறிதும் உள்ளம் மாறுபடாமலும், கவலையுறாமலும் திரும்பிச் செல்வாராயினார். திரும்பிக்கூட

பாராமல் சென்றார். என்னே! அவருடைய உள்ளத்தின் திட்பம். அத்திறத்தினை நோக்கிய சிவபெருமான் பெரிதும் உவந்தார். "மைதிகழ் கண்டன் எண்டோள் மறையவன் மகிழ்ந்து நோக்கி" என்ற அமுத வாக்கை உன்னுக. மனைவியார் கூறிய சூளால் மாதரை மனத்தாலும் தீண்டாது வாழ்ந்த திருநீலகண்டர் திறத்திற்கு அடுத்து இவருடைய திறத்தைக் கூறிய அழகுஞ் சிந்திக்கற்பாலது.

> பொய்தரும் உள்ள மில்லான் பார்க்கிலன் போனான் என்று
> மெய்தரு சிந்தை யாரை மீளவும் அழைக்க லுற்றார்.

என்ற தேன்மொழிகளை உன்ன உன்ன உள்ளம் உருகுகின்றது.

இளையான்குடிமாற நாயனார் புராணம்

"இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்"

நீர்வளம் மிக்க நிலங்கள் சூழ்ந்து சீர்வளம் சிறப்புடையது இளையான்குடி; அத்திருப்பதியில் நான்காம் வருணத்தில், அம்மரபு செய்த மாதவப்பயனாய் ஒருவர் தோன்றினார். அவர் திருப்பேர் மாறனார். இளையான்குடியில் தோன்றிய காரணத்தினால் இளையான்குடிமாற நாயனார் எனப்படுவார். இவர் அம்பொன் நீடிய அம்பலத்தினில் ஆடுவார் அடிமலரைத் தன்முடிமீது சூடுவார். எப்போதும் எம்பிரானுடைய அடிமைத் திறம் பூண்ட சால்பு மிக்கவர்.

உழவுத்தொழிலால் மிகுந்த செல்வமும், நிலபுலமும் உடையவர். சிவபிரானுடைய அடியவர்களிடம் நிறைந்த அன்பு பூண்டவர். செல்வத்தின் பயன் அடியவர்க்கு அமுதளித்தலே எனத் தெளிந்தவர். "என்பணி இறைவர்க்கே" என்று கூறிப் பணி செய்யும் பரமனடியவர்கள் யாவராயினும் எதிர்கொண்டு கைகள் கூப்பித் தொழுவார்; இனிய குளிர்ந்த சொற்களைக் கூறுவார்; அழைத்துக் கொண்டு வந்து சிறந்த இருக்கை மீது எழுந்தருளப் புரிந்து, திருவடி விளக்கி, மிகுந்த அன்புடன் நறுமலர்களினால் அர்ச்சித்து வழிபடுவார்; உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன என்ற நான்கு வகையாலாய, இனிப்பு, கைப்பு, புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு என்ற அறுசுவை உணவுகளையும், விரும்பிய வாறு அமுது செய்விப்பார்.

*கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலி னாத னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு சுவைதி றத்தினி லொப்பிலா
அண்டர் நாயகர் தொண்ட ரிச்சையி னமுது செய்ய வளித்துளார்

அடியார்கள் உள்ளம் உவந்து வாழ்த்துவதனால், மாறனாருக்கு இருநிதிகளும் நாடோறும் பெருகின. சிவபெருமானுடைய

✱ இத்திருப்பாடலை அடியார்க்கு அமுது அளிக்கும்போது அன்புடன் ஓதி வணங்குதல் வேண்டும்.

தோழனாகிய குபேரனைப்போல் இனிது வாழ்ந்தார். "செல்வ மிகுந்த காலத்திலே யாரும் நிரம்பத் தருமஞ் செய்வார்; அது எளிது. வறுமையால் வாடும்போது மனமுவந்து செய்தல் அரிது. ஆதலின், இப்பெரியார் வறுமையுற்றபோதும் இத்திருத்தொண்டில் வல்லவர் என்பதனை உலகத்திற்கு அறிவிக்க வேண்டும்" என்று கண்ணுதற்கடவுள் கருதினார். அதனால், மாறனார்க்குச் சிறிது சிறிதாகச் செல்வம் மாறிக்கொண்டே வந்தது. வறுமைப் பதம் புகுந்தார்.

மாறனார்க்கு வளஞ் சுருங்கியும் மனஞ் சுருங்கவில்லை. செல்வம் நிரம்ப இருந்தபோது அடியார்களை எவ்வாறு அன்னமும் சொன்னமும் தந்து உபசரித்தனரோ அவ்வாறே வறுமைப் பதம் வந்தும் உபசரிக்கின்றார். ஒரு சிறிதும் தான் செய்து வரும் மாகேசுவர வழிபாட்டினைக் குறைத்தாரில்லை. அன்பும் மாறவில்லை. ஊக்கம் மேன்மேலும் வளர்ந்தது. நிலபுலங்களை ஒற்றி வைத்தும், ஒற்றி வைத்தவைகளை விற்பனை செய்தும் குன்றாத அன்புடன் அறம் புரிந்து வந்தார். அவருடைய அறத்திற்கு அணுத்துணையும் மாறுபாடு இன்றி அவருடைய வாழ்க்கைத் துணையாக அமைந்த அம்மையும் ஒழுகுவார். அடியவர் வழிபாட்டில் அவருக்கு இருந்த அன்பின் திறந்தான் என்னே?

அன்னமும் ஏனமும் (பன்றி) அறியாத அண்ணலாகிய சிவபெருமான், அடியாருடைய அளவற்ற அன்பை உலகம் உணர்ந்து உய்யவேண்டும் என்று திருவுளங்கொண்டார். நல்ல தவவேடம் பூண்டு நீரும் கண்டிகையும் புனைந்து, விடையும் உமாதேவியாரும் இன்றிப் புறப்பட்டனர். மாரிக்காலம்; எங்கும் நீர் ஓடுகின்றது. வெள்ளம் பள்ளங்கள்தோறும் நிறைந்துள்ளது. நடுநிசி; இளையான்குடி மாறனாரும் அவர் மனைவியாரும் பட்டினியால் வருந்திக் கதவடைத்துவிட்டு, உறக்கமின்றி இறைவனது அஞ்செழுத்தை நெஞ்சழுத்தி உரைத்த வண்ணமாக இருக்கின்றனர். பேய்களும் நடமாடாத அந்த நள்ளிருளில் பேய்களுடன் நடமாடும் பித்தப் பெருமான் வந்து அன்பருடைய கதவை மெல்லத் தட்டி, "அன்பனே பசித்து வந்தோம்" என்று அருளிச் செய்தார். உடனே, மாறனார் ஓடி கதவைத் திறந்து அடியவரை அன்புடன் வரவேற்கின்றார். மாறனார் முகத்தில் மகிழ்ச்சியமுதம் பொழிகின்றது. முன் இருந்த கவலையகன்றது. அவருடைய வாக்கின் இன்சொல்லாகிய தேன் அருவி பாய்கின்றது. வந்த அடியவர் திருவடியில் மனைவியாருடன் வீழ்ந்து வணங்கினார்.

''வாருங்கள் வாருங்கள்'' என்று பரிந்து அழைத்தார். ஓர் ஆதனத்தில் எழுந்தருளப் புரிந்தார். ஓர் ஆடையை எடுத்து நனைந்து வந்துள்ள தவப்பெரியாரது திருமேனியைத் துடைத்தார். "பெருமானே! தேவரீர் இங்கு எழுந்தருள ஏழையேன் என்ன மாதவஞ் செய்தேனோ? என் முந்தையோர் செய்த முடிவிலாத் தவப்பயனே, இந்த நடு நிசியில் தங்களைத் தொழுது உய்யும் பேறு சிறியேனுக்குக் கூட்டி வைத்தது" என்று துதி செய்தார். அடியார்க்கு அன்னமிட விரும்பினார். வீட்டிலே உணவுக்குரிய சாதனங்கள் யாதொன்றுமில்லை. என் செய்வார்? திகைப்புற்றார். மனைவியாரை நோக்கி "மாதரசே! நமக்கு உணவில்லையாயினும் தீங்கில்லை, இமவான் பெற்ற உமையம்மையாரது கொழுநராகிய அரனாருடைய அடியார் மிகவும் பசித்து வந்துளார். இத்தவ சீலருக்கு உணவு தரும் வகை யாது? என்று கேட்டார்.

"நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாமின் னடிசில் தகவுற
அமைக்கு மாறெங்ங னேஅணங் கேயென"

அன்பும், அறனும் ஒருங்கே அமைந்த அம்மையார் அது கேட்டார். ''பெருமானே! இதற்கு வழி வேறு ஒன்றுமில்லை; அயலாரும் இனி கடன் கொடுப்பாரில்லை. காலமோ அகாலம்; நடுநிசி; முயற்சி செய்து பார்க்கக்கூடிய வேறு இடங்களும் இல்லை தீவினை செய்த எனக்கு என்ன செயல் இருக்கின்றது? பசித்து வந்த அடியார்க்கு அன்னமளித்தலினும் சிறந்த தன்மையில்லை. ஈதல் இயையாதபோது சாதலே சாலச் சிறந்தது. ஆனால், ஒரு வழி எனக்குத் தோன்றுகின்றது. நமது துன்பம் நீங்குமாறு இன்று பகல் வயலிலே விதைத்த முளை நெல்லை வாரிக்கொண்டு வந்தால் "அடியேன் முயன்று ஒருவாறு அமுது செய்யலாகும். இதனை யொழிய வேறுசெயல் இல்லை'' என்றார்.

செல்லல் நீங்கப் பகல்வித் தியசெந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலு மாகுமற்
றல்ல தொன்றறி யேன்என் றயுர்வுற.

நாயனார் அச்சொல்லை அமுதெனக் கேட்டார். இழந்த செல்வத்தை மீண்டும் பெற்றார்போல் மகிழ்ந்தார். "அங்ஙனமே நான் சென்று நெல்முளையை வாரி வருவேன்'' என்று கூறிப் புறப்பட்டார். மழை பொழிந்த வண்ணமாகவே இருக்கின்றது.

மண்ணும் விண்ணும் ஒரே இருள்மயம். இருளின் கூட்டம் கட்டு விட்டு உருகி வழிவதுபோல் உலகம் இருண்டுளது.

பெருகு வானம் பிறங்க மழைபொழிந்
தருகு நாப்பண் அறிவருங் கங்குல்தான்
கருகு மையிரு ளின்கணங் கட்டுவிட்
டுருகு கின்றது போன்ற துலகெலாம்.

அந்த நேரத்தை மற்றவர் நினைத்தாலே நடுங்குவர். நாயனார் முன் சென்றுவந்த பழக்கத்தினாலே கூடையைத் தலையில் கவிழ்த்து கொண்டு, மெல்ல மெல்லக் காலினால் தடவிக் கொண்டு நடந்தார். வழியும் குழியும் பகுத்துணரவொண்ணா அப்பேரிருளில் திருவருட் குறிப்பையே துணையாகக் கொண்ட மாறனார் நடந்து தமது வயலை அடைந்து, மழைநீர் வழியே ஒருபுறம் ஒதுங்கியிருந்த வெண்மையான நெல்முளைகளை வாரிக் கூடையில் நிறைத்துக் கொண்டு தலைமீது சுமந்துகொண்டு அடியவர் பசியை அகற்றும் ஆர்வத்தால் விரைந்து வீட்டிற்கு வந்தார். வாயில் அருகிலேயே நின்று கணவனார் வரும் வழி மேல் விழிவைத்திருக்கும் மனைவியார் அதனை வாங்கினார். தண்ணீரினால் அந்த நெல்முளையை நன்கு கழுவினார். பின்னர், கண்வனாரை நோக்கி, "சுவாமீ! இந்த நெல்லைப் பக்குவப்படுத்தி அமுது சமைப்பதற்கு அடுப்பில் எரிக்க விறகு இல்லை" என்று கூறினார். உடனே வள்ளலார் இளையான்குடி மாறனார் தனது வீட்டின் ஒருபுறத்தின் கூரையை அறுத்துத் தள்ளினார்.

அதனால், கிடைத்த கட்டைகளை எடுத்து அம்மையார் தீ மூட்டி, முளையைப் பதமாக வறுத்து, குத்தி அரிசியாக்கி, உலையிலிட்டுப் பக்குவமாகவும் குற்றமில்லாத வகையாகவும் அன்னமாக்கினார். ஆக்கியபின் கற்பின்மிக்க அத்திருவாட்டி நாயகனை நோக்கி, "இனி கறிக்கு என்ன செய்வோம்" என்று தொழுதார்.

வழிவரும் இளைப்பி னோடும் வருத்திய பசியி னாலே
அழிவுறு மையன் என்னும் அன்பினிற் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க.

நாயனார், "ஐயன் வழிநடந்து வந்த இளைப்புடன் பசித்து வருந்துவரே" என்ற அன்பின் மிகுதியினால் விரைந்து சென்று தமது கொல்லையிலே முளைக்க வைத்த குழிக்குமேல் வளர்ந்து

வராத இளம்பருவமுள்ள இலைக்கறிப் பயிர்களை, கையினால் தடவி, வேருடன் பறித்தார். அது தனது பாசப்பழிமுதலை வேருடன் பறிப்பதுபோல் இருந்தது. அவற்றைக்கொண்டு போய் காதலியாரிடம் தந்தார். அம்மையார் அவற்றை வாங்கினார். புல் புழுவின்றி ஆய்ந்தார். பலமுறைப் புனலால் கழுவினார். புனித பாத்திரத்திலிட்டு, தனது கைத்திறத்தால் வேறு வேறு வகையாகக் கறியமுது செய்தார். இவ்வளவும் மிகச் சுருங்கிய காலத்தில் நிகழ்ந்தன. கணவனாருக்குத் தான் அமைத்த அன்னத்தையும் கறியமுதுகளையுங் காட்டி, "இனி தாமதியாமல் ஈசனடியாரை அமுது செய்விப்போம்" என்றனர்.

உணர்வினால் உணரவொண்ணா ஒருவரை உணர்த்த வேண்டி இருவருங் காணாத இறைவன்பால் இருவரும் சென்று அயிலுதலும் துயிலுதலும் இல்லாதவரைத் துயில் உணர்த்துவார்.

அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய் ஈண்ட அமுதுசெய் தருள்க என்று
தொழும்பனார் உரைத்த போதில் சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாருந் தொண்டருந் திகைத்து நின்றார்.

"அடியேன் அழுந்தியுள்ள துன்பத்தினின்றும் நீங்கி இன்ப மெய்தி உய்விக்குமாறு எழுந்தருளி வந்த பெரியோரே! இங்கு உணவு செய்ய எழுந்தருளும்" என்று அழைத்தார். ஆதியும் அந்தமும் இல்லாத அமலன் சோதியாய் எழுந்து தோன்றினார். நாயனாரும், நாயகியாரும் அதுகண்டு திகைத்து நின்றார்கள்.

மாலயன் காணாத மாமணிச்சோதி யண்ணல், சாலவும் மயங்குவார்க்குத் தண்ணருள் புரிந்து, இமயம் பயந்த உமையம்மை யாருடன் இடபவாகனமீது காட்சியளித்தார். வேதமுந் தேடிக் காணா விமலனைக் கண்ட நாயனாரும் மனைவியாரும் எல்லை யில்லாத மகிழ்ச்சி எய்தினர்.

சங்கரா போற்றி ஞான சம்புவே போற்றி யாற்றில்
வெங்கரா வடுமால் காணா விமலனே போற்றி என்றும்
செங்கரா மலகம் போன்று திருவருள் செய்வோய் போற்றி
பொங்கரா வணிந்த வேத புங்கவ போற்றி போற்றி.

என்று துதிசெய்தனர். சிவபெருமான் திருத்தொண்டரைக் கருணையுடன் நோக்கி, "அன்பனே! அன்பர் பூசைசெய்த நீ நின் மனைவியுடன் நமது சிவலோகமெய்தி, எமது தோழனாகிய குபேரன் இருநிதிகளை ஏந்தி நின் ஏவல் கேட்ப, எல்லையில்லாத

இன்பத்தை நுகர்ந்து இனிது இருப்பாயாக" என்று திருவருள் புரிந்தார்.

அன்பனே அன்பர் பூசை அளித்தநீ அணங்கி னோடும்
என்பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன் றானே
முன்பெரு நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருக்க என்றே அருள்செய்தான் எவர்க்கு மிக்கான்

மறைகளுக்கு எட்டாத இறைவனது திருவடிகளை வந்தித்த நாயனார் பரவசமாகி நின்றார். பெருமான் திருவுரு மறைந்தனர். மாறனார் சிவகணங்களுள் ஒருவராகித் தனதனார் பணி செய்யப் பேரானந்தப் பெருவாழ்வில் இன்புறுவாராயினார்.

விளக்கம்

இறைவன் வழிபாடு எல்லாவற்றினுஞ் சிறந்தது. அந்த இறை வழிபாட்டினுஞ் சிறந்தது அடியார் வழிபாடு. இறைவழிபாட்டை "ஆராதனை" என்பர். அடியார்க்கு அன்னந் தந்து வழிபடுவதை "சமாராதனை" என்பர். சம் - நன்றாக; ஆராதனை - வழிபடுதல். நன்றாக வழிபடுதல்.

இறைவன் தொண்டர் உளத்தில் எப்போதும் உறைகின்றான். ஆதலின், தொண்டர் வழிபாட்டில் அண்டர்நாதன் மிக மிக மகிழ்கின்றான். கன்றினைத் துணைபற்றினாலன்றிப் பசுவினிடம் பால் பெறலாகாது. அதுபோல், அடியவரைத் துணைகொண்டே இறைவனது திருவருள் பெறுதல் வேண்டும்.

திருக்கோயிலில் இறைவனுக்குச் செய்த வழிபாடு அடியவரைச் சேராது. அடியவருக்குச் செய்த வழிபாடு இறைவனைச் சேரும்.

படமாடக் கோயில் பகவற்கொன் றீயின்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்கொன் றீயின்
படமாடக் கோயில் பகவற்க தாமே - *திருமந்திரம்*

மகேச்சுவரரை வழிபடுபவர் மகேசுரர் எனப்படுவார். ஆதலின், அடியவர் பூசை மாகேச்சுர பூசை எனப்படும். அருமறை முறைப்படி வேள்விகள் புரியும் அந்தணர்கள் கோடி பேர்கட்கு உணவு தந்த புண்ணியம் நீரிடுந் தொண்டர்க்கு ஒரு பிடி அன்னந் தருவதால் உண்டாகும்.

ஆறிடு வேள்வி அருமறை நூலவர்
கூறிடு மந்தணர் கோடிபே ருண்பதில்
நீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலே
பேறெனில் ஓர்பிடி பேறது வாமே - திருமந்திரம்

"உலகிலே மனிதராகப் பிறந்த பயன் அடியார்க்கு அமுது செய்வித்தலே" என்பார் திருஞானசம்பந்தர் சுவாமிகள்.

"மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்"

இத்தகைய சிறந்த அடியார்க்கு உணவுதரும் வழிபாட்டில் தலைசிறந்தவர் இளையான்குடிமாற நாயனார். இவர் செல்வத்தின் மிகுந்தவர். நிலபுலங்கள் நிறைந்திருந்தன. பெருஞ்செல்வராகிக், குபேரனைப்போல் விளங்கிய இவர் அடியார்கள் எக்குலத்தினராயினும், மற்று யாவரே யாயினும் வேற்றுமை குறியாது, அவர்களை எதிர்கொண்டு, முகமலர்ந்து இன்சொல் கூறித், திருவடியை விளக்கி, வழிபட்டு நால்வகைப்பட்ட அறுசுவை உண்டியை ஊட்டிப், பின்னும் அவர் செல்லுங்கால் பதினான்கு அடி சென்று வழிவிடுவார். அடியார்களது ஆசீர்வாதத்தின் பயனால் நாளும் மேன்மேலும் செல்வம் பெருகியது.

செல்வம் மலிந்திருந்தபோது தானதருமஞ் செய்வது இயல்பே. வறுமை வந்தபோது செய்வது அருமையிலும் அருமை. ஆதலின், வறுமையினால் துன்புறும்போதும் இவர் அடியார்க்கு அன்னமளித்தலில் சலியாதவர் என்னுந் தன்மையை உலகம் அறிந்து உய்யும் பொருட்டு, இவருக்கு இறைவர் வறுமையை வழங்கினார். சேக்கிழார் அதனை வறுமை என்னாது, வறுமைப்பதம் என்று அருளிச் செய்தனர். வெண்திருநீறு புனைந்த, மாதவர்க்கு விருந்து செய்துறு பெருமிடியே எனக்கு வேண்டும் என்று வேண்டுவார் சிவப்பிரகாசர். நிலங்களை ஒற்றிவைத்தும், விற்றும், ஆபரணம் பாத்திரம் முதலியவைகளை விற்றும் அடியவர்க்கு அன்னம் முதலியன அளித்து உபசரித்த நாயனாருடைய அன்பின் திறத்தை ஆரே அளக்கவல்லார்?

"தண்டறு சிந்தை தபோதனர் தாமகிழ்ந்
துண்டது மூன்று புவனமும் உண்டது."

ஆதலின், இப்பெருந்தகை இத்திருத்தொண்டினை வளஞ் சுருங்கியும் மனஞ்சுருங்காது செய்தார்.

வறுமை வந்தபோது, ''நான் இறைவனை வழிபட்டு, அடியார்க்கு அன்னமுஞ் சொன்னமும் வழங்கினேனே? அத் தெய்வம் என்னை வறுமையிலே வருத்துகின்றதே. கடவுளுக்குக் கண்ணில்லையே!'' என்று கடவுளைச் சலித்துக் கொள்வது உலக மாந்தர் இயல்பு.

நாயனார் நல்குரவு என்னும் நடலையால் நலிந்தும் இறை வனையும் அடியார்களையும் தருமத்தையும் வெறுக்கவில்லை. வறுமையுற்றபோது முன்னிலும் பன்மடங்கு அன்புடன் அறம்புரிந்தார். அவருடைய அறச்செயலுக்குச் சிறிதும் மாறுபாடு இன்றி அவருடன் ஒன்றுபட்டுத் துணைபுரிந்த அம்மையாரது அருட்பண்பு அதனினும் பாராட்டுதற்கு உரியது.

இவருடைய பெருமையை உலகினுக்கு உணர்த்த இறைவர் திருவுளங் கொண்டார். தவசீலராகி வந்தார் தருமமே விடையா தலின், தருமவிடையையும், தரும சம்வர்த்தினியாகிய அம்பிகை யையும் இன்றி வந்தார். தருமத்தைச் சோதிக்க வந்தாராதலின், இவருடைய இடரை அருளம்பிகை காணப் பொறுக்கமாட்டார் என்பதும் அறிக.

பெருமான் வந்த நேரம், மாரிக்காலம்; பெருமழை; நள்ளிரவு; பேரிருள். நாயனாரும், அம்மையாரும் உணவு இன்மையால் உறங்காது வருந்துந் தருணம். அத்துணை இடரில் இன்னலுறும் போதும், விருந்து எதிர்கொண்டனர். "ஈர மேனியை நீக்கி" என்ற தனால் பெருமான் மிகவும் நனைந்து வந்தனர் என்பது விளக்கமா கின்றது.

மனைவியாருடன் நாயனார் ஆலோசிக்கின்றார். அடிய வர்க்கு உணவு தருவதே தமது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டவர் ஆதலின், அம்மையாரை நோக்கி, "நமக்கு உண வில்லை என்பதனை நான் உணர்வேன். எனினும் நம்மனைக்கு வந்தவர் பட்டினி கிடக்கப்படாதே. இதற்கு என்ன செய்வது" என்று வினாவினார். ஏன்? ஒருவர் தமது மனையில் வந்து பட்டினி கிடப்பாராயின் அவர் புரிந்த தீவினையில் ஒருபகுதி மனைக்கு உரியாரைச் சாரும் என்பது இல்லற நூலின் துணிபு.

அம்மையார் கூறுந்திறம் மிகவும் சிறந்தது; ஒரு கருத்தை மனத்துள் வைத்து, அந்த வழியைத் தவிர, "மற்றொன்றுங் காண்கி லேன்: ஏதிலாரும் இனித்தருவார் இல்லை; போதும் வைகிற்று; போமிடம் வேறு இல்லை" என்று கூறிப் பின்னர், "செல்லல்

நீங்கப் பகல் வித்திய செந்நெல் மல்லல்நீர் முளை வாரிக் கொடு வந்தால் வல்லவாறு அமுது ஆக்கலுமாகும்'' என்று அம்மையார் கூறினார். "பல்வேறு கருக்களில் செல்லல் நீங்கப் பகல்வித்திய செந்நெல்'' என்னும் சொற்றிறமும் சிந்திக்கத்தக்கது.

மிக்க பேரிருள் சூழ்ந்த அந்நள்ளிருளில், நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனாரது அடியார் செல்லத் துணிந்தாரெனின் அவருக்கு அடியவர் மாட்டு இருந்த அன்பின் திறந்தான் என்னே? கணவனாரது வருகையை நோக்கி, அம்மையார் வாயிலின் அருகிலேயே நின்று கணவனாரது வருகையை எதிர்பார்த்திருந்த தார். அதுவும் பெண்மணிகளது சிந்தனைக்குரியது. நெல்லைக் கொணர்ந்து தந்தபின், விறகில்லை என்றும், அமுதாக்கியபின் கறிக்கு என் செய்வோம் என்றும் அம்மையார் கூறியது எற்றுக்கோ? எனின்; நெல்முளையைக் கொணர இயலுமோ இயலாதோ என்னும் ஐயப்பாட்டினால் அப்போதே விறகில்லை என்று கூறினாரில்லை. கொணர்ந்தபின் அதனை அமுதாக்க விறகைக் கேட்டார். அது அமுது ஆகுமோ ஆகாதோ என்ற ஐயப்பாட்டினால் அப்போதே கறியமுதுக்கு என்செய்வோம் என்று கேட்டாரில்லை. பாசப்பழிமுதல் பறிப்பார்போல இளங் கீரைகளைப் பறித்துவந்து கணவனார் தர, அதனை அம்மையார் வேறு வேறு வகையாகக் கறியமுது செய்தார். அதனால், அவருடைய சமையல் திறமும் வியத்தற்குரியது.

வறுமையினும், சிறுமையின்றி அடியார்கட்கு அன்னம் அளித்தபடியால் நாயனார் சிவலோகமெய்தி, அளகேசன் நவநிதிகளை ஏந்தி இவர் ஏவிய ஏவல்களைச் செய்து பணிவிடை கேட்ப அழியாத இன்பமெய்தினார். ஆதலின், அடியார் பூசை சாலவும் சிறந்தது.

மெய்ப்பொருள் நாயனார் புராணம்

"வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்"

நீதியின் மிக்கது சேதி நாடு; அந்நாட்டின் தலைநகர் திருக் கோவிலூர். சிவபெருமானுடைய திருவடியில் என்றும் அன் புடைய மலாடர் மரபில் வந்தவர் மெய்ப்பொருள் நாயனார். வேதாகம நெறியில் நின்றவர். அரனார் அடியார்கட்கு என்றும் காதலுடன் கருத்து அறிந்து ஏவல் புரிவார். அரசியல் நெறியில் வந்த அறநெறி வழுவாதவர். வாள்வலியாலும் தோள் வலியாலும் சிறந்தவர். எதிர்த்த பகைவர்களை வென்று வாகை மாலை சூடுவார். நடேசப் பெருமானுடைய திருவடியை நாடுவார். உரை திறம்பாத ஒரு நெறியில் மனம் வைத்தவர். சிவனடியார் திரு வேடத்தையே பொருளாகக் கொண்டவர்.

சிவபெருமானுடைய திருக்கோயில்கள் எல்லாவற்றினும, காலந்தவறாதும், நிரம்பிய படித்தரத்துடனும் பூசை நிகழ ஏற்பாடு புரிவார். ஏழிசைப்பாடலும் ஆடலும் அயர்விப்பார். முப்போதும் திருக்கோயில் வழிபாடு புரிவார். எப்போதும் ஐந்தெழுத்தை ஓதுவார். சிவனடியார் திருவடியே சார்பாகக் கொண்டு மாநிலத்தை ஆண்டு வந்தார்.

தீவினை விட்டு ஈட்டிய பொன்னையும் பொருளையும் அம்பலவாணரது அடியார்க்கே உரியனவாம் என்று எண்ணிய உள்ளத்தோடும், அடியார்கட்கு ஒரு சிறிதும் குறைவற்ற அன்புடன் வேண்டுவன தந்து அன்பு செய்வார்.

பொய்ப்பொருளைப் பொருளாகக் கொள்ளாத மெய்ப் பொருள் நாயனார் இவ்வாறு அரசுபுரிந்து வாழும்போது, முத்திநாதன் என்ற ஒரு மன்னன் இவருடைய வளமை மிகுந்த நாடு நகரங்களைக் கைப்பற்ற அவாவினான். பேராசையால் நால்வகைச் சேனைகளுடன் வந்து எதிர்த்தான். புரமெரித்த அரனார் திருவருளால் நாயனார் அவனை வென்று புறங்காணச் செய்தார். வின்முறை வல்ல மெய்ப்பொருள் நாயனாரால் பன்முறை அவன் தோற்று அவமானப்பட்டு அகன்றான்.

பலகாலுந் தோல்வியடைந்த முத்திநாதன் போர்புரிந்து வெல்லுந் திறமை இல்லாது வருந்தினான். தவவேடம் புனைந்தான். சிவனடியார் திறத்து நாயனாருக்குள்ள ஒப்பற்ற அன்பினை உணர்ந்தான். நீறுங் கண்டிகையும் புனைந்து வஞ்சனையால் வெல்லுமாற கருதினான்.

மெய்யெலா நீறு பூசி வேணிகண் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி யேந்தி
மைபொதி விளக்கே யென்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்தி நாதன்.

எந்த எந்த அங்கங்களில் எவ்வாறு எவ்வாறு திருநீறு புனைய வேண்டுமோ அந்த முறைமையின்றி, உடம்பெல்லாம் திருநீறு பூசினான். சடைகளை முடித்துக் கட்டினான். வாளை ஆடையில் மறைத்து புத்தகம்போல் கட்டி ஏந்திக்கொண்டு, மையினை உள்ளே பொதிந்து வைத்து வெளியே ஒளிசெய்யும் விளக்கே யென்று சொல்லும்படி, மனத்திலே வஞ்சனையை வைத்துத் தவவேடம்போல் பொய்வேடம் பூண்டு வந்தான்.

கருணை சிறிதுமில்லாத பாதகனாகிய முத்திநாதன் கொடிகளோடும் உயர்ந்த மாளிகைகள் வரிசையாக உள்ள வீதிவழியே சென்று சேதியர் பெருமான் அரண்மனை வாயிலை யடைந்தான். காவலர்கள் தொழுது, “எம்மையுடையவர் தாமே வந்தார். உள்ளே எழுந்தருளும்'' என்று தடையின்றி உபசாரத்தில் உள்புக விட்டனர். இப்படிக் காவல் பல கடந்து வருகின்றான். அரசர் அடியார்மாட்டு அளவுகடந்த அன்புடையராதலின் அவரது ஏவலராங் காவலர்களும் அடியவர் மீது அன்பு செலுத்துபவர்கள். முத்திநாதனை உண்மையானவன் என்றே எண்ணி வழிவிட்டனர்.

திருவணுக்கன் வாயிலில் தத்தன் என்ற ஓர் அறிவின்மிக்க காவலன் நிற்கின்றான். அரசர் உள்ளே துயில்புரிகின்றார். அரசமாதேவியார் அருகில் இருந்து கணவனுக்கு ஏற்ற திருத் தொண்டினைச் செய்து கொண்டிருந்தார். அந்த இடத்தினைத் தான் தத்தன் காவல் புரிகின்றான். கூர்த்த மதியுடைய அக்காவலன் பொய்ம்மை வேடம் புனைந்து வரும் புல்லனை நல்லன் அல்லன் என்று ஐயுற்றான். பணிவுடனும் மரபு வழுவாமலும் முத்திநாதனை நோக்கி, “அடிகேள்! மன்னர் பெருமான் துயில் கொள்ளுகின்றனர். அவர் தங்களை வரவேற்கவும், தாங்கள் அவருக்கு அருள்புரியவும் இது ஏற்ற சமயமன்று. ஆதலின் இடை தெரிந்தருளும்” என்றான்.

முத்திநாதன், ‘‘நான் மன்னனுக்கு உறுதி கூற வந்திருக்கின்றேன்; நீ நில்’’ என்று அவனிடம் கூறி நிறுத்திவிட்டு உள்புகுந்தான். பொன்னாலாகிய கட்டிலில் மன்னன் துயிலவும் மாதேவி அருகில் இருந்து தொண்டு செய்யவுங் கண்டான். அவனைக் கண்ட அரசமாதேவி துணுக்குற்று எழுந்து கணவனாரை எழுப்பினார். மெய்ப்பொருள் நாயனார் எழுந்து முத்திநாதனை நோக்கி, ‘‘தேவதேவருடைய திருத்தொண்டர்’’ என்று கரங்கள் கூப்பித் தொழுது, எதிரோடி வணங்கினார்.

மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற தென்கொலோ என்று கூற
உங்கள்நா யகனார் முன்னம் உரைத்தவா கமநூல் மண்மேல்
எங்குமில் லாத தொன்று கொடுவந்தேன் இயம்ப என்றான்

‘‘மங்கலம் பெருக என் வாழ்வு வந்து அணைந்தது’’ என்று கூறி, ‘‘அடிகேள்! தேவரீர் இங்கு எழுந்தருளப் பெற்றது என் கொலோ’’ என்று வினாவினார். முத்திநாதன், ‘‘அரசரேறே! உங்கள் சிவபெருமான் முன்னர் திருவாய் மலர்ந்தருளிய சிவாகம நூல் ஒன்று கொணர்ந்தேன்; மண்மேல் எங்கும் இல்லாதது. உனக்கு இதனைக் கூறவந்தேன்’’ என்றான்.

சேதிநாட்டுச் செம்மல் உள்ளம் உவந்து, ‘‘அடியேனுக்கு இதனினும் உயர்ந்த பேறு வேறு உண்டோ? எம்பிரான் அருள் செய்த இந்த மாறுபாடில்லா ஆகமத்தை படித்தருளும்’’ என்றார். முத்திநாதன், ‘‘வேந்தர் வேந்தே! மலர்மாலை சூடிய கூந்தலை யுடைய அம்மையார் நீங்க, நீரும் நானும் வேறு இடத்தில் இருக்க வேணும்’’ என்றான்.

பேறெனக் கிதன்மே லுண்டோ பிரானருள் செய்த விந்த
மாறிலா கமத்தை வாசித் தருள்செய வேண்டு மென்ன
நாறுபூங் கோதை மாதும் தவிரவே நானு நீயும்
வேறிடத் திருக்க வேண்டும் என்றவன் விளம்ப வேந்தன்

மெய்ப்பொருள் நாயனார், தன் அருகில் திருமகளைபோல் நின்ற தேவியாரை அன்புடன் நோக்கிப், ‘பெண்மணியே! நீ அந்தப் புரத்திற்குச் செல்லுதி’’ என்று பணித்தார். அம்மையார் தொழுது அகன்றார். அப்பாதகன் கைத்தலத்தில் இருந்த பையை எடுத்து, வணங்கி நின்ற குணங்குடி கொண்ட கோமானை நினைத்தபடியே செய்தான். ‘‘மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்’’ என்று தொழுது வேந்தர் பெருமான் வென்றார்.

வஞ்சக வேடங்கொண்ட வன்கணாளன் உட்புகுந்தபோதே தத்தன் தன் மனம் அவன்பால் வைத்திருந்தான். ஆதலின், உடனே உட்புகுந்து, வாளையெடுத்து அவனை வெட்டுதற்கு ஓங்கினான். குருதிசோர விழுகின்ற நாயனார் தமது நீண்ட கரத்தால் தடுத்து, "தத்தா! நமர்" என்று கூறி வீழ்ந்தார்.

மிகுந்த வேதனையுடன் வீழ்ந்த வேந்தரால் விலக்கப்பட்ட தத்தன், அரசர் ஆணையில் அளவற்ற மதிப்பு வைத்தவன். ஆதலின் முத்திநாதனை வெட்டாது வாளை உறையிலிட்டு, மன்னரைத் தாங்கி விடுத்து, "எந்தாய! அடியேன் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டான். மெய்ப்பொருள் நாயனார், "தத்தா! எம் பிரானுடைய திருத்தொண்டர் யாதோர் இடையூறுமின்றிப் போகுமாறு நீ துணையாக உடன் சென்று வழிவிட்டு வருக" என்று கட்டளையிட்டார்.

அறிவும் வீரமும் அன்பும் அரசரது ஆணை கடவாத்திறமும் ஒருங்கேயமைந்த தத்தன் முத்திநாதனை அழைத்துக் கொண்டு வழிவிடப் புறப்பட்டான். அரசர் பெருமானை அத்தீயவன் கொன்ற செய்தி காட்டுத்தீயைப் போல் ஊரெங்கும் பரவியது. எல்லோர் உள்ளத்திலும் துன்பவெள்ளம் ஊற்றெடுத்தது. அவ்வெள்ளத்தை வற்றச் செய்து சினக்கனல் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. எங்கும் ஒரே பரபரப்பு. பலர் காலகூட விடம்போல் சீறினர். "அருள்குடி கொண்ட அரசருக்குத் தீங்கு செய்த பொய்த்தவன் தன்னைக் கொல்வோம்" என்று நாலா பக்கங்களிலும் வெள்ளம்போல் சூழ்ந்து வந்தனர்.

தத்தன் கொதித்து வந்த அனைவரையுந் தடுத்து, "'இந்த வேடதாரியை ஓர் இடையூறுமின்றிக் கொண்டு போய் விட வேண்டுமென்பது அரசரது கட்டளை" என்று கூறினான்.

அரசனது ஆணைக்கு அஞ்சிப் பலரும் விலகினர். தத்தன் வடிவாளுடன் காவல்செய்து முத்திநாதனைக் கொண்டு போய் நகரந் தாண்டி, ஆட்கள் அணுக முடியாத கானகத்தில் விடுத்துத் திரும்பினான்.

அரசர், தவவேடங்கொண்டு தனக்குத் தீங்கு செய்தவன் துன்பமின்றி நகர்கடந்த செய்தியை அறியும் அவாவினால் செல்லுகின்ற உயிரைச் செல்லாதவண்ணந் தாங்கிக் கொண் டிருக்கின்றார். தத்தன் மன்னர் பெருமானிடம் வந்து வணங்கி, "எம்மையாளுஞ் செம்மலே! தவவேடங்கொண்ட அவரை

இடையூறு இன்றிக் கொண்டுபோய் விட்டனன்'' என்றான். அதுகேட்ட அண்ணல் அகங் குளிர்ந்தது. முகம் பொலிந்தது. "இன்று எனக்கு ஐயன் செய்த உபகாரம் யார் செய்வார்?'' என்று கூறித் தத்தனை அருள்நிறைந்த பார்வையால் நோக்கி நிறைபெருங் கருணை மிகவுஞ் செய்தார்.

சென்றடி வணங்கி நின்று செய்தவ வேடங் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி விட்டனன் என்று கூற
இன்றெனக் கையன் செய்த தியார்செய்ய வல்லார் என்று
நின்றவன் றன்னை நோக்கி நிறைபெருங் கருணை கூர்ந்தார்

மெய்ப்பொருள் நாயனார், அரசியலைச் சேர்ந்த அமைச்சர் முதலியோர்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் நோக்கி, "நீங்கள் யாவரும் பரவிய திருநீற்றன்பு பாதுகாத்து உய்ப்பீர்'' என்று பணித்தருளி, அம்பலத்தாடும் எம்பெருமான் பூங்கழலைச் சிந்தை செய்தார். "என்றும் மன்றுளார் திரு நீற்றின்மீது அன்பு வைத்து உலகம் உய்ய, உலக மக்களை அவ்வன்பின் வழியில் செலுத்துவீர்களாக'' என்ற மன்னரது ஆணையை அனைவரும் சென்னிமேற் கொண்டு அவரைப் போற்றினார்கள்.

சிவபெருமான் உமாதேவியாருடன் அவருக்குக் காட்சி தந்து அருளினார். மூவருந் தேவருங் காணாத முழு முதலை மெய்ப் பொருள் கண்டார். பரமேசுரன் அவரை நோக்கித், தேவர் யாவருக்கும் எட்டாத தமது திருவடி நீழலிற் சேர்ந்து கும்பிடுங் கொள்கையைத் தந்தருளினார். சைவவேடத்தையே பொருளாகக் கொண்ட மெய்ப்பொருள் நாயனார் குஞ்சிதபதஞ் சேர்ந்து பேரா னந்தப் பெருவாழ்வு பெற்றார்.

விளக்கம்

உலகிலே திருநீறும் அக்கமணியுமே மெய்ப்பொருள்; ஏனைய வெல்லாம் பொய்ப்பொருளே யாகும்.

"பொய்ச்சினத்தை மாற்றி மெய்ச்சினத்தை யேற்றி
பொற்பதத்து ளாக்கு புலியூரா''

என்பார் அருணகிரிநாதரும்.

எனவே, திருநீறும் கண்டிகையும் புனைந்த இவ்வேடத்தையே மெய்ப்பொருளாகக் கொண்டபடியால் இப் பெருந்தகையார் மெய்ப்பொருள் நாயனார் எனப்படுவர். "மாலற நேயம்

மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே'' என்ற சிவஞான போதச் சூத்திரத்திற்கு இலக்கியமாக இருந்தார்.

சிவவேடம் புனைந்தவர் யாவரே யாயினும் அவர்களுடைய குணங்குற்றங்களை ஆராயாது அன்புடன் வழிபடுவார். ஏன்? அவர்களுடைய குணங்களுக்குத் திருவருளும், குற்றங்களுக்குத் தண்டனையும் தருவது இறைவனுடைய திருவருளின் செயல். ஆதலின், ஆராய்வது நமக்குக் கடனன்று'' என இவர் கருதினார். அரசனுடைய ஏவலர்கள் செய்யும் குணங்குற்றங்களை ஆய்ந்து வெகுமதியும் தண்டனையுந் தருவது அரசனது கடப்பாடன்றோ? ஏனைய குடிகள் அதனை நோக்காது, அரசனுடைய ஏவலர் என்று மதித்து வணங்குவது கண்கூடன்றோ?

அன்றியும் தான் தேடிய செம்பொன் முதலிய யாவும் அரனடி யார்க்கே என்று கருதி வழங்கி வந்தார்.

தேடிய மாடு நீடு செல்வமுந் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க் காவன வாகு மென்று
நாடிய மனத்தி னோடு நாயன்மா ரணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார்

சிவாலயங்களின் நித்திய நைமித்திக வழிபாடுகளும் குறைவின்றிச் செவ்வையாக நடந்துவர ஏற்பாடு செய்தார். சிவாகம நெறி தவறாது அன்புடன் நிகழுமாறு செய்தார். தேசமும் நாடும் அரசும் வாழ்வது ஆலயவழிபாட்டினால்,

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடில்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங் குன்றும்
கன்னங் களவு மிகுந்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே.

என்பர் திருமூல நாயனார்.

முத்திநாதன் என்ற அரசன் இவருடன் போர் செய்து பலமுறை தோல்வியுற்றுத் திருநீறும் கண்டிகையும் அணிந்து வஞ்சனையை மனத்தில் வைத்துக்கொண்டு வந்தான். அவன் வந்த வஞ்சனை நிலையை ஆசிரியர் சேக்கிழார் அடிகள்,

"மைபொதி விளக்கே என்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்தி நாதன்"

என்று கூறியருளிய உவமை நயத்தை உற்றுநோக்குக. இது யாரும் கூறாத அருமைப்பாடு உடையது.

காவலர் பலரும் இவனைக் கைதொழுது உள்ளே விடுத்தனர். பள்ளியறையைக் காவல் புரியும் தத்தன் சிறந்த மதிநலம் படைத்த வன். குறிப்பு உணர்வதிலும் வல்லவன். தவவேடம் புனைந்த அவனைத் தடுப்பதும் தவறு; தடுக்காதொழியின் அரசர்க்குத் தீங்கு வரும். இவ்வாறு, இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவிக்கின்றான் தத்தன். அவன் முத்திநாதனைத் தடுக்கும் அழகு மிகமிக சதுரப்பாடுடையது; "இடைதெரிந்தருள வேண்டும் துயில் கொளும் இறைவன்" என்பது அவனுடைய தடையுரை. அது எத்துணை இனிமையாக அமைந்துளது என்பதை உன்னுக.

முத்திநாதன் அவனுடைய தடையுரையை ஏற்காமல் உள்ளே சென்றான். அரசமாதேவியார் அரசரை எழுப்பினார். மெய்ப் பொருள் நாயனார் மிகமிக மகிழ்ந்து போற்றுகின்றார். தனம் படைத்த ஒருவர் தூங்கும்போது ஒருவர் சென்றால் அவர் தூக்கத் திற்குப் பங்கம் வந்ததேயென்று வருந்துவர்; சீறுவர். அரசர் மகிழ்கின்றார். "மங்கலம் பெருக, மற்றென் வாழ்வு வந்து அணைந் தது" என்று கூறித் துதிக்கின்றார்.

பரமசிவத்தினிடம் அன்பில்லாத அவன் 'நமது நாயகன்' என்னாது, 'உங்கள் நாயகனார் முன்னம் உரைத்த ஆகமம்' என்கின்றான். 'மண்மேல் எங்கும் இல்லாதது ஒன்று கொடுவந்தேன் இயம்ப" என்றான். இந்த வஞ்சனை எங்கும் இல்லாததன்றோ?

> "நாறுபூங் கோதை மாதுந் தவிரவே நானும் நீயும்
> வேறிடத் திருக்க வேண்டும்."

என்றான் முத்திநாதன். "மலர்முடித்த கூந்தலையுடைய அரச மாதேவி விலகவேண்டும். நீயும் நானும் தனித்திருக்க வேண்டும்" என்பது அதன்பொருள். அன்றியும், "அரசமாதேவி இனி மலர் முடித்தலை நீங்கக் கொல்லவந்த என்னைக் கும்பிடும் நீ சிவலோகமும், கும்பிடுகின்ற உன்னைக் கொல்லும் நான் நரக லோகமும் சென்று, இப்போது ஒன்றாக உள்ள நாம் மேலும் கீழுமாக வேறு லோகங்கட்குப் போக வேண்டும்" என்ற பொருளும் அதற்குள் அமைந்திருப்பதைக் காண்க.

அம்மையார் அகல, அரசர் தொழும்போது முத்திநாதன் வாளையெடுத்தான். அடியார்கள்மீது சேக்கிழார் பெருமானுக்கு உள்ள அளவற்ற அன்பு காரணமாகக் கொன்றான் என்று கூறாமல், "நினைந்த அப்பரிசே செய்ய" என்று கூறும் தன்மையும்

உள்ளத்தையும் உருக்குகின்றது. வெளிப்படையாகப் பார்த்தால், நாயனாரைக் கொன்று வென்றதாகத் தோன்றும். ஊன்றி நோக்கினால் கொல்ல வாளெடுத்த போதும் வேடமே மெய்ப்பொருள் என்று தொழுதபடியால் வென்றது மெய்ப்பொருளே யாவார்.

"மெய்த்தவ வேட மேமெய்ப் பொருளெனத் தொழுது வென்றார்"

"வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள்" என்பார் நம்பியாரூரர்.

மனம் அங்கு வைத்த தத்தன் விரைந்து உள்புகுந்து முத்திநாதனை வாளினால் வெட்ட ஓங்கினான். குருதி சோர விழுங் குரிசில், "தத்தா! நமர்" என்று தடுத்தார். அவருடைய அன்பின் ஆழம் இங்கேதான் அதிகமாகக் காணப்படுகின்றது. தத்தன் அரசரது ஆணைக்கு அடங்கி, "அடியேனுக்கு என்ன உத்தரவு" என்றான். "இவரை இடையூறின்றி வெளிப்படுத்து" என்றார் இறைவர். முத்திநாதனைக் கொல்ல முயன்ற அனைவரையும் தடுத்து தத்தன் ஊர் கடந்து விடுத்து வந்தான். அவன் வரும்வரை அரசர் உயிர் தரித்திருக்கின்றார். தத்தன் மீண்டுவந்து, "இடை யூறின்றி விடுத்தேன்" என்றான். அதுகேட்ட அரசர் அளவற்ற மகிழ்ச்சியடைந்து,

"இன்றெனக் கையன் செய்தது யார்செய்ய வல்லார்" என்கின்றார்.

இதனால், அவருக்குத் தவவேடத்தின் மீது இருந்த அன்பு இமயமலையினும் உயர்ந்ததென்று விளங்குகின்றது.

உயிர் பிரியும்போது அம்பலவாணர் அடிமலரைச் சிந்தித்தார். உயிர் பிரியும்போது சிவசிந்தை வருவதற்காகவே பல நாளும் ஜெப தப வழிபாடுகளால் முயல்வது. ஆரேயுங் காணாத அரனார் அவருக்குக் காட்சிதந்து அருள்புரிந்தார்.

விறன்மிண்டநாயனார் புராணம்

"விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்கு அடியேன்"

நீர்வளம், நிலவளம், மலைவளம், குடிவளம் முதலிய எல்லா வளங்களையும் உடையது மலைநாடு. சிவபெருமானை வேண்டப் பெருமாதவம் புரிந்து பரசு என்ற ஆயுதம் பெற்ற பரசு ராமனுடைய நாடு அம் மலைநாடு. தன் தந்தை சமதக்கினியைக் கொன்ற காரணத்தால் இருபத்தோரு தலைமுறை மன்னர் குலத்தை வதைத்து அவ்வுதிர நீரால் பிதிர்க்கடன் கழித்து கடலால் சூழ்ந்த இவ்வுலகைக் காசிபர்க்குத் தந்துவிட்டு, பொற்கடலை அடைந்து, மழுவினால் கடலை விலகச்செய்து அதனால், பெற்ற மலை நாட்டைப் பரசுராமர் வேதியர்க்குந் தந்தனர்.

கடலில் விளையும் முத்துக்களையும், கரும்பில் தோன்றும் முத்துக்களையும், மூங்கிலில் பிறக்கும் முத்துக்களையும், யானைக் கொம்பினின்றும் உண்டாகும் முத்துக்களையும், முத்தநகைப் பெண்மணிகள் முறையாகக் கோத்து இறைவனுக்கு அணிவித்து அணிந்துகொள்ளும் வளமை மிக்க அந்தச் சேர நாட்டில் விளங்கும் பலஊர்களில் மிகவும் சிறந்த பழமையான ஊர் திருச் செங்குன்றூர்.

அத்திருநகரில் உழவுத் தொழிலில் வல்லவரும், வேதாகம நெறியில் ஒழுகுபவருமாகிய வேளாளர்களும், மறைநூல் வல்ல வேதியரும் இனிது வாழ்ந்து வந்தனர்.

அப்பொற் பதியி னிடைவேளாண் குலத்தை விளக்க அவதரித்தார்
செப்பற் கரிய பெருஞ்சீர்த்திச் சிவனார் செய்ய கழல்பற்றி
எப்பற் றினையு மறவெறிவார் எல்லை தெரிய வொண்ணாதார்
மெய்ப்பத் தர்கள்பாற் பரிவுடையார் எம்பி ரானார் விறன்மிண்டர்.

நிலமகளது மலர்முகம்போன்று விளங்கும் திருச்செங்குன் றூரில் வேளாண்குலத்தில் அவதரித்தவர் விறன்மிண்ட நாயனார். அளவிட்டு உரைக்கவொண்ணாத பெரிய சிறப்பினையுடைய சிவபெருமானது திருவடிகளைப் பற்றி ஏனைய பற்றுக்களை அறவே களைந்தவர். முடிவில்லாத அன்புடையவர். உண்மை யான அடியார்களிடம் திண்மையான அன்பு பூண்டவர்.

நுட்பமான அறிவு நலமும், திட்பமான மனநலமும் படைத்தவர். தணியாத காதலுடன் ஐந்தெழுத்தை ஓதுவார். திருநீறுங் கண்டிகையும் பூண்டு சிவபக்தி செய்து வருவார்.

நதியும் மதியும் புனைந்த சடை நம்பர் விரும்பிவாழும் திருப்பதிகள் எங்கும் சென்று எம்பிரானை வழிபடுவார். அவ்வாறு வழிபடும்போது சிவனடியார் திருக்கூட்டத்தை முதலில் தொழுது, பின்னரே பரமேசுரனைத் தொழுவார்.

பொன்கொழிக்கும் அருவிபாயும் மலைநாட்டைக் கடந்து ஏனைய நாடுகளிற் சென்று ஆங்காங்குள்ள திருக்கூட்டத்தினரைத் தொழுதும் சிவாலயங்களைச் சேவித்தும், திரிபுரமெரித்த விரிசடை விமலர் வாழும் திருவாரூரை அடைந்தார். புற்றிடங் கொண்ட புராதனராம் புண்ணியரைப் புகழ்ந்து போற்றினார்.

திருவாரூர் திருக்கோயிலில் சிறப்புற்று விளங்குவது தேவாசிரியன் மண்டபம். அத் திருமண்டபத்தில் எப்போதும் அடியார்கள் குழாங்கள் இருந்து அரனாமம் ஓதி அன்பு செய்யும். சிவலோகம்போல் திகழும் அத்தேவாசிரியன் திருமண்டபம். அம் மணிமண்டபத்தில் நிறைந்துள்ள சிவனடியார் திருக்கூட்டத் தினைப் பணிந்து அக்கூட்டத்தின் நடுவுள் தாமும் ஒருவராக விறன்மிண்டர் இருந்தார்.

நம்பியாரூரர் நாடோறும் பூங்கோயில் சென்று புற்றிடங் கொண்ட திருமூல நாதரை வழிபடும் நியதி பூண்டவர். அது படி அன்று திருக்கோயிலினுட் புகுந்து செல்வார். செல்பவர் தேவாசிரியன் மண்டபத்தில் குழுமியிருக்கும் திருக்கூட்டத்தினரை நோக்கி, “இத்திருத் தொண்டர்கட்கு என்னை அடியேனாகச் செய்யுநாள் எந்நாளோ?” என்று, இறைவரைச் சிந்தித்து நேரே கோயிலுக்குட் சென்றார். அதனை விறன்மிண்டர் கண்டார்; “திருக்கூட்டத்தை அடைந்து தொழுது உட்செல்லாது, ஒருவாறு ஒதுங்கிப்போவது என்ன முறை” என்று வெகுண்டார். “திருக் கூட்டத்தை வணங்காது ஒதுங்கிச் செல்லும் வன்தொண்டன் அடியார்களுக்குப் புறகு; அவனை வலிய ஆட்கொண்ட சிவ பெருமானும் புறகு” என்றார்.

அதனைக் கேட்ட சுந்தரர் அஞ்சி ஆலமுண்ட நீலகண்டரைச் சிந்தித்து நின்றார். சிவபெருமான், ‘தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்” என்று அடியெடுத்துக் கொடுத் தருளினார். ஞாலமுய்ய நாம் உய்ய சைவ நெறியின் சீலமுய்ய

நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகையைப் பாடித் திருக் கூட்டத்தை வணங்கினார்.

விறன்மிண்ட நாயனார் அதைக்கேட்டு அளவற்ற மகிழ்ச்சி யடைந்து, "இச்சுந்தரருடைய உள்ளம் அடியாரிடத்திலே பதிந்திருக்கின்றது" என்று அருள்புரிந்தார்.

இவ்வாறு, திருத்தொண்டத் தொகை பாடுவதற்குக் காரண மாயிருந்த விறன்மிண்ட நாயனார், இமயமலையினும் வலிய அடியவர் பக்தி பூண்டு ஒழுகினார். அவரது அளவற்ற அடியவர் பக்தியைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் நாயனாரைத் தம்மைப் பிரியாது வணங்கும் சிவகணங்கட்குத் தலைவராகத் திகழுமாறு அருள்புரிந்தார்.

விளக்கம்

அடியவர் பக்தியை விளக்குவது விறன்மிண்ட நாய னாருடைய வரலாறு. சிவபக்தியினும் அடியவர் பக்தியே திரு வருளைப் பெறுவதற்கு எளியவழி. பசுவின் பால் பெறுவதற்குக் கன்றின் துணை வேண்டப்படுவதுபோல் சிவபெருமானுடைய திருவருளைப் பெறுவதற்கு அடியவர் துணை அத்தியாவசிய மானது.

அன்றியும், இறைவனைப் பகைத்து வாழ்பவர்க்கு ஒருகால் உய்வு உண்டாகும்; அடியார்களைப் பகைத்தவர் ஒருபோதும் உய்வுபெறார். சூரியனை எதிர்த்து வெயிலில் நின்று உய்வு பெறலாம். சூரியனது சந்நிதியில் காய்ந்த நொய்மணலில் நின்று உய்வு பெறலாகாது.

இத்தகைய அடியவர் பக்தியிற் சிறந்த உறுதியும் உறைப்பும் உடையவர் விறன்மிண்ட நாயனார். ஆனால், மெய்ப்பொருள் நாயனாரைப்போல் வேடம்புனைந்த யாவரேயாயினும் அன்பு செய்யும் தன்மையுடையவரல்லர். உண்மையான அடியவர் களையே போற்றுந் தகவுடையவர். "மெய்ப்பத்தர்கள்பால் பரி வுடையார் எம்பிரானார் விறன்மிண்டர்" என்றதனால் விளங்கு வதை யறிக.

பற்றே பிறவிக்குக் காரணம். ஆதலினால், அகப்பற்று புறப்பற்று என்ற இருபற்றுக்களையும் அறவே ஒழித்துப் பற்றற்ற பரமனைப் பற்றி நின்றார்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்று
பற்றுக பற்று விடற்கு.

என்பார் பொதுமறை யாசிரியர்.

"வம்பனேன் றன்னை யாண்டமா மணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்" - திருவாசகம்

ஆதலின், இவர் பரமனைப் பற்றிப் பற்றற நின்றார்.

"செப்பற் கரிய பெருஞ்சீர்த்தி சிவனார் செய்ய கழல்பற்றி
எப்பற் றினையு மறவெறிவார் எல்லை தெரிய வொண்ணாதார்"

"அடியார் உறவும் அரன்பூசை நேசமும் அன்புமன்றிப்
படிமீதில் வேறு பயனுளதோ."

அடியவரை வழிபட்ட பிறகே சிவமூர்த்தியை இவர் வழிபடுவார். அதுவே, ஆன்றோர் மரபுமாகும்.

"நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ"

என்பார் பட்டினத்துச் சுவாமிகள். முதலில் அடியார் வழிபாடும், பின்னர் சிவபூசையும் பேசப்படுவதை உற்று நோக்குக.

தேவாசிரியன் திருமண்டபத்தில் குழுமியிருந்த திருக்கூட்டத்தி னரை மனத்தால் தொழுது புறவணக்கம் புரியாது ஒதுங்கிச் செல்லும் சுந்தரரை நோக்கி இவர் சினந்தார். "அடியார் திருக்கூட்டத்திற்கு சுந்தரன் புறகு" என்றார். அம்மட்டோடும் நிற்கவில்லை. "அவரை வலிதில் ஓலை காட்டி ஆட்கொண்ட சிவபெருமானும் புறகு" என்றார். எத்துணை உறுதி? என்று உற்று நோக்குக. "இறைவனை அவ்வாறு கூறுவது முறையோ?" எனின்; இறைவனது திருவருள் மயமாக நிற்கும் அவருடைய சொல்லுஞ் செயலும் இறைவருடையனவே. இவர் இவ்வாறு கூறிய காரணம் பற்றி நம்பியாரூரர் திருத்தொண்டத்தொகை பாடியருளினார். திருத்தொண்டத்தொகை பாடுவதற்கு இவருடைய சொல்லே மூலகாரணமாகும். விண்ணும் மண்ணும் உய்ய சுந்தரரைத் தொண்டத் தொகை பாடுவிக்கும் பொருட்டு இவரை இவ்வாறு கூற இறைவனுடைய திருவருள் தூண்டியது.

விறலும் மிண்டும் திருவருள் நெறியில் இவருக்கு இருந்தமை யால் "விறன்மிண்டர்" என்னும் திருநாமத்தினைப் பெற்றார்.

அமர்நீதிநாயனார் புராணம்

"அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்"

சிறப்புமிக்க சோழவள நாட்டில் வளமை குன்றாது விளங்குவது பழையாறை; கரிய வண்டுகள் தேனுண்டு மகிழ்ந்து இசை பாடும் இனிய பூம்பொழில்கள் அதனைச் சூழ்ந்திருக்கும்; செழுமணித் தேரோடும் திருவீதிகளுடன் கூடியது அத்திருத்தலம். என்றும் அழியாது நின்ற பெருமையுடையது.

சிவமணங் கமழும் பழையாறை என்னும் அத்திருப்பதியில் அவதரித்தார் அமர்நீதியார். அவர் வணிகர் குலத்தில் வந்தவர். பொன், முத்து, நவரத்தினங்கள், சிறந்த பட்டு, பருத்தியாடை முதலியவைகளை எந்த எந்தத் தேயங்களில் சிறப்பாக விளையுமோ அந்த அந்த தேயங்களில் இருந்து தருவித்துக் குவித்து எல்லோரும் எளிதில் பெறுமாறு வாணிபஞ் செய்வார்.

சிந்தை செய்வது சிவன்கழ லல்லதொன் றில்லார்
அந்தி வண்ணர்தம் அடியவர்க் கமுது செய்வித்துக்
கந்தை கீளுடை கோவணங் கருத்தறிந் துதவி
வந்தசெல் வத்தின் வளத்தினால் வரும்பயன் கொள்வார்.

சிவபெருமானுடைய திருவடியையன்றி வேறு ஒன்றையுஞ் சிந்தனை செய்யாதவர். செம்மேனி எம்மானுடைய திருத்தொண்டர்கட்குக், கந்தை, துறவிகள் அரைநாணுக்குப் பதிலாக கட்டும் கீளாடை, கோவணம் முதலியவைகளை அன்புடன் அவர்களது கருத்து அறிந்து தந்து, திருவருளால் வந்த செல்வத்தின் பயனை நாடோறும் அடைவார். சிவனைத் தொழுவதால் சிரப்பண்பும், சிவனடியாருக்கு அறஞ்செய்வதால் கரப்பண்பும் ஒருங்கே பெற்றார்.

முக்கட் பரமருடைய திருத்தலமாகிய திருநல்லூர் என்னும் பதியிற் சென்று எம்பெருமானுடைய திருவிழாவைச் சேவிப்பார். உள்ளம் உருகி ஐந்தெழுத்தை ஓதுவார். சிறப்பாக விழாக் காலத்திலும் பொதுவாக மற்ற காலத்திலும் அடியார்கள் இருந்து அமுதுசெய்யும்பொருட்டுத் திருநல்லூரிலே சிறந்த திருமடம் ஒன்றைப் புதுக்கினார். அதில் நாடோறும் அடியவர் அமுது

செய்து அந்திவண்ணனைச் சிந்தனை செய்வார். திருத் தொண்டின் காரணமாக, சுற்றத்தாருடனும் மனைவி மைந்தருடனும் திருநல்லூரில் குடிபுகுந்து வாழ்வாராயினார். திருநல்லூர் மேவிய சிவபெருமானை வழிபாடு செய்துகொண்டும், திருவிழாவைச் சேவித்துக் கொண்டும், அடியார்க்கு அன்ன தானஞ் செய்து கொண்டும், அமர்நீதியார் திருநெறியில் நின்றார். கோவணப் பெருமையையும் அமர்நீதியாருடைய அன்பின் அருமையையும் உலகத்தினருக்குக் காட்டி அவரை ஆட்கொள்ள வேண்டுமென்று கருணையங் கடவுள் திருவுளங் கொண்டார்.

இறையவர் மறையவர் குலத்தில் வந்த ஒரு பிரமசாரி வடிவந் தாங்கி வருகின்றார். அழகிய சிகை; மூன்று வரிவடிவுடன் திருநீறு; உலராத பச்சைத் தருப்பையாற் செய்த பவித்திரம்; முப்புரிநூல்; முஞ்சிப்புல்லால் முறுக்கிய அரைநாண்; வெண்மையான கோவணம்; அறிவுக்கதிர் வீசும் திருமுகம்; கருணை பொழியுங் கண்கள்; சிவந்த திருமேனி; அமைதியான தோற்றம்; ஆகிய இத்தகைய கோலங்களைக் கொண்டு, மறைமுடியிலும் அடியவர் உள்ளத்திலும் நீங்காத திருவடி நிலஞ்செய் தவத்தால் மண்ணிற்பட நடந்து வருகின்றார். இது கோவணங்களுந் திருநீற்றுப்பையும் தருப்பையும் முடிந்த தண்டினை ஏந்திக், கண்டவர் மனம் உருகுமாறு மிக்க வனப்புடன் வந்த அத் திருவாளரை அமர்நீதியார் கண்டார். அகமும் முகமும் மலர்ந்தார். விரைந்து எதிரோடி அடிமலர்மீது முடியுறப் பணிந்தார். திருமடத்திற் கொண்டுவந்து பீடத்தின்மீது இருத்தி வழிபட்டார். "இதுகாறும் இதுபோன்ற திருக்கோலத்தினையும் காட்சியையும் உடையவரை அடியேன் வரப் பெற்றேனில்லை. அடிமையேன் செய்த மாதவப் பயனாகத் தேவரீரை இன்று வரப்பெற்றேன்" என்றார்.

கண்ணுதல் கரந்த அண்ணல், "அன்பனே! உன்னுடைய வள்ளன்மை எங்கும் பாராட்டப் பெறுகின்றது. அடியார்க்கு நிரம்பிய அன்னம் அளித்து, கந்தை, கீள்உடை, அழகிய வெண்மை யான கோவணம் முதலியன தருகின்றாய் என்று கேள்வியுற்றோம். ஆதலின், உன்னைக் காணும்பொருட்டு வந்தோம்" என்று அருளிச் செய்தார்.

அமர்நீதியார், "சுவாமீ! இத்திருமடத்தில் நல்ல தவமுடைய அந்தணர்கள் அமுதுசெய்வதற்கு ஏற்றவாறு வேதியர்கள் தூய்மையாக உணவு தயாரிப்பதும் உண்டு. ஆதலின், தேவரீர்

இன்று இவ்விடத்தில் அமுது செய்து அருளவேண்டும்" என்று வேண்டினார்.

வணங்கிய அன்பரது வேண்டுகோளுக்கு மறையவர் இணங்கி னார். "அன்பனே! அவ்வண்ணமே ஆகுக; நான் சென்று காவிரிநீர் மூழ்கி வருவேன். ஒருவேளை மழை வந்து விட்டால் கோவணம் நனைந்துவிடும். இதனை நீ காப்பாற்றி வைத்துக் கொடுப்பாயாக. கோவணத்தின் பெருமை உனக்கு நன்றாகத் தெரிந்ததுதானே. நான் சொல்லவேண்டிய அவசியமில்லை. இதனை அலட்சியம் செய்யாமல் மிகவும் காவல் உள்ள இடத்தில் வைத்திருந்து நான் வந்தவுடன் தருவாய்" என்று கூறித், தண்டில் முடிந்திருந்த இரண்டில் ஒரு கோவணத்தை அவிழ்த்துக் கொடுத்தருளினார்.

எம்பெருமான் தந்த கோவணத்தைக் குற்றமில்லா அன்பர் வாங்கிக்கொண்டு, "சுவாமீ! விரைவில் நீராடி வாருங்கள்" என்றார். கங்கை நதியைத் தலைமிசை வைத்த சங்கரர் காவிரிப் புனலாடும் பொருட்டுச் சென்றார். அமர்நீதியார் அக்கோவணத்தைத் தாம் அடியார்க்குத் தரும்பொருட்டு வைத்திருந்த கோவணம் ஆடை முதலியவைகளுடன் வைக்காமல், வேறு ஒரு தனியிடத்தில் சேமித்து வைத்தார்.

மறையவராக வந்த மணிகண்டர் கோவணத்தை மறைத்து விட்டார். நீலோற்பல மலர்கள் விளங்குகின்ற காவிரியில் தான் நீராடினரோ? சென்னிமீது புனைந்த கங்கைநீரில்தான் தோய்ந்தனரோ? அறியோம். மழையில் நனைந்து வந்தார். அறு சுவையுண்டிகளையும், ஆயத்தம் புரிவித்து அமர்நீதியார் எதிர்சென்று வணங்கி வரவேற்றார்.

தொண்ட ரன்பெனுந் தூயநீ ராடுதல் வேண்டி
மண்டு தண்புனல் மூழ்கிய ஈரத்தை மாற்றத்
தண்டின் மேலது மீரநான் தந்தகோ வணத்தைக்
கொண்டு வாருமென் றுரைத்தனர் கோவணக் கள்வர்.

அமர்நீதியாருடைய அன்பு என்னுந் தூயநீரில் முழுகும் பொருட்டு எம்பிரான் அன்பரை நோக்கி, "வணிகர்குல வள்ளலே! மழையினால் நனைந்துவிட்டோம். தண்டின் மீதுள்ள கோவணமும் நனைந்துவிட்டது. ஈரத்தை மாற்றும்பொருட்டு முன்னர் நாம் உன்பால் தந்த கோவணத்தைக் கொண்டுவா" என்று அருளினார்.

ஐயர் செய்த கைதவத்தை அறியாத அமர்நீதி நாயனார் விரைந்து உள்ளே சென்று கோவணத்தை வைத்த இடத்தை நோக்கினார். கோவணம் இல்லை. வேறு இடங்களிலும் தேடினார். எங்கும் காணவில்லை; திகைத்தார்; இங்கும் அங்குமாக ஓடினார்; மனம் வாடினார்; "சந்தேகமில்லாமல் கோவணந் தவறி விட்டது" என்று கருதினார்.

"தேவதேவா! கருணாநிதீ! உமது அடியார்கட்குக் கோவணமும் ஆடையுந் தருவதையே நியதியாகக் கொண்டிருந்த அடியேனுக்கு இப்பெரிய இடர்வந்து விட்டதே. என் செய்வேன்? அடியார் பலகாலும் சிறந்தது என்று சொல்லித் தந்த கோவணத்தைக் காணவில்லையே? அந்தோ! அவருக்கு நான் என்ன சொல்வது? பெரும் பாவத்திற்கு ஆளானேனே. தேவரீர். புரியுஞ் சோதனையோ? தமியேன் முன்னைப் பிறப்பில் செய்த வினையின் வாதனையோ? இன்னதென்று அறியேனே கருணையங்கடலே!" என்று பலப்பல எண்ணிப் பரமனைச் சிந்திப்பார்.

அவருடைய உள்ளம் காற்றினும் வேகமாகச் சுழன்றது. வேதியருடைய தொடக்கில் அகப்பட்டுக் கொண்ட அவர் மனைவியாரையும், மற்றைய உறவினரையுங் "கோவணத்தைக் கண்டீர்களோ?" என்று உசாவினார். "நாங்கள் கண்டோமில்லை" என்று கூறி அவர்களும் வருந்தினார்கள். 'மறையவர் ஈரத்துடன் நிற்கின்றாரே' என்ற கவலையுடன் வேறு ஒரு சிறந்த கோவணத்தை எடுத்துக் கொண்டு வந்தார்.

"பெருமானே! தேவரீர். தந்த கோவணத்தைக் காப்பான இடத்தில் வைத்தேன். அது எவ்வண்ணமோ காணப்படவில்லை. அதனை வேறு இடத்தில் ஒளித்து வைப்பாருமில்லை. அது எவ்வாறு மறைந்ததோ அறியேன். பெரிய அதிசயமாக இருக்கின்றது. என்னை மன்னிக்க வேண்டும். வேறு ஒரு நல்ல கோவணங் கொணர்ந்திருக்கிறேன். இதோ பாரும். இது கிழித்த கோவணம் அன்று; தனியாக நெய்தது. ஈரக் கோவணத்தைக் களைந்து விட்டு இதனை உடுத்திக் கொள்ளும்.அடியேனுடைய பிழையைப் பொறுத்தருளும்" என்றார்.

திரிபுரமெரித்த எரிபுரை மேனியர் வெகுண்டார். எரி துள்ளினாற்போல் சீறினார். "நன்று! நன்று! உனது தன்மை மிகவும் நன்று! உன்னிடம் கோவணந் தந்து நீண்டநாள் கழியவுமில்லை. இன்று தந்தது. நல்ல கோவணந் தருவதாக இத்தனை நாட்களாக நீ நடித்தது எனது கோவணத்தை கவர்தற் பொருட்டு போலும்.

உனது வியாபாரம் அழகாக இருக்கின்றது'' என்று கடிந்து உரைத்தார்.

மறையவருடைய சினத்தினைக் கண்ட அமர்நீதியார் மிகவும் அஞ்சினார். பொறிகலங்கினார்; உடல் நடுங்கியது; முகம் புலர்ந்தது. அடிமலர்மீது வீழ்ந்து, "அடிகளே! இப்பெரும்பிழை அறிந்து செய்தேனில்லை. மன்னித்தருள்வீர். தாங்கள் எந்த வகையாகக் கட்டளையிட்டாலும் அந்த வகையில் அடியேன் அடங்கி அப்பணியைச் செய்வேன். அக்கோவணத்திற்குப் பதிலாக நல்ல பட்டாடைகள் நவமணிகள் முதலியன பற்பல ஏற்றுக்கொண்டு அருள்புரிவீர்'' என்று பன்முறை பணிந்தார்.

மணிகண்டர் சினந்தணிந்தவர் போலாகி, "அன்பா! நீ தரும் மணியும், பொன்னும் பிரம்மச்சாரியாகிய எனக்கு எதன் பொருட்டு? அவைகளால் எனக்கு ஒரு பயனுமில்லை. கோவணத்திற்கு நேர் கோவணந் தந்தால் போதும்'' என்று கூறியருளினார். அதனைக் கேட்ட வணிகர்திலகர் மகிழ்ந்தார். "சுவாமீ! மறைந்த கோவணத்திற்கு நேராக பட்டுப் பீதாம்பரங்களைப் பெறுவதற்கு இசைந்தீரில்லை. கோவணந் தரும் வகை யாது? உத்தரவு செய்யும்'' என்றார்.

"அமர்நீதியே! நாம் உடுத்த கோவணமன்றி உன் கையில் கொடுத்த கோவணத்திற்குச் சமானமான கோவணம் இது. இதற்கு எடையாக நிறுத்துத் தந்தால் போதும்'' என்று கூறித், தண்டினில் கட்டியிருந்த கோவணத்தை அவிழ்த்தார்.

அமர்நீதியார் "சாலவும் நன்று'' என்று உள்ளம் உவந்தார். ஒரு துலையை நாட்டினார். பூவணர் தந்த கோவணத்தை ஒரு தட்டினில் இட்டார். மற்றொரு தட்டிலே தம்மிடம் நெய்து அழகாக இருந்த கோவணத்தையிட்டார். நிறைநேர்படவில்லை. இறையவர் கோவணமிட்ட தட்டு தாழ்ந்தது. மற்ற தட்டு உயர்ந்தது. அமர்நீதியார் அடியார்கட்கு அளிக்குமாறு வைத்திருந்த கோவணங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகத் தட்டினில் இட்டார். அத்தட்டு உயர்ந்துகொண்டே இருந்தது. அதுகண்டு அதிசயித்தார். "இது உலகில் எங்குமில்லாத மாயை; இக்கோவணத்தின் பெருமைதான் என்னே? எத்தனைக் கோவுணம் இட்டாலும் நேராகவில்லையே'' என்று உள்ளம் மருண்டார். வெண்மையான ஆடைகள், பட்டாடைகள், சிறந்த பீதாம்பரங்கள் எண்ணில்லாதன இட்டார். நாயனாரது தட்டு மேற்பட, அவருடைய அன்பு நிறைந்த தட்டுக்கு, இறைவருடைய

தட்டு தாழ்ந்துகொண்டே வந்தது. அமர்நீதியார் அதுகண்டு அஞ்சினார். என்ன அதிசயம்! கணக்கில்லாத ஆடைகளையும் பட்டுப் பீதாம்பரங்களையும் இட்டும் துலை நேர்படவில்லையே? என்று திகைத்தார்.

மறையவரை வணங்கி, "எம்பெருமானே! ஆடை, பட்டு முதலியன இடவும் துலை சமமாகவில்லை. ஆதலினால், பொன் மணி முதலியவைகளை இடுவதற்கு அனுமதி தர வேண்டும்" என்று விண்ணப்பம் புரிந்தார். வேதியர், "இனி நாம் வேறு என்ன சொல்ல இருக்கின்றது? உனது விருப்பம் போல் செய்க" என்று அருளிச் செய்தார். வணிகர்திலகராகிய வள்ளல், நல்ல பொன்னும், வெள்ளியிலும் நவமணித்திரளும் வேறு பல உலோ கங்களும், மற்றைய பொருள்கள் எல்லாவற்றையும் துலையில் இட்டார். அப்போதும் துலை தாழாது மேலெழுந்தது. உலகினர் அதுகண்டு வியப்புற்றனர்.

தவநி றைந்தநான் மறைப்பொரு ணூல்களாற் சமைந்த
சிவன்வி ரும்பிய கோவண மிடுஞ்செழுந் தட்டுக்
கவனி மேலமர் நீதியார் தனமெலா மன்றிப்
புவனம் யாவையும் நேர்நிலா வென்பது புகழோ.

புவனமெல்லாம் ஒருங்கு கூடினும் இறைவருடைய கோவணத் தட்டுக்கு நிகராகாதது கண்ட அடியவர் அந்தணரைத் தொழுது, "சுவாமீ! அடியேனுடைய பொருள்கள் எல்லாவற்றையும் துலையில் இடப்பட்டன; இனிவேறு பொருள் யாதுமில்லை. அடியேனும் அடியேனுடைய மனைவியும் மகனும் துலையில் ஏறுவதற்கு அனுமதி தரவேண்டும்" என்றார். இறையவர் அவரை பிறவிப் பெருங்கடலினின்றும் கரையேற்றும் பொருட்டுத் துலையில் ஏற இசைந்தருளினார்.

அமர்நீதியார் மனம் மிகமகிழ்ந்து சென்னியால் வணங்கி, கற்பின் மிக்க மனைவியுடனும், மைந்தருடனும் ஒப்பற்ற அத்துலையை வலமாக வந்து, "இதுகாறும் அடியேன் செய்த அன்பினில், இறைவரது திருநீற்று நெறியிலே அடிமைத்திறம் ஒரு சிறிதும் தவறாதிருந்தது உண்மையாமெனில் இத்துலை நேர் நிற்குமாக" என்றுகூறித், திருநல்லூர் மேவிய தேவதேவரைத் தொழுது, பஞ்சாக்கரத்தை ஓதித் தட்டின் மீது மனைவி மைந்தருடன் ஏறினார்.

இழைத்த அன்பினில் இறைதிரு நீற்றுமெய் யடிமை
பிழைத்தி லோமெனில் பெருந்துலை நேர்நிற்க என்று
மழைத் தடம்பொழில் திருநல்லூர் இறைவரை வணங்கித்
தழைத்த அஞ்செழுத் தோதினார் ஏறினார் தட்டில்.

அளவற்ற அன்புடன் அமர்நீதியார் துலையில் ஏறுதலும்; பூவணத்தவர் கோவணமும், அமர்நீதியாரது குறைவிலா அடிமைத்தொண்டும் ஒப்புடையன ஆதலால் துலையின் இரு தட்டுகளும் நேர்நின்றன.

மதிமிகுந்த தொண்டருடைய பெருமையைக் கண்டு எல்லோருந் துதி புரிந்தனர்; அதிசயமுற்றனர்; அஞ்சலி செய்தனர். அமரர் புதிய பூமழை பொழிந்தனர். அப்பூமழையில் மறைந்த இறையவர் விடையின்மீது உமையம்மையாருடன் காட்சியளித் தருளினார். முக்கண்மூர்த்தியைக் கண்ட அமர்நீதியார் தொழுது துதித்து எல்லையில்லாத இன்பமெய்தினார். ஆளுடைய ஐயர் அமர்நீதியாரையும் மனைவியாரையும் மைந்தனையும் அழிவிலாத சிவபதம் வருமாறு அருள்புரிந்தார். தலைவருடைய கருணையால் துலையே விமானமாகி மேற்செல்ல, அமர்நீதியார் மனைவி மைந்தருடன் சிவபுரஞ் சேர்ந்தார். சிவானந்தப் பெருவாழ்வு பெற்றனர்.

நாதர் தந்திரு வருளினால் நற்பெருந் துலையே
மீது கொண்டெழு விமானம தாகிமேற் செல்லக்
கோதி லன்பருங் குடும்பமுங் குறைவறக் கொடுத்த
ஆதி மூர்த்தியா ருடன்சிவ புரியினை அணைந்தார்.

விளக்கம்

அமர்நீதிநாயனார் வரலாறு கோவணத்தின் பெருமையை இனிது எடுத்துக்காட்டுகின்றது. அமர்தல் + விரும்புதல்; நீதி இவரை விரும்பி வந்து இவர்பால் தங்கியபடியால், இப்பெருந்தகை அமர்நீதி எனப்பெற்றார்.

"இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க"

என்ற திருவாக்கின்படி, இவர் எப்போதும் சிவபிரானது திருவடியையே சிந்தை செய்யுந் திருவுடையார்.

"சிந்தை செய்வது சிவன்கழ லல்லதொன் றில்லார்"

வணிகர் குலத்திற்கு ஏற்றவாறு வாணிபஞ் செய்து வாழ்ந்தார். விவசாயமும், வியாபாரமும் உலகிற்கு இரு கண்கள் போன்றவை. பலப்பல தேசத்துப் பொருள்களை நிரம்ப வருவித்து ஒரு புறத்தில் கூட்டி, குறைந்த ஊதியத்திற்கு விற்று உண்மைக்கு ஒரு சிறிதும் மாறுபாடு இன்றிச் செய்யும் வாணிபத்தால் மக்கட்கு மிகப் பெரிய நன்மையும் உபகாரமும் ஆகும்.

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

என்பார் திருவள்ளுவதேவர்,

அமர்நீதியார் இத்தகைய பலர்க்கும் பயனுடைய வியாபாரம் புரிந்து அதனால் நிரம்பவும் அறத்தின்வழி பொருளீட்டினார். அப்பொருளின் பயன் அறம் புரிதலேயாதலின், அடியார்க்கு அன்னமும், ஆடையும், கோவணமும் தந்து ஈத்துவக்கும் இன்பத்தை யனுபவித்து வந்தார்.

பழையாறையிலே தோன்றிய இவர் இறைவருடைய நல் விழாவைச் சேவிக்கும் பொருட்டுத் திருநல்லூரிலே குடியேறினார்.

"மண்ணினில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்"

என ஆளுடையபிள்ளையார் அருளிச்செய்திருக்கின்றார். அந்த இரண்டையும் இவர் கடைப்பிடித்தவர். திருநல்லூரில் எழுந்தருளிய தேவதேவருடைய திருவிழாவைச் சேவித்துக் கொண்டும் அங்குத் திருமடம் புதுக்கி, அடியார்க்கு அன்னமும் ஆடையும் கோவணமும் வழங்கிக்கொண்டும் தொண்டு புரிந்தார்.

''செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்'' என்றபடி சுற்றத்தினருடன் திருநல்லூர் சேர்ந்தார் என்ற குறிப்பும் சிந்தனைக்குரியது.

கோவணத்தின் பெருமையையும் அன்பரது அன்பின் அருமையையும் உலகிற்குக் காட்டும் பொருட்டு இறைவர் மறைய வர் வடிவாய் வந்தருளினார்.

ஆண்டவனைக் காண அனைவருஞ் செல்லுதல் இயல்பு. ஆனால், அடியவரைக் காண அவர் வந்தார்.

"யாணர் வெண்கிழிக் கோவணம் ஈதல்கேட் டும்மைக்
காண வந்தனம்"

என்று கண்ணுதற்கடவுள் கூறும் அருமையைச் சிந்திக்குந் தொறும் சித்தம் தித்திக்கின்றது.

அமர்நீதியார் தமது திருமடத்தில் அந்தணர் உண்பதற்கு என்று தனிச் சமையலும் அந்தணர்களைக்கொண்டு புரிவித்தனர் என்ற குறிப்பும் காணப்படுகின்றது.

இவரை ஆட்கொள்ள வந்த அண்ணல் இரு கோவணங் களைத் தண்டினில் முடிந்துவந்தார். ஒன்றை இவர்பால் தரவும், மற்றொன்றைப் பின்னர் துலையில் நிறுத்து ஆட்கொள்ளும் பொருட்டும் என்றுணர்க.

கங்கையை முடித்த கடவுள் காவிரியாடச் சென்றார். அதனால் காவிரியின் பெருமை நன்கு விளங்குகின்றது. சென்றவர் வானநீர் மழை பொழிவித்து அதில் நனைந்து வந்தார்.

"பான லந்துறைப் பொன்னிநீர் படிந்துவந் தாரோ?
தூந றுஞ்சடைக் கங்கைநீர் தோய்ந்துவந் தாரோ?"

என்று ஆசிரியர் அழகாகக் கூறுகின்றார்.

மழையில் நனைந்தால் மீண்டும் குளிக்க வேண்டும். திருக் கோயில்களில் எழுந்தருள மூர்த்தி மழையில் நனைந்து விட்டால் பிராயசித்த அபிஷேகஞ் செய்வார்கள். இங்கே இறைவர் மழையில் நனைந்து வந்தார். அதனால் மீளவும் நீராட வேண்டும். எந்த நீரில் ஆடுவது? தூய தண்ணீரிலன்றோ ஆடவேண்டும்? "தொண்டர் அன்பெனுந் தூய நீராடுதல் வேண்டி" வந்தார். என்ன அழகு? தெய்வச் சேக்கிழார் சுவாமிகள் திருவாக்கின் அருமைதான் என்னே? உன்னுந்தொறும் உன்னுந்தொறும் உள்ளத்தை உருக்குகின்றது. வள்ளல்பிரான் உள்ளங்கவர் கள்வர் ஆதலின் இங்குக் கோவணத்தைக் கரந்து கோவணக் கள்வராயினார்.

கோவணம் மறைந்துவிடவும் அமர்நீதியார் மிகமிக நடுங்கிக் 'குற்றம் பொறுக்கவேண்டும்' என்கின்றார். துலையினால் பொருள் களை நிறுத்து வாணிபம் புரிந்தாராதலின், அத்துலையைக் கொண்டே சிவபதஞ் சேர்க்க விரும்பினார் விமலர். துலையை நாட்டுவித்தார். ஒரு தட்டில் கோவணத்தை யிட்டார். மற்றொரு தட்டில் அமர்நீதியார் திருமனையிலுள்ள கோவணங்கள், ஆடைகள், பொன், மணிகள் ஆகிய எல்லாவற்றையும் தட்டி லிட்டும் நேர்பெறவில்லை. இறையவர் தட்டு கீழும், அடியவர் தட்டு மேலுமாகவே இருந்தது.

அடியவர் அன்புக்கு ஆண்டவர் அருள் தாழும். அன்பு மேலிட மேலிட அருள் தாழ்ந்துகொண்டே செல்லும். இதனை இறைவர் இதன்மூலம் அறிவிக்கின்ற அழகும், சேக்கிழாரடிகள் கூறும் சொற்றிறமும் மிகமிக அழகாக அமைந்துளது.

முட்டி லன்பர்த மன்பிடுந் தட்டுக்கு முதல்வர்
மட்டு நின்றதட் டருளொடுந் தாழ்வுறும் வழக்கால்
பட்டொ டுந்துகில் அநேக கோடிக ளிடும்பத்தர்
தட்டு மேற்படத் தாழ்ந்தது கோவணத் தட்டு.

இறைவருடைய கோவணத்திற்கு நவமணிகளும் பூம்பட் டாடைகளும் நிகராக வில்லை.

"அவனி மேலமர் நீதியார் தனமெலா மன்றிப்
புவனம் யாவையும் நேர்நிலா வென்பது புகழோ"

சிவபெருமானுக்கு வேதமே கோவணம். அக்கோவணத்திற்குக் கலைநூல்களே நூல்கள். அதன் பெருமையை யாரே அறிய வல்லார்?

"மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வன்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ"

- திருவாசகம்

தவநிறைந்த நான்மறைப்பொருள் நூல்களாற் சமைந்த
சிவன் விரும்பிய கோவணம்"

என்பார் சேக்கிழாரடிகள்.

தன்னுடைய உடைமை யெல்லாம் துறந்த அமர்நீதியார் முடிவில் தன் மனைவி மக்களையும் தன்னையுமே துறந்தார். மனைவி மைந்தருடன் தானே துலையில் ஏறினார். இதனை அப்ப மூர்த்திகள் கூறுமாறுங் காண்க.

நாட்கொண்ட தாமரைப் பூத்தடஞ் சூழ்ந்தநல் லூரகத்தே
கீட்கொண்ட கோவணங் காவென்று சொல்லிக் கிறிபடத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவி யொடுமங்கோர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை யுரைக்குமன் றேஇவ் வகலிடமே.

அமர்நீதியார் துலையில் ஏறும்போது திருநல்லூர் மேவிய சிவபெருமானை வணங்கியதும், அடிமைத் திறத்தில் பிழைபடாதது உண்மையாயின் துலை நேர்பட வேண்டும்

என்று கூறியதும் சிந்திக்கத்தக்கது. இறைவருடைய கோவணமும் அமர்நீதியாருடைய அடிமைத்தொண்டும் சமம் என்பதை உலகிற்கு உணர்த்தும்பொருட்டுத் துலை நேர்பட நின்றது.

சிவனடியார்க்குக் கோவணந்தருவது சிறந்த புண்ணியம். கோடியுகம் சிவலோகத்திருப்பர்.

நாற்ற மாமல ரோனெழில் நாரணன்
போற்று சங்கரன் அன்பர்க்குப் பொங்கிழை
ஆற்று கோவணம் ஈந்தவர் ஆயிரம்
தேற்று கோடி யுகஞ்சிவ லோகரே.

- *சிவபுண்ணியத்தெளிவு*

ஓடும், செம்பொன்னும் ஒக்க நோக்கிடும் உத்தம அடியார்கள் உலகை வெறுத்தவர்கள்; அவர்கள் விருப்பு வெறுப்பு இல்லாதவர்கள். அற்றம் மறைப்பதற்காக கோவணமட்டும் உடுப்பர். "வான்பிறைக்கு வடகோடுயர்ந்தென்ன? தென்கோடு சாய்ந்தென்ன?" என்று கூறுவர்; முடிதரித்த மன்னர்கள் அவர்களது திருவடியில் வீழ்ந்து கிடப்பர்; தேவர்களும் சித்தர்களும் பணிகேட்பர். அவர்களது பெருமையை அயன்மாலும் அறியார்.

உடைகோ வணமுன் டுறங்கப் புறந்திண்ணை யுண்டுணவிங்
கடைகா யிலையுண் டருந்தத்தண் ணீருண் டருந்துணைக்கே
விடையேறு மீசர் திருநாம முண்டிந்த மேதினியில்
வடகோ டுயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்பிறைக்கே.

இத்தகைய பற்றற்ற பரசிவனடியார்கட்கு அற்றமறைக்க கோவணந் தருந்தொண்டு சாலச் சிறந்ததன்றோ? அத்திருத் தொண்டினையே தம் வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்டார் அமர்நீதியார். அவருடைய அன்பு வெள்ளம்போல் பெருகி நின்றது. அன்பில்லார் செய்யும் அறம் பெரும்பயன் தராது. அன்புடன் செய்வார் செய்யும் அறஞ் சிறிதேயாயினும் மலையினும் மாணப் பெரிதாகப் பயன் தரும். இவருடைய அன்பு அளவிறந்தது என்பதனைக் குறிக்கும் பொருட்டுத் "தொண்டர் அன்பெனுந் தூயநீராடுதல் வேண்டி" இறைவர் வருகின்றார் என்று அடிகள் குறிப்பிடுகின்ற அழகு உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது.

திருமடம் புதுக்குதலும் சிறந்த அறமாகும். ஆலயம் புதுக்குவதினும் நனியுயர்ந்தது. ஏன்? ஆலயம் இறைவன் உறைவது. திருமடம் அடியார் பலர் உறைவது தவமுந் தியானமும் புரியும் அன்பர்கள் உள்ளமே இறைவன் நடனம் புரியும் அரங்கு. ஆதலின், திருமடம் இறைவனுக்கு மிகவும் உகந்தது.

போதுவார் நீறணிந்து பொய்யாத ஐந்தெழுத்தை
ஓதுவார் உள்ளம் எனவுரைப்பார் - நீதியார்
பெம்மான் அமரர் பெருமான் ஒருமான்கை
அம்மான்நின் றாடும் அரங்கு - புகழேந்தி

எறிபத்த நாயனார் புராணம்

"இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க்கு அடியேன்"

அநபாயரது திருக்குலமாகிய சோழ மன்னர்களது தலை நகரங்களில் ஒன்று கருவூர். ஆழ்ந்த அகழிகளும் உயர்ந்த மதில்களும், சோலைகளும் சூழ்ந்து மாடமாளிகைகளும் மணிமண்டபங்களும் நிறைந்து விளங்குவது அத் திருநகர். முனிவர் பலர் ஆமிர (மாமர) வடிவாகி இரு கரைகளிலும் தவஞ் செய்த காரணத்தால் ஆம்பிராவதி என்று பேர் பெற்ற சிறந்த நதியினால் சூழப்பெற்றது.

இத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவருக்குப் பசுபதீச்சுரர் என்று திருநாமம். அத்திருக்கோயிலுக்கு ஆனிலை எனப்படும். காமதேனு வழிபட்டு வரம் பெற்ற காரணத்தால் இப்பேர் பெற்றது. இத் திருக்கோயிலில் கருணைக்கடலாக எழுந்தருளிய பசுபதீசரை எப்போதும் வழிபட்டுக்கொண்டு, சிவனடியார்க்கு எல்லை யில்லாத அன்புடன் தொண்டுபுரிபவர் எறிபத்தநாயனார்.

சைவம் உலகில் ஓங்குமாறு, சிவனடியார்கட்கு அடுக்கத் தகாத இடர்கள் வந்த காலத்தில் குகையினின்றும் புறப்பட்ட சிங்கம் போல் தோன்றி, அந்த இடர் நீங்க வேதங்கள் பரவும் பரசு ஆயுதத் தால் எறிந்து உதவிபுரிவார். இவ்வாறு அடியார்க்கு இடர் எய்திய தருணந்தோறும் சமயசஞ்சீவியாக எய்தி உற்றிடத்து உதவும் திருத் தொண்டினை முட்டாது புரிந்து வந்தார்.

மழைவளர் உலகில் எங்கும் மன்னிய சைவ மோங்க
அழலவிர் சடையான் அன்பர்க் கடாதன அடுத்த போது
முழையரி யென்னத் தோன்றி முரண்கெட எறிந்து தீர்க்கும்
பழமறை பரசுந் தூய பரசுமுன் னெடுக்கப் பெற்றார்.

அக்காலையில் கருவூர் என்னுந் அத்தலத்தில் சிவகாமி யாண்டார் என்னும் முனிவர் ஒருவர் இருந்தார். அவர் பசுபதீச் சுரருக்கு மலர்த்தொண்டு மனமகிழ்ச்சியுடன் புரியும் நியமம் பூண்டிருந்தார். நாடோறும் வைகறையில் எழுந்து நீராடுவார். வாயை ஒரு துண்டினால் கட்டிக்கொண்டு திருநந்தவனத்திற்குச் செல்வார்; நெஞ்சில் ஐந்தெழுத்தை உச்சரித்துக்கொண்டே

நறுமணங் கமழும் மலர்களை மலருந்தருணத்தில் கொய்து கொண்டு சென்று திருமாலையாகக் கட்டி அப் பூங்கூடையை ஒரு தோளில் தாங்கி உயர்த்திக் கொண்டு சென்று திருக்கோயிலில் காலந்தோறும் ஆலமுண்ட அரனாருக்குப் புனைவிப்பார். இத்தகைய அரும்பெருந் தொண்டினை அகமகிழ்ந்து தவறாமல் நியதியுடன் புரிந்து வருவார்.

புரட்டாசித் திங்கள் மகாநவமி விழா ஊரெங்கும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அன்று நவமிக்கு முன்னாள்; அஷ்டமி, சிவகாமியாண்டார் வழக்கம்போல் அதிகாலையில் நீராடி திருநீறும் கண்டிகையும் புனைந்து திருநந்தவனத்தில் விருப்புடன் மொட்டறா மலர் பறித்துத் திருப்பள்ளித் தாமமாக அமைத்துக் கொண்டு தண்டில் அக்கூடையைத் தொங்க விட்டு, இறைவருக்குத் தரும்பொருட்டுச், சாலையில் திருக்கோயிலை நோக்கி விரைந்து செல்கின்றார்.

கருவூரை ஆளுகின்ற புகழ்ச்சோழருடைய பட்டவர்த்தனம் என்னும் சிறந்த யானை ஆம்பிராவதியில் நீராடி, மிகுந்த களிப்பு டன் மதங்கொண்டு வருகின்றது. அதன்மீது இரு பாகர் இருந்தனர். அந்த யானைக்குப் பக்கங்களிலும் முன்னுமாகச் செலுத்துகின்ற பரிகோற்காரர் மூவர். மலைபோன்ற அந்த யானை மிக்க வேகமாக வருவதைக் கண்டோர் அஞ்சி ஓடினார்கள். யானை ஒரு தெரு வழியாகச் சென்று முட்டி, முன்னே செல்லுகின்ற சிவகாமியாண்டாரைப் பின்தொடர்ந்து ஓடிச் சென்று பிடித்து அவருடைய திருத்தோள்மீது தண்டில் தொங்க விட்டிருந்த பூக்கூடையைத் தும்பிக்கையால் பறித்து மண்ணில் சிந்தியது. அதுகண்ட பாகர் சண்டமாருதம்போல் விரைந்து செல்லும் யானையை விரைந்து வேறொரு புறமாகச் செலுத்திக் கொண்டு சென்றனர். சிவகாமி யாண்டார் தமது திருத் தொண்டிற்குத் தடை நேர்ந்தது குறித்துப் பெரிதும் வருந்தினார். பதைபதைத்தார். சீறினார். மதங்கொண்ட யானையைத் தண்டு கொண்டு அடிக்கச் சென்றார். யானை விரைந்து சென்றபடியால் தளர்ந்த வயதுடைய அம் முனிவர் அதை நெருங்க முடியாது தவித்தார். மண்மிசை வீழ்ந்தார். கையால் நிலத்தை அறைந்தார். துன்பக் கடலில் முழுகினார். "சிவதா சிவதா" என்று கூறிச் சிவ பெருமானைத் துதித்தார்.

களியா னையினீர் உரியாய் சிவதா
எளியார் வலியாம் இறைவா சிவதா

அளியா ரடியார் அறிவே சிவதா
தெளிவா ரமுதே சிவதா சிவதா.

ஆறும் மதியு மணியுஞ் சடைமேல்
ஏறும் மலரைக் கரிசிந் துவதே
வேறுண் ணினைவார் புரம்வெந் தவியச்
சீறுஞ் சிலையாய் சிவதா சிவதா.

தஞ்சே சரணம் புகுதுந் தமியோர்
நெஞ்சேய் துயரங் கெடநேர் தொடரும்
மஞ்சே யெனவீழ் மறலிக் கிறைநீள்
செஞ்சே வடியாய் சிவதா சிவதா

"யானையை உரித்து அதன் தோலைப் போர்த்துக்கொண்ட எம்பெருமானே! எளியவர்க்கு உற்ற துணையாக நின்று ஆட்கொள்ளும் இறைவரே! அன்புடைய அடியவர் கருதும் ஞானப் பொருளே! கங்கா நதியும் பிறைமதியும் விளங்கும் தேவரீருடைய திருமுடியில் புனைவதற்கு உரியதாகக் கொணர்ந்த இம்மலரை யானை சிந்துவதோ? திரிபுரத்தை நகையினால் எரித்த விரிசடை விமலா! அடியேனுடைய திருத்தொண்டுக்கு இப்பெரிய இடர் விளைந்ததே! தேவதேவா! கருணாநிதி! இந்த வேளையில் உமது திருவடியே அடைக்கலம். அடைக்கலம் புகுந்த மார்க்கண்டேயருக்காக சிறிது சேவடிக் கொழுந்தால் தீண்டி மறலியை உதைத்த மாதேவா! காமனைக் காய்ந்த கண்ணுதற் கடவுளே! அந்தோ! வைகறை எழுந்து நீராடி அருமையினும் அருமையாக எடுத்த இத்தனை மலர்களும் மண்ணில் சிதறி பயனற்றன வாயினவே; என் செய்வேன்? எந்தையே! கந்தவேளை ஈன்ற கருணாகரா! இந்தவேளை ஆட்கொள்வீர்!" என்று முறையிட்டார்.

இவ்வாறு, சிவகாமியாண்டார் இறைவனைக் குறித்து முறை யிடும்போது எறிபத்த நாயனார் அங்கு வந்தார். வந்தவர் அடியவர் முறையைக் கேட்டு நெருப்புயிர்த்துச் சினம் மூண்டு கொதிப்புற்றனர். "எம்பிரானடியார்க்கு என்றும் வழிப்பகை யானையே யன்றோ? அதனைக் கொன்று வீழ்த்துவேன்" என்று கூறிக் கொலை மழுவை ஏந்தி எய்தினார். சிவகாமியாண்டாரை வணங்கி, "சுவாமீ! இந்தப் பெரிய இடர் புரிந்த யானை எங்குச் சென்றது?" என்று வினாவினார். சிவகாமியாண்டார், "ஐயனே! அடியேன் முடியா முதலாகிய முக்கட்பெருமான் முடிமேல் சாத்துதற்குக் கொணர்ந்த கடியார் மலர்களைப்

பொல்லாத யானை படிமேல் சிந்தி இத்தெருவழியே சென்றது" என்றார்.

எறிபத்தர், "அடிகாள்! தாங்கள் வருந்தா வேண்டா, இனி அந்த யானை பிழைப்பது எங்கே? இப்போது அதனைக் கொல்வேன்" என்று கூறி, நெருப்புப் பொறி பறக்கும் மழுவாயுதத்தை ஏந்திக்கொண்டு, காற்றும் நெருப்புங் கலந்து பொங்கி எழுந்தது போல், மிகுந்த விசையுடன் சென்றார். யானைமீது சீறிச்செல்லும் சிங்கம் போன்றிருந்தது அக்காட்சி.

மதங்கொண்டு செல்லும் பட்டவர்த்தனம் என்ற அந்த அரச யானையைக் கண்டார். "இது முன் எம்பிரான் உரித்த யானையே போலும்" என்று ஐயுற்றார். "விண்ணவரும், மண்ணவரும் வந்து தடுத்தாலும், யான் அஞ்சாது, எதிர்த்து இந்த வாரணத்தைக் கொல்லுவேன்" என்று வீரவசனம் புகன்றார். மழுவாயுதத்தை வலமாகச் சுற்றி ஆர்த்தார்; ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தார். யானை மிகுந்த கோபத்துடன் கண்களில் நெருப்புப் பொறி சிந்த நாயனாரை எதிர்த்துப் பாய்ந்தது. அப்பெரிய மலைபோன்ற யானையைக்கண்டு நாயனார் அஞ்சினாரில்லை. தாய் புரியுந் தலையன்புக்கு முன் அச்சந் தலைப்படாதன்றோ? மிகுந்த ஆற்றலுடன் எறிபத்தர் யானையை எதிர்த்துப் பூக்கூடையைச் சிதறிய அதன் தும்பிக்கையை மழுவினால் துண்டித்தார். துதிக்கை துணிபட்டதும் யானை கதறிப் பூமிமேல் வீழ்ந்து புரண்டது. பாகர் இருவரையும், இருபக்கங்களிலும் முன்னுமாக யானையைச் செலுத்தி வந்த குத்துகோற் பாகர் மூவரையும் கொன்று வீழ்த்தினார்.

ஐம்புலன்களையும் ஆணவ மலத்தையும் வென்ற எறிபத்த நாயனார் பாகர் ஐவர்களையும் யானையையும் கொன்று வீரத்துடன் நின்றார். அதைக்கண்ட மற்றவர் ஓடி புகழ்ச் சோழருடைய அரண்மனை வாயில் காவலரிடம், "பட்டவர்த்தனமும் பாகரும் கொலையுண்டார் என்று கொற்றவன்பால் கூறும்" என்றார். காவலர் உள்சென்று பார்த்திபனைப் பணிந்து, "பற்றலரில்லாக் கொற்றவ! தேவரீருடைய பட்டவர்த்தனம் என்ற யானையைச் சிலர் கொன்றனர்'' என்று பாகர் வந்து கூறினார்கள்" என்றனர்.

புகழ்ச்சோழர் பொருக்கென எழுந்தார். சீற்றம் பொங்கியெழுந்தது. அவருடைய திருமார்பில் உள்ள மாலையில் மொய்த்திருந்த வண்டுகள் எழுந்தன. சினம் மிகுதியாக எழுந்தபடியால் "யார் செய்தார்?" என்று கேட்டாரில்லை. இளஞ்சிங்கம்போல்

வீறுகொண்டு மன்னர் மணிவாயிலைக் கடந்தார். சேனைத் தலைவர்கள் அரசரது எழுச்சியைக் கண்டு, சேனைகளைப் புறப் படுமாறு பறையறைந்தார்கள். வானை மறைத்த கொடிகளுடன் கூடிய எந்திரத் தேர்களும், யானைகளும், குதிரைகளும் புறப்பட்டன. வீரர்கள் வில், வாள், தண்டு, பிண்டி, பாலம், முசலம் சக்கரம், மழு, சூலம் முதலிய பலபடைகளை ஏந்திக் கொண்டு கடல்போல் புறப்பட்டனர். சங்கம், தாரை, காளம், பேரிகை, பம்பை, கண்டா; உடுக்கை, திமிலை முதலிய பல்லியங்கள் முழங்கின. தேர்ச்சக்கரங்களின் ஒலியும் யானையின் முழக்கமும் குதிரைகளின் கழுத்தின் மணியும் வீரர்களது ஆர்ப்பும் சேர்ந்து உகாந்த காலத்தில் பொங்கும் கடல் ஒலி நாணப் பயங்கரமாக முழங்கின.

வீரக்கழலணிந்த வேந்தர்பெருமான் ஒரு சிறந்த புரவியின்மீது ஏறிக்கொண்டு நால்வகைப் படைகளும் தொடர அரசமாவீதியை அடைந்தார். பாகரும் பட்டத்து யானையும் மாண்டு கிடக்கும் இடத்தைச் சேர்ந்தார். அங்குப் பகைவர் ஒருவரையுங் கண் டாரில்லை. ஒளிமிக்க மழுவை ஏந்தி இருகரங்களுடன் நிமிர்ந்து யானைபோல் நின்ற அன்பரைக் கண்டார்.

உதிரக்குழம்பில் மலைபோல் புரளும் யானையின் முன்நின்ற எறிபத்த நாயனார் மன்றுளாடும் மணிகண்டருடைய அடியார். ஆதலால், அவர் கொன்றிருக்க மாட்டார் என்று கருதிய மன்னர், "யார் இந்த யானையையும், பாகரையும் கொன்றது?" என்று வெடிபட உரத்துக்கேட்டார். பாகர் பார்த்திபனைப் பணிந்து, "வெற்றி மாலையணிந்த வேந்தே! தேவரீருடைய வலிமைமிக்க களிற்றுக்குமுன் எதிர்த்து நிற்க வல்ல மன்னவர் யாருளர்? எவ்விடத்தும் இல்லை. இத் தீங்கினைச் செய்தவர் இதோ பரசு தாங்கி நிற்கும் இவரே யாவார்" என்று கூறினர். அதுகேட்ட அரசர், "சங்க வெண்குழை யணிந்த சங்கரனுடைய அடிய வராகிய சற்குணசீலர் இவர்; பிழை கண்டிலரன்றிக் கொல்ல மாட்டார். அணுத்துணையும் அறநெறி கடவார். ஆதலின் யானையும் பாகரும் தவறுசெய்திருக்க வேண்டும்" என்று எண்ணிச் சேனைகளை விலக்கித், தானும் புரவியினின்றும் இறங்கினார்.

"கரிய பெரிய மலைபோன்ற மதயானைக்கு எதிரே இம்மெய்த் தவசீலர் சென்றபோது நன்மைக்கு மாறாக வேறு ஒன்றும் நிகழாமையால் நான் தவமுடையேன்; எம்பிரானுடைய அடியார்

இவ்வளவு முனிவுகொள்ளுமாறு என்ன பெரும்பிழை நேர்ந்ததோ? அந்தோ! கெட்டேன்'' என்று மன்னர் மிகவும் அஞ்சினார்.

மைத்தடங் குன்று போலு மதக்களிற் றெதிரே யிந்த
மெய்த்தவர் சென்ற போது வெறொன்றும் புகுதா விட்ட
அத்தவ முடையே னானேன் அம்பல வாண ரன்பர்
இத்தனை முனியக் கெட்டேன் என்கொலோ பிழையென் றஞ்சி.

அன்பின் வடிவாகிய அரசர் தமது அருகில் நெருங்கி நின்றவர்களை விலகி நிற்கச்செய்து, அன்பராகிய எறிபத்த நாயனார் திருமுன் சென்று, "அடிகாள்! இதனை அடியேன் அறிந்திலேன்; அங்குக் கேள்விப்பட்டது ஒன்று; அதுநிற்க, இந்த யானையால் நேர்ந்த பிழைக்குப் பாகர்களுடன் இதனைக்கொன்ற தண்டனையே போதுமோ? மேற்கொண்டு செய்யக்கடவது உண்டோ? உத்தரவாக வேண்டும்'' என்று பயபக்தியுடன் கேட்டார்.

செறிந்தவர் தம்மை நீக்கி அன்பர்முன் தொழுது சென்றீ
தறிந்திலேன் அடியேன் அங்குக் கேட்டதொன் றதுதா னிற்க
மறிந்தவிக் களிற்றின் குற்றம் பாகரோ டிதனை மாள
எறிந்ததே போது மோதான் அருள்செயும் என்று நின்றார்.

புகழ்ச்சோழரை நோக்கி எறிபத்தர் கூறுவார்; "சோழ மன்னரே! சிவகாமியாண்டார் நாகாபரணமணிந்த ஏகநாயகருக்குச் சாத்தும் பொருட்டுக் கொண்டுவந்த திருப்பள்ளித் தாமத்தை இந்த யானை பறித்துச் சிந்தியது. அதனால், இதனைத் துணித்து வீழ்த்தினேன். யானை சிவஅபராதஞ் செய்யும்போது மேலிருந்த பாகரும் கீழிருந்த பரிக்காரரும் விலக்கிடாதிருந்த காரணத்தால் அவர்கள் மழுவினால் மாய்ந்தொழிந்தார்கள். இது இங்கு நிகழ்ந்தது'' என்றார்.

புகழ்ச் சோழநாயனார் அதனைக் கேட்டு "அடிகேள்! இத்துணைப் பெரிய அபசாரத்திற்கு இந்தத் தண்டனை போதாது; குற்றஞ் செய்த யானையையும் விலக்காதிருந்த ஏவலரையும் வைத்திருந்த குற்றத்திற்காக அடியேனையுங் கொல்ல வேண்டும். ஆனால் தேவரீருடைய திருக்கரத்தில் உள்ள மங்கல மழுவினால் கொல்லுந் தகுதி அடியேன்பால் இல்லை; இந்த வாளினால் சிறியேனைக் கொன்று என்னை இப்பாவத்தினின்றும் தீர்வு பெறுமாறு செய்யும்'' என்றுகூறித் தமது உடைவாளை எடுத்து நீட்டினார்.

அங்கண ரடியார் தம்மைச் செய்தவிவ் வபரா தத்துக்
கிங்கிது தன்னாற் போதா தென்னையுங் கொல்ல வேண்டும்
மங்கல மழுவால் கொல்கை வழக்குமன் றிதுவா மென்று
செங்கையால் உடைவாள் வாங்கிக் கொடுத்தனர் தீர்வு நேர்வார்.

அரசருடைய பணிவையும், அவருடைய அரும்பெருங் குணங்களையும், எறிபத்தர் நோக்கினார். "ஆஆ! இவருடைய அன்புக்கு அளவில்லை. பட்டத்து யானையும், பாகரும் மாண்டது போதாதென்று தன்னையும் கொல்லுமாறு வேண்டுகின்றார். அந்தோ! கெட்டேன். இப்போது இந்த வாளை நான் வாங்காது இருப்பனேல் இவர் தன்னைத்தானே இவ்வாளினால் மாய்த்துக் கொள்வார்" என்று அஞ்சி, அவ்வாளை வாங்கிக் கொண்டார். அரசர் வாளினால் இறவாமல் உய்வு பெறும் பொருட்டே எறிபத்தர் வாளை வாங்கினார். ஆனால், அரசர் அவர் கருத்தை அறியவில்லை. தன்னைக் கொன்று அப்பிழையினின்றும் நீக்கி ஆட்கொள்ளும்பொருட்டே வாங்கினார் என்று எண்ணினார்.

புகழ்ச்சோழர் தொழுது நின்று, "அடியேன் என்ன தவஞ் செய்தேனோ? இப்பெருந்தொண்டர் வாளால் என்னைக்கொன்று என் பிழையைத் தீர்த்து உதவிசெய்யப் பெற்றேன்" என்று பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார். எறிபத்தர் அத் திறத்தை நோக்கி முன்னிலும் விம்மிதரானார். "யானையும் பாகரும் மாண்டதுடன் தானும் மாள வேண்டும் என்று வாளைத் தந்து பெரு மகிழ்ச்சியடையும் இந்த எல்லையில்லாத அன்பனாருக்குத் தீங்கு நினைத்தேனே" என்று எண்ணினார். அன்றியும் தன்னுயிரை நீக்கவும் கருதி, அவ் வாளினால் தன் கழுத்தினை அரிய முயன்றார். அதுகண்ட அரசர்பெருமான் பெரிதும் அஞ்சினார். இப்பெரியார் செய்கை இருந்தவாறு இது என்னே! கெட்டேன் என்று கடிதிற் சென்று எறிபத்தர் கையிலிருந்த வாளையுங் கையையும் பிடித்துக் கொண்டார். மன்னர் விடாது பற்ற மாதவராகிய எறிபத்தர் மிகவும் வருந்தி நின்றார். அளவில்லாத அன்பினால் வந்த அந்த இடரை அகற்றும் பொருட்டு உற்றவிடத்து உதவும் பற்றிலாப் பரமன் திருவருளால் வானில் ஓர் இனிய அருள்வாக்கு பிறந்தது.

"உலகமெல்லாம் போற்றுந் தகைமையுடன் கூடிய அன்பு மிகுந்த ஆர்வலரீர்! திருத்தொண்டின் பெருமையை உலகிற்கு உணர்த்தும் பொருட்டுப் புனிதமாகிய மலரை யானை சிந்துமாறு

சிவபெருமான் அருள்கூட்டியது" என்று வானொலி யெழுந்தது. அவ்வொலி எழுந்ததும் யானையும் எழுந்தது. பாகரும் எழுந்தனர். தமது கழுத்தில் பூட்டிய வாளை விட்டு எறிபத்த நாயனார் புகழ்ச் சோழருடைய திருவடிமேல் வீழ்ந்தார். வேந்தர் பெருமானும் வாளாயுதத்தை எறிந்துவிட்டு, எறிபத்தர் பாதமலர்மீது வீழ்ந்தார். தேவர்கள் பூமழை பொழிந்தனர்.

> ஈரவே பூட்டும் வாள்விட் டெறிபத்தர் தாமும் அந்த
> நேரியர் பெருமான் தாள்மேல் விழுந்தனர் நிருபர் கோனும்
> போர்வடி வாளைப் போக எறிந்தவர் கழல்கள் போற்றிப்
> பார்மிசைப் பணிந்தான் விண்ணோர் பனிமலர் மாரி தூர்த்தார்.

இருவரும் எழுந்து வானத்தில் எழுந்த அருள்நாத ஒலியைப் போற்றி நின்றனர். பூக்கூடையுள் மலர் முன்போல் நிரம்புமாறு, மறைபுகழ் இறைவர் திருவருள் புரிந்தார். அந்தத் திருவருட் செயலைச் சிவகாமியாண்டார் கண்டு பெரிதும் மகிழ்ச்சியுற்றார். உறங்கி எழுந்ததுபோல எழுந்த யானையைப் பாகர் மன்னர் பெருமான்முன் நிறுத்தி வணங்கினார்கள். எறிபத்த நாயனார் சோழரை நோக்கிப், "பெருமானே! அடியேன் மகிழுமாறு இந்த பெருமை தாங்கிய யானைமீது ஏறி அரண்மனைக்கு எழுந் தருள்வீர்" என்று வேண்டினார். அடியவர் ஆணையை மறுக்க அஞ்சிப் புரவிமேல் வந்த புரவலர் யானை மீது ஏறினார். ஏழு கடலும் ஒருங்கே ஒலித்ததுபோல் சேனைகள் ஆர்த்தன. மண்ணுளார் மகிழ்ந்து வாழ்த்தினர். விண்ணுளார் வியந்து போற்றினர். புகழ்ச்சோழர் பொன்னம்பலத்தில் ஆடிய சேவடியைச் சென்னியில் சூடி அரண்மனைக்குச் சேர்ந்தார்.

சிவகாமியாண்டார் தமது மலர்த் தொண்டினைச் செய்யும் பொருட்டுப் பூக்கூடையுடன் திருக்கோயிலுக்குச் சென்றார். எறிபத்தநாயனார், "என்னே! சிவனடியார் திருத்தொண்டர்கள் அறிவதற்கரியார்" என்று எண்ணி எண்ணி அற்புதமடைந்தும் சோழருடைய அன்பின் பெருக்கை உன்னிஉன்னி உள்ளம் உவந்தும், தமது திருப்பணியை நோக்கிச் சென்றார்.

இவ்வாறு, எறிபத்த நாயனார் அடியார்க்கு எய்தும் இடர் களை நீக்கி உற்றிடத்து உதவி செய்து நல்ல தவத்தினைத் தாங்கி வன்தொண்டு புரிந்து முடிவில் திருக்கைலாயமலையில் சிவகணங்களின் தலைவர்கட்கெல்லாம் தலைவராகும் பெரும்பதம் பெற்று இன்புறுவாராயினர்.

விளக்கம்

சிவபெருமான் சரம் அசரம் என்ற இரண்டு இடங்களிலும் நிறைந்திருக்கின்றார். ஆனால், சரம் எனப்படும் உயிர்களிடத்தில் விசேடமாக நிற்கின்றார். அதிலும் அடியார்களிடத்திலே தயிரில் நெய்போல் விளங்கித் தோன்றுகின்றார். ஆதலின், அடியார் பக்தி சிறந்தது. அடியவர்க்கு எய்தும் இடர் களைவது சிறந்த திருத் தொண்டு ஆகும். அது துணிவும் பணிவும் ஆற்றலும் படைத்தவர்க்கே செய்தற்குரியது. இத் திருத்தொண்டினை மேற்கொண்டவர் எறிபத்த நாயனார். அடியவர்க்கு எய்தும் இடர்களை மழுவினால் எறிந்து நீக்கி உபகரிப்பவர் ஆதலின், அதுகாரணமாக இத்திருநாமத்தினைப் பெற்றார்.

இவர் திருவவதாரஞ் செய்த திருத்தலமாகிய கருவூர் ஒரு சிறந்த திருத்தலம். இது கொங்குநாட்டுத் தேவாரம் பெற்ற ஏழு தலங்களுள் ஒன்று. சோழ மன்னர் முடிசூட்டும் சிறந்த இடம் ஐந்தனுள் ஒன்றாகவும் இத்தலம் அமைந்திருந்தது. ஆம்பிராவதி நதிக்கரையில் விளங்குவது கருவூர். இத்தலத்தில் காமதேனு வழிபட்டபடியால் திருக்கோயிலுக்கு ஆனிலை என்று பேருண் டாயிற்று. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் ஆனிலை என்றே அருளிச் செய்திருக்கின்றார்.

எறிபத்தர் அடியார்க்கு அடாதன நேர்ந்தபோது அதனை விலக்கும்பொருட்டுப் பரசு என்ற படையைத் தாங்கியிருந்தார். அந்தப் பரசு ஏனைய போர்வீரர் தாங்கிய ஆயுதம் போன்றதன்று. அது அடியவர்அல்லலை அகற்றும்பொருட்டே பயன்படுவது. ஆதலின், அதனைச் சேக்கிழார், அடிகள் "பழமறை பரசுந் தூய பரசு" என்பார். "மங்கல மழு" என்பார் புகழ்ச்சோழர்.

சிவகாமியாண்டார் கரூர் ஆனிலைக் கோயில் இறைவருக்கு விதிப்படி மலர்த்தொண்டு புரிந்து வந்தவர். அவர் செய்த அத் தொண்டின் அருமையை,

> வைகறை யுணர்ந்து போந்து புனன்மூழ்கி வாயுங் கட்டி
> மெய்ம்மலர் நெருங்கு வாச நந்தன வனத்து முன்னிக்
> கையினில் தெரிந்து நல்ல கமழ்முகை யலரும் வேலைத்
> தெய்வநா யகர்க்குச் சாத்துந் திருப்பள்ளித் தாமங் கொய்து.

என்ற திருவிருத்தத்தால் உலகம் உணர்ந்து உய்ய ஆசிரியர் விளக்குகின்றார்.

சிறையளி புகுதாமுன்னம் சிறுகாலை எழுந்திருந்து நீராடி, நீறாடி, உலைவற விருப்பாக நீள்காவின் வாசமலர் வகை. வகை எடுத்துத் தொடுத்து இறைவருக்குப் புனைவித்தல் வேண்டும். மொட்டறாமுன் மலர் பறிக்க வேண்டும்.

சிறந்த சிவபுண்ணியம் பூவும் நீருமே. பூவும் நீருங் கொண்டே மனவாக்குக் கெட்டாத பரமனை வழிபடுதல் வேண்டும். பூவும் நீரும் என்ற இந்த படைகளைக் கொண்டே மார்க்கண்டேயர் மறலியை வென்றார்.

"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு"

"பூநாளும் தலைசுமப்ப புகழ்நாளும் செவிகேட்ப"

"பூவோடு நீர்சுமக்கும் புண்ணியர்"

என்ற தமிழ்மறை வசனங்களை எல்லாம் உன்னுக.

"உலைவற விருப்பாக நீள்காவின் வாசமலர்
வகைவகை யெடுத்தேதொ டாமாலி காபரண
முனதடியி னிற்கூட வேநாடு மாதவர்கள் இருபாதம்
உளமது தரித்தே"

என்பார் அருணகிரிநாதர்.

இத்திருத்தொண்டினை முறையாகச் செய்யும் சிவகாமி யாண்டார் கொய்துவந்த மலர்ப் பூக்கூடையை அரசனுடைய பட்டத்து யானை மதங்கொண்டு பறித்து மண்ணில் சிந்தியது.

அப்படி நிகழ்ந்த நாள் புரட்டாசி மாதம் நவமிக்கு முன்னாள். நவமி விழா அக்காலத்திலேயே சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது என்பது இதனால் விளங்குகின்றது. இன்றும் எல்லா ஆலயங்களிலும் புரட்டாசி பிரதமையிலிருந்து நவமி வரை ஒன்பது நாட்களிலும் இனிது மகாநவமி விழாவைக் கொண் டாடுகின்றார்கள்.

திருத்தொண்டில் அளவுகடந்த அன்பு பூண்ட சிவகாமியாண் டார் தமது தொண்டுக்கு இடையூறு நேர்ந்ததே என்று மிகவும் வருந்தினார். "சிவதா! சிவதா!" என்று ஓலமிட்டார். சிவதா என்பது சிவபெருமானைக் குறித்து ஓலமிடும் ஒரு சொல்.

யானையை உரித்த வானவா! யானையால் இந்த இடர் வந்ததே என்ற கருத்தில், "களியானையினீ ருரியாய் சிவதா" என்

பதும், "ஆறும் மதியும் அணியுஞ் சடைமேல் ஏறும் மலரைக் கரி சிந்துவதோ'' என்பதும் ஆகிய சொற்றிறம் மிகமிக விழுமியன.

எறிபத்தர் அம்முறையைக் கேட்டு அடியார்க்கு யானை வழிப்பகை என்று கருதினார். சிவபெருமானையும் ஓர் அசுரன் யானை வடிவில் கொல்ல முயன்றான். கோச்செங்கட்சோழரது முற்பிறப்பாகிய சிலந்திக்கும் யானை பகையாக நின்றது.

மதங்கொண்ட யானையை எறிபத்தர் எதிர்க்கின்றார். அவருடைய அஞ்சாமை அளவிடற்பாற்றோ? தாயின் தலையன் பின் முன் அச்சம் நிற்குமோ? என்பார் ஆசிரியர்.

குற்றம் புரிந்த உறுப்பாகிய தும்பிக்கையைத் துண்டித்தார்; யானை குற்றம் புரிந்தபோது அதனைத் தடுக்காதிருந்தமையால் மேலிருந்த பாகர் இருவரையும், இருபுறத்தும் முன்னும் நின்ற பாகர் மூவரையும் ஆக ஐவரையுங் கொன்றார். அது ஆணவ மலமாகிய யானையையும் புலன்கள் ஐந்தையும் வென்றார் என்ற அருட் குறிப்பையும் உணர்த்துகின்றது.

ஏனைய பாகர் சென்று அரசரிடம் விளக்கமாகக் கூறாமல் 'பட்டமால் யானை வீழச் செற்றனர் சிலர்'' என்று கூறினர். அரசருக்கு உடனே சினம் பொங்கி எழுந்தது. அதனால் செய்தார் இன்னார் என்று அங்ஙனமே தெளிவுபட வினாவினாரில்லை. அரசர் சீறி எழுந்தவுடன் நால்வகைப் படைகளும் எழுந்து சூழ்ந்து புறப்பட்டன. அவற்றைக் கண்டு எறிபத்தர் அஞ்சினாரில்லை; அகலவுமில்லை; வீரத்துடன் வீறுகொண்டு நிற்கின்றார். "ஆரங் கண்டிகை பூண்ட அடியவர் வீரம் நம்மால் விளம்புந் தகையதோ?''

யானையைக் கொன்றவர் எறிபத்தர் என்று தெரிந்த மன்னன் "அரனிடம் அன்பு பூண்டவர் கருணை வடிவினராவார். ஆதலின், குற்றம் இருந்தாலொழிய இத்தண்டனை புரியார்'' என்று ஊகித் துணர்கின்ற அருமையும் சிந்தனைக்குரியது.

புகழ்ச்சோழர் அடியவர்க்கு யானையால் வேறு ஒன்றுந் தீங்கு விளையாமை குறித்து மகிழ்ந்தார். தீங்கு என்ற சொல்லைக் கூட அவர் சொல்ல அஞ்சி "வேறொன்றும் புகுதாவிட்ட அத்தவ முடையேன்'' என்கின்றார். குதிரையை விட்டிறங்கி எறிபத்தரைத் தொழுதார். "என்ன நடந்தது?'' என்றும், "இந்த யானை என்ன தீங்கு செய்தது?'' என்றும் கேட்கவில்லை. இந்த யானை செய்த

குற்றத்திற்கு பாகரோடு அது இறந்ததே போதுமோ? வேறு என்ன தண்டனை விதிக்க வேண்டும்? அருள் செய்யும்" என்கின்றார்.

"மறிந்தவிக் களிற்றின் குற்றம் பாகரோ டிதனை மாள
எறிந்ததே போது மோதான் அருள்செயும்"

என்றும் அவர் கூறும் சொல் எவ்வளவு உருக்கமாகவும் பணிவாகவும் இருக்கின்றது என்பதை அன்பர்கள் உற்றுநோக்குக. அடியவரை வினவும் மரபு இது. மிக மிக இனிமையான இப் பகுதியை எண்ணுந்தொறும் புளகம் எய்துகின்றது.

எறிபத்தர் நிகழ்ந்ததைக் கூறினார். கேட்ட மன்னர், "இத் தண்டனை போதாது" என்று கருதினார். குற்றம் புரிந்த யானைக்கு உரியவர் தானேயாதலின் தன்னையுங் கொல்லுமாறு வேண்டுகின்றார். அதுவும் எறிபத்தருடைய திருக்கரத்து விளங்கும் மங்கல மழுவினால் கொல்லப்படுவதற்குத் தனக்குத் தகுதியில்லை என்கின்றார். தன் உடைவாளைத் தந்து கொல்லுமாறு வேண்டுகின்றார். என்னே இவருடைய அன்பு! உன்னுக.

இவ்வேளை அவ்வாளை வாங்காது நின்றால் தன்னைத்தானே மாய்த்துக்கொள்வார் என்று கருதி வாளை எறிபத்தர் வாங்கிக் கொண்ட தன்மையும், தன்னைக் கொல்லும் பொருட்டே வாங்கிக் கொண்டார் என்று மன்னர் மகிழும் அன்பின் தன்மையும் நினைந்தால் எந்தக் கருங்கல்தான் கரையாது? இத்தகைய அன்புடைய மன்னர் திருக்கரத்துடைய் வாளை வாங்கி அவர் மனத்தில் தன்னைக் கொல்லும்பொருட்டு வாங்கியதாக எண்ணம் வரச் செய்தோமே என்று வருந்திய எறிபத்தர், அவ்வாளினால் தன்னையே மாய்க்க முயன்ற அன்பை யாரே அளக்க வல்லார்?

ஆளுடைத் தொண்டர் செய்த ஆண்மையும் தம்மைக் கொல்ல
வாளினைக் கொடுத்து நின்ற வளவனார் பெருமை தானும்
நாளுமற் றவர்க்கு நல்கு நம்பர்தாம் அளக்கி லன்றி
நீளுமித் தொண்டின் நீர்மை நினைக்கிலார் அளக்க வல்லார்?

என்று தெய்வச் சேக்கிழாரடிகளே அதிசயித்து உரைக்கின்றார்.

மன்னன் தன்னைக் கொல்லத் தந்த வாளால் எறிபத்தர் தன்னையே மாய்த்துக் கொள்ள முயன்றபோது வேந்தர் விரைந்து தடுக்கின்றார். இருவரும் அன்பினால் இவ்வாறு தாம்தாமே உயிர்விடத் துணிந்து நிற்கும் இந்த இடரை இறைவரை அன்றி வேறு யார் தவிர்க்க வல்லார்?

"தொழுந்தகை அன்பின் மிக்கீர்" என்ற அருள்நாத ஒலி வானில் எழுந்தது. "இத்தனைக்கும் நமது அருளே காரணம்" என்றது. யானையும் பாகரும் எழுந்தனர்.

இனி, 'உயிர்க்கொலை ஐம்பெரும் பாதகங்களில் ஒன்றா யிற்றே? அக்கொலைப் பாதகம் புரிதல் தகுமோ? அப் பாதகம் புரிந்த எறிபத்தரைத் திருவருள் ஆட்கொள்ளுமோ?" எனின் அது பாதகமாகாது. அரனிடம் அன்பு பூண்டார் எவ்வுயிரும் பராபரன் சந்நிதியென்று உணர்ந்து உயிர்களிடம் அன்பு பூண்டு ஒழுகுவார். சிவ அபசாரஞ் செய்தோர் மறுமையில் எரிவாய் நிரயம் புகுந்து பெருந்துன்பம் எய்துவார். அத்துன்பம் அவ்வுயிர்கட்கு நேராத வண்ணம் கருணையினால் புரிந்த இச்செயல் குற்றமுடைத் தாகாது. அது அவ்வுயிர்கட்குப் புரியும் உபகாரமேயாம்.

ஏனாதிநாத நாயனார் புராணம்

"ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்"

இமயமலைமீது புலிக்கொடி நாட்டி, புவிபரந்து புகழ் படைத்தவர்கள் சோழ வேந்தர்கள். அவர்களுடைய நாடு வளமை மிக்க சோணாடு. சோழருடைய குளிர்ந்த முத்துவெண்குடையின் நிழலில் குளிர்வது அத்திருநாடு. அந்நாட்டிலே வண்டுகள் ஒலிக்கும் பூஞ்சோலை சூழ்ந்து வயல்களின் மருங்கு விளங்குவது பழமையான எயினனூர்.

அப்பதியின் மருங்கில் கன்னல் தாழும்படி செந்நெற்பயிர் வளர்ந்து ஓங்கி இருக்கும். அதனால், அவ்வூரில் வாழும் குடிகள் தழைத்து வாழ்ந்தனர். வளமை மிக்க அப்பதியிலே ஈழக் குலச் சான்றார் மரபில், அம்மரபு செய்தவத்தால், சைவநலம் ஓங்கத் தோன்றினவர் ஏனாதிநாதர்.

தொன்மைதொட்டு நன்மைதரும் திருநீற்றின் பெருமையை அவர் நன்கு உணர்ந்து, அத்திருநீற்றுத் தொண்டினை வழிபடும் நலத்தில் என்றுங் குன்றாத அன்பு பூண்டவர், திருநீறு புனைந்தவர் யாவரே யாயினும், சிவமாகப் பாவித்து வணங்குவார்.

அரசர்கட்கு வெற்றியைத் தரும் வாட்படை பயிற்றி வைக்குந் தொழிலில் தலைமை பெற்றிருந்தார். சிறந்த வாள்வலியும் தோள் வலியும் உடையவர். குழைந்த உள்ளமும், தழைந்த அன்பும், அஞ்சாநெஞ்சமும், பின்னிடாத வீரமும் உடையவராய் விளங்கினார். வாள்வித்தையைப் போதித்து அதனால் வரும் ஊதியங்களை, மாலயன் காண்ாத மணிகண்டரது அடியார் களுக்குப் பயன்படுத்துவார். இவரை நண்பரேயன்றிப் பகைவர் களும் அன்புசெய்து போற்றுவார்கள். அத்துணை நன்மை யுடையவர் ஏனாதிநாதர். யாரும் இகழப்படாத செய்கையில் இனிது ஒழுகி வந்தார்.

எல்லோருக்கும் இனிமையே செய்யும் கருணையுள்ளம் படைத்த அருளாளரைப் பகைக்கும் புல்லரும் உலகில் இருக் கின்றனர். தண்ணென்ற அமிர்த கிரணம் பொழியும் திங்களைக் கண்டு தாமரை குவியும். எல்லோருக்கும் இன்பத்தைத் தரும்

பூரண சந்திரன் கள்வருக்கு வெறுப்பாக இருக்கும். அதுபோல், நள்ளாருக்கும் நன்மைபுரியும் அன்பராகிய ஏனாதி நாத நாயனாரை அதிசூரன் என்பான் பகைப்பானாயினான். அதிசூரன் வாள்படை பயிற்றுந் தொழில் உரிமை தாயத்தினன்; தற்பெருமை பூண்டவன்; ஆணவத்தின் ஆணிவேர்; வாளாயுதம் பயிற்றுந் தொழில் கற்றவர்களிலே தனக்கு ஒப்பாரும் மிக்காரும் உலகில் ஒருவரும் இல்லை என்று எண்ணித் தருக்கும் தன்மதிப்புங் கொண்டிருந்தான். தங்கள் குலத்திற்கு உரிமையாகிய வாட்படை பயிற்றும் ஆசிரியத் தொழிலால் வரும் ஊதியம் வரவர அதிசூரனுக்கு குறைந்துகொண்டே வந்தது. அன்பராகிய ஏனாதிநாதருக்கு தாய உரிமையின் ஊதியம் வளர்ந்து வந்தது. அதனால், ஏனாதிநாதர்மீது பொருத்தமில்லாத பகைமை பாராட்டுவானாயினான். அழுக்காறு, அவா, சினம், இன்னாச் சொல் ஆகிய இத்தீய குணங்களை மேற்கொண்ட அதிசூரன் சூரியன்முன் சந்திரன்போல் ஒளிமழுங்கினான்.

அழுக்காற்றினால் அலைப்புண்ட அதிசூரன் தன் துணைவருடன் சேர்ந்து ஆராய்ந்து, ஏனாதிநாதரை எதிர்த்துப் போரிட்டு அவருடைய தொழில் உரிமையைக் கவர வேண்டும் என்று துணிந்தான். தன்னிடம் படைபயின்றவர்களுடனும், சுற்றத்தினருடனும், துணைவர்களுடனும் திரண்டு ஏனாதி நாதர்பால் சென்று, "வாட்படை பயிற்றுகின்ற குலத் தாயத் தொழில் உரிமை வலியாரே பெறவேண்டும். ஆதலின், நீரும் நானும் போரிட்டு நம்மில் யார் வெல்வரோ அவர்க்கே அத் தொழில் உரியது. ஆதலின், போருக்கு வருக" என்று மிகுந்த சினத்துடன் அழைத்தான். வெங்கட்புலி கிடந்த குகையின் முன் சென்று போருக்கு வருக என்று குறுநரி அழைத்தது போலிருந்தது அக்காட்சி.

ஏனாதிநாதர் போருக்கு அறைகூவி அழைத்தது கேட்டு இராஜசிங்கம்போல் கிளர்ந்து எழுந்தார். "ஆர்கொலோ போருக்கு அழைத்தவர்?" என்று சீறினார். உடையை வரிந்து கச்சையைக் கட்டினார். வீரக்கழல் அணிந்தார். கூர்மையான வாளா யுதத்தையும், பலகையையுங் கொண்டு போருக்குத் துணிந்து புறப்பட்டார். பலப்பல வீரர்களுடன் வெள்ளம்போல் திரண்டு வந்த பகைவர்கள்மீது தனித்துச் செல்கின்றார் ஏனாதிநாதர். அவர் வீரத்தை யாரே அளக்கவல்லார்? இவர் தனியே செல்வதை அறிந்து இவர்பால் படைபயின்று கொள்ளுங் காளையர்களும், முன்னர்ப் பயின்று வேறு வேறு இடங்களில் இருந்த வீரர்களும்,

ஏனைய சுற்றத்தினரும் ஓடி வந்து இருமருங்கும் சூழ்ந்து துணைபுரிந்தனர்.

அதிசூரன் ஏனாதிநாதரை நோக்கி, "இந்த வெளியிடத்திலே நாம் போர்புரிந்து நம்மில் வென்றவர் வாள்பயிற்றும் ஆசிரியத் தொழில் உரிமையைக் கொள்ளவேண்டும்" என்றான். நாயனார் "அது உனக்கு நன்று என்று தோன்றினால் அதற்கு நான் இசைகிறேன்" என்றார்.

அணிவகுத்து நின்ற இருதிறத்துச் சேனைகளும் கைகலந்து போர் தொடங்கின. மேகத்துடன் மின்னல் கலந்து இடியுண் டானது போல் அச்சேனைகளுக்கிடையே வாள் மின்னப் பேரொலி உண்டாகியது. வாள் வீரர் வாள்வீரருடனும், வேல் வீரர் வேல்வீரருடனும், வில்வீரர் வில்வீரருடனும் கடுஞ்சமர் புரிந்தனர். வீரவாத ஒலியும், தோள் தட்டும் ஒலியும், வில்லின் நாண் ஒலியும், கணைகள் ஒன்றோடொன்று தாக்கும் ஒலியும் கடல் ஒலி நாண எழுந்தன. காண்பார் கண்கள் கூசின. மண்ணும் விண்ணும் சுழன்றன. சிரங்கள் உருள லுற்றன; கரங்கள் துணிபட்டன; தாள்களும் தோள்களும் சிந்தின;

குருதியி னதிகள் பரந்தன; குறையுட லோடி யலைந்தன;
பொருபடை யறுதுணி சிந்தின; புடைசொரி குடருடல் பம்பின
வெருவர எருவை நெருங்கின; விசியறு துடிகள் புரண்டன;
இருபடை தனிலும் எதிர்ந்தவர் எதிரெதிர் அமர்செய் பறந்தலை

உதிர ஆறு ஓடியது; கவந்தங்கள் கூத்தாடின; தலைகள் உருண் டன; காகங்களும் கழுகுகளும் பறந்தன; பிணங்கள் குவிந்தன.

இவ்வாறு இருபுறத்துச் சேனைகளும் மாண்டன; மாளாது நின்ற தமது படைகளைப் பின்னாக்கி ஏனாதிநாதர் போர் முனையில் முன்னணியில் வந்து நின்றார். அரியேறு போன்ற அவர் சக்கரம் போல் சுழன்று, எதிர்த்த வீரர்களது தோள்களையும் தாள்களையும் சிரங்களையும் துணித்தார். போரில் தலைப் பட்டார் யாவரும் கொலைப்பட்டார்; போரில் கலவாது நின்றவர் போர்க்களத்தை விட்டு, மெய்யுணர்வு தோன்றியபோது ஆர்வம் முதலிய குற்றங்கள் மறைவது போல் ஓடி மறைந்தார்கள்.

அதிசூரன் ஓடியவர்களை மீண்டும் ஊக்குவித்து உடன் அழைத்துக்கொண்டு ஏனாதிநாதர்முன் சென்று அடர்த்தான். ஏனாதிநாதர் மிகுந்த வேகத்துடன் சுழன்று வாளினால் அதிசூரனைக் கொல்ல நேரும் சமயத்தில் அதிசூரன் அஞ்சிப்

புறங் கொடுத்து ஓடினான். வெற்றிபெற்ற நற்றவமுடையார் சிற்றம்பலமேய கற்றைவார்சடைப் பரமனைப் போற்றித் தமது திருமாளிகை அடைந்தார்.

தோல்வியடைந்து ஓடிய அதிசூரன் மிகுந்த அவமானத்தை அடைந்தான். உள்ளம் உலைந்தான். இரவுமுழுவதுங் கண் மூடாமல் கவலையடைந்தான். ஈனமிகு வஞ்சனையால் வெல்லக் கருதினான். நற்குணமில்லாத தீயவன் விடியற்காலை எழுந்து ஏனாதிநாதர்பால் ஓர் ஆள்மூலம் ''நீயும் நானும் மட்டும் தனியிடத்தில் போரிடுவோம்; வீணாக மற்றவர்கள் நம் பொருட்டு மாள வேண்டாம்'' என்று சொல்லியனுப்பினான். ஏனாதி நாதனார் ''அதுவும் சரி'' என்றுகூறிச், சுற்றத்தார்களுக்கும், மாணவர்களுக்கும் தெரியாமற்படிக்கு, வாளும் பலகையுந் தாங்கிப் புறப்பட்டார். அதிசூரனால் குறிப்பிடப்பட்ட போர்க்களஞ் சென்று, அதிசூரனது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

வஞ்சனையை மேற்கொண்ட அதிசூரன், ''ஏனாதிநாதர் திருநீறு தரித்தவர்களை எவ்விடத்தும், எப்போதும் தீங்குசெய்யார்'' என்பதை யறிந்து, ஒருபோதும் திருநீறு அணியாத அப்பாதகன், நெற்றியில் நிரம்ப வெண்ணீறு பூசிக்கொண்டு, மனத்தில் கறுப்பு வைத்து, வாளும் பலகையும் தாங்கிப், புண்ணியப் போர் வீரருக்குச் சொன்ன இடத்துக்குச் சென்றான். வென்றியையுடைய சிங்கம் இரைக்குரிய பிராணியை எதிர்பார்த்து நிற்பதுபோல் நின்ற ஏனாதிநாதரைக் கண்ட அதிசூரன் அவர்பால் நெருங்கும் வரை நெற்றியைப் பலகையால் மறைத்துக்கொண்டு சென்றான். அடல் விடையேறு என்று ஏனாதிநாதர் எதிர்த்து அவனைக் கொல்ல வாளுடன் சென்றார். அத்தருணத்தில் அதிசூரன் பலகையை எடுத்தான். நெற்றியில் வெண்ணீற்றை ஏனாதிநாதர் கண்டார்.

கண்டபொழு தேகெட்டேன் முன்பிவர்மேற் காணாத
வெண்டிருநீற் றின்பொலிவு மேற்கண்டேன் வேறினியென்?
அண்டர்பிரான் சீரடியார் ஆயினார் என்றுமனங்
கொண்டிவர்தங் கொள்கைக் குறிவழிநிற் பேன்என்று

கைவா ளுடன்பலகை நீக்கக் கருதியது
செய்யார் நிராயுதரைக் கொன்றார் எனுந்தீமை
எய்தாமை வேண்டும் இவர்க்கென் றிரும்பலகை
நெய்வாளுட னடர்த்து நேர்வார்போல் நேர்நின்றார்.

திருநீற்றைக் கண்டவுடன் திடுக்கிட்டார். "ஆ கெட்டேன்; முன்பு இவர் நெற்றியில் ஒருபோதுங் காணாத திருநீற்றினைப் பார்த்தேன், வேறு மாறாக நினைப்பதற்கு என்ன இருக்கின்றது? சிவபெருமானுடைய திருத்தொண்டராக ஆயினார் போலும். இனி இவருடைய குறிப்பின்வழியே நிற்பேன்" என்று கருதினார். கைவாளையும் பலகையும் நீக்க எண்ணினார். ஆனால், அவ்வாறு செய்தாரில்லை. நிராயுதரைக் கொன்றார் என்னுந் தீமை சிவனடியாராகிய இவர்பால் எய்தாதிருக்கவேண்டும்" என்று எண்ணினார். ஆதலினால், வாளும் பலகையுந் தாங்கி வெறுமையாக நின்றார். அவருடைய திருவுள்ளத்தின் அருமையை யாரே அறிய வல்லார்? சிவனடியார்க்குப் பழிபாவம் வரக்கூடாது என்று கருதிய அவருடைய திருவுளமிருந்தவாறு தான் என்னே? முன்னின்ற பாதகனும் தன்கருத்தை முற்றுவித்தான். ஏனாதி நாதருடைய திருநீற்றின் அன்பை நன்கு அறிந்த மின்னார் சடையுடை விடையவர் அருள்வெளியிலே தோன்றிக் காட்சி அளித்தார்.

அந்நின்ற தொண்டர் திருவுள்ளம் ஆரறிவார்
முன்னின்ற பாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான்
இந்நின்ற தன்மை யறிவார் இவர்க்கருள
மின்னின்ற செஞ்சடையார் தாமே வெளிநின்றார்.

எம்பெருமான் அடியார்க்கு அருள்புரியும் தன்மையை நாம் எவ்வாறு போற்றவல்லேம்? பகைவருடைய கைவாளினால் பாசத்தை அறுத்து, அன்பு வடிவான நாயனாரை என்றும் தம்மை விட்டு நீங்காது உடன் இருக்குமாறு அருள்புரிந்தார்.

மற்றினிநாம் போற்றுவதென்? வானோர் பிரானருளைப்
பற்றலர்தங் கைவாளால் பாசம் அறுத்தருளி
உற்றவரை யென்றும் உடன்பிரியா அன்பருளிப்
பொற்றொடியாள் பாகனார் பொன்னம்பலம் அணைந்தார்

விளக்கம்

எயினனூர் என்பது குடந்தைக்கு (கும்பகோணம்) தென் கிழக்கில் கற்சாலையில் நான்கு மைலில் அரிசொல் ஆற்றின்கரையில் உள்ளது. ஏனநல்லூர் என வழங்குகின்றது.

நாயனாருடைய மரபு சான்றார் மரபு ஆகும். ஈழக்குலச் சான்றார் என்பது சான்றார் மரபில் ஒருபிரிவு. சான்றார் என்னுஞ் சொல் சாணார் என இப்போது மருவியது.

முன்னாளில் சேனாதிபதிக்கு ஏனாதி என்றபேர் இருந்தது. அரசர்கள் சேனாதிபதிக்கு ஏனாதிப்பட்டம் என்னும் ஓர் ஆபரணம் நெற்றியில் அணியத் தருவார்கள். ஏனாதி மோதிரமும் தருவார்கள்.

ஏனாதிநாதனார் அரசர்கட்கு வாட்படை பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்குள் முதன்மை பெற்றிருந்தவர். சிறந்த வாள் வலியும், தோள்வலியும் உடையவர் என்பது அவர் அதிசூரன் பால் நிகழ்த்திய போரினால் விளங்குகின்றது. உயர்ந்த வீரம் உடைய அவர் அன்புமயமாக இருந்தார். திருநீற்றின் திருத் தொண்டில் அவருக்கு அளவிறந்த அன்பு இருந்தது.

திருநீற்றின் பெருமை

திருவருள் மயமானது திருநீறு, "பராவணமாவது நீறு" என்பார் திருஞானசம்பந்தர். பரா - சக்தி; சக்தி - திருவருள். வினைகளை நீறாக்குவதனால் நீறு எனப்பட்டது. தெய்வீகமானது ஆனபடியால் திருநீறு; பேய் பில்லி சூன்யம் நோய் முதலிய கொடுமைகளினின் றும் உயிர்களைக் காப்பாற்றுவதால் காப்பு (ரக்ஷை) எனப்படும். மேலான ஐஸ்வரியத்தைக் தருவதனால் விபூதி எனப்படும்.

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாரும் சிவநெறி
சிங்கார மான சிவனடி சேர்வரே - திருமந்திரம்

"திருநீற்றினைச் சந்யாசியும் ஒருவேளை தரித்துக்கொள்ளத் தவறுவானாயின் உபவாசமிருந்து பிரணவஜபம் பன்னீராயிரத் தால் அப்பாவம் நீங்கிப் பரிசுத்தனாவான்'' என்கின்றது பஸ்மஜாபால உபநிடம்.

"யதிர் பஸ்மதாரணம் த்யக்த்வா ஏகதா
உபோஷ்யத்வாதச ஸஹஸ்ரப்ரணவம்
ஜப்த்வா ஸுத்தோபவதி"

இத்தகைய திருநீறு புனைந்த அடியவர் யாவராயினும் அவரைச் சிவமாகப் பாவித்து வணங்கும் பண்புடையவர் ஏனாதி நாதர். தனக்கு வாட்பயிற்சியால் வரும் செல்வம் அனைத்தையும், திருநீறு புனையும் அடியவர்க்கே பயன்படுத்தி வந்தமையால் அவரது அன்பு புலனாகின்றது.

இவருடைய வன்மையும் ஒப்பற்றது. அழுக்காறு கொண்ட அதிசூரன் போருக்கு அழைக்க, துணைவேண்டாது தாம் ஒருவரே

போருக்குப் புறப்பட்டதனால் விளங்குகின்றது. இவர் தனியே செல்வதைக் கண்டு மாணவரும் சுற்றத்தினரும் துணை சென்றனர். இறுதியில் அதிசூரன் தோற்று ஓடினான். வஞ்சிக்கக் கருதி அப் பாதகன் திருநீறு நெற்றியில் அணிந்து பலகையால் மறைத்து வந்தான்.

நாயனார் அவனை எதிர்க்குந் தருணத்தில் பலகையை நீக்கினான். விபூதியைப் பார்த்தார். உடனே, கொல்லவந்த அவனை அடியவராகவே கருதினார். தவிர, வாளும் பலகையும் எறிந்து விட்டால் நிராயுதனைக் கொன்ற பாவம் அடியார்க்கு வரக்கூடாது என்று கருதி, வெறுமையாகவே ஆயுதந் தாங்கி நின்றார். இந்த இடந்தான் இவர் வரலாற்றின் முக்கியமான பகுதி; இவருடைய அன்பின் சிகரமும் இதில்தான் விளங்கு கின்றது. இவருடைய திருநீற்றின் அன்புதான் என்னே! என்னே! உயிரையுந் தியாகம் செய்துவிட்டார்.

இறைவன் பாசநீக்கம் பலவழியிற் புரிவான். இங்கு இவருக்குப் பற்றலர் தம் வாளால் பாசமறுத்து ஆட்கொண்டான். தற்கொலை பெரும்பாவம்; நாயனார் கொல்ல வந்தபோது கொலைக்கு உடன்பட்டு நின்றது தற்கொலையாகாதோ? எனின், ஆகாது; தான் திருநீற்றின்பால் வைத்த அன்பின் மிகுதியினால் உயிரைத் தியாகம் புரிந்தார்.

"வேடநெறிநில்லார் வேடம்பூண்டு என்பயன்?" என்ற திருமூலர் வாக்கின்படி, வஞ்சனையாகத் திருநீறு பூசிய அதிசூரன், நாயனாரைக் கொன்ற பாவத்தினால் மீளா நரகிற்கு ஆளாயினான். பூசிய விபூதியால் புனிதனாகவில்லை. அரசனுடைய சின்ன மணிந்த அரசசேவகர் புரிகின்ற குற்றத்திற்கு அதிக தண்டனை கிடைப்பது போல், திருநீறு உத்திராக்கம் அணிந்துகொண்டு தீவினைபுரிவோர் பெருந்துன்பமும் நரகமும் எய்துவர்.

மெய்ப்பொருள் நாயனாரும் ஏனாதிநாத நாயனாரும் திருநீற்றின் பெருமைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்கள். இருவரும் முடிவில் விபூதியின் அன்பை வழுவாமல் வென்றனர். தோல்வியுற்றனர் முத்திநாதனும் அதிசூரனும். அவர்களுடைய உடம்பை அழித்தனரேயன்றி கருத்தை அழிக்க முடியவில்லை. வெற்றியென்பது கருத்தில் அடங்கி நிற்கின்றது.

அதிசூரனும், முத்திநாதனும் நரகிடை வீழ்ந்து துன்புற்றனர். மெய்ப்பொருளும், ஏனாதிநாதரும் சிவபதமடைந்து இன்புற்றனர்.

கண்ணப்ப நாயனார் புராணம்

"கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கு அடியேன்"

மேவலர் புரங்கள் செற்ற விடையவர் வேத வாய்மைக்
காவலர் திருக்கா ளத்திக் கண்ணப்பர் திருநா டென்ப
நாவலர் புகழ்ந்து போற்று நல்வளம் பெருகி நின்ற
பூவலர் வாவி சோலை சூழ்ந்தபொத் தப்பி நாடு.

அன்பின் திருவுருவம் கண்ணப்பர்; அவர் திருவவதாரஞ் செய்த நாடு பொத்தப்பி நாடு. புலவர்கள் புகழ்ந்து போற்று தற்குரிய நல்ல வளஞ் செறிந்து, தாமரையும், ஆம்பலும் பூக்கும் தடாகங்களும், நறுமலர்ச் சோலைகளும் நிரம்பிய அந்த நாட்டின் தலைநகரம் உடுப்பூர் எனப்படும். முத்துக்களைக் கொழிக்கும் அருவிகளுடன் கூடிய நீண்ட மலைகளுக்கு இடையில் உள்ள அவ்வூரைச் சுற்றி யானைத் தந்தங்களை வரிசையாக நட்டு வேலி யமைத்திருக்கின்றார்கள்.

ஆங்கு, வேடர்கள் வாழ்கின்றனர். அவர்களுடைய வீடுகளுக்குமுன் நாய்களைக் கட்டிவைத்துள்ள விளாமரங்களில் வார்வலைகள் தொங்கும். பன்றி புலி கரடி கடமை முதலிய இனங்களின் பார்வை விலங்குகள் கட்டி வைத்திருக்கும். மலைநெல் பாறையில் உலரும். வேட்டுவச் சிறுவர்கள் புலிக் குட்டிகளோடும், யானைக் கன்றுகளோடும் விளையாடுவார்கள்; வேட்டுவச் சிறுமிகள் பெண்மான்களுடன் விளையாடுவார்கள்; வழிபறித்துண்ணும் வேடர்கள் அயலிடங்களில் கவர்ந்து வந்த பசுக்கூட்டங்களும், மதம் பொழியும் யானைக்கூட்டங்களும் அங்கு வாழும். இருண்டு திரண்ட உடம்பை உடைய வேடர்கள் கொடுந்தொழிலே புரிபவர்கள்; அச்சமும் அருளும் அவர்பால் அணுவளவும் இலவாயின. தோலுடை தரித்திருப்பர்; ஊனை வேகவைத்துத் தேனுடன் கலந்து உண்பார்கள். அவ்வேடர் கூட்டங்களில் 'கொல்' 'எறி' 'குத்து' 'அடி' 'உதை' என்ற சொற்களே நிறைந்திருக்கும். உடுக்கை, பம்பை, சிறுபறை முதலிய வாத்தியங்கள் ஒலிக்கும்; அருவிகளின் ஓசை ஒருபுறம் முழங்கும்.

இத்தகைய வேடர்களுக்குத் தலைவன் நாகன்; கண்ணப்பரைப் புதல்வராகப் பெறுவதற்குப் பண்டைப்பிறப்பில் தவஞ் செய்தவன்; ஆனாலும், பிறப்பின் தன்மையால் குற்றமே குணமாகக் கொண்டவன்; கொடுமை புரிபவன்; விற்றொழிலில் வலிமை மிக்கவன்; ஆண்சிங்கம் போன்றவன்; அவனுடைய மனைவியின் பேர் தத்தை; மறவர்களது பழங்குடியில் பிறந்த அவள் பெண்சிங்கம் போன்றவள். புலிப்பல்லின் தாலி பூண்டவள்; பலகறைகளைக் கோத்து மாலையாகப் புனைந்தவள்.

சிறப்பு வாய்ந்த நாகனுந் தத்தையும் வேடர்குலத் தலைமை பூண்டு வாழ்ந்தனர். மகப்பேறு இன்றி நெடுங்காலம் வருந்தினர். 'இனி இவருக்குப் பிள்ளைப்பேறு கிடைக்காது' என்று பலரும் கூறினர். நாகன் மிகவும் வருந்தி மலைக்கு நாயகராகிய முருகவேள் திருக்கோயிலிற் சென்று சுற்றம் பரிசனம் சூழ வழிபட்டான். சேவலும் மயிலும் விட்டான்; தோரணங்கள் பூமாலைத் தொங்கல்கள் நாட்டினான்; குரவைக்கூத்து அயர்ந்தான்; வெறியாடி விழா புரிந்தான். மயில்மேல் வரும் அயில் வேலண்ணலின் திருவருளால் தத்தை கருப்பமுற்றனள். கானவர் களித்தனர். பத்தாவது திங்களில் வானவர் போற்ற உவர்க் கடலில் திங்கள் உதித்ததுபோல் தத்தை புத்திரனை யீன்றனள். கானவர் முத்து மழை பொழிந்தனர். வானவர் மலர்மழை பொழிந்தனர். தேவ துந்துபி முழங்கியது. வேடர் துடி முதலிய வாசித்து ஆனந்த மெய்தினர்.

வேடர்கள் தங்கள் இறைவனுக்கு அருமை மகன் பிறந்தது குறித்துப் பெருவிழா செய்தனர். கருவரை காளமேகத்தை ஏந்தியது போல் நாகன் தன் புதல்வரை எடுத்து மகிழ்ந்தான். அண்ணலை ஏந்தியபோது திண்மையாக இருந்தபடியால் திண்ணன் என்று பேரிட்டான். கரிய ஒளி வீசும் அழகிய குழந்தையாகிய புண்ணியப் பொருளுக்குக் கண்ணினுக்கு அணியாகப் பலகறை யானைக்கொம்பு மணி புலிப்பல் முதலியவைகளால் செய்த அணிகலன்களை அணிந்து அழகு செய்தனர். குழந்தையைப் பலவிதமாக ஒப்பனை புரிந்து வ்ளர்ப்பாராயினர். பருவந்தொறும் மலையில் வாழுந் தெய்வங்கட்குப் பூசையிட்டு மகிழ்ந்தனர்.

திண்ணனாருடைய சிறிய தலைமயிரைப் பின்னி முடிந்து, புலியின் நகத்தினைச் சுட்டியாக அணிந்தனர்; முள்ளம்பன்றியின் முள்ளை அரிந்து இடையிடையே கோத்த புலிப்பல் மாலை தரித்தனர். திண்ணனார் தளர்நடையிட்டு வளர்வார். பலகறை

யாலும் பிறமணிகளாலும் சதங்கை, தண்டை முதலியன அணிந்துகொண்டு தாய், தந்தையர் மகிழ மழலைமொழி பேசி விளையாடுவார். பார்வைப்புலியின் வாயை முழையென்று கையை விடுவார். அதுகண்டு நாகன் தழையை எடுத்து அடிப்பான் போல் ஓங்க, திண்ணனார் கண்ணீர் மல்கி அழுவார். தந்தை எடுத்து அணைத்து ஆறுதல் புரிவார்; உடுக்கைபோல் செய்த கட்டையை உருட்டுவார்; நாய்களைப் பிடித்து ஆட்டுவார்; பெண்பிள்ளைகள் கட்டிய மணல்வீட்டை அழிப்பார்; பிள்ளைமைக் குறும்புகள் பலபுரிந்து ஐந்தாண்டு நிரம்பப் பெற்றார்.

வேடச்சிறார்களுடன் சோலைகளிலும் தோப்புகளிலும் விளையாடுவார். ஆறாவது ஆண்டில் யானைக் கொம்புகளாற் செய்த வேலியைக் கடந்து சிறுகாட்டிற் சென்று முயற்குட்டி காட்டுப்பன்றியின் குட்டி, புலிக்குட்டி, செந்நாய்க்குட்டி முதலியவைகளை மிக்க வேகத்துடன் சென்று பற்றித் தமது வாயிலில் உள்ள மரங்களில் கட்டி வளர்ப்பார். மாலைப்பொழு தில் குற முதுமகள் கடுகுப் புகையாட்டி, உணவூட்டித் தூங்க வைப்பாள். விடிந்ததும் உணவு தந்து விளையாட விடுவாள். இவ்வாறு வளர்ந்து விற்பயிற்சி செய்யும் பருவத்தை எய்தினார்.

நாகன் திண்ணனாரைத் தழுவி மகிழ்ந்து, விற்பயிற்சி செய்விக்க ஒரு நல்ல நாளை நிச்சயித்து, தனது மரபினர் யாவர்க்கும் சொல்லி அனுப்பினான். முருகனருளாற் பிறந்த அருமை மகன் விற்பிடிக்கின்றான் என்று எங்கும் பறை யறைந்தனர். அதுகேட்டு மலைகளை ஆளும் மறக்குலத் தலைவர்கள் தம் சுற்றத்தாருடன் புறப்பட்டு, மலையில் உண்டாகும் பொன்னும், மணியும், முத்தும், புலித்தோலும், யானைக் கொம்பும், மயிற் பீலியும், தேனும், ஊனும், கனிகாய் கிழங்குகளும் எடுத்துக் கொண்டு நாலா திசைகளிலிருந்தும் வந்துசேர்ந்தார்கள். நாகன் அவ்வாறு வந்து குழுமிய எல்லோரை யும் வரவேற்றுத் தெய்வத்தைப் பரவி வில்விழா செய்யுமாறு கட்டளையிட்டான்.

நஞ்சினை அமுது செய்த செஞ்சடைக் கடவுளுக்கு ஊனமுதமாக்கும் வில்லுக்கும், திண்ணனாருக்கும் புலிநரம்பினாற் காப்புக் கட்டினார்கள். மலையுறை மாக்கள் யாவரும் வாழ்த்தினார்கள். மலைநெற் சோறு, புல்லரிசிச் சோறு, ஊன் கலந்தாக்கிய அடிசில், கிழங்கு, தினைமாவு, தேன், விளாம்பழம்

முதலிய உணவுகளை வேடர்கள் நிரம்ப உண்டு பெருங்களி கொண்டனர். பலவகையான கள்ளைக் குடித்து ஆடினார்கள். பாடினார்கள். உச்சிவேளையில் திண்ணனார் பூமாலை புனைந்து, மணிகளுடன் கூடிய வடத்தோல் கட்டிப், பலகறைப் பூண்களைப் பூண்டு, வெட்சியணிந்து, குற்றமில்லாத ஆசிரியன் ஏந்தும் வலிய வில்லுக்கு அருகில் வந்தார். வேடர்கள், முரசு கொம்பு குழல் உடுக்கை முதலிய வாத்தியங்களை வாசித்துக்கொண்டு, மேகம் போல் ஆரவாரஞ் செய்து, அந்த ஊரை வலம் வந்தார்கள். இப்படியாக ஏழுநாள் விழா கொண்டாடினார்கள். ஏழாவது நாள் முன்னையினும் பன்மடங்கு அலங்காரஞ் செய்தனர். உச்சிப் பொழுதில் மங்கல வாழ்த்தும் பல்லியங்களும் முழங்க ஆசிரியன் திண்ணனார் கரத்தில் வில்லைக் கொடுத்து விற்பயிற்சி தொடங்கினான். கானவர்க்கு அரிய சிங்கமாகிய கண்ணப்பர் அன்றுமுதல் வில்வித்தையை இனிது பயின்று தேர்வு பெற்றார். சந்திரன் பதினாறு கலைகள் நிரம்பியதுபோல் திண்ணனார் பதினாறாண்டுப் பருவம் அடைந்தார்.

வனமெங்கும் மலையெங்கும் ஓடி வேட்டையாடி, பகைவரை வாட்டிப் பசுக்களைத் கவர்ந்து, வரையாட்சி செய்துவந்த வேடர் தலைவனாகிய நாகனுக்கு தளர்ந்த மூப்பு எய்தி வில்லுழவின் முயற்சி மெலிவு பெற்றான். மலைச்சாரல்களில் விளையும் பயிர்களையும் உயிர்களையும் விலங்குகள் மிகுத்து அழிக்கத் தொடங்கின; அதனால், வேடர்கள் வருந்தி நாகன்பால் வந்து முறையிட்டார்கள். நாகன், "நான் முதுமைப் பருவமடைந்து விட்டேன். என்னால்வேட்டையாட இனி முடியாது. எனது அருமை மகனை உங்கட்குத் தலைவனாக்குவேன். அவனது தலைமையின் கீழ் நீங்கள் வாழுங்கள்" என்றான்.

வேடர்கள் சிறிது வருந்திப்பின் மகிழ்ந்து, அவனை வணங்கி, "ஐயனே! நாங்கள் இத்தனைக் காலமாக உமது சிலையாட்சியின் கீழ் இனிது உண்டு தீங்கின்றி வாழ்ந்தோம். இனி தங்கள் கட்டளைப்படியே இளவரசரது ஆட்சியின் கீழ் நிற்போம். அவரை அழைத்து வரையாட்சியை வழங்கும்" என்றனர். திண்ணனாரை அழைத்து வருமாறு ஆள்விட்டான். மகனைக் கன்னிவேட்டைக்கு அனுப்பும் பொருட்டு, காடுபலியூட்டக் கருதி, தேவராட்டியை அழைப்பித்தான்.

அந் நரைமூதாட்டி மிகமிக மகிழ்ந்து வந்து அட்சதை தந்து போற்றி நின்றாள். அவளை "நலமா யிருக்கின்றனையா?" என்று

வினாவினான். அவள், "நீ வைத்தபடி ஊனும் தேனும் ஏனைய வளங்களும் பெற்று வாழ்கின்றேன்" என்று கூறி வாழ்த்தினாள்.

நாகன், "அம்மே! என் மகன் வேடர்குலத் தலைமை பெற்று பொருப்பாட்சி பெறுகின்றான். வேட்டையில் என்னைவிட அவனுக்கு மேலான நன்மைகள் உண்டாகுமாறு வனதேவதைகள் விரும்பியுண்ண காடு பலியூட்டு" என்றான்.

"யான் வரும்போது நல்ல சகுனங்கள் வந்தன; அதனால், உன் மகன் உன்னிலும் மேம்படுவான்" என்று கூறி வாழ்த்தி, பூசைக்கு வேண்டுவன யாவுங் குறைவின்றிப் பெற்றுச் சென்றாள்.

நீல மணிமலை வில்லேந்தி வருவதுபோல், திண்ணனார் வேடர் சூழ வந்து தந்தையைப் பணிந்தார். தாதை காதலுடன் தழுவித் தன்னுடன் புலித்தோலாசனத்தில் இருத்தினான். "மகனே! எனக்குச் சாலவும் மூப்பு வந்து விட்டது. அதனால், வேட்டை யாட இனி என்னாலாகாது. நீ வரையாட்சியை மேற்கொண்டு, என்னிலும் மேலாக வேட்டையாடி உனது மரபுரிமையைத் தாங்குவாய்" என்று கூறி, அரசாங்க அடையாளமாக உடைத் தோலையுஞ் சுரிகையையுந் தந்தான். தந்தையார் சொல்லைத் தட்டாமல் அவைகளை வாங்கிக் கொண்டு திண்ணனார் சிந்தை பரங்கொள நின்றார். நாகன், "என் செல்வமே! நமது வேடர் குலத்தாரை நான் காப்பாற்றியதற்கு மேலாக நன்மை செய்து, அயற்புலங்கள் கவர்ந்து, பகையொழித்துச், சிலைவளத்துடன் வாழ்வாய்; வேட்டைகளும் உனக்கு வாய்க்கும்; இனி காலந் தாழ்க்காமல் வேட்டையாட விரைந்து செல்லுதி" என்று வாழ்த்தி விடையளித்தான். திண்ணனார் தந்தையைப் பணிந்து விடைபெற்றுச், சுனைநீரில் முழுகி அன்றிரவைக் கழித்தார்.

விடியற்காலையில் நன்கு வேட்டைக் கோலம் புனைந்து வில்லெடுத்துப் புறப்பட்டார். வேடர்கள் சூழ்ந்து சென்றனர். தேவராட்டி எதிரில் வந்து, பிரசாதந் தந்து, "உன் தந்தை, தந்தையின் தந்தைக்கும் இவ்வளவு நன்மைகள் எய்தவில்லை. உனது விறல் வீரம் நன்று. இனிது வாழி, இது எம்மளவில் நில்லாது" என்று வாழ்த்தினாள். அவளுக்கு எதிர்சிறப்பு செய்து அனுப்பிவிட்டுக், கார்மழை மேகம் போன்று சென்றார்.

வில்லும், வாளும் ஏந்திய வேடர்கள் கூட்டம் அவருடன் தொடர்ந்தது. வேட்டை நாய்கள் விரைந்து சென்றன; வார் வலைகளும் பார்வை விலங்குகளும் கொண்டு, வாத்தியங்களை

முழங்கிய வண்ணமாய் வேடர் சூழ்ந்து சென்றனர். காட்டுப் பன்றி, மான், கரடி, காட்டெருமை, யானை, புலி முதலிய விலங்குகள் வெருண்டு எழுந்து பாய்ந்தன. அவைகளை வேடர்கள் அம்புகளாற் கொன்றனர். காடெங்குந் திரிவார்; விலங்குகளைப் பலபலவாறு மலைந்து கொல்வார். யானைக்கன்றுகளையும், கருவுற்ற விலங்குகளையும், ஏனைய விலங்குக்குட்டிகளையும் கொல்ல மாட்டார்கள். இவ்வாறு தருமநெறி தவறாமல் வேட்டையாடினார்கள்.

இவ்வாறு, திண்ணனார் வேட்டையாடும்பொழுது, ஒரு சிறந்த வலிமையுடைய பன்றி, யானைகளும் அஞ்சுமாறு இடி போன்ற குரலுடன், கண்களில் தீப்பொறி சிதறி வலைகளை யறுத்துக் கொண்டு மிக்க வேகத்துடன் ஓடியது. அதனைச் சிங்கவேறு போன்ற திண்ணனார் கண்டு தொடர்ந்து மிகமிக வேகமாகச் சென்றார். அவரைப் பிரியாமற்படிக்கு நாணன் காடன் என்ற இரு வேடர்களுந் தொடர்ந்து சென்றனர். அப்பன்றி வன்மையுடன் மிகுந்த தொலை ஓடி ஒரு மலைச்சாரலில் சென்று மேலுஞ் செல்ல வலியிழந்து மரங்களுக்கு இடையில் நின்றது. திண்ணனார் கணைவிட்டுக் கொல்லாமல் வீரத்துடன் எதிர்த்து உடைவாளை உருவிக் குத்தி பன்றியின் உடம்பைப் பிளந்தார். திண்ணனாருடைய வீரச்செயலைக் கண்ட நாணன், "காடனே! இப் பன்றியின் பின் இன்று பல காதங்கள் வந்து இளைத்தோம். நம் தலைவன் இதனைக் கொன்றான். என்ன வீரம்? ஆ! ஆ!" என்று பாராட்டி இருவரும் திண்ணனார் பாதத்தில் வீழ்ந்து வணங்கினர்.

திண்ணனாரை நோக்கி, "ஐயனே! நெடுந்தூரம் வந்தபடியால் எங்களுக்கு மிகுந்த பசி வந்துவிட்டது. ஆனபடியால் இப் பன்றியைச் சுட்டு நீயுஞ் சிறிது சாப்பிடு; பின்னர் நாங்களுந் தின்று தண்ணீர் குடித்து, வேட்டைக் காட்டுக்கு மெல்லப் போவோம்" என்றனர்.

திண்ணனார், "தண்ணீர் இவ்வனத்தில் எங்கே இருக்கின்றது?" என்றார். நாணன், "இப் பெரிய தேக்கமரச் சோலையைக் கடந்து சென்றால் நீண்ட மலைக்கருகில் பொன்முகலியாறு ஓடுகின்றது" என்றான். வேடர்தலைவர், "அங்கே போவோம்; இப் பன்றியை எடுத்து வாருங்கள்" என்று கூறி, அவர்கள் அரைக்காத தூரஞ் சென்று கண்ணுதற்பெருமான் வாழ்கின்ற காளத்திமலைச் சாரற் சோலையைக் கண்ணுற்றார்.

நாணனே தோன்றுங் குன்றில் நண்ணுவோம் என்ன நாணன்
காணநீ போதின் நல்ல காட்சியே காணும் இந்தச்
சேணுயர் திருக்கா ளத்தி மலைமிசை யெழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவர் இருப்பர்கும் பிடலாம் என்றான்.

“நாணா! இதோ தெரிகின்ற மலைக்குப் போவோம்” என்று கூறினார். நாணன், “அவ்வாறே செல்லலாம். அங்கு நல்ல காட்சியைக் காணலாம். விண்வரை உயர்ந்துள்ள இத்திருக் காளத்தி மலையின்மீது செம்மையாகக் கோணத்தை நீக்கும் குடுமித்தேவர் இருக்கின்றார்; கும்பிடலாம்'' என்றான். திண்ணனார், “நாணா! இவ்வாறு ஆவது என்னை? இம் மலையைக் கண்டு அணுகிச் செல்லுந்தோறும் என்மேல் உள்ள பாரங் குறைகின்றது; விருப்பம் மேன்மேலும் பொங்கி, உள்ளமும் வேறு ஒரு விருப்பம் கொண்டதாக விரைகின்றது; தேவர் எங்கே இருக்கின்றார்? அவர் உள்ள இருப்பிடத்தைக் காட்டுதற்குப் போவாய்” என்றார்.

மூவரும் பொன்முகலியாற்றினை அடைந்தார்கள். பொன்னும் மணியுங் கொழிக்கும் அத் திருநதியின் கரையில் ஒரு மரத்தின் நிழலில் பன்றியை வைத்தனர். காடனை நோக்கி, “நீ தீக்கடைக் கோலால் நெருப்பை உண்டாக்குவாய்; நாங்கள் மலைக்குப் போய் வருவோம்” என்று கட்டளையிட்டு, நாணனுடன் திண்ணனார் சென்றார்.

வண்டுகள் நெருங்கியுள்ள சோலைகளின் மலர்களை மிதந்துவரும் பொன்முகலி நதியின் தெளிந்த நீரில் இறங்கிச் சிந்தை தெளிகின்ற திண்ணனார், மகிழ்ச்சி மிகவும் பொங்க திருக் காளத்திமலையைக் கண்டு அக்கரை சேர்ந்து மலைச்சாரலை அடைந்தார். கதிரவன் உச்சியை அடைந்தான். திருமலையின் உச்சியில் ஐந்து தேவ துந்துபி ஓசைகளும் கடல் ஒலிபோல் முழங்கியது. அதைத் திண்ணனார் கேட்டார். “நாணா! இது என்ன ஓசை?” என்று வினாவினார். அதைக் கேட்கும் பேறு பெறாத நாணன் இம்மலையில் உள்ள பெருந்தேனைச் சூழ்ந்து கொண்டு தேனீக்கள் செய்யும் ஓசையாக இருக்கும்” என்றான்.

முன்பு செய்தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக்காட்ட அளவிலா ஆர்வம் பொங்கியது; திண்ணனார் நிலைபெற்ற பெருங்காதலுடன் திருமலையை நோக்கி என்பு நெக்குருக, நாணனும் அன்பும் முன்னே செல்ல, தத்துவங்கள் என்னும் படிகளை ஏறிச்சென்று சிவத்தைச் சாரும்

சிவயோகிகளைப்போல் நீண்ட மலையின்மீது ஏறிச் செல்லு கின்றார்.

திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்க மெய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில்அன் புருவ மானார்.

இறைவனைச் சென்று இவர் காணாமுன், கண்ணுதற் கடவு ளுடைய கருணை நோக்கம் இவர்மேல் எய்தியது. அதனால் முன்னைப் பிறப்பின் சார்புகள் நீங்க, சிறந்த ஒளியின் நிழலிலே ஒப்பில்லாத அன்பு வடிவமாயினார்.

மாகமார் திருக்காளத்தி மலையெழு கொழுந்தாயுள்ள ஏகநாயகரைக் கண்டார்; உள்ளத்தில் எழுந்த பெரிய மகிழ்ச்சி யாகிய அன்பின் வேகம் மிகுதியடைய, மிகுந்த விரைவுடன் சென்று மோகமுடன் ஓடி எம்பெருமானைத் தழுவிக் கொண் டார்; உச்சி மோந்தார்; அவ்வண்ணமே ஆனந்த மிகுதியால் நெடிது நேரம் நெட்டுயிர்ப்புடன் நின்றார். நிறைந்தெழு மயிர்க் கால்தோறும் வடிவெலாம் புளகம் பொங்கியது. மலர்க்கண்களில் ஆனந்தக் கண்ணீர் அருவி பாய்ந்தது. "ஆ! அடியேற்கு இவர் இங்கே அகப்பட்டார்; அச்சோ! இது என்ன அதிசயம்?" என்று கூறினார். எங்குமில்லாத அன்புருவாகித் திகழ்கின்றார்.

"கொடிய மறக்குலத்தில் வந்த வேடுவரைப்போல, யானை கரடி, புலி, சிங்கம் முதலிய கொடிய விலங்குகள் திரிதற் கிடமாகிய இக்காட்டிலே, எம்பெருமானே! நீர் தனியே இருப்பதோ? ஓ கெட்டேன்" என்று கூறி மனம் நொந்தார். அவர் கையிலே இருந்த வில் தானே கீழே வீழ்ந்தது. அதையும் அவர் அறியவில்லை. "இவர் மீது பச்சிலையும் பூவும் பறித்திட்டு, நீர் வார்த்து இந்த நல்ல காரியத்தைச் செய்தவர் யாரோ?" என்றார்.

வில்லுடன் அருகில் நின்ற நாணன், 'எனக்கு இது தெரியும்" என்று கூறுவான். "உனது தந்தையும், நானும் முன்னொரு நாள் வேட்டையாடிக் கொண்டு இம்மலைக்கு வந்தோம்; ஒரு பார்ப்பான், இவரைக் குளிர்ந்த நீராலாட்டி, இலையும், பூவுஞ் சூட்டி, உணவு ஊட்டி, இவர் முன்னே சில மொழிகள் சொல்லினான்; அன்று அப்படிச் செய்த அவனே இன்றும் இப்படிச் செய்திருப்பான்" என்றான்.

அன்பு மேன்மேலும் வளர்ந்துகொண்டே தணிதலின்றிப் பெருக நின்ற திண்ணனார், "திருக்காளத்தி நாதராகிய எம்

பெருமானுக்கு இனிய செய்கை இவையே போலும்'' என்று அவற்றைக் கடைப்பிடித்தார். இறைவர் தனித்திருக்கத் தான் பிரிவதற்கு மனம் இடந் தரவில்லை. "என்னே! எம்பெருமான் தனித்திருக்கின்றனரே! இவர் அமுது செய்ய இறைச்சியிடுவாரும் இங்கில்லை. பிரிந்து போவதும் தகாது; என் செய்கேன்? இவருக்கு இறைச்சி கொண்டுவர வேண்டியதும் அவசியமாகும். ஐயன் பசித்திருக்கின்றாரே? அந்தோ! இவரை எவ்வாறு பிரிவேன்? உணவு தரும்பொருட்டுப் பிரியவும் வேண்டும்'' என்று பலப்பல சிந்திக் கின்றார். போவார்; மீண்டு வருவார்; வழுவிலா அன்புடன் தழுவிக் கொள்வார்; காதலுடன் கடவுளை நோக்குவார். இளங்கன்றை விட்டுப் பிரியும் பசுவைப்போல் துடிதுடிப்பார். "நாதனே! நீர் அமுது செய்ய நல்ல மெல்லிறைச்சி நானே குற்றமறத் தெரிந்து கொணர்வேன்'' என்று கூறுவார்.

போதுவர் மீண்டு செல்வர் புல்லுவர் மீளப் போவர்
காதலி னோக்கி நிற்பர் கன்றகல் புனிற்றாப் போல்வர்
நாதனே யமுது செய்ய நல்லமெல் லிறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறெ கொண்டிங்கு வருவேன் என்பார்.

"எந்தையே! உமக்கு ஒருவருந் துணையில்லையே? உம்மைத் தனியாகவிட்டு எப்படிப் போவேன்? ஆனால் நீர் பசித்திருக்கவும், மனம் பொறுக்கேன்; இதோ விரைவில் சென்று இறைச்சி கொணர்வேன்'' என்று கூறிக் கண்ணீர் சொரிந்து, வில்லை யெடுத்துக் கொண்டு, தொழுது மிகவும் அரிதின் நீங்கினார்.

நாணன் பின்வர மலையை விட்டிறங்கினார். பற்றற்று நின்ற அவரை அன்பே செலுத்துகின்றது. பொன்முகலி நதியைக் கடந்து புதுமலர்ச் சோலையை அடைந்தார்.

காடன் எதிரே சென்று தொழுது, "தீக்கடைந்து வைத்தேன்; பன்றியின் உறுப்புக்களை எல்லாம் சரிபார்த்துக் கொள்ளும்; ஏன் இத்துணை நேரம்? இனி நாம் திரும்புதற்குத் தாமதமாகின்றதே' என்றான். நாணன் கூறுவான்: "காடனே! திண்ணன் மலையில் குடுமித் தேவரைக் கண்டு அப்படியே அணைத்துக்கொண்டு வங்கினைப் பற்றிக்கொண்ட வலிய உடும்பைப் போல நீங்காதவனாயினான். இங்கும் அத்தேவர் தின்னுதற்கு இறைச்சி கொண்டு போவதற்காகவே வந்திருக்கின்றான். நமது குலத் தலைமையை விட்டான்; தேவர்க்கே ஆளாயினான்'' என்றான்.

காடன், "திண்ணா! நீ என்ன காரியஞ் செய்தாய்? என்ன மயக்கங் கொண்டாய்? நீ எங்கள் தலைவனல்லையோ?" என்றான்.

அவர்கள் முகத்தைத் திண்ணனார் நோக்கினாரில்லை. பன்றியைத் தீயில் வதக்கி, தசைகளை வேறு வேறாக அறுத்து, அம்பினில் கோத்துக் காய்ச்சி, பதமுறச் செய்து, சுவை பார்க்கும் பொருட்டுப் பல்லினில் அதுக்கிப் பார்த்து, மிகவும் இனியவைகளை ஒரு தேக்கிலைக் கல்லையில் இடுவாராயினார்.

நாணனுங் காடனும் அவருடைய செயல்களைக் கண்டனர். "இவன் மயல் முதிர்ந்தவனாயினான். அருமையான இறைச்சியைக் காய்ச்சி அதுக்கிப் பார்த்து உமிழ்கின்றான். பெரும்பசி இவனுக்கு இருந்தும் இதனைத் தின்கின்றானில்லை. நமக்குந் தருகின்றானில்லை. சிலவற்றைப் புறத்தே எறிகின்றான். இவன் தெய்வ மயக்கங் கொண்டான். இதனைத் தீர்க்கும் வழியும் தெரியவில்லை. தேவராட்டியையும் நாகனையும் அழைத்து வந்து இதனைத் தீர்ப்போம்" என்று நீங்கி வேட்டைக்காடு சென்று ஏனைய வேடர்களையும் அழைத்துக் கொண்டு போயினார்கள்.

அன்புருவாய ஆண்டகை, வேடர்கள் சென்றதை அறியவில்லை. விரைவாகக் காலையில் ஊனமுது அமைத்துக் கொண்டார். பெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்ட எண்ணி, பொன்முகலியாற்றில் நல்ல நீரைத் தூய வாயினில் முகந்து கொண்டார். மலர்களைக் கொய்து தலைமயிரில் சொருகிக் கொண்டார். ஒரு கையில் வில்லும் அம்புந் தாங்கி, மற்றொரு கையில் இறைச்சியையிட்ட கல்லையைத் தாங்கி, "எம்பெருமான் பசித்திருப்பாரே" என்று இரங்கி ஏங்கி, மிகமிக விரைவாகக் காளத்திமலையை அடைந்தார்.

மலைக்கொழுந்தாகிய இறைவர் இளைத்தனர் என்று வாட்டத்துடன் சென்று இறைவரைக் கண்டு, அவர் முடிமிசையிருந்த மலரைத் தமது காலில் தரித்த அழகிய செருப்பால் மாற்றினார். அன்பு உமிழ்பவர்போல வாயில் உள்ள மஞ்சனநீரை முடிமேல் உமிழ்ந்தார். மலைமிசை மேவும் பெருமானுக்குத் தலைமிசை சுமந்த மலர்களை வணங்கிச் சாத்தினார். ஊன்கல்லையை இறைவர் திருமுன் வைத்து, "பெருமானே! கொழுப்பினையுடைய தசைகளை எல்லாம் தெரிந்து அரிந்து எடுத்து, நன்குக் காய்ச்சி, பல்லினால் அதுக்கிப் பார்த்து, பழகிய நாவினால் சுவை பார்த்துக் கொணர்ந்தேன். இது அழகிய இறைச்சி; ஐயனே! அமுது செய்தருளும்" என்று வேண்டினார்.

இவ்வாறு, திண்ணனார் இறைவரை வழிபாடு செய்தார். கதிரவன் மேற்கடலில் முழுகினான். இரவிலே இரைதேடும் கொடிய விலங்குகளால் எம்பிரானுக்கு இடர் நேரும் என்று எண்ணி, சிறந்த அன்புடன் வில்லைத் தாங்கி ஈசன் அருகில் நேசமுடன் நிற்கின்றார்.

சார்வரு தவங்கள் செய்து முனிவரும் அமரர் தாமும்
கார்வரை யடவி சேர்ந்துங் காணுதற் கரியார் தம்மை
ஆர்வமுன் பெருக ஆரா அன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார் நீளிருள் நீங்க நின்றார்.

இரவு தோன்றியது. முத்துக்களும், நாகரத்தினங்களும் ஒளி வீசுகின்றன; ஒளிவீசும் பெரிய சோதி மரங்களின் விளக்கத்தாலும், குரங்குகள் கற்பொதும்பில் தமக்கு விளக்காக வைத்த மணிவிளக்கு களின் ஒளியினாலும், ஐம்புலன்களை அடக்கிய மாதவர்களின் அரிய பெரிய சோதியாலும், எந்தையார் திருக்காளத்திமலையில் இருள் நீங்கி இரவே இல்லாதொழிந்தது. வைகறையில் புள்ளினங்கள் ஒலித்தன. கண் துயிலாத வீரராகிய திண்ணனார் அதுகேட்டு "இனி எம்பெருமானுக்கு அமுதுகொண்டு வருவோம்" என்று சிறிது இருள் இருக்கும்போதே வள்ளலைத் தொழுது நீங்கினார்.

கதிரவன் உதயம் புரிகின்றான்; சிவாகம நெறிப்படி நாடோறும் திருக்காளத்தியப்பரை வழிபாடு புரியும் சிவகோ சரியார், முறைப்படி முழுகித், திருமஞ்சனநீர், மலர், திருவமுது முதலியவைகளைச் சுமந்துகொண்டு, தேவதேவர் முன் வந்தார். பெருமான் திருமுன் வெந்த இறைச்சியும் எலும்புங் கண்டு, நடுநடுங்கித் தாண்டி அகன்று ஓடினார். "அந்தோ! எந்தை முன்பு இந்த அநுசிதங்களை யார் செய்தனரோ? கெட்டேன்!" என்று வருந்தினார்.

"தேவதேவா! கருணாமூர்த்தி! அஞ்சா நெஞ்சுடைய வேடரே இதனைச் செய்திருப்பர். இவ்வாறு அவர்கள் செய்து போவதா? இப்படிச் செய்ய தேவரீர் திருவுள்ளஞ் செய்வதா?" என்று அழுதார். விழுந்தார். புரண்டார். பூசைக்குக் காலந் தாழ்க்கின்றதே என்று கருதி, எலும்புகளையும், இறைச்சிகளையும் செருப்படி யையும் நாயடியையும் திருவலகால் மாற்றினார். பொன்முகலி நதியிற் சென்று மீண்டும் முழுகி வந்தார். பழுது நேர்ந்தது குறித்துப் பவித்திரம் புரிந்து, பூசனை செய்து தொழுது தூமலர் தூவித் துதித்து விடைபெற்றுக்கொண்டு தமது தவவனஞ் சார்ந்தார்.

வானவர் போற்றுங் கானவர் பெருமான் தனியே வேட்டையாடி, பன்றி, மான், கடமை முதலிய விலங்கினங்களை எதிர்த்தும், ஒளித்து நின்றும், அவைகளின் குரல் போல் கூப்பிட்டும் கொன்று குவித்தார். தேக்கிலைகளைத் தைத்துக் கல்லைகளாகச் செய்தார். தீக்கடை கோலால் தீயை வளர்த்துத் தசைகளை அம்பிற் கோத்துக் காய்ச்சி நாவினால் சுவை கண்டு அவைகளைக் கல்லையிலிட்டுக் கோற்றேனை அதிற் பிழிந்து, திருமஞ்சன நீரும், திருப்பள்ளித் தாமமும் முன்புபோல் வாயிலுந் தலையிலுங் கொண்டு, திருக் காளத்திமலை ஏறினார். அந்திவண்ணர் மருங்கு வந்து, அந்தணருடைய பூசை மலர்களை முன்போல் திருவடியால் நீக்கி, 'வாய்நீராலாட்டி, தலைமயிரில் உள்ள பூவை உதிர்த்தார். ஊனமுது கல்லையுடன் வைத்து, "சுவாமீ! இது முன்னையினும் நல்லது. பன்றி, மான், கடமை முதலியவற்றின் இறைச்சி; அடியேனும் சுவை பார்த்தேன். தேன் கலந்தது; தித்திக்கும்; அமுது செய்யும்" என்று வேண்டினார்.

இவ்வாறு, திண்ணப்பர் பகலில் வேட்டையாடுவார்; இரவில் காவல் புரிவார். சிவகோசரியாரும் நாடோறும் மனம் வருந்தி அநுசிதங்களை அகற்றிக் கும்பாபிஷேகம் புரிவார்.

நாணனுங் காடனுஞ் சென்று இவருடைய தன்மையை நாகன் பால் தெரிவித்தனர். நெடுநாள் மகவின்றித் தளர்ந்த வயதில் முருகவேள் கருணையால் அவதரித்த புதல்வன், தேவுமால் கொண்டதைக் கேட்ட நாகன் மிகமிக வருந்தினான். ஊணும் உறக்கமும் விட்டான். தேவராட்டியுடனும், ஏனைய பரிவாரங் களுடனும் திருக்காளத்தி மலைமிசை வந்து மகனாரைக் கண்டான். அவர் இவர்களைக் காணவில்லை. அவருடைய நாட்டம் முழுவதும் இறைவர் மீது பதிந்திருந்தது. "மகனே! என் செல்வமே! இது என்ன மயக்கம்? உன் அன்னை அழுகின்றாள். நீ வேடர்குலத் தலைவனல்லவா? ஊருக்கு வா" என்று பலப்பல கூறி அழைத்தான். அவைகள் அவர் செவியில் விழுந்தில.

நாகன் முதலியோர் இவன் நம்வசப்படான் என்று கைவிட்டு நீங்கினார்கள். இறைவர் திருவருள் நோக்கால் பரிசவேதியால் இரும்பு தங்கமானதுபோல், உடல் ஒன்று உண்டு என்ற அறிவும், இருவினையும் மும்மலமும் நீங்கி அன்பின் பிழம்பாய்த் திகழும் அவர் இவர்களது குறிப்பில் அகப்படுவரோ? ஒருபோதும் அகப்படார்.

இவ்வாறு நான்கு நாட்கள் கடந்தன. ஐந்தாவது நாள் அதிகாலை திண்ணனார் வேட்டையாடச் சென்றார். சிவகோசரியார் வந்து வழக்கம்போல் பவித்ரஞ் செய்து சிவாகம முறைப்படி பூசித்தார். பூசை முடிவில், "ஆலமுண்ட நீலகண்ட நிமலா! எல்லாம் வல்ல இறைவா! உமையொரு பாகங் கொண்ட உத்தம! இவ்விடம் நாடோறும் உமது திருமுன் எலும்பும் இறைச்சியும் இட்டு அநுசிதம் செய்பவர் யாரோ? அவர் இன்னாரென்று அறிய முடியவில்லை. இதனைத் தேவரீர் திருவுள்ளம் பொறுத்துக் கொண்டிருப்பது முறையோ? எம்பெருமானே! இத் தீமையை ஒழித்தருள வேண்டும்" என்று விண்ணப்பம் புரிந்தார்.

அன்றிரவு, சிவகோசரியார் கனவில் கண்ணுதற் பெருமான் தோன்றி, "அன்பனே! நம்மிடம் வந்து பூசிப்பவனை வேடன் என்று நினையாதே. அவனுடைய செயல்களைக் கூறுவோம்; கேள்.

அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாம்என்றும்
அவனுடைய நிலையிவ்வா றறிநீயென் றருள்செய்வார்.

அவனுடைய வடிவம். முழுவதும் நம்மிடத்து வைத்த அன்பே; அவனுடைய அறிவு முழுவதும் நம்மை அறியும் அறிவே; அவனுடைய செயல்கள் எவையாயினும் அவை நமக்கு இனியனவே. திருமலையிலே அவன் வந்து பூசை செய்யுமுன், நம் மீதுள்ள, பழம் பூக்களை நீக்கும் பொருட்டு, அன்பு வெள்ளங் கால் பெருகியதுபோல், விழுஞ் செருப்படி இளங்குமாரனது மலரடியினும் இனிமையாக இருக்கின்றது. உருகிய அன்பு ஒழிவின்றி நிறைந்த அவன் வாயினிற் கொணர்ந்து உமிழும் தண்ணீர், கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களினும் புனித மானது. அவன் தலைமயிரிற் சொருகிக் கொண்டுவந்து சாத்தும் மலருக்கு மாலயனாதி வானவர் சாத்தும் எம்மலர்களும் இணையாகா; வெந்த ஊனைச் சுவை பார்க்கும் பொருட்டு மென்று பார்த்து இனியன என்று தேர்ந்து அவன் கொணர்ந்து இடும் ஊனமுது யாக அவியினும் எனக்கினியதாம். முனிவர்கள் கூறும் வேதம் மந்திரம் துதி முதலியவற்றினும் அவன் கூறும் அன்பு மொழிகள் நல்லதாம். உனக்கு அவனுடைய செயலை நாளை காட்டுவோம். நீ ஒருபுறம் ஒளிந்திரு. அவனுடைய அன்பு முழுவதையுங் காண்பாய். மனக்கவலையை விடு' என்று அருள்புரிந்து மறைந்தருளினார்.

சிவகோசரியார் துயிலுணர்ந்து எழுந்தார். கனவினை நினைவு கூர்ந்து அற்புதமும் அச்சமும் கொண்டார். விடிகின்ற வரை மீண்டும் தூங்காது இறைவர் அருளையும் அவர் திருவருளுக்கு உரிய வேடர்பிரான் அன்பையுமே எண்ணி எண்ணி விம்மித முற்றார்.

அருணோதயமாயிற்று. திண்ணனார் வேட்டையாடச் சென்றார். சிவகோசரியார் பொன்முகலி நதியில் முழுகித் திருக் காளத்தி மலைமிசை ஏறிப், புரமெரித்த புண்ணியனைப் பூசித்துப் பின்புறமாக ஒளிந்திருந்தார்.

நீலமேகம்போல் நின்ற கண்படா வீரர் ஆறாவது நாளாகிய அன்று, வேட்டையாடி, ஊனமுதும், திருமஞ்சன நீரும் பூவும் வழக்கம்போல் எடுத்துக்கொண்டு திருக்காளத்தி யண்ணலிடம் வருகின்றார். "இன்று அதிக நேரம் தாமதித்து விட்டேன்; எம்பெருமான் பசித்திருப்பாரே?" என்று எண்ணி விரைந்து வரும் அவருக்குப் பல தீய சகுனங்கள் எதிர்ப்பட்டன. "அந்தோ! இந்தச் சகுனங்கள் உதிரத்தைக் காட்டும். எம்பிரானுக்கு என்ன தீங்கு நேரிட்டதோ? கெட்டேன்!" என்று வருந்தி ஓடிவந்தார். காளத்தியப்பர் திண்ணனாருடைய தூய அன்பை முனிவருக்குக் காட்டும்பொருட்டுத், தமது ஒரு திருக்கண்ணில் உதிரம் பெருகு மாறு செய்தனர். அதனைத் தூரத்திலேயே கண்ட திண்ணனார் ஓடிவந்தார். உதிரத்தைக் கண்டார்; "அந்தோ" என்று அலறினார்; மயங்கி வீழ்ந்தார்; வாயில் கொணர்ந்த அபிஷேக நீர் சிந்தியது; கையிலிருந்த ஊனமுதும் வில்லும் வீழ்ந்தன; தலையிலிருந்த மலர்கள் சிதறின.

மீளவும் உணர்ச்சி பெற்று எழுந்தார். பெருமான் திருக் கண்ணில் பெருகும் உதிரத்தைத் துடைத்தார்; உதிரம் ஒழுகுவது ஒழியவில்லை. என்ன செய்வது? என்று அறியாது திகைத்தார். பெருமூச்சு விட்டார். மீண்டும் அறிவிழந்து வீழ்ந்தார். தேறி எழுந்தார். "இத் தீமையைச் செய்தார் யாரோ?" என்று நாலா பக்கங்களிலும் பார்த்தார்.

வில்லையும், அம்பையும் எடுத்துக் கொண்டு "இந்த மலையிலே எனக்கு மாறாகக் கொடிய இச்செயலைச் செய்த வேடர்களும் இருக்கின்றனரோ? சிங்கம் முதலிய பொல்லாத விலங்குகள் செய்தனவோ? இன்னதென்று அறியேன்" என்று எண்ணி அப்பெரிய குன்றின் சாரலில் நெடுந்தூரந் தேடிச் சென்றார். வேடரையோ, விலங்குகளையோ கண்டாரில்லை.

மீண்டும் ஆண்டவர்பால் வந்தார். கரை காணாத கவலையால் வாடிக் கண்ணுதலார் பாதம் பற்றித் தழுவிக் கொண்டு கண்ணீர் சொரிந்து கதறினார். “அந்தோ! பாவியேன் கண்டவாறு பரமனார்க்கு அடுத்தது என்னோ? என்ன செய்தால் இது தீருமோ? இதைச் செய்தாரையுங் காணேன். இப்புண்ணிற்கு மருந்து தேடிக் கொணர்வேன்” என்று சென்றார்.

வேறுவேறு வனங்களிற் சென்று அரிதில் தேடிய மருந்து மூலிகைகளைக் கொணர்ந்து, பெருமானுடைய கண்ணில் பிழிந்து வார்த்தார். மருந்தீசராகிய மணிகண்டர் கண்ணில் ஒழுகும் புண்ணீர் அம்மருந்தினால் நிற்கவில்லை. “இனி இந்த நிலைக்கு என் செய்வேன்” என்று; ஏங்கினார். “ஊனுக்கு ஊன் உற்றநோய் தீர்க்கும்” என்ற பழமொழி நினைவுக்கு வந்தது. “என்னுடைய கண்ணை இடந்து அப்பினால் எந்தையார் கண்ணுக்கு மருந்தாகி உதிரம் நிற்கும்” என்று துணிந்தார். அம்பினை எடுத்துத் தமது வலக்கண்ணை அகழ்ந்து அப்பினார். குருதி நின்றுவிட்டது. அதனைக் கண்ட திண்ணனார், நிலத்தினின்றுந் துள்ளிக் குதித்தார். மலை போன்ற தோள்களைக் கொட்டினார்; கூத்தாடினார். நான்செய்த இந்த யோசனை நன்று; நன்று; என்று சிரித்தார். உன்மத்தரைப் போலானார்.

கருணையே வடிவான இறைவர், கண்ணிடந் தப்பிய வள்ளலாருடைய அன்பின் நலத்தினைப் பின்னும் காட்டுமாறு திருவுளங் கொண்டு, மற்றையிடக் கண்ணிலும் உதிரம் வருமாறு செய்தனர். வேடர் குலப் பெருந்தவத்தால் வந்த வள்ளலார் கண்டார். “ஆ! கெட்டேன்; ஒரு கண் குருதி நின்று நலப்பட்டது. மற்றொரு கண்ணில் குருதி வருகின்றது. இதற்கு நான் அஞ்சேன்; மருந்து தெரிந்து கொண்டேன். இன்னும் எனக்கு ஒரு கண்ணிருக்கிறது, அக் கண்ணையும் இடந்து அப்புவேன்” என்று எண்ணினார். அவ்வாறு தனது கண்ணை இடந்தால் இறைவர் கண்ணிருக்குமிடந் தெரியாதொழியும் என்றுங் கருதித், தனது இடக் காலை இறைவருடைய கண்ணுக்கு அருகில் ஊன்றிக் கொண்டு, மிகுந்த விருப்பத்தோடு ஒரு கணையெடுத்துத் திண்ணனார் தனது கண்ணில் ஊன்றினார். அதைக் கண்டு தேவதேவர் தரித்திலர்.

செங்கண்வெள் விடையின் பாகர் திண்ணனார் தம்மை யாண்ட
அங்கணர் திருக்கா ளத்தி யற்புதர் திருக்கை யம்பால்
தங்கண்முன் இடக்குங் கையைத் தடுக்கமூன் றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்குக் கண்ணப்ப நிற்க வென்றே.

தருமவிடையுடைய தயாபரர் திண்ணனாருடைய திருக் கையைத் தகைந்து, "நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப" என்று கூறித் தடுத்தருளினர். கானவர் பெருமானார் கண்ணிடந் தப்பி யதையும், ஊனுகந்த ஐயர் தமது திருக்கரத்தால் தகைந்து, "கண்ணப்பா!" என்று அழைத்ததையும், சிவகோசரியார் கண்டார். மாலயனாதி வானவர் பூமழை பொழிந்தனர். மறைகள் ஆர்த்தன.

கானவர் பெருமா னார்தங் கண்ணிடந் தப்பும் போதும்
ஊனமு துகந்த ஐயர் உற்றுமுன் பிடிக்கும் போதும்
ஞானமா முனிவர் கண்டார் நான்முகன் முதலா யுள்ள
வானவர் வளர்பூ மாரி பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப.

காளத்தியப்பர், "கண்ணப்பா! என் வலத்தில் என்றும் மாறு பாடிலாது நிற்பாய்" என்று அருள்புரிந்தனர். இதனினுஞ் சிறந்த பேறு உண்டோ? காளத்தியப்பரருகில் கண்ணப்பர் நிலைபெற்று நிற்பாராயினார்.

விளக்கம்

தத்தையாந் தாய்தந்தை நாகனாந் தன்பிறப்புப்
பொத்தொப்பி நாட்டுடுப்பூர் வேடுவனாந் - தித்திக்குந்
திண்ணப்ப னாஞ்சிறுபேர் செய்தவத்தாற் காளத்திக்
கண்ணப்ப னாய்நின்றான் காண்.

அன்பு

"அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே" என்பது திருமந்திரம். அன்பே சிவம் ஆதலின் சிவபரம் பொருளை அன்பினாலேயே அடைய முடியும். அன்பு வலையில் இவர் அகப்படுவார்; அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை; அன்பெனுங் குடில் புகும் அரசு; அன்பெனும் கரத்தமர் அமுது; அன்பெனுங் கடத்துள் அடங்கிடுங் கடல்; அன்பு நெறி ஒன்றே இறைவர் பால் நம்மை எளிதில் சேர்க்கும். ஏனைய தவம் தானம் தருமம் ஜெபம் சமாதி ஞானம் முதலியவைகள் வளைந்த வழிகளாம். "ஆரேனும் அன்பு செயின் அங்கே தலைப்படுங்காண் ஆரேனுங் காணா அரன்" என்பது திருக்களிற்றுப்படியார் திருவாக்கு.

"அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பர மல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனொர்கைம் மாறே" என்பது திருவாசகம்.

"அன்பாற் கரைந்துகண்ணீர் ஆறுகண்ட புண்ணியருக்
குன்பால் வரவழிதான் உண்டோ பராபரமே"

- *தாயுமானார்*

இத்தகைய சிறந்த அன்பில் கண்ணப்ப நாயனாருக்குச் சமானம் யாருமில்லை என்பது ஒருதலை. அன்பு நெறியில் தலைசிறந்து நின்றவரும், செழுமலர்க்குருந்தின் கீழ் அன்புக் கடலைப் பருகியவரும், அன்புடன் அழுதழுது என்புருகி மணிவாசகம் புகன்றவரும் ஆகிய வாதவூரடிகள் இவ்வாறு கூறுகின்றனர்.

கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

பத்தியே முத்தி

பத்தி என்பதும் அன்பு என்பதும் ஒருபொருளைக் குறிக்குஞ் சொற்கள். (பத்தி - வடசொல்) "பத்தி நெறியறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமல மறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என்ற மணிவாசகரது திருவாக்கை உன்னுக.

"ஆனபய பத்திவழி பாடுபெறு முத்தியது
வாகநிகழ் பத்தசன வாரக் காரனும்"

என்ற அருணகிரிப் பெருந்தகையின் திருவாக்கின் ஆழத்தையும், அருமையையும் ஊன்றி உன்னி உய்த்துணர்க.

"பத்திசித்தி காட்டி அத்தர்சித்த மீட்ட
பத்தருக்கு வாய்த்த பெருமாளே"

"பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே.

- *திருப்புகழ்*

"பத்தியால் ஏத்தி நின்று பணிபவர் நெஞ்சத் துள்ளார்"

- *அப்பர்*

"பத்த ராயினீர் - அத்தர் அன்னியூர்ச்
சித்தர் தாள்தொழ - முத்த ராவரே"

- *சம்பந்தர்*

முற்பிறப்பு

கண்ணப்பரது முற்பிறப்பு அர்ச்சுனர் என்க. அர்ச்சுனர் பெரிய சிவனடியார்; சிவத்தல யாத்திரை புரிந்ததும், சிவ பெருமானைக் குறித்து மாதவம் புரிந்ததும், பதின்மூன்றாவது நாள் போர் இரவு அபிமன்யு மாண்டது காரணமாக வருந்திச், சயத்திரதனைக் கொல்வதாகச் சபதஞ் செய்து, கண்ணனுடன் கைலை போகத் துணிந்து செல்லும்போது சிவபூசை செய்யாமல் உணவு உட்கொள்ளேன் என்றதும் இதற்குச் சான்றுகளாகும். அவர் சிறந்த சிவபூஜா துரந்தரர்.

சிவபெருமானை வேண்டி மிகப் பெரிய தவம் புரிந்து பாசு பதமும் திருவருளும் பெற்றார். அர்ச்சுனருக்கும் சிவபெருமானுக் கும் ஒரு பன்றியின் காரணமாகப் போர் மூண்டது. சிவபெருமான் திருவுருக்காட்டி அருளி, "யாது வரம் வேண்டும்" என்று அருளிச் செய்தார். அர்ச்சுனர் பாசுபதக் கணையை வேண்டித் தவம் புரிந்தாரானாலும், இறைவரை நேரிற் கண்டதும் போருக்குரிய கணையை வேண்டாது, இடையறாத இன்ப அன்பைத் தருமாறு வேண்டினார். பரமேசன், "தனஞ்சயனே! முதலில் விரும்பிய பாசுபதத்தை இப்போது பெறுவாய்; இப்போது விரும்பிய அன்பினையும் அதனாலாய முத்தியையும் மறுபிறப்பிலே தருவோம்; நம்மை வேடன் என்று குலங்குறித்து இகழ்ந்தமையால் நீ வேடனாகப் பிறப்பாய்; பன்றி காரணமாக இன்று போர் நடந்தது. அன்று பன்றி காரணமாக நீ வந்து காளத்தியில் என்னைக் கண்டு அருள்பெறுவாய்" என்று நல்வரம் நல்கி அருள் புரிந்தார். இவற்றைக் காளத்திப் புராணம் விரித்துரைக்குமாறு காண்க.

காளத்தி புராணமே அன்றி, பதினோராவது திருமுறையில் நக்கீர தேவரும் கூறுகின்றனர்.

"வாமான்றேர் வல்ல வயப்போர் விசயனைப்போல்
தாமா ருலகில் தவமுடையார் - தாமார்க்குங்
காண்டற் கரியராய்க் காளத்தி யாள்வாரைத்
தீண்டத்தாம் பெற்றமையாற் சென்று.

- "ஒட்டி
விசையன் விசையளப்பான் வேடுருவ மாகி
அசைய வுடல்திரியா நின்று — விசையினாற்
பேசுபதப் பான பிழைபொறுத்து மற்றவர்க்குப்

பாசுபத மீந்த பதம்போற்றி — நேசத்தால்
வாயினீர் கொண்டு மகுடத் துமிழ்ந்திறைச்சி
ஆயசீர்ப் போனகமா அங்கமைத்துத் — தூயசீர்க்
கண்ணிடந்த கண்ணப்பர் தம்மைமிகக் காதலித்து
விண்ணுலக மீந்த விறல்போற்றி — மண்ணின்மேல்
காளத்தி போற்றி கயிலை மலைபோற்றி"

திருக்காளத்தி தென் கயிலாயமாகும். அதனால், நக்கீரதேவர் கைலைபாதி காளத்திபாதி யந்தாதி பாடியருளினார். ஆதலின், கைலையிலே தவஞ்செய்த அர்ச்சுனர் கண்ணப்பராக அவதரித்துக் காளத்தியிலே திருவருள் பெற்றார் என்று உய்த்துணர்க.

சேக்கிழாரடிகள் கண்ணப்ப நாயனார் புராணத்துள் கண்ணப்பரை அர்ச்சுனர் என்று கூறினாரில்லை. ஏன்? எனின்; தெய்வச் சேக்கிழார் எப்போதும் எவ்விடத்தும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துக் குறிப்பினாலுணர்த்துங் கொற்றம் பெற்றவர். "முன்னமே முனியாகி எனையடையத் தவமுயன்றான்" என்று திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலும் பிறவற்றிலும் குறிப்புரை யாகவே கூறுவது அவருடைய மரபு. ஆதலின், அவர் கூறாமையின் அர்ச்சுனரே கண்ணப்பர் என்பது இழுக்காகாது. நக்கீரர் முதலியோர் கூறுவதனால் வலியுறுதல் காண்க. சேக்கிழாரடிகள் மிகவும் நுட்பமாகவும் திட்பமாகவும் கூறுகின்றனர்.

முன்புசெய் தவத்தி னீட்ட முடிவிலா இன்ப மான
அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
என்புநெக் குருகி யுள்ளத் தெழுபெரு வேட்கை யோடும்.

அருச்சுனருக்கு அரனார் அருள்புரிந்த அருமையை அப்ப மூர்த்திகள் ஆங்காங்கே பாராட்டும் பரிசினையும் பார்க்க.

அரும்பெருஞ் சிலைக்கை வேட னாய்விறற் பார்த்தற் கன்று
உரம்பெரி துடைமை காட்டி ஒள்ளமர் செய்து மீண்டே
வரம்பெரி துடைய னாக்கி வாளமர் முகத்தின் மன்னுஞ்
சரம்பொலி தூணி ஈந்தார் சாய்க்காடு மேவி னாரே.

நெடியமால் பிரம னோடு நீரெனும் பிலயங் கொள்ள
அடியொடு முடியுங் காணார் அருச்சுனர் கம்பும் வில்லும்
துடியுடை வேட ராகித் தூயமந் திரங்கள் சொல்லிக்
கொடிநெடுந் தேர்கொ டுத்தார் குறுக்கைவீ ரட்ட னாரே.

"வேடனாய் விசயன்தன் வியப்பைக் காண்பான்
வில்பிடித்துக் கொம்புடைய ஏனத் தின்பின்
கூடினார் உமையவளுங் கோலங் கொள்ளக்
கொலைப்பகழி உடன்கோத்துக் கோரப் பூசல்
ஆடினார்"

கண்ணப்பர் பெருமை

கண்ணப்பர் காலம் மிகமிக முற்பட்டது. அவருடைய அன்பும் செயலும் அவ்வண்ணமே எல்லா அடியார்களினும் முற்பட்டன; திருஞான சம்பந்தமூர்த்திகளும், ஏனைய சமய குரவர்களும் கண்ணப்பரைப் போற்றி வழிபட்டனர் எனின் அவர் பெருமையை யாரே அளக்க வல்லார்? கண்ணப்பரது பெருமையைக் காளத்தி யப்பரே அறிவார்.

"வீழ்ந்தெழுவார் கும்பிட்ட பயன்காண் பார்போல்
மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்வார்"

- திருஞானசம்பந்தர் புராணம்

இன்னும் ஆதிசங்கராச்சாரியாரும் இவரை மிக மிக அழகாகப் போற்றிப் புகழ்கின்றனர்.

மார்க்காவர்த்தித பாதுகா பசுபதேரங்கஸ்ய கூர்ச்சாயதே
கண்டூஷாம்பு நிஷேசனம் புரரிபோர் திவ்யாபிஷேகாயதே
கிஞ்சித் பக்ஷித மாம்ஸ சேக்ஷ கபளம் நவ்யோப ஹாராயதே
பக்தி: கிம் நகரோத் யஹோ வனசரோ பக்தா வதம்ஸாயதே.

இதன் பொருள்:- ஈசனுடைய திருமேனிக்கு வழிகளில் நடந்து தேய்ந்த பழஞ் செருப்பு புருவங்களின் நடுவிடம் போலாகின்றது; புரமெரித்த புண்ணியராகிய அவருக்குக் கொப்பளித்து உமிழ்ந்த நீரினால் நனைத்தலாவது கங்கைநீர் அபிஷேகம் போலாகின்றது; சிறிது கடித்துண்ட மாமிசத்தின் மிகுதியான கவளமானது புதிதான நிவேதனம் போலாகின்றது; வேடன் உயர்ந்த பக்தனாகின்றான். ஆதலால், பக்தியானது எதைத்தான் செய்யாது?

கண்ணப்ப நாயனாரை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் சங்கப் புலவர்கட்குத் தலைவராய் விளங்கி, "நெற்றிக்கண் காட்டினுங் குற்றங் குற்றமே" என்று நீலகண்டரையும் வாதிட்ட நக்கீரதேவர் பலப்பலவாறு புகழ்ந்து பாடியிருக்கின்றனர். "திருக் கண்ணப்பதேவர் மறம்" என்றே ஒரு நூல் பாடியிருக்கின்றனர். "கைலைபாதி காளத்திபாதி யந்தாதி"யிலும் இவரைப் பற்றிப் பேசுகின்றனர்.

வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்
கேளார்கொ லந்தோ கிறிபட்டார் - கீளாடை
அண்ணற் கணுக்கராய்க் காளத்தி யுண்ணின்ற
கண்ணப்ப ராவார் கதை.

மேலுங் கல்லாடதேவ நாயனாரும் இவரைப் பற்றிப் பாடி யுள்ளார். இவைகளைப் பதினோராந் திருமுறையில் காண்க.

இவர் ஊனமுது படைத்ததும், வாய்நீர் உமிழ்ந்ததும், செருப்பணிந்த காலால் சிவலிங்கத்தைத் தீண்டியதும் தவறாகாவோ? எனின், ஆகா, பேய் பிடிபட்டார் செயல் யாவும் பேயின் செயலாவது போல், அன்புமயமாய இவருடைய செயல் யாவும் சிவன் செயலேயாகும். இதன் விரிவுரைகளை எமது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்கள் தமது சூசனத்தில் மிகமிக அழகாகவும் தர்க்க விதியுடனும் எழுதியருளி இருப்பதைக் கண்டு தெளிக.

கண்ணன் - கண்ணப்பர்

இனி, கண்ணிடந்து கண்ணுதற் கடவுளை வழிபட்டவர்கள் இருவர். கண்ணனும் கண்ணப்பருமாவர்.

திருமால் சலந்தரனைக் கொன்ற சக்கரப் படையைப் பெறுமாறு, திருவீழிமிழலை சென்று, நீராடித் திருநீறும் கண்டிகையும் புனைந்து, ஆயிரம் தாமரை மலர்களால் நாள் தோறும் ஆயிரம் நாமங்களைக் கூறிச் சிவபெருமானை அர்ச்சித்து, அன்புடன் வழிபட்டு வந்தார். அவருடைய சிறந்த அன்பினை உலகிற்கு எடுத்துக் காட்டுமாறு எண்ணிய சிவபெருமான், ஒருநாள் திருமால் ஆயிரம் மலர் எடுத்து அர்ச்சித்து வரும்போது ஒருமலர் குறையுமாறு புரிந்தனர். உடனே திருமால் அர்ச்சிக்கும் மலரைப் பிய்ச்சினாரில்லை; வாளா மந்திரங் கூறினாருமில்லை. தமது ஒரு கண்மலரைத் தோண்டியெடுத்து இறைவரை அன்புடன் அர்ச்சித்து வழிபட்டார். அவருடைய அன்புக்கு மகிழ்ந்த ஐயர் வெளிப்பட்டுக் கண்ணை மலராக அருச்சித்தபடியால், கண்ணன் என்ற நாமத்தையும் சக்கரத்தையும் அருளினர்.

நக்குலா மலர்பன் னூறு கொண்டுநன் ஞானத் தோடு
மிக்கபூ சனைகள் செய்வான் மென்மல ரொன்று காணா
தொக்குமென் மலர்க்கண் என்றங் கொருகணை யிடந்தும் அப்பச்
சக்கரங் கொடுப்பர் போலுஞ் சாய்க்காடு மேவி னாரே.

- அப்பர்

திண்ணனாருங் கண்ணிடந்தப்பி இறைவரால் ஆட்கொள்ளப் பெற்றார். அந்த அருளின் தன்மையையும் அப்பர் முன்கூறிய திருநேரிசைக்கு முன் கூறுமாறு காண்க.

குவப்பெருந் தடக்கை வேடன் கொடுஞ்சிலை இறைச்சிப் பாரம்
துவர்ப்பெருஞ் செருப்பால் நீக்கித் தூயவாய்க் கலசம் ஆட்ட
உவப்பெருங் குருதி சோர ஒருகணை யிடந்தங் கப்பத்
தவப்பெருந் தேவு செய்தார் சாய்க்காடு மேவி னாரே.

ஆனால் திருமால் கண்ணனாயினார். இவர் கண்ணப்பரா யினார். ஏன்? திருமால் சக்கரம் வேண்டிப் பயன் கருதிக் கண்ணையிடந்தார். இவர் பயன் குறியாது அன்பினாலே கண்ணையிடந்தார். அதனால், இவர் பெருமை அவர் பெருமையினும் பன்மடங்கு விஞ்சியது என உணர்க.

திருமால் கருமால் கெட திருநீற்றினைப் பூசி வழிபட்டார் என்பதையும் வாகீசப் பெருந்தகை வாய்மொழியால் காண்க.

நீற்றினை நிறையப் பூசி நித்தலு் ஆ யிரம்பூக் கொண்டு
ஏற்றுழி ஒருநா ளொன்று குறையக்கண் நிறைய விட்ட
ஆற்றலுக் காழி நல்கி அவன்கொணர்ந் திழிச்சுங் கோயில்
வீற்றிருந் தளிப்பர் வீழி மிழலையுள் விகிர்த னாரே.

கலையும் - கண்ணப்பரும்

பலப்பல அறிவுநூல்களை நன்கு ஒழிவின்றிப் படிப்பதன் பயன் இறைவன்பால் அன்பு செய்வதேயாகும். இறைவன்பால் அன்பில்லாதார் படிக்கின்ற நூல் உயிரில்லாத உடம்பு போல் பாழ்படும்.

- மன்றில்
நடிக்கின்ற பால்வண்ணர் நாமமெண்ணா மாந்தர்
படிக்கின்ற நூலெல்லாம் பாழ் *- அதிவீரராமபாண்டியர்*

கற்றதனா லாய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்

என்பார் திருவள்ளுவ தேவர்.

உள்ளநிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றால்
தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவென்றே
கொள்ளுமுணர் வினின்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடை யாயென்றும் பயின்றுவரும் பண்புடையார்.

என்பார் சிறுத்தொண்ட நாயனார் புராணத்தில் சேக்கிழாரடிகள். கலைகளின் பயன் இறையன்பே ஆகும். அத்தகைய அன்பு பரிபூரணமாக இவர்பால் தங்கி, அன்புக்குக் கட்டளைக் கல்லாக விளங்கினார் ஆதலின், இவரை நம்பியாரூரர்,

"கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்"

என்று பாராட்டித் துதிசெய்தார்.

சேக்கிழாரடிகள் பொத்தப்பி நாட்டில் கண்ணப்பர் அவதரித்தார் என்று கூறினாரில்லை; கண்ணப்பர் நாடு பொத்தப்பி நாடு என்கின்றார். இவர் அவதரித்தபடியால் அந் நாட்டைத் தனது நாடாகச் செய்துவிட்டார்.

மேவலர் புரங்கள் செற்ற விடையவர் வேத வாய்மைக்
காவலர் திருக்கா ளத்திக் கண்ணப்பர் திருநா டென்ப
நாவலர் புகழ்ந்து போற்று நல்வளம் பெருகி நின்ற
பூவலர் வாவி சோலை சூழ்ந்தபொத் தப்பி நாடு.

வேடச்சேரியின் இயல்புகளை மிக நன்றாக அடிகள் இயம்புகின்றார்.

வீரமிக்க வேடரது ஆடவச் சிறார்கள் கொடிய புலிக்குட்டி, யானைக் கன்றுகளுடன் விளையாடுவர்; பெண்மகார்கள் சாதுவான மான்குட்டிகளுடன் விளையாடுவர் என்று கூறியதனால் ஆணின் வன்மையும், பெண்ணின் மென்மையும் விளங்குமாறு காண்க.

வேடரிடம் செஞ்சொல் இன்றி வெஞ்சொல்லே இருந்தது. அதனால், "வெல்படைத் தறுகண் வெஞ்சொல் வேட்டுவர்" என்றார். அவர்கள் கூட்டத்தில் "வாருங்கள்; இருங்கள்; உண்ணுங்கள்" என்ற இனிய உரைகள் இல்லை, "கொல்; எறி; குத்து; உதை; வெட்டு" என்ற இக்கொடிய உரைகளே இருந்தன.

"கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்
மலையே"

என்பார் அருணகிரிநாதரும்.

வேடர்கள்பால் அச்சமும் அருளும் என்றும் இல்லை. ஏன்; ஊன் உணவே அதற்குக் காரணம். ஊன் உணவுகொள்ளும் புலி, சிங்கம் முதலிய இனங்கள் அஞ்சுதலின்றித் திரியும். புல் தின்னும் மான், ஆடு, மாடுகள் அஞ்சி அகலும். உணவினால் குணம்

மாறுபடுகின்றது. ஆதலின், சத்துவ குணத்தை நல்கும் நல்லுணவே மனிதனுக்குப் பொருந்தியது. இதனை ஏழாவது பாடலில் கூறிய திறனை நோக்குக.

மைச்செறிந் தனைய மேனி வன்றொழில் மறவர் தம்பால்
அச்சமும் அருளு மென்றும் அடைவிலார் உடைவன் றோலார்
பொச்சையின் நறவு ஊனின் புழுக்கலும் உணவு கொள்ளு
நச்சழற் பகழி வேடர்க் கதிபதி நாகன் என்பான்.

கொடுமை மிகுந்த வேடர்குழுவில் தோன்றிய கண்ணப்பர் அன்பே வடிவாக விளங்கிய அற்புதத்தையும் உன்னுக. சைவ மரபில் பிறந்த ஒருவர் சாந்தமாக இருப்பது வியப்பாகாது. புலி சைவமானாற்போல் வன்பு மிக்க இவர் அன்பு மிக்கவராயினதே அற்புதம்.

நாகன் நெடிதுநாள் மகப்பேறு இன்றி வருந்தினான். பிள்ளைப் பேறு வேண்டி வள்ளி நாயகனை வழிபட்டான். இதனால், குறிஞ்சி நில மக்கள் தம் குலதெய்வமாக முருகவேளை இனிது வழிபடுவார் என்பது தேற்றம். வேடர் வெறியாட்டயர்வர்.

"குன்றவர் சாதி கூடி வெறியாடிக்
கும்பிட நாடி வாழ்வு தந்தவ ரோடு வீறு
குன்றுதொ றாடல் மேவு பெருமாளே"
- *திருப்புகழ்*

கொலையே புரி வேடர்கள் கோயிலுக்கு முன் எம்பிரான் சந்நிதியில் சேவலையும் மயிலையும் கொல்லாமல் உயிருடன் பறக்க விட்டனர் என்ற செய்தியும் சிந்தனைக்குரியது. "வாரணச் சேவ லோடு வரிமயிற் குலங்கள் விட்டு" என்பார்.

கண்ணப்பருடைய திருவவதாரத்திற்கு முருகவேள் திருவருளே காரணம் என்கின்றார். அதனை நினைக்க உள்ளம் உருகி இன்ப வெள்ளம் பெருகியோடுகின்றது.

"மயிலுடைக் கொற்ற வூர்தி வரையுரங் கிழித்த திண்மை
அயிலுடைத் தடக்கை வென்றி அண்ணலார் அருளி னாலே"

"கானவர் குலம் விளங்க" கண்ணப்பர் தோன்றுகின்றனர்.

கல்வி யறிவில்லாத வேடர்கள் நடுவில் தோன்றிய குழந்தைக்கு, அவர்கள் திண்ணன் என்ற நல்ல செந்தமிழ்ச் சொல்லினால் பேரிட்ட அழகை எண்ணுக. வேற்று மொழிகளில் பெயரிடாமல் தமிழ் மொழியாலேயே பெயரிடுவது சிறப்பு.

மலைவாணர் தம்மியல்புக்கு ஏற்றவாறு புலிநகத்தால் சுட்டியும், புலிப்பல்லால் மாலையும், யானைத் தந்தத்தால் தண்டையும் அணிந்தமையுங் காண்க.

கலைபயிலுதல் வேடர்மாட்டு இல்லை. மலைபயிலும் அவர் சிலை பயிலுதலைப் பெரிதெனக் கொண்டவர். ஆதலின், பன்னிரண்டாண்டு எய்தியதும், கண்ணப்பர்க்கு நல்விழாவாக வில் விழாச் செய்து, கலைபயிற்றாது சிலை பயிற்றுவித்தனர்.

கதிரவன் உச்சியெய்திய நேரம் நல்ல நேரமாகும். ஆதலின் கண்ணப்பருக்கும் வில்லுக்கும் காப்புக் கட்டிய நேரமும், ஏழாம் நாள் வில் பிடிப்பித்த நேரமும் உச்சிப் பொழுதாகும். பின்னர் இவர் காளத்தியப்பரைக் கண்டு மகிழ்ந்த நேரமும் உச்சிப் பொழுதாக அமைந்தது. இவருடைய புகழும் உச்சியுற்றது.

கண்ணப்பர் பதினாறு வயது வளர்ந்தார். அதனைத் தெரிவிக்க வந்த அடிகள், "கலைவளர் திங்களேபோல்" என்கின் றார். பதினாறு கலைகளுடன் கூடியது. கண்ணப்பரும் பதினாறா வது ஆண்டில் காளத்தியப்பரது அருள்பெற்று என்றும் அழியாது நிற்பாராயினார். வானத்தின் மிசையன்றி மண்ணில் வருமதிக் கொழுந்தாகிய திருஞானசம்பந்தரும் பதினாறாண்டில் பரஞ் சோதியில் கலந்தனர். மார்க்கண்டேய முனிவரும் என்றும் பதினாறாண்டாக நிலை நின்றனர்.

நாகன் மூப்பு எய்தினான். வனமெங்கும் மலையெங்கும் வேட்டைத் தொழில் புரியும் வின்மைவிறல் இன்மையால், தனது குலத்தினரை நோக்கி, இனி உங்களுக்கு அரசன் 'திண்ணன்' என்று கூறினான். அது கேட்ட வேடர்கள் துன்பமும் இன்பமும் ஒருங்கே எய்தினர். இத்தனைக் காலமாக அரசுபுரிந்த நாகனுடைய தலைமை விலகுவதால் துன்பமும் அவனினும் மேன்மை வாய்ந்த திண்ணனார் 'தமக்குத் தலைவராவதைக் குறித்து இன்பமும் எய்தினார்கள்.

இதனைச் சுருங்கக் கூறி விளங்க வைத்தலிலே வல்லவராகிய எமது தெய்வப் புலவர், "அன்னவரும் இரங்கிப் பின் மகிழ்ந்து" என்று கூறும் அழகை உன்னுக.

கம்பர், இராமமூர்த்திக்கு முடிசூட்டுவதாகத் தயரதன் கூறிய போது,. சுமந்திரர் கூறுவதாகக் கூறியதையுங் காண்க.

உறத்த கும்மர சிராமற்கென் றுவக்கின்ற மனத்தைத்
துறத்தி நீயெனுஞ் சொற்சுடும் நின்குலத் தொல்லோர்

மறத்தல் செய்திலாத் தருமத்தை மறப்பதும் வழக்கன்
றறத்தி னூஉங்கினிக் கொடிதென லாவதொன் றியாதே.

வரையாட்சி பெற்ற கண்ணப்பர், கானவேட்டையாடிய போது, அவரும் அவருடைய குழுவினரும், விலங்கின் குட்டி களையும், பெண் விலங்குகளையும், நோய்வாய்ப்பட்டவைகளை யும், முதுமையுற்றவைகளையும் கொன்றாரில்லை. வேட்டையிலும் ஒரு நீதியை அவர்கள் கடைப்பிடித்தனர் என்ற செய்தி நினைவில் நிறுத்த வேண்டியது.

காமம், குரோதம், மதம்,. மாற்சரியம் முதலிய விலங்கினங்களைக் கொன்று, முடிவில் ஆணவ மலமாகிய பன்றியைத் தொடர்ந்து சென்று கொன்றனர். கொன்றனர் என்றதை ஆணவத்தின் வலியைத் தொலைத்தனர் எனக்கொள்ள வேண்டியது. ஏன்? ஆணவமலம் அழிந்துபடாது ஆதலின் என்க.

ஏனைய வேடர்கள் பிரிய, நாணனும், காடனும் மட்டும் பிரியாது கண்ணப்பரைத் தொடர்ந்து சென்றனர். அது ஆன் மாவை நல்வினையும், தீவினையும் தொடரும் என்ற உண்மையை விளக்குகின்றது.

காடன் பன்றியைக் காவல்புரிந்து நின்றனன். நாணன் காளத்தியப்பரை வழிகாட்டிக் காண்பித்து மீண்டனன். இதனை நன்கு உற்று நோக்குக. காடன் தீவினை, நாணன் நல்வினை. தீவினை ஆணவத்துடன் நின்றது; நல்வினை இறைவரைக் காட்டு தற்கு அவருடன் சென்றது.

பொன்முகலிக் கரையில் விளங்கும் காளத்தி மலையைக் கண்டார் கண்ணப்பர். ''நாணனே! தோன்றுங் குன்றில் நண்ணுவோம்'' என்று மட்டுமே கூறினார். நாணன், 'அவ்வண்ணமே செல்வோம்' என்று மட்டுங் கூறினானில்லை.

"காணநீ போதி நல்ல காட்சியே காணும் இந்தச்
சேணுயர் திருக்கா ளத்தி மலைமிசை யெழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவர் இருப்பர்கும் பிடலாம் என்றான்"

நல்வினை இவ்வாறு நன்மையைக் கூட்டுவிக்கும்.

கண்ணப்பர் காளத்திமலையை நோக்கிச் செல்லும்போது, அவர்மீதிருந்த பாரம் குறைந்துவிட்டது. "தன் கடன் அடியே னையுந் தாங்குதல்'' என்றபடி இறையைச் சாரும் ஆன்மாக்களின் சுமையை இறைவன் தாங்கிக்கொள்வான்.

"தின்று தண்ணீர் குடிப்போம்" என்ற அவர் காளத்தியைக் கண்டவுடன் தேகபுத்தி அறவே நீங்கிவிட்டது. தன்மயம் அற்றார். சிவமயம் பெற்றார். அதனால், ஆறு நாளும் உணவு உறக்கம் ஒன்றும் இன்றி நின்றார். பொன்முகலியாற்றில் இறங்கிச் செல்பவர் தண்ணீர் குடித்தாரில்லை.

கண்ணப்பருக்கு உச்சிப் பொழுதில் மலையுச்சியில் முழங்கும் ஐந்து அமர துந்துபி கேட்டது. அது பக்குவ ஆன்மாக்களுக்கே கேட்கும். நாணன் அது கேட்டானில்லை. "நாணா! இது என்ன ஒலி?" என்றார். அவன், "இது தேனீக்களின் ஒலி போலும்" என்றனன்.

காளத்திமலையின் படியைக் கண்ணப்பர் கடந்தது முப்பத் தாறு தத்துவங்களையுங் கடந்தார் என்பதைக் காட்டுகின்றது.

"ஆறா றையுநீத் ததன்மே னிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ" - கந்தரநுபூதி

என்பு வடிவாய அவர் அன்பு வடிவானவர். பிறகு இன்ப வடிவாகின்றார். உலகங்கட்கும் உயிர்கட்கும் அருந்துணையும் பெருந்துணையுமாய எம்பிரானுக்குத் துணையில்லையே என்று என்புருக அன்புருகி வருந்தினார். கண்ணப்பர் காளத்தியப்பர் முன் காட்டிய அன்பு கடலினும் பெரிது.

பின்னர், நாணனுங் காடனும் நீங்குகின்றனர். இருவினை களும் விலகி விடுகின்றன. பின்னர், நாகன் முதலியோர் வந்து அழைக்கின்றனர். அது வாசனாமலம் வந்து மீண்டும் தாக்கும் தன்மையைத் தெரிவிக்கின்றது.

திருமஞ்சனக்குடத்தின் மீது எச்சில் படக்கூடாது என்று வாயைத் துணியால் பொத்திக்கொண்டு வருவர். ஓர் உரோமம் பட்டாலும் மலர் அநுசிதமாகும். இவருக்கு வாயே திருமஞ்சனக் குடம். தலைமயிரே பூக்கூடை. வானமுதம்போல் ஊனமுத மாயிற்று.

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்க மாடாமோ. - திருவாசகம்

அவருடைய வாய்நீர் ஆதிசைவ அந்தண சிகாமணிகள் சிவாக்கினிக்கு முன்வைத்துச் சிவாகமங்களைக் கூறி உருவேற்றிய

கும்ப நீரினும் புனிதமுடையது. அவருடைய வாய் தங்கக்குடம்; அந்நீர் கங்கை நீர்; அவருடைய பல்லே கும்பத்தில் இடும் நவமணி; அவருடைய நாவே, அக்கும்பத்தில் இடும்பூ. கும்ப நீர் தர்ப்பையுடன் கூட்டி அபிஷேகிப்பர். அவருடைய மீசையே தர்ப்பை.

இதனைச் சிவபெருமான் சிவகோசரியார் கனவிலே சென்று கூறுவதாக நக்கீரதேவர் திருக்கண்ணப்ப தேவர் திருமறத்தில் கூறுவதனால் அறிக.

"பூசனை செய்யுங் குனிசிலை வேடன்
குணமவை யாவன உரிமையிற் சிறந்தநன்
மாதவன் என்றுணர்; அவனுகந்
தியங்கிய இடம்முனி வனம்அது வேஅவன்
செருப்படி யாவன விருப்புறு துவலே
எழிலவன் வாயது தூயபொற் குடமே
அதனில் தங்குநீர் கங்கையின் புனலே
புனற்கிடு தூமலர் அவனது நாவே
அப்புனல் விடும்பொழு துரிஞ்சிய மீசைப்
புன்மயிர் குசையினும் நம்மடிக் கினிதே
அவன்தலை தங்கிய சருகிலை தருப்பையில்
பொதிந்த அங்குலி கற்பகத் தலரே
அவனுகந் திட்ட இறைச்சி எனக்குநன்
மாதவர் இட்ட நெய்பால் அவியே"

பெருமான் ஊன் உண்டனரோ? எனின், கூறுதும். பரமன் பசி தாகம் இல்லாதவர். "ஞானந்தான் உருவாகிய நாயகன்" கண்ணப்பருடைய அன்புக்கு உகந்த ஐயன் அதனை மறைத் தருளினார்; உண்டதாகப் பாவனை செய்தருளினார்.

இரவு முழுவதும் கண்ணப்பர் வேதவாய்மைக் காவலனைக் காவல் புரிந்தார்.

"பச்சி லைக்கும் வாய்க்குள் எச்சி லைக்கும் வீக்கு
பைச்சி லைக்கு மாட்கொள் அரன்வாழ்வே"
- திருப்புகழ்

திருக்காளத்தி மலையில் இரவு இல்லை என்பார் சேக்கிழார். இராப் பகலற்ற இடத்தில் கண்ணப்பர் இருந்தார் என்பதை அது தெரிவிக்கின்றது.

கம்பநாடர் பெரியபுராணத்தை நன்கு ஓதியுணர்ந்தவர். பெரியபுராணத்தில் வரும் பலப்பல சொற்றொடர்களைத் தனது இராமாயண காவியத்தில் கையாளுகின்றனர்.

இவ்வண்ணம் பெருமுனிவர் ஏகினார்; இனிஇப்பால்
மைவண்ணக் கருங்குஞ்சி வனவேடர் பெருமானார்
கைவண்ணச் சிலைவளைத்துக் கான்வேட்டை தனியாடிச்
செய்வண்ணத் திறமொழிவேன் தீவினையின் திறமொழிவேன்.

- *பெரியபுராணம்*

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனியிந்த வுலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி வேறோர் துயர்வண்ண முறுவ துண்டோ
மைவண்ணத் தரக்கி போரில் மழைவண்ணத் தண்ண லேயுன்
கைவண்ண மங்குக் கண்டேன் கால்வண்ண மிங்குக் கண்டேன்.

- *இராமாயணம்*

சிவகோசரியார் கடைப்பிடித்தது விதிமார்க்கம். கண்ணப்பர் கடைப்பிடித்தது அன்பு மார்க்கம். விதிமார்க்கத்தின் விளைவு அன்பு மார்க்கம். சிவபெருமான் கண்ணப்பர் கனவிலே வந்து, "சிவகோசரியாரைப்போல் நீ பூசை செய்" என்று கூறினாரில்லை. சிவகோசரியார் கனவிலே சென்று அன்புநெறியின் பெருமையை அருமையுடன் தெரிவித்தனர். காளத்தியப்பருக்கு முன் கண்ணப்பரும், பின் சிவகோசரியாரும் இருந்தனர். அன்புநெறி இறைவருக்கு முன்னும், விதிநெறி இறைவருக்குப் பின்னும் நின்றன.

ஆறாவதுநாள் கண்ணப்பர் வேட்டையாடித் திரும்பி வரும்போது சகுனங்கள் தடைப்பட்டன. அவற்றைக் கண்டதும் தனக்கு யாது தீங்கு வருமோ என்று கருதினாரில்லை. ஏன்? தற்போதம் நீங்கி நிற்கின்றாராதலின் என்க. எந்தையார்க்கு என்ன தீங்கு நேரிட்டதோ என்று இடருற்றார். இறைவர் கண்ணில் உதிரங் கண்டதும் அவர் அடைந்த பெருந் துன்பத்திற்கு எல்லையில்லை. மருந்தீசனுக்கு மருந்திட்டார். முடிவில் தன் கண்ணையே யிடந்து அப்பினார். கண் அப்பியபடியால் கண்ணப்பர் என்னுந் திரு நாமம் பெற்றார். இந்த அழகிய தமிழ்ப்பேரைச் சிறிது சிந்தியுங்கள். அதில் எத்துணை ஆழமும் அழகும் இருக்கின்றன.

கண்ணப்பர் கண்ணும் காளத்தியப்பர் கண்ணும் ஒரே அளவுடையன. இவரும் அன்புருவம்; இறைவரும் அன்புருவம். அதனால், அந்தக் கண்ணுடன் இந்தக்கண் பொருந்தியது.

அடுத்த கண்ணையுந் தோண்டி எடுத்துவிட்டால் நாம் குருடாகி விடுவோமே என்று அவர் கருதவில்லை. மற்றைக் கண்ணையும் அகழ்ந்தெடுக்க முயன்றார். அன்பின் சிகரமாக இந்நிகழ்ச்சி பொலிகின்றது. முக்கட் பெருமான் அக்காலை ஒரு கையால் அவர் இரு கையையும் பிடித்து, "அப்பா" என்று அழைக்காத தமது திருவாக்கினால், "கண்ணப்பா" என்று மூன்று முறை அழைத்து அருள்புரிந்தனர்.

கண்ணப்பர் ஞானமூர்த்தி. சிலர், "கண்ணப்பரைப் போல் மூடபக்தி" என்பர். அவ்வாறு கூறுவது மூடத்தனமாகும். அன்பு என்பது அறிவின் பயனாகும். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கூறிய திருப்பாசுரத்திற்கு உரை கூறப் புகுந்த சேக்கிழாரடிகள் கூறுமாறு காண்க.

"ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானம் உண்டார்"

ஆதலின், கண்ணப்பர் பக்தி மூடபக்தியன்று என்க.

சமயகுரவர் நால்வரும் கண்ணப்ப நாயனாரைத் துதிக்கின்றனர்.

வேயனைய தோளுமையொர் பாகமது வாகவிடை யேறிசடைமேல்
தூயமதி சூடிசுடு காடினட மாடிமலை தன்னைவினவில்
வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன்மல ராகுநயனம்
காய்கணையி னாலிடந் தீசனடி கூடுகா ளத்திமலையே.

- திருஞானசம்பந்தர்

காப்பதோர் வில்லு மம்புங் கையதோர் இறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலச மாட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய குருதிநீர் ஒழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கைவீ ரட்ட னாரே.

- திருநாவுக்கரசர்

❀ ❀ ❀

குங்குலியக் கலய நாயனார் புராணம்

"கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்"

காவிரிநதி பாய்ந்து வளம் பெருகுவது பொன்னிநாடு; வான வருங் காமுறுமாறு எல்லா நலங்களும் ஒருங்கே அமையப்பெற்றது அச் சோழநாடு. எந்நாட்டினுஞ் சிறந்த அந்நாட்டில் திருக்கடவூர் என்று ஒரு திருத்தலம் உண்டு. கூற்றை உதைத்த குன்றவில்லியார் எழுந்தருளியிருக்கும் புனிதமான தலம். செந்தண்மைபூண்ட அந்தணர்கள் பலர் அங்கு வாழ்ந்தனர்.

வயலெலாம் விளைசெஞ் சாலி வரம்பெலாம் வளையின் முத்தம்
அயலெலாம் வேள்விச் சாலை அணையெலாம் கழுநீர்க் கற்றை
புயலெலாம் கமுகின் காடப் புறமெலாம் அதன்சீர் போற்றல்
செயலெலாம் தொழில்க ளாறே செழுந்திருக் கடவூர் என்றும்.

உழவர் பயிலும் பண்ணையில் மருதப்பாடலும், மறைக்கிழவர் பயிலும் இடங்களில் சாமப்பாடலும் முழங்கும். எருமைகள் சொரியும் பாலினால் தடாகங்களில் தாமரை தீம்பால் மணங் கமழும்; வேள்விச்சாலையில் ஒதுங்கும் மேகங்களில் ஆகுதிப்புகை மணங்கமழும்.

மருவிய திருவின் மிக்க வளம்பதி யதனில் வாழ்வார்
அருமறை முந்நூல் மார்பின் அந்தணர் கலய ரென்பார்
பெருநதி யணியும் வேணிப் பிரான்கழல் பேணி நாளும்
உருகிய அன்பு கூர்ந்த சிந்தையார் ஒழுக்க மிக்கார்.

திருவளர் பதியாகிய அத் திருக்கடவூரில் கலயனார் என்ற பெரியவர் வாழ்ந்தார். அவர் அந்தணர் திருமரபில் வந்தவர். கங்கை சூடிய மங்கைபாகன் மலரடியை இடையறாது சிந்தித்து அழலிடைப்பட்ட மெழுகுபோல் உள்ளம் உருகும் அன்புமிக்கவர். ஒழுக்கத்தால் உயர்ந்தவர்.

பாலனை யாட்கொண்டு காலனை யுதைத்த மாலயன் காணாத மணிகண்டராகிய அமிர்தகடேசப் பெருமானுடைய ஆலயத்தில் சாலவுங் கமழச் சீலமுடன் நாடோறும் குங்குலியத் தூபமிடும் திருத்தொண்டினை அன்புடன் செய்துவந்தார்.

வறுமையாகிய சிறுமை வந்தபோதும் அடியார்கள் தங்கள் திருத்தொண்டினை விடாது முன்னிலும் சிறப்பாகவே புரிவர். இத்திறத்தினை உலகறிந் துய்யும் பொருட்டுக் கலயனாருக்கு வறுமை வந்து எய்தியது. திருவருளால் வந்த வறுமையை அவர் பெருமையாகவே நினைந்தார். தமது தூபப் பணியைத் தவறாது புரிந்துகொண்டிருந்தார்.

நாள் செல்லச் செல்ல வறுமையும் அதிகரித்தது. அதனால், நல்ல நிலங்கள் எல்லாவற்றையும் விற்றார். பின்னர் அடிமை களையும் விற்றார். வீட்டில் உள்ள அசையும் பொருள்களையும் விற்றார். பசியினால் சுற்றமும் மக்களும் பெரிதும் துன்புற்றார்கள். இரண்டு நாட்களாக உணவின்றி வாடுவாராயினார்கள். மக்களும் சுற்றமும் பசிப்பிணியால் பரதவிப்பதை நோக்கிய மனைவியார் மனம் மிகவருந்தி, தமது திருமாங்கல்யத்தைக் கணவனார் கையில் தந்து, "சுவாமி! இதை விற்று நெல் வாங்கி வாரும்" என்று கூறினார்.

மனைவியார் தந்த தாலியைப் பெற்றுக்கொண்டு கலயனார் நெல்வாங்கும் பொருட்டுச் சென்றார். வழியில் ஒரு வணிகன் ஒப்பில்லாத குங்குலியப் பொதியினைக் கொண்டுவந்தான். நாயனார். அவனை நோக்கி, "இது என்ன பொதி?" என்று வினவினார். அவன், "இது குங்குலியம்" என்றான். அதுகேட்ட கலயனார் அகமும் முகமும் மலர்ந்தார். "ஐயனுக்கு இடும் குங்குலியம் இதுவாலின்று நான் பேறு பெற்றேன். இதனினுஞ் சிறந்த பேறு உண்டோ? இதனை விடுத்து வேறு பெறுவதற்கு என்ன உளது?" என்று சிந்தித்தார். மிகுந்த அன்பினால் "ஐயா! பொன் தருவேன். இப்பொதியினைத் தாரும்" என்றார்.

வணிகன், "நன்று; தாங்கள் தர இருக்கும் பொன் எது?" என்று கேட்டான். உடனே கலயனார் தாலியை எடுத்துக் கொடுத்தார். அவன் அதனைப் பெற்றுக்கொண்டு, குங்குலியப் பொதியைக் கொடுத்தான்.

உடனே, நாயனார் அதிவிரைவாக அதனை எடுத்துக் கொண்டு திருக்கோயிலுக்குச் சென்றார். உடையவர் பண்டாரத் தில் பொதியைச் சேமித்து, உலகினையும் மனைவி மக்களையும் மறந்து, எம்பிரானை நினைந்து அயரா அன்புடன் வழிபாடு செய்து கொண்டிருந்தார்.

சிவபெருமான் திருவருளின்படி குபேரன் கலய நாயனாரது திருமாளிகை முழுவதும் பொன்னும் நவமணியும் நெல்லும்

அரிசியும் குவித்து வைத்தனன். பசியினால் களைத்துத் துயிலும் அம்மையார் கனவில் இறைவர் எழுந்தருளி வந்து தமது திரு வருளால் செல்வம் நிறைந்த தன்மையை உணர்த்தியருளினர். அம்மையார் எழுந்து திருவருட் செயலை எண்ணி, வீடு முழுவதும் பொன்னும் அரிசியும் நெல்லுமாகக் குவிந்திருக்கக் கண்டு கைகுவித்துத் திருவருளை வியந்து போற்றினார். விடியற்காலை யாதலினால், முழுகி, சமையலறைக்குட் சென்று கணவனாருக்குத் திருவமுது சமைப்பாராயினார்.

காலனைச் செற்ற கண்ணுதற் கடவுள் கலயனார்பால், "அன்பனே! சாலவும் பசித்திருக்கின்றனை. திருமனைக்குச் சென்று பாலன்னம் புசித்துப் பருவரல் தீர்க" என்று அருளிச் செய்தனர். கலயனார் எம்பெருமான் ஆணையைக் கேட்டுக் கைகூப்பி வணங்கினார். இறைவர் ஆணையை மறுக்க அஞ்சித் திருக் கோயிலினின்றும் புறப்பட்டு மாடவீதியில் உள்ள தமது திருமனை யினைச் சேர்ந்தார்.

இல்லத்திற் சென்றவர் இருநிதிக் குவியல்கள் சேர்ந்த செல்வத்தைக் கண்டார். திருமாங்கல்யத்துடன் திகழும் மனைவி யாரை நோக்கி, "வில்லொத்த நுதலாய்! இந்த விளைவெலாம் என்கொல்?" என்று வினாவினார். அம்மையார் அவரைத் தொழுது, "அல்லொத்த கண்டன் எம்மான் அருளினால் வந்தது" என்றார். நாயனார் அதுகேட்டு, "என்னையும் ஒருபொருளாக ஆட்கொண்ட எந்தை எம்பெருமானீசன் திருவருளிருந்தவாறு என்னே?" என்று கைகூப்பி வணங்கினார்.

திருவின் மிக்க உருவுடைய மனைவியார் பரிகலம் திருத்தி யமைத்து, சிவபெருமானுடைய அன்பர்களுடன் கணவனாரைத் தீபமும் மலருங்கொண்டு வழிபட்டு இனிய உணவுபடைத்து ஊட்டினார். அடியார்களுடன் கலயனார் உண்டு இன்புற்றார். ஊர்தொறும் பலிகொண்டு உய்க்கும் ஒருவனது அருளினாலே எய்திய செல்வத்தையுடைய நாயனார், சிறப்புமிக்க அன்னம், நல்ல கறி, பால், தயிர், நெய் முதலியவைகளை அடியார்க்குப் படைத்துப் பசியாற்றி வருவாராயினார்.

திருப்பனந்தாள் என்னுந் திருத்தலத்தில் தாடகையம்மையின் பொருட்டுச் சிவலிங்கம் சாய்ந்தது. அத் திருமேனியை நேர்படச் செய்து வணங்க வேண்டும் என்று அரசன் அன்பு கொண்டான். சிவலிங்கத் திருமேனியில் பூங்கச்சினைச் சுற்றி அதன் முனையில் வலிய கயிறுகளைப் பூட்டி நேர்படுத்த முயன்றான். திருமேனி

நிமிரவில்லை. அன்பின் மிகுதியால் மன்னன் வருந்தித் தனது சேனைகளையும் யானைகளையும் கொண்டு இழுக்கச் செய்தான். அப்போதும் திருமேனி நிமிரவில்லை. அதனால், இரவும் பகலும் வருந்துவானாயினான். மன்னவனது வருத்தத்தைக் குங்குலியக் கலய நாயனார் கேட்டார். சிவமூர்த்தியைச் செம்மைசெய்து வணங்குந் திருநெறியை மேற்கொண்ட மன்னனை விரும்பி, சடையப்பரைத் தாமும் வணங்க எண்ணினார். இடையிலேயுள்ள திருத்தலங்களை வணங்கிக் கொண்டு திருப்பனந்தாள் வந்தார். மூன்று உலகங்களும் உய்ய முத்தீ வளர்க்கும் அந்தணர் வாழும் அத்திருப்பதி வந்த நாயனார், கரையில்லாக் காதலினால் அரசனும் ஆனையும் சேனையும் சிவலிங்கத் திருமேனி நேர் படாமையால் இழுத்து இழுத்து மிகவும் இளைத்துக் களைத்து வீழ்ந்ததை நோக்கினார். "யானும் இளைப்புற்று எய்க்கும் இது பெறவேண்டும்'' என்று எண்ணினார். பூங்கச்சுடன் சேர்ந்த கயிற்றினைக் கழுத்தில் பூண்டு வருந்த லுற்றார்.

நண்ணிய ஒருமை யன்பின் நாருறு பாசத் தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி யிளைத்தபின் திறம்பி நிற்க
ஒண்ணுமோ கலய னார்தம் ஒருப்பாடு கண்ட போதே
அண்ணலார் நேரே நின்றார் அமரரும் விசும்பில் ஆர்த்தார்.

அன்பாகிய நார்கொண்ட கயிற்றினால் திண்மை கொண்ட உண்மையன்பர் இளைத்த பின்னரும் இறைவர் சாய்ந்து நிற்க முடியுமோ? கலயனாருடைய ஒருமைப்பாட்டின் பெருமையைக் கண்ட அண்ணலார் நேரே நின்றார். அமரர் ஆர்த்தனர். பூமாரி தூர்த்தனர். அரசனும் யானையும் சேனையுங் களித்தனர். திருத் தொண்டர் திருவடிமீது அரசன் வீழ்ந்து வணங்கினான். "திரிபுரம் எரிய மேருமலையை வளைத்த எம்பிரானை நேர்நிலை காணச் செய்தீர். மாலுங் காணாத மலரடியைப் பண்புடை அடியா ரல்லார் பரிந்து நேர் காணவல்லார் யாரே? அடியேனும் உய்ந்தேன்; உலகமும் உய்ந்தது'' என்று ஏத்தினான். சிவபெரு மானுக்குரிய திருப்பணிகளைச் செய்து மன்னன் நீங்கினான்.

குங்குலியக்கலயர் பின்னரும் சில பகல் வைகிச் சடை யப்பராம் விடையவரை வழிபட்டுத், திருக்கடவூர் சேர்ந்து திருத்தொண்டு புரிந்து வந்தார்.

சீகாழித் தலைவராம் திருஞானசம்பந்தப் பிள்ளையாரும் தாண்டக வேந்தராம் திருநாவுக்கரசு நாயனாரும் ஒருங்கே சேர்ந்து அடியார் குழாங்களுடன் திருக்கடவூருக்கு எழுந்தருளி வந்தனர்.

அதுகண்ட நாயனார் அளவிலா மகிழ்ச்சி கொண்டு எதிர் கொண்டு வணங்கித் திருமனைக்கு அழைத்துக்கொண்டு சென்றார். அன்பின் மிகுதியினால் அறுசுவையுண்டியும் படைத்துக், குருவருளும் இறைவர் திருவருளும் ஒருங்கே பெற்றார்.

கலயனார் காமனையுங் காலனையுங் காய்ந்த கடவூர்ப் பெருமானுக்கு விருப்புறும் அன்பு மேன்மேலும் பொங்க, ஒருப்படும் உள்ளத்தோடும் திருப்பணி பலவுஞ் செய்து சிவபத நிழலிற் சேர்ந்தார்.

விளக்கம்

திருக்கடவூர்

இராதந்திர கற்பத்திலே திருமால் முதலியோர் அமிர்தத்தைக் குடத்தில் இட்டுத் தூய்மையாகிய இத்தலத்தில் உண்ணும் பொருட்டு வைத்தனர். அதுவே அமிர்த லிங்கமாக உருப்பெற்று ஊன்றிக் கொண்டது. ஆதலின், இத்திருத்தலம் 'கடவூர்', 'கடபுரி' எனப் பெயர் பெற்றது. இறைவர் திருநாமம் அமிர்தகடேச்சுரர்.

கடம் - கலயம். கலயர் சுவாமி பெயர். இதுவே இத்தலத்தில் அவதரித்த நாயனாருக்குத் தாய் தந்தையரால் இடப்பெற்ற திருப் பெயராயிற்று. குங்குலியத் தூபம் இட்டபடியால் குங்குலியக்கலய நாயனார் எனப்பட்டனர்.

பாலனுக்காகக் காலனை உதைத்த தலம் இது. இறைவர் செய்த எட்டு வீரட்டங்களில் இது ஒன்று. அட்டவீரட்டானங் களில் ஒன்று இத்தலம். இத்திருத்தலத்தில் காலசம்மார மூர்த்தி மிகவும் சிறப்பாக வீற்றிருக்கின்றார். அவர் திருமுன் அநுக்கிரக யமன் கும்பிட்ட வண்ணமாக நிற்கின்றனன்.

அம்பிகை திருநாமம் அபிராமியம்மை. அமாவாசையைப் பவுர்ணமியாக்கிய அபிராமிபட்டர் பாடியருளிய அபிராமி அந்தாதி மிகவும் உயர்ந்த திருவாக்கு.

ஒழுக்கம் உயிரினும் உயர்ந்தது

மனிதனுக்கு ஒழுக்கமே உயிரினுஞ் சிறந்தது. ''ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்'' என்றார் திருவள்ளுவர். இந்நாயனார் சிவபிரானிடம் உருகிய அன்புகூர்ந்த உள்ளத்தினராய் இருந்ததோடு ஒழுக்கம் மிக்கவராய் வாழ்ந்தார்.

பெருநதி யணியும் வேணிப் பிரான்கழல் பேணி நாளும்
உருகிய அன்பு கூர்ந்த சிந்தையார் ஒழுக்க மிக்கார்.

அன்பும் ஒழுக்கமும் இரு சிறைகளாம். இந்தச் சிறைகளால் பறந்து அடியார் அரனடி சார்வார்.

"பொய்கடிந் தறத்தின் வாழ்வார் புனற்சடை முடியார்க் கன்பர்" என்று திருநீலகண்ட நாயனார் புராணத்துட் கூறு கின்றனர்.

தூபம்

இறைவருடைய திருக்கோயிலுள் தூபமிடுதல் சிறந்த பணியாம். அவ்வாறு அடியார்கள் இடுந் தூபம் திருக்கைலையில் அரன்பால் சார்கின்றது.

"பாராழி வட்டத்தார் பரவி யிட்ட
பன்மலரும் நறும்புகையும் பரந்து தோன்றும்"

பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்த ராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னாரே.

"சலம் பூவொடு தூப மறந்தறியேன்" - அப்பர்

வறுமை

அடியார்கள் வறுமையாஞ் சிறுமையைக் கண்டு வருந்தார்கள். செல்வம் உள்ளபோது திருத்தொண்டு புரிவது இயல்பு. வறுமை வந்துற்ற போதும் சிறிதுந் தளராது இவர் தமது திருத் தொண்டினைப் புரிந்து வந்தார். நன்னிலங்களையும் அடிமை களையும் விற்றும் சிவப்பணியைக் குறைவறச் செய்தார்.

இரண்டுநாள் பட்டினியினால் மனைவி, மக்கள் சுற்றம் வாடி நிற்பதை அறிந்தும், நெல்பெறச் சென்றவர் குங்குலியப் பொதியைக் கண்டவுடன் அளவற்ற மகிழ்ச்சி கொண்டு குங்குலியத்தை வாங்கித் திருக்கோயிலுக்குச் சென்ற அன்பு அளவிடற்கரியது.

அம்மையார் அன்பு

மக்களும் சுற்றமும் பசியால் வாடுவதை யறிந்த அம்மையார் அன்பினால் அவர்கள் பசியாற்றும் பொருட்டு, மங்கல நூலுடன்

பொருந்திய தாலியை எடுத்துக் கொடுத்து விற்று நெல் வாங்கி வருமாறு தந்தார் எனின், அம்மையாரது மனையறத்தின் மாண்புதான் என்னே? அத்துணை வறுமையிலும் சுற்றந் தழுவும் பெற்றி வாய்க்கப் பெற்றிருந்தார். அதனாலன்றோ இறைவர் அம்மையார் கனவில் முதலில் தோன்றி அருள் புரிகின்றனர்.

செல்வத்தின் பயன்

செல்வத்தின் பயன் நல்விருந்தோம்புதலே. "பகடுநடந்த கூழ் பல்லாரொடுண்க" என்பது நாலடி. இறைவர் திருவருளால் அளவற்ற செல்வம் பெற்ற நாயனார் அதனைத் தாமே அநுபவியாது.

> சீருடை யடிசில் நல்ல செழுங்கறி தயிர்நெய் பாலால்
> ஆர்தரு காதல் கூர அடியவர்க் குதவு நாளில்"

என்றபடி அடியவர்க்கு உதவி மாகேச்சுர பூசை வழுவாது புரிந்தார். பன்னெடுங்காலம் புரிந்த இப்பெரும் புண்ணியத்தின் பயனே திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரையரும் ஒருங்கே வந்து அமுது செய்யும் பெரும்பேற்றை அளித்தது.

அன்பின் திறம்

திருப்பனந்தாளில் தாடகை என்ற அம்மை இறைவரை வழிபடும்பொழுது, திருமஞ்சனக் குடமெடுத்து இறைவர் திருமுடி மேல் விடத் தூக்கியபொழுது சீலை அவிழ்ந்து விட்டது. அவிழ்ந்த சீலையை முழங்கையால் தகைந்து திருமுடி யெட்டாமல் வருந்தியபோது இறைவர் திருமுடி சாய்த்தனர். அத்திருவருள் உலகறிந்துய்ய சிவலிங்கத் திருமேனி வளைந்தே இருந்தது.

சோழமன்னர் அத்திருமேனியை நேர்படச் செய்து வணங்க அன்புகொண்டு, தானுந் தன் சேனையும் ஆனையும் கயிறு பூட்டி வலிக்கவும் சிவலிங்கம் நேர்படவில்லை. அதனை அறிந்த இவர் அந்த வருத்தத்தில் தானும் பங்கெடுத்துக் கொள்ள எண்ணினார். ஆனை சேனையால் ஆகாத காரியம் தான் செய்ய வேண்டும் என்று எண்ணினாரில்லை. "யானும் இவ்விளைப்புற்று எய்க்கும் இது பெறவேண்டும்" என்று அவர் கூறிய அன்பின் திறத்தை உன்னுக.

அன்பே கயிறாகக் கட்டி ஈர்த்தார். அந்த அன்புக்கு இறைவர் நேர்நின்றனர். அரசனும் அன்பினாலேயே இப் பணியை மேற் கொண்டானாயினும் இவர் அன்பு முறுகி வளர்ந்து முதிர்ந்த அன்பு. ''முறுகி வாங்கிக் கடைய முன்னிற்குமே'' என்ற திருவாக்கினை ஓர்க. ''செயற்கரிய செய்வர் பெரியர்'' என்ற திருவாக்குக்கு இவர் இலக்கியமா யினார்.

மானக்கஞ்சாற நாயனார் புராணம்

''மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ்சாறன்
.......................அடியார்க்கும் அடியேன்''

காவிரியால் வளம் பெருகும் சோழவள நாட்டில், நாவலர் புகழும் நலம் பல பெற்றது கஞ்சாறூர். தேனும் கனியின் சாறும் பாயும் வயல்களில் நன்கு வளர்ந்த கரும்பின் சாறு கலந்த ஆறு சூழ்ந்த வளமை மிக்கது. செங்கழு நீர்களுடன் கூடி செஞ்சாலி விளையும் வயல்கள் அயல்களில் செழித்திருந்தன. புயலும் மயிலும் உலாவும் சோலைகளும், தேன் துளிக்குந் தாமரை மலருடன் மீன் களிக்கும் வாவிகளும் பல அணைந்திருந்தன. தோரணமும் பூரண கும்பங்களும் அமைந்த நெடிய வீதிகளும் சிவத்தையே வணங்கும் நீதிகளும் விளங்கும் அவ்வூரிலே உழவுத் தொழில் புரிந்து, விருந்தோம்பி, அறநெறியில் நின்ற குடிகள் நிறைந்திருந்தனர்.

அப்பதியிற் குலப்பதியாய் அரசர்சே னாபதியாஞ்
செப்பவருங் குடிவிளங்கத் திருவவதா ரஞ்செய்தார்
மெய்ப்பொருளை யறிந்துணர்ந்தார் விழுமியவே ளாண்குடிமை
வைப்பனைய மேன்மையினார் மானக்கஞ் சாறனார்.

அத்திருத்தலத்திலே வேளாளர் மரபிலே, அரசரிடம் சேனாபதியாக வைகுங் குடியிலே, வேளாள குலத்திற்கு ஒரு சேமநிதி போன்றவராகிய மானக்கஞ்சாறனார் திரு அவதாரஞ் செய்தார். அதனால் அவரை ஈன்ற குடி விளங்கியது. மெய்ப் பொருளை அறிந்து, அதனை உள்ளுணர்வால் உணர்ந்து மேன்மையுடன் அவர் நின்றார். பணிவு மிக்க திருமேனியினர்; பொங்கராவும் திங்களும் சூடிய சிவபெருமானுக்கு அடிமையாகும் பதம் பெற்றவர்; அடியார்கட்குச் சதா ஏவல் புரியும் தொழிலை மேற்கொண்டிருந்தார். அவர்பால் செல்வம் நிரம்பியிருந்தது. தமது செல்வம் அனைத்தும் நீற்றையும் ஆற்றையும் புனைந்த அரனாருடைய அடியார்க்கே உரியவையென்று எண்ணித், திருத்தொண்டர் கூறுவதன் முன்னர் குறிப்பறிந்து கொடுத்து வந்தார்.

பிள்ளை மதிசூடிய பெருமானைப் பரவி உள்ளவற்றை எல்லாம் வழங்கும் வள்ளலாகிய இவர்க்குப் பிள்ளைப்பேறு வாய்க்கவில்லை. அதனால், மனம் மிக வருந்தினார். கருணைக் கடலாகிய கண்ணுதற்கடவுளை அருள்துணை கொண்டு சிந்தித்தார். "அருட்கடலே! ஒரு குழந்தையைத் தந்து குலம் வளர அருள்புரிவாய்" என்று வேண்டினார்.

குழைக்கலையும் வடிகாதிற் கூத்தனார் அருளாலே
மழைக்குதவும் பெருங்கற்பின் மனைக்கிழத்தி யார்தம்பால்
இழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த இப்பிறவிக் கொடுஞ்சூழல்
பிழைக்குநெறி தமக்குதவப் பெண்கொடியைப் பெற்றெடுத்தார்.

சங்கவெண் குழையணிந்த சங்கரன் திருவருளினால், "மழை பெய்யெனப் பெய்யுந் தெய்வக் கற்புடைய அவருடைய மனைவி யார்பால், பிறவிப் பிணியைத் தீர்க்கவல்ல அழகிய ஒரு பெண்ணி னல்லாள் பிறந்தனள். கண்மலரனைய பெண்மகவைக் கண்டு தாயுந் தந்தையும் தமரும் எல்லையற்ற இன்பம் எய்தினர். மங்கல வாத்தியங்கள் முழங்கின. சிவதருமங்களைப் புரியும் திருத் தொண்டர்கள் யாவருக்கும் அளவில்லாத தான தருமங்களைச் செய்தனர். மானக்கஞ்சாறனார் திருமாளிகை இனிது பொலி வுற்றது. குழந்தையை நீராட்டிச் சீராட்டினர். பாலூட்டித் தாலாட்டினர். அருமையினும் அருமையாகக் குழந்தையை வளர்த்து வருகின்றனர்.

வளர்பிறைமதிபோல் புதல்வியார் வளர்ந்தனர். இருண்டு சுருண்ட கூந்தல் வளர்ந்து, அதற்கு இடையே முகமதி விளங்கி, சிற்றாடை புனைந்து, கிண்கிணியும் மேகலையும் அசைய தளர்நடை யிட்டனர். தாதியர் போற்ற, வீட்டின் முன் மலர்க் கரத்தால் மணல்வீடு கட்டியும், கழங்கு கந்துகம், அம்மானை, ஊசல் முதலிய ஆடல்களை ஆடியும், பேதைப்பருவம் அடைந்தனர். சேல் போன்ற விழியும், பால்போன்ற மொழியும், முத்த வெண்ணகையும் உடைய அவர் அறிவு நூல்கள் யாவும் ஓதியுணர்ந்தனர். மங்கைப்பருவம் எய்தித் திருமணப் பருவம் உற்றனர். திருமகளினும் மிக்க அழகுடன் செம்மணித் தீபம்போல் விளங்கும் அருமகளின் நலத்தைக் கண்டு மானக்கஞ்சாறனாரும், அவரது மனைவியும் மிகவும் மகிழ்ந்தனர்.

பெருமங்கலக்குடியில் சிறந்த வேளாண்குலத்திலே சேனாபதிக் குடியிலே தோன்றியவரும், திருநீலகண்டராகிய சிவபெருமானிடத் தில் இடையறாத அன்பு பூண்டவரும், வீரக்கழல் புனைந்தவரும்

ஆகிய ஏயர்கோன் கலிக்காமனாருக்கு மணம் பேசும் பொருட்டு அறிவால் ஆன்ற பெரியோர்கள் கஞ்சாறூரை அடைந்தனர். வந்த மூதறிவோரை மானக்கஞ்சாறனார் இனிது வரவேற்றார். இன்னுரை கூறி பாலடிசிலூட்டி அடைகாய் தந்து களப கஸ்தூரி நல்கி உபசரித்தார். ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்குப் பெண் தருமாறு வந்தவர் வேண்டினர். எல்லா நலன்களும் ஒத்திருந்தபடி யால் மானக்கஞ்சாறனார் மனம் மகிழ்ச்சியுடன் இசைந்தார். வந்தவர் சென்று, கலிக்காமனாருக்கு இவருடைய சம்மதியைத் தெரிவித்தனர். அவரும் உள்ளம் உவந்தார். கணிதநூல் வல்லார்கள் இருதிறத்தார்க்கும் பொருந்தும்படி திருமணநாளை நிச்சயித்தனர்.

தண்ணமுதமனைய பெண்ணமுதத்தைப் பெற்ற வள்ளலார், தனது நகரையும் மாளிகையையும் அலங்கரித்தார். உறவினரும் நண்பரும் உவந்து வந்து குவிந்தனர். முளைபெய்தனர். வாழைக் கமுகு நாட்டினர். பூமாலைகள் தொங்கவிட்டனர். மைப்படிந்த கண்ணுடைய மங்கையைக் கைப்பிடிக்க, கலிக்காமனார், குறைவில் புகழ் நிறைந்த சுற்றமும் நண்பரும் சூழப் புறப்பட்டுக் கஞ்சாறூருக்கு அருகில் வந்து அணைகின்றார்.

மானக்கஞ்சாறனாருடைய அன்பின் திறத்தையும், அளவற்ற அறத்தின் உரத்தையும் உலகம் உணர்ந்து உய்ய, விடையேறும் விமலனார் திருவுளங் கொண்டார். மாவிரதச் சைவ வேடம் புனைந்தார். திருநெற்றியில் மூன்று பிறைபோல் தரித்த திருநீறும், முண்டித்த திருமுடியின்மீது விளக்குஞ் சிகையில் கோத்தணிந்த எலும்புமணியும், பிரளய காலத்தில் அணியப்படும் திருமாலின் எலும்பினால் கடைந்த வெண்முத்து போன்ற எலும்புமணியைப் புனைந்த செவியையும் உடையவராய் வருகின்றார். கடைந் தெடுத்த எலும்புமணி மாலை அவருடைய திருமார்பில் அசைகின்றது; திருத்தோள்மீது யோக பட்டமும், மயிரினால் வடமாக முறுக்கி யணிந்த பூணூல் திருமார்பில் பொலிகின்றது; இடையில் பிறவிப் பிணியை மாற்றுகின்ற திருநீற்றுப்பையும், வேதமேயாகிய கோவணமும், அதன்மேல் ஆடையுந் திகழ் கின்றன. திருக்கரத்தில் எலும்புமணி கோத்த கயிறும், நீறுபூத்த நெருப்புபோல் திருமேனி முழுவதும் திருநீறும், திருவடியில் பஞ்சமுத்திரைகளும் விளங்கின. இத்தகைய எழில்மிகுந்த திருக்கோலத்துடன் எம்பெருமான் தமது திருவடியையே நினைந்து நெஞ்சங் குளிர்கின்ற திருத்தொண்டராகிய மானக்கஞ்சாற னாருடைய பொன்மாளிகையை அடைந்தார்.

எவ்வண்ணத்தாலும் எழுதவொண்ணாத வடிவுடைய இறைவர், இவ்வண்ணம் மாவிரதச் சைவ வேடங்கொண்டு வந்தார். அவரது திருவுருவைக் கண்ட நாயனார் மழைமுகிலைக் கண்ட மஞ்ஞையைப்போல் மகிழ்ந்தார். எதிர்கொண்டு தொழுதார். "எம்பெருமானே! எங்கள் குலஞ்செய்த தவப் பயனாகத் தேவரீர் இங்கு எழுந்தருளப் பெற்றேன்; உய்ந்தேன்" என்று வலஞ்செய்து வணங்கினார்.

மாவிரதராய் வந்த தேவர்பிரான் அன்பரை நோக்கி, "இங்கு நிகழும் மங்கலச்செயல் யாது?" என்று வினாவியருளினார்.

மானக்கஞ்சாறனார், "ஐயனே! அடியேனுடைய தவப் பெருஞ் செல்வியாகிய புதல்விக்குத் திருமணம் நிகழ்கின்றது" என்றார். தாபதராய் வந்த சம்பு, "உமக்குச் சோபனம் உண்டாவதாக" என்று வாழ்த்தி அருளினார்.

மானக்கஞ்சாறனார் ஞானச் செய்தவர் திருவடிமேல் வீழ்ந்து பணிந்து, மனையகத்துட் கொண்டுபோய், மணக்கோலம் புனைந் திருந்த, கருங்குழலுடைய புதல்வியாரை அவரது திருவடியைப் பணியுமாறு செய்தார்.

தஞ்சரணத் திடைப்பணிந்து தாழ்ந்தெழுந்த மடக்கொடிதன்
மஞ்சுதழைத் தெனவளர்ந்த மலர்க்கூந்தற் புறநோக்கி
அஞ்சலிமெய்த் தொண்டரைப்பார்த் தணங்கிவள்தன் மயிர்நமக்குப்
பஞ்சவடிக் காம்என்றார் பரவவடித் தலங்கொடுப்பார்.

திருவடியில் வீழ்ந்து தொழுகின்ற மணமகளின் மஞ்சு தழைத்தாற்போல் விளங்கும் எழில்மிகுந்த குழலைக் கண்டு, "அன்பனே! இப் பெண்மணியின் கூந்தல் மிகவும் அழகாக இருக்கின்றது; இக் கூந்தலின் மயிர் நமது மார்பிலணியும் மயிர்க் கயிறாகிய பஞ்சவடிக்கு ஆகும்" என்று இறைவர் அருளிச் செய்தார்.

அதனைக் கேட்ட நாயனார், "இதனையும் பொருள் செய்து 'ஆம்' என்று கேட்கப் பெற்றேன்; என்குலம் உய்ந்தது" என்று மகிழ்ந்து, உடனே சுரிகையெடுத்து மருள்செய்த பிறப்பை யறுப்பார்போல், இருள்செய்த கூந்தலை அடியுடன் அரிந்து நீட்டினார். வாங்குவார்போல் நின்ற மறைப்பொருளாகிய இறையவர் மறைந்து, இமயவல்லியுடன் இடபமேல் தோன்றி அருளினார்.

புத்தேளிர் பூமழை பொழிந்தனர். மானக்கஞ்சாறனார் தொழுது மண்மிசை வீழ்ந்து பணிந்து, எழுந்தார்; கண்மழை பொழிந்தார். மெய்மறந்து நின்ற மெய்யன்பரை நோக்கி, "அன்பனே! உனக்கு நம்பால் இருந்த அன்பை இவ்வுலகமெல்லாம் உணரச் செய்தோம்" என்று முக்கட்பெருமான் மொழிந்தருளி னார்.

மாலயனுங் காணாத மாதேவருடைய அருட்கோலத்தை நேரே காணும் பேறுபெற்ற மானக்கஞ்சாறனார், ஒன்றுபட்ட மனத்தினராய் உச்சிக் கூப்பிய கையராய் அரனாருடைய பெருங்கருணைத் திறம் போற்றும் பெரும்பேறு நேர்பெற்றார். இறைவர் மறைந்தார். கண்டவர்கள் கண்களிப்பக் கலிக்காமனார் வந்தார். அங்கு நிகழ்ந்த அரிய செயலை அன்பர்கள் கூற ஏயர்கோன் கலிக்காமர் கேட்டு அற்புதம் அடைந்தார். அடங்காத மகிழ்ச்சியுற்றார். அத்திருச்செயலைத் தாம் காணும்பேறு பெறாமைக்குச் சிந்தை நொந்தார். கண்டவரைக் காணும் பேறு பெற்றமைக்கு உவந்தார். புரமெரித்த புனிதருடைய திருவருளைப் போற்றினார்.

இறைவர் திருவருளால் அம்மையாருக்கு அரிந்தகுழல் பண்டையினும் பன்மடங்கு எழிலுடன் வளர்ந்தது. கலிக் காமனாருக்கும் புண்ணியப் பெண்கொடிக்கும் இனிது திருமணம் நிகழ்ந்தது. வறியவர்க்குப் பொன்மாரி பொழிந்தனர். திருமணங் கண்டோர் யாவரும் பெருமகிழ்வடைந்தார்கள். கலிக்காமனார் அளவற்ற கற்புடைய தமது மனைவியாருடன் திருப்பெருமங்கலம் போய்ச் சேர்ந்தார்.

விளக்கம்

மானக்கஞ்சாறனார்

இவரது இயற்பெயர் விளங்கவில்லை. இவர் அவதரித்த ஊரின் பெயர் கஞ்சாறூர். மானம் - பெருமை. பெருமைமிக்க கஞ்சாறனார் என்பது இவருக்குக் காரணப் பெயர். பெரிய வர்களது நாமம் மறைந்து ஊரின் பேராலேயே அவர்கள் பேர் வழங்குவது மரபு. "காரைக்காலம்மையார்" "பட்டினத்தார்" முதலியவற்றால் அறிக.

இவர் வாழ்ந்த ஊர் ஆனந்தத் தாண்டவபுரம்; ஆனதாண்டவ புரம் என்று இன்று வழங்குகின்றது. இத்தலத்திற்கு அருகில்

கஞ்சனாபுரம் என்னும் ஊரும் உண்டு. இங்கு எழுந்தருளியுள்ள சிவமூர்த்திக்குப் பஞ்சவடீசுவரர் என்று திருநாமம்.

இவர் வேளாளர் குலத்திலே சேனாபதிக்குடியிலே தோன்றியவர். அரசர்பால் சேனாபதித் தொழில் பூணும் பண்பு வேளாளர்பால் விளங்கியது. அத்துணை வீரமும், வேண்டியன வழங்கும் வாரமும் அத் திருக்குலத்திற்கு உளவாயின. அக் குலத்திற்கு இவர் தலைமை தாங்கி நின்றார். ''அப்பதியிற் குலப்பதியாய்'' என்பதனால் அறிக.

வீரமுடைய சேனாபதிக்குடியில் வந்த இவர் பணிவுடையவராய் வாழ்ந்தார் என்பது சிந்தனைக்குரியது. "பணிவுடைய வடிவுடையார்."

கொடைத்திறம்

''இதனை எனக்குக் கொடு'' என்று ஒருவன் கேளாமுன் தருவதே கொடை எனப்படும். அது நற்குலப் பண்பாகும்.

> இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
> குலனுடையான் கண்ணே யுள.

என்பர் ஆசிரியர் திருவள்ளுவர்.

இவர் சிவனடியார் விரும்பியது யாதாயினும் கேளாமுன் விரைந்து குறிப்பறிந்து வழங்குந் திருவுடையவர்.

> "கூறுவதன் முன்னவர்தங் குறிப்பறிந்து கொடுத்துள்ளார்"

தவம்புரிந்து பெற்ற தனிப்புதல்வி; திருமண நாள்; பெண்களுக்கு மிகுந்த அழகு செய்வது குழல். ''இவள் கூந்தல் நமது பஞ்சவடிக்கு ஆகும்'' என்றே மாவிரதியர் கூறினார். கொடு என்று கூறினாரில்லை. தவத்தாலுதித்த தனிமகள் என்றும், திருமணநாள் என்றும், மகளின் வனப்பு கெடும் என்றுங் கருதாது உடனே சுரிகை கொண்டு கூந்தலை அடியுடன் அரிந்து அளித்த அவருடைய அடியார் பக்தியை ஆரே அளக்கவல்லார்?

> ஒருமகள் கூந்தல் தன்னை வதுவைநாள் ஒருவர்க் கீந்த
> பெருமையார் தன்மை போற்றும் பெருமையென் னளவிற் றாமே.

என்பர் தெய்வச் சேக்கிழார்.

பெண்மகவின் பெருமை

"ஆண்மகவு பெற்றார்க்கே நன்மையுண்டு; பரகதியுண்டு; சீரும் சிறப்பும் உண்டு" என்பார் தலைவணங்க, மானக்கஞ்சாறனாருக்கு இம்மங்கை நல்லாள் அவதரித்தனள்.

மழைக்குக் காரணம் பெண்மணிகளின் கற்பேயாகும். ஆதலின், கற்புடைய அம்மைபால் இத்தெய்வக் கற்புடைய அம்மை தோன்றுகின்றனர்.

கணவனாராகிய கலிக்காமர் சுந்தரர் வருகின்றார் எனக் கேட்டு, "மாதொரு பாகனாரைத் தூது ஏவிய அவரைக் காணேன்" என்று குறுவாளால் குடல் சரித்து மாண்ட கணவனார் திரு மேனியை மறைத்து வைத்து நம்பியாரூரரைப் பூரண கும்பம் வைப்பித்துத் தோரணங்கள் நாட்டுவித்து வரவேற்று நின்ற பொற்பும் கற்பும் பொருந்திய அம்மையாரைப் பெற்ற நாய னாருடைய புண்ணியம் இமயமலையினும் ஏற்றமுடையதாகும்.

மங்கையர்க்கரசியாரைப் பெற்ற சோழனும், காரைக்காலம்மை யாரைப் பெற்ற தனதத்தரும், ஆண்டாளம்மையாரைப் பெற்ற பெரியாழ்வாரும் பெற்ற பேறு மற்று யார் பெற்றார்? ஆனபடியால் பெண்மகவு பெற்றார்க்கும் ஒப்பற்ற உயர்வு உண்டு.

> இழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த இப்பிறவிக் கொடுஞ்சூழல்
> பிழைக்குநெறி தமக்குதவப் பெண்கொடியைப் பெற்றெடுத்தார்.

என்ற திருவாக்கை யுன்னுக. எத்துணையழகாக இது அமைந் துளது என ஓர்க.

மழைக்குக் காரணம் மங்கையர் கற்பே

பெண்மணிகளின் கற்பின் திறத்தாலேயே வானம் பொழி கின்றது. "பெய்யெனப் பெய்யும் மழை" என்பர் பொய்யில்புலவர்.

> "மழைக்குதவும் பெருங்கற்பின் மனைக்கிழத்தி"

என்ற அருமைத் திருவாக்கினை உன்னுந்தொறும் உவட்டாத உவகையூற்று ஊறுகின்றது.

அம்மையார்

மானக்கஞ்சாறனாரது மாதவத்தால் வந்த இந்த அம்மையின் திருப்பெயரைச் சேக்கிழாரடிகள் கூறினாரில்லை. இறைவரும் விரும்பும் கூந்தலழகும், அதனைக் கொடுக்குந் தருணத்தில்

மகிழ்ச்சியுடன் இருந்த இவரது கொடைக்குணமும், கலிக் காமனாருக்கு வாழ்க்கைத் துணையாக அமையும் பெரும்பேறும் பெற்ற இவ்வன்னையின் நாமம் எம்மனோர் உச்சரிக்குந் தகுதியின்றென கூறாது விடுத்தனர் என உய்த்துணர்க.

அழகில் திருமகளையும் வென்றனர். அமுதமயமாக விளங்கினர்.

"திருமகட்கு மேல்விளங்கும் செம்மணியின் தீபமெனும்
ஒருமகள்"

மாவிரதியர்

இது சிவபெருமான் கொண்ட திருவேடம். மாவிரத சைவம் என்பது, அகப்புறச் சமயங்கள் ஆறனுள் ஒன்றுக.

அவையாவன:- பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம் என்பன.

இவற்றின் விரிவுகளைச் சிவஞானபோத மாபாடியத்திற் காண்க.

இவற்றுள் மாவிரதம் என்பது, சிவபெருமானை என்புமாலை தரித்த மூர்த்தியாகத் தியானித்து, எலும்பு மணிமாலை புனைந்து பஞ்சவடி தரித்து வழிபாடு புரியுமாறு கூறுவது.

பஞ்சவடி என்பது மார்பிலணியும் மயிர்க்கயிறு. (பூணூல்) அது விரிவாகப் பின்னியிருக்கும். பஞ்சம் - விரிவு; வடி - வடம் போன்றுள்ள கயிறு.

இது பஞ்சவடிக்கு ஆகும் என்று பரமன் மணமகளின் குழலின் எழிலைக் கண்டு கூறியருளினார்.

அருள்செய்த மொழிகேளா அடற்சுரிகை தனையுருவிப்
பொருள்செய்தா மெனப்பெற்றேன் எனக்கொண்டு பூங்கொடிதன்
இருள்செய்த கருங்கூந்தல் அடியிலரிந் ததிர்நின்ற
மருள்செய்த பிறப்பறுப்பார் மலர்க்கரத்தின் இடைநீட்ட.

என்ற திருப்பாட்டின் நடையழகும் தொடையழகும் சொல்லழகும் பொருளழகும் எத்துணை விழுமியனவாக விளங்குகின்றன என்பதை அன்பர்கள் உற்று உணர்க. இப்பாடலே நம் பிறப்பை அறுக்கின்ற பெரும் ஞானவாளாக விளங்குகின்றது.

அரிவாட்டாய நாயனார் புராணம்

"எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்"

நீர்வளமும் ஏர்வளமும் மிக்க சோழவளநாட்டில் கணமங்கலம் என்று ஓர் ஊருண்டு. வண்டுகள் இனிய கீதங்களைப் பாடவும், விரும்புங் கரும்பு வெடித்துத் தேன் பொழியவும், வயல்களில் நீலோற்பலம் மலர்ந்து எழில் செய்யவும் விளங்கும். சங்குகள் வயலில் உள்ள தாமரையில் முத்துக்களை ஈனும்; மள்ளர்கள் பயிரை வளர்க்கும் பொருட்டு முத்துக்களுடன் கூடிய தாமரைகளை, களை பிடுங்கி ஏந்தும்போது பதுமநிதியை ஏந்திய தேவர்களைப்போல் தோன்றுவார்கள்.

சீரும் சிறப்புமிக்க அத்திருப்பதியில், சிறந்த வேளாளர் மரபில் தாயனார் என்னுந் திருநாமந் தாங்கிய ஒருவர் வாழ்ந்தார். உயர்ந்த மதியும் நிதியும் உடையவராய் வேளாண் குலத்திற்குத் தலைவராய் நல்வாழ்க்கையாகிய இல்வாழ்க்கையில் அவர் நின்று நிலவினார். தாயனார் நெடிதுகாலந் தொடர்ந்து மண் கிளைத்தும் அறியாத சிவபெருமானுடைய தூய திருவடிகளை அன்புடன் தொடர்ந்து துதித்துத் தூயராகி நிலைபெற்றார்.

தாய னாரெனு நாமந் தரித்துளார்
சேய காலந் தொடர்ந்துந் தெளிவிலா
மாய னார்மண் கிளைத்தறி யாதவத்
தூய நாண்மலர்ப் பாதந் தொடர்ந்துளார்.

மின்னார் செஞ்சடை வேதியராகிய விமலனுக்கு நாள் தோறும், நல்ல செந்நெல்லரிசியின் அமுதும், செங்கீரையும், இனிய மாவடுவும் நியதியாக அமுது செய்விப்பார்.

செல்வம் நிறைந்த காலத்து அரும்பெருந் தொண்டு செய்வது எளிது. குறைந்த காலத்தும் அன்பு மாறாமல் செய்வது அரிது. தாயனார் வறுமையாகிய சிறுமை வந்தபோதும் தமது திருத் தொண்டின் உறுதி மாறாதவர் என்பதனை உலகிற்கு உணர்த்த வேண்டும் என்று கண்ணுதற் கடவுள் கருதினார். குன்றவில்லி யாகிய இறைவர் குன்றமென்ன நின்ற செல்வத்தை எவ்வழி போயிற்று என்று எவரும் அறியாதபடி குன்றுமாறு

செய்தருளினார். யானையுண்ட விளாம்பழம் போலே செல்வமுற்றும் மறைந்தொழிந்தது. அவ்வாறு அகன்றும் தாய நாயனார் தளர்வின்றி மிகுந்த அன்புடன் முன்புபோல் செந்நெல்லரிசியமுதும் செங்கீரையும் மாவடுவும் ஆலமுண்ட நீலகண்டர்க்கு அமுது செய்வித்து வந்தார்.

மேவு செல்வங் களிறுண் விளங்கனி
ஆவ தாகி யழியவும் அன்பினால்,
பாவை பாகர்க்கு முன்பு பயின்றவத்
தாவில் செய்கை தவிர்ந்திலர் தாயனார்.

வறுமையாகிய இடர் மிகுந்தபோதும் தாயனார் வருந்தாது, கூலிக்கு நெல் அறுத்து, அதனால் வரும் செந்நெல்லைக் கொண்டு சிறிதும் குறையாது வளர்ந்த மெய்யன்பினால் திருக்கோயிலை யடைந்து இறைவரை அமுது செய்வித்து அகமிக மகிழ்வார். கூலிக்கு அறுத்து அதனால் வரும் செந்நெல் முழுவதும் இறைவர்க்கே அமுதாக்கிக், கூலியாக வரும் கார் நெல்லைத் தமக்கு உணவாகக் கொள்வார். நல்லனவெல்லாம் நம்பனுக் கென்றே நல்லவர் நாடுவாரன்றோ?

மாலயன் காணாத மாதேவர் மேலும் அவருடைய அன்பை உலகிற்கு உணர்த்துவான் வேண்டி விளைகின்ற நெல் எல்லாம் செந்நெல்லாகவே ஆகுமாறு செய்தார். அதுகண்ட அன்பர், "இது அடியேன் செய்த புண்ணியம்'' என்று அளவற்ற மகிழ்ச்சி யடைந்து அவை முழுவதும் அண்ணலாருக்கு அமுது செய் விப்பார்.

நாள்தோறும் உணவில்லாமையால், அணுத்துணையும் அன்பு குறையாத மனைவியார், வீட்டுக் கொல்லையில் உள்ள இலைக் கறிகளைப் பறித்துச் சமைத்துக் கணவனாருக்குப் படைத்தார். தாயனார் அதனையருந்தித் தமது திருப்பணியை விடாமல் இனிது செய்துவந்தார். அந்த இலைக்கறிகள் எத்தனை நாள்களுக்குத்தான் உதவும்? அவைகள் யாவும் காலியாயின. அருந்ததியை யொத்த அம்மையார் அப்பொழுதும் அன்பு மாறாமல் கணவனாருக்குத் தண்ணீரையே உணவாகத் தந்தார். தாயனார் தண்ணீரையே அமுதாகப் பருகி, வயல்களிற் சென்று நெல் அறுத்தல் என்ற கூலி வேலை செய்து அதனால் வரும் செந்நெல்லைப் பெற்றுத் திருத்தொண்டு முட்டாது முன்புபோல் அன்புடன் ஆற்றினார். தாயனாருக்கு இறைபணியில் இருந்த அன்பை யாரே அளக்க வல்லார்? அது எழுத்துக்கும் சொல்லுக்கும் அடங்குந் தரத்ததோ?

எம்மனோர் சிற்றறிவுக்கு எட்டாதது. பலநாள் பட்டினி கிடந்தும் கூலியாகவரும் செந்நெல்லைச் சிவமூர்த்திக்கே அமுது செய்விக்கும் அவருடைய திருவுளப்பாங்கும், அயராத அன்பும், அதற்கு உடன்பட்டு உறுதுணையாக நின்ற அவருடைய மனைவியாருடைய கற்பின் பொற்பும் உன்னுந்தொறும் உன்னுந்தொறும் உள்ளம் உருகுகின்றது.

ஒருநாள் வழக்கம்போல், தாயநாயனார் அவருடைய அன்புபோல் தூய செந்நெல் அரிசி, மென்மையான கீரை, மாவடு இவை களைக் கூடையில் சுமந்துகொண்டு செல்கின்றார். மட்கலத்தில் பசுவினிடம் பெற்ற பஞ்சகவ்யத்தை ஏந்திக் கொண்டு, பறவையை அதன்நிழல் தொடர்வதுபோல் அம்மையார் கணவனார் பின்னே செல்கின்றார். அவ்வாறு செல்கின்றபோது, பலநாள் பட்டினி கிடந்ததனால் உடல் வாடிய அவருக்குக் கால் தப்பித் தளர்வுற்றது. ஆனைந்து இருந்த மட்கலத்தை மூடியிருந்த வலக்கரத்தினால் கணவனாரை மனைவியார் அணைத்தும் நாயனார் கீழே வீழ்ந்தார். கூடையிலிருந்த செந்நெல்லரிசி, கீரை, மாவடு என்ற இவை யாவும் நிலவெடிப்பிலே சிந்தின. அதைக்கண்ட அன்பர் சிந்தை நொந்து, "திருவமுதுக்கு ஆகும் இவை சிந்தியபின் திருக் கோயிலுக்குப் போய் என் செய்வது?" என்று எல்லையில்லாத துன்ப மெய்தினார்.

நல்லசெங் கீரை தூய மாவடு அரிசி சிந்த
அல்லல்தீர்த் தாள வல்லார் அமுதுசெய் தருளு மப்பே
றெல்லையில் தீமை யேனிங் கெய்திடப் பெற்றி லேனென்
றொல்லையில் அரிவாள் பூட்டி யூட்டியை அரிய லுற்றார்.

"எம்மையாளும் அம்மையப்பா! கருணைக்கடலே! எங்கும் நிறைந்த இறைவா! அடியனேன் அறிவு தோன்றிய நாள்தொட்டு இடையறாது தேவரீருக்கு அமுது ஊட்டும் திருத்தொண்டினைச் செய்து வந்தேன். இன்று எளியேன் உமக்கென்று கொணர்ந்த நல்ல செங்கீரையும், தூய மாவடுவும், செந்நெல்லரிசியும் கமரில் சிந்தி விட்டன. அந்தோ! அடியேன் என்செய்தேன்! திருத்தொண்டுக்குப் பழுது வந்தது. அண்ணலே! நீர் எங்கும் நிறைந்தவர்; எல்லாம் ஆனவர். இந்த நிலவெடிப்பிலும் நீர் இருக்கின்றீர். அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தவராதலின் இங்கே இதனை இவைகளை அமுது செய்து அருளும். இல்லையேல் திருத்தொண்டின் நியதி பிழைத்தவனாயினேன் மாள்வேன்; இனி உய்யேன்" என்று விண்ணப்பம் புரிந்தார்.

நாடோறும் இறைவருக்கு அமுது செய்விக்கும்போது இறைவர் அமுது செய்யும் குறிப்பாக "விடேல்" என்ற ஒலி கேட்பது வழக்கம். அதனை இப்போது கேட்கப் பெற்றிலர். ஐயன் "அருளின் திறம் இதுவோ" என்று வருந்தினார். "ஆட்கொள்ளும் ஐயர் அமுது செய்திலர்" என்று கருதி இடையில் சொருகியிருந்த அரிவாளை யெடுத்துப், பிறப்பை அரிவார்போல் கழுத்தினோடு ஊட்டியை அரிந்துகொண்டு நின்றார்.

மாசறு சிந்தை யன்பர் கழுத்தரி அரிவாள் பற்றும்
ஆசில்வண் கையை மாற்ற அம்பலத் தாடும் ஐயர்
வீசிய செய்ய கையும் மாவடு விடேல்வி டேல்என்று
ஓசையுங் கமரி னின்று ஒக்கவே எழுந்த வன்றே.

குற்றமற்ற சிந்தையுடைய அன்பர் இவ்வண்ணம் கழுத்தை அரியும்போது கமரிலிருந்து அம்பலத்தாடும் ஐயருடைய இடத் திருக்கரம் எழுந்து தாயனாருடைய கையைப் பற்றித் தடுத்தது. அதேசமயம் மாவடுவைக் கடிக்கும் ஒலியாக "விடேல்" "விடேல்" என்னும் ஓசையும் எழுந்தது.

இறைவருடைய திருக்கரம் நாயனாருடைய கரத்தைப் பற்றிய வுடனே அரிந்ததனால் உண்டாகிய புண்ணும் வெவ்வினையும் நீங்கின. அவற்றை உணர்ந்த நாயனார் அச்சமும் அன்புங் கொண்டு ஐயன் தந்த அருட்பெருங் கருணையை எண்ணி அதிசயித்துக் கரங்களைக் கூப்பித் துதிசெய்வார்.

அடியனேன் அறிவி லாமை கண்டுமென் னடிமை வேண்டிப்
படிமிசைக் கமரில் வந்திங் கமுதுசெய் பரனே போற்றி!
துடியிடை பாக மான தூயநற் சோதி போற்றி!
பொடியணி பவள மேனிப் புரிசடைப் புராண போற்றி!

"தேவதேவா! நின் திருக்கருணையின் திறந்தான் என்னே! என்னே! வேதாகமங்களுக்கும் எட்டாத விமலா! மண்முதல் நாதம் ஈறாகவுள்ள முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்த தேவரீர் மண் வெடிப்பில் வந்து இங்குச் சிந்திய பொருளை அமுது செய்து அருள் புரிந்தனையே! பார்வதி பாகா! பரஞ்சோதியே! பால் வெண்ணீ றணிந்த பவளமலையே! போற்றி!" என்று உள்ளங் குழைந்து வெள்ளந்தாழ் சடையவனைத் துதிசெய்து, கண்ணீர் மல்கி நின்றார்.

இறைவர் இடபமேல் தோன்றி இமயவல்லியுடன் காட்சி தந்து, "அன்பனே! நீ புரிந்த செய்கை நன்று; நின் கற்பின் மிக்க

மனைவியுடன் என்றும் நமது சிவலோகத்தில் நம்மை விட்டு நீங்காது வாழ்வாய்" என்று அருளிச் செய்து, தாயனாரும் அவர் திருமனைவியாரும் தம்முடன் தொடர்ந்துவர விடைமிசையூர்ந்து எழுந்தருளிச் சென்றார். ஊட்டியை அரிவாளால் அரிந்த காரணத்தால் அரிவாட்டாய நாயனார் என்னுந் திருப்பெயரை அவர் பெற்றனர். அரிவாட்டாயனார் அன்புடைய மனைவியுடன் சிவலோகமெய்திப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றார்.

விளக்கம்

கணமங்கலம்

இந்த ஊர் இப்போது மறைந்துவிட்டது. திருத்துறைப் பூண்டிக்கு வடக்கே இரண்டு கல் தொலைவில் திருத்தண்டலை நீணெறி என்னும் திருத்தலத்திற்குக் கீழ்ப்பால் ¼ கல் தொலைவில் கணமங்கலத்திடல் என்னும் இடம் உளது. அதுதான் முன் ஊரிருந்த இடம் என்பர். தண்டலை நீணெறி என்ற தலமே தாயனார் வழிபட்டது. ஊட்டித்தண்டலை எனவும் வழங்குகின்றது.

தாயனார் :- இது இவருடைய இயற்பெயர். தாயன் என்ற நாமத்துடன் ஆர் என்ற பன்மை விகுதி சேர்ந்து "தாயனார்" என்று ஆயிற்று. நாயன் என்ற சொல்லுடன் ஆர் என்ற விகுதி சேர்ந்து நாயனார் என வந்ததுபோல் என்று அறிக.

இறைவன் உயிர்கட்குத் தாயாக நின்று தண்ணளி சுரப்பவன் ஆதலின் தாயன் என்ற திருநாமம் இறைவனுக்குண்டு. அத் திருநாமம் இவருக்கு இடப்பட்டது. "தாயான செல்வர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ" யென்ற திருவாசகத்தையும் நினைவு கூர்க.

இனி தாய் அனார் எனப் பிரித்து, தாய் போன்றவர் எனப் பொருள் கூறுவாரும் உண்டு.

அரிவாளினால் நெல்லறுத்து இறைவர்க்குத் திருத் தொண்டு புரிந்ததனாலும், திருத்தொண்டினுக்குத் தடை நேர்ந்தபோது அரிவாளினால் கழுத்தை அரிந்ததனாலும், பிறவிப்பெரும் பிணியை மாற்றிச் சிவபதஞ் சேர்வதற்கு அரிவாளே காரணமாக இருந்ததனாலும் அரிவாட்டாய நாயனார் எனப் பெற்றார்.

இல்லறம்

இல்லறமே நல்லறம் என்று ஆன்றோர் கருதினர். இல்லறத்தில் கற்புக் கடன் பூண்ட காரிகையுடன் இல்வாழ்க்கையில் செம்மை யுடன் வாழ்பவர் இம்மையிலேயே அம்மை நலம் பெறுவர் என்பது ஒருதலை.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும். - *திருவள்ளுவர்*

கற்பவை கற்று, கற்றவண்ணம் நின்று, நற்குணம் நிறைந்த கற்புடை மனைவியுடன், அன்பும் அறனுந் தாங்கி, இன்சொல்லின் விருந்து புறந்தந்து, அருந்தவர்ப் பேணி, ஐவகை வேள்வியும் ஆற்றி, மகப்பேறு குறித்து வாழ்ந்து, பிறன்மனை நயவாப் பெற்றியுடன் வாழும் இல்லறமே சொல்லறத்துள் எல்லாந்தலை. அதனால், சேக்கிழாரடிகள்,

அக்கு லப்பதி தன்னில் அறநெறித்
தக்க மாமனை வாழ்க்கையில் தங்கினார்

என்று அருளிச் செய்தார்.

அருமையும் எளிமையும்

இறைவன் அன்பின்றித் தன்முனைப்பாலும் ஆராய்ச்சியாலும் அறிய முற்படுவார்க்கு யுகங்கள் பலகோடி கடந்தாலும் அறிதற்கரியவன்.

அன்போடு உருகி அகங்குழைவார்க்கு மாத்திரைப் பொழுதில் வெளிப்பட்டு அருள்புரியும் எளியவன்.

"மாலயனுக் கரியானே
மாதவரைப் பிரியானே" - *திருப்புகழ்*

என்புருவாகிப் புற்றுமூடத் தவஞ் செய்வார்க்கு எட்டாத இறைவன் அன்புருவாகி நிற்பாரைத் தேடிவந்து அருள் புரிவான்.

திருமால் பன்றி வடிவு கொண்டு, "நான் திருவடியைக் காண வல்லேன்" என்ற முனைப்புடன் மண்கிளைத்து ஆயிரம் ஆண்டு கள் தேடினார். திருவடியைக் கண்டாரில்லை.

அத்தகைய திருவடியைத் தாயநாயனார் அன்பினால் தொடர்ந்து கண்டு இன்புற்றார்.

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்று
அடிமுடி யறியும் ஆதர வதனில்
கடுமுரண் ஏன மாகிமுன் கலந்து
ஏழ்தலம் உருவ இடந்துபின் எய்த்து
"ஊழி முதல்வ சயசய" என்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய்" - திருவாசகம்

திருமால் தேடியுந் தொடர்ந்துந் துதித்துங் காணாத திருவடியைத் தொடர்ந்த நாயனாருடைய பெருமையை யாமெலாம் உணர்ந்து உய்ய தெய்வச் சேக்கிழார் கூறும் அருமைதான் என்னே!

"சேய காலந் தொடர்ந்துந் தெளிவிலா
மாய னார்மண் கிளைத்தறி யாதவத்
தூய நாண்மலர்ப் பாதந் தொடர்ந்துளார்"

ஆன்காணா இளங்கன்றாய் அலமந்து ஏங்கி அன்பு கொண்டு நான்காணா உளமுடை மெய்யடியவரே இறைவனைத் தொடர்ந்து எட்டவல்லவராவர்.

ஆவணம் பறிக்கச் சென்ற அளவினில் அந்த ணாளன்
காவணத் திடையே யோடக் கடிதுபின் தொடர்ந்து நம்பி
பூவணத் தவரை யுற்றார் அவரலால் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையி னாரை யார்தொடர்ந் தெட்ட வல்லார்.

என்ற தடுத்தாட் கொண்ட புரா்ணத் திருப்பாடலையும் உன்னுக.

திருவமுது செய்வித்தல் :-

"ஞானந்தான் உருவாகிய நாயகன்" பசி தாகம் இல்லாதவர். அவருக்கு அன்னம் முதலியன நிவேதித்தல் அவசியமா? அது எற்றுக்கோ? எனின்; கூறுதும். உலகிலுள்ள உயிர்கள் யாவும் பசியாறி நன்மை அடைய வேண்டும் எனின் உயிர்க்குயிராகி யாண்டும் நீக்கமற நிறைந்த நிமலனுக்கு நிவேதிக்குங்கால் அது எவ்வுயிர்க்கும் நன்மை பயக்கும்.

ஆயிரம் மணிகளை ஒருநூலில் கோத்து மாலையாகி இருக்கின்றன. மணிகள் முழுவதும் அசைய வேண்டுமானால் அம்மணிகளுக்குள் ஊடுருவியுள்ள நூலை அசைத்தல் வேண்டு

மல்லவா? அதுபோல் அண்டமும் அளவிலாத உயிர்களும் உடம்பாகக் கொண்ட இறைவனுக்குச் செய்வது உயிர்களின் பொருட்டே யாகும்.

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே. - திருமந்திரம்

வறுமையிற் செம்மை

பொருள் மிகுதியாக உள்ளபோது இறைபணியும் உயிர்ப் பணியும் செய்வது இயல்பு. வறுமை வந்து வாடியபோது செய்வது அருமை. "தனக்கு மிஞ்சியா தருமம்" என்பர். சுவர் வைத்துக் கொண்டு தானே சித்திரம் எழுதவேண்டும் என்பர். வறுமை வந்தெய்தியபோது அதனைப் பொருள்படுத்தாமல் தாங்கொண்ட நியதியினின்றும் ஒரு சிறிதும் வழுவாமல் நிற்பது திருத்தொண்டரது திறம். இதனை உலகம் உணர்ந்து உய்ய, ஒருகால் தொழுதவர்க்கு இருநிதியும் அளிக்கும் வெள்ளிமலை விமலர் இவருடைய செல்வத்தை மாற்றியருளினார்.

திருத்தொண்டின் திறம்

தாயனார் வறுமையுற்று, நிலபுலம், நிதி முதலியன யாவும் நீங்க, நிலை தளராது அரிவாள் தாங்கி வயலில் கூலிக்கு நெல் அறுத்து அதனால் வரும் செந்நெல்லை இறைவர்க்கு அமுது செய்விப்பா ராயினார். அதுமட்டுமன்று; செந்நெல் யாவும் இறைவர்க்கு; கார்நெல் தமக்கு. நல்லன இறைவர்க்கும் அல்லாதன தமக்கும் என்று கொண்டனர். அமுதத்தை அமரர்க்கு ஈந்து தாம் ஆலமுண்ட அரனாரது அடியரன்றோ?

சாலி தேடி யறுத்தவை தாம்பெறுங்
கூலி யெல்லாந் திருவமு தாக்கொண்டு
நீல நெல்லரி கூலிகொண் டுண்ணுநாள்
மால யற்கரி யார்அது மாற்றுவார்.

கிடைப்பதெல்லாம் செந்நெல்லே ஆகுமாறு இறைவர் மாற்றினார். கார்நெல்லே கிடையாதொழிந்தது. கிடைத்த செந்நெல்லில் ஒருபாதி இறைவர்க்கும் ஒருபாதி தமக்கும் என்று கொண்டாரில்லை. கார்நெல் கிடைக்கவில்லையே என்று வருந்தினாரில்லை. "இஃது அடியேன் செய்த புண்ணியம்" என்று

சிந்தை மகிழ்ந்தார். பலநாள் பட்டினி கிடந்தார். கீரைகளை உண்டும், தண்ணீரை உண்டும் தமது திருத்தொண்டினைச் செய்துவந்தார். இவரது அன்பின் திறத்தினை என்னென்று புகழ்வது! இவை அத்தனைக்கும் ஒத்து உடனிருந்து உறுதுணை புரிந்த அம்மையாரது அன்பின் மாண்புதான் என்னே!

கூடையில் நிவேதனப் பொருள்களைச் சுமந்துகொண்டு சென்றார் என்பதனால் அந்த வறுமையிலும் நிரம்பக் கொண்டு சென்றார் என்பதும், அதைச் சுமக்கவும் நடக்கவும் வலியற்றுக் கால் தள்ளாடி வீழ்ந்தனர் என்பதும் விளங்குகின்றன. பஞ்சகவ்யம் ஏந்திக்கொண்டு கணவனாருக்குப் பின்னே செல்லும் அம்மையார் கணவனாரை விழவொட்டாமல் அணைப்பதனால் அவருடைய பதிபக்தி புலனாகின்றது. பஞ்சகவ்யம் மட்பாத்திரத்தில் கொண்டேகினார் என்பதனால் அவருடைய வறுமையின் மிகுதி தெரிகின்றது.

தாயனார் கீழே விழ, நிவேதனப் பொருள்கள் கமரில் சிந்தின. தான் வீழ்ந்ததற்கு அவர் வருந்தவில்லை. தமது தொண்டிற்கு இடர் வந்ததைக் குறித்தே வருந்தினார்.

இனி, வேறு இடஞ் சென்று நெல்லறுத்து நிவேதிக்கப் பொழுது இல்லை. தமது குறிக்கோள் தவறியபோது வாழ்வதிற் பயனில்லை என்று கொண்டார். இறைவர் எங்கும் இருக்கின்றவர். அப்படியாயின் இந்த நில வெடிப்பிலும் இருக்கின்றார். ஆதலில் இவ்விடமே அமுது செய்தருள்க என்று வேண்டினார். இறைவர், அடியாரிடத்தும் சிவலிங்கத்தினிடத்தும் தயிரில் வெண்ணெய் போல் விளங்கித் தோன்றுவர். ஏனைய இடத்தில் பாலில் படுநெய் போல மறைய நின்றனர். முறுக வாங்கிக் கடைய முன்னிற்பர். தாயனார் அன்பினால் வேண்டியபோது இறைவர் அக் கமரி லேயே அமுது செய்து மாவடுவைக் கடிக்கும் "விடேல் விடேல்" என்ற ஓசையையும் உண்டாக்கினார். பின்னர், விடைமீது தோன்றி, தமது சிவலோகத்தில் தம்முடன் என்றும் பிரியாது மனைவியாருடன் பேரின்பந் துய்த்திருக்குமாறு அருள்புரிந்தார்.

தளராத சிவபக்தியினால் எல்லா நலன்களும் எய்தும்.

செய்யி லுகுத்த திருப்படி மாற்றதனை
ஐய இதுஅமுது செய்கென்று - பையவிருந்
தூட்டி யறுத்தவர்க்கே யூட்டி யறுத்தவரை
நாட்டியுரை செய்வதென்னோ நாம். - *திருக்களிற்றுப்படியார்*

ஆனாய நாயனார் புராணம்

''அலைமலிந்த புனன்மங்கை ஆனாயர்க்கு அடியேன்''

சோழவளநாட்டின் உட்பிரிவுகளில் ஒன்று மேல்மழநாடு. அந்நாடு எந்நாட்டினுஞ் சிறந்த வளமையுடையது. மந்தியும் அறியாத கந்தமலர்ச் சோலையில் சந்திரன் தவழ்வான். நெல்லரிகள் பரப்பிய பண்ணையின் வரம்பின்மீது வண்டினம் தவழும். வைக்கோற் போர்களின்மீது மேகம் தவழும்.

உழவுத்தொழிலைப் புரியும் உழத்தியர் குழலில் வண்டுகள் உறங்குவன; செந்தாமரையில் கயல் மீன்கள் கண் துயில்வன; தேமாஞ்சோலையின் குளிர்ந்த நிழலில் கரிய எருமைகள் துயில் புரிகின்றன. கருப்பஞ்சாறு காய்ச்சுகின்ற இடங்களில் புகை முகிலினம்போல் எழுந்து எழில் புரிகின்றது. பெருகிய நதியின் அலைகள் உந்திய சங்கினங்கள், பெரிய இலைகளுடன் கூடிய வாழைப் புதர்களின்மீது தொடர்ந்து சென்று, அவைகளைச் சுற்றியுள்ள கொடிகளின் வழியே தவழ்ந்து, அருகிலுள்ள பாக்கு மரங்களில் ஏறி முத்துக்களைச் சொரிகின்றன. அக்காட்சி மாட்சி யுடை கமுகின்பாளைகள் மலர் உதிர்ப்பதுபோல் விளங்குகின்றது.

இத்தகைய இயற்கை வளஞ் செறிந்த மருத நிலத்தின் அருகில் செழித்துள்ள முல்லை நிலத்தில் ஆன் கன்றுகளும் மான் கன்றுகளும் துள்ளித் துடித்து ஓடியாடி மகிழ்கின்றன. எல்லையில் எழிலுடையது அம் முல்லைநிலம். தமது மண்ணாட்டில் விளங்கும் மழநாட்டிற்கு எல்லா வகையாலும் தோல்வியுற்ற விண்ணாட்டைக் கண்டு நிலமகள் புன்முறுவல் பூத்ததுபோல் முல்லையரும்புகள் மிக அழகாகத் திகழ்கின்றன.

மண்ணுலகிற்கு அருங்கலமாக விளங்கும் மேல்மழநாடு. அதற்கு ஒரு மங்கலமாகப் பொலிவது திருமங்கலம் என்ற பழமையான திருத்தலம். பெருமங்கலம் நிறைந்த திருமங்கலத்தில் வீணை ஓசையும், வேதஓசையும், வேய்ங்குழல் ஓசையும், வெண் சங்க ஓசையும் எப்போதும் இனிமையாக முழங்கும். அறம் பலபுரியும் அருங்குடிகள் நெருங்கியிருந்தன. அப்பதி செப்பரிய சீரும் சிறப்பும் பொருந்தியது. அத் திருப்பதியில் ஆயர்குலஞ் செய்த தூய பெருந் தவத்தினால் ஆனாய நாயனார் அவதரித்தார்.

ஆயர் குலத்தை விளக்கிட வந்துத யஞ்செய்தார்
தூய சுடர்த்திரு நீறு விரும்பு தொழும்புள்ளார்
வாயினின் மெய்யின் வழுத்து மனத்தின் வினைப்பாலில்
பேயுட னாடு பிரானடி யல்லது பேணாதார்.

தூய ஒளியை வீசும் வெண்ணீற்றை விரும்புந் திருத்தொண்டில் நின்ற இவர், மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் பேயுடனாடும் பெருமானாகிய சிவபெருமானையன்றி வேறு ஒன்றையும் விரும்பாதவர். ஐந்தெழுத்தோதுஞ் சிந்தையுடையவர். அன்பும் அறனும் பூண்டவர்; ஈரந் தங்கிய உள்ளத்தினர்.

கன்றுகளையும், பசுக்களையும், எருதுகளையும் புறங்காட்டிற் கொண்டு சென்று, விலங்குகளால் வரும் துன்பமும் நோயும் வரா வண்ணம் காப்பாற்றி, இனிய மென்புல்லை அருத்தித், தூயநீரைக் குடிப்பித்து, நிழலில் இளைப்பாறச் செய்து, ஆன் இனங்கள் அளவின்றிப் பெருகும்படி செய்வார். கன்றுகள், பால் கறவை மாறிய பசுக்கள், பால் கறக்கும் பசுக்கள், சினைப் பசுக்கள், இளங் கன்றுடைய புனிற்றுப் பசுக்கள், வலிய எருதுகள் ஆகிய இவை களைத் தனித்தனியே நெருங்கி நிறைந்துள்ள தொழுவங்கள் பல அவர்பால் இருந்தன. கோவலர் என்றும் ஏவல் புரிந்திட, அந்த ஆயர்குலத் தலைவராக ஆனாயர் விளங்கினார். சிவபெருமான் திருவடியில் அன்பு பொருந்திய இசையுடனே வேய்ங்குழல் ஊதுவதை மேற்கொண்டார்.

இசைக்கலை நூலில் கூறிய முறைப்படி, வளர்ந்த முங்கிலில் நன்கு செய்து அமைத்த குழலில் எம்பிரானுடைய பஞ்சாக் கரத்தைத் தொடுத்து, ஏழிசையின் சுருதி பெற வாசித்துச், சராசரங்களெல்லாம் பொருந்துமாறு கருணையினால் இசையமுது வழங்குவார்.

எடுத்தகுழற் கருவியினில் எம்பிரான் எழுத்தைந்துந்
தொடுத்தமுறை ஏழிசையின் சுருதிபெற வாசித்துத்
தடுத்தசரா சரங்களெலாம் தங்கவருந் தங்கருணை
அடுத்தஇசை யமுதளித்துச் செல்கின்றார் அங்கொருநாள்.

நறுமலர் மாலை புனைந்து, தலைமயிரைக் கோதி ஒருபுறமாக முடித்து, அதில் கண்ணிமாலையைச் சூடி, வடிந்த காதிலே காந்தள் மலரைச் சொருகி, மரவுரியும் தழையுடையும் கட்டி, நெற்றி நிறையத் திருநீறு பூசிக்கொண்டு, காலில் தோற்பாதுகை தரித்து, வெண்கோலும் வேய்ங்குழலும் எடுத்துக் கொண்டு,

ஏவலரும் கோவலரும் தொழுது சூழ ஆனிரைகளும் சூழ ஒருநாள் முல்லை நிலத்திற்குச் சென்றார். அப்பொழுது கார்காலம் ஆதலின் முல்லை மலர் பூத்து எங்கும் இயற்கை அன்னை களிநடம் புரிவாளாயினாள்.

இனிது பூத்து, தாழ்ந்த கிளைகளுடன் கூடி, வண்டுகள் தேனை யுண்டு உலவுகின்ற ஓர் அழகிய கொன்றை மரத்தின் அருகில் அணைந்தார். அக்கொன்றை மரம் பூங்கொத்துகளும் கனிகளும் கூடியிருப்பது அவருக்குச் சிவபெருமானை நினைவூட்டியது; தமது திருவுள்ளத்தில் காணும் கொன்றைச் சடையான்பால் வைத்துள்ள அன்பு வெள்ளத்தின் மடையைத் திறந்தார். அன்பு ஊறிப் பொங்கிய அமுத இசைக்குழலில் சிவபெருமானது பஞ்சாக் கரத்தை உள்ளுறையாக அமைத்து, எல்லா உயிர்களும் எலும்புங் கரையுமாறு வாசிக்கத் தொடங்கினார். இனிய குழலின் தனிவாயில் கனியமுத வாய்வைத்து ஏழிசையும், இசைநூல் இலக்கணமும் அமைய திருவைந்தெழுத்தைத் தன்னகத்தே கொண்ட குழல் இசையொலியை எங்கும் பரப்பினார். அந்த இன்னிசை கற்பகப் பூவிலிருந்து உண்டாகிய தேனும் தேவா மிர்தமும் கலந்து பாய்வது போல் எல்லா உயிர்களுள்ளும் புகுந்து நிரம்பியது. எடுத்தல், படுத்தல், மேல், கீழ், மத்திமம், ஏற்றம், இறக்கம் முதலிய பண்களுடன் கூடிய அந்த இசை மிக மிக இனிமையாகப் பரவி, எங்கும் சிவமணம் வீசச் செய்தது.

ஆனாய நாயனாருடைய குழலின் உள்ளுறையாகிய அஞ்செழுத்தின் இனிய நாதத்தைக் கேட்ட ஆனிரைகள் அறுகருந்தி அசை போடாமல் அருகு வந்து அயர்ந்து நின்றன; தாய் மடியில் பால் குடித்துக் கொண்டிருந்த இளங்கன்றுகள் பால் குடிப்பதை விட்டு மறந்து நின்றன; எருதுகளும், மான் முதலிய விலங்குகளும் மயிர்சிலிர்த்து வந்து அணைந்தன; ஆடுகின்ற மயிலினங்கள் ஆடலை விடுத்து அருகு வந்தன; பறவைகள் எல்லாம் உருகி நின்றன; ஏவல்புரி கோவலரும் தத்தம் தொழிலை மறந்து மயங்கி நின்றனர். நாகலோகத்திலிருந்த நாகர்கள் பில வழியே வந்து இன்புற்றனர்; மலைகளில் வாழும் அரமகளிர் வந்து மயங்கினர். விஞ்சையர், கின்னரர், தேவர் முதலியோர் உருகி விமானங்களின்மீது வந்து அணைந்தார்கள். கற்பகத் தருவின்கீழ் அமர்ந்து கிளிகளுக்கு அமுதூட்டிக் கொண்டிருந்த அமர மாதர்கள் அக்கிள்ளைகளுடன் கூந்தல் அலைய விமானமேறி வந்து இசையமுதைப் பருகி உருகினார்கள்; துன்புறுத்துவாரும் துன்புறுவாரும் ஒன்றுபட்டு நின்றனர்.

அரவங்கள் மயிலின்மீது விழுந்து புரள்கின்றன; சிங்கமும் யானையும் சார்ந்து வரும்; புல்வாய் என்னும் மான் புலியின் வாய்க்கு அருகில் எய்தும்; காற்று வேகமாக வீசவில்லை; மரங்களின் மலர்க்கிளைகள் அசைய வில்லை; மலையிலிருந்து வீழும் அருவிகளும் ஆறுகளும் ஒலித்து ஓடவில்லை; முகில் மழை பொழியாது நின்றது; ஏழுகடல்களும் அலைவீசாது அமைந்தன இவ்வண்ணம், குழல் வண்ணத்தினால் சராசரங்கள் யாவும் விண்ணுலகும், மண்ணுலகும் இசைமயமாகிப் பொறிபுலன் கரணங்கள் எல்லாம் ஒன்றுபட்டன. உருகி உருகி அன்பு பெருகி நின்றன. பொய்யன்புக்கெட்டாத பொன்னம்பலத் தாடும் ஐயன் திருச்செவியில் மெய்யன்பருடைய மென்மதுர இன்னிசை சேர்ந்தது.

ஆனாயர் குழலோசை கேட்டருளி யருட்கருணை
தானாய திருவுள்ளம் உடையதவ வல்லியுடன்
கானாதி காரணராங் கண்ணுதலார் விடையுகைத்து
வானாறு வந்தணைந்தார் மதிநாறுஞ் சடைதாழ.

அருட் கருணையாய திருவுள்ளமுடைய தவ வல்லியாகிய அம்பிகையுடன், கானம் முதலிய கலைகட்கெல்லாம் காரணராகிய கண்ணுதற் கடவுள் விடையின்மீது விண்மிசை தோன்றியருளினார். எல்லாத் திசைகளிலுஞ் சிவகணங்கள் தேவர்கட்கு முன்னே நெருங்கி வரும்பொழுது வேறு ஒலிகள் ஒன்றும் எழவில்லை. குழல் ஒலியில் ஐந்தெழுத்தினால் பரவும் இசையை விரும்பிய திருக்கூத்தர் திருத்தொண்டர் முன்னே நின்று அருள்புரிந்தார். செம்மை மனமுடைய பெரியோருடைய குழல் நாதத்தை எப்பொழுதும் கேட்க விரும்பிய எம்பெருமான் "இந் நின்ற நிலையே நம்பால் அணைவாய்" என்று கூறியருளினார். ஆனாயர் குழல்வாசித்த வண்ணமாகவே இறைவர் அருகிற் சேர்ந்தார். விண்ணவர் பூமழை பொழிந்தனர். முனிவர்கள் வேதவொலி இசைத்தனர். நாயனார் குழல் ஒலித்துக்கொண்டு தம்முடன் வர பொன்னம்பலம் புகுந்தருளினார்.

விளக்கம்

திருமங்கலம்

இது ஆனாய நாயனார் அவதரித்த திருத்தலம். லால்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து பூவாளூர் வழியே வடமேற்கில் மூன்றுகல் தொலைவில் உள்ளது. பரசுராமர் தாய்க் கொலை

செய்த பாவம் நீங்க இங்கு இறைவரை வழிபட்டு அருள்பெற்றார். அவருக்குப் பரசு என்ற படைக்கலமும் நல்கினார்; அதனால், இறைவர் திருநாமங்கள்: பரசுராமீசுரம் உடையார்; திருமழு வுடைய நாயனார்: சாமவேதீசுரர். நல்ல நீர்வளமும், நிலவளமும் உடையது. சேக்கிழாரடிகள் ஏழு கவிகளால் இந் நாட்டு வளனை மிக இனிமையாகப் பாராட்டி அருளினார்கள்.

> .... மேன்மழ நன்னாடாம்
> அங்கது மண்ணின் அருங்கல மாக அதற்கேயோர்
> மங்கல மானது மங்கல மாகிய வாழ்மூதூர்.

என்ற அருமைத் திருவாக்கினால் இதன் பெருமை விளங்குகின்றது.

ஆனாயர்

இவர் ஆயர் குலத்தில் அவதரித்தவர். ஆன்களை உடைய ஆயர் ஆதலின் "ஆனாயர்" என்னுந் திருநாமம் பெற்றார். காரணப் பெயர். இறைவனுக்குப் பஞ்சகவ்யந் தருவதும், திரு நீற்றுக்குச் சாணந்தருவதும் பசுக்களேயாதலின், பசுக்களை இனிது ஓம்பும் நற்குலம் ஆயர்குலம். அக்குலம் விளங்க இவர் ஞான தீபமாகத் தோன்றினார்.

இவர் திருநீற்றினிடம் பெரு விருப்புடையவர். திருநீற்றை நிறையப் பூசிக்கொண்டும், திருநீறு பூசுந் தொண்டரைக் கண்டு அன்பு செய்தும், அவர் உள்ளம் உவக்கத் தொழும்பு செய்து மகிழ்வார்.

பசுக்களுக்கு நல்ல புல்லை யருத்தி, நன்னீர் பருகுவித்து, நோயும், விலங்கினால் எய்தும் தீங்கும் வராவண்ணம் காத்து வந்தார். சிவமூர்த்திக்கு உபயோகமாகும், பால் முதலியன தரும் ஆவின் குலத்தைக் காப்பாற்றுதல் சிவப்பணியாகும்.

ஆனால், ஆன்குல மேய்ப்பவர் யாவரும் சிவப்பணி செய்தவ ராகார். உயிர்ப்பணி செய்தவரே யாவார். ஏன்? அரனார்க்கு என்று முறுகி வளர்ந்த சிவபத்தியுடையராய் இவர் புரிந்தார். மற்றையோர், பால் முதலியன பெற்று வாணிபஞ் செய்யும் கருத்தினராய்ப் பேணுகின்றனர் என அறிக.

ஆனாயர், பால், தயிர், நெய் முதலியன விற்று அதனால் வரும் பொருளைப் பேணவில்லையோ எனின், பேண வில்லை.

"பேயுடனாடும் பிரானடி யல்லது பேணாதார்"

குழலிசை

இசை. எல்லோரையும் இசைவிப்பது. எல்லா உயிர்களையும் இசைவிப்பது. இனிய இசையால் கல்லும் புல்லும் உருகும். சராசரங்கள் தழைக்கும்.

இசைக்கருவிகள் ஐந்து வகைப்படும். துளைக்கருவி, நரம்புக் கருவி, தோற்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என்பன. அதில் புல்லாங்குழல் துளைக்கருவியாகும். யாழ் நரம்புக்கருவி ஆகும். வீணை வேறு, யாழ் வேறு.

"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்"

- திருவெம்பாவை

யாழைவிடக் குழல் உயர்ந்தது. யாழ் செயற்கை; குழல் இயற்கை.

"குழலினிது யாழினிது என்பர்"

என்று திருவள்ளுவர் கூறுமாறு காண்க. குழலையே முதலில் வைத்துக் கூறிய அருமையை உன்னுக.

கானகத்தில் மூங்கில்கள் வளர்ந்து ஓங்கியிருக்கும்; அதில் சில சமயம் நெருப்பு உண்டாவதால் சில மூங்கில் குழாய்களில் தொளை உண்டாகும். அப்பொழுது காற்று வீசும். அதனால், அந்தக் குழல்களில் இயற்கையாகவே இனிய நாதம் உண்டாகும்.

இந்த இனிய வேய்ங்குழலை முதன் முதலாக ஊதி உயிர்கட்கு இன்பூட்டியவர் முருகவேள்.

"குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்"

- திருமுருகாற்றுப்படை

பின்னர், இதனை வாசித்துப் பசுக்களுக்கு மகிழ்ச்சியை விளைவித்தவர் கண்ணபிரான்.

குழல்

ஒத்த நிலத்தில் காற்று மயங்காதபடி இனிது வளர்ந்த மூங்கிலை ஒரு புருடாகாரமாய் வெட்டி அதனை நிழலிலே ஓராண்டு உலருமாறு செய்யவேண்டும். நாலு பக்கங்களின் காற்று மயங்கின் நாதம் இராது. இளமையாகவும், முதுமையாகவும் இன்றி, ஒரு புருடாயு வளர்ந்த மூங்கிலாக இருக்க வேண்டும்.

ஓராண்டு நிழலில் உலர்ந்த குழல், திருகுதல், பிளத்தல் முதலியன இன்றிச் செவ்வையாக இருப்பதை எடுத்து, அடிப்புறத்தில் ஓரங்குலம் விடுத்து, வாயு வழங்கும் தொளையிட வேண்டும். (வாய் வைத்து ஊதுந்தொளை) நுனியில் ஓரங்குலம் விட்டுத் தொளையிட்டு பின்னர் விரலிடையிட்டு ஆறு தொளை போடவேண்டும். இவற்றின் விரிவைச் சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையில் கண்டு தெளிக.

திரு ஐந்தெழுத்து

பிறவிப் பெரும் பிணிக்குச் சிறந்த மருந்து திரு ஐந்தெழுத்தே யாகும். அது வேத இருதயமாக, எல்லா மந்திரங்கட்கும் மூலமாக, மகா மநுவாக விளங்கும். இத் திருமந்திரத்தைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுதல் வேண்டும். அப்படி ஓதுவார் நோக்கும் திசைகளிற் கூடத் தீமைகள் எய்தா.

பஞ்சாக்ஷரத்தை இசையுடன் ஓதுதல் மிகவும் பயனுடைய தாம். வேய்ங்குழலில் அமைத்து ஓதி, தாமும் இன்புற்று, உலகிலுள்ள சராசரங்களை எல்லாம் இன்புற வைத்தார் ஆனாயர்.

எவ்வுயிரும்
என்பூடு கரைந்துருக்கும் இன்னிசைவேய்ங் கருவிகளில்"

வன்மை, மென்மை, சமன் என்ற மூவகையான ஒலிகளால் அமிர்தம் ஒழுகுவதுபோல் இவர் இனிய குழலை வாசித்தபோது சரம், அசரம் இரண்டும் உருகி இசை மயமாயின.

அந்த இசைக்கு உள்ளுறை அஞ்செழுத்தாக விளங்கிய படியால் உலகங்களெல்லாம் அதனைக் கேட்டு உய்வு பெற்றன. மண்ணும் விண்ணும் நிறைந்த அவ்விசை பொய்யன்புக்கு எட்டாத ஐயன் திருச்செவியிலும் அணுகியது.

ஆனந்தத் தாண்டவமியற்றும் ஐயரும் கேட்டு உவந்து, "இந் நின்ற நிலையே நம்பால் அணைவாய்" என்று அருளிச் செய்வார் எனின் இவருடைய இசையின் பெருமையை யாரே இயம்ப வல்லார்? எப்பொழுதும் செந்நின்ற மனப்பெரியார் திருக்குழல் வாசனையை உண்டாக்கி அழிவின்றி அரனார் அருகில் விளங்கும் பதம் பெற்றார். இவருடைய இசையின் இனிமை நாரதாதியர்க்கும் அமையப் பெறாதது.

மூர்த்தி நாயனார் புராணம்

"மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்"

பழமையான நாடு பாண்டி நாடு. நல்வழியில் வந்த செல்வ முடைய குடிகள் பலர் நிறைந்து வாழும் சிறப்புடையது. முத்தும் முத்தமிழுந் தந்து முதன்மை பெற்றது. செந்தமிழ்க்கழகமும், சந்தனச் சோலையும் விளங்கும் பொதியமலையிலிருந்து வீசும் தென்றல் காற்றினால் குளிர்வது.

எந்நாட்டினுஞ் சிறந்த பொன்னாடும் நாணப் பொலியும் அந்நாட்டின் தலைநகரம் மதுராபுரி. திருமகள் நீங்காது வாழும் அத்திருநகரில் முத்தமிழ்ச் சங்கம் ஓங்கி உயர்ந்திருந்தது.

அப்பொற்பதி வாழ்வணி கக்குலத் தான்ற தொன்மைச்
செப்பத்தகு சீர்க்குடி செய்தவஞ் செய்ய வந்தார்
எப்பற்றினை யும்அறுத் தேறுகைத் தேறு வார்தாள்
மெய்ப்பற் றெனப்பற்றி விடாத விருப்பின் மேலார்.

மூர்த்தியார் அம் மதுரையம்பதியில் திருஅவதாரஞ் செய்த வர். வணிகர்குலஞ் செய்த மாதவத்தின் பயனாகத் தோன்றியவர். அகப்பற்று புறப்பற்று என்று இருபற்றுக்களையும் விட்டுப், பற்றற்ற பரம்பொருளாகிய விடையூர் விமலனுடைய விரைமலர்ச் சேவடி களைப் பற்றி நின்றவர். சுற்றமுந் தொடர்பும் நீத்தவர். கேளுங் கிளையும் ஆளும் பரமனே என்று மூளும் அன்புடன் வாழும் முனிவர் அவர்.

சொக்கலிங்கப் பெருமான் திருமேனிக்கு அணியும் சந்தனக் காப்பு, நாடோறும் முட்டாது நடைபெற, அடியவர் உள்ளம் உவக்குமாறு அன்புடன் சந்தனம் அரைத்துத் தருவாராயினார்.

வடுகக் கருநாடு ஆளும் ஒரு மன்னன், வலிந்து நாடு கவர்ந்து ஆளும் அவாவுடையவனாய், நால்வகைப் படையுடன் தென்திசை நோக்கி வந்தான். கடல்போன்ற சேனைகளைப் பரப்பித், தமிழ் நாட்டையாளும் பாண்டியனை வென்று, பொழில்சூழ் எழில்மிக்க மதுரையம்பதியைக் கைப்பற்றி அரசு புரியலானான். செம்மை மனம் இல்லாத அம் மன்னன்,

சைவநெறி நின்று உய்யுநெறி யறியாது, சமண்சமயத்தைச் சார்ந்தான். தான் சார்ந்ததேயன்றித், தெய்வநலம் மிக்க சைவநலம் பேணும் திருத்தொண்டர்களையுந் துன்புறுத்தி வன்மைபுரிந்து வந்தான். அரனாரடியார்களை அச்சம் புரிந்து அரிய திருத் தொண்டுகளை மாற்றி இடர்புரிந்தான். கீர்த்தி மிக்க மூர்த்தி நாயனாரையும் இடர்மிகப் புரிந்தான். ஆனால், திடமிகவுடைய அவர் அரசனுடைய இடரைப் பொருள் செய்யாது தமது திருத்தொண்டினை முன்னையினும் பன்மடங்கு அன்புடன் செய்து வந்தார். சிவனடியார் அன்பின் வெள்ளத்தை அணை போட்டுத் தடுக்கவல்லாரும் உளரோ?

அந்தம்இல வாமிறை செய்யவும் அன்ப னார்தாம்
முந்தைம்முறை மைப்பணி முட்டலர் செய்து வந்தார்
தந்தம்பெரு மைக்கள வாகிய சார்பில் நிற்கும்
எந்தம்பெரு மக்களை யாவர் தடுக்க வல்லார்.

வடுகமன்னன் கொடுமைகள் பல புரிந்தும் மூர்த்திநாயனார் தமது திருப்பணியைச் செய்துவர, அம்மன்னன், சந்தனக்கட்டை கிடைக்கும் வழியையும் அடைத்தான்.

மூர்த்திநாயனார், முக்கட் பரம்பொருளைச் சிந்தித்து, “புன்மைச் செயல் புரிவதில் வல்ல சமணர்களுடன் பொழுது போக்கும் வன்மைக் கொடும் பாதகன் மாளவும், வாய்மை வேத நன்மைக்குரிய சைவநெறி நின்ற மன்னர் ஆளவும் வேண்டும், அந்நாள் எந்நாளோ?” என்று எண்ணி வருந்தினார்.

சந்தனக்கட்டை எங்கும் கிடைக்காவண்ணம் அப் பாதகன் தடுத்ததனால், பகல் முழுவதும் பெரிதும் முயற்சி செய்தும் கிடைக்கப் பெறாது சோர்ந்தார். பகற்பொழுது கழிந்தது. மாலை சோமசுந்தரக் கடவுளுடைய திருக்கோயிலை அடைந்தார். எம்பெருமானுடைய திருமேனிக்குப் பூசும் சந்தனக் கட்டைக்குத்தான் முட்டு வந்தது. சந்தனத்தைத் தேய்க்குங் கைக்கு முட்டு வரவில்லையே என்று எண்ணி, வட்டமான பாறையில், முழங்கை வைத்துத் தேய்த்தார். தோல் நரம்பு என்பு முதலியன கரைந்து தேய்ந்தன.

நட்டம் புரிவாரணி நற்றிரு மெய்ப்பூச் சின்று
முட்டும் பரிசாயினும் தேய்க்குங்கை முட்டா தென்று
வட்டந் திகழ்பாறை யின்வைத்து முழங்கை தேய்த்தார்
கட்டும் புறந்தோல் நரம்பென்பு கரைந்து தேய.

உதிரம் பெருக, கையெலும்புக்குள் மூளை சொரிய, அதைக் கண்டு கருணைக் கடலாகிய இறைவர் பொறுக்கவில்லை. உடனே அருள் திருவாக்கு, "ஐயனே! அன்பின் மிகுதியால் இது செய்யாதே. உன்பால் கொடுமை செய்தவன் வலிந்து கொண்ட நாடு முழுமையும் நீ கொண்டு, அநீதியை நீக்கி, நீதியை நிலைநிறுத்தி, நியதியாகத் திருப்பணி செய்து முடிவில் நமது சிவலோகம் வரக்கடவாய்" என்று அருளிச் செய்தது.

இத்திருவாக்கினை மூர்த்தி நாயனார் கேட்டு அஞ்சிக் கல்லில் கையைத் தேய்ப்பதை நிறுத்தினார். புண்ணாகிய தன்மை நீங்கிக் கை செழுமையுற்று விளங்கியது. திருமேனி ஒளிபெற்றது. அந்நாள் இரவில், தீங்குசெய்த வடுகக் கருநாட்டு மன்னன் உயிர் நீங்கினான். நல்லோர்கள் விரைந்து சிவலோகஞ் சேர்வதுபோல், அடியார்க்கு இடர்புரிந்த அப்பாதகன் தீவாய் நரகில் வீழ்ந்தான்; அவனது சுற்றம் முற்றும் வாடிப் புலர்ந்தனர். பொழுதும் புலர்ந்தது. அமைச்சர்கள் கூடி ஈமக்கடன்களைப் புரிந்தனர். மாண்டவனுக்கு மக்கள் இன்மையால், "இனி இம் மண்ணுலகை அறநெறி நிறுத்தி ஆள்வதற்கு மன்னன் இன்றியமையாமல் வேண்டும்" என்று சிந்தித்தனர்.

சொக்கேசப் பெருமானை அருச்சனை செய்து வழிபட்டுச், சிறந்த பட்டமணிந்த நெற்றியையுடைய யானையை, நறுந் துகிலினால் கண்ணைக் கட்டி "இந்த பூதலத்தைத் தோள்வலியால் தாங்கி அரசாட்சி புரிவதற்கு ஓர் ஏந்தலை ஏந்தி வருக" என்று கூறி விடுத்தனர்.

கண்கட்டிவிட்ட களியானை நெடுவீதிகளில் திரிந்து திருக்கோயில் முன் சென்றது. மூர்த்திநாயனார், "இறைவன் திருவருள் இதுவாயின் இதை ஏற்பேன்" என்று தளர்வு நீங்கிக் கோயில் புறத்து நின்றார். யானையரசு, உலகஞ் செய்த தவத்தால் மூர்த்திநாயனாரை வணங்கித் தும்பிக்கையால் எடுத்து முதுகின் மீது வைத்துக் கொண்டது. அதைக்கண்ட அமைச்சர்கள், அவர் அடிமலர் மீது வீழ்ந்து வணங்கி அளவற்ற மகிழ்ச்சியுற்றனர். சங்கங்கள் முழங்கின; தாரகையும் பேரிகையும் ஒலித்தன; வாழ்த்தொலி எங்கும் மிகுந்தது. நகரை வலஞ் செய்வித்து, சபா மண்டபஞ்சென்று, மூர்த்திநாயனாரை யானையினின்றும் இறக்கி மணித்தவிசில் ஏற்றினார்கள். வெண்கொற்றக் குடை சுழன்றது. மந்திரமோதி மறையவர் வேள்வித்தீ வளர்த்தனர். தங்கக்குடங்களில் நீர் நிரப்பி வைத்தனர். சிந்தையில் சிவமே பொருளென்று

தெளிவுற்ற மூர்த்தி நாயனார், "அமண் இருள் நீங்கி, சைவஒளி ஓங்குமாயின் இந்த அரசை ஏற்று ஆள்வேன்; அவ்வாறு அரசாட்சி செய்வேனாயின், திருநீறே அபிடேகமாகவும், உருத்திராக்கமே அணிகலமாகவும், சடைமுடியே மணிமுடியாகவும் இருத்தல் வேண்டும்" என்றார்.

அறிவின் சிகரங்களாக விளங்கும் அமைச்சர்கள் அவரைத் தொழுது, "தேவரீர் அருள் செய்தபடியே செய்தோம்" என்று சடங்குகளைச் செய்தனர். மங்கலவொலிகள் மல்கின. மூர்த்தி நாயனார் செங்கோல் தாங்கினார். திருக்கோயில் சென்று சோம சுந்தரக் கடவுளை வணங்கி நகரை வலஞ்செய்தார். மதிமந்திரிகள் அவர் குறிப்பின்வழி நின்றனர். அருகருடைய இடர் நீங்கியது. திருநீற்று நெறி ஓங்கியது. எங்கும் சைவம் தங்கியது. மூர்த்தி நாயனார் திருநீறு, கண்டிகை, சடைமுடி என்ற மும்மையால் உலகம் புரந்தார்.

மாதரை மனத்தாலும் தீண்டாது துறவொழுக்கம் பூண்ட அவர் புலன்களையும், காமாதியாறு அகப்பகைவரையும், புறப்பகைவரையும் வென்று, ஆக்ஞா சக்கரத்தை நடத்தி, மன்னுயிர்களைத் தன்னுயிர்போல் இனிது காத்து அரசு புரிந்தார். தமது திருத்தொண்டினையும் இடையறாது புரிந்து, நெடுநாள் அரசாட்சி செய்து வேதமுதலாம் நாதன் பதம் நண்ணி இன்புற்றார்.

விளக்கம்

பாண்டிநாடு

தமிழகத்தில் பாண்டிநாடு பழமையானது. "பாண்டிநாடே பழம்பதியாக" என்பர் மணிவாசகர். தென்னாடு என்றும், தமிழ் நாடு என்றும் பெயர் பெறும். "பூழியர்கோன் தென்னாடு முத்துடைத்து" என்ற திருவாக்கினாலும் அறிக. எந்நாட்டுக்கும் பொதுவாகவுடைய சிவபரம்பொருள் தென்னாட்டுக்குச் சிறப்பாக வுடையது.

"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி"

தென்றலும், தென்றமிழும் பிறந்த நாடு அதுவாயின் அதன் பெருமை ஆரே அளக்கற்பாலார்?

"நற்றுறை மாந்தர் போற்றும்
பார்மன்னு தொன்மைப் புகழ்பூண்டது பாண்டி நாடு"

என்ற தெய்வச் சேக்கிழார் திருவாக்கு எத்துணை இனிமை யாகத் தித்திக்கின்றது என்பதை உற்றுநோக்குக.

அந்த நாட்டின் அமுத மொழியாகிய தமிழைப் பற்றி அடிகளார் நமக்கு அறிவிக்க எண்ணி, மிகமிக விழுமிய செஞ் சொற்களால் எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்படி கூறுந் திறத்தை யுன்னுக.

"ஞாலம் அளந்த மேன்மைத்
தெய்வத் தமிழுந்தருஞ் செவ்வி மணஞ்செ யீரம்"

மதுரை

பாண்டிநாட்டின் தலைநகரம் மதுராபுரி. அகிலலோக அன்னை தடாதகைத் தாய் திருவவதாரஞ் செய்ததும், இறைவர் இருந்து அரசு புரிந்ததும், அறுபத்துநான்கு திருவிளையாடல் புரிந்ததும், சங்கம் இருந்து தமிழை வளம்படுத்தியதும், மதுரைமா நகரில் எனின் அதன் சிறப்பு இமயமலையினும் உயர்ந்தது அன்றோ?

குலசேகரபாண்டியன், சிவமூர்த்தியின் ஆணையின்படி, கடம்ப வனத்தில் முளைத்தெழுந்த சொக்கலிங்கத்தைக் கண்டு, காடெறிந்து திருநகரங் கண்டான். அப்போது சிவபெருமானது திருமுடியில் உள்ள பிறைச்சந்திரனது மதுவை(அமுதம்)த் தெளித்துத் தூய்மை செய்த காரணத்தால் மதுரை எனப் பெயர் பெற்றது.

பொன்மய மான சடைமதிக் கலையின் புத்தமு துகுத்தனர் அதுபோய்
சின்மய மான தம்மடி யடைந்தார்ச் சிவமய மாக்கிய செயல்போல்
தன்மய மாக்கி அந்நகர் முழுதுஞ் சாந்திசெய் ததுஅது மதுர
நன்மய மான தன்மையால் மதுரா நகரென வுரைத்தனர் நாமம்.

மூர்த்தியார்

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் துறவறநெறி நின்று வீடு பேறு பெற்றவர் இருவர்; அப்பரும் மூர்த்தியாரும் ஆவார்.

மூர்த்தியார் வணிககுலத்தில் வந்த மாதவஞானி. பற்று அற்ற பரம தவராஜ சீலர். பற்றற்றவர்க்கே பரமனது கருணை எளிதில் உண்டாகும்.

"வம்பனேன் தன்னை யாண்டமா மணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்"

"மற்றுப்பற் றெனக் கின்றிநின்திருப் பாதமே
மனம் பாவித்தேன்"

"அற்றது பற்றெனில் உற்றது வீடு"

சந்தனக்காப்பு

பரமகருணாநிதியாகிய சிவபெருமானுக்குச் செய்யுந் திருத் தொண்டுகள் பலவற்றுள் சந்தனக்காப்பு சிறந்தது. அது திருமேனி யில் பொருந்தி, அத் திருமேனியைக் குளிர்விக்குங் காரணமாக உலகில் உள்ள எல்லா உயிர்களையும் குளிர்விப்பது.

கஸ்தூரி, கோரோஜனம், குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் முதலிய நறுமணப் பொருள்களைக் கூட்டிச் சந்தனக் காப்பு இறைவருக்கு ஒருமுறை செய்தவர் தேவ வருடத்தில் கோடி வருடம் சிவலோகத்தில் இன்புற்று இருப்பர்.

சுகந்த கந்தஞ் சுலவிய லேபனம்
உகந்த லிங்கத் தொருதினஞ் சாத்தினோர்
இகந்து பாவம் இமையவர் கோடியாண்
டகந்தெ ஷிந்தங் கரன்பதி நண்ணுவார்.

- *சிவபுண்ணியத் தெளிவு.*

மூர்த்திநாயனார் இத்திருத் தொண்டினை இடையறாது செய்து சிவபதம் பெற்றார்.

திருத்தொண்டிற்குரிய சாதனங்கள் நிரம்பக் கிடைக்கும்போது அதைச் செய்வது எளிது. கிடையாதபோது அரிது முயன்று தேடிச் செய்வதே அன்பின் திறம். ஐப்பசி மாதம் அடைமழையில் ஆற்றோரத்தில் தண்ணீர்ப் பந்தல் வைப்பதில் என்ன அருமை உள்ளது? கோடைக்காலத்தில் தண்ணீர் கிடைக்காத இடத்தில் தண்ணீர்ப் பந்தர் வைப்பதே சாலவும் சிறந்த புண்ணியமாகும். தான் மன்னவராகி நின்றபோதும் இத் திருத்தொண்டு புரிந்தார்.

மண்ணாசை கொண்ட வடுகக் கருநாட்டு மன்னன், பாண்டி யனை வென்று மதுரையைக் கைப்பற்றிக், கொடுங்கோன்மை யுடன், சமண் சமயஞ் சார்ந்து, சைவர்களையும், சைவ சமயத் திருநெறிகளையும் மாற்றி இடர் பல செய்தான். அவன் இவருடைய சந்தனக் காப்புக்குச் சந்தனக்கட்டை எங்குங்

கிடையாத வண்ணந் தடுத்தான். அப்பெரிய இடையூற்றுக்கு இடையில் இவர் தளராது திருத்தொண்டினை விடாது புரிந்தார். மன்னன் கொடுமையால் சந்தனக்கட்டை பகல் முழுவதும் தேடிக் கிடைக்காது ஒழிய, மாலை கோயிலில் சென்று, சந்தனத்தைத் தேய்க்குங் கைக்குத் தடையில்லையென்று கல்லில் எலும்பு தேய்கின்றவரை கையைத் தேய்த்தார். என்னே இவருடைய அன்பின் திறம்! உறுதியின் இறுதி; அறுதியில்லாத ஊக்கம். அந்த அன்பின் முதிர்ச்சியில் இறைவனுடைய கருணை வெளிப் பட்டது.

அரனடியார்க்கு இடர்செய்தோர் அதிவிரையில் அழிவர்

சமண்சமயஞ் சார்ந்த மன்னன் நடுநிலை தவறினான். அவரவர் சமயத்துள் நின்று அவரவர் தத்தங் கடைமையைச் செய்யச் செய்வதே மன்னனுடைய நீதிமுறை. அதைக் கைவிட்ட கண்டகன் பல அடியார்க்கு இடர்புரிந்தான். சிறந்த அடியாராகிய மூர்த்தி யாருக்கும் பேரிடர் விளைத்தான். "இப்பாதகன் மாள இந்நாடு சைவநெறிக்குரிய மன்னரைச் சார்வது என்றோ?" என்று திருவுளம் பற்றினார்.

அப்படி எண்ணுவது சைவநெறியின் கருணைக்கு மாறு படாதோ? எனின் மாறுபடாது. உடம்பில் உதிரப்பரு வந்தபோது, அதை அறுத்தெறிதல் கருணைக்கு மாறுபட்ட செயல் ஆகாது.

அடியார் திருவுளத்தைக் கலங்கச் செய்ததனால் அம்மன்னன் இரவே மாண்டு மீளா நரகிற்கு ஆளாயினான்.

ஈச னடியார் இதயங் கலங்கிடத்
தேசமு நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமு மாமன் பீடமும்
நாசம தாகுமே நம்நந்தி யாணையே. - *திருமந்திரம்*

அடியார்ம னஞ்சலிக்க எவராகி லும்பழிக்க
அபராதம் வந்து கெட்ட பிணிமூடி
அனைவோரும் வந்துசிச்சி எனநால்வ ரும்பழிக்க
அனலோட மூன்று செத்து விடுமாபோல்
- *திருப்புகழ்*

ஆதலின், அரனாரடியார்க்கு மனத்தாலும் வாக்காலும் காயத் தாலும் என்றும் ஒரு சிறிதும் இடர்புரியாது, நன்மையே புரிந்து உலகம் உய்வு பெறுவதாக.

உவமைச்சுவை

சிறந்த கவியரசர்கள் உவமையிலும் ஓர் உண்மையை விளக்கு வார்கள். காளிதாசர், திருவள்ளுவர் போன்ற சிலருக்கே அது சாத்தியம்.

சிற்றினஞ் சேராமை என்ற அதிகாரத்திலே, "நல்லினத்துடன் நட்டார்க்கு நன்றாகாத வினை யாதொன்றும் இல்லை" என்று கூறவந்த தெய்வத் திருவள்ளுவர், "மனம் தூயார்க்கு நன்மக்கள் பிறப்பதுபோல் இனம் தூயார்க்கு இல்லை நன்றாகா வினை" என்று அருளிச் செய்தார்.

மனந்தூயார்க் கெச்சநன் றாகும் இனந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை.

தெய்வச் சேக்கிழார், "வடுகக் கருநாடன் விரைந்து வெந்தழல் நரகிடை வீழ்ந்தான்" என்றார். அது எதுபோல்? "அடியார்க்கு நன்று செய்த நல்லோர் விரைந்து சிவலோகஞ் சேர்வதுபோல் என்று அறிக" என்று கூறும் உவமைச்சுவையின் அழகுதான் என்னே?

இவ்வா றுலகத்தி னிறப்ப உயர்ந்த நல்லோர்
மெய்வா ழுலகத்து விரைந்தணை வார்க ளேபோல்
அவ்வா றரனார் அடியாரை அலைத்த தீயோன்
வெவ்வாய் நிரயத் திடைவீழ விரைந்து வீந்தான்.

மன்னனையின்றி மன்னுயிர் வாழமாட்டா. "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்" என்பது புறநானூறு. "மன்னன் இல்லாத உலகம் உயிரில்லாத உடம்புக்கு நிகர்" என்ற அடிகள் கருத்தை உன்னி உளம் மகிழ்க.

மன்னரை யின்றி வைகும் மண்ணுல கெண்ணுங் காலை
இன்னுயி ரின்றி வாழும் யாக்கையை யொக்கும்.

மூர்த்தியார் திருவுள்ளம்

மூர்த்திநாயனார் இவ் வரசபோகத்தை விரும்பினாரில்லை. "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார் ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்" அரனடியார்கள். ஈசன் பணியின்றித் தேசமாளும் திருவை வெறுத்தவர்.

கண்டெந்தை யென்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனேல்
அண்டம் பெறினும் அதுவேண்டேன் - துண்டஞ்சேர்

விண்ணாளுந் திங்களாய் மீக்குலகம் ஏழினுக்கும்
கண்ணாளா ஈதென் கருத்து.

- காரைக்காலம்மையார்

சமண இருள் நீங்கிச் சைவவொளி ஓங்கி உலகம் நன்னெறி பெற்று உய்யும்பொருட்டு அரசபதவியைச் சிவன் ஆணையினால் ஏற்றுக் கொண்டார்.

முந்தைச் செயலாம் அமண்போய் முதற்சைவம் ஓங்கில்
இந்தப் புவிதாங்கி இவ்வின்னர சாள்வன் என்றார்.

அரசருடைய ஆடம்பரமான ஆடை அணிகலங்கள் திருமுடி முதலியவற்றை விரும்பி அணியாமல், திருநீறும் கண்டிகையுஞ் சடைமுடியும் உடையவராய் விளங்கித் துறவொழுக்கத்துடன், மாலயனாதி வானவருக்குந் தள்ள முடியாத மாதரவாவை மனத்தினாலும் விலக்கி மகிதலம் முழுவதும் தெய்வத் தமிழும், சைவத்திறமும் ஓங்க அரசு புரிந்தார்.

முருக நாயனார் புராணம்

"முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்"

"மண்ணாவதும் சோழ மண்டலமே" என்ற வாக்கின்படி சிறந்த வளமைமிக்க நாடு சோழநாடு. பொன்கொழிக்குங் காவிரி நதி பாய்வதனால் எந்நாளும் நீர்மல்குஞ் சீர்மல்கியது. அத்திருநாட்டில் திருப்பூம்புகலூர் என்னும் திருத்தலம் மிகவும் உயர்வுடையது. கங்கையை முடித்த கண்ணுதற் கடவுளும் விரும்பி எழுந்தருளிய தலம் மலர்ச்சோலைகளும் அழகிய வாவிகளும் சூழப்பெற்றது.

புகழ்மிக்க அத் திருப்பதியில் வாழும் சிவனடியார்கள் நிரம்பவும் தங்கள் உள்ளம்போல் தூய்மையுடைய திருவெண் ணீற்றை அணிந்திருப்பார்கள். அத் திருநீற்றின் திருந்தொளியால் இரவில் இருள் நீங்கியதாயிற்று. தேனைப் பருகும் கருவண்டுகளும் களங்கமின்றி விளங்கும். இசையில் வல்ல வண்டுகள் இனிய ஒலியுடன் அருகில் அசைவதால், அந் நாதத்தைக் கேட்டு அரும்புகள் பூத்துப் புதிய தேனைப் பொழிகின்றன. குளிர்ந்த சோலைகளில் நாகணவாய்ப் பறவைகள் வாய்மலர்ந்து தேவாரத் திருப்பதிகங்களாகிய செழுந்தேனைப் பொழிகின்றன. வண்டு களின் பாடலைக் கேட்டுத் தாமரைகள் தேன் துளிக்கின்றன. ஓதுவார்களின் தேவாரப் பாடலைக் கேட்டுத் தொண்டர்களின் முகமலரில் ஆனந்தக் கண்ணீர் துளிக்கின்றது.

இத்தகைய பெருமையும் அருமையும் உடைய திருப்புகலூரில் மறையோர் குலத்தில் அவதாரஞ் செய்தவர் முருகநாயனார். குறைதலின்றி நிறைந்த அன்பினால் உள்ளம் உருகிச் சிவபெரு மானை நினைக்குந் திருவுடையவர்; ஞானவரம்பாக நின்றவர்.

அடைமேல் அலவன் துயிலுணர அலர்செங் கமல வயற்கயற்கண்
மடைமே லுகளுந் திருப்புகலூர் மன்னி வாழுந் தன்மையராய்
விடைமேல் வருவார்க் காளான மெய்ம்மைத் தவத்தால் அவர்கற்றைச்
சடைமேல் அணியத் திருப்பள்ளித் தாமம் பறித்துச் சாத்துவார்.

பண்டைத் தவத்தின் பயனாகத் திருப்பள்ளித் தாமம் பறித்து நியதியாக இறைவருக்குச் சாத்தும் பணியை மேற்கொண்டார்.

பொழுது புலர ஐந்து நாழிகைக்குமுன் எழுவார். நீராடி திரு வெண்ணீறு புனைந்து திருநந்தவனஞ் செல்வார். மலர்கின்ற பருவத்தில் உள்ள மலர்களையெல்லாம் பறித்துத், தனித்தனியே கூடைகளில் நிரப்புவார். மந்தாரம், கொன்றை, சண்பகம் முதலிய கோட்டுப் பூக்கள்; நந்தியாவட்டம் அலரி, வெள்ளெருக்கு, கரந்தை, தும்பை முதலிய நிலப் பூக்கள்; மல்லிகை, முல்லை, சம்பங்கி, சாதி முதலிய கொடிப்பூக்கள்; தாமரை நீலோற்பலம், செங்கழுநீர் முதலிய நீர்ப்பூக்கள் ஆகிய நான்கு வகையான மலர்களையும் இனிது பறிப்பார்.

இவ்வாறு, அன்புடன் நெறிதவறாது எடுத்த திருமலர்களைக் கொண்டுபோய், தூய்மையான தனியிடத்தில் வைத்துக் கொள்வார். கோக்குங் கோவை; சுருக்கிக் கட்டும் இண்டை; இணைத்துக் கட்டும் மாலை; தண்டிற்கட்டும் கண்ணி; பிணைத்துக்கட்டும் பிணையல்; தொடுத்துக் கட்டும் தொடையல் என்று மலர்களை ஆறுவகையாகச் செய்து திருமாலைகளை அமைப்பார். ஆறுகாலங்களிலும், சுமந்துகொண்டு சென்று வர்த்தமானீச்சுரம் என்னும் திருக்கோயிலுள் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்குச் சாத்துவார்; அர்ச்சனை புரிவார். தேவாரத் திருப்பதிகத்தின் மணியான திரு ஐந்தெழுத்தை, மலர்களை எடுக்கும்பொழுதும், தொடுக்கும்பொழுதும் ஒழியாது உச்சரிப்பார். மாலுமயனுங் காணாத மணிகண்டப் பெருமானை நாடோறும் விதிப்படி பூசித்து நேசித்து வந்தார். இடையறாது பஞ்சாட்சர ஜெபம் புரிந்தார். திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்புகலூருக்கு எழுந்தருளினார். முற்பிறப்பிற் புரிந்த தவமும் துணை புரிய அவரை முருகநாயனார் வரவேற்றுத், தமது திருமடத்தில் தங்க வைத்து, அடியார் குழாங்களுடன் அமுது செய்வித்து மகிழ்ந்தார். சண்பைமேவுந் திருஞானசம்பந்தர் இவரை இனிய நண்பராகக் கொண்டார். இவ்வாறு, இடையறாது திருமலர்த் தொண்டு புரிந்து, திருஞான சம்பந்தப் பிள்ளையாரது திருமணத்திற்குச் சென்று அங்கு எழுந்த சிவசோதியில் கலந்து சிவானந்தப் பெருவாழ்வைப் பெற்றார்.

விளக்கம்

திருப்புகலூர்

மூவர் தேவாரம் பெற்றது. அப்பர் சுவாமிகள் முத்தி பெற்ற திருத்தலம். சுந்தரமூர்த்தி நாயனாருக்குச் செங்கல்லைப்

பொன்னாக்கித் தந்த அருமைத் தலம். அப்பர், சம்பந்தர், திரு நீலநக்கர், சிறுத் தொண்டர் முதலிய பற்பல திருத்தொண்டர்கள் முருகநாயனார் திருமடத்தில் தங்கியிருந்தமையால் இத்தலம் மிகவும் புனிதமானது. திருக்கோயிலுள் முருகநாயனார் வழிபட்ட சிவமூர்த்தி வர்த்த மானீச்சுரர்; தனிக்கோயில்.

திருமலர்த் தொண்டு :-

இறை வழிபாட்டிற்கு இன்றியமையாதது பூவும் நீருமே.

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணலும் அதுகண் டருள்செய்யா நிற்கும்.

சிறப்புடைப் பொருளை முந்துறக்கிளத்தல் என்ற சூத்திரப்படி பூவை முதலில் ஓதினார். அதனால், பூக்கொண்டு வழிபடுதல் சாலச் சிறந்தது.

"பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்"
"கடிமாமலர் தூவிநின்று கைகாள் கூப்பித் தொழீர்" . *- அப்பர்*

சச்சிதானந்த மயமானது மலர்: நிறம் - சத்து, வடிவு - சித்து, மணம் - ஆனந்தம். சத்து, சித்து, ஆனந்தம் இந்த மூன்றையும் உடையது மலர். பூவினிற் கந்தம் பொருந்தியவாறுபோல் சிவனுக்குள்ளே சிவமணம் கமழவேண்டும் என்ற குறிப்பினால் மலரை இட்டு இறைவனை ஆன்றோர் வழிபட்டனர்.

"உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்" *- அப்பர்*

"பெரியோனே சிறியேனை யாட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர் தூவேன்" *- மணிவாசகர்*

மலர்களை வகை வகையாக எடுத்து எழில்பெற மாலை களாகத் தொடுத்து எம்பிரானுக்குச் சாத்துவது மிகவும் சிறந்த திருப்பணி.

"பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்து பாடேன்" *- அப்பர்*

"மாமலர்கள் கொண்டு மாலைகள்பு னைந்து
மாபதம ணிந்து பணியேனே"

"உலைவற விருப்பாகீ நீள்காவின் வாசமலர்
வகைவகை யெடுத்தேதொ டாமாலி காபரணம்
உனதடியி னிற்சூட வேநாடு மாதவர்கள்"
- அருணகிரியார்

சிறந்த போகபாக்கியத்தில் வாழ்பவரைக்கண்டு, "நல்ல பூவெடுத்துப் பூசைசெய்தவர்" என்று உலகங் கூறுகின்றது. ஆதலின், நன்மலர் தொடுத்துப் புனைந்தவர் அழியாத சிவகதி பெறுவர்.

"துளக்கினன் மலர்தொ டுக்கில் தூயவிண் ணேற லாகும்"

- அப்பர்

மலர்த்தொண்டு புரியும் விதி :-

கதிரவன் உதிக்குமுன் எழுந்து, நீரில் முழுகித், தூய ஆடை யுடுத்துச், சந்தியாவந்தனஞ் செய்து, திருப்பூங்கூடையை எடுத்துக் கொண்டு திருநந்தனவனஞ் செல்லவேண்டும். இறைவனைச் சிந்தித்துக் கொண்டே மலர்களையும் இலைகளையும் பறித்துக் கூடையில் நிரப்பவேண்டும். பூங்கூடையை நாபிக்குக் கீழே தொங்க விடாமல் தண்டின் நுனியில் மாட்டி, அல்லது கரத்தால் தூக்கிப் பிடித்துக்கொண்டு, பூமாலை தொடுக்கும் புனிதமான இடத்தில் வைத்துப், பஞ்சாக்கரத்தைச் செபித்த வண்ணம் மௌனமாக இருந்து பூமாலை தொடுத்து இறைவனுக்குப் புனைவிக்க வேண்டும்.

திருநந்தனவனத்தில் மனஞ்சிறிது வேறுபட்டதனால் ஆலால சுந்தரர் மண்ணுலகில் வந்து பிறந்ததை உன்னுக. அநாசாரமுள்ள வன், அசைவன், ஆசௌசமுடையவன், நோயாளன் முதலியோர் கொணர்ந்த பூ பூசைக்கு ஆகாது. எடுத்து வைத்து அலர்ந்தது, பழமையானது, உதிர்ந்தது, காற்றில் அடிபட்டது, ஆடையிலும், கையிலும், எருக்கிலையிலும், ஆமணக்கு இலையிலும் எடுத்தது, புழுக்கடி, சிலந்திநூல், மயிர், எச்சம் இவற்றுடன் கூடியது, நீராடாமல் எடுத்தது, மயானத்தில் மலர்ந்தது, அசுத்தபூமியில் உண்டாகியது, இரவில் எடுத்தது ஆகிய இந்தப் பூக்களும் சிவமூர்த்திக்கு ஆகாது.

முருகநாயனார் பெருமை

உத்தமோத்தமமான திருப்பூமாலைத் திருத்தொண்டினை என்றும் குன்றாத அன்புடன் முருகநாயனார் புரிந்து வந்தார். அதனால், சிவஞானப் பாலுண்ட திருஞானசம்பந்தருக்குத் தோழ ராகிய பெரும்பேறு பெற்றார்.

அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

என்ற திருக்குறளுக்கு இலக்கியமாயினார். "யான்மகிழ்ந்து துதியங் கழற் சண்பைநாதற்குத் தோழன், வன்தொண்டனம்பொன், அதிகம் பெறும் புகலூர் முருகன் எனும் அந்தணனே" என்று திருத்தொண்டத் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பிகள் துதிக்கின்றனர். அன்றியும் உமையம்மையார் திருமுலைப் பாலுண்ட திருஞானவாக்கால், பாலறாவாயர் இவரைச் சிறப்பித்துப் பாடும் பெரும் பேறும், அவருடைய திருமணத்தில் சிவசோதியில் கலந்து இன்புறும் அரும் பேறும் பெற்றார்.

தொண்டர் தண்கய மூழ்கித் துணையலும் சாந்தமும் புகையும்
கொண்டு கொண்டடி பரவிக் குறிப்பறி முருகன்செய் கோலம்
கண்டு கண்டுகண் குளிரக் களிபரந் தொளிமல்கு கள்ளார்
வண்டு பண்செயும் புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே.

ஈசன் ஏறமர் கடவுள் இன்னமு தெந்தையெம் பெருமான்
பூசு மாசில்வெண் ணீற்றர் பொலிவுடைப் பூம்புக லூரில்
மூசு வண்டறை கொன்றை முருகன்முப் போதும்செய் முடிமேல்
வாச மாமல ருடையார் வர்த்தமா னீச்சரத் தாரே.

❀ ❀ ❀

உருத்திரபசுபதி நாயனார் புராணம்

"முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்"

காவிரிநாடாகிய சோழ நன்னாட்டில், நற்குலமும் நற்குடிப் பிறப்பும் உடைய பெருமக்கள் குழுமிவாழும் விழுமிய சிறப்புடைய தலம் திருத்தலையூர். அத்தலத்தில் மறையவர் வளர்க்கும் சிவவேள்வியின் பயனாக வானம் நன்கு பொழிந்தது. நறுமலர்ச் சோலைகள் தேன்பொழிந்தன. அந்நகரமக்கள் தருமமும் நீதியும் சால்பும் உடையராய் வாழ்ந்தனர். தவவொளியும் சிவ மணமும் ஓங்கின.

அருளுடைமையும் பொருளுடைமையும் மிக்க அப்பதியில், ஒப்பில்லாத வேதியர் பலர் வாழ்ந்தனர். அம்மறைக்குலம் புரிந்த மாதவத்தினால் பசுபதி நாயனார் அவதரித்தவர். அவர் இருவர் அறியா ஒருவருக்கு அடிமைத்திறம் பூண்டவர். வேதத்திற்குக் கண்மலர் போன்ற திரு உருத்திர மந்திரத்தினைத் தூய அன்புடன் செபிக்கும் நியமத்தை மேற்கொண்டவர்.

இனிய பறவைகளும் வண்டுகளும் இருந்து இன்னொலி செய்யும் தாமரைப் பொய்கையில், கழுத்தளவு தண்ணீரில் நின்று, இருகரங்களையும் சிரத்திடைக் கூப்பி, உருகிய சிந்தையுடன் உருத்திர மந்திரத்தைச் செபித்து வருவாராயினார். காலை தொடங்கி உச்சி வரையும், மாலையிலும் மிகுந்த உறுதியுடன் நியதியாகப் பயின்றார். அதனால், உருத்திர பசுபதி என்ற திருப் பெயரை எய்தினார்.

அருமறைப் பயனாகிய உருத்திர மதனை
வருமுறைப் பெரும்பகலு மெல்லியும் வழுவாமே
திருமலர்ப் பொகுட்டிருந்தவ னனையவர் சிலநாள்
ஒருமையுய்த் திடஉமை யிடமகிழ்ந் தவர்உவந்தார்.

இவ்வாறு, பசுபதிநாயனார் முறையாகச் சிலநாள் ஆரா அன்புடன் செபிக்க, மறை புகழும் இறைவர் திருவுள்ளம் உவந்து, திருவருள் புரிந்தார். தவநெறி நின்ற உருத்திரபசுபதியார் சிவபுரி சேர்ந்து இன்புற்றார்.

விளக்கம்

ஸ்ரீ ருத்திரம்

வேதம் விழுமியது; வித் - அறிவு. வேதம் அறிவுநூல் எனப்படும். "அறிவுநூல் கல்லாமூடர்" என்பார் அருணகிரிநாதர். அவ்வேதம் நான்கு எனப்படும். அவற்றுள் நான்காவது அதர்வணம் மற்றைய மூன்றின் திரட்டு. ஆதலின், இருக்கு, யசுர், சாமம் என்னும் மூன்றுமே சிறந்தவை. அதனால், வேதம் 'த்ரயீ' என்று பேசப் பெறுகின்றது.

வேதம் மூன்றனுள் இடையில் உள்ளது யஜுர்வேதம். அது ஏழு காண்டங்களை உடையது. அதன் இடையில் உள்ள காண்டத்துள் பதினோரு அநுவாகங்களை உடையது திருவுருத்திரம். இதன் இடையில் பஞ்சாக்கரமும், அதன் இடையில் சிகாரமும் விளங்குகின்றது. வேத இதயம் சிவபஞ்சாக்கரமாகும். வேதத்தின் கண் திருவுருத்திரம். கண்மணி திரு ஐந்தெழுத்து என்ப.

இதனால், தெய்வத்தன்மை பூண்ட சேக்கிழாரடிகள், "அருமறைப்பயனாகிய உருத்திரம்" என்று அருளிச் செய்தார்.

இறைவன் எல்லாமாய், எங்குமாய் இருந்து அருள் புரிகின்றனன் என்ற உண்மையை உணர்த்துவது, உருத்திர மந்திரம் என்க.

ருத்திரன் என்ற சொல் 'துன்பத்தினின்றும் விடுவிப்பவர்' என்ற பொருளைத் தருகின்றது.

ருதம் த்ராவயதி இதிருத்ர :
யாதேருத்ர சிவாத நூரகோ ராபாபகாசிநீ; - ஸ்ரீருத்ரம்

"மங்கல வடிவுடன் பாவமில்லாதவரிடம் பிரகாசிப்பவர்"

இன்னலங் கடலுட் பட்டோர் யாரையு மெடுக்கும் நீரால்
உன்னரும் பரம மூர்த்தி உருத்திரன் எனும்பேர் பெற்றான்
அன்னவன் தரவந் தோர்க்கும் அடியடைந் தோர்க்கும் அன்னான்
தன்னுரு வெய்தி னோர்க்கும் சார்ந்ததால் அவன்த னிப்பேர்.

- கந்தபுராணம்

இத்தகைய சிறந்த உருத்திர மந்திரத்தைக் குழைந்த உள்ளத்துடன் நீரிடை நின்று, கூப்பிய கையும் குவிந்த மனமும் உடையராய் செபித்தலினால் இவர் சிவபதம் எய்தினார்.

கவிநயம்

நிரைநெ டுங்கய நீரிடை நெருப்பெழுந் தனைய
விரைநெ கிழ்ந்தசெங் கமலமென் பொய்கையின் மேவி.

பொய்கை மனிதரால் உண்டாகாதது; இயற்கையாகவே உண்டாகிய நீர்நிலை. அப்பொய்கையில் சிவந்த தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்றன. அக்காட்சி நீரில் நெருப்பெழுந்ததுபோல் விளங்குகின்றது; என்று அழகாக இயற்கையை வியந்து ஓதுந்திறம் மிகவும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது.

இனி, சிவந்த வடிவுடைய நாயனார் தண்ணீரில் நிற்பதையும் அது குறிக்கின்றது; அவருடைய திருமேனி நெருப்பு போலவும், அவருடைய சிரத்தில் உள்ள சிகை புகைபோலவும் காட்சி தருகின்றன என்ற நயத்தையும் சிந்திக்க.

"ஒருமை யுய்த்திட உமையிடம் மகிழ்ந்தவர் உவந்தார்"

இந்தச் சொற்றொடர் மிகவும் இனிமையும் பெருமையும் உடையது. இந்த ஒருமைதான் அருமையைத் தருவது. இருமையும் தருவது.

"பிரமாபுர மேவிய பெம்மானிவன் றன்னை
ஒருநெறி யமனம் வைத்துணர் ஞானசம் பந்தன்"

- தேவாரம்

"ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்" - இராமலிங்கர்

திருநாளைப்போவார் புராணம்

''செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்''

சோழவள நாட்டின் உட்பிரிவுகளுள் ஒன்று மேற்கானாடு. பொன்னையும் நன்மணிகளையும் கொள்ளிடநதியின் அலைகள் தர தாமரைத் தடக்கை நீட்டி வாங்கும் வயல்களுடன் கூடிய பழமையான வளம்பதி ஆதனூர் என்பது. மேற்கானாட்டில் கொள்ளிடக் கரையில் திருநீற்றின் ஒளிவிளங்கத் திகழ்வது அத் திருப்பதி. அவ்வூரைச் சுற்றி வானளாவிய இருண்ட சோலைகள்; பூமரங்களில் தேன் வண்டுகள் இனிது பண்ணிசை பாட தேன் மழையோ வான்மழையோ ஒழியாது பொழியும். தென்னை பழுத்து உதிரும்; பலாப்பழங்கள் முதிர்ந்து வெடித்து சாறு ஒழுகும்.

வயல்வளமும் செயல்படும் தோட்ட நிலவளமும் பெருக, திருமகள் வாழும் அவ்வாதனூரில், மேகங்கள் தவழும் மாடங்கள் நிறைந்து மக்கள் நெருங்கி வாழ்ந்தனர். இத்தகைய ஆதனூருக்கு அருகில் ஒரு புலைப்பாடி. வயல்கள் சூழ்ந்துள்ள அதில் உழவர் களாகிய பறையர்கள் நெருங்கி வாழ்ந்தனர். அவர்கள் வாழ்கின்ற குடிசைகள் யாவும் பழமையான கூரைவீடுகள்; அக்கூரையாலாய குடில்களின்மீது சுரைக்கொடி படர்ந்திருக்கும். ஒவ்வொரு குடிசைக்கும் முன் கோழிக்குஞ்சுகள் தாய்க்கோழியுடன் சுழன்று சுழன்று உலாவும். இரும்புக் காப்புக்களை அணிந்த கரிய சிறுவர்கள் நாய்க்குட்டிகளை எடுத்துக்கொண்டு ஓடுவர். அக்குட்டிகளின் சத்தத்தை அவர்கள் இடையில் அணிந்துள்ள இரும்பு மணிகளின் சத்தம் அடக்கும். மருதமர நிழலில் தோல் விரிப்பின்மீது குழந்தைகள் தூங்கும். வஞ்சிமர நிழலில் முட்டைகளைக் கோழி அடை காக்கும் பொருட்டு ஒடுங்குதற்கு இடமாகப் பெரிய பானைகளைப் புதைத்திருப்பர். பறை வாத்தியங்களை மாமரங்களில் தொங்க விட்டிருப்பர். தென்னைமரங்களின் அடிப்பொந்துகளில் நாய்க்குட்டிகள் தங்கியிருக்கும். வைகறை யாமத்தில் சேவல்கள் கூவும். காஞ்சிமர நிழலில் பறைச்சியர் இனிது பாடிக்கொண்டே நெல் குற்றுவர். நெற்கதிர்களைக் கூந்தலில் முடித்த அப் புலைமகளிர் கள்ளுண்டு ஆடுவர்; அதற்கு ஏற்ப புலையர் பறை கொட்டுவர்.

இத்தகைய புலைப்பாடியில் சிவபெருமான் திருவடியில் நீங்காத அன்புடன் நந்தனார் என்பவர் இருந்தார். அவர் ஊர்த் தோட்டிமைத் தொழில் புரிந்து அதனால் தனக்கு விடுத்த மானியத்தினால் வாழ்ந்தார்.

பிறந்துணர்வு தொடங்கியபின்
  பிறைக்கண்ணிப் பெருந்தகைபால்
சிறந்தபெருங் காதலினால்
  செம்மைபுரி சிந்தையராய்
மறந்தும்அயல் நினைவின்றி
  வருபிறப்பின் வழிவந்த
அறம்புரிகொள் கையராயே
  அடித்தொண்டின் நெறிநின்றார்.

நந்தனார் உணர்வு தோன்றிய நாள்தொட்டுப் பிறைமதி அணிந்த பெருமான்பால் சிறந்த பெருங்காதலுடன் செம்மையை விரும்பும் சிந்தையராயும், மறந்தும் வேறு நினைவு இல்லாமல், தாம் பிறந்த மரபுக்கு ஏற்றவாறு சில தருமங்களைப் புரியுந் திருத்தொண்டில் ஈடுபடுவாராயினார்.

சிவபெருமானுடைய திருக்கோயில்கள் தோறுஞ் சென்று, பேரிகை, மத்தளம் முதலிய வாத்திய கருவிகளுக்குத் தோலும், கட்டுவார்களும், யாழ், வீணை முதலிய வாத்தியங்களுக்கு நரம்பு களும் பெருமானுடைய திருமேனியில் பூசுவதற்குக் கோரோசனை யுந் தருவார். தம்மால் இயன்ற சிவதருமங்களைச் செய்து, திருக் கோயிலின் திருவாயிற்புறம் நின்று பேரன்பின் மிகுதியினால் இறைவரை என்புருகிப் பாடுவார்; மகிழ்ச்சி மேலீட்டினால் ஆடுவார்.

திருப்புன்கூரில் எழுந்தருளியுள்ள சிவலோக நாதரைச் சேவிக்க வேண்டும் என்று காதல் கொண்டார். மிகுந்த அன்புடன் புறப்பட்டுத் திருப்புன்கூர் சென்று திருவீதியை வலம்வந்து திருக் கோயிலுக்கு முன் கோபுரவாயிலில் நின்றார். அங்குத் திரு நந்திதேவர் சிறிது உயரம். அதனால், சிவலிங்கம் தரிசனையாக வில்லை. உள்ளம் மிகவும் வருந்தினார். அன்பரது வருத்தத்தை அகற்றுவான் கருதிய இறைவர் நந்திதேவரை விலகுமாறு செய்து நந்தனாருக்குக் காட்சி யளித்தார். எம்பெருமானைக் கண்டு களிகூர்ந்தார்; பாடியாடினார்; தொழுதார்; அழுதார். திருக் கோயிலுக்கு மேற்புறத்துள்ள பள்ளத்தைக் குளமாக வெட்டினார். சடைமுடியில் கொன்றைமாலை அணிந்த பெருமானது

திருக்கோயிலை வலமாக வந்து வணங்கி, நடங்கொண்டு விடைகொண்டு ஆதனூரை அடைந்தார். இவ்வாறு; சிவத் தலங்கள்தோறும் சென்று தொழுது திருத்தொண்டு புரிந்தார்.

தில்லைச் சிதம்பரஞ் சென்று கனகசபையில் ஆனந்தத் தாண்டவம் புரியும் அம்பலவாணரைச் சேவிக்க வேண்டும் என்ற காதல் உதித்தது. அன்று இரவு கண் துயிலாது தில்லை யம்பலத்தையே நினைந்து நினைந்து உருகினார். தனது இழிபிறப்பை எண்ணி, "தான் தில்லைத்தலம் போவது தகாது" என்று கருதினார். அந்த எண்ணமும் எம்பெருமானுடைய ஏவலே என்று நினைந்தார். மீண்டும் எல்லையின்றி எழுகின்ற அன்பினால் "நாளைப் போவேன்" என்பார். பொன்னம்பலத்தை நினைந்து நினைந்து அழலிடைப்பட்ட மெழுகுபோல் உருகுவார். தனது புலைப்பிறப்பை எண்ணி வருந்துவார். அப்பிறப்பு திருச்சிற்றம்பலத்தைத் தரிசிப்பதற்குத் தடை என்று கருதி வாடுவார். நடராஜமூர்த்தியை இடையறாது தியானிப்பார். "நாளைப் போவேன், நாளைப் போவேன்" என்று பலகாலும் கூறுவார்.

இவ்வண்ணம் பலநாட்கள் கழிந்தன. பூளைப்பூவைப் போன்ற பிறவிப் பிணி நீங்குமாறு, ஒருநாள் காதல் வெள்ளங் கரையின்றிப் பெருகப் புறப்பட்டுத் தில்லைச் சிதம்பரத்தின் அருகில் வந்தார். தில்லையின் எல்லையைக் கண்டு பணிந்து எழுந்தார். வேள்விப் புகையும் வேதவோசையும் மிகுந்த அத்திருத்தில்லைக்குள் நுழைவதற்கு அஞ்சினார். "அந்தோ! புலைக்குலத்தில் பிறந்த எளியேன் எவ்வாறு தில்லைக்குள் சென்று சிற்சபையைச் சேவிப்பேன்?" என்று கண்ணீர் வடித்தார். கீழே வீழ்ந்து புரண்டார். எல்லையை வலம் வந்தார். கரையில்லாத காதலுடன் தென்மதில் வாயிலை அடைந்தார். தாம் அதில் நுழைவது பொருந்தாது என்று துணிந்து நின்றார். அகங்குழைந்து முகமெல்லாம் கண்ணீரினால் நனைய அழுவார்.

"அம்பலவாணா! அருட்பெருங்கடலே! தில்லைமேவும் தேவ தேவா! ஞானமூர்த்தீ! நாயினேன் புலைச்சாதியிற் பிறந்தேனே; உமது மணிமன்றம் வந்து கண்டு களிக்கும் பேறு பெற்றே னில்லையே? என் செய்வேன்? எம்பெருமானே! சிவகாமவல்லி சமேதா! கருணாநிதி! அந்தோ! உம்மைக் காணவும், தூக்கிய திருவடியைக் கண்டு வணங்கவும் ஏழையின் உள்ளம் துடிக்கின்றதே. உம்மைச் சேவிக்கும் பேறு பெறாத என் பிறப்பு

மிகவும் இழிந்தது, உமது குஞ்சித பாதங் காண்பது எவ்வாறு முடியும்? உம்மைக் காணாது அடியேன் எவ்வாறு வாழ்வேன்" என்று துதித்துத் தொழுவார்; அழுவார், இவ்வாறு இரவு பகலாகத் தில்லைமா நகரை வலம்வந்து கொண்டிருந்தார்.

எல்லையில்லாத அவர் வருத்தத்தைத் தீர்க்கும்பொருட்டுக் கனக சபாபதி ஒருநாள் அவருடைய கனவில் புன்முறுவலுடன் தோன்றி அருள்புரிவார். "அன்பனே! வருந்தற்க; இப்பிறவி போய் நீங்க எரியில் மூழ்கி அந்தணர்களுடன் நமது பொன்னம் பலத்திற்கு வருவாய்" என்று பணித்தருளினார்.

தில்லை மூவாயிரம் அந்தணர்களது கனவிலும் சென்று "நமது திருத்தொண்டன் நாளைப் போவான் வந்திருக்கின்றான். அவனது உள்ளக்கருத்தின்படி வேள்வித் தீ மூட்டி அமைத்து வையுங்கள். அதில் அவன் மூழ்கி நம்பால் வருவான்" என்று கட்டளையிட்டருளினார்.

மூவாயிரம் அந்தணர்களும் துண்ணென்று எழுந்து அச்சமுற்றுத் திருக்கோயிலின் முன்சென்று தொழுது "தேவரீர் திருவுள்ளப்படி செய்வோம்" என்று துதித்துத், திருநாளைப் போவார் இருக்குமிடம் வந்தார்கள்.

மூவாயிரம் முனிவர்களும் திருநாளைப்போவாரை நோக்கி, "ஐயரே! அம்பலவாணரது திருவருளால் இப்பொழுது நாங்கள் வந்தோம். உமக்கு வேள்வித் தீ வளர்த்துத் தருமாறு இறைவர் கட்டளை இட்டிருக்கின்றார்" என்றார்கள். நைந்த உள்ளமுடைய திருநாளைப்போவார், "அடியேன் உய்ந்தேன்" என்று தொழுதார். அந்தணர்கள் செந்தழல் வளர்த்தனர். நந்தனார் அந்தி வண்ணரைச் சிந்தை செய்த வண்ணமாகச் செந்தழலை வலம் வந்தார். கரங்களைச் சிரமிசைக் கூப்பி குஞ்சிதபாதத்தைச் சிந்தித்து நெருப்பில் புகுந்தார். உடனே, அவருடைய மாயா காரியமாகிய பொய்மை பொருந்திய உருவம் நீங்க, புண்ணிய முனிவர் உருவங்கொண்டு, முப்புரிநூலும், சடைமுடியும் விளங்க எழுந்தார்.

கைதொழுது நடமாடும் கழலுன்னி யழல்புக்கார்
எய்தியவப் பொழுதின்கண் எரியின்கண் இம்மாயப்
பொய்தகையும் உருவொழித்துப் புண்ணியமா முனிவடிவாய்
மெய்திகழ்வெண் ணூல்விளங்க வேணிமுடி கொண்டெழுந்தார்.

செந்தாமரை மலர்மீது தோன்றிய பிரமதேவரைப்போல் இருந்தது அக்காட்சி. வானிடை அந்தர துந்துபி முழங்கியது. சிந்தை மகிழ்ந்த இந்திராதி இமையவர் மந்தாரமலர் மழை பொழிந்தனர். திருவுடைய தில்லைவாழ் அந்தணர்கள் கைகூப்பித் தொழுதார்கள். திருத்தொண்டர்கள் பணிந்து மனம் மகிழ்ந் தார்கள். திருநாளைப் போவார், கனகசபையில் ஆனந்தத் தாண்டவம் புரியும் திருவடியை வணங்க வேண்டிச் செல்லு கின்றார். அந்தணர்களும் அடியார்களும் உடன்சென்றனர். திருக்கோபுரத்தைத் தொழுது, உட்புகுந்தார். மணிமன்றஞ் சென்றார். அவ்வளவுதான், அவரை ஒருவரும் கண்டிலர். தூக்கிய திருவடியில் கலந்தார்.

அந்தணர்கள் அதிசயித்தார் அருமுனிவர் துதிசெய்தார்
வந்தணைந்த திருத்தொண்டர் தம்மைவினை மாசறுத்துச்
சுந்தரத்தா மரைபுரையுந் துணையடிகள் தொழுதிருக்க
அந்தமிலா ஆனந்தப் பெருங்கூத்தர் அருள்புரிந்தார்.

விளக்கம்

ஆதனூர் :-

கொள்ளிடக் கரையில் உள்ளது. அங்கு நாற்பது வேலிநிலம் தனிவட்டமாக திருநாளைப்போவார் காணி என்று வழங்குகின்றது என்பர். வளமைமிக்க ஊர்.

திருப்புன்கூர் :-

வைத்தீச்சுரன் கோயிலுக்கு மேற்கே இரண்டு கல் தொலைவில் உள்ளது. சுவாமி பெயர் சிவலோகநாதர். புன்கு மரத்தின்கீழ் சுவாமியிருப்பதனால் திருப்புன்கூர் என்ற பேருண்டாயிற்று; அருமையான திருக்கோயில். இக்கோயிலில் நந்தனார் கோயில் தனியே இருக்கின்றது. நந்தனார் கையில் நரம்புக் கருவியை வைத்துக் கொண்டு பாடிய கோலத்துடன் இருக்கின்றார். அவர் வெட்டிய திருக்குளம் திருக்கோயிலுக்கு மேற்புறத்தில் விளங்குகின்றது. சகல வினைகளையும் போக்க வல்லது. அருமையான தீர்த்தம்.

ஆதனூரும் அதன் பெருமையும் :-

''கொள்ளிட நதி தனது அலைகளாகிய கரங்களால் பொன்னும் மணியுங் கொழித்துத் தர, அதனை வயல்கள்

தாமரையாகிய கரங்களை நீட்டி வாங்குகின்றன'' என்று தெய்வப்புலமை தங்கிய சேக்கிழாரடிகள் கூறும் அழகு உள்ளத்தைக் குளிர்விக்கின்றது.

பகர்ந்துலகு சீர்போற்றும் பழையவளம் பதியாகும்
திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன் செழுமணிகள் திரைக்கரத்தால்
முகந்துதர இருமருங்கு முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணைநீர் நன்னாட்டு மேற்கானாட் டாதனூர்.

உயர்ந்த பசிய மரங்கள் மேகத்தை இழுத்து மழையைப் பொழிவிக்கும். மழைக்குக் காரணம் உயர்ந்து இருண்ட சோலைகளே. காடுகளை வெட்டிவிடுவதனால் மழை குறைந்து போகின்றது. ஊரைச் சூழ்ந்து வானளாவிய சோலைகள் நிரம்ப இருத்தல் வேண்டும். மரங்களை வைத்து வளர்த்தலும் சோலைகளை வெட்டி அழிக்காதிருத்தலும் பெரும் புண்ணியமாகும்.

ஆதனூரைச் சூழ்ந்து பூஞ்சோலைகள் அரும்புகளுடன் கூடிய கிளைகளின் வாசனை பொருந்திய தளிர்கள் சூரிய மண்டலத்தைத் தடவிக்கொண்டிருக்கின்றன. அதில் மேகங்கள் சஞ்சரிக்கின்றன. வண்டுகள் மொய்த்து உலாவுகின்றன. அதனால், வான்மழையும் தேன்மழையும் ஒழியாது பொழிகின்றன. அடிகளார் இந்த உலகம் உய்ய இந்த அழகிய கருத்துக்கள் நிறைந்த செய்யுளை உரைத்தனர்.

நனைமருவுஞ் சினைபொதுளி நறுவிரைசூழ் செறிதளிரில்
தினகரமண் டலம்வருடும் செழுந்தருவின் குலம்பெருகிக்
கனமருவி யசைந்தலையக் களிவண்டு புடைசூழப்
புனன்மழையோ மதுமழையோ பொழிவொழியா பூஞ்சோலை.

புலைப்பாடி :-

சேக்கிழாரடிகள் மிகப்பெரிய பதவியாகிய முதன்மந்திரி பதவியில் சோழமன்னன்பால் இருந்தவர். உத்தமச்சோழபல்லவர் என்ற பட்டமும் பெற்றவர். மிகவும் மேலான நிலையில் இருந்த அவர் மிக்வும் கீழான நிலையில் உள்ள புலைப்பாடியின் இயல்புகளையும் கூறும் அழகுதான் என்னே!

பழமையான கூரைவேய்ந்த குடிசைகளில் சுரைக்கொடி படர்ந்திருப்பதனையும், தாய்க்கோழியுடன் அதன் குஞ்சுகள் சுற்றிச் சுற்றி உலாவுதலையும், நாய்க்குட்டிகளை புலைச்சிறுவர் கவர்ந்து ஓடுதலையும், அக்குட்டிகளின் குரைப்பு ஒலியைத் தாய்

நாய் காதில் படாவண்ணம் அவர்கள் இடையில் கட்டிய இடுப்பு மணி ஒலித்தலையும், தோல் விரிப்பில் குழந்தைகளை மரத்தடியில் தூங்க வைத்திருப்பதையும், பெட்டைக்கோழி அடைகாக்க பெரிய பானைகளை மரத்தடியில் புதைத்து வைத்திருத்தலையும், தென்னை மரத்தடியில் உள்ள பொந்துகளில் நாய்க்குட்டிகள் தங்கியிருத்தலையும், மரநிழலில் புலைமகளிர் பாடிக்கொண்டே நெல் குற்றுவதையும் பிறவும் அப்படியே நமது மனக்கண்முன் படம்பிடித்துக் காட்டுவதுபோல் கூறுந்திறம் வியத்தற்குரியது.

திருநாளைப்போவார் :-

இவருடைய இயற்பெயர் நந்தனார் என்பது. தில்லையம்பலத்தின் மீது தணியாக் காதலுடன் "நாளைப்போவேன்", "நாளைப் போவேன்" என்று கூறிக்கொண்டிருந்ததனால் திருநாளைப் போவார் என்று திருநாமம் பெற்றார். பல பிறப்புக்களில் புரிந்த நற்றவப் பயனாக இவருக்குச் சிவபக்தி இயல்பாகவே உண்டாகியது. பக்தியே முத்தியைத் தரும். "ஆனபயபக்தி வழிபாடு பெறுமுத்தியது வாகநிகழ் பக்தஜன வாரக்காரனும்" என்பார் அருணகிரிநாதர்.

வெறும் பக்திமட்டும் புரிந்ததோடு அமையாது திருக்கோயில் தொறும் தோல், வார், நரம்பு, கோரோசனை முதலிய பொருள் களைத் தமது தகுதிக்குத் தக்கவாறு தந்து சிவதருமம் புரிந்து வந்தார். தமது குலமரபு நெறிதவறாது திருக்கோயிலின் புறத்தே நின்று ஆடுவதும் பாடுவதுமாகத் திருத்தொண்டு புரிந்தவர் இவர். திருத் தொண்டர் புராணத்துள் இசைத்தமிழில் வல்லவர் நால்வர். அவர்களுக்குள் முதலில் ஓதப்பெற்றவர் இவர்.

ஏனைய மூவர் - ஆனாயநாயனார், திருநீலகண்ட யாழ்ப் பாணர், பரமனையே பாடுவார் என்பவர்கள்.

அளவிறந்த அன்பு செய்தபடியினால், திருப்புன்கூரில் நந்தி தேவரை விலகச் செய்து இறைவர் இவருக்குக் காட்சி தந்தனர்.

சிதம்பர வேட்கை :-

திருத்தலங்களுக்குள் முடிமணியாக விளங்குவது திருத்தில்லை. தரிசித்தார்க்கு வீடுபேறு தரவல்லது. தில்லைச் சிதம்பரம் என்று ஒன்று உண்டு என்று கேள்வியுற்ற அவருக்கு அதனைக்கண்டு மகிழ வேண்டும் என்ற அவா கரைகடந்த வெள்ளம்போல் பெருகியது. கண்ணுறங்காது அதனையே நினைந்து நினைந்து

உருகினார். ஆனால், தமது குலம் கோயிலுட் புகுந்து தரிசிக்கத் தடையென்று கருதினார். அதனால் பலகாலும், "நாளைப் போவேன்", "நாளைப் போவேன்" என்று வருந்திய வண்ணமாக இருந்தார். அவருடைய திருவுளப் பண்பை ஆசிரியர் கூறுமாறு காண்க.

அன்றிரவு கண்டுயிலார் புலர்ந்ததற்பின் அங்கெய்த
ஒன்றியணை தருதன்மை யுறுகுலத்தோ டிசைவில்லை
என்றிதுவும் எம்பெருமான் ஏவலெனப் போக்கொழிவார்
நன்றுமெழுங் காதன்மிக நாளைப்போ வேன்என்பார்.

தீக்குளித்தல் :

நாளைப்போவார் தில்லை சென்று எல்லையை வலம் வந்து வணங்கி, தமது புலைக்குலத்தை நினைந்து, தாம் உட்புகுதல் கூடாது என்று அஞ்சிப் பலநாட்களாக தில்லை நகரை வலம் வந்த வண்ணமாகவே இருந்தார். இறைவர் அவரை நெருப்பில் மூழ்க வைத்து முனிவர் வடிவை நல்கி அருள்புரிந்தார்.

என்னை? ஜாதியென்பது உயிருக்கு இல்லை, உடம்புக்கும் இல்லை. செய்தொழிலாலும் குணங்களாலுந்தான் ஜாதி வேற்றுமை உண்டாகின்றது. ஒருவனே பலப்பல ஜாதியை அடைகின்றான். தணிந்த சிந்தையுள்ளபோது அந்தணனாகவும், பொறிபுலன்களை வென்று அடக்கியாளும்போது அரசனாகவும், புண்ணிய பாவ விருத்தியைச் செய்யும்போது வைசியனாகவும், பிறருக்கு உபகாரம் புரியும்போது வேளாளனாகவும், கோபம் வரும்போது சண்டாளனாகவும் மாறுகின்றான்.

நந்தனார் தணிந்த சிந்தையுடையவர். அந்தணர்களாலும் வணங்கத்தக்கவர். அப்படியாயின் இறைவர் ஏன் அவரைத் தீக் குளிக்க வைத்தனர்?

நந்தனார் திருவுளத்தில் தமது உடம்பு புலையுடம்பு என்றும், தாம் இழிபிறப்பினர் என்றும், தாம் திருக்கோயிலுக்குள் உட்புகுவது நெறியன்று என்றும் கருதினார். இறைவர், 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்' என்றபடி, அவரை நெருப்பில் முழுகுமாறு செய்து, அவர் கருத்தின்படி முனிவர் வடிவை நல்கி அருள்புரிந்தனர்.

பாண்டியன் நடராஜமூர்த்திக்குத் திருவடி வருந்துமே என்று கருதிக் கால் மாறியாடுமாறு வேண்டினான். வேதமந்திர வடிவின

ராகிய இறைவருக்குக் கால் வருந்துவது இன்று. பஞ்சபூத சரீர மானால்தானே கால் வருந்தும். ஆனால், இறைவர் பாண்டி யனுக்கு அதை யுணர்த்தினாரில்லை. அவர் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டுக் கால் மாறியாடினார்.

வந்தியம்மை தன்பங்குக் கரையை உயர்த்தும் பொருட்டு ஆள் வேண்டும் என்று வேண்டினாள். இறைவர் கைலையில் இருந்த வண்ணமே வையையாற்றின் கரையை உயர்த்தலாம். ஆனால், அவ்வாறு செய்தாரில்லை. மண்சுமக்கும் ஆளாக வந்தார். ஏன்? ஆள் வேண்டும் என்று கருதியதனால் அவள் எண்ணப்படி ஆளாக வந்தார்.

"வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானை கருத்தறிந்து முடிப்பான் றன்னை"

- அப்பர்

ஆதலினால், கனகசபாபதி அவர் கருத்தை முற்றுவிப்பான் கருதி, தீ முழுகவைத்து முப்புரிநூலும் சடைமுடியுந் தந்து அருள் புரிந்தனர்.

அவருடைய கனவில் கூறியதோடு அமையாது மூவாயிரம் அந்தணர் கனவிலுங் கூறியது அவர் பெருமை உலகம் அறிந்து உய்யும் பொருட்டு என்க.

திருநாளைப்போவாரை, தில்லை மூவாயிரம் அந்தணர்கள், "ஐயரே! அம்பலவர் அருளால் இப்பொழுது அணைந்தோம்" என்று அழைக்கும் அழகைக் காண்க. ஐயர் என்று அழைக்கப் படுகின்ற அந்தணர்கள் நந்தனாரை, 'ஐயரே!' என்று அழைப்பார் களானால் நந்தனாருடைய பெருமையை எம்மனோரால் எடுத்தியம்ப முடியுமோ?

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம்

"திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்"

அகிலாண்டங்களையும் ஈன்ற அன்னையாகிய உமாதேவியார் இறைவரை வழிபடும் பொருட்டுத் தன்னிடத்தே வந்து தவஞ் செய்வதற்கு மாதவஞ் செய்த நாடு தொண்டை நன்னாடு. அண்டர்கள் புகழுந் தொண்டை நன்னாடு சான்றோருடைத்து; புலவர்கள் பலர் புகழும் அலகிலா நலங்களையுடையது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நானிலங்களும், பாலையும் விரவிய ஐந்திணை நெறியும் தத்தம் இயல்பினில் செழித்து, ஏழில் கொழித்துச் சிவமயமாக விளங்குவது; அந்நாடு எந்நாட்டினுஞ் சிறந்த நன்னாடு.

குறிஞ்சி :-

வானளாவிய மலைகளில், வானாறுடன் தேனாறு கலந்த அருவிகள் ஒழியாது பாயும். யானைக் கொம்புகளை வேலியாக நட்டுக் குறவர்கள் புனங்களில் தினைகளை விளைவிப்பார்கள். குறத்தியர்கள் பரண்மீது இருந்து மணிக்கற்களை எறிந்து குருவி களை ஓட்டுவர். தேனுடன் கலந்த தினைமாவை யுண்டு வேடர் சிறுவர் புலிக்குட்டிகளுடன் விளையாடுவர். திருக்காளத்திமலை, திருவிடைச்சுரம், திருக்கழுக்குன்றம் முதலிய திருத்தலங்களை யுடையது குறிஞ்சி.

பாலை :-

குறிஞ்சியையும் முல்லையையும் அடுத்த சில இடங்களில் வாட்படையேந்திய நீல நிறமுடைய துர்க்கையின் கோயில் களுடன் மணல்வெளி பாலைநிலம் என்று சொல்லும்படியாக இருந்தது.

முல்லை :-

கானாறுகள் இடையிடையே ஓட, குருந்த மரங்களின்மீது முல்லைக் கொடி படர்ந்து மாலையில் மலர்ந்து அழகு செய்ய வண்டுகள் வந்து பாட முயல்கள் ஓட மிக்க வனப்புடன் முல்லை

நிலம் விளங்கியது; ஆனினங்களும் மானினங்களும் அங்கு உலாவும். கொன்றை மலர்கள் பொன் சொரிவதுபோல் உதிரும். முல்லை நிலக் கடவுள் என்று தமிழிலக்கணங் கூறும் திருமால் வழிபட்ட திருமுல்லைவாயில், திருவூறல் முதலிய திருத்தலங்களை யுடையது முல்லை.

மருதம் :-

நந்திமலையில் காமதேனு பால் சொரிய, அப்பால் ஓடிய பாலாறு, மணிகளையும், முத்துக்களையும் கொழித்து ஓடிவர, அந் நதியினால் வளம்பெறுவது மருதம். குழந்தை கை வைத்து வருட தனங்களில் பால்சுரக்கும் தாயைப்போல், மள்ளர்கள் வேனிலில் மணலைப் பிசைந்து கால் உண்டாக்கத் தண்ணீர் சுரந்து வயல் களை வளம்படுத்தி நன்மை செய்யும் நல்லியல்பை யுடையது அந்தப் பாலிமா நதி.

பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்
மள்ளர் வேனிலில் மணற்றிடர் பிசைந்துகை வருட
வெள்ள நீர்இரு மருங்குகால் வழிமிதந் தேறிப்
பள்ள நீள்வயல் பருமடை யுடைப்பது பாலி.

வயல்களில் இடையறாது உழவுத் தொழில் நிகழ்ந்த வண்ணமாக இருக்கும். வாளை மீன்களும், வரால் மீன்களும், சேற் கெண்டைகளும் துள்ளிக் குதிக்கும். கரும்பும், கமுகும், தெங்கும், பலாவும், மாவும் எங்கும் நிறைந்து வளர்ந்திருக்கும். விருந்தினர்களை வருந்தியழைத்து அருந்துதற்கு இனிய உணவுகளை வழங்கும் தரும குண சீலர்கள் வாழும் பழமையான ஊர்கள் பலவுள. திருவல்லம், திருமாற்பேறு, திருப்பாசூர் முதலிய திருத்தலங்களையும் தன்னகத்தே கொண்டது மருதம்.

நெய்தல் :-

கடல் அலைகள் கொழித்து உதவும் முத்துக்களையும் பவளங் களையும் மிகுதியாக உடையது நெய்தல். அங்கு மீன்கள் சதா உலர்ந்து கொண்டிருக்கும். பரதவரும், பரத்தியரும் இனிது வாழ்வார்கள். தாழையும், புன்னையும், நெய்தலும் நெருங்கி விளங்கும் திருவொற்றியூர், திருமயிலை, திருவான்மியூர் முதலிய தலங்களால் பெருமை பெறும். இவ்வாறு, நானிலங்களின் நலம் புனைந்தது தொண்டை நாடு.

ஆய நானிலத் தமைதியிற் றத்தமக் கடுத்த
மேய செய்தொழில் வேறுபல் குலங்களின் விளங்கித்

தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தைத்
தூய மாந்தர்வாழ் தொண்டைநாட் டியல்புசொல் வரைத்தோ?

காஞ்சிமா நகரம்

எல்லா வளங்களும் பொருந்திய தொண்டை நன்னாட்டின் தலைநகரம் காஞ்சிமாநகரம். உமாதேவியார் உயிர்களிடத்துப் பெருங் கருணையினால் முப்பத்திரண்டு அறங்களையும் புரிந்து கொண்டு காமக்கோட்டத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமை யுடையது. காலையும் மாலையும் நிழல்பிரியாத காஞ்சித் தானமும், இரவில் மலரும் தாமரையும், பகலில் மலரும் குவளையும், உச்சியில் மலரும் பாதிரியும், உறங்காப் புளியும், பற்பல அமரர்கள் வழிபட்ட திருக்கோயில்களும், இட்டசித்தி தீர்த்தம் சர்வதீர்த்தம் முதலிய திருக்குளங்களும், இன்னும் பல அதிசயங்களும் ஆங்கு உளவாயின. ஆனைமுகக் கடவுளும், ஆறுமுகக் கடவுளும் வைரவரும் காவல் புரிவர். ஐயனார் யானைமீது ஊர்ந்து செண்டாயுதம் ஏந்தி வீற்றிருக்கும் செண்டனைவெளியும், யோகபீடமும் போகபீடமும் அங்கு உண்டு.

கரிகாற் சோழன் இமயத்தில் புலிக்கொடி நாட்டப் போகும் போது, இதன் பெருமையை யறிந்து காடெறிந்து நாற்காத எல்லை வகுத்துத் திருநகரம் உண்டாக்கினான். ஆழ்ந்த அகழியும், சூழ்ந்த மதிலும் உயர்ந்த சிகரங்களும், ஓமப்புகை நிறைந்த அந்தணர் வீதியும், செல்வம் மிக்க அரசர் வீதியும், வளமை மிக்க வணிகர் வீதியும், விருந்தினரை உபசரிக்கும் வேளாளர் வீதியும், ஆவண வீதியும் சிறப்பாக இருந்தன.

திருவீதிகளில் எந்த நாட்களிலும் திருவிழாச் சிறப்புகள் நிகழ்ந்த வண்ணமாகவே இருக்கும். அமரரும் அடியவரும் சூழ்ந்திருப்பர். தீமை, பிணி, கவலை, தளர்வு, அச்சம், தாழ்வு, முதலியன அந்த மாநகரில் இலவாயின. தானம், தருமம், அன்பு, அருள், கருணை, ஞானம் முதலிய உளவாயின. சிவலோகம்போல் விளங்கும் அத் திருநகரில் தேவரும் மற்றும் யாவரும் வந்து வேண்டுவன யாவும் வேண்டியவாறு பெற்று இன்புறுவார்கள்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த முத்தி நகரமாகிய காஞ்சீபுரத்தில் ஒருபுறத்தில் வாழ்பவர் திருக்குறிப்புத் தொண்ட நாயனார். அவர் ஏகாலியர் குலத்தில் அவதரித்தவர், செம்மையுடைய அன்பு நிரம்பிய மனத்தினர்; சிவநெறி நின்ற சீலம் மிக்கவர். ஆலமுண்ட நீலகண்டப் பெருமானது திருவடிகளில் வழிவழியாகத் தொண்டு புரிபவர். அடக்கமும், வாய்மையும், தூய்மையும் உடையவர்.

மனத்தினால் இடையறாது இறைவருடைய இணையடித் தாமரைகளைச் சிந்தித்து ஐந்தெழுத்தை நினைந்து நினைந்து உருகுவார். வாக்கினால் சிவமூர்த்தியினுடைய திருநாமங் கூறித் துதிப்பார். காயத்தினால் இறைவரை வணங்கி, அரனாருக்கும், அரனாரது அடியவர்க்குந் தொண்டு புரிவார். புண்ணிய உருவங்களாகிய திருத்தொண்டர்களது குறிப்பறிந்து தொண்டு செய்யும் தன்மையில் திண்மையுடையவராக இவர் ஒழுகிய படியால் "திருக்குறிப்புத் தொண்டர்" என்னும் திருநாமம் பெற்றார்.

மண்ணின்மிசை வந்ததற்பின் மனமுதலா யினமூன்றும்
அண்ணலார் சேவடியின் சார்வாக அணைவிப்பார்
புண்ணியமெய்த் தொண்டர்திருக் குறிப்பறிந்து போற்றுநிலைத்
திண்மையினால் திருக்குறிப்புத் தொண்டரெனுஞ் சிறப்பினார்.

தேரொலியும் மாவொலியும் மிகுந்து திசைகள் எங்கும் இசை பரவிய திருக்கச்சியம்பதியில் பொதுவாக ஊரவர்க்கு ஆடைகளை ஒலித்துத் தரும் பொது வண்ணார் என்று இவரைக் கூறலாகாது. திங்களையுங் கங்கையையும் முடித்த சிவபெருமானுடைய திருத் தொண்டர்களுக்கு ஆடைகளைக் குறிப்பறிந்து ஒலித்துக் கொடுக்கும் சிறப்புடையவர். சிவனடியார்களது உடைகளை நாடோறுந் தோய்த்து அந்த அழுக்கை அகற்றுவார்போல், பழவினைகளையும் மும்மலங்களையும் பிறவிப் பிணியின் அழுக்கையும் அகற்றுவாராயினார்.

இமயவல்லியின் ஒப்பில்லாத அன்பை அன்று அளக்கவந்த எம்பெருமான், திருக்குறிப்புத் தொண்டருடைய தன்மையைக் கண்டு அருள்புரியத் திருவுளம் கொண்டார்.

குளிர்மிகுந்த காலத்தில், வறியவர்போல் அழுக்கடைந்த கந்தை உடுத்து, மாதவ வேடம் புனைந்து மாலறியா மலரடிகள் மண் மேற்பட நடந்து திருத்தொண்டர்பால் வந்தருளினார். உடம்பு முழுவதும் திருநீறு திகழ்ந்து ஒளிசெய்ய கரியமேகஞ் சூழ்ந்ததுபோல் அழுக்குக் கந்தையுடன் எழுந்தருளிவரும் அருந்த வரை திருக்குறிப்புத்தொண்ட நாயனார் கண்டு, அளவற்ற மகிழ்ச்சி கொண்டு, எதிர் சென்று புளகாங்கிதமுற்று மண்மிசை வீழ்ந்து பணிந்து எழுந்தார்.

"எந்தையே! தேவரீர் இங்கு எழுந்தருளுவதற்கு அடியேன் செய்த தவமோ? என் குலஞ் செய்த தவமோ? என் முன்னோர்

புரிந்த முடிவிலாத் தவமோ? நானே தவமுடையேன்; உய்ந்தேன். பிறவிப் பெருங் கடலினின்றும் கரையேறினேன். சிவானந்தப் பெருவாழ்வு பெற்றேன். தவப்பெருங் குன்றே! திருமேனி இளைத்திருக்கின்றீர்? காரணம் யாதோ? கந்தையினைத் தந்தருளும்; கழுவித் தருவேன்" என்றார்.

இறைவர், "அன்பனே! இக்கந்தை மிகவும் அழுக்கேறி உடுக்க முடியாத நிலையில் இருக்கின்றது. ஆனால், குளிரின் கொடுமையால் இதைவிட முடியவில்லை. மேற்கடலில் சூரியன் விழுமுன் இதனைத் தருவீராயின் கொண்டுபோய் தோய்த்து வாரும்" என்று அருளிச் செய்தார்.

திருக்குறிப்புத் தொண்டர், "பெருமானே! ஆடையைக் கொடும். அவ்வண்ணமே அந்தி படுவதன்முன் தோய்த்துத் தருவேன்" என்றார். இறைவர், "ஐயா! தோய்த்துக் கொடுத்தால் மட்டும் போதாது; உலர்த்திக் கொடுக்க வேணும். அப்படி தாரீராயின் இந்த உடம்புக்கு இடர் செய்தவராவீர்" என்று கூறிக் கந்தையைத் தந்தருளினார்.

குறித்தபடி குறித்த பொழுதில் குறிப்பறிந்து ஒலித்துக் கொடுப்பதற்காக நாயனார் கந்தையைக் கொண்டுபோய், நறுமணம் வீசும் மலர்கள் நிறைந்த ஒரு குளத்தில் தோய்த்தார்; பின்னர், அதைப் புழுங்க வைத்தார். மீண்டும் தோய்க்க முயலும்போது பெரும் பகல் கழிந்தது. பிற்பகலில் கங்கை முடித்த கண்ணுதற் பெருமானது கருணையால் மேகங்கள் எழுந்து ஒழியாமல் மழை பொழிவன வாயின. திசை மயங்கியது; மழைத் தாரையானது விழி நுழையாதபடி நெருங்கிப் பெய்தது. தொண்டனார் மிகவும் மனங் கலங்கினார். மாதவரிடம் கூறிய வாக்குறுதியை நினைந்து உள்ளம் உடைந்தார். "அந்தோ இனி யான் என் செய்வேன்? தோய்த்து உலர்த்தித் தருவதாக இந்தக் கந்தையைப் பெற்றேனே. தேவ தேவா! கருணாகரா! பார்வதி பங்கா! செய்வதறியேனே" என்று வாடினார். மழை ஒருவேளை விட்டொழியும், என்று கருதினார். ஆனால், மழை நிற்பதாகக் காணவில்லை. பகைவரைப்போல இரவு வந்து விட்டது.

தொண்டனார் மிகமிக வருந்தினார். "ஆ! கெட்டேன். குளிரால் உடல் வருந்தும் தூய தவமுனிவரிடத்தில், ஆ! ஆ, என் குற்றேவல் தவறிவிட்டதே" என்று மயங்கி வீழ்ந்தார். மீண்டும் எழுந்தார். மழை பொழிந்த வண்ணமாகவே யிருந்தது. மாதவர்பால் ஓதிய கால எல்லை கடந்தது. "ஆ! சிறியேன் இப்படி

நிகழுமென்று அறியேன். முன்னமேயே துணியைத் தோய்த்து வீட்டில் கொண்டுபோய் காற்றில் உலருமாறு செய்யாமற் போனேன். சிறந்த தவ முனிவரது திருமேனி குளிரால் துன்புறுமாறு தீங்கு இழைத்த எனக்கு இனி வேறு என்ன செயல் இருக்கின்றது? இதுவே செய்யத்தக்கது; கந்தையைத் தோய்ப்பதற்கு எற்றுகின்ற பாறையின்மீது தலை சிதறுமாறு மோதுவேன்'' என்று எண்ணித் துணிந்தார். பாறையின் மீது வேகமாகத் தமது தலையைப் புடைத்து எற்றுவாரானார். அப்படித் தலையைப் புடைக்கப் புகுந்தபோது பாறைக்கு அருகில் இறைவருடைய திருக்கரந் தோன்றி அவருடைய தலையைத் தகைந்து கொண்டது.

வானம் புனல்மழை மாறி மலர்மழை பொழிந்தது. தழுவக் குழைந்த தயாபரன் உண்மையான அன்புடைய நாயனாருக்கு வெண்மையான விடையின்மீது உமையம்மையாருடன் காட்சி தந்தருளினார். திருக்குறிப்புத் தொண்டர் மாலும் அயனுங் காணாத மா்தேவனைப் பாலுந் தேனும்போல் கண்டு, உள்ளம் உருகி அன்பு வெள்ளம் கரைபுரள கைகூப்பித் தொழுது நின்றார். முக்கட் பெருமான் அன்பரை நோக்கி 'உனது அன்பின் திறத்தை மூவுலகங்களுக்கும் அறிவித்தோம். நீ நமது சிவலோகத்தில் நம்முடன் பிரியாது இருந்து இன்புறுவாய்'' என்று அருள்புரிந்து ஏகாம்பரஞ் சென்றார். நாயனார் தூய சிவானந்தப் பெருவாழ்வை எய்தினார்.

விளக்கம்

தொண்டை நாடு :-

“சேக்கிழாரடிகள், தாம் பிறந்த நாடு என்று கருதி, திருக்குறிப்புத் தொண்ட நாயனாருடைய புராணத்துள் தொண்டை நாட்டின் பெருமையை விரித்துக் கூறினார்'' என்று கூறுவர். அது பொருந்தாது. ஏன்? பற்றற்றானைப் பற்றிப் பற்றறுத்த பரமஞான சிகாமணி எமது தெய்வச் சேக்கிழாரடிகள். சுற்றமுந் தொடர்பும் நீத்த நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சித் தில்லையில் தவஞான சீலராய் விளங்கிய அவருக்கு நாட்டுப்பற்று ஏது?

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத் திருவிருத்தங்கள் 125. இவற்றுள் 110 திருவிருத்தங்கள் நாட்டுச் சிறப்பும் நகரச் சிறப்புமாம். 17 திருவிருத்தங்களே நாயனாரது வரலாற்றைக் கூறுவனவாகும். 18வது திருவிருத்தம் அடுத்து வரும் சண்டேசர் புராணத்துக்குத் தோற்றுவாயாகும்.

கரிகாற்சோழன் முதலிய சோழமன்னர்கள் காஞ்சிமா நகரத்தையுந் தலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டை ஆண்டு வந்தபடியாலும், தொண்டை நன்னாடு சான்றோர் களையுடையது ஆதலினாலும், அம்மை இறைவரைப் பூசித்து அறம் புரிந்த முத்தித்தலம் கச்சியம்பதி ஆதலினாலும் இதனைப் புகழ்வது அவசியமாயிற்று.

தரையிடங்களில் சிறந்த கச்சித் தலத்தையுடையதுபோல் வரையிடங்களில் சிறந்த தணிகைமால்வரையை யுடையது தொண்டை நாடு. அகிலாண்ட நாயகியாகிய வள்ளியம்மையார் திருவவதாரஞ் செய்ததும், சோழநாட்டில் அவதரித்த பட்டினத் தடிகளுக்கு முத்தி கொடுத்ததும் தொண்டை நன்னாடு என்று அறிக.

ஐம்பெருஞ் சபைகளில் ஒன்றாகிய இரத்தினசபையை யுடையது திருவாலங்காடு. கைலைமலை சென்ற காரைக் காலம்மையார் மீண்டும் அங்கு வந்து தவம் புரிந்து இறைவன் ஆடுகின்ற சேவடிக்கீழ் பாடுகின்ற பெரும்பேறு பெற்ற அத்திரு வாலங்காட்டை யுடையதும் தொண்டை நன்னாடு.

ஒரு நாட்டிலுள்ள மக்கள் சத்தியத்தையே நித்தியமாகக் கொள்ள வேண்டும். கடவுள் வழிபாட்டுக்கும் சத்தியமே பத்தியமாகும்.

> "யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
> வாய்மையின் நல்ல பிற"

என்று பொதுமறையாசிரியரும் கூறுவார்.

தொண்டை நாட்டில் திருவாலங்காட்டிற்கு அருகில் பழைய னூரில் எழுபது வேளாளர்கள் வாழ்ந்தனர். பரத்தை வலைப்பட்ட ஒரு வணிகன் தன்னைத் திருத்த முயன்ற மனைவியைத் தனி வழியிற் கொலைபுரிந்தான். அப்பழி நீலி என்ற பேயாகி அவனைத் தொடர்ந்து அலைத்தது. அது தன்னைத் தீங்கு செய்யாதவாறு ஒரு பெரியார் தந்த மந்திர வாளை ஏந்திய வண்ணமாகவே அவனிருந்தான். அவன் ஒருநாள் பழையனூருக்கு வந்தான். நீலி என்ற பேய் பெண்வடிவந் தாங்கி, கள்ளிக் கொம்பை முறித்துக் குழந்தையாக்கி இடையில் வைத்துக் கொண்டு வணிகனைத் தொடர்ந்து வந்தது. அங்கு சபை கூடியிருந்த எழுபது வேளாளப் பெருமக்கள்பால் அவன் தஞ்சம் புகுந்து, "இப்பேய் என்னை வஞ்சித்துக் கொல்ல வருகின்றது; காப்பாற்றுங்கள்" என்று தஞ்சம் புகுந்தான்.

நீலி, "பெரியோர்களே! இவர் எனது நாயகர். இது என் குழந்தை. இவர் வேசி வலைப்பட்டு எம்மை வெறுக்கின்றார். இவரையும் என்னையும் ஒன்றுபடுத்தி வையுங்கள்" என்று அழுது முறையிட்டாள்; வணிகன், "இவள் பெண்ணன்று; பேய்" என்றான். நீலி கள்ளிக்கட்டைக் குழந்தையைக் கீழே விட்டாள். அது 'அப்பா' என்று அவன்பால் சென்றது. அது கண்டு இரக்க முற்ற வேளாளர்கள், "அப்பா! இன்று இரவு இந்த மண்டபத்தில் இருவரும் சேர்ந்து வாழுங்கள். நாளைத் தீர்ப்பு செய்வோம்" என்றனர். நீலி, "இவர் கையிலிருக்கின்ற வாளை வாங்கிக் கொள்ளுங்கள். இல்லையேல் என்னை வெட்டி விடுவார்" என்று கூறினாள். "வணிகன், இந்த வாள் என் கையை விட்டு விலகு மாயின் இப்பேய் என்னைக் கொன்றுவிடும்" என்றான்.

வேளாளர்கள், "அப்பா வணிகனே! அஞ்சாதே. அப்படி உன் உயிர் போகுமாயின் அதற்கு ஈடாக நாங்கள் எழுபது பேருடைய உயிர்களையுந் தருவோம்" என்று கூறி, வாளை வாங்கிக் கொண்டு நீலியுடன் வணிகனை ஒன்றுபடுத்தினார்கள். அன்றிரவு நீலி என்ற பேய் வணிகனைக் கிழித்துப் பழி தீர்த்துக்கொண்டு சென்றது. காலை இதனைக் கண்டறிந்த வேளாளர்கள், தாம் கூறிய வாக்கு தவறா வண்ணம் தீ வளர்த்து எழுபதுபேரும் தீயில் முழுகித் திருவாலங் காட்டு ஐயரது செய்ய மலரடியிற் சேர்ந்தனர்.

உண்மையும் திண்மையும் உடைய இப்பழைய வரலாற்றை திருஞானசம்பந்தர் திருவாலங்காட்டுத் தேவாரத்துள் கூறுமாறுங் காண்க.

துஞ்ச வருவாருந் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரு முனைநட்பாய்
வஞ்சப் படுத்தொருத்தி வாணாள்கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழையனூ ராலங்காட்டெம் மடிகளே.

இதனைத், திருத்தொண்டர் புராண வரலாறு கூறவந்த உமாபதி சிவமும் இனிது உரைத்தருளுகின்றார்.

மாறுகொடு பழையனூர் நீலி செய்த
வஞ்சனையால் வணிகனுயிர் இறப்பத் தாங்கள்
கூறியசொல் பிழையாது தணிந்து செந்தீக்
குழியில்எழு பதுபேரும் முழுகிக் கங்கை
ஆறணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்பர்
அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின் கீழ்மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை எம்மால்
பிரித்தளவிட் டிவளவெனப் பேச லாமோ.

இத்தகைய சத்திய நெறியுடையவர்கள் வாழ்கின்ற நாடு தொண்டை நன்னாடு என்று அடிகளார் இப்புராணத்துள் குறிப்பிடு கின்றார்.

நற்றிறம்புரி பழைய னூர்ச் சிறுத்தொண்டர் நவைவந்
துற்ற போதுதம் உயிரையும் வணிகனுக்கு ஒருகால்
சொற்ற மெய்ம்மையுந் தூக்கியச் சொல்லையே காக்கப்
பெற்ற மேன்மையி னிகழ்ந்தது பெருந்தொண்டை நாடு.

இதனைக் குறிப்பிடுகின்ற காரணந்தான் யாதோ எனின் கூறுதும்.

திருக்குறிப்புத் தொண்டரிடம் இறைவர் கந்தையைத் தந்து, "ஒலித்து உலர்த்தித்தர வேண்டும்" என்றார். நாயனார் "நன்று" என்று இசைந்தார். கந்தையைத் தோய்த்து விட்டார் உலர்த்த முடியவில்லை. சொன்ன சொல் தவறிவிட்டதென்று கல்லில் தலையைப் புடைத்து உயிர்விடத் துணிந்தார். "உண்மைக்குப் பழுது வந்துவிட்டபின் உயிர் வாழ்க்கை வேண்டா" என்று அவர் கருதினார். இதனால்தான், இவருடைய வரலாற்றில் மேலே நிகழ்ந்த உண்மைக்கு உயிர் தந்த வரலாற்றைக் கூறியருளினார்.

பாலாறு :-

தொண்டை நன்னாட்டில் சிறப்பாக ஓடுவது பாலாறு. ஆனால், அதில் எப்போதும் தண்ணீர் ஓடாது. பெரும்பாலும் மணற்பரப்பாகவே இருக்கும். ஆனால், தெய்வப் புலவராகிய சேக்கிழாரடிகள் கூறும் கவித்திறமும் கலைச்சுவையும் கருங் கல்லையும் கனிவிக்கின்றன.

ஏனைய ஆறுகளில் எப்போதும் தண்ணீர் ஓடிக்கொண்டே யிருக்கும். எப்போதும் தாயின் தனத்தில் பால் சுரந்து பெருகிக் கொண்டேயிருந்தால் அத்தாயின் தனம் நோய்வாய்ப் பட்டதாகும். குழந்தை கைவைத்தால்தான் பால் சுரக்க வேண்டும். எப்போதும் வெள்ளம் ஓடும் நதிகள் நோய்வாய்ப்பட்டதென்று சொல்லாமல் குறிப்பிடுகின்றார். பாலாற்றின் மணலைக் கிளைத்து உழவர்கள் வருடினால் கால் வழியே நீர் சுரந்து வரும். அது நோயில்லாத தாய்க்கு நிகர் என்கின்றார். என்னே கவியின் மாண்பு? உவமைத் திறந்தான் என்னே!

நானிலம் - ஐந்திணை :-

தொண்டை நன்னாட்டு நானிலம், ஐந்திணை இயல்புகளை அடிகள் மிக அழகாக எடுத்து சுவைபடக் கூறியருளினார். வேறு

பல புலவர்களும் இவ்வாறு கூறியுள்ளார்கள். ஆனால், அடிகள் நானிலத்திலும் உள்ள சிவாலயங்களைக் கூறிச், சிவமணம் கமழக் கூறும் சிறப்பு இவருக்கே உரியது.

அதனாலன்றோ திராவிட மாபாடியங் கூறிய எமது மாதவ சிவஞான யோகிகள் தமது காஞ்சிபுராணத்தில் தொண்டை நன்னாட்டின் பெருமை கூற சேக்கிழாரே வல்லவர். மற்ற யாரே கூறவல்லார்? என்று உடன்பாட்டு முகத்தாலும் எதிர்மறை முகத்தாலும் புகழ்ந்து கூறினார்.

திருத்தொண்டை நன்னாட்டு நானிலத்தைத்
திணைவளமும் தெரித்துக் காட்ட
மருத்தொண்டை வாய்ச்சியர்சூழ் குன்றைநகர்
குலக்கவியே வல்லன்; அல்லால்
கருத்தொண்டர் எம்போல்வார் எவ்வாறு
தெரிந்துரைப்பார்? கலந்தார்க் கின்பம்
அருத்தொண்ட ரணியிலவை யொன்றோடொன்
றியைந்தனவும் ஆங்காங் குண்டால்.

காஞ்சிமா நகரம் :-

இது ஐம்பெரும் பூதத்தலங்களுள் பிருதிவித் தலம். முத்தித் தலம் ஏழனுள் முதன்மை பெற்றது. உலகம் உய்ய உமை யம்மையார் இத்தலத்தில் தனிமாம்ரத்தின்கீழ் சிவவழிபாடு புரிந்தார்.

அம்மை வழிபாடு :-

வெள்ளிமால் வரையில் இறைவர் வீற்றிருந்தருளிப் பார்வதி தேவிக்குச் சிவாகமங்களின் திறங்களையெல்லாம் கூறியருளினார். அவ்வாறு கூறிய அரனார், "தாம் விரும்புவது பூசனையே" என்று அருளிச் செய்தார். அதனைக் கேட்ட அம்பிகை அரனாரைத் தாம் பூசிப்பதற்கு அன்பு கொண்டார்.

எண்ணி லாகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை யெனவுரைத் தருள
அண்ண லார்தமை அருச்சனை புரியஆ தரித்தாள்
பெண்ணி னல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து.

எம்பிராட்டி எம்பெருமானைத் தொழுது, "பெருமானே! தேவரீர் திருவாய் மலர்ந்தருளிய சிவாகம முறைப்படி உம்மைப் பூசிக்க என் உள்ளம் விரும்புகின்றது. அருள்புரிய வேண்டும்"

என்று வேண்டினார். "மாதவஞ்செய்த தென்திசையில் என்றும் உள்ள தலமாகிய காஞ்சியில் மாவடியில் நமது இருக்கையுளது. அங்கு சென்று அருச்சனை புரிவாய்" என்று அரனார் அருளி னார். இமவான் அனுப்பிய பரிசனங்களுடன் இறைவி காஞ்சியை யடைந்தார். அங்கு எட்டு மாநாகங்களுள் பதுமன் என்ற நாகன் பிலத்துள் குடியிருந்தான். அவன் எதிர்கொண்டு இறைவியை இறைஞ்சித் தனது பிலத்துள் கோயில் கொண்டிருக்குமாறு வேண்டினான். அவ்வண்ணமே அம்மை இருந்து, இறைவரை நாடினாள். திருவிளையாடல் காரணமாக ஏகாம்பரநாதர் வெளிப் படாது மறைந்திருந்தார். அதனால், அம்பிகை நெஞ்சம் ஈசனைக் காண்பதே விரும்பி, இடையறாது அஞ்செழுத்தினை ஓதி, கை குவித்திறைஞ்சி அருந்தவம் புரிந்தார். மாமரத்தடியில் இறைவர் தோன்றியருளினார். அகிலாண்ட நாயகி ஐயனை மெய்யன்புடன் வழிபட விரும்பினார்.

தாதியர் தந்த பூக்கூடையைக் கொண்டு அம்பிகா வனமாம் திருநந்தனவனம் அடைந்து நிறைய புது மலர்களைக் கொய்தனர். கம்பா நதியில் எடுத்த திருமஞ்சன நீரும், நெய்த்தீபமும், சந்தனம், பால், தயிர் முதலிய அபிஷேகப் பொருள்களும் சேடியர் ஏந்தி உரியபோது உதவ, கரந்தரும் பயன் இது என்று இறைவரை விதிப்படி உருகிய உள்ளத்துடன் பூசித்தார். நாடோறும் புரிந்து வரும்போது ஒரு நாள் அம்மைக்கு அருள்புரிந்து ஆட்கொள்ளக் கருதிய இறைவர் கம்பா நதியில் வெள்ளம் பெருகுமாறு திருவுளஞ் செய்தார்.

அதுகண்ட அங்கயற்கண்ணி சிவலிங்கமூர்த்தி மீது வெள்ளம் வருவது கண்டு அஞ்சி, உள்ளம் பதைத்து, அளவிலாக் காதலுடன் திருமுலைக்குவட்டுடன் திருக்கரத்தினால் நெருக்கித் தழுவிக் கொண்டார். மலையை 'வில்லாகக் குழைத்து வளைத்த மணிகண்டர் திருமுலைகளுக்கும் செங்கரங்களுக்கும் மிருதுவாகக் காட்டிக் குழைந்தருளினார். அப்போது உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் உருகின. தழுவக்குழைந்த தன்மை கண்ட விண்ணவர் வியந்து பூமழை பொழிந்தனர். கம்பையாறு வணங்கி விலகியது. காமனையெரித்த கண்ணுதற் கடவுள் வளைத்தழும்பும் முலைச்சுவடும் அணிந்து, மணவாள கோலத்துடன் காட்சியளித் தார்.

மலைமகளார் மாதேவனைத் தொழுது நின்றார். தணியாத அன்புடைய தையல்நாயகியைத் தலைவர் நோக்கி "வேண்டிய

வரங்களைக் கேள்" என்று அருளினார். எம்பிராட்டி, "ஏகநாயகா! இன்றைய எனது வழிபாடு நிறைவு பெற அருள்புரிய வேண்டும்" என்றார். இறைவர், "தேவீ! இப்பதியில் நின் பூசை என்றும் முடிவதில்லை" என்றார். அம்மை மூன்று வரங்கேட்டார்.

1) இந்தப் பூசை என்றும் மாறாது நிலைத்திருக்கும்படி தேவரீர் மகிழ்ந்து கொண்டருளுதல் வேண்டும்.

2) இத்தலத்தில் எல்லா அறங்களும் யான் செய்யும்படி அருளுதல் வேண்டும்.

3) திருவடி பிழைத்தல் என்ற ஒன்று ஒழிய இத்தலத்துள்ளார் வேறு செய்வினை எதுவே யாயினும் மாதவப்பயன் கொடுத் தருளப் பெறவும் வேண்டும்.

அவ்வரங்களை அரனார் வழங்கி, இகபரங்களுக்கு வித்தாக இருநாழி நெல்லுந் தந்தார். அம்மை காமக்கோட்டத்தமர்ந்து முப்பத்திரண்டு அறங்களையும் புரிவாராயினார்.

திருக்குறிப்புத் தொண்டர் :-

குறிப்பறிந்து ஒழுகுதல் ஒரு சிறந்த குணம். அது அறிஞர்க்கே முடிந்தது.

குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல். - திருக்குறள்

"கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" - திரிகடுகம்

"குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம்" - மூதுரை

இந்நாயனார், திருத்தொண்டர்களது திருக்குறிப் பறிந்து ஒழுகுவதில் வல்லவர். அதனால், இத்திருப்பெயரைப் பெற்றார்.

இவர் தொண்டர்களது ஆடைகளின் அழுக்கை அகற்றுவார் போல் இருவினையும் மும்மலமும் இறப்பு பிறப்பும் ஆகிய அழுக்கையும் அகற்றினார். அதுவே சிவமாந் தன்மைக்கு ஏதுவா யிற்று.

"இருவினைமு மலமுமற இறவியொடு பிறவியற
ஏகபோகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுகம் அதனையருள் இடைமருதில்
ஏகநாயகா" - திருப்புகழ்

மாதவருக்குக் கந்தையைத் தோய்த்தும் உலர்த்தியும் தருவதாகக் கூறிய வாக்குறுதி வழுவியதனால் உயிர்விடத் துணிந்தார். அது தற்கொலையாகாதோ? எனின் ஆகாது. திருத்தொண்டின் நியதிக்கு ஊறுவந்தபின் உயிர்வாழ்க்கையைப் பெரியோர் விரும்பார்.

திருத்தொண்டிற்கு உறுதுணையாக இருந்த கற்பாறையே தமது துன்பத்திற்கும் இறுதி தருவதாக என்று இவர் கருதினார். பலகாலும் திருத்தொண்டர்களது புனித ஆடை தோய்க்கப் பெற்றுப் பக்குவம் அடைந்த பாறையாதலின் அதன் மருங்கு இறைவரது திருக்கரந் தோன்றியருளியது.

சண்டேசுர நாயனார் புராணம்

"மெய்யம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்"

திருச்சேய்ஞலூர் என்னும் திருத்தலம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஒருபோதும் குறையாமல் நீர் தந்து சீர்தரும் காவிரிபாயும் சோழ வளநாட்டில் மண்ணியாற்றங்கரையில் நிலைபெற்றிருப்பது. குன்றம் எறிந்த குமாரக்கடவுள் விச்சுவகன்மனால் அந்நகரை உண்டாக்கி ஓரிரவு தங்கிச் சிவ பெருமானைப் பூசித்த தலம். அங்கு மறையவர் பலர் வாழ்ந்தனர். திருநீறு புனையும் ஒருமையும், இருபிறப்பின் சிறப்பும், முத்தழல் ஓம்பும் நெறியும், நான்கு வேதங்களைப் பயின்ற புலமையும், தமது பின் ஐம்புலன்களும் தொடர்ந்து வரும் தகைமையும், ஆறு தொழில்கள் புரியும் நிலைமையும் உடைய அம் மறையவர்களை ஏழு உலகங்களும் புகழும்.

மான்தோலுடன் கூடிய முப்புரி நூலையணிந்த அந்தண மரபின் மாணவச் சிறுவர்கள் பலர் வேதங்களை ஓதிக்கொண்டு சூழ்ந்திருக்க இடையில் ஆசிரியர் வீற்றிருக்கும் காட்சி, உடு (நட்சத்திரக்) கூட்டங்களுக்கு இடையில் முழுமதி விளங்குவது போல் திகழும். மேகங்கள் தவழும் அம் மடாலயங்களில் மேக முழக்கம்போல் வேதவொலி முழங்கும். அவியுணவு பெறவரும் திருமால், நான்முகன், இந்திரன் முதலியோர் ஊர்ந்து வரும் கருடன், அன்னம், ஐராவதம் முதலியன தங்குமிடம் போல் யூபத் தூண்கள் பல இருந்தன. வீதிகளில் பொழுதுதொறும் ஓமங்களுக்கு உதவும் பசுக்கள் மடியில் பால் ஒழுகச் செல்லும்; வேதியச் சிறுவர்கள் சாம வேதங்களைக் கூறிக்கொண்டு சமித்துக்களை எடுத்துக் கொண்டு செல்லுவர்; மறையவர் மகளிர் நீரில் முழுகிச் செல்லுவர். முத்துக்களைக் கொழிக்கும் மண்ணியாற்றங்கரையில் யாகசாலைகளும், வேள்வியை முடித்து யாகத் தலைவர்கள் ஏறும் பெரிய தேர்களும், அவிப்பாகமுண்டு அமரர்கள் ஏறும் விமானங் களும் நெருங்கியுள்ளன.

அபயர், குலோத்துங்கர் என்ற நாமங்களையுடையவரும், தில்லையெல்லையைப் பொன்வேய்ந்த புண்ணியருமாகிய அநபாயச் சோழர் அவதரித்த சோழ மரபில் முடிசூட்டிக் கொள்ளுவதற்குத் தகுதி வாய்ந்தவை என்று விளங்கும் ஐம்பெரும் பதிகளில் ஒன்று இத் திருச்சேய்ஞலூர்.

பண்ணின் பயனாம் நல்லிசையும் பாலின் பயனாம் இன்சுவையும்
கண்ணின் பயனாம் பெருகொளியும் கருத்தின் பயனாம் எழுத்தஞ்சும்
விண்ணின் பயனாம் பொழிமழையும் வேதப் பயனாஞ் சைவமும்போல்
மண்ணின் பயனாம் அப்பதியின் வளத்தின் பெருமை வரம்புடைத்தோ.

பண்ணின் பயன் நல்ல இசை; பாலின் பயன் இனிய சுவை; கண்ணின் பயன் பெருகும் ஒளி; கருத்தின் பயன் பஞ்சாக்கரம்; விண்ணின் பயன் மழை; வேதத்தின் பயன் சைவம்; அவைபோல் மண்ணின் பயன் இத்திருத்தலமாகும். இதன் வளமை வரம்பில் லாதது.

பெருமை மிகுந்த இப்பதியில், மறையவர் குலத்தில் தருமம் நிறைந்த காசிப கோத்திரத்தில், அரிய மணியும் கரிய நஞ்சும் தந்து நன்மைக்குந் தீமைக்கும் பிறப்பிடமாக இருக்கும் நாகம்போல் நல்வினை தீவினை என்ற இருவினைக்கும் ஒருவடிவாக எச்சதத்தன் என்ற ஒருவன் வாழ்ந்தனன்.

அந்த மறையவனுடைய மனைவியார் பவித்திரை என்னும் பேருடையவர்; சிறந்த மரபில் வந்தவர்; சுற்றத்தினர் விரும்புமாறு இல்லற தருமத்தை நடாத்துபவர்; நல்ல புதல்வர்ப் பேற்றைப் பெறுவதற்கு மாதவம் புரிந்தவர்; பற்றற்ற பரம்பரனைப் பற்றி பற்றறுத்து வாழும் பண்புடையவர். அவருடைய திருவுதரத்தினின் றும், நன்மைமிக்க மறைகளின் துறைகள் விளங்கவும், என்றும் மறையோர்களின் குலம் பெருகவும், ஏழு புவனங்களும் உய்யவும், அம்பலவாணருடைய சைவத்தின் உண்மை வளரவும், மாதவர் களின் வெற்றி விளங்கவும் விசாரசருமர் வந்து திருஅவதாரஞ் செய்தருளினார்.

நன்றி புரியும் அவர்தம்பால் நன்மை மறையின் துறைவிளங்க
என்று மறையோர் குலம்பெருக ஏழு புவனங் களும்உய்ய
மன்றில் நடஞ்செய் பவர்சைவ வாய்மை வளர மாதவத்தோர்
வென்றி விளங்க வந்துதயஞ் செய்தார் விசார சருமனார்.

விசார சருமருக்கு ஐந்து வயது நிரம்பியது; ஆறு அங்கங் களுடன் கூடிய நான்கு வேதங்களின் தெளிவாகச் சிவபெருமான்

மொழிந்தருளிய ஆகமங்களிலே முன்னைய அறிவின் தொடர்ச்சியினால், அரும்பில் அடங்கியிருந்த மணம் மலரில் வெளிப்படுவது போல், சிந்தை மலர சிவாகம உணர்ச்சியை அவர் அடைந்தார்.

ஏழு வயது நிரம்பியவுடன் உபநயனம் புரிந்தனர்; அவருடைய அறிவில் நலம் பொருந்தி எல்லாவுணர்வுகளும் தானே இயைந் திருந்தும் குலவொழுக்கப்படி அவரைப் பெற்றவர்கள் வேதம் ஓதுமாறு செய்தார்கள். ஓதுவிக்க வந்த ஆசிரியர்கள், கூறுவதற்கு முன் அறிகின்ற அவருடைய அறிவின் முதிர்ச்சியைக் கண்டு அதிசயித்தார்கள். எல்லையில்லாத கலையின் பொருள்களுக்கு எல்லை ஆடுந் திருவடியே என்று சிறிய பெருந்தகையார் தெளிந்தார். அகில உலகங்களும் உய்ய ஆனந்தக் கூத்தினைப் புரியும் அண்ணலாரே நம்மை யாளுடையவர் என்னும் உண்மையை உணர்ந்து உன்னுந்தொறும் உன்னுந்தொறும் அன்பு அவர்பால் ஊற்றெடுத்தது. பயன் கருதாது கடமைப்பாட்டில் மேன்மேலுங் காதல் பெருக, அந்த அன்பு நெறியில் திடம்பெற்று நிற்கும்போது, ஒருநாள் விசாரசருமர் வேதமோதும் மாணவர் கூட்டத்தினுடன் சென்றார்.

ஆங்கு ஒருபுறம் ஊராருடைய பசுக்கூட்டம் போய்க் கொண்டிருந்தது. அதில் இளங்கன்றையுடைய ஒரு பசு தன்னை மேய்ப்பானாகிய ஆயனைக் கொம்பினால் முட்டியது. அதனால் சிறிதுங் கருணையின்றிக் கோல்கொண்டு அப் பசுவைப் புடைத்தனன். அதைக்கண்ட விசாரசருமர் கருணையினால் அவனை வெகுண்டு, பசுவை அடிக்காவண்ணம் விலக்கினார். பசுவின் பெருமையை உணர்ந்த அவர் இடையனை நோக்கி உரைத்தருளுவார்.

"உலகிலே வாழும் எல்லா உயிர்களிலும் மேன்மையும் பெருமை யுடையன பசுக்கள்; புனிதமான தீர்த்தங்கள் யாவும் என்றும் பொருந்தப் பெற்றன; பசுக்களின் அங்கங்களில் தேவர் முனிவர் கணங்கள் முதலியோர் பிரியாது வாழ்கின்றனர். மதியும் நதியும் புனைந்த மணிகண்டப் பெருமானுடைய திருவடி மீது அபிஷேகம் புரிவதற்கு திருமஞ்சனமாகப் பஞ்சகவ்யங்களைத் தருகின்றன. உலகங்களையெல்லாம் காத்தருளும் கண்ணுதற் பெருமான் புனையுந் திருநீறு உண்டாவதற்கு மூலமாகிய கோமயத்தைத் தருகின்றன. பசுக்களைவிடச் சிறந்த பொருள் ஒன்று உண்டு என்று எண்ணலாமோ? பரம பிதாவாகிய பசுபதி பார்வதிதேவியுடன் எழுந்தருளிவரும் இடப தேவருடைய

குலமன்றோ பசுக்கள்?'' என்று நினைந்து கூறியருளினார். அன்றியும், புனிதமான இப்பசுக்களை இதமாக மேய்த்துக் காப்பாற்றுவதே சிறந்த கடன். இதுவே எம்பிரானுடைய திருவடித் தொண்டுமாகும். இதனினும் உயர்ந்த பணி இல்லை என்று திருவுளம் பற்றினார். நின்ற ஆயனை நோக்கி, ''நீ இனி பசுக்காக்குந் தொழிலை விட்டு விலகுவாய்; யான் இனி இந்த ஆன் குலங்களை மேய்த்துக் காத்து வருவேன்'' என்று அருளினார். இடையனும் வணங்கி அகன்றான். வேதியர்கள்பால் அனுமதி பெற்று விசாரசருமர் கோடைப் பயிருக்கு மழைபோல் நிரை காத்தலை மேற்கொண்டார்.

கோலும் கயிறுங் கொண்டும், சிறிய குடுமியசையவும், மான் தோலும் புரிநூலும் மார்பில் புரளவும், திருவரையில் கோவணம் ஒளி செய்யவும், பாலும் பயனும் பெருகுமாறு பசுக்களை இனிய புற்கள் நிறைந்த தூய இடத்தில் மேய்த்து, நல்ல தண்ணீரைக் குடிப்பித்து, குளிர்ந்த நிழலில் உறங்குவித்து தாய்போல் காத்து வந்தார். பால் கறக்கும் நேரத்தில் பசுக்களை அவரவர் இல்லங் களில் சேர்ப்பார்.

அன்புடனும், ஆதரவுடனும் இவர் பசுக்களை மேய்ப்பதனால், பசுக்கள் பெரிதும் மகிழ்ந்து இரவும் பகலும் இனிய பால்மடி பெருகிச் சுரந்தன. அழகு மிகுந்து பசுக்கள் செழித்து விளங்கின. பசுக்கள் செழித்து, முன்னையினும் பல மடங்கு பால் தருவதைக் கண்ட அந்தணர்கள் மனம் மிக மகிழ்ந்து விசாரசருமரைக் கொண்டாடினார்கள். அளவற்ற மகிழ்ச்சி அடையும் ஆன் இனங்கள் வீட்டில் கன்றைப் பிரிந்தும் வருந்தாமல், மறைக் கன்றாகிய விசாரசருமரைக் கண்டு உருகி, அன்பு பெருகிக் கனத்து மடிசுரந்து, கறவாமலே பால் பொழிந்தன. அதனைக் கண்ட அருளாளர் செம்மைநிறைந்த திருவுளத்தில் அவமே கழியும் பால் சிவமே பெறத் திருமஞ்சனம் புரிதல் வேண்டும் என்று உன்னினார். பண்டைத் தவவலிமையினால் சிவபூசையில் வேட்கை விளைந்தெழுந்தது. மண்ணியாற்றங் கரையில் ஆத்திமரத்தின் கீழ் சிவபூஜையே விளையாட்டுபோல், மணலால் சிவலிங்கத்தை நிறுவி சுற்று மதிலும் கோபுரமும் அமைத்துச் சிவாலயம் புதுக்கினார்.

அங்கண் முன்னை யர்ச்சனையின் அளவின் தொடர்ச்சி விளையாட்டாப்
பொங்கும் அன்பால் மண்ணிமணற் புளினக் குறையில் ஆத்தியின்கீழ்ச்
செங்கண் விடையார் திருமேனி மணலா லாக்கிச் சிவாலயமும்
துங்க நீடு கோபுரமும் சுற்றா லயமும் வகுத்து அமைத்தார்.

ஆத்தி மலரும், நல்ல தளிர்களும், அருகில் முல்லை நிலத்தில் பூத்துள்ள மலர்களையும் ஒரு பூக்கூடையில் தாமே அன்புடன் எடுத்து வைத்தனர். நல்ல புதிய குடங்களைக் கொணர்ந்து கறவைப் பசுக்களின் மடியைத் தீண்டியவுடன், பசுக்கள் கனைத்துப் பால் பொழிந்தன. மணலினால் நிறுவிய சிவலிங்க மூர்த்தியைத் திருப்பள்ளித் தாமத்தினால் அர்ச்சித்து, திருப்பாற் குடங்களினால் திருமஞ்சனம் புரிந்தார். இனிய துதிகளைக் கூறி கண்ணீர் மல்கிக் காதலுடன் வழிபாடு புரிந்தார். தேடிக் கொள்ளாதவற்றை அன்பினால் நிரப்பி பாவனையாகச் செய்து அருச்சித்தார். அவருடைய அன்பு கனிந்த பூசையை இறைவர் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டருளினார்.

இவ்வண்ணம் விசாரசருமனார், பசுக்கள் மகிழ்ந்து பொழியும் பாலினைக் குடங்களில் ஏந்தி நிரம்ப இறைவருக்கு அபிஷேகம் புரிந்து, பரிந்து மகிழ்வார். அதனால், பசுக்கள் பால் குறைவு இன்றி மறையோர் மனையில் வழக்கம்போல் வழங்கின. இயல் பாகவும் விளையாட்டாகவும் சிவபூசை பலநாள்கள் புரிந்தார். இதனைக் கண்ட அயலான் ஒருவன் இவருடைய உண்மைத் திறத்தை அறியாமல், அவ்வூர்ப் பொதுவில் சபை கூடியிருக்கும் அந்தணாளர்கட்கு அறிவித்தான்.

மறையோர்கள், "ஆயன் ஆன்குலங்களைக் காக்க அறியான்; யானே மேய்ப்பேன் என்று விசாரசருமன் கூறி எமது பசுக்களைக் கொண்டுபோய், பாலினைக் கறந்து வீணாக்குகின்றானா? நன்று நன்று; அவன் செயல் மிகவும் நன்று. இத் தீங்கினை அவன் பிதாவினிடம் தெரிவிக்க வேண்டும். எச்சதத்தனை அழை மின்கள்" என்றார்கள். ஆங்கு நின்றார் சென்று எச்சதத்தனை அழைத்து வந்தனர். சபையோர் எச்சதத்தனைப் பார்த்து, "ஐயா! உனது மகன் பசுக்களை மேய்த்துச் செய்கின்ற அடாத செயலைக் கேட்டி அந்தணாளர்களுடைய யாகத்திற்குக் கறக்கும் பசுக் கூட்டங்களை யெல்லாம் ஓட்டிக்கொண்டு போய், மேய்ப்பவன் போல் நடித்து, அவைகளின் பாலை மண்ணியாற்றங்கரையில் மணலிற் கறந்து மனம் போன போக்கில் விளையாடுகின்றானாம்; இது முறையோ?" என்று கூறினார்கள்.

எச்சதத்தன் அந்த வசனங்களைக் கேட்டு அச்சமுற்றான். "பெரியோர்களே! சிறுபயலாகிய அவன் புரிந்த இக்குற்றங்களை நான் இதற்கு முன் அறிந்தேனில்லை. இதுகாறும் புரிந்த குற்றங் களை கருணைமிகுந்த நீங்கள் பொறுத்தருள்வீர். இனி இவ்வாறு

நேரா வண்ணம் நான் பார்த்துக் கொள்வேன். இனி இப்படி நடந்தால் குற்றம் என்னுடையதே" என்று வணங்கி, விடை பெற்றுக்கொண்டு, சந்தியாவந்தனம் புரிந்து வீடு சென்றான். தனக்குப் பெரும் பழி வந்துவிட்டதாக நினைந்து வருந்தினான். மகனாரிடமும் இதனைத் தெரிவித்தானில்லை. இரவு நீங்கியபின் நேரில் கண்டு தண்டிக்க வேண்டும் என்று தீர்மானித்தான். இரவு நீங்கிட இரவி கீழ்க் கடலில் எழுந்தான். மைந்தனார் பசுக்களை ஓட்டிக்கொண்டு சென்றபின் மறை முதியோன் மறைந்து சென்றான்.

விசாரசருமர் ஊர் ஆன் குலங்களை மண்ணியாற்றின் மருங்கில் கொண்டு சென்றார். மறையோன் அங்கு ஒரு குராமரத்தின் மீது ஏறி ஒளிந்திருந்தான். அன்பு நிறைந்த அரும்பாலகர் நீராடி, முன்போல் மணற் கோயிலைப் புதுக்கி, மலர்களைப் பறித்து, பசுக்கள் பொழியும் பாலைக் குடங்களில் நிறைத்து அமைத்தார். சிவலிங்கத்தை நிறுவி, ஒன்றுபட்ட மனத்துடன் இறைவர் திருமுடி மீது மலர்சூடி இனிய பாற் குடங்களை எடுத்து ஆட்டுவாராயினார். அதைக்கண்ட முதியவனாகிய எச்சதத்தன் பெரிதும் முனிவு கொண்டான்.

தருவை விட்டிறங்கி, ஓடி மகனாருடைய திரு முதுகில் கைத் தடியால் ஓங்கி அடித்தான்; கொடிய மொழிகளைக் கூறி வைதான். சிறிய பெருந்தகை பொறிபுலன்கள் ஒருமைப்பட்டு இறைவன் திருவடியில் அர்ச்சனையில் காதல் வைத்திருந்தார். ஆதலின், அவைகளை அறிந்தாரில்லை. மதியினர் முதியவன் பலகாலும் அடித்ததை அறியாது பாற்குடங்களை மதிமுடிப்பரமன் மீது ஆட்டிக் கொண்டிருப்பதைக் கண்ட, மயக்கமுற்ற மறையோன் மிகவும் சினந்து திருமஞ்சனப் பாற்குடங்களைக் காலால் இடறினான்.

> சிந்தும் பொழுதி லதுநோக்கும் சிறுவ ரிறையில் தீயோனைத்
> தந்தை யெனவே யறிந்தவன்றன் தாள்கள் சிந்துந் தகுதியினால்
> முந்தை மருங்கு கிடந்தகோல் எடுத்தார்க் கதுவே முறைமையினால்
> வந்து மழுவா யிடஎறிந்தார் மண்மேல் வீழ்ந்தான் மறையோனும்.

தாம் புரியும் வழிபாட்டிற்குத் தடைநேர்ந்ததால் ஒன்று பட்டிருந்த அவருடைய சிந்தை அதை அறிந்தது. நிந்தை மிக்க தீமையைச் செய்தவனைத் தந்தையென அறிந்தார். அவனுடைய தாள்கள் சிந்துதற்குரியன என்று திருவுளம் பற்றி, அருகில் கிடந்த ஒரு கோலை எடுத்தார். சிவபெருமான் திருவருளால் அது

மழுவாயுதமாயிற்று. பாலைச் சிந்திய காலை வெட்டினார். மறையோன் மண்மீது வீழ்ந்தான். இறையருளால் கோலே மழுவாக இரு தாள்களையும் எறிந்தவுடன் தாதையாகிய பாதகன் வீழ்ந்து மாண்டவுடன், இடையூறு நீங்கியதாக எண்ணி மீண்டுஞ் சிவபூசை செய்யத் தொடங்கினார்.

பூதகணங்கள் சூழவும், இருடியரும் இமையவரும் வேதமொழி களை ஓதித் துதிக்கவும், காதலுடனே உமாதேவியாரோடு ஆதிய மலன் இடப தேவர் மீது தோன்றிக் காட்சி அளித்தனர். பாலகர் மனமகிழ்ந்து பரமன் பாதமலர் மீது வீழ்ந்து வணங்கினார்.

பூத கணங்கள் புடைசூழப் புராண முனிவர் புத்தேளிர்
வேத மொழிகள் எடுத்தேத்த விமல மூர்த்தி திருவுள்ளம்
காதல் கூர வெளிப்படலும் கண்டு தொழுது மனங்களித்துப்
பாத மலர்கள் மேல்விழுந்தார் பத்தி முதிர்ந்த பாலகனார்.

அடுத்தவரை ஆளும் அரனார், திருவடியில் விழுந்தவரை எடுத்து நோக்கி அருள்புரிந்து, "நம் பொருட்டாக ஈன்ற தாதையை விழ எறிந்தாய்; இனி உனக்கு நாமே அடுத்த தாதை" என்று கூறி அருளித் தழுவிக்கொண்டு, முதுகு தடவி உச்சிமோந்து மகிழ்ந்தருளினார். சிவபெருமானுடைய திருக்கரங்கள் தீண்டப் பெற்ற சிறுவனார், மாயைக்கிடமான உடம்பு சிவமயமாய் பொங்கி எழுந்த திருவருளில் முழுகி, மாலயனாதி வானவருந் துதிசெய்ய ஒளிமயமாக விளங்கினார்.

அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப னாக்கி யனைத்துநாம்
உண்ட கலமும் உடுப்பனவும் சூடு வனவும் உனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோம் என்றங் கவர்பொற் றடமுடிக்குந்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்.

விசாரசருமருக்கு, தொண்டர் தமக்கு அதிபராம் பதமும், தாம் உண்ட பரிகலமும், உடுக்கும் உடை அணிகலன் முதலியவையும், சூடும் திருமாலைகளும் உரிமையாகும் சண்டீசர் பதத்தை வழங்கி, தமது திருமுடி மீதிருந்த கொன்றை மலர்மாலையை இறைவர் சூட்டியருளினார். எல்லா உலகங்களில் உள்ளோரும் பெரிய மகிழ்ச்சியினால் ஹரஹர என்று ஆரவாரஞ் செய்யவும், எவ் விடத்தும் பூமழை பொழியவும், பல்லாயிரங் கணநாதர்கள் பாடியும் ஆடியும் மகிழவும், வேதங்கள் துதிக்கவும், பலவகையான வாத்தியங்கள் முழங்கவும், சைவ நன்னெறி வளர்ந்து ஓங்கவும், சண்டேச நாயனாராகிய எமது பெருந்தகை சிவபிரானைத் தொழுது சண்டேச பதவியில் அணைந்தார்.

உலகம் அறியப் பிழைபுரிந்த எச்சதத்தனாகிய முதிய மறையோன், சீலந் திகழும் திருச்சேய்ஞலூர்ப் பிள்ளையார் திருக் கரத்தின் கோலமழுவால் எறியுண்ட காரணத்தால் குற்றம் நீங்கிச் சுற்றமுடன் மூலமுதல்வர் சிவலோகத்தை யடைந்தார்.

விளக்கம்

திருச்சேய்ஞலூர் :-

குமரநாயகன் அமரர் அல்லலை அகற்றும் பொருட்டுத், திருக் கைலை மலையினின்றும் புறப்பட்டுத், தேவர்களுடனும், பூத சேனைகளுடனும் தென்திசை நோக்கி வரும்போது, மண்ணி யாற்றின் தென்கரையில் விச்சுவகன்மனால் ஒரு திருநகரை உண்டாக்கிச் சிவபூசை செய்தருளிய திருத்தலம் திருச்சேய்ஞலூர். திரு சேய் நல் ஊர் எனப் பிரியும்.

திரு ஆப்பாடி :-

இத்தலம் சண்டீச நாயனார் மண்ணியாற்றங் கரையில் மணலால் சிவலிங்கஞ் செய்து மணற் கோயில் அமைத்து பாலபிஷேகம் புரிந்து பூசித்துத் திருவருள் பெற்றது.

ஆடுதுறை புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே ஏழு கல் தொலைவில் உள்ள திருப்பனந்தாள் என்னும் திருத்தலத்திற்கு மேற்கே ஒன்றரை கல் தொலைவில் உள்ளது இது.

"மண்ணின் பயனாம் அப்பதி" என்று சேக்கிழாரடிகள் கூறுவதனால் இப்பதியின் பெருமை அளவிடற்கரியது. முருகப் பெருமான் உண்டாக்கியபடியாலும், சண்டேசப் பெருமான் அவதாரஞ் செய்தபடியாலும், திருஞானசம்பந்த சுவாமிகள், இத்தலத்திற்கு எழுந்தருளியபோது, முத்துச்சிவிகைவிட்டு இறங்கி நடந்துசென்று வழிபாடு செய்தருளினார்.

எச்சதத்தன் :-

இவன் காசிப கோத்திரத்தில் தோன்றிய வேதியன். சண்டேச நாயனாரைப் புதல்வராகப் பெறுவதற்குத் தவஞ் செய்தவன். ஆனால், அவருடைய சிவபூசைக்குத் தீங்குசெய்து அவரால் தண்டிக்கப்பட்டான்.

சண்டேசரைப் புதல்வராகப் பெறும் நன்மையும், சிவபூசைக்கு இடர்செய்த தீமையும் ஒருங்கே செய்தான். பாம்பு

மாணிக்கத்தையும் தரும், விடத்தையும் தரும். இவனை அரவுக்கு உவமையாகக் கூறும் அடிகளாரது கவித்திறன் மிகமிக விழுமியது.

"அருமை மணியும் அளித்ததுவே நஞ்சும் அளிக்கும் அரவுபோல்
இருமை வினைக்கும் ஒருவடிவாம் எச்ச தத்தன் உளனானான்."

இவன் தனது குலம்புரி நடையில் தவறாதவன் என்பதை "அந்தணாளர் தமை விடைகொண்டந்தி தொழுது மனைபுகுந்து" என்ற குறிப்பினால் அறிக.

சிவபூசைக்கு இடர்புரிந்த ஒன்றே இவன்புரிந்த மன்னிக்க முடியாத மலைபோன்ற தீமை.

சண்டேசப்பெருமானை ஈன்றளித்த புண்ணியத்தாலும், அவர் திருக்கரத்தினால் தண்டிக்கப் பெற்றமையாலும், அவன் செய்த தீவினை கழிந்து, சுற்றத்துடன் சிவலோகஞ் சார்ந்தான்.

பவித்திரை :-

சண்டேசரைப் பெறுவதற்குப் பெருமாதவம் புரிந்த அன்னை எச்சதத்தனைப்போல் அன்றி நற்றவமே புரிந்தவர். இவரைப்பற்றி அடிகளார் கூறும் இனிய சொற்களால் இந்த அம்மையாருடைய புகழ் நனி விளங்குகின்றது.

"சுற்றம் புகழும் இல்வாழ்க்கைத் தொழிலாள்"
"பற்றை எறியும் பற்றுவரச் சார்பாயுள்ள பவித்திரை"

விட்டகுறை :-

ஒருவனுக்கு அறிவு நல்லொழுக்கம் முதலியன உண்டாவது முன்னைப் பிறப்பின் தொடர்ச்சியேயாம்.

"முற்பிறப்புக்களிலே நல்ல மலர்களினாலே அருச்சித்து வழிபட்டதனால் இப்போது அடியேனுக்குப் பிரமாபுரமேவிய பெம்மான் அருள் செய்தான்" என்று திருஞானசம்பந்தர் கூறுமாறு காண்க.

"ஏடுடைய மலரால் முனைநாள் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான்"

பாண்டவர்கள் வில்வித்தை பயிலுதற்குத் தொடங்கியபோது "முதலே நின்ற குறையாலும்" என்பார் வில்லிபுத்தூரார்.

சண்டேசருக்கு முற்பிறப்புக்களில் இருந்த நல்லுணர்ச்சியின் தொடர்பினால் ஐந்து வயது வந்தவுடன் வேதாகமங்களின்

உணர்வு தலைப்பட்டது. அரும்பில் மணம் அடங்கிக் கிடந்து மலரும் பொழுது வெளிப்படுவதுபோல் என அறிக.

ஐந்து வருட மவர்க்கணைய அங்க மாறும் உடன்நிறைந்த
சந்த மறைக ளுட்படமுன் தலைவர் மொழிந்த ஆகமங்கள்
முந்தை யறிவின் தொடர்ச்சியினால் முகைத்த மலரின் வாசம்போல்
சிந்தை மலர வுடன்மலரும் செவ்வி யுணர்வு சிறந்ததால்.

தாய்தந்தையர் இவரை உபநயனம் புரிந்து ஓதுவிக்கும் ஆசிரியர்கள் ஓதுமுன் எல்லாக் கலைகளும் தாமே ஓதியுணர்ந்தார்.

"கல்வியின் பயன் கடவுளை யடைதலே"
கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

என்ற திருவள்ளுவர் திருவாக்கையும் உன்னுக.

"அலகில் கலையின் பொருட்கெல்லை யாடுங் கழலே எனக்கொண்ட
செலவு மிகுந்த சிந்தையினில் தெளிந்தார் சிறிய பெருந்தகையார்"

பசுவின் பெருமை :-

பசுவை ஓர் ஆயன் அடித்ததைக் கண்ட நாயனார் உள்ளம் உருகி அவனை விலக்கிப் பசுவின் பெருமையை உணர்ந்து அவைகளைக் காத்தலே சிவப்பணி என்று தெளிந்து பசுக் காத்தலை மேற்கொண்டார்.

எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதங்களுக்குள்ளும் பசு தலைசிறந்தது. எல்லா உயிர்களின் மலங்களும் அருவருப்பு டையவே. பசுவின் சாணம் புனிதமானது. ஏனைய மலங்களின் அசுத்தத்தைப் பசுவின் சாணம் இட்டு அகற்றுதல் கண்கூடு. சிறந்த நன்மைகள் பசுவின் சாணத்தால் விளைகின்றன. பரமேசுரர் ஏறியருளும் இடபதேவருடைய திருக்குலம் பசு. பசுவினிடமிருந்து பால், தயிர், வெண்ணெய், நெய், மோர் முதலியன உண்டாகி மனிதர்கட்குப் பெருஞ்சுகத்தைத் தருகின்றன. அரனார் திரு முழுக்குக்குப் பஞ்சகவ்யம் உதவுகின்றது. திருநீற்றுக்கு மூலமாகிய கோமயத்தைத் தருகின்றது.

பசுக்களின் அங்கங்களில் சகல தேவர்களும் வாழ்கின்றனர்.

பசுவின் கொம்பினடியில் - நாராயணரும் நான்முகனும், கொம்பின் நுனியில் - கோதாவரி முதலிய தீர்த்தங்களும்

சராசரமும், சிரத்தில் - சிவபெருமானும், நடுநெற்றியில் - பார்வதிதேவியும், நாசிநுனியில் - முருகவேளும், உள்நாசியில் - திசைபாலகர்களும், செவிகளில் - அசுவினி தேவர்களும், கண்களில் - சந்திர சூரியரும், பற்களில் - வாயுதேவனும், நாவில் - வருண பகவானும், இதயத்தில் - வாணியம்மையும், கபோலத்தில் - இயமனும் இயக்கர்களும், உதட்டில் - காலை உச்சி மாலை என்ற முக்கால தேவதைகளும், கழுத்தில் - இந்திரனும், இடையில் - அருக்கதேவரும், மார்பில் - சரத்தியரும், நான்கு கால்களில் - அநிலர்களும், முழங்காலில் - மருத்துக்களும், குளம்பின் நுனியில் - நாகவுலகத்தார்களும், குளம்பின் நடுவில் - கந்தருவரும், மேற்குளம்பில் - தேவமாதரும், முதுகில் - உருத்திரரும், சந்துகளில் - வசுக்கள் எண்மரும், அரைப்பரப்பில் - பிதிர்தேவர்களும், பகத்தில் (குறி) - ஏழு கன்னியரும், குதத்தில் - இலக்குமிதேவியும், அடிவாலில் - அமரர்களும், வால்மயிரில் - கதிரொளியும், கோநீரில் - ஆகாய கங்கையும், கோமயத்தில் - யமுனையும், வயிற்றில் - பூமிதேவியும், முலைகளில் - பெருங் கடல்களும், வயிறு இதயம் முகம் என்ற மூன்று இடங் களில் - காருகபத்தியம் ஆகவனீயம் தக்கிணாக்கினி என்ற முத்தீயும், எலும்பிலும் சுக்கிலத்திலும் - வேள்வித் தொழில்களும், எல்லா அவயவங்களிலும் - கற்புடை மாதர்களும் நீங்காது வாழ்வார்கள்.

பசுவின் இரண்டுமடி அதன் கன்றுக்கும், இரண்டு மடி நமக்குமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதனைப் புல்லுள்ள தூய இடத்தில் மேய்த்தும், நல்ல நீரைக் குடிப்பித்தும், குளிர்ந்த நிழலில் உறங்குவித்தும் காப்பாற்றுதல் வேண்டும்.

ஒரு பசுவுக்குப் புல் கொடுத்தால் ஆயிரம் பேருக்கு அன்னதானம் புரிந்த புண்ணியம் உண்டாகும்.

"யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை"

என்பார் திருமூல் நாயனார்.

அதனால், கண்ணபிரான் பசுக்களைக் காப்பாற்றும் ஆயர் குலத்தில் பிறந்து, தாமும் பசுக்களைக் காப்பாற்றிக் கோபாலன் என்னும் திருப்பேரைப் பெற்றனர்.

அன்பின் திறம் :-

ஆனினங்கள் மிகுந்த செழுமையுற்றுக் கறவாமலேயே பால் பொழிவதை, சண்டேசநாயனார் கண்டவுடன், அதனை வேறு

வகையில் பயன்படுத்த எண்ணாது, சிவனுக்கு அபிஷேகம் புரியவே கருதினார். எல்லாவற்றையும் இறைவனுக்கு அர்ப்பணஞ் செய்தலே அடியவர் கடமை.

மண்ணியாற்றங்கரையில், ஆத்திமரத்தின் அடியில் மணலால் கோயிலும் சிவலிங்கமும் சமைத்து, அயரா அன்புடன் சிவபூசை புரிந்தார்.

எச்சதத்தன் என்ற தந்தை, இவருடைய இணையில்லாத அன்பின் திறத்தை அறிந்தானில்லை. இவரை வெகுண்டு முதுகில் அடித்தும் வைதும் துன்புறுத்தினான். ஆனால், சிவபூசையில் அழுந்தியுள்ள சண்டேசர் அவைகளை அறிந்தாரில்லை. எச்ச தத்தன் பாற்குடங்களை உதைத்து உருட்டியதை உணர்ந்தார். சிவபூசையில் அழுந்தியிருந்த அவர், அதற்குத் தடையை அறியுமாறு ஏற்பட்டது, தந்தையென்று அறிந்தார். ஆனால், சிவாபராதம் செய்த அவனைத் தந்தை யென்று கருதினாரில்லை. அருகிலிருந்த கோலை யெடுத்தார். சிவமயமாக நிற்கும் அவருடைய சங்கல்பம் சிவ சங்கல்பமாகும். அதனால், அது மழுவாயுதமாயிற்று. உதைத்த தாளையும், அதற்குத் துணைபுரிந்த தூளையும் வெட்டினார். அவன் வீழ்ந்து மாண்டான்.

தந்தை. அதினும் அந்தணன். அந்தணனைக் கொன்ற பாதகம் அவரைச் சாரவில்லை. அதற்கு எதிராக சிவபெருமானுடைய திருவருளை யடைந்தார். காரணம், சிவபூசையின் உயர்வே; நல்வினை, தீவினையென்பது செயலால் இல்லை. அவைகளின் பயனைச் சார்ந்திருக்கின்றது. ஒருவன் ஓர் உயிருக்குத் தீங்கு விளையுங்காலை பொய் கூறுகின்றான். அதனால், அவனுக்குத் தீவினையேற்படாது. பசுவைக் கொல்லும் பொருட்டு வாள்தாங்கி வந்த ஒருவன் வழியில் நின்றானைப் பார்த்து, "பசு இவ்வழி போயிற்றா?" என்று வினாவினான். நின்றவன் "ஆம் இவ்வழி சென்றது" என்று மெய் கூறினான். அதனால், அவன் தீவினை யாளனாகின்றான். மெய், பொய் என்பது அதன் பயனை யொட்டி இருக்கின்றது.

மன்மதன் சிவபெருமான்மீது மலரை எறிந்தான்; ஆனால், எரிந்தான். சாக்கியர் கல்லை எறிந்தார். அருள் பெற்றார். காரணம் என்னை? மன்மதன் நல்ல எண்ணத்துடன் மலரை எறியவில்லை. இறைவரை மயக்கவேண்டும் என்று கருதினான். மலர் எறிந்த செயல் நல்லதுதான். அதன் உள்ளுறை கொடிது. சாக்கியர் கல்லை எறிந்த செயல் கொடிது. அவருடைய மனத்தில் வன்கண் இல்லை.

தாயை நிந்தித்த பரதரும், தந்தையைப் பகைத்த பிரகலாதரும் பெரும்பேறு பெற்றதையும் உன்னுக.

தக்கன், வேள்வி புரிந்தான் - சிவமயம் இல்லை. அதனால், அது பாவமாயிற்று, தண்டிக்கப்பட்டான்.

சண்டேசர் தந்தையைக் கொன்றார். சிவமயமானது, அதனால் அது புண்ணியமாயிற்று. திருவருள் பெற்றார்.

அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
நரரினில் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே.

- சிவஞானசித்தியார்

செல்லாரும் பொழில்புடைசூழ் புலியூரம் பலவாண
தேவா வும்மைக்
கல்லாலும் வில்லாலும் செருப்பாலும் பிரம்பாலும்
கடிந்து சாடும்
எல்லாரும் நல்லவரென் றெண்ணியரு ளீந்ததென்ன
இகழ்ச்சி யொன்றும்
சொல்லாமல் மலரால்விட் டெறிந்தவனைக் காய்ந்ததென்ன
சொல்லு வீரே.

- சொக்கநாதப் புலவர்

வில்லால் அடித்த விஜயனுக்கு வரங் கொடுத்த விமலன் சண்டீசர் தாதையைக் கொன்ற பாதகத்திற்குப் பொற்கோயிலும், பரிகலமும், மாலையும் தொண்டர் தலைமையும் என்ற பரிசும் தந்தனர்.

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு மண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக் குப்பரிசு தந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

- சேந்தனார்

தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்.

- மணிவாசகர்

பொதுவாக இறைவர் உயிர்களுக்கெல்லாம் தந்தை. சண்டேசருக்குச் சிறப்பாகத் தந்தையாயினார். வேதம் மொழிந்த

திருவாக்கால் விமலன் சண்டேசரை நோக்கி, "அடுத்த தந்தை யினியுனக்கு நாம்" என்று அருளிச் செய்வாராயின் சண்டேசர் பெருமை அளவிடற்கு ஒல்லுமோ?

பரமபதியின் திருக்கரத்தினால் தீண்டப் பெற்று, இந்தப் புலால் உடம்பே சிவமயமான ஒளியுடம்பாக மாறப் பெற்றார்.

சண்டீசர் :-

சண்டீசர் என்பது ஒரு பதவி. சிவபெருமான், உமா தேவியார், விநாயகர், முருகவேள், சூரியன் இவர்களுக்குத் தனித்தனியே சண்டீசர் உண்டு. அந்தச் சண்டீச பதவியில் உள்ளவர்கள், அந்தந்த மூர்த்திகளை வழிபடுவோர்க்கு அவ்வவ் வழிபாடுகளின் பயனை அளித்து அருள்புரிவார் கள்.

சண்டீசர் இடையறாத தியானத்துடன் இருப்பர். அதனால், இவரது கோயிலுக்கும் தீர்த்தத் தொட்டிக்கும் இடையில் போகக்கூடாது. சிவாலய வழிபாடும், சிவபூசையும், சண்டீசர் வழிபாட்டுடன் முடிவு பெறுகின்றன. சிவ தரிசனை முடிந்தபின், சண்டீசர் திருக்கோயிலை அடைந்து, வணங்கிச் சிறிதே ஒலிவரு மாறு கைகளைத் தட்டி, தாம்பெற்ற சிவ நின்மாலியங்களை அவரிடஞ் சேர்த்து, சிவதரிசனைப் பயனைத் தந்தருளுமாறு வேண்டிக் கொள்ளுதல் வேண்டும்.

சண்டேசுரநாயனாரை, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் என்ற சமய குரவர் நால்வரும், சேந்தனார், உய்யவந்த தேவர் முதலிய பெரியோர்களும் மிகமிகச் சிறப்பாகப் புகழ்ந்து பாராட்டித் துதிசெய்திருக்கின்றனர். இத்தனைக்கும் காரணம் இவரது சிவபூசையின் சிறப்பே. பிறப்பு இறப்பு என்னும் பெருங்கடலைக் கடந்து, அழியாத தூய இன்ப ஊற்றுக்கு உறைவிடமாகிய சிவனடி சார்வதற்கு எளியதும் இனியதுமான சாதனம் சிவபூசையே. சிவபூசையின் பெருமை யைக் கீழ்வரும் திருவிருத்தங்களால் அறிக.

ஒருகு டங்கையில் சலங்கொண் டறுகுவில்வ மொன்றினால்
திருகு சிந்தையற் றிலிங்க பூசைசெய்த சீலர்தாம்
பெருகி யுற்ற பிருதிவிப் பரப்பெலாம் புரந்துபின்
அருகி ருந்து சிவபதத்தில் அரசு செய்ய வல்லரே.

கன்றெடுத்து விளவெறிந்து காலெடுத்த மழைக்குடைந்த
காலி காக்கக்
குன்றெடுத்த மால்விடையின் கொடியெடுத்து வடிவெடுத்துக்
கூறொ ணாத
மன்றெடுத்த சேவடியில் மலரெடுத்துச் சாத்தியன்பின்
வழிபட் டோர்கள்
இன்றெடுத்த உடற்பிறவி இனியெடா வண்ணமெண்ண
மெய்து வாரே.

- சிவரகசியம்

❀ ❀ ❀

திருநாவுக்கரசு நாயனார் புராணம்

"திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்"

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணாமை யுணராதேன்.

வளமை நிறைந்த நாடு திருமுனைப்பாடி நாடு. நல்ல ஒழுக்கத்தில் நின்று நலஞ்சிறந்த மக்கள் வாழும் சிவதலங்கள் பல வுடையது. பெண்ணை நதி பெருகியோடுவதனால் வளம் பெருகி விளங்கும்.

நீரோடுங் கால்களில் வரால் மீன்கள் உலாவும்; கரும்புகளில் தேன் துளித்து வழியும்; வயல்களில் நீண்ட நெற்பயிர்கள் ஓங்கி நிற்கும்; பக்கங்களில் குலைகளுடன் கூடிய பாக்கு மரங்கள் நிற்கும்; படைச்சால் உழுத இடங்களில் முத்துக்கள் கிடைக்கும். தடாகங்களில் செங்கழுநீர் மலர்ந்து மணக்கும்; விருந்து எப்போதும் திருந்த உள்ள வீடுகளின் மேலிடங்களில் அகில் தூபம் கமழும். கரிய எருமைகள் வாவிகளில், கடலில் படியும் கருமேகம்போல், மலர்களை மேயப் புகுந்தபொழுது வரால் மீன்கள் மடிகளில் முட்ட, கன்றுகள் முட்டுவதாக எண்ணிப் பால் சொரியும். பாலுடன் கலந்த நீரலைகள் கரைகளில் புரளும்.

இத்தகைய பல வளங்களுடன் கூடிய அந்நாடு எந்நாட்டினுஞ் சிறந்தது. பொன்னாடும் அதற்கு இணையாகாது. பாவத்தை விளைவிக்கின்ற தீ நெறிகள் மாறும்படி, சிவபெருமானுடைய உண்மை நெறியறத்தை உலகத்திற்குத் தரும் பொருட்டுத் திரு நாவுக்கரசு நாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் திருவவதாரஞ் செய்த நாடு திருமுனைப்பாடி நாடு. அதன் பெருமையை யாரே உரைக்கவல்லார்?

மறந்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தருநா வுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள வுளதானால் நம்மளவோ பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடும் சீர்ப்பாடு.

மேலும் வரந்தருவார் என்ற சிறந்த புலவர் (வில்லிப்புத்தூராரது புதல்வர்) இந்த நாட்டினை வாய்குளிர மனங்குளிர கேட்ட காது குளிரப் பாடுமாறுங் காண்க.

பாவருந் தமிழால் பேர்பெறு பனுவல்
பாவலர் பாதிநா ளிரவில்
மூவரு நெருக்கி மொழிவிளக் கேற்றி
முகுந்தனைத் தொழுதநன் னாடு
தேவரு மறையும் இன்னமுங் காணாச்
செஞ்சடைக் கடவுளைப் பாடி
யாவரு மதித்தோர் மூவரில் இருவர்
பிறந்தநா டிந்தநன் னாடு.

இத்தகைய அத்திருநாட்டில் எல்லாவூர்களும் புனிதமானவை; அவற்றுள் தெய்வநெறிச் சிவம்பெருகும் திருவுடையவூர் திருவாமூர் என்பது. அந்த ஊரில் தேய்ந்திருப்பது மாதரிடையே; கருத்திருப்பது மாதரது பூங்குழலே; அங்கே மாந்தர்கள் கற்றுக் கொள்ளாதது கரவு என்ற ஒன்றே. அங்கே இல்லாதது வறுமை என்ற சிறுமையே. அப்பதியில் வேளாண் குலத்தினுள் குறுக்கையர் குடி என்ற பெருமையுடைய குடியிலே புகழனார் என்பவர் ஒருவர் இருந்தார். மனையறம் புரிந்து விருந்தோம்பும் மேன்மையினார்; திசையெங்கும் புகழ அவர் அருளும் பொருளும் உடையராய் வாழ்ந்தார். அவருடைய வாழ்க்கைத் துணைவி யாராக அமர்ந்திருந்தவர் மாதினியார். இவரினும் மேம்பட்ட மாது இனி யார்? என்று வையம் புகழும் தெய்வநலக் கற்புடன் அத்திருவாட்டி கணவனாருடன் கூடி மனையறம் புரிந்து வந்தார்.

அவருடைய திருவுதரத்திலே, செந்தாமரையில் செந்திருமகள் தோன்றியதுபோல் ஓர் அழகிய பெண் மகவு தோன்றியது; "திலகவதி" என்று பேரிட்டு இனிது வளர்த்தனர்.

திலகவதி யார்பிறந்து சிலமுறையாண் டகன்றதற்பின்
அலகில்கலைத் துறைதழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில்வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர்போற்பின்
மலருமருள் நீக்கியார் வந்தவதா ரஞ்செய்தார்.

சில ஆண்டுகளுக்குப் பின் மாதினியார் கருவுற்றார். சிவ பெருமானுடைய திருவருளாலே கலைத்துறைகள் யாவும் தழைக்க வும், அருந்தவத்தோரது அன்புநெறி வாழவும், இருளை நீக்கி ஒளியை யுண்டாக்கும் இளஞ்சூரியனைப்போல், அக இருளை

நீக்கி ஞான ஒளியை வீசவும் மருள்நீக்கியார் அவதரித்தார். புகழனார் பெரிதும் மகிழ்ந்து குழந்தைக்குச் செய்ய வேண்டிய மங்கல வினைகளைக் குறைவின்றிச் செய்தார். பெற்றாரும் உற்றாரும் உள்ளம் உவக்க மருணீக்கியார் இனிது வளர்ந்தார். உரிய வயதில் சௌளமாதி கன்மங்களைச் செய்வித்துக் கலை பயில்வித்தனர். முன்னமே எல்லாக் கலைகளும் ஆன்ம அறிவில் அமைந்திருந்தபடியால் கற்பூரமலையில் தீப்பிடித்ததுபோல் மருணீக்கியார் சகல கலைகளிலும் வல்லுநராக ஆனார். மறுவில்லாத மாமதிபோல் வளர்கின்றார்.

திலகவதியாருக்கு பன்னிரண்டு ஆண்டு நிரம்பியது. வேளாண் குலத் தலைவராகிய கலிப்பகையார் என்பவர் அன்பும் அறனும் அமைந்திருந்தார். சிவபெருமானுடைய அடிமைத் திறத்தில் சிறந்தவர். மன்னனிடத்தில் அருளுடையவர். போர்புரிவதில் சிங்க ஏறு போன்றவர். சிறந்த எழில்நலமும் படைத்தவர். கல்வி கேள்விகளில் உயர்ந்தவர். அவர் திலகவதியாரை மணந்துகொள்ள விரும்பி அறிவிற் சிறந்த ஆன்றோரைப் புகழனார்பால் மணம் பேசுமாறு அனுப்பினார். வந்த பெரியோர்களைப் புகழனார் வரவேற்று நலம் உசாவி, உண்டி தந்து உபசரித்தார். வந்தவர்கள் புகழனாரை நோக்கிக் கலிப்பகையாருக்குத் திலகவதியாரை மணம் புரிவித்துத் தருமாறு கேட்டார்கள். புகழனார் குலம், குணம் முதலியவைகளைக் கேட்டறிந்து, எல்லாம் பொருந்தியிருந்த படியால் பெண் தருவதாக இசைந்தார். ஆன்றோர்கள் கலிப் பகையார்பால் சென்று புகழனார் பெண்தர இசைந்ததை அறிவித்தார்கள். திருமணம் முடிக்கக் கருதும்போது, மன்னனுடன் வடநாட்டு அரசர்கள் பகைத்துப் போர்புரிய வந்தார்கள். வேந்தன் விறல் வீரராகிய கலிப்பகையாரை அழைத்து பெருஞ்சேனையுடன் சென்று போர்புரியுமாறு ஏவினான். கலிப்பகையார் மன்னன் பணியை யாற்றுவதற் பொருட்டு, போர்க்கோலம் புனைந்து, நால்வகைப் படையுடன் சென்று எதிரிகளுடைய சேனைக் கடலில் நீந்துவாராயினார். சில நாட்கள் போர் தொடர்ந்து நடந்தது.

புகழனார் வினையின் தொடர்பினால் நோய்வாய்ப்பட்டு விண்ணுலகஞ் சேர்ந்தார். மனத்தாலும் நினைக்க முடியாத கற்புடைய மாதினியார் மக்களையும் சுற்றத்தையும் துகளாகக் கருதிக் கணவனாருடன் தொடர்ந்து விண்ணுலகஞ் சென்றார். தந்தையாரும் தாயாரும் இருவரும் இறந்தது கண்டு திலகவதி யாரும் மருணீக்கியாரும் சுற்றத்துடன் துன்பவாரிதியில்

முழுகினார்கள். உறவினர் தேற்ற ஒருவாறு மனந்தேறிய திலகவதியார் தம்பியைக் கொண்டு ஈமக்கடனும் நீர்க்கடனும் செய்வித்தார்.

பகைவர் மீது போருக்குப் போயிருந்த கலிப்பகையார் போர்க் களத்தில் உயிரைக் கொடுத்துப் புகழினைக் கொண்டார். கலிப் பகையார் வீர சுவர்க்கஞ் சேர்ந்த செய்தி எங்கும் பரவியது. திலகவதியார் அது கேட்டுப் பெரிதும் வருந்தினார்.

"எமது தாயுந் தந்தையும் அவருக்கு என்னைத் தருவதாக இசைந்தார்கள்; அதனால் நான் அவர்க்கே உரியவள்; அவர் உயிர் துறந்தபின் எனக்கு இவ்வுலகில் என்ன வாழ்வுளது? ஆதலினால், என் உயிரை அவருடன் சேர்ப்பேன்'' என்று உயிர்விடத் துணிந்தார். மருணீக்கியார் அதுகண்டு அளவற்ற அல்லலுற்று, தமக்கையார் தாள் மீது வீழ்ந்து, மிகவும் அழுது, "அன்புவடியாய சகோதரீ! அன்னையும் அத்தனும் என்னைவிட்டுப் பிரிந்தனர். நாயினேனுக்குத் தங்கள் திருவடி ஒன்றே துணை; இப்போது கொழு கொம்பாகவுள்ள தாங்களும் என்னைத் தனியே விட்டு மாள்வீராயின் யான் உமக்கு முன் உயிர் விடுவேன்'' என்று கூறித் துன்ப வெள்ளத்தில் அழுந்தினார். திலகவதியார் தம்பியார் மீதுள்ள கருணையினால் அவரை உய்விக்கும் பொருட்டுத் தமது உயிரைப் பிரிக்காது, நூல் தாங்காது உயிர் தாங்கி, எல்லாவுயிர் களுக்குங் கருணை புரிந்து வீட்டினுள் இருந்து தவம் புரிவாரா யினார். அணிகலன்கள் யாவும் நீத்து வெண்புடவையுடுத்து கைம்பெண்களின் கோலத்தில் இருந்து சிவசிந்தைபுரியும் அவருடைய பெருமையை யாரே அளக்கவல்லார்?

தம்பியா ருளராக வேண்டுமென வைத்ததயா
வும்பருல கணையவுறு நிலைவிலக்க வுயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யார்இருந்தார்.

மருணீக்கியார் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வ நிலையாமைகளைச் சிந்தித்து உணர்ந்தார். நல்லறங்கள் புரியவேண்டுமென்று துணிந்தார்.

நிரம்பப் பொன்னைத் தந்து அறச்சாலைகளும் தண்ணீர்ப் பந்தரும் அமைத்தார். பறவைகளுக்கும் மனிதர்களுக்கும் உதவு மாறு சோலைகளை வைத்து வளர்த்தார். குளம் வெட்டினார்; கடமையில் வழுவாது நின்றவர்க்கு வேண்டுவன மகிழ்ச்சியுடன்

தந்தார்; விருந்தினரை உபசரித்தார்; புலவர்களுக்கும் நிரம்ப வழங்கினார். இவ்வாறு, பலப்பல தருமங்களைப் புரிந்தார்.

நிலையில்லாத இவ்வுலக இயல்பைக் கண்டு, "இம்மாய வுலக வாழ்க்கையிற் சிக்கி நான் உழலேன்'' என்று மருணீக்கியார் அறவே துறந்து, சமயங்களில் நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினால், கொல்லாமைக்குள் மறைந்துறையும் சமண்சமயங் குறுகினார். பாடலிபுத்திரம் என்னும் பதிசென்று சமணப்பள்ளியில் சேர்ந்தார். அங்குச் சமண சமயக்கலைகளை எல்லாம் பயின்று வல்லுநராயினார். சமண குருமார்கள் தங்களினும் மேலான புலமை பெற்ற மருணீக்கியார்க்குத் தருமசேனர் என்னும் பேர் சூட்டினார்கள். தருமசேனர் தமது சிறந்த மதிநுட்பத்தினால் புத்தர்களையும் வாதில் வென்று சமணசமயத்தில் தலைமையைப் பெற்றார்.

தவவொழுக்கத்தில் நிற்குந் திலகவதியார்; தம்பியார் சமண் சமயம் புக்கதனால் மனம் உலைந்து, சுற்றத் தொடர்பை யொழித்து, சிவநன்னெறியைச் சார்ந்து திருத்தொண்டு புரிய விரும்பினார். கெடில நதிக்கரையில் திகழும் திருவதிகை வீரட்டானம் என்னும் திருத்தலத்தை அடைந்தார். ஆங்கு ஒரு திருமடத்தைப் புதுக்கி, சிவசின்னங்களைப் புனைந்து, அளப்பற்ற அன்புடன் திருக்கோயில் திருத்தொண்டுகள் புரியத் தொடங்கினார். பொழுது புலர்வதன் முன் எழுந்து கெடிலத்தில் முழுகுவார். திருக்கோயிலின் முன்கூட்டி பசுவின் சாணத்தால் மெழுகுவார். திருநந்தனவனஞ் சென்று மலர்களைக் கொய்து திருமாலைகளைத் தொடுத்துத் தருவார்.

இவ்வாறு, திருத்தொண்டுகள் புரியும் திலகவதியம்மையார் தமது பின் பிறந்த இளையவர் பரசமயம் புகுந்தது குறித்துப் பெரிதும் வருந்தினார். தூண்டா விளக்கனைய சிவசோதியைத் தொழுது, ''ஐயனே! என்னை ஆண்டருளினீராயின் என் தம்பியைப் பரசமயப் படுகுழியினின்றும் எடுத்து அருள்புரிவீர்!'' என்று பன்முறையும் விண்ணப்பம் புரிந்தார். வேண்டுவார் வேண்டியதை வேண்டியவாறளிக்கும் விடையவர் அம்மையாரது கனவில் தோன்றி, "உன்னுடைய மனக்கவலையை யொழிவாய்; உன்னுடைய உடன்பிறந்தான் முன்னமே முனியாகி என்னை யடையத் தவம் புரிந்தவன். அவனை இனி நாம் சூலைநோய் தந்து ஆட்கொள்வோம்'' என்று அருள்புரிந்தார். முற்பிறப்பில் செய்த நல்ல தவத்தில் சிறிது வழுவிய தொண்டரை யாளும்

பொருட்டு வயித்தியநாதப் பெருமான் சூலைவேதனையை மருணீக்கியாருக்கு அருளினார். அவருடைய வயிற்றில் சூலைவலி புகுந்தது; வடவனலும் கொடுவிடமும் வச்சிரமும்போல் புகுந்த அச்சூலை குடரினிடை குடைந்தது. அதனால், மருணீக்கியார் சமணப் பாழியினுள் மயங்கி வீழ்ந்தார். தாம் கற்ற மணி மந்திர மருந்துகளால் அதனைத் தீர்க்க முயன்றும், சூலை தணியாமல் மிகவோங்கியது. நச்சுப் பாம்பின் விடந் தலைக்கேறியதுபோல் மயங்கினார். சமணகுருமார் பலர்கூடி, “இதுவரை கண்டிராத சூலை இவர்க்கு வந்துவிட்டதே. இனி செய்வது யாது?'' என்று கவன்றனர்.

தவமென்று அவம் பெருக்குஞ் சமணர்கள் குண்டிகை நீர் மந்திரித்துக் குடிப்பித்தனர். மயிற்பீலியால் காலளவுந் தடவினார்கள். கற்ற விதங்கள் பலவுங் கொண்டு பரிகரிக்க முயன்றும், அந்நோய் முன்னையினும் பன்மடங்கு மிகுந்தது. அதனால், மருணீக்கியார் அல்லல் உற்று அலமந்தார். “ஆ! ஆ! இது நம்மால் போக்கரிது” என்று சமண்குண்டர்கள் கைவிட்டார்கள். மருணீக்கியார் மனந்தளர்ந்தார். தமக்கையார் நினைவு வந்து, தமக்கு வந்த இடரை அவருக்கு அறிவிக்குமாறு சமையல்காரனை அனுப்பினார்.

அவன் திருவதிகை வந்து விடியற்காலை திலகவதியார் நந்தவனத்தின் புறத்தே வரும்பொழுது கண்டு பணிந்து, “அம்மே! அடியேன் தேவரீரது தம்பியார் அனுப்ப வந்தேன்” என்றான். அம்மையார் “தீங்கு உளவோ?'' என்று வினாவினார். “அம்மே! சூலைநோய் கொல்லாது குடரை முடக்கிக் குடைகின்றது. எல்லோருங் கைவிட்டார்கள். தங்கள் தம்பியார் தாம் உய்யும்படி கேட்டு இரவுபட்டதும் வருமாறு என்னையனுப்பினார்” என்றான். “அப்பா! நன்று அறியா அமண் பள்ளிக்கு நான் எய்தேன் என்று அவனுக்கு அறிவிப்பாய்'' என்று கூறினார். அந்த ஏவலன் மருணீக்கியார்பால் சென்று அதை அவ்வண்ணம் அறைந்தான்.

மருணீக்கியார் வேறு செயலின்றி, திருவருள் கூடுங்காலம் எய்தியதால் புன்சமயத் தொடர்பை விடுத்து, தமக்கையார் தாள் மலரைச் சாரத் துணிந்தார். அந்த எண்ணம் வந்ததும் சிறிது அயர்வு அகன்றது. உடுத்த பாயையும் குண்டிகையையும் பீலியையும் ஒழித்து வெண்மையான ஆடையை உடுத்து, தனது அந்தரங்கமான ஏவலன் தோள்மீது கையை ஊன்றிக் கொண்டு, சமணர்கள் யாரும் அறியாவண்ணம் இரவில் புறப்பட்டுத்

திருவதிகையடைந்து சூலைவலியுடன் தமக்கையாரது திருமடத்தைச் சார்ந்தார். அருள்மிகுந்த தமக்கையாரது அடிமலர் மீது வீழ்ந்து, "நமது குலஞ்செய்த நற்றவப்பயன் அனையீர்! கொடுஞ் சூலையால் நொந்து வந்தேன்; இனி இத்துன்பத்தி னின்றும் கரையேறுமாறு நன்னெறியை யுரைத்தருள்வீர்" என்று விண்ணப்பஞ் செய்தார்.

தாளிணைமேல் விழுந்தயருந் தம்பியார் தமைநோக்கி
ஆளுடைய தம்பெருமான் அருள்நினைந்து கைதொழுது
கோளில்பர சமயநெறிக் குழியில்விழுந் தறியாது
மூளுமருந் துயருழந்தீர் எழுந்திரீர் எனமொழிந்தார்.

திலகவதியார் கருணைமிகுந்து இறைவருடைய திருவருளை நினைந்து, கைகூப்பித் தொழுது, 'நற்கொள்கையில்லாத பரசமயக் குழியில் வீழ்ந்து நொந்தீர். இனி எழுந்திரும்" என்று மொழிந்தார். மருணீக்கியார் பிணியின் துயரால் உடல்நடுங்கி எழுந்து தொழுது நின்றார். திலகவதியார், "இது சிவபெருமானது திருவருளே. பற்றறுக்கும் பரமனது பணி செய்வீர்" என்று பணித்தருளினார். தமக்கையார் அருளைப் பெற்ற மருணீக்கியார் மீண்டும் அவர் பாதமலர் மீது வீழ்ந்து இறைஞ்சினார். தபோதனியார் திருவருளை நினைந்து, திருக்கோயிலுக்குள் புகும் தகுதியை உண்டாக்கும் பொருட்டுத் தம்பியார்க்குத் திருநீற்றைப் பஞ்சாக்கரம் ஓதியளித் தார். "பெருவாழ்வு வந்தது" என்று வாங்கித் தரித்துக் கொண்ட னர். தமக்கையார் பின் சென்று திருக்கோயிலை அடைந்தார்; திருநீறணிந்தார்; அகத்திருளும் புறத்திருளும் நீங்கும் அப்பொழுது திருப்பள்ளியெழுச்சி பாடும் சமயம். தபோதனியார் திருவலகும் திரு மெழுக்குத் தோண்டியுங் கொண்டு தம்பியாரை அழைத்துக் கொண்டு கோயிலுக்குள் சென்றார்.

புரமெரித்த புண்ணியரது திருக்கோயிலை மருணீக்கியார் வலம் வந்து வணங்கினார். தம்பிரான் திருவருளால் தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வு அவர்க்கு உதித்தது. உடனே திருவாய் மலர்ந்தருளினார்.

கூற்றா யினவாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தனநான் அறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே குடரோடு தொடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத் துறையம்மானே.

என்ற திருப்பதிகம் பாடித் திருவருளில் முழுகினார்.

இனி, நீ திருநாவுக்கரசு என்ற நாமத்தால் ஏழுலகும் ஏத்தப் பெறுவாய், என்று வானிடை ஓர் அமிர்த ஒலி திருவருளால் எழுந்தது.

"சமய இருளில் முழுகிய சிறியேன் பெருந்திரு இதுவோ" என்று இறைவரைத் தொழுதார். சூலைவலி விரைந்து நீங்கியது. திருநாவுக்கரசைச் சிவமூர்த்தி திருவருளால் ஆட்கொண்ட செய்தியை அடியார்கள் முரசுகொட்டி எங்கும் மொழிந்து முழக்கினார்கள். திருநாவுக்கரசு திருநீறும் கண்டிகையும் புனைந்து, நெஞ்சு அஞ்செழுத்தை நினைக்கவும், வாக்கு தமிழ்ப்பதிகம் பாடவும், காயம் உழவாரப் படை கொண்டு திருத்தொண்டு செய்யவும், மனவாக்குக் காயம் என்ற மூன்று கரணங்களாலும் சிவத்தொண்டு செய்தார். திலகவதியார் தம்பியாரைச் சமண சமயப் பிணியும், சூலைப்பிணியும் நீக்கி உய்யக் கொண்ட திருவருளை நினைந்து நினைந்து உருகி, இந்த அருட்பிரசாதம் வேறு யார் பெற்றனர்? என்றும், தமது தவம் பலித்தது என்றும் மனம் மகிழ்ந்து சிவமூர்த்தியைத் தொழுதார்.

சமணரது கொடுமை :-

திருநாவுக்கரசுநாயனார், இவ்வாறு சிவநெறி சேர்ந்து திருவருள் பெற்று இடர்நீங்கிய செய்தியை, பாடலிபுத்திர நகரில் வாழ்கின்ற புன்மையே புரிகின்ற சமணர்கள் கேட்டார்கள். அவர்களது மனம் அதைப் பொறுக்கவில்லை. தருமசேனர்க்கு வந்த தடுப்பருஞ் சூலைநோய், இங்கு ஒருவராலும் நீங்கியதில்லை. அதனால், அவர் உய்யும்பொருட்டுச் சென்று, சைவராகிப் பிணி நீங்கி நலம் பெற்றனர். அதனால், நமது சமயம் வீழ்ந்தது என்றும் மருண்டனர். "மாறுபட்டு எதிர்த்த பல சமயங்களையும் அவர் வென்று நிலை நிறுத்திய இச்சமயம் இனி அழிவுபட்டதாகும்" என்று வருந்தி, கொலையும் பொய்மையும் புரியோம் என்று கூறிக்கொண்டு கொடுந்தொழில் புரிவோர்களாகிய அச் சமணர்கள், தமது தலையும் மயிற்பீலியுந் தாழ வந்து ஒருபுறம் கூடினார்கள்.

தருமசேனர்க்குச் சைவநெறி சார்ந்ததனால் உய்வு கிடைத்தது என்ற உண்மையைப் பல்லவ மன்னன் அறிவானாகில், நம்மை வெகுண்டு, தான் சைவனாகி, நமக்கு விடுத்திருக்கின்ற மான்யம் முதலியவைகளையும் நீக்குவான்; ஆதலின், இனி நாம் என் செய்வோம்" என்று சிந்தித்தனர். வஞ்சனையான நிகழ்ச்சியைப் புனைய நினைந்தனர். "தருமசேனர் தமது தமக்கையார் சைவ

சமயத்தில் இருப்பதனால், தாமும் அதைச் சார வேண்டும் என்று கருதி, சூலைவலியென்றும், அது எதனாலும் தீரவில்லையென்றும், பொய்மையாக நடித்து, நமது சமயத்தை விடுத்துச் சைவசமயத்தை யடுத்து, தெய்வநிந்தை புரிந்தார் என்று சொல்வோம்'' என்று முடிவு செய்தனர்.

துன்மதியுடைய சமணர்கள் பல்லவனுடைய அரண்மனைக்கு இருட் கூட்டஞ் செல்வதுபோல் சேர்ந்தனர். ஆடையில்லாதவரா யும், நின்ற வண்ணம் வாய்பேசாது உண்ணுபவராயுமுள்ள, அச் சமண குருமார் "நாங்கள் வந்ததை மன்னவன்பால் அறிவியுங்கள்'' என்று வாயில் காவலருக்குக் கூறினர். காவலர் தக்க சமயமறிந்து இறைவன் பால் சென்று, வேந்தனை வணங்கி, ''மன்னர் பெருமானே! அடிகள்மார் அனைவரும் அல்லல்பட்டுத் திருவாயிலுக்கு முன்வந்துள்ளார்கள்'' என்று கூறினர். சமண சமயத்தைச் சார்ந்த மன்னவன், "இவ்வாறு விரைந்து வருவதற்கு அவர்க்கு என்ன துன்பம் நேர்ந்ததோ? அவர்களை அழைமின்'' என்றான்.

நடைப்பிணங்களையொத்த சமணர்கள், காவலர் உத்தரவு செய்ய உள்ளே சென்று, மன்னனைக் கண்டு, "வேந்தே! தரும சேனர் சூலைநோய் வந்ததாக நடித்துச் சைவசமயஞ் சார்ந்து சிவபெருமானுக்கு அடியராகி, நினது சமயத்தை அழித்தனர்'' என்றனர். மன்னன் அதுகேட்டு வெகுண்டு, ''முடிவில்லாத தவத்தை யுடையவர்களே! பொய்யாக நடித்து சமயலங்கனஞ் செய்தது தகுமோ? இதற்கு என் செய்வோம்?'' என்றான். "சிறந்த நமது சமயத்தைப் பழித்த அவரை வருத்தக்கடவாய்'' என்று பொய்மைமிக்க புல்லர்கள் புகன்றனர்.

அருளும் அறிவும் இன்றி நன்னெறியைவிட்டு விலகிய மன்னன் அமைச்சரை நோக்கி, "இவர்கள் கூறிய தீயவனைத் தண்டித்தல் வேண்டும். எக்காரணத்தினாலும் விடாது அவனை என்பால் கொணர்மின்'' என்றான். அமைச்சர் முழவுகளுடன் கூடிய சேனையுடன் திருவதிகை சென்று, திருநாவுக்கரசை நோக்கி, ''உம்மை அழைத்து வருமாறு மன்னன் எம்மை அனுப்பினான்; வாரும்'' என்று அழைத்தனர். அரசன் ஆணை வழிவந்த அமைச்சரை நோக்கி அஞ்சுதலில்லாத அடிகள்,

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை.

தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்று மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

என்று கூறியருளினார். அமைச்சர்கள் அவருடைய அடிமலரைத் தொழுது, கருணைகூர்ந்து எம்முடன் எழுந்தருள வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். ஆளுடைய அரசு "இங்குவரும் வினைகளுக்கு எம்பிரான் துணையுளான்" என்று அவருடன் சென்றனர். இவருடைய வரவை அமைச்சர் அரசனுக்கு அறிவித்தனர்.

நீற்றறையிலிடுதல் :-

பல்லவன் பாயுடுத்த பாவிகளைப் பார்த்து "அவனை என் செய்வோம்; சொல்லும்" என்று கேட்டான். அறந் துறந்த அவர்கள் நீற்றறையில் இடுமாறு புகன்றனர். அவ்வண்ணம் புரியுமாறு பல்லவன் பணியாளரைப் பணித்தான். கொழுந்து விட்டெரியும் பெருந் தீயுடன் கூடிய நீற்றறையின் உள்ளே திருநாவுக்கரசரை யிருத்தி, இருப்புத் தாளிட்டுக் காவல் புரிந்தனர். அடிகளார் அம்பலத்தில் ஆடும் திருவடி நிழலைத் தலைமேற்கொண்டு, ஈசனடியார்கட்கு இடருளதோ? என்று கருணைக் கடலாகிய கண்ணுதலையே தொழுதிருந்தார்.

வெய்யநீற் றறையதுதான் வீங்கிளவே னிற்பருவம்
தைவருதண் தென்றலணை தண்கழுநீர்த் தடம்போன்று
மொய்யொளிவெண் ணிலவலர்ந்து முரன்றயா ழொலியினதாய்
ஐயர்திரு வடிநீழல் அருளாகிக் குளிர்ந்ததே.

வெம்மையான அந்த நீற்றறை இளவேனிற் பருவத்தில், தென்றல் காற்று வீச, செங்கழுநீர்த் தடாகம் போலும், இனிய தண்ணிலாப் போலும், யாழின் கானம்போலும் குளிர்ந்தது. அப்பொழுது அடிகள் அருளிச்செய்த திருப்பதிகம்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

ஆளுடைய அடிகள், "மாசில்மதி நீடுபுனல் மன்னிவளர் சென்னியனை, பேச இனியானை, உலகாளுடைய பிஞ்ஞகனை,

ஈசனை, எம்பெருமானை, எவ்வுயிருந் தருவானை, ஆசையில் ஆராவமுதை அடிவணங்கி இனிது இருந்தார்."

நஞ்சூட்டுதல் :-

ஏழுநாட்கள் கழிந்தபின் பல்லவன் சமணகுருமார்களை அழைத்து நீற்றறையைப் பார்க்குமாறு கூறினான். இருட்குழாம் போன்ற உருவுடைய சமணர்கள் நீற்றறையைத் திறந்தனர். ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி, அம்பலவாணரது அடிமலர்க் கமலத்தில் ஊறும் தேனமுதை யருந்தி, ஊனமின்றி உவந்திருக்குந் திருநாவுக் கரசரைக் கண்டு அதிசயமுற்றார்கள். அரசன்பால் அணுகி, "நமது சமண்சமயத்தில் இருந்தபோது அறிந்துகொண்ட சாதகத்தினால் நீற்றறையில் இறவாமல் அவன் உயிர் தப்பினான். விடம் ஊட்டிக் கொல்ல வேண்டும்'' என்று முடைவாயால் மொழிந்தார்கள். அவ்வாறே செய்யுமாறு அரசன் அநுமதி தந்தான். பாவிகள் நஞ்சு கலந்த பாலன்னத்தை உண்ணும்படி செய்தார்கள். ஆலமுண்ட நீலகண்டப் பெருமானுடைய மெய்யடியார்க்கு விடம் அமுதாவதில் என்ன ஆச்சரியம்?

பொடியார்க்குந் திருமேனி புனிதர்க்குப் புவனங்கள்
முடிவாக்குந் துயர்நீங்க முன்னைவிடம் அமுதானால்
படியார்க்கும் அறிவரிய பசுபதியார் தம்முடைய
அடியார்க்கும் நஞ்சமுதம் ஆவதுந்தான் அற்புதமோ.

மதயானையை ஏவுதல் :-

நஞ்சு அமுதானதைக் கண்ட அமணர்கள் அஞ்சினார்கள். "இவ்விடத்தில் இவன் பிழைக்கில் எமக்கெல்லாம் இறுதியே'' என்று கருதிப் பல்லவன்பால் சென்று, "வேந்தே! நம் சமயத்தில் கற்றுக் கொண்ட விடந்தீர்க்கும் மந்திரத்தினால் விடமுண்டும் அதன் வலியைத் தடுத்துவிட்டான். அவனைக் கொல்லவில்லை யானால் எங்கள் உயிரும் உனது அரசாட்சியும் அழியும்'' என்றார்கள்.

மற்றவர்தம் மொழிகேட்ட மதிகெட்ட மன்னவன், "இனி எவ்வகையாற் கொல்வோம்?" என்று வினாவினான். சமணர்கள், "கோபமிக்க மதமேறிய யானையைவிட்டுக் கொல்வோம்'' என்றார்கள். மன்னன் கோபாதிசயமான கொலைக்களிற்றை விடச் சொன்னான். கூற்றுவனைப்போல் அந்த யானை மாடங் களையும் கூடங்களையும் இடித்துத் தூளாக்கி, குத்துக்கோற் காரர்களது தலைகளை இடறி, சங்கிலிகளை அறுத்தெறிந்து,

இடியைப்போல் முழங்கிக் கொண்டு படிநெளிய, உகாந்த மாருதம்போல் விரைந்து சென்றது. கொடியர்களாகிய சமணர்கள் திருநாவுக்கரசருக்கு முன் அதனைச் செலுத்தினார்கள். அதுகண்ட அடிகள், "அஞ்சுவது யாதொன்று மில்லை. அஞ்சவருவதுமில்லை" என்று ஆனையுரித்த அண்ணலை நினைந்து பாடுவாராயினார்.

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண வுரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ணலரண் முரணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவதியா தொன்று மில்லை; அஞ்ச வருவது மில்லை.

செந்தமிழ்ப் பதிகம்பாட சிவசிந்தையுடன் இருந்த ஆளுடைய அரசரைக் கண்ட யானை அவரை வலமாக வந்து, எட்டுத் திசைகளில் உள்ள யாவரும் காணுமாறு நிலத்தில் வீழ்ந்து வணங்கி எழுந்தது.

ஆண்ட அரசைப் பணிந்து திரும்பிய யானையைப் பாகர்கள் மீண்டும் அவர்மீது செல்லும்படி தூண்டி அடர்த்தனர். மதயானை தன்னையேவிய பாகர்களைக் கொன்றுவிட்டுச் சமணர்கள்மீது பாய்ந்து மிதித்தும், பிளந்தும், நசுக்கியும் கொன்று மந்தரகிரி பாற்கடலைக் கலக்கியதுபோல், நகரைக் கலக்கியது. தப்பிப் பிழைத்த சமணர்கள் ஓடி மன்னன் மலரடிமீது வீழ்ந்து புலம்பினார்கள். வேந்தன் வெகுண்டு "இனி என் செய்வது?" என்றான்.

கடலிடை விடுத்தல் :-

சமணர்கள் "நமது சமயத்தில் கற்றுக்கொண்ட முட்டி நிலையினால், அவன் நாம் ஏவிய யானையைக் கொண்டே நமது கீர்த்தியை அழித்துவிட்டான். இனி அவனைக் கல்லுடன் சேர்த்துக் கட்டிக் கடலில் வீழ்த்துதல் வேண்டும்" என்று கூறினார்கள். அறிவும் அன்புமில்லாத அந்த அரசன், ஏவல் செய்வோரைப் பார்த்து, "கல்லுடன் சேர்த்துக் கட்டிப் படகில் ஏற்றிக் கொண்டு போய், அவனைக் கடலில் வீழ்த்துமின்" என்றான். ஏவலருடன் சமணரும்போய், அடிகளாரைப் பெரிய கல்லிற் சேர்த்துக் கட்டி, ஓர் ஓடத்தில் வைத்து, கடலிற் கொண்டுபோய் வீழ்த்திவிட்டு வந்தார்கள்.

எந்தையார் "எப்பரிசாயினுமாக; எம்பிரானை யேத்துவேன்" என்று, ஐந்தெழுத்தை அமைத்து தண்டமிழ் மாலை தொடுத்தார்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

அப்பெருங் கல்லே தெப்பமாக, அதன்மீது அரசு வீற்றிருந் தருளினார். கருங்கடலிற் கன்மிதக்க, திரைக்கரங்களால் தாங்கிச் சிரத்திடையேந்திச் சுமக்க வருணனும் முன்பு மாதவஞ் செய்திருந் தனன். பிறவியாகிய ஏழு கடல்களையுங் கடக்க வைக்கும் ஐந்தெழுத்து இவ்வொரு கடலைக் கடக்க வைப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

இருவினைப் பாசமு மலக்க லார்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்க ளேறிட
அருளுமெய் யஞ்செழுத் தரசை யிக்கடல்
ஒருகன்மே லேற்றிடல் உரைக்க வேண்டுமோ.

சீர்பெற்ற வருணன் வாக்கின் மன்னரை, கருங்கற் சிவிகை மீது ஏந்திக்கொண்டு திருப்பாதிரிப்புலியூருக்கு அருகில் கரை சேர்த்தனன். கல்மீது மிதந்துவரும் வாகீசரைக் கண்ட திருப்பாதிரிப் புலியூர் வாழும் அன்பர்களும் பிறரும் அவரை எதிர்கொண்டு "ஹர ஹர" என்று முழக்கித் தொழுதார்கள். அடியார்களுடன் அடிகள் பாதிரி மரத்தின்கீழ் எழுந்தருளிய பரமனைப் பதிகமோதிப் பரவி வழிபாடு புரிந்தார்.

ஈன்றாளு மாய்எனக் கெந்தை யுமாய்உடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே.

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாயநம வென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிரிப் புலியூ ரரனே.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும்இவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனல்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே.

மண்பா தலம்புக்கு மால்கடன் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினும் அஞ்சல்நெஞ்சே!
திண்பால் நமக்கொன்று கண்டோம் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுள் சுடரான் கழலிணையே.

திருந்தா அமணர்தந் தீநெறிப்பட்டுத் திகைத்துமுத்தி
தருந்தா ளிணைக்கே சரணம் புகுந்தேன் வரையெடுத்த
பொருந்தா அரக்கனுடல் நெரித்தாய் பாதிரிப்புலியூர்
இருந்தாய் அடியேன் இனிப்பிற வாமல்வந்து ஏன்று கொள்ளே.

இவ்வண்ணம் செவ்வண்ணரைப் பாடித்தொழுது, அத்தலத்தில் தங்கி, திருவதிகைப் பெருமான் மீதுள்ள காதலினால் புறப்பட்டார். இடையில் உள்ள திருமாணிகுழியையும், திருத் தினை நகரையும் சேவித்துக்கொண்டு கெடிலநதியைக் கடந்தார். சமணர்புரிந்த கொடுமைகளினின்றும் வெற்றிபெற்று வரும் வாகீசரை திருவதிகை வாழும் ஜனங்கள் எதிர்கொள்ளுவதற்குரிய ஏற்பாடுகளைப் புரிந்தனர். மணித்தோரணம் கட்டினர். வாழையும் கமுகும் நாட்டினர்; பூமாலைகளைத் தொங்க விட்டனர். சந்தனப் பொடியும் பூவும் திருவீதிகளில் தூவினர். நகரெங்கும் அலங்கரித்த னர். ஒவ்வொரு வீட்டிற்கு முன்னும் பூரணகும்பம் வைத்து, திருவிளக்குகளை ஏற்றி வைத்தனர். ஏழிசை ஓசை எங்கும் முழங்கின. ஆளுடைய அரசை அனைவரும் வந்து எதிர்கொண்டு இறைஞ்சினார்கள்.

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

"கருணையே வடிவான இவரைக் கண்டும் பாவிகளாகிய சமணர்கள் எவ்வாறுதான் தீங்கு செய்தார்களோ?" என்று கூறி வருந்தினார்கள். தொழுதார்கள்; துதித்தார்கள். திருநாவுக்கரசர் திரு வீரட்டானஞ் சேர்ந்து, எம்பெருமானைத் தொழுது, கரையற்ற அன்புடன் "ஏழையேன் பண்டு இகழ்ந்தவாறே" என்று முடியும் திருப்பதிகம் பாடி வழிபட்டார்.

பல்லவன் சரணம் புகுதல் :-

ஆண்ட அரசுகள் அருந்தமிழ்மாலை பல சாத்திப் பணி செய்து கொண்டிருந்தார். இந்த அற்புதத்தைக் கேட்ட பல்லவன், பழவினைப் பாசம் பறிய, சமண் சமயத்தின் இழுக்கினை அறிந்து,

திருவதிகை வந்து, திருநாவுக்கரசு சுவாமிகளைத் தொழுது, சமண் சமயத்தை விடுத்துச் சைவசமயத்தை அடுத்தான். சமணர் கூற்று பொய்மை என்று மெய்மையுணர்ந்த காடவமன்னன் பாடலி புத்திரத்திலிருந்து பள்ளிகளையும் பாழிகளையும் இடித்துக் கொணர்ந்து, குணபரவீச்சுரம் என்ற திருக்கோயிலைப் புதுக்கினான். கொடுமை பல புரிந்த பல்லவனுக்கும் ஆளுடைய அரசு அருள்புரிந்தார். திருவருட்செல்வரின் கருணைத் திறந்தான் என்னே?

திருவதிகையிலே வாகீச முனிவர், மனத்தால் திருவைந் தெழுத்தைத் தியானித்தும், வாக்கால் தேவாரத் திருப்பதிகங் களைப் பாடியும், காயத்தால் திருவலகிடுதல் உழவாரப் பணிசெய்தல் ஆகிய திருத்தொண்டுகளைச் செய்தும் சிவபக்தி வடிவாய் விளங்கினார். பதிகள்தோறும் சென்று பன்னாக மணிந்த பரமனைப் பாடுதல் வேண்டும் என்று விரும்பிப் புறப்பட்டார்.

இலச்சினை இடப் பெறுதல் :-

திருவெண்ணெய்நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலிய திருத்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, திருப்பெண்ணா கடம் அடைந்தார். தூங்கானைமாடம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள செஞ்சடைக் கடவுளை அஞ்சலி செய்து, "இறைவனே! புன்னெறியாம் அமண் சமயந் தொடக்குண்ட இந்த உடம்புடன் உயர்வாழ மாட்டேன். வாழ்வதானால் நின் இலச்சினை (முத்திரை)யிட்டு அருள்புரிவீர்" என்று வேண்டி, செந்தமிழ்ப் பதிகம் பாடியருளினார்.

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேல்இருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலம்என் மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே.

பரமகருணாநிதியாகிய சிவபெருமானுடைய திருவருளினால், ஒரு சிவபூதம் ஒருவரும் அறியாவண்ணம் வந்து, திருநாவுக்கரச ருடைய திருத்தோள்களில், சூல முத்திரையும், இடப முத்திரையும் இட்டு அகன்றது. அதுகண்ட அரசு விண்மாரி யென்ன கண்மாரி பெய்து, அரனாரது அருள்திறத்தை யுன்னி விம்மிதமுற்று, "உய்வு பெற்றேன்" என்று மகிழ்ந்தார்.

சிதம்பர தரிசனம் :-

ஆளுடையரசு, விண்ணவர் பரவும் கண்ணுதலைத் தொழுது, அங்கிருந்து புறப்பட்டு, திருவறத்துறை, திருமுதுகுன்றம் முதலிய சிவதலங்களைத் தரிசித்துக்கொண்டு நீவா நதிக்கரை வழியே கீழ்த்திசை நோக்கிச் செல்லுகின்றார். ஆனாத சீர்த்தில்லை யம்பலத்தே ஆடுகின்ற அருட்கூத்தப் பெருமானை வணங்கி ஊனாலும் உயிராலும் பயன்கொள நினைந்து தில்லைச்சிற்றம் பலத்தின் அருகில் வந்தார். இருவருங் காணாத ஒருவர் நடமிடும் தில்லையின் எல்லை வந்தவுடன், மண்மிசை வீழ்ந்து வாகீசர் வணங்கி எழுந்து, மயில்கள் களிநடம் புரியும் சோலை சூழ்ந்த தாமரை வாவிகளும், செந்நெல் வயல்களும் நிறைந்த மருத நில வழியே வந்தார். “இங்கு வாருங்கள்; பிறவிப்பிணி தீருங்கள்” என்று குயில்கூவும் திருநந்தவனத்தைக் கண்டார். நடேசப் பெருமானுக்கு மலர்களை உதவும் அப்பூங்காவைக் கண்டு பணிந்தார். கிளிகளும் நாகணவாய்ப் பறவைகளும் “ஹரஹர” என்று ஒலிக்கின்றன. மறையொலி முழங்கும் தில்லையம்பதியின் மேலைக் கோபுர வாயிலின் வழியே திருக்கோயிலுக்குள் நுழைந்தார். திருமாளிகை வீதியை வலம்வந்து, பொன்னம்பலத்தின்முன் வந்து, எல்லை யில்லாத அன்புடன் சபாநாதரைத் தொழுதார்.

கையுந் தலைமிசை புனையஞ் சலியன :
கண்ணும் பொழிமழை யொழியாதே
பெய்யுந் தகையன; கரணங் களும்உடன்
உருகும் பரிவின; பேறெய்து
மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரும்;
மின்றாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடுமவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்.

உடல் புளகமுற, கண்ணீர் மல்க, பலமுறை பணிந்து எழுந்தார், “என்று வந்தாய்” என்று குறிப்புடன் நடிக்கும் கூத்தப் பெருமானது திருவருளை வியந்து பாடுவார்.

ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலால் கடிந்தான் அடியவற்காய்ச்
சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம் பலத்துநட்டம்
என்று வந்தா யென்னும் எம்பெரு மான்றன் றிருக்குறிப்பே.

திருக்கோயிலிலும், திருவீதிகளிலும் திருப்பணிகள் செய்து வாயாரப் பாடுவாராகித் தில்லையுள் சிலகாலந் தங்கியிருந்தார். அன்பினால் கண்ணீர் பெருக, அது மார்பில் வழிந்து திருநீற்று வண்டல் பொருந்தியது.

அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலும் இப்பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

என்ற திருப்பதிகம் பாடியருளினார். சிதம்பரத்தைச் சார்ந்துள்ள திருக்கழிப்பாலை சென்று பால்வண்ணநாதரையும் வேதநாயகியையும் சேவித்துத் திருப்பதிகம்பாடி, சிதம்பரத்தை நினைத்து,

பனைக்கை மும்மத வேழமு ரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ?

என்று பாடிக்கொண்டே மீண்டுந் தில்லையம்பதி வந்து அம்பல வாணரை அன்புடன் தொழுதார்.

அடியவர்க்கு எளியானை, "அரியானை" என்று தொடங்கும் அடியவர் சிந்தையை விட்டுப் பிரியாத பெரிய திருத்தாண்டகத்தைப் பாடியருளினார்.

அரியானை அந்தணர்தஞ் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

பற்பல பதிகங்களைப் பாடித் திருத்தொண்டுகளைப் புரிந்து கொண்டிருந்தார்.

சீகாழியடைந்து திருஞானசம்பந்தரைச் சந்தித்தல் :-

சீகாழியில், திருஞானசம்பந்தருக்குச் சிவபெருமான் திருவருளால் உமாதேவியார் சிவஞானங் குழைத்துத்

திருமுலைப்பால் ஊட்டியதும், உண்டவுடன் "இவன் எம்மான்" என்று சுட்டிக்காட்டி ஏழிசை வண்டமிழ்ப் பாமாலை பாடியதும் அடியார் கூற வாகீசர் கேட்டார். உடனே அதிசயமும் காதலுங் கொண்டு, திருஞான சம்பந்தப்பிள்ளையாரது திருவடியை வணங்க வேண்டுமென்று மிகவும் விரும்பி, கனக சபாபதியைப் பணிந்து பிரியாவிடை பெற்று, பிறவிப் பிணியைத் தீர்க்குந் திருவீதியில் திருமேனி பொருந்தப் புரண்டு வலம்வந்து, எல்லையை வணங்கிப் புறப்பட்டார்.

திருநாரையூரைத் தொழுது, அடியார் குழாங்கள் சூழ நாவுக்குத் தனியரசர் தொழுத கரத்துடன், கண்டவர் கன்மனங் கசிந்துருகும் கருணை அகம்நிறைந்து புறத்தே துளும்பி வழிய, தமிழால் எழுதுமறை மொழிந்த பிரான் எழுந்தருளியுள்ள சீகாழியம்பதிக்கு வந்தருளினார். மேருமலையை வில்லாகவுடைய வேதநாயகர் சூலைவலி தந்து நேரே முன்னாள் ஆண்ட அரசுகள் எழுந்தருளி வருவதைத் திருஞானசம்பந்தர் கேட்டருளி, காணவேண்டும் என்ற பெரு விருப்பினால் திருத்தொண்டர் குழாம் சூழ எதிர்கொண்டழைக்கு முன்னே எழுந்தருளி வருவாரா யினார். அமுது உலகை வாழ்வித்தவர் தொழுது வருவதைக் கண்ட அரசு அடியார் களிடையே சென்று அளவில்லாத காதலுடன் சம்பந்தருடைய சரணமலர்மீது பணிந்தார். பிள்ளை யார் பணிந்த அவருடைய கரங்களைப் பற்றித் தாமும் பணிந்து "அப்பரே!" என்று அழைத்தார். அரசு, "அடியேன்" என்றார். அத்தருணத்தில் அடியார் குழாம் அளவற்ற மகிழ்ச்சியுற்று "ஹர ஹர" என்று ஒலித்த ஒலி உலகமெல்லாம் நிறைந்தது.

பிள்ளையார் கழல்வணங்கப் பெற்றேன் என்று திரு நாவுக்கரசர் மகிழ்ந்தார். திருநாவுக்கரசரை வணங்கப் பெற்றதற்காகத் திருஞான சம்பந்தரும் பெருமகிழ்ச்சியுற்றார். திருக்கோபுரத்தைத் தொழுது, உள்ளே புகுந்து விமானத்தை வலம் வந்து தொழுது சென்று, சண்பையர்கோன் அப்பரை நோக்கி, "உங்கள் தம்பிரானை நீர் பாடுவீர்" என்று கூறியருளினார். அப்பரடிகள் "பார்கொண்டுமூடி" என்ற திருப்பதிகம் பாடி யருளினார். ஆளுடைய பிள்ளையாருடைய திருமடத்தில் சென்று அமுது செய்தார். அன்றுபோலவே பலநாள் நண்புடன் மருவி இருந்தார்.

சோழநாட்டு யாத்திரை

வாகீசப் பெருந்தகையாருக்குக் காவிரிநதி பாயும் சோழவள நாட்டுத் திருத்தலங்களை வணங்க வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டது. பிள்ளையாரிடம் தமது விருப்பத்தைக் கூறினார். அவரும் அதற்கு இசைந்து, திருக்கோலக்கா என்னுந் திருத் தலத்திற்கு உடன் சென்று தரிசனஞ் செய்வித்துத் திரும்பினார்.

அப்பரடிகள் பிள்ளையாரிடம் விடைகொண்டு, அடியார் கணங்களுடன் புறப்பட்டார். கருப்பறியலூர், திருப்புன்கூர், நீடூர், திருக்குறுக்கை, திருநின்றியூர், திருநனிபள்ளி, திருச்செம்பொன் பள்ளி, மாயூரம், திருத்துருத்தி, வேள்விகுடி, எதிர்கொள்பாடி, திருக்கோடிக்கா முதலிய திருப்பதிகள் சென்று பிறையணிந்த இறைவரைத் தொழுது, செந்தமிழ்ப் பாமாலை பாடி, திருவாவடு துறை சென்றார்.

திருக்குறுக்கை - திருநேரிசை

நீற்றினை நிறையப் பூசி நித்தலும் நியமஞ் செய்த
ஆற்றுநீர் பூரித் தாட்டும் அந்தண னாரைக் கொல்வான்
சாற்றுநாள் அற்ற தென்று தருமரா சற்காய் வந்த
கூற்றினைக் குமைப்பர் போலும் குறுக்கைவீ ரட்ட னாரே.

திருநனிபள்ளி

முற்றுணை யாயி னானை மூவர்க்கு முதல்வன் றன்னைச்
சொற்றுணை யாயி னானைச் சோதியை யாத ரித்து
உற்றுணர்ந் துருகி யூறி உள்கசி வுடைய வர்க்கு
நற்றுணை யாவர் போலும் நனிபள்ளி யடிக ளாரே.

திருவாவடுதுறையில் எழுந்தருளிய, மாசிலாமணி ஈசரையும், ஒப்பிலா முலையம்மையாரையும் வணங்கி, திருத்தாண்டகங்கள், திருக்குறுந்தொகைகள், திருநேரிசைகள், சந்தவிருத்தங்கள் முதலிய தமிழ் மாலைகளைச் சாத்தினார்.

மஞ்சனே மணியு மானாய் மரகதத் திரளு மானாய்
நெஞ்சுளே புகுந்து நின்று நினைதரு நிகழ்வி னானே
துஞ்சும்போ தாக வந்து துணையெனக் காகி நின்று
அஞ்சலென் றருள வேண்டும் ஆவடு துறையு ளானே.

பலநாள் தங்கித் திருத்தொண்டு புரிந்தார். அங்கிருந்து புறப்பட்டு, திருவிடைமருதூர் சென்று, மகாலிங்கப் பெருமானை வழிபட்டுத் திருப்பதிகங்களைப் பாடினார். திருநாகேசுரம், பழை

யாறை என்னும் திருத்தலங்களை வணங்கிக்கொண்டு திருச்சத்தி முத்தம் வந்தார்.

திருவடி தீட்சை

உமாதேவியார் பூசித்த புனிதமான தலமாகிய சத்திமுத்தத்தில் எழுந்தருளியுள்ள சிவக்கொழுந்தை உள்ளங்குழைந்து "எம் பெருமானே! கூற்றுவன் வந்து என் உயிரைப் பற்றுமுன் உமது அழகிய அடிமலரை அடியேன் சென்னிமீது வைத்தருள வேண்டும்" என்று விண்ணப்பம் புரிந்து பாடினார்.

> கோவாய் முடுகி யடுதிறல் கூற்றம் குமைப்ப தன்முன்
> பூவா ரடிக்சுவ டென்மேற் பொறித்துவை போகவிடின்
> மூவா முழுப்பழி மூடுங்கண் டாய்முழங் குந்தழற்கைத்
> தேவா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.

கருணைக் கடலாகிய எம்பிரான், "நல்லூருக்கு வா" என்று பணித்தருளினார். வாகீசப் பெருந்தகை, திருநல்லூர் சென்று மனம் உருகி வணங்கினார். சிவபெருமான், "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்று சென்னிமிசை பாத மலரைச் சூட்டியருளினார்.

தரித்திரனுக்கு ஒழியாத தனங் கிடைத்தது போலே திருவருளை நினைந்து, உருகி, விழுந்து, எழுந்து, நிறைந்து, மலர்ந்து, திருப்பதிகம் பாடினார்.

> நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
> நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
> சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
> செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
> இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
> இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
> நனந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
> நல்லூர்எம் பெருமானார் நல்ல வாறே.

திருநாவுக்கரசர், திருநல்லூரில் திருத்தொண்டுகள் புரிந்து சில நாள் தங்கியிருந்தார்.

அப்பூதியாருக்கு அருள்புரிதல்

திருக்கருகாவூர், திருவாவூர், திருப்பாலைத்துறை முதலிய திருத்தலங்களைச் சேவித்துக் கொண்டு, திருப்பழனம் என்னும்

புண்ணியத் தலத்தை வணங்கிவிட்டு, திங்களூர் அருகில் வருவாராயினார்.

திங்களூரில் அந்தணரில் மேம்பட்ட அப்பூதியடிகள், மக்கள், சாலை, குளம், கிணறு, தண்ணீர்ப்பந்தர் முதலிய எல்லா தருமங் களையும் திருநாவுக்கரசு என்ற திருப்பெயரை அமைத்து, திருநாவுக்கரசு நாயனாரைக் குருமூர்த்தமாகக் கொண்டு சதா அவரையே நினைந்து பக்தி செய்துகொண்டிருந்தார்.

அவ்வழியே சென்ற ஆண்ட அரசு, அது கண்டு அதிசயமுற்று, அங்குள்ளாரை, "இது யாருடைய தண்ணீர்ப் பந்தர்" என்று வினாவினார். "இது அப்பூதியடிகளுடையது; அவர் இப்பொழுது தான் திருமனை சென்றார். அதுவும் அருகிலே யுள்ளது" என்று ஆங்கிருந்தார் கூறக்கேட்டு வாகீசர் அப்பூதியடிகளது திரு மாளிகையை அடைந்தார்.

உள்ளிருந்த அப்பூதியார் வெளியே வந்து தொழுதார். "ஐயா! தாங்கள் வைத்த அறச்சாலை முதலியவைகட்கு உமது பேர் எழுதாமல் வேறு ஒரு பேர் எழுதிய காரணம் யாது?" என்று வினாவினார். அப்பூதியடிகள், "சிவபெருமானைத் திருவருள் முழுவதும் பெற்ற எமது திருநாவுக்கரசரது பேர் வேறு பேரோ? நன்று கூறினீரில்லை; அவரை அறியாதாரும் அவனியில் உளரோ? நீர் யார்?" என்று சிறிது முனிவுடன் கேட்டார்.

வாகீசர், "இறைவரால் சூலைவலி தந்து தடுத்தாட் கொள்ளப் பெற்ற உணர்விலாச் சிறியேன் அடியேன்" என்று கூறினார். அப்பூதியார் அதுகேட்டு அளவற்ற மகிழ்ச்சியுற்று, மனைவி, மக்கள் முதலியோரை அழைத்து வணங்குவித்து, தாமும் வணங்கினார். உள்ளே அழைத்துச் சென்று, உணவு செய்யுமாறு வேண்ட அரசுகள் இசைந்தருளினார்.

வரம்பில்லாத காதலுடன் நால்வகையான அறுசுவை யுண்டி யும் கறியமுதும் சமைத்தனர். அப்பூதியார் தமது புதல்வராகிய மூத்த திருநாவுக்கரசினை யழைத்து வாழைக்குருத்தை அரிந்து வருமாறு கட்டளையிட்டார். இத் திருத்தொண்டு எனக்குக் கிடைத்ததே என்ற மகிழ்ச்சியுடன் அச்சிறுவன் தோட்டத்தில் உள்ள வாழையின் குருத்தை யரியும்போது, ஒரு கொடிய விட நாகந் தீண்டியது. அதைப் பொருள்படுத்தாது, அரிந்த வாழையிலையைத் தாயிடந் தந்து, தீய விடந் தலைக்கேறி நாகந் தீண்டியதை உரையாது வீழ்ந்து மாண்டனன். அதுகண்ட அப்பூதி

யடிகளும் அவர் மனைவியாரும் "ஆண்ட அரசு அமுது செய்யத் தடையாகுமே" என்று மனங்கவன்றனர். மகனுடைய உயிர் நீங்கிய உடம்பை ஒருபுறம் மறைத்து வைத்து, தடுமாற்றம் இன்றி, மலர்ந்த முகத்துடன் வாகீசப் பெருந்தகையை அழைத்து, திருவடி விளக்கி ''அமுது செய்ய வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டனர்.

திருநாவுக்கரசர் தமது திருவுள்ளத்தில் ஒரு தடுமாற்றம் உற்று திருவருளால் அறிந்து, "மூத்த திருநாவுக்கரசு எங்கே?" என்று வினாவியருளினார். அப்பூதியார், "அவன் இப்போது இங்கு உதவான்" என்றார். நாயனார், "உள்ளதை உரைப்பீர்" என்ன, அப்பூதியார் நிகழ்ந்ததை யுரைத்தார். "நன்று செய்தீர்; இவ்வாறு யாவரே செய்யவல்லார்?'' என்று பெருங்கருணை கூர்ந்து, மாண்ட மகனது சவத்தைத் திருக்கோயிலுக்கு முன் கொணரச் செய்து "ஒன்று கொலாம்" என்ற திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

ஒன்று கொலாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்று கொலாமுய ரும்மதி சூடுவர்
ஒன்று கொலாமிகு வெண்டலை கையது
ஒன்று கொலாம்அவர் ஊர்வது தானே.

திருவருளால் மைந்தன் உயிர்பெற்று எழுந்தான். அப்பூதியடிகள் அதுகண்டு அரசுகள் அமுது செய்யக் காலந் தாழ்வதற்கு வருந்தினார். அவருடைய அல்லலை அறிந்த அப்பர் அப்பூதி யாருடைய மனைக்கு எழுந்தருளி, அமுது செய்து அருள் புரிந்தார்.

திங்களூரினின்றும் புறப்பட்டு, அப்பூதியடிகள் உடன்வர திருப்பழனஞ் சென்று இறைவரை வணங்கி அப்பூதியடிகளைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடினார்.

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்என் புதுநலமுண் டிகழ்வானோ?

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்கால் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே.

திருச்சோற்றுத்துறை முதலிய திருத்தலங்களைச் சேவித்துத் திருப்பழனத்தில் திருத்தொண்டுகள் புரிந்துகொண்டு பலநாள் தங்கியிருந்தார்.

திருவாரூர் தரிசனை :-

திருவடி தீட்சை புரிந்த திருநல்லூர்ப் பெருமானை மீண்டுஞ் சேவிக்க விரும்பி, காவிரி நதியின் தென்கரை வழியே சென்று திருநல்லூர் அடைந்து பாம்பணிந்த பரமனைப் பணிந்தார். அமர்நீதி நாயனார் வழிபட்டு அருள்பெற்ற தலம் அது. ஆதலின் அவருக்கு அருளிய அருள்திறத்தைப் பாராட்டிய பைந்தமிழ்ப் பதிகம் பாடினார்.

> நாட்கொண்ட தாமரைப் பூத்தடஞ் சூழ்ந்தநல் லூரகத்தே
> கீட்கொண்ட கோவணங் காவென்று சொல்லிக் கிறிபடத்தான்
> வாட்கொண்ட நோக்கி மனைவியொடும் அங்கொர் வாணிகனை
> ஆட்கொண்ட வார்த்தை யுரைக்கு மன்றோ?இவ் வகலிடமே.

திருவாரூரில் பூங்கோயில் மேவிய புற்றிடங் கொண்ட புண்ணியமூர்த்தியைத் தரிசிக்க விரும்பினார். நல்லூர் மேவும் நம்பரிடம் விடைபெற்றுப் புறப்பட்டார்.

பழையாறை, திருவலஞ்சுழி, திருக்குடமூக்கு, (கும்பகோணம்) திருநாவலூர், திருச்சேறை, திருக்குடவாயில், திருநறையூர், திருவாஞ்சியம், பெருவேளூர், விளமர் முதலிய திருப்பதிகளிற் சென்று கங்கை முடித்த அங்கணரை அன்புடன் அருந்தமிழ்ப் பதிகங்களால் துதித்து வழிபாடு செய்து, திருவாரூரை அடைந்தார்.

திருநாவுக்கரசு நாயனாரது வருகையை அறிந்த திருவாரூர் வாழும் அன்பர்கள், தங்கள் தங்கள் மாளிகைகளை அலங் கரித்தனர். வீதிகளில் தண்ணீர் தெளித்து நிறைகுடங்கள் வைத்தனர். நெய் விளக்குகள் ஏற்றினர். ஊர்ப்புறம் வந்து, கருங்கடலில் கல்லே புணையாக் கடந்து வந்த பெருந்தகை வரும் பேறு பெற்றோம் என்றும் பெரிது உவந்து எதிர்கொண்டனர்.

எதிரே வந்த அடியார்களைச் சொல்லரசர் தொழுது "அன்பில்லாத அரும்பாதகராகிய அமணரிடம் தொடக்குற்று அதன் பயனாய் வந்த சூலைநோய் நீங்கப் பெற்ற அடியேன், புற்றிடங் கொண்ட புண்ணியனுடைய தொண்டர்க்குத் தொண்ட ராம் புண்ணியம் பெறுவதுண்டோ?" என்று கருதித் திருவீதியுள் சென்றார்.

திருத்தொண்டர்கள் சூழப் பூங்கோயிலுக்குள் நுழைந்து, தேவாசிரியன் திருமண்டபம் வணங்கி, உட்புகுந்து புற்றிடங் கொண்டாரைக் கண்டு மண்மிசை வீழ்ந்து தொழுதார். கண்கள் நீர்பொழிய, உடல் புளகமுற போற்றித் திருத்தாண்டகம் பாடினார்.

பிரமன்றன் சிரமரிந்த பெரியோய் போற்றி
 பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கு முக்கண்ணு முடையாய் போற்றி
 காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
 அன்றரக்கன் ஐந்நான்கு தோளுந் தாளும்
சிரநெரித்த சேவடியாய் போற்றி போற்றி
 திருமூலட் டானனே போற்றி போற்றி.

இறைவனை இறைஞ்சித் தேவாசிரிய மண்டபத்தை அடைந்து "கையினால் தொழாதொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே" என்று கழிவிரக்கத்துடன் பாடுவார்.

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
 மேனியான் தாள்தொ ழாதே
உய்யலாம் என்றெண்ணி உறிதூக்கி
 உழிதந்தென் உள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ
 மயிலாலும் ஆரூ ரரைக்
கையினால் தொழாதொழிந்து கனியிருக்கக்
 காய்கவர்ந்த கள்வ னேனே.

திருநாவுக்கரசர் திருப்பதிகம் பல பாடித் திருப்பணி புரிவா ராயினார்.

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும்
 திருவடிவும் மதுர வாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின்
 மாலைகளும் செம்பொற் றாளே
சார்வான திருமனமும் உழவாரத்
 தனிப்படையும் தாமு மாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
 பணிந்தேத்திப் பரவிச் செல்வார்.

காலங்கள்தோறும் சென்று தியாகப்பெருமானை வழிபடுவார். நமிநந்தியடிகள் தண்ணீரால் விளக்கிட்ட பெருமையைப் புகழ்ந்து பாடினார். இன்னும் பற்பல திருத்தாண்டகங்களைத் திருவாய் மலர்ந்தருளினார்.

ஆராய்ந் தடித்தொண்டர் ஆணிப்பொன் ஆரூர் அகத் தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி யுத்திரம் பாற்ப டுத்தான்
ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே.

திருவாரூரில் இருந்துகொண்டே அண்மையிலுள்ள திருவலிவலம், கீழ்வேளூர், கன்றாப்பூர் முதலிய திருத்தலங்களைச் சேவித்தார்.

திருவாரூரில் திருவாதிரைத் திருநாள் நிகழ்ந்தது. அதில் வீதிவிடங்கப் பெருமான் பவனிவரும் அரிய திருக்கோலத்தை அப்பர் பெருமான் கண்ணாரக் கண்டு களித்தார்.

திருப்புகலூர் சென்றது :-

திருநாவுக்கரசு நாயனார் திருப்புகலூரைச் சேவிக்க வேண்டும் என்று விரும்பி, தியாகேசப் பெருமானிடம் பிரியாவிடைபெற்று, திருவாரூரினின்றும் புறப்பட்டார். இடையில் உள்ள திருப்பள்ளியின் முக்கூடல், திருவிற்குடி, திருப்பனையூர் முதலிய திருத்தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருப்புகலூரின் எல்லையை அடைந்தார்.

திருஞானசம்பந்தரது இரண்டாவது சந்திப்பு :-

திருஞானசம்பந்தர் சீகாழியினின்றும் புறப்பட்டு, பன்னாக மணிந்த பரமனது பதிகளைப் பணிந்துகொண்டு திருப்புகலூர் வந்து சிவமூர்த்தியைத் தொழுது, அன்பு வடிவாகிய முருக நாயனாரது திருமடத்தில் எழுந்தருளியிருந்தார். வாகீசப் பெருந்தகை ஆரூர் மேவும் அண்ணலை வணங்கி, பூம்புகலூரை நோக்கி வருகின்றார் என்ற செய்தியை பாலறாவாயர் கேட்டு, எதிர்கொண்டு அழைக்க விரும்பி, திரண்ட அடியார் திருக்கூட்டம் புடைசூழப் புறப்பட்டு எதிரே சென்றார். சீகாழிப் பிள்ளையார் எதிர்கொள்ள வருவதைக் கேட்ட திருநாவுக்கரசர் எல்லையில்லாத மகிழ்ச்சியடைந்தார். இரு பெருமக்களைச் சூழ்ந்துள்ள திருநீற்றுத் தொண்டர் குழாம் இரண்டும், இரண்டு நிலவின்கடல் அணைந்ததுபோல் கலந்தது.

வாக்கின் மன்னர் விரைந்து சென்று புகலியர்கோனை இறைஞ்சினார். சம்பந்தப் பிள்ளையார் எதிரே இறைஞ்சி, "அப்பரே! நீர் சேவித்த திருவாரூரில் நிகழும் பெருமையை வகுத்துரைப்பீர்'' என்று கேட்டருளினார். அப்பரடிகள் திருவாரூரில் திருவாதிரைத் திருநாளின் சிறப்பை என்னென்று எடுத்துரைப்பேன்?'' என்று கீழ்வரும் திருப்பதிகத்தை அருளிச் செய்தார்.

முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்க ளோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்த னாரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்.

அந்த மொழிமாலைச் செந்தமிழ்ப் பதிகத்தைக் கேட்ட சிவனார் மகனார், "அப்பரே! பூம்பொய்கை சூழ்ந்த திருவாரூர் சென்று திருவாதிரைத் திருநாள் விழா வயர்ந்த தேனாரமுதைக் கண்டு வணங்கிவிட்டு, இங்குவந்து உம்முடன் தங்குவேன்'' என்று கூறி விடைபெற்று அப்பொழுதே அங்கிருந்தே புறப்பட்டுத் திருவாரூரை நோக்கிச் சென்றார்.

திருநாவுக்கரசர் திருப்புகலூரில் புகுந்து, அரவணிந்த அரனாரை அன்புடன் கண்ணீர் பொழிந்து, தண்டமிழ் யொழிந்து போற்றி செய்தார். காலபூசைகள்தோறும் இறைவனை வணங்கிக் கொண்டு உழவாரப் பணி செய்துகொண்டும் அங்கு உறைவாரா யினார்.

நீருமாய்த் தீயு மாகி நிலனுமாய் விசும்பு மாகி
ஏருடைக் கதிர்க ளாகி இமையவர் இறைஞ்ச நின்று
ஆய்வதற் கரிய ராகி அங்கங்கே யாடு கின்ற
தேவர்க்குந் தேவ ராவார் திருப்புக லூர னாரே.

திருப்புகலூரில் இருந்துகொண்டே அண்மையில் உள்ள திருச்செங்காட்டங்குடி, திருநள்ளாறு, திருச்சாத்தமங்கை, திருமருகல் முதலிய சீருடைத் தலங்கள் சென்று வணங்கி வந்தார்.

குலங்கெடுத்துக் கோள்நீக்க வல்லான் றன்னைக்
　　குலவரையன் மடப்பாவை யிடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்த மாட்டிக் கொண்ட
　　மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையி னானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னுந்
　　தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்

நலங்கொடுக்கும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே.

இவ்வாறு, ஆளுடைய அரசு திருப்புகலூரில் திருஞான சம்பந்தப் பிள்ளையாரின் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். அழுதுலகை வாழ்வித்த கவுணியகுல திலகராகிய பிள்ளையார் திருவாரூராளும் செஞ்சடைக்கடவுளைச் சேவித்து விட்டுத் திருப்பூம்புகலூருக்கு எழுந்தருளினார். அரசு அவரை எதிர் கொண்டு அவருடன் அப்பதியில் தங்கியிருந்தார். அப்பெரு மக்கள் இருவரும் அங்கு சேர்ந்து உறையும் பெருமையைக் கேட்டு, சிறுத்தொண்ட நாயனாரும், திருநீலநக்கரும், திருப்புகலூருக்கு வந்து முருகநாயனார் திருமடத்தில், இரண்டு ஞானமூர்த்திகளையும் வணங்கி உடனுறையும் பேறு பெற்றனர். இன்னும் பற்பல அடியார்கள் வந்து தங்கித் திருப்பதிகங்களின் சுவையமுதை யுண்டு ஒருமைப்பட்ட சிந்தையுடன் தங்கி உடனுறையும் பெரும்பேறு பெற்றார்கள்.

ஏனைய திருத்தலங்களை வணங்கித் திருத்தொண்டு புரிய விரும்பிய திருநாவுக்கரசு நாயனார் புகலூர் மேவிய புண்ணியரை வணங்கிப் புறப்பட்டார். திருநீலநக்கர், சிறுத்தொண்டர் முருகனார் முதலிய அடியார்கள் ஆராத காதலுடன் ஊர் கடந்து வழிவிட்டு வணங்கி விடைபெற்றுச் சென்றார்கள். சிவஞானப் பாலுண்ட செம்மலோடு திருவம்பர் சென்று வணங்கி திருக்கடவூர் சேர்ந்தார். அங்குக் குங்குலியக்கலய நாயனார் எதிர் கொண்டு வணங்கினார். கூற்றை யுதைத்த குன்றவில்லியை தணியாத அன்புடன் திருப்பதிகம் பாடி வணங்கினார்கள். குங்குலியக் கலயருடைய திருமடத்தில் தங்கி, அவர் குறைவற உபசரிக்கத் திருவமுது செய்தார்கள்.

ஆளுடைய அரசும் ஆளுடைய பிள்ளையும் அங்கிருந்து புறப்பட்டு, திருக்கடவூர் மயானம், திருஆக்கூர் முதலிய தலங்களைத் தொழுதுகொண்டு திருவீழிமிழலையை அடைந்தார்கள்.

படிக்காசு பெற்றது

திருவீழிமிழலையுள் வாழும் அடியார்கள், திருநாவுக்கரசும் திருஞானக்கன்றும் வருவதையறிந்து கடல் பொங்கியதுபோல் காதல் பொங்க எதிர்கொண்டு வணங்கினார்கள். வணங்கிய அடியார்களைத் தாமும் வணங்கி உள் புகுந்தார்கள். திருவீழி மிழலை வாழும் அடியார்கள் தங்கள் வீதிகளை எல்லாம்

அலங்கரித்தார்கள். வாழைக் கமுகுகளை நாட்டினார்கள். வீடுகள் வாயில்தோறும் நிறைகுடமும், திருவிளக்கும் வைத்தார்கள். தூபமிட்டார்கள்.

திருநாவுக்கரசு நாயனார், திருஞானசம்பந்தரும், அடியார்களும் உடன்வர விண்ணின்றும் இறங்கிய விமானத்தையடைய கோயில்வாயில் சென்றார். திருக்கோயிலை வலம் வந்து திருமுன் வணங்கி உட்புகுந்து முக்கண் முதல்வர் சேவடி மீது விழுந்தார்; எழுந்தார்; விம்மினார். திருப்பதிகம் பாடினார். அத்தலத்தில் பன்னாள் தங்கியிருந்தார். திருஞானசம்பந்தரும் ஒரு மடத்தில் அடியவருடன் இருந்தார்.

சில நாள்களுக்குப்பின் மாரியின்றிக் காவிரி நதியும் நீரின்றி வற்றியது. அதனால், விளைவின்றி எங்கும் வறுமை மிகுந்தது. உலகமெங்கும் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் பட்டினியால் பெரிதும் வருந்தினார்கள். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் என்ற இரு பெருந்தகையார்களது கனவில் திருவீழிமிழலை மேவும் செஞ்சடைக் கடவுள் எழுந்தருளி, “கால நிலைமையால் நீங்கள் கவலையடைய மாட்டீர்கள்; உங்களை வழிபடுவோர்க்கு அளிக்கும் பொருட்டு நாம் உங்கட்கு நாள்தோறும் படிக்காசு தருவோம்; அதுகொண்டு அடியார் மிடியை அகற்றுவீர்கள்” என்று அருளிச் செய்து, உலகம் அறிய திருக்கோயிலில் மேற்புறமுள்ள பீடத்திலும் கீழ்ப்புறமுள்ள பீடத்திலும் படிக்காசு வைத்து அருளினார். பறைசாற்றி அடியார்கட்கு அன்னதானம் புரிந்தார்கள்.

> அல்லார் கண்டத் தண்டர்பிரான் அருளால் பெற்ற படிக்காசு
> பல்லா றியன்ற வளம்பெருகப் பரம னடியா ரானார்கள்
> எல்லாம் எய்தி உண்கஎன இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
> சொல்லால் சாற்றிச் சோறிட்டார் துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்.

உமை திருமுலைப்பாலுண்ட திருஞானசம்பந்தர் திருமகனார் ஆதலின் வாசியுடன் கூடிய காசும், மெய்வருந்தத் திருத்தொண்டு புரிகின்ற காரணத்தினால் வாகீசப் பெருந்தகையார் வாசியில்லாத காசும் பெற்றார்கள். அவருடைய திருமடங்களில் அடியார்கள் நாள்தோறும் இரண்டு வேளையும் உண்ண உண்ணக் குறையாது திருவருளால் வளர்ந்தது. எல்லோரும் இன்புற்றிருந்தார்கள். காலக்குற்றங் கழிந்து மழை பொழிந்தது. யாண்டும் நன்கு விளைந்தது. வறுமைப் பேய் அகன்றது. ஞானமூர்த்திகள் இருவரும் திருவீழிமிழலைப் பெருமான்மீது பல மொழி மாலை புனைந்தார்கள்.

திருமறைக் காட்டில் திருக்கதவந் திறத்தல்

திருநாவுக்கரசு சுவாமிகள் ஏனைய திருத்தலங்களையுந் தரிசிக்க விரும்பினார். திருவீழிமிழலைத் தேவரிடம் பிரியா விடைபெற்று, திருஞான சம்பந்தருடன் அடியார்கள் புடைசூழத் திருவாஞ்சியம் முதலிய திருப்பதிகளைத் தரிசித்துக் கொண்டு திருமறைக்காட்டின் எல்லையை அடைந்தார். நறுமணங் கமழும் புன்னை மலர்ச் சோலை சூழ்ந்த உப்பளங்களின் முன்றில்தோறும் சிறுமியர்கள் முத்துக்களைக் கொழிக்கும் வளமையுடைய வேதவனத்தில் விடையவர் எழுந்தருளிய திருக்கோயில் சென்று வலம் வந்து இருபெருமக்களும் எம்பிரான் திருமுன் சென்றார்கள். மணிகண்டரை முன்னே மறைகள் பூசித்துத் திருக்காப்பிட்ட கதவம் அந்நாள்முதல் இந்நாள்வரை அடைத்தபடியே உள்ள திருவாயிலை அடைந்தார்கள்.

பழைமையாகிய வேதங்கள் திருக்காப்பிட்ட திருவாயிலைத் திறக்க வல்லார் ஒருவரும் வாராமையால், அருகில் உள்ள ஒருவழியே சென்று அன்பர்கள் அரனை வழிபட்டு வந்தார்கள். இச் செய்தியை நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் கேட்டு அறிந்தார்கள். தோணிபுரத் தோன்றலாம் சம்பந்தப்பிள்ளையார், "அப்பரே! வேதங்கள் பூசித்த விமலரை நாம் இருவரும் நேர் வாயிலிற் சென்று வணங்குதற் பொருட்டு, திருக்கதவந் திறக்கப் பாடியருளுவீராக" என்றார்.

அன்பின் பெருக்கால் காழி மன்னர் கூறக்கேட்டுக் கல்மிதப் பில் அணைந்த வாக்கின் வேந்தர் பாடுவாராயினார்.

பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

பண்ணின் பயன் துய்க்கும் பரமர் பத்துப் பாடல் பாடியும் கதவந் திறக்கத் தாழ்த்தபடியால் அப்பரடிகள் திருக்கடைக் காப்பாக அடியில் வரும் திருப்பாடலைப் பாடியருளினார்.

அரக்க னைவிர லால்அடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீர் எம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கத வந்திறப் பிம்மினே.

வேதவனப் பெருமான் திருவருளால் மணிக் கதவின் தாள் நீங்கித் திறந்தது. மொழிக்கு முதல்வராகிய அப்பர் ஞானக்கன்றுடன் தொழுது விழுந்து பணிந்தார். தேவர்களது ஆர்ப்பொலியும் வேதவொலியும் கடல் ஒலியினும் மிகுதியாக ஒலித்தன. அடியார்கள் மகிழ்ந்தார்கள். இரு திருவாளர்களும் உட்புகுந்து இன்ப வெள்ளத்தில் மூழ்கி அன்பு மேலிட என்பு உருகி இறைவரைப் பணிந்து மொழிமாலை சாத்திப் புறத்துவந்தார்கள்.

வாகீசர் திருஞானசம்பந்தரை நோக்கி, "இறைவரருளால் இத் திருக்கதவம் திறந்தும் அடைத்தும் வழி திருந்தும்படி தாங்கள் கதவம் அடைக்குமாறு பாடியருளும்" என்றார். சிவஞானமுண்ட சீகாழிப்பிள்ளையார் பதிகம் பாட எடுத்தவுடனே முதற்பாட்டிலேயே கதவம் திருக்காப்பிட்டது. அந்த அதிசயத்தைக் கண்ட அடியார்கள் அனைவரும் அளவற்ற மகிழ்ச்சியுற்று, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து சமானமில்லாத இரு குருமூர்த்திகளது திருவடிகளையுந் தொழுதார்கள். திருஞான சம்பந்தர் பதிகத்தை முடித்துப் பணிந்தார். அதுமுதல் இறைவர் திருமுன்னுள்ள அத்திருவாயில் திறக்கவும் அடைக்கவுமாக நிலவியது. அரசும் கன்றும் திருமடத்தை அடைந்தார்கள்.

வாய்மை திறம்பாத வாகீசர் திருமடத்தில் ஒருபுறம் படுத்தும், தாம் அரிதின் முயன்று பாடத் திருக்கதவந் திறந்ததையும், சம்பந்தர் எளிதிற் பாட அடைபட்டதையும் எண்ணி இறைவர் திருவுளம் அறியாது அயர்ந்தேன் என்று மனங் கவன்று, அச்சத்துடன் கண்மூடி அறிதுயிலில் அமர்ந்தார். வேதவனம் மேவும் விடையவர் பொன்னார் மேனியில் வெண்ணீறு பொலியத் திருவுருக் காட்டி, "வாய்மூரில் இருப்போம்; வா" என்று அருளி மறைந்தனர்.

வாகீசப்பெருந்தகை துணுக்குற்று எழுந்தார். இறைவர் தனது கனவில் தோன்றி வாய்மூருக்கு வருக என்ற அருள் திறத்தை உன்னி உருகினார்.

எங்கே யென்னை இருந்திடந் தேடிக்கொண்
டங்கே வந்தடை யாளம் அருளினார்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனார் அதென்கொலோ.

மன்னு மாமறைக் காட்டு மணாளனார்
உன்னி உன்னி உறங்குகின் றேனுக்குத்

தன்னை வாய்மூர்த் தலைவனா மாசொல்லி
என்னை வாவென்று போனார் அதென்கொலோ.

என்று பாடினார். "இது எம்பெருமான் திருவருளானால் யானும் போவேன்'' என்று எழுந்தார். திருமறைக்காட்டை விட்டுப் புறப்பட்டு விரைந்து போகின்றார். முன் காட்டிய திருக்கோலத் துடன் ஆதிமூர்த்தி அவர் முன் தோன்றினார். அப்பர் அவரைத் தொடர்கின்றார். ஆனால், அவரை அடையப் பெற்றாரில்லை. அன்பினால் நிறைந்த அமுதம் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போல் ஆயிற்று. எதிரில் பொன்வண்ணமான திருக்கோயில் ஒன்று தோன்ற அதில் புகுந்து இறைவர் மறைந்தார். இவ்வாறு அப்பரடிகள் சென்றதைக் கேட்ட பாலறாவாயர் விரைந்து வந்தார். அப்பர், "ஐயனே! அழைத்து வந்து மறைந்தீரே! சமயமறியாது கதவைத் திறப்பித்த அடியேனுக்கு ஒளித்தது சரி. திருத்தொண்டின வலிமையால் பாடி அடைப்பித்த சிவஞானப் பிள்ளையார் இங்கு வந்துள்ளார். அவருக்கு இனி தோன்றாது மறைவது முறையோ?'' என்று வேண்டினார். உடனே, நம்பர் சம்பந்தருக்குக் காட்சியளித்தார். பரமனைக் கண்டு பணிந்து, "அப்பரே! ஐயனைப் பாரும்'' என்று காட்டினார் காழிவேந்தர். கண்ணுதலைக் கண்ட அண்ணல் பாடுவார்.

பாட அடியார் பரவக் கண்டேன்
பத்தர் கணங்கண்டேன் மொய்த்த பூதம்
ஆடன் முழவம் அதிரக் கண்டேன்
அங்கை யனல்கண்டேன் கங்கை யாளைக்
கோட லரவார் சடையிற் கண்டேன்
கொக்கின் இதழ்கண்டேன் கொன்றை கண்டேன்
வாடற் றலையொன்று கையில் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே.

பின்னர், குறுக்கையர் குடியில் தோன்றிய அப்பர்கோவும் கவுணியர் குடியில் தோன்றிய இளங்கோவும் திருவாய்மூரை யடைந்து, திருக்கோயிலை வலம்வந்து வாய்மூர் வள்ளலை வணங்கித் திருப்பதிகம் பாடித் துதித்தார்கள். சிலநாள் அங்குத் தங்கி, பின் திருமறைக்காட்டிற்கு வந்து பரமனைப் பணிந்தார்கள்.

பிள்ளையார் மதுரைக்குப் புறப்படுதல்

இவ்வாறு, இரு மாதவ சீலர்களும் வேதாரணியத்தில் தங்கி யிருக்கும்போது, மதுரையில் பாண்டிமாதேவியார் மங்கையர்க்

கரசியாரும், மந்திரியார் குலச்சிறையாரும் விடுத்த தூதர் திருஞானசம்பந்தப் பெருமானைக் காண வந்தனர். வாயில் காப்போர் மூலம் தமது வரவையறிவித்து அனுமதி பெற்று, திருமடத்துக்குள் சென்று, திருஞானசம்பந்தரது திருவடியில் வணங்கி நின்றனர். ஞானபோனகர், "தீங்குளவோ?" என்று அன்புடன் வினாவினார். வந்தவர்கள், "ஐயனே உலகம் உய்ய வந்த உமது உபய சரணார விந்தங்களை நினைவார்க்குத் தீங்கு வருமோ? ஒருபோதும் வராது. வைதிக சைவநெறியை விடுத்து சழக்கு நெறியை அடுத்த பொய் உள்ள சமணர்கள் புரியும் கொடுமைகளை இனி எங்களால் பொறுக்க முடியாது. தேவரீர் அங்கு எழுந்தருளுதல வேண்டும்" என்று விண்ணப்பம் புரிந்தார் கள். சம்பந்தர், "அந்தச் சமணரது பொய்ந்நெறியை மாற்றிச் சைவ மெய்ந்நெறியை ஏற்றி இடர் களைவோம்" என்று தெய்வத் திருநீற்றை நினைந்து எழுந்தார்.

உடனே, வாகீசர் தடுத்து, "பிள்ளாய்! தூய்மையும் வாய்மையும் இல்லாத சமணர்கள் சாலவும் மாயையில் வல்லவர்கள். அவர்கள் எனக்குச் செய்த தீயனவும் பல. ஆதலின் நான் உம்மை அங்கு செல்ல இசையேன்" என்றனர். பிள்ளையார் வாகீசரை நோக்கி, "அப்பரே! எல்லையில்லாத அன்புடன் திருநீற்றைப் போற்றும் இருவரையுஞ் சென்று காண விரும்புகின்றேன். அன்றியும் அங்குத் தீமைபுரியும் சமணரது தருக்கையடக்கிச் சைவத்தை நிலை நாட்டாது இனி ஒன்றுஞ் செய்யேன். உமது ஆணை" என்றார். அப்பரடிகள், "நாளுங் கோளும் நன்னிலை யில்லை" என, கவுணியர்கோன் கோளறுபதிகம் பாடி, "தேவரீர் இரும்; அடியேன் ஒருவன் .சென்றாலே அமையும், பரசமய இருளை நீக்கிச் சைவசமய ஒளியை ஏற்றி வருவேன்" என்று கூறிப் புறப்பட்டுச் சென்றார். ஆண்ட அரசு மறுக்க முடியாது இருந்தார்.

திருத்தல யாத்திரை

சீகாழிப் பிள்ளையார் சென்றபின் அப்பரடிகள் சில நாள் வேதாரணியத்தில் தங்கித் திருப்பணி செய்தார். திருப்பதிகங்கள் பாடியருளினார்.

> கால்கொடுத் திருகை யேற்றிக்
> கழிநிரைத் திறைச்சி மேய்ந்து
> தோல்படுத் துதிர நீரால்
> சுவரெடுத் திரண்டு வாசல்

ஏல்வுடைத் தாஅ மைத்தங்
கேழுசா லேகம் பண்ணி
மால்கொடுத் தாவி வைத்தார்
மாமறைக் காட னாரே.

மீண்டும் திருவீழிமிழலை மேவும் தேவதேவரைச் சேவிக்க விரும்பினார். மறைக்காட்டையரது திருவருள் பெற்றுப் புறப் பட்டார். திருநாகைக்காரோணஞ் சென்று இறைவனை நிறைந்த அன்புடன் வழிபட்டுத் திருப்பதிகங்கள் பாடினார்.

தெற்றினர் புரங்கள் மூன்றும் தீயினில் விழவோ ரம்பால்
செற்றவெஞ் சிலையர் வஞ்சர் சிந்தையுட் சேர்வி லாதார்
கற்றவர் பயிலு நாகைக் காரோணங் கருதி யேத்தப்
பெற்றவர் பிறந்தார் மற்றுப் பிறந்தவர் பிறந்தி லாரே.

தூமென் மலர்க்கணை கோத்துத்தீ வேள்வி தொழிற்படுத்த
காமன் பொடிபடக் காய்ந்த கடனாகைக் காரோணநின்
நாமம் பரவி நமச்சிவாய என்னும் அஞ்செழுத்தும்
சாமன் றுரைக்கத் தருதி கண்டாய் எங்கள் சங்கரனே.

அங்கிருந்து திருவீழிமிழலை சென்று, நாராயணமூர்த்தியால் விண்ணினின்றும் இழிந்த திருக்கோயிலினுள் வாழும் சிவ மூர்த்தியை வழிபட்டு, வேறு பல தலங்களையும் தரிசிக்க விரும்பினார். காவிரி நதியின் கரைவழியே சென்று திருவாவடு துறையை அடைந்தார். அங்குத் திருஞானசம்பந்தருக்கு, அவருடைய பிதாவின் வேள்வியின் பொருட்டு அரனார் ஆயிரம் பொன் உலவாக்கிழியருளிய திறத்தை வியந்து பாடினார்.

மாயிரு ஞால மெல்லாம் மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே.

திருவாவடுதுறையிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வழியில் பழையாறையைக் கண்டார். அங்குச் சமணர்கள் மறைத்துள்ள வடதளியில் மேவும் மணிகண்டரைக் கைகூப்பித் தொழுதனர். அது சமணர்கள் பொய்ம்மையாகச் செய்த விமானம் என்று அங்குள்ளார் சொல்லக் கேட்டு மிகவும் வருந்தினார். அந்த விமானத்தின் அருகில் ஓர் இடத்தில் அமர்ந்து, சிவபெருமான் திருவடியைச் சிந்தித்து, “எம்பெருமானே! மந்த புத்தியை உடைய சமணர்கள் வஞ்சனையால் உமது திருவுருவை மறைத்த தீமையை

அகற்றி, சமணரது திறத்தை அழிப்பீர்; ஐயனே! உமது திரு வுருவங் கண்டாலன்றி இவ்விடம் விட்டு அகலேன்" என்று வேண்டினார். தமது கருத்து முடியும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

கருணைக்கடலாகிய கண்ணுதற் கடவுள், அரசனுடைய கனவில் தோன்றி, "அறிவில்லாத அமணர்கள் நம்மை மறைக்க நாம் உள் இருந்தோம். திருநாவுக்கரசன் நம்மைக் கும்பிடும் பொருட்டுச் சமணரை அழித்து அகற்றுவாய்" என்று மறைத்துள்ள இடத்தையும் அடையாளத்துடன் கூறியருளினார்.

மன்னன் கனவு தெளிந்து எழுந்து, சிவமூர்த்தியின் கட் டளையை நினைத்துக் கரங்களைக் கூப்பித் தொழுதான். அமைச்சர்களுக்கு இறைவனுடைய ஆணையை அறிவித்து, அமைச்சராதியோர் புடைசூழச் சென்று, எம்பிரான் அருளிய அடையாளத்தின் வழியைக் கண்டு, வாகீசப்பெருமானை அடி பணிந்து ஆங்குக் குவிந்திருந்த அமணர்களை ஆனை இனத்தினை விடுத்து அமணர் ஆயிரம் பேரையும் துகைப் புண்ணச் செய்து தூரறுத்தான். சமணர் மறைத்த மறைப்பை நீக்கி, விடையவருக்கு விமானம் புதுக்கி, நித்திய நைமித்திகங்கட்கு ஏராளமான நிலபுலங்களை விடுத்து வணங்கினான். திரு நாவுக்கரசரும் இறை வனைக் கண்டு களித்து இனிய பதிகம் பாடித் துதித்தார்.

தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருண்
ணிலையி னான்மறைத் தான்மறைக் கொண்ணுமோ
அலையி னார்பொழி லாறை வடதளி
நிலையி னானடி யேநினைந் துய்ம்மினே.

பின்னர், காவிரிக்கு இருமருங்கிலும் உள்ள திருப்பட்டீச்சுரம், ஆறைமேற்றளி, திருவலஞ்சுழி, திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, தென்குடித்திட்டை, திருப்புள்ளமங்கை, திருச்சக்கரப்பள்ளி, திருவையாறு, திருநெய்த் தானம், திருஆலம்பொழில், திருப்பெரும்புலியூர், திருமழபாடி, திருப்பழுவூர், திருக்கானூர், திருஅன்பிலாலந்துறை, திரு மாந்துறை, திருப்பாற்றுறை முதலிய திருத்தலங்களையெல்லாம் தரிசித்து, ஆங்காங்கு முக்கட் பரமனுக்கு மொழிமாலை புனைந்து, உழவாரப் படையினால் காயத்தொண்டும் புரிந்துகொண்டு அடியார்கள் எதிர்கொள்ள திருவானைக்காவை அடைந்தார்.

காவிரியில் முழுகி, செழுநீர்த்திரளாகிய சிவமூர்த்தியைத் தரிசித்தார். சிலந்திக்கு அருள்புரிந்த திருவருள் திறத்தினைப் புகழ்ந்து பாடினார்.

எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே.

கட்டமுது பெறுதல்

அங்கிருந்து புறப்பட்டு, திருஎறும்பியூர், அழகிய திருச்சிராப்பள்ளி, திருக்கற்குடி, திருப்பராய்த்துறை, திருஆலந்துறை, திருச்செந்துறை முதலிய புண்ணிய தலங்களை அடைந்து வண்டமிழ் பாடி வழிபட்டு, காவிரியைக் கடந்து வடபால் உள்ள திருப்பைஞ்ஞிலியைத் தரிசிக்கும் பொருட்டுச் செல்லுவராயினார்.

வழிநடந்து வாகீசர் வளைத்து வருந்தினார். பசியுந் தாகமும் வந்து நெருக்கின. அவைகளைப் பொருள்படுத்தாது நடந்து திருப்பைஞ்ஞீலிக்கு அருகில் சேர்ந்தார். அண்டர்நாயகன் தொண்டர் நாயகரது பசிதாகத்தை மாற்றி அருள்புரியக் கருதினார். பூங்காவும் திருக்குளமும் வழியில் உண்டாக்கி செந்தண்மை பூண்ட அந்தணர் வடிவுகொண்டு மதிசூடிய பரமர் பொதிசோறு கொண்டு திருத்தாண்டக வேந்தரை எதிர்நோக்கி யிருந்தார். மாலும் அயனும் கீழும் மேலும் தேடியுங் காண முடியாத அண்ணலை வாகீசர் அடைந்தார். அந்தணராகியுள்ள எந்தையார், "அன்பரே! நீர் நடந்து வந்து வருந்தியிருக்கின்றீர். இதோ என்பால் உள்ள பொதிசோற்றை உண்டு, இக் குளத்தின் தண்ணீரைப் பருகி இளைப்பாறிப் போவீராக'' என்று கூறியருளினார். நாவுக்கரசர் நம்பர் திருவருள் என்று எண்ணி, வேதியர் தந்த பொதிசோற்றை உண்டு இனிய தண்ணீரைப் பருகி தளர்வு நீங்கினார்.

மெலிவு நீங்கிய மெய்யன்பரை மறையவர் நோக்கி, 'நீர் எங்கு போகின்றீர்?' என்று வினாவி அருளினார். "அடியேன் திருப் பைஞ்ஞீலிக்குப் போகின்றேன்'' என்றார். இறைவர் "அந்த

ஊருக்குத்தான் நான் போகின்றேன்" என்று கூறி வாகீசருடன் சென்றார். திருப்பைஞ்ஞீலிக்கு அருகில் வந்தவுடன் வேதியராக வந்த விடையவர் மறைந்தருளினார். அப்பரடிகள், "ஆ! கெட்டேன். மாலுமயனுங் காணாத மணிகண்டர் அடியேனைப் பொருளாக எண்ணி காவுங் குளமும் அமைத்துப் பொதிசோறு தந்த கருணைதான் என்னே? என்னே?" என்று பாடி மண்ணில் வீழ்ந்து எழுந்து கண்ணீர் மழை பொழிந்தார். திருக்கோயிலுக்குள் சென்று நெற்றிக் கண்ணுடைய நிமலனை வணங்கினார். அளவற்ற காதலுடன் தமிழ் மாலைகள் பாடி, கையினால் திருத்தொண்டுபுரிந்து அங்குச் சிலநாள் தங்கியிருந்தார்.

அன்புவடிவாய அப்பமூர்த்திகள் அங்கிருந்து புறப்பட்டு, இறைவர் எழுந்தருளியுள்ள திருமலைகளையும், திருப்பதிகளையும் வணங்கிச் செந்தமிழ்ப்பதிகங்கள் பாடி, வடபால் நோக்கித் திருவண்ணாமலையை அடைந்தார். மலையைக் கண்டவுடன் மண்மிசை வீழ்ந்து வணங்கி, மலையை வலம்வந்து, கரையில்லாத காதலுடன்அருணாசலேச்சுரரை வழிபட்டார். வீட்டின்பத்தினும் மேலான இன்பத்தை அடைந்தார். பைந்தமிழ்மாலை பாடினார்.

தொண்டை நாடு

திருத்தாண்டக வேந்தர் சில நாள் சென்றபின், தொண்டை நன்னாடு சென்று ஆங்குள்ள சிவதலங்களைத் தரிசிக்க விரும்பினார். காடும் மலையுங் கான்யாறுங் கடந்து சிறந்த தெய்வ நலம் பொருந்திய தொண்டை நன்னாட்டினை அடைந்து, பூஞ் சோலைகள் சூழ்ந்த திருவோத்தூரைச் சேர்ந்தார். சேய்நதியில் முழுகித் திருக்கோயிலை வலம் வந்து, கண்ணீர் பொழிந்து, இறைவனை வணங்கி திருத்தாண்டகங்கள் மொழிந்து பணி செய்தார். அருகிலுள்ள அருமைப்பதிகளை வணங்கிக்கொண்டு, தையல் தழுவக் குழைந்தபிரான் தங்கும் தெய்வப்பதியென்று வைய முழுதும் தொழுதேத்தும் மதில்சூழ் காஞ்சிப்பதி யணைந்தார். "உலகம் உய்ய இறைவர் சூலை தந்து ஆட்கொண்ட வாகீசரை வரப்பெற்றோம்" என்று கதிரவனைக் கண்ட கமலம்போல் கச்சியம்பதியில் உள்ள அன்பர்கள் களித்து, வாயில்கள் தோறும் மணித்தோரணங்கள் கட்டி, வாழைக் கமுகுகள் நாட்டி, பூரண கும்பம் வைத்து, திருவிளக்குகள் ஏற்றி, மலர்ப் பந்தரிட்டு, விடைக் கொடிகளைப் பறக்கவிட்டு நகரை அலங்கரித்தார்கள். உழவாரப் படை ஏந்திய உத்தமரை எதிர் கொண்டு வணங்கினார்கள். அப்பரும் அவர்களை வணங்கினார்.

நகருக்குட் சென்று, திருக்கோயிலை அடைந்து திருவாயிலைத் தொழுது தழுவக் குழைந்த தயாபரனைக் கண்டு விண்ணருவி யென்னக் கண்ணருவி பெருக, புளகம் பொங்க, மண்மிசை வீழ்ந்து எழுந்து தமிழ்ப்பதிகம் சாத்தி வழிபட்டார். கச்சிமயானம், கச்சித் திருமேற்றளி முதலிய திருக்கோயில்களையுந் தரிசித்துப் பலப்பல பதிகம் பாடினார்.

காஞ்சியில் திருத்தொண்டுகள் புரிந்து, அங்கிருந்தபடியே, திருமாற்பேறு, திருவூறல் முதலிய தலங்களைக் கண்டு வணங்கி மகிழ்ந்து திருப்பதிகங்களை மொழிந்தார். திருக்கழுக்குன்றஞ் சென்று வேதங்கள் பூசித்த வேதகிரீச்சுரரை வணங்கினார். கடற் கரையில் விளங்கும் திருவான்மியூரை அடைந்து மருந்தீசரை வழிபட்டு, மருவார் மலர்சோலை மயிலாப்பூர் சென்று கபாலீசரைத் தொழுது, திருவொற்றியூர் சென்று படம்பக்கநாதரை வணங்கினார். அடியார்கள் பலர் அப்பரடிகளை வரவேற்று மகிழ்ந்தார்கள். திருவொற்றியூர் வாழும் எழுத்தறியும் பெரு மானைப் பல தமிழ்ப்பதிகங்கள் பாடிப் பரவினார்.

மனமெனுந் தோணி பற்றி மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகட லோடும் போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடைய கோவே.

திருமுல்லை வாயில் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு திருப்பாசூர் சென்று திருப்பதிகள் பாடி வழிபட்டார். பழை யனூர்த் திருவாலங்காடு போய் ஊர்த்துவ தாண்டவஞ் செய்யும் அருட்கடலைத் தொழுதார். வடதிசை நோக்கிச் சென்று வழியில் உள்ள திருக்காரிகரை முதலிய தலங்களைத் தரிசித்துத் திருக் காளத்தி மலையைச் சார்ந்தார். பொன்முகலிநதியில் முழுகி மலை மிசை யேறிக் காதலுடன் வேதநாயகரைக் கண்டு கண்ணுங் கருத்தும் களித்து, மெய்மறந்து பாடினார். ஆடினார். கண்ணுதற் பெருமான் அருகில் நிற்குங் கண்ணப்ப நாயனாரது பாத மலர்மீது வீழ்ந்து வணங்கினார். இனிய தமிழ்ப்பதிகங்களை ஓதினார்.

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
    வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
    ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
    பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றி னுள்ளான்

கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யான்அவன்என் கண்ணு ளானே.

சில நாள் அங்கிருந்து திருத்தொண்டுகள் புரிந்தார்.

கைலை காண விழைதல்

திருநாவுக்கரசு நாயனார், திருக்காளத்தியில் ஞானப்பூங் கோதையம்மையாரையும், குடுமித்தேவரையும் பலகாலும் பணிந்து பரவசமுற்றார். அரிய தமிழ்மாலை சூட்டினார். சில தினங்கள் அங்குத் தங்கித் திருத்தொண்டு புரிந்தார். திருக்கைலாயமலையில் வீற்றிருந்தருளும் திருக்கோலத்தைக் காண்பதற்குக் காதல் கொண்டார்.

கைலாய யாத்திரை

மலைமருந்தாகிய மணிகண்டப்பெருமானை வணங்கும் மிகுந்த விருப்பத்துடன் வடதிசைநோக்கிப் புறப்பட்டார். மலைகளையும், காட்டாறுகளையுங் கடந்து திருப்பருப்பதம் என்னுந் திருத்தலத்தை அடைந்தார். வித்யாதரர்களும் விண்ண வர்களும் இயக்கர்களும், சித்தர்களும், கின்னரர்களும் பன்னகாதி பர்களும், நாளும் வந்து நம்பரை வணங்கும் இடமாகிய அந்த திருப்பருப்பதத்தில் (ஸ்ரீசைலம்) எழுந்தருளியுள்ள மல்லி கார்ச்சுனரைக் கண்குளிரக் கண்டு தமிழ்ப்பதிகம் பாடினார்.

அங்கிருந்து புறப்பட்டு, அப்பரடிகள், தெலுங்கு நாட்டைக் கடந்து, கன்னடதேயத்தையுங் கடந்து, மாளவதேயம், மத்திம பைதிரம் முதலியவற்றையுங் கடந்து காசிப்பதியை அடைந்தார். அங்குக் கங்கையில் முழுகி, தடங்கண்ணித் தாயாரையும் விசுவ லிங்கத்தையும் வணங்கினார். உடன் வந்தவர்களை அவ்விடத்தில் விடுத்து, மேலும் வடதிசையை நோக்கி நடந்து மலைக் கானங்களை அடைந்தார்.

மனிதர்கள் செல்லமுடியாத அடர்ந்து உயர்ந்த காட்டு வழியில், தனிப்பெருங்காதலுடன் தவத்திருவாளர் தனியே நடந்து செல்லுகின்றார். காய், கனி, கிழங்கு, இலை, சருகு இவைகளை அருந்துவதையும் தவிர்த்தார். இரவில் செல்லும்பொழுது, கொடிய விலங்குகளும் இவரைத் துன்புறுத்தாது அஞ்சி அகன்றன; நாகப்பாம்புகள் படமெடுத்துப் பணாமகுடத்துள்ள நாகமணி களால் விளக்கு எடுத்தன. தேவராயினும் தனித்துச் செல்ல அஞ்சும் அக்கானக வழியே அடிகள் சென்றார்.

இரவும், பகலும் எல்லையில்லாத ஆர்வத்துடன் ஏகும் வாகீசப் பெருந்தகைக்குப் பாதங்கள் பரடுவரை தசைகள் தேய்ந்தன. தேய்ந்தும் அன்பு தேயாதவராகிக் கரங்களினால் தாவித் தாவிச் செல்வாராயினார். கரங்களும் மணிக்கட்டுவரை தசை தேய்ந்தன. தளராத அன்புடைய அவர் மார்பினால் தவழ்ந்து சென்றார். மார்புந் தேய்ந்து சதைப்பற்று அற்று எலும்புகள் முறிந்தன. அப்பரடிகள் அந்த நிலையிலும் சிந்தை யன்பு குன்றாமல் உடம்பு முழுவதும் உள்ள தசைகள் கெடும்படி புரண்டு புரண்டு சென்றார்.

பாம்பணிந்த பரமேசர், அவர் மேலும் உலகில் இனிய செந்தமிழ்ப் பாடல்களைப் பாடும் பொருட்டு, கயிலை மலைக்குச் சேர்தற்கு அருளாதவராகி, அருகில் நல் நீர் நிறைந்த ஒரு தடாகத்தை உண்டாக்கி, முனிவர் வடிவில் தோன்றியருளினார். அப்பரை நோக்கி, "ஐயா! நீர் உடம்பின் உறுப்புக்கள் அழியும் படி இக்கொடிய வனத்தில் எதன் பொருட்டு வந்தீர்?" என்று வினாவியருளினார். மாசில்லாத மரவுரியும், மார்பில் முப்புரி நூலும், ஒளியுடன் கூடிய சடைமுடியும், திருநீற்றுப் பொலிவும் உடைய அத்திரு முனிவரை நோக்கிய பெரியார், "முனிவர் பெருமானே! வடகைலையில் என்தாய் மலைவளர் மங்கையுடன் எம்பெருமான் வீற்றிருக்குந் திருக்கோலத்தைக் காணுங் காதலுடன் அடியேன் செல்லுகின்றேன்" என்றார்.

முனிவர், "அன்பரே! கயிலைமால் வரையைப் பூமியின் கண் உள்ள மானுடர்கள் சென்று காண்பது இயலாது. அமரர்கட்கும் அது அரிது. வெயில் மிகுந்த வெங்கானிடை நீர் இப்படி வந்தது சரியன்று. இனி நீர் திரும்பிப்போவதே தக்க கடனாகும்" என்று அருளினார். நாவுக்கரசர், 'ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்று மறுத்துரைத்தார். அவரது உறுதியைக் கண்ட உம்பர் நாயகன் விண்ணில் மறைந்து நின்று, "ஓங்கும் நாவுக்கரசனே! எழுந்திரு" என்று அருளிச் செய்தார். தேய்ந்த உடம்பெல்லாம் பண்டுபோல் செழிப்புற்றுத் திருவருள் ஒளியுடன் எழுந்து கயிலைக்காட்சியைக் காணஅருள்வீர்" என்று பணிந்தார்.

அண்ண லேயெனை யாண்டுகொண் டருளிய அமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னால்திருக் கயிலையில் இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்.

"இத் தடாகத்தில் முழுகி நமது திருக்கைலாயக் காட்சியைத் திருவையாற்றில் காண்பாய்'' என்று அண்ணல் விண்ணில் மறைந்து அருள்புரிந்து கூறி யருளினார்.

வாகீசப் பெருந்தகை இறைவர் திருவருளைச் சென்னி மேற்கொண்டு, செந்தமிழ்ப்பதிகங் கூறித் துதித்தார். ஐந்தெழுத்தை ஓதி அப்புனிதவாவியின் மூழ்கினார். இறைவர் திருவருளை யாரே அறியவல்லார்? திருவையாற்றில் ஒரு திருக்குளத்தில் வந்து எழுந்தார். உலகெலாம் வியந்தன. கண்ணுதற் பெருமானது திருக் கருணையை எண்ணிக் கண்ணீர் சொரிந்தார். திருக்கோயிலை அடைகின்றார். அங்குச் சரம் அசரம் என்ற எல்லாம் தத்தந் துணை யுடன் விளங்குந் தோற்றத்தைக் கண்டார். கயிலையில் சத்தியும் சிவமும் விளங்குவதுபோல் எல்லாம் சிவசத்தி சொரூபமாகக் கண்டார். திருக்கோயில் கைலாயமலையாகவும், மாலயனாதி வானவர் வாழ்த்தும் ஒலிபொங்கவும், திருமறைகள் தனித்தனி முழங்கவும், இமையவர் இருடியர் இயக்கர் சித்தர் முத்தர் முதலிய கணங்கள் எல்லாம் அருகில் நெருங்கி இருக்கவும் கங்கை முதலிய நதிகள் வணங்கவும், சிவகணங்கள் போற்றவும், பூதவேதாளங்கள் வணங்கவும், இடபதேவர் எதிர்நிற்கவும், நந்திதேவர் நடுவில் நிற்கவும், வெள்ளிமாமலை மேல், மரகதக் கொடி போல் பார்வதி தேவி அருகிருப்ப பவளமலைபோல் பரமர் வீற்றிருக்கும் அரிய காட்சியை அப்பமூர்த்திகள் தரிசித்தார். அந்த ஆனந்தக்கடலைக் கண்களென்னுங் கரங்களால் மொண்டு மொண்டு பருகினார்; பாடினார்; ஆடினார்; விழுந்தார்; எழுந்தார்; அழுதார்; தொழு தார், அவர் அடைந்த மகிழ்ச்சியையும், வியப்பையும் அளவிட்டுச் சொல்லவல்லார் யாவர்? போற்றித் திருத்தாண்டகங்கள் பாடினார். பின்னர், கயிலைக் காட்சி அகன்று திருவையாற்றின் திருக்கோலந் திகழ்ந்தது; தந்தையருள் இதுவோ? என்று தெளிந்து பல பதிகங்கள் பாடி அருளினார்.

மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான்மகளொடும் பாடிப்
போதொடுநீர் சுமந்தேத்திப் புகுவாரவர் பின்புகுவேன்
யாதுஞ் சுவடுபடாமல் ஐயா றடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

இரப்பவர்க் கீய வைத்தார் ஈபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநர கங்கள் வைத்தார்

பரப்புநீர்க் கங்கை தன்னைப் படர்சடைப் பாகம் வைத்தார்
அரக்கனுக் கருளும் வைத்தார் ஐயன்ஐ யாற னாரே.

சிந்திப் பரியன; சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன; முத்தி கொடுப்பன; மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன; பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடும்ஐ யாறன் அடித்தலமே.

திருவையாற்றில் பல நாள்கள் தங்கித் திருத்தொண்டு புரிந்தார். பல வண்டமிழ் மாலை பாடினார். அங்கிருந்து புறப்பட்டு, திருநெய்த்தானம் முதலிய திருத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு, மழபாடியுள் மேவிய மாணிக்கத்தை வணங்கினார்.

தினைத்தனையோர் பொறையிலா உயிர்போங் கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியா லிந்த
அனைத்துலகும் ஆளலாம் என்று பேசும்
ஆங்காரந் தவிர்நெஞ்சே அமரர்க் காக
முனைத்துவரு மதின்மூன்றும் பொன்ற அன்று
முடுகியவெஞ் சிலைவளைத்துக் செந்தீ மூழ்க
நினைத்தபெருங் கருணையன்நெய்த் தானம் என்று
நினையுமா நினைந்தக்கால் உய்ய லாமே.

திருப்பூந்துருத்தியில் திருமடம் புதுக்கல்

அங்கிருந்து அடிகளார் திருப்பூந்துருத்தியை அடைந்தார். திருக்கோயிலை வலமாக வந்து கும்பிட்டு, உள்புகுந்து, செஞ்சடைப் பெருமானை வணங்கினார். அன்பு பொங்கித் ததும்பி வழிந்தது. கண்மழை பொழிந்தார். பல திருத்தாண்டகங்களைப் பாடியருளினார். திருவிருத்தங்களையும் பாடினார். பல நாள்கள் அத்திருத்தலத்தில் தங்கியிருந்தார். இறைவன் திருவருள் பெற்று ஒரு சிறந்த திருமடம் புதுக்கி யருளினார்.

திருவங்கமாலை பாடினார். இன்னும் பலபல தமிழ் மாலைகளை இறைவனுக்குச் சூட்டி இன்புற்றார்.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஒட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே

காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே.

செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட் கேறுமோ
அத்த னென்றரி யோடு பிரமனும்
துத்தி யஞ்செய நின்றநற் சோதியே.

நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறு கோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி லாதவன் ஈசன் ஒருவனே.

சம்பந்தர் சந்திப்பு

காவிரி நதி சூழ்ந்த திருப்பூந்துருத்தியில் திருநாவுக்கரசு நாயனார் தங்கித் திருத்தொண்டு பல புரிந்துகொண்டிருந்தார்.

திருஞானசம்பந்த சுவாமிகள், மதுரையில் கன்மனமுடைய சமணர்களுடன் அனல்வாது, புனல்வாது புரிந்து வென்று, பாண்டியனுடைய உடற் கூனையும், உள்ளக் கூனையும் நிமிர்த்தி யருளி, திருநீற்றின் ஒளியைப் பாண்டிநாடு முழுவதும் பரப்பித் திரும்பி வருவாராயினார். சோழவள நாட்டை அடைந்ததும், திருப்பூந்துருத்தியில் அப்பரடிகள் இருக்கின்றார் எனக்கேட்டார். அவரைக் காண வேண்டும் என்ற ஆவல் மிகுதியுங்கொண்டு, பூந்துருத்திக்கு அருகில் வந்தார்.

திருநாவுக்கரசு நாயனார் ஞானசம்பந்தருடைய வரவை அறிந்து, மிகவும் உள்ளம் உவந்து கண்டு வணங்குங் காதல் கொண்டு, எதிர்சென்றார். நெருங்கிய திருக்கூட்டத்துள் நுழைந்து, சம்பந்தர் தன்னைக் காணாதபடி வணங்கி, ஒருவரும் அறியாத வாறு சென்று, திருஞானசம்பந்தப் பெருமான் ஏறிவரும் முத்துச் சிவிகையைத் தாங்குபவர்களுடன் சேர்ந்து தாங்கி மிகவும் மகிழ்ச்சியுற்றார்.

சிவஞானப் பாலுண்ட தவஞானச்செல்வர் திருப்பூந்துருத்திக்கு அருகில் வந்து "அப்பர் எங்கிருக்கின்றார்?" என்று கேட் டருளினார். உருகிய உள்ளமுடன் அப்பரடிகள் "தேவரீருடைய அடியேன் உமது திருவடிகளைத் தாங்கிவரும் பெருவாழ்வைப் பெற்று இங்கு இருக்கின்றேன்" என்றார்.

திருஞான முனிவரர சிருந்ததிருப் பூந்துருத்திக்
கருகாக எழுந்தருளி எங்குற்றார் அப்பர்என
உருகாநின் றும்மடியேன் உம்மடிகள் தாங்கிவரும்
பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங்குற் றேன்என்றார்.

அது கேட்ட ஆளுடைய பிள்ளையார், உள்ளமும், உடம்பும் பதை பதைத்து, விரைந்து பல்லக்கை விட்டு இறங்கி, வாகீசப் பெருமானை வணங்கினார். அவர் வணங்குவதற்கு முன் அப்பர் வணங்கினார். சிவனடியார்கள் யாவரும் தொழுது ஆர்த்தார்கள். இரண்டு பெருமக்களும் கலந்து திருப்பூந்துருத்தியில் உள்ள திருக் கோயிலுக்குள் சென்று, மான் மழுவேந்தும் மணிகண்டத்திறை வரை வணங்கி, துதித்துத் திருமடத்தில் தங்கியிருந்தார்கள்.

பாண்டிநாட்டின் தலைநகராகிய மதுரையில் வல்ல மணருடன் வாதம்புரிந்து வென்றதையும், பாண்டிய மன்னனுடைய கூன் நிமிர்ந்ததையும் திருநீறு பூசுந் திருநெறியைப் பாண்டிநாட்டில் வளர்த்ததையும், மங்கையர்க்கரசியாருடைய அளவற்ற அன்பையும், குலச்சிறை நாயனாருடைய பெருமை யையும், இனிது சீகாழிப் பிள்ளையார் கூறியருள, வாகீசப் பெருந்தகை கேட்டார். சிறந்த தமிழ்நாட்டைக் காணவேண்டும் என்று வாக்கின் மன்னர் விரும்பினார். பெரிய தொண்ட நன்னாட்டில் உள்ள சிவதலங்களைச் சென்று கண்டு திருப்பதிகம் பாடுமாறு திருஞான சம்பந்தருக்குக் கூற, அவர் திருப்பூந் துருத்தியைத் தொழுது புறப்பட்டருளினார்.

பாண்டிநாட்டு யாத்திரை

ஆளுடைய அரசு பூந்துருத்தி மேவிய புரிசடைப் புனிதர் பால் விடைபெற்றுப் புறப்பட்டு, தென் திசையாகச் சென்று, காணத் தகுந்த தலமாகிய திருப்புத்தூரைச் சேவித்து மதில்கள் சூழ்ந்த மதுரையம்பதியைச் சேர்ந்தார். செந்தமிழ்ச் சங்கத்தில் தாமேயிருந்து தமிழினை ஆய்ந்த சோம சுந்தரக்கடவுள் வீற்றிருக் கும் திருவாலவாய்க் கோயிலை வலம் வந்து வணங்கி உட்புகுந்து, அங்கயற்கண்ணம்மையுடன் அழகிய சொக்கலிங்கத்தைப் பணிந்து, பாமாலை புரிந்தார்.

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் றன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் றன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்

தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றுஞ்
சேயானைத் தென்கூடல் திருவால வாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

பத்தியின் மிக்க பாண்டிமா தேவியார் மங்கையர்க்கரசியாரும், அவருடைய கணவனார் நின்றசீர் நெடுமாற நாயனாரும், குலச்சிறை நாயனாரும் அளவற்ற அன்புடன் தொழுது உபசரிக்க அங்குச் சிலநாள் தங்கித் திருப்பணி செய்து கொண்டிருந்தார்.

இராமேச்சுரம் சென்று தொழுதல்

அங்கிருந்து புறப்பட்டு, திருப்பூவணம் போய், திருக்கோயிலுட் சென்று நெடிய மாலுக்கும் அறிவரிய நிமலனார் நேர் தோன்ற தரிசித்து, "வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்" என்ற திருத்தாண்டகத்தைப் பாடினார். ஸ்ரீராமர் தென்னிலங்கை வேந்தனுடைய பத்துத் தலைகளையுந் துணித்ததனால் வந்த பிரமகத்தி வினை தீரும்பொருட்டுப் பூசித்த திரு இராமேச்சுரத்தை வணங்க வேண்டும் என்று விரும்பி ஆராத காதலுடன் அகங் குழைந்து உருகித் திருஇராமேச்சுரத்தைச் சார்ந்தார். அங்குக் கடற்கரையில் அருட்கடலாக எழுந்தருளியுள்ள இராம லிங்கத்தைக் கண்குளிரக் கண்டு பற்பல பைந்தமிழ்ப் பாடல்கள் பாடி வணங்கினார். திருத்தொண்டுகள் புரிந்து சிலநாள் அங்குத் தங்கி இருந்தார்.

பாசமுங் கழிக்க கில்லா அரக்கரைப் படுத்துத் தக்க
வாசமிக் கலர்கள் கொண்டு மதியினால் மால்செய் கோயில்
நேசமிக் கன்பி னாலே நினைமினீர் நின்று நாளும்
தேசமிக் கானி ருந்த திருவிரா மேச்சு ரமே.

அங்கிருந்து புறப்பட்டு, தமிழ்நாட்டிலே அமிழ்தினும் இனிய பொருநையின் கரையில் வயல்கள் சூழ்ந்த திருநெல்வேலியையும், திருக்கானப் பேரையும் வணங்கினார்.

தொழுதுபல வகையாலும் சொற்றொடைவண் டமிழ்பாடி
வழுவில்திருப் பணிசெய்து மனங்கசிவுற் றெப்பொழுதும்
ஒழுகியகண் பொழிபுனலும் ஓவாது சிவன்றாள்கள்
தழுவியசிந் தையில்உணர்வுந் தங்கியநீர் மையில்சரித்தார்.

திருப்புகலூர் சேர்தல்

பாண்டிநாட்டில் உள்ள பல திருத்தலங்களையும் பணிந்து, சோழநாட்டை அடைந்தார். பொன்னி நாட்டில் விளங்கும் பொன்னார் மேனியனுடைய புனிதத் தலங்களை எல்லாம் வணங்கிக்கொண்டு பாசத்தளையைப் போக்குவாராகித் திருப்புகலூரை அடைந்தார். பொய்கை சூழ்ந்த பூம்புகலூர்ப் புனிதருடைய புண்டரிகத் தாள்கள் போற்றி, உழவாரப் பணிபுரிந்து கொண்டு எண்ணிறந்த இனிய தமிழ் மாலைகளை மொழிந்தருளினார்.

நின்ற திருத்தாண்டகம், தனித்திருத் தாண்டகம், திருத்தலக் கோவை, குறைந்த திருநேரிசை, தனித் திருநேரிசை, ஆருயிர்த் திருவிருத்தம், தசபுராணத்தடைவு, பாவநாசப்பதிகம், சரக்கறைத் திருவிருத்தம் முதலிய பலப்பல பதிகங்களைப் பாடியருளினார்.

நின்ற திருத்தாண்டகம்

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே.

தனித்திருத் தாண்டகம்

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஒரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

ஆட்டுவித்தால் ஆரொருவ ராடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவ ரடங்கா தாரே

ஒட்டுவித்தால் ஆரொருவ ரோடா தாரே
உருகுவித்தால் ஆரொருவ ருருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே.

திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே.

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே.

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழை யேனே.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்

அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே.

குறைந்த நேரிசை

வென்றிலேன் புலன்க ளைந்தும் வென்றவர் வளாகந் தன்னுள்
சென்றிலே னாத லாலே செந்நெறி யதற்குஞ் சேயேன்
நின்றுளே துளும்பு கின்றேன் நீசனேன் ஈச னேயோ
இன்றுளேன் நாளை யில்லே னென்செய்வான் தோன்றி னேனே.

தனித் திருநேரிசை

உடம்பெனும் மனைய கத்து ளுள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் யட்டி யுயிரெனுந் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயா லெரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே.

அங்கத்தை மண்ணுக் காக்கி ஆர்வத்தை யுனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாயே னுன்னை
எங்குற்றா யென்ற போதா இங்குற்றே னென்கண்டாயே.

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற் சிவகதி விளையு மன்றே.

காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி யிலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய ஆட்டிப்
பூசனை யீச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே.

விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றி யாகும்
துளக்கில்நன் மலர்தொ டுத்தால் தூயவிண் ணேற லாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாகும்
அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகள்தாம் அருளு மாறே.

சந்திரற் சடையில் வைத்த சங்கரன் சாம வேதி
அந்தரத் தமரர் பெம்மான் ஆன்நல்வெள் ளூர்தி யான்றன்
மந்திரம் நமச்சி வாய ஆகநீ றணியப் பெற்றால்
வெந்தறும் வினையும் நோயும் வெவ்வழல் விறகிட் டன்றே.

முன்னே யுரைத்தால் முகமனே யொக்குமிம் மூவுலகுக்
கன்னையு மத்தனு மாவா யழல்வணா நீயலையோ
உன்னை நினைந்தே கழியுமென் னாவி கழிந்ததற்பின்
என்னை மறக்கப் பெறாயெம் பிரானுன்னை வேண்டியதே.

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

சிவனெனும் நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடுமாகி லவன்தனையான்
பவனெனு நாமம் பிடித்துத் திருந்துபன் னாளழைத்தால்
இவனெனைப் பன்னா ளழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே.

முருகார் நறுமல ரிண்டை தழுவிவண் டேமுரலும்
பெருகா றடைசடைக் கற்றையி னாய்பிணி மேய்ந்திருந்த
இருகாற் குரம்பை யிதுநா னுடைய திதுபிரிந்தால்
தருவா யெனக்குன் திருவடிக் கீழொர் தலைமறைவே.

துறக்கப் படாத வுடலைத் துறந்துவெந் தூதுவரோ
டிறப்பன் இறந்தால் இருவிசும் பேறுவன் ஏறிவந்து
பிறப்பன் பிறந்தாற் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோவென் றென்னுள்ளங் கிடந்து மறுகிடுமே.

கன்னெடுங் காலம் வெதும்பிக் கருங்கடல் நீர்சுருங்கிப்
பன்னெடுங் காலம் மழைதான் மறுக்கினும் பஞ்சமுண்டென்
றென்னொடுஞ் சூளறும் அஞ்சல்நெஞ் சேயிமை யாதமுக்கண்
பொன்னெடுங் குன்றமொன் றுண்டுகண் டீரிப் புகலிடத்தே.

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஓரூர னல்லன் ஓருருவ னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே.

பொன்னையும் மணியையும் மதியாமை

இவ்வாறு, மெய்ப்பணி புரியும் அப்பரடிகள் திருப்புகலூரில் திருத்தொண்டு புரிந்து கொண்டிருந்தார். அவருடைய நன்னிலைமையை உலகிற்குக் காட்டியருளும் பொருட்டுச் சிவபெருமான்அழகிய திருமுற்றத்திலே உழவாரப் படை நுழைந்த விடமெல்லாம் பொன்னும் நவமணிகளும் வெளிப்பட்டுத் தோன்ற அருள்புரிந்தார். பற்றற்ற பரமஞானியாகிய வாகீசப் பெருந்தகையார் பொன்னையும் நவமணிகளையும்அங்கு உருளும் பருக்கைக் கற்களுக்கு நிகராக நினைந்து உழவாரப் படையில் ஏந்தி அருகில் இருந்த தாமரைத் தடாகத்தில் எறிந்தார்.

புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபா டிலாநிலைமை துணிந்திருந்த
நல்லோர்முன் திருப்புகலூர் நாயகனார் திருவருளால்
வில்லோடு நுதன்மடவார் விசும்பூடு வந்திழிந்தார்.

அரம்பையரை விரும்பாமை

புல்லையுங் கல்லையும் பொன்னையும் மண்ணையும் மணியையும் ஒன்றாகக் கருதும் நாயனார் முன் திருப்புகலூர் இறைவர் மேலும் அவருடைய பத்தி வைராக்கியத்தை மன்பதை கள் அறிந்து உய்யும்பொருட்டு அருள்புரிவாராயினார். வில்லைப் போன்ற புருவங்களையும் மின்னலையொத்த மேனியும் கன்னலை யொத்த மொழியும் உடைய அரம்பையர்கள் வானத்தினின்றும் மின்னற்கொடிபோல் இறங்கினார்கள். மெல்லிய பாதத்தில் சிலம்புகள் ஒலிக்கவும் கைகளை நீட்டிக் கைகளின் நெறியிலே கண்களைச் செலுத்தி நல்ல அபிநயம் பிடித்து, இனிய தேன் போன்ற இன்னிசைக் கீதங்களைப் பாடி நடனம் புரிந்தார்கள்.

ஆடுவார் பாடுவார் அலர்மாரி மேற்பொழிவார்
கூடுவார் போன்றணைவார் குழலவிழ இடைநுடங்க
ஓடுவார் மாரவே ளுடன் மீள்வார் ஒளிபெருக
நீடுவார் துகிலசைய நிற்பாரு மாயினார்.

இவ்வாறு அவ்வழகிய அரம்பையர்கள் தாம் கற்ற கலைகளை யெல்லாங் காட்டிப் பற்பல செயல்களைப் புரிந்தும் எம் பெருந்தகையார் சிறிதும் சித்தநிலை திரியாது சிவபெருமான் திருவடியைச் சிந்தித்த வண்ணமாக மெய்யுணர்வுடன் திருத் தொண்டு புரிந்து கொண்டிருந்தார். இருவினை முதலியவைகளை முன்னிலைப்படுத்தி, "திருவாரூர் தேவனுக்கு நான் ஆளானேன்.

உங்களால் நான் அலைப்புண்ணமாட்டேன்" என்று பாடியருளினார்.

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்துதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்றன் அடித்தொடர்வா னுழிதர் கின்றேன்
இடையிலேன் கெடுவீர்காள் இடறேன் மின்னே.

அப்பெண்கள் அவரருகில் நெருங்கி வந்து மன்மதக் களியாடல்கள் பல புரிந்து பல வஞ்சனைகள் புரிந்தும் வாகீச முனிவர் அணுத்துணையும் அசையாது இருந்தார். அவர் திருவுள்ளத்தைப் பெயர்க்கமாட்டாது அம் மாதர் வணங்கி விலகிச் சென்றனர். இதனை அறிந்து ஏழு உலகங்களும் அவருடைய திருவடியைப் போற்றிப் புகழ்ந்தன. அன்பு வடிவாய அப்பமூர்த்திகள் மெய்ப்பதம் பெறுங்காலம் நெருங்கி வர, சிலநாள் அங்கு விரும்பி இருந்தார்.

தன்னைச் சரணென்று தாளடைந் தேன்தன் அடியடையப்
புன்னைப் பொழில்புக லூரண்ணல் செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத் தென்வினை கட்டறுத் தேழ்நரகத்
தென்னைக் கிடக்கலொட் டான்சிவ லோகத் திருத்திடுமே.

என்ற திருவிருத்தத்தைப் பாடியருளினார். இறைவனடி சாரும் இன்பநிலை எய்துவதைத் திருவருட் குறிப்பினால் உணர்ந்த திருநாவுக்கரசர்,

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.

என்ற திருப்பதிகத்தை யோதி, வானவர் மலர் மாரிபொழியவும், விண்ணில் தேவதுந்துபி ஐந்தும் முழங்கவும், பிரமனார் உயிர்கள்

எல்லாம் உளம் நிறைந்த மகிழ்ச்சியடையவும், சித்திரைத் திங்கள் சதய நட்சத்திரத்தில், நண்ணரிய சிவானந்த ஞான வடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அரசு அமர்ந்து இருந்தார். பேரின்பப் பெருவாழ்வைப் பெற்றார்.

விளக்கம்

நாவுக்கரசு

மனிதன் நாவினால் மேன்மையடைகின்றான், ஏனைய உயிர்களுக்குப் பேசுவதற்கு ஏற்றவாறு நா அமையவில்லை. கிளிப் பிள்ளை மட்டும் கூறியதைக் கூறும். மனிதனுடைய நா எத் துணைச் சிறந்ததாக அமைக்கப் பெற்றிருக்கின்றது. அப்படி அமைந்த நாவுகளுக்கெல்லாம் ஓர் அரசு வேண்டாமா? மரங் களுக்கு அரசு ஒன்று உண்டு; விலங்குகட்கு ஓர் அரசு உண்டு; பறவைகட்கு ஓர் அரசு உண்டு; அதுபோல் உலகிலே முன்னிருந்த - இப்போது இருக்கின்ற - இனி இருக்கப்போகின்ற நாவுகளுக் கெல்லாம் தனியரசு ஒருவர் இருந்தே தீர வேண்டும்; அவர்தான் சிவபெருமானது திருவருளின் திருவுருவாக வந்த நாவுக்கரசர் என்க.

இந்த நாமம் வேறு யாராலும் சூட்டப்பெற்றதன்று; இறைவரே சூட்டியருளினார்.

"நாவுக்கரசு என்றுலகு ஏழினுநின்
நன்னாம நயப்புற மன்னுகஎன்று
யாவர்க்கும் வியப்புற மஞ்சுறை
வானிடை யேஒரு வாய்மை யெழுந்ததுவே"

திருமுனைப்பாடி நாடு

ஒரு சிறந்த அருளாளர் அவதரிக்க வேண்டுமானால் அந்த நாடு நற்றவம் புரிந்திருக்க வேண்டும். சமய குரவர் நால்வருள் அப்பர் - சுந்தரர் என்ற இரு குருமூர்த்திகள் அவதரித்த நாடு திரு முனைப்பாடி நாடு.

"தேவரு மறையும் இன்னமுங் காணாச்
செஞ்சடைக் கடவுளைப் பாடி
ஏவரும் போற்றும் மூவரில் இருவர்
பிறந்தநாடு இந்தநன் னாடு" - வரந்தருவார்

தமிழ் வழங்கும் நிலத்தின் கண் போன்றது திருமுனைப் பாடி நாடு. அந்நாடு எந்நாட்டினுஞ் சிறந்த தவமுடையது.

புகழனார்

திருவாமூரில் வேளாளர் குலத்திலே, குறுக்கையர் குடியிலே பிறந்து திருநாவுக்கரசு நாயனாரைப் பெற்று உலகுக்கு அளித்த உத்தமர் புகழனார்.

மனிதன் அரிதின் முயன்று பெற வேண்டியது புகழ் ஒன்றே. புகழொடு தோன்றாதார் தோன்றாதிருத்தலே நன்று என்பர் பொது மறையாசிரியர். புகழ் அனார் புகழே ஓர் உருவெடுத்தாற் போன்ற வர் என்னும் பொருள்படும்.

மாதினியார்

அப்பரைத் பெற்ற தாய். மாது இனியார் - பெண்களிலே இனியவர் என்பது ஒரு பொருள். மாது இனி யார்? பெண்ணிலே இவரைத் தவிர சிறந்தவர் இனி யார் உளர்? என்றும் ஒரு பொருள். பெண்ணியல்புகட்கெல்லாம் புகலிடமான பெருமாட்டி இவர். "ஆன குடிக்கு ஆண் ஒன்று பெண் ஒன்று என்பது பழமொழி. இவ்வம்மை அதற்கு இணங்க, திலகவதி அம்மையாரையும், திருநாவுக்கரசரையும் பெற்று இவ்வுலகை வாழ்வித்தனர்.

திலகவதியார்

திருநாவுக்கரசரை உலகிற்குத் தந்தவர்கள் புகழனாரும், மாதினியாரும். அவரைச் சைவ உலகிற்குத் தந்தவர் திலகவதி யாரே யாவார். எங்கும் யாவரிடத்துங் காணாத கற்புநெறியும் தவவொழுக்கமும் சிவபக்தியும் பூண்டவர் இந்த அன்னையார்.

கலிப்பகையாருக்கு இவரை மணம் பேசினர். திருமணம் நிகழவில்லை. கலிப்பகையார் மன்னவனுக்குத் துணையாக வட நாட்டு மன்னரை வெல்லும் பொருட்டுப் படைவீரராகச் சென்றனர். இங்குப் புகழனாரும், மாதினியாரும் விண்ணுலகம் எய்தினார்கள். அங்குக் கலிப்பகையார் போர்க்களத்தில் பொருது வீர சுவர்க்கஞ் சேர்ந்தார்.

"மணம் பேசிய காரணத்தினாலே நான் அவருக்கு மனைவி யாயினேன்; வாக்கினால் கூறியவுடனே அவர் எனக்குக் கணவனா யினார். இனி யான் யாரையும் மணப்பது முறையன்று. கணவனார் சென்ற உலகஞ் செல்வேன்" என்று திலகவதியார் உயிர்விடத் துணிந்தனர். தம்பியார் மிகவும் வேண்டியபடியால், கைம்பெண் விரதத்தைப் பூண்டு தவநெறியில் நின்று திருத்தொண்டு புரிந்து வந்தனர். அவருடைய கற்பின் உறுதி

இமயமலையினும் உயர்ந்ததன்றோ? பெண்ணுலகிற்கே இவர் திலகம் போன்றவர் என அறிக.

நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினால் கொல்லாமை மறைந்துறையும் சமண் சமயங் குறுகிய தம்பி நன்னெறிப்பட வேண்டும் என்று திருவதிகையில் சிவமூர்த்தியைப் பலகாலும் வேண்டிக் குறையிரந்தனர்.

இம்மாதரசியைத் "தூண்டு தவ விளக்கு" என்று சேக்கிழாரடிகள் கூறுவதனால் இவருடைய தவத்தின் பெருமை தெற்றெனத் தெளிவாகின்றது.

இறைவன் தந்த சூலைவலியினால் தம்பி அளப்பற்ற வேதனை அடைகின்றதைக் கேட்டும், அவர் விடுத்த ஆள் வந்து அழைத்தும், "நன்றறியார் அமண்பள்ளி நண்ணுகிலேன்" என்று கூறியதனால் அவருடைய சிவபத்தியின் உறுதி வெளிப்படுகின்றது. "நன்றறியார்" என்று அவர் கூறிய சொற்றிறத்தை உன்னுக.

மருணீக்கியார் திருவதிகை வந்து, தமக்கையார் தாள்மீது வீழ்ந்து,

> "நந்தமது குலஞ்செய்த நற்றவத்தின் பயன்அனையீர்!
> இந்தவுடற் கொடுஞ்சூலைக்கு இடைந்தடைந்தேன் இனிமயங்காது
> உய்ந்துகரை யேறும்நெறி உரைத்தருளும்"

என்று வேண்டினார்.

திலகவதியார், திருவருளின் திறத்தை நினைந்து, தொழுது, "பரசமயக் குழியினின்றும் எழுந்திரீர்" என்று கூறியருளி ஐந்தெழுத்தோதித் திருநீறு தந்து, தம்பியாரைத் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்று திருத்தொண்டு புரியுமாறு அருள்புரிந்தனர். அம்மையாருடைய செம்மையான தவமே மருணீக்கியாரைத் திருநாவுக்கரசராக மாற்றித் தமிழ் உலகை வாழ்வித்தது.

மனக்கவலை வந்தபோது தனக்குவமையில்லாத தலைவனையடைந்தால் மனக்கவலையை மாற்றிவிடலாம். தம்பி நல்வழிப்பட வேண்டும் என்று இறைவன்பால் இவர் முறையிட, அக்குறையை இறைவர் தீர்த்தருளினார். இத் திருநெறியை நாம் பின்பற்ற வேண்டும்.

நிலையாமையை நினைவது நெறி

மருணீக்கியார் தமது தாய் தந்தையார் மாண்டதைக் கண்டு, யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை, இளமை நிலையாமை

முதலியவற்றை நன்கு உணர்ந்தார். உணர்ந்து, பூங்கா வைத்தார்; திருக்குளம் வெட்டினார்; வறியவர்க்கும், நாவலர்க்கும் செம்பொன் வழங்கினார்.

காவளர்த்தும் குளந்தொட்டும் கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்து
நாவலர்க்கு வளம்பெருக நல்கியுநா னிலத்துள்ளார்
யாவருக்கும் தவிராத ஈகைவினைத் துறைநின்றார்.

"பாதகனா யறஞ்செயா தடியோ டிறந்து
போனவர் வாழ்வுகண்டு மாசையிலே யழுந்து மயல்தீர"

என்ற அருணகிரிப் பெருந்தகையின் திருவாக்கை உன்னி உய்வு பெறுக.

திருத்தொண்டு

திருநாவுக்கரசனார், சிவபெருமானுடைய திருவருள் பெற்று, அத்துடன் அமையாது மனம், வாக்கு, காயம் என்ற மூன்று கரணங்களாலும் ஓவாது உள்ளன்புடன் திருத்தொண்டு புரிந்தார். திருவருள் பெற்ற சிவஞானிகளும் தொண்டு செய்தல் அவசிய மாகும். என்னை? வாசனாமலம் தாக்காதிருக்கும் பொருட்டும், இறைவனுடைய நன்றியை மறவாதிருக்கும் பொருட்டும், ஏனையோர் அது கண்டு உய்யும் பொருட்டும் என்க.

"வித்தகம் பேசவேண்டாம் பணிசெய வேண்டும்" என்று ஆளுடைய நம்பியை நோக்கி இறைவர் கூறியதையும் உய்த்து ணர்க.

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே. - *சிவஞானபோதம்*

"கோயில் வழிபாடும், தோத்திரம் புரிதலும் கீழ் நிலையில் உள்ளோர்கள் செய்ய வேண்டியன. மேல்நிலையடைந்த எமக்கு அவை வேண்டா" என வாய் வேதாந்தம் பேசிச் சோம்பிக் கிடக்கும் வெற்றுரையாளர் நன்றி கொன்ற பாவத்தையடைவர் என்பதை அறிக.

சொல்லொன்று செயலொன்று

திருநாவுக்கரசு நாயனார் சைவசமயத்தினின்றும், சமண சமயம் புகுந்தார். தருமசேனர் என்ற பேரைத் தாங்கினார். சமண்

சமயத்தை யாண்டும் பரப்பினார். அப்போது சைவ சமயிகள் அவர் மீது முனிவுகொண்டு அவருக்குத் தீங்கு செய்தார்களில்லை. ஏன்? எல்லாச் சமயங்களையும் தனக்கு அங்கமாகக் கொண்டு, அச்சமயங்களுக்குத் தலையாக விளங்குவது சைவம். "யாதொரு தெய்வங் கொண்டீர், அத் தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்" என்னும் பரந்த நோக்கமுடையவர்கள் சைவர்கள். கருணையென்னும் அங்கியை அணிந்தவர்கள்; சொல் வேறு செயல் வேறு இன்றி, சொல்வதுபோல் செய்துகாட்டு பவர்கள்.

திருநாவுக்கரசர் சூலைவலி தீரப்பெறாது உய்வகை கருதிச் சைவஞ் சார்ந்தனர். அது கண்ட சமணர்கள் அடங்காத சீற்றங் கொண்டார்கள். "நாங்கள் கொலை புரியோம்; பொய்யுரையோம்" என வாய்ப்பறையறையும் அவர்கள், நாவுக்கரசர் மீது பல பழிச் சொற்களைக் கூறி, நீற்றறையிலிட்டும், நஞ்சூட்டியும், மத யானையை ஏவியும், கல்லிற் கட்டிக் கடலிற் பாய்ச்சியும் கொலைத்தொழிலை அஞ்சாது புரிந்தார்கள்.

"கொலையும் பொய்ம்மையும் இலம்என்று கொடுந்தொழில் புரிவோர்
தலையும் பீலியுந் தாழவந் தொருசிறை சார்ந்தார்"

சொல்லொன்று செயலொன்றாக சமணர்கள் நின்றனர்.

அஞ்சாமை

திரிபுரம் எரித்த விரிசடைப் பரமனைப் பணியும் மெய்ம்மை யடியார் ஒன்றுக்கும் அஞ்சிடார்.

நாவுக்கரசரை, மகேந்திர பல்லவனுடைய மந்திரிமார்கள் வந்து அழைத்தபோது, அந்த அரசனை ஒரு சிறிதும் மதியாமல்,

'நாமார்க்குங் குடியல்லோம்'

என்று கூறிய ஞான வீர 'வசனங்கள் நம்மை வீறு பெறச் செய்கின்றன.

மிகவும் வெப்பமான நீற்றறையைக் கண்டும், கொடிய நஞ்சினை யுண்டும், கோபாதிசயம் என்ற கொடிய யானையைக் கண்டும் சிறிதும் அஞ்சினாரில்லை.

"திண்ணன் கெடிலப் புனலுமுடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்று மில்லை
அஞ்சவருவது மில்லை"

என்று கூறிய அடிகளாரது அஞ்சாமை எத்துணை விழுமியது என்பதை உற்று நோக்குமின்.

கல்லிற் கட்டிப் பயங்கரமான கடலில் இட்டபோதும் கலங்கினாரில்லை. "நற்றுணையாகி, நாவினுக்கு அருங்கலமாய் நின்று, பாவத்தை நண்ணி நின்றறுத்து, உற்ற நடுக்கத்தைக் கொடுத்து, நங்களுக்கு அருங்கலமாகி நலமிகக் கொடுப்பது நமசிவாயம்'' என்று கூறிய வீரத்தை எம்மால் விளம்புதற் பாலதோ?

"மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினும் அஞ்சல்நெஞ்சே"

"அல்லல் என்செயும் அருவினை யென்செயும்?
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்?"

அருளுடைமை

திருநாவுக்கிறைவர் கருணையே வடிவானவர்; சமணர் பல தீங்குகள் செய்தும், தாம் அவர்கட்குத் தீங்கு நினைக்காமல் கருணையினால் சிவசிந்தையுடன் இருந்தார். இந்த அஹிம்சை யின் ஒருபகுதிதான் இன்று காந்திஜீயினிடம் விளங்கியது.

அடிகளாரைக் கண்டு அதிகைவாழ் அடியார்கள்,

இந்தக் கருணைகண்டால்
மிண்டாய செய்கை யமண்கையர் தீங்குவிளைக்கச் செற்றம்
உண்டாயின வண்ணம் எவ்வண்ணம்?

என்று அதிசயித்து உரைத்தனர்.

பல இடர்களை விளைவித்த மகேந்திர பல்லவன் மனந் தெளிந்து, சமணரை வெறுத்து, வாகீசப் பெருந்தகையின் மலரடி மீது வீழ்ந்து வணங்கினான். அப்பொழுது அருள்வடிவாகிய அடிகள் அவனை வெகுளாது, வெறுக்காது, சேயை அணைக்குந் தாய் போல் அணைத்து அருள்புரிந்தார்.

பல்லவர்கோன் வந்து பணியக் கருணைசெய்தார்
தொல்லைநெறி வாகீசர் சோமேசா - கொல்ல
இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

- மாதவச் சிவஞான யோகிகள்

உடற்றூய்மையும் இன்றியமையாததே

திருநாவுக்கரசு நாயனார், முன்னே திருவதிகையில், தமது தமக்கையார் திலகவதியார் ஐந்தெழுத்து ஓதிக் கொடுத்த திருநீற்றைப் புனைந்து, உள்ளந் தூய்மையுற்றார். அதிகையரனாரால் ஆட்கொள்ளப் பெற்றார். அதுவே அமையும். ஆனால், அடிகள் அத்துடன்அமைந்தாரில்லை. பரசமயத் தொடக்குண்டு வளர்ந்த தமது உடம்பு தூய்மையுற வேண்டும்" என்று தூங்கானை மாடமேவிய சோதியை வேண்டினார். இறைவர் ஒரு சிவபூதத்தை அனுப்பி அப்பரடிகளுடைய இரு தோள்களிலும் இடப முத்திரையும், திரிசூல முத்திரையும் இட்டு உடல் தூய்மை அருள் புரிந்தார்.

வைணவ சமயத்திலும் முத்திராதாரணம் என்ற ஒரு சடங்கு இருப்பது கண்கூடு.

இதுவேயுமன்றி, திருநல்லூரில் திருவடி தீட்சையும் இறைவனை வேண்டிப் பெற்றார்.

அப்பர்

திருவருள் முழுதும் பெற்ற திருநாவுக்கரசர், அழுது அம்மை முலைப்பாலுண்ட சீகாழிப் பிள்ளையாரைப் பற்றிக் கேள்வி யுற்றதுங் காண விழைந்து சீகாழி யுற்றார். திருஞானசம்பந்தர் இவருடைய வருகையைக் கேட்டு எதிர்கொண்டார். சம்பந்தர் தம்மைப் பணிந்த அடிகளை எடுத்துத் தாம் இறைஞ்சி, அன்புகனிய "அப்பரே" என்று அழைத்தார்.

அப்பொழுது இரு குருநாதர்களும் கலந்த காட்சியை நமது பிரபு சேக்கிழாரேயன்றி யாவரே கூறவல்லார்?

அருட்கடலும் அன்புக்கடலும் ஒக்கும்; சைவசமயத்தின் இரு திருக்கண்களை ஒக்கும்; இறைவர் திருவருளும் இறைவி திருவருளும் ஒக்கும்.

அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்
அன்புசெறி கடலுமா மெனவும்; ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் இரண்டெனவும்; புவன முய்ய
இருட்கடுவுண் டவரருளும் உலக மெல்லாம்
ஈன்றாள்தன் திருவருளும் எனவுங் கூடித்

தெருட்கலைஞா னக்கன்றும் அரசுஞ் சென்று
செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தா ரன்றே.

அற்புதச் செயல்

அப்பூதியார் அரவந் தீண்டி மாண்ட மகனை மறைத்து வைத்து அமுது படைக்க, அதனைத் திருவருட் குறிப்பினால் அப்பரடிகள் அறிந்து மூத்த திருநாவுக்கரசு எங்கே என்று கேட்டதும், மாண்ட மைந்தனைத் தேவாரப்பதிகம் பாடி மீண்டும் எழுமாறு செய்ததும், திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றதும் திருமறைக்காட்டில் கதவு திறக்கப் பாடியதும் அளவுபடுத்த முடியாத அற்புதச் செயல்கள் என்று அறிக.

கொல்கரியில் நீற்றறையில் நஞ்சில் கொலைதவிர்த்தல்
கல்லே மிதப்பாக் கடல்நீந்தல் - நல்ல
மருவார் மறைக்காட்டில் வாயில்திறப் பித்தல்
திருவாமூ ராளி செயல். - *திருக்களிற்றுப்படியார்*

திருக்குறளுந் தேவாரமும்

அருளாளர்கட்குத் தனித்தனியே தோன்றுங் கருத்துக்கள் ஒற்றுமையாகத் திகழும்.

இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

என்றார் திருவள்ளுவதேவர்.

இதே உவமானம் அப்பரடிகள் தேவாரத்திலும் மிக இனிமை யாக வருவதைக் காண்க.

“கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலும் ஆரூரரைக்
கையினால் தொழாதொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே”

திருக்கதவந் திறப்பித்தல்

திருமறைக் காட்டில் வேதங்கள் வழிபட்டு அடைத்து வைத்த வழி வழக்கிலின்றி வேறு வழியாய் அன்பர்கள் சென்று வழிபடுவதை அறிந்த அடிகள் திருப்பதிகம் பாடித் திறக்க முயன்றார். பத்துப்பாடல் பாடியுங் கதவந் திறக்கப்படாதிருந்த காரணம், பாடலின் ஆற்றல் குறைவு அன்று; அதன் பயன் துய்ப்பான் வேண்டி இறைவர் சிறிது காலந்தாழ்த்தனர் என்று சேக்கிழாரே காரணங் கூறுவதை ஓர்க. அப் பண்ணின் பயன் அத்துணை இனிமையானது என்று தெளிக.

பாடுவார் பசிதீர்ப்பார்

வாகீசர் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும்போது பசியுந் தாகமும் எய்தி மிகமிக வருந்தியும், சிறிதும் மனம் வருந்தாது இறைவரைத் தரிசிக்க வேண்டும் என்ற பெருவேட்கையுடன் செல்கின்றார்.

பரம கருணாநிதியாகிய பசுபதி வழியில் சோலையுங் குளமும் உண்டாக்கி, பசித்து வரும் பற்றற்ற அடியவர்க்குப் பொதிசோறு தந்து உண்பித்து இளைப்பகற்றினார்.

"ஆறடுத்த வாகீசர்க் காம்பசியைக் கண்டுகட்டுச்
சோறெடுத்துப் பின்னே தொடர்ந்தனையே"

- இராமலிங்கர்

தன்னை நினைந்து உருகிப் பாடும் அடியவருடைய உடற் பசியைத் தீர்ப்பதுடன் உயிர்ப்பசியாகிய ஆணவ மலத்தினையும் மாற்றி இறைவர் அருள்புரிவார்.

திருக்கச்சூர் ஆலக்கோயிலுள் சுந்தரர் பசித்திருந்தபோது இறைவர் மனைதொறுஞ் சென்று இரந்து அமுதளித்த அருட் பெரும் திறமும் இங்கே நினைவு கூர்க.

உண்ணாவிரதம்

"உண்ணாது நோற்பர் பெரியர்", "ஆற்றுவா ராற்றல் பசி யாற்றல்" என்ற திருவள்ளுவர் வாக்கின்படி, சான்றோர் தமது கருத்து முற்றும்வரை இறைவர் திருமுன் உண்ணாவிரதமிருப்பர். இது தொன்றுதொட்டு வந்த தொன்மையான வழக்கம் என அறிக. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பரடிகள் பழையாறைத் திருத்தளியில் சமணர்கள் மறைத்துவைத்த கொடுமையைக் கண்டு இறைவரைக் கண்டு வணங்கும்வரை உண்ணாவிரதமிருந்தார்.

"வண்ணங் கண்டு நானும்மை வணங்கி யன்றிப் போகேனென்
றெண்ண முடிக்கும் வாகீசர் இருந்தார் அமுது செய்யாதே"

என்ற சரிதக் குறிப்பினால் இதனை உணர்க.

திருத்தல யாத்திரை

இறைவன் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நீக்கமற நிறைந்திருக்கின்றான் எனினும், தேவர்களாலும், முனிவர்களாலும், ஆன்றோர்களாலும் நிறுவிப் பூசிக்கப் பெற்ற திருவுருவத்தில் விளங்கித் தோன்றுகின்றான் எனத் தெளிக. பசுவின்

உடம்பெங்கும் பால் வியாபித்திருப்பினும் மடியில் வெளிப்படுவது போல் என்று உணர்க. அவற்றுள் வழிபட்டாரது வன்மை மென்மைக்குத் தக்கவாறு மூர்த்திகளின் விளக்கமும் கூடுதலும் குறைவுமாகு மென்க. உமாதேவியார் வழிபட்ட மூர்த்தியில் சிவ விளக்கம் அதிகமாகும். இந்திரன் வாயு வருணன் முதலியோர் பூசித்த மூர்த்திகளில் சிவவிளக்கம் குறைவாகும். மின்சார விளக்கம் எரிகின்ற கண்ணாடிக்கூடுகளின் வன்மை மென்மைக்குத் தக்கவாறு கூடுதலாகவும் குறைவாகவும் தோன்றுவது கண்கூடு.

அதனால்தான், சிவஞானிகளுங்கூட திருத்தலங்கள் தோறுஞ் சென்று தீர்த்தங்களில் முழுகி, மூர்த்திகளைத் தரிசித்தார்கள். க்ஷேத்திர யாத்திரையும் மூர்த்தி வழிபாடும் சாதாரண சரியா கிரியா மார்க்கத்தில் உள்ளவர்கட்கே உரியன. எமக்கு வேண்டா, என்று வாய் வேதாந்தம் பேசுவோரும் சிலருண்டு. சிவஞானப் பாலுண்ட ஞானசம்பந்தரும் தீவிரசத்தினி பாதம் பதியப்பெற்று அருள்ஞான சீலராக விளங்கும் திருநாவுக்கரசரும், ஊர்தி சாதனங்கள் குறைந்து, வழிவகை விளக்கமில்லாத அக்காலத்தில் நடந்து சென்று தலங்கள் தோறும் தரிசித்தார்கள் என்றால், திருவருளைப் பெறக் காதலிக்கும் எம்மனோர்கள் அவற்றைப் பொன்னே போல் போற்றித் திருத்தல யாத்திரை செய்து சிவனருள் பெற வேண்டுவது இன்றியமையாத கடப்பாடு ஆகும்.

நாதர் மருவுந் திருமலைகள் நாடும் பதிகள் பலமிகவும்
காதல் கூரச் சென்றிறைஞ்சிக் கலந்த இசைவண் தமிழ்பாடி
மாதொர் பாகர் அருளாலே வடபால் நோக்கி வாகீசர்
ஆதி தேவர் அமர்ந்ததிரு அண்ணா மலையை நண்ணினார்

என்ற திருப்பாடலினால் திருத்தலயாத்திரையில் திருநாவுக்கரசு நாயனாருக்கு இருந்த காதல் மிகுதியைக் காண்க.

கடவுளைக் கண்ணுள் வைத்தல்

இறைவன் உள்ளும் புறமும் கீழுமேலும் முன்னும் பின்னும் வலமும் இடமுமாக இருக்கின்றான். ஆனால், அவ்வாறு இருக்கின்ற இறைவனை அவனருளே கண்ணாகக் கொண்டு காண்பர் சிவஞானிகள்.

அளவிறந்த காதலுடைய தலைவி தலைவனைப் பிரிந்திருக்கின்ற பொழுதும், தலைவனைக் கண்ணுள் காண்பாள். ஒரு தலைவி தலைவனைப் பிரிந்திருக்கின்றபொழுது கண்களுக்கு

வழக்கமாக எழுதுவதுபோல் மையெழுதவில்லை. தோழி, "ஏன் மையெழுதவில்லை?" என்று வினாவினாள். "தோழி, என் கணவனார் என் கண்ணுள் இருக்கின்றார். மையெழுதினால் அந்த நேரத்தில் மறைந்து விடுவாரே" என்று விடைபகர்ந்தாள் தலைவி.

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து. - திருக்குறள்

வரங்கொண்ட உமைமுலைப்பால் மணங்கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட களிமயிலும் பன்னிரண்டு கண்மலரும்
சிரங்கொண்ட மறையிறைஞ்சுஞ் சேவடியுஞ் செந்தூரன்
கரங்கொண்ட வேலும்என்றன் கண்ணைவிட்டு நீங்காவே.

என்ற திருச்செந்தூர்க் கலம்பகத் திருப்பாடலையும் நோக்குக.

அளவிறந்த அன்புடைய குழந்தைகள் நமது கண்ணில் விளையாடுவதுபோல் தோன்றுவது உலக இயல்பு.

அப்பரடிகள் காளத்தியப்பரைக் கண்ணுள் வைத்துக் கொள்கிறார். அந்த அற்புதக் காட்சியை அவர் கூறுகிறார். அடியில் வரும் அவருடைய திருத்தாண்டகத்தைக் காண்க.

விற்றூணொன் றில்லாத நல்கூர்ந் தான்காண்
வியன்கச்சிக் கம்பன்காண் பிச்சை யல்லால்
மற்றூணொன் றில்லாத மாசது ரன்காண்
மயானத்து மைந்தன்காண் மாசொன் றில்லாப்
பொற்றூண்காண் மாமணிநற் குன்றொப் பான்காண்
பொய்யாது பொழிலேழுந் தாங்கி நின்ற
கற்றூண்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன் காண்அவன்என் கண்ணு ளானே.

கைலையுங் காளத்தியும்

அப்பரடிகள் காளத்தியை வணங்கியவுடன் கைலை மலையை வணங்க வேண்டும் என்று விரும்பினார். ஏன்? காளத்தி தென்கயிலாயம் ஆதலினால் என்க. அதனாலேதான், நக்கீரர் கைலைபாதி காளத்திபாதி என்று பாடியதும், கைலைமலைச் சாரலில் தவஞ் செய்த அருச்சுனருக்கு காளத்தியில் முத்தி தருவதாகக் கூறி, கண்ணப்பராக வருவித்து அருளியதும் காண்க.

"கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யான்அவன்என் கண்ணு ளானே"

என்று கைலையையுங் காளத்தியையும் இணைத்துப் பாடிய திருவாக்கையும் உன்னுக.

அடியவர்க்குத் தீயவும் நல்லவாம்

வாகீசர் திருக்கயிலாய மலையைக் காணும் காதலுடன் மனிதர்களால் போக முடியாத காடு மலைகளோடு செல்கின்றார். காதல் மிகுதியினால் இரவிலும் வழி நடக்கின்றார். உணவையும், உறக்கத்தையுந் துறந்தார். அக் காட்டகத்துள்ள மிகக் கொடிய புலிகள், சிங்கங்கள், கரடிகள், மத யானைகள் முதலிய விலங்குகள் அவருடைய அன்பு நிறைந்த திருக்கோலத்தைக் கண்டு தமக்குள்ள இயல்பான தீமையினின்றும் நீங்கின. நஞ்சினைத் தரும் நாகங்கள் அந்த நள்ளிருளில் பணாமகுடங்களை விரித்து மணிகளினால் விளக்கெடுத்தன. இதனால், வாகீசர் பெருமை ஒரு நாவுக்கு உரை செய்ய ஒண்ணாது என்பதை உய்த்துணர்க.

ஆய வாரி ருளின்க ணேகுமவ் வன்பர் தம்மை யணைந்துமுன்
தீய வாய விலங்கு வன்றொழில் செய்ய வஞ்சின நஞ்சுகால்
வாய நாக மணிப் பணங்கொள் விளக்கெ டுத்தன வந்துகால்
தோய வானவ ராயி னுந்தனி துன்ன ருஞ்சுர மன்னினார்.

இந்தத் திருப்பாடலை நன்கு மனதில் வாங்கிக் கொண்ட கம்பநாடர் தனது இராமாயணத்துடன் இராமர் இரிசிய மூகமலை நண்ணியபோது விலங்குகள் அவரைக் கண்டு காதல் செய்தன என்று கூறுகின்றார்.

"தன்கன்று கண்ட வன்ன தன்மைய தறுகட் பேழ்வாய்
மின்கன்று மெயிற்றுக் கோண்மா வேங்கையொன் றினைய வேயும்
பின்சென்று காதல் கூரப் பேய்கணித் திரங்கு கின்ற"

"தருவும் வளைந்து கனியுதவும் தந்தி விறகு தனையுதவும்
வெருவும் உரகம் விளக்கெடுக்கும் விலகுங் கொடிய முட்புதரும்

என்று நளாயணி சரித ஆசிரியருங் கூறுமாறு காண்க.

ஆதலின், சாந்த குணமுள்ள அடியவர்களைக் கண்டால் வன்னெஞ்சுடையவரும் நன்னெஞ்சுடையவராவர் என்பது தெளிவாகின்றது.

அப்பர் உறுதி

திருநாவுக்கரசர் உலைவின்றி நடந்து கால்கள் தேய்ந்தன; தாவிச்சென்று கரங்கள் தேய்ந்தன; ஊர்ந்து சென்று தசைகள்

தேய்ந்தன; புரண்டு சென்று உறுப்புகள் அழிந்தன. அப்பொழுதும் அவருடைய உறுதி தளரவில்லை. அங்கே இறைவர் முனிவர் வடிவில் தோன்றி ''வானவர்க்கும் அணுகவொண்ணாத கயிலையை மானுடர் அணுக வொண்ணாது; மீளுதிர்'' என்று அருளிச் செய்தார். அதுகேட்ட பெரியோர் 'ஆளும்நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்' என்று மறுத்துரைத்தார். அவருடைய உறுதியை வரம்பிட வல்லார் யார்?

இனி, அப்பரை இறைவர் கயிலைக்கு வர இசையாது, அங்கு ஒரு குளத்தில் மூழ்கித் திருவையாற்றில் எழச் செய்து ஐயாற்றில் கைலைக் காட்சி காணச் செய்தார். ஏன்? காரணம் சேக்கிழார் பெருமானே கூறுகின்றார்.

"அன்ன தன்மையர் கயிலையை அணைவதற் கருளார்
மன்னு தீந்தமிழ் புவியின்மேல் பின்னையும் வழுத்த"

சிவபக்தி புரிவார்க்கு இந்த உறுதி மிகவும் இன்றியமையாதது. உறுதியும் உள்ளன்பும் அவருடைய அருளாலேயே கிடைக்கற் பாலன. அந்த அருள் மாதவத்தால் கிடைக்கும்.

உன்திரு வடிக்கீழ் உறுதியாம் அன்பும்
உன்திரு வருளினால் கிடைப்ப
தன்றிநூல் பலவு மாய்ந்ததா லுரைசெய்
அளப்பருந் திறமையான் மதியான்
மன்றவே கிடைப்ப தன்றுமற் றதனை
மாதவஞ் செய்திலாக் கயமை
துன்றிய புலையோர் யாங்ஙனம் பெறுவார்
சோதியே கருணைவா ரிதியே. - சிவஞானசுவாமிகள்

தாழ்வெனுந் தன்மை

சைவத்திற்கு உயிர் நாடியாக நிற்பது; தாழ்வு என்னுந் தன்மையென்று அறிக. சைவவுலகிற்கு அது வாயில் என்றும் ஓர்க. "தாழ்வெனுந் தன்மையோடு சைவமாஞ் சமயஞ் சாரும் ஊழ் பெறல் அரிது'' என்ற சிவஞான சித்தித் திருவாக்கால் இது தெற்றென விளங்கும்.

நான் என்னுஞ் செருக்கே எல்லா நலன்களையும் அழிக்கும். 'நானெனு மேதை விண்டு' என்றார் அருணகிரிநாதர். நாவுக்கரசர், 'தன்னை வியவாத்' தகைமையுடையவராக இருந்ததனாலன்றோ

ஏழுவயதுடைய திருஞான சம்பந்தப் பிள்ளை யாருடைய சிவிகையைத் தாங்கி மகிழ்ந்தார். ஆளுடைய பிள்ளையார் 'அப்பர் எங்குற்றார்?' என்று வினாவியபோது, ஆளுடைய அடிகள் கூறிய சொற்கள் கல்லைக் கரைவிக்கும்.

திருஞான முனிவர்அர சிருந்ததிருப் பூந்துருத்திக்
கருகாக எழுந்தருளி எங்குற்றார் அப்பரென
உருகாநின் றும்மடியேன் உம்மடிகள் தாங்கிவரும்
பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங்குற் றேன்என்றார்.

பற்றின்மை

பிறவிக்குக் காரணம் பற்று என்க. பற்றை அறுப்பதற்கு வழி கடவுள் பற்று ஆகும். கடவுள் பற்று வளர வளர உலகப் பற்று தளரும்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

"அற்றது பற்றெனில் உற்றது வீடு"

"பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்"

"மற்றுப்பற் றெனக்கின்றி நின்றிருப் பாதமே மனம்பாவித்தேன்"
"பற்றவா வேரொடு பசையற பிறவிபோய் முற்ற"

என்ற ஆன்றோர் அருள்வாக்குகளையெல்லாம் ஒருங்கே நினைவு கூர்க.

வாகீசப் பெருந்தகை பற்றைப் பசையறக் களைந்த பரம ஞானி; உழவாரப்படையில் புல்லைச் செதுக்கிய இடந்தோறும் பொன்னும், மணியும் தோன்ற, அவைகளைப் பருக்கைக் கல்லோடு ஒப்ப நினைத்து உழவாரப் படையிலேந்திக் குளத்தினில் எறிந்தமையாலும், அரம்பையர் மின்னல்போன்ற பொன்னுரு வுடன் இவர் முன் ஆடியும், பாடியும் இவர் சிறிதும் அவர்களைப் பார்த்து மயங்காமல் இறைவனைச் சிந்தித்திருந்தமையாலும் இவருடைய பற்றின்மை தெற்றென விளங்கும்.

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை அரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்ததுதான் யானேல் வானோர்

தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்க்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்றன் அடித்தொடர்வால் உழிதர் கின்றேன்
இடையிலேன் கெடுவீர்காள் இடறேன் மின்னே.

"புவனபோகங்களை நல்வினை தீவினையாகிய கயிற்றால் கட்டி ஆட்டுகின்ற மாயை வடிவங்களே! நீவிர் உலகங்களை யெல்லாம் மயக்கி ஆணை செலுத்துகின்றீர். உமக்கு உலக மெல்லாம் போதாதோ? அத்துடன் அமையமாட்டீரோ? யான் திருவாரூர் தேவதேவருக்கு ஆளாகி அவர் பணியில் நீங்காது நிற்பவன். உம்மால் மயங்கேன்; நீவிர் வீணே அலையாதீர்; போமின்" என்று கூறிய அருள் வலிமையை யாரே அளக்க வல்லார்.

திருப்பூம்புகலூரில் திருத்தொண்டு செய்யும்போது நிகழ்ந்த நிகழ்ச்சி இது. அத்தலத்து இறைவனைக் குறிக்காது திருவாரூர்த் தேவரைக் குறிப்பிடுங் காரணம் என்னை? விண்ணிலிருந்து வந்து நம்மை மயக்க வந்த அரம்பையர்கள்; இந்திரன் ஏவல் வழி நிற்பவர்கள்; அந்த இந்திரன் வழிபடும் மூர்த்தி திருவாரூர்த் தியாகேசர். "ஆதலின், உங்கள் தலைவன் இந்திரன்; அவனுக்குத் தலைவர் திருவாரூர் இறைவர். நான் அவருக்கு அடிமை. உமது தோதகம் இங்கு என்னிடம் பலியாது" என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வரிய கருத்து எமது பரமாசாரியர் பழநி சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய அடிகள் அருளிச் செய்தது.

❀ ❀ ❀

குலச்சிறை நாயனார் புராணம்

"பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்"

பலரும் புகழ்ந்துரைக்கும் பழமையான புகழுடையது பாண்டி நாடு; முத்தும் முத்தமிழும் சந்தனமும் செந்தண்மையும் உடைய நாடு அது. அந்நாட்டில் சிறந்த வளப்பங்களுடன் கூடிய நகரமே மணமேற்குடி என்பதாகும். கன்னலும் செந்நெல்லும் விளையும் வயல்கள் மருங்கே அணைந்திருந்தன. தருமகுண சீலர்கள் அங்கு வாழ்ந்திருந்தார்கள். அத்திருப்பதிக்குத் தலைவர் குலச்சிறை நாயனார். குலத்தைக் காப்பாற்றுபவர் ஆதலின், இத் திருப் பெயரை உடையவராயினார். சுந்தரமூர்த்தி நாயனார் தமது திருத் தொண்டத் தொகையினுள் "பெருநம்பி" என்று புகழ்ந்து ஓதிய பெருமையும் அருமையும் உடையவர். திருத்தொண்டில் திண்மையும் உண்மையும் பூண்டவர்.

காரணங் கண்ணுதற் கன்பர் என்னவே
வார மாகி மகிழ்ந்தவர் தாண்மிசை
ஆரும் அன்பொடு வீழ்ந்தஞ் சலிமுகிழ்த்
தீர நன்மொழி யெய்த இசைத்துளார்.

சிவபெருமானுடைய திருவருளைப் பெறுவதற்கு அடிப்படை யான காரணமாக உள்ளவர்கள் சிவனடியார்களே என்று துணிந்து, அளவற்ற அன்புடன் அடியார்களைக் கண்டவுடன் மகிழ்ந்து நிறைந்த ஆர்வத்துடன் திருவடி மீது வீழ்ந்து, எழுந்து கூப்பிய கையுடன் நின்று குளிர்ந்த நன்மொழிகளை உரைப்பார்.

குறிக்கோளுடைய நான்கு குலத்தினர்களாயினும், அக்குலங் களினின்றும் நீங்கியவர்களாயினும், அறிவினால் சிவபெரு மானுக்கு அன்பு செய்வார்களாயின், அத் திருத்தொண்டர்களைப் பக்தியுடன் பணிந்து ஏத்துவார்.

குறியி னான்கு குலத்தின ராயினும்
நெறியின் அக்குலம் நீங்கின ராயினும்
அறிவு சங்கரற் கன்ப ரெனப்பெறில்
செறிவு றப்பணிந் தேத்திய செய்கையார்.

உலக நெறியில் மக்கள் இவை ஆம் என்று மேற்கொள்ளும் நலங்களை உடையவர்களாயினும், அவ்வாறு உலகினர் அன்று என்ற தீமைகளை மிகவும் உடையவர்களாயினும், சந்திரனைச் சடையில் தரித்த சங்கரருடைய அடியவர்களாயின் அவர்களை நிலமிசை வீழ்ந்து பய பக்தியுடன் பணியும் பண்புடையவர். சிவனடியார்கள் பெருங்கூட்டமாக வந்தாலும், தனித்து ஒருவர் வந்தாலும் அவர்களை அன்புடன் எதிர் கொண்டு, முகமலர்ந்து, அகனமர்ந்து, இன்சொல் கூறி உணவு ஊட்டுவார். திருநீறு, உருத்திராக்கம், கோவணம் என்ற சிவ சாதனங்களைத் தரித்து, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பஞ்சாக்கரத்தை ஓதுகின்ற அடியவர்களை நாடோறும் போற்றிப் புகழும் நியதியுடையாராக குலச்சிறையார் வாழ்ந்தார்.

இத்தகைய அருணலங்களையுடைய குலச்சிறையார், மதுரையை அரசு புரிந்த நின்றசீர்நெடுமாறனார் என்ற பாண்டிய மன்னனிடம் தலைமை அமைச்சராக விளங்கினார். பகைவர்களை வென்று அரசாங்கத்திற்கு உறுதி செய்தார். இடையறாது இறைவரது திருவடிகளைச் செந்தமிழ்ப் பாடல்களினால் துதி செய்வார். எங்கும் பரவிய புகழையுடைய பாண்டிமா தேவியாருடைய சிறந்த திருத் தொண்டுக்கு உண்மையாகத் தொண்டராகி நின்றார். புன்மையான சமணருடைய பொய்ம்மைகளை நீக்கவும், பாண்டி நாட்டில் திரு நீற்றின் மெய்ம்மையைப் போற்றவும், நிலைபெற்ற சீகாழிப் பிள்ளையாரது திருவடிகளை முடிமேற் புனைந்து மகிழ்ந்த புண்ணிய சீலர், அனல்வாது புனல்வாது செய்து தோற்ற அமணர்களை அவர்கள் புரிந்த தீது தீர கழுவில் ஏற்றிய ஏற்றம் உடையவர். நீண்டகாலம் நின்றசீர் நெடுமாறனிடம் முதல் அமைச்சுத் தொழில் பூண்டு உலகமெல்லாம் சைவ நெறியைப் பரப்பி இறுதியில் இறைவன் இணையடி சேர்ந்தார்.

விளக்கம்

மணமேற்குடி

இது அருமையான திருத்தலம்; ஆவுடையார் கோயிலிலிருந்து தென்கிழக்கில் மண்சாலை வழியாக பதினாறு கல் தொலைவில் அடையத் தக்கது. திருப்புனவாயிலிலிருந்தும் வடகிழக்கில் எட்டு கல் தொலைவில் உள்ள மீன் பசல் சென்று, அங்கிருந்து வடகிழக்கில் ஏழு கல் சென்று இத் திருத்தலத்தை அடையலாம்.

அடியார் பக்தி

அடியவர் வழிபாடே சிவனருள் பெறுவதற்கு எளிய சாதனமாகும். மக்களை மகிழ்வித்தால் அம் மக்களுக்கு உரிய தந்தையார் தாமே மகிழ்ச்சியுறுவார். அடியவர்க்குச் செய்த உபசாரங்கள் அத்தனையும் இறைவருக்குச் செய்தனவாகும். அதனால் இறைவர் மிகுந்த மகிழ்ச்சியுறுவர்.

"நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயின்
படமாடக் கோயில் பகவற்க தாமே" - திருமந்திரம்

இறைவனுக்குச் செய்யும் வழிபாடு ஆராதனை எனப்படும்; அடியவர்க்குச் செய்யும் வழிபாடு சமாராதனை எனப்படும். சம் ஆராதனை. சம் - நல்ல, ஆராதனை - வழிபாடு; நன்றாக வழிபட்டது ஆகும் அடியவர் வழிபாடு, அடியவர் வழிபாட்டி னால் முத்திப்பயன் விரைவிலும் எளிதிலும் கிடைக்கும்.

பட்டினத்தடிகள் நேரே இறைவனை வழிபட்டனர். பத்திர கிரியார் பட்டினத்தடிகளை வழிபட்டனர். பட்டினத்தாருக்கு முன் பத்திரகிரியாரே முத்தி பெற்றனர் என்பதையுணர்க.

சிவநிந்தையினும் அடியவர் நிந்தனையே அதிபாதகமாம். சூரியன் முன் மணிக்கணக்காக நிற்கலாம். சூரியன் அருள்பெற்ற நொய் மணலில் சில நிமிஷங்கூட நிற்கமுடியாது.

இரணியன் திருமாலைப் பலகாலும் நிந்தித்தனன். திருமாலின் அருள் பெற்ற பிரகலாதரை நிந்தித்துச் சிலகாலமளவேனும் வாழாது மாய்ந்து ஒழிந்தனன்.

"அடியார்ம னஞ்சலிக்க எவராகி லும்பழிக்க
அபராதம் வந்து கெட்ட பிணிமூடி"
- திருப்புகழ்

குலச்சிறை நாயனார் அடியார் பக்தியிற் சிறந்தவர். சிவனருள் பெறுவதற்குப் பரம காரணமாவார் அடியவரே என்ற உறுதியுடன் வழிபாடு செய்தார். "காரணங் கண்ணுதற் கன்ப ரென்னவே வாரமாகி மகிழ்ந்தவர் தாள்மிசை ஆரும் அன்பொடு வீழ்ந்து அஞ்சலி முகிழ்த்து ஈர நன்மொழி எய்த இசைத்துளார்" என்ற திருப்பாசுரத்தை உய்த்துணர்க.

அடியவர் பக்தி புரிபவர் குலத்தின் உயர்வு தாழ்வைக் குறியாது எக்குலம், எக்குடி, எம்மரபினராயினும் சிவமாகவே எண்ணி வழிபடவேண்டும்.

உலகினர் கொள்ளும் நலம் என்பன ஆசாரம் - வேள்வி முதலியன. சிவன்பால் அன்பு முதிர்ந்தார்க்கு இவைகள் பொருளாக. ஆசாரமில்லாத கண்ணப்பர் ஆசாரமுள்ளவர்களால் பணியப் பட்டதைச் சிந்திக்கவும்.

அடியவர் பக்தியில் தலை சிறந்த இத்திருவினரைச் சிவஞானப் பாலுண்ட திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில் சிறப்பித்துப் பாடியருளினார். என்னில் இவருடைய பெருமையை அளவிட வல்லார் யாவர்?

அத்திருப்பாடலை இதனடியிற் காண்க.

வேயனைய தோளுமையொர் பாகமது
வாகவிடை யேறிசடைமேல்
தூயமதி சூடிசுடு காடினட
மாடிமலை தன்னைவினவில்
வாய்கலச மாகவழி பாடுசெயும்
வேடன்மல ராகுநயனம்
காய்கணையி னாலிடந் தீசனடி
கூடுகா ளத்திமலையே.

சைவ சமயப் பாதுகாப்பு

உடம்பை வளர்ப்பது உணவு; உணர்வை வளர்ப்பது கல்வி; உயிரை வளர்ப்பது சமயம்; உயிரையின்றி உணர்வும் உடம்பும் சிறப்புறா. சமய ஞானமில்லாத கல்வியும் உலக வாழ்வும் சிறப்படையா. உடம்பை வளர்ப்பது தேசபக்தி, உணர்வை வளர்ப்பது குருபக்தி; உயிரை வளர்ப்பது சிவபக்தியென அறிக. சமயஞானமே சகல நலங்களுக்கும் ஆணிவேராகும். சமயஞானம் இல்லாத வாழ்வு கடைக்காலில்லாத மாடி வீட்டிற்கு நிகராகும். சமயத்தை வளர்ப்பது எல்லா அறங்களுக்குந் தலையாய அறமென நுண்ணுணர்வால் தெளிக. சைவ சமயத்திற்கு இடர் வருகின்ற போது அதனை நீக்க மனமொழி மெய்களால் பாடுபட வேண்டும்.

"சமயத்தை அறியவோ அதனைப் பாதுகாக்கவோ எங்களுக்கு நேரமில்லை; நாங்கள் உயர்ந்த பதவிகளிலே அமர்ந்திருக்கின்றோம்" என்று சிலர் கூறவும் நினைக்கவும் கூடும். குலச்சிறை நாயனார் பாண்டிய மன்னனிடம் முதல் மந்திரியாக இருந்தவர். பலப்பல அரசகாரியத்திலே ஈடுபட்டிருந்த அவர் சமய வளர்ச்சியில் தன் ஆயுள் முழுவதும் பாடுபட்டனர் என்பதை நினைவு கூர்க.

பயிரை வளர்த்தால் மட்டும் போதாது; பயிரை அழிக்க முற்படும் கோரைப்புல் முதலியவைகளைக் களைவதும் மிகவும் அவசியமாகும். அதுபோல் சமயத்தை வளர்ப்பதோடு அமையாது, அச்சமயத்தை அழிக்க முற்பட்ட சமண் சமயமாகிய களையை வேரோடு அழித்த சமயஞான வீரராகத் திகழ்ந்தவர் குலச்சிறையார். வாது செய்து தோல்வியுற்ற சமணர்களை அரச நீதிப்படி கழுவிலேற்றித் தண்டித்துத் திருநீற்றுச் சமயத்தை நாடெங்கும் பரப்பி நலம் புரிந்த இவர் பெருமை அளவிடற் கரியது.

சேக்கிழாரடிகள் இவரது பெருமையைப் பல பாடல்களினால் இனிது புகழ்ந்தும், அமையாது,

> "வாதிற் றோற்ற அமணரை வன்கழுத்
> தீது நீங்கிட ஏற்றுவித் தார்திறம்
> யாது போற்றினேன்"

என்று கூறி நிறுத்துகின்றார்.

நம்பி - ஆண்மக்களுக்குட் சிறந்தவன்; இவரை நம்பியென்று மட்டும் கூறாது, "பெரும் நம்பி குலச்சிறை" என்று நம்பி ஆரூரர் தமது திருத்தொண்டத்தொகையுள் மிகவும் இனிமையாகப் பாராட்டுகின்றார்.

பாண்டிநாடு முழுவதும் சமண இருள் மூடியபொழுது ஆணில் ஒருவரும் பெண்ணில் ஒருத்தியுமேதான் சைவத்தில் நிலைத்து நின்றவர்கள். ஆணில் குலச்சிறையார்; பெண்ணில் மங்கையர்க்கரசியார். இவரையொத்த அமைச்சரை இந்நாடு என்று பெறுமோ?

❀ ❀ ❀

பெருமிழலைக் குறும்பநாயனார் புராணம்

"பெருமிழலைக் குறும்பர்க்கும் அடியேன்"

தொன்மையான புகழ் படைத்த நாடு மிழலைநாடு. அந்நாட்டின் தலைநகரமாக விளங்குவது பெருமிழலை என்ற நகரம். மாந்தோப்பும், தென்னை, பலா, பாக்கு முதலியவைகளின் சோலைகளும் அந்நகரைச் சூழ்ந்திருக்கும். திருவீதிகளில் திருத்தொண்டர்கள் தரித்துள்ள திருவெண்ணீற்றின் ஒளி திகழும். நீதிநெறியினின்றும் வழுவாதவர்கள் வாழ்ந்தார்கள். இத்தகைய சிறப்பு மிக்க பெருமிழலையில் மிழலைக் குறும்பனார் வாழ்ந்தார். குறும்பர் என்ற குறுநிலமன்னர் குடியில் அவதரித்தவர். திங்களை முடித்த சிவபெருமானுடைய அடியார்கட்கு உவந்த தொண்டுகளை அவர்கள் கூறாமுன் குறிப்பறிந்து தாமே எதிர் கொண்டு இனிது புரிந்து, உணர்வின் பயனைப் பெறுவாராயினார்.

சிவனடியார்கள் எண்ணில்லாதவர்கள் வந்தாலும் உண்ண வுண்ணத் தொலையாத திருவமுது ஊட்டுவார். அவர்கட்குக் காணிக்கையாகச் செம்பொன்னை அள்ளி வழங்குவார். அடியவர் முன் மிகவும் அடக்கமாகச் சென்று வழிபடுவார். இமய வல்லி பங்கராம் இமையா முக்கட் பரமனது திருவடித் தாமரைகளை இதய தாமரையில் வைத்துத் தியானிப்பார்.

இவ்வாறு, சிவநெறியில் ஒழுகும் பெறுமிழலைக்குறும்ப நாயனார், எல்லையில்லாத திருத்தொண்டின் உண்மையை உலகறிய, திருத்தொண்டரை முறையுடன் வணங்கி, திருத் தொண்டத் தொகையைப் பாடியருளிய நம்பியாரூரரைப் பணி வதையும், அடியார்களது திருவடிகளை நினைவதையும் நியமமாகக் கொண்டார்.

மையார் தடங்கண் பரவையார் மணவா ளன்றன் மலர்க்கழல்கள்
கையால் தொழுது வாய்வாழ்த்தி மனத்தால் நினைக்குங் கடப்பாட்டில்
செய்யாள் கோனும் நான்முகனும் அறியாச் செம்பொற் றாளிணைக்கீழ்
உய்வான் சேர வுற்றநெறி இதுவே என்றன் பினிலுற்றார்.

மையெழுதிய நீண்ட கண்களையுடைய பரவையாருடைய கணவனாராகிய சுந்தரமூர்த்தி நாயனாருடைய திருவடிகளைக்

கையினால் தொழுதும், வாக்கினால் வாழ்த்தியும், கருத்தினால் கருதியும் வழிபடும் கடமையில் உறுதியுடன் நின்று மாலும் அயனும் அறியாத மணிகண்டர் மலரடிக் கீழ் சேர்ந்து உய்வதற்கு உரிய நெறி இதுவே என்று அன்புடன் நிலைத்து நின்றார். நாள்தோறும் நம்பியாரூரருடைய திருநாமத்தை உச்சரிக்கின்ற நலத்தினால் அணிமாதி அஷ்டசித்திகளையும் பெற்றார். அன்பு மேன்மேலும் பெருக பஞ்சாக்கரமே உறவும் செல்வமும் உணர்வும் என்று தேறித் தியானஞ் செய்தவண்ணமாக இருந்தார்.

நாளு நம்பி யாரூரர் நாம நவின்ற நலத்தாலே
ஆளும் படியாய் அணிமாதி சித்தி யான அணைந்ததற்பின்
மூளுங்காத லுடன்பெருக முதல்வர் நாமத் தஞ்செழுத்தும்
கேளும் பொருளும் உணர்வுமாம் பரிசு வாய்ப்பக் கெழுமினார்.

இவ்வாறு, இவர் சுந்தரருடைய செந்தாமரைத் திருவடியை இடையறாது சிந்தித்துக்கொண்டிருந்தபோது, இடபக் கொடியுயர்த்த இறைவர் மறையவராக மண்மேல் வந்து வழக்குசெய்து ஓலைகாட்டி தடுத்து ஆட்கொண்ட வன்தொண்டர், சந்திரன் தவழும் உயர்ந்த மாடங்களுடன் கூடிய கொடுங்கோளூரை யடைந்தார். திருவஞ்சைக்களத்தில் எழுந்தருளிய நஞ்சுண்ட அமுதாகிய இறைவரைத் தொழுது திருப்பதிகம் பாடி, சேரமான் பெருமாள் நாயனாரது அரண்மனையில் தங்கியிருந்தபோது, திருக் கயிலை மலையை அடையும் பெருவாழ்வு நாளை எய்துகின்றது என்பதைத் திருவுள்ளத்தில் உணர்ந்தார். அப்படி அவர் கொடுங் கோளூரில் நினைந்ததைப் பெருமிழலையில் இருந்த இவர் யோகக் காட்சியில் அறிந்தார். "வன்தொண்டர் திருக்கயிலை மலைக்கு நாளை செல்ல, கண்மணியைப் பிரிந்து வாழ்வாரைப் போல் நான் வாழமாட்டேன். இன்றே சிவபெருமான் திருவடியை யோக நெறியால் சார்வேன்" என்றார். கருவி கரணங்களை ஒருமுகப் படுத்தி, சுழுமுனை நாடி வழியே பிராணவாயுவைச் செலுத்தி, பலகாலும் பயின்ற சாதனத்தின் முதிர்ச்சியினால் பிரமரந்திரவழியே சென்று பிரணவ நாதத்துடன் பிரம கபாலத்தைத் திறந்துகொண்டு திருக்கைலாயமலையைச் சார்ந்தார்.

விளக்கம்

பெருமிழலை

சோழநாட்டில் உள்ள திருவீழிமிழலை என்னும் தலம் வேறு. புதுக்கோட்டைக்கு அணித்தாகவுள்ளது மிழலைநாடு என்பர்.

வெள்ளாற்றின் தென்கரையில் மிழலைநாட்டுக்குத் தலைநகராக அக்காலத்தில் மிகவும் சிறப்புடையதாக விளங்கியது பெருமிழலை என்னும் இந்நகரம். புதுக்கோட்டைக்கு அப்பால் உள்ள திரு மயத்திற்கு அருகில் பேரையூரினின்றும் மேற்கே அரை கல்லில் தேவமலையில் உள்ள குடவரையில் சிவலிங்கத்தின் திருமுன் சடைமுடியுடன் யோகநிலையில் அமர்ந்துள்ள முனிவர் திரு வுருவம் பெருமிழலையார் எனக் கருதுகின்றனர்.

குறும்பனார்

குறுநில மன்னர்களில் சிலர் குறும்பர் என்ற பேருடையவராய் முற்காலத்தில் இருந்தனர். அம் மரபில் வந்தவர் இவர். பெருமிழலை என்பது ஊரின் பெயர்; குறும்பர் என்பது மரபின் பெயர். இரண்டுஞ் சேர்ந்து பெருமிழலைக் குறும்பனார் எனப் பட்டனர். எனவே, இவருடைய இயற்பெயர் விளங்கவில்லை.

இதய பூசை

இறைவனை உள்முகமாக வைத்து வழிபடுவதற்கு அந்தர் யாகம் என்று பேர். அந்தர்யாகம் புரியாது வெளிமுகப்பூசை புரிவது சிறப்படையாது.

> அர்ச்சித்தான் அந்தரியா கம்புரியா தேபலத்தை
> வர்ச்சித்தா னென்றே மதி. - *சைவசமயநெறி*

யாகம் நாபியிலும், சமாதி புருவநடுவிலும், பூசை இதயத்திலும் புரிதல் வேண்டும் என்று சிவாகமங்கள் கூறுகின்றன.

> "ஹ்ருத்பத்மே பூஜயேத்வித்வான்" - *சுப்ரபேதம்*

> "துரியநிலை யேகண்ட முத்தரித யாகமல
> மதனில்விளை யாநின்ற அற்புதசு போதசுக
> சுயபடிக மாவின்ப பத்மபதம்" - *திருப்புகழ்*

குருபக்தி

இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்குக் குருவருளே சிறந்த சாதனமாம். பிறவியாகிய பெருங்கடலைக் கடப்பதற்கு இறைவன் திருவடி மரக்கலமாகும். குருநாதன் மாலுமியாகும். மரக்கலத்திற்கு மாலுமி எத்துணை அவசியம் என்பதனை யுணர்க.

கருடன் உருவத்தைக் கருதுவோர் விடபயம் நீங்குவர். அது போல் குருவின் திருவுருவத்தைக் கருதுவோர் மும்மலங்களும் நீங்கி முத்திநலம் பெறுவர்.

கருட னுருவங் கருது மளவில்
பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவி னுருவங் குறித்தவப் போதே
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே. - *திருமந்திரம்*

குருநாதர் கண்மணிக்கு நிகராவார் என்க. கண்மணி வழியையும் குழியையும் உணர்த்தும். குருநாதர் நன்மை தீமையை உணர்த்துவார். குருவில்லாதவர், கண்ணில்லாத குருடனுக்கு நிகராவர். நாளை நம்பியாரூரர் கயிலைமலை செல்லுங் குறிப்பினையுணர்ந்த பெருமிழலையார் "குருநாதனை இழந்து நான் இங்கு வாழேன்; இன்றே இறைவனடி சார்வேன்" என்று சிவயோக நெறியில் கபாலமூலம் திறந்து கொண்டு கண்ணுதல் கழலிணையைச் சார்ந்தார்.

மண்ணில் திகழுந் திருநாவ லூரில் வந்த வன்தொண்டர்
நண்ணற் கரிய திருக்கயிலை நாளை யெய்த நான்பிரிந்து
கண்ணிற் கரிய மணிகழிய வாழ்வார் போல வாழேன்என்
றெண்ணிச் சிவன்றாள் இன்றேசென் றடைவன் யோகத்
தாலென்பார்;

குரு பக்தியால் திருவருள் பெற்றது மட்டுமின்றி அட்டமா சித்திகளையும் இவர் பெற்றனர்.

குருநமசிவாயர் குருபக்தியால் திருவருட்பேறு பெற்றதும், உபமன்யு முனிவர் முக்காலமுணரும் அருட்கண் பெற்றதும் ஈண்டு நினைவு கூர்க. குருபக்தியால் மிக்க அப்பூதியடிகளையும் உன்னுக.

மனம், மொழி, மெய் என்ற மூன்று கரணங்களாலும், தனது குருமூர்த்தியாகிய சுந்தரரை இவர் வழிபட்டார். அதன் பயனால் சிவயோக நெறியைப் பெற்றார்.

சிவயோகம்

பிராண வாயுவைப் பிடித்து வெளியே விடாமல் அடக்கிச் செய்யும் யோகம் ஹடயோகம் எனப்படும். அது ஞான நெறியன்று. சிவயோகம் என்பது, பிராண வாயு தொடர்ந்து சஞ்சரிக்கச் செய்து இடை பிங்கலை நாடிகளிற் செல்லாவண்ணந் தடுத்து, சுழுமுனை நாடியிற் செலுத்தி உடல் வேறு தான்வேறாகப் பிரிந்து நிற்கும் வகையைக் கைவரப்பெறுவது ஆகும்.

பால் - சரியை; பாலினின்றுந் தோன்றிய வெண்ணெய் - கிரியை; வெண்ணெய் உருக்கத் தோன்றிய நெய் - யோகம்; நெய்யின் சுவை -ஞானம் என்க.

சிவயோகத்தின் மர்மத்தை நன்கு அறிந்த அருணகிரிநாத அடிகள் அதனைப் பல இடங்களில் நுட்பமாகவும், திட்பமாகவும் அருளிச் செய்தார். அவற்றுள் சில வருமாறு

"ஐந்து பூதமு மாறு சமயமும்
மந்த்ர வேதபு ராண கலைகளும்
ஐம்ப தோர்வித மான லிபிகளும் வெகுரூப
அண்ட ராதி சராச ரமும்உயர்
புண்ட ரீகனும் மேக நிறவனும்
அந்தி போலுரு வானு நிலவொடு வெயில்காலும்
சந்த்ர சூரியர் தாமு மசபையும்
விந்து நாதமு மேக வடிவம
தன்சொ ரூபம தாக வுறைவது சிவயோகம்"

- திருப்புகழ்

"உடலுமுட லுயிருநிலை பெறுதல்பொரு ளெனவுலக
மொருவிவரு மநுபவன சிவயோக சாதனையில்
ஒழுகுமவர் பிறிதுபர வசமழிய விழிசெருகி
உணர்வுவிழி கொடுநியதி தமதூடு நாடுவதும்"

- சீர்பாதவகுப்பு

துருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொறுக்கிலென் னாம்சிவ யோகமென்னுங்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குருநா தன்சொன்ன
கருத்தை மனத்தில் இருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே.

நீலச் சிகண்டியில் ஏறும் பிரான்எந்த நேரத்திலும்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்மரிப் பார்வெறுங் கர்மிகளே.

- கந்தரலங்காரம்

பெருமிழலைக் குறும்ப நாயனார் இந்த சிவயோகநெறியில் நின்றுநம்பியாரூரருடையதிருவடியை நம்பி நாளும் தியானித்துக் கொண்டிருந்தார்.

உயிர் இந்த உடம்பைவிட்டுப் பிரியும் வாயில் பதினொன்று என அறிக. (1) மிகுந்த பாவஞ் செய்தவனுக்கு மலவாயில் வழி மலத்துடன் உயிர் பிரியும். அவ்வாறு பிரிந்த உயிர் நரகங்களிற் சென்று வேதனையுற்றுக் குறுக்கேயுள்ள பிறவிகளிற் பிறந்துழலும்.

(2) பாவஞ் செய்தவனுக்கு நீர்வாயில் வழி உயிர்பிரியும். அவ்வாறு பிரிந்தவுயிர் மறுபிறப்பில் காமியாய்த் திரியும்.

(3) பாவம் பெரிதும் சிறிது புண்ணியமுஞ் செய்தவுயிர் நாபி வழியே பிரியும்; அவ்வாறு பிரிந்த உயிர், வறிய வனாகவும், நோயாளனாகவும், அங்கவீனனாகவும் பிறந்து உழலும்.

(4) பாவமும் புண்ணியமும் சமனாகச் செய்தவனுக்கு வாய்வழியே உயிர் பிரியும்; அவ்வாறு பிரிந்தது மறுபிறப்பில் மிகுந்த உணவை அருந்துவதாகவும், உணவு நசையுள்ளதாகவும் பிறக்கும்.

(5, 6) இடநாசி வலநாசி வழியே தனித்தனியே பிரிந்த உயிர் அதிகபாவமில்லாதது என அறிக. அவ்வுயிர் மறுபிறப்பில் நறுமணத்தை மிகவும் விரும்பும்.

(7, 8) இடசெவி, வலசெவி வழியே பிரிந்த உயிர் புண்ணியம் செய்த உயிர் என அறிக. அவ்வுயிர் மறுபிறப்பில் கேள்விச் செல்வம் உடையதாக வாழும். இயல் இசையைக் கேட்பதிலேயே காலங் கழிக்கும்.

(9, 10) மிகுந்த புண்ணியஞ்செய்த உயிர் இடக்கண், வலக்கண் வழியே பிரியும்; மறுபிறப்பில் கல்வி - செல்வம் முதலியன பெற்று உயர்வுடன் வாழும்.

(11) சிவயோக நெறியில் நின்ற ஆன்மா, உடம்பு முகந்து கொண்ட பிராப்தங்களைத் தனக்குத் தொடர்பு இன்றி உடலூழாய்க் கழியுமாறு செய்து, கழிந்தபின், பலகாலும் செய்த சாதனத்தினால், சுழுமுனைநாடி வழியே பிராணனைச் செலுத்தி, பிரமரந்திர வழியைத் திறப்பித்து மேலைப் பெருவெளியில் நிறுத்திக் கபால வெளியே திறப்பித்துக் கொண்டு ஒளிமயமாகச் செல்லும். அவ்வாறு சென்ற ஆன்மா மீண்டும் ஈண்டுவந்து பிறவாது.

பெருமிழலையார் சிவயோகச் செந்நெறி நின்றவர் ஆதலின், கொடுங்கோளூரில் இருந்த நம்பியாரூரர் "நாளை கயிலை செல்ல வேண்டும்" என்று எண்ணியதை, இங்கே பெருமிழலையில் இருந்தே யோகக் காட்சியால் அறிந்து, "அவர் நாளை செல்ல இங்கு நான்

அவரையின்றி யிருந்து வாழேன்; இன்றே சிவனடி சார்வேன்" என்று எண்ணித் துணிந்து, சுழுமுனைநாடி வழியே பிராணனைச் செலுத்தி, பிரமரந்திரவழியே மேலைப் பெருவெளி சார்ந்து, கபாலத்தினைத் திறப்பித்து ஒளிவடிவாக பரவெளியைச் சேர்ந்தார் என்று உணர்க.

நாலு கரணங் களுமொன்றாய்நல்ல அறிவு மேற்கொண்டு
காலும் பிரம நாடிவழிக் கருத்துச் செலுத்தக் கபாலநடு
ஏல வேமுன் பயின்றநெறி யெடுத்த மறைமூ லந்திறப்ப
மூல முதல்வர் திருப்பாதம் அடைவார் கயிலை முன்னடைந்தார்.

காரைக்காலம்மையார் புராணம்

"பேயார்க்கும் அடியேன்"

துறைமுகப் பட்டினமாக நிறைந்த வளங்களுடன் கூடியது காரைக்கால்; கடல் அலைகள் சங்குகளைச் சுமந்துவந்து கழிக்கானல்களில் உலவும் வளமையுடையது அத் திருப்பதி; மானமிகுந்த அறநெறியில் நின்ற பெருவணிகர்களின் குடிகள் நெருங்கி அந் நகரில் வாழ்ந்தன. அப் பெருவணிகர்கள் குறை வில்லாத செல்வமும், சீரும் உடையவர்கள். மரக்கலங்கள் வந்து அயல்நாட்டுப் பொருள்களை இறக்குவதும், உள்நாட்டுப் பொருள் களை ஏற்றுவதுமாக வாணிபத்தினால் உயர்ந்து திரு வளர்கின்ற அந் நகரில் வாழ்கின்ற வணிகர்கட்குத் தலைவராக இருந்தவர் தனதத்தர். நற்குணங்களுக்கு உறைவிடமாகிய அவர் மகப்பேறு குறித்து நெடிதுநாள் தவங்கிடந்தார். செல்வம் நிறைந்த அவருடைய வாழ்க்கைத் துணைவியாரும் அவரும் புரிந்த அருந் தவப்பயனால் திருமடந்தை அவதரித்ததுபோல் ஒரு பெண் மகவு பிறந்தது.

வணிகர் குலம் விளங்க அவதரித்த அம்மகவுக்குப் புனிதவதி என்று பேர் சூட்டினர். தளர்நடையிட்டு வளர்கின்றபோது பாம்பணிந்த பரமனிடத்தே தணியாத காதலுடன் சிவநாமமே பயின்று வந்தார். செல்வமிகுந்த தந்தையாராகிய தனதத்தர் சுற்றத்தினர் மகிழ அவ்வக் காலத்தில் புதல்வியாருக்கு எல்லாச் சிறப்புக்களையுஞ் செய்து வந்தார். அழகின் கொழுந்து வளர்வது போல் அம்மையார் வளர்ந்து, விளையாடும்பொழுதெல்லாம் சிவநாமமே மொழிவார்; திருத் தொண்டர்கள் வந்தால் அன்போடு தொழுவார். செவிலித் தாயாரும் தாதியரும் போற்ற இனிது வளர்ந்து மங்கைப்பருவம் அடைந்தார்.

நாகைப்பட்டினத்தில் வணிகர் குலத்தில் புகழ் மிகுந்த நிதிபதி என்பார் ஒருவர் இருந்தார். அவர் தனது புதல்வன் பரம தத்தனுக்குத் திருமணஞ் செய்ய விரும்பிப் புனிதவதியம்மையாரை மணம் பேசும் பொருட்டு அறிஞர்களைக் காரைக்காலுக்கு அனுப்பினார். வந்த மூதறிவாளர்கள் தனதத்தனாருடைய திரு மாளிகையை அடைந்தார்கள். தனதத்தர் அவர்களை வரவேற்று நலம் வினாவி உபசரித்தார். அவர்கள், "ஐயா! தங்கள் தவத்தினால்

பிறந்த தனிப் புதல்வியை, நாகை நிதிபதியாருடைய புதல்வன் பரமதத்தனுக்கு முன்னோர்களது மரபினனுக்குப் பொருந்து முறைமைப்படி மணம்புரிந்து தருவீர்" என்று வேண்டினார்கள். குலம், குடி, கோத்திரம் முதலியன ஒத்திருந்தபடியால் பெண் தர தனதத்தனார் இசைந்தார். திருமணத்திற்கு நன்னாள் குறிப்பிடப் பெற்றது. மணம் பேச வந்தவர்கள் நாகைப்பட்டினஞ் சென்று நிதிபதியாருக்கு அறிவித்தார்கள். பெருமகிழ்ச்சியுற்ற நிதிபதி, திருமணத்திற்கு வேண்டிய தொழில்களைச் செய்தார். சுற்றத்தவர் கட்கும், நண்பர்கட்கும் திருமண அழைப்பு ஓலை அனுப்பினார்கள். பரமதத்தனை நன்கு அலங்கரித்து மங்கல வாத்தியங்கள் முழங்கக் காரைக்காலுக்கு வந்து சேர்ந்தார்கள். வந்தவர்களைத் தனதத்தனார் வரவேற்றுத் தங்குமிடந் தந்து உணவாதிகளை யூட்டி உபசரித்தார். சுற்றத்தார்கள் மகிழ புனிதவதியம்மையாருக்கும் பரமதத்தனுக்கும் மிகவுஞ் சிறப்பாகத் திருமணஞ் செய்தார்கள்.

திருமணம் எல்லா வகையான சிறப்புக்களுடன் முடிந்த பின், தனதத்தனார் தனக்கு ஒரே புதல்வியாதலினால் நாகைக்கு அனுப்புதற்கு மனம் இன்றி, சம்பந்தியாகிய நிதிபதியின் அனுமதி பெற்று, காரைக்காலிலேயே தமது மாளிகைக்கு அருகில், வேறு ஒரு தனி மாளிகை புதுக்கி அதில் மருமகனுடன் மகளைத் தனிக்குடித்தனமாக இருத்தினார். நிரம்பச் செல்வமும், ஆடை அணிகலன்களும், பொன் வெள்ளிப் பாத்திரங்களும், பசு நிலம் ஏவலர்களையும் மகட் கொடையாக வழங்கினார். பரமதத்தன் மாமனார் தந்த செல்வத்தைக் கொண்டு வாணிபஞ் செய்து தனது திருமனைவியாருடன் இனிது வாழ்ந்தான்.

கணவனுடன் இல்வாழ்க்கைக்கு அருந்துணையாய் அமர்கின்ற அம்மையார் சிவபெருமானுடைய திருவடிக்கீழ் மிகுந்த அன்புடன் கூடிய காதல் இடையறாது வளர, மனையறத்தின் பண்பு வழுவாமல் வாழ்வாராயினார். சிவபெருமானுடைய திருத்தொண்டர்களுக்கு, நல்ல திருவமுதும், செம்பொன்னும், நவமணிகளும், உயர்ந்த ஆடைகளும் அன்புடன் தகுதிப்படி வேண்டுவன தந்து சிவபக்தி செய்து கொண்டிருந்தார்.

நம்பரடி யாரணைந்தால் நல்லதிரு வமுதளித்தும்
செம்பொன்னும் நவமணியுஞ் செழுந்துகிலு முதலான
தம்பரிவி னாலவர்க்குத் தகுதியின்வேண் டுவகொடுத்தும்
உம்பர்பிரான் திருவடிக்கீழ் உணர்வுமிக ஒழுகுநாள்.

ஒருநாள் பரமதத்தன் வாணிபஞ் செய்யுமிடத்தில் இருந்த போது, அவனைக் காணவந்தவர்கள் இரண்டு இனிய மாங்கனிகளைத் தந்தார்கள். அதனைப் பெற்ற பரமதத்தன் அவர்கட்கு வேண்டுவ நல்கி அனுப்பினான். பின்னர், அக்கனிகள் இரண்டையும் தனது ஏவலன் மூலம் வீட்டில் வைக்கச் சொல்லி அனுப்பினான். அவற்றை அம்மையார் வாங்கி வைத்தார். பசியும், களைப்பும் உடைய ஒரு திருத்தொண்டர் அம்மையாருடைய திருமாளிகையை அடைந்தார். மறைகளை மொழிந்த இறை வருடைய அடியாருடைய உயர்வையும், அயர்வையுங் கண்ட அம்மையார் அவரது பசியையாற்ற எண்ணிப் பாதங்கள் விளக்க நீரளித்து ஆசனத்தில் இருத்தினார். அந்த நேரத்தில் கறியமுது ஒன்றும் ஆயத்தமாகாது, திருவமுது மட்டும் அமைந்திருந்தது, சிவனடியாரைப் பசி தீர்ப்பதனினுஞ் சிறந்த பேறு இல்லையென்று கருதிய அம்மையார், அன்னம் படைத்து, கறியமுதுக்குப் பதிலாக, நாயகன் அனுப்பிய மாங்கனிகள் இரண்டினில் ஒன்றை மனமகிழ்ச்சியுடன் படைத்தார். மூப்பும், பசியும் மிக்க அவ்வடியவர் மாங்கனியோடு இன்சுவை யுண்டியை இனிது அருந்தி அம்மையாரை வாழ்த்திவிட்டுச் சென்றார்.

உச்சிப்பொழுதில் பரமதத்தன் வந்தான். நீராடி உணவு செய்யத் தொடங்கினான். அம்மையார், இனிய கறிகளை முறைப்படி படைத்து, அன்னம் படைத்து, பருப்பும் நெய்யும் படைத்து, மாங்கனியையும் படைத்தார். மனைவியார் படைத்த மதுர மாங்கனியை யுண்ட பரமதத்தனுக்கு அக் கனியில்மேலும் விருப்பம் உண்டாகியது.

"புனிதவதி! இன்னும் ஒரு பழம் உளதே; அதனையும் இடுக" என்றான். எதிர்பாராத வகையில் கணவனார் இப்படிக் கேட்டதும் அம்மையார் ஒன்றுந் தோன்றாதவராகி, கொண்டுவரச் செல்வார் போல் உள்ளறையிற் சென்றார். அங்கே நின்று மனந் தளர்ந்தார்; அருமையான கனிக்கு என்ன செய்வார்; கலங்கினார்; சிவபெரு மானை நினைந்து, "தேவதேவா! உனது அடியவர்க்கு ஒரு கனியைப் படைத்துவிட்டேன். கணவனார் இவ்வாறு மறுகனியைக் கேட்பார் என்று நான் எண்ணினேனில்லை; கருணாநிதீ! அடியவர் அல்லல் களையும் அருட்கடலே" என்று துதித்து, தம்மை மறந்து, தரும விடைமேல் வரும் தயாநிதியை நினைந்து உருகினார். கண்ணுதற் பெருமான் கருணையினால் அவர் திருக்கரத்தில் அதிமதுரக் கனியொன்று வந்தது.

அம்மையார் அக் கனியைக் கொணர்ந்து பரமதத்தன் கையில் தந்தார். அவன் அதனை உண்டு, அமுதினும் மேற்பட்ட சுவையுடையதாக அது விளங்குவதைக் கண்டான். "பெண்ணரசே! இது முன் நான் அனுப்பிய கனி அன்று. மூன்று உலகங்களிலும் இதுபோன்ற கனியைப் பெறமுடியாது. இதனை வேறு எங்கே பெற்றனை?" என்று வினாவினான். அம்மை அதுகேட்டு முன்னையினும் மனங்கலங்கினார். திருவருளின் திறத்தை வெளிப்படுத்துவது கூடாது. பொய்மையும் புகலக்கூடாது. இத் தரும சங்கடத்தினால் உள்ளம் உலைந்தார். முடிவில் நடந்ததை நவில்வதுவே தக்கதென்று துணிந்தார். அடியார்க்கு ஒருகனியைப் படைத்ததும், இறைவனை வேண்ட கண்ணுதற் பெருமான் கனியருளியதையும் கூறியருளினார். திருவருளைத் தெளியாத பரமதத்தன் மனைவியாரை நோக்கி, "இது சிவபிரான் திருவருளால் வந்தது உண்மையாயின், இன்னும் ஒரு கனி அவரது அருளால் தருவித்துக் கொடு" என்றான். அம்மையார் அரனாரைச் சிந்தித்து, "ஐயனே! இங்கு இன்னும் ஒரு கனியைத் தாரும். இல்லையேல் எனது மொழி பொய்மையாகும்; அருட் கடலே! என்னை ஆட்கொள்ளும்" என்று வேண்டினார்.

மணிகண்டர் திருவருளால் மாங்கனி மற்றொன்று வந்தது. அதனை அம்மையார் அவன் கையில் தந்தார். அதிசயித்து வாங்கினான் பரமதத்தன். உடனே கனி மறைந்தது. இத்திருவருளின் அற்புதச் செயலைக் கண்ட வணிகன் பெரிதும் அஞ்சினான். உள்ளம் நடுநடுங்கினான். அம்மையாரை மனித உடம்புடன் கூடிய தெய்வம் என்று எண்ணினான். அவருடைய பெருமை அறியாது நடந்து கொண்ட தன் சிறுமையை நினைந்து வருந்தினான். திருவருளை நம்பாது மறுமுறையுங் கனியைக் கேட்டு அவர் மனதைத் துன்புறுத்தியது குற்றம் என்றும், தெய்வமாகிய அவர் தனக்குப் பணிவிடை செய்வது பாவம் என்றும், அருகிலிருந்தால் அவர் பணிவிடை செய்ய நேரும். ஆதலினால், பிரிந்து வாழ்வதே தக்கது என்றும் கருதினான்.

சிலநாள் தொடர்பின்றி அம்மையார் தனக்குத் தொண்டு செய்யாத வண்ணம் இருந்தான். கடல் கடந்து சென்று செம்பொன் தேடி வருவதாகச் சுற்றத்தாரிடம் தெரிவித்தான். "திரைகடல் ஓடியுந் திரவியந் தேடு" என்பதற்கு இணங்க அவர்களும் இணங்கினார்கள். மரக்கலஞ் செய்து, அயல் நாட்டில் அதிக விலைக்கு விற்கக்கூடிய பண்டங்களை ஏற்றினான். தான் தெய்வமாக எண்ணி மனதால் வழிபடும் அம்மையாருக்கு மனவணக்கஞ் செலுத்தினான். நல்ல

நாளில் வருணனைப் போற்றி மரக்கலமேறிப் புறப்பட்டுச் சென்றான்.

அயல்நாடு சென்று பண்டங்களையெல்லாம் விற்று நிரம்பவும் பொருள் ஈட்டினான். பின்னர், இங்குத் தாய்நாட்டில் விரும்பக்கூடிய பொருள்களைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு மரக்கலமூர்ந்து தாய்நாடு வந்து, காரைக்காலுக்கு வராமல் பாண்டி நாட்டில் ஒரு பட்டினத்தைச் சார்ந்து தங்கினான், அங்குப் பண்டங்களை யெல்லாம் விற்றுப் பெருந் தனவந்தனாகி, மேன்மேலும் வாணிபஞ் செய்து சீரும் சிறப்பும் பெற்றான். அவ்வூரில் உள்ள ஒரு வணிகன் தனது கன்னியை அவனுக்குத் திருமணஞ் செய்து தந்தான்.

பரமதத்தன் புதிய மனைவியுடன் வாழ்கின்றான். ஆனால், காரைக்காலில் உள்ள அம்மையாரிடம் அச்சம் உடையவனாகவே இருந்தான். அந்தச் செய்தியை ஒருவருக்கும் உரைத்தானில்லை. கப்பல் வாணிபஞ் செய்ய அதனால், குபேரனைப் போன்ற அளவற்ற நிதி குவிந்தது. இளைய மனைவி கருக்கொண்டு ஒரு பெண்மகவைப் பெற்றெடுத்தாள். குழந்தையைத் திருமஞ்சனஞ் செய்து, தொட்டிலிலிட்டு, தான் மனதில் வைத்து வழிபடுந் தெய்வமாகிய அம்மையாருடைய நாமத்தை அக் குழவிக்குச் சூட்டினான். "புனிதவதி" "புனிதவதி" என்று அன்புடன் அழைத்தான். குழந்தை இனிது வளர்ந்தது.

அங்கே காரைக்காலில் அம்மையார் நிலைபெற்ற கற்பொழுக் கத்துடன் சிவபக்தி செய்துகொண்டு மனையறம் புரிந்து வந்த னர். கப்பலேறிச் சென்ற பரமதத்தன் மீண்டுவந்து பாண்டி நாட்டில் ஒரு பட்டினத்தில் இருக்கின்றான் என்று சுற்றத்தினர் கேள்வியுற்றார்கள். ஒருவனை அனுப்பிப் பரமதத்தன் இருப்பை நன்கு அறிந்த சுற்றத்தினர், அம்மையாரைக் கொண்டுபோய் அவன்பால் சேர்க்க வேண்டும் என்று கருதினார்கள். இரத்தி னங்கள் இழைத்த சிவிகையில் திருவனைய தெய்வமடந்தையாரை ஏற்றிச் சில பகல் நடந்து செந்தமிழ் நாட்டையெய்திப் பரமதத்தன் இருந்த நகரைச் சேர்ந்தார்கள். நகர்ப்புறத்தில் ஒரு சோலையில் தங்கி, அம்மையாருடன் வந்திருக்குஞ் செய்தியைக் கூறுமாறு ஒருவனை அனுப்பினார்கள். அச் செய்தியைக் கேட்ட பரமதத்தன் அஞ்சிய மனத்தனாகி, இளைய மனைவியை அழைத்துக்கொண்டு, குழந்தையையும் எடுத்துக்கொண்டு விரைந்து வந்தான். கணவனைக் கண்டு இளம் பெண்மான்போல் நின்ற அம்மையின் அடியில் தாழ்ந்து, "அடியேன் உமது திருவருளால் வாழ்வேன்; இக் குழவிக்கு

உமது திருநாமத்தைச் சூட்டியிருக்கின்றேன். அருள்செய்யும்" என்று கூறி அம்மையார் அடிமலர்மீது வீழ்ந்து பணிந்தான்.

அதுகண்ட அம்மையார் அச்சத்துடன் ஒதுங்கிச் சுற்றத்தார் பால் நின்றனர். சுற்றத்தினர், "பரமதத்தரே! இது என்ன புதுமை? மனைவியை வணங்குகின்றனையே, உன் செயலின் உட்பொருள் யாது?" என்று வினாவினார்கள்.

பரமதத்தன், "ஐயன்மீர்! இவர் மானுடமல்லர்; நற்பெருந் தெய்வமாகும். நான் இதனை முன்னரே அறிந்து அகன்றேன். இதோ எனது மகளுக்கு இத் தெய்வத்தின் திருநாமம் சூட்டியுளேன், ஆதலால், அடிபணிந்தேன். நீவிரும் பணியுங்கள்" என்றான். சுற்றத்தினர் அவனுடைய சொற்களைக் கேட்டு அதிசயித்து நின்றார்கள்.

அம்மையார் அவனுடைய மாற்றங் கேட்டுக் கொன்றை அணிந்த குழகனது குரைகழலைப் போற்றி, ஒன்றிய சிந்தையுடன் உணர்வுகொண்டு உரைக்கின்றார். "இங்கு இவன் குறித்த செய்கை இது. இனி இவனுக்காகச் சுமந்த அழகு மிக்க தசைப் பொதியைக் கழித்து, ஆங்கு உன்பால் உள்ளவர்கள் போற்றும் பேய்வடிவத் தினை அடியேனுக்கு அருள்செய்வீர்" என்று இறைவனைத் துதித்தார். அப்பொழுது அம்பலவாணர் திருவருளால் மேலான உணர்வு மிகுதலும் உடம்பில் அழகு செய்துகொண்டிருந்த தசைகளை உதறி என்பு வடிவாகி, விண்ணும் மண்ணும் போற்றும் பேயுருவங் கொண்டு நின்றார்.

ஆனவப் பொழுது மன்றுள் ஆடுவார் அருளி னாலே
மேனெறி யுணர்வு கூர வேண்டிற்றே பெறுவார் மெய்யில்
ஊனடை வனப்பை யெல்லாம் உதறியெற் புடம்பே யாகி
வானமு நிலனு மெல்லாம் வணங்குபேய் வடிவ மானார்.

மலர்மழை பொழிந்தது. வான துந்துபியின் ஒலி உலகெலாம் நிறைந்தது. இமையவரும் இருடியரும் கூடினார்கள். கணங்கள் கூத்தாடின. எதிரே இருந்த சுற்றத்தார்கள் இந்த அற்புதத்தைக் கண்டு தொழுது அஞ்சி அகன்று ஓடி விட்டார்கள். அம்மையார் ஒருமைப்பட்ட மெய்ஞ்ஞான உணர்வுடன் உமாபதியை 'அற்புதத் திருவந்தாதி' என்ற திருநூல் பாடித் துதித்தார். 'பொற்பதம் போற்றும் நற்கணங்களில் நானும் ஒன்று ஆனேன்' என்று மகிழ்ந்தார். பின்னர், "இரட்டை மணிமாலை" என்ற திருப்பிரபந்தத்தைப் பாடியருளி னார். முப்புரம் எரித்த முக்கட்பெருமான் எழுந்தருளியிருக்கும்

திருக்கைலாயமலை சென்று நித்தனை நேரில் வழிபட நினைந்தார்.

அம்மையாருடைய பேய் வடிவைக் கண்டவர்கள் வியந்து அஞ்சி ஓடுகின்றார்கள். அவ்வுருவத்தினை அவர்கள் கண்டு தாங்கள் நினைத்ததைக் கூறுகின்றார்கள். அவ்வுரைகளைக் கேட்ட அம்மையார், "அண்டர் நாயகனார் என்னை அறிவர்; அறியாத இவ்வுலக மாக்களுக்கு நான் எவ்வுருவாயினால் என்னை?" என்றார். மனத்தினும் மிக்க வேகத்துடன் வடதிசைத் தேயமெல்லாங் கடந்து, கயிலையை நண்ணினார். பரமன் மேவிய மலையை பாதத்தினால் மிதிக்க அஞ்சி தலையினால் நடந்து சென்றார். அரிய அம் மலையைத் தலையிலேயே நடந்து ஏறி இறைவர் அருகிற் சென்றார். சிலைநுதல் இமைய வல்லியின் திருக்கண்பார்வை உற்றது. அம்பிகை அது கண்டு அதிசயித்து, தம்பிரானைத் தாழ்ந்து, "தேவதேவரே! தலையினால் நடந்து என்பு வடிவுடன் வரும் இவ்வுருவின் அன்புதான் என்னே?" என்று வினாவினார்.

"உமையே! வரும் இவள் நம்மைப்பேணும் அம்மையாகும். பெருமைமிக்க இவ்வடிவத்தை நம்பால் வேண்டிப் பெற்றனள்" என்று கூறியருளி, அருகில் வந்த அவரை நோக்கி, அம்மா என்று இதுவரை அழைக்காத பிறப்பில்லாத பெருந்தகை "அம்மையே" என்று இந்த உலகமெலாம் உய்ய அழைத்தருளினார்.

அங்கணன் "அம்மா" என்று அழைத்தலும், அம்மையார் "அப்பா" என்று பங்கயப் பாத மலரின் மீது பணிந்தார். அவரை நோக்கி அருட்ஜோதியண்ணல், "அம்மா! இங்கு நம்பால் வேண்டுவது யாது? கேள்" என்று அருள்புரிந்தார். அம்மையார் அடி பணிந்து கேட்கின்றார். "அறவாழி யந்தணரே! உம்மிடம் ஒருபோதும் நீங்காத இன்ப அன்பு வேண்டும்; பிறவாமை வேண்டும்; ஒருக்கால் பிறப்புண்டேல் உம்மை ஒருபோதும் மறவாமை வேண்டும்; நீர் ஆனந்தத் தாண்டவஞ் செய்யும்போது உமது திருவடியின்கீழ் மகிழ்ந்து பாடிக்கொண்டு நான் இருக்க வேண்டும்" என்று வேண்டினார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

இறைவர் அவ்வரங்களை நல்கி, "தென்திசையில் தொண்டை வளநாட்டிலே பழனத்துடன் கூடிய பழையனூர் அருகில் திரு

ஆலங்காட்டில் நமது திருநடனத்தினைக் கண்டு இன்புற்று எப்போதும் நம்மைப் பாடிக்கொண்டிரு" என்று பரம கருணை புரிந்தார். அவ்வாறு அருள்பெற்ற அம்மையார் விடையவர்பால் விடைகொண்டு, வணங்கிப் புறப்பட்டுத் திருவாலங்காட்டிற்கு அருகில் வந்து அப்பதியை தாளால் மிதிக்க அஞ்சித் தலையினால் நடந்து சார்ந்தார்.

திருவாலங்காட்டில் எம்பிரான் அண்டங்களில் பொருந்தத் திருவடியைத் தூக்கி ஊர்த்துவ தாண்டவஞ் செய்வதைத் தரிசித்து மூத்த திருப்பதிகங்கள் இரண்டு பாடியருளினார்.

கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள்நீண்டு பரடுயர் நீள்கணைக் காலோர்பெண்பேய்
தங்கி யலறி யுலறுகாட்டில் தாழ்சடை எட்டுத் திசையும்வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும்எங்கள் அப்பன் இடந்திரு ஆலங்காடே

சூடு மதியஞ் சடைமே லுடையார் சுழல்வார் திருநட்டம்
ஆடு மரவ மரையில் ஆர்த்த அடிகள் அருளாலே
காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடி யாடப் பாவம் நாசமே.

அம்மையார் ஆனந்தத் திருவடியின்கீழ் அருளின்ப வடிவமாக விளங்குவாராயினார்.

விளக்கம்

தோற்ற மில்பரஞ் சோதிதன் வாய்திறந்
தாற்ற அன்புடன் அம்மையே என்னுமோர்
பேற்றை முன்பெறப் பேயுரு வெய்திய
சாற்ற ரும்புகழ்த் தாயை வணங்குவாம்.

அம்மையார்

தேவர்கள் மனிதர்கள் முதலிய எல்லோருக்கும் பிறப்பு, இறப்பு உண்டு. சிவபெருமான் ஒருவரே பிறப்பும், இறப்பும் இல்லாதவர். "அஜம் த்ருவம்" "அஜாத இத்யேவம்" என்ற சுருதி வாக்கியங் களாலும், ''பிறவா யாக்கைப் பெரியோன்'' என்ற சிலப்பதி காரத்தாலும், "பிறப்பிலி இறப்பிலி பிறங்கலரசன் றன்மகளார்" என்ற வில்லிபுத்தூரரது வாக்கினாலும் அறிக.

இத்தகைய சிவத்திற்குத் தாயும் தந்தையும் இலர். அவருடைய திருவாக்கினால் அம்மையே என்று அழைக்கப்பெற்ற அரும் பெருஞ் சிறப்புடைய தாய் காரைக்காலம்மையார் ஒருவரேயாகும்.

அதனால், சேக்கிழார் புனிதவதியம்மையார் புராணம் என்று கூறாமல் காரைக்காலம்மையார் புராணம் என்றே கூறுவாரா யினார்.

புனிதவதி

அம்மையாருக்குக் தாய் தந்தையார் சூட்டிய திருப்பெயர் புனிதவதி என்பது. பஞ்சாக்கரம் மூன்று வகைப்படும். சிவ பஞ்சாக்கரம், குருபஞ்சாக்கரம், பக்த பஞ்சாக்கரம் என்பனவாகும். சிவ பஞ்சாக்கரம் தூலம் சூக்குமம் காரணம் மகா காரணம் முத்தி என ஐவகைப்படும். குரு பஞ்சாக்கரம்; ஞான சம்பந்த; நாவுக்கரசு; நம்பியாரூர; மணிவாசக; அருணகிரி என ஐவகைப்படும்; இனி, பக்த பஞ்சாக்கரம் புனிதவதி என்ற திருநாமம் என உணர்க. இம்மந்திரத்தை பரமதத்தன் இடையறாது கூறியும், தனது புதல்விக்குச் சூட்டியும் நலம் பெற்றான்.

புலமை

அம்மையார் சிறந்த தமிழ்ப்புலமை நிரம்பப் பெற்றவர்; சுந்தரமூர்த்தி நாயனார் போற்றிய அறுபான் மும்மை நாயன் மார்களுள் பெண்பாலார் மூவர்; இம் மூவருக்குள் இயல் இசை என்ற இரு தமிழிலும் வல்லவர் அம்மையாராகும். இவர்கள் அருளிச் செய்த நூல்கள் நான்கு; 1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 2. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்; 3. அற்புதத் திருவந்தாதி; 4. திரு இரட்டை மணிமாலை, முதன்முதலாகத் தேவாரப் பதிகம் பாடியருளிய பெருமை அம்மையாருக்கே உரியது; திருஞான சம்பந்தர் "தோடுடைய செவியன்" என்ற தேவாரப் பதிகம் கூறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர், அம்மையார் "கொங்கை திரங்கி" என்ற திருப்பதிகம் தேவாரத்திற்குத் தோற்றுவாய்போல் பாடியருளினார்கள். அதனால், அதற்கு மூத்த திருப்பதிகம் என்ற பேருண்டாயிற்று. அற்புதத் திருவந்தாதியின் வாக்கு மிகவும் வளமையானது;

யானே தவமுடையேன் என்னெஞ்சே நன்னெஞ்சம்;
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன் - யானேயக்
கைம்மா வுரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக் காளாயி னேன்.

என்ற பாடல் எத்துணை இனிமையாக விளங்குகின்றது என்பதை உய்த்துணர்க.

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே;
அறிவா யறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே; விரிசுடர்பா ராகாயம்
அப்பொருளுந் தானே அவன்.

இது ஆழ்ந்த நுண்ணிய கருத்துக்களை உடையது.

எளிய திதுவன்றே! ஏழைகாள்! யாதும்
அளியீர்! அறிவிலீர்! ஆவா! - ஒளிகொள்மிடற்
றெந்தையராப் பூண்டுழலும் எம்மானை உள்நினைந்த
சிந்தையராய் வாழுந் திறம்

உலகினரை அழைத்து அன்பினால் இன்னுரை கூறி உபதேசிக்கின்ற பாடல் இது.

திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும்
பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும் - ஒருநாள்
இதுமதியென் றொன்றாக இன்றளவுந் தேரா
ததுமதியொன் றில்லா அரா.

இப்பாடல் நகைச்சுவை நிரம்பியது. பாம்புக்குஞ் சந்திரனுக்கும் பகை. சந்திரனைப் பாம்பு மறைக்க முயலும். இறைவர் திங்களையும், பொங்கராவையும் அணிந்திருக்கின்றனர். அவர் அணிந்துள்ள அரவு, திருமார்பில் உள்ள பன்றிக் கொம்பினைப் பார்த்து இதுவே பிறைமதி என்றும் எண்ணும்; மறுநாள் திருமுடியில் உள்ள சந்திரனைப் பார்த்து இதுவே மதியென்று கருதும். மீண்டுந் துணிவு பெறாது, பன்றிக்கொம்பினை நோக்கி மருளும். இவ்வாறே, மாறிமாறி நோக்கி அறிவின்மையால் இதுவே பிறைமதியென்று இன்று வரை நிச்சயிக்கவில்லையென்று கூறும் நயம் எத்துணை நகைச்சுவையைத் தருகின்றது என்பதை அன்பர்கள் அறிக.

காலனையும் வென்றோம் கடுநரகங் கைகழன்றோம்
மேலை யிருவினையும் வேரறுத்தோம் - கோல
அரணார் அவிழ்ந்தழிய வெந்தீயம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து,

இதனால், அம்மையாருடைய பெருமை புலனாகின்றது.

அம்மையாருடைய சிவபக்தி

அம்மையார் குழவிப்பருவத்திலிருந்தே சிவமூர்த்தியிடம் அளவிறந்த காதல் கொண்டு, மொழிபயிலுங் காலத்திலேயே

சிவநாமத்தைக் கூறி அன்பு செய்தார். "பொருவிடையார் திருவடிக்கீழ் ஓங்கிய அன்புறு காதல் ஒழிவின்றி மிகப் பெருக" என்பதனால் அறிக.

வணிகர்பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளியபின்
அணிகிளர்மெல் லடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே
பணியணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காதல் ததும்பவரு மொழிபயின்றார்.

- பெரியபுராணம்

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரு நெறிபணியா ரேனுஞ் - சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு. *- அற்புதத்திருவந்தாதி*

என்று அவர் கூறும் திருப்பாடல் கல்லையுங் கரைவிக்கும்.

இறைவன்பால் இவர் கேட்ட வரங்கள் நான்கு.

1. இறவாத இன்ப அன்பு; 2. பிறவாமை; 3. என்றும் மறவாமை; 4. ஆடுந் திருவடிக்கீழ் மகிழ்ந்து பாடியிருத்தல்.

திருக்கயிலைமலையையும், திருவாலங்காட்டையும் தலையினால் நடந்து சென்றதனால் அவருடைய அன்பு புலனாகும்.

பரமதத்தன்

அம்மையாரை மனைவியாகப் பெறுவதற்குத் தவஞ் செய்தவன் பரமதத்தன். ஆனால், அம்மையாருடைய அன்பு நெறியை அறியாது நின்றான்.

இவன் ஒரு கனியையுண்டு, அதன் இனிமையில் திருப்தியுறாது மறு கனியையும் இடுமாறு கேட்டான். அதனால், அவனை உணவு நசை மிக்கவன் என்றும், தகுதியற்றவன் என்றும் கூறலாகாது; சிலர் பரமதத்தனை இழிந்தவன் என்றும், தன்னலமுடையவன் என்றும் கூறுவர். இது பிழையாகும். அம்மையார் பெருமையை உலகுக்கு உணர்த்தும் பொருட்டு இறைவனுடைய திருவருள், சுவையுள்ள கனி மனைவியாருக்கு இருக்கட்டும் என்று கருதாது

மறு கனியை இடுக என்று கூறும்படி அவனைத் தூண்டியது என்க.

அம்மையாருடைய அருட்டிறத்தை அறிந்தவுடன் அவரைத் தெய்வமாகக் கருதினான். உடன் உறைய அஞ்சியகன்றான். அம்மையாரையே கருதி அன்பு செய்தான். தன் புதல்விக்கு "புனிதவதி" என்று அம்மையார் திருநாமத்தைச் சூட்டினான். அம்மையார் வந்திருக்கின்றார் என்பதை அறிந்து, அவர் அடிமலர் மீது வீழ்ந்து வணங்கினான். உறவினர், "மனைவியை ஏன் வணங்கினாய்?" என்று வினாவியதற்கு, பரமதத்தன் "இவர் மனைவியன்று" என்று கூறுவதும் பாவம் என்று கருதி "மானுடம் இவர்தாம் அல்லர்" என்று கூறிய தகைமையை யுன்னுக.

மற்றவர் தம்மை நோக்கி மானுடம் இவர்தா மல்லர்
நற்பெருந் தெய்வ மாதல் நானறிந் தகன்ற பின்பு
பெற்றஇம் மகவு தன்னைப் பேரிட்டேன் ஆத லாலே
பொற்பதம் பணிந்தேன்; நீரும் போற்றுதல் செய்மின்; என்றான்.

ஆதலினால், பரமதத்தன் அம்மையாருடைய சிவப்பண்புக்கேற்ற பெரும்பண்புக்குரியன் ஆகானாயினும், நற்பண்புடையவனே என்று அறிக.

கனி

பரமதத்தனைக் கண்டு பயன் பெற வந்தவர்கள் இரண்டு மாங்கனியைத் தந்தார்கள். அவற்றை உணவோடு சேர்த்து உண்ணும் பொருட்டு ஏவலன் மூலம் வீட்டிற்கு அனுப்பினான் பரமதத்தன்; அம்மையார் கணவனுக்கு ஒன்று தனக்கு ஒன்று என்று கருதி, வந்த அடியாருக்கு, தன் பங்குக் கனியைப் படைத்தார். பரமதத்தன் ஒரு கனியை உண்டு மறுகனியையுங் கேட்டான். அடியார்க்குப் படைத்து விட்டேன் என்றால் பரமதத்தன் "சரி" என்று அமைந்திருப்பான். ஆனால், அம்மையார் "கணவனார் அனுப்பிய கனிகளை அவர் அனுமதியின்றிப் படைத்து விட் டோமே" என்று கவன்று உட்சென்று உள்ளம் உருகி இறைவனை வேண்டி நின்றார்.

அம்மையார் அடியார்க்குத் தந்தது மதுரக்கனி; இறைவன் அம்மையார்க்குத் தந்தது 'அதிமதுரக்கனி'. தென்னைக்குத் தண்ணீரை விட்டால், அது தலையால் சுமந்து இளநீரைத் தருகின்றது என்றால், இறைவன் தருவதில் என்ன வியப்பு?

அதிமதுரக் கனியை உண்ட பரமதத்தன் வியப்புற்று, "பெற்றது வேறு எங்கு?" என்று கேட்டான். "வேறு எங்கே" என்று நன் மகளிரைக் கேட்கக்கூடாது. அம்மையார் திருவருளை வெளியிடக் கூடாது என்று அஞ்சி, பொய்மை புகல்வதும் கூடாது என்று துணிந்து உண்மையை உரைத்தனர். அதை நம்பாத அவன் "இன்னொரு கனி கொண்டு வா" என்றான். இது உண்பதற்கு அன்று; சாட்சிக்கு. அதனால், அக்கனி பரமதத்தன் கைப்பட்ட வுடன் மறைந்தது. அக்கனியால் பரமதத்தன் உள்ளங் கனிந்தது. அம்மையார் வரலாறுக்கு இக்கனியே உயிர்நாடியாக நின்றது.

கவி நயம்

"தளிரடிமென் னகைமயிலைத் தாதவிழ்தார் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக் கலியாணஞ் செய்தார்கள்"

அம்மை மயிலுக்கும், பரமதத்தன் காளைக்கும் உவமேய மாக்கப் பட்டனர். மயிலை காளையுடன் புணர்த்துவது மரபு ஆகாதன்றோ? எனின்; மயில் தன் இறகுகளை உதிர்க்கும் இயல் புடையது. அம்மையார் தன் உடல் தசையனைத்தையும் உதிர்த்து விட்டார். ஆதலினால், அம்மையாருக்கு மயிலை உவமையாக்கினார்; காளைமாடு அக்கரை பச்சையாகத் தெரிந்தால் மேயும். புலத்தினின்றுந் தாண்டிப் போகும் இயல்புடையது. பரமதத்தன் அம்மையாரை விடுத்து வேறுபுறஞ் சென்று வேறு மனைவியை மணந்து வாழ்ந்தான்; ஆதலினால், அவனுக்குக் காளைமாடு உவமையாகியது.

ஒரு திருமணத்தை நண்பர் இயல்பாகவே புகழ்வார்கள். நண்பர்கட்குக் குற்றந் தோன்றாது. குணமே தோன்றும்; தாயத்தாருக்குக் குணமே தோன்றாது. குற்றத்தையே கூர்ந்து பார்ப் பார்கள். அவ்வாறு குற்றத்தையே கூர்ந்து பார்க்கும் சுற்றத்தாருங்கூட இக்கலியாணத்தைப் பாராட்டிப் புகழ்ந்தார்கள் என்று கூறும் நயம் சிந்தனைக்குரியது.

அறியவேண்டிய அறநெறிகள்

1. நன்மக்களைப் பெறுவதற்குப் பலகாலும் நற்றவம் புரிய வேண்டும். தவஞ்செய்து பெற்ற மக்களால் தாமும் உய்வர்; உலகமும் உய்யும்.

"................. தன தத்தனார் தவத்தால்
.... புனிதவதியார் பிறந்தார்"

2. உலகத்திலே நாம் எத்தொழிலைச் செய்தாலும் சிவ சிந்தையுடன் இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தோர் சிவனருள் பெறுவர். இதனை அம்மையார் ஆடும்போதெல்லாம் அரனாமம் நவின்றனர் என்பதனால் அறிக.

3. பெண்கள் மங்கைப்பருவம் அடைந்தபின் வீட்டுக்குள் இருக்க வேண்டும். கல்விபயிலும் காரணங்கொண்டு யாண்டும் திரியக்கூடாது. அதனால் வரும் கேடுகள் பல; கல்வியினும் ஒழுக்கம் உயர்ந்தது.

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை" - முதுமொழிக்காஞ்சி

"இல்லிகவாப் பருவத்தில்" என்று சேக்கிழாரடிகள் அதனை இனிது கூறுமாறு காண்க.

4. பெண் பேசுகின்றவர்கள் அறிஞர்களாக இருக்க வேண்டும். அறிவில்லாதவர் பேசி முடித்த திருமணம் இறுதிவரை இடர்ப்படும்.

"வந்தமூ தறிவோர்கள் மணங்குறித்த மனைபுகுந்து"

என்ற திருவாக்கால் இதனை உணர்க.

5. திருமணம் பண்டைக்காலத்தில் பெண் வீட்டிலேதான் நிகழ்ந்தது. அதுதான் முறை. சீதை திருமணம், திரௌபதி திருமணம், தமயந்தி திருமணம் முதலிய யாவும் பெண் வீட்டிலேயே நிகழ்ந்தன என்பதையும் அறிக.

அம்மையார் திருமணம் அளவிறந்த சிறப்புடன் காரைக் காலிலேயே நிகழ்ந்தது என்று வரலாறு கூறுவதனால் உணர்க. அத்திருமணமும் அந்தந்த மரபினுக்கு ஏற்ற முறையிலேயே நிகழவேண்டும்.

6. தனதத்தனார், மகளுக்குத் திருமணம் ஆனவுடன், மகளும் மருமகனும் இல்லறம் நடாத்தி இன்புற்று வாழத் தனி மாளிகை புதுக்கித் தந்தார் என்பதனால் மாமனார் வீட்டில் மருமகன் இருந்து வாழ்வது கூடாது என்பது நன்கு புலனாகின்றது.

7. பெண்கள் மனையறம் புரிந்த வண்ணமாகவே சிவபக்தி செய்ய வேண்டும் என்பதும், தான தருமங்களையும் நிரம்பச் செய்தல் அவசியம் என்பதும், அம்மையார் புரிந்த மாண்புமிக்க மனையறத்தினால் அறியத்தக்கன.

8. சிவனடியார்க்கு அமுது படைப்பதினுஞ் சிறந்த பேறு பதினாலு உலகங்களிலும் இல்லை.

அகரமோ ராறு கோடி அருந்தவம் நூறு கோடி
சிகரமீ ராறு கோடி செய்தநற் பயன்க ளெல்லாம்
மகரகே தனனை வென்ற மாதேவ னடியார்க் கன்னம்
பகரவே கனவு கண்டால் பயன்இதற் கொவ்வா தன்றே.

என்ற திருவாக்கையும்,

.... "விடையவன்றன் அடியாரே
பெறலரிய விருந்தானால் பேறிதன்மே லில்லையெனும்
அறிவினரா யவரமுது செய்வதனுக் காதரிப்பார்"

என்ற திருவாக்கையும் உன்னுக.

9. உணவு படைக்கின்ற போது கறிகளை முறையாகப் படைக்க வேண்டும்.

"இன்னடிசில் கறிகளுடன் எய்துமுறை யிட்டதற்பின்"

என்றதனால் அறிக.

10. கணவன் மனைவியைப் பிரிந்து சென்றாலும், சுற்றத்தினர் வலிய அழைத்துக்கொண்டு சென்று மனைவியைக் கணவன்பால் சேர்க்கவேண்டும்.

இந்த நெறி அம்மையாரைச் சுற்றத்தார் பல்லக்கிலேற்றிப் பரமதத்தன்பால் கொண்டேகியதனால் காண்க.

11. இறைவன் திருவருளை நாடி நின்றவர்கள் உலகவர் கூறும் பழியுரைகளைப் பொருள்படுத்தமாட்டார்கள்.

வானமும் மண்ணும் எல்லாம் வணங்கும் பேய் வடிவங் கொண்டு நின்றார் அம்மையார். அத்திருவுருவின் பெருமை யறியாத உலக மாக்கள் அஞ்சியோடி ஏதேதோ உரைத்தார்கள். அது கேட்ட அம்மையார்,

"அண்டர்நா யகனார் என்னை அறிவரேல் அறியா வாய்மை
எண்டிசை மாக்க ளுக்கியான் எவ்வுரு வாயென்? என்பார்"

12. சத்தினிபாதம் நிகழ்ந்தலான்றிச் சிவாத்துவிதம் நிகழாது. திருவருள் துணைசெய்தால்தான் சிவத்தைச் சார முடியும். அர்ச்சுனருக்கு அம்பிகை கூறியபின், இறைவர் அருள் செய்ய வந்தார். "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்பதையும் ஓர்க.

அம்மையார் தலையினால் நடந்து கயிலை சென்றார். இறைவனும், இறைவியும் ஒருங்கே எழுந்தருளியிருந்தனர். ஆனால், அம்பிகையின் அருள் நோக்கம் அம்மைக்கு எய்தியது.

"சிலைநுதல் இமய வல்லி திருக்கணோக் குற்ற தன்றே"

அம்மையார் பெருமை

அம்மையப்பர் இல்லாதவரும், உலகங்கட்கெல்லாம் அம்மையப் பருமாகிய அரனார், "அம்மையே" என்று இனிது அழைக்கப் பெற்று, அவருடைய திருநடனத் திருவடிக் கீழ் என்றும் இருக்கப் பெற்ற அம்மையாருடைய பெருமையை அளக்கவல்லார் அகில உலகங்களிலும் இல்லை. சேக்கிழாரடிகள் அவ்வாறு கூறுகின்றார்.

மடுத்தபுனல் வேணியினார் அம்மையென மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றாரைக் குலவியதாண் டவத்திலவர்
எடுத்தருளுஞ் சேவடிக்கீழ் என்றுமிருக் கின்றாரை
அடுத்தபெருஞ் சீர்பரவல் ஆரளவா யினதம்மா.

பெருமையை அம்மையார் விரும்பவில்லை. பெருமை தானே வந்து தான் சிறப்படையும் பொருட்டு அம்மையாரைச் சார்ந்தது என்ற அழகு உள்ளத்தை உருக்குகின்றது.

அம்மை அடிமலர் வாழ்க.

அப்பூதிநாயனார் புராணம்

"ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்"

சோழவள நாட்டிலே, காவிரி நதிக்கரையிலே, திங்களைப் போல் குளிர்ந்த சோலைகளுக்கு இடையில் விளங்குவது திங்களூர். அத்திருப்பதியில் அந்தணர் மரபில் அவதரித்தவர் அப்பூதியடிகள்; இவர் அம்பலவாணர் திருவடியை மறவாதவர்; புகழ் மிகுந்தவர்; முடிவில்லாத தவத்தை உடையவர்; அடியார்களை ஆராத காதலுடன் பணிந்து உபசரிப்பவர். களவு பொய், காமம், கோபம் முதலிய குற்றங்களைக் கடிந்தவர்; இல்லறமாகிய நல்லறத்தில் வாழ்பவர்.

திருநாவுக்கரசு நாயனாரது பெருமையையும், அவர் கல் மிதப்பில் கடலைக் கடந்ததையும், அவருக்கு அரனார் அருள் புரிந்த திருவருளின் திறத்தையுங் கேள்விப்பட்டார். வாகீசப் பெருந்தகையைக் காணாமல் இருந்துங் கேட்ட மாத்திரத்தில் அவருடைய அடிமலரில் அளவிறந்த அன்பு பூண்டார். அவரையே குருமூர்த்தமாக எண்ணி அவரது திருவடியைத் தியானித்து, அவரது திருநாமத்தை எப்போதும் உச்சரிப்பாராயினார். வீட்டிலுள்ள அளக்குங் கருவிகள், நிறுக்குங் கருவிகள், குழந்தைகள், பசுக்கள், எருமைகள் முதலியவைகட்கெல்லாம் திருநாவுக்கரசு நாயனாருடைய திருப்பெயரைச் சூட்டி அழைப்பார்.

களவுபொய் காமங் கோப முதலிய குற்றங் காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினார் மனைப்பா லுள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்று
உளவெலாம் அரசின் நாமம் சாற்றுமவ் வொழுக லாற்றார்.

திருமடங்கள், தண்ணீர்ப்பந்தல், பூங்காவனம் முதலியவை களை அமைத்து, அவைகளில் திருநாவுக்கரசு நாயனார் திருநாமத்தை எழுதிவைத்தார். இவ்வாறு, சிறந்த அன்புநெறியில் வாழ்ந்தார்.

திருத்தலங்கள் தோறும் சென்று தமிழ்ப்பதிகங்களைப் பாடி இறைவரைச் சேவித்துக்கொண்டு வந்த திருநாவுக்கரசு நாயனார், திருப்பழனம் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளிய சிவமூர்த்தியை

வணங்கி, வேறு பல தலங்களை வணங்கும் பொருட்டு, திங்களூர் அருகில் உள்ள வழியே வருவாராயினார். அளவில்லாத மக்கள் போவதும் வருவதுமாயுள்ள அவ்வழிக்கரையில், அருளாளர்களது திருவுள்ளம் போல் குளிர்ந்த தண்ணீர்ப் பந்தரை அடைந்தார். அது வெப்பத்தை அகற்றக் கூடியதாய் நீர்நிலைபோல் குளிர்ச்சி உடையதாய் விசாலமாக நிழலைத் தந்து கொண்டிருந்தது. இளந் தென்றல் காற்று வீசும் அப் பந்தரையும், அமுதம் போன்ற தண்ணீரையும் பார்த்தருளிய வாகீசர் வியப்புடன் அதனை உற்று நோக்கினார். அதில் 'திருநாவுக்கரசு நாயனார் தண்ணீர்ப் பந்தல்' என்று எல்லாப் பக்கங்களிலும் எழுதியிருக்கக் கண்டார்.

அதிசயமுற்ற அப்பரடிகள், "இப் பந்தரை இப்பெயர் இட்டு இங்கு அமைத்தவர் யாவர்?" என்று வினாவினார். அங்கிருந்த வர்கள், "ஐயா! இது அப்பூதி நாயனார் அமைத்தது; அவர், சாலை, குளம், சோலை முதலிய எல்லாவற்றையும் திருநாவுக்கரசு நாயனார் திருப்பெயராலேயே அமைத்துள்ளார்" என்றார்கள். "இதற்கு என்ன கருத்து" என்று ஐயுற்ற அப்பரடிகள், "அவர் எங்கிருக் கின்றார்?" என்று வினாவினார்.

"பெருமானே! அப்பூதியார் என்ற அந்தணர் இதோ தெரிகின்ற திங்களூர்; இப்பொழுதுதான் வீட்டிற்குச் சென்றார்; அவர் வீடு நெடுந் தொலைவில் இல்லை; அருகிலேயே இருக்கின்றது" என்றார்கள்.

ஆளுடைய அரசு அவ்விடத்தினின்றும் புறப்பட்டு அப்பூதி நாயனாருடைய இல்லத்திற்குச் சென்றார். அடியவர் ஒருவர் வருகின்றார் என்பதறிந்த அப்பூதியடிகள் உள்ளிருந்து வெளியே வந்து வாகீசருடைய அடிமலர் மீது வணங்கினார். அவர் பணியு முன் அப்பர் அவரைப் பணிந்தார்.

அப்பூதி நாயனார், "எம்மை யாளவந்த எந்தையே! அடியேன் வரம்பில்லாத தவஞ் செய்திருக்கின்றேன் போலும்? கருணை பொழிகின்ற திருவுடைய தாங்கள் இங்கு எழுந்தருளப் பெற்றேன். அடியேன் என் செய்ய வேண்டும்?" என்று மகிழ்ந்து வினாவினார். திருநாவுக்கரசு நாயனார், "அன்பரே! அடியேன் திருப்பழனமேவிய தேவ தேவரை வணங்கி வருகின்றேன்; வழியில் நீர் வைத்த வளமை மிகுந்த தண்ணீர்ப் பந்தரைக் கண்டேன். நீர் செய்யும் பல அறங்களின் சிறப்புக்களைப் பற்றிக் கேட்டேன். உம்மைக் கண்டு மகிழ நினைத்து வந்தேன்; தாங்கள் சிவனடியார்கட்கு என்று அமைத்த தண்ணீர்ப் பந்தரில், தங்கள் பெயரை எழுதாமல், வேறு

ஒரு பெயரை எழுதிய காரணம் யாது?" என்று கேட்டருளினார்.

அப்பூதி நாயனார் அதனைக் கேட்டுச் சிந்தை கலங்கினார்; 'நீர் நன் மொழிகளைச் சொன்னீரில்லை; நாணமில்லாத சமணர்களுடன் கூடிய பல்லவ மன்னன் செய்த கொடுஞ்செயல்களை எல்லாம் திருத்தொண்டின் வலிமையினால் வென்ற வித்தகருடைய திருப்பெயரோ "வேறு ஒரு பேர்" என்றீர். நம்மையுடைய நாதன் திருவடித் தொண்டினாலே இம்மையிலும் உய்தி பெறலாமென்று எம்போன்ற அறிவிலிகளும் தெளிந்து உய்யும்படி செம்மை புரியுந் திருநாவுக்கரசு நாயனாருடைய திருப்பெயரை அடியேன் எழுதியிருக்க, அதனைக் கண்டு இவ்வாறு வெம்மையான சொல்லைச் சொன்னீரே! அலைகள் பொங்குகின்ற கடலில் கருங்கல்லால் கட்டி அமணர் ஆழ்த்தியபோது, அக்கல்லே தெப்பமாக மிதக்கும்படி நமச்சிவாயத் திருப்பதிகம் பாடி மிதந்து கரையேறி, எங்களை எல்லாம் பவக்கடலினின்றும் கரையேற்றிய எம்பிரானார் திருநாவுக்கரசரது பெருமையை சிவனுடைய புவனத்தில் அறியாதார் ஒருவருமிலார்; அங்ஙனமிருக்க நீர் அறியாதவரைப்போல் பேசினீர். மங்கலமான சிவவேடம் புனைந்திருக்கின்ற நீர் இவ்வாறு மொழிந்தீரே. நீர் எங்கே இருக்கின்றீர்? நீர் யார்?" என்று வெகுண்டு வினாவினார்.

திருநாவுக்கரசர் அப்பூதியாருடைய அன்பின் பெருமையை அறிந்து மீண்டும் உரைசெய்வார். "அன்பரே! அமண் சமயத்தினின்று கரையேறும்பொருட்டுச் சூலை நோயினால் ஆட்கொள்ள அன்பு நெறிக்கு வந்து உய்வு பெற்றவனும் உயர்ந்த உணர்வில்லாதவனுமாகிய சிறியேன் அடியேன் தான்" என்றார்.

அரசறிய உரைசெய்ய அப்பூதி யடிகள்தாம்
கரகமல மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம் உரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தம் சரணகம லம்பூண்டார்.

அதனைக் கேட்ட அப்பூதி நாயனார் அளவற்ற ஆனந்தமடைந்தார். பாலைவனத்தில் சென்று விடாய்கொண்ட ஒருவனுக்கு வான கங்கை நீர் வலிந்து உதவியது போல் மகிழ்ந்தார். கரமலரைக் கூப்பினார்; கண்ணில் அருவிபோல் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. சொற்கள் குழறின; உடம்பில் உரோமங்கள் சிலிர்த்தன; மண்மிசை வீழ்ந்து அப்பர் அடிமலரை முடிமீது சூடிக்கொண்டார். வாகீசர் அவரை எதிர் வணங்கி அன்புடன் எடுத்து அருளினார். பெருமிடி

யுற்றவனுக்கு அருநிதி கிடைத்ததுபோல் மகிழ்ந்த அப்பூதியார் மகிழ்ச்சியின் எல்லையை அடைந்தார். ஆடினார்; பாடினார்; வலம் வந்தார். பெரு மகிழ்ச்சியுற்றதனால் முன் செய்யத்தக்கது இது என்று அறியாதவராகி, வீட்டிற்குள் சென்று, மனைவி மக்கள் மற்றைய உறவினர்களை நோக்கி, "நம்மையாளுடைய தெய்வம் வந்திருக் கின்றது; சிவஞான தீபம் வந்திருக்கின்றது; அருட்கடல் வந்திருக் கின்றது; குணக் குன்றம் வந்திருக்கின்றது; ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் வந்திருக்கின்றார். வந்து வணங்குங்கள்" என்று உணர்ச்சி ததும்ப உவகையுடன் உரைத்தார்.

அத்தனைப் பேரும் ஓடி அப்பரடிகள் அடிமலர்மீது வீழ்ந்து வணங்கினார்கள். அப்பூதியார், அரசைத் திருமனைக்குள் அழைத்துக் கொண்டுபோய், அவரது திருவடியை நீராட்டி, அப்புனிதப் புனலை எல்லோர் சென்னியிலுந் தெளித்துத் தாமும் தெளித்துக் கொண்டார். ஆசனமீது எழுந்தருளப் புரிந்து நறுமலர்களினால் அர்ச்சித்துத் தூபதீபங் காட்டிப் பூசனை புரிந்தார். திருநீற்று மடலை அவருக்கு உபசாரமாக ஏந்தினார். "எங்களை ஆளவந்த எந்தையே! அமுது செய்தருள வேண்டும்" என்று வேண்டினார். அப்பரடிகள் அதற்கு இசைந்தருளினார்.

திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்ய இசைந்தவுடனே அந்தணர் பிரானார் அகமிக மகிழ்ந்து, மனைவியாரை நோக்கி, "நம்பால் எய்திய பேற்றின் அருமையென்னே! கறைமிடற்றண்ணல் கருணையினால் இப் பெரும்பேறு கிடைத்தது. இதனினும் உயர்ந்த பேறு யாதுளது? நாம் உய்வு பெற்றோம்" என்று கூறித் திருவமுதை ஆயத்தம் புரியலானார். தூய்மை மிக்க கறிகளை அறுசுவையாக அமைத்து நால்வகை யுண்டிகளையுஞ் செய்தார். தமது மூத்த மகனாகிய மூத்த திருநாவுக்கரசை நோக்கி, "மகனே! உயர்ந்த வாழைக் குருத்தை அரிந்து கொணர்வாய்" என்று பணித்தார்.

நற்குணம் அமைந்த தாய் தந்தையர் ஏவியவுடன், மூத்த திருநாவுக்கரசு தோட்டத்திற்குள் சென்று பெரிய வாழையின் வளமையான குருத்தினை வாளால் அரியும்போது ஒரு கொடிய விடநாகந் தீண்டியது. பல் வழியே தீய விடத்தை உமிழ்ந்து கையைச்சுற்றிக் கொண்ட பாந்தளை உதறித் தள்ளி, விட வேகத்தினால் மாய்ந்து விழாமுன் வேகமாய் ஓடி 'கொய்த இக் குருத்தை ஓடிக் கொடுப்பேன்' என்று ஓடிவந்தான். "அருந்தவப் பெரியார்அமுது செய்வதற்குத் தடையாக அரவங் கடித்த செய்தியை யார்க்கும் அறிவிக்க மாட்டேன்" என்று அவ்வறிவுள்ள

திருமகன் திருந்தி சிந்தையில் எண்ணி, இல்லத்திற்குள் நுழைந்தான்.

தீயைப் போன்று காந்துகின்ற கொடிய விடம் ஏழாம் வேகத்தை எய்தியது. பற்களும், கண்களும், உடம்புங் கருகியது; உரை குழறியது; தடுமாறிக்கொண்டே தாயிடம் குருத்தை வைத்து வீழ்ந்தான். உயிர் பிரிந்தது. தாயாருந் தந்தையாருங் கண்டு, உதிரம் வடிந்த குறியைக் கண்டு விடத்தினால் மாய்ந்தான் என்று அறிந்தார்கள். இவனுக்காக இரங்கி அழுதால் அடிகளார் அமுது செய்யாது அகல்வார்; அடிகளுக்கு அமுது செய்விப்பதனிலுஞ் சிறந்த கடப்பாடு இல்லை. ஆதலின், மகன் மாய்ந்தது குறித்து வருந்துதல் கூடாது என்று எண்ணித் துணிந்தார்கள்.

கலக்கமின்றி, பெறுதற்கரிய புதல்வனைப் பாயினால் மூடி திருமனைப் பின்புறத்தில் ஓரிடத்தில் மறைத்து வைத்தார்கள். மலர்ந்த முகத்துடன் அண்ணல் அமுது செய்யக் காலந் தாழ்க்கின்றதென்று கருதி, அமுது, கறிகள் முதலியவற்றை ஒருபுறந் தொகுத்து வைத்து, வாகீசப் பெருந்தகையார் முன் வந்து வணங்கி, "அண்ணலே! அமுது செய்து எமது குடிமுழுவதும் உய்யக் கொள்ளும்" என்று வேண்டி நின்றனர்.

அருந்தவ முனிவர் எழுந்து கை, கால்களைத் தூய்மை செய்து கொண்டு, வேறு ஓர் ஆசனத்தில் அமர்ந்து, திருநீறு புனைந்து, அப்பூதியாருக்கும் அவர் திருமனைவியாருக்கும் வெண்ணீறு நல்கினார். மக்களுக்குத் திருநீறு வழங்கத் தொடங்கியபோது மூத்த மகனைக் காணாதவராகி, அப்பூதியாரை நோக்கி, "அன்பரே! மூத்த புதல்வன் எங்கே? அவனையும் அழையும்; அவனுக்கும் அருள் நீறு சாத்த வேண்டும்" என்று அருளிச் செய்தார். அப்பூதியார், "அருட் குருவே! அவன் இப்போது இங்கு உதவான்" என்றார்.

அதுகேட்ட அப்பரடிகளுக்கு அரனார் அருளால் திருந்திய சிந்தையில் ஒரு தடுமாற்றம் நேர்ந்தது. "இந்த வார்த்தையைக் கேட்டு என்னுள்ளந் தாங்காது; ஏதோ நிகழ்ந்திருக்கின்றது" என்று கருதி, "அப்பூதியாரே! உண்மையை விரித்துரைப்பீர்" என்று கேட்டருளினார். அப்பூதியார் கேட்டு அலமந்தனர். "அந்தோ! அடிகள் அமுது செய்யும் பேறு வாய்க்காதோ? யாது நிகழுமோ? உண்மையை விரித்துரைத்தால் அடிகள் உணவு செய்யத் தடை நேரும். குருநாதரிடம், உண்மைக்கு மாறாக உரைப்பதும் குற்றமாகும்" என்று எண்ணினார்.

வாக்கின் மன்னரை வணங்கி "எந்தையே! வாழைக் குருத்தை அரியச் சென்ற அம்மகன் அரவந் தீண்டி ஆவி துறந்தான்" என்றார்.

அப்பரடிகள் கேட்டு, "நல்ல காரியம் செய்தீர்; இப்படி யார் செய்வார்கள்?" என்றுரைத்து எழுந்து சென்று, அச் சவத்தை நோக்கி, தமிழ்ப்பதிகம் பாடி விடத்தைத் தீர்த்தருளினார்.

சிறுவன் தூங்கி விழித்தவனைப்போல உயிர்பெற்றெழுந்து, வாகீசருடைய மலரடி மீது வீழ்ந்து வணங்கினான். அண்ணலார் அவனுக்குத் திருநீறிட்டார்.

எழுந்த புதல்வனைக் கண்ட எல்லோரும் அதிசயித்துத் திருத்தொண்டின் பெருமையை வாழ்த்தி வணங்கினார்கள். அப்பூதியாரும் அவர் வாழ்க்கைத் துணைவியாரும் "குருநாதர் அமுது செய்தருளுவதற்கு இவன் இடையூறாக நின்றானே" என்று வருந்தினார்கள். அவர்களது வாட்டத்தைக் குறிப்பினாலறிந்த சொல்லரசர், அவர்களை அழைத்துக்கொண்டு, திருமாளிகை சேர்ந்து பீடத்தில் அமர்ந்தருளினார்.

உண்ணும் இடத்தைப் பசுவின் சாணத்தினால் மெழுகி, கோலமிட்டு, திருவிளக்கு ஏற்றி வைத்து, நீளமான வாழைக் குருத்தைக் கழுவி, நுனி இடப்புறத்தில் இருக்குமாறு இட்டுத் தூய வாச நீரை அளித்தார்கள். வாகீசர் திருக்கரத்தைக் கழுவிக்கொண்டு, அப்பூதியாரை நோக்கி, "மக்களுடனே நீரும் உடன் இருந்து உணவு செய்யும்" என்று பணித்தருளினார். அவருடைய ஆணையைக் கடக்க அஞ்சிய அப்பூதியடிகள் மக்களுடன் அருகில் அமர்ந்தார். வீட்டில் உள்ள பெண்மணிகள் அமுது படைத்தார்கள். ஆளுடைய அரசு அமுது செய்தருளினார்.

மாதவ மிக்க மறையவராகிய அப்பூதியார் திருமனையில் திருநாவுக்கரசர் காதல் மிக்க நட்புடன் பலநாள் தங்கியிருந்தார். திருப்பழனத்தில் எழுந்தருளியுள்ள இறைவரைத் தமிழ் மாலையினால் துதிக்கும் போது அப்பூதி நாயனாரைச் சிறப்பித்துப் பாடியருளினார்.

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே. - தேவாரம்

இவ்வாறு சைவந் தழைக்கவந்த பரமகுருநாதர் திருப்பதிகத்தில் பாடும் ஒப்பற்ற பெரும்பேற்றினை அப்பூதியடிகள் பெற்றார். இவ்வாறு, அப்பூதி நாயனார் திருநாவுக்கரசு நாயனாரது திரு வடியை எப்போதும் இடையறாது சிந்தித்தும், அவரது திருவடியை வந்தித்தும், வாழ்த்தியும் அன்பு செய்து அம்பல வாணரது அடி மலர் சார்ந்து சிவபோகத்தை எய்திப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றார்.

விளக்கம்

குருபக்தி

பக்தியே முத்திக்குக் காரணம்; "ஆனபயபக்தி வழிபாடு பெறுமுத்தி" என்பது அருணகிரிநாதர் திருவாக்கு. பக்தி மூன்று வகைப்படும். குருபக்தி, சிவபக்தி, அடியார்பக்தி என்பனவாகும். இவற்றுள் குருபக்தியே ஏனைய இருபக்திகட்கும் வாயிலாகும்.

குருபக்தியால் பெரும்பேறு பெற்றவர் அப்பூதி நாயனார் என்று அறிக. இவர் அந்தணர் மரபில் வந்தவராக இருந்தும் குலப் பெருமையைப் பொருளாகக் கொள்ளாமல் வேளாளர் மரபில் வந்த திருநாவுக்கரசு நாயனாரைத் குருநாதனாகக் கொண்டு, அவரை வழிபட்டுத் திருவருள் பெற்றார். அவரை நேரில் காணா முன்னமேயே கேள்வி மாத்திரத்தினால் அவரைக் குருமூர்த்தமாகக் கொண்டு, தாம் புரிந்த அறங்கள் எல்லாவற்றையும் ஆசாரியருடைய திருப்பெயரால் புரிந்தார். அதனால், இவருடைய குருபக்தி தெற்றென விளங்குகின்றது.

வடிவுதாங் காணா ராயு மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையுந் தம்பி ரானார் அருளுங்கேட் டவர்நா மத்தால்
படிதிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலா யுள்ள
முடிவிலா அறங்கள் செய்து முறைமையால் வாழு நாளில்.

என்ற திருப்பாடலாலறிக.

அன்பின் திறம்

அப்பரடிகள் அப்பூதியடிகளை நோக்கி, "நீர் அமைத்த தண்ணீர்ப்பந்தரில் நும் பெயர் எழுதாமல் வேறு ஒரு பெயர் எழுதிய காரணம் யாது" என்று வினாவியபோது, அப்பூதி யடிகளுடைய மன நிலையும், அதற்கு அவர் கூறிய விடைகளும் அவருடைய அன்பின் திறத்தை எடுத்துக்காட்டுகின்றன.

அன்றியும், ஏவல் வழிநிற்கும் அன்பும் அறிவும் நிறைந்த புதல்வன் மாண்டுகிடக்கக் கண்டு, "கடந்த ஞானிகளுங் கடப்பரோ மக்கள்மேல் காதல்" என்ற பழமொழியும் நாணும்படி, மகனுக்காக அணுத்துணையும் வருந்தாது, அகமும், முகமும் மலர்ந்த வண்ணமாக குருமூர்த்திக்கு அமுது செய்விப்பதையே பொருளாகக் கொண்ட அவருடைய அளப்பரிய அன்பை அறியவல்லார் யார்?

மகன் உயிர்பெற்று எழுந்தபோது, பிழைத்தது கருதி மகிழாமல்,

அறிவரும் பெருமை யன்பர் அமுதுசெய் தருளு தற்குச்
சிறிதிடை யூறு செய்தான் இவன்என்று சிந்தை நொந்தார்.

இதனால், இவருடைய அன்பு கடலினும் பெரிது என்க.

ஒழுக்கம்

ஒழுக்கம் இரண்டு வகைப்படும். ஒன்று பொது ஒழுக்கம். மற்றொன்று சிறப்பு ஒழுக்கம். பொது ஒழுக்கம் உடம்பு போன்றது; சிறப்பொழுக்கம் உயிர் போன்றது. பொதுவொழுக்கமாவது - கள்ளாமை, பிறர்மனை நயவாமை; புறங்கூறாமை; வெகுளாமை, கொல்லாமை, பொய்யாமை முதலியனவாகும்.

சிறப்பு ஒழுக்கமாவது, திருநீறும் கண்டிகையும் புனைதல்; ஐந்தெழுத்தோதல்; திருக்கோயில் வழிபாடு; சிவபூசை முதலியன வாகும்.

பொதுவொழுக்கமாகிய உடம்பில் சிறப்பொழுக்கமாகிய உயிர் நிற்கும். பொதுவொழுக்கமாகிய கடைக்காலின் மீது சிறப் பொழுக்கமாகிய திருமாளிகையை எழுப்புதல் வேண்டும். பொது வொழுக்கம் இல்லாத சிறப்பொழுக்கம் கடைக்கால் இல்லாத வீட்டை நிகர்க்கும்.

இந்த அப்பூதியடிகளின் பொது ஒழுக்கத்தை ஆசிரியர் எடுத்துக் கூறும் அழகை உன்னுக. "களவு பொய் காமங் கோப முதலிய குற்றங் காய்ந்தார்'' இங்ஙனமே திருநீலகண்ட நாயனாரைப் பேசவந்த இடத்தும் சேக்கிழாரடிகள் பேசுமாறு காண்க. பிற இடங்களில் வருமாறுங் காண்க.

பொய்கடிந் தறத்தின் வாழ்வார் புனற்சடை முடியார்க் கன்பர்
மெய்யடி யார்கட் கான பணிசெயும் விருப்பி னின்றார்
வையகம் போற்றுஞ் செய்கை மனையறம் புரிந்து வாழ்வார்
சைவமெய்த் திருவின் சார்வே பொருளெனச் சாரு நீரார்.

- திருநீலகண்ட நாயனார் புராணம்

தண்ணீர்ப் பந்தர்

"நீரின் றமையாது உலகம்" என்ற பொதுமறையின்படி மக்களுக்கு நீர் இன்றியமையாதது; பசியையும் சில நேரந் தாங்கக் கொள்ளலாம். தண்ணீர் விடாயைச் சிறிது நேரங்கூடத் தாங்கிக் கொள்ள இயலாது. விடாய் கொண்டார்க்குத்தண்ணீர் உதவாத பாவிகளை நமன் தூதர் "தண்ணீர்" "தண்ணீர்" என்று தவிக்க கரடுமுரடான வெயில் நிறைந்த வழியில் நரகிற்கு அழைத்து ஏகுவார். "விடாய்ப்படக் கூற்றுவன் ஊர்க்குச் செல்லும் வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே."

பலரும் ஒழியாது நடக்கும் வழிக்கரையில் மிகவும் விசாலமாகக் குளிர்ந்த நிழலைத் தரக்கூடிய பந்தரும், அமுதம் போன்ற தண்ணீரும் அமைத்து, மக்களுக்குப் பேருபகாரம் புரிந்தார் அப்பூதியார். சிறிய தட்டு, சிறு விளக்கு முதலிய சிறுசிறு தருமங்களைச் செய்வோர்கள் தத்தம் பேரை அவற்றுள் எழுதுவர். இவர் மிகவும் பெரிய பெரிய அறங்களைத் தம் பேரில் செய்யாமல், திருநாவுக்கரசு நாயனார் திருப்பெயரால் செய்தார். அதனால், இவர் புகழை விரும்பாதவர் என்பது விளங்குகின்றது. இவர் அமைத்த தண்ணீர்ப்பந்தரின் பெருமையை அடியில் வருந் திருப்பாடலால் தெளிக.

> அளவில்சனஞ் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
> உளமனைய தண்ணளித்தா யுறுவேனிற் பரிவகற்றிக்
> குளநிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பர்ப்பினதாய்
> வளமருவு நிழல்தருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்.

மூத்த திருநாவுக்கரசு

"மனந்தூயார்க்கு எச்சம் நன்றாகும்" என்ற பொய்யா மொழிப்படி அப்பூதியடிகளுடைய புதல்வன் தந்தையினும் விஞ்சிய அன்பு பூண்டவன். கலையறிவும் அனுபவ அறிவும் வாய்க்கப் பெற்ற தந்தையாரினும், இளஞ் சிறுவனுடைய செயல் வியத்தற் குரியதாகும்.

வாழைக்குருத்துக் கொய்யும்போது வாளரவந் தீண்டியது. விடவேகந் தலைக் கொண்டது. கையும் மெய்யுங் கண்ணுங் காந்தன. அவ்விடர்ப்பட்ட காலத்தில் அத்திருமகன், "பாந்தள் பற்றும் வெய்ய வேகத்தால் வீழாமுன்னம் வேகத்தால் எய்திக் கொய்த இக் குருத்தைச் சென்று கொடுப்பேன்" என்று கருதியதும், "மாசுணங் கவர்ந்தது யார்க்கும் அருந்தவர் அமுது செய்யத் தாழ்க்க

யான் அறையேன் என்று திருந்திய கருத்தினொடு செழுமனை" சென்றதும், அறிவும் ஆற்றலும் அழிந்தபோதும், தான் மேற் கொண்ட செயலை முடிக்கக் கருதி தாய்பால் தந்து வீழ்ந்து உயிர் விடுத்ததும் அம் மைந்தனுடைய அன்பின் மிகுதியை நன்கு விளக்குகின்றன.

எரிவிட முறையே யேறி தலைக்கொண்ட ஏழாம் வேகந்
தெரிவுற எயிறுங் கண்ணு மேனியுங் கருகித் தீந்து
விரியுரை குழறி யாவி விடக்கொண்டு மயங்கி வீழ்வான்
பரிகலக் குருத்தைத் தாயார் பால்வைத்துப் படிமேல் வீழ்ந்தான்.

அம்மையார்

மக்களிடம் தந்தையினும் தாய்க்கு மிகுந்த அன்பு; மக்களைத் தந்தை கடிந்தபோதும் தாய் ஆதரிப்பள். மூத்த திருநாவுக்கரசு அரவந் தீண்டி ஆவி துறந்தபோது, அடியார்க்கு அமுது செய்விப்பதைப் பெறுதற்கரிய பேறு என்று கருதி, மாண்ட மைந்தனுக்காக வருந்திப் புலம்பாது அகமும் முகமும் மலர்ந்து இருந்த கணவனாரைப் போலே, அவர் கருத்துக்கு இசைந்த அம்மையார், பத்து மாதஞ் சுமந்து பெற்று வளர்த்த மகனுடைய பிரிவைப் பொருள்படுத்தாது, அடியவர்க்கு அமுது செய்விக்கத் துணை செய்து இனிய முகத்துடன் ஒழுகிய தன்மை மிகமிக வியத்தற்குரியதாகும். கற்புடை மாதர்கட்கு இத்தெய்வ நல ஒழுக்கமே உயிரினும் உயர்ந்ததாகும். இதை ஒவ்வொரு பெண் மணியும் சிந்தித்து உய்வு பெறவேண்டும்.

சொல்லருமை

தண்ணீர்ப் பந்தரைக் கண்ட திருநாவுக்கரசு நாயனார், அப்பந்தரில் இருந்த ஏவலரை நோக்கி, "அப்பூதியார் எங்குளார்" என்று மட்டுமே வினாவினார். அதற்குத் "திங்களூர்" என்று விடை கூறினாலேயே அமையும். அவ்வாறு கூறியிருந்தால், "அவர் வீட்டில் இருப்பாரோ?" "அவர் வீடு இங்கிருந்து எத்துணை தொலைவு?" என்று தொடர்ந்து பல வினாக்கள் எழும். அவ்வாறு பல வினாக்களை அவரை வினாவ வொட்டாது, அறிவுடைய அந்த ஏவலர்,

துன்றியநூன் மார்பருமித் தொல்பதியார் மனையின்கட்
சென்றனர்இப் பொழுததுவும் சேய்த்தன்று நணித்து

என்று விடை பகர்ந்த திறம் பாராட்டுதற்குரியது.

அப்பூதியாரை நோக்கி அப்பர் அடிகள், "தண்ணீர்ப் பந்தருக்கு உமது பெயர் எழுதாமல் ஏன் வேறு ஒரு பெயரை எழுதினீர்?" என்று வினாவியபோது, அப்பூதியடிகள் வெகுளியுற்றும், சொன்னவர் சிவனடியார் ஆதலின் "தீமை சொன்னீர்" என்று கூறாமல் "நன்றருளிச் செய்திலீர்" என்ற சொல்லருமை உன்னுந் தொறும் உன்னுந் தொறும் எம்போல்வாருடைய கல் மனத்தையுங் கரைந்து உருகச் செய்கின்றது.

நாவுக்கரசர், "மூத்த மகன் எங்கே?" என்று வினாவினார். அப்பூதியார் யாரிடமும் எப்போதும் எவ்வகையாலும் பொய் கூறாதவர். குருநாதரிடம் பொய்மை புகல்வரோ! ஒருபோதும் புகலார். மெய்மையே விளம்பினார். ஆனால், அந்த மெய்யை சுருக்கிச் சொன்னார். "இப்போது இங்கவன் உதவான்" என்று கூறிய சொல்லருமையை உய்த்துணர்க. அது உண்மையேயாகும்.

அதனால், திருநாவுக்கரசர் "உண்மையைக் கூறும்" என்று கேளாமல், "மெய் விரித்துரையும்" என்று கேட்டார். "நீர் கூறியது மெய்மையே; சுருக்கமாகச் சொன்னீர். அதை விரிவாகச் சொல்லும்" என்ற நயம் அருமையினும் அருமையானது.

குருவருள்

குருவருள் பெற்றார் திருவருள் பெறுவார் என்பது ஒருதலை. இதற்குச் சான்று அப்பூதியடிகளே.

இவ்வகை யரசின் பாதம் ஏத்திஎப் பொருளு நாளும்
அவ்வருந் தவர்பொற் றாளே எனவுணர்ந் தடைவார் செல்லும்
செவ்விய நெறிய தாக்கித் திருத்தில்லை மன்று ளாடும்
நவ்வியங் கண்ணாள் பங்கர் நற்கழல் நண்ணி னாரே!

திருநீலநக்கநாயனார் புராணம்

"ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க் கடியேன்"

காவிரி பாயும் வள நாடாகிய சோழ நன்னாட்டில், தாமரைப் பூக்களில் கயல் மீன்கள் புரளுகின்றனவாயும், காய்த்த செந்நெற் பயிர், காடுபோல் மிகுதியாகச் சூழப் பெற்றதாயும் அமைந்தது திருச்சாத்தமங்கை. மங்கலமிகுந்த மறையவர்கள் பலர் அத் திருத்தலத்தில் வாழ்ந்தார்கள். உலகெலாம் புகழும் உயர்வுடை யதாக அது விளங்கியது. நன்மை மிகுந்த அவ்வூரில் நறுநுதல் மாதர்கள், பூக்கள் நிறைந்த தடாகத்தில் நீராடுகின்ற போது, அவர் களுடன் கலந்து அன்னப் பறவைகளும் நீராடும்; அந்தணச் சிறுவர் கள் வேதம் பயில்கின்றபோது சாமவேதம் பாடுகின்ற பூவையென்கிற நாகணவாய்ப் பறவைகள் தாமும் அவ்வேதங்களைச் சொல்லு கின்றன. அச்சிறுவர் பிழை கூறுகின்ற போது திருத்தவுஞ் செய்கின்றன.

வேதாகமங்களால் ஆராய்ந்து துணிந்த மெய்ப்பொருள் திருநீறேயாம் என்று கொண்டு, திருநீற்றின் பெருமையை வளர்க்குங் காவலுக்குள்ளே முப்புரி நூலுடைய இரு பிறப்பாளர்கள் மூவகையான அக்கினிகளை வளர்ப்பார்கள். பிறவிப் பெருங்கடலினின்றும் நீந்திக் கரையேற்றும் நல்லறத்துக் குரிய பெண்மணிகள் அம்மூன்று தீயுடன் தமது கற்பு என்ற தீயையும் சேர்த்து நான்கு அக்கினிகளை வளர்ப்பார்கள்.

ஒழுக்கத்தில் உயர்ந்த திருமறையோர்கள் வாழுகின்ற அத் திருச்சாத்தமங்கையில், நான்கு வேதங்களின் உட்பொருளை விளங்கச் செய்கின்ற நலமுடையவராகவும், ஆலமுண்ட நீலகண்டனார்பால் அடிமைத்திறம் பூண்டவராகவும் விளங்கினார் திருநீலநக்க நாயனார். "வேதங்களின் உள்ளுறைப் பொருளாவன அரனாரை அருச்சிப்பதும், அடியாரைப் பணிவதுமே" என்று கருதிச் சிவபக்தி அடியார் பக்தி என்ற இரண்டும் உடையவராய் ஒழுகினார்.

வேத வுள்ளுறை யாவன விரிபுனல் வேணி
நாதர் தம்மையும் அவரடி யாரையு நயந்து

பாத அர்ச்சனை புரிவதும் பணிவதும் என்றே
காத லால்அவை இரண்டுமே செய்கருத் துடையார்.

உண்மைப் பொருளை உள்ளவாறு எடுத்துக் காட்டுகின்ற சிவாகமங்களில் சொல்லிய விதிப்படி வேதகாரணராகிய விமலனை நாடோறும் பூசிக்கும் நியமம் பூண்டிருந்தார். அன்றியும் சிவனடியார்களுக்கு அன்போடு அன்னமளித்தல் முதலிய திருத்தொண்டுகள் பலவும் புரிந்துவந்தார்.

திருநீலநக்கநாயனார் இவ்வாறு திருத்தொண்டுகள் புரிந்து வாழ்கின்றபோது திருவாதிரை நாள் வந்தது. அது பரமனார்க்கு உவந்தது அல்லவா? தமது திருமாளிகையில் அன்று நித்திய பூசனையை விதிப்படி செய்தார். நைமித்திகமாக ஆலயத்திலே சென்று இறைவரைப் பூசிக்க விரும்பினார். திருச்சாத்தமங்கை யென்னும் அத்தலத்தில் உள்ள திருக்கோயிலுக்கு அயவந்தி என்று பேர். நாயனார் தமது திருமனையிலிருந்து வழிபாட்டிற்குரிய பொருள்கள் அனைத்தும் குறைவற எடுத்துக்கொண்டு, மனைவி யாருடன் புறப்பட்டு ஆலயத்தை அடைந்தார். அயவந்தியில் மேவிய அமுதத்தைக் கண்டு அயராத அன்புடன் தொழுதார். எல்லையில்லாத தவமுடைய அந்தணர் பெருமான், செந்திரு வனைய மனைவியார் பூசைக்குரிய சாதனங்களை அருகில் இருந்து குறிப்பறிந்து ஏந்தித்தர, அன்புடன் பூசனை புரிந்தார். பூசனை முடிந்ததும் அன்பு நிரம்பாதவராகி நலம் தந்த நாதரை வலம் வந்து வணங்கினார், துதி செய்தார். மறைகள் தேடும் மணி கண்டரை நோக்கி ஒருமைப்பட்ட உணர்வுடன், திருமுன் இருந்து ஐந்தெழுத்தை ஓதி ஜெபஞ் செய்து கொண்டிருந்தார். அம்மையார் அருகில் நின்று இறைவரை இரு கண்களாலும் நோக்கி அன்பு செய்து கொண்டிருந்தார்.

பொன்மேரு மலையை வில்லாகவுடைய சிவபெருமானுடைய அருட்குறியாகிய சிவலிங்கத் திருமேனியின்மீது, ஒரு சிலந்தி மேலிருந்து வழுவி வீழ்ந்தது. அது கண்ட அம்மையார் சிலந்தியின் விடத்தினால் திருமேனிக்குப் பழுது நேருமே என்று அஞ்சித் திடுக்கிட்டார். இளங் குழந்தைமேல் சிலந்தி வீழ்ந்தால், தாய் எப்படி தாங்காது ஓடி ஊதி அதனை அகற்றுவாளோ, அதுபோல் விரைந்து சென்று அன்போடு சிலந்தியை வாயினால் ஊதித் துமிந்தார். திருநீலநக்கர் அதுகண்டு மனைவியார் அன்பினை மனத்திற் கொள்ளாது, இது பெரிய அநுசிதம் என்று எண்ணி வருந்தினார். "பெண்ணே! மின்போன்ற சடையுடைய விமலர் மீது வீழ்ந்த

சிலந்தியை வேறு ஒரு முறையால் நீக்காமல், வாயில் ஊதி எச்சில்படுமாறு அநுசிதம் புரிந்தனை. இது பெரும்பாவம். ஆதலினால், உன்னை இனி யான் துறந்து விட்டேன்" என்று கடிந்து கூறினார்.

கதிரவன் மேற்கடலில் வீழ்ந்தான். மனைவியார் அஞ்சி ஒருபுறம் ஒதுங்கி நின்றார். சீலம் மிகுந்த நீலநக்கர் குற்றம் நீங்க மீண்டும் பெருமானைப் பூசித்துவிட்டுத் தமது திருமாளிகை சேர்ந்தார். அஞ்சிய உள்ளத்துடன் அம்மையார் நடுநடுங்கி திருக்கோயிலிலேயே தங்கியிருந்தார். எங்கும் இருண்ட அக் கங்குலில் மங்கை பாகனைத் தியானித்த நாயனார் பஞ்சணையில் படுத்துச் சிறிது கண்ணுறங்கினார்.

பள்ளி கொள்பொழு தயவந்திப் பரமர்தாங் கனவில்
வெள்ள நீர்ச்சடை யொடுநின்று மேனியைக் காட்டி
உள்ளம் வைத்தெமை ஊதிமுன் துமிந்தபால் ஒழியக்
கொள்ளும் இப்புறம் சிலம்பியில் கொப்புளென் றருள.

அயவந்தித் திருவாலயத்தில் எழுந்தருளியுள்ள சிவமூர்த்தி திருநீலநக்கருடைய கனவில் தோன்றி, "அன்பனே! இதோ பார்; உன் மனைவி ஊதிய இடந் தவிர மற்றை இடங்களில் கொப்புளம்" என்று அருளிச்செய்து தமது திருமேனியைக் காட்டியருளினார். கனவு தெளிந்து எழுந்தார் நாயனார். அஞ்சினார். கங்கை முடி சேர்த்த மங்கைபாகரை வணங்கினார்.

இறைவன் தனது கனவில் தோன்றியதைக் குறித்துப் பெரு மகிழ்ச்சியுற்று ஆடினார்; பாடினார்; துதித்தார். அண்டர் பிரான் திருக்கருணையை நினைந்து அழுதார். பொழுது விடிந்தது. இருள் புலர்ந்தது. அயவந்தி சென்று அரனாரை ஆராத காதலுடன் பணிந்தார். மனைவியாரை அழைத்துக்கொண்டு திருமனை சேர்ந்தார். முன்னையினும் பன்மடங்கு அன்புடன் பூசனை செய்தார். தம்பால் வரும் அடியவர்க்கு வேண்டுவன நல்கி அறநெறியில் நின்றார்.

அவ்வாறு ஒழுகுங்காலை, சீகாழியில் திருஞானசம்பந்தர் அழுது உலகை வாழ்வித்து, மும்மைப்புவனம் ஈன்ற அம்மை திருமுலைப் பாலுண்டு, அமிழ்தினும் இனிய தமிழ்மறை பாடும் அரிய பெரிய அற்புதச் செயலைக் கேட்டார். உள்ளத்தில் அன்பு வெள்ளம் பெருகி புகலிவேந்தரைப் பணியும் விருப்பங் கொண்டிருந்தார். அவருடைய தவமுதிர்ச்சியினால் திருஞான சம்பந்தப் பிள்ளையார்

திருத்தலங்களை வணங்கிக்கொண்டு, அயவந்தி மேவிய அண்ணலாரைத் தொழவேண்டி சாத்த மங்கையை அடைந்தருளினார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் தமது மனைவியாராகிய மதங்கசூளாமணி அம்மையாருடன் வீணாகானஞ் செய்துகொண்டு வரவும், அடியார் திருக்கூட்டம் வெள்ளம்போல் சூழவும் பிள்ளையார் வருவதைக் கேள்வியுற்ற திருநீலநக்கர் எல்லையில்லாத உவகையுற்றார். உள்ளங் கிளர்ந்து எழுந்தார். தோரணங்களைக் கட்டினார். பூமாலைகளைத் தொங்கவிட்டார். பந்தரிட்டார். கொடிகளை உயர்த்தினார். சுற்றமும் நண்பரும் சூழ எதிர் கொள்ளுமாறு சென்றார். பலவாறு ஆடினார்; பாடினார்; ஓடினார்; பிள்ளையார் எங்கே என்று நாடினார். அவர் அடிமலர் மீது வீழ்ந்து வணங்கி, ஞான போனகரைத் தமது பொன்மாளிகையிடை எழுந்தருளப் புரிந்தார். பாலறா வாயருக்கும் அடியவர் திருக் கூட்டத்திற்கும் அமுதினும் இனிய உணவாதிகளைத் தந்து உபசரித்தார்.

பிள்ளை யார்எழுந் தருளிய பெருமைக்குத் தக்க
வெள்ள மாகிய அடியவர் கூட்டமும் விரும்ப
உள்ளம் ஆதர வோங்கிட வோங்குசீ காழி
வள்ள லாரைத்தம் மனையிடை அமுதுசெய் வித்தார்.

அன்று இரவு எல்லோரும் தங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தார். இரவு உணவு உண்டபின், முத்தமிழ் விரகராம் திருஞானசம்பந்தர் திருநீலநக்கரை அழைத்தருளினார். நாயனார் ஓடி அவரைத் தொழுது அருகில் நின்றார். "நம்முடன் வந்துள்ள திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கு படுக்க ஓர் இடங் கொடுத்து அருளுவீர்" என்று கட்டளையிட்டருளினார். அந்தணராகிய திருநீலநக்கர், நீலகண்ட யாழ்ப்பாணரை இழிகுலத்தார் என்று கருதாமல், வீட்டின் நடுவில் யாகவேதிகைக்கு அருகில் இடந் தந்து உபசரித்தார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாகவேதிகையின் அருகில் சென்றவுடன் யாகாக்கினி மகிழ்ச்சியுடன் முன்னையினும் ஒரு மடங்கு ஓங்கி ஒளிசெய்து வலஞ்சுழித்தது. அதுகண்ட அந்தணர் மகிழ்ந்தார். சகோடயாழ்த் தலைவராகிய பாணர் தமது மனைவியாராகிய விறலியாருடன் படுத்துக் கண்ணயர்ந்தார். கதிரவன் உதிக்குமுன் திருஞானசம்பந்தர் எழுந்து அயவந்தி ஐயனைப் பாடி, அப்பதிகத்தில் திருநீலநக்கனாரது அன்பைச் சிறப்பித்தருளினார். அதிக நட்பை அவர்க்கு அளித்தருளி என்றும் புதிய செந்தமிழால் பழமறையைப் பாடும் பாலறாவாயர் வேறு தலங்களைத் தரிசிக்கும் விருப்புடன் புறப்பட்டார். திருநீலநக்கரும்

அவருடன் அன்பினால் பிரிந்திருக்கமாட்டாராய் புறப்பட்டார். ஞானசம்பந்தர் அவரை அவ்விடமே இருந்து திருத்தொண்டு புரியுமாறு கட்டளையிட்டு நிறுத்திச் சென்றருளினார்.

திருநீலநக்கநாயனார் முன்புபோல் சிவபூசை செய்துகொண்டு திருஞானசம்பந்தருடைய திருவடித் தாமரையைத் தியானித்துக் கொண்டிருந்தார். சண்பை வேந்தராம் சம்பந்தப் பெருமானைக் காணும் விருப்பினால் அவர் எழுந்தருளுகின்ற தலங்களுக்குச் சென்று, அவருடைய திருவடியை வணங்கிச் சாத்தமங்கை வருவார். இவ்வாறு, பலகாலும் பயின்றுவந்த மறையவர் பிரானார் திருஞான சம்பந்தருடைய திருமணஞ் சேவிக்கும்பொருட்டுப் பெருமண நல்லூரை அடைந்தார். திருமணவேள்விச் சடங்கைப் புரிந்து சிவஜோதியிற் கலந்து இன்புற்றார்.

விளக்கம்

திருச்சாத்தமங்கை

இது மிகவும் நீர்வளம் பொருந்திய தலம். பரமசாந்தியைத் தரவல்லது. "ஒலிபுனல்சூழ்சாத்த மங்கை" என்று திருத்தொண்டத் தொகையில் நம்பியாரூரர் அருளிச் செய்தது இன்றுங் கண்கூடு.

இத்திருத்தலம் நன்னிலம் ரயில்வே நிலையத்தின் கிழக்கே ஏழு கல் தொலைவில் உள்ளது. இடையில் திருநாவுக்கரசு நாயனார் முத்திபெற்ற திருப்பூம்புகலூர் இருக்கின்றது. திருச்சாத்தமங்கைக்கு ஒரு கல் தொலைவில் இறந்த வணிகனுக்கு ஞானசம்பந்தர் உயிர் தந்த இடமாகிய திருமருகலும், அதன்அருகில் சிறுத்தொண்ட நாயனாருடைய தலமாகிய திருச்செங்காட்டங்குடியும் இருக்கின்றன.

இத்தலத்திலுள்ள கோயிலுக்கு அயவந்தி என்று பேர். அயன் (பிரமன்) வந்தித்ததனால் அயவந்தி எனப்பட்டது.

சுவாமி பேர் அயவந்திநாதர்; அம்மைபேர் மலர்க்கண்ணியம்மை.

மெய்ப்பொருள் திருநீறு

அருள் நூல்களை ஆராய்ந்து பார்க்கின்றபோது அதன் சாரமாக விளங்கும் மெய்ப்பொருள் திருநீறேயாம். உலகச் செல்வங்கள் அத்தனையும் பொய்ப்பொருள்களேயாம். உயிர்களைக் காப்பதும் திருநீறேயாகும். அதனால், அதற்கு ரட்சை என்ற ஒரு

பேரும் உண்டு. கவசம் உடம்பைக் காப்பது போல் திருநீறு உயிரைக் காப்பது. ஆதலின்,

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமல் பூச மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே.

என்று திருமூல நாயனார் திருவாய் மலர்ந்தருளினார்.

எனவே, திருச்சாத்தமங்கையில் வாழும் வேதியர்கள் திருநீற்றினைப் போற்றி, அதன் பெருமையை வளர்த்து, அக்காவலுக்குள் முத்தீ வளர்த்தனர் என்று ஆசிரியர் கூறும் அருமையான செந்தமிழின்பத்தை அன்பர்கள் துய்த்து மகிழ்க.

"ஆய்ந்த மெய்ப்பொருள் நீறென வளர்க்குமக் காப்பில்
ஏய்ந்த மூன்றுதீ வளர்த்துளார் இருபிறப் பாளர்"

மகளிர் சிறப்பு

அத்தலத்தில் மாதர்கள் தங்கள் கணவர்கள் வளர்க்கும் மூன்று அக்கினிகளை வளர்ப்பதோடு அமையாது, தமக்கே உரிமையாக விளங்கும் கற்புத் தீயையும் வளர்த்தார்கள் என்னும் அரிய கருத்து மகளிர் மரபையே வாழ்விப்பதாகும்.

மாதரது கற்புத்தீ கனலையும் தீய்க்கும் ஆற்றலுடையது. கற்பு - கற்பிக்கப்படுகிறது. ஆன்றோர்களால் கற்பிக்கப்படுவது. கற்புத் தீயினால் தமயந்தி கணப்பொழுதில் வேடனை எரித்துச் சாம்ப ராக்கினாள்.

சீறா விழித்தாள் சிலைவேடன் அவ்வளவில்
நீறாக வீழ்ந்தான் நிலத்து.

சீதாதேவியின் கற்புக்கனலால், கனல் வெதும்பியது. அக்கினித் தேவன் அந்தத் தாயின் கற்புத் தீயினைக் கண்டு அஞ்சி உடம் பெல்லாம் கொப்புளங்கள் தோன்றவந்து அபயம் புகுந்தான்.

நீந்தரும் புனலிடை நிவந்த தாமரை
ஏய்ந்ததன் கோயிலே யெய்து வாளெனப்
பாய்ந்தனள் பாய்தலும் பாலின் பஞ்செனத்
தீய்ந்ததவ் வெரியவள் கற்பின் தீயினால்.

ஆடவர்க்கு நல்லறத்துணையாய் நின்று பிறவிக்கடலைத் தாண்டுவதற்கு இன்றியமையாத கருவியாக இருப்பவள்

மனைவியேயாகும். இவ்வரிய கருத்துக்களை நமது தெய்வச் சேக்கிழார் பெருமான் தெரிவிக்குமாறு காண்க.

"நீந்து நல்லற நீர்மையில் வளர்க்குமத் தீயை
வாய்ந்த கற்புடன் நான்கென வளர்ப்பர்கண் மடவார்"

பூவை மறை பயிற்றும்

"கம்பன் வீட்டுக் கட்டுத்தறியுங் கவிசொல்லும்" என்பது பழமொழி. "கல்லுஞ் சொல்லாதோ கவி" என்பார் கம்பர். திருச்சாத்தமங்கையில் வேதியர்கள் இடையறாது வேதங்களை அத்யயனஞ் செய்கின்றனர். அதனைக் கேட்டுக் கேட்டு, அங்கு வாழும் பூவைகள் இனிய சுரத்துடன் மறை ஓதுகின்றன. சிறுபிள்ளைகள் வேதம் ஓதும்போது பிழைவரின் அதனைத் திருத்துகின்றன. "பயில்வன" என்று கூறாமல், பன்மறைக் கிடையுடன் பயிற்றுவ பலபூவை" என்கின்றார். ஆசிரியர் அன்றியும் பூவைப்பறவைகள் சாமவேதம் பாடுகின்றனவாம்.

பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருள்சொல்லும் மிழலை யாமே" - ஞானசம்பந்தர்

"தெள்ளுமோ சைத்திருப் பதிகங் கள்பல
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்"

என்று ஆசிரியர் முன்னே கூறியதுங் கருதுக.

திருநீல நக்கர்

இவர் சிவபக்தியும், குருபக்தியும் அடியார் பக்தியும் ஒருங்கே அமையப் பெற்றவராய், வேதியர் குலவிளக்காய், முத்தீ வளர்க்கு முனிவராய் விளங்கினார். ஒழுக்க நூல் கூறியபடி ஒழுகுதல் மரபு. ஒழுக்கநூல் செலுத்தியபடி செல்லுதல் வேண்டும். இவர் ஒழுக்க நூலைச் செலுத்தி அதற்கும் வழிகாட்டியாக இருந்தார். இவர் நினைப்பதையும் மொழிவதையும் செய்வதையுமே ஒழுக்கநூல் கூறுவதாயின.

"சீலமுய்த்தவத் திருமறையோர் செழுமூதூர்"

என்ற திருவாக்கை உற்றுநோக்குக. உய்த்தல் - செலுத்துதல். சீலம் இவரைச் செலுத்தவில்லை. சீலத்தை இவர் செலுத்தினார். சீலம் - ஒழுக்கம்.

"மநுவற முவந்துதன் வழிச்செல நடத்தும்
புனிதன் மலயத் துவஜன்"

என்ற திருவிளையாடல் கவியும் இங்கு நினைவுகூரற்பாலது. பொதுநூலாகிய வேதம் "சிவனைப் பூசனைசெய்" என்று மட்டும் கூறுகின்றது. "தீகனீசார்ச்சனஞ் ஜன்ம" (ஈசனை அர்ச்சிக்காத உடம்பில் தீ வை) என்று வற்புறுத்துகின்றது. சிறப்பு நூலாகிய ஆகமம் பூசனை செய்யும் முறைகளை வகுத்துக் கூறுகின்றது. ஆதலினால், "மெய்த்த ஆகம விதிவழி வேத காரணரை நித்தல் பூசனை புரிந்து" இவர் ஒழுகினார். வீட்டில் சிவபூசை செய்ததோடு அமையாமல், ஆதிரை நாளையில் அயவந்திக் கோயிலில் சென்று சிவலிங்கத்தை ஆன்மார்த்தமாகப் பூசித்தார். பரார்த்த பூசை ஆதிசைவர்க்கே உரியது. இவர் முறையே சிவதீக்கை பெற்றுக் கொண்ட மகாசைவர் ஆதலின் ஆலயத்திற் சென்று ஆன்மார்த்த மாகப் பூசித்தார் என்க.

கோயிலில் சென்று இறைவனைப் பூசிப்பதற்குரிய சாதனங் களை நிரம்பவும் கொண்டு சென்றார் என்பதனால் இவருக்குச் சிவபூசையிலிருந்த ஆர்வம் விளங்குகின்றது. "முறைமையால் வருபூசைக்கு முற்ற வேண்டுவன குறைவறக் கொண்டு" என்றதனால் இது குறிப்பிடப்படுகின்றது. "நீடு பூசனை நிரம்பியும் அன்பினால் நிரம்பார்" என்றதனால் அவருடைய அன்பின் திறம் மேலும் மேலும் வற்புறுத்தப்படுகின்றது.

மனைவியார் அன்பின் பெருக்கினால், சிவலிங்கத்தின் மீது வீழ்ந்த சிலந்தியை வாயினால் ஊதி அகற்றியதைக் கண்ட இவர் அநுசிதம் என்று கருதி, அதன் பொருட்டு மனைவியாரை அக்கணமே நீத்தார். இதனால், இவருடைய பற்றற்ற தன்மை புலனாகின்றது. கண்ணப்பர் தன்மையைக் கண்டு வருந்திய சிவகோசரியார் செயலை ஒத்தது இவருடைய செயல்.

திருநீலகண்டயாழ்ப்பாணரை இழிகுலத்தார் என்று கருதாமல் வீட்டிற்கு நடுவில் அமைந்துள்ள யாகவேதிகையின் அருகில் படுக்க இடந் தந்ததனால் இவர் அடியார்மாட்டுச் சாதிகுலம் பிறப்பு என்று தாரதம்மியங் கருதாதவர் என்பதும், அடியார்கள் பால் அது கருதுதல் கூடாது என்பதும் விளங்குகின்றன.

திருஞானசம்பந்தப் பெருமானுடைய திருமணத்தில் குழுமி யிருந்த பல்லாயிரக்கணக்கான வேத விற்பன்னர், பண்டிதர்கள் புலவர்களின் இடையே திருமண வேள்விச் சடங்கைப் புரியும்

பாக்கியமும், யோக்கியமும் இவர் பெற்றார் எனின் இவருடைமை பெருமையை அளக்க அயன் மால் முதலியோராலும் ஆகாது அன்றோ?

அம்மையார் அன்பின் திறம்

கணவனார் சிவமூர்த்தியை வழிபடும் பொருட்டுத் திருக் கோயிலுக்குச் சென்றபோது அம்மையாரும் உடன் சென்றார்.

கணவனார் சிவலிங்க பூசனை புரியும்போது, குறிப்பறிந்து அருகில் நின்ற பூசனைக்குரிய சாதனங்களை ஏந்தி, அவ்வப்போது தந்து உபகரித்ததனால் பதிபக்தியும், சிவபக்தியும் ஒருங்கே பூண்டிருந்தார் என்க. "இணைய நின்றங்கு வேண்டுவ மனைவியார் ஏந்த" என்பதனால் அறிக.

சிவலிங்கத்தின் மீது ஒரு சிலந்தி வீழ்ந்தது கண்ட அம்மையார், குழந்தையின் மீது விழக்கண்ட தாய்போல் நடுங்கி அன்புடன் வாயால் ஊதி அதனை அகற்றினார். அது சிவமூர்த்தி தானே என்று எண்ணினாரில்லை. சிலந்தியின் நஞ்சு கொடியதாயினும், ஆலகால நஞ்சுண்ட இறைவரை அந் நஞ்சு என் செய்யும்? என்றும் கருதினாரில்லை. அவர் அன்பு இருந்தவாறு என்னே?

விழுந்த போதிலங் கயல்நின்ற மனைவியார் விரைவுற்
றெழுந்த அச்சமோ டிளங்குழ வியில்விழுஞ் சிலம்பி
ஒழிந்து நீங்கிட ஊதிமுன் துமிப்பவர் போலப்
பொழிந்த அன்பினால் ஊதிமேற் றுமிந்தனர் போக.

இறைவர் அம்மையாருடைய அன்பின் திறத்தை நீலநக்கருக்கு அறிவிப்பான் வேண்டி, அவர் கனவில் தோன்றி, அம்மையார் வாயால் ஊதிய இடந் தவிர மற்றையிடத்தில் விடவேகத்தினால் கொப்புளம் எழுந்ததாகத் திருமேனியைக் காட்டிய கருணைத் திறத்தினால் அம்மையார் பெருமை நனி விளங்குகின்றது.

நமிநந்தியடிகள் நாயனார் புராணம்

"அருநம்பி நமிநந்தி யடியார்க்கும் அடியேன்"

உலகமெல்லாம் நன்னெறி நிற்குமாறு காவல்புரியும் தனிச் செங்கோலுடைய சோழ மன்னர்களுடைய நாடு காவிரி நாடு. அத் திருநாடு மிகவும் நீர்வளம் பொருந்தியது. அந்நாட்டில் திருவாரூருக்கு அருகில் ஏமப்பேறூர் என்று ஒரு தலம் உண்டு. அத்தலத்தில் வாழ்வோர் பொய்கடிந்து மெய்ம்மையைக் கூறும் வேத நெறிப்படி நின்று புகழ்பெற்று, அதனால், வந்த பெருமை எட்டுத் திசைகளும் பரவ சீலமுடன் விளங்கினார்கள். திருவீதி களில் அழகாகத் தோரணங்கள் விளங்கும். அத்தோரணங்களின் இடையிடையே நறுமலர் மாலைகள் ஒழுங்காகக் கட்டியிருக்கின் றன. கடல் நீரை முகந்துவந்த மேகங்கள் உயர்ந்த மாடமாளிகை மீது உலாவும். சோலைகளில் குளிர்ந்த நிழல் எப்போதும் இன்பந் தரும். பாக்குமரங்களில் வண்டுகள் இருந்து ஒலிக்கும். வேதவோசை உரியகாலங்களில் மிகவும் முழங்கும். நிறைந்த நீர் வயல்களில் செங்கழுநீர் மலர்கள் மலர்ந்து அழகு செய்யும்.

வயல்களில் விளைந்த வெண்மையான நெற்பயிர் பரந்த இடங்களிலே இடையிடையே ஒளிவிட்டுத் திகழும் செந்தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்றன. அவை முப்புரி நூலணிந்த வேதியர் கள் வேள்விச்சாலையில் அழகிய வேதிகை மீது வெண்மணலைப் பரப்பி இடையிடையே செந்தீயை வளர்ப்பதுபோல் காட்சி யளிக்கின்றன.

பெருமை மிக்க அத் திருப்பதியில் உயிர்களைக் காத்து அருள் புரியும் திருநீற்றுச் சார்பினையுடைய சைவ நெறியில் ஒருமைப்பட்டு வாழ்கின்ற அந்தணர் குலத்திலே அவதரித்தவர் நமிநந்தியடிகள். சொல்லுலகம் பொருளுலகம் என்ற இரு உலகத்திலும் சிவபெருமானுடைய திருவடியை இடையறாது வாழ்த்தி வணங்கி வழிபட்டு வருவார். சத்திய மொழியாகிய வேதநூல்களில் கூறும் ஒழுக்கத்தால் வளர்க்கும் சிவந்த அழற் பிழம்பு போன்றவர். தூய திருநீற்றின் சார்பே மெய்ப்பொருள் என்று அறியுந் துணிபுடையவர். இரவும் பகலும் எண்டோள் இறைவரை வழிபடும் நியதி பூண்டவர். வழிபாட்டினால் வரும் இன்பத்தை எய்தினார்.

தமது உறைவிடமாகிய ஏமப்பேறூரினின்றும் அடிக்கடி திருவாரூர் சென்று, அடியார் இடர் களையும் புற்றிடங் கொண்ட புனிதரை வழிபடுவார். அவ்வழிபாடே எல்லா வூதியங்களுமாம் என்று கருதுவார்.

ஒருநாள் திருவாரூர் சென்று பூங்கோயிலில் புற்றிடங் கொண்ட திருமூல நாதரை நினைந்து அணைந்து தாழ்ந்து பணிந்து மகிழ்ந்து வெளியே வந்தார். திருமதிலுக்கு அருகில் அரனெறி என்று ஒரு தனிக்கோயில் உண்டு. அதனையும் வணங்க விரும்பினார். அத்திருக்கோயிலுட் புகுந்து, நிறைந்த அன்பினால் கண்ணீர் சொரிந்து, மிகவும் பரிந்து தொழுதார்; துதித்தார். பல திருத் தொண்டுகள் புரிந்தார்; பலவிளக்குகள் ஏற்றி வழிபட விரும்பினார். அந்த வேளை கதிரவன் மேற்கடலில் சாய்ந்து கொண்டிருந்தான். தமது ஊர் சென்று திருவிளக்கு எரிக்க நெய் கொண்டு வருவதற்குப் போதிய நேரம் இன்மை கண்டார். கோயிலுக்கு வெளியே இருந்த ஒரு வீட்டில் நெய்யை வேண்டி நுழைந்தார். அது நன்னெறி சாராத சமணருடைய வீடு. அன்பும், அறிவும் அறவே இல்லாத அமணர்கள், திருவிளக்குக்கு நெய்யை வேண்டிய நமிநந்தி அடிகளை நோக்க, "கையில் நெருப்பை ஏந்திய உங்கள் கடவுளுக்கு விளக்கு வேண்டாமே? அது மிகையாகும். நெய் இங்குக் கிடையாது. உமக்கு விளக்கு எரிக்க விருப்பமிருந்தால் தண்ணீரை விட்டு எரியும்" என்று கூறிப் பரிகசித்தார்கள்.

ஒரு பொருளே பொய்யும் மெய்யுமாம் என்று தெளிவில்லாத கொள்கையுடைய அப்புன்மையாளர் நன்மையில்லாத சொற்களைக் கூறக்கேட்ட நந்தியடிகள் பெரிதும் வருந்தினார். தாங்க முடியாத வேதனையுடன் உடனே சந்திரனை அணிந்த அந்தி வண்ணர் திருக்கோயிலிற் சென்று, "எந்தையே! நன்னெறி சாராத அமணர் கூறிய ஏளன மொழிகளைக் கேட்பதற்குச் சிறியேன் என்ன பாவஞ் செய்தேனோ? கருணைக் கடலே" என்று அழுது இறைவர் முன் வீழ்ந்தார்.

அப்பொழுது ஞானவானில் ஓர் இனிய திருவாக்கு எழுந்தது. "அன்பனே! வந்த கவலையை மாற்றுக. மாறாத விளக்குப் பணிசெய்ய, இதோ இங்குள்ள குளத்து நீரை முகந்து கொண்டு வந்து எரிப்பாயாக" என்ற அருள் வாக்கை அந்திவண்ணர் அருளால் கேட்டார். எல்லையில்லாத மகிழ்ச்சியுற்றார். அம் மகிழ்ச்சியின் மிகுதியால் திகைத்தார்.

கங்கையை முடிமேல் வைத்த கண்ணுதலாரது கருணையைச் சிந்தித்து எழுந்தார். நல்ல நீர் நிறைந்த திருக்குளத்தில் இறங்கி, ஐந்தெழுத்தை ஓதித் தண்ணீர் முகந்துவந்து, அரனெறிக் கோயிலில் வந்து, அகலில் அகில உலகமும் அதிசயிக்கத் திரிமேல் தண்ணீரை வார்த்தார். விளக்கு ஏற்றினார். மகிழ்ச்சியுடன் கோயில் முழுவதும் பலப்பல விளக்குகள் ஏற்றினார். பரிகசித்த அமணர்கள் பார்த்து நாணித் தலைகுனிந்தனர். தண்ணீரே நெய்யாக எரிவதைக் கண்ட அடியார்கள் "ஹர ஹர" என்று முழக்கஞ் செய்தனர்.

சோதி விளக்கொன் றேற்றுதலுஞ் சுடர்விட் டெழுந்த ததுநோக்கி
ஆதி முதல்வர் அரனெறியார் கோயி லடைய விளக்கேற்றி
ஏத நினைந்த அருகந்தர் எதிரே முதிருங் களிப்பினுடன்
நாதர் அருளால் திருவிளக்கு நீரால் எரித்தார் நாடறிய.

திருவிளக்குகள் விடியுமளவும் அவியாமல் எரியும் பொருட்டு, நீர் குறைகின்ற அகல்களிலெல்லாம் தண்ணீரை நிரம்ப நிரப்பினார். தமது வீட்டில் வழக்கம்போல் புரியும் நடு யாம வழிபாட்டின் நியதி வழுவாதிருக்குமாறு, அவ்விரவிலேயே தமது திருத்தலத்தை அடைந்தார். வீட்டைச் சார்ந்து, உம்பர் பரவும் நம்பரை நியதியுடன் பூசித்தார். உணவு உண்டு பள்ளிகொண்டார். பொழுது புலர்ந்தபின் மீண்டுந் திருவாரூரை அடைந்தார். அரனெறிக் கோயிலை வலம்வந்து வணங்கினார். கோயிலின் உள்ளும் புறமும் செய்யத்தக்க திருத்தொண்டுகளைப் பகல் முழுவதுஞ் செய்தார். மாலை நேரம் வந்ததும் முன்போல் நீரால் விளக்குகள் எரித்தார். இவ்வாறு, பல நாளும் பணிசெய்து வந்தார். தண்டியடிகள் நாயனாரால் கலக்கம் ஏற்பட்டு நற்பண்பு இல்லாத அமணர் அழிந்து ஒழிந்தனர்.

நாதவடிவாகிய திருமறைகளை நன்கு தேர்ந்த நமிநந்தியடிகள் செய்யுஞ் சிறந்த திருத்தொண்டின் பயனாக, திருவாரூர் மேவிய திருமூலநாதருக்கு நித்திய வழிபாட்டிற்கு வேண்டிய அமுதுபடி முதலிய நிபந்தங்களை வேதாகமநூல் விதிவிளங்கும்படி நிலைபேறாக வேந்தன் அமைத்தான். அன்றியும் வீதி விடங்கப் பெருமான் திருவாரூர் ஆளும் திருவிளையாடல்களையும், பங்குனி உத்திரப் பெருவிழாவையும் மிகவும் சிறப்பாக மன்னனுடைய ஆதரவினால் நமிநந்தியடிகளார் நாமுய்ய நடாத்துவித்தார். இவ்வாறு, திருப்பணிகள் பலவுஞ் செய்தார். நிலைபெற்ற பெருமையுடைய ஆரூரமர்ந்த ஆறணிச்சடையார் அடியவர் அன்பின்வழி அவர் விண்ணப்பித்தபடி திருவிளையாடல்

புரிந்தருளினார். எந்நாளும் நன்மை பெருக நமிநந்தி உலகம் உய்யத் தொழுதார்.

திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகேசர் ஒருநாள் அருகில் உள்ள மணலி என்னும் ஊருக்கு எழுந்தருளினார். எல்லாக் குலத்தினரும் பிரிவு இன்றி ஒன்றுபட்டு எம்பிரானைச் சேவித்துக் கொண்டு சென்றார்கள். அவர்களுடன் நமிநந்தியடிகளும் கலந்து இறைவருடைய திருவோலக்கக் காட்சியில் ஈடுபட்டுக் கண்டு களி கூர்ந்தார். மாலை நேரத்தில் தியாகப் பெருமான் மீண்டும் திருவாரூருக்குத் திரும்பிக் கோயிலுக்குள் புகுந்தருளினார்.

நமிநந்தியடிகள் அதற்குமேல் தமது ஏமப்பேறூர் வந்து, தூய்மையான மனையுட்புகுதாது, இருள்நிறைந்த அந்த இரவில் வீட்டின் வாயிற்கடையில் அயர்ந்து தூங்குவாராயினார். வீட்டில் இருந்து எல்லா அறங்களையும் புரியும் மனைவியார் கணவர்பால் வந்து "ஏன் இப்படி இங்குப் படுத்திருக்கின்றீர்? உள்ளே வந்து, வழக்கம் போல நடுயாமத்தில் செய்யும் சிவபூசையைச் செய்து ஓமத்தீ வளர்த்து உணவு செய்துவிட்டுப் பள்ளி கொள்ளும்" என்று அழைத்தனர். நந்தியடிகள், "பெண்ணே! இன்று தியாகராசர் மணலிக்கு எழுந்தருளினார். அந்த நல்விழாவில் எல்லோரும் வர நானும் உடன் கலந்து சேவித்தேன். அதனால், தூய்மை குன்றியது. ஆதலினால், குளித்துத் தூய்மை செய்து கொண்டு மனை புகுந்து சிவபூசை செய்ய வேண்டும். குளிர்ந்த நீர் கொணர்வாய்" என்று கட்டளையிட்டார். அம்மையார் தண்ணீர் கொணர்வதன் பொருட்டு உள்ளே சென்றார்.

தியாகப்பெருமான் திருவருளாலேயோ காலை தொடங்கி மாலைவரை திருவிழாவில் நடந்து சேவித்த திருமேனியின் அயர் வாலேயோ மனைவியார் நீர் கொணருமுன் உறக்கம் வந்து அழுத்த, சிவமூர்த்தியின் திருவடியைச் சிந்தித்து நாயனார் துயில் புரிந்தார். கனவிலே கண்ணுதற் கடவுள் அவருடைய வழிபாட்டிற்கு வருவார்போல் வந்தருளி, "அன்பனே! திருவாரூரிற் பிறந்தார் எல்லோரும் ஞானமறையோராய நமது கணங்களேயாகும். அதனை நாம் காட்ட நீ காண்பாயாக" என்று அருளிச் செய்து மறைந் தருளினார்.

மேன்மை விளங்கு திருவாரூர் வீதி விடங்கப் பெருமாள்தாம்
மான அன்பர் பூசனைக்கு வருவார் போல வந்தருளி
ஞான மறையோர் ஆரூரிற் பிறந்தார் எல்லாம் நங்கணங்கள்
ஆன பரிசு காண்பாயென் றருளிச் செய்தங் கெதிரகன்றார்.

கனவு தெளிந்து எழுந்த அடிகள் திடுக்கிட்டார். "அந்தோ! திருவிழாவில் சேவித்து வந்த திருத்தொண்டர்களின் கலப்பினால் தூய்மை குன்றியது என்று குற்றம் நினைந்தேன். இறைவன் திருவருள் இதுவோ? உய்ந்தேன்" என்று எழுந்தார். எழுந்தபடியே உட்சென்று சிவபூசையும் தீ வளர்த்தலும் செய்து, அமுது செய்தார். இறைவன் அருளிய அருள்மொழியை மனைவியார்க்கும் உரைத்தார்.

விடியற்காலை விரைவோடு திருவாரூரை நாடி வருகின்றார். அப்போது திருவாரூரில் பிறந்து வாழும் எல்லோரும் சிவ சொரூப முடையவர்களாகவும் ஒளிப்பிழம்பாகவும் விளங்கும் அரிய காட்சியைக் கண்டார். சிரமேற் கரமலரைக் கூப்பித் தொழுதார். மண்மேல் வீழ்ந்து பணிந்தார். மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். அத் தோற்றம் மாறி பழையபடியே நிகழ்வுங் கண்டார். பரமபதியின் திருமுன் வீழ்ந்து, "அடியேன் பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று வேண்டினார். பின்னர், ஏமப்பேறூரை விடுத்துத் திரு வாரூரையே இருப்பிடமாகக் கொண்டார். திருவாரூர் மேவுந் தேவ தேவருடைய திருத்தொண்டுகளைப் புரிந்து கொண்டிருந்தார்.

திருநீறுங் கண்டிகையும் புனையும் அடியவர்க்கு நியதியாகப் பலதிறப்பட்ட தொண்டுகள் புரிந்து, வேண்டுவன எல்லாம் நல்கி வந்தார். அதனால், திருநாவுக்கரசு நாயனார், இத் திருவாளரைத் "தொண்டர்க்கு ஆணி" என்று சிறப்பித்துப் பாடியருளினார்.

ஆராய்ந் தடித்தொண்ட ராணிப்பொ னாரூ ரகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி யுத்தரம் பாற்படுத்தான்
நாரூர் நறுமலர் நாத னடித்தொண்ட னம்பிநந்தி
நீராற் றிருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே.

இவ்வாறு, நமிநந்தியடிகளார் எல்லா உலகங்களுந் தொழத் திருப்பணிகள் பல செய்து, மதியும் நதியும் புனைந்த விதிமா லறியாத திருவாரூர் தியாகேசப் பெருமானுடைய திருவடி நீழலில் விளங்கும் அருட்ஜோதியில கலந்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றார்.

விளக்கம்

ஏமப் பேறூர்

இத்தலம் திருவாரூருக்குத் தெற்கில் ஆறு கல் தொலைவில், திருத்துறைப்பூண்டிக்குப் போகும் கற்சாலையில் உள்ளது. திருமப்பறறு என்று இப்போது வழங்குகின்றது. நமிநந்தியடி களாருக்குத் தனியாலயம் இருக்கின்றது.

நமிநந்தியடிகள்

இவர் சிவாகம விதிப்படி சிவதீக்கைப் பெற்றுச் சைவ சித்தாந்த நெறியில் நிற்கும் அந்தணராகிய மகா சைவர் மரபு என அறிக.

அந்தணரில் பலர் சிவபெருமானிடம் உறுதியும், அன்பும் இன்றிப், பல தெய்வங்களை வணங்கி உழலுவர். ததீசி முனிவரும், பிருகு முனிவரும் தந்த சாபத்தால் என்று அறிக.

முத்தி உலகிற்கு முதற்படி ஏகதேவ வழிபாடேயாகும். எந்த மூர்த்தியையும் தனது வழிபடு மூர்த்தியாகவே எண்ணி வணங்குதல் வேண்டும். இந்த நெறி நின்றாரே விரைவில் திருவருட் பேறு பெற்று நலம் பெறுவர்.

"ஒரு நெறிய மனம் வைத்துயர் ஞானசம்பந்தன்"

என்று, ஆளுடைப் பிள்ளையார் அருளிச் செய்ததையும் உன்னுக.

இவர் இத்திரு நெறியிற் றிறம்பட நின்றவர் ஆதலின்,

"பேணு நீற்றுச் சைவநெறி
ஒருமை நெறிவா ழுந்தணர்தம் ஓங்கு குலத்தி னுள்வந்தார்"

என்று சேக்கிழாரடிகள் இவரை இனிது இசைக்கின்றார்.

இவர் நாடோறும் சிவபூசையின் முடிவில் சிவாக்கினி வளர்க்கும் நியமம் பூண்டிருந்தார். சிவாக்கினி வளர்ப்பதனால் கலியின் வெம்மை தணியும் என்க. இவ்வண்ணமே மகா சைவராகிய அப்பூதியடிகளும் சிவவேள்வி புரிந்தார் என்று அறிக.

"அஞ்சிப்போய் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி"

என்று அப்பரடிகள் அருளிச் செய்தார்.

இவர் தூய்மையில் தாம் வளர்க்கும் நெருப்புக்குச் சமான மானவர்.

அபிடேகம் பெற்றவர் ஆதலின் வைகறை, உச்சி, மாலை, நடு இரவு என்ற நான்கு வேளைகளிலும் வழிபாடு செய்யும் நியதி யுடையவர் இவர்.

இந்த நியதி வழுவாதிருக்கும் பொருட்டே, தண்ணீரால் விளக்கெரித்த இரவு, திருவாரூரினின்றும் ஆறு கல் தொலைவில் உள்ள தமது ஊர் சென்று வழிபட்டு அமுது செய்தார் என்று வரலாறு கூறுகின்றது.

மணலிக்கு இறைவர் திருவோலக்கம் செய்த அன்றும் நடு இரவில் தமது இல்லஞ் சென்று சிவபூஜையும் தீவேட்டலுஞ் செய்தனர் என்பதையுஞ் சிந்திக்க.

இவரது பெருமை அளவிடற் கரியது. அடியில் வரும் தீந்தமிழ்க் கவியால் இதனை உணர்க.

வாய்மை மறைநூல் சீலத்தால் வளர்க்குஞ் செந்தீ யெனத்தகுவார்
தூய்மைத் திருநீற் றடைவேமெய்ப் பொருளென் றறியுந் துணிவினார்
சாம கண்டர் செய்யகழல் வழிபட் டொழுகுந் தன்மைநிலை
யாம இரவும் பகலுமுணர் வொழியா இன்ப மெய்தினார்.

சிவனையே பாடுந் திருவாயுடைய சிவஞான குருமூர்த்திகளாகிய திருநாவுக்கரசு நாயனார், திருஞானசம்பந்தப் பிள்ளையார், என்ற இரு பெருங்குரவர்களும் இவரைச் சிறப்பித்துப் பாடியருளினார்கள் என்றால் இவருடைய திருத்தொண்டின் சிறப்பு சொல்லுந் தரத்ததோ?

தாவியவ னுடனிருந்துங் காணாத தற்பரனை
ஆவிதனி லஞ்சொடுக்கி அங்கணனென் றாதரிக்கும்
நாவியல்சீர் நமிநந்தி யடிகளுக்கு நல்குமவன்
கோவியலும் பூவெழுகோற் கோளிலியெம் பெருமானே.

- திருஞானசம்பந்தர்

அரனெறி

திருவாரூர்ப் பெரிய கோயில் பூங்கோயில் எனப்படும். அப்பெரிய கோயிலுக்குள், அக்கினி மூலையில் தனிக் கோயிலாக விளங்குவது "அரனெறி" என்ற கோயில். இக்கோயிலே நமிநந்தி அடிகள் தண்ணீர் விளக்கெரித்த சிறப்புடையது. மேற்குப் பார்த்த சந்நிதி. மிகவும் அழகிய மூர்த்தி.

திருவிளக்கிடுதல்

திருக்கோயிலிலே விளக்கிட்டவர்க்கு மெய்ஞ்ஞானமுண்டாகும்.

"விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்நெறி ஞான மாகும்"

- அப்பர்

சிவாலயத்திலே அணையும் பருவத்திலே விளக்கின் திரியை அபுத்தி பூர்வமாகத் தூண்டிய புண்ணியப் பயனால் எலி பலிச்சக்ரவர்த்தியாகப் பிறந்தது என்பதால் விளக்கிட்டார்க்கு வரும் புண்ணியத்தை அறிக.

- "சொல்லகலின்
நீளுகின்ற நெய்யருந்த நேரெலியை மூவுலகும்
ஆளுகின்ற மன்னவனா யாக்கினையே"

- இராமலிங்கர்

நமிநந்தியடிகள் பல விளக்குகள் இட்டு இறைவனை வணங்க வேண்டுமெனக் கருதினார். பொழுது போய்விட்டபடியால் ஆறு நாழிகை தொலைவில் உள்ள தமது ஊர்போய் நெய் கொணர் தற்குரிய நேரம் இன்மை குறித்து அருகில் உள்ள வீட்டிற் சென்று நெய் கேட்டார். சமணர்கள் இகழ்ந்தது கேட்டு மனம் பொறாமல், இறைமுன் வருந்தி வீழ்ந்தார். அவருடைய அளவிடற்கரிய அன்புக்காக இறைவர் இரங்கி அருள்புரிந்தனர். திருவருள் துணைகொண்டு நீரால் விளக்கெரித்து இகழ்ந்தவரும் புகழ்ந் துரைக்கத் திருத்தொண்டு புரிந்தார். உலகங்கள் எல்லாம் அறிந்து வியந்தன.

"நீரால் திருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே"

என்று அப்பரடிகள் அருளிச் செய்தமையால் இது விளங்கு கின்றது.

திருவாரூர் பிறந்தார் சிவகணங்கள்

மணலி என்னும் ஊர் திருவாரூருக்குத் தென் மேற்கில் நான்கு நாழிகையளவில் இருக்கின்றது. ஆண்டுக்கு ஒருமுறை தியாகேசர் மணலிக்கு எழுந்தருளுவர்.

பிறப்பு இறப்புக்களால் வரும் ஆசௌசம், மகளிர்க்கு வரும் தீண்டாமை முதலியவைகளால் ஆலயத்திற் சென்று வழிபட முடியாத மக்கள் அனைவரும் சேவித்து உய்வு பெற இறைவர் திருவீதி உலா வருவர். அவ்வாறு வரும் விழாவில் சேவிக்க வரு வோர் அத்தனைப் பேரும் சிவனடியார்கள். அவர்களை வேறாக நினைத்தல் கூடாது. இதனை இறைவரே நமிநந்தியடிகளுக்குத் தெளிவுபடுத்தி அருளினார்.

இனி, திருவாரூர் பிறந்தார்கள் எல்லோரும் சிவகணங் களாவார் என்பதும் சிந்தித்தற்குரியது. பிறந்தால் மட்டும் போதாது. பிறந்து சிவநெறியில் நின்று வாழவேண்டும் என்ற குறிப்பை தெய்வச் சேக்கிழார்,

"தெய்வப் பெருமாள் திருவாரூர்ப் பிறந்து வாழ்வார் எல்லாரும்
மைவைத் தனைய கண்டரவர் வடிவே யாகி"

என்று கூறியருளியதனால் அறிக.

"வித்தகம் பேச வேண்டா பணிசெய வேண்டும்"

என்று இறைவர் நம்பியாரூரரிடம் தெரிவித்தவாறு, நமிநந்தி அடிகள் உள்ளும் புறமும் செய்யவேண்டிய திருத்தொண்டுகள் பலவும் புரிந்து அரிய வாழ்வு பெற்றார்.

திருஞானசம்பந்த நாயனார் புராணம்

"வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்"

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

சோழ நாடு

பிறைமதியணிந்த இறைவருடைய சைவத்துறையில் வழி வழியாக உயர்குடித் தோன்றல்கள் சோழ மன்னர்கள். வளமையான வர்கள் ஆதலின் "வளவர்" என்றும், செழிப்புடையவர்களாதலின் 'செழியர்' என்றும் அவர்களை அறிஞர் புகழ்வர். இத்தகைய சோழர்களது ஆட்சிக்கு உட்பட்ட நாடு சோழ நாடு எனப்படும். அது கங்கையின் மீறிய காவிரி நதியால் வளம் பெறுவது.

சீகாழி

இத் திருநாட்டின் அணிகலம்போல் விளங்கியது சீகாழி என்ற திருத்தலம். உகமுடிவில் எங்கும் கடல் பொங்கி நீர்பெருகி உலகம் ஒடுங்கியபோதும் இந்நகர் தோணிபோல் மிதக்குந் தன்மையுடையது. கடல் ஒலி போன்ற வேதம் பயிலும் ஓசையுடன் பசுமை நிறம் பொருந்திய சோலைகளுக்கு இடையில் அந்நகரம் பொலியும் அழகு உகமுடிவில் மட்டுமேயன்றி எப்பொழுதுமே கடலில் மிதப்பதுபோல் காட்சி தருவதாகும்.

மாலயனாதி வானவர் அடங்கும்படி உகமுடிவுகள் தோறும் மேலெழுகின்ற வெள்ளப் பெருக்குகளின் அலைகள் அந்நகர மதிலின் புறத்தில் வரிசையாக அடையாள்ங்கள் செய்திருக்குங் காட்சி, பாற்கடலைக் கடைந்த காலத்தில் மந்தர மலையை வரிவரியாகச் சுற்றிய வாசுகி நாகம்போல் விளங்கும். பல இளஞ்சூரியர் தோற்றம்போல் மலர்ந்த தாமரைகள் மணக்குந் தடாகங்கள் பல சூழ்ந்து திகழ்கின்றன. பலவூழிகளாக அழிவின்றி நிலை

பெற்றிருக்கும். அந்நகரில் மறைவாணர் புரியும் ஓமப் புகையினால் இருளும், அடியவர் மேனியில் விபூதி யொளியும் எப்போதும் விளங்குவனவாதலின் இரவும் பகலும் மிகையாயின.

வயல்களில் மலர்ந்துள்ள தாமரை மலர்களாகிய ஓமத் தீயில், அருகில் இருக்கும் மாமரங்களிலுள்ள இனிய மாங்கனிகளின் சாறு ஆகிய நெய், அம் மரங்களின் இலைகளின் வழியே ஒழுகுவது, அவ்வூர் மரங்களும் ஓமஞ் செய்வதுபோல் காணப்படுகின்றது. இருண்ட சோலைகளில், வண்டுகள் தாமரை நூலைத் தாங்கி, பூவின் புற இதழைத் தாங்கி, மகரந்தப் பொடியணிந்து, கண்ணீர் ததும்பி இனிய ஓசையைச் செய்வது வேதியச் சிறுவர்கள் சாம வேதம் பயில்வதுபோல் இருக்கும். அருந்ததியின் மிக்க கற்புடைய மாதர்கள் யாக வேதிகையினை மெழுகி வெண்சுண்ணக் கோலமிட்டு அழகு செய்யும் அழகிய மாடங்கள் பல அவ்வூரை அணி செய்கின்றன. பொன்னாலாகிய கிண்கிணியொலிக்க அந்தணச் சிறுவர்கள் சிறுதேர் உருட்டியும், வேள்விச் சடங்குகளை விளையாட்டில் அமைத்து ஆடியும் உலவுகின்ற அழகிய வீதிகள் பல நெருங்கி யுள்ளன.

மடையெங்கும் மணிக்குவியலும், வயலெங்கும் மீன் குழுவும், வயலருகில் மலர்க்குவியலும், அதன் அருகில் வேள்விகளின் பொலிவும், வேதம் பயில் இடங்களில் வேதகீதமும், சோலையெங் கும் வண்டின் இனிய நாதமும், சோலைகளிடையே முனிவர் கூட்டமும், மதில்களில் மேகங்களின் ஈட்டமுமாக இலங்கின.

> பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குருநீர்ப்
> பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய் திரபுரமுன்
> வருபுறவம் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
> பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்.

1. பிரமபுரம் : பிரமதேவர் படைப்புத் தொழிலைப் பெற வேண்டிப் பூசித்துத் திருவருள் பெற்றார். அதனால், பிரமபுரம் எனப் பெற்றது.

2. வேணுபுரம் : வேணு - மூங்கில்; சூரபன்மனுக்கு அஞ்சிய இந்திரன் மூங்கிலுருவங் கொண்டு தவஞ் செய்தமையால் இறைவர் மூங்கிலாய் முளைத்து அருள்புரிந்தார். அதனால், வேணுபுரம் எனப் பெற்றது.

3. புகலி : சூராதியவுணர்கள் கொடுமைக்கு ஆற்றாத அமரர்கள் கந்தவேளைத் தந்தருளுமாறு புகலிடமாகப் புகுந்தனர். அதனால், புகலி எனப்பெற்றது.

4. வெங்குரு :- பிரமனால் இகழப்பட்ட அசுர குருவாகிய சுக்கிரன், நாரதருடைய உபதேசத்தின்படி, வந்து பூசித்துத் தேவ குருவுக்கு இணையாகிய தகைமையைப் பெற்றனன். நரகர் தன்னைக் கொடியன் என்று இகழும் பழி நீங்க இயமன் வழிபட்டு முன்னுணர்ச்சி பெற்று மௌனநிலை பெற்றனன். இவைகளால் வெங்குரு எனப்பெற்றது.

5. தோணிபுரம் :- உலகனைத்தும் அழியுமாறு கற்பாந்தத்தில் எழுந்த பெருவெள்ளத்தில் அழியாமல் பிரணவ உருவாகத் தோணி போல் மிதந்தது. அதனால், தோணிபுரம் எனப் பெற்றது.

6. பூந்தராய் :- சங்கநிதி பதுமநிதி என்ற இருநிதிகளின் அதி தேவதைகள் வேண்டுவார் வேண்டியவற்றை மாறாது வழங்கும் வண்மையைப் **பூந்தராயிருந்து** பூசித்துப் பெற்றன. திருமால் வெண்பன்றி உருக்கொண்டு இரணியாக்கனைக் கொன்று, பூமியைத் தரித்தார். இவ் இருகாரணங்களால் பூந்தராய் எனப்பெற்றது.

7. சிரபுரம் :- பாற்கடலில் தோன்றிய அமுதத்தைத் திருமால் தேவர்கட்குப் பகிர்ந்து அளிக்கும்போது, சிலம்பன் என்ற அசுரன் அமர வடிவுகொண்டு இருந்ததனைச் சூரியன் காட்ட, விட்டுணு சட்டுவத்தால் வெட்டினார். அவனது சிரம் ராகுவாக நின்று பூசித்து நவக்கிரங்களில் ஒருவனாகும் பதம் பெற்றான். அதனால், சிரபுரம் எனப்பெற்றது.

8. புறவம் :- சிபிச்சக்கரவர்த்தியிடம், இந்திரன் பருந்தாகவும், அக்கினிதேவன் புறவாகவும் சென்று சோதிக்க, புறாவின் எடைக்குச் சிபி தன் உடல் தசையறுத்து நிரப்பியும் போதாமை கண்டு துலையேறினான். அப்பாவம் போகப் புறாவாகிய தீக் கடவுள் பூசித்தான். அதனால், புறவம் எனப் பெற்றது.

9. சண்பை :- கபிலர் சாபத்தால் யாதவன் ஒருவன் வயிற்றுதித்த இருப்புலக்கையைப் பொடியாக்கிக் கொட்டிய தூள்கள் சண்பைப் புற்களாய் முளைத்தன. அப் புற்களைப் பிடுங்கி யாதவர்கள் ஒருவரை யொருவர் அடித்து மாய்ந்தனர். அப் பழி போகுமாறு கண்ணனும் அம்முனிவனும் பூசித்தனர். அதனால், சண்பை எனப் பெற்றது.

10. காழி :- காளிதன் என்ற நாகராஜனும், நடனத்தில் தோல்வியுற்ற காளியும் பூசித்து அருள்பெற்றனர். அதனால், காழி எனப் பெற்றது.

11. கொச்சை வயம் :- ஆற்றினிடையே பராசர முனிவர் மச்சகந்தியைக் கலந்ததனால் உண்டாகிய, கெட்ட நாற்றமும், பழியும், முனிவர்களது இகழ்வும் நீங்கும்படி பூசித்தார். அதனால், கொச்சைவயம் எனப் பெற்றது. கொச்சை - தீநாற்றம்; வயம் - சயம் (நீங்கியது.)

12. கழுமலம் :- உரோமச முனிவர் பூசித்து ஞானோபதேசம் பெற்று, உலகில் உள்ள உயிர்களின் மலங்களைக் கழுவும் வரம் பெற்றார். அதனால், கழுமலம் என்ப்பெற்றது.

தந்தை தாய்

இவ்வாறு, பன்னிரு நாமங்களையுடைய பழம்பதியாகிய அத்திரு நகரில் அந்தணர் குலத்தின் தலைவராய், கௌணியர் கோத்திரத்தில் வழிவழியாக நன்னெறி நின்ற நற்குடியில் சிவபாத இருதயர் என்பார் ஒருவர் தோன்றினார். இவ்வுலக மெல்லாம் வாழும் பொருட்டுத் தவஞ்செய்யும் இயல்புடையவராய் அவர் இருந்தார். சிவபிரான் திருவடியை எப்போதும் இதயத்தில் வைத்து வழிபடும் நியமம் பூண்டார். அவருடைய திருமனைவியார் பகவதியார். மறையவர் மரபில் வந்த அந்த அம்மையார் உலகில் ஒருவரும் பெறாத பெருமையுடையவர். பொற்பும் கற்பும் மிகுந்து கணவனார் கருத்தின்படி ஒழுகுவார்.

சிவபாத இருதயர் பகவதியார் என்ற இருவருடைய மரபு இரண்டும் சைவநெறி மாறாதவையாகும். சிவபிரான் திருவடி யலாது வேறு நினையாத திறம்படு திருநெறி நின்றவர்கள், திருநீற்றினிடம் மிகுந்த அன்புகொண்டு, யாவரும் அதிசயிக்குமாறு அன்பும் அறனும் அமைந்த அழகிய இல்லறவாழ்வில் இனிது வாழ்ந்தார்கள். அப்பொழுது யாண்டும் சமணர்களது பொய் யொழுக்கம் பரவி, விபூதியின் விளக்கம் போற்றப் பெறாது ஒழிதல் கண்டு சிவபாத இருதயர் பெரிதும் வருந்தினார்.

" ஏ, பரமேசா! கைலைவாசா! உலகம் இவ்வாறு சமண இருள் மூடி இடருழத்தல் நியாயமா? சமணர்கள் எங்கும் சைவத்தை வெறுத்தும், ஒறுத்தும் அலைக்கழிக்கின்றனர். தேவரீருக்கு எம்மதமும் சம்மதமாயினும் மதப்பூசலைத் தவிர்த்து அருள வேண்டுவது நின் கருணையின் இயல்பன்றோ? கருணைக் கடலே தீங்கு விளைவிக்கும் மூங்கையராகிய பரசமயிகளை அழித்து, திருநீற்றின் பெருமையைப் பரப்பும் ஒரு சிறந்த நற்புதல்வனைத் தந்தருளுவீர். குமரனை ஈந்த அமர நாயகா" என்று துதித்து அரும் பெருந் தவம் புரிந்தார்.

நாடோறும் பெரிய நாச்சியுடன் திருத்தோணிமிசை வீற்றிருக்கும் விடையவரது விரைமலரடியை அன்புடன் வழிபட்டு வந்த பகவதியம்மையாரது திருவயிற்றில் கண்ணுதலார் கருணையால் கருப்பமெய்தியது. தோணியப்பருடைய பரம கருணையைப் போற்றி மிகுந்த மகிழ்ச்சியுடன் திங்கள்தோறும் செய்யும் மறைமுறைச் சடங்குகள் நலஞ்சிறப்பச் சுற்றத்தாருடனும் நண்பருடனும் செய்வாராயினார். பத்துத் திங்கள் நிறைந்தன.

பிள்ளையார் திரு அவதாரம்

கதிரவன் முதலிய கோள்கள் யாவும் உச்சம் பெற்று வலியுடன் நிற்கவும், நல்ல ஓரை யமையவும், திருவாதிரை நாளில் பரசமயத்தின் தருக்கு அடங்கவும், சைவமும் வைதிகமும் தழைத்து ஓங்கவும், சிவனடியார்கள் திருவுள்ளம் பெருங்களிப்பு எய்தவும், திருநீற்று நெறி எட்டுத் திசையும் பரவவும், உலகம் ஏழும் உவகையுறவும், அமரர்கள் அதிசயிக்கவும், அந்தணர்களது வேள்வி பெருகவும், செந்தமிழ் செய்த தவம் நிரம்பவும், முனிவரர் தவம் வாய்க்கவும், எல்லாத் திசைகளின் பெருமை எல்லாவற்றையும் தென்றிசையின் பெருமை வெல்லவும், எல்லா உலகங்களையும் மண்ணுலகம் வெல்லவும், எல்லா மொழிகளின் வழக்கங்களையும் தமிழ் மொழியின் வழக்கமே வெல்லவும், இசை முழுவதும் மெய்யறிவு நிலைபெறவும், ஐந்தொழிற்கும் அடியில் நிற்கும் படைப்புத் தொழிலே அருளாக அமையவும், நிகழ்காலமும் எதிர்காலமும் குற்றம் நீங்கவும், ஒளிமிக்க வீதிகளையுடைய சீகாழிப்பதி வாழவும், திருத்தோணியப்பர் அருள்பெருகவும், அவம்பெருக்கும் பரசமயங்களின் புன்னெறிகள் அகலவும், ஊழிதொறும் தவம் பெருக்கும் அத்திருத்தலத்திலே ஒழிவில்லாத சராசர உயிர்கள் எல்லாவற்றுக்கும் சிவம்பெருக்கும் பிள்ளையார் திருஅவதாரஞ் செய்தருளினார்.

அருக்கன்முதற் கோளனைத்தும் அழகியவுச் சங்களிலே
பெருக்கவலி யுடன்நிற்கப் பேணியநல் லோரையெழத்
திருக்கிளரு மாதிரைநாட் டிசைவிளங்கப் பரசமயத்
தருக்கொழியச் சைவமுதல் வைதிகமுந் தழைத்தோங்க.

அவம்பெருக்கும் புல்லறிவின் அமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்படநல் ஊழிதொறும்
தவம்பெருக்கும் சண்பையிலே தாவில்சரா சரங்களெலாஞ்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருஅவதா ரஞ்செய்தார்.

நன்னிமித்தம்

அப்பொழுது சீகாழியில் வாழும் எத்திறத்தவர்க்கும் உடம்பில் புளகாங்கிதமுற்று அவரறியாமலேயே பெரிய மகிழ்ச்சியுண்டா யிற்று. “சிவபிரான் திருவருள்போல் இப்போது நமக்கு உண்டாகிய மகிழ்ச்சிக்குக் காரணம் யாது? கவுணியர் குலத்தில் தோன்றிய திருப்புதல்வனது வரவே இதற்குக் காரணம்” என்று எல்லோரும் அதிசயித்தார்கள். மலர்கள் மலர்ந்து நறுமணம் வீசின; தென்றல் மாருதம் வீசியது; இமையவர் கற்பக மலர் சிந்தி, மண்மிசை வந்து மறையவருடன் வேள்வித் தொழில் புரிந்தனர். பூதகணங்கள் ஆடின; வேதவொலி எழுந்தன; செடிகொடிகள் பயன் தருவன வாயின; தண்ணீர் தெளிந்து குளிர்ந்திருந்தது. ஆகாயம் களங்க மின்றி விளங்கியது; மாறுபாடில்லாத பறவைகள் இனிது ஒலித்தன; சண்பை நகரில் எங்கும் சங்கம் தாரை முதலிய மங்கல வாத்தியங் கள் முழக்குவாரின்றியே முழங்கின.

அந்தணர்கள் கூடிச் சாதகன்மம் முறைப்படி புரிந்தார்கள். பெண்மணிகள் திருமாளிகையில் நிரம்ப நெய் விளக்குகள் ஏற்றி நிறைகுடம் வைத்து, பூ மாலைகளைத் தொங்கவிட்டு, மாக்கோல மிட்டு மங்கலப் பாடல்கள் பாடி மகிழ்ந்தார்கள். பத்து நாள்களிலும் செய்யத் தக்க சடங்குகளை இனிது செய்தார்கள்.

பிள்ளையார் வளர்தல்

உதயசூரியனைப்போல் திகழும் பிள்ளைப்பெருமானை சரவணப் பூந்தொட்டிலில் முருகவேள் விளங்கியதுபோல் தொட்டிலில் இட்டனர். அருமறை நாயகியின் திருமுலைப்பாலு டன் சிவஞானத்தைக் குழைத்து அமுதுசெய்தருளவுள்ள பிள்ளையார்க்கு, சிவபிரானிடத்துள்ள அன்பே பாலாகச் சுரக்க அப் பாலை அன்னையார் ஊட்டினார். கங்கையை முடித்த கடவுளின் திருவருளால் உலகிற்கு பெரும்பேறு என வந்த பெரியவர்க்கு வேறு பல காப்பு மிகையென்று நெற்றியில் நிறையத் திருநீற்றையே காப்பாக அணிவித்தார். தாயாருடைய மடித் தலத்தினும், மணித்தவிசிலும், தூய தொட்டிலிலும், மலர்ப் பள்ளியிலும், திருமறையுஞ் செந்தமிழுஞ் சிறக்கவந்த பாலகரைத் தாலாட்டிப் பாராட்டினார்.

புகலியில் வந்த தகவுடைய திருமைந்தர், அருமறைகள் தலையெடுக்குமாறு, தமது தலையைத் தூக்கி, சிவபிரானது திருத்தொண்டினை அன்றிப் பிறிது இசையோம் என்று கூறுவார்

போல் திருமுகமண்டலம் அசைத்துச் செங்கீரை யாடியருளி னார்.

'நாம் சைவசமயமே யன்றிப் பரசமயங்களை அறியமாட்டோம். ஆதலின், பரசமயிகளே! இவ்வுலகில் எதிர்க்கும் எண்ணமின்றி அகலுமின்' என்று கொட்டுவதுபோலும், இறைவரிடம் பொற்றாளம் பெறுவதற்காகத் திருக்கரங்களை ஒத்துவதுபோலும், தாமரைச் செங்கைகளால் சப்பாணி கொட்டியருளினார்.

விதி தவறிய வேற்றுச் சமயங்கள் நிலைகுலைந்து தொலையும் படி மதிநதியணிந்த மணிகண்டர் சிவஞானம் அளித்தற்கு உரியவ ராகிய அப் புதல்வர் திருமாளிகையின் முன்றிலில் மெல்ல மெல்லத் தவழ்ந்தருளினார்.

தாதியரும் ஏனைய மறைக்குல மகளிரும், "காழியர்தங் கனியே வருக; கவுணியர் கற்பகமே வருக" என்று ஏழிசையும் பலகலையும் எவ்வுலகமும் வாழவந்தவரை அழைப்பாராயினார்கள். அழைத்தவர் முகமலர் மலர அவர் திருநகை புரிந்தும், அவர்கள் பாலணைந்து உடல் குளிர உள்ளங் குளிர உணர்வு குளிரத் தழுவியும், இன்பத்தை அளித்தருளினார் இளம் பிள்ளையார்.

ஓராண்டு முடியுமுன் தலைமயிர் கருமுகில்போல் பின்புறம் அசைந்து அசைந்து அழகு செய்யவும், பசும்பொன் கிண்கிணி ஒலிக்கவும், புன்மை மிக்க புறச்சமயங்கள் தளர்நடையிட்டு அகலவும் அவர் தளர்நடையிட்டு அருளினார்.

இடையில் மணிவடம் பொலியவும், திருவடியில் மணிச் சதங்கை ஒலிசெய்யவும் ஓராண்டில் திருவடி நிலம் பொருந்த நடந்தருளி விளையாடத் தொடங்கினார். சிறிய மணித்தேர் உருட்டியும், திருவீதியில் சிறுமகளிர் புதுக்கிய மணல் வீட்டைத் திருவடியால் சிதைத்தும், திருமேனியில் வியர்வு உண்டாகவும், திருநீற்றின் ஒளி வீதியில் விளங்கவும் வளர்ந்தருளினார். சிவக்கொழுந்தாகிய பிள்ளையார் தவத்தின் அங்குரம்போல் வளர்ந்து ஈராண்டு முடிந்து மூவாண்டுப் பருவத்தை அடைந்தார்.

நாவாண்ட பலகலையும் நாமகளும் நலஞ்சிறப்பப்
பூவாண்ட திருமகளும் புண்ணியமும் பொலிவெய்தச்
சேவாண்ட கொடியவர்தஞ் சிரபுரத்துச் சிறுவருக்கு
மூவாண்டின் உலகுய்ய நிகழ்ந்ததனை மொழிகின்றேன்.

முன்னை நிலையில் தமது திருவடியை மறவாத ஒரு முத்தான் மாவை, மிக்க தவஞ்செய்த சிவபாத இருதயருக்குப் புதல்வராக

அந்திவண்ணர் தந்தருளினார். திருத்தொண்டின் நிலையினை உலகுக்கு அருளவந்த பிள்ளையார், "சிவபிரானைப் பிரிந்து வந்த பிரிவுணர்ச்சியால் சில சமயம் அஞ்சினவரைப்போல் காரணம் வேறு ஒன்றுமின்றி அழுவாராயினார்.

ஒருநாள் சிவபாத இருதயர் வேதவிதிப்படி சடங்குநெறியினை முடிப்பதன்பொருட்டு, நீராடப் புறப்பட்டனர். சிவனருள் கூடிய தனால் பிள்ளையார் திருமாளிகையின் முன் அழுது கொண்டே பிதாவைத் தொடர்ந்து பின்சென்றார். அதனைக் கண்ட தந்தையார் அவரை முனிவர் போலக் காட்டி, "நீ ஏன் என்னுடன் வரு கின்றாய்? நில்" என்று கூறித் தடுத்தார். ஒளிமிக்க பொற்கிண் கிணிகளை அணிந்த திருவடியைத் தூக்கிப் பூமியை மிதித்துப் பிடிவாதஞ் செய்து பிள்ளையார் அழுதார். மாதவப் பெரியார் "உன் செய்கை இதுவாயின் வருக" என்று புதல்வரை அழைத்துக் கொண்டு, உகாந்தத்தில் பெருவெள்ளம் பல தோன்றுவதற்குக் கருப்பம் போலவும், இடையறாத பெருந் தீர்த்தம் எவற்றினுக்கும் தாயக மாகியும், திருத்தோணியை விடாது பற்றிநிற்பதும் ஆகிய பிரம தீர்த்தத்தை அடைந்தார். பிள்ளையாரை அத்திருக்குளக் கரையில் இருத்தி, அவர் தனித்திருக்க, தாம் நீரில் முழுகுவதற்கு அஞ்சினார். உமாதேவியாருடன் திருத்தோணியில் வீற்றிருக்கும் வள்ளலாரை வணங்கி, "நீர் இக்குழவியைக் காவல்புரிந்து அருள்க" என்று துதித்து, உலகம் உய்ய மகவுபெற்ற அம் மறையவர் தடாகத்தில் இறங்கினார். இறைவர் குழந்தையைக் காவல்புரிவார் என்ற துணிவுடன் அச்சமின்றி ஒருமைப்பட்ட மனத்துடன் நீராடித் தருப்பணம் சந்தியா வந்தனம் முதலியன செய்து, அகமருடணஞ் செய்யும் பொருட்டு நீர் மூழ்கியவண்ணம் இருந்தார்.

இவ்வாறு, தந்தையார் தண்ணீரில் மூழ்கியவுடன் அவரைக் காணாமை என்ற போலிக் காரணமாக, முன்னைய உணர்வு வந்து எய்த பிள்ளைப் பெருந்தகையார் அத்திருக் குளக்கரையில் நின்று உயிர்களைப் பவக்கடலின்றுங் கரைசேர்க்கும் பொருட்டு அழத் தொடங்கினார். கண்மலர்களில் முத்துக்கள்போல் நீர் ததும்பவும் கைமலர்களால் கண்களைப் பிசைந்து, அழகிய மலர்வாய் மணியதரம் துடிக்கவும், எண்ணில்லாத வேதங்கள் ஒலிக்கவும், உயிர்கள் யாவும் உவகையுறவும் புண்ணியக் கன்று அனைய பெருமானார் பொருமி யழுதருளினார்.

> கண்மலர்கள் நீர்ததும்பக் கைமலர்க ளாற்பிசைந்து
> வண்ணமலர்ச் செங்கனிவாய் மணியதரம் புடைதுடிப்ப

எண்ணின்மறை ஒலிபெருக எவ்வுயிருங் குதூகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருமியழு தருளினார்.

திருமேனியில் கண்ணீர்த்துளிகள் விழ வேறு இடங்களைத் பார்த்து அழுவாராகிய அச்சிறிய பெருந்தகையார் தமது மேலைச் சார்பு உணர்ந்து தானோ சாரும் பிள்ளைமைத் தன்மையினாலோ செம்மேனிமீது வெண்ணீறு அணிந்த சிவபிரானுடைய திருத் தோணிச் சிகரத்தைப் பார்த்து, "அம்மே! அப்பா!" என்று அழுதருளி அழைத்தருளினார்.

மெய்ம்மேற்கண் டுளிபனிப்ப வேறெங்கும் பார்த்தழுவார்
தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும்பிள்ளை மைதானோ
செம்மேனி வெண்ணீற்றார் திருத்தோணிச் சிகரம்பார்த்
தம்மேயப் பாவென்றென் றழைத்தருளி யழுதருள.

திருத்தோணியில் வீற்றிருக்கும் அருட்கொண்டலாகிய இறைய வர் இமயவல்லியுடன் முன்னைத் திருத்தொண்டினை நினைந்து அவருக்கு அருள்புரியும் பொருட்டு, இடபவாகன மீது எழுந்தருளி கங்கைவார் சடையில் திங்கள் பிறைதவழ பிரமதீர்த்தத்தின் மருங்கு அடைந்தருளினார். சிவபாத இருதயருக்கும் அவர் திரு மனைவி யாருக்கும் தாம் வழங்கிய வரத்தினை நிறைவாக்க நினைந்தருளி னார் போலும். தமது திருவடிகளைப் பேணும் ஒரு நெறியில் நிற்க வரும் சிவஞானத்தைக் கொடுப்பதற்காக, இறைவர் தம்முடன் இருந்த அருமறைகளை உருவாகக் கொண்ட ஆளுடைய பெரிய நாயகியாரை அளித்தருளும்படி அருள் செய்யலாயினார்.

அழுகின்ற பிள்ளையாரை நோக்கி, அருட்கருணை எழுகின்ற திருவுள்ளத்து இறையவர், எவ்வுலகுந் தொழுகின்ற பராசக்தியை நோக்கி, "தேவீ! உனது திருஞானத் தனங்களில் பொழிகின்ற பாலமுதத்தைப் பொன்கிண்ணத்தில் ஏந்தி ஊட்டுவாய்" என்று கட்டளையிட்டருளினார்.

சிவபெருமான் இவ்வாறு அருள்புரிய, ஆரணங்களையும் உலகங்களையும் ஈன்றருளி, எல்லாவற்றுக்குங் காரணமாகிய கருணை வடிவாகிய கற்பகாம்பிகை, பிள்ளையார் அருகிற் சென்று, தமது திருஞானத் தனங்களின்றும் பாலமுதத்தைக் கறந்து, எண்ணரிய சிவஞானத்து இன்னமுதங் குழைத்தருளி, "குழந்தாய்! இதை உண்ணுதி" என்று கூறியருளி, பிள்ளையாரது கண்ணீரைத் துடைத்து அழுகையை மாற்றிக் கையில் பாலமுதப் பொற்கிண் ணத்தைத் தந்தருளினார். யாவர்க்குந் தந்தையும், தாயுமாகிய

அம்மையப்பர் இப்படி அளித்தருளினார். அதனால், பெருந்தகை யார் ஆளுடைய பிள்ளையாராகி, எல்லாத் தேவர்கட்கும் முனிவர் கட்கும் தெரிவரிய பொருளாகும் ஒப்பற்ற சிவஞான சம்பந்த ராயினார்.

யாவர்க்குந் தந்தைதா யெனுமவரிப் படியளித்தார்
ஆவதனா லாளுடைய பிள்ளையா ராயகில
தேவருக்கு முனிவருக்குந் தெரிவரிய பொருளாகுந்
தாவில்தனிச் சிவஞான சம்பந்த ராயினார்.

சிவபிரானது திருவடிகளையே சிந்திக்குந் திருவைப் பெருகச் செய்யுஞ் சிவஞானமாகிய ஒப்பற்ற கலைஞானத்தையும், பிறவிக்கு ஏதுவாகிய மலவாதனையை வேரற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமாகிய, உணர்வரியதாம் மெய்ஞ்ஞானத்தையும் தவமுதல்வராகிய சம்பந்தர் அந்நிலையில் உணர்ந்தார்.

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞான்ம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.

எல்லாப் பொருள்களையும் இயக்குபவன் ஈசனே என்னும் உணர்வும், அப்பொருள்தான் ஆளுடையார் அடியார்கள் என்னும் அறிவும், இதுவன்றித் தத்தம் அறிவுக்கு ஏற்றவாறு கொண்டு மனத்திட்பம் இல்லாதவர் துணிவு யாவும் துகளாகக் கொண்டு எழுவாராயினார்.

சிறப்புடைய சிவபாத இருதயர் சிறிது நேரத்திற்குப் பின் நீரில் தாம் புரியத் தக்க நியமங்கள் யாவையும் வழுவறச் செய்து முடித்த பின், கரையேறி, பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார் தம்மை நோக்கினார். கையில் பாலமுதமுள்ள கிண்ணமும், கடைவாயிற் பெருகும் பாலையுங் கண்டு, “யார் அளித்த பாலடிசில் உண்டாய்?” என்று வெகுண்டு, “எச்சில் மயங்க உனக்குப் பால் தந்தவரைக் காட்டு” என்று வினாவி, கையில் ஒரு சிறிய கோலை எடுத்து அடிப்பவரைப்போல் ஓங்கினார்.

அச்சிறிய பெருந்தகையார், ஆனந்தக் கண்ணீர் சொரிந்து உச்சியினில் கரமலரைத் தூக்கிச் சுட்டு விரலினால் சுட்டித் தமக்கு அருள்புரிந்த பின், விண்ணகக முழுவதும் பேரொளி நிறைய விடைமீது, பண்ணிறைந்த அருமறைகள் பணிந்து ஏத்த, மரகதக் கொடிபடர்ந்த பவளமலைபோல் நின்ற இறையவரை

மறைகளாலுஞ் சுட்டிக்காட்ட வொண்ணாத மணிகண்டரைக் காட்டியருளி, வேதங்களின் முதல் எழுத்தாகிய ஓங்காரத்தை தகரவித்தையை யுணர்த்தும் பொருட்டுத் தகர மெய்யுடன் கூட்டி, எழுதாமறைப் பொருளை எழுது மறையாக உட்புகுந்த சிவஞானப் பாலமுதம் பொங்கி வழிந்ததுபோல், தமது தேவாரப் பாடல் இறைவர்பால் செல்லும் வகையைப் பெறும்பொருட்டுத் திருச் செவியைச் சிறப்பித்து, "எம்மை இது செய்த பிரான் இவன்" என்று பாடுவாராயினார்.

தோடுடைய செவியன்விடை யேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாள்பணிந் தேத்தஅருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே.

அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கையலர்மேய
பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மான் இவன்றன்னை
ஒருநெறிய மனம்வைத்துணர் ஞானசம் பந்தன்உரைசெய்த
திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தல்எளிதாமே.

மண்ணுலகில் வாழும் மாந்தர்கள் பிழை செய்தாலும் சரணம் என்று வந்தடைந்தால் கண்ணுதற் கடவுள் கருணை குற்றஞ் செய்தாரையும் பெற்றதாய் போல் ஆட்கொள்ளும் என்பதனை இராவணன் கயிலைமலையை எடுத்து, அதன் கீழ் உடல் முரிந்து இடர்ப்பட்டு, இசைபாடி உய்வு பெற்ற அருட்டிறத்தை எட்டாவது பாடலில் வியந்துரைத்தார்.

தொழுவார்க்கே அருள்புரியும் இயல்புடையவர் இறைவர் என உணராது, ஆராயப் புகுந்த வழுவான மனத்தாலே மாலும் அயனும் இழிவாகிய விலங்கும் பறவையுமாகி அடிமுடி காணாமல் திகைத்து ஐந்தெழுத்தை ஓதி உய்வுபெற்றதைப் பதிகத்தின் ஒன்பதாவது திருப்பாடலில் விரித்து உரைத்தருளினார்.

வேத காரணராகிய வெண்பிறைசூடியின் திருவருள் நெறியை அறியாத புறச் சமயத்தார்களுக்குள்ளே, நலமறியுந் தன்மையில்லாத சமணர்கள், புத்தர்கள் கூறும் நெறி ஏதமானதே என்று எம்பிரான் சம்பந்தர் மொழிந்தருளினார். பதிகம் முடிவு பெற்றபின் திருக்கடைக் காப்புச் சாத்திப் பிள்ளையார் நின்றருளினார். அருட்கடலாம் அரனாரது திருவருளைக் கண்ட அமரர்கள் விண்ணிடை ஆர்த்துத் தண்மலர்மாரி பொழிந்தார்கள். வானதுந்துபி மங்கலமாக முழங்கி யது; கந்தருவரும் கின்னரரும் கானஞ் செய்தார்கள். இந்திராதி

இமையவர்கள் இனிது துதித்தார்கள். சிவகணங்கள் "அர அர" என்று ஒலி செய்து மகிழ்ந்தன.

மறைகள் ஒலிக்கவும் முனிபுங்கவர் சூழவும் அடியார்களது பிறவிப் பிணியகலவும் அருட்கடலாகிய அரனார் இமயவல்லியு டன் திருத்தோணியை அடைந்து வீற்றிருப்பாராயினார். மண்மிசை நின்ற மறைச் சிறுவர் விண்மிசை சென்ற விமலருடன் கண்ணுங் கருத்துங் கலந்தேக, ஆரா அன்புடன் திருக்கோயிலினுட் புகுந்தார். முடிவில்லாத தவஞ் செய்து தந்தையாக வந்த சிவபாத இருதயர் கையிலிருந்த கோல் தானே நழுவி விழ கை குவித்து இறைஞ்சி, உவகையும் அச்சமும் அதிசயமும் ஒருங்கே அடைந்து, அத்திருப் பாடல்களினால் இறைவரது திருவருளைக் குறிப்பினால் அறிந்தார். இறைவரைக் காணும் பேறு பெற்றாரில்லை. மைந்தருடன் கோயிலுட் சென்றார். அப்பொழுது அங்கு நிகழ்ந்தவனவற்றை ஒருவாறு கண்டவர்களும், காணாது கேட்டவர்களும், மயிர்க்கூச் செய்தி, இதுபோன்ற அதிசயம் எங்கே எப்பொழுது நிகழ்ந்தது? ஆ! ஆ! என்னே! இறையருள்? என்று விம்மிதமுற்றுத் திருக்கோயில் வாயிலையடைந்து சூழ்ந்தார்கள்.

திருஞானசம்பந்தர், "இங்கு எனையாளுடையான் உமையோடு இருந்தான்" என்று திருப்பதிகம் பாடியருளினார். ஞான போனக முண்ட பாலறாவாயர் கோயிலைவிட்டுப் புறப்பட்டார். சீகாழி யில் வாழுந் திருத்தொண்டர்கள் எதிர்கொண்டு துதிக்கின்றார்கள்.

காழியர் தவமே! கவுணியர் தனமே! கலைஞானத்
தாழிய கடலே! அதனிடை யமுதே! யடியார்முன்
வாழிய வந்திம் மண்மிசை வானோர் தனிநாதன்
ஏழிசை மொழியாள் தனதிரு வருள்பெற் றனையென்பார்.

மறைவளர் திருவே வைதிக நிலையே! வளர்ஞானப்
பொறையணி முகிலே! புகலியர் புகலே! பொருபொன்னித்
துறைபெறு மணியே சுருதியின் ஒளியே! வெளியேவந்
திறையவன் உமையாள் உடனருள் தரவெய் தினையென்பார்.

புண்ணிய முதலே! புனைமணி யரைஞா ணொ்டுபோதுங்
கண்ணிறை கதிரே! கலைவளர் பதியே! கவின்மேவும்
பண்ணியல் கதியே பருவம தொருமூ வருடத்தே
எண்ணிய பொருளாய் நின்றவ ரருள்பெற் றனையென்பார்.

என்று அடியார்கள் வாழ்த்தி வணங்கிப் புகழ்ந்தார்கள். தாதையார் தமது ஞானக் கன்றை எடுத்துத் தோள்மேல் வைத்துக் கொண்டு

களிகூர்ந்து சென்றார். சிவானந்த வெள்ளம்போல் திருவீதியில் அடியார்கள் புடைசூழ்ந்து சென்றார்கள். அந் நகர மறையோர்கள் மாளிகைமீது மங்கல மகளிர் நறுமலருஞ் சந்தனமும், வெண் பொரியுந் தூவினார்கள். மங்கல வாத்தியங்கள் முழக்கினார்கள். சாமவேதம் பாடினார்கள் நெய்விளக்கேற்றிப் பூரண கும்பம் வைத்தார்கள்; அதிசயமும் அன்பும் பெருக ஆடினார்கள்; பாடினார்கள்; சிவபாத இருதயர் சிவஞானப் பிள்ளையாருடன் தமது திருமாளிகையுள் நுழையும்பொழுது சங்க நாதம் எழுந்தது. அந்தர துந்துபி முழங்கியது. பாலறாவாயர் திருமாளிகையுட் சென்று சேர்ந்தார்.

அன்றிரவு அரனாரையே இடையறாது கருதியவண்ணம் கண் துயின்றார். மறுநாள் காலை பேரா அன்புடன் ஆராவமுதனைய அண்ணலைச் சேவிக்கும்பொருட்டு எண்ணினார். தாயாரையும் தந்தையாரையும் வணங்கி, சீகாழிக்கு அருகில் உள்ள திருக் கோலக்காவில் எழுந்தருளியுள்ள இறைவரை இறைஞ்சும் பொருட்டுப் புறப்பட்டார்.

பொற்றாளம் பெறுதல் - முதல் யாத்திரை

திருஞானசம்பந்தர், மகளிர் இனிது முழுகி மகிழுந் தாமரைத் தடாகங்கள் நிறைந்த திருக்கோலக்கா என்னும் திருத்தலத்திற் சென்று, திருக்கோயிலை வலம்வந்து, இறைவரை மறைமுடிப் பொருளால் பாட நினைந்தார். "மடையில்வாளை பாய" என்ற திருப்பாடலைப் பாடித் தமது திருக்கரங்களால் தாளமிட்டார். அம்பலவாணரது நிறைந்த கருணையினால் திருஐந்தெழுத்து எழுதிய பொற்றாளம் அவருடைய திருக்கரத்தில் வந்தது. சீகாழி வருந் தெய்வமறைச் சிறுவர் திருவருளின் திறத்தை நினைந்து போற்றி, அத் திருத்தாளத்தை முழக்கி ஏழிசையுந் தழைத்து ஓங்க இன்னிசைப் பதிகத்தை முடித்துத் திருக்கடைக் காப்புச் சாத்தியருளி னார். அமரர்கள் அதிசயித்தார்கள்; அப்பொற்றாளத்தின் அரிய நாதத்தைக் கேட்டுத் தும்புரு நாரதர் முதலிய இசைவல்லார்கள் விம்மிதமுற்றுத் துதித்தார்கள். வானவர் மலர்மழை பொழிந்தனர். பிள்ளையார் வள்ளலாருடைய திருவருளைப் போற்றிப் பொற் றாளத்துடன் நடந்து சீகாழியை நோக்கிப் புறப்பட்டார். அதுகண்டு தரியாத தந்தையார் அவரை எடுத்துத் தோளின்மிசை தரித்து நடந்தார். முத்தமிழ் விரகர் தோணியப்பரை வணங்கித் தமது திரு மாளிகையை அடைந்தார்.

இரண்டாவது யாத்திரை

ஞானசம்பந்தருடைய அன்னையார் அவதரித்த திருநனி பள்ளியில் வாழுகின்ற அந்தணர்கள், அடியார்கள் முதலியோர் கள், மிகுந்த மகிழ்ச்சியுடன் மங்கல வாத்தியங்களை முழக்கிக் கொண்டு வந்து பாலறாவாயரது பாதமலர்மீது வீழ்ந்து பணிந்தார் கள். ஏனைய ஊர்களில் வாழும் திருத்தொண்டர்களும், மறை யோர்களும் வந்து வந்து தொழுது மகிழ்ந்தார்கள். வந்தவர்கட் கெல்லாம் உணவு முதலியன தந்து உபசரிக்கின்ற சீகாழி சிவலோகம் என்று விளங்கியது.

திருநனிபள்ளியில் வாழ்வோர்கள் சிவஞானப் பிள்ளை யாரைத் தொழுது, "எம்பெருமானே! எங்கள் திருநனி பள்ளிக்கு எழுந்தருளி திங்கள் முடித்த தேவ தேவரை வணங்க வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். ஞானமுண்ட சிறிய பெருந்தகையார் இசைந்து, தோணியப்பரைத் தொழுது விடை பெற்று, தந்தையார் தோள்மீது திருநனிப் பள்ளி சென்றார். "ஆணை நமதே" என்று முடிவு பெறுகின்ற திருப்பதிகம் பாடி அருளினார். திருக்கோயில் சென்று இறைவரை இறைஞ்சினார்.

அங்கிருந்து புறப்பட்டு, திருத்தலைச்சங்காடு, திருவலம் புரஞ் சென்று, சிவமூர்த்தியைச் சேவித்து, காவிரிப்பூம்பட்டினத்து அன்பர்கள் வந்து அழைக்க ஆங்கு எழுந்தருளினார். பூம்புகாரி லுள்ள பல்லவனீச்சுரத்தை வணங்கி, அதை அடுத்துள்ள திருச்சாய்க்காடு சென்று இனிய நற்றமிழ்ப்பதிகஞ் சொற்றனர்.

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகார் எனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்றாள் சார்ந்தாரே.

நீநாளு நன்னெஞ்சே நினைக்கண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

திருவெண்காட்டில் எழுந்தருளிய எம்பிரானை வணங்க வேண்டும் என்ற எல்லையில்லாத அன்புடன் சம்பந்தர் அடியார் குழாங்களுடன் புறப்பட்டு, திருவெண்காட்டையடைந்து மண் மிசை வீழ்ந்து பணிந்து, அங்குள்ள முக்குளங்களைப் புகழ்ந்து அரிய திருப்பதிகம் பாடியருளினார்.

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

அங்கிருந்து புறப்பட்டுத் தென்திருமுல்லைவாயிலை அடைந்து பதிகம்பாடிப் பரமனை வழிபட்டு மீண்டும் சீகாழி வந்து தோணியப்பரைத் தொழுது, தமது திருமாளிகை சேர்ந்தார்.

மூன்றாவது யாத்திரை

திருஞானசம்பந்தர் மீண்டும் தலங்கள் சென்று வலங்கொண்டு நலங்கொள் நம்பரை வணங்க வேண்டும் என்று காதல் கொண்டார். திருத்தொண்டர் குழாங்களுடன் புறப்பட்டார். சீகாழிக்குக் கிழக்கேயுள்ள திருமயேந்திரப்பள்ளி, குருகாவூர் முதலிய தலங்களைச் சேவித்துச் செந்தமிழ்ப் பதிகம் பாடி மகிழ்ந்து சீகாழிக்குத் திரும்பினார்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் சந்திப்பு

இசையில் மிகவல்லுனரும், சிவபெருமானது திருவடி மறவாத திருவுடையவருமாகிய திருநீலகண்ட யாழ்ப்பாணர், தமது மனைவியார், மதங்க சூளாமணி அம்மையாருடன், பிள்ளையாருடைய திருவடியை வணங்கும் பொருட்டுச் சீகாழிக்கு வந்தார்.

பாணருடைய வரவை அறிந்த பாலறாவாயர் எதிர்கொண்டார். யாழ்ப்பாணர் மிக்க ஆர்வத்துடன் திருஞானசம்பந்தருடைய திருவடிமீது வீழ்ந்து தொழுது, எழுந்து துதித்து நின்றார். சம்பந்தர் அவரை நோக்கி, "ஐயரே! நீர் இங்கு வரும் பெரும் பேற்றை யாம் பெற்றோம்" என்று இனிது இசைத்தருளி, அவரை அழைத்துக் கொண்டு, திருக்கோயிலின் திருமுன்சென்று, கும்பிடுவித்து, "உங்கள் பெருமானை இங்கிருந்து இசையுடன் யாழ் மீட்டிப் பாடுங்கள்" என்று கட்டளையிட்டருளினார். திருநீலகண்டயாழ்ப்பாணர் தமது மனைவியார் மதங்க சூளாமணியாருடன் யாழ் மீட்டி, மிக இனிமையாகப் பாடினார். அது கேட்டுப் பிள்ளையார் உள்ளம் உவந்தார்; அங்குள்ளவர்கள் அனைவரும் அதிசயித்தார்கள்; சந்திர மண்டலத்தில் வாழும் கின்னர மிதுனம் என்ற இருபறவைகளும் இசையினைக் கேட்க இறங்கி வந்தன; ஏழிசை நூலில் வல்லவர்களாகிய கந்தருவர்களும் வித்யாதரர்களும் வியந்து பாராட்டினார்கள்.

சம்பந்தர் பாணரையும் அவர் மனைவியாரையும் அழைத்துக் கொண்டு போய் உறைவிடம் ஒன்றை அமைத்துத் தந்து, நல்விருந்து செய்து சிறப்பாக உபசரித்தார். பாணனார் பிள்ளையார் பாடி அருளிய பாடல்களைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்தார். அத் திருப்பதிகங்களை யாழில் அமைத்து, மிக இனிமையாக வாசித்து எல்லா உயிர்களையும் மகிழ்வித்தார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் சிறிய பெருந்தகையைத் தொழுது, "எந்தையே! அடியேன் தேவரீர் பாடி யருளும் பதிகங்களை யாழில் வாசித்து, எப்போதும் உம்மைப் பிரியாது சேவித்துக் கொண்டு அருகிலிருக்கும் பெரும்பேற்றினைத் தந்தருள வேண்டும்" என்று பணிந்தார். பிள்ளையாரும், "அவ்வாறே யாகுக" என்று அருள்செய்தார்.

நான்காவது யாத்திரை

சீகாழியில் எழுந்தருளியிருக்கும் திருஞானசம்பந்தர் தில்லையில் எல்லையில்லாத கருணையுடன் ஆனந்த நடனம் புரியும் அம்பலவாணரைச் சேவிக்க வேண்டும் என்ற பெரு விருப்பத்தைத் தந்தையாரிடம் அறிவித்தருளினார். அவரும் இசைந்து உடன் புறப்பட்டார். பிள்ளையார் திருத்தோணியப்பரை வணங்கி விடை பெற்றுப் புறப்பட்டார். திருநீலகண்ட யாழ்ப்பாணரும், மதங்க சூளாமணியாரும், ஏனைய அடியார்களும் உடன் சென்றார்கள். இடையிலேயுள்ள திருத்தலங்களை வணங்கிக் கொண்டு, கழனிகளையும் படுகரையும் கடந்து கொள்ளிட நதியை அடைந்தார். சந்தனக் கட்டைகளையும் மணிகளையும் கொழிக்கும் அப் பெருநதியைக் கடந்து தில்லையின் எல்லை வந்து வணங்கினார்.

சிதம்பர தரிசனம்

திருஞானசம்பந்தருடைய வரவைக் கண்டு மகிழ்ந்த சோலைகள் ஆடின; சாலிகள் தலைவணங்கின; இனிய காற்று எதிர்கொண்டது. தென்திருவாயிலின் வழியே சென்றார் பிள்ளையார். இவருடைய வரவைஅறிந்த தில்லைவாழ் அந்தணர்களும், அடியார்களும் நிறைகுடம் வைத்துத் தோரணங்கள் நாட்டி, பூமாலைகள் தொங்கவிட்டு, புகழ்ந்து சோபனங்கள் மொழிந்தார்கள்.

ஞானபோனகர் திருக்கோபுரத்தைத் தொழுது உட்புகுந்து திருமாளிகைப் பத்தியை வலம்வந்து பேரம்பலத்தை வணங்கி, ஆனந்தக்கூத்தர் திருமுன் சென்றார். இறைவர் தமக்கு அளித்த ஞானமேயான பொன்னம்பலத்தையும், தமது உள்ளத்தே நிறைந்த ஞானத்தில் எழும் ஆனந்தமேயாகிய திருநடனத்தையும், கருத்தினால்

கண்டவர், கண்ணாலும் கண்டு களித்தார். கண்ணீர் ததும்பிக் கரமலரைச் சிரமிசைக்கூப்பி அஞ்சலி செய்தார்.

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

என்ற திருப்பதிகம் பாடிப் பரவிப் பணிந்தார். எல்லாக் காலங்களிலும் வணங்கி, திருக்கோயிலை வலம் வந்து, அங்குத் தங்குவதற்கு அஞ்சி, அருகில் உள்ள திருவேட்களஞ் சென்று, அங்கு எழுந்தருளியுள்ள இறைவரைத் தொழுது, அவ்விடம் தங்கி அருளினார்.

அதனை அடுத்துள்ள திருக்கழிப்பாலை, திருநெல்வாயில் முதலிய தலங்களை வணங்கினார். தில்லையில் நடேசப் பெருமானுக்கு அணுக்கத் தொண்டர்களாய் விளங்கும் மூவாயிரம் அந்தணர்களின் பெருமையைக் கண்டு புகலிவேந்தர் அதிசயித்தார். ஒருநாள் தில்லைச் சிதம்பரத்திற்கு எழுந்தருளிய போது, அண்டர் நாயகன் அருளால் தில்லை மூவாயிரவர்களும் சிவகணங்களாகத் தோன்றப் பிள்ளையார் கண்டு, அவ்வரிய காட்சியைத் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கும் காட்டியருளினார். தில்லை மூவாயிரவரும் எதிர்கொண்டு இறைஞ்சினார்கள். இவ்வாறு, சிலகாலம் தில்லையம்பல நாதரை வழிபட்டுப் புறப்பட்டார்.

திருநீலக்ண்ட யாழ்ப்பாணர், சம்பந்தருடைய வெம்பந்தமகற்றும் செம்பதம் பணிந்து, "அடியேன் பிறந்த தலமாகிய திருஎருக்கத்தம்புலியூர் முதலிய தலங்கள் நீவாநதிக்கரையில் உள்ளவைகளைச் சேவிக்க வேண்டும்" என்று வேண்டினார். அதற்கு இசைந்த பாலறாவாயர் திரு எருக்கத்தம்புலியூரை வணங்கி, திருநீலகண்ட யாழ்ப்பாணர் அவதரிக்கத் தவஞ்செய்த இத்தலத்தின் பெருமை அளவிடற்கரியது என்று வியந்தார்.

இடையில் உள்ள திருத்தலங்களை வணங்கித் தந்தையார் தோள்மீது சென்று திருமுதுகுன்றத்தை அடைந்தார். மணி முத்தாறு புடைசூழ விளங்கும் பெருமை தங்கிய பழமலை நாதரை ஆராத காதலுடன் பணிந்து பல பதிகங்கள் பாடினார்.

அங்கிருந்து பெண்ணாகடஞ் சென்று, திருத்தூங்கானை மாடமேவிய சிவபிரானைத் தொழுதார்.

முத்துச்சிவிகை பெறுதல்

கவுணியர் குலதீபமாகிய காழிவேந்தர் திருவரத்துறை சென்று பணியணிவாரைப் பணியவேண்டு மென்று கருதி, தந்தையார் தோள்மீது ஒரொரு சமயம் செல்பவர், இப்போது தொண்டர் குழாத்துடன் நடந்து செல்வாராயினார். காதலுடன் பாததாமரை நோவ, தந்தையார் மனம் வருந்தச் சென்றார்.

பாச மற்றில ராயினும் பார்மிசை
யாசை சங்கரற் காயின தன்மையால்
தேசு மிக்க திருவுரு வானவர்
ஈச னைத்தொழு தேதொழு தேகினார்.

மாறன்பாடி என்னும் ஊர் எதிர்ப்பட்டது. உடன் வந்தவர்கள் யாவரும் வழிநடந்து களைத்தார்கள். வெம்மையினால் வெதும்பினார்கள். பிள்ளையார் திருப்பஞ்சாக்கரஞ் சொல்லிக் கொண்டு சென்றார். பிள்ளையாருடன் செல்லும் அடியார்களது அல்லலைக் கண்டு அஞ்சினவனைப்போல் வெய்யவன் மேற்கடல் வீழ்ந்தனன். சுற்றிவந்த தொண்டர்களுடன் முத்தமிழ் விரகர் அப்பதியிடை தங்கினார்.

திருவரத்துறை மேவிய சிவபெருமான் பிள்ளையாருடைய பவளமனைய பாதம் நோவ நடந்து வருவதற்கு இரங்கி, முத்துச் சிவிகையும், முத்துக்குடையும், முத்துச் சின்னங்களும் அருள விரும்பினார். திருவரத்துறை வாழும் அடியார்களது கனவில் எழுந்தருளி, "ஞானசம்பந்தன் நம்பால் வருகின்றான். முத்துச் சிவிகையையும், மணிக்குடையையும் சின்னங்களையும் நம்மிடம் பெற்றுக்கொண்டுபோய்க் கொடுங்கள்" என்று பணித்தருளினார்.

அந்தணாளர்களும் அடியார்களும் எழுந்து, இறைவரது அருள் மொழியை நினைந்து அற்புதமுற்றுத் திருக்கோயிலை அடைந்தார்கள். கோயிலில் உள்ளவர்கட்கும் இவ்வாறு கனவில் அருள்பெருக, "இது என்ன அதிசயம்" என்று துணுக்குற்றனர். விடியற்காலமாகிய அப்போது திருப்பள்ளி எழுச்சிக்காகத் திருக்கதவைத் திறந்தார்கள். சந்திரனைப் போன்ற குளிர்ந்த முத்துச் சிவிகையும், முத்துக் குடையும், ஊதுவதற்குரிய ஒப்பற்ற சின்னங்களையும் கண்டார்கள். அவைகளைத் தொழுது எடுத்துக் கொண்டு ஞானசம்பந்தரை நாடி வந்தார்கள்.

ஞானசம்பந்தருக்கும் அன்றிரவு, "நாம் மகிழ்ந்து அளிக்கும் சிவிகை முதலியவைகளை நீ கொள்ளத் தகும். ஆதலின், சிவிகை

யூர்ந்து கவிகையுடன் வருக" என்று அருள் செய்தனர். அவர் தாம் கண்ட அருட்டிறத்தை உடன் வந்தார்கட்கு உரைத்தருளி னார். முத்துக் சிவிகையில் முத்தமிழ் விரகர் எழுந்தருளினார். முத்துச் சிவிகையில் முத்தமிழ் விரகர் எழுந்தருளும் கோலத்தைக் காணுங் காதலுடன் வருவான்போல் கதிரவன் உதயமானான். "அர அர" என்று ஆர்த்து அடியார்கள் முத்துச்சிவிகை முதலிய வற்றைக் கொணர்ந்து, "எந்தையார் தந்தருளியன இவை" என்று திருமுன் வைத்து வணங்கினார்கள். சம்பந்தர், "எம்பிரான் அருள் இதுவோ" என்று அவைகளை வலம் வந்து பணிந்து, ஐந்தெழுத்தை ஓதிச் சிவிகையில் ஏறியருளினார்.

> சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
> மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்
> றாதி யார்அரு ளாதலின் அஞ்செழுத்
> தோதி யேறினார் உய்ய உலகெலாம்.

மறைகள் ஆர்த்தன; மலர்மழை சிந்தியது; தொண்டர்களும், அண்டர்களும் ஆர்த்தார்கள். மங்கல வாத்தியங்கள் முழங்கின. திருவரத்துறைக் கோயில் எதிர்ப்பட்டதும், பிள்ளையார் சிவிகை யினின்றும் இறங்கி, வலம் வந்து வணங்கி, "என்னையும் பொருளாக இன்னருள் புரிந்தருளும் எந்தாய்! நின் பொன்னடிக் கமலம் போற்றி" என்று துதித்து தொழுது அழுது நற்றமிழ்ப்பதிகம் நவின்றார். சில நாள்கள் அங்குத் தங்கியிருந்தார். அங்கிருந்தபடியே திருவெண்ணெய்நல்லூரைச் சென்று வழிபாடு செய்தார்.

சீகாழி திரும்புதல்

ஒருநாள் தோணிபுரத்தீசர் அம்மையுடன் உணர்வினில் தோன்றி அருள்புரிந்தனர். உள்ளம் உருகிய பிள்ளையார் புகலி சென்று தன்னையாட்கொண்ட அன்னையையும் அப்பனையும் வணங்க விரும்பி, திருவரத்துறைப் பெருமானிடம் விடை கொண்டு, முத்துச் சிவிகையூர்ந்து புறப்பட்டார்.

திருப்பழுவூர், விசயமங்கை, திருவைகா, திருப்புறம்பயம், திருச்சேய்ஞலூர், திருவியலூர், திருந்து தேவன்குடி, திருப்பந் தணைநல்லூர், ஓமாம்புலியூர், திருவாழ்கொளிபுத்தூர், திருக் கடம்பூர், திருநாரையூர், திருக்கருப்பறியலூர் முதலிய திருத் தலங்களிற் சென்று, ஆங்காங்குச் செந்தமிழ்ப் பதிகஞ் செப்பி, ஒப்பிலாமணிப் பரமனை வணங்கிச் சீகாழியை அடைந்தார். சீகாழியில் உள்ள ஜனங்கள் முத்துச் சிவிகையில் வரும் திங்கட்

கொழுந்தன்ன வெங்குரு வேந்தரை எதிர்கொண்டு பணிந்தார்கள். எங்கும் பூரண கும்பங்கள் வைத்து, நறுநெய் விளக்கு ஏற்றி, வாழைக் கமுகுகள் நாட்டி, மகர தோரணங்கள் கட்டித் தூப தீபம் வைத்து சிறப்புச் செய்தார்கள். செழும் பட்டாடைகளை வீசி ஆர்த்தார்கள். அவ் வோசைகள்எட்டுத் திசைகளுங் கேட்டன. பிள்ளையார் தம்மையாண்ட வள்ளலார் தோணியப்பரைத் தொழுது, திரு மாளிகை சேர்ந்தார். நற்றவஞ் செய்து பெற்ற தாயார் திரு நீற்றுக் காப்பு சாத்திப் போற்றினார். அடியவர் கணங்களுடன் சீகாழியில் மன்னர் எழுந்தருளியிருந்தார்.

உபநயனம்

ஆளுடைய பிள்ளையார், தமது செல்வத் திருமாளிகையில் அமர்ந்து, நாடோறும் திருக்கோயில் சென்று திருத்தோணியப்பரை வழிபட்டு, செந்தமிழ்ப்பதிகம் பலவும் பாடிக் கொண்டிருந்தார். உபநயனம் புரியும் பருவம் எய்தியது. உலகங்கடந்த சிவஞானம் உணரப்பெற்ற பிள்ளையாருக்கு, அந்தணர்கள் கூடிப் பழமையான வேதவிதிப்படி சடங்குகள் செய்தனர். திருஞானசம்பந்தர் மான் தோலுடன் கூடிய முப்புரி நூலைத் தாங்கியருளினார். ஒரு பிறப்பும் எய்தாத உத்தமரை இரு பிறப்பாளராகச் செய்து, வேதியர்கள் அவர் திருமுன் நின்று "நான்கு வேதங்களையுந் தந்தோம்" என்று, மந்திரங்களை மொழிந்தார்கள். அப்பொழுது பாலறாவாயர் எண்ணிறந்த புனித வேதங்களைத் தமது மதுர வாக்கினால் அவர்கட்கு ஓதி அருளினார். அந்த அற்புதத்தைக் கண்ட அந்தணர்கள், தமது கண்முன் உருவெடுத்து வந்த தியானப் பொருளே, என்று கருதி அவர் திருவடித் தாமரைகளை வணங்கி, தாம் முன் கற்ற வேதங்களில் உள்ள சந்தேகங்களைப் பிள்ளை யார்பால் கேட்டு ஐயந் தீர்ந்து அகமகிழ்ந்தார்கள். முத்தமிழ் விரகர் பின்னும் அவர்களை நோக்கி, "எல்லா மந்திரங்களுந் தோன்று வதற்கு மூலகாரணமாகியது முழு முதல்வனது திருவைந்தெழுத்தே யாகும்" என்று எடுத்து உபதேசித்துப் பஞ்சாக்கரப் பதிகம் பாடியருளினார்.

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன அஞ்செ ழுத்துமே.

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன

செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே.

திருநாவுக்கரசர் சந்திப்பு

கருங்கடலில் கல்மிதப்பில் கரை ஏறிய திருநாவுக்கரசு நாயனார், சிவபெருமானும் உமாதேவியாரும் விடையின் தோன்றி அளித்த எல்லையில் சிவஞானப் பாலையுண்ட திருஞான சம்பந்தருடைய திறங்களைச் செவியுற்று, அவரை வணங்குதற் பொருட்டுச் சீகாழியை அடைந்தார்.

அவருடைய வருகையைக் கேட்ட சம்பந்தப் பெருமான், தமது அன்பர் குழாத்துடன் மிக்க மகிழ்ச்சியோடு எதிர்கொள்ளச் சென்றார்.

சிந்தையிடை யறாஅன்புந் திருமேனி தனில்அசைவும்
கந்தைமிகை யாங்கருத்தும் கையுழவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும் வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத் தரசும்எதிர் வந்தணைய.

எதிரே திருநாவுக்கரசு நாயனாருடைய திருமேனியைக் கண்ட பிள்ளையார், தாம் கருத்தில் வைத்துப் பரவும் மெய்யன்புடைய தொண்டர் திருவேடம் நேரே தோன்றியதென்று தொழுதார். பிள்ளையாரை நாவுக்கரசும் எதிர்பணிந்தார். பிள்ளையார் பெருங் காதலுடன் மதுரமொழிகள் கூறி, அவரைத் திருக்கோயிலுக்கு அழைத்துக் கொண்டுபோய் இறைவரைக் கும்பிட்டு தமது திரு மாளிகைக்கு அழைத்துக்கொண்டு சென்றார். அவருக்கு அன்புடன் திருவமுது செய்வித்தார். அரசுகள் சிலநாள் அங்குத் தங்கி, மீண்டுந் தலங்கள்தோறும் எழுந்தருளியுள்ள பரமரை வணங்குதற் பொருட்டுப் பிரியாவிடைபெற்றுப் புறப்பட்டுச் சென்றார்.

பிள்ளையார், திருமொழி மாற்று, திருமாலைமாற்று, திருவழி மொழித் திருஇராகம், திரு ஏகபாதம், திரு எழுகூற்றிருக்கை, திரு ஈரடி, திரு ஈரடிமேல் வைப்பு, திரு நாலடிமேல் வைப்பு, திருவிராகம், திருச்சக்கரமாற்று முதலிய அருட் பதிகங்களை ஓதியருளினார்.

ஐந்தாவது தலயாத்திரை

சிவஞானப் பாலுண்ட பிள்ளையார் சிவமூர்த்தி எழுந்த ருளியுள்ள தலங்கள் எல்லாவற்றையும் வணங்கவேண்டும் என்ற விருப்பமுற்று, தந்தையார்க்கும் ஏனைய அடியார்கட்கும் தமது கருத்தை அறிவித்தருளினார். தந்தையார் மகனாரைப் பிரிந்திருக்க

மாட்டாராய் சிலநாள் தாமும் உடன் வருவேன் என்றார். பிள்ளையார் இசைந்து உடன்வருமாறு கூறியருளினார். தோணியப்பரை வணங்கி, தாதையார், பாணனார் முதலியவர்கள் பின் வரச் சிவிகை மீது புறப்பட்டார். சின்னங்கள் ஆர்த்தன.

திருக்கண்ணார் கோயில் சென்று வணங்கி, காவிரியின் வடகரையில், மேல்திசை நோக்கிச் செல்வாராயினார். புள்ளிருக்கு வேளூர் சென்று சம்பாதி சடாயு என்ற பறவையரசுகள் பூசித்த திறத்தைப் புகழ்ந்து பாடியருளினார்.

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

திருநின்றியூர், திருநீடூர், திருப்புன்கூர், திருப்பழ மண்ணிப் படிக்கரை, திருக்குறுக்கை, திரு அன்னியூர், திருப்பந்தணை நல்லூர், திருமணஞ்சேரி, திரு எதிர்கொள்பாடி, திருத்துருத்தி, திருவேள்விக் குடி, திருக்கோடிகா, திருக்கஞ்சனூர், திருமாந்துறை, திருவிபலூர், திருந்துதேவன்குடி, திரு இன்னம்பர், திருவடகுரங்காடுதுறை, திருப்பழனம் முதலிய திருத்தலங்கள் சென்று ஆங்காங்குத் திருப்பதிகங்கள் பாடி வழிபாடு செய்தார். வடகுரங்காடு துறையில் வாலியார் வழிபட்டதைச் சிறப்பித்துப் பாடியருளினார்.

நீலமா மணிநிறத் தரக்கனை யிருபது கரத்தொ டொல்க
வாலினாற் கட்டிய வாலியார் வழிபட மன்னு கோயில்
ஏலமோ டிலையில வங்கமே இஞ்சியே மஞ்ச ளுந்தி
ஆலியா வருபுனல் வடகரை யடைகுரங் காடு துறையே.

அடியார்கள் தமது நகரை அலங்கரித்து எதிர்கொள்ளத் திருவையாற்றை அடைந்தார். திருநந்திதேவர் அருள் பெற்ற அத் திருநகரை வணங்கிச் செல்லும்போது

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைமேலுந்தி
அலமந்த போதாக அஞ்சலென் றருள்செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென் றஞ்சி
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவை யாறே.

என்ற திருப்பதிகம் பாடியருளினார். திருக்கோயிலுள் சென்று காதலாகிக் கசிந்து கண்ணீர் பொழிந்து மழுமான் ஏந்திய மணிகண்டரைத் தொழுது வண்டமிழ்மாலை சாத்தினார்.

திருப்பெரும்புலியூர், திருநெய்த்தானம், திருமழபாடி, திருக்கானூர், திரு அன்பிலாலந்துறை, திருவடகரை, மாந்துறை, முதலிய திருத்தலங்களைச் சேவித்துக் கொண்டு, திருப்பாச் சிலாச்சிராமம் அணைவாராயினார்.

முயலகன் தீர்ந்தது

காவிரிபாயும் மழ நாட்டில் விளங்கும் அத் திருப்பாச் சிலாச்சிராமத்தில் கொல்லி மழவன் என்ற அன்பன் ஒருவன் வாழ்ந்தான். அவனுடைய செல்வப் புதல்வி இனிய செஞ்சொற் களும், அழகிய திருமேனியும் உடையவள். கொடிய நோயாகிய முயலகன் என்ற பெரும் பிணியினால் அவள் பெரிதும் துன்புற்றாள். அந்நோய் எதனாலுந் தீராது வாட்டியது. அதனால், கொல்லிமழவன் சுற்றத்தாருடன் மிகவும் வருந்தி மனந் தளர்ந் தான். மணிமந்திர மருந்துகளால் தீராததைக் கண்ட கொல்லி மழவன் மான் ஏந்திய பெருமானை வழி வழியே வணங்கும் மரபில் வந்தவன். ஆதலினால், மகளைக் கொண்டுபோய்த் திருக் கோயிலிலே புரமெரித்த அரனார்முன் கிடத்தி வைத்தான்.

அந்தச் சமயத்தில் திருஞானசம்பந்தர் அங்கு எழுந்தருளினார். "பாலறாவாயர் வந்தார்" "முத்தமிழ் முதல்வர் வந்தார்" "கவுணியர் பெருமானார் வந்தார்" என்று முழங்கும் திருக்காளத்தின் ஒலியைக் கேட்டு, கொல்லிமழவன் புதல்வியை விடுத்து, திருநகரை அலங்கரித்தான். திருவிளக்கும் பூரண கும்பமும் வைத்தான். ஏனைய சிறப்புக்கள் பலவுஞ் செய்து, பிள்ளையார் திருமுன் வந்தான். ஆனந்தக் கண்ணீர் பொழிந்தான். முத்துச் சிவிகைமுன் மண்ணில் வீழ்ந்து தொழுதான். ஞானபோனகர் கருணை பூத்து, "எழுக" என்று அருள்புரிந்தார். திருக்கோயிலுக்கு அருகிற் சென்று, சிவிகை யினின்றும் இறங்கி ஆலயத்துட் சென்று அங்கு உணர் வின்றிக் கிடக்கும் பெண்மகவைக் கண்டார். "இது என்ன" என்று வினாவியருளினார்.

கொல்லிமழவன், "எந்தையே! இவள் என் புதல்வி, முயலகன் என்ற கொடிய பிணியினால் துடிக்கின்றாள். ஒன்றாலும் நோய் தீராமையால் இறைவர்முன் கிடத்தினேன்" என்று கூறினான். உடனே பிள்ளையார் அளவிறந்த கருணையுடன், எம் பெருமானைத் தொழுது, "மணிவளர் கண்டரே! மங்கையை வாடச் செய்வதோ மாண்பு?" என்று, பிணிதீரும் பதிகம் பாடி அருளினார்.

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோல மெலாஞ்செய்து பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வதோ விவர்மாண்பே.

உடனே கொல்லிமழவன் பெற்ற குலமகள் நோய்தீர்ந்து எழுந்து, பொற்கொடியென வந்து தந்தை அருகு வந்தாள். மழவன் மகளுடன் பிள்ளையார் பெருங்கருணைத் தாள்மீது வீழ்ந்தான். பிள்ளையார் வள்ளலார் பதம் பணிந்தார். அடியவர்கள் ஆர்த்தார்கள்.

ஆளுடைய பிள்ளையார் அங்கிருந்து புறப்பட்டு, திருப் பைஞ்ஞீலியை வணங்கி, திருஈங்கோய் மலையைத் தொழுது செந்தமிழ்ப் பதிகம்பாடி, வேறுபல தலங்களையும் வழிபட்டுக் கொண்டு கொங்குநாட்டை அடைந்தார்.

குளிர்நோய் தீர்த்தது

திருஞானசம்பந்த நாயனார் திருத்தொண்டர் குழாங்களுடன் கொங்குநாட்டில் சிறப்புடன் விளங்கும் திருக்கொடி மாடச் செங்குன்றூரை அடைந்தார். அந்நகர மக்களும் அடியார்களும் நகரை அலங்கரித்து எதிர்கொண்டு உபசரித்தார்கள். பாலறா வாயர் ஆங்கு எழுந்தருளியுள்ள மாதொரு பாகனை வழிபட்டு வண்டமிழ் மாலை சாத்தினார்.

அதற்கு அப்பால் மேல் திசையில் உள்ள திருத்தலங்களை வணங்கிக்கொண்டு திருநணா (பவாநி) சென்று ஆலமுண்ட நீலகண்டப் பெருமானை வணங்கி மீண்டுந் திருச்செங்கோட்டை அடைந்தார். அப்பொழுது மழை பொழியும் பருவம் மாறி பனிக் காலம் எய்தியது. எங்கும் பெரும்பனி பொழிந்தது. குன்றுகள் வெள்ளைப் போர்வை போர்த்தது போலவும், முத்துக்களை பச்சைக் கொடியில் கோத்தது போலவும் அறுகம்புற்களில் பனித் துளி கோவைப்பட்டுக் காட்சியளித்தது. இரும்புச் சட்டியில் நெருப்பை யிட்டு மக்கள் குளிர் காய்வார்கள். அகிற்புகையை எங்கும் பரப்புவார்கள். குளிரினால் மக்கள் பெரிதும் வருந்தினார்கள்.

பிள்ளையாருடன் பரிசனங்கள் பலநாள்கள் அங்குத் தங்கிய படியால் கொடிய குளிர்க்காய்ச்சல் வந்து துன்புற்றார்கள். அதனை

ஆளுடைய பிள்ளையாரிடம் அறிவித்தார்கள். "இது இந்நிலத்திற்கு இயல்பு எனினும் நமக்கு இக்கொடுமை எய்தலாமோ?" என்று இறைவர் மீது திருப்பதிகம் பாடியருளினார்.

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூன மன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்.

உடனே, அந்நகர மாந்தரே அன்றி அந்நாட்டு மக்கள் அனைவரும் தீய குளிர்க்காய்ச்சல் நீங்கிச் சுகம் பெற்றனர்.

சோழநாட்டுத் தலங்கள்

உலகம் உய்யவந்த அலகில் புகழுடைய பிள்ளையார் சில நாள் அங்கிருந்து அடியவர் குழாம் புடைசூழப் புறப்பட்டு, கீழ் திசை நோக்கி காவிரிக்குத் தென்பால் உள்ள திருப்பாண்டிக் கொடுமுடி, திருவெஞ்சமாக் கூடல், கருவூர் ஆனிலைக் கோயில் முதலிய பதிகளைத் தரிசித்துக்கொண்டு, மாணிக்க மலையாகிய திருவாட்போக்கியை வணங்கித் திருப்பராய்த்துறை, திருக்கற்குடி மலை, திருமூக்கீச்சரம், (உறையூர்) முதலியவைகளைத் தரிசித்துக் கொண்டு திருச்சிராப்பள்ளியை அடைந்தார்.

அராப்பணி பூண்ட சிராப்பள்ளி நாதரை வணங்கி, திருவானைக்கா மேவிய செழுநீர்த்திரளைத் தொழுதார். தவத்துறை, திருப்பால் துறை, திரு எறும்பியூர், திருநெடுங்களம், திருக்காட்டுப் பள்ளி, திருஆலம்பொழில், திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருவெண்ணியூர், திருச் சக்கரப்பள்ளி, திருப்புள்ளமங்கையில் உள்ள ஆலந்துறைக் கோயில், திருப்பாலைத் துறை, திருநல்லூர், திருக்கருகாவூர், திரு அவளி வணல்லூர், திருப்பரிதி நியமம், திருப்பூவனூர், திரு ஆவூர் முதலிய தலங்களைச் சேவித்துக்கொண்டு, திருவலஞ்சுழியை அடைந்தார். திருத்தலத்தில் வாழும் அடியார்கள் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்று வணங்கினார்கள். சில நாள்கள் அங்குத் தங்கி சுழி நாதரை வழிபட்டார்.

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே.

முத்துப்பந்தர் தந்தது

கோடைக்காலம் எய்தியது. பிள்ளையார் அங்கிருந்து புறப் பட்டு, திருஆறை மேற்றளி, திருச்சத்திமுற்றம் பணிந்து திருப் பட்டீச்சரத்தை நாடிச் செல்லுவாராயினார். எங்கும் மிகுந்த வெப் பம்; அனற்குழம்பாக வெயில் வெதுப்பியது. அவ்வெப்பந் தணிப்பதற்காக ஒரு சிவபூதம் முத்தமிழ் விரகர் முடிமீது முத்துப்பந்தர் பிடித்து, பிறர் தம்மைக் காணாத வண்ணம் நின்று, "எம்மை பட்டீசப் பெருமான் இவ்வாறு முத்துப் பந்தர் பிடிக்குமாறு ஏவியருளினார்" என்று கூறியது.

திருஞானசம்பந்தர், "எம்பிரான் திருவருள் இதுவோ" என்று உடல் புளகமுற்று நிலமிசை வீழ்ந்து வணங்கினார். புத்தேளிர் பொழியும் பூம்பந்தர் போன்று பொலியும் அப்பந்தரின் அழகிய காம்புகளை அடியார்கள் தாங்கினார்கள். அம்பலத்தில் ஆடுகின்ற அடிமலரின் நிழலில் அமர்ந்திருப்பவரைப் போல ஆளுடைய பிள்ளையார் அமர்ந்தருளினார். தொண்டர்களும் அண்டர்களும் எண்டிசையுங் கேட்க ஆரவாரஞ் செய்தார்கள். வள்ளலார் வரவை அறிந்த திருப்பட்டீச்சர அன்பர்கள் எதிர்கொண்டு ஏத்தினார்கள். பிள்ளை யார் திருக்கோயிலுட் சென்று ஆராத காதலுடன் அரனாரை அருந்தமிழ் மாலை புனைந்து பணிந்தார்.

திருவாறை வடதளி, திரு இரும்பூளை, திரு அரதைப் பெரும்பாழி, திருச்சேறை, திருநாவலூர் மயானம், திருக்குடவாயில், திருநறையூர்ச் சித்தீச்சரம், திரு அரசிற்கரைப்புத்தூர் திருச்சிவபுரம், திருக்குடமூக்கு, திருக்குடந்தைக் கீழ்க் கோட்டம், திருக்குடந்தைக் காரோணம், திருநாகேச்சுரம், திருவிடைமருதூர், திருத்தென்குரங் காடுதுறை முதலிய புண்ணியத் தலங்களைப் போற்றி செய்து திருவாவடுதுறை வந்தார்.

உலவாக்கிழி பெற்றது

திருவாவடு துறையில் வாழும் அடியார்கள் புகலிவேந்தரை எதிர்கொள்ள வந்தார்கள். அதுகண்ட செந்தமிழ்ப் பிள்ளையார் சிவிகை விட்டிறங்கி அவர்களை வணங்கினார். அடியார்கள் பாலறாவாயரைப் பன்முறை தொழுது திருக்கோயிலுக்கு அழைத்துக் கொண்டு சென்றார்கள். ஆவடுதுறையுறை அமுதை அருந்தமிழ் மாலை சாத்தி ஆராத காதலுடன் புகலி வித்தகர் போற்றி செய்தார். அத்தலத்தில் திருத்தொண்டர்களுடன் தங்கியிருந்தார்.

பிள்ளையாருடைய தந்தையார் சிவபாத இருதயர், தாம் நியதியாக வேள்விபுரியும் காலம் வந்ததனால், பிள்ளையார் திருமுன் சென்று, "சீகாழிக்குச் சென்று யான் சிவவேள்வி புரிதல் வேண்டும். அதற்குப் பொருள் வேண்டும்" என்று விண்ணப்பம் புரிந்தார். அதுகேட்ட ஞானபோனகர், "முடிவில்லாத பொருளாக வுள்ளன ஆவடுதுறை மேவிய எந்தையார் இணையடிகளன்றோ?" என்று கூறி எழுந்தருளினார். நேரே திருக்கோயிலுக்குச் சென்று பாடு கின்றார்.

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடறனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

இதுவோ எமையாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை யரனே.

உடனே, ஒரு சிவ பூதம் ஆயிரம் பசும் பொன்னடங்கிய முடிப்பைப் பலிபீடத்தில் வைத்து, "இந்த உலவாக்கிழி உமக்கு அமலனார் அருளியது" என்று கூறியது. ஞானசம்பந்தர் நிலமிசை நெடிது வீழ்ந்து வணங்கினார். அக்கிழியை எடுத்துத் தலைமிசை வைத்து, துணிந்த பொருளைத் தணிந்த சிந்தையுடைத் தந்தை யார்க்கு உரைப்பாராகி,

ஆதி மாமறை விதியினால் ஆறுசூழ் வேணி
நாத னாரைமுன் னாகவே புரியுநல் வேள்வி
தீது நீங்கநீர் செய்யவும் திருக்கழு மலத்து
வேத வேதிய ரனைவருஞ் செய்யவு மிகுமால்.

"ஐய! வேதவிதிப்படி சிவபெருமானையே முதல்வராகக் கொண்டு சிவவேள்வியை உலகத்தின் இடர் நீங்கப் புரிவீர். சீகாழியில் உள்ள ஏனைய அந்தணர்கள் அனைவரும் அவ் வண்ணமே செய்க. இக்கிழி எடுக்க எடுக்க உலவாது மிகுதி யடையும்" என்று திருவாய் மலர்ந்து தந்தருளினார். தந்தையார் சீகாழி சென்றார்.

சம்பந்தர் சிலநாள் திருவாவடுதுறையில் தங்கியிருந்து சிவ பெருமானிடமும் அடியார்களிடமும் பிரியாவிடை பெற்றுப் புறப்பட்டார்.

திருக்கோழம்பம், திருவைகல், மாடக் கோயில், திருநல்லம், திருச்சிறுகுடி, திருப்பாம்புரம், திருவழுந்தூர், திருத்துருத்தி,

திருமூவலூர், திருமயிலாடுதுறை, திருச்செம்பொன்பள்ளி, திருவிளநகர், திருப்பறியலூர், கடற்கரையில் உள்ள பல பதிகள், திருவிடைக்கழி, திருவேட்டக்குடி முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு தருமபுரத்தைச் சார்ந்தார்.

யாழ்மூரி பாடியது

காரைக்காலுக்கு அருகில் உள்ள தருமபுரம் என்னும் அத்திருத் தலம் திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய தாயார் பிறந்த ஊர். அதனால், பாணருடைய சுற்றத்தார்கள் எதிர்கொண்டு ஞான சம்பந்தருடைய திருவடித் தாமரைகளில் வீழ்ந்து வணங்கி வாழ்த்தினார்கள். திருநீலகண்ட யாழ்ப்பாணர் அச்சுற்றத்தாரை நோக்கி, "உமையம்மையார் தந்த சிவஞானப்பாலுண்ட பிள்ளையார் அருளிச் செய்கின்ற திருப்பதிகங்களை யாழில் பயிற்றி வர்சிக்கும் பெரும்பேறு அடியேன் பெற்றுளேன்" என்று கூறினார். அதுகேட்ட அவர்கள், ''திருப்பதிகத்திற் கிளர்ந்த வோசையானது அளவுபெறும்படி யாழில் நீர் வைத்து வாசிப்பதனால் உலகமெல்லாம் பதிகத்தின் இசை வளர்கின்றது'' என்று கூறினார்கள். யாழ்ப்பாணர் அது கேட்டு உள்ளம் நடுங்கி, சிவஞானப் பிள்ளையார் திருவடியை வணங்கி, "எந்தையே! அளவினுட்படாத திருப்பதிக இசை கருவியில் அடங்காத வகையினை, இவர்களும் உலகமாந்தரும் அறிந்து அவ் வுண்மையை உணர்ந்து உய்யும்படி, பலர் புகழும் பதிகம் ஒன்று பாடியருளினால், அடியேன் யாழில் அடங்காமையைக் காட்டப் பெறுவேன்" என்று விண்ணப்பஞ் செய்தார். புகலிவித்தகர் இறைவரைத் தொழுது திருப்பதிக இசை நாதம் முதலியவைகட்கு அடங்காத தன்மையைக் காட்டும் பொருட்டு அடியில் வரும் அரும்பதிகத்தைப் பாடியருளினார்.

மாதர் மடப்பிடியு மட அன்னமு மன்னதோர்
    நடை யுடைம் மலை மகள் துணையென மகிழ்வர்
பூதவி னப்படை நின்றிசை பாடவு மாடுவர்
    அவர் படர் சடைந்நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவர் ஆழ்கடல் வெண்டிரை
    இரைந் நுரை கரைபொரு துவிம்மி நின்றயலே
தாதவிழ் புன்னைதயங் கும லர்ச்சிறை வண்டறை
    எழில் பொழில் குயில் பயில் தருமபுரம் பதியே.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் முன்புபோல் யாழைக் கரத்தில் தாங்கி வாசிக்கத் தொடங்கியபோது அதன் ஓசை நரம்பில்

அடங்கவில்லை. அச்சமும் அன்புங் கொண்ட பாணனார் சம்பந்தர் சரணத்தில் வீழ்ந்து வணங்கி, "இப் பெரியோர் அருளிச் செய்த திருப்பதிகத்தின் இசையை யாழில் இயற்றுவேன் என்று செப்பியது இக்கருவியைத் தொடுவதினாலன்றோ?" என்று தெளிந்து யாழை எடுத்து முரிக்கத் தொடங்கினார்.

பிள்ளையார் அவரை நோக்கி, "ஐயரே! இந்த யாழைக் கொடும்" என்று வாங்கிக் கொண்டு பகர்வார். "ஐயரே! நீர் யாழை முரிக்குஞ் செயல் யாது கருதி? ஆளுடையாளுடன் கூடி அரனார் அளித்தருளிய திருவருளின் பெருமையெல்லாம் தெரிவதற்கு நம்மிடத்தில் பொருந்திய இந்தக்கருவியின் அளவில் அடங்குமோ? ஒருபோதும் அடங்காது; நமது இயல்புக்குத் தக்கவாறு உலகத்திலுள் ளோர் அறியும்படி இக்கருவியில் அமைய வாசித்தலே வழக்காகும். சிந்தையிலும் அடங்காத இசையின் பெருமை செயலுள் அடங்குமோ? ஆதலின், இந்த யாழினைக் கொண்டு திருப்பதிகங் களை இதனுள் பொருந்திய அளவில் வாசிப்பீர்" என்று யாழைப் பாணனார் கையில் தந்தருளினார். செந்தமிழ் விரகர் தந்த யாழைத், தொழுது வாங்கிப் பாணனார் அதனைத் தலைமேல் வைத்து ஏற்றுக் கொண்டார்.

திருஞானசம்பந்தர் அங்கிருந்து புறப்பட்டு, திருநள்ளாறு சென்று, "போகமார்த்த பூண்முலை" என்ற திருப்பதிகம் பாடியருளி னார். அப்பதிகத்தை யாழில் வாசிக்குமாறு கட்டளையிடத் திருநீலகண்டர் யாழ் மீட்டி இனிது வாசித்தார். உலகம் மகிழ்ந்தது.

திருநீலநக்கர் சந்திப்பு

அருகில் உள்ள தலங்களைச் சேவித்துக் கொண்டு திருச்சாத்த மங்கைக்கு வந்தார். திருச்சாத்தமங்கை என்னும் அவ்வூரில் வாழு கின்ற திருநீலநக்க நாயனார் பிள்ளையார் வருகையை அறிந்து, எங்கும் வாழை கமுகுகள் நாட்டி, தோரணங்கள் கட்டி, பூ மாலைகள் தொங்கவிட்டு, நிறைகுடம் வைத்து, தூப தீபம் அமைத்து எதிர்கொண்டார். பிள்ளையாரை வணங்கி அயவந்தி என்னும் திருக்கோயிலுக்கு அழைத்துக்கொண்டு சென்றார். உலகம் உய்யவந்த பாலறாவாயர் சிவபெருமானை வணங்கித் தமிழ்மாலை புனைந்து, திருநீலநக்கர் வேண்டுகோளுக்கு இணங்கி அவருடைய திருமாளிகைக்கு எழுந்தருளினார். அவர் அமைத்த இனிய திருவமுதை உண்டு அந்த இரவு பாணருக்குந் தங்க இடந்தரச் செய்து தங்கினார். திருப்பதிகத்தில் திருநீலநக்கருடைய அன்பின் திறத்தைப் பாராட்டியருளினார்.

மறையினார் மல்குகாழித் தமிழ்ஞான சம்பந்தன் மன்னும்
நிறையினார் நீலநக்கன் நெடுமாநக ரென்று தொண்டர்
அறையுமூர் சாத்த மங்கை அயவந்தி மேலாய்ந்த பத்தும்
முறைமையா லேத்த வல்லார் இமையோ ரிலுமுந் துவரே.

நட்பு மிகுந்த திருநீலநக்கருடன் சிலநாள் தங்கியிருந்து, அவர் பால் விடைபெற்று, திருநாகைக்காரோணஞ் சென்று, இறைவரை வணங்கி, திருச்சிக்கல், திருக்கீழ்வேளூர் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு சென்றார்.

சிறுத்தொண்டர் சந்திப்பு

இவர் எழுந்தருளி வருவதைத் திருச்செங்காட்டங்குடியில் வாழும் சிறுத்தொண்ட நாயனார் கேட்டு, எல்லையில்லாத மகிழ்ச்சி அடைந்து விரைந்து ஓடி எதிர்கொண்டு தமது திருப்பதிக்கு அழைத்துக்கொண்டு சென்றார். ஞானபோனகர் திருச்செங்காட்டங்குடி சென்று கணபதீச்சுரம் என்ற திருக்கோயிலுட் சென்று உம்பர் பரவும் நம்பரை வழிபட்டுச் சிறுத்தொண்டரது திருத்தொண்டினைத் திருப்பதிகத்துள் சிறப்பித்துப் பாடினார்.

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே.

மாமாத்திரர் தலைவராகிய சிறுத்தொண்டரது திருமாளிகையில் தொண்டர் கூட்டத்துடன் சிலநாள் தங்கி இருந்தார்.

அரவின் விடம் அகற்றியது

திருஞானசம்பந்த நாயனார் திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டரது திருமடத்தில் எழுந்தருளியிருந்தபோது, அடியார் குழாங்களுடன் அருகில் உள்ள திருமருகல் என்னும் திருத்தலத்திற்கு எழுந்தருளினார். அரவையும், பிறையையும் செஞ்சடை மேல் வைத்த மாணிக்கவண்ணரைத் தொழுது, திருப்பதிகம் பாடித் துதித்து, அப்பதியில் ஒரு புடை எழுந்தருளியிருந்தார்.

அவ்வாறு பிள்ளையார் இருந்த நாள்களில் ஒருநாள் ஒரு வணிகன் வழிச்செல்வோனாகி, ஒரு கன்னிகையை அழைத்துக் கொண்டு, திருமருகல் என்னும் தலத்திற்கு வந்தான். பொழுது

சென்றதனால் திருக்கோயிலின் புறத்தே ஒருமடத்தில் படுத்துத் தூங்குவானாயினான். அவ்வாறு துயில்கின்றவன் கொடிய அரவந் தீண்ட, விடந் தலைக்கேறி உயிர் பிரிவோனாயினான். அதுகண்ட கன்னி அளப்பற்ற துயரமுற்றாள். அவள் மணஞ் செய்யப் பெறாதவளாதலினால் அவ்வணிகனை அரவந் தீண்டியுந் தான் தீண்டாமல் நின்றாள். ஆறுதல் கூறுவதற்கு வேறு ஒருவரும் இன்றி, ஆண்சிங்கம் போன்ற இறந்த வணிகன் அருகில் வீழ்ந்து, கொழுகொம்பிலாத பூத்த இளங்கொம்பு போன்ற அம்மடமங்கை தளர்ந்து தனித்துப் புலம்பினாள். அவள் அழுகுரலைக் கேட்டு அங்கிருந்த இடியும் கருடனும் போன்ற மந்திரவாதிகள் பலர் வந்து தத்தம் மந்திர சக்தியைக் கொண்டு முயன்றும் விடங் குறையா தாயிற்று. விடியற்காலை அவ்வணிகமாது புலம்புவாள்: "ஏ வணிகர் குலமணியே! என்னைப் பெற்ற அன்னையையும் அத்தனையும் பிரிந்து உன்னையே துணையாக நம்பி உன்னுடன் வந்தேன். அந்தோ! அரவந்தீண்ட என்னை விட்டு மாண்டு போனாயே. இனி யான் என் செய்வேன்? எனக்கு வேறு துணையேது? என்னை ஆட்கொள்வார் ஒருவருமில்லையே! இத்துயரை நீக்குபவரும் இல்லையே. உயிர்போன்ற வணிகர் ஏறே! இனி யான் எங்ஙனம் வாழ்வேன்" என்று கூறியழுதாள்.

அவ்வாறு அழுகின்ற அப் பெண்மணி அறிவின் திறத்தினாலே திருக்கோயில் வாயிலில் நின்று, எம்பிரான் எழுந்தருளியுள்ள திசை நோக்கிக் கை கூப்பித் தொழுது அழுது துதிப்பாள்.

அடியாராம் இமையவர்தங் கூட்ட முய்ய
அலைகடல்வாய் நஞ்சுண்ட அமுதே! செங்கண்
நெடியானு நான்முகனுங் காணாக் கோல
நீலவிட வரவணிந்த நிமலா! வெந்து
பொடியான காமனுயிர் இரதி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே! பொங்கர் வாசக்
கடியாரு மலர்ச்சோலை மருங்கு சூழுங்
கவின்மருகற் பெருமானே காவா யென்றும்.

"கருணை வடிவாய கண்ணுதற் கடவுளே! அடியவராகிய அமரர் உய்ய அலைகடல் நஞ்சினை யுண்ட அமுதமே! அயனும், அரியும் அறியாத அரவணிந்த அண்ணலே! இரதிதேவி வேண்டு தலும், வெந்து சாம்பரான மன்மதனை எழுப்பி அருள்புரிந்த ஐயனே! சோலை சூழ்ந்த திருமருகலில் எழுந்தருளிய எந்தையே! அபயமென வந்தடைந்த மார்க்கண்டேயர்க்காக, சீறிவந்த இயமனை

உதைத்த திருவடியை யுடையவரே! இந்தக் கொடிய விடவேகந் தீருமாறும், எளியேன் இடர்க்கடலினின்றுங் கரையேறுமாறும் அருள்புரிவீர். பிறைமதியைத் தரித்த சிவந்த சடையவனே! திருமருகல் மேவிய தேவதேவா" என்று கூவி, திருவருளைச் சிந்தித்து வாய்விட்டுக் கதறி அழுதாள்.

இவ்வாறு, இளங்கொடிபோல் வாடி வருந்தும் வணிகப் பெண்ணின் அழுகுரல், இறைவழிபாட்டின் பொருட்டு வரும் திருஞானசம்பந்தருடைய செவியில் வீழ்ந்தது. திருவுள்ளத்தில் கருணை மிகவுங் கொண்டு, அடியவர்கள் சூழ அக்கன்னியின் அருகிற் சென்றருளினார். சிவனருளை நாடிச் சிந்தை நொந்து வருந்துவாளை நோக்கி, "அம்மா! நீ அஞ்சற்க; உனது துன் பத்தையும் உங்கள் வரலாற்றையும் உரைப்பாய்" என்று வினாவி யருளினார்.

வணிக மாது கரமலர்களைச் சிரமீது கூப்பிக்கொண்டு, கண்ண ருவி பொழிய, காழிப்பிள்ளையார் கால்மலர் மீது வீழ்ந்து கழறலாயினாள். "பெருமானே! வளமையுடைய வைப்பூர் என்னும் ஊரின் தலைவனான தாமன் என்பவர் எனக்குத் தந்தை. இவர் எனது தந்தையின் மருகர். எனது பிதாவுக்கு ஏழு பெண்கள். என் தந்தை ஒவ்வொரு பெண்ணையும் இவருக்குத் தருவதாக வாக்களித்து, இவரை நம்பவைத்துப் பிறகு, நிரம்பப் பொன்னைப் பெற்றுக் கொண்டு அயலார்க்கே அளித்தனர். என்னையொழிய ஆறு பெண்களையும் அவ்வாறு இவரை ஏமாற்றிப் பிறருக்கே மணம் புரிவித்தனர். அதனால், மனம் வருந்திநின்ற இவரிடம் இரக்கமும் அன்பும் பூண்டு, தாய் தந்தையரை. விடுத்து அவர்கள் அறியாவண்ணம் இவரைச் சார்பாகக் கொண்டு புறப்பட்டு வந்தேன். எம்பிரானே! இவருடன் இன்று இம் மடத்தில் தங்கினேன்; இவர் பாம்பு தீண்டி மாண்டார். நடுக்கடலில் கப்பல் கவிழப் பெற்றார்போல் கலங்கி நின்றேன். எனது சுற்றத்தார் போல வந்து என் துயரமெல்லாந் தீர அருள்செய்தீர்" என்று கூறினாள்.

கற்றவர்கள் தொழுது ஏத்துங் காழிவேந்தர், கருணையினால் அரவின் விடந் தீருமாறு அழகிய மருகற் பெருமானைப் பாடு வாராயினார்.

சடையானை எவ்வுயிர்க்குந் தாயா னானைச்
சங்கரனைச் சசிகண்ட மவுலி யானை
விடையானை வேதியனை வெண்ணீற் றானை
விரவாதார் புரமூன்றும் எரியச் செற்ற

படையானைப் பங்கயத்து மேவி னானும்
பாம்பணையிற் றுயின்றானும் பரவுங் கோலம்
உடையானை யுடையானே! தகுமோ இந்த
ஒள்ளிழையாள் உண்மெலிவென் றுரைத்துப் பாட,

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே.

திருஞானசம்பந்தப் பெருமான் இப்பதிகம் பாடியருளியவுடனே விடந்தீர்ந்து வணிகன் எழுந்தான். திருவடியில் வீழ்ந்து வணங்கிய நங்கையை அந்நம்பி மணந்து இன்புறுமாறு, அன்பர்களைத் திருமணஞ் செய்துவைக்குமாறு பணித்தருளினார். வணிகனுக்கும் அக்கன்னிகைக்கும் திருமணம் நிகழ்ந்தது.

திருமுருக நாயனார் சந்திப்பு

சிறுத்தொண்ட நாயனார் திருமருகல் சென்று, பிள்ளையாரைத் தொழுது, மீண்டுந் திருச்செங்காட்டங்குடிக்கு வந்தருளுமாறு வேண்டினார். பிள்ளையார் விடையவர்பால் விடைபெறும் பொருட்டுத் திருமருகல் கோயிலிற் சென்று வணங்க, திருச்செங் காட்டங்குடி கணபதீச்சுரத்தில் உள்ள திருக்கோலத்தை இறைவர் காட்டியருளக் கண்டு களித்தார். திருச்செங்காட்டங்குடி சென்று பரமனைப் பணிந்து சிலநாள் தங்கியிருந்தார்.

பின்னர், பூம்புனற் பொய்கை சூழ்ந்த திருப்புகலூரைச் சேவிக்க விரும்பிப் புறப்பட்டார். சிறுத்தொண்டருக்குத் திருச்செங்காட்டங் குடியில் இருந்து பணிசெய்யுமாறு விடைதந்து, இடையில் உள்ள திருத்தலங்களை வணங்கிக்கொண்டு, திருப்புகலூரை அடைந்தார். திருப்புகலூரில் வாழும் முருகநாயனார் மிகவும் மகிழ்ந்து எதிர் கொண்டு இறைஞ்சினார். புகலி வேந்தர் புகலூர் மேவிய புனிதரைப் போற்றிப் புகழ்ந்து, முருக நாயனாரது திருமடத்தில் தங்கியருளினார். திருப்பதிகத்தில் முருக நாயனாரது திருத்தொண்டினைச் சிறப்பித்துப் பாடியருளினார்.

தொண்டர் தண்கயம் மூழ்கித் துணையலுஞ் சாந்தமும் புகையும்
கொண்டுகொண் டடிபரவிக் குறிப்பறி முருகன்செய் கோலம்
கண்டுகண்டு கண்குளிரக் களிபரந் தொளிமல்கு கள்ளார்
வண்டு பண்செயும் புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே.

திருஞானசம்பந்தர் திருப்புகலூரில் தங்கியிருந்தபோது, திருநாவுக்கரசர் திருவாரூர் தியாகேசரைத் சேவித்து விட்டுத் திருப்புகலூருக்கு வந்தருளினார். அப்பரது வரவையறிந்த பாலறாவாயர் பெரிதும் உவந்து அன்பருடன் புறப்பட்டுத் திருப்புகலூர் எல்லை கடந்து எதிர்கொண்டார். அரசுங் கன்றும் ஒருவரையொருவர் அன்பினால் வணங்கிக் கொண்டார்கள். ஞானசம்பந்தர் வாக்கின் மன்னரை நோக்கி, "அப்பராகிய தேவரீரை வரப்பெற்று திருவருட் பேற்றினை யாம் பெற்றோம்; திருவாரூரில் எத்தன்மையில் இறைவரைத் தொழுது உய்தீர்?" என்று வினாவியருளினார். அப்பரடிகள் ஆரூர் திருவாதிரைத் திருநாளின் சிறப்பினைக் கூறியருளினார்.

திருவாரூர் செல்லல்

பாலறாவாயர் திருவாரூரின் சிறப்பைத் திருநாவுக்கரசர் கூறக் கேட்ட அப்பொழுதே திருவாரூர் சென்று புற்றிடங் கொண்ட புனிதரைப் போற்றுதற்கு விரும்பி, "அப்பரே! திருவாரூர் சென்று செஞ்சடைப்பிரானை வணங்கிவிட்டு வந்து உம்மை இங்குச் சந்திப்பேன்" என்று கூறி, உடனே திருவாரூரை நோக்கி விரைந்து புறப்பட்டுச் சென்றார். அப்பரடிகள் திருப்புகலூர் சென்றார்.

பிள்ளையார் அளவற்ற காதலுடன் வழியில் திருவிற்குடி வீரட்டானத்தைத் தொழுது திருவாரூர் அருகில் வந்தருளினார். பொன்னுலகம்போல் ஒளிசெய்யுந் திருவாரூரரைக் கண்டு திருப்பதிகம் பாடியருளினார். முத்துச் சிவிகையை விட்டு இறங்கி மலர் தூவித் திருவாரூரரை வணங்கினார். திருவாரூர் மேவிய அடியார்கள் எதிர்கொண்டு இறைஞ்சினார்கள். பிள்ளையாரும் எதிர்தொழுது திருவாரூரில் புகுந்தார். அப்பொழுது அமரர் மலர்மழை பொழிந்தனர். மங்கல முழவங்கள் ஒலித்தன. திருக்கோயிலின் முன்னுள்ள தேவாசிரிய மண்டபத்தைத் தொழுது எழுந்தார். உட்புகுந்து புற்றிடங் கொண்டாரைப் பன்முறை பணிந்தார்.

> பணிந்து வீழ்ந்தனர் பதைத்தனர் பரவிய புளகம்
> அணிந்த மேனியோ டாடினர் பாடினர் அறிவில்
> துணிந்த மெய்ப்பொரு ளானவர் தமைக்கண்டு துதிப்பார்
> தணிந்த சிந்தையின் விரைந்தெழு வேட்கையில் தாழ்ந்தார்.

திருவாரூரில் திருமடத்தில் தங்கித் தியாகேசப் பெருமானைக் காலந்தோறும் பணிந்து பல பதிகங்கள் பாடிப் பரவினார். அங்

கிருந்தபடியே திருவலிவலம், திருக்கோளிலி முதலிய திருத்தலங் களைச் சேவித்தார்.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

வஞ்சமனத் தஞ்சொடுக்கி வைகலுநற் பூசனையால்
நஞ்சமுது செய்தருளு நம்பியென வேநினையும்
பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபத மீந்துகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சணவுங் கோளிலியெம் பெருமானே.

திருக்காறாயில், திருஏமப்பேறூர், திருச்சாட்டியக்குடி, திருக்கன் றாப்பூர் முதலிய திருத்தலங்களையுஞ் சென்று வணங்கினார்.

தந்தையார் போயினார் தாயரும் போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியால் ஏழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல் நெஞ்சே.

திருவாரூரினின்றும் பிரியா விடைபெற்றுப் புறப்பட்டு, திருப்பனையூர், இராமனதீச்சரம் வணங்கித் திருப்புகலூரை அடைந்தார். திருநாவுக்கரசரும் முருக நாயனாரும் ஏனைய திருத்தொண்டர்களும் எதிர்கொண்டு வணங்கினார்கள். பிள்ளையார் திருக்கோயில் சென்று வள்ளலாரை வணங்கினார். முருக நாயனார் திருமடத்தில் தங்கியருளினார். சிறுத்தொண்டரும், திருநீலநக்கரும் அங்குவந்து கலந்து கொண்டார்கள்.

திருஞானசம்பந்தர் திருப்புகலூரை விட்டுப் புறப்பட்டார். வாகீசப் பெருந்தகையார் அவருடன் சென்று தலயாத்திரை செய்யப் புறப்பட்டார். சிறுத்தொண்டரும் திருநீலநக்கரும் தத்தம் பதி சென்றார்கள். முருக நாயனாரை அங்கு இருத்தி, முத்துச் சிவிகை பின் வர பிள்ளையார் நடந்து சென்றருளினார். அப்பரடிகள் பிள்ளையாரை நோக்கி, "இறைவர் உமக்குத் தந்த இச் சிவிகை மீது எழுந்தருளி வருவீர்" என்று வேண்டினார். "திருவருளின் திறம் அதுவாயின் திருத்தொண்டர்களுடன் நீர் முன்னாகச் செல்லுந் தலத்திற்கு அடியேனுந் தொடர்ந்து வருவேன்" என்று கூறிய ருளினார். அது முதல் அப்படியே அப்பர் முன்னே சென்று சேர்ந்த திருப்பதிக்கு புகலி வேந்தர் போவாராயினார்.

குங்குலியக்கலயர் சந்திப்பு

திருஅம்பர்மாகாளம் சென்று, திருப்பதிகம் பாடி வழிபட்டுத் திருக்கடவூர் சென்றார். குங்குலியக்கலய நாயனார் அடியார் கணங்களுடன் ஓடி வந்து வணங்கி எதிர்கொண்டார். காலனை யுதைத்த கண்ணுதலாரது சேவடியைச் சேவித்து, குங்குலியக் கலயரது திருமடத்தில் தங்கி, அவர் தந்த விருந்தினை ஏற்று அமர்ந்திருந்தார்.

அங்கிருந்து புறப்பட்டுத் திருஆக்கூர், திருமீயச்சூர், திருப்பாம்ப புரம் முதலிய திருத்தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவீழி மிழலை நோக்கிச் சென்றார்.

சீகாழிக் காட்சி

திருவீழிமிழலையில் உள்ள அந்தணர்களும், அடியார்களும் அப்பொழுது திருநாவுக்கரசு நாயனாரை எதிர்கொண்டு போற்றிப் புகழ்ந்து உபசரித்தார்கள்; அவர் மூலம் ஆளுடைய பிள்ளையார் வருவதைக் கேட்டறிந்து அளவிலா மகிழ்ச்சியுற்று எதிர் கொள்ள வந்தார்கள். நிறைகுடம் தூப தீபம் எங்கும் அமைத்து, நறுமலரும் பொற்சுண்ணமுந தூவினார்கள். வேதவொலி விண்ணளவுஞ் சென்றது; கடல்போல் முரசம் முழங்கியது. எதிர்கொள்ள வந்தவர்களைக் கண்டு காழி வேந்தர் முத்துச் சிவிகையை விட்டு இறங்கி, வணங்கி அவர்களுடன் திருக்கோயிலுட்சென்று இறைவரை வணங்கிப் பதிகம் பாடி அருளினார். அப்பொழுது ஆளுடைய அரசுகளும் உடன் சேர்ந்துவர, விண்ணிழிந்த கோயிலை வலம்வந்து, திருமால் வழிபடும் பொருட்டு விண்ணுல கினின்றும் இறங்கிய அவ்விமானத்தைக் கண்டு வியந்து திருப்பதிகம் பொழிந்தருளினார்.

> சடையார்புன லுடையானொரு சரிகோவண முடையான்
> படையார்மழு வுடையான்பல பூதப்படை யுடையான்
> மடமான்விழி யுமைமாதிட முடையான்எனை யுடையான்
> விடையார்கொடி யுடையானிடம் வீழிம்மிழ லையே.

ஆரா அன்புடன் இறைவரை வழிபட்டு, உள்ளங் குழைந்துருகி, இன்ப வெள்ளத்தில் மூழ்கி நீண்டநேரம் அப்படியே அசைவற்று இருந்து, பின் பெருமானிடம் பிரியா விடைபெற்று, திருக்கோயிலின் மதில் புறத்தே ஒரு திருமடத்தில் திருநாவுக்கரசு சுவாமிகளும் திருத்தொண்டர்களும் தங்க, தாம் ஏனைய அடியார் கணங் களுடன் வடபுறத்தில் உள்ள ஒரு திருமடத்தில் அமர்ந்தருளினார்.

அரனார் அடியிணை மலரின்மீது உள்ள அளவில்லாத காதலினால் திருஞானசம்பந்தப் பிள்ளையார் நாவின் வேந்தருடன் ஒவ்வொரு காலமுந் தவறாது திருக்கோயில் சென்று இறைவரை இனிது வழிபட்டுக் கொண்டு அங்குத் தங்கியிருந்தார்.

அங்க ணமர்வார் அரனார் அடியிணைக்கீழ்த்
தங்கிய காதலினால் காலங்கள் தப்பாமே
பொங்குபுகழ் வாகீச ருங்கூடப் போற்றிசைத்தே
எங்கு மிடர்தீர்ப்பார் இன்புற் றுறைகின்றார்

திருவீழிமிழலையில் இருந்தபடியே, அண்மையிலுள்ள திருப் பேணு பெருந்துறை, திருத்திலதைப்பதி முத்தம் என்னும் திருத் தலங்களைச் சேவித்துத் திருப்பதிகம் பாடியருளினார்.

சீகாழியில் வாழும் அந்தணர்கள் திருஞான சம்பந்தப் பிள்ளையாரைக் காணும் விருப்பினால் திருவீழிமிழலை வந்து சேர்ந்தார்கள். திருவீழிமிழலையில் உள்ளவர்கள் அவர்களை வரவேற்று உபசரித்தார்கள். சீகாழியிலிருந்து வந்தவர்கள் திருக்கோயில் சென்று சிவனாரை வணங்கி, பிள்ளையார் திருமடத்திற் சென்று, அவரைத் தொழுது மகிழ்ந்து, "பெருமானே! சீகாழிக்கு எழுந்தருள வேண்டும்" என்று வேண்டி நின்றார்கள். "நாளை போவோம்" என்று அருளிச் செய்தார் ஆளுடைய பிள்ளையார். வந்தவர்க்கெல்லாம் சிறந்த விருந்து செய்யப் பெற்றது.

அன்று இரவு காழிவேந்தர் கனவில் திருத்தோணியப்பர் எழுந்தருளி, "நாம் சீகாழியில் திருத்தோணியில் இருக்கும் திருக்காட்சியை இங்குத் திருவீழி மிழலையிலேயே காட்டுதும் - கண்டு மகிழ்வாய்" என்று அருள் புரிந்தனர். கனவு நீங்கி எழுந்து தோணியப்பர் திருவருளைச் சிந்தித்து அதிசயமுற்று, திருக் கோயிலின்கண் சென்று சேவித்தார். அங்குத் திருத்தோணி மீது அம்மையப்பராய் அண்ணலார் அருட்காட்சி தந்து அருளக் கண்டு அகமும் முகமும் குளிர்ந்து, திருப்பதிகம் பாடிப் பரவுதல் செய்தார். அந்த அற்புத நிகழ்ச்சியை உரைத்து, வந்த அந்தணர்களைச் சீகாழிக்குப் போகுமாறு கட்டளையிட்டருளினார். அவர்கள் அவ்வாறே இடையில் உள்ள பரமன் பதிகங்களைப் பணிந்து கொண்டு திருப்பிரமபுரத்தைச் சேர்ந்தார்கள்.

படிக்காசு பெற்றது

திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசு நாயனாருடன் திருவீழி மிழலையில் தங்கியிருந்தபோது, மழையின்றி, நதிகள் வறண்டு

விட்டன. அதனால், மக்கள் உணவின்றி கண்குழிந்து பசியினால் பரிதவித்தார்கள். தேவர்கட்குச் செய்யும் பூசனைகளும் தடைப்பட்டன. அப் பஞ்ச நிலையைக் கண்ட பாலறாவாயரும், அப்பரடிகளும் சிவபெருமான் திருவடியைச் சிந்தித்துத் திருநீற்றின் சார்பில் உள்ள திருத்தொண்டர்கட்கும் பசியால் கவலை வருமோ என்று திருவுள்ளத்தில் கருதினார்கள்.

வானாகி நிலனாகி யனலு மாகி
மாருதமா யிருசுடராய் நீரு மாகி
ஊனாகி யுயிராகி யுணர்வு மாகி
யுலகங்க ளனைத்துமா யுலகுக் கப்பால்
ஆனாத வடிவாகி நின்றார் செய்ய
அடிபரவி அன்றிரவு துயிலும் போது
கானாடு கங்காளர் மிழலை மூதூர்
காதலித்தார் கனவிலணைந் தருளிச் செய்வார்.

குருமூர்த்திகள் இருவரும் இறைவரைத் துதித்து அன்றிரவு கண்ணயரும் போது, விண்ணவர்கட்கும் எட்டாத கண்ணுதற் பெருமான் கனவில் எழுந்தருளி, உலகியல்பினால் எய்திய கொடிய பசித் துன்பம் உங்களை அடையாது; என்றாலும், உம்பால் சார்ந்துள்ள சிவநெறித் தொண்டர்களது வருத்தத்தை மாற்றும் பொருட்டு, நமது திருக்கோயிலில் கிழக்கும், மேற்கும் உள்ள அழகிய பலிபீடத்தில் நாடோறும் ஒவ்வொரு காசு தருவோம். பஞ்சந் தீரும்வரை அவ்வாறு அருள் புரிவோம்" என்று திருவருள் புரிந்தார்.

காழிப்பிள்ளையார் கனவு தெளிந்து எழுந்து, "எம்பிரான் அருள் இதுவோ" என்று மகிழ்ந்து, திருநாவுக்கரசருடன் திருக் கோயில் சென்று வலம் வந்த போது இறைவருக்கு நேரே கீழ்த் திசைப் பலிபீடத்தின்மீது விளங்கும் பொற்காசைக் கண்டார். பரமனைப் பணிந்து அதனையெடுத்து "அடியார்கள் அமுது செய்ய வாருங்கள்" என்று பறையறைந்து கறிகள், நெய், பால், தயிர், அமுது முதலியவைகளைக் குறைவின்றி அடியவர்க்கு ஊட்டி, இரு பெரு மாதவர்களும் அப்பதியில் அமர்ந்திருந்தார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருமடத்தில் உச்சிப்பொழுதுக்குள் அடியார்கள் அமுது செய்து முடித்தலைக்கண்ட பிள்ளையார், தமது மடத்தில் சமையல் புரியும் பரிசனங்களை நோக்கி, "நீங்கள் எப்பொழுதும் தீயதொழில்களுக்கு இடந்தர மாட்டீர்களே? அப்படிக்கு இருந்தும் இங்குக் காலந் தாழ்த்தி அடியவர்க்கு அன்னம் படைக்கக் காரணம் யாது?" என்று வினாவி அருளினார்.

அமுது அமைக்கும் ஏவலர்கள் அவரை வணங்கி, "எம் பெருமானே! இறைவர் தரும் காசினை எடுத்துக்கொண்டு கடை வீதியிற் சென்று உணவுக்குரிய பண்டங்களை வாங்க முயலும் போது, "இக்காசுக்கு வட்டந் தர வேண்டும்" என்று கூறுகின்றனர்; திருநாவுக்கரசு நாயனாருடைய காசினை வட்டங் கேளாது, கொண்டுபோன உடனே விரைந்து பெற்றுக் கொள்ளுகின்றார்கள். அதனால், அவர் திருமடத்தில் உணவு முன்னதாக அமைக்க முடிகின்றது. வட்டந் தந்து காசினை மாற்றிப் பண்டம் பெற்று வந்து, உணவு அமைக்க நமது மடத்தில் சிறிது கால தாமதம் ஏற்படுகின்றது. அதன் காரணம் யாதோ? நாங்கள் அறியோம்," என்று கூறினார்கள்.

திருஞானசம்பந்தர் அதனைக் கேட்டுச் சிந்திப்பாராயினார். சிவபெருமான் பட்சபாத மில்லாதவர்; அவர் திருநாவுக்கரசருக்கு மட்டும வாசியில்லாத காசினைத் தருவானேன்? நமக்கு வாசி படுங் காசினைத் தருவதற்குக் காரணம் யாது? ஆம்! அப்பெருந் தகையார் காயத் தொண்டும் புரிகின்றனர். அதனால், அத்திருவாளருக்கு வாசிபடாத காசைத் தருகின்றனர். நாளை நாம் வாசி தீரக் காசு தருமாறு பாடுவோம்'' என்று திருவுள்ளத்துச் சிந்தித்தார். அடுத்தநாள் அதுபடி பாடியருளினார்.

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏச லில்லையே.

இறைவர் வாசி யில்லாத காசுதனை வழங்கியருளினார். அதனை எடுத்து ஏவலர்பால் தர, அவர்கள் கடைவீதியில் கொண்டு போக, "இது நல்ல காசு; இதற்கு வேண்டும் பொருள்களைத் தருவோம்" என்று வணிகர்கள் தந்தனர். அது முதல் காலத்தால் அடியவர்கட்கு அன்னமளிக்கப்பட்டது. அளவிறந்த அடியார்கள் வந்து இரண்டு மடங்களிலும் அமுது செய்தும், அன்னம் குறையாது பெருகுமாறு அன்னமறியாத அரனார் அருள் புரிந்தருளினார்.

விண்மழை மண்மிசை பொழிந்து நன்கு விளைந்து எல்லா உயிர்களும் இடர்நீங்கி இன்புற்றன. பஞ்சம் பறந்தது. பல நாள் அங்குத் தங்கி இறைவரை இறைஞ்சியபின் இரு பெரு மக்களும் விடையவரிடம் விடைபெற்றுத் திருவாஞ்சியம், திருத்தலை யாலங்காடு, பெருவேளூர், திருச்சாத்தங்குடி, திருக்கரவீரம், திருவிளமர், திருவாரூர், திருக்காறாயில், திருத்தேவூர், திரு நெல்லிக்கா, திருக்கைச் சின்னம், திருத்தேங்கூர், திருக்கொள்ளிக் காடு, திருக்கோட்டூர், திருவெண்டுறை, திருத்தண்டலைநீணெறி,

திருக்களர் முதலிய அரிய தலங்கள் சென்று ஆலமுண்ட நீல கண்டரைப் பணிந்து செந்தமிழ்ப் பதிகம் ஓதித் திருமறைக் காட்டினைப் அணுகினார்கள்.

திருமறைக்காடு

கரிய சமணர்களாகிய பாலைவனத்தைக் கடந்தவராகிய அப்பரடிகளும், ஆளுடைய பிள்ளையாரும் வருவதை அறிந்த திருமறைக்காட்டில் வாழும் திருத்தொண்டர்கள், தமது திருநகரை அலங்கரித்து, வாழை கமுகுகள் நாட்டி, எங்கும் மலர் மாலைகளைத் தொங்கவிட்டு, நிறைகுடமுந் திருவிளக்கும் அமைத்து மங்கல முழவங்களை முழக்கி, எதிர்கொண்டு முன்னே வந்த அப்பரைப் பணிந்து, பின்னே வந்த பிள்ளையாரையும் பணிந்து வரவேற் றார்கள். திருஞானசம்பந்தர் சிவிகையை விட்டு இறங்கி எதிர் கொள்ள வந்த அடியவர்களைத் தொழுது, சொல் வேந்தருடன் கலந்து திருவீதியிற் சென்ற போது, அடியவர்கள் "ஹர ஹர" என்று முழங்கிய முழக்கம் திசையெட்டும் முட்டியது; விண்ணும் மண்ணும் நிறைந்தது. உடன் வந்த அடியார்களுடன் திருமறைக் காட்டில் உள்ள அடியார்களும் உடன்வர திருக்கோயிலை வலம் வந்து, வேதங்கள் பூசித்துத் திருக்காப்பிட்டு வைத்த திருவாயிலின் முன் வந்தருளினார்.

"வேதங்கள் நேசித்துப் பூசித்து அடைத்து வைத்த இக் கதவு அதுமுதல் இதுவரை திறக்கப்படவில்லை; அதனால், இவ் வாயிலின் அருகில் வேறு வாயிலை அமைத்துச் சென்று இறைவரை வழிபடுகின்றோம்" என்று அங்குள்ள அடியவர்கள் அறைந்தார் கள். அதுகேட்ட முத்தமிழ் விரகர் வியப்புற்று, "அப்பரே! மறைவனத்துப் பெருமானை நேர்முகமாகவே சென்று வழிபட வேண்டும். ஆதலின், நீரே இக்கதவு திறக்கப் பாடி யருளும்" என்று கூறி அருளினார். அப்பர், "தேவரீர் திருவுளம் அதுவாயின் பாடுவேன்" என்றுகூறித் திருப்பதிகம் எடுத்துப் பாடினார். பத்துப் பாடல் பாடியும், திருக்கதவம் திறக்கப் பெறாதது கண்டு சிந்தை நொந்து திருக்கடைக் காப்புப் பாடலை வருந்தி வேண்டிப் பாடியவுடன் கதவு திறந்தது. அடியவர்கள் ஆர்த்தார்கள். அதுகண்ட ஆளுடைய பிள்ளையார் அப்பரைப் போற்றினார். அவரும் போற்றி இருவர்களும் அடியார்களுடன் நேர்வழியில் திருக்கோயிலுட் சென்று, தாயினும் இனிய சங்கரனைக் கண்டு, கண்ணீர் பாய உடல் கம்பித்து மண்மிசை வீழ்ந்து வணங்கினார் கள்.

அன்பினுக் களவு காணார் ஆனந்த வெள்ள மூழ்கி
என்புநெக் குருக நோக்கி இறைஞ்சிநேர் விழுந்து நம்பர்
முன்புநிற் பதுவு மாற்றார் மொழிதடு மாற ஏத்தி
மின்புரை சடையார் தம்மைப் பதிகங்கள் விளம்பிப் போந்தார்.

இவ்வாறு வழிபட்டு இரு திருவாளர்களும் வெளியே வந்த போது, அப்பரடிகள் காழிக்கன்றினை நோக்கி, "இது முதல் திருக்கதவு அடைக்கவும் திறக்கவுமாகத் திகழும்படி, தேவரீர் இப் போது கதவம் அடைக்கும்படி பாடியருள்வீர்" என்று சொல்லி யருளினார்.

ஆளுடையபிள்ளையார்,

சதுரம்மறை தான்றுதி செய்து வணங்கும்
மதுரம்பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா!
இதுநன்கிறை வைத்தருள் செய்க எனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே.

என்ற திருப்பதிகத்தினைத் தொடங்கியவுடன் முதற்பாட்டிலேயே திருக்கதவும் திருக்காப்புச் செய்தது. அதுகண்ட ஆண்ட பிள்ளையாரும் தாண்டகவேந்தரும் நீண்டமலை வில்லியாரைத் தொழுதார்கள். அடியவர்கள் ஆரவாரம் செய்தார்கள். விண்ண வர் பூமழை பொழிந்தனர். பிள்ளையார் பின்னர் பதிகத்தை முற்றுவித்தார். அது தொடங்கி அந்த நேர்வாயிலிலேயே அடியார்கள் சென்றுந் திரும்பியும் வழிபாடு புரிந்தார்கள். அப்படிக் கதவு, திறக்கவும் அடைக்கவும் பாடியருள் புரிந்த அருளாளர்களைப் போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்தார்கள். இருபெரு மக்களும் தனித்தனியே தத்தமக்கென்று அமைத்த திருமடங்களில் தங்கியருளினார்கள். எண்ணில் கோடி வேதங்கள் ஒன்று கூடிச் செய்த பணியை நாத வடிவாய்த் திகழும் நற்றவ சீலர்கள் நம்பர்பால் வைத்த நல்லருளால் செய்த திருவருட் டிறத்தின் பெருமையை அளந்துரைக்கவல்லார் யாவர்?

அன்றிரவு அப்பர் கனவில் அரனார் தோன்றி, "நம் வாய் மூருக்கு வருக" என்று அருளினார். அப்பர் பெருமான் எழுந்து திருவாய்மூரை நோக்கிச் சென்றார். திருஞானசம்பந்தர் எழுந்து, "அப்பர் எங்குற்றார்" என்று வினாவினார். திருவாய்மூர் சென்ற செய்தியைக் கேட்டுத் தாமும் அங்குச் சென்றார். அங்கு அரனார் அம்பிகையுடன் ஆடல் காட்டியருள திருப்பதிகம் பாடி அப்பரு டன் சென்று தொழுது வழிபட்டார். இவ்வாறு திருவாய்மூரில்

இறைவரை இருவரும் வழிபட்டு மீண்டும் திருமறைக்காட்டுக்கு எழுந்தருளினார்கள். பிள்ளையார் நாடோறும் அப்பருடன் சென்று மறைவன மேவும் மறையவரைத் தொழுது தணியாக் காதலுடன் பல பதிகங்கள் பாடி வேதாரணியத்தில் வீற்றிருந்தருளினார்.

மதுரைக்குப் புறப்படுதல்

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் அடியார் குழாங்களுடன் வேதாரண்யத்தில் தங்கியிருந்தார்கள். அது சமயம் பாண்டி நாட்டில் சமண இருள் சூழ்ந்தது. சைவவொளி குன்றியது. முன்செய் தீவினைப் பயனால் பாண்டிய மன்னன் சமண சமயத்தின் நெறியை அறம் என்று கொண்டு ஒழுகலாயினான். "அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்'' என்ற பழமொழிக்கு ஏற்ப குடிகள் அனைவரும் நன்னெறியை விடுத்துப் புன்னெறியை மேற்கொண்டார்கள். பாண்டி நாடு முழுவதும் உள்ள ஊர்கள் தோறும் அருகருடைய பள்ளிகள் மலிந்தன. இருட் கூட்டம் போல சமண முனிவர்கள் மயிர்பீலிகளை ஏந்திக் கொண்டு எங்கும் மொய்த்தார்கள். மயிர்பறித்த தலையும், பாயும், பீலியும், முக்குடையும் ஏந்திக் கொண்டு திரிவாராயினார்கள்.

அக்காலை பெண்ணில் ஒருவரும் ஆணில் ஒருவரும் ஆக இருவர் மட்டுமே சைவ நெறியில் நின்றனர். பாண்டியன் உய்யும் பொருட்டு, சோழர்கோன் பெற்றருளிய மங்கையர்க்கரசியாரும், அமைச்சனாராகிய குலச்சிறையாரும் என்ற இவ்விருவரே அவர்களாம் என்க. இந்த இருவரையன்றி வேறு ஒருவரும் சைவத்தைப் பேணினாரிலலை.

அவ்விரு பெருமக்களும் பாண்டிநாட்டுக்கு வந்த இப் பெருந் தீங்கு என்றுதான் தீருமோ? என்று சிந்தை நொந்து, சைவத்தில் தாங்கள் ஒழுகுந் தன்மை பாண்டியன் அறியாவண்ணம் நின்றனர். திருஞானசம்பந்தப்பிள்ளையார் உமையம்மை திருமுலைப் பாலுண்ட பெருமையையும், அவர் செந்தமிழ்ப் பதிகம் பாடி எங்கும் சைவநெறியாந் தெய்வ ஒளியைப் பரப்பிவரும் அருமையையும், திருமறைக்காட்டில் தங்கியிருக்கும் தன்மையையும், பாண்டிநாடு செய்த புண்ணியத்தால் கேள்வியுற்றார்கள். கேட்டவுடன் சிந்தை கிளர்ந்தது; மகிழ்ச்சி வளர்ந்தது; கவலை தளர்ந்தது. முகம் மலர்ந்தது. நெடுந் தூரத்தில் இருந்தாரேனும் சம்பந்தர் சரணமலரைப் பணிந்ததுபோல் மகிழ்ச்சியுற்றார்கள். சிவஞானச் செம்மலாரை வணங்க வேண்டும் என்ற கருத்துடன், அறிவுமிக்க சிலரைத் திருமறைக்காடு சென்று திருஞான சம்பந்தரைப் பணியும் படி விடுத்தார்கள்.

அன்புடைய அவர்கள் அதிவிரைவில் வந்து இனிய மணம் வீசும் தாழஞ் செடிகளுடன் கூடிய நெய்தல் நிலத்தில் திகழும் திருமறைக்காட்டினை அடைந்தார்கள். பிள்ளையார் அமர்ந் திருக்கும் திருமடத்தினைச் சார்ந்து, தாங்கள் வந்த விவரங்களை வாயில் காப்போரிடம் புகன்றனர். காவல் செய்வோர் உள்ளே சென்று காழிமன்னரைக் கைதொழுது, "அண்ணலே! பாண்டி நாட்டிலிருந்து சில அன்பர்கள் தங்கள் பாதமலர்களைப் பணிய வந்திருக்கின்றார்கள். பாண்டிமா தேவியாரும் குலச்சிறையார் என்ற அமைச்சர் பெருமானும் அனுப்ப வந்திருக்கின்றார்கள். வாயிற் புறத்தே நிற்கின்றார்கள்" என்று விண்ணப்பஞ் செய்தார் கள். புகலி மன்னர் பொருவிலா அருள்கொண்டு, உள்ளம் உவந்து, "இங்கே அவர்களை அழைத்து வாருங்கள்'' என்று கட்டளை யிட்டருளினார். காவலர் அழைக்க அவர்கள் மடத்தினுட் சென்று திருஞானசம்பந்த நாயனாரை அன்புடன் வணங்கி நின்றார்கள்.

பாலறாவாயர் பாண்டிநாட்டிலிருந்து வந்த அவர்களை நோக்கி ''மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் நலமா?'' என்று வினாவியருளினார். அவர்கள், "எம்பெருமானே! எங்கள் தென்னாடு சமணர்களால் நிலைகுலைந்து விட்டது. மன்னனும் அமண்மயல் உற்றனன். பாண்டிமா தேவியர்ரும் அமைச்சரும் தேவரீரிடம் இதனை விண்ணப்பம் புரியுமாறு எங்களை அனுப்பினார்கள்" என்று கூறினார்கள்.

அருகிலிருக்கும் அடியார்கள், ''ஐயனே! சிவபிரான் திருவடியைச் சேராத சமணரை வென்று, கன்னி நாட்டில் சைவ நெறியை நிலை நாட்டி, பாண்டியனும் திருநீற்றைப் பூசுமாறு செய்து, எங்கும் சிவமயமாக விளங்கச் செய்ய வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

பிள்ளையார் எழுந்து, வாகீச முனிவரோடு திருக்கோயில் சென்று வேதவனப் பெருமானைப் பணிந்து பெரிய திருக்கோபுரத் துள் இருந்து, வாகீசரை நோக்கி, "அப்பரே! பாண்டிநாடு சைவ நெறியினின்றும் நீங்கிச் சமண இருட்டறையில் இடர்ப்படுகின்ற தாம். மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் தங்கள் இடரை இவர்கள் மூலம் அறிவித்தார்கள். ஆதலினால், பாண்டி நாட்டிற்குச் செல்லுவேன்" என்று கூறியருளினார். அது கேட்ட திருநாவுக்கரசர், "பிள்ளாய்! சமணர்கள் வஞ்சனை மிக்கவர்கள். தாங்கள் பாண்டிய நாடு போவது நன்றன்று; கோளும் நாளும் தீயனவாக நிற்கின்றன. ஆதலின், நீர் அங்குபோக அடியேன் உடன்படமாட்டேன்'' என்றருளிச் செய்தார்.

காழியண்ணல், "அப்பரே! அரனார் அடிமலர் போற்றும் அடியவர்க்கு பழுது நேராது; கோளும் நாளும் நலமே புரியும்" என்று பகர்ந்து கோளறு பதிகம் பாடியருளினார்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே.

இப்பதிகத்தைக் கேட்டவுடன் அப்பரடிகள் உடன்பட்டுத் தாமும் அவருடன் புறப்பட்டுப் போகத் துணிந்தார். பிள்ளையார் அவரை வணங்கித் "தேவரீர் இங்கேயே எழுந்தருளியிருங்கள்" என்று வேண்ட, அப்பர் அதற்கு இணங்குவாராயினார்.

வைதிக சைவத்தை விளங்கச் செய்யும்பொருட்டு, வேதவனப் பெருமானை மீண்டும் வணங்கி, அருள்பெற்று விடை கொண்டு புறப்பட்ட முத்தமிழ் விரகர், அப்பரைத் தொழுது அவரிடமும் விடைபெற்றுக்கொண்டு ஐந்தெழுத்தோதி முத்துச் சிவிகையின் மீது ஏறியருளினார்.

"ஹரஹர" என்று அடியவர் கடல்போல் முழங்கினார்கள். மங்கல வாத்தியங்கள் ஒலித்தன. மலர்மாரி பொழிந்தது. இடையிலே அகத்தியான் பள்ளி, கோடிக்குழகர், கடிக்குளம், திரு இடும்பாவனம், திருவுசாத்தானம் முதலிய திருத்தலங்கள் சென்று, இன்னிசைப் பதிகம் பாடிப் பரமனைப் பரவி, தென்மேற்றிசை நோக்கிச் செல்லுவாராயினார்.

கொடுங்குன்றஞ் சென்று பவளக்குன்றைத் தொழுது, திருமதுரைமா நகரைச் சேர்ந்தார்.

இவ்வாறு, பிள்ளையார் வருகின்றபோது, பாண்டிநாட்டில் எண்பெருங் குன்றுகளில் வாழும் சமணர்கட்குப் பலப்பல துன்னிமித்தங்கள் உண்டாயின. தீக்கனாக் கண்டார்கள். அதனால், பெரிதும் அச்சமுற்றார்கள். அவர்கள் வாழும் பாழிகளின் மீதும், பள்ளிகளின் மீதும், அசோகமரங்களின் மீதும், கூகைகள் முதலிய தீய பறவைகள் பயங்கரமாக ஒலித்து ஒன்றோடொன்று எதிர்த்துப் போர்செய்தன. பீலியும் தடுக்கும் பாயும் அவர்கள் கரங்களி னின்றும் வழுவி விழுந்தன. கால்கள் தடுமாறின. இடக் கண்கள் துடித்தன. இந்த அப சகுனங்களால் "யாது விளையுமோ" என்று அமணர்கள் அறிவு கெட்டு அல்லலுற்றார்கள். தாங்கள் வாயளவிற் கூறிக்கொண்டிருந்த பொறை முதலிய குணங்களை விடுத்து,

தமக்குள் தாமே கலகம் புரிந்து கொண்டார்கள். இவ்வாறு, கிராமங்கள்தோறும் வாழும் சமணர்கள் எல்லாரும் பலவாறு தீய கனாக் கண்டு, ஒருவரிடம் ஒருவர் கூறி, மயங்கிய மதியுடன், எல்லாரும் புரண்டு திரண்டு மதுரைமா நகரம் வந்து சேர்ந்தார்கள்.

மதுரையில் வாழ்ந்தவர்களும் வெளியிலிருந்து வந்தவர்களுங் கூடி, கூன்பாண்டியனைக் கண்டு, தமக்கு உற்ற துன்னிமித்தங் களைக் கூறினார்கள். மருண்ட மனத்துடன் ஆடையில்லாத அழுக்கு உடம்புடைய அவர்கள் ஒன்றுபட்டுத் தாங்கள் கண்ட கனவுகளை எடுத்து உரைப்பார்கள். “அசோக மரம் வேரோடு அசைந்து அருகதேவர் மீது வீழ்ந்ததாகக் கனாக் கண்டோம்; அருகதேவர் முக்குடையுந் தாமுமாக எழுந்து கையைத் தொங்கவிட்டுக் கொண்டு போகவும், ஊரவர் அவர் பின் ஓடவும் கனாக் கண்டோம்; குண்டிகை உடைத்து, பாய் கிழித்து ஒரு குரு பத்தினி ஓடவும், குருமார்கள் கழுதைமேல் ஊர்ந்து செல்லவும், பலர் ஊளையிடவும் கண்டோம்.

சுடுகாட்டில் ஆடும் கண்ணுதலுடைய தொண்டர்கள் யாவரும் மதுரையில் வந்து சேரக் கண்டோம்; மன்னன் வெம்மையான நெருப்பில் முழுகவும், பின் அது தணிந்து உய்யவுங் கண்டோம். இளமையான விடைக் கன்று ஒன்று வந்து நமது கழகங்களை அழிக்கவும், அதைத் தடுக்க அஞ்சிப் பட்ட மரங்களில் நாம் ஏறிப் புகலிடமின்றிப் புலம்பவும் கண்டோம். நமது குருமார்களுக்குப் பெருந் தீங்கு விளைவது உறுதியே!” என்று இப்படிப் பலவாறு சொல்லி வருந்தினார்கள். உணவுங் கொள்ளாது உள்ளம் உலைந்தார்கள்.

சைவ நன்மரபில் வந்த பாண்டிமா தேவியார்க்கும், அமைச்சர் பெருமானுக்கும் நன்னிமித்தங்கள் தோன்றின. அளவில்லாத மகிழ்ச்சியுறுகின்றபோது, ஞானமுண்ட காழிப்பிள்ளையார் வந்தருளும் செய்தியைக் கேள்வியுற்றார்கள். ஞானசம்பந்தர் வந்தார் என்ற செய்தியைக் கூறினோர்க்கு வேண்டுவன அனைத்தும் வழங்கி னார்கள். உவகை வெள்ளம் பொங்கித் ததும்பிப் புரண்டு வழிந்தது.

வணங்கி நின்ற குலச்சிறையாரை மங்கையர்க்கரசியார் நோக்கி, “ஞானபோனகர் இங்கு எழுந்தருளியதனால் நாம் உய்வு பெற்றோம்; சென்று எதிர்கொள்ளும்” என்று கூறினார். குலச்சிறையார் திருநகரைக் கடந்து எதிர்கொள்ளச் சென்றார். அம்மையார் ஆலவாய் அண்ணலை வணங்குதல் வேண்டும் என்று கணவர் பால் விடைபெற்றுத் திருக்கோயிலுள் சென்று சொக்கலிங்கப்

பெருமானை வணங்கி, பிள்ளையாரை வரவேற்கும் பொருட்டு எதிர்பார்த்து நின்றார்.

ஒளிமிகுந்த முத்துச் சிவிகைமேல் பிள்ளையார் வரும்போது முழுமதிபோல் முத்துக் குடை நிழற்றினார்கள். திருநீற்றொளி சிறந்த தொண்டர்குழாம் சூழ்ந்து துதித்தார்கள். துந்துபி முதலிய வாத்தியங்கள் கடல்போல் ஆர்த்தன. மறையவர்கள் ஒழியாமல் ஆயிரம் வேதங்களையும் ஓதினார்கள். செந்தமிழ்க் காற்று முன்னே வந்து எதிர்கொண்டது. வஞ்சனைத் தவமுடைய சமணர்கள் என்னும் பாவப்படைகள் பாண்டிநாட்டை விட்டு விலகவும் மண்ணும் விண்ணும் பன்னாள் புரிந்த புண்ணியத்தின் படையெழுச்சிபோல் அக்காட்சி யிருந்தது. மானமிலா அமண இருளை மாய்க்க ஞான மணி விளக்கு எழுந்தருளியது போலும் இருந்தது.

குலச்சிறையார் செவியில் அடியவர் முழக்கும் அரனாமம் வந்து அமுதுபோல் தேங்கியது. அப்பொழுதே மண்மிசை வணங்கினார்.

அஞ்சலி குவித்த கரங்களும் தலைமேல்
அணைந்திடக் கடிதுசென் றணைவார்
நஞ்சணி கண்டர் தந்திரு மகனார்
உடன்வரு நற்றவக் கடலை
நெஞ்சினில் நிறைந்த ஆர்வமுன் செல்லக்
கண்டுநீள் நிலத்திடைத் தாழ்ந்து
பஞ்சவர் பெருமான் மந்திரித் தலைவர்
பாங்குற அணைந்துமுன் பணிந்தார்.

மண்மிசை வீழ்ந்து வணங்கிய குலச்சிறையாரை, தொண்டர்கள் பலரும் பணிந்தனர். அவர் எழுந்திராமல் பணிந்த வண்ணமாகவே இருப்பதைக் கண்டு பிள்ளையாரிடஞ் சென்று கூறினார்கள். பிள்ளையார் அது கேட்டுச் சிவிகை விட்டிறங்கி விரைந்து வந்து குலச்சிறையாருடைய பேரன்பைக் கண்டு கருணை பூத்துத் தமது தாமரைக் கரங்களால் அவரை எடுத்தார். குலச்சிறையார் வணங்கிய உடம்பும் மறைத்த வாயும் நிறைந்த அன்பும் உடையவராய் நின்றார். பிள்ளையார் அவரை நோக்கி, "அன்பரே! சோழர் பெருமான் குலமகளார்க்கும் உமக்கும் சிவபெருமான் திருவருள் பெருகும் நன்மை சிறப்பாக இருக்கின்றதோ?" என்று வினாவியருளினார்.

செம்பியர் பெருமான் குலமக ளார்க்கும்
திருந்திய சிந்தையீர் உமக்கும்
நம்பெரு மான்றன் திருவருள் பெருகு
நன்மைதான் வாலிதே யென்ன
வம்பல ரலங்கல் மந்திரி யாரு
மண்மிசைத் தாழ்ந்தடி வணங்கித்
தம்பெருந் தவத்தின் பயன்அனை யார்க்குத்
தன்மையா நிலையுரைக் கின்றார்.

குலச்சிறையார் படிமிசை வீழ்ந்து பணிந்து எழுந்து பகர்வார். "சென்றகாலத்தின் குற்றமில்லாத தன்மையும், இனி வருங்காலத்தின் சிறப்பும், இன்று தேவரீர் எழுந்தருளப் பெற்றதனால் என்றும் நாங்கள் திருவருளுக்கு உரியவரானோம். நன்றியில் வழியில் ஆழ்ந்த நாடும் நல்ல தமிழ் மன்னனும் உய்வு பெற்றுத் திருநீற்றின் ஒளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம்; தேவரீருடைய நல்வரவைக் கேட்ட மங்கையர்க்கரசியார் பெரிதும் மகிழ்ந்து பெறுதற்குரிய பெரும்பேறு பெற்றதாக எண்ணி, அடியேனை வரவேற்கும் பொருட்டு அனுப்பினார்கள்" என்று கூறி மீண்டும் பார்மிசை வீழ்ந்து பணிந்தார்.

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்
என்றைக்குந் திருவரு ளுடையோம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடு
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கு
மேன்மையும் படைத்தனம் என்பார்.

ஆளுடைய பிள்ளையார் அவருக்கு அளவிலாத அருள்புரிந்து இனியன இயம்பினார். அப்பொழுது எதிரே மதுரை மாநகர் தோன்றியது. பாலறாவாயர் பக்கத்தில் நின்ற திருத்தொண்டர்களை நோக்கி, "திரு ஆலவாய் எங்குளது?" என்று வினாவி யருளினார். அவர்கள் சோலை சூழ்ந்த திருமதுரை மாநகரைக் கரங்களால் காட்டிச் "சோமசுந்தரப் பெருமான் எழுந்தருளியுள்ள திருவாலவாய் இதுவே" என்று கூறினார்கள். உடனே, பிள்ளையார் மண்மிசை வீழ்ந்து பணிந்து பாடுவார்.

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாள்தொறும் பரவ

பொங்கழ லுருவன் பூதநா யகனால் வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவா யாவதும் இதுவே.

திருக்கோபுரத்தைக் கண்டு தொழுது, குலச்சிறையாருடன் திருக்கோயிலுக்குள் சென்றார்.

ஆளு மங்கணர் ஆலவா யமர்ந்தினி திருந்த
காள கண்டரைக் கண்களின் பயன்பெறக் கண்டு
நீள வந்தெழும் அன்பினால் பணிந்தெழ நிறையார்
மீள வும்பல முறைநில முறவிழுந் தெழுவார்.

அங்கம் எட்டினும் ஐந்தினும் அளவின்றி வணங்கிப்
பொங்கு காதலின் மெய்ம்மயிர்ப் புளகமும் பொழியுஞ்
செங்க ணீர்தரும் அருவியுந் திகழ்திரு மேனி
எங்கு மாகிநின் றேத்தினார் புகலியார் இறைவர்.

கண்பெற்ற பயனாகக் கண்ணுதலைக் கண்டு, பலமுறை படிமிசை வீழ்ந்து பணிந்தார். கண்கள் நீர் பொழிய, உரோமம் பொடிப்ப, காதல் வெள்ளங் கரைபுரள நின்று போற்றி செய்தார். தமிழ்ப்பதிகம் பாடித் திருமுன்றிலை அடைந்தார். அருகில் வந்த மந்திரியார், "அதோ கருங்குழல்மீது கரமலர் கூப்பிய வண்ணமாக நிற்பவர் வளவர்கோன் மகளார்" என்று கூறினார். பாலறாவாயர் பெருமகிழ்ச்சியுடன் அம்மையார் அருகிற் சென்றார். மங்கையர்க் கரசியார் கண்கள் நீர்கலுழ காழிவேந்தர் கழல்மீது வீழ்ந்தார். ஆளுடைய பிள்ளையார் அருட்கரத்தால் எடுத்தார். மானியார் "யானும் என்பதியும் செய்த தவம் என்னோ?" என்று கூறினார். காழிவேந்தர், "அம்மே! பரசமயத்திற்கு இடையில் இனிய திருத்தொண்டு புரியும் உம்மைக் காண வந்தனம்" என்றார். அத் திருமொழியைக் கேட்ட அம்மையார் மீண்டும் பாதமலர்மீது பணிந்தார். அவருக்கு விடை கொடுத்தனுப்பி விட்டு அடியார் குழாங்களுடன் புறப்பட்டு, அமைச்சர்பிரான் காட்டிய ஒரு திருமடத்தில் எழுந்தருளியிருந்தார்.

ஆளுடைய பிள்ளையார் அழகிய ஆலவாய்ப்பதியிலே திருமடத்தில் தங்கியிருந்தபோது, மங்கையர்க்கரசியார் பணித்த வாறு குலச்சிறையார் இனிய விருந்து அளித்தார். திருமடத்தில் அடியார்கள் "ஹரஹர" என்று முழங்கி, திருப்பதிகம் பாடினார் கள்.

பாயுடை யுடுத்த சமணர்கள் அன்றிரவில், இருட் கூட்டம் திரண்டதுபோல் ஓர் இடத்தில் கூடினார்கள். சிவனடியார்கள்

மதுரை மாநகர் வந்ததையும், அவர்கள் ஓதும் பதிக ஓசையையும் கண்டும் கேட்டும் மனம் புழுங்கிய அவர்கள், அடியவர்கட்கு இடர்புரிய எண்ணினார்கள். அரசனுக்கு அறிவிக்க வேண்டும் என்று கருதி அரண்மனை வந்து, காவலர் மூலம் அனுமதி பெற்று உள்ளே சென்று அரசனைக் கண்டார்கள். பாண்டியன், "நீவிர் திரண்டு இந்நடுநிசியில் வந்த காரணம் யாது?" என்று வினா வினான்.

"மன்னர் பெருமானே! மதுரையில் இன்று சைவர்கள் வர "நாங்கள் கண்டு முட்டு" என்று சமணர்கள் கூறினார்கள். பாண்டியன் "நான் கேட்டு முட்டு" என்று நவின்று உள்ளம் சினந்து, "அவர்கள் யார்? இங்கு எதன் பொருட்டு வந்தார்கள்?" என்று கேட்டான். "வேந்தே! சோழநாட்டிலே சீகாழியிலே ஈசனிடத்தில் ஞானம் பெற்றனன் என்று கூறிக் கொண்டு ஒரு வேதியச் சிறுவன் பலரை அழைத்துக்கொண்டு முத்துச் சிவிகை மீது எங்களை வாதில் வெல்ல வந்திருக்கின்றான்" என்று சமணர்கள் கூறினார்கள்.

மன்னன் மனங் கொதித்து, "அதற்கு நாம் என்ன செய்வது?" என்றான். குற்றம் நிறைந்த சிந்தையும் செயலும் உடைய அவர்கள், "அரசே! அப்பாலன் தங்கியுள்ள மடத்தில் தீப்பிடிக்குமாறு மந்திரஞ் செபித்தல் வேண்டும்" என்றார்கள். "அப்படியே செய் யுங்கள்" என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டுப் பொய்ம்மையைப் பொருளாகக் கொண்ட புரவலன் கவலையுடன் மலரணையில் படுத்திருந்தான். தேவியார் அங்கு வந்தார். அரசன் பேசாது கவலையுடன் இருப்பதைக் கண்டு, "என் உயிர்க்குயிராகிய இறைவரே! உவகையின்றி உள்ளம் வருந்தி யிருக்குங் காரணம் யாது?" என்று கேட்டார். "பெண்ணமுதே! காவிரி நாட்டிலிருந்து சங்கரன் அருள் பெற்ற ஒருவன் அடிகள்மாரை வாதில் வெல்லும் பொருட்டு இங்கு வந்திருக்கின்றான். அவனுடன் வெண்பொடி பூசும் தொண்டர்கள் வந்திருக்கின்றார்கள். அவர்களை அடிகள்மார் கண்டு முட்டு நானும் கேட்டுமுட்டு; மானியே! இதுதான் என் கவலைக்குக் காரணம்" என்றான். மங்கையர்க் கரசியார் "மன்னர் பெரும! மனங்கலங்கேல்; தெய்வத்தன்மை கொண்டு வாதில் வென்றவர் பக்கம் நாம் சேர்வோம்" என்று கூறினார்.

மங்கையர்க்கரசியார்பால் மந்திரியார் வந்து வணங்கி நின்றார். அரசரிடம் கூறியதைக் கூறினார். "அம்மே! அரனடியாரை இன்று வணங்கப் பெற்றோம். இனி சமணர் என்ன வஞ்சனை புரிவாரோ?"

என்றுகூறி வருந்தினார். பாண்டிமாதேவியார். "அமைச்சரே! ஞானசம்பந்தர்பால் ஈனர்கள் செய்யும் ஊனம் உண்டாகில் யாமும் உயிர்துறந்து ஒழிதல் வேண்டும்" என்று இயம்பினார்.

தவமெனும் போர்வையைப் போர்த்துக்கொண்டு அவமே புரியும் அமணர்கள், தங்கள் மந்திரத்தைச் செபித்துச் சிவநெறி வளர்க்க வந்தவர் திரு மடத்தின்மீது தீயை ஏவினார்கள்.

ஆதி மந்திரம் அஞ்செழுத் தோதுவார் நோக்கும்
மாதி ரத்தினும் மற்றைமந் திரவிதி வருமோ
பூதி சாதனர் மடத்தில்தாம் புனைந்தசா தனைகள்
சாதி யாவகை கண்டமண் குண்டர்கள் தளர்ந்தார்.

ஆதிமந்திரமாகிய பஞ்சாக்கரத்தை யோதுவார் நோக்குந் திசை யினும் ஏனைய மந்திரங்களின் செயல் செல்லுமோ? ஒரு போதுஞ் செல்லாது. அதனால், தாங்கள் செய்த செயல்கள் பலியாததைக் கண்டு அமணர்கள் அலக்கணுற்றார்கள். "இதனை மன்னன் அறிவானாயின் நம்மை ஒரு பொருளாக மதியான். மதியாததோடு நமது வருவாய்களையும் தவிர்ப்பான்" என்று எண்ணி, நெருப்புடன் சென்று நடு இரவில் பல்லாயிரம் அடியவர்கள் துயில்புரியும் திருமடத்தில் தமது செயலைச் செய்தார்கள். அப்பாதகர் புரிந்த செயல் வெளிப்படக் கண்ட பரிசனங்கள் அத்தீயை அவித்து, கழுமல வேந்தரைத் தொழுது நிகழ்ந்ததைக் கூறினார். திருஞான சம்பந்தர் அதுகேட்டு, "ஆ! மாதவர் துயிலும் திருமடத்திற்குப் பாவிகள் பழுது செய்வதோ? மன்னவன் ஆட்சி முறையின் தவறே இதற்குக் காரணம்; குடிகள் செய்த குற்றம் கொற்றவனைச் சேர்தல் என்பது அரசியல்முறை. ஆதலால், "செய்யனே! திருஆலவாய் மேவிய ஐயனே! பொய்யராம் அமணர்கள் இட்ட தீ பையவே சென்று பாண்டியற்காக" என்று பணித்துப் பைந்தமிழ்ப் பதிகம் பாடியருளினார்.

செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேஅஞ்செ லன்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே.

பாண்டிமாதேவியாரது மங்கலநாணைப் பாதுகாக்கும் பொருட்டும், குலச்சிறையார் அன்பினாலும், அரசன்பால் உற்ற அபராதத்தாலும், மீண்டும் வேந்தன் சிவநெறியை யடைய வேண்டி யிருப்பதனாலும், தாம் தீண்டித் திருநீறு பூசப்பெறும் பெரும்

பேற்றினை யுடையவனாதலாலும் தீப்பிணியைப் "பையவே செல்க" என்று பணித்தருளினார். மன்னனை அந்த வெந்தழல் வெப்பு நோயாகச் சென்று பற்றி வெதுப்பியது.

சமணருக்குத் துணை செய்த இருள் தொலைய இரவி கீழ்க் கடலில் எழுந்தான். மாதேவியார் பாதகர் செய்த தீமையைக் குலச் சிறையாருடன் கேட்டு, உள்ளங் குலைந்து, "தூயவரைத் தீயவர் நாட்டுக்கு வரவழைத்த நாம் மாய்வதே நலம்" என்று துணிந்தனர். பின்னர், திருமடத்திற்கு அத் தீமை யணுகாத தன்மையைக் கேட்டு மனந்தேறினார்.

வேந்தனுக்கு வெப்புநோய் வந்ததைக் கேட்டுத் துணுக்கமுற்று அரசனிடம் விரைந்து தேவியார் சென்றார். குலச்சிறையாரும் கொற்றவன்பால் குறுகினார்.

வேந்தன் வெப்பு நோயால் மெய் நடுக்குற்றான். அருகில் நின்றார் உடம்பும் அந்த வெம்மையால் காந்தியது. அனல் பெருகியது. ஆவி கருகியது. உணர்வு பொன்றியது. ஒருவரும் நெருங்க முடியாது விலகினார்கள். இளம் வாழையிலைக் குருத்துக் களையும், இளந்தளிர்களையும் அருகில் வைக்க அவைகளும் வெந்து கரித்துகளாயின. மருத்துவர்கள் திரண்டு வந்து தாம் கற்ற கலைகளின் சிகிச்சை அனைத்தும் செய்தும் அத் தீ மேன்மேலும் வளர்ந்தது. மன்னன் மதிமயங்கினான். சமணர்கள் அதுகேட்டு, "நாம் இரவில் செய்த செயலின் விளைவு இது போலும்" என்று மருண்டு அரசன்பால் அணுகினார்கள். நோயின் மூலந் தெரியாது, மயிற்பீலியைக் கொண்டு தாம் கற்ற மந்திரத்தை உச்சரித்து மன்னவன் உடம்பைத் தடவினார்கள். பீலியும் அதைச்சேர்ந்த பிரம்பும் சாம்பலாயின. அதுகண்டு அதிசயித்த அமணர்கள் தமது கமண்டலங்களில் உள்ள நீரை அள்ளி "ஓ அருகனே அரசனைக் காத்தருள்" என்று மன்னன் மீது தெளித்தார்கள். அது நெருப்பில் நெய் விட்டதுபோல் மேலும் வெப்பத்தை அதிகரிக்கச் செய்தது. அனற் கொழுந்துகள் பரந்தன. மன்னன் முன்னையின் பன்மடங்கு துன்பமுற்று, அமணர்களை, "ஒருவரும் இங்கு நில்லாமல் விலகிப் போங்கள்" என்று உரைத்து உணர்வு மயங்கினான்.

பாண்டிமா தேவியார் பயந்து மந்திரியாரை நோக்கி, "நம்மை உய்விக்க எழுந்தருளிய முத்தமிழ் விரகர்பால் இரவு சமணர்கள் செய்த தீங்கு இவ்வாறு மூண்டதுபோலும்" என்றார். அமைச்சர், அன்னையே! புரமெரித்த புனிதருடைய அடியவர்க்கு அறிவிலிகள் செய்த அபராதமே இதற்குக் காரணம். தீமை செய்த இவர்கள்

இதனைத் தீர்க்க முற்படின் நோய் கூடுமே யன்றிக் குறையாது" என்றார்.

மங்கையர்க்கரசியாரும் மந்திரியாரும் மன்னனை வணங்கி, "அண்ணலே! சீர்காழிப் பிள்ளையார் மதுரை மாநகருக்கு வர அவருக்கு அருகர்கள் செய்த அநுசிதமே இவ்வெப்பு நோய்க்குக் காரணமாகும். அவர் அருளினாலே இது அகலும். காயமும் மனமும் மாசு கழுவாத இவர்கள் செய்யும் செயல் இந் நோயை வளர்க்கவே செய்யும். ஆதலினால், திங்களை முடித்த சங்கரனார்பால் சிவஞானம் பெற்ற திருஞானசம்பந்தர் கருணை கொண்டு நோக்கி யருளினால் தீய இப்பிணியேயன்றி பிறவியுந் தீரும்" என்றார்கள். மெய்யுணர்வளிக்கும் அவ்விருவரும் கூறத் திருஞானசம்பந்தர் என்ற திருமந்திரம் பாண்டியன் செவியில் சென்ற மாத்திரத்தில் சிறிது அயர்ச்சி தீர்ந்தது. மன்னன் மானமிலா அமணர் செயலே நோய்க்குக் காரணம் என்றெண்ணி, "சைவ நீதி மறையவச் சிறுவர் வந்து அருள்செய்து இந்நோய் அகலுமேல் உண்மையை நான் அறிவேன்; அன்றியும் எனது வெப்பு நோயை நீக்கி வென்றவர் பக்கம் சேர்வேன்; அவரை இங்கு அழைத்து வாருங்கள்" என்றான்.

அம்மையாரும் அமைச்சனாரும் கரையை யுடைத்த வெள்ளம் போல் அன்பு பொங்கப் பிள்ளையாரைப் பணியும் பொருட்டுப் புறப்பட்டார்கள். பெண்மணிகள் சூழப் பாண்டிமா தேவியார் பல்லக்கிலேறிச் சென்றார். அமைச்சர் குதிரைமீது அவருக்கு முன் சென்றார். திருமடத்தைச் சார்தலும், வாயில் காப்போர் உள்புகுந்து பிள்ளையாரிடம் இவர்கள் வருகையைத் தெரிவித்தார்கள். "அழைத்து வாருங்கள்" என்று ஆளுடைய பிள்ளையார் அருள் புரிந்தார். இருவரும் திருமடத்துள் சென்று பெருமானைக் கண்டார்கள்.

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வரு மதிக்கொழுந்தை
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

கண்டவுடன் அமணர்கள் செய்த கொடிய செயலை நினைந்து, கண்களில் அருவிபோல் நீர் பெருக, உரை குழறி, உடல் நடுங்கி, புவியில் வீழ்ந்து புரண்டு, துன்பக் கடலில் வீழ்ந்தோர் ஒரு கரை கண்டுபிடித்துக் கொண்டதுபோல் சம்பந்தருடைய சரணாரவிந்தங்களைப் பற்றி மிகுந்த அன்பினால் விடாதபடி கிடந்தார்கள்.

உரைகுழறி மெய்ந்நடுங்கி ஒன்றுமறிந் திலராகித்
தரையின்மிசைப் புரண்டயர்ந்து சரணகம லம்பற்றிக்
கரையில்கவ லைக்கடற்கோர் கரைபற்றி னார்போன்று
விரைவுறுமெய் யன்பினால் விடாதொழிவார் தமைக்கண்டு.

சீகாழிப்பிள்ளையார் அவ்விருவர்களையும் தமது திருக்கரத்தால் எடுத்துத் தேறுதல் கூறி, "திருவுடையீர்! உங்கள்பால் தீங்கு உளதோ?" என்று வினாவியருளினார்.

"எம்பெருமானே! எம்மையாள வந்த எந்தையே! வெய்ய சமணர்கள் இங்குச் செய்த தீமையை நினைத்து வருந்தினோம். அது அகன்றது. தீயவர் செய்த தீமை சென்று வேந்தனை வெப்பு நோயாகப் பற்றி இடர்ப்படுத்துகின்றது. சமணர் பன்முறை முயன்றும் அவ் வெப்பு விலகியதில்லை. தேவரீர் எழுந்தருளி வந்து மன்னவருடைய உடற்பிணியையும் உயிர்ப்பிணியையும் அகற்றி அமணரை வென்று எம்மையும் இறைவரையும் உய்வித்தருள்வீர்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். பிள்ளையார் அவர்களை நோக்கி, "நீர் அஞ்சற்க; எம்பிரான் திருவருளால் அனைவருங் காண அமணரை வாதில் வென்று, நீங்கள் மகிழ வேந்தனை வெண்ணீறு அணிவிப்பேன்" என்று அருளிச் செய்தார். "இடர்க் காலினின்றும் எம்மை எடுக்கும் பொருட்டுத் தேவரீர் எழுந்தருளப் பெற்ற யாம் எல்லாம் பெற்றவர்களானோம்" என்று இருவரும் கூறி மகிழ்ந்தார்கள்.

திருஞானசம்பந்தர் புறப்பட்டுத் திருத்தொண்டர் கூட்டத்துடன் இறைவன் திருவுள்ளத்தை அறிவேன்" என்று திருக்கோயிலுட் சென்று, நோக்கிட விதியிலாரை நோக்கி யான் வாது செய்யத் தீக்கனல் மேனியானே! திருவுள்ளந்தானோ? என்று எண்ணித் திருப்பதிகம் பாடுவாராயினார்.

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே.

ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே.

ஆலமே யமுத மாக வுண்டுவா னவர்க் களித்துக்
காலனை மார்க்கண் டர்க்காக் காய்ந்தனை அடியேற் கின்று
ஞாலநின் புகழே யாக வேண்டுநான் மறைக ளேத்துஞ்
சீலமே ஆல வாயில் சிவபெரு மானே என்றார்.

இவ்வாறு, பாடி இறைவருடைய திருவருளைப் பெற்று மகிழ்ந்து, விடைபெற்றுத் திருக்கோயிலின் புறம்வந்து, சிவிகை மீது எழுந்தருளினார். அடியவர்கள் கடல்போல் ஆரவாரம் புரிந்தார்கள். பல்லியங்கள் முழங்கின. முத்துச் சின்னங்கள் ஒலித்தன. பல்லக்கில் பாண்டிமாதேவி பின்னே வரவும், குலச்சிறையார் தொண்டர் குழாத்திடை முன்னே செல்லவும் கண்டவர் கண்களிக்கக் காழி நாடுடைய பிள்ளையார் கன்னிநாடுடைய காவலன் அரண்மனைக் கருகில் வந்தார்.

அமைச்சர் முன்னே சென்று அரசனிடம் ஆளுடைய பிள்ளை யாரது வரவை உரைத்தார். அரசன் சிறிது துன்பம் நீங்கப்பெற்று நவமணிகள் இழைத்த சிறந்த ஆசனம் ஒன்றை தலைமாட்டில் இடுமாறு கூறி, “நீர் சென்று அவரை எதிர்கொண்டு அழைத்து வாரும்” என்றான். மந்திரியார் அவ்வண்ணமே அகமகிழ்ந்து சென்றார். அங்குள்ள அமணர்கள் அதுகண்டு வருந்தி அரசனை நோக்கி, “வேந்தர் பெருமானே! நமது சமயத்தை காக்குந் தன்மை இதுவோ? உம்மால் அழைக்கப்பட்ட அவரையும் எங்களையும் நோயைத் தீர்க்குமாறு கட்டளையிடுங்கள்; நோய் அவரால் தீர்ந்த தாயினும், எங்களால் தீர்ந்ததாகவே கூறுங்கள். அப்பொழுதுதான் நமது சமயம் நிலைபெறும்” என்றார்கள். நன்மை யடையத்தக்க பக்குவம் வந்தெடுத்த மன்னன், “நான் அவ்வாறு வஞ்சனையாகப் பொய் புகலேன்” என்றான்.

தென்னாடு செய்த திருத்தவக் கொழுந்து போன்ற, சீகாழிப் பெருமானார் அரண்மனை வாயிலில் சிவிகை விட்டிறங்கி, அமைச்சர் முன்னும் அம்மையார் பின்னும் வர அழகின் சிகரம் போல் எய்தினார். அத்திருவாளரை நோக்கிய மன்னன் கரமெடுத்து முடிப்பக்கமுள்ள மணிப்பீடத்தைக் காட்டினான். பிள்ளையார் பீடமிசை அமர்ந்தருளினார். அமணர்கள் அச்சமுற்றார்கள். சிவஞானமூர்த்தியின் திருவருள் பார்வையால் வெப்பு நோய் சிறிது நீங்கப்பெற்று, அண்ணலை நோக்கி, தங்கள் ஊர் யாது?” என்று கேட்டான் மன்னன். பிள்ளையார்,

பிரமனூர் வேணுபுரம் புகலி வெங்குருப் பெருநீர்த் தோணி
புரமன்னு பூந்தராய் பொன்னஞ் சிரபுரம் புறவஞ் சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சைவய முள்ளிட்டங் காதி யாய
பரமனூர் பன்னி ரண்டாய் நின்றதிருக் கழுமலநாம் பரவு மூரே.

என்று கூறியருளினார்.

பொறாமையால் புழுங்கிய சமணர்கள், கண் சிவந்து, காலை யெழுங் கதிரவனை நீலமுகில் சூழ்ந்ததுபோல் சூழ்ந்து, வாது புரிவான் எண்ணித் தமது நூல்களை எடுத்துக் கூறிக் குரைத்தார் கள். பிள்ளையார், அதுகேட்டு, "உமது நூற் பொருளின் முடிவை உள்ளவாறு உரைமின்" என்று உரைத்தருளினார். ஊத்தைவாய் அமணர்கள் துள்ளியெழுந்து அநேகமாய்ச் சூழ்ந்து பதறிக் கதறினார்கள்.

மங்கையர்க்கரசியார் அதுகண்டு உள்நடுங்கி, கணவனாரை நோக்கி, "இவரோ இளம் பிள்ளை. அவர்கள் எண்ணிலாதவர்கள் நின்று எதிர்க்கின்றார்கள். உமது நோய் தீர்த்தபின் வாது செய்யட்டும்" என்றார். மன்னன், "அன்புடைய பெண்ணே! நீ அஞ்சற்க" என்று கூறி, "வேறு வாதம் எதற்கு? எனக்கு உற்ற வெப்பு நோயை அருகர்களாகிய நீரும், சிவபிரானடியாரும் தீர்க்கட்டும். அதனால், இருதிறத்தின் தெய்வத் தன்மையை நாம் தெளிவோம்" என்றான்.

அப்பொழுது அழுதுலகை வாழ்வித்த கவுணியர் பெருமான் அம்மையாரை நோக்கி, "அம்மே! என்னைப் பாலன் என்று நீர் அஞ்சவேண்டாம். நிலையிலாத அமணர்க்கு என்றும் நான் எளியனல்லேன்" என்று தேற்றித் திருப்பதிகம் பாடியருளினார்.

மானி நேர்விழி மாதராய் வழுதிக்கு மாபெருந் தேவிகேள்
பானல் வாயொருபாலனீங்கிவ னென்று நீபரி வெய்திடேல்
ஆனை மாமலை யாதியாய விடங்களிற்பல வல்லல்சேர்
ஈனர்கட் கெளியேன லேன்றிரு வாலவாயர னிற்கவே.

பாண்டியன், பிள்ளையாரையும் அமணரையும் நோக்கி, "எனக்குற்ற பிணியை விரைவில் தீர்த்தவர் வாதில வென்ற வராவார்" என்று கூறினான். அம்மொழியைக் கேட்ட அமணர்கள் "வேந்தே! உனது உடம்பில் இடப்பாகத்தில் உள்ள நோயை நாங்கள் மந்திரித்துத் தீர்ப்போம்" என்றார்கள். அறிவிலாத அவர்கள் மயில் பீலியைக் கொண்டு, தமது மந்திரத்தை மொழிந்து தடவினார்கள். வெப்புநோய் மேன்மேலும் வளர்ந்து வருத்தியது. மன்னன் தாங்க முடியாமல் மறையவர் பெருமானை நோக்கினான்.

சீகாழிப் பெருமான் திருவாலவாய்ப் பெருமான் திருநீறே மந்திரமும் மருந்துமாகித் தீர்க்கும் என்று கூறி,

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்ப டுவது நீறு

தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நிறு
செந்துவர் வாயுமை பங்கன்றிரு வாலவா யான்றிரு நீறே.

என்ற திருப்பதிகம் பாடித் திருவளர் திருநீற்றைத் தென்னவன் வலப்பாகத்தில் பூசியருளினார். வெப்பு நீங்கிப் பூம்புனல்போல் குளிர்ந்தது. இடப்புறத்தில் மிக்க அழல் எழுந்து இருபுறத்து வெப்பும் ஒருபுறமாகி வாட்டியது. அமணர்களின் உடம்பும் கன்றியது; அவர் தருக்குங் குன்றியது; பீலியுந் தீய்ந்தது. வஞ்சனையும் மாய்ந்தது.

மன்னன் கூறுவான்: வெய்ய நரகம் ஒருபுறமும், வீட்டின்பம் ஒருபுறமும், நஞ்சு ஒருபுறமும், அமுதம் ஒருபுறமும், நின்றதுபோல் எனது உடம்பில் துன்பமும் இன்பமும் ஒருங்கே நின்றன. "மாசுமிக்க வஞ்சக அருகரே! வாதில் தோற்றீர்கள். என்னைவிட்டு விலகிப் போங்கள். அடியேனை உய்விக்க வந்த வள்ளல் பெருமானே! இடப்புறத்தில் என்னை வாட்டும் வெப்பு நோயையும் விலக்கி ஆட்கொள்வீர்" என்று தொழுது கூறினான். காழி வேந்தர் கருணை கொண்டு, திருநீறு கொண்டு ஒருமுறை தடவுதலும் அப்பிணி நீங்கி வழுதி முழுவதும் உய்ந்தனன். மன்னனது தேவியாரும் மந்திரி யாரும் சம்பந்தரது வெம்பந்தமகற்றும் திருவடிமீது வீழ்ந்து, "பெருமை பெற்றோம்; இன்றே யாம் பிறந்தோம்; பிறவாத மேன்மையை மன்னர்பிரான் பெற்றனர்" என்று கூறி மகிழ்ந்தார் கள். வெப்பு நீங்கிய வேந்தன் எழுந்து சமணர்கள்முன், ஞான சம்பந்தர் திருவடிமீது வீழ்ந்து, "அடியேன் உய்ந்தேன்" என்று கூறினான்.

அதுகண்ட சமணர்கள் அஞ்சினார்கள். இனிய கவிபாடி சுரநோயைத் தீர்த்த திறத்தைக் கண்ட அவர்கள் கலைத்துறை யினால் வாதிட முடியாதென்று கருதி, அனல்வாது, புனல்வாது செய்து வெல்லத் துணிந்தார்கள். திருஞானசம்பந்தர் "இனி நீங்கள் உங்கள் உண்மையை உரைமின்கள்" என்று அருளிச் செய்தார். அவர்கள், "நமது உண்மையைக் கண்கூடாகக் காட்டும் தன்மை யில் வாதிடவேண்டும்" என்றார்கள். அதைக் கேட்ட மன்னன் சினந்து, "என் உடம்பை வாட்டிய வெப்புநோயை நீக்க மாட்டாது தோற்றீர்கள். இனி, உமக்கு என்ன வாது?" என்று கூறினான். சமணர்கள் அச்சொல்லையே வினாவாகக் கொண்டு, "ஏட்டில் சமய உண்மையை எழுதி நெருப்பிலிட்டு அது வேகாமல் இருக்க வைத்தலே வெற்றியாகும்" என்றார்கள். அதற்கு மன்னனும் காழி மன்னரும் உடன்பட்டார்கள்.

அனல்வாது

பெரிய அவை கூடியது. அந்த அவைக்குமுன் மன்னன் ஆணையினால் நெருப்பை அமைத்தார்கள். திருஞானசம்பந்தர் சிவமே பொருள் என்று தெரிவிக்கும் திருமுறை நூலையெடுத்து, கண்ணுதலே பரம்பொருள் என்று சென்னியில் வைத்துத் தொழுது எடுத்து தமது திருக்கரத்தினால் விரித்துத் திருவருளைச் சிந்தித்து ஓர் ஏட்டை எடுத்தார். அது திருநள்ளாற்றுத் தலத்தின் தேவாரப் பதிகமாகிய,

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

என்ற திருப்பாடலாக அமைந்தது.

நம்மை ஆட்கொள்ளும் பரமாகிய சிவமே முதற்பொருள் என்று கூறி,

தளிரிள வளரொளி தனதெழில் தருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை யிணையவை குலவலின்
நளிரிள வளரொளி மருவுநள் ளாறர்தம் நாமமே
மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே.

என்ற திருப்பதிகத்தைப் பாடியருளி, மன்னன் அவையில் உள்ளோர், அத்தனைப் பேருங் காணும்படி, அமணர் உள்ளம் வேக, அத்திரு ஏட்டை வெந்தழலில் இட்டருளினார்.

இட்ட ஏட்டினில் எழுதிய செந்தமிழ்ப் பதிக
மட்டு லாங்குழல் வனமுலை மலைமகள் பாகத்
தட்ட மூர்த்தியைப் பொருளென வுடைமையா லமர்ந்து
பட்ட தீயிடைப் பச்சையாய் விளங்கிய தன்றே.

முத்தமிழ்விரகர் இட்ட ஏடு வேவாமல் பசுமையாக விளங்கியதைக் கண்ட அமணர்கள், தமது சமய வுண்மையை எழுதிய ஏட்டை "இது நிலைக்குமோ? நிலைக்காதோ" என்று ஐயங்கொண்டு நடுங்கிய உள்ளத்துடன் நெருப்பில் இட்டார்கள். பஞ்சு நெருப்பில் பட்டதுபோல் அந்த ஏடு சாம்பராயிற்று. சைவசமயமே உண்மைச் சமயம் என்பதைக் காட்ட அது கரி (சாட்சி)யாயிற்று. ஞானசம்பந்தர் தாம் இட்ட ஏட்டை அது முன்னையினும் புதுமையும் பசுமையும் உடையதாய் விளங்குவதை யாவருங் கண்டு அதிசயிக்க

எடுத்து எல்லாருக்குங் காட்டி, திருப்பதிகங்கள் நிறைந்த திருமுறையில் முன் இருந்தபடியே கோத்தருளினார். மன்னன் மானமிலாச் சமணரை நோக்கி "நீங்கள் இட்ட ஏட்டினை எடுங்கள்" என்றான்.

அருகர் தீயினை அணுகி அது வெந்திருப்பதைக் கண்டு அஞ்சி நின்றார்கள். மன்னன் தண்ணீரை விட்டுத் தீயை அணைத்தான். சாம்பருங் கரியையுமே அமணர்கள் கண்டார்கள். அதை எடுத்துப் பிசைந்து தூற்றிப் பார்க்கலாயினார்கள். அதைப் பார்த்து இறைவன் எள்ளி நகையாடி, "இந்தச் சாம்பரை இன்னும் தண்ணீரில் போட்டு அரித்துப் பாருங்கள்; பொய்யை நிலைநாட்ட வந்த புல்லர்களே! போங்கள் ஏன் மானமின்றி நிற்கின்றீர்கள். வெப்பு நோய் தீர்க்க மாட்டாது தோற்றீர்கள். இப்போது அனல் வாது செய்து தோற்றீர்கள். இன்னும் நீங்கள் தோற்கவில்லையா?" என்று கேட்டான்.

புனல்வாது

சமணர்கள் மன்னன் சொல்லை யுணராது, "முன்னே இருமுறை வாது செய்தோம். இன்னும் ஒருமுறை செய்தால் மும்முறையாகும். ஒருமுறை வென்றாலும் எமக்குச் சிறப்பேயாகும். இனி ஒன்றினால் ஆராய்வோம்" என்று தோற்பதிலும் ஆசை தணியாத சமணர்கள் சொல்லினார்கள். மன்னவன் "உங்கள் சொல் பயனிலாதது" என்று மறுத்தான்.

சம்பந்தர் சமணரை நோக்கி, "இனி வேறு என்ன வாது செய்வோம்" என்றார். சமணர்கள், "நீரும் நாங்களும் தத்தம் சமயப்பொருளை எழுதி ஏட்டினை ஓடும் நீரில் இடவேணும். இட்ட ஏடு நீர்போன வழியே ஓடாது போட்ட இடத்தில் நிற்குமானால் அச்சமயமே உண்மைச் சமயம்" என்றார்கள். பிள்ளையார் "நல்லது; அவ்வாறே செய்வோம்" என்று கூறியருளினார். குலச்சிறையார், "இப்போது செய்ய நினைத்த வாதில் தோற்றால் தோற்றவர் என்ன செய்வது" என்று கேட்டார். கோபமும் பொறாமையும் மேற்கொண்ட சமணர்கள் தங்கள் வாய் சோர்ந்து வாதில் நாங்கள் அழிவோமாயின் எம்மை இந்த மன்னன் வெய்ய கழுவினில் ஏற்றட்டும்" என்று கூறினார்கள்.

மன்னன் அதுகேட்டு "உங்கள் செய்கை மறந்து சினங் காரணமாகக் கூறினீர்கள். இனி ஏடுகளை வையையாற்றில் விடுவதற்கு வாருங்கள்" என்றான். பாலறாவாயர் பீடத்தினின்றும் இறங்கி அழகிய முத்துச்சிவிகை மீது ஏறிச் சென்றருளினார்.

தென்னவனாகிய மன்னன் புரவிமீது ஏறிச் சென்றான். உண்மை யுணராத சமணர்கள் மயக்கத்தின் மீது ஏறிச் சென்றார்கள். இவ்வாறு, திருஞானசம்பந்தர் திருவீதியில் எழுந்தருளிவரக் கண்ட பெண்மணிகளும் ஆடவரும் பணிந்து கூறுவார்கள்.

"வேந்தன் வெப்பு தீர்த்த சாந்தமூர்த்தி இவர்" என்பார்,

"பாண்டிநாடு உய்யவந்த பவளவாய்ப்பிள்ளை இவர்" என்பார்,

"அருகரை அனலிடை வென்ற அண்ணல் இவர்" என்பார்,

"புண்ணிய நீறே பொருளெனக் கண்டோம்" என்பார்,

"ஆலவாய் மேவிய அண்ணலே பொருள்" என்பார்,

"அரனையறியும் அறிவே அறிவு" என்பார்,

"சைவமும் நீறும் தழைத்திடும் எங்கும்" என்பார்,

"வெஞ்சமண் பேரிருள் விடிந்தொளி விளைந்தது" என்பார்,

"நெருப்பினில் தோற்றவர் நீரினில் வெல்வரோ" என்பார் என்று இவ்வாறு பலர் பலவாறு பேசினார்கள். மன்னனும் மங்கையர்க்கரசியாரும் பிள்ளையார் பின் சென்றார்கள். மங்கல வாத்தியங்கள் கடல்போல் முழங்கின. சமணர்கள் ஒருபுறம் சென்றார்கள்.

தென்றமிழ் விளங்க வந்த திருக்கழு மலத்தான் வந்தான்
மன்றுளா ரளித்த ஞான வட்டில்வண் கையன் வந்தான்
வென்றுல குய்ய மீள வைகையில் வெல்வான் வந்தான்
என்றுபன் மணிச்சின் னங்கள் எண்டிசை நெருங்கி யேங்க.

பருவம் வந்த மகளிர் உள்ளம் கணவனை நாடி விரைந்து செல்லுவதைப்போல் கடலை நாடி அலைகளுடன் செல்லும் வையையாற்றை அனைவரும் வந்து சேர்ந்தார்கள். மன்னவன் "பிள்ளையாரும் அருகரும் ஏடுகளை நீரில் இடுக" என்றான்.

பதர் போன்று உள்ளீடு இல்லாத சமணர் ஏட்டில் தமது மந்திரமாகிய "அஸ்தி நாஸ்தி" என்றதனை எழுதி ஏட்டினை ஓடும் நீரில் விடுத்தார்கள். அது விரைந்து கடலை நாடிச் சென்றது. ஆற்றில் ஓடும் ஏட்டைத் தொடர்ந்து அருகரும் ஓடினார்கள். அந்த ஏடு அவர் கைக்கே யன்றிக் கண்ணுக்கும் எட்டாமல் அவரை காட்டாற்றில் விடுத்துச் சென்றது. அருகர்கள் அஞ்சி மீண்டு வந்து நின்றார்கள். நின்றவர்கள், "நீரும் ஏட்டை நீரில் விட்டால் வந்தது காண்போம்" என்றார்கள் அரசன் ஆளுடைய பிள்ளையார் திருக்குறிப்பை நோக்கினான்.

பாண்டியன் பிள்ளையாருடைய திருக்கரமலரால் தீண்டப் பெற்று, புண்ணியத் திருநீறு பூசப் பெற்றதனால், பண்டை வினை முழுவதும் நீங்கப் பெற்று, முதல்வனை அறியுந் தன்மை யெய்தி இருவினையொப்பு மேவினான். ஆதலினாலே, திருஞான சம்பந்தர் வேந்தனையும் வாழ்த்தித் திருப்பாசுரம் பாடலாயினார்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர். தீர்கவே.

இத் திருப்பதிகத்தைப் பாடியருளிப் பலரும் அறிய எழுதி அந்தத் திருஏட்டினைத் தமது திருக்கரத்தினால் வைகையாற்றில் இட்டருளி னார். பிள்ளையார் இட்ட திருஏடு மாதவர் மனம் பிறவியாற்றில் எதிரேறுவதுபோல் வையை யாற்றில் நீரைக் கிழித்துக் கொண்டு எதிரேறிச் சென்றது. "எல்லாப் பொருளும் சிவமே" என்று எழுதும் ஏட்டில் 'வேந்தன் ஓங்குக' என்று பாடி யருளியதனால், திருவளர் மார்பன் அநபாயச் சோழனுடைய சிறந்து வளையாத செங்கோல் போல் தென்னவன் கூன் நிமிர்ந்தது.

ஏடு எதிரேறிச் செல்கின்றபோது இமையவர் மலர்மழை பொழிந்தார்கள். அரசன் அற்புதமுற்று நின்றான். அமணர் அஞ்சி அஞ்சலிசெய்து நின்றார்கள். காற்றினும் கடிய வேகக் குதிரை மீது ஏறி குலச்சிறையார் திரு ஏட்டினை எடுக்கச் சென்றார்.

ஏடு நிற்கும்பொருட்டு, இளமைமிக்க மறைச்சிறுவர்,

வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலர் ஏடகத் தொருவனே.

என்ற திருப்பதிகத்தைப் பாடியருளினார். சிவபெருமான் திருக் கோயிலின் புறத்தே நீர்நடுவே சென்று அத்திரு ஏட்டினை அமைச்சர் பிரானார் எடுத்துக் கொண்டார்.

அதனைச் சென்னிமேல் வைத்து, அங்கு வையை யாற்றங் கரையில் அமர்ந்துள்ள வரைவில்லியாரை வணங்கி, வண்டமிழ் விரகர்பால் வந்தார். அந்த அழகிய ஏட்டை எல்லாருக்கும் காட்டினார். "ஹரஹர" என்று அடியவர் அலைகடல் போல் முழக்கினார்கள்.

சமணர் கழுவேறுதல்

நீதி வழுவாத நிருபன் மந்திரியாரை நோக்கி, "வாதில் தோற்ற இச்சமணர்கள் முன்னமே பிள்ளையார் அடியார் குழாத்துடன் தங்கியிருந்த மடத்தில் தீங்கிழைத்தார்கள். ஆதலின், இவர்கள் ஒப்புக் கொண்டபடி கழுவில் ஏற்றி அரச நீதியை நிலைநிறுத்துக" என்றான். அரசநீதியில் குறுக்கிடாது சம்பந்தர் திருவருளைச் சிந்தித் திருந்தார். குலச்சிறையார் ஞான மாதவர் திருமடத்தில் தீவைத்த எண்ணாயிரஞ் சமணர்களையும் கழுவில் ஏற்றினார்.

மதுரையில் உள்ள எல்லா மாந்தர்களும் திருநீறு அணிந்து புனிதர்கள் ஆனார்கள். சமண் இருள் தொலைந்து திருநீற்றின் ஒளி எங்கும் வீசியது. திருநெறி ஓங்கியது. திருஞானசம்பந்தர் இறைவரை வணங்கச் சிவிகையூர்ந்து திருக்கோயிலுக்குச் சென்றார். மன்னவனும் மங்கையர்க்கரசியாரும் உடன் சென்றார்கள். திருக் கோயில் முன் சென்று சிவிகை விட்டிறங்கி, கண்கள் நீர்பொழிய கரமலர்கள் சிரமிசை குவிய உட்சென்று பாடுவார்.

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள் கடிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

பாண்டியன், "கூடற் பெருமானே! சமண் மாயையில் மயங்கிய அடியேனது பிணியைத் தணித்து ஆட்கொள்ளும் ஆளுடைய பிள்ளையாரை அளித்தருளினீர்! உமது கருணையின் பெருமையை என்னென்று புகழ்வேன்" என்று துதித்தான்.

பின்னர், சம்பந்தர் திருமடத்திற்கு எழுந்தருளினார். மன்ன வனையும் மானியாரையும் அரண்மனை செல்ல விடையளித்தார். மதுரையில் உள்ளவர்களும் அதனைச் சூழ்ந்துள்ள ஊர்களில் உள்ளவர்களும் ஆங்காங்கிருந்த அருகர்களுடைய பள்ளிகளை மாற்றி மங்கலம் பொலியச் செய்தார்கள். நாடோறும் பிள்ளையார் திருக்கோயில் சென்று ஆலவாயண்ணலை வணங்கி மகிழ்வார். மன்னரும் மானியாரும் மந்திரியாரும் பிள்ளையாரை உள்ளன்புடன் தொழுது வந்தார்கள்.

சிவபாத இருதயர் வருதல்

மதுரையம்பதியிலே ஆளுடைய பிள்ளையார் நாடோறும் ஆலவாயண்ணலை வழிபாடு செய்துகொண்டிருந்தார். பாண்டிய

மன்னரும், மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் முப்போதும் பிள்ளையாரை வணங்கி உள்ளம் உவந்து வாழ்ந்தார்கள்.

சீகாழியிலே உறைகின்ற சிவபாத இருதயர் தமது மாதவத்தால் அவதரித்த பிள்ளையாரை நாடோறும் நினைப்பாராயினும் ஒருநாள் மிகவும் அவருடைய நினைவு வந்து உந்தியது.

செய்தவத்தாற் சிவபாத இருதயர்தாம் பெற்றெடுத்த
வைதிகசூ ளாமணியை மாதவத்தோர் பெருவாழ்வை
மைதிகழுந் திருமிடற்றார் அருள்பெற்ற வான்பொருளை
எய்தியபூம் புகலியிலே இருந்தநாள் மிகநினைந்தார்.

புகழ்மிகுந்த திருநாவுக்கரசருக்கு இடர்விளைவித்த வஞ்சனை மிக்க சமணர்களை வாதிலே வெல்லுதற்கும், பாண்டி நாட்டிலே திருநீற்றினைப் பரப்புதற்குஞ் சென்ற திருமகனாருடைய செயலை அறிவதற்கு அவாவினார். மதுரையை நோக்கிப் புறப்பட்டார். தோணியப்பரைத் தொழுதுகொண்டு வழியில் உள்ள சிவாலயங் களையும் வணங்கிக் கொண்டு பாண்டிநாடு வந்து சேர்ந்தார். அளவற்ற அன்புடன் மதுரை மாநகரிற் புகுந்து சொக்கலிங்கப் பெருமானையும், அங்கயற்கணம்மையாரையும் வழிபட்டு மகிழ்ந்தார். பின்னர், பிள்ளையார் இருக்கும் இடத்தை வினாவி திருமடத்தைச் சார்ந்தார். திருமடத்தில் உள்ள அடியார்கள் தந்தையாருடைய வருகையைப் பிள்ளையார்பால் தெரிவித்தார் கள். பிள்ளையார் உள்ளம் உவந்து எதிர்கொள்ள வந்தார். சிவபாத இருதயர் தொழுது கொண்டே மடத்தில் நுழைந்தார். பிள்ளையார் அவரை எதிர் தொழுது வரவேற்று, சீகாழியில் திருத்தோணி அமர்ந்தவரும் தமக்கு அருள்புரிந்தவருமாகிய இறைவரை நினைந்து உருகினார்.

மண்ணி னல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணி நல்லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே.

என்ற இவ்வினிய திருப்பதிகத்தைப் பாடிப் பணிந்தார். சிவபாத இருதயருக்கும் மற்றவர்க்கும் நல்விருந்து செய்வித்தருளினார்.

பாண்டிநாட்டு யாத்திரை

திருஞானசம்பந்தர் பாண்டிநாட்டிலே உள்ள பிற தலங்களை வணங்க வேண்டும் என்று விரும்பி, ஆலவாய் அமர்ந்தருளும் நீல கண்டரைத் தொழுது ஆரா அன்புடன் புறப்பட்டார். பாண்டிய மன்னரும் அவர் தேவியாரும், அமைச்சரும் கண்ணீர் சொரிந்து பிள்ளையாரைப் பிரியமாட்டாதவர்களாய் உள்ளம் உருகினார்கள். அவர்களுடைய பிரிவாற்றாமையைக் கண்ட புகலி மன்னர் பாண்டிநாட்டிலேயுள்ள பரமனை வணங்குதற்கு உடன் வருமாறு பணித்தருளினார். அடியார் குழாங்கள் “அரகர” என்று முழங்கச் சென்று, திருப்பரங்குன்றம், திருஆப்பனூர், திருப்புத்தூர், திருப்பூவணம், திருக்கானப்பேர், திருச்சுழியல், திருக்குற்றாலம், திருக்குறும்பலா, திருநெல்வேலி முதலிய திருத்தலங்களைத் தரிசித்துத் திருப்பதிகம் பாடி மகிழ்ந்தார்.

இலங்கையைச் செற்ற பாவந்தீரும் பொருட்டுத் திருமால் வழிபட்ட திருஇராமேச்சுரத்தை வணங்குதற்கு விரும்பி, மாறனும், மானியாரும் மந்திரியாரும் ஏனைய அடியவர்களும் புடைசூழச் சென்று இராமேச்சுரத்தைத் தரிசித்துத் திருப்பதிகம் பாடிச் சிலநாள் அந்தக் கடற்கரையில் இனிது தங்கியிருந்தார்.

அங்கிருந்தபடியே ஈழ நாட்டில் உள்ள திருக்கோணமலை, திருக்கேதீச்சுரம் என்னும் தலங்களை உணர்வினால் கண்டு பணிந்து செந்தமிழ்ப் பதிகம் பாடிப் போற்றினார்.

அங்கிருந்து புறப்பட்டுத் திருவாடானை, திருப்புனவாயில் என்னும் தலங்களிற் சென்று, சிவபெருமானைச் சேவித்து, செந்தமிழ் மாலை சாத்தினார். குலச்சிறை நாயனார் அவதரித்த ஊராகிய மணமேற்குடி சென்று, குலச்சிறையார் பெரிதும் உபசரிக்க அங்குச் சிலநாள் தங்கியிருந்து அருகில் உள்ள திருத்தலங்களைக் கண்டு களித்தார்.

சோழநாட்டுக்குத் திரும்புதல்

ஆளுடைய பிள்ளையார் சோழநாடு செல்லத் திருவுளங் கொண்டருளினார். மங்கையர்க்கரசியாரும், மன்னர் பெருமானும் மந்திரியாரும் பிரிந்திருக்க மாட்டாராய் உடன் செல்லத் துணிந்தார் கள். ஞானபோனகர், “அன்பர்களே! நீங்கள் நமது மொழியை மறுக்காமல் மதுரையில் சென்று சைவசமயத்தைப் பரிபாலனஞ் செய்து கொண்டிருங்கள். இறையருள் குறைவறத் துணை புரியும்” என்று பணித்தருளினார். குருமூர்த்தியின் கட்டளையை மறுக்க

அஞ்சி, அவரைப் பலமுறை பணிந்து அன்பினால் அகங் குழைந்து நின்றார்கள்.

பிள்ளையார் ஏனைய திருத்தொண்டர் குழாத்துடன் முத்துச் சிவிகை யூர்ந்து, பாண்டி நாட்டைக் கடந்து சோழ நாட்டை யடைந்தார். திருக்களர், திருப்பாதாளீச்சுரம் முதலிய திருப்பதிகளை விருப்புடன் போற்றினார்.

ஓடம் விட்டருளியது

முள்ளிவாய்க்கரை என்னும் ஊரையடைந்தார். அதன் அருகில் ஆறு மிகப்பெருகி தேக்குஞ் சந்தனமும் அகிலும் வெள்ளத்தில் மிதந்து செல்ல ஆட்கள் அக்கரை செல்லமாட்டாது இருந்தனர். ஓடம் விடுபவர்களும் ஓடக்கோல் நிலைபெறாமையால் ஓடத்தைக் கரையில் நிறுத்திச் சென்றார்கள். திருக்கொள்ளம்பூதூர் என்னும் திருத்தலம் எதிரே தோன்ற, அங்குச் சென்று சங்கரரை வணங்கு தற்குக் காழிவேந்தர் காதல் கொண்டார்.

அதி சீக்கிரம் ஓடத்தின் கட்டை அவிழ்த்து, சிவனடியார்களை அதிலே ஏற்றி, நாவலமே கோலாக அத்தோணி மீது நின்று, தோணியப்பரால் ஆட்கொள்ளப் பெற்று பிறவிக்கடலினின்றும் அடியவரைக் கரை சேர்க்க வந்த கவுணியர் பெருமான் நற்றமிழ்ப் பதிகம் நவின்றார்.

கொட்டமே கமழுங் கொள்ளம்பூதூர்
நட்ட மாடிய நம்பனை யுள்கச்
　　செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
　　நல்கு மாறருள் நம்பனே.
ஓடம்வந் தணையுங் கொள்ளம்பூதூர்
ஆடல் பேணிய அடிகளையுள்கச்
　　செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
　　நல்கு மாறருள் நம்பனே.

சிவபெருமான் திருவருளால் ஓடம் எதிர்கரையை அடைந்தது. பாலறாவாயர் அடியார்களுடன் ஓடத்தை விட்டிறங்கி, திருக் கொளம்பூதூர் திருக்கோயிலுட் சென்று, மதிவளர் சடையமலனை வணங்கி, "தாணுவே! ஆற்றில் ஓடத்தினைச் செலுத்தி அருளிய அண்ணலே! பாம்பணிந்த பரமனே! ஆனையுரிபோர்க்க வரு மருந்தே" என்று துதிசெய்து வழிபட்டார். சிலநாள அங்குத தங்கி யிருந்தார்.

மதுரையில் அனல்வாதில் வேவாது பச்சென்றிருந்த "போக மார்த்த" என்ற நற்றமிழ்ப்பதிகம் நள்ளாற்றின் புதிகம் ஆதலின் திருநள்ளாற்றைச் சென்று வணங்கத் திருவுளங்கொண்டு, அண்டர் புகழுந் தொண்டர் குழாமுடன் திருநள்ளாறு என்னும் தலம் வந்து, வலம்வந்து பணிந்து, "பாடகமெல்லடி" என்ற பைந்தமிழ்ப் பதிகம் பாடிப்பரவி மகிழ்ந்தார்.

புத்தரை வாதில் வெல்லுதல்

பின்னர், திருத்தெளிச்சேரி சென்று எந்தையார் இணையடியை வந்தித்துச் செல்லும்போது, இடையில் புத்தர்களுடைய நகரமாகிய "போதிமங்கை" எதிர்ப்பட்டது.

அடியவர்கள் அலைகடல்போல் அரன் நாமம் கூறிச் சங்கு தாரை முதலிய பல்லியங்களை முழக்கினார்கள். சின்னம் காளம் முதலியவைகள் "பரசமயகோளரி வந்தார்" என்று ஊதின. புல்லறிவுடைய புத்தர்கள் ஒருங்குகூடி, புகலிவேந்தர் வரவையும் அதனால் உண்டாகும் ஆரவாரத்தையும் அறிந்து அழுக்காறு கொண்டு, தங்களுக்குள் கல்வியில் மிக்க புத்த நந்தி முதலியவர் கட்குச் சினந்து செப்பினார்கள். பிள்ளையாருடன் வரும் தொண் டர்களது முழக்கமும் புத்தர்கள் புகன்ற உரையும் செவியில் நாராசமென நுழைந்தவுடன் புத்தநந்தி சீறியெழுந்தான். புத்தர் குழாஞ் சூழ்ந்து வரச்சென்று, சிவனடியார்களை நோக்கி, "எம்மை வாதில் வென்ற பின்னரன்றோ நீங்கள் சின்னங்கள் ஊதவேண்டும்" என்று கொதித்துக் கூறி அவைகளை விலக்கினான். அதுகண்ட அடியார்கள் ஆளுடைய பிள்ளையாரை வணங்கி நிகழ்ந்ததை விண் ணப்பஞ் செய்தார்கள்.

பாலறாவாயர், "நாம் வருமிடத்திலே இது நமக்கு அழகியதாய் இருக்கின்றது. புத்த நந்தி வாது செய்யப் புகும்போது அவனது பொய்மை வெளியாகும்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

தேவாரத் திருப்பதிகங்களை எல்லாம் எழுதுகின்ற சம்பந்த சரணாலயர், முன்சென்று,

புத்தர்சமண் கழுக்கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்கு
அத்திர மாவன அஞ்செ ழுத்துமே.

என்ற திருப்பாடலை ஓதி, "இப்புத்தனுடைய தலை உருண்டு விழும்படி இடிவிழக் கடவது" என்று சொல்லியருளினார். நிறை

மொழிமாந்தர் ஆணையிற் கூறியது மறைமொழியாம் ஆதலின், உடனே, புத்த நந்தியின் தலையில் இடி விழுந்தது. அவன் அழிந்தனன். புத்தர் கூட்டம் அஞ்சி அகன்று ஓடியது.

அடியார்கள் இந்த அதிசயத்தை ஆளுடைய பிள்ளையார்பால் விண்ணப்பம் புரிந்தார்கள். "நிகழ்ந்தது சரி" என்று அடியார்களை "ஹர ஹர" என்று முழக்குவித்தருளினார். அஞ்சியகன்ற பௌத்தர்கள் மீண்டும் ஒருங்கு கூடி, "இது வஞ்சனையோ? சைவ சமயத்து உண்மையோ?" என்று மருண்டு, "நீங்கள் எம்முடன் மந்திர வாதமின்றி தருக்கவாதம் புரிய வம்மின்" என்று கூறிக்கொண்டு, தங்களில் நன்கு கலைபயின்ற சாரிபுத்தனை முன் கொண்டுவந்து எதிர்த்தார்கள்.

காழிவேந்தர் அதுகண்டு மகிழ்ந்து, முத்துச் சிவிகைவிட்டு இறங்கி ஒரு மண்டபத்தைச் சார்ந்து, "வாது செய்யவல்லாரை அழையுங்கள்" என்று அருளிச்செய்தார். அடியார்கள் புத்தரிடம் போய் "ஓதாதுணர்ந்தவரும், முத்தமிழ் விரகரும் வெம்பந்த மகற்றும் சம்பந்தருமாகிய எமது பரம குருநாதர் வாதுபுரிய உங்களை அழைக்கின்றார். வாருங்கள்" என்று கூப்பிட்டார்கள். சாரிபுத்தன் புத்தர் கூட்டத்துடன் வந்தான். முன் புத்த நந்தியின் தலையை இடியினால் பொடிபடுத்திய சம்பந்த சரணாலயர், பிள்ளையாரைத் தொழுது முற்பட்டு, சாரிபுத்தனுடன் தருக்கமுறையில் வாதிட்டு அவனையும் அவனுடன் வந்த மற்ற புத்தர்களையும் வாதில் வென்றனர். தோல்வி எய்திய சாரிபுத்தன் முதலிய பௌத்தர்கள் தமது சமயம் பொய்ம்மை என்று தெளிந்து மெய்ம்மையாகிய சைவ நெறியினைச் சாரும் பொருட்டுத் திருஞானசம்பந்தருடைய திருவடிகளை வணங்கினார்கள். "நின்றதுவுஞ் சரிப்பதுவும் சைவமேயாம்" என்ற உண்மையை அவர்கட்கு உணர்த்தி அருள்பொழிந்து பிள்ளையார் அவர்கட்குக் கருணை செய்தார். அத்தனைப் பேரும் சைவர்களாகி உய்வுபெற்றார்கள்.

அப்பர் சந்திப்பு

சீகாழி வள்ளலார் திருக்கடவூர் சென்று கூற்றை யுதைத்த குரைகழலைப் போற்றி அங்குச் சிலநாள் தங்கியிருந்தார். "வாகீசர் எங்குளார்" என்று வினாவியருளினார். திருப்பூந் துருத்தியில் திருத்தொண்டு செய்துகொண்டு அப்பமூர்த்திகள் அமர்ந்திருக்கின்றார் என்பதைக் கேட்டு, அவரைக் காணவேண்டும் என்ற அளவற்ற ஆர்வத்தினால் புறப்பட்டார். இடையில் உள்ள பல தலங்களை வணங்கிக்கொண்டு திருப்பூந்துருத்திக்கு அருகில் வந்தருளினார்.

பிள்ளையாரது வருகையை அப்பரடிகள் கேட்டு, எதிர்சென்று வணங்க எண்ணி அகமலர முகமலர்ந்து, எதிர் சென்றார். ஒருவரும் அறியாத வண்ணஞ் சென்று, நிலத்தில் வீழ்ந்து பணிந்து கடல் போன்ற கூட்டத்துள் நுழைந்து, சிரபுரச் செல்வருடைய சிவிகையைத் தாங்கிக் கொண்டு வருவாராயினார். பிள்ளையாருடைய உணர்வில் ஒன்று நிகழ, "இப்பொழுது அப்பர் எங்கிருக்கின்றார்?" என்று வினாவியருளினார். "ஒப்பில்லாத தவஞ் செய்தேன். ஆதலினால் உமது திருவடிகளைத் தாங்கும் பெருவாழ்வு பெற்று இப்பொழுது இங்கிருக்கின்றேன்" என்று அருளிச் செய்தார்.

அப்பர்தாம் எங்குற்றார் இப்பொழுதென் றருள்செய்யச்
செப்பரிய புகழ்த்திருநா வுக்கரசர் செப்புவார்
ஒப்பரிய தவஞ்செய்தேன் ஆதலினால் உம்மடிகள்
இப்பொழுது தாங்கிவரப் பெற்றுய்ந்தேன் யானென்றார்.

அந்த வார்த்தையைக் கேட்ட ஆளுடைய பிள்ளையார் அஞ்சி, சிவிகையை விட்டு இறங்கி உள்ளம் பதைத்து அப்பமூர்த்திகளை வணங்கினார். அவர் வணங்குவதற்கு முன்னர் அப்பரடிகள் காழி மன்னரை வணங்கினார். அதுகண்ட அடியார்கள் 'அரஅர' என்று ஒலித்து இருபெருங் குருநாதர்களையும் வணங்கினார்கள்.

இருபெருங் குரவர்களும் திருப்பூந்துருத்தி சென்று சிவ பெருமானை வணங்கி மகிழ்ந்தார்கள். பிள்ளையாரை நோக்கி, "பாண்டி நாட்டில் என்ன நிகழ்ந்தது?" என்று வாகீசர் வினாவினார். சம்பந்தர் பாண்டிநாட்டில் சமணர்கள் செய்த தீமையையும், பாண்டியன் சுரநோய் தீர்த்து, அனல்வாது புனல்வாது செய்து வென்றதையும், சமணர்கள் கழுவேறியதையும் கூறியருளினார். அப்ப மூர்த்திகள் பெரிதும் மகிழ்ந்து பாலறாவாயர் பதமலர் பணிந்து, "சைவம் என்னும் பயிர் தழைக்கத் தேவரீர் வேலியாக விளங்குகின்றீர்" என்று புகழ்ந்தருளினார்.

பிள்ளையாரும் வாகீசரை வணங்கி, மங்கையர்க்கரசியாருடைய மேன்மையையும், அன்பின் திறத்தையும், குலச்சிறையாருடைய தொண்டின் பெருமையையும் பலவாறு எடுத்துப் பாராட்டிக் கூறியருளினார். அப்பரடிகள் அது 'கேட்டு மகிழ்ந்து, தாம் தொண்டைநாடு சென்று புகழ்மலிந்த காஞ்சியில் ஏகாம்பரநாதரையும் காமாக்ஷியம்மையாரையும் வணங்கியதையும் பிற திருத்தலங்களின் தன்மையையும் கூறியருளினார். இருவர்களும் ஆங்கொரு திருமடத்தில் இனிது அமர்ந்து பலநாட்கள் தங்கியிருந்தார்கள்.

வாகீசர் மதுரை சென்று ஆலவாயரனை வணங்கும் விருப்புடன் புறப்பட்டார். பிள்ளையாரும் தோணியப்பரைக் காணும் காதலுடன் புறப்பட்டார். காவிரியின் வடகரை சென்று, திருநெய்த்தானம், திருவையாறு, திருப்பழனம் முதலிய பழம்பதிகளைப் பணிந்து பதிகங்களால் பரமனைத் துதித்துத் சீகாழி வந்து சேர்ந்தருளினார். சீகாழியில் உள்ள அன்பர்கள் அனைவரும் எதிர்கொண்டு போற்றினார்கள். பிள்ளையார் விண்ணருவியென கண்ணருவி பொழிய, உடலும் உள்ளமும் உருகச் சென்று தன்னை யாண்ட அன்னையும் அப்பனுமாய தோணியப்பரைத் தொழுது பாடுகின்றார்.

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்ற மறைப்பது முன்பணியே
அமரர்கள் செய்வது முன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே
பிரம புரத்தையு கந்தனையே.

பலமுறை பரமனைப் பணிந்து தணியாத அன்புடன் புறப் பட்டுத் தமது திருமாளிகைக்கு எழுந்தருளினார். அங்குப் பெண்மணிகள் மணிவிளக்கு எடுத்து உபசரித்தார்கள். திருநீலகண்ட யாழ்ப் பாணரையும் அவர் மனைவியார் மதங்க சூளாமணியாரை யும் அவர்கள் உறைவிடத்திற்கு உய்த்து, பிள்ளையார் சீகாழியில் தங்கியிருந்தார். காலங்கள்தோறும் ஆலமுண்டவரை வணங்கி அரிய தமிழ்ப் பதிகங்கள் பாடியருளினார்.

தொண்டை நாட்டுக்குப் புறப்படுதல்

சீகாழியிலே காலங்கள்தோறும் திருத்தோணியப்பரை வணங்கிக் கொண்டு, பலநாள் தங்கியிருந்த திருஞான சம்பந்தருக்கு, திருக் கச்சியம்பதியிலே, தழுவக்குழைந்த தனிப்பெருந் தலைவரைச் சென்று தரிசிக்கவேண்டும் என்ற விருப்பம் எழுந்தது.

தமது கருத்தினை உடன் இருந்த அடியார்கட்கு உரைசெய்து, திருக்கோயில் சென்று, தோணியப்பரைத் தொழுது, அன்பினால் அகங்குழைந்து துதிசெய்து விடைபெற்றுப் புறப்பட்டார். உடன் வருவதற்குத் துணிந்த தாதையாரை நோக்கி, "அப்பரே! தாங்கள் இங்ஙனமேயிருந்து சிவ வேள்வி செய்துகொண்டு, கழுமலக்

கடவுளைக் கைதொழுது கொண்டு இருங்கள்" என்று அவருக்கும், மற்றுஞ் சில அன்பர்களுக்கும் விடைகொடுத்துச் சீகாழியில் இருக்கு மாறு செய்துவிட்டுத் தொண்டை நன்னாட்டை நோக்கிப் புறப்பட்டார்.

சிதம்பரம், திருத்தினைநகர், திருமாணிகுழி, திருப்பாதிரிப் புலியூர், திருவடுகூர், திருவக்கரை, திருஇரும்பைமாகாளம், திருவதிகை, திருவாமாத்தூர், திருக்கோவலூர், திருவறையணி நல்லூர் முதலிய திருத்தலங்களைச் சேவித்துக்கொண்டு, நினைக்க முத்தியளிக்கும் திருவண்ணாமலைக்கு அருகில் சென்றார். அண்ணாமலையைக் கண்டவுடன் சிவிகையினின்றும் இறங்கி, மண்மிசை வீழ்ந்து பணிந்தார். விண்ணருவியெனக் கண்ணருவி பொழிந்து, மெய் சிலிர்த்து, உள்ளங் குழைந்து பாடுவார்.

உண்ணாமுலை யுமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

திருக்கோயிலுட் சென்று, உண்ணாமுலை யம்மையாருடன் எழுந்தருளிய அண்ணாமலை யண்ணலை வணங்கி மகிழ்ந்தார். சிலநாள் அங்குத் தங்கியிருந்தருளினார்.

ஆண்பனையைப் பெண்பனையாக்கியது

அண்ணாமலையாரிடம் விடைபெற்றுக் கொண்டு, காடும் மலையுங் கடந்து, தொண்டை நன்னாட்டை யடைந்து, செய்யாற் றங்கரையிலுள்ள திருவோத்தூர் என்னுந் திருத்தலத்தை யடைந்தார். தேவர்கட்கும் முனிவர்கட்கும் ஒத்து அளித்த அப் பெரும்பதியில் உள்ள அடியார்கள் வாழைகள் நாட்டி, தோரணம் நீட்டி, திருவிளக்கு ஏற்றி, நிறைகுடம் வைத்து வரவேற்று உபசரித்தார்கள். பிள்ளையார், சிவிகையினின்றும் இறங்கி, அடியார் குழாத்துடன் ஆரணத்தின் உட்பொருளாய் விளங்கும் பரம் பொருளைப் பத்தியுடன் பணிந்து பரவினார்.

பிள்ளையார் அத்தலத்தில் அமர்ந்திருக்குங் காலையில், அமணர்களால் அலக்கண்ணுற்ற ஒரு தொண்டர் வந்து பிள்ளை யாரது திருவடிகளைப் பணிந்து விண்ணப்பஞ் செய்வார். "வெம்பந்த மகற்றும் சம்பந்தப் பெருமானே! அடியேன் அரனார் பொருட்டு வைத்து வளர்த்த பனைமரங்கள் யாவும் ஆண்பனை யாகவே அமைந்து காய்த்தல் இன்றி நின்றன. அதுகண்டு

அமணர்கள் அடியேனைப் பழித்து நகையாடுகின்றார்கள். "இந்த ஆண்பனை காய்க்கும் தன்மை உம்பால் நிகழுமோ?" என்று ஏளனம் புரிகின்றார்கள். இதற்கு ஒரு பரிகாரத்தைத் தேவரீர் செய்தருள வேண்டும் என்று கூறினார்.

காழிவேந்தர் அவருடைய நிலையை நோக்கி அன்பு கொண்டு உடனே எழுந்து எம்பெருமான் திருக்கோயில் சென்று திருப்பதிகம் பாடியருளினார்.

குரும்பை ஆண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை அடிகளைப்
பெரும்புகலியுள் ஞானசம்பந்தன் சொல்
விரும்பு வார்வினை வீடே.

அந்த ஆண்பனைகள் யாவும் பெண்பனைகளாகிப் பூத்துக் காய்த்துக் கனிகளை உதிர்த்தன. அதனைக் கண்டார் அனைவரும் அதிசயமுற்றார்கள். தென்னாட்டிலே அமணர்களது குற்றத்தை யறுத்த புகலிவேந்தரது திருவருட் செயலைக் கண்ட அமணர்கள் அஞ்சி அந்நாட்டை விட்டு அகன்றார்கள். சில சமணர்கள் தங்கள் குண்டிகைகளை உடைத்தெறிந்துவிட்டு, சைவசமயஞ் சார்ந்து தெய்வநலம் பேணிச் சிவபெருமானைப் போற்றி உய்ந்தார்கள். பிள்ளையார் திருவாக்கில் தொடர்பு பெற்றதனால் அப்பனைகள் எல்லாம் காலாந்தரத்தில் சிவத்தைச் சேர்ந்தன.

ஏனைய தல யாத்திரை

பாலறாவாயர் திருவோத்தூரினின்றும் புறப்பட்டு, திருமாகறல், திருக்குரங்கணில்முட்டம் முதலிய திருப்பதிகளை வணங்கிக் கொண்டு திருக்கச்சியம்பதியை அடைந்தருளினார். காசியின் மீறிய காஞ்சிமா நகரவாசிகள் பிள்ளையாருடைய நல்வரவைக் கேட்டு உள்ளம் உவந்தார்கள். நகரை மிகவும் அலங்கரித்தார்கள். எங்கும் மலர்களைத் தூவி களப கஸ்தூரிகளைத் தெளித்து, மங்கல விளக்கு வைத்து, பல்லியங்கள் முழங்க வந்து எதிர்கொண்டார்கள். பாலறாவாயர் பதமலர் மீது பணிந்தார்கள். பிள்ளையார் முத்துச் சிவிகையினின்றும் கீழிறங்கி, ஏகாம்பரநாதருடைய திருக் கோபுரத்தைக் கண்டவுடன் மண்மிசை வீழ்ந்து பணிந்தார். கோயிலுட் சென்று தணியாத அன்புடன் தழுவக் குழைந்த தயா பரனைக் கண்ணாரக் கண்டு களிகூர்ந்தார். பன்முறை வணங்கிப் பண்முறை பாடிப் பரவினார். கச்சித் தலத்திலேயே விளங்கும் திருக்கச்சி நெறிக்காரைக்காடு, திருஅநேகதங்காவதம், திருக்கச்சி மேற்றளி என்னும் புண்ணியத் தலங்களை வணங்கினார்.

பாடினார் பணிவுற்றார் பரிவுறுமா னந்தக்கூத்
தாடினார் அகங்குழைந்தார் அஞ்சலிதஞ் சென்னியின்மேற்
சூடினார் மெய்ம்முகிழ்த்தார் சூகரமும் அன்னமுமாய்த்
தேடினார் இருவருக்குந் தெரிவரியார் திருமகனார்.

மருவியஏ ழிசைபொழிய மனம்பொழியும் பேரன்பால்
பெருகியகண் மழைபொழியப் பெரும்புகலிப் பெருந்தகையார்
உருகியஅன் புள்ளலைப்ப உமைதழுவக் குழைந்தவரைப்
பருகியமெய் யுணர்வினொடும் பரவியே புறத்தணைந்தார்.

சில தினங்கள் கச்சியில் தங்கியிருந்தார். பின்னர், பாலாற்றின் வடகரைபோய், திருமாற்பேறு, திருவல்லம், திருஇலம்பயங் கோட்டூர், திருவிற்கோலம், திருவூறல் முதலிய திருப்பதிகளை வணங்கிக் கொண்டு, பழையனூர்த் திருவாலங்காட்டுக்கு அருகிற் சென்றார். அத்திருத்தலம் இம்மையிலே யாவருங் காணக் காரைக்கால் அம்மை யார் தலையினாலே நடந்த திருத்தலம் ஆதலினால், ஞானசம்பந்தர் தமது காலால் மிதிக்க அஞ்சி, அதற்கு அருகில் உள்ள ஓர் ஊரிலே அன்றிரவு பள்ளி கொண்டருளினார். திருஆலங்காட்டில் எழுந் தருளிய நீலகண்டப் பெருமான், நடு இரவில் காழி மன்னர் கனவில் தோன்றி, "நம்மைப் பாடுவதற்கு மறந்தனையோ?" என்று அருளிச் செய்தார். உடனே, பிள்ளையார் விழித்தெழுந்து, இறைவருடைய இன்னருளைத் துதித்துப் பாடுவார்.

துஞ்ச வருவாரும் தொழுவிப் பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப் பாரு முனைநட்பாய்
வஞ்சப் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழையனூர் ஆலங் காட்டெம் மடிகளே.

பொழுது புலர்ந்தபின் அடியார்கட்கு இரவில் நிகழ்ந்ததைக் கூறியருளினார். திருப்பாசூர், திருவெண்பாக்கம், திருக்காரிகரை முதலிய திருத்தலங்களைச் சேவித்துக்கொண்டு, திருக்காளத்தியைச் சேர்ந்தார். காளத்தி மலையைக் கண்டவுடன் சிவிகை விட்டிறங்கிக் கண்ணப்ப நாயனார் திருத்தொண்டு புரிந்த அரிய அன்பைப் புகழ்ந்து திருப்பதிகம் கூறினார்.

வேயனைய தோளுமையொர் பாகமது
        வாகவிடை யேறிசடைமேல்
தூயமதி சூடிசுடு காடில்நட
        மாடிமலை தன்னைவினவில்
வாய்கலச மாகவழி பாடுசெயும்
        வேடன்மல ராகுநயனம்

காய்கணையி னாலிடந் தீசனடி
கூடுகா ளத்திமலையே.

மலைமிசை ஏறிக் காளத்தியப்பரைக் கண்டு கண் களிகொண்டு பன்முறை பணிந்து, கும்பிட்ட பயன் காண்பார்போல், கண்ணப் பரைக் கண்டு தொழுதார்.

பின்னர், மலை விட்டிறங்கி ஆங்குள்ள ஒரு திருமடத்தில் தங்கியருளினார். காலங்கள்தோறும் காளத்தியப்பரைத் தரிசித்துக் கொண்டு அங்கு எழுந்தருளியிருக்கும்போது, வடதிசையிலும் மேல் திசையிலும் தமிழ் வழக்கு இல்லாமையால், அங்கிருந்தபடியே, உத்தரகைலாசம், திருக்கேதாரம், திருக்கோகர்ணம், திருப்பருப்பதம், இந்திர நீலபருப்பதம் முதலிய அரிய தலங்களிலுள்ள இறைவரை அகக்கண்ணால் கண்டு அருந்தமிழ்மாலை சாத்தினார். சிலநாள் தங்கியிருந்த பின்னர், அங்கிருந்து புறப்பட்டு, திருவேற்காடு, திருவலி தாயம் முதலிய பல தலங்களை வணங்கிக்கொண்டு, மிகவும் புனிதந் தங்கிய திருவொற்றியூரை அடைந்தார். அங்கு எழுந்தருளியுள்ள எழுத்தறியும் பெருமானைக் கண்ணாரக் கண்டு, தலையாரக் கும்பிட்டு, வாயாரப் பாடி, நெஞ்சார நினைந்து, பதிகம் கூறி, அங்கு எழுந்தருளி இருந்தார்.

சிவநேசர்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவொற்றியூரிலே எழுந்தருளியிருந்தார். திருவொற்றியூருக்குத் தெற்கே பத்து நாழிகை தொலைவில் திருமயிலாப்பூர் என்னும் திருத்தலம் விளக்கமாக இருந்தது. அங்கு வணிகர் குலத்திலே தோன்றியவர் சிவநேசர் என்பார். பல மரக்கலங்களைக் கடல்மீது அனுப்பிப் பெருவாணிபம் புரிந்தார். அளவற்ற நிதிகளுக்குத் தலைவராக அவர் அள கேசனைப்போல் பெருமையுடன் இருந்தார். அவர் பொய்ம்மை யகற்றி மெய்ம்மை யறிந்து சிவபதமே நினைக்குந் திருவுடையார். அடியார்களுடன் கூடி உள்ளம் உருகி உவகை உறுவார். பரசமயங் களை விலக்கிச் செம்மையே செய்யுஞ் சீலமுடையவர்.

சீகாழியிலே திருஞானசம்பந்தப் பிள்ளையார் உமாதேவியார் அருளிய சிவஞானப்பாலை உண்டதையும், சமணர் புத்தர் முதலிய புறச்சமயங்களைக் களைந்து சிவசமயத்தை நிலைநாட்டுவதையும் அவர் நிகழ்த்திய பிற அற்புதங்களையுங் கேட்டுக் கழிபேருவகை யுற்றார். இரவும் பகலும் திருஞானசம்பந்தருடைய திருவடியை இடையறாது தியானிப்பதும், அவருடைய அருள் திறத்தை வாயார

வாழ்த்துவதும், மற்றவர்கள் புகழ்ந்து கூறக் கேட்பதுவுமாக வாழ் வாராயினார்.

இவ்வாறு, அளவற்ற செல்வத்துடன் வாழும் சிவநேசருக்கு, எல்லாப் பேறுகளும் பொருந்தி இருந்தும் மகப்பேறு இலதாயிற்று. அதனால், மனம் மருண்ட அவர் பற்பல தான தருமங்களும் தவமும் புரிந்தார். பல்லாயிரம் சிவனடியார்கட்கு உண்டி உடையாதி வழங்கி வழிபாடு புரிந்தார்.

பூம்பாவை பிறத்தல்

அவர் செய்த நற்றவப்பயனால் அவருடைய மனைவியார் கருவுற்று, திருமகளைப் போன்ற ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்தாள். சுற்றத்தினர் மகிழ்ந்தார்கள். சிவநேசர் எல்லை யில்லாத நிதிகளையும் உடைகளையும் வறியவர்க்கு வழங்கினார். பத்துநாள் செய்ய வேண்டிய மறைவிதிச் சடங்குகள் யாவும் செய்து, பூவில் வாழும் பொன்போல் விளங்கும் அக்குழவிக்குப் பூம்பாவை என்று பேர் சூட்டினார்.

மின்னற் கொழுந்து போன்ற அத்திருமகள் அழகின் சிகரமாக விளங்கி இனிது வளர்ந்தாள். ஏழு ஆண்டு நிரம்பியது. பேதை மகளிருடன் கூடி, அம்மனை, பந்து, கழங்கு முதலிய ஆடல்கள் புரிந்தும், திருவீதியில் சிறுவீடு கட்டியும், சிறுசோறு அட்டும், ஊசலாடியும், பாவைகளுக்குப் பாலூட்டியும் விளையாடு வாளாயினாள். மகளது மட்டற்ற அருங்குணங்களைக் கண்டு களித்த தந்தையார், “இவளை மணந்து கொள்பவன் எனது முடிவில்லாத செல்வம் முழுவதற்கும் உரியவனாவான்” என்று கூறினார்.

அக்காலையில் திருஞானசம்பந்தர் பாண்டிநாடு சென்று, மாயையிலே வல்ல சமணர்களை அனல்வாது புனல்வாது செய்து வென்றதையும், பாண்டியனுடைய வெப்புநோயை விலக்கி நின்றதையும், தோல்வியுற்ற அமணர்கள் கழுவில் ஏறியதையும், தென்னவனுக்குத் திருநீறு தந்து சிவசாதனத்தை நிலைநிறுத்தியதை யும், அங்கிருந்து வந்த பலர் சிவநேசரிடம் புகன்றார்கள். சிவநேசர் அவற்றைக் கேட்டு அளவிலா மகிழ்ச்சியுற்றார். இந்த நலங்களை நவின்றவர்கட்கெல்லாம் பொன்னும் பூந்துகிலும் அளித்து, திருஞானசம்பந்தப் பெருமானைத் திசைநோக்கித் தொழுது, மண் மிசை வீழ்ந்து எழுந்து நின்று, சுற்றம் நண்பர் முதலிய அனைவருங் கேட்கப் பகர்வார். “காழி வேந்தராம் கவுணியர் பெருமானுக்கு

அடியேன் எனது மகளையும் செல்வத்தையும் என்னையும் தந்தேன்'' என்று இயம்பினார்.

சுற்றம் நீடிய கிளையெலாஞ் சூழ்ந்துடன் கேட்பக்
கற்ற மாந்தர்வாழ் காழிநா டுடையவர்க் கடியேன்
பெற்றெ டுத்தபூம் பாவையும் பிறங்கிய நிதியும்
முற்றும் என்னையும் கொடுத்தனன் யான்என்று மொழிந்தார்.

மிகுந்த மகிழ்ச்சியினால் இவ்வாறு கூறிச் சிவநேசர் செம்மை யுடன் வாழ்ந்தார்.

அரவு தீண்டல்

பூம்பாவை ஒருநாள் கன்னிமாடத்தின் அருகில் உள்ள நந்த வனத்தில் சேடியருடன் சென்று மலர் கொய்தாள். சிவநேசர் ஆர்வ மிகுதியால் அளித்தாரேயன்றி, ஞானமுண்ட பிள்ளையாருக்கு இது பொருந்தாது என்ற நியதி ஒரு பாம்புருக்கொண்டு சென்றதுபோல், ஒரு கொடிய நாகம் மாதவிப் பந்தரில் மறைந்து வந்து, இளங் கொடி யனைய பூம்பாவையின் மலர் கொய்து கொண்டிருந்த பவளக்கோடி போன்ற விரலில் நான்கு பற்களும் பதியத் தீண்ட விடம் உகுத்து, படம் விரித்து ஆடி அகன்றது. தீயில் விழுந்த மலர்மாலைபோல் மடமங்கை மயங்கி வீழ்ந்தாள். மண்மிசை வீழ்ந்த மாதரசைப் பாங்கிமார்கள் தாங்கி வந்து மலர்ப் பள்ளிமேற் சாய்த் தார்கள். சிவநேசர் அதுகண்டு பெருந்துயரமுற்றார். சுற்றத் தாரும் நண்பர்களும் "என்னே! என்னே!'' என்று ஓலமிட்டு ஏங்கி நின்றார்கள்.

விடத்தை அகற்றவல்ல வித்தகர்கள் பலர் வந்து கூடினார்கள். மந்திரம், மருந்து, தியானம், பாவகம் முதலியவைகளைத் தனித் தனியே செய்தார்கள். ஒன்றாலும் அவ்விடம் அகலாது ஏழாம் வேகத்தை எய்தியது. விடவயித்தியர்கள் "இது விதியின் செயல்'' என்று உள்ளம் நொந்தார்கள். சுற்றத்தார்கள், "என் கண்ணே! குலம் விளங்கவந்த கோமேதகமே! அம்மா! ஆருயிர்க் கனியே!'' என்று பாவைமேல் வீழ்ந்து அழுதார்கள். சிந்தை நொந்து அயர்கின்ற சிவநேசர் தெளிந்து, வேறு செயலின்மை அறிந்து, "இத் திருமகளின் விடத்தை விலக்க வல்லார்க்கு அளவற்ற நிதி தருவேன்'' என்று எங்கும் பறையறைவித்தார். மூன்று நாள்வரை அரசர்களிடம் உள்ள மருத்துவர்கள், முதிர்ந்த அனுபவசாலிகள், மற்றும் எங்குமுள்ள பலர்களும் வந்து வந்து முயற்சி செய்து விடந்தீரப் பெறாது அயர்ச்சியுற்று அகன்றார்கள்.

சிவநேசர் இவளைப்பாலறாவாயராம் சீலருக்கு என்று செப்பியதனால் நாம் இவளைப்பற்றி வருந்துவதற்கு இல்லை என்று தேறி, பூம்பாவையின் உயிர்துறந்த உடம்பைச் சுட்டு, எலும்பையும், சாம்பலையும் ஒரு குடத்தில் நிரப்பினார். கன்னிமாடத்தில் ஒரு பீடத்தில் அதனை வைத்து, பொன்னும் அணிகளும் புனைவித்துப் பட்டுடைகளும் சாத்தி, திருஞானசம்பந்தரையே தியானித்துக் கொண்டிருந்தார். நாடோறும் மாலை, சந்தனம் முதலியவைகளைத் தவறாமல் அதற்குப் புனைந்து வந்தார்.

பிள்ளையாரைச் சந்தித்தல்

திருஞான சம்பந்தர் திருவொற்றியூரில் வந்து தங்கியிருக்கின்ற தன்மையைச் சிலர் சிவநேசரிடம் புகன்றார்கள். நன்மைமிக்க தன்மையைக் கூறியவர்கட்கெல்லாம் செம்பொன் வழங்கினார். இத்தகையது என்று இயம்பவொண்ணாத மகிழ்ச்சியுற்றார். திருமயிலாப்பூரிலிருந்து திருவொற்றியூர்வரை நடை பந்தர் இடுவித்தார். அப்பந்தரில் தூய உடை விதானித்தார். மகா தோரணம் கட்டி, வாழை கமுகு நாட்டி, பூமாலைகளைத் தொங்கவிட்டு, ஆங்காங்கு வெண்கொடி பறக்கவிட்டு எங்கும் அலங்காரஞ் செய்தார். வீதிகள் யாவும் சந்தனத்தால் மெழுகிக் களப கஸ்தூரி சிந்தி, பொன்னுலகம்போல் புனைவித்தார்.

அடியார்கள் பலர் புடை சூழ்ந்துவரச் சிவநேசர் ஒற்றியூரை நோக்கிச் சென்றார். அங்கே காழிப்பிரானும் திருமயிலையை வணங்கும்பொருட்டு, திருத்தொண்டர் குழாமுடன் திருவொற்றியூரை விடுத்துப் புறப்பட்டு வருகின்றார். அதையறிந்த சிவநேசர் பெரிதும் உவந்து ஓடிப் பிள்ளையார் அடிமலர் மீது வீழ்ந்தார். பிள்ளையார் சிவிகை விட்டிறங்கிச் சிவநேசரைப் பணிந்து எழுந்து, அவர் பெருமையை அருகிலுள்ளோர் சொல்லக் கேட்டு மகிழ்ந்து, கடல் சூழ்ந்த திருமயிலாப்பூரை அடைந்தார்.

எலும்பைப் பெண்ணாக்கி அருளியது

பிள்ளையார் முன் நிகழ்ந்தவைகளை யெல்லாம் திருவுள்ளத்தில் சிந்தித்து, திரண்டுள்ள சமணர் புத்தர்களுடைய தன்மை கருகவும் சைவமாம் நன்மை பெருகவும் கருணை புரிந்து, திருக்கோயிலுட் சென்றார். நலம்வந்த அக்கோயிலை வலம்வந்து தொழுது, கபாலீச்சுரரையும் கற்பக வல்லியையும் பன்முறை பணிந்து, கூற்றுதைத்தார் கோயிலின் திருமதிற்புறம் வந்தருளினார்.

சிவநேசரை நோக்கி, "உலகம் அறிய உமது புதல்வியின் எலும்பு நிறைந்த குடத்தினைக் கொணர்க" என்று அருளிச்செய்தார். சிவநேசர் தமது திருமாளிகை சென்று, கன்னிமாடத்தில் வைத்துள்ள அக்குடத்தினை முத்துக்கள் பதித்த மூடு பல்லக்கில் வைத்து, இளஞ் சேடியர் சூழ்ந்துவரக் கொணர்ந்து, பிள்ளையார் திருமுன் வைத்து வணங்கினார். மயிலாப்பூரில் வாழ்பவர்களும், சுற்றுப் புறத்திலுள் ளார்களும், புறச்சமயத்தார்களும், நெருங்கி வந்து சூழ்ந்தார்கள். விண்ணிடை விபுதர்களும் முனிவர்களும் நின்று நோக்கினார்கள். இவ்வுலகிலுள்ளோர் எலும்பினை நன்மையாம்படி செய்து நலம் பெறுந் தன்மையையும் விளக்க, "ஏ பூம்பாவாய்! என்று விளித்து,

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென வுரைப்பார்.

ஆன்மகோடிகள் உலகில் பிறந்ததன் பயன், அரனடியவர்க்கு அமுது செய்வித்தலும், நல்விழாக் காண்டலுமே உண்மையாம் என்றால் நீ உலகவர் முன் வருக" என்று கூறினார்.

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திரபல் கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

முதற்பாடல் பாடியதும் பூம்பாவை உருவம் பெற்றாள். பின்னர், எட்டுப் பாடல்கள் பாடியதும் பன்னிரண்டு ஆண்டு வளர்ந்த அளவினை எய்தினாள். பொருள் நிச்சயமில்லாத சமணர்கள் இது ஏற்றதன்று என்று கூறுவார்கள் என்ற கருத்துடைய பத்தாவது பாடல் பாடியதும் பூம்பாவை குடத்தினின்றும், தாமரைக் கோயிலில் திருமகள் தோன்றியதுபோல், அழகுடன் தோன்றினாள்.

அதுகண்ட அனைவரும் அதிசயமடைந்தார்கள். அடியார்கள், "ஹரஹர" என்று அலைகடல்போல் ஆரவாரஞ் செய்தார்கள். தேவரும் முனிவரும் திருவருளின் திறத்தை நோக்கிப் பூமழை பொழிந்தார்கள். எல்லாரும் எம்பிரான் கருணையை நினைந்து மண்மிசை வீழ்ந்து வணங்கினார்கள். சமணர்கள் தளர்ந்து வீழ்ந்தார்கள்.

எண்ணில்லாத வயதுடைய பிரமதேவர் தான் படைத்த திலோத்தமையின் அழகை நான்கு முகங்களினாலே கண்டார். அத்

திலோத்தமையினும் பல மடங்கு அழகுடையவ்வளாகத் தாம் படைத்த பூம்பாவையின்பால் சிவபிரான் கருணை வெள்ளத்தை பதினாறு வயதுடைய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் ஆயிர முகங்களினாற் கண்டருளினார்.

வனப்புமிக்க மகளைக் கண்ட சிவநேசர் பாலறாவாயர் பத மலர்மீது வீழ்ந்தார். பூம்பாவை கபாலீச்சுரரைத் தொழுது, புகலி வேந்தர், பொன்னடியைத் தொழுதாள். பிள்ளையார் சிவநேசரை நோக்கி, “அன்பினீர்! உமது புதல்வியை அழைத்துக் கொண்டு இல்லம் செல்லுக” என்று பணித்தருளினார்.

சிவநேசர் பிள்ளையாரைத் தொழுது, “எந்தையே! அடியேன் அருமையுடன் பெற்ற இந்தப் பெண்மணியைத் தேவரீர் திருமணஞ் செய்து கொண்டருள வேண்டும்” என்று வேண்டினார்.

பிள்ளையார், “சிவநேசரே! நீர் பெற்ற பெண் அரவினால் மாய்ந்தனள். இவள் சிவபெருமான் கருணையால் என்னால் தோற்றுவித்தவள். ஆதலின், உமது சொல் தகாதது” என்று அருளிச் செய்தார். வணிகர் பெருமானும் சுற்றத்தாரும் அச்சொல் கேட்டு மயங்கிப் பிள்ளையார் திருவடியில் வீழ்ந்தார்கள். காழி வேந்தர் தருமநூல் முறையினை இனிது எடுத்து உரைத்தருளினார். அதனைக் கேட்ட அவர்கள் தேறுதலடைந்தார்கள். சிவநேசர் தனது திருமகளை வேறு ஒருவர்க்கும் மணஞ்செய்து கொடுக்க இசையேன் என்று மகளைக் கன்னிமாடத்துள் வைத்தார். பூம்பாவை தவத்தைச் செய்து சிவத்தைச் சார்ந்தனள்.

சீர்காழி சேர்தல்

திருஞானசம்பந்தர் திருமயிலையில் சிலநாள் எழுந்தருளி யிருந்தார். பிற தலங்களை வணங்கும் பொருட்டு எழுந்தார். சிவநேசர் அவரை விட்டுப் பிரிந்திருக்கப் பெரிதும் வருந்தினார். அவருக்கும் ஏனைய அடியார்களுக்கும் இனியவுரைகள் கூறி, விடைபெற்றுப் பரிவாரங்களுடன் புறப்பட்டார்.

திருவான்மியூர், திருஇடைச்சுரம், திருக்கழுக்குன்றம், திருஅச் சிறுபாக்கம், திருஅரசிலி, திருப்புறவார் பனங்காட்டூர் முதலிய திருத்தலங்களைச் சேவித்து, இனிய தண்டமிழ் மாலை சாத்தி, உள்ளங் குளிர்ந்து, திருத்தில்லையைச் சார்ந்தார். அடியவர்கள் எதிர்கொண்டு உபசரித்தார்கள். தில்லையின் எல்லையை வணங்கி, தணியாக் காதலுடன் மணிமன்றத்துள் தனிநடம் புரியும் கனி யமுதைக் கண்டு நனி மகிழ்கொண்டு போற்றினார். காலந்தோறும் கனக சபாபதியை வணங்கிக் கொண்டு அங்குத் தங்கியிருந்தார்.

பிள்ளையாரைப் பெறுவதற்குப் பெருந்தவம் புரிந்த சிவபாத இருதயரும், சீகாழியில் வாழும் அந்தணர்களும் அடியார்களும், தில்லையில் முத்தமிழ் வித்தகர் எழுந்தருளியிருப்பதைக் கேட்டு, தில்லையம்பதியை யடைந்தார்கள். பிள்ளையாரைக் கண்டு பெரு மகிழ்வுற்றார்கள். பின்னர் அம்பலவாணரைத் தொழுது, தோணி யப்பரை வணங்கும் விருப்புடன், சீகாழி யடைந்து, தம்மை யாண்ட அம்மையப்பரை ஆராத காதலுடன் தொழுது பல பதிகங்கள் பாடி யருளினார்.

பாலறாவாயர் சீகாழியில் இவ்வாறு தங்கியிருக்கும்போது திருமுருக நாயனார், திருநீலநக்க நாயனார் முதலிய திருத் தொண்டர்கள் சுற்றத்தாருடன் சீகாழிக்கு வந்தார்கள். பிள்ளையார் அவர்களை எதிர்கொண்டு வரவேற்றருளினார். வந்த அன்பர் களுடன் தோணியப்பரைத் தொழுது நற்றமிழ்ப்பதிகம் நவின்றரு ளினார்.

திருமணம்

சிவபாத இருதயர் தமது திருமகனாருக்குப் பதினாறு ஆண்டுகள் நிரம்பியதனால் திருமணப்பருவம் எய்தியது என எண்ணி, பிள்ளையாரை அணுகிக் கூறுவார்: "திருமறை முறைப்படி வேள்வி பல புரிவதற்கு ஒரு கன்னியைத் திருமணஞ் செய்தருள வேண்டும்" என்றார். பாசத் தொடர்பு நீங்கிய பாலறாவாயர் அதற்குத் திருவுள்ளம் இசையாது, "அது கூடாது" என்று மொழிந் தருளினார். சுற்றத்தார்கள் பின்னும் அவரைத் தொழுது, "திருவருட் கொழுந்தே! வேதவிதி உலகில் நிலைபெறச் செய்ய வந்தீர். ஆதலின் அறு தொழிலில் ஒன்றாகிய திருமணஞ் செய்து உலகிற்கு உயர் நெறியைக் காட்டியருள வேண்டும்" என்று விண்ணப்பித்தார்கள். முத்தமிழ் விரகர், மறைவாழ்வும், மறைநெறியின் துறைவாழ்வும் சுற்றத்தார்க்கு அருளி உடன்பட்டருளினார். தந்தையாராகிய சிவபாத இருதயரும், ஏனைய சுற்றத்தார்களும் எல்லையிலாத இன்புற்றார்கள். திருப்பெரும்ணநல்லூரில் வாழுகின்ற நம்பாண்டார் நம்பி என்பாருடைய புதல்வியை மணம் பேச எண்ணினார்கள். சிவபாத இருதயர் திருத்தொண்டர்களும் வேதியரும் புடைசூழ நல்லூர்ப் பெருமணத்தை யடைந்தார்.

நம்பாண்டார் நம்பி அவர்களை எதிர்கொண்டு மிகப் பெரிதும் மகிழ்ந்து உபசரித்தார். சிவபாத இருதயர் நம்பாண்டார் நம்பியை நோக்கி, "முத்தமிழ் விரகராம் உத்தமருக்கு உமது புத்தமுதனைய புதல்வியை மணம்புரிந்து அளிக்க வேண்டும்" என்றார்.

உம்முடைய பெருந்தவத்தால் உலகனைத்தும் ஈன்றளித்த
அம்மைதிரு முலைப்பாலில் குழைத்தஆ ரமுதுண்டார்க்கு
எம்முடைய குலக்கொழுந்தை யாம்உய்யத் தருகின்றோம்
வம்மின்என உரைசெய்து மனமகிழ்ந்து செலவிடுத்தார்.

நம்பாண்டார் நம்பி, "உங்கள் பெருந்தவத்தினால், வந்து அவதரித்து அகிலாண்ட நாயகியின் சிவஞானத் தீம்பாலை உண்டவர்க்கு, எமது குலக் கொழுந்தை நாங்கள் உய்வு பெறும் பொருட்டுத் தருகின்றோம். நீங்கள் வாருங்கள்" என்று கூறி இசைந்தார். சிவபாத இருதயர் சீகாழிக்கு வந்து பிள்ளையாரிடம் அச்செய்தியை உரைத்து, திருமணத்திற்குரிய செயல்களைச் செய்வாராயினார்.

கணித நூல் வல்லார்பால் நாளும் ஓரையும் கேட்டு உறுதி செய்து, திருமண ஓலை எழுதிச் சுற்றம் நண்பர்களுக்கு அனுப்பி னார். நல்ல நாளில் முளைப்பாலிகைக்கு விதையிட்டார். சீகாழி முற்றும் நிறைகுடம் திருவிளக்கு வைத்து, மகரதோரணம் அமைத்து, பூமாலைகள் கட்டி, இனிது அலங்கரிக்கச் செய்தார்.

திருமணவோலை பெற்ற நம்பாண்டார் நம்பி திருநல்லூரிலே எங்கும் முத்துப்பந்தரிட்டு, தோரணங்கள் நாட்டி, பூமாலைகள் தொங்கவிட்டு, ஒவ்வொரு வீட்டுக்கு முன்னும், வாசநீர் நிறைகுடம் வைத்து, நெய்விளக்கு ஏற்றி, தூபங்கள் இட்டு அலங்கரித்தார்.

எட்டுத் திசைகளில் உள்ள அடியவர்கள் அளவிலா மகிழ்ச்சி யுடன் சீகாழி வந்து சேர்ந்தார்கள். வேதவொலியும், மங்கல முழவங்களுடன் கடல் ஒலிபோல் முழங்கின. வந்தவர்கள் அனை வருக்கும் சோறூட்டுப் பெருஞ்சிறப்பு நிகழ்ந்தது.

திருமண நாளின் முன்னாள் காப்புநாணை நகர் வலம்புரிவித்து, பிள்ளையார் திருக்கரத்தில் புனைந்தார்கள்.

அன்று இரவு கழிந்தது. திருமணநாள் அன்று கவுணியர் பெருமான், திருத்தோணியப்பரைத் தொழுது, முத்துச் சிவிகை மீது ஆரோகணித்தருளினார். மங்கல வாத்தியங்கள் ஒலித்தன. அடிய வர்கள் ஹரஹர என்று ஒலித்து உடன் சென்றார்கள். அமரர், முனிவர், இயக்கர், கின்னரர், அரம்பையர் முதலியோர் திருமண விழாவைக் காணும்பொருட்டு விமானமூர்ந்து விண்ணிடை சென்றார்கள்.

தவஅர சாள உய்க்குந் தனிக்குடை நிழற்றச் சாரும்
பவம்அறுத் தாள வல்லார் பாதம்உள் ளத்துக் கொண்டு
புவனங்கள் வாழ வந்த பூந்தராய் வேந்தர் போந்து
சிவனமர்ந் துறையும் நல்லூர் திருப்பெரு மணத்தைச் சேர்ந்தார்.

திருநல்லூர்ப் பெருமணஞ் சேர்ந்தவுடன் ஆங்குள்ளார் வந்து எதிர்கொண்டு வணங்கினார்கள். பிள்ளையார் ஆங்கு விளங்கும் திருக்கோயிலுட் சென்று, இறைவரைப் போற்றித் திருவருள் பெற்றார். திருக்கோயிலின் புறத்துள்ள ஒரு திருமடத்தில் எழுந்தரு ளினார். திருமணக்கோலம் புனையலுற்றார்கள். பொற்குடங்களில் நிறைந்த புனித நறுநீராட்டி, வெண்பட்டாடை சாத்தி, களப கஸ்தூரி புனைந்து, முத்துமாலைகள், திருக்கண்டிகை, மோதிரங்கள், திருமுடி முதலிய அணிகலங்கள் சாத்தினார்கள். திருஅடையாள மாலையுஞ் சாத்தினார்கள். அழகினுக்கு அழகாகத் திருவெண் ணீற்றை ஐந்தெழுத்து ஓதிச் சாத்தினார்கள்.

முத்துச் சிவிகைமீது ஏறியருளினார். வானவர் மலர்மழை பொழிந்தார்கள். கலைநிறைமதிபோல் பிள்ளையார் திருவீதியில் எழுந்தருளி வருகின்றார். முத்துச் சின்னங்கள், "பாலறாவாயர் வந்தார்" "முத்தமிழ் விரகர் வந்தார்" "திருஞான சம்பந்தர் வந்தார்" என்று இனிது ஒலித்தன.

அங்கே, திருஞான சம்பந்தருடைய திருக்கரத்தைத் தீண்டு வதற்குத் தவஞ்செய்த கற்பகப் பூங்கொம்பு அனைய கன்னிகையை அலங்கரித்துக் காப்புநாண் சேர்த்துச் சடங்குகள் செய்து அமைத் தார்கள். மணப்பந்தரிடை சம்பந்தர் வந்து சேர்ந்தார். முத்து விதானத்தின்கீழ் மலர்த்தவிசின்மீது வீற்றிருந்தருளினார்.

நம்பாண்டார்நம்பி தமது மனைவியுடன் பிள்ளையாரை எதிர்கொண்டு, பாலும் நீருங் கொண்டு பாதபூசை செய்து, அந்நீரை சென்னிமேற் தெளித்துக்கொண்டு, உள்ளம் பூரித்தார். அந்த நன்னீரை சுற்றத்தினர் சென்னியிலும் தெளித்தார்.

பெருகொளி ஞான முண்ட பிள்ளையார் மலர்க்கை தன்னில்
மருவுமங் கலநீர் வாசக் கரகமுன் னேந்தி வார்ப்பார்
தருமுறைக் கோத்தி ரத்தின் தங்குலஞ் செப்பி என்றன்
அருநிதிப் பாவை யாரைப் பிள்ளையார்க் களித்தேன் என்றார்.

பிள்ளையார் திருக்கரத்தில் வாசநீர் வார்த்து, குலமுங் கோத்திரமுங் கூறி, "என் புதல்வியைப் புகலி வேந்தருக்கு அளித்தேன்" என்று கூறினார்.

நன்னல மிகுந்த கன்னியை ஞானசம்பந்தர் வலப்புறத்தில் இருத்தினார்கள். மனிதர்களும் இமைத்தலை விடுத்துக் கண் குளிரக் கண்டு வாழ்த்தி வானவர்கள் ஆயினார்கள். பவளக்கால் பந்தரில் திருநீலநக்க நாயனார் வேதவிதிப்படி வேள்வி வளர்த்துச் சடங்கு களைச் செய்தார். திருவினும் மிக்க உருவுடைய தேவியார் திருக்கரத்தைப் பற்றி, சிவமாகவே தீயினைப் பாவித்துச் சிவாக்கினி யைப் பிள்ளையார் வலம் வந்தருளினார். "இனி இவளுடன் சிவன் தாள் சேர்வன்" என்று திருவுள்ளத்து உன்னினார். திருத் தொண் டர்கள் யாவரும் சூழச் சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக் கோயிலை யடைந்து பிறவிப் பாசந்தீர, "திருவடி நிழல் சேரும் பருவம் இதுவேயாகும்" என்று இனிய தமிழ்ப் பதிகம் ஓதியருளினார்.

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே.

தேவதேவராம் சிவபெருமான் திருவருள் புரிந்து, "ஞான சம்பந்தா! நீயும் நின் மனைவியும், நின் திருமணங் கண்ட புண்ணிய சீலர்கள் யாவரும் நமது சிவஜோதியில் புகுந்து வருக" என்று கூறியருளினார். ஆங்கு ஒரு பெரிய அற்புத ஜோதி தோன்றியது. அதில் ஒரு வாயிலும் தோன்றியது. பிள்ளையார், "ஞான மெய்ந் நெறி நமச்சிவாயவே" என்று கூறி நமச்சிவாயப் பதிகம் பாடி யருளினார்.

காத லாகிக் கசிந்து கண்ணீர்மல்கி
ஒது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலை கொடங்கையில் எண்ணுவர்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே.

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தான்நினை வார்க்கினி யான்நெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே.

கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

விண்ணும் மண்ணுங் கேட்க இப்பதிகத்தைப் பாடியருளி, "திருமணத்திற்கு வந்த அனைவரும் பிறவிப் பிணிதீர இச்சோதியில் புகுமின்" என்று அருளிச் செய்தார்.

ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவா யச்சொ லாம்என்
றானசீர் நமச்சி வாயத் திருப்பதி கத்தை அங்கண்
வானமும் நிலனுங் கேட்க அருள்செய்திம் மணத்தில் வந்தோர்
ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக என்ன.

பிறவிக் கடலில் கரை காணாது அழுந்தி, உடம்பாகிய துன்பக் கூட்டினுள் உணர்வு இன்றி மயங்குகின்றவர்கள் திருமணஞ் சேவித்த நல்வினைப் பயனாலே, பிறவி நீங்க அருட்ஜோதியுள் புகுந்து சிவமாம் பேறு பெற்றார்கள்.

வருமுறைப் பிறவி வெள்ளம் வரம்புகா ணாத ழுந்தி
உருவெனுந் துயரக் கூட்டில் உணர்வின்றி மயங்கு வார்கள்
திருமணத் துடன்சே வித்து முன்செலுஞ் சிறப்பி னாலே
மருவிய பிறவி நீங்க மன்னுசோ தியினுட் புக்கார்.

திருநீலநக்க நாயனார், திருமுருக நாயனார், சிவபாதஇருதயர், நம்பாண்டார் நம்பி, திருநீலகண்ட யாழ்ப்பாணர் மற்றுமுள்ள திருத் தொண்டர்கள் மனைவியருடனும் மற்றுமுள்ள சுற்றத்தவருடனும், சிவசோதியினுட் புகுந்தார்கள். முத்துச் சிவிகை தாங்கியவர்களும், சின்னம் பிடித்தோர்களும், மங்கல வினையில் கலந்துகொண்ட மடமங்கையர்களும் சோதியில் புகுந்தார்கள். "ஆறுவகைச் சமயத் தில் அருந்தவரும், அடியவரும், கூறுமறை முனிவர்களும், கும்பிட வந்து அணைந்தாரும் வேறு திருவருளினால் வீடுபெற வந்தாரும் ஈறில் பெருஞ்சோதியினுள் எல்லோரும் புக்கதற்பின்" திருஞான சம்பந்தர் காதலியாரது கரமலரைப் பற்றிக் கொண்டு அருட் சோதியை வலம் வந்து, அதனுட் புகுந்து ஒன்றுபட்டார்.

காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலஞ் செய்தருளித்
தீதகற்ற வந்தருளுந் திருஞான சம்பந்தர்
நாதன்எழில் வளர்சோதி நண்ணியதன் உட்புகுவார்
போதநிலை முடிந்தவழி புக்கொன்றி உடனானார்.

பிள்ளையார் சோதியுட் புகுந்தபின் அத் திருவருட்சோதி மறைந்தது. திருக்கோயில் பழையபடியே தோன்றியது. அதனுட் புகும்பேறு பெறாதார் திகைத்து நின்றனர். அதனை நெடுந்தொலை வில் நின்று கண்ட பிரமாதி தேவர்களும் முனிவர்களும் வாயார வாழ்த்தினார்கள்.

விளக்கம்

நன்மக்களைப் பெறுதல்

உலகிற்கு நாம் புரிய வேண்டிய தொண்டுகள் பலவற்றுள் முக்கியமான சிறந்த தொண்டு நன்மக்களைப் பெறுதல், தீய பிள்ளைகளைப் பெறுவதைக் காட்டிலும் பெருந் தீமை யாதொன்றும் இருக்க முடியாது. துரியோதனனைத் திருதராட்டிரன் பெற்றதனால் அந்தக் காலத்தில் இருந்த அரசர் குலங்கள் அத்தனை யும் அழிந்தன. தீயமக்களைப் பெற்ற தனக்கும் தன் குலத்திற்கும் பிறர்க்கும் பெருங்கேடு செய்தவனாகின்றான். தீய மக்களைப் பெற்று உலகிற்கு இடர் விளைவிப்பதைக் காட்டிலும் மலடர்களாக இருப்பது நல்லது.

நன்மக்களைப் பெறுவதற்குப் பலகாலும் நற்றவம் புரிய வேண்டும். அதனாலேயே, திருவள்ளுவதேவர் "நன்மக்கட்பேறு" "பண்புடைய மக்கள்" என்று கூறினார். நன்மக்கள் எழுபிறப்புக்கும் நலம்புரிவார்கள்.

படம் பிடிக்கத் தொடங்குவானொருவன் தன்னை அலங் கரித்துக் கொள்வதுபோல், மக்களைப் பெறுவானும் தன்னை நன்மனமுள்ளவனாக அமைத்துக் கொள்ள வேண்டும். "மனந் தூயார்க்கு எச்சம் நன்றாகும்" என்ற பொய்யாமொழிப்படி நன்மன முள்ளவனுக்கு நற்குணமுள்ள மக்கள் தோன்றுவது உறுதி.

ஏழாவது நூற்றாண்டிலே சமண், புத்தம் முதலிய சமயம் பெருகி, சைவம் அருகி, திருநீற்றுச் சாதனம் குறைந்தது கண்டு சிவபாத இருதயர் பெரிதும் வருந்தி, பரசமய நீக்கமும் சிவசமய ஆக்கமும் வேண்டிப் பெருந்தவம் புரிந்தார்.

மனையறத்தில் இன்பமுறு மகப்பெறுவான் விரும்புவார்
அனையநிலை தலைநின்றே ஆடியசே வடிக்கமலம்
நினைவுறமுன் பரசமயம் நிராகரித்து நீறாக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றுந் தவம்புரிந்தார்.

சைவ சமயத்தை வளர்த்தலே அமையுமே பரசமயத்தை விலக்கலும் வேண்டுமோ? எனின், அது இன்றியமையாதது ஆகும். எல்லாச் சமயங்களையும் படிமுறையாகக் கொண்டு, எதையும் வெறுக்காமல் முடிமணியாக விளங்கும் ராசாங்கச் சமயம் சைவ சமயமாகும். சைவம் எதனையும் எதிர்ப்பதில்லை.

"விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற்கு ஏற்ற தாகும்"

என்று வாய்மணக்கக் கூறுவது சைவசமயம் ஒன்றே யாகும். சைவம் எச்சமயத்தையும் தனக்கு அங்கமாகக் கொள்ளும். எல்லா சமயக் கொள்கைகளும் சைவசமயத்தில் அடங்கும்.

ஆகவே, பரசமய நிராகரிப்பு எதற்கு? எனின், கூறுதும். பயிர் செய்வான் ஒருவன் தான் செய்யும் பயிருக்கு இடர் செய்யும் களைகளைக் களைந்தாலன்றிப் பயிரை வளர்க்க வொண்ணாது. முதலில், களைகளை நீக்க வேண்டும். பிறகு பயிரைக் காக்க வேணும். பயிருக்கு இடர் செய்யாது வாளா கிடக்கின்ற புல் பூண்டுகளையெல்லாம் உழவன் பிடுங்கி எறிந்து கொண்டிருக்க மாட்டான். அதுபோல், சைவசமயத்தை அழிக்கத் தொடங்கும் பரசமயத்தையே நிராகரிக்க வேண்டும். தன் சமய நெறி நின்று ஒழுகுவார்க்குத் தீங்குசெய்வது சைவ சமயத்தின் கொள்கையன்று.

சிவபாத இருதயர் அன்று புரிந்த தவமன்றோ இன்று நாம் தமிழ் மறையைப் பெற்று, திருநீற்றின் பெருமையை உணர்ந்து நலமுறுகின்றோம். இவ்வாறு, ஒவ்வொருவரும் நல்ல தவஞ் செய்து நன்மக்களைப் பெறுதல் வேண்டும். அதுவே நாட்டிற்குப் புரியும் நற்பணியாகும்.

"உலகுய்ய மகப் பெற்றார்"

எனவரும் வாக்கைக் காண்க.

மக்களை நல்லறவழியில் வளர்த்தல்

தாய், தந்தையர்கள் மக்களைப் பெற்று உண்டி, உடை தந்து கல்வி அறிவைப் புகட்டுவதோடு அமையக்கூடாது. மக்களை நல்லற வழியிலே நிற்குமாறு பயிற்றுதல் வேண்டும். மக்கள்பால் குற்றங் காணில் கண்டித்துத் தண்டிக்க வேண்டும்.

சிவபாத இருதயர் பலநாள் தவமிருந்து பெற்ற மைந்தர் பிறர் தந்த பால் குடித்ததைக் கண்டு கோல் எடுத்து ஓங்கித் தண்டிக்க முயன்றார். ஏன்? உணவினாலேயே குணங்கள் மாறுபடுகின்றன. மற நெறியிலே பொருளை ஈட்டி, அப்பொருளால் வந்த உணவை

யுண்டார் தந்த பாலாக இருப்பின் மைந்தன் குணம் மாசுபடும் என்று அஞ்சினார் சிவபாதர்,

"எச்சில்மயங் கிடஉனக்கீ திட்டாரைக் காட்டென்று
கைச்சிறிய தொருமாறு கொண்டோச்ச"

"ஊன்கெடினும் உண்ணார்கைத் துண்ணற்க" - நாலடியார்

ஆகவே, மக்களைப் பெற்ற தாய்தந்தையர் கண்ணுங் கருத்து மாக நின்று மக்களை நல்வழியில் நிற்குமாறு தூண்டி நல்ல முறையில் வளர்க்க வேண்டும்.

திருஞானசம்பந்தர் முருகக் கடவுள் அல்லர்

சைவசமயத்தில் சிவபெருமான் பிறப்பு இறப்பு இல்லாதவர் என்பதுதான் சிறந்த கொள்கை; வேதம், ஆகமம், புராணம் எல்லாம் இதனை உறுதியாகக் கூறியிருக்கின்றன. சிவமே குமாரக்கடவுள். "ஈசனேயவன்" என்பது கந்தபுராணத் திருவாக்கு. முருகவேள் வேறு சிவபெருமான் வேறு அன்று. அங்ஙனமிருக்க முருகவேள் கருவுற்றுச் சம்பந்தராகப் பிறந்தார் எனக்கொள்வது சைவ சித்தாந்தத்திற்கு முற்றிலும் முரண்.

உணர்தலும் மறத்தலும் கடவுள் குணமாகாது. சிவஞானப்பால் பருகியதும், "தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார்" என்று வருவதனாலும், முருகவேள் திருவவதாரம் என்பது பொருந்தாது.

"பெம்மான் முருகன் பிறவான் இறவான்"

என்று கூறிய அருணகிரிநாதரே பிற இடங்களில் முருகவேளைச் சம்பந்தராகக் கூறுவதன் காரணம் யாது? எனின் கூறுதும்.

முருகவேளுடைய சாரூபம் பெற்றவர்கள் பலர். அவர்களுக்கும் ஆறுமுகம் பன்னிரு கரங்கள் முதலியவை யுண்டு. அப்படிச் சாரூபம் பெற்றவர்கள் அபர சுப்ரமண்யர் எனப்படுவார்கள். அத்தகைய அபர சுப்பிரமணிய மூர்த்திகளுள் ஒன்று திருஞான சம்பந்தராக வந்தது என்று உணர்க.

கால சம்மாரம், காம தகனம், திரிபுர தகனம் முதலியவைகளைப் புரிந்தது ஸ்ரீகண்ட ருத்திரரே யாகும். ஸ்ரீகண்டர் சிவபெருமானல்லர். அணுபட்சத்தைச் சேர்ந்தவர். ஸ்ரீகண்டருடைய செயல்களை யெல்லாம் பரசிவத்தின் செயலாகவே தேவார திருவாசகங்களில் வருமாறுபோல், அபர சுப்ரமண்யத்தின் செயலாக அருணகிரிநாதர் கூறியருளினார் என்று தெளிக. எனவே, ஞானசம்பந்தர் முத்தி

பெற்ற முத்தான்மாக்களில் ஒருவர் என்பதை அவருடைய திரு வாக்கினாலேயே உணரக் கிடக்கின்றது.

"பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டின் அளித்தருளி"

என்று சேக்கிழார் அருளிச் செய்ததனாலும்,

"................................திருந்தடி
மறக்கு மாறி லாதஎன்னை மையல் செய்திம் மண்ணின்மேல்
பிறக்கு மாறு காட்டினாய்"

என்று ஆளுடைய பிள்ளையாரே அருளிச் செய்ததனாலும் அறிக.

அழுதால் பெறலாம்

இறைவனை அடைவதற்குப் பல நெறிகள் உள. வழிபாடு, தலயாத்திரை, யோகம், தியானம் முதலிய நெறிகள் யாவும் இறை வனருளைப் பெறுவதற்குரிய நெறிகளேயாகும். ஆனால், எளிதில் பெறுவதற்குரிய நெறி இறைவனை நினைந்து உள்ளங் குழைந்து உருகி குழந்தைபோல் விம்மி விம்மி அழுவதேயாகும்.

யானே பொய்யென் நெஞ்சும் பொய்யென் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே யருளா யடியேன் உனைவந் துறுமாறே. - மணிவாசகர்

ஒழியாப் பிறவி யெடுத்தேங்கி யேங்கி யுழன்றநெஞ்சே
அழியாப் பதவிக் கவுடதங் கேட்டி யநாதியனை
மழுமான் கரத்தனை மால்விடை யானை மனத்திலுன்னி
விழியாற் புனற்சிந்தி விம்மி யழுநன்மை வேண்டுமென்றே.

- பட்டினத்தார்

"மொழிகுழ றாத்தொழு தழுதழு தாட்படு
முழுதும லாப்பொருள் தந்திடாயோ"

- அருணகிரிநாதர்

"அழுத பிள்ளை பால் குடிக்கும்" என்பது பழமொழி. ஆனால் அழுத பிள்ளை உடம்புக்கு வந்த அன்னையின் பாலையே குடிக்கும். திருஞான சம்பந்தருடைய அழுகை தன் பொருட்டன்று. அழுகை இருவகைப்படும். தன் பொருட்டு ஒன்று; பிறர் பொருட்டு ஒன்று. தன் பொருட்டு அழுகின்றபோது வாய் குவியும், பிறர் பொருட்டுக் கருணையினால் அழுகின்றபோது வாய்மலரும். "புனிதவாய்

மலர்ந்தழுத" அவர் உலகங்களுக்கெல்லாம் உயிரன்னையாம் உமையம்மையாரது சிவஞானப்பாலைப் பருகினார். அவர் அழுத திறத்தை அருட்பெரும் புலவர் சேக்கிழாரல்லது கூறவல்லாருளரோ?

மெய்ம்மேற்கண் டுளிபனிப்ப வேறெங்கும் பார்த்தழுவார்
தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும்பிள் ளமைதானோ
செம்மேனி வெண்ணீற்றார் திருத்தோணிச் சிகரம்பார்த்
தம்மேயப் பாஎன்றென் றழைத்தருளி யழுதருள.

தாளம்

இறைவனுடைய புகழ் எங்கும் ஓங்கவேண்டும். அங்ஙனம் ஓங்குவதற்குத் தமிழ் ஒரு கருவியாகும். பாலை ஒரு கிண்ணத்தில் வார்த்துத் தருவதுபோல், இறைவன் புகழாகிய பாலைத் தமிழாகிய கிண்ணத்தில் பெய்து தருதல் வேண்டும். பால் நல்லதாயினும் கலத்தின் தன்மையால் அதுமேலும் சிறப்புறும்.

கிண்ணத்தில் தங்கம் பூசி அதில் பால் விட்டுத் தருவது போல் தமிழாகிய கிண்ணத்திற்கு இன்னிசை இன்றியமையாதது. எல்லாருடைய உணர்ச்சி உள்ளம் முதலியவற்றை இசைவிக்கச் செய்வதனால் இசையெனப்பட்டது. முத்தமிழில் அது நடுநாயக மாக நிற்கும் பெருமையுடையது.

அந்த இசைக்குத் தாளம் தந்தை போன்றது. தாளம் ஒரு சமுத்திரத்திற்குச் சமானம். அதன் கரைகண்டார் ஒருவருமிலர்.

தென்றல் வடிவும் சிவனார் திருவடிவும்
மன்றல் வடிவும் மதன்வடிவும் - குன்றாத
வேயின் இசைவடிவும் வேதவடி வுங்காண
லாயின்தா ளங்காண லாம்.

திருஞான சம்பந்தருடைய திருவுள்ளம், "ஞாலம் நின்புகழே மிக வேண்டுந்தென் ஆலவாயிலுறையும் எம் ஆதியே" என்ற திருப் பாடலால் தெளிவாகின்றது.

எனவே, எங்கும் தமிழிசையால் இறைவன் புகழைப் பரப்பிய பெருந்தகையார் நமது ஞானசம்பந்தர் என அறிக. அந்த இன்னிசைக்குத் தாளம் உயிர்போன்றது. ஆதலின், பொற்றாளத்தை இறைவர் அவருக்கு வழங்கினார். அதில் திரு ஐந்தெழுத்து பொறித் திருந்தது. நாத வடிவியாகிய அம்பிகை அதற்கு ஓசையளித்தார். அம்பிகையை "நாத வடிவி யகிலம் பரந்தவள்" என்பார் அருணகிரி நாதர்.

"நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பு ஞானசம் பந்தனுக்கு
உலகவர்முன்
தாள மீந்தவன் பாடலுக்கு இரங்குந் தன்மை யாளனை"
- சுந்தரர்

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" - அப்பரடிகள்

சம்பந்தர் கருணையின் திறம்

பிறர் துன்பத்தைக் கண்டு இரங்குவதே அறிவின் பயன். அவ்வாறு இரங்குபவரே அறிஞர்.

அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போல் போற்றாக் கடை.

என்பார் பொதுமறையாசிரியர்.

தனக்கென வாழ்பவர் சிறியவர்; பிறர்க்கென வாழ்பவர் பெரியவர்.

வயதிற் சிறியவரும் அறிவினாலும் அன்பினாலும் அருளாலும் பெரியவருமாகிய பிள்ளையார் திருமருகலில் தங்கியிருந்தபோது நிகழ்ந்த கருணைத் திறத்தை நினைந்தால் கருங்கல்லும் உருகும்.

தந்தையாரால் பன்முறை ஏமாற்றமடைந்த அத்தை மகனுடன் வந்த வணிகனுடைய மகள், இனிக் கணவனாக இருக்கும் அவனுடன் திருக்கோயில் அருகில் தங்கியபோது, அரவந் தீண்ட வணிகன் மாண்டனன். அப்பெண்மணி கொழுகொம்பற்ற பூங்கொடிபோல் வாடி வருந்தினாள். அவள் கற்பின் திறத்தை நமது சேக்கிழார் அடிகள் ஒரு பாதி வரியில் பகர்கின்றார். "வாளரவு தீண்டவுந்தான் தீண்டகில்லாள்" பற்பல மணிமந்திர மருந்துகளில் வல்லார் பெரிதும் முயன்றும் விடந் தீர்ந்திலது. அவள் அறிவுள்ளவள். ஆதலினாலே இறைவனை நோக்கிப் புலம்பலுற்றாள்.

....மதியி னாலே
சென்னியிளம் பிறையணிவார் கோயில் வாயில்
திசைநோக்கித் கைதொழுவாள் செயலொன் றில்லாள்.

அது காரணமாகப் பிள்ளையாரால் விடந்தீர்ந்து உய்ந்த கணவனைப் பெற்றுக் களித்தாள். அதனால், துன்பம் நேர்ந்தபோது வாளா வருந்தாது, உயிர்களின் அல்லலகற்றும் உறுதுணையாகிய இறைவரைக் குறித்து நினைந்து நெகிழ்ந்து துதிக்க வேண்டும் என்பது விளங்குகின்றது.

இனி, ஆண்டவனிடம் வேண்டித் துதிக்கின்ற அவ்வணிக மாது மிகுந்த நுட்பமாகவும் தக்க காரணங்களைக் காட்டியும் முறையிடு கின்றாள்.

1. "இறைவனே! பன்முறையும் ஏமாற்றமடைந்த இவரை மணக்கவேண்டிய நான் இவருடன் வந்தேன். இவர் அரவந் தீண்ட விடமுண்டு மாண்டார். தேவரீரோ அடியவர்களாகிய அமரர் வேண்ட ஆலகால விடத்தை யுண்டு அருள்புரிந்தீர். விடமுண்ட நீர் விடமுண்ட என் கணவனைக் காப்பாற்றும்.

2. பாம்பில் துயிலும் பரந்தாமனும், விதிவிலக்கு எழுதும் பங்கயனும் போற்ற பாம்பை அணிகலமாக அணிந்திருக்கின்றீர். என் கணவனை எழுப்பினால் விதிக்கும் விதியும், காக்கும் கமலக் கண்ணனும் உம்மை ஏன் இவ்வாறு செய்தீர் என்று கேட்க அவர்கட்கு என்ன உரிமையுண்டு? அவர்கட்கு அத் தொழில்களை அளித்தவர் தேவரீரன்றோ? பெரும் பாம்பையே அணிகலமாய்ப் பூண்ட நீர் சிறுபாம்பின் விடத்தைத் தணிக்கக் கூடாதோ?

3. தன் கணவனாகிய மன்மதன் வெந்து சாம்பரானதைக் கண்ட என்னைப் போன்ற ஒரு பெண்மணியாகிய இரதிதேவி உம்மை வேண்டுதலும், அவளுக்கு உடனே திருவுளம் இரங்கி, மதனனை எழுப்பி அவளுடைய திருமாங்கல்யத்தைக் காத்தருளினீர். முன்னமே இவ்வாறு ஒரு பெண்மணிக்கு அருளிய நீர் எனக்கும் அவ்வாறு அருளலாமன்றோ? அருளாதொழியின் உம்மிடம் பாரபட்சம் சாருமே. சாம்பலான மதனனை எழுப்பிய நீர் மரணத் தருவாயில் உள்ள என் கணவனை எழுப்பலாமன்றோ?

4. "கூற்றுவன் கொண்டுபோகும் உயிரை நாம் எவ்வாறு தருவோம்" என்று தேவரீர் கூறவும் நியாயமில்லை. முந்தி அடைக்கலம் என்ற அந்தணச் சிறுவனுக்காக அந்தகனை உதைத்து அருளியிருக்கின்றீர். இன்றும் அதுபோல் அடைக்கலம் புகுந்த பெண்ணாகிய எனக்காக இயம பயத்தினின்றும் நீக்கி என் கணவனுக்கு உயிர்ப்பிச்சை தாரும்.

- என்று இவ்வாறு நான்குவித காரணங்களைக் கூறிக் காரணங் கடந்த கண்ணுதலை அவ்வணிகன் மகள் வேண்டுந் திறம் நனி இனிமையானது. அதனை அழகாக நமது அருட்பெரும் புலவர் அருளிச் செய்யும் அமிர்தப் பாடலைக் காண்க.

அடியாராம் இமையவர்தம் கூட்டம் உய்ய
அலைகடல்வாய் நஞ்சுண்ட அமுதே! செங்கண்

நெடியானும் நான்முகனுங் காணாக் கோல
நீலவிட அரவணிந்த நிமலா! வெந்து
பொடியான காமனுயிர் இரதி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே! பொங்கர் வாசக்
கடியாரு மலர்ச்சோலை மருங்கு சூழும்
க்வின்மருகல் பெருமானே! காவாய் என்றும்

வந்தடைந்த சிறுமறையோன் உயிர்மேற் சீறி
வருங்காலன் பெருங்கால வலயம் போலும்
செந்தறுகண் வெள்ளெயிற்றுக் கரிய கோலஞ்
சிதைந்துருள உதைத்தருளுஞ் செய்ய தாளா!
இந்தவிடக் கொடுவேகம் நீங்கு மாறும்
யான்இடுக்கண் குழிநின்றும் ஏறு மாறும்
அந்திமதிக் குழவிவளர் செய்ய வேணி
அணிமருகல் பெருமானே அருளாய் என்றும்

விடியற்காலை வழக்கம்போல் வழிபாட்டிற்கு வந்து கொண்டிருந்த காழிவேந்தர் அப் பெண்மணியின் அழுகுரலைக் கேட்டு வாளாக நேரே திருக்கோயிலுக்குச் சென்றாரில்லை. ஏன்? திருக்கோயிலில் உள்ள இறைவரை உயிர்கள்தோறுங் காண்கின்றார். உயிர்கள்மீது அளவிறந்த கருணை கொண்டவர். பெண்ணின் அழுகுரல் "விளங்குதிருச் செவியிற் சார மேவுதலுந் திருவுள்ளக் கருணை மேன்மேல் வைத்து" என்றதனாலும், அவளை யணுகி அவள் வரலாற்றைக் கேட்டபின், "கற்றவர்கள் தொழுதேத்துங் காழி வேந்தர் கருணையினால்'' என்றதனாலும் காழிப் பிள்ளையார் கருணைத் திறம் புலனாகின்றது.

இனி, திருமயிலாப்பூரில் பெருவணிகராகிய சிவநேசருடைய புதல்வி பூம்பாவை அரவந் தீண்டி மாண்டனள். தந்தையார் பெரிதும் வருந்திச் சுட்டுச் சாம்பரையும் என்பையும் ஒரு குடத்தில் இட்டுச் சேமித்து வைத்திருந்தார். பிள்ளையார் திருமயிலைக்கு எழுந்தருளியபோது, அச்செய்தியை அடியவர் புகலக் கேட்டரு ளினார். திருக்கோயிலுட் சென்று கபாலீச்சுரப் பெருமானைக் கைதொழுது திருமதிற் புறம் வந்தவுடன் அளவற்ற அருளினால் வணிகரை நோக்கினார். என்பைக் கொணரச் செய்து, என்பைப் பெண்ணாக்கி இன்னருள் செய்தருளினார்.

"ஆற்றும் இன்னருள் வணிகர் மேற்செல அருள்செய்வார்"

இவ்வாறு, திருமருகலிலும், திருமயிலையிலும் அரவந் தீண்டி யயர்ந்த வணிகனையும், மாண்டு என்பாகக் கிடந்த வணிகன் மகளையும் கருணையினால் உய்வித்து உலகர்முன் உதவியருளினார். அவர் கருணைத் திறத்தை இதனால், தெற்றெனத் தெளிக.

சம்பந்தர் அன்பின் திறம்

இறைவனுடைய திருக்கோயிலுட் சென்று சிவமூர்த்தியைக் காணும்போது பிள்ளையாரிடம் நிகழ்கின்ற அன்பின் திறத்தை அளவிட முடியாது. அதனை ஓரளவுக்குக் கூறவல்லார் சேக்கிழாரை யன்றி யாவரே வல்லார்? அவ்வாறு கூறிய இடங்கள் பல; அவற்றுட் சில ஈண்டுக் காட்டுதும். அன்பர்கள் கருத்துடன் படித்து இன்புறுக. அவ்வாறு ஆலய வழிபாட்டின்போது அன்பினால் நெகிழ்ச்சி யடைதல் வேண்டும்.

திருவாரூரில்

பணிந்து வீழ்ந்தனர்; பதைத்தனர்; பரப்பிய புளகம்
அணிந்த மேனியோ டாடினர்; பாடினர்; அறிவில்
துணிந்த மெய்ப்பொரு ளானவர் தமைக்கண்டு துதிப்பார்;
தணிந்த சிந்தையின் விரைந்தெழு வேட்கையில் தாழ்ந்தார்.

திருமறைக்காட்டில்

அன்பினுக் களவு காணார்; ஆனந்த வெள்ள மூழ்கி
என்புநெக் குருக நோக்கி இறைஞ்சிநேர் விழுந்து நம்பர்
முன்புநிற் பதுவும் ஆற்றார்; மொழிதடு மாற ஏத்தி
மின்புரை சடையார் தம்மைப் பதிகங்கள் விளம்பிப் போந்தார்.

திருஆலவாயில்

ஆளும் அங்கணர் ஆலவாய் அமர்ந்தினி திருந்த
காள கண்டரைக் கண்களின் பயன்பெறக் கண்டு
நீள வந்தெழும் அன்பினால் பணிந்தெழ நிறையார்
மீள வும்பல முறைநில முறவிழுந் தெழுவார்.

அங்கம் எட்டினும் ஐந்தினும் அளவின்றி வணங்கிப்
பொங்கு காதலின் மெய்ம்மயிர்ப் புளகமும் பொழியும்
செங்கண் நீர்தரும் அருவியும் திகழ்திரு மேனி
எங்கு மாகிநின் றேத்தினார் புகலியார்இறைவர்.

திருக்கச்சி

பாடினார்; பணிவுற்றார்; பரிவுறும்ஆ னந்தக்கூத்து
ஆடினார்; அகங்குழைந்தார்; அஞ்சலிதஞ் சென்னியின்மேற்

சூடினார்; மெய்ம்முகிழ்த்தார்; சூகரமும் அன்னமுமாய்த்
தேடினார் இருவருக்குந் தெரிவரியார் திருமகனார்.

மருவியஏ ழிசைபொழிய மனம்பொழியும் பேரன்பால்
பெருகியகண் மழைபொழியப் பெரும்புகலிப் பெருந்தகையார்
உருகியஅன் புள்ளலைப்ப உமைதழுவக் குழைந்தவரைப்
பருகியமெய் யுணர்வினொடும் பரவியே புறத்தணைந்தார்.

திருஞான சம்பந்தர் திருப்பூம்புகலூரில் எழுந்தருளியிருந்த போது, ஆளுடைய அரசுகள் வந்தார். அரசுதனை எதிர்கொள்ளப் பிள்ளையார் புறப்பட்டுப் புகலூர் எல்லையிற் சென்று தொழுது வரவேற்றார். வாகீசர் தாம் திருவாரூர் தியாகப் பெருமானை வணங்கி வந்த சிறப்புக்களை ஓதினார். அதுகேட்ட பிள்ளையார் அங்கிருந்தபடியே, அப்பொழுதே, "அடியேன் ஆரூர் சென்று சேவித்து வருவேன். தாங்கள் பூம்புகலூர் சென்று யாம் வருமளவும் இரும்" என்று கூறிவிட்டு ஆரூரை நோக்கிச் சென்றார்..இதனால், ஆளுடைய பிள்ளையாரது அன்பின் திறம் புலனாகின்றது.

சம்பந்தர் அருளின் திறம்

புகலிவேந்தர் திருமதுரையம்பதியில் திருமடத்தில் அடியார் குழாத்துடன் தங்கியிருந்தார். பொய்ம்மையும் அழுக்காறும் கொடுமையும் நிறைந்த சமணர்கள், சம்பந்தரது திருமடத்தில் மந்திரங்கள் சொல்லி மடத்தில் தீ வைக்க முயன்று, அஞ்செழுத்து ஓதும் அடியார் திருமடத்தில் அவர் மந்திரத்தீ எய்தாமையினால், நேரே வந்து திருமடத்தில் தீவைத்தனர். அது பற்றும்பொழுது அடியார்கள் அதை அணைத்து, ஆளுடைய பிள்ளையார்பால் இதை மொழிந்தார்கள். "மாதவர் துயிலும் இத் திருமடப்புறம்பு பழுது செய்வதே பாவிகள்" என்று பரிந்தருளி, "என் பொருட்டவர் செய்த தீங்காயினும் இறையோன் அன்பருக்கு எய்துமோ?" என்று கூறியருளினார். 'மன்பு ரக்குமெய்ம் முறைவழு என" என்றும் திருவுள்ளம் பற்றினார்.

இனி, அத்தீயை அரசன் மீது பிள்ளையார் ஏவினாரில்லை. புதிதாக ஏவும் ஒன்றை "பையவே" என்று கூறவேண்டிய பரிசிராது. வேறு என்கொல்?

குடிகள் செய்த பாவம் கொற்றவனைச் சாரும். இது நெறிமுறை; மக்கள் செய்த வினை மாதாபிதாக்களையும், மாணவன் செய்த பாவம் ஆசானையும் சாருவதுபோல் என அறிக. சாமானியமான

வர்கட்குச் செய்த பாவம் மன்னவனைச் சாரக் காலந்தாழ்க்கும். சத்தினிபாதம் எய்திய சிவஞானிகளாகிய எண்ணில்லாச் சிவனடி யார்கட்குச் செய்த இப்பெரிய பாவம் சாரு முறைப்படி எண்ணில் லாத வேகமாக அரசனைச் சார ஓடியது. அப்படி மிகப்பெரும் வேகமாகத் தாவிச் செல்லும் தீயினையே ஆளுடைய பிள்ளையார் அன்பின் திறத்தினால், "பையவே சென்று பாண்டியர்க்காகவே" என்று பகர்ந்தருளினார்.

(இந்த அரிய கருத்தை எனக்கு விளக்கியவர்கள் எனது ஞானா சாரியராகிய பழநி "சித்தாந்த மஹாமஹோபாத்யாயர்" சித்தாந்த சரபம்; "காசிவாசி" ஈசான சிவாசாரிய சுவாமிகள்.)

இதற்கு ஆதாரம் "வெய்ய தீங்கிது வேந்தன் மேற்றெனும் விதி முறையால்" என்று சேக்கிழார் பெருமானே கூறுமாறு காண்க. அரசியல் நுணுக்கமும், நீதி நூன்முறையுந் தெரிந்த முதலமைச்சர் அன்றோ அவர்.

விதிமுறைப்படி இயல்பாகவே வேகமாகச் சென்ற வெப்பினைப் பையச் செல்லுமாறு பணித்தது அன்பின் திறம். அங்ஙனம் பணித்த தற்குரிய காரணங்களையும் தெய்வச் சேக்கிழார் செப்பாது விடுவாரோ?

பாண்டிமா தேவியார் தமது பொற்பில்
  பயிலுநெடு மங்கலநாண் பாது காத்தும்
ஆண்டகையார் குலச்சிறையார் அன்பி னாலும்
  அரசன்பால் அபராதம் உறுத லாலும்
மீண்டுசிவ நெறியடையும் விதியி னாலும்
  வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடையன் ஆத லாலும்
  தீப்பிணியைப் பையவே செல்க என்றார்.

திருப்பாச்சிலாச்சிராமத்தில் கொல்லிமழவன் மகளது முயலகன் என்ற நோயைத் தீர்த்து அருளியதும், கொடிமாடச் செங்குன்றூரில், அடியார்க்கும் மற்றையர்க்கும் வந்த, குளிர் சுரநோயைத் தீர்த்து அருளியதும் பிள்ளையார் உயிர்கள்மீது வைத்த அன்பினால் என உணர்க.

சமணரைக் கழுவேற்றியது

சமணர்கள் எண்ணாயிரவரைக் கழுவேற்றியது முறைமை யாகுமா? அன்புக்கும் சைவத்திற்கும் தொடர்பு உண்டா இல்லையா?

சைவ சமயாசிரியராகிய ஞானசம்பந்தர் இங்ஙனம் செய்யலாமா? இது பெருங் கொலையன்றோ? என்பனவாதி சில பல வினாக்களை எழுப்புகின்றனர் சிலர்; இவ்வினாக்களைக் கண்டு கழுவேற்றிய வரலாறே இடைச் செருகல் என்பார் சிலர்.

இத்தனையும் மனதில் வைத்துக்கொண்டு நடுநிலையில் நின்று ஆய்ந்து உண்மையைத் திருவருள் துணைகொண்டு கூறுதும், கூர்ந்து நோக்கி அமைக.

அன்பு வேறு சைவம் வேறு அன்று; அன்பே சிவமாய் அமர்ந் திருத்தலினால் அன்பும் சைவமும் ஒன்றே. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்வது ஆன்றோர்களது அறம்.

இனி, கடவுளுக்கு எம்மதமும் சம்மதம். எல்லா மதங்களும் இறைவன் கருணையினால் தோன்றியவையே. ஒரு கல்லூரியில் பல வகுப்புகள் இருப்பதுபோல் என்று அறிக. எல்லா சமயங்களும் முடிவில் ஓர் இடத்திற்கே சென்று சேருகின்றன.

"விரிவிலா அறி வினார்கள் வேறுஒரு சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்"

என்பது தமிழ்மறை.

ஏழாவது நூற்றாண்டில் இருந்த சமண சமய குருமார்கள் இந்த அருள்நெறியை விட்டு விலகினார்கள். அன்பெனும் அரிய மணியை மருள் என்னுங் கடலில் எறிந்து இருள் கொண்ட மனத்தினராய்த் திரிந்தார்கள். மனிதன் மற்றொரு மனிதனைக் கண்டு அன்பினால் தழுவுதலும் உபசரிப்பதும் மக்கட்பண்பு.

திருநீறு பூசுகின்ற சைவர்களைக் கண்டால் அக்காலத்திருந்த சமணர்கள் "கண்டு முட்டு" (பார்த்தவுடன் தீட்டாகி விட்டோம்) என்றார்கள். கண்டு முட்டு என்றவுடன் "கேட்டு முட்டு" என்பார் சிலர். சைவர்களைக் கண்டால் குளிப்பார்கள். அத்துணைக் கொடிய சமயமாக அவர்கள் அந்நாள் கருதினார்கள். கண்டால் தீட்டு, கேட்டால்கூடத் தீட்டு என்றால், இது எத்துணை அநியாயம் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

"மேவலால் இன்று கண்டு முட்டியாம்"
"என்று கூறலும் கேட்டு முட்டு யானும்"
"கண்டுமுட் டடிகள் மார்கள் கேட்டுமுட் டியானும்"

என்ற அடிகளால் இதனை அறிக.

இதுவுமன்றித் தங்கள் குழந்தைகள் அழுதால் அச்சுறுத்தும் பொருட்டு, "பூச்சுக்காரன் வருகின்றான்; பூச்சாண்டி வருகின்றான்"

என்று கூறுவார்கள். திருநீறு பூசுகின்றவனை அத்துணைப் பயங்கர மானவனாகக் கருதினார்கள். அதனால், திருவருள் அவர்களை அழிக்கத் துணை செய்தது;

வலிமையுள்ள ஒரு மகன் மெலிந்த தன் தம்பி அல்லது தமையனை அடிப்பானாயின் தந்தை யார்புறஞ் சேருவார்? அடிப்பவன் புறமா? அடிபடுவானுக்காக இரங்கி, அடிபட்டவனை எடுத்து அணைத்து, அடிப்பவனைத் தண்டிப்பார். இருவருக்கும் அவர் தந்தையானாலும், பொதுவாக இருவரையும் ஆதரிக்க வேண்டிய கடப்பாடு உடையவரானாலும், குற்றஞ் செய்த மைந்தனைத் தண்டிப்பது தந்தையின் இன்றியமையாத கடப்பாடு அன்றோ?

அதுபோல் சமண சமயத்தார், சைவ சமயத்தாரை ஒறுத்த போது பரம்பொருள் சைவசமயத்தின்பால் நின்று சமணத்தை யழிக்கத் துணைபுரிந்தது என வுணர்க.

திருஞானசம்பந்தர் பதினாறாயிரம் அடியார் திருக்கூட்டத் துடன் மதுரைக்கு வந்து திருவாலவாயுடைய அண்ணலை வழிபட்டு ஒரு திருமடத்தில் தங்கியிருந்தார்.

சமணர்கள் தாம் அறிந்த நெருப்பு மந்திரத்தைக் கூறி திருமடத்தைக் கொளுத்த முயன்றார்கள்.

> "தவமறைந் தல்ல செய்வார் தங்கள்மந் திரத்தால் செந்தீ
> சிவநெறி வளர்க்க வந்தார் திருமடஞ் சேரச் செய்தார்"

அம்மந்திரத்தினால் நெருப்பு பற்றவில்லை. அதைக்கண்டு தளர்ந்து அமணர்கள் ஒளிந்து சென்று பதினாறாயிரம் பேர் கண்ணயர்ந்து துயிலும் திருமடத்தில் தீ மூட்டினார்கள். இது எத்துணைப் பெரிய தீமை என்பதை நினைத்துப் பாருங்கள்.

பின்னர், அனல்வாது செய்தார்கள். புனல் வாதந் தொடங்கும் போது, "தோற்றவர் என் செய்வது?" என்று குலச்சிறையாராகிய முதலமைச்சர் கேட்டார்.

> அங்கது கேட்டு நின்ற அமணரும் அவர்மேற் சென்ற
> பொங்கிய வெகுளி கூரப் பொறாமைகா ரணமே யாகத்
> தங்கள்வாய் சோர்ந்து தாமே தனிவாதில் அழிந்தோ மாகில்
> வெங்கழு வேற்று வான்இவ் வேந்தனே என்று சொன்னார்.

முடிவில் அமணர்கள் தோற்றார்கள். தோற்ற ஒரு காரணத்தி னால் மட்டும் மன்னன் சமணரைக் கழுவேற்றவில்லை. பதினாறா

யிரம் அடியார்கள் துயின்ற திருமடத்தில் தீ வைத்த பெரும் பாதகத்தை நினைத்து, "இவர்களைக் கழுவில் ஏற்றுக" என்று முதலமைச்சருக்குக் கட்டளை யிட்டார்.

மன்னவன் மாறன் கண்டு மந்திரி யாரை நோக்கித்
துன்னிய வாதில் ஒட்டித் தோற்றஇச் சமணர் தாங்கள்
முன்னமே பிள்ளை யார்பால் அநுசிதம் முற்றச் செய்தார்
கொன்னுனைக் கழுவில் ஏற்றி முறைசெய்க என்று கூற.

அரசன் நீதிநெறியின்படி குற்றமுள்ளவரைத் தண்டிக்கும்போது ஞானாசாரியர் தடுத்தல் முறையாகாது. அங்ஙனந் தடுத்தால் அரச நீதி கோடும். பல கொலைகள் செய்த ஒருவனை நீதிபதி இந்நாள் மரண தண்டனை விதிக்கின்றார். அதை ஒரு ஞானி சென்று தடுக்கலாமோ? தடுக்கப்படாது; ஆதலினால், கருணை வடிவாக விளங்கும் பிள்ளையார் அந்த அரச நீதியில் தாம் குறுக்கிடாதிருந் தார் என்று தெளிக. இதனை முதலமைச்சராகிய சேக்கிழார் பெருமானே விளக்கியருளுகின்றார். பெரியபுராணம் பாடியவர் அரசநீதி, சட்டதிட்டங்களை நன்கு அறிந்த சோழநாட்டு முதன் மந்திரி என்பதை மறவற்க.

புகலியில் வந்த ஞானப் புங்கவர் அதனைக் கேட்டும்
இகலிலர் எனினும் சைவர் இருந்துவாழ் மடத்தில் தீங்கு
தகவிலாச் சமணர் செய்த தன்மையால் சாலும் என்றே
மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடா திருந்த வேலை.

ஆகவே, தீமைபுரிந்த சமணர்களைக் கழுவேறச் செய்தது மன்னறம் என்றும், அது மறுமைக்கு அப்பாவஞ் சூழாதபடி செய்வதென்றும், மன்னறத்தினைத் தடுத்தல் ஞானிகட்குக் கடனன் றென்றும், பெரும் பாவஞ் செய்த அமணர் கழுவேறியது முறையே என்றும் அன்பர்கள் அறிக.

இவ்வாறு, நிதான புத்தியுடன் ஆய்ந்து அறியும் நல்வினை யில்லாத சிலர், சேக்கிழார் பெருமானைவிடத் தங்களை மதிநலமுடையாரென மதித்து, மனம் போனவாறெல்லாம் பேசியும் வரைந்தும் இடர்ப்படுகின்றனர்.

திருமணத்தின்போது, பிள்ளையார் சிவபதம் பெற நினைத் தலும், திருவருளால் ஒரு சிவசோதி தோன்ற, அதில் திருமணங் காண வந்தாருடன் பிள்ளையார் புகுந்து சிவானந்தப் பெரு வாழ்வைப் பெற்றார்.

சிவசோதி தோன்றிய திருவருளை நம்பாத சிலர், "சமணர்கள்

திருமணத்தின்போது பந்தரில் தீவைத்துவிட்டார்கள்; அத்தீயில் சம்பந்தரும் மாறரும் அகப்பட்டு மாய்ந்தார்கள்" என்று பிதற்றிப் பேதுறுகின்றனர். இப்படிப் பேசுவோர் சமணர்களைக் கழுவேற்றிய வினையால் இப்படி நேர்ந்தது என்னுங் கருத்துடையோர். என்னே இவர் மடமை?

சம்பந்தர் மதுரையில் சமணரை வாதில் வென்றது சற்று ஏறக்குறைய பத்துவயதில் ஆகும். திருமணம் பதினாறாவது ஆண்டில் நிகழ்ந்தது. ஆறு ஆண்டுகளுக்குப் பின், சமணர்கள் சம்பந்தருக்குத் தீங்குசெய்ய நினைத்து, அவருக்கு மட்டுஞ் செய்யாது, திருமணத்திற்கு வந்தார் அனைவரும் மாளத் தீயிட்டனர் என்பது பொருந்துமோ? அது சமணருக்கு மேலும் இழுக்கையே தருகின்றது. ஐம்பெரும் பூதங்களையும் திருவருள் வலிமையால் அடக்கியாளும் பேராற்றல் பெற்ற பிள்ளையாருடைய திருமணத் திருப்பந்தரில் தீயிட்டால் அது பற்றுமோ? பற்றினால், ஒரு பாடலினால் அதை அணைக்குந்திறம் பிள்ளையார்பால் இருக்க அனைவரும் அத்தீயில் அழிவரோ? இது ஒரு சிறிதும் அறிவும் ஆராய்ச்சியும் இல்லாத அவலர் கூற்று என ஒதுக்க.

சம்பந்தர் செயல்

திருக்கொள்ளம்பூதூரில் ஓடம் செலுத்துதல்; திருவரத்துறையில் முத்துச் சிவிகை பெறுதல்; திருப்பட்டீச்சுரத்தில் முத்துப்பந்தர் பெறுதல்; திருவாவடுதுறையில் தந்தையார் பொருட்டு உலவாக்கிழி பெறுதல்; திருவோத்தூரில் ஆண்பனையைப் பெண்பனை யாக்குதல்; திருக்கோலக்காவில் பொற்றாளம் பெறுதல்; திருப்பாச்சி லாச்சிராமத்தில் கொல்லிமழவன் புதல்வியின் முயலகன் நோய் தீர்த்தல்; திருச்செங்குன்றூரில் குளிர்சுரந் தீர்த்தல்; திருமருகலில் அரவந் தீண்டிய செட்டி மகனை உய்வித்தல்; திருவீழிமிழலையில் படிக்காசு பெறுதல்; திருமறைக்காட்டில் திருக்கதவம் அடைத்தல்; திருமதுரையில் வெப்புநோய் தீர்த்தல்; அனலிலும் புனலிலும் ஏட்டினையிட்டு வெல்லுதல்; திருமயிலையில் என்பைப் பெண்ணுரு வாக்குதல்; சோதியில் அனைவரையும் புகுவித்துச் சிவகதியருளல் முதலிய அற்புதச் செயல்களை சீகாழி வள்ளலார் செய்தருளினார்.

ஓடஞ் சிவிகை உலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்தல் - ஏடெதிர்வெப்
பென்புக் குயிர்கொடுத்தல் ஈங்கிவைகாண் ஓங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்.

- திருக்களிற்றுப்படியார்

பாசகரணம் பசுகரணம் நீங்கிப் பதிகரணம் பெற்றவர்களாதலின் இத்தகைய அற்புதங்கள் செய்வது எளிது என உணர்க. அக்கரணம் பெறாதார்க்கு அது அரிது ஆகும். இஞ்ஞான்று அற்புதம் புரிவார் இலராதலின் இது புனைந்துரையெனக் கூறிப் புன்மையுறுவார் சிலர். அவர்கள் அடியிற்கண்ட திருக்களிற்றுப்படியாரைக் காண்க.

பாலைநெய்தற் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனையன் றேவிக் கராக்கொண்ட - பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம்போல் அல்லாமை காண்.

ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்

"ஏயர்கோன் கலிக்காம னடியார்க்கும் அடியேன்"

நிறைந்த புகழுடைய சோழ நன்னாட்டில் பொன்கொழிக்கும் காவிரி நதியின் வடகரையில் விளங்குவது திருப்பெருமங்கலக்குடி. நீண்ட கொடிகள் அசையும் மாடமாளிகைகள் நிறைந்த அந் நகரத்தில் எப்போதும் நல்விழாக்கள் நடந்துகொண்டேயிருக்கும். பெண்கள் அரங்கங்களில் நடனம் புரியும் ஒலியும் கீதநாத ஒலியும் உழவர்கள் ஒலியும் கடல் ஒலியை நாணச் செய்தன.

அத் திருநகரில் வேளாளர் குலத்திலே, சோழமன்னர் களிடத்திலே பரம்பரையாக சேனாதிபதித் தொழில் பூண்ட ஏயர் குடியிலே கலிக்காமர் என்பவர் அவதரித்தார். இளமையிலிருந்து வளர்மதி புனைந்த அரனாரடியாரை மிக்க விருப்பத்துடன் பணிந்து போற்றுவார்.

திருப்பெருமங்கலக்குடியின் அருகில் உள்ள திருப்புன்கூர் என்னும் திருத்தலத்தில் சிவாலயத்திற்கு அளவில்லாத திருப்பணிகள் புரிந்து, "செம்பொன் என்பது சிவபெருமான் அம் பொன்னடியே" என்று தெளிந்து இடையறாது சிவபக்தி செய்துகொண்டிருந்தார்.

புதிய நாண்மதிச் சடைமுடி யார்திருப் புன்கூர்க்
கதிக மாயின திருப்பணி அநேகமுஞ் செய்து
நிதிய மாவன நீறுகந் தார்கழல் என்று
துதியி னாற்பர வித்தொழு தின்புறு கின்றார்.

திருவாரூரிலே நம்பியாரூரர், சிவபெருமானைப் பரவையார் பால் இரவிலே தூது அனுப்பிய செய்தியைக் கலிக்காம நாயனார் கேள்வியுற்றார். கேட்ட மாத்திரத்தில் உள்ளம் வெம்பினார்; வெகுண்டார்; வெருவினார்; "ஆ! ஆ!! இது என்ன புதுமை?" என்று அதிசயித்தார்.

தனிப்பெருந்தலைவராகிய நாயனை அடியான் ஒரு பெண் ணிடம் தூது அனுப்பிய செயல் நன்றாக இருக்கின்றது! இத்தகாத செயலைச் செய்தவனும் ஒரு தொண்டனாம். இது என்ன பாவம்! பொறுக்கவொண்ணாத இப்பெரும் பாதகத்தைக் கேட்டும் நான் மாளாமல் உயிரோடிருக்கின்றேனே?

நாயனை அடியான் ஏவுங் காரியம் நன்று சால
ஏயுமென் றிதனைச் செய்வான் தொண்டனாம் என்னே பாவம்
பேயனேன் பொறுக்க வொண்ணாப் பிழையினைச் செவியாற் கேட்ப
தாயின பின்னும் மாயா திருந்ததென் ஆவி என்பார்.

ஒருவன் காரிகை மீது வைத்த காதலால் ஏவ, அகிலாண்ட நாயகராகிய இறைவர் பணியாளனைப் போல் தூதராய் மறைகளுங் காணாத மலரடி நோவ வீதியில் நடந்து போவதும் வருவதுமாகி ஓர் இரவு முழுவதும் உழன்றாராம்; மூவருந் தேவருங் காணாத முழுமுதற் கடவுள் இதற்கு இசைந்தாராயினும், ஆரூரனாகிய அவன் அப்பரமபதியை ஏவலாமா? இப்பெரிய அடாத செயலைச் செய்து மனம் நடுங்காத அவனை நான் காணும் நாள் என்றோ? பெண் பொருட்டுப் பெருமானைத் தூது அனுப்பிய அவனை நான் கண்டால் யாது நிகழுமோ?'' என்று பலபல எண்ணிச் சீற்றம் மிகுந்து பகைகொண்டிருந்தார்.

முடிவிலாப் புகழையுடைய ஏயர்கோன் கலிக்காம நாயனார் இவ்வாறு எண்ணும் பேற்றினைப் பெற்ற சுந்தரமூர்த்தி நாயனார், கலிக்காமருடைய சினத்தைக் கேள்வியுற்றார். "ஒரு சிறந்த அடியார் என் மீது சினந்திருக்கலாகாதே. அவருடைய திருவுள்ளத்தில் உள்ள சினந் தணிந்து என்னை ஏற்றுக்கொள்ள வழி யாது? விழி மூன்றுடைய விமலரே வழி செய்யவேண்டும்'' என்று கருதினார்.

"மறைகள் புகழும் இறைவா! கலிக்காமருடைய பிணக்கைத் தேவரீர்தான் தீர்த்தருள வேண்டும். அடியேனுக்கு உம்மைத் தவிர வேறு போக்கிடம் ஏது? கருணையங்கடலே! அடியாருடைய திருவுள்ளத்தில் அடியேனைப் பற்றி மாறுபடக் கருதலாமோ? சமாதானஞ் செய்து அருள்வது உமது கடமையன்றோ?'' என்று, நாள்தோறும் இறைவரிடம் விண்ணப்பம் புரிந்து வந்தார்.

அரிபிரமராகிய இருவருங் காணா ஒருவர் இருவரையும் கூட்டுதற்குத் திருவுளங்கொண்டார். ஏயர்கோமானாருடைய திருமேனி வருந்துமாறு கொடிய சூலைநோயை அருளினார். குற்றமில்லாத பெருமையுடைய ஏயர்கோனிடம் எம்பிரான் ஏவிய சூலைவலி, அனலிடைப்பட்ட வேல் குடைவதுபோல் மேன்மேலும் வேதனை செய்தது. அதனைத் தாங்கமாட்டாது உடைந்து மண் மிசை வீழ்ந்து சிவபெருமானைச் சிந்தித்து வந்திப்பாராயினார்.

ஆலமுண்ட நீலகண்டர் கலிக்காமர் முன்தோன்றி, "அன்பனே! உன்னை வருத்துஞ் சூலை நோய் வன்தொண்டன் வந்து தீர்த்தா லன்றி நீங்காது'' என்று மொழிந்தருளினார்.

கலிக்காமனார், "எம்பெருமானே! என் தந்தை, தந்தைக்குத் தந்தை, அவருடைய தந்தை என்று வழிவழியாத் தேவரீருக்குத் தொண்டு புரிந்து வருகின்ற குடியில் வந்த அடியேனுக்கு வந்த சூலையை, நீர் அண்மையில் வலிந்து அடிமைகொண்ட ஒருவனோ வந்து தீர்ப்பான்?

எம்பிரான் எந்தை தந்தை தந்தைதங் கூட்ட மெல்லாம்
தம்பிரான் நீரே என்று வழிவழி சார்ந்து வாழும்
இம்பரின் மிக்க வாழ்க்கை என்னைநின் றீருஞ் சூலை
வம்பென ஆண்டு கொண்டான் ஒருவனோ தீர்ப்பான் வந்து.

பழைய அடியவனாகிய அடியேனுடைய இந் நோய் புதிய அடியவனாகிய அவன் வந்து தீர்க்கப்படுதலினும், தீராது நின்று என்னை வருத்துதலே நன்று; தேவரீர் செய்யும் பெருமையை அறிந்தவர் யார்? வன்தொண்டற்கேயாம் உறுதியே செய்வீர்" என்று உறுதியுடன் கூறினார். மணிகண்டர் மறைந்தருளினார்.

கண்ணுதற்கடவுள் வன்தொண்டரிடஞ் சென்று, "ஆரூரனே! நமது ஏவலாலே கலிக்காமனை வருத்துகின்ற சூலை நோயை நீ சென்று தீர்ப்பாயாக" என்று அருளிச் செய்தார். நம்பியாரூரர் "நன்று" என்று மகிழ்ந்து இறைவரை இறைஞ்சினார். அரனார் ஆணையைச் சிரமேல் தாங்கி ஆலாலசுந்தரர் கலிக்காமனாரிடம் போவதற்குப் புறப்பட்டார். சூலை நோய் தீர்க்கும் பொருட்டுத் தாம் வரும் செய்தியைக் கலிக்காமருக்கு அறிவிக்கும்படி ஒருவரை அனுப்பினார். இறைவருடைய அருளினால் ஏற்கனவே வந்த சூலையினாலும், இறைவர் கூறிய சொற்களினாலும் வருந்திய கலிக்காமர், வன்தொண்டருடைய வரவைக் கேட்டு மேலும் வருந்தினார். "தூதனாய் எம்பிரானை ஏவிய ஒருவன் வந்து என் என் சூலையைத் தீர்க்கும் புன்மை இங்கு எனக்கு எய்தினால் யான் செய்வது என்னாகும்? அதை நான் பொறுக்கமாட்டேன். இனி அவன் இங்கு வந்து எனது சூலையைத் தீர்ப்பதன் முன்னர் என்னைப்பற்றி நின்று வருத்தும் இச்சூலையை இவ்வயிற்றினோடும் கிழிப்பேன்" என்று, உடைவாளை எடுத்து, வயிற்றைக் கிழித்தார். சூலையும் உயிரும் ஒருங்கே தீர்ந்தன.

நினைப்பதற்கும் அரிய பெருமையுடைய கலிக்காம நாயனாருடைய தேவியார் ஒப்பற்ற கணவனாருடன் தொடர்ந்து சிவபதம் அடைய முயலும்போது, ஒருவர் வந்து, "அம்மா! நம்பி ஆரூரர் வருகின்றார்" என்று கூறினார். அழுகின்றவர்களை, "ஆன்றோர் ஒருவர் வருகின்றபோது அழுவது முறையன்று" என்று அழாதவாறு

தடுத்து, கணவனார் திருமேனியை ஒருபுறம் மறைத்து வைத்தார். அலங்கரித்து வரவேற்குமாறு பரிசனங்களைப் பணித்தார். வீடு முழுவதும் மாவிலைத் தோரணங்கட்டி, பூமாலைகள் தொங்க வைத்து, தீபம், தூபம், நிறைகுடம் முதலியன அமைத்தார். பரிசனங்கள் சென்று நம்பியாரூரரை எதிர்கொண்டார்கள். நம்பி யாரூரரைத் தொழுதார்கள். ஆரூரர் அவர்களுடன் நகைமுகங் காட்டி, விருப்பத்துடன் உட்புகுந்து ஆசனமீது அமர்ந்து முகமலர்ந்து இருந்தருளினார். அவருடைய திருவடிகளை விளக்கி அருச்சனை புரிந்தார்கள். "ஐயன்மீர்! கலிக்காமனார் எங்கே?? அவருடைய சூலையைத் தீர்த்து அவருடன் இருப்பதற்கு விரும்பி வந்திருக்கின்றேன்'' என்றார். அம்மையார் உத்தரவுப்படி பரிசனங்கள் சுந்தரரை நோக்கி,, "அண்ணலே! கலிக்காமனாருக்குத் தீங்கு ஒன்றும் இல்லை; உள்ளே பள்ளிகொண்டிருக்கின்றார்'' என்றார்கள். சுந்தரர் "அவருக்குத் தீங்கு இல்லை யென்றாலும், என் மனம் மருள்கின்றது அவரைக் காண வேண்டும்'' என்று அருளிச் செய்தார்.

சுந்தரருடைய சொற்களைக் கேட்ட அவர்கள் வேறு வழி யின்றிக் கலிக்காமனாரைக் காட்டினார்கள். உதிரஞ்சோரக் குடல் சோர்ந்து மாண்டு கிடந்ததைக் கண்டார். "ஆ! ஆ!! புகுந்தவாறு நன்று; இவருடன் அடியேனும் தொடர்ந்து போகும் பொருட்டு மாள்வேன்'' என்று கூறி, வருந்திய மனத்துடன், உடைவாளைப் பற்றினார். கண்ணுதற் பரமன் கருணையினால் கலிக்காமனார் உயிர்பெற்று எழுந்து, "கேளிரைக் காணப் பெற்றேன்'' என்று கூறி வாளைப் பற்றிக்கொண்டார். ஆரூரர் மண்மிசை வீழ்ந்து கலிக் காமனாரை வணங்கினார். கலிக்காமனாரும் சுந்தரர் அடி மலர்மிசை வீழ்ந்து வணங்கினார். அந்த அதிசயத்தைக் கண்ட அமரர்கள் மலர்மழை பொழிந்தார்கள். இருவரும் எழுந்து ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டார்கள். இடையறாத அன்புடன் நட்பு கொண்டு, திருப்புன்கூர் சென்று சிவலோகநாதர் சேவடிகளைப் போற்றினார்கள். ஆரூரர், "அந்தணாளன்'' என்று தொடங்குகின்ற திருப்பதிகத்தைப் பாடியருளினார். தம்பிரான் தோழர் சிலநாள் திருப்பெருமங்கலக்குடியில் தங்கியிருந்தார்.

பின்னர், அவர் திருவாரூருக்குப் புறப்பட்டார். கலிக் காமனாரும் அவருடன் சென்று திருவாரூரில் எழுந்தருளியுள்ள தேவாதி தேவனை வணங்கினார். சில பகல் கழிந்தபின் ஆரூரர் பால் விடைபெற்று திருப்பெருமங்கலக்குடி வந்து சேர்ந்தார். பற்பல தொண்டுகள் புரிந்து விடையவன் அடிமலர் சேர்ந்து இன்புற்றார்.

விளக்கம்

திருப்பெருமங்கலம்

இது புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீச்சுரன் கோயிலுக்கு அருகில் விளங்கும் திருப்புன்கூர் என்னும் திருத்தலத்திற்கு அண்மையில் திகழ்கின்றது. இதன் பேரினால் சிறந்த மங்கலத்திற்கு உறைவிடமாயது எனத் தோன்றுகின்றது.

திருப்புன்கூர் - புன்கு மரத்தின் கீழே சிவலோக நாதர் எழுந்தருளியிருக்கின்றார். அதனால், இப்பெயர் ஏற்பட்டது. இத் தலத்திலேதான் திருநாளைப் போவாருக்காக திருநந்திதேவர் விலகியது. வைத்தீச்சுரன் கோயிலுக்கு மேற்கே இரண்டுகல் தூரம்.

ஏயர்கோக்குடி

வேளாளமரபில் "ஏயர்கோக்குடி" என்பது ஒரு பிரிவு. இக்குடியினர்கள் சோழர்களிடம் சேனாதிபதியாகப் பரம்பரை பரம்பரையாக இருந்து வந்தார்கள். "ஏயர்கோன்" என்பது அரசன் சேனைத் தலைவனுக்குத் தரும் சிறந்த பட்டம்.

இன்ன வாழ்பதி யதனிடை ஏயர்கோக் குடிதான்
மன்னி நீடிய வளவர்சே னாபதிக் குடியாம்
தொன்மை மேவிய நிகழ்ச்சியால் நிறைவது தூய
பொன்னி நாட்டுவே ளாண்மையில் உயர்ந்தபொற் பினதால்.

அடியார் பக்தி

இறைவனுக்குச் செய்த வழிபாடு அடியார்க்கு எய்தாது; அடியார்க்குச் செய்த வழிபாடு இறைவனுக்கு எய்தும்.

படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே. *திருமந்திரம்*

தனஞ்சயன் கண்ணபிரானுக்குச் செய்த வழிபாட்டைச் சிவபெருமான் ஏற்றுக்கொண்டார். ஆகவே, அடியார் பக்தி மிக மிகச் சிறந்தது.

கலிக்காம நாயனார், அடியார் பக்தியிற் சிறந்தவர். அடியாரைப் பணிந்து அவர்கள் இட்ட ப்ணிகளைப் புரிந்து மகிழ்வார்.

"தங்கள் நாயகர் அடிபணி வாரடி சார்ந்து
பொங்கு காதலின் அவர்பணி போற்றுதல் புரிந்தார்"

திருப்புன்கூரிலே உள்ள சிவலோகநாதருடைய திருக் கோயிலுக்குப் பற்பல திருப்பணிகள் புரிந்தார்.

அன்பின் பெருக்கு

இறைவனுக்குச் சிறந்த திருக்கோயில் புதுக்குவதும் ஆடை ஆபரணங்களால் திருமேனியை அலங்கரிப்பதும், பால் பழம் நிவேதிப்பதும் எதன் பொருட்டு? ஆண்டவன் வேண்டுதல் வேண்டாமையிலான் அன்றோ! விருப்பு வெறுப்பும், பசி தாகமும் இல்லாத பரம்பொருளுக்கு இச்செயல்கள் செய்வது பொருந்துமோ? என்று ஐயுறுவார்களும் உளர்.

இறைவனுக்குச் செய்யும் பணிகள் அத்தனையும் அன்பிற்கு அறிகுறிகள் என உணர்க. அன்புடையாரைக் கண்டவுடன் அவர்கள் விரும்பவில்லை யானாலும் ஏதாவது தரவேண்டும் என்று நமக்குத் தோன்றுகின்றதன்றோ? நமது சிறு குழந்தைக்கு உயர்ந்த பட்டுச் சட்டை அணிகின்றோம். தங்க நகைகள் செய்து அலங்கரிக்கின்றோம். அவைகளை அக் குழவி விரும்புவதில்லை. என்றாலும், நாம் நமது அன்பை அந்த வகையில் வெளிப்படுத்து கின்றோம். அன்பு அதிகப்பட்டபோது நம்மால் அப்படிச் செய்யாமலிருக்க முடியவே முடியாது.

திருப்பணி

ஏயர்கோன் திருப்புன்கூரில் செய்த திருப்பணி இன்றும் நின்று காட்சி தருகின்றது. தனியுடைமை மறைந்துவிடும். பொதுவுடைமை நிலைத்து நிற்கும். அதற்காகவே பழங்காலத்துச் சேர சோழ பாண்டியர்கள் பல லட்சக்கணக்கான பொருள்கள் செலவழித்து ஆங்காங்குப் பெரிய பெரிய திருக்கோயில்களைப் புதுக்கினார்கள். இன்று அம் மன்னர்கள் இருந்த அரண்மனை கோட்டை, அவர்கள் அணிந்திருந்த அணிகலன்கள் முதலியவற்றுள் ஒன்றேனுமில்லை. ஆனால், அவர்கள் புதுக்கிய திருக்கோயில்கள் அழியாமல் நின்று காட்சியளிக்கின்றன.

கோச்செங்கட் சோழன் எழுபது கோயில்கள் சிவபெரு மானுக்கும், மூன்று கோயில்கள் திருமாலுக்கும் புதுக்கினான். அப் பார்த்திபன் புகழ் இன்றும் நின்று நிலவுகின்றது. ஆதலின், அறப்பணி அழியாதது. நிதியின் பயன் அறம் என்று தெளிந்த

கலிக்காமனார் அளவற்ற திருப்பணிகள் புரிந்தார். அது நமது உயிர்க்கு உறுதி பயப்பதாகும். இதனை அன்பர்கள் உற்று நோக்கி உய்வுபெறுக.

ஆரூரர் மீது சீற்றம்

சுந்தரர் சிவபெருமானைப் பரவையாரிடம் தூது அனுப்பினார். இதனைக் கேட்ட கலிக்காமர் மிகப்பெரிய சினங்கொண்டார். "அடியேன் ஆண்டவனைப் பெண்பாலிடம் ஒரு வேலைக் காரனைப்போல் தூது அனுப்பியது முறையா? இது தகுமா? இதுவும் ஒரு பண்பாடா? இப்படிச் செய்பவனும் ஓர் அடியவனா?" என்று எண்ணிக் கொதித்தார்.

சுந்தரர் இறைவனைத் தோழமை நெறியில் வழிபட்டார். சகீ மார்க்கம். அதனால், அவர் தம்பிரான் தோழர் எனப்பட்டார்; நாயன்மார்களுக்குள்ளே இவர் ஒருவர்தான் தோழராயினவர். இறைவர் தனது தோழர் பொருட்டுத் தூது போவது முறைமை தானே.

ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக் குடனாகி
மாழைஒண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே.

தோழமையால் இறைவன் எளிவந்து செய்த அருள் திறம் எனக் கலிக்காமர் உணர்ந்தாரில்லை. காரணம் இவருக்கு இறைவர் மாட்டுள்ள அளவற்ற அன்புதான். எல்லாம் வல்ல இறைவரை ஏவல் கொள்ளலாமோ? என்பது அவருடைய எண்ணம்.

இதனை யறிந்த சுந்தரர் வருந்தினார். அவருடைய திரு உள்ளத்தில் உள்ள ஊடலைத் தணிக்குமாறு பலமுறை பரமனிடம் முறையிட்டார். அடியவர்கள் மனதில் உள்ள பிணக்கை மாற்ற வேண்டும் என்று எண்ணியதனால் சுந்தரருடைய அடியார் பக்தி புலனாகின்றது.

அன்றியும், கலிக்காமர் மாண்டதை அறிந்தவுடன் வாளினால் தன்னை மாய்த்துக் கொள்ளத் துணிந்ததனாலும், அவர் பிழைத்து எழுந்தவுடன் முதலில் கலிக்காமர் திருவடியில் வீழ்ந்து வணங்கிய தனாலும் சுந்தரருடைய அடியார் பக்தி மேலும் வலியுறுகின்றது.

இரண்டு அடியார்கள் பிணக்குற்றபோது பிணக்கில்லாத பெருந்துறைப் பெருமான் பிணக்கைத் தீர்த்து அருளுவார்.

இறைவன் அடியார்கட்கு அருளும் அருட்டிறம் எத்தனையோ விதம்.

ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகில்அள வில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையும் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவைகேட்க தக்கார்.

- திருஞானசம்பந்தர்

திருநாவுக்கரசருக்குச் சூலைநோய் தந்தது போலவே கலிக்காமருக்கும் சூலைநோயைத் தந்தருளினார். சூலை நோய்க்குந் திருவருளுக்குந் தொடர்பு உளது போலும்.

கலிக்காமர் உறுதி

அன்பின் ஆற்றல்மிக்க கலிக்காமர் ஆரூரர் வரவைக் கேட்டவுடன் "வழி வழியடிமை பூண்ட எனது நோயை வலிய ஆட்கொள்ளப்பட்ட வன்தொண்டனோ தீர்ப்பது?" என்று உடை வாளினால் குடலைக் கிழித்து உயிர்துறந்தார். அத்துணை வீரமும், உறுதியும் அவருடைய அன்பில் மிளிர்கின்றன.

மனைவியார்

கணவனார் மாண்டதைக் கண்ட மாதரசியாகிய அவர் மனைவியார் தானும் உடன் இறக்க எண்ணினார். அத்தருணத்தில் சுந்தரரது வருகையைத் தெரிந்தவுடன், அடியாரை வரவேற்று உபசரிப்பது பெருங்கடமை என உணர்ந்து, கணவனார் திருமேனியை மறைத்து வைத்து, தனது பரிசனங்கள் மூலம் திருமாளிகையை அலங்கரித்து முறைப்படி சுந்தரரை வரவேற்று உபசரித்த அற்புதமான அன்பு கடலினும் பெரியது. அதை உன்னுங்கால் கருங்கல்லுங் கரைந்துருகும்.

மாண்ட மகனை மறைத்து வைத்து அடியாரை வரவேற்ற அப்பூதி நாயனார் அவர் மனைவியார் அன்பைக் காட்டிலும் இது பன்மடங்கு உயர்ந்த அன்பு. இத்தகைய அடியார் பக்தி நாட்டில் வளர வேண்டும்.

திருமூல நாயனார் புராணம்

"நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்"

பிறைமதி யணிந்த நிறைமதி நிமலனார் எழுந்தருளியுள்ள திருக்கைலாய மலையின் திருக்கோயிலுக்கு, முதற்பெரு நாயகரும், இந்திரன் மால் பிரமனாதி இமயவர்க்கு வழிவகை அருள்புரிபவரு மாகிய, திருநந்திதேவருடைய திருவருள் பெற்ற மாணாக்கர்களாகிய சிவயோகிகளுள் ஒருவர். சிவாகமங்களில் வல்லவராக விளங்கினார். அணிமா முதலிய எட்டுச் சித்திகளையும் அவர் பெற்றிருந்தார்.

அச்சிவயோகியார் பொதியமலையில் எழுந்தருளியுள்ள அகத்திய முனிவரைக் கண்டு அவருடன் சிலநாள் தங்கி அள வளாவி மகிழவேண்டும் என்று விரும்பினார். திருக்கைலாய மலையினின்றும் புறப்பட்டுத் தென்திசை நோக்கி வருவாராயினார்.

நிலைபெற்ற பெருமையுடைய திருக்கேதாரத்தில் எழுந்தருளி யுள்ள சிவனது பாதார விந்தங்களை வணங்கினார். நேபாளத்தில் உள்ள பசுபதி நாதரைப் பணிந்தார். துங்கநீர்க்கங்கையில் ஆடி, காசி விசுவநாதரைப் போற்றினார். திருப்பருப்பதம் எய்தி மல்லி கார்ச்சுனரை மனமகிழ்ந்து தொழுதார். திருக்காளத்தி, திருவாலங் காடு, திருக்காஞ்சிமாநகர், திருவதிகை, திருத்தில்லை முதலிய திருத்தலங்களை வணங்கிக் கொண்டு சிவசிந்தையுடன் செல் கின்றார். விடையின் மீது வரும் விமலருக்கு அஞ்சாது நஞ்சினைக் கொடுத்த கடலில் பூரணமாகக் கலக்கக் கூடாது என்று பலப்பல கிளைகளாகப் பிரிந்து பிரிந்து நிலத்தை வளமை புரியும் காவிரி நதியின் அருகில் வந்து அதில் அன்புடன் முழுகினார். காவிரிநதியின் கரையில் விளங்கும் திருவாவடுதுறையை அடைந்து, திருக்கோயிலை வலம்வந்து சிவமூர்த்தியை வந்தனை செய்தார். அதை விட்டுப் பிரிய மனமின்றி ஒருவாறு புறப்பட்டுச் செல்லும் போது காவிரியாற்றங் கரையிலுள்ள வனத்தில் பசுக் கூட்டங்கள் கண்ணீர் வடித்துக் கதறி வருந்துவதைக் கண்ணுற்றார். அதை அடுத்துள்ள சாத்தனூர் கிராமத்தில் பசு மேய்க்கும் யாதவ குலத்திலே தோன்றிய மூலன் என்பவன் அங்குப் பசு மேய்த்துக் கொண்டிருக்கும்போது வினைவசத்தால் மாண்டனன். அதனால் அவன் மேய்க்கும் பசுக்கள் அவன் மீதுள்ள அன்பு காரணமாக

அவனைச் சுற்றி மோந்தும் கதறியும் பதறியும் இங்குமங்குமாகத் திரிந்தும் வருந்தலாயின.

பசுக்களின் துன்பத்தைக் கண்ட சிவயோகியார் சிவபெருமான் திருவருளால், இப்பசுக்களின் துன்பத்தை நீக்க வேண்டும் என்று கருணையினால் எண்ணினார். "இவன் எழுந்தாலன்றி இப்பசுக் கூட்டத்தின் இடர் நீங்காது" என்றும் எண்ணினார். தமது உடலை வேறு ஒருபுறம் பாதுகாப்பாக வைத்துவிட்டு, தமது உயிரை மூலன் என்ற அந்த இடையன் உடம்பிலே புகுத்தினார். திருமூலராய் எழுந்தார். அதனைக் கண்ட பசுக்கள் அளவற்ற மகிழ்ச்சியுற்று நாத்தழும்பேற நக்கின; மோந்தன; கனைத்தன; வாலெடுத்துத் துள்ளிக் குதித்தன; பின்னர், பெரிதும் உவந்த உள்ளத்துடன் புல் மேய்ந்தன.

ஆவினங்களின் ஆனந்தத்தைக் கண்ட திருமூலர் அக மகிழ்ந்தார். பிறருடைய இன்பத்தைக் கண்டு, இன்புறுவது ஆன்றோர் மரபு. அப்பசுக்களின் பின் சென்றார். அவைகள் புல் மேய்ந்து, காவிரி நீரைக் குடித்துக் குளிர்ந்த நிழலில் இளைப்பாறின. மேற்கடலில் கதிரவன் மூழ்கினான். கன்றை நினைத்துப் பசுக்கள் மெல்ல நடந்து சாத்தனூரைச் சார்ந்தன. திருமூலர் அவைகளுக்குப் பின் சென்று பசுக்கள் தத்தம் வீடுகளுக்குச் செல்ல வீதியில் நின்றார்

காலங் கடந்துங் கணவர் வராமையால் அஞ்சி, மூலனுடைய மனைவி கணவனை நாடி வந்தவள் வீதியில் நிற்குந் திருமூலரைக் கண்டாள். அவருடைய நிலையை நோக்கி, "ஏதோ இவருக்கு ஈனம் வந்தது" என்று கூறித் தீண்டச் சென்றாள். அவர் விலகி நின்றார். குழந்தைகளும் வேறு சுற்றமும் இல்லாத அப் பெண்மணி, அஞ்சியும் மயங்கியும், "பிராணபதீ! இது என்ன விளையாட்டு? ஏன் இப்படி ஒருமாதிரியாக இருக்கின்றீர்?" என்றாள்.

திருமூலர், "அம்மா! நான் உன் கணவனல்லன்; எனக்கும் உனக்கும் தொடர்பு இல்லை. சென்று சிவனை நினைந்து உய்வுபெறுவாய்" என்று கூறிவிட்டு ஒரு பொது மடம் புகுந்தார். அன்றிரவு முழுவதும் அவள் தூங்காது துன்பக் கடலில் மூழ்கி நின்றாள்.

மறுநாள் இச்செய்தியை அவ்வூரிலுள்ள ஆன்றோர்களிடம் கூறினாள். அப்பெரியோர்கள் திருமூலரைக் கூர்ந்து நோக்கினார்கள். "அம்மா! இவருக்குப் பித்துமன்று, பிறிதொரு தன்மையு மில்லை. சித்தத்தைச் சிவன்பால் வைத்துச் சிவயோக நிலையில் இவர்

நிற்கின்றார். இவர் தன்மையை நம்மால் அளவிட முடியாது. பற்றற்ற பரமஞானியாகி முற்றுமுணர்ந்த முழு முனிவர் இவர். இவரை நீ இனி அடைய முடியாது என்று கூறி அவளைத் தேற்றி அழைத்துக் கொண்டு போனார்கள்.

திருமூலர் பசுக்கள் வந்த வழியே சென்று தாம் முன் வைத்த இடத்தில் தமது உடம்பைக் காணாராயினார். மெய்ஞ்ஞான நாட்டமுடைய அப்பெருந்தகையார், உடல் காணாமைக்குரிய காரணத்தை ஆராய்ந்தார். சடைமுடிப் பரமர் தாம் உரைத்த ஆகமங்களின் பொருளைத் தமிழினால் விளக்கும் பொருட்டு இவ்வாறு செய்தருளினார் என்று தெளிந்தார். சிவபெருமானுடைய திருவருளைச் சிந்தித்து, திருவாவடு துறையை அடைந்தார். கண்ணுதற் கடவுளை மண்ணுற வீழ்ந்து வணங்கி, அக்கோயிலின் மேற்புறத்தில் உள்ள அரசமரத்தின் நிழலில் அமர்ந்தார். சிவயோகத்தில் நிலைத்து நின்று இதய கமலத்தில் விளங்கும் இறையுடன் ஒன்றி உணர்வு மயமாய் இருந்தார்.

ஊன்உடம்பில் பிறவியாகிய நஞ்சு அஞ்சியகல உலகத்தோர் உய்யும்பொருட்டு, ஞானம், யோகம், கிரியை, சரியை என்ற நான்கு பாதங்களையும் வகுத்தும் தொகுத்தும் திருமந்திர மாலை என்று ஆண்டுக்கு ஒரு பாடலாக, மூவாயிரம் மந்திரங்கள் பாடி அருளினார். மூவாயிரம் ஆண்டுகள் இப்பூதலத்தில் இனிது இருந்து, பின்னர், கயிலைமலை சார்ந்து இறைவரைப் பிரியாத பெருவாழ்வு பெற்றார்.

முன்னியஅப் பொருள்மாலை தமிழ்மூவா யிரஞ்சாத்தி
மன்னியமூ வாயிரத்தாண் டிப்புவிமேல் மகிழ்ந்திருந்து
சென்னிமதி யணிந்தார்தந் திருவருளால் திருக்கயிலை
தன்னிலணைந் தொருகாலும் பிரியாமைத் தாளடைந்தார்.

விளக்கம்

திருமூலர்

திருக்கயிலாய மலையில் இருந்த சிவயோகிகள், சாத்தனூர் மூலன் என்ற இடையனுடைய உடம்பில் நுழைந்த காரணத்தினால் திருமூலர் என்ற பேர் பூண்டார்.

இவர் திருவாவடுதுறையிலே அரசமரத்தின்கீழ் பல்லாயிரம் ஆண்டுகள் சிவயோகத்து அமர்ந்திருந்து, ஆண்டுக்கு ஒரு மந்திரமாக மூவாயிரம் மந்திரங்கள் கூறியருளினார். நெடுங்காலம்

இருக்கும் சித்திபெற்றார் என்பதை அவர் திருவாக்கினாலேயே அறிக.

ஈராறு கால்கொண்டு எழுந்த புரவியைப்
பேராமற் கட்டிப் பெரிதுணர வல்லிரேல்
நீரா யிரமும் நிலமா யிரத்தாண்டும்
பேராது காயம் பிரானந்தி யாணையே.

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட உள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனை
சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவ நாமங்கள் ஓதியே.

இவரை இறைவன் தமிழுலகுக்குப் பயன்படுமாறு ஆகமங்களின் உட்கருத்தைத் தமிழினால் ஓதும்படி, பழைய உடம்பை மறைத்து, திருவாவடுதுறையில் இருக்குமாறு செய்தருளினார். அன்றியும் "நாதர்" என்ற பட்டத்தையும் அரனார் அருளினார்.

நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினோம்
நந்தி அருளாவ தென்செயும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நானிருந் தேனே.

இவருடன் நந்தியிடம் அருள்பெற்றவர் எண்மர்கள். சனகர், சனந்தனர், சனற்குமாரர், சனாதனர், சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்ரபாதர்.

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோடு எண்மரும் ஆமே.

இவருடைய சீடர்கள் எழுவர். மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், கந்துரு, மலையன் என அறிக. இவர்கள் தமிழ்நாட்டில் ஏழு மடங்களை நிறுவிப் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மைகளை விளக்கி உதவினார்கள்.

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலயனொடு
இந்த எழுவரும் என்வழி யாமே.

தமிழை ஓதித் தமிழால் இறைவனை ஓதுவதற்கே இவர் வந்தவர் என அறிக.

"என்னை நன்றாக இறைவன்ப டைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே"

திருமூலநாயனார் சைவசமயத்திற்கே ஒரு கருவூலமானவர். இவருடைய பெருமை அளவிடற்கரியது; காலத்தினாலும் முந்தியவர். சீலத்தினாலும் உயர்ந்தவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருத்தொண்டத் தொகையுள், இவரைக் குறிப்பிடும்போது.

"நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்" என்று மிகவும் சிறப்பாகப் பாடுவாரானால் இவருடைய யோகவன்மையும் தன்மையும் சொல்லுந் தரத்தவோ?

சிவயோகத்தில் மிக வல்லவர் திருநந்திதேவர். அப் பெருமானுடைய திருவருள் பெற்றவர் திருமூலநாதர். இவர் தான் பெற்ற இன்பத்தை உலகமெல்லாம் பெறவேண்டும் என்ற பரம கருணையினால், இம் மூவாயிரந் தமிழ்மறையை ஓதியருளினார்.

நந்தி யருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி யருளாலே சதாசிவ னாயினேன்
நந்தி யருளாலே ஞானத்துள் நண்ணினேன்
நந்தி யருளாலே நானிருந் தேனே.

" நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்"

இவர் மூவாயிரம் ஆண்டு சிவயோகத்திருந்த செய்தியைத் தெய்வச் சேக்கிழார் பெருமானே கூறுமாறு காண்க.

"முன்னியஅப் பொருள்மாலைத் தமிழ்மூவா யிரஞ்சாத்தி
மன்னியமூ வாயிரத்தாண் டிப்புவியின் மகிழ்ந்திருந்து"

திருமந்திரம்

இது மூவாயிரம் பாடல் கொண்டது. நவ ஆகமங்களின் சாரம். ஒன்பது தந்திரங்களாக அமைந்துளது. பன்னிரு திருமுறையில் பத்தாம் திருமுறையாக விளங்குவது. சைவ சித்தாந்த சாத்திரங்கள் அனைத்திற்கும் முற்பட்டது.

மந் - நினைப்பவரை, த்ர - காப்பது.

நினைப்பவரை எடுத்துக் காப்பது எதுவோ அது மந்த்ரம் எனப்படும். திரு - தெய்வீகம். இது தெய்வீக ஆற்றலுடன் விளங்கி நினைப்பவரை பவக்குழியிலிருந்து எடுத்துச் சிவகதி சேர்த்துக் காக்குந் தகுதியுடையதனால் 'திருமந்திரம்' எனப்பட்டது.

இவர் நந்திபால் பெற்று உணர்ந்த நவ ஆகமங்களாவன.

பெற்றநல் லாகமம் காரணங் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமளம் ஆகுங்கா லோத்திரம்
துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே.

சிவயோக நுணுக்கங்களை விளக்கமாகக் கூறுவது திருமந்திரம். இதற்கு நிகரான நூல்களே இல்லையென்பது உறுதி.

இதில் வரும் மிக நுட்பமான பகுதிகளை நல்லாசிரியன்பால் அடுத்து அமைதியுடன் கேட்டு உணர்தல் வேண்டும்.

வாசி - பிராணவாயு. இதில் "வா" என்பது நெடில்; 'சி' என்பது குறில்.

வாசி பன்னிரண்டங்குலம் வெளியே செல்லுகின்றது.

எட்டங்குலம் உள்ளே மீள்கின்றது. எனவே, விரயம் பன்னிரண்டு அங்குலம்; ஆதாயம் எட்டு அங்குலம்; நான்கு அங்குலம் அவமே கழிகின்றது. ஒவ்வொரு சுவாசத்திலும் நான்கு அங்குலம் போய்விடுகின்றது. அதை அவ்வாறு கழியவிடாமல் காப்பவரே சிவயோகிகள்.

கூட மெடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண் டங்குலம்
நீடுவர் எண்விரல் கண்டிப்பர் நால்விரல்
கூடிக் கொளிற்கோல அஞ்செழுத் தாமே.

வெளியே வருவது வாசி; வாசி பன்னிரண்டு அங்குலம் வருமாயின்; வா - எட்டங்குலம், சி - நான்கு அங்குலம்.

வாசி பன்னிரண்டு அங்குலம் வெளியே போய் எட்டு அங்குலம் திரும்புமாயின் 'வா' மாத்திரமே திரும்புகின்றது. "சி" பிரிந்து விடுகின்றது. "வாசி" என்பது திரும்பும்போது "சிவா" என்று பன்னிரு அங்குலமாகத் திரும்ப வேண்டும். அவ்வாறு "சிவா" என்று வாசியைத் திருப்பியவர்கள் உயிரைக் காக்க வல்லோராவார்கள்.

"விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
கட்டவல் லார்உயிர் காக்கவல் லாரே"

என்ற திருமந்திரத்தினால் இதனை அறிக.

இவ்வாறு "சிவ" என்று பன்னிரண்டு அங்குலத்தையும் உள்ளே செலுத்தும் யோகிகளே சிவ சிவ என்று உண்மையாக உச்சரித்தவர் களாகின்றார்கள்.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

என்ற திருமந்திரத்தாலும் அறிக.

சிவபெருமானிடம் திருமூலர் சிவயோக சித்தியைப் பெற்று அதனை உலகினர் ஏனோரும் உணர்ந்து உய்யும் பொருட்டு இத்தமிழ் மறையைப் பாடியருளினார்.

சிவயோக மாவது சித்தசித் தென்று
தவயோகத் துட்புக்குத் தன்னொளி யாயது
அவயோகஞ் சாராத வன்பதி போக
நவயோக நந்தி நமக்களித் தானே.

இனி, காலத்தால் முற்பட்டது திருமந்திரம். ஆதலின், இதில் வரும் சித்தாந்தக் கருத்துக்களும், சொற்றொடர்களும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களிலும் ஆங்காங்கு வருவதைக் கண்டு மகிழ்க. அத்தனையுங் காட்டுவாமெனில் விரியும். இப்புனிதமான திரு மந்திரத்தைக் காலையில் எழுந்து கருத்தறிந்து ஓதுவோர் பாசம் நீங்கப் பதியைச் சாருவர் எனத் தெளிக.

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞால மறியவே நந்தி யருளது
காலை யெழுந்து கருத்தறிந் தோதிடில்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே.

தண்டியடிகள் நாயனார் புராணம்

"நாட்டமிகு தண்டிக்கும் (மூர்க்கர்க்கும்) அடியேன்"

சோழவள நாட்டிலே தலைசிறந்த நகரம் திருவாரூர். திருமகள் பூசித்து பேறு பெற்ற அருமையுடையது அத்தலம். புனித மிகுந்த திருவாரூரில் முன்செய்த தவத்தினால் தண்டியடிகள் நாயனார் அவதரித்தார். அம்பலவாணர் அடிமலரை அகத்திலே நோக்கி, புறநோக்கு துறந்தார்போல், பிறவியிலேயே கண்ணின்றிப் பிறந்தார். புறக்கண் துறந்தும், அகக் கண்ணால் அரனாரைத் தரிசித்துத் துதிப்பார். திருவாரூரில் எழுந்தருளியுள்ள புற்றிடங்கொண்ட புண்ணியனாரைப் போற்றி செய்து, தேவாசிரியன் மண்டபத்தில் வணங்கி, கோயிலை வலம்வந்து, ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டு சிறந்த திருத்தொண்டுகள் புரிந்து வருவார்.

திருக்கோயிலுக்கு மேல்புறத்தில் உள்ள திருக்குளத்தின் பக்க மெங்கும் சமணர்களுடைய பாழிகளாகி, குளம் பழுதுபட்டது. அதனை அறிந்த தண்டியடிகள் அத்திருக்குளத்தைப் பெருக அகழ்ந்து தொண்டு செய்யவேண்டும் என்று கருதினார். குளத்தின் நடுவில் ஒரு தறியும், குளக்கரையின் மேட்டில் ஒரு தறியும் நட்டு, இரு தறிகளிலும் கயிறு கட்டினார். அக்கயிற்றைத் தடவிய வண்ணமாக, குளத்தில் இறங்கி மண்ணை ஒரு கூடையில் எடுத்து கரைமேட்டில் கொட்டுவார். அப்படி அப்பணி செய்யும்போது, இடையறாது பஞ்சாக்கரத்தை ஓதியவண்ணமாக இருப்பார்.

இவ்வாறு, இவர் புரியுந் திருத்தொண்டைக் கண்டு சமணர்கள் மனம் பொறாதவர்களாகி வெதும்பினார்கள். பொறாமையுற்ற சமணர்கள் தண்டியடிகள்பால் வந்து, "ஐயா! மண்ணைக் கல்லி னால் உயிர்கள் மாளும்; ஆதலினால், இந்த வேலையைச் செய் யாதீர்" என்று கூறித் தடுத்தார்கள். தண்டியடிகள் கூறுவார்: "திருவிலிகளே! திருநீற்றையே சாந்தமாக எண்ணிப் பூசும் சிவ பிரானுக்குரிய திருப்பணி இது. இதன் பெருமையை நீங்கள் அறிவீரோ?" என்றார்.

சமணர்கள் :- நாங்கள் கூறிய அறநெறியை நீ கேட்கின்றா யில்லை; உனக்குக் கண்தானில்லையே; காதும் இழந்தனையோ?

தண்டியடிகள் :- நான் சிவபெருமானுடைய திருவடிகளே யன்றி வேறு ஒன்றையுங் காணேன். மந்தமதியும் காணாக் கண்களும் கேளாச் செவியும் உங்களுக்கே உள்ளன. சிவபுண்ணியத்தின் திறனை நீங்கள் அறிகிலீர். சிவபெருமானுடைய திருவருளினால் உலகமெல்லாம் அறியும்படி என் கண் காணவும், உங்கள் கண்கள் குருடாகவும் பெற்றால் நீங்கள் யாது செய்வீர்கள்?

சமணர்கள் :- "நீ உன் கடவுளுடைய கருணையினால் கண் பெற்றாயாகில் நாங்கள் இந்த ஊரில் இருக்க மாட்டோம்" என்று கூறி, தண்டியடிகள் நாயனார் கரத்திலுள்ள மண்வெட்டியையும், கூடையையும் பறித்து, குழித்தறிகளையும் பிடுங்கி எறிந்தார்கள்.

தண்டியடிகள் நாயனார் மனம் நொந்து பூங்கோயிலின் திருமுன் நின்று, "எம்பெருமானே! தேவரீரை நிந்தனை புரியும் சமணர்கள், திருக்குளங்கல்லும் சிவபுண்ணியத்தையும், அதனைப் புரியும் அடியேனையும் அவமானஞ் செய்தமையால், அடியேன் மனம் வருந்தினேன். எல்லாம் வல்ல தேவரீர் இந்த இடரை நீக்கி அருள்புரிதல் வேண்டும்'' என்று துதித்து, வணங்கி தமது திருமடத்திற் சென்று கண்கலுழ்ந்து கொண்டிருந்தார்.

அன்றிரவு அவர் உறங்கும்போது கண்ணுதற் கடவுள் கனவில் தோன்றி,

> நெஞ்சின் மருவுங் கவலையினை யொழிநீ நின்கண் விழித்தந்த
> வஞ்ச அமணர் தங்கண்கள் மறையு மாறு காண்கின்றாய்
> அஞ்ச வேண்டா என்றருளி யவர்பால் நீங்கி அவ்விரவே
> துஞ்சும் இருளில் அரசன்பால் தோன்றிக் கனவில் அருள்புரிவார்.

"அன்பனே! நீ உன் மனத்தில் உள்ள கவலையை விடுக. நாளைக்கு உன் கண்கள் ஒளி பெறும். சமணர்கள் கண்களை இழப்பார்கள். அஞ்சாதே" என்று அருளிச்செய்து, சோழ மன்னன் கனவிலுந் தோன்றி, "மன்னனே! தண்டி என்னும் நமது அன்பன் நமக்குக் குளங் கல்ல, சமணர்கள் பொறாது அப்பணிக்கு இடர் செய்தார்கள். நீ அவனிடத்திலே சென்று அவன் கருத்தை முடிப்பாய்" என்று பணித்து மறைந்தருளினார்.

சோழ மன்னன் கண் விழித்து எழுந்தான். புளகாங்கிதமுற்றான். கண்ணீர் பெருகியது. உள்ளம் உருகியது. சிவபெருமானது திரு வருளை நினைந்து தொழுதான். பொழுது புலர்ந்தவுடன் தண்டி யடிகளிடம் வந்து அவரைப் பணிந்து, தான் கண்ட கனவு நிலையைக் கூறினான்.

தவநெறி நின்ற தண்டியடிகள் கூறுவார், "வேந்தே! சிவபெரு மானுடைய திருக்குளத்தில் உள்ள மண்ணை அகழ்ந்து அடியேன் திருத்தொண்டு புரிந்து கொண்டிருந்தேன். அமணர்கள் அங்கணைந்து, இது அறமன்று என்று கூறி, என் கையிலிருந்த மண் வெட்டியையும், கூடையையும் பிடுங்கிக் கொண்டு, குழித் தறிகளையும், நான் தடவிச் செல்லும்பொருட்டு அமைந்த கயிற்றை யும் பறித்து எறிந்து, "உனக்குக் கண்தான் இல்லையே; காதும் இல்லையோ" என்று நிந்தித்தார்கள். நான் அவர்களை நோக்கி, "எம்பிரான் திருவருளால் நான் கண் பெற்றால் நீங்கள் என் செய்வீர்" என்று கேட்டேன். "அப்படி நிகழுமாயின் நாங்கள் இந்த ஊரில் இருக்கமாட்டோம்" என்று கூறினார்கள். இது நிகழ்ந்தது. இனி நீர் இந்த வழக்கை நியாயப்படி முடிப்பீர்" என்றார்.

அரசன் அமணர்களை அழைத்துக் கேட்டான். அதற்கு அவர்கள் இசைந்தார்கள். தண்டியடிகள் முன்னே போகவும் அரசன் அவருக்குப் பின்னே சென்று குளக்கரையை அடைந்தார் கள். சமணர்கள் குழுமி நின்றார்கள். மன்னவன் தண்டியாரை நோக்கி, "நீர் கண் பெறுமாறு காட்டும்" என்றான்.

தண்டியடிகள், "சிவபெருமானே பரம்பொருள்; அவருடைய அடிமையாக யான் இருப்பது உண்மையாயின் உலகவர் முன்னே என் கண்கள் விளங்குக; அமணர்களின் கண்கள் ஒளி விலகுக" என்று கூறி, ஐந்தெழுத்தை ஓதி, திருக்குளத்தில் மூழ்கினார்.

> ஏய்ந்த அடிமை சிவனுக்கியான் என்னில் இன்றென் கண்பெற்று
> வேந்த னெதிரே திருவாரூர் விரவுஞ் சமணர் கண்ணிழப்பார்
> ஆய்ந்த பொருளுஞ் சிவபதமே ஆவ தென்றே அஞ்செழுத்தை
> வாய்ந்த தொண்டர் எடுத்தோதி மணிநீர் வாவி மூழ்கினார்.

சிவபெருமானைத் தொழுது குளத்திலிருந்து அவர் கண்பெற்று எழுந்தார். புங்கவர் பூமழை பொழிந்தனர். பழுது செய்த சமணர்கள் கண்களை இழந்து கலங்கினார்கள். மன்னன் அவர்களை நோக்கி, "நீங்கள் முன் ஒப்பியவாறு திருவாரூரை விடுத்து நீங்குமின்" என்று கட்டளையிட்டான்.

கண்கள் இழந்த சமணர்கள் குழியில் விழுவார்கள்; நிலை தடுமாறினார்கள்; 'கோலும் இல்லையே' என்பார்கள்; வழி யிது என்று புதரில் விழுவார்கள். மாண்டோம் என்பார்கள்; அழியும் பொருளை வழிபட்டு அழிந்தோம் என்பார்கள். பார்த்திபனுக்கு இது பழி யாகாது என்பார்கள். உடுத்தியிருந்த பாய்களை இழந்

தார்கள். கையில் வைத்திருந்த பீலிகளைக் காணாது திகைத்தார்கள். கை கால்கள் முறியக் கல் மீது இடறி விழுவார்கள்; எதிரெதிரே தமக்குத் தாமே முட்டிக் கொள்வார்கள்; மயங்கித் தியங்கி மதிகெட்டு மருண்டார்கள். இவ்வாறு, அவர்கள் தடுமாறி நகரை விட்டு நீங்கினார்கள். மன்னன் சமணப் பாழிகளையும், பள்ளி களையும் இடித்து, திருக்குளத்தின் கரைகளைப் புதுப்பித்தான். தண்டியடிகள் தாள் மலர்மீது பணிந்தான். மன்னன் விடைபெற்று நீங்கியபின் நாயனார் சிவபெருமான் திருவருளையே சிந்தித்து, ஐந்தெழுத்தை இடையறாது நினைந்து, திருப்பணியின் குறையை நிறைவு செய்து, சிவசிந்தையுடன் இருந்து முடிவில் முக்கட் பெருமான் அடிமலர் சேர்ந்தார்.

விளக்கம்

திருவாரூர் :

அரு ஊர் ஆரூர் என ஆயிற்று. பெரு ஊர் பேரூர் என வந்ததையுங் காண்க. திருவாரூர் சிவலோகமெனத் திகழ்வது.

"தேவ ரொதுங்கத் திருத்தொண்டர் மிடையுஞ் செல்வத் திருவாரூர்"

என்று சேக்கிழாரடிகள் இத்திருநகரைச் சிறப்பித்துப் பாடி யிருப்பதனால் இதன் பெருமை புலனாகின்றது. பெரியபுராணத் திற்கு மூலமாகிய திருத்தொண்டத் தொகை தோன்றியது திருவாரூரிலே யாகும். திருமால் பூசித்த செல்வத் தியாகர் எழுந்தருளி யிருக்கின்ற மிகப் புனிதமான புண்ணியத் திருத்தலம்.

நிலமகளின் நெற்றிக்குத் திலகம்போல் விளங்குவது திருவாரூர். திருமகளுக்குச் செந்தாமரைபோல்வது அத் திருநகர். அளவற்ற சிறப்புக்களை யுடையது.

நிலம கட்கழ கார்திரு நீணுதல்
திலக மொப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் டாமரை போல்மலர்ந்
தலகில் சீர்த்திரு வாரூர் விளங்குமால்.

திருவாரூர் வீதிகளில் செந்தமிழ்த் திருமறைகளாகிய திருப்பதி கங்களைத் தெள்ளிய தேனமுதென கிளிகள் பாடுகின்றன; பூவைப் பறவைகள் கேட்டு மகிழ்கின்றன என்றால், ஆறறிவு படைத்த மனிதர்கள் எப்படித் தமிழில் ஈடுபடுகின்றார்கள் என்று கூறவும் வேண்டுமோ?

உள்ள மாருரு காதவ ரூர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாந்
தெள்ளு மோசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்.

தண்டியடிகள் :-

இவர் பிறவியிலேயே கண் இழந்தவர். இப்பெரியவரைத் தெரிவிக்க வந்த நம்பியாரூரர், நமது கருத்தில் கண்ணில்லாதவர் என்ற அலட்சியம் சிறிதும் வரக்கூடாது என்று கருதி "நாட்டமிகு தண்டி" என்று மிகவும் அழகாகக் குறிப்பிடுகின்றார்.

முகக் கண்ணால் மட்டும் பயனில்லை. அகக் கண் பெறுவதே சாலவும் சிறப்புடையதாம். அகக் கண் பெற்றாரே சில அற்புதக் காட்சிகளைக் காண்கின்றார்கள்.

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே யானந்தம்.

என்று அழகாகத் திருமூலர் உபதேசிக்கின்றார்.

மண் பெற்றும் பயனில்லை; விண் பெற்றும் பயனில்லை. அந்த உள்ளக் கண் பெற்றாரே எல்லாம் பெற்றார்களாவார்கள்.

"யுகஇறு திகளிலு மிறுதியி லொருபொருள்
உள்ளக்க ணோக்கு மறிவூறி"

என்று அருணையடிகள் அகக் கண்ணின் சிறப்பை எடுத்துக் கூறுகின்றார்.

அந்த அகக்கண் பெற்றவர் தண்டியடிகள் நாயனார். இவர் சிவபெருமானுடைய திருத்தொண்டில் சிறந்த உறுதியும் ஊக்கமுங் கொண்டவர். புகழையோ புண்ணியத்தையோ கருதாது கடமை யுணர்ச்சியுடன் புரிந்தார். ஒழியாது வேத இருதயமாகிய ஐந் தெழுத்தை ஓதும் நியதியை மேற்கொண்டிருந்தார். அந்த ஐந் தெழுத்தை ஓதுவார் எல்லா நலங்களையும் ஒருங்கே பெறுவார்கள், நிக்கிரக அநுக்கிரக ஆற்றல் பெறுவார்கள். அதனால், கண்களைத் தாம் பெறவும், சிவநிந்தை புரிந்தார்களின் கண்களை விலக்கவும் ஆற்றல் பெற்றிருந்தார்.

அடுக்கற்கீழ்க் கிடக்கினும் அருளினா முற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. - அப்பர்

"தெம்மைபுரி
நாவா லின்ப முறுங்காதல் நமச்சி வாய நற்பதமே
ஓவா அன்பி லெடுத்தோதி ஒருநாள் போல வருநாளில்"

என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுவதனால் இவர் ஐந்தெழுத்து ஓதுந் திறனை நாம் அறிகின்றோம்.

திருக்குளமெடுத்தல்

உயிர்களுக்கு இன்றியமையாதது தண்ணீர். "நீரின்றி அமையா துலகம்" என்பார் திருவள்ளுவர். ஆடுமாடுகள் முதலிய விலங்குகள் நீர் பருகவும், பறவைகள் நீர் பருகி மகிழவும், மனிதர்கள் நீராடி சிவ வழிபாடு செய்யவும், இன்னும் பல நற்கருமங்கள் புரியவும் துணையாக இருப்பது திருக்குளம். அதுவும் சிவசம்பந்தமுடைய தாயின் அளவிடற்கரிய பெருமையுடையது. இத்தகைய திருக் குளத்தைத் தண்டியடிகள் திருத்தி யமைத்துச் சிவபதம் அடைந்தார்.

திருப்பணிக்கு இடர்புரிவது பெரும்பாவம்

திருப்பணிகட்கு இடர்புரிவோர்கள் அன்றும் இருந்தார்கள், இன்றும் இருக்கின்றார்கள், என்றும் இருப்பார்கள் போலும். பெரும் பாதகச் செயல் சிவபுண்ணியத்தைத் தடுத்தல். சிவ புண்ணியத்தைத் தடுத்துச் சிவஞானிகள் உள்ளம் வருந்த இடர்புரிவோர் அப்பிறவி யிலேயே அவ்வினையைத் துய்ப்பர்கள். அவ்வினை அத்துணை விரைவில் பக்குவப்பட்டு வருகின்றது.

ஆதலின், சிவனருள் பெற்ற சிவஞானிகளிடம் அபராதம் இழைத்தல் கூடாது. சிவனுக்குச் செய்த தீவினை மறுபிறப்பில்தான் எய்தும். சிவஞானிகட்குச் செய்வது அப்பிறவியிலேயே எய்தும். சிவனையும் எதிர்த்து உய்யலாம். சிவஞானிகளை எதிர்த்தால் உய்ய லாகாது. கதிரவன் முன்னே மணிக்கணக்காக நிற்கலாம். கதிரவன் அருள்பெற்ற நொய் மணலில் கணமும் நிற்க முடியாது.

ஆதலினால், சிவஞானி புரிந்த திருப்பணிக்கு இடர்புரிந்த சமணர்கள் கண்ணிழந்து, இருப்பிழந்து இடர்ப்பட்டு நீங்கினார்கள்.

திருப்பணிகள் புரிந்தும், புரிவார்க்கு உதவி புரிந்தும், சிவபெரு மானுடைய திருவருளையும் சிவஞானிகளுடைய கருணையையும் உலகம் பெற்று உய்வதாக.

மூர்க்க நாயனார் புராணம்

"நாட்டமிகு (தண்டிக்கும்) மூர்க்கற்கும் அடியேன்"

சான்றோர் பலர் வாழ்கின்ற நாடு தொண்டைவள நாடு. எந் நாட்டினுக்கும் சிறந்த நன்னாடு அது. அத்திரு நாட்டில் பால்நதிக்கு வடபால் அன்னங்கள் வாழும் குளங்கள் சூழ வளமிக்க ஊர் திருவேற்காடு. அத்தலத்தில் அரங்கில் மகளிர் ஆடல் புரிய மாளிகை மீது வெண்கொடிகள் ஆட நல்விழாக்கள் நிகழும்.

அத்திருப்பதியில் வாய்மை குன்றாத தூய்மையுடைய வேளாண் மரபில் தலைமை பெற்றவர் ஒரு பெரியார். அவர் அறிவு தோன்றிய நாள்தொட்டுச் சிவபெருமானுடைய திருநீற்றினையே மெய்ப் பொருளாகக் கருதியவர். உம்பர்க்காக ஆலமே அமுதாகக் கொண்டு உண்ட நம்பரடியார்கள் உண்ண இனிய உணவுகளைக் கொடுத்து உண்ணும் நியதியை வழுவாது மேற்கொண்டவர். தூய அன்னம், நெய், இனிய கறிகள், பால், தேன் முதலியவைகளை அமைத்து, சிவனடியார்களை வணங்கி இன்னுரை கூறி, முகமும் அகமும் மலர்ந்து, அன்புடன் உண்வு செய்விப்பார். அடியார்கள் அமுது செய்தபின் அவர்கள் வேண்டிய பொருள்களை வழங்கி நாடோறும் பணி செய்து மகிழ்வார்.

இவ்வாறு, அளவற்ற அன்புடன் இவர் திருத்தொண்டு புரிந்து வரும்போது, அடியார்கள் எண்ணிலாதவர்கள் எய்தினார்கள். வருகின்றவர்கள் அனைவர்கட்கும் சலிப்பின்றி அன்னம் முதலிய வழங்கி திரு ஐந்தெழுத்தை உன்னி உவகை கொண்டார்.

நாயனாருடைய பொருள்கள் யாவும் செலவழிந்தன. வீடு, நிலம், மாடு, கன்று முதலிய அனைத்தும் விற்று முன்னையினும் தளராத அன்புடன் அன்னதானம் புரிந்தார். மேற்கொண்டு அன்னம் வழங்கப் பற்றுக்கோடு ஒன்றும் இன்றி வறுமை கொண்டு வருந்தினார். தாம் முன்பு கற்ற சூது ஆட்டத்தால் பொருளீட்டி தமது கொள்கையை நிறைவேற்றத் திட்டமிட்டார். அச்சூதாடுவார் திருவேற்காட்டில் ஒருவரும் இலராகவே அங்கிருந்து புறப்பட்டார்.

விடையூர்ந்து பலிதேறும் விமலனார் எழுந்தருளியுள்ள தலங்கள் சென்று உருகிய உள்ளத்துடன் தொழுது ஆங்காங்கு

சூதாடி அதனால் வரும் பொருளைக் கொண்டு அடியார்க்கு அன்னம் படைத்து மகிழ்வார்.

திருக்குடந்தை (கும்பகோணம்) என்னும் தலத்தை யடைந்து அங்கு எழுந்தருளிய இறைவரை ஆராக் காதலுடன் அஞ்சலி செய்து அங்குத் தங்கி, பொது இடத்தில் நாடோறுஞ் சூதாடுவார். முதல் ஆட்டத்தில் தோல்வியடைவார். முதலில் வைக்கும் பணயத்தை ஆடுகின்றவர்கள் கொள்ளத் தருவார். பின்னே பலமுறையும் வென்று பெரும் பொருளை யீட்டுவார். ஆனால், சூதினால் வரும் பொருளைத் தாம் தீண்டமாட்டார். அடியார்க்கு அமுது அமைக்கும் பணியாளர்கள் அப்பொருளை எடுத்து உணவுக்குரியவைகளை வாங்கி, அமுது அமைத்து அடியார்க்குப் படைப்பார்கள். அடியார்கள் அனைவர்களும் உண்டபின் கடைப்பந்தியில் தாம் உண்பார். சூதில் பிழைபட்டு மறுத்தாரை தமது இடையில் உள்ள சுரிகை வாளால் குத்துவார். அதனால், அவர் "நற்சூதர்' 'மூர்க்கர்' என்ற திருப்பெயர்களைப் பெற்றார். இங்ஙனம் உறுதியாக அடியார்க்கு அமுது செய்விக்கும் திருத் தொண்டைப் புரிந்து முடிவில் சிவபதம் அடைந்து இன்புற்றார்.

விளக்கம்

தொண்டைநாடு :-

ஒரு நாடு உயர்ந்தது என்பது அதனுடைய பிற வளங்களைக் கருதியுரைப்பது சாமானியம். காடாக இருப்பினும், நாடாக இருப்பினும் பள்ளமாக இருப்பினும் மேடாக இருப்பினும் எவ்விடம் சான்றோர்கள் இருக்கின்றார்களோ அவ்விடந்தான் உயர்ந்தது.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே. - ஔவையார்

ஏனைய நாடுகளில் சான்றோர்கள் இருப்பினும் தொண்டை நாட்டில் நிரம்பவும் இருக்கின்றனர். அதனால்தான், ஔவையார் இந்தத் தொண்டை நாட்டினைக் குறிப்பிடுகின்றபோது "சான்றோரு டையது" என்று அழகாக அருளிச் செய்தார்.

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து - பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து.

அறுபத்து மூன்று நாயன்மார்களுமே திரண்டு ஒரு திருவுருவடைந்தார்களோ என்று நினைக்கத்தக்க தெய்வச் சேக்கிழாரடிகள் திருவவதாரஞ் செய்தது தொண்டை நன்னாடு எனில் அதன் பெருமை அளவிடற்கெளியதோ? அதனால்,

"மன்னிப் பெருகும் பெருந்தொண்டை வளநாடு"

என்று சேக்கிழார் அடிகள் குறிப்பிடுகின்றார்.

திருவேற்காடு :-

சென்னை மாநகரத்திற்கு மேற்கே பதின்மூன்று கல் தொலைவிலுள்ள ஆவடி என்னும் புகைவண்டி நிலையத்தில் இறங்கி, அங்கிருந்து தெற்கே பூவிருந்தவல்லிக்குப் போகும் வழியில் மூன்றரை கல் தொலை சென்று, அப்பால் கிழக்கே செல்லவேண்டும். "காடு வெட்டியாறு" என்று இப்போது வழங்கும் பழைய பாலாற்றின் கரையில் இத்தலம் இருக்கின்றது. இதற்குத் தெற்கே 2 கல் தொலைவில் பூவிருந்தவல்லி உள்ளது.

துவாரபாலகர் உருவத்திற்கு அருகில் மூர்க்க நாயனார் திருவுருவம் விளங்குகின்றது.

அகத்தியருக்குத் திருமணக்கோலம் காட்டிய உமா மகேச்சுரர் உருவம் மூல இலிங்கத்திற்குப் பிறகே காட்சி தருகின்றது. திருஞான சம்பந்தருடைய தேவாரம் பெற்றது இத்தலம்.

பூதப் பாடல் புறங்காட் டிடையாடி
வேத வித்த கன்வேற் காடு
போதுஞ் சாந்தும் புகையும் கொடுத்தவர்க்
கேத மெய்து தல்இல் லையே.

மூர்க்க நாயனார் :-

இவர் அறிவு தோன்றிய நாள் தொடங்கித் திருநீற்றின் பெருமையையும் அடியார் பக்தியின் அருமையையும் உணர்ந்து அடியார்க்கு அமுது செய்வதையே தமது பரம லட்சியமாகக் கொண்டு வாழ்ந்தார். பொருள் முழுவதும் அதன் பொருட்டே செலவழித்து வறுமையெய்தி வாடிய போதும் தமது குறிக்கோளினின்றும் பிறழ்ந்தாரல்லர்.

வேறு ஒன்றும் பற்றுக்கோடு இன்மையால் தாம் முன் பழகிய சூது விளையாட்டால் பொருளீட்டி அடியவர்க்கு அமுது படைத்தார். அச்சூதில் பிழைபட்டாரைத் தமது சுரிகையால்

குத்துவார். அக்காரணத்தாலேயே மூர்க்கர் என்று பேர் பெற்றார். குணத்தினால் மூர்க்கரல்லர். தூய சிந்தையும் இன்சொல்லும் உயர்ந்த செயலும் படைத்தவர். அடியார்க்கு அமுது செய்வித் தலையே நமது வாழ்நாளின் பரம லட்சியமாகக் கொண்டாரெனின் இவருடைய பெருமை அளவிடற்கரியதாகும்.

கோதில் மரபில் பிறந்துவளர்ந் தறிவு கொண்ட நாள்தொடங்கி
ஆதி முதல்வர் திருநீற்றின் அடைவே பொருள்என் றறிந்தரனார்
காதல் அடியார்க் கமுதாக்கி அமுது செய்யக் கண்டுண்ணும்
நீதி முறைமை வழுவாத நியதி பூண்ட நிலைமையார்.

இனி, செல்வம் உள்ளபோது செய்வது யார்க்கும் பொருந்தும். வறுமை வந்து, நிலம், வீடு, மாடு, கன்று முதலியவற்றை விற்றும் அடியார்கட்கு அன்னம் வழங்கினார். அங்ஙனம் வழங்கிய போதும் மனந் தளர்ந்தாரல்லர்; சலித்துக்கொண்டாரல்லர். அவருடைய அளவற்ற அன்பைக் கீழேவரும் திருவாக்கினால் அறிக.

"மன்னுங் காணி யானநிலம் மற்றும் உள்ள திறம்விற்றே
அன்னம் அளித்து மேன்மேலும் ஆரா மனத்தா ராயினார்"

சூது :-

"ஐம்பெரும் பாதகங்களில் சூது ஒன்று ஆகுமே? அச்சூது ஆன்றோரால் தள்ளப்பட்டதேயன்றிக் கொள்ளப்பட்டதல்லவே?

"காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்மொழிதல்
ஈதல் மறுத்தல் இவைகண்டாய் - போதில்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி"

என்று நளவெண்பாவிலும்,

"ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோ ராறு"

என்று திருக்குறளிலும், சூது கண்டிக்கப்பட்டுள்ளதே! அதனை அடியாருள் ஒருவர் ஆடலாமோ? அங்ஙனம் ஆடினாரையும் அடியார் என்று கருதுவது தகுமோ?" என்ற ஐயப்பாடுகள் தெளி வில்லாத அறிவுடையார்க்கு நிகழும்.

ஒரு செயல் பாவம் புண்ணியம் என்பது வெறும் செயலாலே மட்டும் அமையாது. அதன் பயனாலேயே அது அமையும்.

ஒருவனை ஒருவன் கொல்ல வருகிறான். ஓரிடத்தில் அவன் ஒளிந்து கொண்டான். இடையில் நின்றான் ஒருவனை நோக்கி "அவன் எங்கே?" என்று கொல்ல வந்தவன் வினாவினான். "இதோ இங்குதான் ஒளிந்திருக்கிறான்" என்று கூறினால் அது உண்மைதான். ஆனால், அந்த உண்மையினால் விளைவது ஒரு கொலை. இங்கு இல்லையென்று கூறினால் அது பொய்மையாயினும் ஓர் உயிர் காப்பாற்றப்படுகின்றது. ஆகவே, பொய் மெய் என்பது அதன் பயனால் பெறப்படுகின்றது.

தான் வாழவேண்டும் என்று - தன்னைச் சார்ந்தார் வாழ வேண்டுமென்று சூது ஆடினால் அது பிழையேயாகும்.

தாம் செய்யும் ஒப்பற்ற சிவபுண்ணியச் செயலுக்குப் பழுது நேராதபடி இவர் ஆடியதனால் அது பாவமன்று; புண்ணியமே என உணர்க.

மேலும், சூதினால் வென்ற பொருளைத் தாம் தீண்டாது, அமுது அமைப்போரே எடுத்து அதனை அமுது அமைக்கப் பயன்படுத்துவர் என்பதனாலும், எல்லா அடியார்களும் அமுது செய்தபின் கடைப்பந்தியிலேயே இவர் உணவு கொள்வார் என்பதனாலும் இவருடைய தூய்மையும் அடியார் பக்தியும் வெளியாகின்றன.

சூதினில்வென் றெய்துபொருள் துரிசற்ற நல்லுணர்வில்
தீதகல அமுதாக்கு வார்கொள்ளத் தாந்தீண்டார்
காதலுடன் அடியார்கள் அமுதுசெயக் கடைப்பந்தி
ஏதமிலா வகைதாமும் அமுதுசெய்தங் கிருக்குநாள்.

திருமங்கையாழ்வார் வழிப்பறி செய்து அடியார்க்கு அமுதளித்தார் என்ற வரலாற்றையும் இதனுடன் வைத்து எண்ணுக.

கணைகொடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல். - திருக்குறள்

சோமாசிமாற நாயனார் புராணம்

"அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்"

சோழவள நாட்டிலே, சிறந்த மாஞ்சோலை சூழ்ந்த அம்பர் என்னும் அரிய ஒரு தலம் உண்டு. அத்தலத்திலே வேதங்களை நன்கு பயிலும் மறையவர் குலத்திலே சோமாசிமாற நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். முப்புரமெரித்த சிவபெருமானுடைய அடியார்கள் வந்தால் அவர்கட்கு அன்னமளித்து ஆதரிக்கும் சிறந்த பண்புடையவராக அவர் விளங்கினார்.

சிவபெருமானுக்கு உரிய வேள்விகளை விதிமுறைப்படி புகழ் பயன் கருதாது, ஏழு உலகங்களும் உவப்ப நியதியாகப் புரிந்து வந்தார்.

எத்தன் மையரா யினும்ஈசனுக் கன்ப ரென்றால்
அத்தன் மையர்தாம் நமையாள் பவர்என்று கொள்வார்
சித்தந் தெளியச் சிவன்அஞ்செழுத் தோதும் வாய்மை
நித்தம் நியமம் எனப்போற்றும் நெறியில் நின்றார்

எக்குலத்தினராயினும், எக்குணத்தினராயினும், வேறு எத்தன்மையராயினும் சிவபிரானுடைய அடியார்கள் என்றால் அவர்களே நம்மை ஆளும் பெருந்தகையாளர் என்னும் மெய்யறிவினையுடையவர்; உள்ளந் தெளியும் பொருட்டு இடையறாது திரு ஐந்தெழுத்தை நித்தம் ஓதும் நியமம் பூண்டிருந்தார்.

இறைவனை எப்போதும் நினைந்து நினைந்து உருகுகின்ற அவர் தம்பிரான் தோழராகிய நம்பியாரூரருடைய பெருமையைக் கேட்டு அவர்மீது அளவற்ற அன்பு கொண்டார். சீருஞ் செல்வமுஞ் சிறந்த திருவாரூரை அடைந்து, மலர்மாலை தரித்து இறைவனுக்கு அணுக்கராக விளங்கும் வன்தொண்டரைப் பன்முறை தொழுதார். அவருக்கு இனிய நண்பராகி, அவருடைய திருவடியைச் சிந்தித்துக் கொண்டிருந்தார். திருவருளும் குருவருளும் பெற்று மன்றுளார் மலரடி நிழலில் எய்திப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றார்.

விளக்கம்

திரு அம்பர்

இத்தலம் பேரளம் சந்திப்புக்கு அடுத்த பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்திற்குத் தென் கிழக்கில் இரண்டு கல் தொலைவில் இருக்கின்றது. அம்பர் மாகாளத்திற்குக் கிழக்கே முக்கால் கல்.

கட்டுமலைமேல் திருக்கோயில் அமைந்துளது. சிவலிங்கத் திற்குப் பின்புறம் அம்மையப்பர் திருவுருவம் அழகாக இருக்கின்றது. இந்த ஆலயம் பெருந்திருக்கோயில் எனப்படும்.

"அம்பர்திருப் பெருங்கோயில் அமர்கின் றான்காண்" - *தேவாரம்*

இக்கோயில் மாடக் கோயில் எனக் கூறுவர். கோச்செங்கட் சோழ மன்னன் திருவானைக்காக் கோயில் முதல் இந்த அம்பர் பெருந்திருக்கோயில் முடிவாக எழுபது மாடக்கோயில்கள் கட்டுவித்தான்.

எரிதர அனல்கையி லேந்தி எல்லியில்
நரிதிரி கானிடை நட்டம் ஆடுவர்
அரிசிலம் பொருபுனல் அம்பர் மாநகர்க்
குரிசில்செங் கண்ணவன் கோயில் சேர்வரே.

சோமாசிமாற நாயனார்

அடியார்க்கு அன்னமளித்தல், சிவவேள்வி செய்தல், திருஐந்தெழுத்தோதுதல் என்ற இந்த மூன்றையும் நியதியாக மேற் கொண்டவர் இவர்.

இறைவன் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உறைகின்றான். அங்ஙனமாயின் ஏன் அப்பரமபதி தோன்றுவதில்லை? கலங்கிய தண்ணீரில் சந்திர சூரிய பிரதிபிம்பம் தோன்றுவதில்லை. அது போல், அறியாமையாகிய அழுக்கினால் கலங்கிய மாசுடைய அகத்தில் இறைவன் தோன்றமாட்டான். தேற்றாங்கொட்டையிட்டுத் தண்ணீரைத் தெளியவைத்து, அதனுள் தோன்றும் சந்திரனைக் காண்பதுபோல், பஞ்சாட்சரமாகிய தேற்றாங்கொட்டையிட்டு ஆணவ அழுக்கை யகற்றிச் சித்தத்தைத் தெளிய வைத்தார் சிவத்தைக் காண்பர்.

இந்த நாயனார் இந்த முறையை நன்கு அறிந்து பயின்று வந்தார். இதனைக் கீழே வருந் திருவாக்கால் தெளிக.

"சித்தந் தெளிய சிவன்அஞ்செழுத் தோதும் வாய்மை
நித்தம் நியமம் எனப்போற்றும் நெறியில் நின்றார்"

இனி, அடியார் உள்ளத்தில் சிவன் எப்போதும் நீங்காது உறைகின்றான். "நினைப்பவர் மனங்கோயிலாகக் கொண்டவன்" ஆதலின், அடியாரை அரனாகவே கொண்டு வணங்குதல் வேண்டும். அவ்வாறு வணங்குவோர், அடியார்கள் இன்ன குலத்தினர், இன்ன தகுதியினர் என்ற வேற்றுமையைக் கருதக் கூடாது. கோத்திரமும் குலமும் உடம்பைக் குறித்தவை. உயிரைக் குறித்தவையன்று.

சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்திர முங்குல முங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளுமாற் பேறரே. - அப்பரடிகள்

"ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவு ளாரே" - அப்பரடிகள்

ஆவுரித்துத் தின்பது அன்பிலாமை; இறைவனை நினைப்பது அன்புடைமை. அன்பும் அன்பிலாமையும் ஒரே சமயத்தில் ஒருவரிடம் நிகழா. இரவும் பகலும் ஒரே சமயத்தில் தோன்றுவ தில்லை. சிவனுக்கு அன்பு செய்துகொண்டே ஆவுரித்துத் தின்று உழலுதல் ஏலாது. அவ்வாறு செய்வாராயின் அது அன்புடைமை யாகாது. நேற்றுவரை ஆவுரித்துத் தின்றுழன்ற ஒருவன், இன்று அதனின்றும் நீங்கி எங்கும் சிவனைக் கண்டு சிவபக்தி புரி வானாயின் அவன் எமது கடவுள். முன்னைய நிலையை நோக் காமல் வணங்குதல் வேண்டும் என்று கொள்க.

இந்த நாயனார் இந்தக் கொள்கையில் நின்றவர்.

"எத்தன் மையரா யினும்ஈசனுக் கன்ப ரென்றால்
அத்தன் மையர்தாம் நமையாள்பவர் என்று கொள்வார்"

என்ற அமுதத் திருவாக்கால் இது புலனாகின்றது.

இந்த அடியை ஆதரவாகக் கொண்டே இவர் செய்த யாகத்தில் இறைவன் சண்டாள ரூபத்தில் வர இவர் வழிபட்டார் என்ற ஒரு வரலாறு எழுந்தது.

"குலம் செல்வம் வயது முதலியவைகளைப் பொருளாக எண்ணாமல் திருநீறுங் கண்டிகையுமே பொருளாக எண்ணி

அடியாரைக் கண்டவுடன், சிவமாகவே கருதித் தொழுகின்றார். உள்ளத்தில் இறைவனைக் காணலாம்" என்றருள்கின்றார் வாகீசர்;

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவ ரவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

வேள்வி செய்தல் :-

பயன் புகழ் என்றவைகளைக் கருதாமல் உலக நன்மை ஒன்றையே கருதி, சிவமந்திரங்களைக் கூறி சிவாக்கினி வளர்த்துச் செம்மையுடன் செய்யும் வேள்வியால் உலகம் உய்யும். அவ்வேள்வி யினால் மழைபொழியும். பயிரும் உயிரும் தழைக்கும்.

கொலை, புலை முதலியவை இவ் வேள்வியில் இல்லையென உணர்க. பிற்காலத்தவர் வேள்வியில் கொலையையும் புலையையும் சேர்த்துவிட்டார்கள். அவ்வேள்வி சைவத்திற்கு உடன்பாடன்று என்று உணர்க.

சிவவேள்வியினால் கலியின் தீமை நலியும் என்பதை,

"அஞ்சிப்போய் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி"

என்ற திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாக்கினால் அறிக.

"பசுவேட்டெரியோம்பும்", "புன்மையாம் பசுத்தடிந்தே" என வேள்வி சம்பந்தமாக வரும் திருவாக்குகளுக்கு, பசுபோதம் (நான் எனும் தன்மை) ஆகிய ஒன்றைக் கெடுத்துச் சிவஞானமாகிய அக்கினியை வளர்த்தல் என்று பொருள் செய்க.

ஆகவே, ஆடுமாடுகளைக் கொல்வது யாகமாகாது. உயிர்க் கொலையைச் செய்தலை ஒரு புண்ணியச் செயல் என்று வேதாகமங் கள் கூறமாட்டா? அவ்வேதாகமங்களைப் பிரமாணமாகக் கொண்ட சமய குருமார்களும், ஏனைய சைவசமய சாத்திரங்களும் கூற மாட்டா எனத் தெளிக.

ஆன்மபோதத்தை யழித்துச் சிவபோதத்தை வளர்த்துச் சிவஞானத் தீயை ஓம்பிச் சிவனருள் பெறுதல் வேண்டும்.

சாக்கிய நாயனார் புராணம்

"வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்"

தளர்ச்சி யறியாத வளர்ச்சியுடைய நன்மக்கள் வாழ்கின்ற ஊர் சங்க மங்கை. அவ்வூரிலே வேளாளர் குலத்திலே ஒருவர் தோன்றினார். அவர் நிரம்பக் கல்வி கேள்விகளிற் சிறந்து, எல்லா வுயிர்க்கும் அருளுடையவராகி ஒழுகி வந்தார். ஒழியாமல் மாறிமாறி வரும் இறப்பு, பிறப்பு என்னும் நோயைத் தவிர்க்க வேண்டும் என்னுங் கருத்துடையராய் வாழ்ந்து வந்தார்.

அவர் மதில் சூழ்ந்த காஞ்சி மாநகரை அடைந்தார். நல்ல ஞானம் பெறுவதற்குப் பல வழியும் நாடுவாராயினார். சாக்கியர் கூறும் அறமொழிகளைக் கேட்டு அவ்வழியைப் பின்பற்றினார். சாக்கிய மதத்தைச் சார்ந்தார்; அம் மத நூல்களையெல்லாம் ஓதி உணர்ந்தார். பின்னர், அம் மதநூல்களும், வேறு புறச் சமயச் சார்வுகளும் பொருளல்ல என்று உணர்ந்தார். ஈசன் அருள் கூட்ட சிவநெறியே தவநெறியென ஐயந் திரிபற உணர்ந்தார். வினை, வினையைச் செய்பவன், வினைப்பயன், காலமறிந்து இடமறிந்து வினையைக் கூட்டுபவன் என்ற இந்த நான்கினையும் சைவ நூல்களையன்றி வேற்றுச் சமய நூல்கள் கூறவில்லை; ஆகவே, "சிவமே பரம்பொருள்" என்று திருவருளால் உறுதியுடன் அறிந்தார்.

எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்என்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவம்
தன்னைமிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார்.

எந்த நிலையிலே நின்றாலும், எந்த வடிவங் கொண்டாலும், நிலைபெற்ற சிவபிரானுடைய திருவடியை மறவாமையே பொருள் என்று எண்ணி, தாம் கொண்ட சாக்கிய மதக் கோலத்தை மாற்றாமல், தூய சிவபெருமானை மிகுந்த அன்பினால் இடையறாது சிந்தித்துக் கொண்டிருந்தார். எல்லாவற்றையும் தமக்கு உடைமை யாகவுடைய சிவபெருமான் ஒருவரே பரமபதி; இதனை யறியாத சாக்கியர்கள் கீழ் மக்களாகின்றார்கள். அகில வுலகிலுள்ள

ஆன்மாக்களும் சிவபெருமானுக்கு அடிமைகளேயாம் என்று கொண்டு முன்கொண்ட சாக்கிய வேடத்துடனேயே நின்று சிவபக்தி செய்து வந்தார்.

அருவத்திற்கும் உருவத்திற்கும் காரணமாக விளங்குவது சிவலிங்கம்; மாலும் அயனும் பிணங்கியபோது இடையில் ஜோதி வடிவாய் நின்ற குறிப்பும் சிவலிங்கத்தையே குறிக்கின்றது. ஆதலினால், 'சிவலிங்க வழிபாடு எல்லா வழிபாடுகளிலும் தலையாயது' என்று தெளிந்தார். அவ்வாறு தெளிந்த சாக்கிய நாயனார் நாள்தோறும் சிவலிங்கத்தைக் கண்ணுற்ற பின்னரே உணவு உண்ண வேண்டும் என்னும் நியதியை மேற்கொண்டார். அருகில் ஒரு வெட்ட வெளியில் ஒரு சிவலிங்கம் இருந்தது. அதைக் கண்டு, மிகுந்த களிப்புற்று, அக் களிப்பின் மிகுதியால் இன்னது செய்வது என்று அறியாராய் அங்கிருந்த ஒரு கல்லை யெடுத்து சிவலிங்கத்தின்மீது எறிந்தார்.

அன்பு நிறைந்த அருமை மக்கள் சில சமயம் இகழத்தக்க காரியங்களைச் செய்தாலும் தந்தைக்கு அது இன்பமாகவே இருப்பதுபோலே சாக்கிய நாயனாருடைய கல்லெறியைச் சிவபெருமான் மகிழ்ந்து ஏற்றுக்கொண்டார். மறுநாள் உண்ணுமுன் சிவலிங்கத்தைத் தரிசிக்க வந்தார். நேற்று நிகழ்ந்த குறிப்பினை நினைந்து, "எனக்கு அப்போது இது நிகழ்ந்தது அவர் திருவருளே" என்று உணர்ந்து, அதுவே என்றும் செய்ய நினைந்தார். எல்லாம் சிவன் செயலே என்று உறுதியாகத் தெளிந்தவர். ஆதலினால், கல்லெறிதலையும் சிவந்த ஆடையுடுத்தலையும் தவிராதவராய் நின்றார்.

அன்புநெறி வழக்கினால் தொண்டர்கள் புரியும் கருமம் இறைவனுக்குப் பூசனையாகும். முன்னே வனவேடனாராகிய கண்ணப்பர் செருப்படியை இறைவன் விரும்பியதுபோலே இவருடைய கல்லெறியையும் விரும்பி ஏற்றுக் கொண்டார். மற்றவர் கல் என்றாலும் சிவனாருக்கு அது மலராகவே ஆயிற்று.

> கல்லாலே எறிந்ததுவும் அன்பான படிகாணில்
> வில்வேடர் செருப்படியும் திருமுடியின் மேவிற்றால்
> நல்லார்மற் றவர்செய்கை அன்பாலே நயந்ததனை
> அல்லாதார் கல்லென்பார் அரனார்க்கஃ தலராமால்.

சாக்கிய நாயனார் ஒருநாள் சிறிது மறதியாக உணவு உண்ண அமர்ந்தார். "ஆ! ஆ! கெட்டேன். எங்கள் பெருமானைச்

சேவிக்காமல் அயர்ந்தேன்'' என்று கூறித் துணுக்குற்று எழுந்தார். பொங்கியெழுந்த காதலுடன் மிகவிரைந்து புறப்பட்டு ஆனையுரி போர்த்த அரனார் திருமுன்பு சென்றார். கல்லெடுத்துக் குறி தவறாமல் எறியும்பொருட்டு உணவை யொழித்து வேட்கையுடன் ஓடிவரும் திருத்தொண்டர்முன் கண்ணுதற் கடவுள் விண்ணிடை உமாதேவியாருடன் தோன்றியருளினார். மூவருந் தேவருங் காணாத முழுமுதற் கடவுளைக் கண்குளிரக் கண்ட சாக்கியனார் தணியாத காதலுடன் பலமுறை பணிந்து கண்ணீர் பொழிந்து, பலப்பல துதிகளை மொழிந்து நின்றார். இறைவர் கடைக்கண்ணால் நோக்கி யருளிச் சாக்கிய நாயனாருக்குச் சிவலோகங் கொடுத்தருளினார்.

விளக்கம்

சாக்கிய நாயனார்

இவர் சரித்திரம் சிந்தனைக்குரியது; வந்தனைக்கும் உரியது. நம்முடைய நினைவுக்கு நெடுந்தொலைவில் நிற்பது. இவரைப்பற்றி சேக்கிழார் மிகவும் அழகாகவும் திறமையாகவும் இனிது எடுத்து விளக்கியிருக்கின்றார்.

“கேளாகிப் பல்லுயிர்க்கும் அருளுடைய ராய்க்கெழுமி
நீளாது பிறந்திறக்கும் நிலைஒழிவேன் எனநிற்பார்”

“நன்ஞானம் அடைவதற்குப் பலவழியும் நாடுவார்
முன்னாகச் சாக்கியர்தாம் மொழியறத்தின் வழிச்சார்ந்து
மன்னாத பிறப்பறுக்கும் தத்துவத்தின் வழிஉணர்வார்”

உய்யு நெறி கருதிச் சாக்கிய மதஞ் சார்ந்து அச்சமய நூல்களை ஓதியுணர்ந்து அதன் சிறப்பின்மையையும் சைவத்தின் சிறப்புண்மை யையும் உணர்ந்து, எல்லாம் சிவன் உடைமைகளே; எல்லாரும் அரன் அடிமைகளே என்று தெளிந்து, சாக்கிய சமயத்தில் நின்றபடியே சிவபெருமானை வழிபட்ட இவருடைய உறுதியும் அன்பும் சாலவும் போற்றத் தக்கதாகும்.

இறைவனை மறவாமையே பிறவாமைக்குக் காரணமாகும். “மீண்டும் பிறப்புண்டேல் உம்மை என்றும் மறவாமை வேண்டும்'' என்று காரைக்காலம்மையாரும், “மறவாதிரு மனமே இது காண் நல்ல மருந்து'' என்று பட்டினத்தடிகளும், “தினைத்துணைப் பொழுதும் மறந்துய்வனோ'' என்று அப்பரடிகளும், “எத்தான் மறவாதே நினைக்கின்றேன்'' என்று சுந்தரரும், “கமல மலரடி கனவிலு நனவிலு மறவேனே'' என்று அருணகிரிநாதரும், “இணை

யடிகள் மறவாத மனமொன்று மாத்திரம் ஏழையேற் கருளு கண்டாய்'' என்று இராமலிங்க அடிகளும் கூறுமாறு காண்க. இத்தனைப் பெரியோர்களும் கொண்ட இச் சிறப்பியல்பாகிய இறைவனை மறவாமையை இந்நாயனார் உறுதியாகக் கொண்டு ஒழுகினார்.

எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்என்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவம்
தன்னைமிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார்.

அதனால், இவர் புறக்கோலம் இன்றியும் புனிதரானார். இதனால், புறக்கோலம் வேண்டற்பாலதன்று என்பது பொருளன்று. புறக்கோலமும் இன்றியமையாததுவே. அரசாங்கச் சேவகர் சில அடையாளங்களை அணிவதுபோலச் சிவனடியார்கள் திருநீறும் உருத்திராக்கமும் அணிதல் வேண்டும். இவர் சாக்கிய ச்மயத்தில் நின்றார். ஆதலின், அவ்வேடத்திலிருந்தபடியே சிவனை மறவாது ஒழுகினார்.

சைவத்தின் சிறப்பு

ஏனைய சமயங்கள், வினை ஒன்று உண்டு, அவ்வினை செய்தானைத் தானே வந்து சாரும் என்றும், வினையை யூட்ட ஒரு முதல் வேண்டாம் என்றும் மலைந்து மயங்கும்.

பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலை - தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு. - *நாலடியார்*

பல பசுக்களுக்கிடையே ஓர் இளங்கன்றை விடுத்தால், அந்த இளங்கன்று தாய்ப்பசுவை வெகுவிரைவில் அறிந்து அதன் மடியில் பாலைப் பருகுவதுபோலே, அவரவர் செய்த வினைகளும் செய்த வனை யறிந்து வந்து சாரும் என்று கூறுகின்றது. இது சமண் சமயக் கொள்கை.

"நன்மை செய்தால் நன்மை வரும்; தீமை செய்தால் தீமை வரும்; கடவுள் ஒன்று வேண்டற்பாலதன்று; கருமமே முக்கியம்'' என்று கூறுவது பூர்வ மீமாம்சம். இதனைக் கடைப்பிடித்தோர்கள் தாருக வனத்து இருடிகள்.

விரத மேபர மாகவே தியரும்
சரத மாகவே சாத்திரங் காட்டினர். - *திருவாசகம்*

இக்கொள்கைகள் சிறப்பில்லாதவை என உணர்க. ஏன்? வினை சடம் ஆதலின் தானே செய்தவனை வந்து சாராது; ஆன்மா சித்தாயினும், சிற்றறிவும் சிறு தொழிலும் உடையது; ஆதலினால், ஆன்மாவும் தான் செய்த வினையைத் தானே ஏற்றுக் கொள்ளாது.

சிறு குழந்தை தானே பாலை எடுத்துப் பருகாது. பாலுந் தானே போய் குழந்தை வாயில் புகாது. குழந்தைக்கும் பாலுக்கும் இடையே தாய் காலமறிந்து இடமறிந்து புகட்டுவதுபோல், கருணைநிறைந்த இறைவன் ஆன்மாக்களுக்கு அவரவர் செய்த வினையைப் பக்குவமறிந்து ஊட்டுவான். நோய்வாய்ப்பட்ட குழந்தைக்கு வேப்பங் கொழுந்தை அரைத்து ஊட்டுவதுபோல், தீவினை செய்த ஆன்மாக் களுக்கு இறைவன் துன்பத்தை ஊட்டுவான்.

ஊட்டுவிப் பானும் உறங்குவிப் பானும்இங் கொன்றொடொன்றை
மூட்டுவிப் பானும் முயங்குவிப் பானும் முயன்றவினை
காட்டுவிப் பானும் இருவினைப் பாசக் கயிற்றின்வழி
ஆட்டுவிப் பானும் ஒருவனுண் டேதில்லை யம்பலத்தே.
- *பட்டினத்தடிகள்*

எனவே, வினை, வினைசெய்தவன், வினைப்பயன், வினையைக் காலம் இடம் அறிந்து ஊட்டுபவன் என்ற இந்த நான்கும் இருந்தே தீரவேண்டும். இவற்றைத் தெளிவாக எடுத்து விரித்து விளம்புவது சைவசித்தாந்தம் ஒன்றேயாகும். இதனைச் சாக்கிய நாயனார் நன்கு உணர்ந்து சைவசமய நெறியைக் கடைப்பிடித்தார். அது திரு வருளால் உணரப் பெற்றார்.

செய்வினையுஞ் செய்வானும் அதன்பயனுங் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லைஎன
உய்வகையால் பொருள்சிவன்என் றருளாலே உணர்ந்தறிந்தார்.

என்ற சேக்கிழார் திருவாக்கினால் இதனை யறிக.

சிவலிங்கத்தின் பெருமை

அருவுக்கும் உருவுக்கும் இடையில் விளங்கும் உருவருவமாகத் திகழ்வது சிவலிங்கம். இறைவன் ஜோதி வடிவானவர். "மாமணிச் சோதியான்." சோதி மேல் நோக்கி நிற்கின்றது. அது ஆன்மாவில் உயிர்க்குயிராய் விளங்குகின்றது. ஆன்மா அறிவுப் பொருள்.

ஆன்மாவுக்கும் சிவத்துக்கும் இடையில் அருள் ஒளிர்கின்றது. எனவே, ஆன்மசோதி, அருட்சோதி, சிவசோதி; இந்த மூன்றும் ஒருங்கு கூடியதே சிவலிங்கம் என அறிக. சிவலிங்கத்தின் அடி வட்டம் ஆன்மசோதி; சிவலிங்கத்தினைச் சூழ்ந்திருக்கின்ற ஆவுடையார் அருட்சோதி; மேல் நோக்கியிருக்கின்ற சிவலிங்கம் சிவசோதி. இந்த மூன்றும் சேர்ந்து சிவலிங்கமாக நமக்குக் காட்சி தருகின்றது. சிவலிங்கத்தின் நுட்பத்தை அறியாதார் ஏதேதோ பிதற்றிப் பேதுறுவார்கள்.

"சோதியே சுடரே சூழொளி விளக்கே" என்பார் மணிவாசகர். இதனைச் சேக்கிழார் பெருமான், இந் நாயனாரது புராணத்திலே, "எட்டிரண்டும் இதுவாம் இலிங்கம்" என்று அருணகிரியார் கூறியபடி, எட்டாவது செய்யுளில் செப்பிய திறம் மிகமிக வியக்கத் தக்கது.

> காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
> நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்
> நாணாது நேடியமால் நான்முகனுங் காணநடுச்
> சேணாருந் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய்.

சிவலிங்கபூசனை புரியாதவன் பலப்பல பிறப்பிறப்பெடுத்து உழலுவான். எள்ளளவுஞ் சுகமின்றி இடர்ப்படுவான். அடியில் வரும் சிவரகசியப் பாடலைப் படித்து உணர்க.

> சிறந்தசிவ லிங்கபூ சனைபுரியா தவன்யோனி
> செனிக்கும் பேதம்
> அறைந்திடும்போ தெண்ணில்பல கோடிகளால் கறங்கெனவே
> யவைக டோறும்
> இறந்துபிறந் தலைந்திடுவர் எள்ளளவும் சுகமின்றி
> எந்த நாளும்
> மறந்துநலம் என்றுபுலை மலமருந்துஞ் சூகரமாய்
> வருவன் பின்னும்.

கல்லெறிதல்

சிவலிங்கத்தின்மீது கல்லெறிதலும் சிவபூஜையாகுமோ? என ஐயுறுவார்க்கு அந்த ஐயமே நிகழாத வண்ணம், நமது தெய்வச் சேக்கிழார் பலப்பல நியாயங்கள் ஓதுகின்றார்.

சாக்கியர் ஒரு சிவலிங்கத்தைக் கண்டு உண்ணும் நியமங் கொண்டார். வெட்ட வெளியில் கிடந்த ஒரு சிவலிங்கத்தைக்

கண்டார். நெடுநாளாக மறவாது சிவனை நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழும் நியமம் உடையவராதலினால் சிவலிங்கத்தைக் கண்டவுடன் அவருடைய உள்ளத்திலே வெள்ளம் போன்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. அதிக மகிழ்ச்சியினால் இன்னது செய்வ தென்றே அறியாதவராயினார். அப்பரடிகளைக் கண்டவுடன் அப்பூதியடிகள் மகிழ்ச்சி மிகுந்து திகைத்துச் செயல் மறந்ததையும் ஈண்டுச் சிந்திக்க. அங்கு கிடந்த கல்லை எடுத்து எறிந்தார். மறுநாள் அச்செயல் திருவருளின் குறிப்பாகவே கொண்டு, எல்லாம் ஈசன் செயலே என்று தெளிந்து, நியதியாகக் கல்லெறிந்து வந்தார். இதனைப் பின்வரும் அமுதக் கவிகளால் அறிக.

நாடோறுஞ் சிவலிங்கம் கண்டுண்ணும் அதுநயந்து
மாடோர்வெள் ளிடைமன்னுஞ் சிவலிங்கம் கண்டுமன
நீடோடு களியுவகை நிலைமைவரச் செயலறியார்
பாடோர்கல் கண்டதனைப் பதைப்போடும் எடுத்தெறிந்தார்.

தொடங்கியநாள் அருளியஅத் தொழிலொழியா வழிதொடரும்
கடன்புரிவார் அதுகண்டு கல்லெறிவார் துவராடைப்
படம்புனைவே டந்தவிரார் பசுபதியார் தஞ்செயலே
அடங்கவும்என் பதுதெளிந்தார் ஆதலினால் மாதவர்தாம்.

அவருடைய மனநிலை மிகமிக விழுமியது. திருவருள் குறிப்பிலேயே வாழ்ந்தவர். எல்லாவற்றையும் சிவன் செயலாகவே கருதிய பெரியவர். இவருடைய திருத்தொண்டின் திறம் சாமானிய மானவர்க்கு விளங்காது.

இவர் புரிந்த கல்லெறித் தொண்டினை இறைவன் மிகவும் இனிமையாக ஏற்றுக்கொண்டார்! எதுபோல்? மக்கள் தாய் தந்தை யரிடம் அன்பின் மிகுதியால், தலைமயிர் பிடித்து ஈர்த்தல், காது முதலிய தொளைகளில் விரல்விட்டுக் குடைதல் முதலிய அநுசிதங் களைச் செய்கின்றபோது, குழந்தைகளின் அன்பு ஒன்றையே நினைத்து, அவர்களுடைய வன்செயலைக் கருதாது மகிழ்வதுபோல், சாக்கிய நாயனாரும் ஒப்பற்ற அன்பினால் எறிந்த கல்லடியைக் கண்ணுதற் கடவுள் ஏற்று, உவந்து கருணைபுரிந்தார் என உணர்க.

அகம்நிறைந்த பேருவகை அடங்காத ஆதரவால்
மகவுமகிழ்ந் துவப்பார்கள் வன்மைபுரி செயலினால்
இகழ்வனவே செய்தாலும் இளம்புதல்வர்க் கின்பமே
நிகழுமது போலதற்கு நீள்சடையார் தாம்மகிழ்ந்தார்

என்று இந்தக் கருத்தைக்கூறி அமைதி செய்கின்றார் சேக்கிழாரடிகள்.

செயலுக்கு ஒன்றும் தகுதியில்லை. செயல் புரிந்தார் உள்ளத்தில் நிகழும் அன்புநிலைக்கே தகுதியுண்டு. அன்பில்லாதார் புகழுரை காட்டிலும், நமது நலங்கருதுவோர் இகழுரை நமக்கு இன்பம் பயக்கின்றது. ஒருவன் மாண்டொழிய எண்ணி ஒரு வைரத்தை வைத்திருக்கின்றான். அவன்பால் அன்புள்ளான் ஒருவன் அவனை உய்விக்கக் கருதி அவன் வைத்திருந்த வைரத்தை அவனறியாமல் களவு செய்தனன். செயல் களவாயினும், அது அவனுக்கு இனிமையே யன்றித் தீமையாகாது.

மன்மதன் இறைவர்மீது மலர் சொரிந்தான். அவன் கணை யென்று விட்டது மலர்கள்தாமே. ஆனால், இறைவர் அவனை எரித்தனர். கல்லாலே எறிந்த சாக்கியனாருக்குச் சிவலோகம் ஈந்தனர். கல்லெறிதல் தீங்கு; மலர் எறிதல் நன்று; ஆனால், நன்று செய்தவனுக்குத் தண்டனையும், தீங்கு செய்தவருக்குத் திருவருளும் கிடைத்தது. என்ன காரணம்? மன்மதன் மலர் எறிந்த செயல் நன்றேயாயினும் அவன் உள்ளம் இறைவரை மயக்க வேண்டும் என்று துணிந்தது. அதனாலேயே, அச்செயல் தீமையாயிற்று.

சாக்கியர் கல்லெறிந்தாலும் இறைவர்மீது எல்லையில்லாத அன்புடன் திருவருளையே தாரகமாகக் கொண்டு செயலறியாது கல்லெறிந்தார். பின்னர், அதனையே திருவருட் குறிப்பாகக் கொண்டு ஒழுகினார். ஆகவே, இவருடைய செயல் இறைவருக்கு உவந்ததாக ஆயிற்று.

இக்கருத்தை வைத்து நகைச்சுவை தோன்றப் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் மிக இனிமையாகப் பாடுகின்ற பாடலைக் கண்டு மகிழ்மின்.

நல்லாளை யிடமருவு தியாகையா உமதிடத்தில்
    நியாயங் காணோம்
கல்லாலே எறிந்தோர்க்குஞ் செருப்படியால் உதைத்தோர்க்குங்
    கடிந்து போரில்
வில்லாலே யடித்தோர்க்கும் கொடுத்தீரே யல்லாமல்
    விழிநீர் சோர
எல்லாம்உம் செயலென்றே யிருப்போருக் கியாதேனும்
    ஈகி லீரே.

❀ ❀ ❀

சிறப்புலி நாயனார் புராணம்

"சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்"

மன்னிய புகழுடைய நாடு பொன்னி நாடு; அச் சோழவள நாட்டில் எல்லாச் சிறப்புக்களும் பொருந்திய தலம் திருவாக்கூர்; குளிர்ந்த மலர்ச்சோலைகள்; வானளாவிய மாடமாளிகைகள்; மழை முழக்கத்தை விஞ்சிய மறைமுழக்கம்; வீதிகளில் இடும் அகில் நறும் புகையை அடக்கும் வேள்விப்புகை; மங்கல கீதங்கள் முதலிய நலங்கள் அப்பதியின் பெருமையை வளர்த்தன. பாக்குமரங்கள் வேலிபோல் சூழ்ந்து விளங்கும் திருப்பதியில் மிகுந்த புகழுடன் வாழ்ந்தார் சிறப்புலி நாயனார்.

அவர் மறையவர் குலத்தில் வந்தவர். நீலகண்ட நிமல னாருடைய திருத்தொண்டுகள் பல புரிந்து வந்தார். பாரிபோல் வரையாது வாரி வழங்கும் வள்ளலாராக அவர் திகழ்ந்தார். சிவ பெருமானிடத்தில் அன்பு பூண்டு ஒழுகியதோடு, சிவனடி யாரிடத்தும் அளவிலா அன்புடையராயிருந்தார்.

அடியவர்களைக் கண்டவுடன் அன்புடன் அடிமலர் மீது வீழ்ந்து வணங்கி, ஆதரவுடன் கனியமுதம் போன்ற இனியவுரை கூறி, அழைத்துச் சென்று, அறுசுவை யுணவுகள் ஊட்டி, அவர்கள் விரும்பிய அனைத்தும் தந்து, பெரிதும் உவப்பார். பொன்மழை பொழியும் புயலைப்போல் விளங்கினார்.

ஆளும்அங் கணருக் கன்பர் அணைந்தபோ தடியில் தாழ்ந்து
மூளும்ஆ தரவு பொங்க முன்புநின் றினிய கூறி
நாளும்நல் லமுதம் ஊட்டி நயந்தன எல்லாம் நல்கி
நீளும்இன் பத்துள் தங்கி நிதிமழை மாரி போன்றார்.

ஓதுவாரை உய்விக்கும் ஆதி மந்திரமாகிய ஐந்தெழுத்தை ஓதிச் சிவவேள்வி புரிவார். தவநெறி நின்று தலையாய சிவ புண்ணி யங்கள் பல புரிந்துகொண்டிருந்தார். இமயவல்லி பங்கராம் இறைவன் இணையடி மலரை இதயத்தில் நிறுத்தி இடையறாது அன்பு செய்தார். இவ்வாறு, இணையற்ற அன்புடைய சிறப்புலி நாயனார் எண்ணிலாத அறங்களைப் புரிந்து அம்பலவாணர் அடிமலர் நிழலில் கலந்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றார்.

விளக்கம்

திரு ஆக்கூர்

இத்தலம் மாயூரத்திலிருந்து கிழக்கே தரங்கம்பாடிக்குப் போகும் வழியில் 10 கல் தொலைவில் உள்ளது. இத் தலத்திற்குக் கிழக்கே 3 கல் தொலைவில் திருக்கடவூர்.

கோயில் மாடக்கோயில்; தான்தோன்றி மாடம் என்று பேர். பெருமான்:- தான்தோன்றியப்பர். அம்பிகை:- வாள்நெடுங்கண்ணி.

ஓர் அரசன் இறைவர் கட்டளையிட்டபடி ஆயிரம் அடியார்க்கு அன்னமிட்டதாகவும், அவர்களில் இறைவரும் ஒருவராய் வந்து உண்டதாகவும், அது பின்னர் மன்னன் அறிந்து மகிழ்ந்ததாகவும் ஒரு வரலாறு உண்டு. ஒரு தனிச் சந்நிதியில் "ஆயிரத்திலொருவர்" என்று உற்சவமூர்த்தி யொன்றுண்டு.

இந்த ஊரில் உள்ள வேளாளர்களைத் திருஞானசம்பந்தர் சிறப்பித்துப் பாடியருளினார்.

> வாளார்கண் செந்துவர்வாய் மாமலையான் தன்மடந்தை
> தோளாகம் பாகமாப் புல்கினான் தொல்கோயில்
> வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும்
> தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே.

சிறப்புலி நாயனார்

இவர் சிறந்த வள்ளலாக வாரி வாரி வழங்கியவர். சிவபக்தி செய்வார்போல நடித்து ஈகை ஒரு சிறிதும் இல்லாத சிலரை நாம் இன்று ஆங்காங்குக் காண்கின்றோம்.

சிவபக்தியின் முதற்படி ஈவிரக்கமேயாம். தம்பால் உள்ள செல்வம் சிவன் தந்தது என்று கருதி, சிவனடியார்கட்கு "நாம் தருகின்றோம்" என்ற தன் முனைப்பு ஒரு சிறிதும் இன்றி, "இச் செல்வம் சிவனுடையது; சிவனடியார்க்கு இது உரியது" என்று ஆராத காதலுடன் தாராளமாகத் தருவதுவே அடியார்க்குரிய அரிய பண்பு ஆகும். இரப்பார்க்கு ஈயும் இரக்கமில்லாதவர் அடியவ ராகார்.

> "கரவாது இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்"

என்கின்றார் அருணகிரிநாதர்.

இவர் அள்ளி வழங்கும் வள்ளலாக விளங்கினார் என்பதை நமது சேக்கிழார் பெருமான் அழகாகக் கூறுகின்றார்.

"நீலமார் கண்டத் தெண்டோள் நிருத்தர்தந் திருத்தொண் டேற்ற
சீலராய்ச் சாலும் ஈகைத் திறத்தினில் சிறந்த நீரார்."

அடியார்களுடைய சிறந்த பண்பு வள்ளன்மையாகும். இதனை இளையான்குடி மாற நாயனார், மெய்ப்பொருள் நாயனார், சேரமான் பெருமாள் நாயனார் முதலிய நாயன்மார்களது இனிய வரலாறு களால் அறிக. உலோப குணத்தினும் இழிந்தது வேறு ஒன்றும் இல்லை.

ஆகவே, பெரிய வள்ளன்மையுடன் உள்ள பொருளெலாம் அடியார்கட்கு அவர்கள் கேளாமுன்னரே வழங்கிச் சிறப்புடன் நாயனார் வாழ்ந்தார். அதனால், இவரைச் சேக்கிழார் பெருமான் 'வள்ளலார்' என்றே குறிப்பிடுகின்றார்.

"அறத்தினில் மிக்க மேன்மை அந்தணர் ஆக்கூர் தன்னில்
மறைப்பெரு வள்ள லார்வண் சிறப்புலி யார்"

சிறுத்தொண்ட நாயனார் புராணம்

"செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க்கு அடியேன்"

காவிரிந்தியால் கவின் பெறுகின்ற நாடு சோழ வளநாடு; அத் திருநாட்டில் மன்மதனை விழியால் எரித்த விமலனார் எழுந்தருளி யுள்ள அரிய தலம் திருச்செங்காட்டங்குடியாகும். அப்பதியிலே மாமாத்திரர் மரபிலே பரஞ்சோதியார் என்பார் சிறப்புற்று இருந்தார்.

பரஞ்சோதியார் மருத்துவ நூல்களையும், எல்லையில்லாத வடமொழி நூல்களையும், போருக்குரிய வில், வாள் முதலிய படைப் பயிற்சிகளையும் கற்று வல்லவராக விளங்கினார். யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவைகளையும் பிற கலைகளையும் அறிந்து தனக்கு ஒப்பார் எவருமின்றி வீரராக நின்றார். இவ்வாறு, கலைகள் அனைத்தையுங் கற்று, அவைகளின் பயன் கண்ணுதற் பெருமான் கழலிணையைக் கருதுவதேயாகும் என்று தெளிந்து, காலனை யுதைத்த கருணைத் திருவடியை இடையறாது சிந்தித்து, பள்ளத்தில் பாயும் தண்ணீர்போல் அன்புசெய்து வந்தார்.

உள்ளநிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றால்
தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவென்றே
கொள்ளுமுணர் வினின்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடை யாய்என்றும் பயின்றுவரும் பண்புடையார்.

சிவபெருமானுடைய அடியார்கட்கு எந்நாளும் இனிய தொண்டுகள் புரிவார். சோழநாட்டை யாண்ட மன்னவனிடம் நெருங்கிய தொடர்புடைய சேனாவீரராக நின்றார். பலமுறை யானைமீது சென்று பகைவர்களுடைய போரில் வென்று, பல நாடுகளை மன்னன்வசம் ஆக்கினார். அதனால், இவருக்கு அரசாங்கத்தில் அளவிறந்த பெருமதிப்பு ஏற்பட்டிருந்தது. வாள் வலியுந் தோள்வலியும் மிக்குடையராக அவர் பெருமை பெற்றார்.

வடநாட்டிலேயுள்ள வாதாபி என்ற நகரத்து மன்னன் சோழ நாட்டையாளும் பல்லவ மன்னனை முன்னே வென்று வீறு பெற்றிருந்தனன். அதனால், பரஞ்சோதியார் நால்வகைச் சேனை களுடன் சென்று, வாதாபி நகரத்தையாளும் மன்னவனுடன் கடும்

போர் செய்து அவனை வென்றார். அங்குள்ள விலையுயர்ந்த நவ மணிகளையும் பொற்குவியலையும் யானைகளையும் குதிரை களையும் இன்னும் பல உயர்ந்த பொருள்களையும் கவர்ந்து கொண்டு தனது மன்னவனிடம் வந்து சேர்ந்து அவைகளைத் தந்து வணங்கினார்.

அம்மன்னன் அதுகண்டு அதிசயித்தான். அவருடைய வீரச் செயலை நினைந்து விம்மிதங் கொண்டான். "என்னாலும் வெல்ல முடியாத வடதேயத்து வாதாபி மன்னனை எவ்வாறு வென்றீர்?" என்று வியப்புடன் வினாவினான். அருகில் இருந்த அமைச்சர்கள் அரசனைப் பணிந்து, "அரசர் ஏறே! இவர் சிவபெருமானுடைய திருவருள் பெற்றவர். அருள் வலிமையுடையவர். திருத்தொண்டின் திறம் படைத்தவர். அதனால் இவருக்கு நிகரானவர்கள் இவ்வுலகில் எங்கும் இல்லை" என்று இயம்பினார்கள்.

சிவபெருமானுடைய திருத்தொண்டர் என்று கேட்டறிந்த மன்னவன், "ஆஆ! நான் கெட்டேன்; இவர் ஈசனடியார் என்பதை உணராது ஒழிந்தேன். என்னே என் மதி? கொடிய போர்க் களங்களுக்கு இவரை யனுப்பி ஏவல் கொண்டேன். இது பெரும் பிழையாகும்" என்று அஞ்சினான். "பெருமானே! சிறியேனுடைய பெரும் பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று வணங்கினான்.

மன்னன் வணங்கியதைக் கண்ட பரஞ்சோதியார் தாமும் மன்னனை வணங்கி, "வாள்வேந்தே! வருந்தற்க. என்னுடைய உரிமைத் தொழிலுக்கு ஏற்ற கடமையையே நான் செய்தேன். அதனால், என்ன குற்றம்? நீர் இதுபற்றி இரங்குதல் வேண்டாம்" என்றார்.

மன்னன் மீட்டும் அவரைப் பணிந்து, "சிவனடியாராகிய தேவரீர் என்னிடம் பணி செய்தல் கூடாது. தாங்கள் பெரிய சிவபக்தர். ஆகவே, தாங்கள் தங்கள் ஊர் சென்று உமது விருப்பம்போல் திருத்தொண்டுகளைச் செய்துகொண்டிரும்" என்று கூறி, நிறைந்த நிதிக்குவியல்களும் நிலபுலன்களும் தந்து, அன்புடன் தொழுது விடைகொடுத்து அனுப்பினான்.

.வேந்தனிடம் விடைபெற்ற பரஞ்சோதியார் தமது திருநகர மாகிய திருச்செங்காட்டங்குடியை அடைந்து, அங்குக் கணபதீச் சரம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவரை இறைஞ்சினார். முன்போல் திருத்தொண்டில் ஒரு சிறிதும் வழுவாமல் செய்கின்றார். தாம் செய்யும் திருத்தொண்டுக்கு அனு

கூலமாகக் குற்றமில்லாத குடியில் பிறந்த திருவெண்காட்டுநங்கை யென்பாரைத் திருமணஞ் செய்துகொண்டார். இருவருங் கருத் தொருமித்து மனையறம் புரிந்து வையம் புகழ வாழ்ந்தார்கள்.

அடியார்களுக்கு, அமுதினும் இனிய அன்னம், அறுசுவைகள் நிறைந்த கறிகள், நெய், பால், தயிர், பண்ணியம், பாயசம் முதலிய உயர்ந்த உணவுகளைப் படைத்துத் தண்ணீரும் தந்து உபசரிப்பார். அதனால், அவருடைய திருமாளிகையிலே எண்ணில்லாத திருத் தொண்டர்கள் விருப்புடன் வந்து அமுதுண்டு மகிழ்வாரா யினார்கள்.

குளிர்ந்த சந்திரனையும் வெப்பமாகிய பாம்பையும் ஒற்றுமைப் படுத்தி ஒருங்கே சடையில் சூடிய சிவபெருமானுடைய திருத் தொண்டர்களை வழிபடும் அன்பின் மிகுதியால் அடியவர்களின் திருமுன்பு பரஞ்சோதியார் மிகவும் அடக்கமாக உடம்பை வணக்கிச் செல்லுவார். அதனால், இவரைச் சிறுதொண்டர் என்று உலகம் உரைப்பதாயிற்று.

சீதமதி யரவினுடன் செஞ்சடைமேல் செறிவித்த
நாதனடி யார்தம்மை நயப்பாட்டு வழிபாட்டால்
மேதகையார் அவர்முன்பு மிகச்சிறிய ராயடைந்தார்
ஆதலினால் சிறுத்தொண்டர் எனநிகழ்ந்தார் அவனியின்மேல்.

நாள்தோறும் கணபதீச்சரத்தின்கண் அமர்ந்த கண்ணுதற் கடவுளை வணங்கியும், அளவில்லாத அடியார்கட்கு அமுது செய்வித்தும் அகமகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார்.

சிவபெருமானுடைய திருவருளினால் நிறைந்த தவமுடைய சிறுத்தொண்டருடைய மனைவியாரும் இல்லறத்தின் ஆணிவேரு மாகிய திருவெண்காட்டு நங்கையார் கருக்கொண்டார். வலம்புரி சங்கில் ஆணிமுத்து கருவடைந்தது போன்ற அக்கரு முதிர்ந்து நாளும் கோளும் நன்னிலை பெற்ற ஒரு நன்னாளில் சீராளதேவர் என்ற திருமைந்தர் அவதரித்தார். சிறுத்தொண்டர் பெருமகிழ்ச்சி யுற்று, திருமாளிகையை நன்கு அலங்கரித்தனர். உறவினர் உள்ளம் உவந்தார்கள்.

பிள்ளை பிறந்ததை முன்னிட்டுப் பெருவிழாக் கொண் டாடினார். மங்கல வாத்தியங்கள் முழங்கின; மறை முழங்கியது; மாதேவன் அடியவர்கட்கு ஆடையும் அரதனமும் நிரம்ப அளிக்கப் பட்டன. தங்கள் திருமரபுக்கு ஏற்றபடி பத்துநாள்களிலும் சடங்கு களைச் சிறப்பாகச் செய்து காப்பு அணிவித்தார். அன்பு நிறைந்த

பெருஞ் சுற்றத்தார்கட்கும் ஆடைகளும் அணிகலன்களும் அளித்தார்.

சீராளதேவர் தாய்களிக்கத் தந்தைகளிக்கத் தமர்களிக்க வளர்ந்து, திருவடியில் பொன்மணிக் கிண்கிணி யொலிக்கத் தளர்நடை யிட்டார். சுருண்டு இருண்ட தலைமயிரைப் பின்னிச் சுட்டியணிந்தும், திருக்காதுகளில் குதம்பையும், காதணியும் விளங்கவும், திருக்கழுத்தில் மணிமாலைகளும், மார்பினில் ஐம்படையணியும், திருக்கரங்களில் பொன்னாபரணங்களும், இடையில் மணிச் சதங்கைகளும் அழகு செய்யத் திருவிளையாடல் புரிந்தார். மூன்றாவது ஆண்டில் முடியெடுத்து மங்கலச் சடங்குகள் புரிந்தார்கள். ஐந்தாவது ஆண்டில், மிகமிகச் சிறப்பாகப் பள்ளியில் வைத்தார்கள்.

அந்நாளில் புகலியில் வந்து அவதரித்த திருஞானசம்பந்தர் தமது தொண்டர் குழாத்துடன் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளி னார். சிறுத்தொண்டர் அவரது வரவையறிந்து, வழிமுழுதும் வாழை கமுகுகள் நாட்டி, மாலைகள் தொங்கவிட்டு, நிறைகுடமும் வாச மணிவிளக்கும் வைத்து, எதிர்கொண்டு, பிள்ளையாருடைய திருவடிகள் மீது வீழ்ந்து வணங்கி ஆராத காதலுடன் அழைத்து வந்தார். தமது திருமாளிகையில் இருத்தி அவருடைய திருவடி பூஜை செய்து ஞான போனகருக்கும் உடன் வந்த அடியார்கட்கும் திரு அமுது அளித்தார். திருஞானசம்பந்தர் கணபதீச்சரக் கடவுளைப் பாடும் பதிகத்தில் சிறுத்தொண்டருடைய திருத் தொண்டினைச் சிறப்பித்துப் பாடியருளினார்.

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூர
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டு ளனலேந்தி விளையாடும் பெருமானே.

திருஞானசம்பந்தர் சிலநாள் சிறுத்தொண்ட நாயனாருடைய திருமாளிகையில் தங்கியிருந்து அவரிடம் விடைபெற்றுச் சென்றருளினார்.

இவ்வாறு, சிறுத்தொண்ட நாயனார் ஒப்பற்ற அன்புடன் நாளும் அடியவர்கள் திருக்கூட்டத்திற்கு இனிய அமுது ஊட்டி அரிய திருத்தொண்டு புரிந்துவர, இவருடைய பற்றற்ற தொண்டின் பெருமையை உலகத்திற்கு உணர்த்தி உய்விக்க திருக்கயிலாயபதி திருவுளங் கொண்டருளினார். அவ்வாறு, திருவுளங் கொண்ட தேவதேவர் வைரவ சந்யாச வடிவங் கொண்டருளினார்.

சிவந்த சடாமகுடமானது, கரிய முகிலினம் மொய்த்து எழுந்தது போல் சுருண்ட கரிய மயிர்முடி கவின் செய்தது; அம்முடியில் உடுக்குலங்களைப் பதியவைத்தாற்போன்று தும்பை மலர்கள் துலங்கின; திருநீற்றுப் புண்டரத்திற்கு இடையே பிறைமதியை சிறியதாக்கி வைத்தது போன்ற பொட்டு பொலிவு செய்தது. திருச் செவிகளில் இரத்தின மணியுடன் கூடிய சங்க வெண்குழையும், அதில் செருகிய செவ்வரத்தம் பூவும் இருபக்கங்களிலும் எழில் புரிந்தன; திருக்கழுத்திலேயுள்ள நீலகண்டத்தை மறைக்கும்படி, அமுதக்குமிழி போன்ற பளிங்கு மணிவடங்கள் கட்டப்பெற்று, அதைக் கண்டார் உயிரையும் உடம்பையும் உருக வைத்து ஒளி செய்தன; செய்ய மேனியில் கஞ்சுகமும், சங்கு மாலையால் ஆகிய சன்ன வீரமும், தோள் வளையங்களும் கடிசூத்திரமும், திருவடியில் பொற்கலனும் அழகு செய்தன.

'உலகினரே! அடியவர்கட்கு அரனார் புரியும் திருவருளின் எளிமையை உணர்ந்து உய்மின்கள்; அன்பின் வழியில் நிற்பீர்களாக" என்று அறைவன போன்று திருவடிகளில் மணிச்சிலம்புகள் இனிது ஒலித்தன. அயன் கபாலந்தரித்த இடத் திருக்கரத்தில் தாங்கித் திருமார்பில் அணைத்த திரிசூலமும், வலத் திருக்கையில் தமருகமும் விளங்கின. திருவடித் தாமரை நிலஞ்செய் தவத்தால் நிலத்தில் ஆடவும், அருள் பொழியும் திருமுகத்தில் புன்முறுவலின் ஒளி வீசவும், மும்மலத்தின் வலியைக் கெடுக்கும் முச்சூலத்தின் வெயில் பரவவும், இறைவர் இத்தகைய திருக்கோலங் கொண்டு திருச்செங்காட்டங்குடியை அடைந்தருளினார்.

நாடோறும் ஆயிரக்கணக்கான அடியார்கள் அன்னமுண்ணும் மனையில் அன்று ஒருவரும் வந்தாரில்லை. அடியார்கட்கு அமுது செய்விக்கும் குறிக்கோளுடைய நாயனார் அதுபற்றிப் பெரிதும் வருந்தினார். தனது விரதத்திற்கு இடையூறு வரக்கூடாதே என்று அஞ்சினார். அதனால், அடியாரைத் தேடிக்கொண்டு வெளியே போயிருந்தார்.

வைரவராக வந்த சிவபெருமான் மிகுந்த பசியுடையவர்போல், எதிரிலே கண்டவர்களை, "சிறுத்தொண்டர் திருமனையெங்கே?" என்று வினாவிக்கொண்டு, அவருடைய திருமாளிகைக்கு முன்னே வந்து நின்றார். "சிறுத்தொண்டர் உள்ளே இருக்கின்றாரோ?" என்று அழைத்தருளினார். மனைக்குள் இருந்த 'சந்தன நங்கை' என்ற வேலைக்காரம்மை முன்வந்து, வைரவர் திருவடியைத் தொழுது, "பெருமானே! முடிவிலாத அடியார்களைத் தேடிக்கொண்டு

நாயனார் வெளியே போயிருக்கின்றார். எம்மையாளவந்த எந்தையே! உள்ளே வந்து இருங்கள்'' என்று கூப்பிட்டார்.

வைரவர் அம் மாதின் முகம் நோக்கி, "அம்மா! பெண்கள் தனித்திருக்கின்ற இடத்தில் நாம் வரமாட்டோம்'' என்றார். இச்சொல்லை உள்ளிருந்து கேட்ட வெண்காட்டு நங்கையார், வந்த அடியார் சென்று விடுவார்போல் காணப்படுகின்றது என்று கருதி அஞ்சி, மனைவாழ்வின் கடமை பூண்ட அவர் வாயிலின் முன்வந்து தொழுது கூறுவார். "அடிகளே! சிவபிரான் அடியார்கள் அமுது செய்ய இன்று ஒருவரும் வராமையால் அவர் அடியாரைத் தேடிக் கொண்டு வெளியே போயிருக்கின்றார். தேவரீர் எழுந்தருளி யிருக்கின்ற திருவேடத்தைக் கண்டால் தமது பெரும்பேறு என்று கருதி மிக்க மகிழ்ச்சியடைவார். இங்கு எழுந்தருளியிரும்; விரைவில் வந்துவிடுவார். தாமதிக்க மாட்டார். இருந்தருளுவீர்'' என்று விண்ணப்பஞ் செய்தார். "அம்மா! நாம் இருப்பது வடதேசம்; புகலுதற்கரிய புகழுடைய சிறுத்தொண்டரைக் காணும் பொருட்டு வந்தோம். நாம் எவ்வகையானும் அவர் இல்லாத இவ்விடத்தில் இருக்கமாட்டோம். கணபதீச்சுரம் கோயிலில் அழகிய மலர்கள் நிறைந்த ஆத்திமரத்தின்கீழ் அமர்ந்திருக்கின்றோம். அவர் வந்தவுடன் நாம் இருக்குந் தன்மையைக் கூறுவீர்'' என்று உரைத்தருளி, கணபதீச்சரம் என்னும் திருக்கோயில் சென்று திரு வாத்தியின் கீழ் எழுந்தருளியிருந்தார்.

சிறுத்தொண்டர் அடியவர்களைத் தேடித் தேடித் திரிந்தார். சாலைகளிலும், முடுக்கு மூலைகளிலும், சோலைகளிலும், மணல் மேடைகளிலும், தாமரை ஓடைகளிலும், மற்று எங்கும் ஓடி ஓடித் தேடினார். திகைத்தார். ஒருவரையுங் காணாது வருந்தினார். மீண்டு திருமாளிகை வந்தார். மனைவியாரை நோக்கி, "சிவன் செய்கின்ற சோதனையோ? முன் செய்த வினையின் வாதனையோ? அறியேன், எங்குத் தேடியும் அடியவர் ஒருவரையுங் காணேன். என் செய்வேன்?'' என்று கூறினார்.

திருவெண்காட்டு நங்கையார் கணவனாரைத் தொழுது கூறுவார்! "பெருமானே! உத்தராபதியிலிருந்து ஒருவர் வந்தார். எழுந்தருளியிருக்குமாறு வேண்டினோம். அவர் "ஆடவர் இல்லாத இடத்தில் இருக்கமாட்டோம்; கோயிலில் ஆத்திமரத்தின் கீழ் இருக்கின்றோம்'' என்று கூறிச் சென்றார். தாங்கள் விரைந்து சென்று அப் பயிரவரைக் கண்டு அழைத்து வாரும்'' என்றார். அதைக் கேட்ட நாயனார் அமுதுண்டார்போல் மகிழ்ந்தார். "அடியேன்

உய்ந்தேன்" என்று கூறி, மிகுந்த விருப்பத்துடன் விரைந்து திருக் கோயிலை அடைந்து, திருவாத்தியின்கீழ் எழுந்தருளியுள்ள வயிரவரைக் கண்டார். அவர் திருவடிமீது வீழ்ந்து வணங்கி நின்றார். "நின்ற தொண்டரை நோக்கிப் பெரிய சிறுத்தொண்டர் என்பது நீர்தானோ?" என்று வயிரவர் வாய்மலர்ந்து கேட்டருளி னார்.

சிறுத்தொண்டர் தொழுது கூறுவார்: "எம்மை யாளவந்த எந்தையே! திருநீறணியும் அடியார்களை வணங்குந் திறம் அடியேனுக்கில்லை. ஆயினும், அடியார்கள் கருணையினால் அடியேனை அவ்வாறு கூறுவார்கள். குற்றமில்லாத சிவனடியார் களை அமுதுசெய்விக்கும் பொருட்டு இன்று இவ்வூரில் எவ் விடத்தில் தேடியும் கிடைக்கவில்லை. அடியேன் செய்த தவத்தினால் தங்களைக் கண்டேன். இனி தாமதிக்க வேண்டாம். அடியேனுடைய மனைக்கு எழுந்தருளி வந்து அமுதுசெய்ய வேண்டும்" என்றார்.

வைரவர் : நிறைந்த தவமுடையீர்! உம்மைக் காணும் பொருட்டு வந்தோம். நாம் இருப்பது உத்தராபதி; எமக்கு அன்புடன் அமுதூட்ட உம்மால் முடியாது; அது உமக்கு அரிய செயலாகும்.

சிறுத்தொண்டர் : சுவாமி! அடியேன் சிந்தியாமல் ஒன்றையும் சொல்லமாட்டேன். தேவரீர் அமுது செய்யும் தன்மையை அருளிச் செய்யும். சிவனடியார் முயற்சி செய்து தேடினால் இல்லாதனவும் உளவாகும். அருமையில்லை. உரைத்தருளும்.

வைரவர் : அன்பரீர்! நாம் ஆறு மாதத்திற்கு ஒருமுறைதான் உண்போம். பசு வதைத்து உண்போம். அதற்குரிய நாள் இன்று. உம்மால் எமக்கு உணவு செய்விக்க இயலாது.

சிறுத்தொண்டர் : பெருமானே! சாலவும் நன்று; மூன்று வகையான பசுக்களும் அடியேனிடத்தில் உண்டு. ஒரு குறையு மில்லை. அடியவராகிய தங்கள் அமுதுக்கு உரிய பசு இன்னது என்பதை அருளிச் செய்யும். அடியேன் போய் காலந்தாழாமல் அமுது தயாரித்து விரைவில் வருவேன்.

வைரவர் : நண்பு மிக்கீர்! உமது அன்புக்கு மகிழ்ச்சி; நாம் உண்பது நரப் பசுவாகும்; அதுவும் ஐந்து வயதுக்குள் இருக்க வேண்டும். அங்கப் பழுதில்லாமலிருக்க வேண்டும். புண்ணில் வேல் எறிந்தது போன்ற மறறொரு செய்தியுளது.

சிறுத்தொண்டர் : எந்தையே! உமது அருளினால் எதுவும் அரியதில்லை. இனி அருளிச் செய்யும்.

வைரவர் : ஒருகுடிக்கு நல்ல ஒரு மகனாக இருக்க வேண்டும். தாயார் மடியில் வைத்துப் பிடிக்கும்பொழுது தந்தை மனமகிழ்ச்சியுடன் அரிந்து, குற்றமின்றி அமைத்த கறி நாம் உண்பது; தாய், தந்தை, மகன் மூவரும் உவப்புடன் இருத்தல் வேண்டும்.

சிறுத்தொண்டர் : சுவாமீ! தேவரீர் அமுது செய்வதானால் இதுவும் அரியதில்லை. சற்று இரும். தாங்கள் கூறியபடியே அமைத்து வந்து அழைப்பேன் என்று கூறி அவரைத் தொழுது புறப்பட்டார்.

அங்கிருந்து புறப்பட்டுத் சிறுத்தொண்டர் தமது திருமனையையடைந்தார். அன்புமிக்க பெருங் கற்புடைய திருவெண்காட்டம்மை கணவனார் வரவுநோக்கி வாயிலின்முன் நின்றிருந்தார். கணவனாருடைய மலர்ந்த முகத்தைக் கண்டு, வணங்கி வயிரவர் செயலை வினாவினார். சிறுத்தொண்டர் மனைவியாரை நோக்கி, "பெண் மணியே! வந்த மாதவர் அமுதுசெய்ய இசைந்தார். நற்குடியில் ஒருமகனாய்ப் பிறந்த ஐந்தாண்டுடைய அங்கப் பழுதில்லாத அழகிய குமாரனைத் தாய்பிடிக்கத் தந்தை யரிந்து சமைத்தால் உண்பேன்" என்றார்.

அரிய கற்புடைய மனைவியார், "பயிரவத் தொண்டர் அமுது செய்வதற்கு நாம் உரிய வகையால் அமுது அமைக்கலாம்; ஒரு குடிக்கு ஒரு மகனை எவ்வாறு எங்குத் தேடுவோம்?" என்றார். சிறுத் தொண்டர், "மாதரசே! இவ்வகைக்கு நிதி நிரம்பத் தந்தால் மகனைத் தருவார்கள். ஆனால், தாய், தந்தையர் தமக்குள் மனமகிழ்ந்து அரிந்து தரமாட்டார்கள். நான் உய்ய நீ பெற்றெடுத்த புத்திர மணியை அழைப்போம்" என்றார்.

இவ்வாறு, கணவர் கூறககேட்ட அந்த உத்தமி சிவனடியார் அமுது செய்ய, அதனால் உய்வுபெற்று மகிழும் கணவர் திரு முகத்தைக் காண்பதே கடமை என்று நினைந்து, "உயிர்த் துணைவரே! அவ்வண்ணமே நம்மைக் காக்க வந்த மாமணியைச் சென்று பள்ளியினின்றும் அழைத்து வாரும்" என்றார்.

சிறுத்தொண்ட நாயனார் மகனைப் பெற்ற பெரும்பேறு முழுவதும் பெற்றதைப்போல் பெரிதும் மகிழ்ந்தார். இனிய மழலை மொழியுடன் கூடிய திருமகன் கல்வி பயில்வதற்காகச் சென்ற பள்ளிக்குச் சென்றார். பள்ளியிலே தந்தையாரைக் கண்டவுடன் பாதச் சதங்கை மணியொலிப்பப் பிள்ளை ஓடிவந்து தந்தையாரைத்

தழுவிக் கொண்டது. அருமையான திருப்புதல்வரை எடுத்து அன்புடன் அணைத்துத் தோளின் மீது வைத்துக்கொண்டு இல்லத்தை அடைந்தார். திருவெண்காட்டம்மையார் எதிர்சென்று மாணிக்க மணிவிளக்குப் போன்ற திருமகனாரை வாங்கி, தலை மயிரைத் திருத்தி, முதுகு தடவி, உள்ளம் உவந்து வர்சநீரால் திருமஞ்சனமாட்டிக் குறைவற ஆடை அணிகலன்களால் அழகு படுத்திக் கணவன் கரத்தில் எடுத்துக்கொடுத்தார்.

நாயனார் குற்றமில்லாத நற்றவருக்கு அமுது செய்ய உரிய உடம்பு என்று மகனை உச்சி மோந்தாரில்லை; முத்தமிடமில்லை. மார்பில் அணைத்துக்கொண்டு, தமது திருமாளிகையில் உலகர் அறியா வண்ணம் ஒருபுறத்தில் கொண்டு போனார். திருவெண் காட்டு நங்கையார் பாத்திரங்களை நன்கு கழுவி வைத்தார். உலகை வென்ற தந்தையார் மகனது தலையைப் பிடித்தார். தாயார் இனிய மழலைக் கிண்கிணியுடைய பாதங்கள் இரண்டையும் மடியில் இடுக்கிக்கொண்டு கரங்கள் இரண்டையும் கையில் பற்றிக் கொண்டார். 'சிவனடியாருக்குத் தன்னை நிவேதிக்கும் பொருட்டு இச்செயல் நிகழ்கின்றது' என்பதை அறிந்த சீராளதேவர், "நாய்க்கும் பேய்க்கும் இரையாகும் இந்த ஊன உடம்பு அடியார் அமுது செய்யப் பயன்பட்டதே" என்று எண்ணி மகிழ்ச்சியுற்றார். மகன் மகிழ்கின்றான் என்பதை யறிந்த தந்தையார் வாள்கொண்டு ஒப்பற்ற மகனது தலையை யரிந்தார். புத்திரன் என்ற சொல்லின் பயனை இவன் நமக்கு அளித்தான் என்று நாயனார் மகிழ்ந்தார். "அடியார் அமுதுசெய்யும் தொண்டுக்குத் தடை நேர்ந்தால் கணவனார் மாள்வார். ஆகவே, அவ்வாறு அவர் மாளாது உய்ய நாயகன் உயிரை எனக்கு இவன் தந்தான்" என்று தாயார் மகிழ்ந்தார்.

இவ்வாறு, இருவர்களும் அகமும் முகமும் மலர்ந்து செயற்கு அரிய அச்செயலைச் செய்தார்கள். தலையின் இறைச்சி அமுதுக்கு ஆகாது என்று கருதிச் சிறுத்தொண்டர் தமது வேலைக்காரியாகிய சந்தன நங்கையின் கரத்தில் தந்து புதைக்குமாறு கட்டளையிட்டார். ஏனைய உறுப்புக்களைச் சமைக்கத் தகுந்த பக்குவமாகக் கூறு செய்து மனைவியாரிடம் தந்தார். திருவெண்காட்டம்மை அவை களை அடுப்பில் ஏற்றி அதனை நன்கு சமைத்துத் தாளிதமும் செய்து, அன்னமும் அமைத்து, "எல்லாம் தயாராகிவிட்டது; நீர் சென்று அடியாரை அழைத்து வாருங்கள்" என்று கணவனாரிடம் கூறினார்.

வயிரவர் உரைத்தபடியே எல்லாம் அமைத்து முடித்ததை எண்ணி அளவற்ற மகிழ்ச்சியடைய நாயனார் விரைந்து திருக்

கோயிலில் வண்டுகள் இருந்து ஒலிக்கும் திருஆத்திமரத்தின் கீழ் அமர்ந்திருக்கும் புனிதர் திருமுன் சென்றார். வயிரவருடைய மலரடியை வணங்கி நின்று கூறுவார்: "கருணை நிறைந்த பெரு முனிவரே! அடியேனுடைய இல்லத்திற்கு உணவு செய்ய எழுந் தருளும். எல்லாம் ஆயத்தமாக இருக்கின்றது; சிறிது காலந் தாமதித்தது. தேவரீர் பசித்திருக்க வைத்த குற்றத்தை மன்னித்தருள வேண்டும். இனி ஒருகணநேரமுந் தாமதிக்காமல் வந்து அமுது செய்யும்" என்றார். கண்டத்தில் உள்ள கறையையும், நெற்றியிலே யுள்ள கண்ணையுங் காட்டாது மறைத்துவந்த வயிரவர், "நல்லது வாரும்" என்று எழுந்து நடக்கலுற்றார். வறுமையாளன் சங்கநிதி பதுமநிதி என்ற இருநிதிகளை ஒருங்கே பெற்றதுபோல் சிறுத் தொண்டர் மனமகிழ்ந்து வயிரவரை அழைத்துக்கொண்டு மனை புகுந்தார்.

வீடு முழுவதும் மாலைகள் தொங்கவைத்து, தூப தீபங்கள் அமைத்து, நிறைகுடம் வைத்து எதிர்பார்த்திருந்த அம்மையார் எதிர்வந்து அரனடியார் அடிமலரை வணங்கி ஆசனத்தில் இருத்தினார். மனைவியார் நன்னீர் கரத்தில் எடுத்து வார்க்க நாதனடியார் பாதமலரை நாயனார் விளக்கினார். பாதபூஜை செய்த நீரைத் தன் சென்னிமீதும் மனைவியார் சிரமீதும் வீடு முழுவதும் தெளித்தார். திருவடிகட்குச் சந்தனமும் மலர்களும் சாத்தி தூப தீபங்காட்டி வழிபட்டார். "இனி அமுது படைக்கலாமோ?" என்று வினாவினார். அன்னமும் கறிகளும் ஒன்றாகப் படைக்குமாறு அவர் பணித்தருளினார்.

இலையிட்டு அன்னமும் கறிகளும் படைத்தார்கள். அவற்றை யெல்லாம் பார்த்தருளிய பயிரவர், "நாம் சொன்னபடியே நரப் பசுவைக் கொண்டு எல்லாம் அமைத்தீரோ?" என்று கேட்டருளி னார். திருவெண்காட்டம்மையார், "தயாநிதியே! தலையிறைச்சி அமுதுக்கு ஆகாது என்று அகற்றினோம். மற்றவை யாவும் கறியமுது அமைத்துள்ளனம்" என்றார். அடியாரீ, "அதுவுங்கூட நாம் உண்போம். ஆகவே, அதனையும் படையுங்கள்" என்றருளினார். அதைக் கேட்ட சிறுத்தொண்டர் நடுநடுங்கினார். சிந்தை நொந்தார். "அந்தோ! கெட்டேன். இத்தனை செய்தும் இப்பயிரவர் அமுது செய்யத் தடை நேர்ந்ததே. சிவபெருமானே! இனி என் செய்வேன்? தலையிறைச்சியையும் இவர் உண்பார் என்பதை யறியாது அயர்ந்தேன்" என்று பலப்பல நினைந்து வருந்தினார். "ஆ! ஆ! இனி செயத்தக்கது யாது?" என்று திருவெண்காட்டு நங்கையுந் திகைத்தார்.

அந்த வேளையில் அமுத சஞ்சீவி வந்து உதவியதுபோல் சந்தன நங்கை என்ற தாதியார், "தாங்கள் வருந்தவேண்டா. தாங்கள் தலையைப் புதைக்குமாறு தந்தபோது, ஒருக்கால் வயிரவப் பெருமானார் தலையிறைச்சியும் கேட்கக் கூடுமோ? என்று நான் எண்ணி தனியே அதனைச் சமைத்து வைத்திருக்கிறேன். இதோ இருக்கின்றது" என்று கூறி, அதனைக் கொணர்ந்து கொடுத்தார். பெரிய சுமை நீங்கியதுபோல் களிப்புற்ற நாயனரும், அம்மையாரும் அதனை வாங்கி வந்து, வயிரவர் முன் பரிகலத்தில் படைத்தார்கள். "பெருமானே! தாங்கள் பணித்தருளியபடி இதோ தலைக்கறியும் படைத்துளது. அமுது செய்தருளும்" என்றார்.

வயிரவர், "அன்பரே! நாம் தனித்து உண்ணமாட்டோம். உடன் இருந்து உண்ண ஓர் அடியாரை அழைத்துவாரும்" என்று பணித் தருளினார். அதைக்கேட்ட நாயனார் இடியேறுண்ட நாகம்போல் நடுங்கினார். "ஆ! கெட்டேன். அமுது செய்ய இதுவோ தடை? இவரைத் தேடிக் கண்டுபிடிக்க இத்தனைப் பாடுபட்டேனே? ஊர் முழுவதும் தேடியும் ஒருவரையுங் காணாது கவன்றேன். எண்ணிலாத அடியார்கள் வருகின்ற இவ்விடத்திற்குச் சோதனை யாக இன்று ஒருவரேனும் வரவில்லை. இனி, நான் வேறு ஒருவரை எங்குபோய் கொணர்வேன்; ஈசனே! சிவகாமி நேசனே! பாவ நாசனே!" என்று சிந்தனை செய்து, வீட்டைவிட்டு போய் சுற்று முற்றும் பார்த்தார். திருவருளின் செயலால் ஒருவருங் கிடைக்க வில்லை. சிந்தை நொந்து உள்ளே வந்து, வாடிய முகத்துடன் வயிரவ்வரை வணங்கினார். "எந்தையே! எங்கும் சிவனடியாரைக் காணப் பெற்றேனில்லை. அடியவர்களைக் கண்டு அடியேனும் திருநீறு பூசிக் கொண்டிருக்கின்றேன்" என்றார்.

வயிரவர், "ஓ! நல்லது, நல்லது. உம்மைப்போலே திருநீறு இட்டார் எவருளர்? அருகில் அமர்ந்து நீர் எம்முடன் உண்ணும்" என்று அருளிச்செய்து, அம்மா! அருகில் ஓர் இலை போடும். இந்த அன்னத்தில பாதியும் இந்த இறைச்சிகளில் ஒரு கூறும் எடுத்து அந்த இலையில் படையும்" என்று திருவெண்காட்டம்மையை நோக்கிப் பணித்தருளினார். அவர் அவ்வாறே படைத்தருளினார். வயிரவரை விரைவில் அமுது செய்விக்கும் பொருட்டுச் சிறுத் தொண்டர், இலையில் கையை வைத்து உண்ணப் புகுந்தார்.

உடனே, வயிரவர் தடுத்தருளி, "நில்லும் நில்லும். நாம் ஆறு மாதங்கட்கு ஒருதடவை உணவு செய்வோம். நாம் இன்னும் அருந்துதற்குத் தொடங்கவில்லை. நாடோறும் உணவு செய்யும்

நீர், நாம் உண்ணுமுன் உண்ணத் தொடங்கியது முறையோ? நல்ல குழந்தையைப் பெற்றிருக்கலாமே? நம்முடன் இருந்து உணவுசெய்ய மைந்தனை அழையும்" என்றருளிச் செய்தார். முதலும் முடிவும் இல்லாத முதல்வரை நோக்கிச் சிறுத்தொண்டர், "எந்தையே! அவன் இப்போது உதவான்" என்றார்.

ஆறு திங்கள் ஒழிந்துண்போம் உண்ணு மளவு தரியாது
சோறு நாளும் உண்பீர்முன் உண்ப தென்நம் முடன்துய்ப்ப
மாறின் மகவு பெற்றீரேல் மைந்தன் தன்னை அழையுமென
ஈறும் முதலும் இல்லாதார்க் கிப்போ துதவான் அவன்என்றார்.

வயிரவர், "சிறுத்தொண்டரே! நாம் உமது புதல்வன் வந்தால் தான் உண்போம். இப்போது உதவான் என்று ஏன் கூறுகின்றீர்? அவன் எப்போதும் உதவுவான். நீர் சென்று நாடி யழையும்" என்று அருள் செய்தார். வையம் புகழுஞ் சிறுத்தொண்டர் "இனி இவர் அமுதுசெய்ய நாம் என்ன செய்வோம்?" என்று சிந்தித்து, நறுமலர் சூடிய திருநிகர் மனைவியாருடன் வெளியே சென்று மைந்தனை அழைக்கின்றார்.

எந்தாய்! வருக இடர்தீர்க்க இங்கு வருக எமதுகுல
மைந்தா! வருக மாணிக்க மணியே! வருக மாதவத்தால்
வந்தாய்! வருக மறைஞான மதலாய்! வருக மதியனையாய்!
சிந்தா குலந்தீர் சீராள தேவா! வருக வருகவே.

"எங்கள் கண்ணே! சீராளதேவா! மாதவத்தால் வந்த மணி விளக்கே! குணம் நிறைந்த குலக்கொழுந்தே! அடியார் அமுது செய்யும் பொருட்டு அன்புடன் அழைக்கின்றோம். வாராய் மகனே! வயிரவர் உன்னை அழைக்கின்றார். வாராய் மகனே! வந்து எங்கள் கவலை தீராய்" என்று என்புருக அன்புடன் ஓலமிட்டு அழைத்தார்கள்.

பரமேசுரன் திருவருளால் பள்ளியினின்றும் ஓடி வருவார்போல் சீராளதேவர் காலில் சதங்கை ஒலிக்க பொன்னாபரணங்கள் விளங்கத் தளர்நடையிட்டு ஓடிவந்தார். திருவெண்காட்டு நங்கையார் அந்த புத்திர மாணிக்கத்தை ஒப்பிலாத அன்புடன் எடுத்து அணைத்துத் தழுவிக் கணவனாரிடம் தந்தார். தந்தையார் சிந்தை மகிழ்ந்து வாங்கி, "இனி சிவபெருமானுடைய அடியார் உண்ணப் பெற்றோம்" என்று உவகை கொண்டார்.

திருமகனை எடுத்துக்கொண்டு அடியாரை அமுது செய்விக்கும் பொருட்டு உள்ளே சென்றார். பயிரவராக வந்த முதல்வர்

மறைந்தருளினார். பயிரவரைக் காணாது சிறுத்தொண்ட நாயனார் சிந்தை கலங்கினார்; அடியற்ற மரம் போலே கீழே வீழ்ந்தார். அவர் மனம் சுழன்றது. கண்கள் சுழன்றன. இலையிலே இருந்த வெந்த இறைச்சிகளையும் கண்டாரில்லை. அஞ்சினார்.

> செய்ய மேனிக் கருங்குஞ்சிச் செழுங்கஞ் சுகத்துப் பயிரவர்யாம்
> உய்ய அமுது செய்யாதே ஒளித்த தெங்கே எனத்தேடி
> மையல் கொண்டு புறத்தணைய மறைந்த அவர்தாம் மலைபயந்த
> தைய லோடும் சரவணத்துத் தனய ரோடுந் தாமணைவார்.

"சிவந்த திருமேனியும் கரிய தலைமயிரும் செய்ய சட்டையும் அணிந்த பயிரவர் நாம் உய்யும் பொருட்டுத் திருவமுது செய்யாது எங்கே ஒளிந்தார்?" என்று தேடி, மனம் மருண்டு திருமனையின் புறத்தே வந்து நோக்கினார். மறைந்த அப்பரமபதி மலைவளர் மங்கையுடன் மயில்வாகனக் கடவுளுடனும் வெள்விடையின் கண் ஆரோகணித்து வானிடை காட்சியளித்தார். பூதகணங்கள், தேவர்கள், விஞ்சையர்கள், நாரதாதி முனிவர்கள் முதலியோர் புடை சூழ்ந்து போற்றி செய்தார்கள். இறைவனார் இனிய கறியும் அமுதும் படைத்த அடியார்க்குத் திருவருள் நோக்கஞ் செய்தருளினார்.

> அன்பின் வென்ற தொண்டரவர்க் கமைந்த மனைவி யார்மைந்தர்
> முன்பு தோன்றும் பெருவாழ்வை முழுதுங் கண்டு பரவசமாய்
> என்பும் மனமும் கரைந்துருக விழுந்தார் எழுந்தார் ஏத்தினார்
> பின்பு பரமர் தகுதியினால் பெரியோ ரவருக் கருள்புரிவார்.

அன்பினால் பாசத்தை வென்ற சிறுத்தொண்டரும், அவருடைய மனைவியாரும் சீராளதேவரும் தமக்கு முன்னே தோன்றிய சிவ மூர்த்தியை முழுதுங் கண்டு பரவசமுற்று உள்ளமும் உயிரும் என்பும் கரைந்து உருக மண்மிசை வீழ்ந்தார். எழுந்தார். "எம்மையாள வந்த ஈசனே! பாவநாசனே! அடியவர் நேசனே! என்னே உமது கருணை? எம்மையும் ஒரு பொருளாக எண்ணி, மூவருக்கும் தேவருக்கும் எட்டா முழுமுதற் கடவுளாகிய தேவரீர் எளிதில் எழுந்தருளி வந்தீரே! எங்கள் தவமே தவம். கற்பகோடி காலந் தவங்கிடந்தாலும் உம்மைக் காணமுடியாதே. எங்கள் கண் காணவந்த கண்ணுதற் கடவுளே!" என்று துதி செய்தார்கள்.

சிவபெருமான் திருவடிக்கீழ் சிறுத்தொண்டரும், உமையம்மை யார் திருவடிக்கீழ் திருவெண்காட்டு நங்கையும் சந்தன நங்கையும், வேல்முருகன் திருவடிக்கீழ் சீராளரும் இருந்து என்றும் பிரியாது இன்புற்றிருக்க அந் நால்வரும் உடன் வர அழைத்துக்கொண்டு

சிவலோகத்திற்கு இறைவர் எழுந்தருளினார். மெய்ம்மையான அன்புடன் அடியவர்கட்கு அன்னமளித்த பயன் சிறுத்தொண்டர் அழியாத சிவபதம் அடைந்து பேரானந்தப் பெருவாழ்வில் என்றும் நின்று இன்புறுவாராயினார்.

விளக்கம்

திருச்செங்காட்டங்குடி

விநாயகப் பெருமான், இமையவர்கட்கும் முனிவரர்கட்கும் இடர் பல இழைத்த கஜமுகாசுரனை மாய்த்தருளிய போது, அவன் உடம்பிலிருந்து வெளிப்பட்ட உதிரம் அக்காடு முழுவதும் பரவியதனால் அக்காடு சிவந்த நிறத்தை அடைந்தது. அதனால் அதற்குச் செங்காடு என்ற பேர் உண்டாயிற்று; கணபதி ஆங்கு ஆத்திமரத்தின் கீழ் ஒரு சிவலிங்கத்தை எழுந்தருளப் புரிந்து பூசித்தார். அங்குப் பலர் குடியேறினார்கள். அதனால், அப்பதி திருச்செங்காட்டங்குடி எனப் பெருமை பெற்றது. அத் திருக்கோயில் ‘கணபதீச்சுரம்’ எனப்படும்.

ஆத்திமரம் பழமையானது; இன்றும் இருக்கின்றது. அதன்கீழ் உத்தராபதீச்சுரர் திருவுருவம் மிகவும் அருமையாக அமைந்துள்ளது.

இத்தலம் நன்னிலத்திற்கு அருகில் உள்ளது. போகும் வழியில் அப்பர் முத்தி பெற்ற திருப்பூம்புகலூர் இருக்கின்றது. அரவந் தீண்டி மடிந்த செட்டி மகனைச் சம்பந்தர் திருப்பதிகம் பாடி எழுப்பிய திருமருகல் திருச்செங்காட்டங்குடிக்கு மிக அண்மையில் உள்ளது. திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் இருந்த மனை இப்போது திருக்கோயிலாக அவர் திருவுருவத்துடன் விளங்கு கின்றது.

சிறுத்தொண்டர்

இவருடைய இயற்பெயர் பரஞ்சோதியார். இவர் தொண்டி னாலே சிறியவரல்லர்; இவர் செய்த தொண்டு மிகப்பெரியது. நினைக்கவும் அரிய அத்துணை மேன்மை பெற்றது. இவர் இப்பெயர் பெற்ற காரணத்தைச் சேக்கிழார் பெருமானே கூறியருளி யிருக்கின்றார்.

இவர் மிகப்பெரிய வீரர். படைக்கலங்களில் வல்லவர்; தன்னை யுடைய பல்லவ மன்னனால் வெல்லுதற்கரிய வடபுலத்து வாதாவி மன்னனை வென்று வாகைமாலை சூடிவந்தவர். இத்தகைய சிறந்த

வீரராக விளங்கிய இவர், சிவனடியார் திருமுன்பு எண்சாணுடம்பு ஒரு சாண்போல் குறுகி அடங்கி ஒடுங்கிச் சென்று தொழுவார். அடியார் திருமுன் மிகச் சிறியராகச் சென்று வழிபட்ட காரணத்தினால் இப்பெயர் பெற்றார்.

சீதமதி யரவினுடன் செஞ்சடைமேல் செறிவித்த
நாதனடி யார்தம்மை நயப்பாட்டு வழிபாட்டால்
மேதகையார் அவர்முன்பு மிகச்சிறிய ராயடைந்தார்
ஆதலினால் சிறுத்தொண்டர் எனநிகழ்ந்தார் அவனியின்மேல்.

“மக்கட் பாசத்தை யறுத்து மலையளவு தொண்டு செய்த இவர் சிறுத்தொண்டர் என்ற பேரைத் தாங்கினார் என்றால் ஒரு தொண்டுஞ் செய்யாது, தொண்டர்போல் நடிக்கும் நாங்கள் என்ன பேரைத் தாங்குவது?” என்று கூறி வள்ளலார் பாடுகின்றார்.

ஆர்கொண்டார் சேய்க்கறியிட் டாரே சிறுத்தொண்டப்
பேர்கொண்டா ராயிடிலெம் பெம்மானே - ஓர்தொண்டே
நாய்க்குங் கடைப்பட்ட நாங்களென்பேம் எங்கள்முடை
வாய்க்குமிங் கிஃதோர் வழக்கு.

இவர் இருந்த பதவி

சோழ தேயத்தை அரசுபுரிந்த மகேந்திரவர்ம பல்லவனுடைய புதல்வன் நரசிம்மவர்ம பல்லவன் என்ற மன்னனிடம் சேனை வீரராய்ச் சேர்ந்து, நாளடைவில் சேனாதிபதியாக ஆனார்.

யானைமீது ஏறிப் படைகளுடன் சென்று பலதேயத்து மன்னர்களுடன் போரிட்டுப் பற்பல தேயங்களைச் சோழ தேயத்துடன் இணைத்து, அம் மன்னர்களைக் கப்பங் கட்டுமாறு புரிந்தார். அதனால், இவர் பெருமை இமயம்போல் மிகவோங்கி நின்றது. அரசனுடைய நன்மதிப்புக்கு உரியராக உலகம் போற்றும் அலகிலாப் புகழுடன் இவர் விளங்கினார்.

ஈசனடி யார்க்கென்றும் இயல்பான பணிசெய்தே
ஆசில்புகழ் மன்னவன்பால் அணுக்கராய் அவற்காக
பூசல்முனை களிறுகைத்துப் போர்வென்று பொருமரசர்
தேசங்கள் பலகொண்டு தேர்வேந்தன் பாற்சிறந்தார்.

இவ்வாறு, பல தேயங்களை வென்றதுடன் அமையாமல், வடநாட்டில் வாதாவி என்ற நகரத்தை அரசுபுரிந்த புலிகேசி என்ற மன்னன், பல்லவனை மதியாது இருந்ததனாலும், முன்பு ஒரு சமயம் பல்லவன் அவன்பால் தோல்வியுற்றதனாலும் இவர் யானைமீது

சென்று, அப் புலிகேசியை வென்று, அவன் கோட்டையைத் துகள் செய்து, அங்குள்ள அரிய பெரிய ஒன்பது மணிகளையும், கரி பரி முதலியவைகளையும் கவர்ந்து வந்து மன்னனை மகிழ்வித்தார். இத்துணைப் பெரிய வீரச்செயல் புரிந்தவர் சிறுத்தொண்டர் என உணர்க.

மன்னவற்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியு நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனவெண் ணிலகவர்ந்தே யிகலரசன் முன்கொணர்ந்தார்.

வாதாவி என்ற நகரம், பம்பாய் ராஜதானியில் பெல்காம் மாவட்டத்தில் உள்ளது. சாளுக்கிய அரசன் புலிகேசியின் தலைநகரம்.

அங்குள்ள கல்வெட்டில், "பல்லவ மன்னன் நரசிம்ம வர்மனுடைய சேனாதிபதி பரஞ்சோதியாரால் வென்று தகர்க்கப் பட்டது" என்று காணப்படுகின்றது. இன்றும் இடிந்த கோட்டை அங்கே காணப்படுகின்றது.

இப் போர் நிகழ்ந்த காலம் கி.பி. 642. எனவே, ஏழாம் நூற்றாண்டில் நிகழ்ந்தது சிறுத்தொண்டர் வரலாறு என்றும், அதன் துணையால் அவர் காலத்தினர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய நாயன்மார்களுடைய காலமும் அதேகாலம் எனவும் துணியப்படுகின்றது.

இவர் கல்வித் திறம்

கல்வியென்பது தானும் பிறரும் உய்யும்பொருட்டு கற்கப் படுவது. இவர் தான் உய்ய வேதாகமங்களையும், பிறரை உய்விக்க ஆயுள் வேதக்கலையும் (மருத்துவக்கலை), தேசத்தின் பணிக்காக போர்க்கலைகளையும் கற்று அவற்றில் வல்லாராய் விளங்கினார். வல்லாராய் விளங்கியதுடன் அமையாமல் நல்லாராகவும் விளங்கினார்.

ஆயுள்வே தக்கலையும் அலகில்வட நூற்கலையும்
தூயபடைக் கலத்தொழிலுந் துறைநிரம்பப் பயின்றுள்ளார்
பாயுமதக் குஞ்சரமும் பரியுமுகைக் கும்பண்பு
மேயதொழில் விஞ்சையினும் மேதினியின் மேலானார்.

இத்தனையும் கற்றதோடு நில்லாமல் உயிர்க்கு உறுதி பயக்கும் அறிவுநூல்களையும் இடையறாது பயின்றார்.

கல்வியின் பயன் கடவுளை வணங்குவதேயாம் என்பதை இவர் நன்கு உணர்ந்து சிவபெருமானுடைய திருவடியில் பள்ளத்தை நாடிச் செல்லும் வெள்ளம்போல் அன்பு செய்யும் பண்புடையராய் விளங்கினார்.

உள்ளநிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றால்
தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவென்றே
கொள்ளுமுணர் வினின்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடை யாய்என்றும் பயின்றுவரும் பண்புடையார்.

அன்னதானச் சிறப்பு

மன்னன் தந்த நிதிகளையும் இவர்பால் இருந்த நிதிகளையுங் கொண்டு, சிவனடியார்கட்கு அன்னம் படைத்து அவர்கள் உண்ட பின் தான் உண்ணும் தொண்டினை நாடோறும் நியதியாக இவர் கொண்டிருந்தார்.

நறைஇதழித் திருமுடியார் அடியாரை நாடோறும்
முறைமையினில் திருவமுது முன்னூட்டிப் பின்னுண்ணும்
நிறையுடைய பெருவிருப்பால் நியதியா கக்கொள்ளும்
துறைவழுவா வகையொழுகுந் தூயதொழில் தலைநின்றார்.

என்ற திருவாக்கினால் இவருடைய நியதி விளங்குகின்றது.

என்ன தானங்களிலும் சிறந்தது அன்னதானம்.

கிருத யுகத்திலே உயிர் எலும்பைப்பற்றி நின்றது.
திரேதா யுகத்திலே உயிர் நரம்பைப்பற்றி நின்றது.
துவாபர யுகத்திலே உயிர் உதிரத்தைப்பற்றி நின்றது.
கலி யுகத்திலே உயிர் அன்னத்தைப்பற்றி நின்றது.

"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே"

என்று மேலோர் கூறுவர்.

ஆகவே, அடியார்கட்கும் வறியார்கட்கும் அன்னம் வழங்கும் திருத்தொண்டினை இவர் நியதியாகக் கொண்டார்.

அதுவும் குழம்பு, ரசம், சோறு இவைகளை ஓர் அண்டாவில் கொட்டி விரவிக் கதம்பமாக, சிலரை அடித்தும், சிலரை விரட்டியும், சிலரை வைதும் போடுகின்ற அன்னதானமா அது? அற்றன்று. இவர் செய்த அன்னதானத்தின் சிறப்பை அடியிற் கண்ட கவியினால் உணர்க.

தூயதிரு அமுதுகனி கன்னலறு சுவைக்கறிநெய்
பாயதயிர் பால்இனிய பண்ணியம்உண் ணீரமுதம்
மேயபடி யாலமுது செய்விக்க மிசைந்தடியார்
மாயிருஞா லம்போற்ற வரும்இவர்பால் மனமகிழ்ந்தார்.

ஒருநாள் இருநாள் அன்னதானம் புரிவதிலேயே எத்துணையோ இன்னல்கள் ஏற்படுகின்றன. அயர்ந்து விடுகின்றது உடம்பு; இவர் நாடோறும் செய்தார் எனில் இவருடைய ஊக்கமும் அன்பும் அளவிடற் கரியன.

ஆயிரம் அக்ரகாரம் அந்தணர்க்கு ஈந்த பயனும், ஆயிரம் கோபுரங்களுடன் கூடிய திருக்கோயில்களைக் கட்டிய புண்ணிய மும் ஒரு சிவஞானிக்கு அமுது படைத்த புண்ணியத்திற்கு நிகராகா என்பார் திருமூலர்.

அகர மாயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகர மாயிரம் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலுண் புலத்திற்கு
நிகரிலை யென்பது நிச்சயந் தானே.

இத்தகைய சிவஞானிகள் ஆயிரக்கணக்கானவர்கள் நாடோறும் சிறுத்தொண்டருடைய திருமனையில் அமுது செய்தார்கள் என்றால், அப்புண்ணியச் செயலின் சிறப்பை அளந்துரைக்க வல்லார் யாவர்? ஓர் உண்மையான சிவனடியாரை உண்பிப்பது, மூவுலகத்துள்ள உயிர்களையும் உண்பிப்பதோடொக்கும் என அறிக.

பயன் கருதாது, புகழை விரும்பாது கடமையுணர்ச்சியுடன் கணபதீச்சரப் பெருமானைக் கருத்திலிருத்தி உள்ளத்தில் நிறைந்த ஒப்பற்ற அன்பினால் எண்ணில்லாத அடியார்கட்கு அன்னம் படைத்து வழுவின்றி ஒழுகினார் என்பதை யாமெல்லாம் உணர்ந்துய்ய எங்கள் பெருந்தகையார் சேக்கிழார் அறிவிக்கின்றார்.

கண்ணுதலார் கணபதீச் சரத்தின்கண் கருத்தமர
உண்ணிறையன் பினில்பணிசெய் தொழுகுவார் வழுவின்றி
எண்ணில்பெருஞ் சீரடியார் இடைவிடா தமுதுசெய
நண்ணியபே ருவகையுடன் நயந்துறையு நாளின்கண்.

சிவஞானப் பாலுண்ட சிவகுமாரராகிய திருஞானசம்பந்த பரமகுருநாதர் தமது திருத்தொண்டர் குழாத்துடன் வந்து சிறுத் தொண்டர் திருமனையில் சில நாள் தங்கி அமுது செய்தாரெனில் இவருடைய சிவபுண்ணியத்திற்கு எல்லையுளதோ? பரமனையே

பாடும் பாலறாவாயர் தாம் பாடிய செந்தமிழ்ப் பதிகத்தில் இவரையும் இவர் திருப்புதல்வர் சீராளதேவரையும் சிறப்பித்துப் பாடியிருக்கின்றார்.

"பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே"

"சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன்"

திருஞான சம்பந்தருடைய திருவருளைப்பெற்று அவருடைய திருத்தொண்டரில் முதல்வராய் நின்றாராதலின் இவரை வணங்கினால் திருஞான சம்பந்தருடைய கருணையை எளிதில் பெறலாம் என்பதனை நம்பியாண்டார் நம்பிகள் கூறுமாற்றால் அறிக.

விரும்பும் புதல்வனை மெய்யரிந் தாக்கிய இன்னமிர்தம்
அரும்பும் புனற்சடை யாயுண் டருள்என் றடிபணிந்த
இரும்பின் சுடர்க்களிற் றான்சிறுத் தொண்டனை ஏத்துதிரேல்
சுரும்பின் மலர்த்தமி ழாகரன் பாதத் தொடர்வெளிதே.

திருவெண்காட்டு நங்கையார் :-

இவர் கணவனாரைக் கடவுளாகக் கருதி அவர் கருத்தறிந்து, குறிப்புணர்ந்து, மனமொத்து வாழ்ந்தார். இவருடைய பெருமை அளவிடற்கரியது. சிறுத்தொண்டருடைய வரலாற்றுக்கும் பெருமைக்கும் இவர் ஆணி வேராக நின்றவர். "மனையறத்தின் வேராகி விளங்கும் திருவெண்காட்டு நங்கை" என்று ஆசிரியர் அறிவிப்பதனால் அறிக.

இவர் கணவனாருடன் கருத்தொருமித்து, நாடோறும் ஆயிரக் கணக்காக வரும் சிவனடியார்களுக்கு மனஞ்சோராது முகம் வாடாது, இன்முகங்காட்டி, இன்னுரை கூறி நல்லமுதூட்டி, திருத் தொண்டு புரிந்து வந்தார்.

வேதகா ரணரடியார் வேண்டியமெய்ப் பணிசெய்யத்
தீதில்குடிப் பிறந்ததிரு வெண்காட்டு நங்கையெனுங்
காதல்மனைக் கிழத்தியார் கருத்தொன்ற வரும்பெருமை
நீதிமனை யறம்புரியு நீர்மையினை நிலைநிற்பார்.

தமது திருமனைக்கு வந்த பயிரவர் "பெண்கள் தனித்துள்ள இடத்தில் நாம் புகுதோம்" என்ற சொல்லைக் கேட்ட திருவெண்

காட்டு நங்கை, மனைக்கடன் பூண்டார் ஆதலின், உடனே அவருக்கு முன் வந்து,

> அம்பலவ ரடியாரை அமுதுசெய்விப் பார்இற்றைக்
> கெம்பெருமான் அடியாரைக் கண்டிலர்;தே டிப்போனார்
> வம்பெனநீர் எழுந்தருளி வருந்திருவே டங்கண்டால்
> தம்பெரிய பேறென்றே மிகமகிழ்வர்; இனித்தாழார்.
>
> "இப்பொழுதே வந்தணைவர் எழுந்தருளி யிரும்"

என்றுகூறி அவரை வேண்டியிருக்கச் சொன்ன திறன் மிகவும் போற்றுதற்குரியது.

அன்றியும் இவர் சித்தாந்த நூல்களில் வல்லவர் என்பதை அவர் திருவாக்கு புலப்படுத்துகின்றது.

பயிரவரை நோக்கி, "நீர் எழுந்தருளி வருந் திருவேடம்" என்று குறிப்பிட்டதை உற்றுநோக்குக. வேடத்தால் அவரை அடியவர் என்றாரேயன்றி ஏனைய பண்புகளால் அடியார் என்று கூறவில்லை. சிவனடியார் வேறு பயிரவர் வேறு என்ற குறிப்பு இதைப் புலப்படுத்துகின்றது.

அன்றியும், கணவனாரிடத்திலும், "பாராதரிக்குந் திருவேடத் தொருவர் வந்தபடி பகர்ந்தார்" என்றே குறிப்பிடுகின்றார்.

பயிரவர் கூறிய திறத்தைச் சிறுத்தொண்டர் கூறக் கேட்ட இவ்வரிய கற்புடை அம்மை, மகன் மீது அளவற்ற அன்புடைய ராயிருந்தும், கணவனார் திருத்தொண்டுக்கு இடர் வரக்கூடாது என்றும், இடர்வரின் கணவனார் இறந்துபடுவாரென்றும், மகனிலும் மணவாளரே சிறந்தவர் என்றும் கருதி மகனை அரிந்து கறியமுது செய்ய சிறிதும் பின்னிடையாது இசைந்து, ஒன்றிய மனத்துடன் நின்றார். அச்செயலன்றோ சிறுத்தொண்டருக்கு இத்துணைப் பெருமை நல்கியது.

"பிள்ளை அரிய நான் இசையேன்" என்று இவர் கூறியிருப்பின் இச்சரிதமே பிழைபட்டுவிடும். ஆகவே, இவ்வரலாற்றின் சிறப்புக்கு அம்மையின் பண்பு உயிர்நாடி யனையது.

சீராளதேவர் :-

இவர் பெருமை சிறுத்தொண்டர் பெருமையினும் பன்மடங்கு உயர்ந்தது.

இவர் தோன்றும்போதே தெய்வத்தன்மையோடு தோன்றினார் என்பதைச் சேக்கிழார் மிகவும் கௌரவமாகக் கூறுகின்ற அழகுதான் என்னே?

"சீராளதேவர் என்னுந் திருமைந்தர் அவதரித்தார்" தேவர் என்ற சிறப்பு சிறுத்தொண்டருக்கு இல்லை. இவருக்கு உண்டு.

இவர் முந்திய பிறப்பிலே சிவயோக சித்தியெலாம் பெற்றுக் கருவில் திருவுடையாராய் வந்து அவதரித்த பெரியார்.

பள்ளியில் வந்து தந்தையார் அழைத்தவுடன் திருவருள் வலிமையால் பயிரவராகச் சிவன் வந்ததையும், அவர் பொருட்டுத் தன்னைத் தாய் - தந்தையார் கறியமுதாக்க இசைந்ததையும், தன்னைக் கொல்லும் பொருட்டு அழைக்க வந்ததையும் அறிந்தார். அதனாலேயே, தந்தை பள்ளிக்கு வந்தவுடன் அவர் அழையாமலேயே அவருடன் சென்றார். தந்தையார் வாள்கொண்டு தலையினைச் சேதிக்கும் போதும் புன்முறுவல் பூத்து அதற்கு இசைந்திருந்தார். ஆ! ஆ! இவருடைய அன்பின் தகைமை அளவிட வல்லார் யாவர்?

இவர் சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர். ஆதலினாலன்றோ? தாதையார் வாள்கொண்டு தனது தலையைத் தடியும்போது வேதனை யுணராது இருந்தார்.

அன்றியும், திருஞான சம்பந்தர் சிவஞானப் பாலுண்ட தமது திருவாக்கினால் தனக்குவமை யில்லாத சங்கரனைப் பாடும்போது ஐந்து வயதுடைய இவரைச் சிறப்பித்துப் பாடியதனால் இவருடைய அருமையும் பெருமையும் எண்ணுதற்கு ஒண்ணுமோ? அன்றியும் சிறுத்தொண்டர் பேரைப் பின்னே வைத்து இவர் பேரை முன்னே வைத்துப் பாடிய அழகையும் உன்னுக.

"சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன்"
- ஞானசம்பந்தர்

சிவபெருமான் சிறுத்தொண்டருக்குக் காட்சி தந்தபோது, இச்சிறிய பெருந்தகையார் பொருட்டு, மெய்ஞ்ஞான பண்டிதராகிய முருகவேளையும் தம்முடன் அழைத்துவந்தார் என்பதை உற்று நோக்குக. இதனால், இவருடைய உயர்வு உணரப்படுகின்றதன்றோ?

"சரவணத்துத் தனயரோடுந் தாமணைவார்"

சந்தன நங்கையார்

இவர் திருவெண்காட்டு நங்கையாரது தாதி. திருமனையில் திருத்தொண்டுக்கு உடன் இருந்து உதவி புரிந்துவந்தார்.

சிறுத்தொண்டர் சீராளர் தலையினை இது அமுதுக்கு ஆகாது என்று கருதி ஒருபுறத்தில் புதைத்துவிடுமாறு இவரிடந் தந்தார்.

பின்னர் பயிரவர், "தலைக் கறியும் நாம் உண்போம்" என்றார். "என்செய்வோம்?" என்று சிறுத்தொண்டர் ஏங்கினார்.

இப்படி வந்தவர் தலைக்கறியையுங் கேட்க நேரும் என்பதை முன்னரே அறிந்த சந்தனநங்கை அதனை ஒருபுறம் சமைத்து வைத்திருந்தார். சிறுத்தொண்டருடைய ஏக்கத்தைக் கண்டு, உடனே தொழுது சமைத்த தலையிறைச்சியைத் தந்து, அவர் இடரை மாற்றினார். ஆகவே, இவருடைய மதிநலமுடைய தொண்டு அச் சமயம் பெரிய ஆறுதலை யளித்தது. இவ்வாறு, பலகாலும் நாயனாருடனும் அம்மையுடனும் ஒத்து தொண்டு புரிந்ததனால் இவரும் உமையம்மையார் உயர்பதஞ் சேர்ந்தார்.

வேலைக்காரியாகிய கூனியால் தயரதன் குடும்பம் தளர்ந்தது.

வேலைக்காரியாகிய சந்தன நங்கையால் சிறுத்தொண்டர் குடும்பம் வளர்ந்தது.

கவிநயம்

இப்பொழுதே வந்தணைவார் எழுந்தருளி யிரும்என்ன
ஒப்பில்மனை யறம்புரப்பீர் உத்தரா பதியுள்ளோம்
செப்பருஞ்சீர்ச் சிறுத்தொண்டர் தமைக்காணச் சேர்ந்தனம்யாம்
எப்பரிசும் அவரொழிய இங்கிரோம் என்றருளி.

உத்தராபதி. உத்தரம் - வடக்கு. வடதேயத்தில் இருப்போம் என்றும்; உத்தரம் - மேலிடம்; துவாதசாந்தத் தலத்தில் இருப்போம் என்றும் குறிப்பிட்ட நயத்தை அறிக.

இனி சிறுத்தொண்டர் மனையில் அமுது செய்ய வந்தோம் என்று குறிப்பிடாது 'காண வந்தோம்' என்றே குறிப்பிட்ட நயத்தையும் அறிக.

பின்னரும் இந்தக் கருத்திலேயே கவியை அமைத்திருக்கும் அருமையை அறிக.

> ....நிகழுந் தவத்தீர்! உமைக்காணும்
> படியால் வந்தோம் உத்தரா பதியோம் எம்மைப் பரிந்தூட்ட
> முடியாது"

இது சிறுத்தொண்டர்பால் பயிரவர் கூறியது.

அம்மையார் சிறுத்தொண்டர் கூறும்போது "வடதேசத்தோம் என்றார்" என்கின்றார். அங்கும் வட - என்ற சொல்லுக்கு ஆலமரம் என்ற பொருளுமுண்டு. ஆலின் கீழிருந்து நால்வர்க்கு உபதேசித்த நாயகன் என்று உள்ளுறையாக அமைத்த அருமையையும் அறிந்து மகிழ்க.

பயிரவர் சிறுத்தொண்டரிடம் கூறுகின்றார்:

> "பரியுந் தொண்டீர் மூவிருது கழித்தால் பசுவீழ்த் திடவுண்பது
> உரிய நாளும் அதற்கின்றால்"

மூவிருது - ஆறுமாதத்திற்கு ஒருமுறை என்பது வெளிப்படை. ஆன்மாவுக்குள்ள மூன்று விருதுகளைப் போன்ற ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் நீக்கி, பசுபோதம் என்ற ஆன்ம அறிவு அற்ற இடத்தில் நாம் உண்பது (ஆன்ம போதத்தை) என்ற, ஒரு கருத்தும் இதற்குள் அமைத்த அருமையை அன்பர்கள் நுனித்து உணர்க.

முந்நிரை :

முந்நிரை என்பது பசு, எருமை, ஆடு என்ற மூன்று விதமான உயிர்கள் என்பது வெளிப்படை.

ஆன்மாக்களில் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்ற முப்பிரிவுகள் உண்டு என்ற குறிப்பும் அறிக.

தாதையரிய :

உயிருள்ள ஆடு கோழிகளை "அறுக்க" என்றும், உயிரில்லாத கத்தரிக்காய், வாழைக்காய் முதலியவைகளை "அரிய" என்றும் கூறுவது மரபு.

அவன் தலையை அறுத்தான் என்றும், பரங்கிக்காய் அரிந்தான் என்றும் வழக்காற்றில் கூறுவதைக் காண்க.

சிவபெருமான் 'தாதையரிய' என்ற சொல்லினால், "நீ பிள்ளையை யரியும்போது அப்பிள்ளைக்கு வேதனையின்றி, காய்களை யரியும்போது காய்களுக்கு வேதனை யின்மைபோல்,

அப்பிள்ளை முகமும் அகமும் மலர்ந்து மகிழ்ச்சியுடன் அச் செயலுக்கு உடன்பட வேண்டும்'' என்ற கருத்துக்கள் விளங்கு கின்றன.

இக்கருத்தை யொட்டியே, ''வாளால் மகவரிந்து'' என்று பட்டினத்துப் பிள்ளையாரும் பகர்கின்றனர்.

சீராளர் சிவயோக முதிர்ச்சியுடையாராதலின் தாதையார் அவ்வினை செய்யும்போது உடம்பில் உணர்வு இன்றிச் சிவத்தை நினைத்துப் புன்முறுவலுடன் இருந்தார்.

......................மகிழ்ந்து நகைசெய்அத்
தனிமா மகனைத் தாதையார் கருவி கொண்டு தலையரிவார்"

என்ற அரிய சொற்றொடரால் இக் கருத்து வலியுறுமாறு கண்டு தெளிக.

மகனைக் கொன்றது கொலையாகாதோ

"அன்புக்குஞ் சைவத்திற்குந் தொடர்பு உண்டா? உண்டானால் சிவபெருமான் பிள்ளைக் கறி கேட்கலாமா? சிறுத்தொண்டர் செய்தது கொலைத் தொழிலன்றோ? அவ்வாறு செய்தது நீதியா? அறமா? அரசியலார் இதற்கு இசைவார்களா? இப்போது நாங்கள் செய்தால் அரசாங்கந் தண்டிக்காது புண்ணியத் தொழில் என்று பொறுத்திருக்குமோ? இங்ஙனம் கொலை புரிந்தாரை அருளாளர் எனப்படுமோ?'' என்று இவ்வாறெல்லாம் வினாவுவோர் பலர். ஐயுறுவார் சிலர். இவைகட்குக் காரண காரியத்துடன் விடை பகர்வாம்.

அன்பு வேறு சிவம் வேறு இல்லை. அன்பே சிவம். பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கடல் ஈந்த பிரானாகிய பரமசிவன் கருணைக் கடல் என்பதை முதலில் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டும்.

ஆசை மூன்றிடங்களில் மிகவும் அழுத்தமாகப் பதிந்திருக் கின்றது.

1. செல்வத்தின் மீது வைத்தல் (தனேஷணை)
2. மனைவி மீது வைத்தல் (தாரேஷணை)
3. புதல்வர் மீது வைத்தல் (புத்ரேஷணை)

இதனை ஈஷணாத்ரயம் என்பர் வடநூலார். இம் மூன்று ஆசைகளுமே பிறவிக்குக் காரணங்களாகின்றன.

"மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டணைஎன் றுமுடிந் திடுமோ"

என்பது கந்தரநுபூதி.

இம் மூன்றில் பணத்தின் மீதுள்ள ஆசையையும் மனைவி மீதுள்ள ஆசையையும், நல்ல கல்வி கேள்விகளால் அகற்றி விடலாம். மக்கள் மீதுள்ள ஆசையை அகற்றுதல் மிகவும் அரிது.

"கடந்த ஞானிகளும் கடப்பரோ மக்கள்மேல் காதல்"

இக்காதலை அறவே துறந்தவர் சிறுத்தொண்டர். யாராலும் அகற்ற முடியாத பிள்ளைப் பாசத்தை இவர் அகற்றினார் என்பதை உலகமறிந்து உய்யும்பொருட்டு, சிவபெருமான் பயிரவ வடிவில் வந்து இவ்வாறு யாசித்தனர் என்று உணர்க. பயிரவர்கள் புலை யுணவு உண்பவராதலின் அவ்வடிவில் வந்தார் என்பதையும் அறிக.

அறுபதினாயிரம் ஆண்டு அரசாண்ட தயரத மன்னன்பால் விசுவாமித்திர முனிவர் வந்து வேள்விக் காவல் புரிய நான்கு மைந்தர்களில் வலிமை மிக்க முதல் மகனைச் சிறிது துணையாக அனுப்புமாறு வேண்டினார். உயர்ந்த தவமுனிவர் பிறகே மகனை யனுப்புதற்கு மன்னன் மனம் மறுகி வேதனையுற்றான்.

ஒப்பற்ற ஒருமகனை அரிந்து கறி சமைத்து இடுமாறு பயிரவர் கூறக்கேட்ட சிறுத்தொண்டர் ஒரு சிறிதும் தயங்காது அப்பணியை மேற்கொண்டார் என்றால், அவருடைய மனநிலை அடியார் பணியிலே அத்துணை ஈடுபாடுடன் இருந்தது என்பது தெற்றென விளங்கா நிற்கின்றதன்றோ?

என் செயல் என்பது இன்றி எல்லாம் ஈசன் செயல் என்ற திருவருள் நாட்டத்திலே இவர் வாழ்ந்தார். இப்போது வினாவு வோர் தன் செயலறாதவர்.

கொலை என்பது செயலிலே மட்டும் அமையாது. அதனைச் செய்வோர் மன நிலையில் அது அமைகின்றது.

கொலை சில இடத்தில் பாவமும், சில இடத்தில் புண்ணியமும், சில இடத்தில் கடமையுமாக ஆகின்றது.

ஒருவன் ஒருவனைச் சினந்து - அல்லது ஒருவனிடமுள்ள செல்வத்தைக் கவர்தற் பொருட்டுக் கொல்லுகின்றான்; இது கொலை. இது பாவம்.

ஒரு காட்டு வழியில் சில பெண்களை ஒருவன் கொல்ல முயல்கின்றான். அவ்வழி வந்த வீரன் ஒருவன் இடையில் புகுந்து கொல்ல முயன்றானைக் கொன்றான். இது புண்ணியமாகும். கடமையுமாகும். ஏன்? அவன் மனத்தில் தீய எண்ணமில்லை. அப் பெண்களைக் காக்கவேண்டு மென்ற இரக்கத்தால் இது நிகழ்ந்தது.

ஒரு நீதிபதி தன் வாழ்நாளில் கொலைக் குற்றஞ் செய்த பலரை மரண தண்டனை விதித்துக் கொல்லுகின்றார். அது கொலை யாகாது. அறமாகும்.

ஒரு மன்னன் தன் நாட்டை எதிர்த்து வந்த பகைவர்கள் பலர்களைக் கொல்லுகின்றான். இது கொலையன்று. கடமையாகும்.

மருத்துவர் நோயாளியின் உடம்பில் உள்ள சீழ் முதலிய தீமை விலக அறுக்கின்றார். அது இம்சையன்று; அஹிம்சையே யாகும்.

ஆகவே, மனநிலையில் இது அமைகின்றது.

ஆகவே, சிறுத்தொண்டர் சீராள தேவரைத் தன்னலம் பற்றாதும், தனது செயல் இன்றியும், அடியார்க்கு அமுதூட்டுதல் என்ற நியதியை வழுவா திருக்குமாறும், சிவபோத நிலையில் நின்றும் செய்தாராதலின் அது கொலையன்று எனத் தெளிக.

அன்றியும், வாளால் பலரைக் கொன்றும் வென்றும் மன்னனிடம் சேனாபதியாக நின்று இவர் செய்த வீரச் செயலுக்கு தனது மைந்தனையே அவ்வாளால் அரியும்படி திருவருள் செலுத்தியது. இது அதற்கு ஒரு பரிகாரமுமாகும்.

இனி, இவர் சரிதையைச் சிவானுபவச் செல்வராகிய அருணகிரி நாதர் திருப்புகழில் கூறுமாறும் காண்க.

"எண்டோளர் காதல்கொடு காதல்கறி யேபருகு
செங்காடு மேவிபிர காசமயில் மேலழகொ
டென்காதல் மாலைமுடி ஆறுமுக வாவமரர் பெருமாளே"

- *திருப்புகழ்*

சேரமான் பெருமாள் நாயனார் புராணம்

"கார்கொண்ட கொடைகழறிற் றறிவார்க்கு மடியேன்"

வளமை மிகுந்த மலைநாடு என்று புகழப்பெற்ற சேரநாட்டின் தலைநகரம் கொடுங்கோளூர். சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருவஞ்சைக்களம் என்னும் திருத்தலத்தின் அருகில் அது விளங்குவது.

காலையில் எழுகின்ற கலையொலியும், யானைக் கன்றுகள் முழக்கமும், சோலையில் வண்டுகளின் ஒலியும், பாடல் ஆடல்களின் ஒலியும் கடல் ஒலியின் மிக்கனவாக ஒலித்தன; வீடுகள்தோறும் இன்பமும், நெருங்கிய சாலைகள்தோறும் அறங்களும், மடங்கள் தோறும் சைவமேன்மை விரிவுரைகளும் திகழும். வேதநெறி நின்று விதிப்படி அனைவரும் உயிரினும் உயர்ந்ததாக ஒழுக்கத்தைக் கருதி வாழ்ந்தார்கள். சோலைகள் சூழ்ந்த அந்நகரத்திற்கு மகோதை என்று மற்றொரு பேரும் உண்டு.

கலியை யகற்றி அறந் தழைக்கும் பொருட்டுச் சேரர் குலமும் உலகுஞ் செய்த தவப்பயனாக சேரமன்னர் மரபில் பெருமாக் கோதையார் அவதரித்தார். மலர்மழை சிந்தியது. உலகில் உள்ள எல்லாவுயிர்களும் உவகையுற்றன. பெருமாக்கோதை இனிது வளர்ந்தார். முன்னைத் தவத்தின் பயனால் முக்கட் பெருமானையே சிந்தித்து வருவார். அளவுமிக்க அன்புடைய அவர் அரச போகத் தையும் அரண்மனை வாழ்வையும் விரும்பாதவராகி, திரு வஞ்சைக்களம் என்னும் திருத்தலஞ் சென்று அங்குத் திருக்கோயில் திருத்தொண்டுகளைப் புரிந்து வருவாராயினார்.

உலகி னியல்பு மரசியல்பும் உறுதி யல்ல எனவுணர்வார்
புலரி எழுந்து புனல்மூழ்கி புனித வெண்ணீற் றினுமூழ்கி
நிலவு திருநந் தனவனத்து நீடும் பணிகள் பலசெய்து
மலரு முகையும் கொணர்ந்துதிரு மாலை சாத்த மகிழ்ந்தமைத்து.

திருமஞ் சனமுங் கொணர்ந்துதிரு அலகு மிட்டுத் திருமெழுக்கு
வருமன் புடன்இன் புறச்சாத்தி மற்று முள்ள திருப்பணிகள்
பெருமை பிறங்கச் செய்தமைத்துப் பேணும் விருப்பில் திருப்பாட்டும்
ஒருமை நெறியில் உணர்வுவர ஓதிப் பணிந்தே ஒழுகுநாள்.

உலக போகமும் அரச போகமும் நீர்மேல் எழுத்துக்கு நிகர் என்று சிவனருளால் உணர்ந்த அவர் அதிகாலையில் நீரில் முழுகி, திருநீறு நிரம்பப் பூசிக்கொண்டு, திருநந்தனவனஞ் சென்று, இறைவனுக்கு மலர்களைத் தருகின்ற செடி கொடிகளுக்குக் களை யெடுத்து, நீர் பாய்ச்சி, மாலை மலரைக் கூடிய மல்லிகை, முல்லை முதலிய மலர்களையும் காலை மலர்ந்த மலர்களையும் எடுத்து, பல வகையான மாலைகளைத் தொடுத்துக் கொண்டு, திருக் கோயிலுக்குள் சென்று, கூட்டி மெழுகி, ஒருமைப்பட்ட மனத்துடன் உள்ளம் உருகிப் பாடி வழிபாடு செய்துவந்தார்.

அக்காலை மகோதை என்னும் கொடுங்கோளூரில் இருந்து சேர நாட்டை அரசு புரிந்து வந்த 'செங்கோற் பொறையன்' என்னும் அரசர் பிறப்பெனும் பெருங்கடற்குத் துறப்பெனும் தெப்பமே துணை யென்று துணிந்து நாட்டைத் துறந்து காட்டை யடைந்தார். மதிநல மிகுந்த மந்திரிமார்கள் இனி அரசுக்கு உரியார் யார் என்று சிலநாள் ஆராய்ந்து அரசுக்கு உரியார் பெரு மாக்கோதையாரே என்று தெளிந்தார்கள். ஆனை, தேர் பரி முதலியவைகளுடன் திருவஞ்சைக்களத்தை யடைந்தார்கள். சென்ற அவர்கள் பெருமாக்கோதையாரைக் கண்டு மண்மிசை வீழ்ந்து பணிந்து, "சேரநாட்டுக்கு உரிமையினால் தாங்கள் மன்னராக வேண்டியவராக இருக்கின்றீர். ஆகவே, முடிசூடிக் கொண்டு உல்கை யரசு செய்வதற்கு எழுந்தருளும்'' என்று வேண்டி நின்றார்கள்.

இன்பம் பெருகுந் திருத்தொண்டுக் கிடையூ றாக இவர்மொழிந்தார்
அன்பு நிலைமை வழுவாமை அரசு புரக்கும் அருளுண்டேல்
என்பும் அரவும் புனைந்தாரை யிடைபெற் றறிவேன் எனப்புக்கு
முன்பு தொழுது விண்ணப்பஞ் செய்ய முதல்வர் அருளினால்.

மேவு முரிமை அரசளித்தே விரும்பு காதல் வழிபாடும்
யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும் ஈறில்லாத்
தாவில் விறலுந் தண்டாத கொடையும் படைவா கனமுதலாங்
காவல் மன்னர்க் குரியனவும் எல்லாங் கைவந் துறப்பெற்றார்.

அமைச்சர்கள் கூறியதைக் கேட்ட சேரமான் பெருமாள் நாயனார் "இன்பம் மிகுந்துள்ள சிவத் தொண்டுக்கு இடையூறாக இவர்கள் மொழிந்தார்கள். அன்பு நிலை மாறாமல் அரசும் புரிவதற்கு இறைவன் திருவருள் இருக்குமாயின் இறைவரிடம் விண்ணப்பஞ் செய்து அறிவோம்" என்று கருதி, ஈசனிடஞ் சென்று, "கருணைக்கடலே! அரசு புரியும்பொருட்டு இவர்கள் அழைக்கின்

றார்கள். பதவி பக்தியைக் குறைக்குமே? அரச போகத்தை அடியேன் விரும்புகின்றேனில்லையே! தேவரீர் திருவுளம் எவ்வாறோ?" என்று வினாவினார். "நீ அரச பதவியை ஏற்றுக்கொண்டு, உலகில் உள்ள உயிர்கட்கு இனிய தொண்டுகளைப் புரிந்துவருவாய். எல்லா வுயிர்களுங் கழறின. அனைத்தும் நீ அறியும் ஆற்றலையும், பெரு வலிமையையும், எல்லையில்லாத கொடையையும், ஆயுதம், வாகனம் முதலிய அரசர்க்குரியவைகளையும் உனக்கு வழங்கி னோம்" என்று சிவபெருமான் கூறி அவற்றை அவருக்குத் தந்தருளி னார். இறைவனுடைய திருவருளைக் கொண்டு புறப்பட்டுக் கொடுங்கோளூரை யடைந்தார். நாளும் கோளும் நன்னிலையுற்ற ஒரு நாளில் கழறிற்றறிவாருக்கு முடிசூட்டினார்கள்.

எல்லா வுயிர்களும் தத்தம் குறைகளைக் கூறக் கேட்டு அவ்வவ்வுயிர்களுக்கு உற்ற துன்பத்தை மாற்றுவதனால் சேரமான் பெருமாள் நாயனாருக்குக் கழறிற்றறிவார் என்ற பேர் உண்டா யிற்று.

மகுடாபிஷேகம் ஆனபின் திருக்கோயில் சென்று இறைவர் முன் பணிந்து எழுந்து யானை மீது ஏறி நாயனார் நகர்வலம் வந்து கொண்டிருந்தார். உவர்மண் பொதிசுமந்த வண்ணான் ஒருவன் எதிர் வந்தான். மழை பொழிய அதனால் கரைந்த உவர்மண் அவன் உடம்பில் நிறைந்து, பின்னர் உலர்ந்து வெளுத்திருந்தது. பவனி வருகின்ற சேரர்கோன் சிவனடியார் திருவேடத்தினை நினைந்து யானையை விட்டு இறங்கிச் சென்று அவ்வண்ணான் முன் தொழுதார். சேரர் பெருமான் தொழுததைக் கண்ட வண்ணான் மனங் கலங்கி, "அரசே! அடியேனை யார் என்று கருதினீர்? அடியேன் அடி வண்ணான்" என்றான். "நீர் வருந்த வேண்டாம். திருநீற்றினை யணிந்த அடியார் திருவேடத்தை நினைப்பித்தீர். அடியேன் அடிச்சேரன். நீர் செல்லும்" என்று கூறினார். அடியார் திருவேடத்தில் அவருக்கு இருக்கும் அளவற்ற அன்பு நிலையைக் கண்டு அமைச்சர்கள் அதிசயித்து அஞ்சலி செய்தார்கள்.

சேரர் பெருமானார் பின்னர் யானைமீது ஏறி நகர்வலம் வந்து, மணிமண்டபஞ் சென்று வெண்சாமரம் இரட்ட அரியணை மீது வீற்றிருந்தார். சோழ மன்னனும் பாண்டியனும் இவரிடத்தில் அன்பு காட்டினார்கள். அரசர் பலரும் கப்பங்கட்ட அகத்தும் புறத்தும் பகைவர்களை ஒடுக்கிச் சிவசமயம் வளர அரசு புரிந்து வந்தார். அரசாளும் பயனும் தவப்பேறும் செல்வமும் சீரும் எல்லாம் கூத்தப்

பெருமான் திருவடியே என்று தெளிந்த அறிவினால் எண்ணி, தூக்கிய திருவடியை நாளும் அருச்சித்து வழிபட்டு வந்தார்.

நீடும் உரிமைப் பேரரசால் நிகழும் பயனும் நிறைதவமும்
தேடும் பொருளும் பெருந்துணையும் தில்லைச் திருச்சிற் றம்பலத்துள்
ஆடுங் கழலே எனத்தெளிந்த அறிவால் எடுத்த திருப்பாதம்
கூடும் அன்பில் அருச்சனைமேற் கொண்டார் சேரர் குலப்பெருமாள்.

சிவாகமத்திற் கூறிய முறைப்படி அம்பலவாணரை வழிபாடு செய்வார். அவ்வழிபாட்டின் முடிவில் நடராஜப் பெருமானுடைய திருவடிச் சிலம்பு ஒலிகேட்டு இன்புறுவார். சிவனடியார்கட்கும் புலவர்கட்கும் வறியவர்கட்கும் நிரம்பவும் தான தருமங்களைச் செய்து மகிழ்வார். சிவபெருமானுக்குரிய வேள்விகள் பல புரிந்தார்.

இவ்வாறு இவர் கொடுங்கோளூரில் அறநெறியில் மக்களைச் செலுத்தி அரசு புரிந்து வந்தார். பாண்டிநாட்டில் மதுரையம்பதி யில், நாளும் இன்னிசை பாடித் தம்மை வழிபடும் சிறந்த அடியாராகிய பாணபத்திரருக்குப் பெருஞ்செல்வந் தர சோம சுந்தரக் கடவுள் திருவுள்ளம் பற்றினார். சொக்கலிங்கப் பெருமான் பாணபத்திரருடைய கனவில் எழுந்தருளி, "என்பால் அன்பால் பாடித் திருத்தொண்டு புரியும் சேரர் மன்னனுக்கு உன் வறுமை தீரப் பொன்னாடைகளும் மணிப்பூண்களும், நவநிதியும் தர ஒரு கடிதம் தருகின்றோம். அவ்வோலையை எடுத்துக் கொண்டு, சிறிதும் காலந் தாழ்க்காமல் போய்வா" என்று கட்டளையிட்டுத் திரு வோலையைத் தந்தருளினார்.

பாணபத்திரர் கண்விழித் தெழுந்து இறைவன் தந்த திருவோலையை எடுத்துக் கண்களில் ஒற்றி, திருவருளை நினைந்து நினைந்து நெஞ்சம் உருகி, அத்திருமுகத்தைச் சென்னிமேல் வைத்து, அப்பொழுதே புறப்பட்டு மலை வனம் நதி முதலியவைகளைக் கடந்து கொடுங்கோளூரை யடைந்தார். அவருடைய வரவைக் காவலர் கழறிற்றறிவார்க்கு அறிவித்தனர். மன்னர் பெருமான் கேட்டு சென்னிமேல் கைகூப்பித் தொழுது, கண்ணீர் சொரிந்து மிகவும் பரிந்து ஓடிச் சென்று இன்னிசை வல்ல பாணபத்திரரைப் பலமுறை பணிந்தார். இறைவருடைய திருமுகத்தை மன்னவரிடம் தந்து பாணரும் பணிந்தார். "என்னையும் ஒரு பொருளாக எண்ணி எம்பெருமான் திருமுகங் கொடுத்தருளினாரே. எம்பிரான் திருவருள் தான் என்னே! என்னே!" என்று விம்மிதமுற்றுத் திருவருளின் எளிமையை நினைந்து உள்ளம் உருகினார். கண்ணீர்மழை சிந்தி னார். அத்திருமுகத்தைத் தலைமீது வைத்தார். பலமுறை மதுரை

யிருக்குந் திசைநோக்கிப் புவிமிசை வீழ்ந்து பணிந்தார். அத்திரு முகத்தைப் படித்தார்.

திருமுகப் பாசுரம்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யாம் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

மன்னர் பெருமானார் அத் திருமுகத்தைப் பல படிகள் எழுது வித்தார். கருவூலத்தில் இருந்த நவநிதிகள் முழுவதையும் மிச்ச மில்லாமல் எடுத்துப் பொதிகளாகக் கட்டி எருதுகளின்மேல் ஏற்றிக் கொணர்வித்தார். அப்பொருள் முடிப்புகளை யெல்லாம் பாண பத்திரருக்குக் காட்டி, யானை, குதிரை, தேர் முதலியவையுந் தந்து அரசையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று பாணபத்திரரைப் பணிந்தார். பாணபத்திரர் அவைகளைக் கண்டு அதிசயித்தார். அரசை யவரை யாளுமாறு செய்து, நிதிக் குவியல்களுடன் விடை பெற்றுப் புறப்பட்டார். நகர் கடக்கும்வரை உடன் சென்று கண்ணீர் சொரிந்து வழிவிட்டார். மதுரையம்பதி சென்று பாணபத்திரர் இனிது இறைவனை வழிபட்டார். பாணபத்திரர் சென்ற பின்னர், சேரமான்பெருமாள் நாயனார் சோமசுந்தரப் பெருமானுடைய திருவருளை நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்து, அன்பு மேலிட்டு இனிது வாழ்ந்தார்.

சிலம்பொலி கேட்டல்

சேரமான்பெருமான் நாயனார் தமது நாடு முழுவதும் சிவ நெறியைப் பரப்பினார். எல்லா வுயிர்களும் கூறும் சொற்களை யறிந்து அவைகளுக்கு உறும் துயரத்தை யகற்றி, களவு, கொலை, புலை, சூது, வாது முதலிய குற்றங்களில் ஜனங்கள் சேராவண்ணந் தடுத்து அரசுபுரிந்தார். சோழவேந்தனுடனும் பாண்டிய மன்னனு டனும் நட்புரிமையுடன் கலந்து வாழ்ந்தார்.

அளவில் பெருமை அகிலயோ னிகளும் கழறிற் றறிந்தவற்றின்
உளமன் னியமெய் யுறுதுயர்கள் ஒன்றும் ஒழியா வகையகற்றிக்
களவு கொலைகள் முதலான கடிந்து கழறிற் றறிவார்தாம்
வளவர் பெருமா னுடன்செழியர் மகிழுங் கலப்பில் வைகுநாள்.

நாள்தோறும் சிவபூசையின் முடிவில் அம்பலவாணருடைய திருவடிச் சிலம்போசை கேட்டு மகிழ்வார். ஒருநாள் சிவபூசையின் முடிவில் சிலம்போசை கேட்கவில்லை. அதனால் பெருந்துயர முற்றார். "அம்பலவாணா! அருட்பெருங் கடலே! தேவரீருடைய திருவடிச் சிலம்போசை வழக்கம்போல் இன்று கேட்டிலேன். நாயினேன் என்ன பிழை செய்தேனோ? ஒன்றும் உணர்கிலேன். இனி இந்த உடம்பு இருந்து என்ன பயன்? ஆளும் நாயகனே! கேளும் கிளையும் இருந்து என்ன பயன்? மாளுவேன்" என்று துணிந்து இறைவனைப் பணிந்து, உடைவாளை யுருவி மார்பில் நாட்ட முயன்றார். "கணீர்" என்று திருச்சிலம்போசை கேட்டது. முன்னை நாள்களினும் அதிகமாக ஒலித்த சிலம்போசையைக் கேட்டு உள்ளம் உவந்தார். வாளை எறிந்தார். கர மலர்களைச் சிரமேற் கூப்பித் தொழுதார். அழுதார். மண்மிசை வீழ்ந்து பணிந் தார். எழுந்தார். "ஐயனே! அருட்கடலே! சிலம்பொலி முன் கேளா தொழிந்த காரணம் யாதோ?" என்று இறைவனைக் கேட்டார்.

"சேரனே! தில்லையம்பதியில் பொன்னம்பலத்தில் நாம் அநவரத ஆனந்தத் தாண்டவம் புரியும்போது, நாமே தடுத்தாட் கொண்ட சுந்தரன் அங்கு வந்து நம்மை வழிபட்டுச் செந்தமிழ்ப் பதிகம் பாடினான். அப்பாடலின் சுவையில் ஈடுபட்டு நாம் இருந்தபடியால், உன் பூசை முடிவில் சிலம்பொலியைத் தரச் சற்றுத் தாமதித்தது; வருந்தற்க" என்று அசரீரியாக இறைவர் கூறியருளினார். சுந்தரரை இவருக்கு அறிவிக்கும்பொருட்டே இவ்வாறு இசைத்தருளினார்.

இதனைக் கேட்ட சேரர்பெருமான் "ஆ! ஆ! என்னே இறைவரது கருணை! இத்தகைய பெருமைமிகுந்த சுந்தரரைக் காணாமலும் அவரைப் போற்றாமலும் அடியேன் இருக்கலாமோ? தில்லையம்பதி சென்று பொன்னம்பலவாணரைப் போற்றி செய்து, வன்தொண்டரையும் வணங்கி வருவேன்" என்று எண்ணினார். அமைச்சர்களுக்குத் தமது எண்ணத்தை அறிவித்துப் புறப்பாட்டுக் குரிய ஆயத்தங்களைச் செய்யச் சொன்னார். நாளுங் கோளும் நன்னிலை யுள்ளபோது பொன்னிநாட்டை நோக்கிப் புறப்பட்டார். திருவஞ்சைக்களஞ் சென்று சிவபெருமானைத் தொழுது விடை பெற்றுக்கொண்டு உயர்ந்த யானைமீது ஏறிச் செல்கின்றார்.

தீரமுள்ள வீரர்கள் புடைசூழ்ந்து சென்றார்கள். பூமி நெளிய நால்வகைப் படைகளும் உடன் சென்றன.

சேரநாட்டையும், எங்கும் வளமிகுந்த கொங்குநாட்டையுங் கடந்து, மலையுங் காடும் நதியுங் கடந்து சோழநாட்டை யடைந்தார். வற்றாக் கருணையுடைய நற்றாய் போன்ற காவிரி நதியைக் கண்டு, அன்புடன் அதில் நீராடினார். அதைக் கடந்து வடகரை சென்று வழியில் உள்ள திருத்தலங்களையெல்லாம் வணங்கிச் சென்றார். ஆங்காங்கு அடியவர்களும் வரவேற்று உபசரித்தார்கள்.

தில்லையை யடைதல்

தில்லையம்பதியின் எல்லையை அடைந்து, அந்த எல்லையைத் தொழுதார். அவரை எதிர்கொள்ளும் பொருட்டுத் தில்லைவாழ் அந்தணர்களும் திருத்தொண்டர்களும் வந்தார்கள். அவர்களை வணங்கி, கோபுரத்தையுந் தொழுது, கண்ணீர் சொரிந்து திருக் கோயிலை வலம் வந்தார். அம்பலத்திற்கு முன் சென்று புலன்கள் ஒரு வழிப்பட எடுத்த திருவடியைக் கண்டு காதலாகிக் கசிந்து பன்முறை பணிந்தார். துதிசெய்தார். இறைவருடைய திருச் சிலம்போசையைக் கேட்டு உள்ளம் உவந்தார். பன்னாள் தில்லை யிலிருந்து காலந்தோறுங் கனகசபை சென்று அம்பலவாணரை வழி பட்டு இன்புற்றார்.

திருவாரூர் வந்து சுந்தரர் சந்திப்பு

நாவலூர்ப் பெருந்தகையாகிய நம்பியாரூரரை வணங்கி மகிழ எண்ணி, திருவாரூரை நோக்கிப் புறப்பட்டார். ஆடலரசைப் போற்றி அறிவின் எல்லையாகிய தில்லையின் எல்லையை இறைஞ்சிப் போகின்றார். வழியில் ஞானசம்பந்தர் திருவவதாரஞ் செய்த சீகாழியை யடைந்து தோணியப்பரைத் தொழுதார். இடையில் உள்ள திருத்தலங்களையெல்லாம் வணங்கிக் கொண்டு காவிரி நதியைக் கடந்து திருவாரூரை யடைந்தார்.

அந்த வேளையில் சுந்தரர் நாகைக்காரோணம் போய் இறை வரைப் பாடிப் பொன்னும் மணியும் ஆடையும் கஸ்தூரியும் குதிரையும் பெற்றுத் திருவாரூரை யடைந்திருந்தார். சேரர் பெருமான் வரவைக் கேட்டு அன்புடன் எதிர்கொண்டார். எதிர்கொண்டு அழைக்க வந்த சுந்தரருடைய செந்திருவடி மீது வணங்கினார் சேரர்பெருமானார். சுந்தரரும் எதிர் வணங்கி அவரை எடுத்துத் தழுவிக்கொண்டார். அன்பு வெள்ளத்தில் முழுகிக்

கரையேற மாட்டாராகித் தத்தளித்தார்கள். உயிரும் உடம்பும் ஒன்றுபட்டார் கள். அவர்களுடைய தோழமையின் மேன்மையைக் கண்ட அடியார்கள் 'சேரமான் தோழர்' என்று நம்பியாரூரருக்கு நாமஞ் சூட்டினார்கள். ஒருவருக்கொருவர் தேன்போன்ற தித்திக்கின்ற இன்னுரை கூறி மகிழ்ந்தார்கள். சேரர்கோமானை யழைத்துக் கொண்டு சுந்தரர் தியாகேசருடைய திருக்கோயில் சென்றார். சேரமான் பெருமாள் நாயனார் திருவாரூர் மும்மணிக்கோவை பாடியருளினார்.

தோழருடன் சுந்தரர் பரவையாருடைய திருமடத்திற்கு எழுந்தருளினார். நிறைகுடமும் தூபதீபமும் அமைத்து, மலர் மாலைகளைத் தொங்கவிட்டு, எதிர்கொண்டு பரவையார் இருவருக்கும் மனமுவந்து பூசனை புரிந்தார். தம்பிரான் தோழர் பரவையாரை நோக்கி சேரர் வேந்தருக்கு விருந்தமைக்குமாறு பணித்தருளினார். பரவையிற் பிறந்த திருவனைய பரவையார் அரசர்க்கு அமைக்கும் சிறப்புக்கு மேற்பட்ட முறையில் அடியார்க்கு விருந்து அமைத்தார். அறுசுவைக் கறிகளும் நால்வகை யுண்டிகளும் ஆயத்தஞ் செய்தார். ஒன்றாக அமர்ந்து அமுது செய்ய கழறிற்றறிவார் அஞ்சினார். ஆரூரர் அவரது திருக்கரத்தைப் பற்றி அழைத்து தம் அருகில் இருத்தினார். இருவர்களும் பரவையார் படைக்கும் அமுதினும் இனிய உணவினை யுண்டார்கள். பஞ்சவாசத்துடன் தாம்பூலம் தரித்துக் கொண்டார்கள்.

இவ்வாறு, ஒருமனமுடைய இருவர்களும் சிலநாள் திருவாரூரில் இருந்து மனமகிழ்ந்தார்கள். வன்தொண்டர் பாண்டிநாடு சென்று மதுரை முதலிய திருத்தலங்களை வணங்குதற்கு எண்ணினார். சேரர் பெருமானும் அன்று தனக்குத் திருமுகம் அனுப்பிய ஆலவாயண்ணலை ஆரூரருடன் சென்று வணங்குதற்கு இணங்கி அவருடன் புறப்பட்டார். அரசருடன் சேனைகளும் சென்றன. கீழ் வேளூர், நாகை முதலிய தலங்களைச் சேவித்துக் கொண்டு திருமறைக்காட்டை யடைந்தார்கள். அங்கு அரசும் சிவக்கன்றும் வேதங்கள் பூசித்து அடைத்த திருக்கதவைத் திறந்து அடைத்த திறத்தை நினைந்து இறைஞ்சினார்கள். சேரமான் பெருமான் ஓர் அந்தாதி பாடியருளினார். மறைக்காடு மன்னிய மணிகண்டப் பெருமானைப் பன்முறை தொழுது, அங்கிருந்து புறப்பட்டு, அகத்தியான் பள்ளி, கோடிக்குழகர், திருப்பத்தூர் முதலிய தலங்களை வணங்கி, முகில் தவழும் மணிமாடங்கள் நிறைந்த மதுரை யம்பதியை அடைந்தார்கள்.

மதுரையை யாளுகின்ற பாண்டிய மன்னன் நகரை அலங்கரித்து எதிர்கொண்டு வணங்கி வரவேற்றார். பாண்டியனுடைய புதல்வியை மணந்து மதுரைக்கு வந்திருந்த சோழராஜரும் உடன் சென்று உபசரித்தார். இப்படி மூவேந்தர்களும் ஒன்றுபட்டு நம்பியாரூரருடன் சொக்கலிங்கப் பெருமானுடைய திருக்கோயிலுள் சென்றார்கள். சேரமான் பெருமாள் நாயனார் திருக்கோயிலை வலம் வந்து "என்னையும் ஒரு பொருளாகக் கொண்டு திருமுகங் கொடுத்தருளிய பெருங்கருணையுடைய அண்ணலே! அங்கயற் கணம்மையுடன் கூடிய அந்திவண்ணரே! உமது கருணையின் பெருமையை என்னென்று துதிப்பேன்? தேவதேவரே" என்று துதித்து கண்ணீர் பொழிந்து வழிபட்டார். பாண்டியன் கொடுத்த தனி மாளிகையில் நம்பியாரூரருடன் தங்கினார். சோழனும் பாண்டி யனும் நன்கு உபசரிக்க மனங்கலந்து மகிழ்ந்தார். காலங்கள் தோறும் ஆலவாயண்ணலை வணங்கி, இன்பக் கடலில் முழுகினார். திருப்பூவணம், திருவேடகம், திரு ஆப்பனூர் திருப்பரங்குன்றம் முதலிய திருப்பதிகள் சென்று சிவபெருமானை வணங்கினார். சுந்தரரும் வளவனும் செழியனும் உடன் சென்று மகிழ்ந்தார்கள்.

பின்னர், பாண்டியனையும் சோழனையும் நிற்குமாறு கூறி, வன்தொண்டருடன் சேரர்கோன் புறப்பட்டு அழகிய குற்றாலம் போய் கற்றார் போற்றுங் கண்ணுதற் கடவுளைக் கண்டு களித்தார். திருநெல்வேலி, திரு இராமேச்சுரம், திருச்சுழியல், திருக்கானப்பேர், திருப்புனவாயில் முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு சோழ வள நாட்டை யடைந்தார். இடையிலுள்ள தலங்களைத் தரிசித்துத் திருவாரூரை யடைந்தார். தியாகராஜப்பெருமானைப் போற்றிச் சுந்தரருடன் பரவையாருடைய திருமடத்தை யடைந்து அவர் தந்த விருந்தை யுண்டு சிலநாள் திருவாரூரில் தங்கியிருந்தார். பன்முறை வேண்டி வன்தொண்டரையும் அழைத்துக்கொண்டு, காவிரியின் தென்கரை வழியே இடையில் உள்ள திருக்கண்டியூர், திருச்சிராப் பள்ளி முதலிய அரிய திருத்தலங்களைப் பணிந்து கொங்குநாடு கடந்து மலைநாட்டை யடைந்து, கொடுங்கோளூர் வந்து சேர்ந்தார். திருநகர மாந்தர்கள் அரசரையும் ஆரூரரையும் எதிர் கொண்டு பணிந்தார்கள். நேரே திருமாளிகை செல்லாமல் திருவஞ்சைக் களத்தில் எழுந்தருளியுள்ள இறைவரை வழிபட்டார். பின்னர், திருமாளிகை சென்று தேவிமார்கள் செம்பொற் கலச நீர் வார்க்க, வன்தொண்டர் மலரடியைப் பூசித்து விருந்து செய்து உபசரித்து உள்ளம் உவந்தார்.

வன்தொண்டர் சிலநாள் அங்கு தங்கியிருந்த பின் திருவாரூர்த் தியாகப் பெருமானைக் காண விரும்பிப் புறப்பட்டார். அவரைப் பிரிய மனமின்றிச் சேரர்கோவும் புறப்பட்டார். ஆரூரர் அவரைத் தடுத்து, "நீர் இங்ஙனம் இருந்து அரசு புரியும்" என்று பணித்தருளி னார். சேரமான் பெருமாள் நாயனார் அன்றுவரை கருவூலத்தில் நிறைந்திருந்த செல்வம் முழுவதையும் ஆடை யணிகலங்களையும் பொதிகளாகக் கட்டி நம்பியாரூரருக்கு வழங்கி ஆள்கள் மூலம் அவருடன் அனுப்பினார்.

வன்தொண்டர் திருவாரூர் சென்று தங்கியிருந்து இரண்டாம் முறையாகத் தோழரைக் காண நினைந்து மகோதைக்கு வந்தார். ஆராக் காதலுடன் அவரை வரவேற்று வணங்கி மன்னர் மகிழ்ந்தார்.

கயிலை செல்லுதல்

சுந்தரமூர்த்தி நாயனார் ஒருநாள் திருவஞ்சைக்களம்போய், பெருமானை வழிபட்டுக் கயிலை போகத் திருவுளங்கொண்டார். அரனார் ஆணையின்படி மாலயனாதி வானவர்கள் ஐராவணம் என்ற வெள்ளானையுடன் திருவஞ்சைக்களம் வந்து வன் தொண்டரை வணங்கி யழைத்தார்கள். சுந்தரர் திருவருளைச் சிந்தித்து யானை மீது ஏறிப் புறப்படும்போது தமது தோழரை நினைந்தருளினார். அந்த நினைவை யறிந்த சேரமான் பெருமாள் ஒரு புரவியின்மீது ஏறி திருவஞ்சைக்களம் வந்தார். யானை மீது தோழர் விண்வழி போவதைக் கண்டார். புரவியின் செவியில் ஐந்தெழுத்தை ஓதினார். அப்புரவி ஆகாயவழி பாய்ந்து சென்றது. யானையை வலம் வந்து சேரர்கோன் வன்தொண்டரை வணங்கி முன் சென்றார்.

சேரர்கோனை விட்டுப் பிரியாத சேனை வீரர்கள் வாள் கொண்டு உடல் தடிந்து, வீர யாக்கை பெற்று வான்வழியே அவருடன் சென்றார்கள். நம்பியாரூரர் திருக்கயிலை சென்று, திருக் கோயிலுட் புகுந்து, தாய்ப் பசுவைக் கண்ட இளங்கன்றுபோல் உருகி, மரகதக் கொடியுடன் விளங்கும் பவளமலையைக் கண்டு பணிந்து நின்றார். சிவபெருமான் திருவருள் புரிந்தார்.

"ஐயனே! சேரமான்பெருமாள் வந்து திருவாயிலில் நிற்கின்றார்" என்று சுந்தரர் விண்ணப்பம் புரிந்தார். பெருந்தேவர்களைக் கொண்டு சேரர்கோவை யழைத்தார். சேரர் வேந்தர் பெருமான் திருமுன்பு சென்று பலமுறை பணிந்து அன்பினால் அகங் குழைந்து

நின்றார். ஆலமுண்ட அண்ணலார் புன்முறுவல் செய்து, "சேரனே உம்மை யழையாமுன் வந்தனையே" என்று கேட்டருளினார். சேரர் கோமான், "ஐயனே! அடியேன் நம்பியாரூரைப் போற்றிக் கொண்டு வந்தேன். உமது திருவருளாகிய வெள்ளத்தில் முழுகினேன். அந்த வெள்ளம் என்னை இங்கு கொணர்ந்து சேர்த்தது. மற்றொரு விண்ணப்பமும் உண்டு. தேவரீரைத் திருவுலாவினால் துதி செய்துளேன். திருச்செவி சாய்த்துக் கேட்டருள வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார்.

சிவமூர்த்தி அதற்கு இசைந்தருளினார். திருக்கயிலாய ஞான உலாவைச் சேரமான் பாடினார். சிவ பெருமான் கேட்டு மகிழ்ந்து, "வன்தொண்டனும் நீயும் சிவகணத் தலைவர்களாக இருங்கள்" என்று பணித்தருளினார். கயிலைமலையில் சேரமான் பெருமாள் பாடிய ஞானவுலாவைக் கேட்ட மாசாத்தனார் திருப்பிடவூரில் வெளிப்படுத்தினார். சேரர்கோன் சிவகணத்தலைவராய் என்றும் அகலாத சிவானந்தம் பெற்று இன்புற்றிருந்தார்.

விளக்கம்

கொடுங்கோளூர்

கொடுங்கோளூர் என்னும் இப்பதி பரம்பரையாகச் சேர்குல மன்னர்கள் வீற்றிருந்து அரசுபுரிந்த அரிய திருநகரமாகும். "சேரர் குலக் கோவீற்றிருந்து முறைபுரியும் குலக்கோ மூதூர் கொடுங் கோளூர் என்று சேக்கிழார் பெருமான் கூறுகின்றார்.

மகோதை என்ற ஒரு பெயரும் இப்பதிக்கு உண்டு.

திருவஞ்சைக்களம்

இத் திருத்தலம் மலைநாட்டில் உள்ளது. சென்னைக்கு தென் மேற்கே, முன்னூற்று அறுபது மைல் தூரமுள்ள சோரனூர் என்னும் ஜங்ஷனுக்குத் தென்மேற்கு முப்பத்தைந்து மைல் தூரத்திலுள்ள இருஞாலக்கடை என்னும் ஊரை அடைந்து, அங்கிருந்து தென் மேற்கு (குதிரைவண்டியில்) ஆறு மைல் சென்று அங்கிருந்து கழியில் (படகில்) நான்கு மைல் சென்றால் திரு அஞ்சைக்களத்தைச் சேரலாம். கழியில் இரண்டரை மைல் கடந்ததும் கொடுங்கோளூர் இருக்கின்றது. எர்ணாகுளம் ஸ்டேஷனிலிருந்து ஸ்டீம்லான்சில் இருபத்திரண்டு மைல் தூரம் கழியிற் சென்று கோட்டப்புரம் அடைந்து, அங்கிருந்து வடக்கு முக்கால் மைல் சென்றாலும் திரு அஞ்சைக்களத்தைச் சேரலாம். சுந்தரர், சேரமான்பெருமாள் ஆகிய

இருவர்களின் உற்சவ விக்கிரகங்கள் இருக்கின்றன. சுந்தரமூர்த்தி நாயனாருடைய தேவாரம் பெற்றது. சுந்தரர் வெள்ளை யானை மீதும், அவருடைய தோழர் சேரமான் குதிரையின்மீதும் ஏறிக் கயிலைக்குச் சென்ற மிக அரிய விழுமிய திருத்தலம். சுவாமியின் திருநாமம்; அஞ்சைக்களத்தீசுரர். அம்மையின் திருநாமம்: உமை யம்மை. தீர்த்தம்: சிவகங்கை.

சேரமான் பெருமாள் நாயனார்

இவருக்குப் பிள்ளைத் திருநாமம் பெருமாக்கோதையார். இறைவனிடம் வேண்டி எல்லா வுயிர்களும் பேசும் மொழிகளை யறியுந் திறம்பெற்றதனால் "கழறிற்றறிவார்", சேரர் குலத் தலைவ ராதலின் "சேரமான் பெருமாள்", சுந்தரருக்குத் தோழரானதால் "சுந்தரர் தோழர்" என்ற பலபேர்கள் உண்டு.

இவர் அரசபோகத்தைத் துறந்து திருவஞ்சைக்களத்தில் திருக் கோயில் திருத்தொண்டையே பெரும்பேறாகக் கருதி திரு வெண்ணீறு புனைந்து அன்புக்குக் கருவூலமாக விளங்கி அருட்பணி புரிந்தார் என்றால், இவருடைய பண்பாடு பகர்தற்கரியதன்றோ? இவர் அரசராகவும் அடியாராகவும் கவிபாடும் புலவராகவும் விளங்கினார்.

மண்மேல் சைவ நெறிவாழ வளர்ந்து முன்னை வழியன்பால்
கண்மேல் விளங்கு நெற்றியினார் கழலே பேணுங் கருத்தினராய்
உண்மே வியஅன் பினராகி உரிமை அரசர் தொழில்புரியார்
தெண்ணீர் முடியார் திருவஞ்சைக் களத்தில் திருத்தொண் டேபுரிவார்.

என்ற திருப்பாடலினால் இவருடைய தொண்டின் பெருமை புலனாகின்றது.

அப்போது சேரநாட்டை யரசு புரிந்துவந்த செங்கோற் பொறையன் என்ற மன்னன் மாண்டனன். மலைநாட்டில் சொத்துரிமை மருமான் வழியாகும். அக்காரணத்தினால் அந்நாட்டிற்கு அரசாகும் உரிமை இவருக்கே யாகும் என்று அமைச்சர்கள் ஆராய்ந்து, திருவஞ்சைக்களம் சிவாலயத்திலே தொண்டு புரியும் இவர்பால் வந்து, "மகுடாபிஷேகஞ் செய்து கொண்டு அரசு புரிய வாரும்" என்று அழைத்தபோது இவர் மனோநிலையை உற்றுநோக்குமின். பெரிய அரச பீடம் வருகின்றதே என்று மகிழ்ந்தாரில்லை. சிறிய மந்திரி பதவிக்கு எத்தனைப் போட்டி; எத்தனை ஆர்வம்? இவர் "இன்பம் பெருகும் திருத்தொண்டுக்கு இடையூறாக இவர் மொழிந்தார்" என்று வருந்தினார் எனில், அரச

போகத்தைத் துரும்பாக எண்ணி, அரனார் திருத்தொண்டையே பெரிதும் மதித்தார் என்பது தெளிவாகின்றது.

இறைவனிடத்தில் வேண்டி எல்லா உயிர்களும் பேசும் மொழிகளை யறியும் ஆற்றலைப் பெற்று முடிசூட்டிக் கொண்டார். எல்லா உயிர்களின் துன்பங்களை யகற்றுவான் வேண்டி இவ்வாறு பெற்றார். அதனால், கழறிற்றறிவார் என்ற நாமமும் பெற்றார்.

மகுடம் புனைந்து அரசயானை மீது பவனி வருகின்றபோது எதிரில் உவர் சுமந்து மழையால் நனைந்து, வெயிலால் உலர்ந்த ஒரு வண்ணான் வந்தான். வண்ணான் வருவது நற்சகுனம் என்பர். எனவே, இவர் அரசு உலகிற்கு நலம்பயக்கும் என்பதை அது அறிவிக்கின்றது.

மேலும், அந்த வண்ணானைக் கண்டு அவன் மேலிருந்த உவர் மண்ணைத் திருநீறு என்று மாறுபட நினைந்து இவர் வணங்கி னாரில்லை. அவ்வாறு, ஒன்றை ஒன்றாக உன்னுவதாயின் அது அரச பதவிக்கே இழுக்கு. ஏகாலியைக் கண்டு அவன் மீதிருந்த உவர்மண் திருநீற்றின் வேடத்தை நினைப்பித்தபடியால் அந்த அரிய உபகாரத்தை யுன்னி யானை மீதினின்றும் இழிந்து அவ் வண்ணானை வணங்கினார். "அடியார் வேடம் என்றுணர்ந்தே" என்று சொற்றொடரால் இதனையறிக. மன்னர் பெருமான் தன்னை வணங்கியதைக் கண்ட வண்ணான் நடுநடுங்கி, "அண்ணலே! என்னை யாரென்று எண்ணினீர்" என்றான். அப்போது சேரர் பெருமான் சொல்லிய பதிலையும் இங்கு உன்னுக. "உன்னை நான் அடியவர் என்று மாறுபட நினைத்து வணங்கினேனில்லை; அடியார் கோலத்தை நினைப்பித்தபடியால் வணங்கினேன்" என்று கூறியருளினார். இதனால், இவருக்குத் திருநீற்றிலே இருந்த அன்பு இமயமலையினும் உயர்ந்தது என்பது விளங்குகின்றது. ஆ! ஆ! அடியார் பக்திதான் என்னே!

இத்தகைய சிறந்த ஒப்பற்ற அன்பு இவர்பால் இருந்த தனாலன்றோ வழிபாட்டின் முடிவில் நடராஜப் பெருமானுடைய சிலம்போசை கேட்கும் பெரும்பேறு இவருக்கு நாடோறும் கிடைத்தது.

கொடைத்திறம்

மதுரையில் சோமசுந்தரக் கடவுளை நாளும் இன்னிசையால் பாடி வழிபடும் பாணபத்திரர் வறுமையால் வருந்தினார். அவருடைய நல்குரவை யகற்ற எண்ணிய சோமசுந்தரப் பெருமான்,

மதுரையை யாளுகின்ற பாண்டியனுக்குச் செல்வந் தருமாறு கட்டளை யிட்டாரில்லை. சோழமன்னனுக்குக் கடிதந் தந் தாரில்லை. குபேரனுக்கு அனுமதி தரவுமில்லை. இம்மூவரினும் கொடைத் திறத்தால் உயர்ந்த சேரமான் பெருமானுக்கு இறைவர் திருமுகம் கொடுத்து அனுப்பினார் எனில், இவரது கொடைப் பெருமை அளவிட முடியுமோ? இறைவரது திருமுகத்தைக் கண்ட சேரர் பெருமானார், அன்று தமது கருவூலத்தில் குன்றுபோல் குவிந் திருந்த பொன், மணி முதலிய செல்வங்கள் சிறிதும் மிச்சமில்லாமல் எடுத்துப் பொதிகளாகச் செய்து மட்டற்ற மகிழ்ச்சியுடன் வழங்கிய வள்ளன்மை வரம்புடைத்தோ?

இதுவேயுமின்றி, நம்பியாரூரைக் கொடுங்கோளூருக்கு அழைத்துச் சென்று அளவற்ற அன்புடன் வந்தனை வழிபாடு செய்து, அன்று கருவூலத்தில் நிறைந்திருந்த செல்வங்கள் அத்தனையும் பொதிசெய்து உள்ளம் உருகி வழங்கிய வள்ளன்மை யும் ஈண்டு ஒருங்கு நினைந்து பாராட்டுதற்குரியது.

ஆங்கவரும் அன்றுவரை ஆயமா கியதனங்கள்
ஓங்கியபொன் நவமணிகள் ஒளிர்மணிப்பூண் துகில்வருக்கம்
ஞாங்கர்நிறை விரையுறுப்பு வருக்கமுதல் நலம்சிறப்பத்
தாங்குபொதி வினைஞர்மேல் தலமலியக் கொண்டணைந்தார்.

நம்பியாரூரர் நட்பு

நம்பியாரூரருக்கும் சேரமான் பெருமாள் நாயனாருக்கும் இயைந்த நட்பு மிகவும் விழுமியது. ஏனையோருடைய நட்புக்கும் இதற்கும் அஜகஜம் போல் வேற்றுமை யுண்டு. இவர் சேர நாட்டரசர். சோழ நாட்டுக்குத் தலைநகராகிய திருவாரூருக்குச் சென்றபோது சோழ மன்னருடைய அரண்மனையிலே தங்கி அவருடைய ராஜோப சாரத்தைப் பெறாமல், சுந்தரருடைய திருமடத்திற்குச் சென்று பரவையார் படைத்த விருந்தைத் தெய்வ மருந்தென உண்டு மகிழ்ந்ததுவே இவருடைய நட்பின் பெருமைக்குப் போதுமான சான்றாகும். சேரரும் ஆரூரரும் சந்தித்த சந்திப்பைச் சிந்திக்குந் தோறும் சித்தம் உருகுமாறு சேக்கிழார் பெருமான் கூறி யருளுவதைக் காண்க.

முன்பு பணிந்த பெருமாளைத் தாமும் பணிந்து முகந்தெடுத்தே
அன்பு பெருகத் தழுவவிரைந் தவரும் ஆர்வத் தொடுதழுவ
இன்ப வெள்ளத் திடைநின்றும் ஏற மாட்டா தலைவார்போல்
என்பும் உருக உயிர்ஒன்றி உடம்பும் ஒன்றாம் எனஇசைந்தார்.

சேரமான் பெருமாள் நாயனார் நம்பியாரூரரைத் தமது கொடுங் கோளூருக்கு அன்புடன் அழைத்துக்கொண்டு சென்றபோது இருவருக்கும் உள்ள நட்பின் தகைமையைக் கண்ட அந்நகர மாந்தர் நனியுவகை கொண்டு இறும்பூதுற்று வாயார வாழ்த்திக் கூறிய வசனங்களையும் ஈண்டு நினைவு செய்க.

நல்ல தோழர் நம்பெருமாள் தமக்கு நம்பி இவர்என்பார்
எல்லை இல்லாத் தவமுன்பென் செய்தோம் இவரைத் தொழஎன்பார்
செல்வம் இனியென் பெறுவதுநம் சிலம்பு நாட்டுக் கெனவுரைப்பார்
சொல்லுந் தரமோ பெருமாள்செய் தொழிலைப் பாரீர் எனத்தொழுவார்.

திருவைந்தெழுத்தின் சிறப்பு

திருவஞ்சைக்களஞ் சென்று சிவமூர்த்தியை வழிபட்ட திருநாவலூரர் திருக்கயிலை சென்றணைய வேண்டுமென்று சிந்தித்தார். வேண்டுவார் வேண்டுவதே வழங்கும் விரிசடை விமலனார் தமது ஐராவணம் என்ற யானை மீது நம்பியாரூரரை ஏற்றிக்கொண்டு வருமாறு மாலயனாதி வானவர்க்குக் கட்டளை யிட்டருளினார். அவ்வண்ணமே ஆரூரர் யானையின் மீது ஆரோகணித்து விண்மிசை செல்லும்பொழுது சேரமான் பெருமாளை நினைந்தருளினார். அந்நினைவை அறிந்த சேரமன்னர் புரவியின் மீது ஊர்ந்து திருவஞ்சைக்களம் சென்றார். தோழனார் விண்மிசைச் செல்லக் கண்டு, தமது புரவியின் செவியில் திருவைந் தெழுத்தை ஓதினார். ஐந்தெழுத்தின் அதிசய சக்தியால் அப்புரவி ஆகாயமிசை பறந்து சென்று ஐராவணத்தை வலம்வந்து அதற்கு முன் சென்றது. இதனால், திருவைந்தெழுத்தின் சிறப்பு நன்கு புலனாகின்றது.

விட்ட வெம்பரிச் செவியினில் புவிமுதல் வேந்தர்தாம் விதியாலே
இட்ட மாம்சிவ மந்திரம் ஓதலின் இருவிசும் பெழப்பாய்ந்து
மட்ட லர்ந்தபைந் தெரியல்வன் தொண்டர்மேல் கொண்டமா தங்கத்தை
முட்ட யெய்திமுன் வலங்கொண்டு சென்றது மற்றதன் முன்னாக.

"நாங்கள் இப்போது ஒரு குதிரையின் காதில் ஐந்தெழுத்தை ஓதினால் அக்குதிரை விண்மிசை பறக்குமோ?'' என்று மந்த மதியினர் சிலர் வினவுவார். "இளமையிலிருந்து பல கோடி முறை திருவைந்தெழுத்தை அன்புடன் என்புருகி ஓதி ஓதி மந்திர சித்தி பெற்ற சேரமான் பெருமாளுக்கு அது எளிதென உணர்க. அங்ஙனம் ஓதி உய்வு பெறாத மாக்களுக்கு அது அரிதெனத் தெளிக.

செந்தமிழ்ப் பெருமை

ஒரு நூலை ஒருவர் பாடினால் உணர்வுமிக்கார் முன் அது அரங்கேறுதல் வேண்டும். அரங்கேறாத நூலை உலகினர் ஒப்புக் கொள்வதில்லை. இம் முறையில் பல மொழிகளிலும் பாடிய நூல்கள் மண்ணுலகில் மதிநலமிக்க ஆன்றோர்களின் முன் அரங்கேறுவது இயல்பு. நமது சிவநெறிச் செம்மலாகிய சேரமான் பெருமாள் பாடியருளிய செந்தமிழ் நூலாகிய திருக்கயிலாய ஞான உலா, கயிலை மலையில் கண்ணுதற் பெருமான்முன் அரங்கேறிய தென்றால் அமிழ்தினும் இனிய தமிழின் பெருமையை அளவிட வல்லார் யார்? ஆகவே, திருக்கயிலாய மலை சென்று தேவதேவன் முன் அரங்கேறிய மொழி செந்தமிழ் எனத் தெளிக.

வேதாகமங்களை மொழிந்த விடையவனார் சேரர்கோன் மொழிந்த திருப்பாடலைக் கேட்டுச் சித்தம் மகிழ்ந்தருளினாரெனில் இவருடைய வாக்கு வன்மை வரம்புடைத்தாமோ?

பெருகு வேதமும் முனிவரும் துதிப்பரும் பெருமையாய் உனையன்பால்
திருவு லாப்புறம் பாடினேன் திருச்செவி சாத்திடப் பெறவேண்டும்
மருவு பாசத்தை அகன்றிட வன்தொண்டர் கூட்டம்வைத் தாயென்ன
அருளும் ஈசரும் சொல்லுக என்றனர் அன்பரும் கேட்பித்தார்.

சந்தப் புகழ் பாடிய எந்தை அருணகிரிநாதரும் பழநிமலைத் திருப்புகழில் சேரர்கோன் பாடியருளிய திருக்கயிலாய ஞான உலாவை மிகமிக இனிதாக எடுத்துப் புகழ்ந்து ஓதிய திருவாக்கையும் அன்பர்கள் இங்குப் படித்து மகிழ்க.

ஆத ரம்பயில் ஆரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடேமு னாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி
ஆதி யந்தஉ லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்ந னாடதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

இவர் பாடியருளிய நூல்கள்

இவர் மூன்று நூல்கள் அருளிச் செய்தார். "பொன்வண்ணத் தந்தாதி", "திருவாரூர் மும்மணிக்கோவை", "திருக்கைலாயஞான உலா" என்பவைகளாகும். இம் மூன்றும் அகப்பொருள் துறை யிலேயே அமைந்தவை.

திருவருளின் சிறப்பு

பாடலின் அருமை

"சிவபெருமான் திருவருளே எல்லாவற்றினும் மேலானது. அருளையே வேண்டிப் பெறுதல் வேண்டும். அந்த அருளையின்றி மலையளவு செல்வத்துடன் இவ் வையமெல்லாம் பெற்றாலும் நான் நஞ்சினுங் கொடியதாக நினைப்பேன்; சிவனருளால் புழுவாகப் பிறக்கினும் வானவர் வாழும் பொன்னுலகை இன்பமாகக் கருதுவேன்" என்று கூறிச் சிவபிரான் திருவருளைச் சிறப்பித்துக் கூறும் செஞ்சொற் பாடலைக் காண்க.

தனக்குன்ற மாவையஞ் சங்கரன் தன்னருள் அன்றிப்பெற்றால்
மனக்கென்றும் நஞ்சிற் கடையா நினைவன்; மதுவிரியும்
புனக்கொன்றை யான்அரு ளால்புழு வாகிப் பிறந்திடினும்
எனக்கென்றும் வானவர் பொன்னுல கோடொக்க எண்ணுவனே.

வருவது வந்தே தீரும்

நாம் முன்செய்த கன்மங்கட்கு ஈடாய் சிவனருளால் வருவதை யாராலுந் தடுத்து நிறுத்த முடியாது; போவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. சிவன் செயலின் படியே எதுவும் நிகழும். ஆகவே, வரும்போது மகிழாதே; போம்போது புலம்பாதே" என்ற கருத்தில் இவ்வழகிய திருப்பாடல் அமைந்திருப்பதைக் காண்க.

ஆவன யாரே அழிக்கவல் லார்அமையாவுலகில்
போவன யாரே பொதியகிற் பார்புரம் மூன்றெரித்த
தேவனைத் தில்லைச் சிவனைத் திருந்தடி கைதொழுது
தீவினை யேன்இழந் தேன்கலை யோடு செறிவளையே.

கருவி கரணங்கள் யாவும் அரன் பணியிலேயே அமைக்க வேண்டும்.

சிந்தனை செய்ய மனம்அமைத் தேன்செப்ப நாஅமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத் தேன்கை தொழஅமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத் தேன்மெய் அரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி யீசற் கிவையான் விதித்தனவே.

மறவா வரம் வேண்டும்

இறைவனிடத்தில் ஒன்றையுமே யாசிக்கக் கூடாது. கூடும் அன்பினாலேயே கும்பிட வேண்டும். ஒருவேளை ஏதாவது கேட்டுப் பெற வேண்டும் என்று தோன்றுமானால் அவன் திருவடியை

மறவாமை ஒன்றே பெறவேண்டும். அதுவே நல்வரம். பொய்த்தல் இல்லாத நரகம் புகுந்தாலும் சரி; சுவர்க்கம் பெற்றாலும் சரி; இரண்டும் ஒன்றுதான். ஊர்வன, பறப்பன, நடப்பன என்பனவாதி குறுக்கு உடம்புடைய உயிர்களாகப் பிறந்தாலும் சரி, துன்பத்தால் நைந்து மாண்டாலும் சரி, உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆண்டாலும் சரி. அவன் அடிமலர் மறவா வரம் ஒன்று மட்டும் பெறவேண்டும்.

பொய்யா நரகம் புகினும் துறக்கம் புகினும்புக்கிங்
குய்யா வுடம்பினொ டூர்வ நடப்ப பறப்பஎன்று
நையா விளியினும் நானிலம் ஆளினும் நான்மறைசேர்
மையார் மிடற்றான் அடிமற வாவரம் வேண்டுவனே.

நம்முடைய வாழ்நாளில் பாதி உறக்கத்திற் கழிகின்றது. மற்ற பாதி கொடிய நோய், குழவிப்பருவம், காளைப்பருவம், மூப்பு இவைகளிலும், அச்சம், சினம், ஆசை, பொறாமை இவைகளிலும் கழிகின்றது. இப்படி இருபாதியும் கழிந்தால் உமையவளுக்கு ஒரு பாதியும் அச்சுதனுக்கு ஒரு பாதியும் தந்த மாயவனாகிய ஈசன் பாதத்தை நினைந்து உய்வது எப்போது என்று ஓர் அருமையான பாடலைப் பாடியிருக்கின்றார்.

வேண்டிய நாட்களில் பாதியும் கங்குல் மிகஅவற்றுள்
ஈண்டிய வெந்நோய் முதலது பிள்ளைமை மேலதுமூப்
பாண்டின அச்சம் வெகுளி அவாஅழுக் காறிங்ஙனே
மாண்டன சேர்தும் வளர்புன் சடைமுக்கண் மாயனையே.

கண நாத நாயனார் புராணம்

"கடற் காழிக் கணநாதன் அடியார்க்கு மடியேன்"

சோழவளநாட்டிலே சீரும் சிறப்புமுடையது சீகாழி. உமை யம்மையாருடைய திருமுலைப்பாலுண்ட திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவவதாரஞ் செய்த தலம் அது என்றால் அதன் பெருமை வரம்புடையதோ? உலகமெல்லாம் ஒடுங்கி ஒரே வெள்ளமாக நிற்கும் ஊழிக்காலத்திலும் இத் திருநகர் அழியாமல் தோணிபோல் மிதக்கும் பெருமையுடையது.

ஆன்மாக்களுக்குப் புகலிடமாக அது விளங்குவதால் புகலி எனப்படும். அத் திருப்பதியில் மறையவர் குலத்தில் கணநாதர் என்பவர் அவதரித்தார். இவர் சீகாழியில் எழுந்தருளியுள்ள திருத் தோணியப்பவரை எப்போதும் வழிபட்டு வந்தார். நாடோறும் தோணியப்பருக்குரிய திருத்தொண்டுகளைப் புரிவார்.

திருத்தொண்டு செய்யும் விருப்புடையவர்களாய் வந்து சேர்கின்ற அடியார்கட்குத் திருத்தொண்டுகளைப் பயிற்றி வைப்பார். திருநந்தனவனம் அமைத்தல், மலர்களை முறைப்படி எடுத்தல், அவற்றை வகைவகையாகத் தொடுத்தல், திரு மஞ்சனத்திற்குரிய சாதனங்களை அமைத்தல், திருக்கோயிலில் அலகிடுதல், மெழுகுதல், திருவிளக்கிடுதல், திருமுறைகளை எழுதுதல், படித்தல் முதலிய திருத்தொண்டுகளில், யார் யாருக்கு எது எது விருப்பமோ அவ்வப்பணியில் ஈடுபடுமாறு செய்து, அதனை அதனைப் புரியும் விதங்களையும், அதன் பயன்களையும் எடுத்து அவர்கட்கு விளக்கமாகக் கூறி அவர்களை அதில் அன்புடன் ஊக்குவித்து, அதற்குரிய உதவிகளையும் அமைத்துத் தருவார். இவ்வாறு, இவர் பலப்பல அடியார்களைப் பெருக்குவார். நல்லற மாகிய இல்லறத்தில் நின்று அடியார்கள் மகிழ வழிபட்டு வந்தார்.

இவ்வாறு, ஒழுகிவரும் கணநாத் நாயனார், திருஞானசம்பந்த ருடைய திருவடிகளை மூன்று காலங்களிலும், மிகுந்த அன்போடு அருச்சனை செய்து வழிபட்டு மகிழ்வார். இந்த வழிபாட்டின் பயனாக இருவினை யொப்பு மலபரிபாகம் பெற்றுச் சத்திநிபாதம்

எய்தித் திருக்கயிலாயஞ் சேர்ந்து அங்குள்ள சிவகணங்கட்குத் தலைவராக விளங்கிப் பேரின்பம் பெற்றார்.

விளக்கம்

சீகாழி :-

சீகாழி பிரமதேவர் பூசித்தபடியால் பிரமபுரம். இந்திரன் மூங்கில் வடிவாக நின்று தவஞ் செய்தபடியால் வேணுவனம். இப்படிப் பன்னிரண்டு நாமங்களையுடைய திருத்தலம். இதன் பெருமையை முன்னர் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராண விளக்கத்தில் எழுதியிருப்பதைக் காண்க.

திருத்தொண்டு :-

திருத்தொண்டு செய்வோர் தொண்டர் எனப்படுவார். சிவத்தோடு ஒன்றித்து நின்ற பெரிய ஞானிகளும் தொண்டு புரிவார்கள். சிவபெருமானே சுந்தரரை நோக்கி, "வித்தகம் பேச வேண்டா பணி செய வேண்டும்" என்று கூறித் தொண்டின் சிறப்பை வலியுறுத்துகின்றார்.

அடியார்கட்குத் தொண்டிலேயுள்ள இனிமை தனிமையானது. தொண்டு செய்து அண்டர் போற்றும் பெருமை பெறுவர். அவர்கள் தொண்டுக்கு இடர் வருங்கால் உயிரையும் விடும் உறுதியுடையவர்கள்.

கைத்தி ருத்தொண்டு செய்கடப் பாட்டினார்
இத்தி றத்தவர் அன்றியும் எண்ணிலார்.

என்று சேக்கிழார் சுவாமிகள் திருக்கூட்டச் சிறப்பில் கூறுகின்றார்.

உயிரினும் உயர்ந்ததாக உன்னி, உள்ளம் உவந்து வழுவாது, பெருமையும் தமது அருமையும் குறியாது தொண்டு செய்தல் வேண்டும்; பயன் கருதாதும் புரிதல் வேண்டும்.

கணநாதர்

இவர் தாம் தொண்டு செய்ததோடு அமையாது தொண்டர்கள் பலரை உண்டாக்கி, அவரவர்கள் அன்புக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு தொண்டுகளைப் பயிற்றுவித்து, அவர்கள் செய்யுந் தொண்டுகட்கு உரிய சாதனங்களை வழங்கியும், வேறுபல உதவி செய்தும் சிவபுண்ணியம் பெற்றார்.

நல்ல நந்தன வனப்பணி செய்பவர்
நறுந்துணர் மலர்கொய்வோர்
பல்ப ணித்தொடை புனைபவர் கொணர்திரு
மஞ்சனப் பணிக்குள்ளோர்
அல்லு நன்பக லுந்திரு அலகிட்டுத்
திருமெழுக் கமைப்போர்கள்
எல்லை யில்விளக் கெரிப்பவர் திருமுறை
எழுதுவோர் வாசிப்போர்.

இத்தகைய திருப்பணிகளில் "சிறப்புடைப் பொருளை முந்துறக் கிளத்தல்" என்ற சூத்திரப்படி நந்தனவனப் பணியையே முதன்மை யாகக் கூறுகின்றார்.

"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" என்று திருமூலர் கூறுவதனால், மலரில்லாத வழிபாடு இல்லை. அம் மலரைத் தருவது நந்தனவனம். ஆகவே, நந்தனவனம் அமைத்தல் பெருஞ்சிவ புண்ணியமாகும்.

நந்தனவனத்தில் வைகறை நீராடி வெண்ணீறும் கண்மணியும் புனைந்து, பூக் கூடையை இடைக்குக் கீழே தொங்க விடாமல் உயர்த்திப் பிடித்து, வாய் பேசாமல் சிவசிந்தையுடன் மலர்களை எடுத்து, ஒருபுறஞ் சேமித்து, வகைவகையாக மலர்களை மாலையாகத் தொடுத்து, இறைவனுக்குச் சாத்திக் கண்ணார நீர் மல்கிக் கண்டு களிக்க வேண்டும்.

"உலைவற விருப்பாக நீள்காவின் வாசமலர்
வகைவகை யெடுத்தேதொ டாமாலி காபரணம்
உனதடியி னிற்சூட வேநாடு மாதவர்கள்" - திருப்புகழ்

இவ்வாறு மலர் தொடுத்துத் தந்தவர்கட்கு மேலான சிவகதி கிடைக்கும்.

"துளக்கினன் மலர்தொ டுத்தோர் தூயவிண் ணேற லாகும்."
- அப்பர்

கூற்றுவ நாயனார் புராணம்

"ஆர்கொண்ட வேல்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்"

களந்தை என்னும் ஊரிலே கூற்றுவ நாயனார் என்பவர் வாழ்ந்தார். அவர் சிறந்த தோள்வலியும் வாள்வலியும் மிக்கவர். பகைவர்களுடைய போர்க்களத்தில் வெற்றிபெற்று வீரஞ்செறிந்து விளங்கினார். செஞ்சடைப் பெருமானுடைய அஞ்செழுத்தை இடையறாது நாவில் நவிலும் நலம் படைத்தவர். சிவனடியார் களைக் கண்டால் கரை கடந்த காதலுடன் அவர்கள் பாதமலர் பணிந்து அவர்கட்கு வேண்டிய பணிவிடைகள் புரிவார்.

திருவருளின் வலியால் அரசர்களும் அஞ்சி யொதுங்க மண்ணுலக முற்றும் வென்றார். மலைபோன்ற பொற்குவியலை யும் சேர்த்தார். தேர், யானை, குதிரை, காலாள் என்ற நால்வகைச் சேனைகளையும் நிரம்பவும் உடையவராய் வீரச் செயலில் மிக வுயர்ந்து அவர் விளங்குவாராயினார்.

வெற்றியில் மிக்க கூற்றுவ நாயனார் வேந்தர்களது போர்கள் பலவற்றிலுஞ் சென்று, தும்பை மாலை சூடிப் போர்செய்து வெற்றி பெற்று வாகைமாலை புனைந்து அரசர்களுடைய வளநாடுகள் எல்லாவற்றையுங் கவர்ந்துகொண்டு, மணிமகுடம் ஒன்று நீங்கலாக அரசர்க்குரிய ஏனைய சின்னங்களை யெல்லாம் உடையவராகத் திகழ்ந்தார்.

உலகத்தைக் காக்குந் தொழிலை மேற்கொண்ட நாயனார், தில்லையம்பதி சென்று நடராஜப் பெருமானை வழிபடும் அந்தணர்களைப் பணிந்து தனக்கு முடிசூட்டுமாறு வேண்டினார். தில்லைவாழ் அந்தணர்கள், "ஐயா! நாங்கள் சோழர்களது பரம்பரையில் வரும் மன்னர்களுக்கே யன்றி வேறு மற்றவர்கட்குத் திருமுடி சூட்டமாட்டோம்" என்று கூறி மறுத்துவிட்டார்கள். அவ்வாறு மறுத்த அவர்கள், தங்கள் மரபில் வந்த ஒரு குடியினர் பால் அம் மணிமகுடத்தை ஒப்புவித்துக் காவல் புரியும்படி செய்து விட்டுச் சேரநாடு சென்று சேரமன்னன்பால் இருந்து வாழ்ந்தார்கள். இதனால், மனந் தளர்வுற்ற கூற்றுவ நாயனார் மன்றுளாடும் அம்பல வாணரையே நினைந்து வருந்தினார். அன்றிரவு, "அம்பலவாணா!

அருட்கடலே! எளியேனுக்கு முடியாக உமது திருவடியையே சூட்ட வேண்டும்'' என்று வேண்டித் துயில்புரிந்தார். வேண்டுவார் வேண்டியதை அளிக்கும் விடையவனார் அவருடைய கனவில் தோன்றி அவருடைய சென்னியின் மீது தமது திருவடியைச் சூட்டி யருள்புரிந்தார். கண்விழித்து எழுந்த நாயனார் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையுண்டோ? பேரானந்த முற்றார். இறைவனது திருவடியையே முடியாகக் கொண்டு உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் அரசாண்டு வந்தார்.

அற்றை நாளில் இரவின்கண் அடியேன் தனக்கு முடியாகப்
பெற்ற பேறு மலர்ப்பாதம் பெறவே வேண்டும் எனப்பரவும்
பற்று விடாது துயில்வோர்க்குக் கனவில் பாத மலரளிக்க
உற்ற அருளால் அவைதாங்கி உலக மெல்லாம் தனிபுரந்தார்.

அரசாளும் அப்பெருந்திருவாளர் அரசும் செல்வமும் படைத்த தற்குப் பயனாக பூமண்டலத்தில் இறைவர் எழுந்தருளியுள்ள திருக் கோயில்கள் அத்தனைக்குந் தனித்தனியே நித்திய நைமித்திக வழிபாடுகள் இனிது நிகழப் பெருநிலங்களை அமைத்துச் சிந்தை மகிழ்ந்தார். இவ்வாறு, இனிய திருத்தொண்டுகள் பல புரிந்து உலகைக் கருணையுடன் அரசு புரிந்து முடிவில் அரனார் அடிமலர் சேர்ந்து இன்புற்றார்.

அம்பொன் நீடும் அம்பலத்துள் ஆரா அமுதத் திருநடஞ்செய்
தம்பி ரானார் புவியில்மகிழ் கோயில் எல்லாம் தனித்தனியே
இம்பர் ஞாலம் களிகூர எய்தும் பெரும்பூ சனையியற்றி
உம்பர் மகிழ அரசளித்தே உமையாள் கணவன் அடிச்சேர்ந்தார்.

விளக்கம்

கூற்றுவனார்

இவர் பகைவருக்கு இயமன் போன்றவராதலின் கூற்றுவனார் என்ற பேர் பெற்றார். கூறுபடுத்துபவர் - கூற்றுவர். பெரிய வீராதி வீரராக இவர் விள்ங்கினார். அடியார்கள் அன்பில் இணையற்ற வராக விளங்குவதுபோல் வீரத்திலும் மிக்கவராக இருப்பர்.

ஆரம் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ.

என்று அடியார்களின் பெருமையைத் தெய்வச் சேக்கிழார் இனிது கூறியருளினார்.

கூற்றுவனாருக்குத் தோள்வலி, வாள்வலி, படைவலி இவைகள் இருந்த காரணத்தால் மட்டும் அவருக்கு வெற்றி வரவில்லை. அருள் வலி ஒன்றே அவர் வெற்றிக்கு மூலகாரணம் என்பதை,

"அருளின் வலியால் அரசொதுங்க
அவனி யெல்லாம் அடிப்படுத்தி"

என்பதனால் அறிக.

மகுடம்

பழங்காலத்தில் சோழ மன்னர்களுக்குரிய சிறப்பு மணிமகுடம், சிதம்பரத்தின் கருவூலத்தில் தில்லைவாழ் அந்தணர்கள் காவலில் இருந்ததென்பது இவ்வரலாற்றால் அறியக் கிடக்கின்றது. உரிய காலத்தில் தில்லைவாழ் அந்தணர்கள் வந்து மணிமகுடம் புனைவர். அவர்கள் சோழமன்னர்கட்கே புனையும் நியதி யுடையராயிருந் தார்கள். அதனால், இவர் அவர்களை மகுடம் புனையுமாறு வேண்டவும், அவர்கள் தங்கள் நியதிக்கு மாறாக மகுடம் புனைய உடன்படாது மறுத்தார்கள். அவ்வாறு, மறுத்தபின் இவருடைய ஆட்சியின் கீழ் இருக்க மனமிலராய் அம்மகுடத்தைத் தம்மில் ஒரு குடும்பத்தாரிடம் ஒப்புவித்துவிட்டுச் சேரமன்னன்பால் சென்று வாழ்ந்தார்.

நீதியும் நெறியும் நிறைந்த கூற்றுவனார் அவர்களை நெருக்கியும் இடர்படுத்தியும் பலாத்காரமாக அம் மகுடத்தைப் பெற முயன்றா ரில்லை. அதனால், அவருடைய அருளாட்சியும், குடிகளுக்குள்ள உரிமையும் நன்கு புலனாகின்றன.

அடியே முடியாகக் கொள்ளல்:-

இறைவனுடைய அடிமலரையே முடியாகப் புனையுமாறு இவர் வேண்ட இறைவர் அவ்வாறு அருளினார். இதன் உட்பொருள், இறைவனது அடிஞானத்தில் அடங்கி ஜீவ போதமின்றித் தன் செயலின்றிச் சிவமயமாக இருந்தார் என்பது. இராமாயணத்தில் பண்புமிக்க பரதர் அண்ணாவுடைய பாதுகையைத் தனக்கு முடி யாகக் கொண்டார் என்ற வரலாறும் இந்த உண்மையைக் காட்டுகின்றது.

ஆலயப்பணி

"ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

என்பது பயனியல் கூறும் பன்னிரண்டாவது சூத்திரத்தின் உறுதியாய இறுதி வரியாகும். இதனால், மக்கள் என்றும் குன்றாத அன்புடன் ஆலய வழிபாடு செய்யவேண்டும். சிவஞானிகளும் செய்ய வேண்டும். சுருங்கக் கூறினால் உடல்நினைவு இருக்கும்வரை செய்தே தீரவேண்டும்.

இதற்கு அரசர்கள் துணைபுரிய வேண்டும். அரசாங்கம் வெறும் வரிவசூல் செய்து வண்டிபோகும் வழிகளைச் செப்பனிடுஞ் செயலுடன் மட்டும் அமையக் கூடாது. உயிர் ஈடேறும் அருள் வழியையும் அரசாங்கம் பாதுகாக்க வேண்டும். அவ்வண்ணம் முன்னிருந்த அரசியல் அமைந்திருந்தன.

இவர் எங்குமுள்ள ஆலயங்கள் அத்தனையும் பழுது பார்த்தும் அதற்குரிய பொது சிறப்பு வகையான வழிபாடுகள் முறையே நிகழச் செய்தும் அறப்பணி செய்தார் என்றதனால் மன்னர்கள் முதற் கடமை இதுவே என்பது தெற்றெனத் தெளிவாகின்றது.

அன்று அரசர்கள் புதுக்கிய ஆலயங்களே இன்று நமது தென்னாட்டின் சிற்பக் கலையையும் தெய்வ பக்தியையும் மேனாட்டாரும் அறிந்து வியக்குமாறு வீறு கொண்டு நிற்கின்றன. அக்காலத்திருந்த அரசர் வாழ்ந்த அரண்மனையோ அவர் புனைந்திருந்த அணிகலன்களோ இல்லை. அவர்கள் புதுக்கிய ஆலயங்கள் அழியாது அவர்களது புகழை நிலைநிறுத்துகின்றன. ஆதலால், இக்காலத்துப் பொதுமக்கள் ஆலயத்தைப் பேணி அருள் பெறுதல் வேண்டும்.

பொய்யடிமை யில்லாத புலவர் புராணம்

"பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்"

பொய்யடிமை யில்லாத புலவர்கள் கைலை மேவுங் கடவுளுக்கே ஆளானவர்கள்; செய்யுள்களிற் பயிலும் சொற்களுக்கு நன்கு தெளிவாகப் பொருள் செய்வார்கள். கற்றவர்க்குத் தாம் வரம்பாக விளங்குவார்கள். நூல் பல கற்ற நுண்ணிய மதிநலம் படைத்தவர்கள். ஐயம் நீங்கிய மெய்யுணர்வு பெற்றவர்கள். சிவமூர்த்தியை யன்றி வேறு ஒரு பொருளைப் பெரிதாக நினைத்து உரையாதவர்கள். மெய்மையாக சிவனடிக்கே தொண்டு பூண்டவர்கள். திருவருள் நெறிநின்று பெருமை பெற்ற அவர்கள் பெருமை அளவிடற்கரியது.

விளக்கம்

பொய்யடிமை யில்லாத புலவர்

இவர்கள் பொது அடியார்கள். புலம் - அறிவு. அறிவு நிறைந்தவர்கள் புலவர்கள். அறிவின் பயன் பேரறிவுடைய பரம் பொருளுக்கு அடிமையாவதே யாகும்.

கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். - *தமிழ்மறை*

மெய்யன்புடன் இறைவனுக்கு அடிமை பூண்டு பதிநூல்களை ஓதி உணர்ந்து உருகி ஒருமைப்பட்டு நிற்பவர்கள்.

பொற்பமைந்த அரவாரும் புரிசடையார் தமையல்லால்
சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறித் தலைநின்ற
பெற்றியினில் மெய்யடிமை யுடையாராம் பெரும்புலவர்
மற்றவர்தம் பெருமையார் அறிந்துரைக்க வல்லார்கள்.

என்று சேக்கிழாரடிகள் கூறும் கனியமுதன்ன இனிய பாடலால் அறிக.

புகழ்ச்சோழ நாயனார் புராணம்

"பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்"

இமய மாமலையில் தமது புலிக்கொடியை எழுதி, தண்ணிய வெண்கொற்றக் குடையின்கீழ் உலகத்தை யாளும் விரிந்த புகழும், பரிந்த உளமும் படைத்த சோழ மன்னர்களுடைய வளநாட்டின் தலைநகரமாகத் திகழ்வது உறையூர் எனப்படும். எல்லா வளங்களும் உறையும் உறையூரில் சதா மணிவிளக்குகள் பல எரிவதனால் இரவு இல்லையாயிற்று. செல்வமிகுதியால் இரவும் இல்லையாயிற்று. அழகிய பல ஆவண வீதிகள், மதம் பொழியும் யானைகள் பலவுடைய சாலைகள், கடல் போன்ற குதிரைகளையுடைய கூடங்கள், ஆழ்ந்த அகழிகள், உயர்ந்த மதில்கள், கோபுரங்கள், மலர்ச்சோலை கள், மேகந்தவழ்கின்ற காவனங்கள், சந்திர சூரியர் தவழ்கின்ற உயர்ந்த கோபுரங்கள், தேருலாவு நெடுந்தெருக்கள் முதலிய பல நலங்கள் நிறைந்திருந்தன. தில்லையில் எல்லையில்லாத திருப்பணிகள் செய்த் அநபாய மன்னர் பெருமானுடைய திருக்குலத்தில் மூதாதையாகிய புகழ்ச்சோழ நாயனார் அந்நகரில் அரியணை மீது வீற்றிருந்து அறநெறி வழுவாது அரசு புரிந்து வந்தார். மணிமுடி வேந்தர்கள் பணிபுரிய வெற்றிமாலை புனைந்து நிலமகளுக்குக் கணவராகப் பெரும்புகழுடன் அவர் வாழ்ந்தார்.

பிறைமுடித்த பெருமானாருடைய திருக்கோயில்கள் முழுவதும் நித்திய நைமித்திக பூசனைகள் சிறப்பாக நிகழும்படி செய்தார். அடியார்கள் வேண்டுவ அனைத்தும் வழங்கித் திருநீற்றின் திறத்தைப் போற்றிவந்தார். மேன்மைகொள் சைவநீதியை உலக மெங்கும் பரப்பினார்.

இவ்வாறு, இனிது வாழ்கின்ற புகழ்ச் சோழனார் மேல் திசையில் கொங்கநாட்டு வேந்தர்களும் ஏனோரும் தரும் கப்பங்களைக் காணும்பொருட்டு, தங்கட்கு உரிமை வாய்ந்த தலைநகரங்களில் ஒன்றாகிய கருவூரைத் தம் சுற்றஞ் சூழ அடைந்து, இந்திரன் அமராவதி யடைவதுபோல் அந்நகருள் நுழைந்து ஆனிலை யென்ற திருக்கோயிலுக்குள் சென்று பசுபதீச்சுரரைப் பலகாலும் பணிந்து பரவசமடைந்தார்.

பின்னே, கருவூரில் உள்ள தமது அரண்மனையடைந்து அம் மாளிகைக்கு முன் அமைத்துள்ள அத்தாணி மண்டபத்துள் அரியணைமீது வீற்றிருந்தார். மேற்றிசை நாட்டு வேந்தர்கள் கொணர்ந்த யானைகள், குதிரைகள், பொன்மணிகள் முதலிய திறைப்பொருள்களை யெல்லாங் கண்டார். திறை கொணர்ந்த மன்னர்கட்கு அவரவர்கள் நிலைமைக்குத் தக்க செயல் உரிமை களைத் தந்து உபசரித்தார். -

"நமது அரசாட்சிக்கு அடங்காது மாறுபட்ட அரசர்கள் இருப் பார்களாயின் அவர்கள் இன்னார் என்று தெரிந்துரைப்பீர்" என்று அமைச்சர்களை நோக்கிக் கட்டளையிட்டுப் புகழ்ச் சோழர் அங்கு இருந்தார்.

சென்றுசிவ காமியார் கொணர்திருப்பள் ளித்தாமம்
அன்றுசித றுங்களிற்றை அறஎறிந்து பாகரையும்
கொன்றஎறி பத்தரெதிர் என்னையுங்கொன் றருளுமென
வென்றிவடி வாள்கொடுத்துத் திருத்தொண்டின் மிகச்சிறந்தார்.

கருவூரில் வாழ்கின்ற சிவகாமியாண்டார் என்ற ஒரு சிவனடி யார் வழக்கம்போலே மலர் பறித்துப் பூக்கூடையில் நிரப்பித் திருக்கோயிலுக்குக் கொண்டுபோக, அரசருடைய பட்டவர்த் தனமென்ற யானை அக்கூடையைப் பறித்து மலர்களைக் கீழே சிந்தின. அதுகண்ட சிவகாமி யாண்டார் அந்தோ என்று முறையிட்டனர். ஆங்கு வந்த எறிபத்த நாயனார் யானையையும், பாகரையும் கொன்று வீழ்த்தினார். அதுகேட்ட புகழ்ச் சோழர் ஓடிவந்து, "யானை செய்த குற்றம் அடியேனையும் சாரும்; ஆகவே, என்னையும் கொல்லும்" என்று உறைவாளை அவரிடம் கொடுத்து பணிந்து நின்றார். அவர் அவ்வாளை வாங்கி தன்னையே மாய்க்க முயன்றபோது இறைவன் திருவருள் வெளிப்பட்டு யானை உயிர் பெற்றெழுந்தது. இத்தகைய அருட்பெருஞ் செல்வராக புகழ்ச்சோழ நாயனார் பொலிவுடன் விளங்கினார்.

அமைச்சர் அரசரை வணங்கி, "ஆண்டகையே! முறையே திறை கொடாத அரசன் ஒருவன் இருக்கின்றான்" என்று கூறினார்கள். அதுகேட்ட அண்ணலார் அதிசயித்தார். புன்முறுவல் பூத்தார். "அவ்வாறு கப்பங் கட்டாதவன் யாவன்?" என்று வினாவினார். அமைச்சர்கள், "அரசரேறே! அவன்பேர் அதிகன்; அண்மையில் மலையரணுடையவனாக மதில்சூழ்ந்த காவல்மிக்க கடிநகரில் உறைகின்றான்" என்றார்கள். மன்னர் பெருமானார், "அஞ்சா நெஞ்சுடைய உமக்கு எதிர் நிற்கும் அரணும் உளதோ? நால்வகைச்

சேனைகளுடன் சென்று அந்த அரணைப் பொடிபடுத்தி வாருங்கள்'' என்று பணித்தருளினார்.

மன்னவனார் ஆணையைச் சென்னிமிசைத் தாங்கிய மந்திரிமார்கள் சேனாபதிகளுடன் நால்வகைச் சேனைகள் புடைசூழச் சென்று அதிகர்கோன் நகரை வளைத்துக் கடும்போர் புரிந்தார்கள். அதிகனுடைய சேனைகளும் எதிர்த்து அமர்புரிந்தன. தேருடன் தேர்களும் யானைகளுடன் யானைகளும், புரவிகளுடன் புரவிகளும், காலாட்களுடன் காலாட்களுமாக எதிர்த்து வீரயுத்தம் புரிந்தன. எங்கும் உதிரவெள்ளம் ஓடியது . பிணமலை குவிந்தது. காக்கைகளும் கழுகு களும் பருந்துகளும் பரந்து பசிய நிணங்களை யுண்டு பசியாறின. வாள், தண்டு, இருப்புலக்கை, முசலம், ஈட்டி, சக்கரம், சுரிகை, சூலம், பாசம் முதலிய ஆயுதங்கள் வானிடை மின்னலைப்போல் ஒளி வீசின.

இவ்வாறு, இருதிறத்துச் சேனைகளும் கண்டார் கண்கள் துணுக்குறுமாறு கடுஞ்சமர் விளைத்தன. இறுதியில் அதிகனுடைய சேனைகள் உறுதியிழந்து மாண்டன. அவனுடைய மலையரண் துகள்பட்டது. அவன் ஓடிக் காட்டில் ஒளிந்தான். சோழனுடைய சேனை வீரர்கள் வெற்றிபெற்று அதிகனுடைய நவநிதிகளையும் மாண்ட வீரர்களது தலைகளையும் எடுத்துக் கொண்டு கருவூரை யடைந்தார்கள். மன்னவன் முன் அவைகளைக் கொணர்ந்து குவித்தனர். மன்னவனார் அவைகளைக் கண்டு தனது சேனா வீரர்களது போர்த்திறத்தை மெச்சிப் புகழ்ந்து மகிழ்ந்தருளினார். அத்தலைகளைக் கண்ணுற்றபோது அவைகளின் நடுவே ஒரு தலையில் சடைமுடியிருக்கக் கண்டார்.

> கண்டபொ ழுதேநடுங்கி மனங்கலங்கிக் கைதொழுது
> கொண்டபெரும் பயத்தினுடன் குறித்தெதிர்சென் றதுகொணர்ந்த
> திண்டிறலோன் கைத்தலையில் சடைதெரியப் பார்த்தருளிப்
> புண்டரிகத் திருக்கண்ணீர் பொழிந்திழியப் புரவலனார்.

மனம் நடுங்கினார். விண்ணருவியெனக் கண்ணருவி பொழியக் கருத்தழிந்தார். 'அந்தோ கெட்டேன்' என்று அலறினார். "நான் திருநீற்றின் நெறியைக் காத்து அரசளித்த தன்மை சால அழகிது. சடைமுடியுடைய ஒரு சிவனடியார் தலையைக் கண்டும் என் இதயம் வெடிக்காமல் இருக்கின்றதே. இனி அடியேன் உலகங் காத்து உயிர்காத்து வாழலாமோ? சிவபெருமானே! தேவ தேவா! கருணைக் கடலே! பழிக்கும் பாவத்துக்கும் ஆளானேன். இனி எனக்கு இவ்வுலகில் செயல் இல்லை'' என்று புலம்பினார்.

மதிமந்திரிகளை நோக்கி, "நீங்கள் இந்த அரசாட்சியை அறநெறி கடவாது ஆண்டு உரியகாலத்தில் என் புதல்வனுக்கு முடிசூட்டுவீர்களாக" என்று கட்டளை இட்டருளினார். அதைக் கேட்ட அமைச்சர்கள், "அந்தோ! இது என்ன செயல்?" என்று கூறிக் கதறிப் பதறினார்கள். "மதிநலமிக்க மந்திரிமார்களே! மனங் கலங்க வேண்டாம். இனி, எனக்கு இவ்வுலகில் வாழ்வு இல்லை. கடமையை நீங்கள் தவறாது செய்யுங்கள்" என்று கழறினார். அங்கே விறகுகளை யிட்டுப் பெருந்தீ வளர்ப்பித்தார். உடம்பு முழுவதுந் திருநீறு பூசிக்கொண்டார். சடையுடை சிரத்தை ஒரு பொற்றட்டில் ஏந்தித் தமது முடிமிசை ஏந்தினார். ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டு அந்த அழற்குண்டத்தை வலம் வந்தார். தாமரைப் பொய்கையில் குளிப்பார்போல் மகிழ்ச்சியுடன் நெருப்பிடை புகுந்தார். மலர் மழை சிந்தியது. வானில் தேவதுந்துபி முழங்கியது. புகழ்ச்சோழநாயனார் சிவபெருமான் திருவடி நிழலைச் சார்ந்து பேரின்பமுற்றார்.

விளக்கம்

உறையூர்

திருச்சிராப்பள்ளிக்கு அருகேயுள்ள நகரம். உறந்தை, கோழியூர் முதலிய பெயர்களை யுடையது. சோழர்கள் தமக்கு உறை ஊராகக் கொண்டதனால் உறையூர் எனப்பட்டது. ஆங்கு ஒரு சமயம் கோழி, யானையைத் துரத்தி வென்றதனாலும் கோழியூர் எனப்படும். சோழர்களுடைய தலைநகரமாக மிகமிகச் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய நன்மையுடைய தொன்மையான நகரம்.

புகழ்ச் சோழர்

இவர் தலைசிறந்த அடியார் பக்தி பூண்டவர். ஒப்புயர்வற்ற வீரருமாவார். சிவாலயங்களைப் புதுப்பித்தும், திருத்தொண்டுகள் அடியார்களைக் கொண்டு செய்வித்தும் இன்புறுவார்.

> பிறைவளருஞ் செஞ்சடையார் பேணுசிவா லயமெல்லாம்
> நிறைபெரும்பூ சனைவிளங்க நீடுதிருத் தொண்டர்தமைக்
> குறையிரந்து வேண்டுவன குறிப்பின்வழி கொடுத்தருளி
> முறைபுரிந்து திருநீற்று முதல்நெறியே பாலிப்பார்.

இவர் மன்னர் அனைவரும் கப்பங்கட்டி வணங்கிப் பணி புரியச் சக்கரவர்த்தியாக விளங்கினார். "முறை புரியுந் தனித் திகிரி முறை நில்லா முரணரசர் உறை அரணம் உளவாகில் தெரிந் துரைப்பீர்" என்று தமது அமைச்சரை நோக்கி வினாவி, "அதிகன்

என்பான் ஒருவன் மலையரணுடன் இருக்கின்றான். அவன் திறை தருவதில்லை'' என்று அமைச்சர் கூறலும், "அவனை வென்று வாருங்கள்'' என்று உடனே படைகளுடன் அமைச்சரை ஏவியபடியால் இவருடைய தலைமையும் நிலைமையும் விளங்கு கின்றன.

இத்தனை வீரவுணர்வுடைய இவர், தமது சேனைகள் கொணர்ந்த தலைகள் பலவற்றுள் ஒரு தலையில் சடையிருக்கக் கண்டவுடன் அடியார் ஒருவர் போர்புரிந்து மாண்டார் எனக் கருதி இவர் அடைந்த துன்பத்திற்கு எல்லையில்லை. "அந்தோ! கெட்டேன். யாரோ ஓர் அடியார் தனது கடன் முடிக்கும் பொருட்டுப் போரிட்டார் போலும். இவர் மாள்வதற்கு நான் காரணனாக இருந்தேனே. இதைக் கண்டும் நான் உலகை யாண்டு உயிர்வாழ்ந்து இன்புறலாமோ? மாண்டு ஒழிவேன்'' என்று துணிந்ததனால் இவருக்கு அடியவரிடம் உள்ள அன்பின் மிகுதி புலப்படுகின்றது.

தார்தாங்கிக் கடன்முடித்த சடைதாங்கும் திருமுடியார்
நீர்தாங்கும் சடைப்பெருமான் நெறிதாங்கண் டவரானார்
சீர்தாங்கும் இவர்வேணிச் சிரந்தாங்கி வரக்கண்டும்
பார்தாங்க இருந்தேனோ பழிதாங்கு வேன்என்றார்.

இவர் தீவளர்ப்பித்து அதில் முழுகி மாளத் தொடங்கும் பொது உடல் முழுவதும் திருநீறு பூசிக்கொண்டார் என்பதையும் சிந்திக்க. "பொய் மாற்றும் திருநீற்றுப் புனை கோலத்தினிற் பொலிந்தார்'' என்று வரும் அமுத வாக்காலறிக.

அன்றியும் திருநீற்றினைப் பூசி, அத்தலையை ஒரு பொன்மணித் தட்டில் வைத்துச் சென்னிமிசை ஏந்தி ஐந்தெழுத்தோதி நெருப்புக் குண்டத்தை வலம் வந்து அதில் மகிழ்ச்சியுடன் இறங்கினார்.

கண்டசடைச் சிரத்தினையோர் கனகமணிக் கலத்தேந்திக்
கொண்டுதிரு முடித்தாங்கிக் குலவும்எரி வலங்கொள்வார்
அண்டர்பிரான் திருநாமத் தஞ்செழுத்தும் எடுத்தோதி
மண்டுதழற் பிழம்பினிடை மகிழ்ந்தருளி உள்புக்கார்.

இதனால், இந் நாயனார் அழியாத சிவபதமடைந்து ஆராவமுதப் பேரின்பம் எய்தினார்.

நரசிங்க முனையரைய நாயனார் புராணம்

"மெய்யடியன் நரசிங்க முனையரையற் கடியேன்"

திருமுனைப்பாடி நாட்டையாளும் மன்னர் மரபில் அவதரித்தவர் நரசிங்க முனையரைய நாயனார். இவர் மன்னறம் வழுவாது மாநிலத்தை யாண்டு வந்தார். திருநீற்றில் அளவிறந்த அன்பு பூண்டிருந்தார். பற்பல மன்னர்களை வென்று வீரமும் வெற்றியும் விளங்க இனிது வாழ்ந்தார். சிவனடியார்களைக் கண்டால் எதிர்கொண்டு இறைஞ்சி இனிது உபசரிப்பார்.

சிவபெருமானுடைய திருக்கோயில்தோறும் பல நிபந்தங்கள் அமைத்து, காலந்தோறும் வழிபாடுகள் வழுவாது நடைபெறுமாறு செய்வித்தார். நித்திய நைமித்திக பூசைகள் சிறப்பாக நடாத்துமாறு செய்தார். நல்விழாக்கள் நடாத்தினார்.

திருவாதிரைதோறும் சிவமூர்த்தியை மிகவும் சிறப்பாக வழிபாடு செய்து மகிழ்வார். அன்று அடியார்களுக்கு அன்னமளித்து ஒவ்வோர் அடியார்க்கும் ஒரு நூறு பொன் கொடுத்து வணங்குவார். திருநீற்றையும் திருநீறணியும் அடியார்களையும் பேணிப் பெரிதும் மதித்து மனமகிழ்வார்.

இவ்வாறு, பலகாலும் ஒழுகி வரும்போது ஒரு திருவாதிரை நாளில் வழக்கம்போல் அடியார்கள் வந்தார்கள். அடியார்கட்கு அன்னமளித்துச் சொன்னமளித்து வரும்பொழுது, வந்தவர்களில் ஒருவர் தூர்த்தராக இருந்தார். காமக் குறியுடைய அவரைக் கண்டு மற்ற அடியார்கள் ஒதுங்கினார்கள்.

நரசிங்கமுனையர் அடியார்களை நோக்கி, "நீங்கள் இவ்வாறு இவரை இகழக் கூடாது. தூர்த்தராயினும் திருநீறு பூசியவர்களை இகழ்ந்தார் நரகடைவார். ஆகவே, எவராயினும் திருநீறு பூசிய வரைப் பூசிக்க வேண்டும்" என்று கூறி அத் தூர்த்தரைப் பணிந்து அவர்க்கு இரட்டியாக இருநூறு பொன் கொடுத்துக் கனியமுதன்ன இனிய மொழி கூறி விடைகொடுத்தனுப்பினார்.

சீலம்இல ரேஎனினும் திருநீறு சேர்ந்தாரை
ஞாலம்இகழ்ந் தருநரகம் நண்ணாமல் எண்ணுவார்

பாலணைந்தார் தமக்களித்த படிஇரட்டிப் பொன்கொடுத்து
மேலவரைத் தொழுதினிய மொழிவிளம்பி விடைகொடுத்தார்.

இவ்வாறு, இடையறாது திருத்தொண்டு புரிந்து, திருந்திய சிந்தையராகி சிவபெருமானுடைய திருவடி நிழலைச் சார்ந்து இன்புற்றார்.

விளக்கம்

திருமுனைப்பாடி நாடு

சோழநாட்டிற்கும் தொண்டைநாட்டிற்கும் இடையில் உள்ள நாட்டிற்கு நடுநாடு என்று பேர். அந்நாட்டில் ஒரு பகுதியாக விளங்குவது திருமுனைப்பாடி நாடு.

அரசர்கள் போர்புரிய பாடி வீடு பல அமைத்து ஆண்டதனால் இப்பேர் பெற்றது. இந்த நாட்டின் பெருமை அளவிட முடியாதது. சமயகுரவர்களாகிய நால்வர்களில் திருநாவுக்கரசு சுவாமிகளும் சுந்தரமூர்த்தி நாயனாரும் அவதரித்த நாடு திருமுனைப்பாடி நாடு.

புண்ணியத்தின் கருவூலமாக விளங்கிய அந்நாட்டை அறநெறி தவறாது அரசாண்டவர் நரசிங்கமுனைய நாயனார்.

நரசிங்க முனையரைய நாயனார்

இவர் சிவாலயங்களைப் பாதுகாத்து, பூசைகள் குறைவற நடக்குமாறு நிலங்களை முற்றூட்டாக வழங்கிச் சிவபுண்ணியஞ் செய்தார்.

ஆலய வழிபாடு குறையாது நடைபெறுமானால் நாட்டில் மாரி மாறிடாது மும்முறை பொழியும். வளம் பெருகும். குளம் நிறையும். நாடு தழைக்கும்.

இவர் திருநீற்றைப் பெரிதும் பேணி, அதனிடம் அளவற்ற அன்புடையவராய் வாழ்ந்தார்.

திருவாதிரை நாள் சிவமூர்த்திக்கு உவந்தநாள் ஆதலின் அன்று வந்த அடியார்கட்கு அன்னமுஞ் சொன்னமும் வழங்கினார். புண்ணிய நாளில் புரியும் அறத்திற்கு அதிக பயனுண்டு.

ஆறணிந்த சடைமுடியார்க் காதிரைநாள் தொறுமென்றும்
வேறுநிறை வழிபாடு விளங்கியபூ சனைமேவி
நீறணியுந் தொண்டர்அணைந் தார்க்கெல்லாம் நிகழ்பசும்பொன்
நூறுகுறை யாமலளித் தின்னமுது நுகர்விப்பார்.

திருநீறு பூசினார் யாவராயினும் அவரை வணங்கி வழிபட வேண்டும் என்பதை இவர் உலகமறியக் காட்டி யருளினார். அது சரிதானோ? என்று ஐயுறுவாரும் உளர். அரசாங்கத்தில் வேலை பார்ப்போரில் ஒழுக்கமில்லாதவர். அரசாங்க உடையுடுத்து வருவா ராயின் அவரை ஏனைய குற்றங் குறைகளைக் கவனியாது, அந்த உத்யோக உடை கண்டு அவரை மதிக்கின்றோமல்லவா? அதே போல நீறணிந்தார், அந்தரங்கத்தில் தவறுளராயினும் அவர் அணிந்த திருநீற்றை மதித்து வணங்குதல் வேண்டும் என உணர்க.

சேரமான் பெருமாள் நாயனார், முடிசூடி முதல் நாள் யானை மீது பவனிவரும்போது எதிரே வந்தவனை ஏகாலி என்று அறிந்தும், அவன் மீதுள்ளது உவர்மண் என்று அறிந்தும், திருநீற்று வேடத்தை நினைப்பித்தது என்ற ஒன்றைக் கருதி அவன் பாதத்தில் வீழ்ந்து வணங்கினார் என்றால் திருநீற்றினை நமது முன்னோர்கள் எப்படிப் போற்றி வந்தார்கள் என்பதை இங்கு நினைவு கூர்க.

எவரேனுந் தாமாக இலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டால் உள்கி
உவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. - அப்பர்

திருவாதிரை

திருவாதிரை சிவபெருமானுக்கு உவந்த நட்சத்திரம். அன்று சிவமூர்த்தியைச் சிறப்பாக வழிபட வேண்டும்.

திருநீலநக்க நாயனார் திருவாதிரையில் சிறப்பாகப் பூசித்தார் என்பதையும் அவர் வரலாற்றில் காண்க.

ஆய செய்கையில் அமருநாள் ஆதிரை நாளில்
மேய பூசனை நியதியை விதியினால் முடித்து.

திருவாரூரில் திருவாதிரைத் திருவிழா மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. அதனைக் கண்குளிரக் கண்ட அப்பரடிகள் அவ்வாதிரை விழாவைச் சிறப்பித்துப் பாடியருளியுள்ளார். அதில் ஒரு பாடல் வருமாறு.

முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்க ளோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்.

அதனால், இவர் ஆதிரை நட்சத்திரந்தோறும் அடியார்களை உபசரித்து ஒவ்வொருவருக்கும் அன்னமளித்து நூறு பொன் தரும் நியதியை மேற்கொண்டு ஒழுகினார். அதனால், சிவகதி பெற்றார்.

திருநீறு :-

திருநீறு சிவபெருமானுடைய திருவருளைப் பெறுவதற்கு மிகச் சிறந்த சாதனமாகும். திருநீற்றை அன்புடன் ஐந்தெழுத்தோதி அணிய வேண்டும். அங்ஙனம் அணிவார் வினைகள் நீறுபடுவ தனால் இதற்கு நீறு எனப் பேர் வந்தது. மேலான செல்வமாக விளங்குவதால் விபூதி எனப்படும்.

பசுவின் மலம் வெந்து சாம்பலானது திருநீறு; அதுபோல் பசுக் களாகிய ஆன்மாக்களின் மும்மலங்களையும் சுட்டு நீறாக்கச் செய்யும் ஆற்றலுடையது என்ற அருட்குறிப்பும் உடையது.

கவசம்போல் உடலையும் உயிரையுங் காப்பாற்றுவது திருநீறு. அதனால், அதற்கு ரட்சை என்ற பேரும் உண்டு. "கங்காளன் பூசுங் கவசத் திருநீறு" என்கின்றார் திருமூல நாயனார்.

ஈயம் பூசிய ஏனங்களில் நவாசாரம் முதலிய நச்சுப் பொருள் களை மாற்றப் பசுவின் சாணத்தைக் கரைத்து வைப்பதையும், நேர்வாளத்தின் நச்சுத்தன்மையை மாற்றப் பசுவின் சாணத்தில் ஊற வைப்பதையும், அன்பர்கள் கவனிக்க. பசுவின் சாணத் தாலாகிய சாம்பலைத் தெளித்து அவரைச் செடியை அழிக்குங் கரிய பூச்சிகளை அகற்றுவதையும் உன்னுக. ஆகவே, பசுவின் சாணத்தாலாகிய திருநீறு நமது உடம்பிலுள்ள நச்சுக் கிருமிகளை யழித்து, உடலுக்கும், உயிருக்கும் உறுதி பயக்கும் என்பது ஒருதலை. எனவே, சைவ சமய அன்பர்கள் அனைவரும் திருநீற்றை அன்புடன் அணிந்து அருள்பெறுக.

அதிபத்த நாயனார் புராணம்

"விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற் கடியேன்"

சூரிய குலத் தோன்றல்களாகிய சோழ மன்னர்கட்கு உரியதாகிய சோழவள நாட்டின்கண் கற்பகமலர்போல் கவின் பெற்று விளங்குவது நாகப்பட்டினம். தொன்மையும் நன்மையும் வாய்ந்த அந்நகர் கடற்கரையில் நல்ல வளமுடையதாகப் பொலிவுற்றது. திருமகள் அங்கு இனிது வாழ்ந்தனள். கரிபரி முதலியவைகளும் விண்ணளாவிய மாட மாளிகைகளும் நிறைந்திருந்தன. கப்பல்களில் பற்பல பண்டங்கள் இறக்குமதி யாவதும், ஏற்றுமதி செய்வதுமாக வாணிபத்திற்குத் தலைசிறந்திருந்தது. அளகை வேந்தனைப் போன்ற பெருநிதிக் கிழார்கள் வாழ்ந்து நல்லறங்களைச் செய்துகொண்டிருந்தார்கள்.

இத்தகைய நாகையம்பதியின் மருங்கிலே கடலை மிக அடுத்த நுளைப்பாடியிலே பரதவர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் கடலில் சென்று வலைவீசி அதனால் வரும் மீன்களை விற்று வாழ்க்கைச் சகடத்தை நடாத்துவார்கள். பெரிய வலைகளை இழுக்கின்ற ஒலியும், மீன் குவியல்களை விலை கூறி அழைக்கின்ற ஒலியும், வெண் சங்கங்களைக் குவிக்கின்ற ஒலியும் அலைகடலுக்கு எதிரொலி செய்வது போலிருந்தன. அந்த நுளைப்பாடியிலே பரதவர் குலத்திலே பிறந்தவர் அதிபத்த நாயனார். இவர் சிவ பெருமானுடைய திருவடியை மறவாதவராய் திருத்தொண்டு புரிந்து வந்தார். பரதவர் குலத்திற்குத் தலைவராய் அவர்கள் வலைவீசிப் பிடித்து மலைபோல் குவிக்கும் மீன்களைப் பெற்று வாழ்வார்.

இவ்வாறு, வலையில் படுகின்ற மீன்களில் தலைசிறந்த ஒரு மீனை "இது சிவபெருமானுக்கு" என்று அளவற்ற அன்புடன் கடலில் விட்டுவிடுவார். இந்த நியதியில் அவர் நின்று ஒழுகினார்.

முட்டில் மீன்கொலைத் தொழில்வளத் தவர்வலை முகந்து
பட்ட மீன்களில் ஒருதலை மீன்படுந் தோறும்
நட்ட மாடிய நம்பருக் கெனநளிர் முந்நீர்
விட்டு வந்தனர் விடாதஅன் புடன்என்றும் விருப்பால்.

ஒருநாளில் ஒரே மீன் கிடைத்தாலும் அதனையும் அரனார்க் கென்றே கடலில் விட்டுவிடுவார். பலநாள் தொடர்ந்து ஒவ்வொரு மீனே கிடைத்து வந்தது. அவ்வாறு அரிதிற் கிடைக்கின்ற அவ்வொரு மீனையும் கடலில் சிவமூர்த்திக்கு என்று விட்டு வந்தார். அதனால், வறுமை யடைந்து சுற்றத்தாரும் அவரும் உணவின்றி வாடினார்கள். அந்த நிலையிலும் அவர் மனம் வருந்தாராய் அகப்படும் ஒரு மீனை நியதி வழுவாமல் கடலில் விடுவாராயினார்.

சால நாள்கள்இப் படிவரத் தாம்உண வயர்த்துக்
கோல மேனியுந் தளரவுந் தந்தொழில் குறையாச்
சீல மேதலை நின்றவர் தந்திறந் தெரிந்தே
ஆலம் உண்டவர் தொண்டர்அன் பெனும்அமு துண்பார்.

பலநாள்கள் தொடர்ந்து இவ்வாறு நிகழ்வதால் அதிபத்தருக்கு உணவின்றித் திருமேனி தளர்ந்தது. தளர்ந்தும் அவர் பக்தி வளர்ந்தது. அவருடைய ஒப்பற்ற நியதி தளரவில்லை. ஆலகால விடமுண்ட இறைவர் அவருடைய அன்பென்னும் அமுதத்தை யுண்பாராயினார்.

இவ்வாறு, நிகழுநாளிலே ஒருநாள் பரதவர்கள் மீன்பிடிக்கச் சென்று கிடைத்த ஒரு மீனைக் கடலில் விடுத்து, வலை வீசியபோது நவரத்ன மயமான மிக உயர்ந்த ஒரு மீன் அகப்பட்டது. உலகத்தை விலை மதிக்கும் அவ் வொப்பற்ற மீனைக் கொண்டு கரையேறி னார்கள். இளஞ் சூரியன் உதித்தாற் போன்று உலகெலாம் அதிசயிக்க விளங்கும் அந்த அரிய மீனைத் தமது தலைவராகிய அதிபத்தரிடம் கொடுத்து நின்றார்கள்.

நவமணி யிழைத்த அப் பொன் மீனைக் கண்ட நாயனார், “ஆ ஆ! இந்த அரிய மீன் என்னை யாளுடைய ஈசனாருக்கே யாகும்” என்று அதனை மீளவும் கடலில் விடுத்தார். பற்றை விடுத்த அப்பெரியவர் முன் இறைவர் விடைமீது தோன்றி யருளினார். மூவருந் தேவருங் காணாத முழுமுதலைக் கண்டு கண்ணீர் மல்கிப் பன்முறைப் பணிந்து பரவசமாயினார். சிவ போகத்தில் அடியவர் களுடன் உறையும் பேரின்ப வாழ்வை இறைவர் அவருக்கு வழங்கி யருளினார்.

விளக்கம்

நாகப்பட்டினம்

சோழநாட்டில் கடற்கரையில் வளமையும் வாணிபமும் பொருந்திய நகரம் நாகப்பட்டினம். காரைக்காலம்மையாருடைய

கணவன் பரமதத்தனுடைய பிறப்பிடமும் அதுவேயாகும். தேவாரம், திருப்புகழ் பாடல் பெற்ற திருத்தலம். சோழநாடு ஒரு கற்பகக்கொடி. அதில் பூத்த மலர் நாகப்பட்டினம் என்கின்றார் தெய்வச் சேக்கிழார்.

பொன்னி நாடெனும் கற்பகக் பூங்கொடி மலர்போல்
நன்மை சான்றது நாகப்பட் டினத்திரு நகரம்.

அதிபத்தர்

அதிகமான பக்தி பூண்டிருந்தபடியால் இவர் அதிபத்தர் எனப் பேர் பெற்றார். மீன் பிடித்து விற்று உண்டு வாழும் பரதவர் குலத்தில் பிறந்தவரேனும் சிவபக்தியிற் சிறந்திருந்ததனாலும், நாளும் நாளும் தமது ஏவலர் பிடித்துவரும் மீன்களில் மிகவும் சிறந்த ஒரு மீனைச் சிவபெருமானுக்கு என்று கடலில் விடும் நியதி பூண்டிருந்த தனாலும் சிவகதி பெற்றார்.

இறைவனுக்கு என்று தேர்ந்தெடுக்கும் பழம், தேங்காய், மலர் முதலியவைகளைச் சிறந்தவைகளாக இருக்க வேண்டும். மட்ட மான பொருள்களை இறைவனுக்கு நிவேதிக்கும் குறைமதி யுடையார் இச்சரித்திரத்தை ஊன்றி நோக்கி உணர்ந்து உய்வு பெறுக.

இனி, இவர் பலநாள் ஒவ்வொரு மீனே கிடைத்தும் நாடோறும் அதனை அரனார்க்கென்றே விடுத்துப் பட்டினி கிடந்தார்.

பலநாள் பட்டினி கிடந்து மெய்தளர்ந்தும் மெய்ம்மை யினின்றும் தளராது நின்றார். நவரத்தினங்களால் உறுப்புடைய பொன்னிறமுடைய மீன் கிடைத்தது. அது உலகங்களை விலை மதிக்கத்தக்கது.

ஆனநா ளொன்றில் அவ்வொரு மீனும்அங் கொழித்துத்
தூநி றப்பசுங் கனகநற் சுடர்நவ மணியால்
மீனு றுப்புற அமைத்துல கடங்கலும் விலையாம்
பான்மை அற்புதப் படியதொன் றிடுவலைப் படுத்தார்.

இத்தகைய உயர்ந்த மீன் கிடைத்தும் அதனை விற்றுத் தனது வறுமை நோயைக் களைய எண்ணாமல் உயர்ந்த இம் மீன் ஈசர்க்கேயாம் என்று மீளவும் கடலிலே விடுத்தார் என்னில் இவருடைய அன்பின் திறம் அளக்கற்பாற்றோ?

இந்தப் பற்றற்ற அன்பினால் பரம்பொருளைத் தரிசித்துப் பரகதியடைந்தார்.

அகில லோகமும் பொருள்முதற் றாமெனு மளவிற்
புகலும் அப்பெரும் பற்றினைப் புரையற எறிந்த
இகலில் மெய்த்திருத் தொண்டர்முன் இறைவர்தாம் விடைமேல்
முகில்வி சும்பிடை அணைந்தனர் பொழிந்தனர் முகைப்பூ.

❀ ❀ ❀

கலிக்கம்ப நாயனார் புராணம்

"கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன்
..........................அடியார்க்கும் அடியேன்"

பெண்ணாகடம் என்பது ஒரு பழமையான தலம். ஒழுக்க முடைய நற்குடி மக்கள் வாழ்கின்ற அப்பதியில் தருமநெறி தங்கி யிருந்தது. முகில் தவழும் சோலைகள் சூழ்ந்திருந்தன.

வளம் பொருந்திய அத்திருத்தலத்தில் வணிகர் குலத்தில் அவதரித்தவர் கலிக்கம்ப நாயனார். சடை முடியுடைய விடையவர் திருவடியை மறவாத சிந்தையராய், அளவற்ற காதல் கொண்டு திருத்தூங்கானைமாடம் என்னும் திருக்கோயிலில் திருத்தொண்டு பல புரிந்து வாழ்ந்து வந்தார்.

அரனார் அடியார்க்கு அளவற்ற அன்புடன், இனிய கனி, கறி, நெய், பால், தயிர், தேன், சர்க்கரை முதலியவைகளுடன் உயர்ந்த உணவுகளைப் படைத்து அமுது செய்விப்பார். அன்றியும் அவர்கள் புரியும் திருத்தொண்டிற்காக வேண்டுஞ் செம்பொன்னும் இன்பமுடன் தருவார்.

ஆன அன்பர் தாமென்றும் அரனார் அன்பர்க் கமுதுசெய
மேன்மை விளங்கு போனகமும் விரும்பு கறிநெய் தயிர்தீம்பால்
தேனின் இனிய கனிகட்டி திருந்த அமுது செய்வித்தே
ஏனை நிதியம் வேண்டுவன எல்லாம் இன்ப முறஅளிப்பார்.

இன்னும் அடியார்கள் விரும்புகின்ற பொருள்கள் யாவுந் தந்து அரிய தொண்டு புரிந்து வந்தார்.

ஒருநாள் தமது திருமாளிகையில் அமுது செய்ய வந்து அடியார் களை வழக்கம்போல் அழைத்துத் திருவடிகளை நீர்வார்த்துப் பூசிக்க முயல்வாராயினார்.

அவருடைய திருந்திய சிந்தையுடைய மனைவியார் வீட்டை விளக்கி, இனிய உணவுகளை அமைத்து, கரகத்தில் நீர் கொணர்ந்து, கணவனார் திருத்தொண்டர்கட்குப் பாதபூசை செய்யும்போது கரகநீரைச் சொரிந்து உபசரித்தார்.

முன்பு தம்மிடத்தில் வேலை செய்து வந்த ஒருவர், ஏவலை வெறுத்துச் சென்று சிவனடியாராகி அன்பருடனே கலந்து திருநீறும் கண்டிகையும் புனைந்து அக்கூட்டத்தில் இருந்தார். அவருடைய திருவடியைத் தொட்டுக் கரக நீரை விடுத்துப் பூசிக்க மனைவியார் இசையாது, "இவர் நம்மிடம் பணி செய்தவர்" என்று கருதி நின்றார்.

கலிக்கம்ப நாயனார், "அடியார்களை முன்னிலைமை குறித்து வழிபடாமல் இருப்பது பிழை. யாவரே யாயினும் அடியார்கள் என்றால் வழிபடத் தக்கவரே யாகும். அடியார் அடிமலர்மீது நீர்வார்க்க இவள் மறுத்தாள்" என்று கருதி, வடிவாள் எடுத்து மனைவியார் கரமலரைத் துணித்தார். பின்னர், தாமே கரகநீரை வார்த்து அவருடைய அடிமலரைப் பூசித்தார். அவர் அமுது செய்யத் தாமே யாவும் படைத்து உபசரித்தார்.

இவ்வாறு, நெடுநாள்கள் அடியார்க்கு அமுது அளித்தும் திருத் தொண்டு புரிந்தும் அன்பு செய்து நீலகண்டப்பெருமான் சீலமார் திருவடி சேர்ந்தார்.

விளக்கம்

திருப்பெண்ணாகடம் :-

இத்தலம் நடுநாட்டில் உள்ளது. புகைவண்டி நிலையமுண்டு. மெய்கண்ட தேவர் அவதரித்த தலம். அப்பரடிகளுக்கு இடபக்குறி பொறித்த இடமுமாகும். இங்குள்ள கோயிலுக்குத் திருத்தூங்கானை மாடம் என்பது பேர். சுவாமி பெயர் சுடர்க்கொழுந்தீசர்; அம்மை பெயர் - கடந்தை நாயகி.

கலிக்கம்ப நாயனார் :-

இவர், அடியார்களைச் சிவமாகவே எண்ணி நாளும் இனிய கனியமுதன்ன உணவு தந்து, ஆடையும் பொன்னும் வழங்கி பணிபுரிந்து வந்தவர். அவ்வாறு புரிகின்றபோது அடியவர்களது முன்னை நிலையைக் குறியாது அளவற்ற அன்புடன் புரிந்து வந்தார்.

முன்னர் பணியாளனாக இருந்த ஒருவர் பின்னர் சிவனடியா ராயினார்.

அடியவர்களின் முன்னை நிலைகுறித்து எண்ணி அவமதிக்கக் கூடாது.

அங்கமெலாங் குறைந்தழுகுந் தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவு ளாரே.

என்ற அப்பர் அமுத வாக்கின்படி, முன்னர் எத்துணையராகி, எத்தொழில் புரிந்தன ராயினும் அடியவரானால் அவர்களை முன்னை நிலை கருதாது வழிபட வேண்டும்.

இத் திருநெறியினின்றும் வழுவி, பாதம் விளக்க நீர்வார்க்க மறுத்த மனைவியாரது கரத்தை வெட்டினார். அங்ஙனம் புரிந்த தனால் மனைவியாருடைய பாவம் அப் பிறப்புடன் கழிந்தது. மறுபிறப்பில் தொடராது. ஆதலால், அவர் மீது வைத்த கருணை யால் புரிந்தார் என்க.

வெறித்தண் கொன்றை முடியார்தம் அடியார் இவர்முன் மேவுநிலை
குறித்து வெள்கி நீர்வாரா தொழிந்தாள் என்று மனங்கொண்டு
மறித்து நோக்கார் வடிவாளை வாங்கிக் கரகம் வாங்கிக்கை
தறித்துக் கரக நீரெடுத்துத் தாமே அவர்தாள் விளக்கினார்.

கலிய நாயனார் புராணம்

கலியன்................அடியார்க்கும் அடியேன்

ஓங்கிய புகழுடைய தொண்டை நன்னாட்டில் சிறப்புற்று விளங்குகின்ற திருத்தலம் திருவொற்றியூர். காருலவு சோலையும் தேருலவு வீதியும் உடைய அப்பதி கடற்கரையில் விளங்குவது. செந்தமிழ்ப் பதிகம் ஒழியாது பாடும் மண்டபங்களும், பெண்மணி களுடைய நடனங்கள் ஒழியாது நிகழும் அழகிய அரங்குகளும், பல வாத்தியங்கள் ஒலிக்கும் விழா ஒழியாத தெருக்களும், அன்னதானம் ஒழியாது புரியும் திருமடங்களும், தாழை புன்னை சண்பகம் முதலிய மலர் நிறைந்த மரங்களும் நிறைந்து அழகு புரிந்தன.

இத்தகைய அத் திருத்தலத்திலே எண்ணெய், வாணிகம் புரியும் வணிகர்கள் வாழும் சக்கரப்பாடித் தெருவிலே, அக்குலஞ்செய்த புண்ணியத்தால் அவதரித்தார் கலியநாயனார். அவர் மிகுந்த செல்வம் படைத்தவர். திருவருள் நெறியில் நின்ற அவர் சிவபெரு மானுக்கு உரிய திருத்தொண்டு புரிய முயல்வார். தொண்டுகளில் சிறந்தது. திருவிளக்கிடுதல் என்று கருதி, திருவொற்றியூரில் திகழும் படம்பக்க நாதருடைய திருக்கோயிலில் உள்ளும் புறமும் ஆயிரக் கணக்கான விளக்குகள் இரவும் பகலும் ஏற்றி மகிழ்ந்தார்.

எல்லையில்பல் கோடிதனத் திறைவராய் இப்படித்தாம்
செல்வநெறிப் பயனறிந்து திருவொற்றி யூர்அமர்ந்த
கொல்லைமழ விடையார்தம் கோயிலின்உள் ளும்புறமும்
அல்லுநெடும் பகலும்இடும் திருவிளக்கின் அணிவிளைத்தார்.

வறுமையிலும் திருத்தொண்டு புரியும் அவர் பெருமையை உலகிற்கு உணர்த்தும் உமைபங்கன் திருவருளால், செல்வத்தை வளர்க்கும் வியாபாரம் நின்றுவிட்டது. அவருடைய இருவினை மாண்டதுபோல் செல்வமும் அழிந்துவிட்டது.

திருத்தொண்டில் நிலைபெற்ற அன்புடைய கலியநாயனார் தமது குலத்தார்களிடம் எண்ணெய் வாங்கி ஆங்காங்கு சென்று விற்று அதனால் வரும் கூலியைக் கொணர்ந்து விளக்கிடும் தொண்டினைப் புரிந்து வந்தார். சில காலத்திற்குப் பின் இவர்பால்

எண்ணெய் தந்து விற்கச் செய்யும் செயலைக் குலத்தினர் விடுத்த படியால், இவருக்குக் கூலியும் கிடையா தொழிந்தது.

கலியனார் மனந் தளர்ந்து எண்ணெய் ஆட்டியும், பக்குவத்தில் எண்ணெய் இறக்கியும், செக்குமாட்டை ஓட்டியும் அதனால் வரும் கூலியைப் பெற்று விளக்கிட்டு, தமது திருத்தொண்டை விளக்கிட்டார்.

> செக்குநிறை எள்ளாட்டி பதமறிந்து திலதயிலம்
> பக்கமெழ மிகவுழந்தும் பாண்டில்வரும் எருதுய்த்தும்
> தக்கதொழில் பெறுங்கூலி தாங்கொண்டு தாழாமை
> மிக்கதிரு விளக்கிட்டார் விழுத்தொண்டு விளக்கிட்டார்.

இப்படிச் செக்கு ஓட்டும் தொழில்புரிவார் பலர் ஏற்பட்ட தனால் இவருக்கு அத் தொழிலும் கிடையா தொழிந்தது. தமது வீட்டையும் வீட்டிலுள்ள பண்டங்களையும் விற்றுத் திருவிளக்கிட் டார். பின்னர் ஒன்றும் இன்மையால் தமது மனைவியாரை விற்க முயற்சி செய்தார். தமது மனைவியாரைப் பெற்றுப் பொன்தரு வாரைத் தேடினார். ஒருவரும் கிடைத்தாரில்லை.

படம்பக்கநாதருடைய கோயிலுக்கு வந்தார். அன்று விளக்கிட ஒரு சாதனமும் இன்றி உள்ளந் தளர்ந்தார். "விளக்கிடும் தொண்டு இல்லையேல் அடியேனும் இல்லை" என்று துணிந்தார். அகல்களை வரிசையாக அமைத்தார். அகல்தோறும் திரியிட்டனர். எண்ணெய்க்குப் பதிலாகத் தமது உதிரத்தையே நிரப்ப எண்ணி வாள் கொண்டு கண்டத்தை யரிந்தார். அவ்வாறு அரிந்த அவர் திருக்கரத்தைச் சிவமூர்த்தி நேரே வந்து பிடித்தருளினார்.

விடையின்மீது எம்பிரான் காட்சி கொடுத்தருளினார். அரிந்த இடர் அகன்றது. "தேவதேவா! மகாதேவா! என்னை ஆளுடைய ஈசனே! மாசிலாமணியே!" என்று அஞ்சலி செய்து துதித்தார். சிவபெருமான் அருளினால் அவருடன் சிவபதம் புகுந்து ஆரா யின்ப அமுதம் அருந்துவாராயினார்.

விளக்கம்

திருவொற்றியூர்

தொண்டை நன்னாட்டில் கடற்கரையில் பூலோக சிவலோக மாக விளங்குவது திருவொற்றியூர். காவிரிப்பூம் பட்டினத்திலே அவதரித்த பட்டினத்து அடிகளார் முத்திபெற்ற திருத்தலம். சுந்தர மூர்த்தி நாயனார் சங்கிலியாரை மணஞ் செய்து கொண்ட தலம்.

> வாவியெலாந் தீர்த்தம் மணலெல்லாம் வெண்ணீறு
> காவணங்க ளெல்லாம் கணநாதர் - பூவுலகில்

ஈது சிவலோகம் என்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதுந் திருவொற்றி யூர்.

ஒடுவிழுந்து சீப்பாயும் ஒன்பதுவாய்ப் புண்ணுக்கு
இடுமருந்தை யான்கண்டு கொண்டேன் - கடுவருந்து
தேவாதி தேவன் திருவொற்றி யூர்த்தெருவில்
போவார் அடியிற் பொடி.

என்று பட்டினத்துச் சுவாமிகள் இத் தலத்தைச் சிறப்பித்துப் பாடியிருப்பதனால் இதன் பெருமை நனிவிளங்கும். சுவாமி பெயர்:- படம்பக்கநாதர் - எழுத்தறியும் பெருமான். அம்மை பெயர்:- வடிவுடை மாணிக்கம்.

கலிய நாயனார்

இவர் கோயிலில் திருவிளக்கிடும் திருப்பணியை மேற்கொண்டு, அதனை இடைவிடாது புரிந்து வந்தார். இரவு பகலாகக் கோயிலில் பற்பல விளக்குகளை இட்டு மகிழ்ந்தார். வறுமை வந்தும் அப்பணியை விடாது கூலிக்கு எண்ணெய் விற்றும், செக்கு ஓட்டியும் புரிந்தார். இறுதியில் உறுதியுடன் எண்ணெய்க்குப்பதில் ஊட்டியை அரிந்து உதிரத்தையே விடுத்து விளக்கெரித்தார். எனில் அவருடைய திருத்தொண்டின் திறத்தை. யாம் இயம்பவல்லேமோ?

அளவற்ற உறுதியுடைய இவரது திருக்கரத்தைக் கண்ணுதலார் பெருகு திருக்கருணையுடன் நேர்வந்து பிடித்தருளும் பேறு பெற்றார்.

திருவிளக்கிடுதல்

திருக்கோயிலில் திருவிளக்கிடுதல் சிறந்த ஒப்பற்ற திருத்தொண்டாகும். "விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்" என்கின்றார் திருநாவுக்கரசனார். அபுத்தி பூர்வமாக அணைகின்ற திருவிளக்கைத் தூண்டிய புண்ணியத்தினால் எலி பலிச்சக்ரவர்த்தியாகப் பிறந்தது என்பதால் விளக்கிட்டவர் பெறும் பேறு விளக்கப்படுகின்றது.

இத்தகைய நற்பணியில் தலைசிறந்து இறுதிவரை உறுதியுடன் நின்றவர் கலிய நாயனார். அவருக்கு இப்பணியில் இருந்த இணையற்ற உறுதியை அடியில் வரும் திருப்பாடலினால் அறிக.

மனமகிழ்ந்து மனைவியார் தமைக்கொண்டு வளநகரில்
தனமளிப்பார் தமைஎங்குங் கிடையாமல் தளர்வெய்திச்
சினவிடையார் திருக்கோயில் திருவிளக்குப் பணிமுட்டக்
கனவிலுமுன் பறியாதார் கையறவால் எய்தினார்.

சத்தி நாயனார் புராணம்

"கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்"

சோழவளநாட்டிலே வரிஞ்சையூர் என்னும் ஊரிலே வேளாளர் குலத்திலே பிறந்தவர் சத்தி நாயனார். இவர் மாலயனாதி வானவரும் அறியாத சீலமார் சிவன் கழல் ஏத்தித், திருத்தொண்டு புரிவார்.

சிவபெருமானுடைய அடியார்களை யாரேனும் இகழ்ந் துரைப்பரேல், அவர் நாவைக் குறட்டினால் பிடித்து இழுத்து சத்தி என்ற ஆயுதத்தால் அரிவார். அதனால், இவர் சத்தி நாயனார் என்று பேர்பெற்றார்.

அத்த ராகிய அங்கணர் அன்பரை
இத்த லத்தினில் இகழ்ந்தியம் பும்உரை
வைத்த நாவை வலித்தரி சத்தியால்
சத்தி யார்எனும் நாமம் தரித்துளார்.

அதனால், அடியார் நிந்தனையின்றி உலகம் திருந்தி நல்வழிப் பட்டது. மற்றவர்களால் செய்ய இயலாத இவ் வீரத்திருப் பணியை இப்பரந்த வுலகிலே சிறந்த ஆற்றலுடன் இவர் பலநாள் புரிந்தார். சிவநெறியிலே நின்று கருணை நிறைந்த உள்ளத்துடன் வாழ்ந்து முடிவில் மணிமன்றுள் ஆடுகின்ற அம்பலவாணருடைய திருவடி நிழலில் சார்ந்து ஆரா இன்ப அருளமுதருந்தி இன்புற் றார்.

விளக்கம்

இறைவன் அடியார்கள் இதயத்தில் இமைப்பொழுதும் நீங்காமல் எழுந்தருளியிருக்கின்றனன். இறை நிந்தனையைக் காட்டிலும் அடியார் நிந்தனை கொடியது. இறைவனைப் பகைத்த வரும் ஒரு காலத்தில் உய்வு பெறுவர். அடியாரைப் பகைத்தவர் எக்காலத்திலும் உய்வு பெறார். சூரியன்முன் எதிர்த்துப் பலமணி நேரம் நிற்கலாம். சூரியன் அருள்பெற்ற நொய்மணலில் சில நிமிஷங்கூட எதிர்த்து நிற்கமுடியாது.

திருமாலை ஐந்துகோடி இருபத்தைந்து லட்சத்து முப்பத்தை யாயிரம் ஆண்டுகள் நிந்தித்தான் இரணியன். திருமாலின் அடிய வராகிய பிரகலாதரைப் பகைத்தான். அதனால், விரைந்து அழிந்து விட்டான். ஆனபடியால், அடியார் நிந்தனை அதிபாதகமாகும். அப்பாதகத்தைப் புரிவோரை இம்மையிலே தண்டித்தால், அப்பாவம் மறுமையிலே தொடராது. தண்டிக்காதிருப்பின் செய்த பாவம் ஒன்றுக்கு ஆயிரமாக வளர்ந்து மறுமையிலே வந்து துன்புறுத்தும். அதனை முளையிலே களைவது நல்லது. அதனால், அடியார் நிந்தனை புரிந்து அவ்வதிபாதகத்தால் மறுமையில் பெருந் துன்பமுற்று வருந்தாதிருக்க வேண்டும் என்ற கருணையினாலே இவ்வாறு தண்டித்து வந்தார். ஆகவே, இது மறச்செயலன்று, அறச்செயலே என அறிக. அதனால், அடியார் நிந்தனை யாகிய அரும்பாவம் உலகில் அருகும்; அடியார் பக்தி பெருகும்.

வீரமுள்ள ஆண்மையாளரை யன்றி, ஏனோரால் மேற்கொள்ள முடியாதது, "அன்னதாகிய ஆண்மைத் திருப்பணி" என்று குறிப்பிடுவதனால் அறிக. திருவாளரை அறிவிக்க வந்த சேக்கிழார் அடிகள் "ஐயமின்றி அரிய திருப்பணி மெய்யினாற் செய்த வீரத் திருத்தொண்டர்" என்று வியந்துரைத்தார்.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புராணம்

"ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்"

தொண்டை மண்டலத்தின் தலைநகராகிய காஞ்சிமா நகரின் கண் பல்லவர் குலத்தில் அவதரித்தவர் ஐயடிகள் காடவர்கோன் நாயனார். இவர் கலியையும் பகைவரது வலியையும் அடக்கிச் சைவ நெறியை எங்கும் பரவச் செய்து நீதிநெறி வழுவாது அரசு புரிந்தார்.

திருவும், புகழும் விளங்க எவ்வுயிர்களும் பெருமையுடன் இனிது வாழவும்; வேத சிவாகமங்களின் நெறி ஓங்கவும் ஆட்சி செய்தார். மன்னர்கள் பலர் வந்து அவர் கட்டளைக்கு அடங்கிப் பணி புரிந்தார்கள். வடமொழி தமிழ் என்ற இருமொழிகளிலும் வல்லவராய்த் தொண்டு புரிந்து வந்த அவர், உலகத்தை அரசுபுரிவது துன்பமென்று கருதி, அரசாட்சியைத் தன் புதல்வனிடம் ஒப்புவித்து விட்டு, திருத்தொண்டிலேயே உறைப்புடன் நின்றார்.

மன்னவரும் பணிசெய்ய வடநூல்தென் தமிழ்முதலாம்
பன்னுகலை பணிசெய்யப் பாரளிப்பார் அரசாட்சி
இன்னலென இகழ்ந்ததனை எழிற்குமரன் மேலிழிச்சி
நன்மைநெறித் திருத்தொண்டு நயந்தளிப்பா ராயினார்.

சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள்தோறும் சென்று, உள்ளங் குழைந்து உருகி அங்குப் பணிபல புரிந்து, ஒவ்வொரு கோயிலுக்கு ஒவ்வொரு வெண்பா பாடிப் பரவுவார்.

தில்லையம்பதி சென்று கனகசபையில் நடனம் புரிகின்ற புனித நாயகரைப் போற்றி இனிய தமிழால் வெண்பாவைப் பாடினார். அங்குச் சில நாள் தங்கித் திருத்தொண்டு புரிந்தார். இவ்வாறு தலங்கள்தோறும் போய்ப் பரமநாயகனைப் பக்தியுடன் பரவித் தமிழ்த்தொண்டு புரிந்து முடிவில் சிவபெருமானுடைய திருவடி நிழலை யடைந்து இன்புற்றார்.

விளக்கம்

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அரசராகத் திகழ்ந்து, பற்பல தொண்டுகள் புரிந்து சீரும் சிறப்புமாக வாழ்ந்தவர். பின்னர், அரச

பதவியை வெறுத்து அதனைத் துறந்து, அரனாருடைய திருத் தொண்டுக்காக வாழ்நாளை அர்ப்பணம் புரிந்தார். பதிகள்தோறும் போய பணி பல புரிந்தார்.

இறைவனுக்கு உகந்தது மலர்; மலர்மாலை இறைவனுடைய திருமேனியுடன் நின்று அழகுசெய்யும். ஆயினும், பூமாலை வாடும் இயல்புடையது. இனி, பூமாலையினும் பன்மடங்கு உயர்ந்தது பாமாலை. என்றும் வாடாதது; அழியாதது; ஞான வாசனை வீசுவது. உள்ளத்தை உருக்கி அன்பு வெள்ளத்தைப் பெருக்கி நம்மை உய்விப்பது. அதனாலன்றோ தூமறை பாடும் வாயார், "சொற்றமிழ் பாடுக; அர்ச்சனை பாட்டேயாகும்'' என்று நம்பியாரூரரை நோக்கிக் கூறியருளினார்.

இத்தகைய தமிழ்ப்பாமாலை புனையும் திருத்தொண்டு புரிந்து அதன் பயனால் அரனடி சார்ந்தவர் இவர். ஒரு கோயிலுக்கு ஒரு வெண்பாவே பாடும் நியமம் பூண்டார். ஏன்? யாவரும் எளிதில் ஓதி உய்யும் பொருட்டு எனவுணர்க.

இவர் பாடிய பாடலுள் சில :

ஒடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று - நாடுகின்ற
*நல்லச்சிற் றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர்.

★ நல்லச்சிற்றம்பலம் - நல் அச்சு இற்று அம்பலம் என்று பிரிக்க. அச்சு - உடம்பு.

குந்தி நடந்து குனிந்தொருகை கோல்ஊன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி - வந்துந்தி
*ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை.

★ ஐயாறு வாயாறு - கோழையாகிய ஆறு வாய்வழி.

தொட்டுத் தடவித் துடிப்பொன்றுங் காணாது
பெட்டப் பிணம்என்று பேரிட்டு - கட்டி
*எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை.

★ எடுங்களத்தா - எடுங்கள் அத்தா.

படிமுழுதும் வெண்குடைக்கீழ் பாரெலாம் ஆண்ட
முடியரசர் செல்வத்து மும்மை - கடியிலங்கு
தோடேந்து கொன்றையந்தார்ச் சோதிக்குத் தொண்டுபட்
டோடேந்தி உண்ப துறும்.

கணம்புல்ல நாயனார் புராணம்

"கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும்...............அடியேன்"

வட வெள்ளாற்றின் தென்கரையில் இருக்குவேளூர் என்று ஒரு தலமுண்டு. சோலையிலுள்ள பலாப்பழங்கள் வெடித்து அதனின்றும் வழியும் தேன் பாய்ந்து வயல் விளையும். அவ்வூரிலே தலைவராய் வாழ்ந்தார் கணம்புல்ல நாயனார். நிறைந்த செல்வம் உடையவராய், நற்குண சீலராய் அவர் விளங்கினார். ஈசன் திருவடி ஒன்றே மெய்ப்பொருள் என்று விரும்பி அன்பு செய்வார். "செல்வத்தின் பயன் சிவபெருமான் திருக்கோயிலின் உள்ளே ஒளியுற விளக்கெரித்தலே" என்றுணர்ந்து, திருக்கோயிலில் திரு விளக்கிட்டு, நாவார நம்பனைப் பாடி அன்பு செய்வார்.

அவருக்கு வறுமை வந்து எய்தியது. தேவாதி தேவராம் அம்பல வாணர் எழுந்தருளியுள்ள தில்லையம்பதி சென்றார். சென்று ஆடலரசை அன்புடன் பலகாலும் பணிந்து, தில்லையிலேயே தங்கியிருந்தார். வீட்டில் உள்ள பொருள்களை விற்று விற்றுத் திருப் புலீச்சரம் என்னும் கோயிலில் விளக்கெரித்து வந்தார். விற்பதற்கு வேறு ஒரு பொருளும் இல்லா தொழிந்தது. அயலாரிடம் போய் இரப்பதற்கு அஞ்சினார். உடல் உழைப்பினால் அரிந்த கணம் புல்லைக் கொண்டுவந்து விற்று அப்பொருளால் நெய் வாங்கி விளக்கிட்டுத் தொண்டுபுரிந்தார்.

இவ்வாறு, தொண்டு புரியும் நாளில் அரிந்து கொண்டு வரும் கணம் புல் எங்கும் விலையாகாது இடர்ப்பட்டார். அதனால், அவர் அப்புல்லையே திரித்து விளக்காக எரித்தார். இவ்வாறு, தொடர்ந்து செய்தபோது அப்புல் போதாத நிலையுற்றது. கணம்புல்ல நாயனார் அன்புருகும் சிந்தையுடன் என்புருக அவ்விளக்கில் தலையை வைத்து எரித்தார். உடனே, சிவபெருமான் திருவருள் புரிந்து அவருக்குச் சிவலோகம் அருள்புரிந்தார். கணம்புல்ல நாயனார் திருக்கயிலையில் இறைவரை இறைஞ்சிப் பேரின்ப நிலை யடைந்தார்.

விளக்கம்

கணம்புல்லை அரிந்து தொண்டு செய்ததனால் இவர் கணம் புல்லர் என்ற பேர் பெற்றார்.

"விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாகும்"

என்ற அப்பர் திருவாக்கின்படி, திருக்கோயிலில் விளக்கிடுவது மேலான திருத்தொண்டு. இத்தொண்டினை இவர் இடையறாது புரிந்து இன்புற்றார். இரவச்சம் உடையவராய் உடல் உழைத்தே தொண்டு புரிந்தார் என்பதையும் நன்கு உணர்க. யாசகம் புரிந்து தொண்டு புரிவது அத்துணைச் சிறப்புடையதன்று என்று தெளிக.

தில்லைநகர் மணிமன்றுள் ஆடுகின்ற சேவடிகள்
அல்கியஅன் புடனிறைஞ்சி யமர்கின்றார் புரமெரித்த
வில்லியார் திருப்புலீச் சரத்தின்கண் விளக்கெரிக்க
இல்லிடையுள் ளனமாறி எரித்துவரும் அந்நாளில்,

ஆயசெயல் மாண்டதற்பின் அயலவர்பால் இரப்பஞ்சிக்
காயமுயற் சியிலரிந்த கணம்புல்லுக் கொடுவந்து
மேயவிலைக் குக்கொடுத்து விலைப்பொருளால் நெய்மாறி
தூயதிரு விளக்கெரித்தார் துளக்கறுமெய்த் தொண்டனார்.

நோவாமல் பொருள் சேர்த்துச் செய்யுந் தொண்டைக் காட்டிலும் உடல் நொந்து உழைத்துப் பொருளீட்டி அது கொண்டு செய்யும் பணி ஒப்பற்ற உயர்வுடையது.

அவ்வாறு செய்த பணிக்கும் இடர் வந்தபோது தமது தலையை விளக்கில் வைத்து என்புருக எரித்தார் எனில் இவருடைய அன்பு கடலினும் பெரிதன்றோ?

காரி நாயனார் புராணம்

"காரிக்கும் அடியேன்"

திருக்கடவூரிலே அவதரித்தவர் காரி நாயனார். அவர் செந்தமிழை நன்கு ஆய்ந்து அறிந்தவர். கவி பாடுவதில் வல்லுநர். இவர் மூவேந்தரிடமுஞ் சென்று, சொல் விளங்கப் பொருள் மறைந்து நிற்கும்படி தமது பெயரால் காரிக்கோவை என்று பாடி உரையும் விளக்குவார். அம்மன்னர்கள் மகிழ்ந்து கொடுத்த பொற்குவியலைக் கொணர்ந்து சிவபெருமானுக்குப் பல திருக்கோயில்கள் புதுக்கினார். எல்லோருக்கும் உள்ளம் உவக்கும்படி இன்சொல்லே கூறுவார். சிவனடியார்க்கு இருநிதியும் அன்புடன் வழங்குவார். வட கயிலையை மறவாது தியானம் புரிந்து கொண்டிருந்தார்.

யாவர்க்கு மனமுவக்கு மின்பமொழிப் பயனியம்பித்
தேவர்க்கு முதற்றேவர் சீரடியார் எல்லார்க்கும்
மேவுற்ற இருநிதியம் மிகவளித்து விடையவர்தங்
காவுற்ற திருக்கயிலை மறவாத கருத்தினராய்.

உலகமெங்கும் இவர் புகழ் பரவி நிலைநிற்ப தாயிற்று. இடையறாத கயிலைத் தியானத்தினால், சிவபெருமான் திருவருள் துணைபுரிய உடம்புடன் கயிலைமலை சேர்ந்து சிவானந்தம் பெற்றார்.

விளக்கம்

தீதின்றி வந்த பொருள் சிவாலயத்திற்கும் சிவனடியார்க்குமே வழங்குவது பதி புண்ணியம். ஆலயம் அமைத்தல் நிலையான பணியாகும். இவர் தாம் கற்ற தமிழறிவால் கோவை பாடி அதனால் வரும் பெரும்பொருள் அத்தனையும் கோயிற்பணிக்கும் அடி யார்க்குமே ஆகுமாறு அறம்புரிந்தார்.

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

என்றபடி இடையறாத கயிலைத் தியானத்தால் இவர் உடம்புடன் கயிலை யடைந்தார். "வாய்ந்தமனம் போலுடம்பும் வடகயிலை மலைசேர்ந்தார்" என வருவதனால் அறிக.

இவ்வுடம்பு ஐம்பூதங்களின் பரிணாமம். பிராகிருத உடம்பு. திருக்கயிலை அப்பிராகிருதம். ஐம்பூத சேர்க்கையினால் ஆகாதது. அப்பிராகிருத கயிலையும் பிராகிருத உடம்புடன் சேரமுடியாது. ஆனால், இவர் உடம்புடன் சென்றார் என வருகின்றது. அதன் கருத்து, இவ்வுடம்பொடு சென்றவுடன் இவ்வுடம்பு கற்பூரம் கனலில் மறைவதுபோல் அங்கு மறைந்து விடும் என உணர்க.

இவ்வாறு, சுவர்க்கத்திற்கு உடம்புடன் தருமர் சென்றார் என்றும், சென்றபின் உடம்பு மறைந்து ஒளியுடம்பு பெற்றார் என்றும் மகாபாரதங் கூறுகின்றது.

நின்றசீர் நெடுமாற நாயனார் புராணம்

"நிறைக்கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்"

மதுரையம்பதியை அரசு புரிந்திருந்தார் நின்றசீர் நெடுமாற நாயனார். மங்கையர்க்கரசியாரை வாழ்க்கைத் துணைவியாக் கொள்ளும் பெரும்பேறு பெற்றவர். இவர் தடுமாறு நெறியைத் தவமென்று கொண்டு உடலை ஒறுக்கும் சமண் வலைப்பட்டுத் திருஞான சம்பந்தருடைய அருட்பெருங் கருணையால் சைவசமயஞ் சார்ந்து, சைவத்தை வளர்த்து உலகமெங்கும் புகழ்பெற்றார். தென்னாடு முழுவதும் சிவம்பெருக்கி இனிது அரசு புரிந்தார்.

ஒரு சமயம் வடபுலத்துப் பகைமன்னர் திருநெல்வேலியில் வந்து தேர், யானை, புரவி, காலாள் என்ற நால்வகைச் சேனை யுடன் போர் தொடுத்தார்கள். நெடுமாறனார், இதனை யறிந்து வீரமிக்க தமது சேனையுடன் சென்று அஞ்சாது அமராடினார். கடும்போர் நிகழ்ந்தது. உதிரவெள்ளம் பெருகியது; சிரமலை குவிந்தது. கவந்தங்கள் நடம்புரிந்தன. பேய்கள் விருந்துண்டன. முடிவில், பகைவர்களாகிய வடநாட்டு மன்னர்கள் தோல்வியுற்றுச் சென்றார்கள். வெற்றி மாலை புனைந்த பாண்டிய மன்னர் ஆலயப் பணி பலபுரிந்து அருள்பெருக அரசளித்தார். திருநீற்றின் பெருமையை எங்கும் விளக்கி ஏனோரும் திருநீற்றைப் புனையுமாறு செய்து, பெரும்புகழுடன் நெடுங்காலம் அரசாண்டு சிவபத மடைந்து பேரின்பம் எய்தினார்.

விளக்கம்

நின்றசீர் நெடுமாறனார், முதலில் சமண் சமயம் புகுந்து இடர்ப் பட்டாராயினும், திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளால் திரு வெண்ணீறு பூசும் பேறு பெற்று, உய்வு பெற்றவர். மங்கையர்க்குத் தனியரசியாகிய வளவர்கோன் பாவையை மனைவியாராகப் பெற்றார் எனில் இவர் தவம் அளவிடற்கரியது. மிகப்பெரும் புண்ணியஞ் செய்தார்க்கே நல்லற மனைவி அமையும். அதனினும் மேம்பட்ட வாய்ப்பு யாதுளது?

மக்களிடம் வரிவசூல் புரிந்து ஆள்வதற்காக அரசனிருப்பது நன்றன்று. மக்களை நன்னெறியில் நிறுத்தி அருள் பெருக்குவதற் காகவே அரசன் இருக்க வேண்டும். இவர் பாலறாவாயருடைய பரிபூரண அருளைப் பெற்றுச் சிவநெறியைப் பரப்பி அரசு புரிந்தார்.

அந்நாளில் ஆளுடைய பிள்ளையார் அருளாலே
தென்னாடு சிவம்பெருகச் செங்கோலுய்த் தறமளித்துச்
சொன்னாம நெறிபோற்றிச் சுரர்நகர் கோன் தனைக்கொண்ட
பொன்னார மணிமார்பில் புரவலனார் பொலிகின்றார்.

இவர் வீரம்படைத்த வேந்தராகவும் விளங்கினார் என்பதை நெல்வேலியில் வளைத்த வடநாட்டு மன்னரை எதிர்த்து வென்றமையே விளக்கும். இவர் செய்த திருத்தொண்டின் பெருமை கீழேவரும் திருப்பாடலால் புலப்படுகின்றது.

வளவர்பிரான் திருமகளார் மங்கையருக் கரசியார்
களபமணி முலைதிளைக்குந் தடமார்பில் கவுரியனார்
இளவரவெண் பிறையணிந்தார்க் கேற்றதிருத் தொண்டெல்லாம்
அளவில்புகழ் பெறவிளக்கி அருள்பெருக அரசளித்தார்.

வாயிலார் நாயனார் புராணம்

"துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றும் சோதித்
தொன்மையிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்"

தொண்டை நன்னாட்டில் சிறப்புற்று விளங்குவது திரு மயிலாப்பூர். கடற்கரையில் செல்வ மிக ஓங்கி மாடமாளிகை நிறைந்து பொலிவது.

வீதி யெங்கும் விழாவணி காளையர்
தூதி யங்குஞ் சுரும்பணி தோகையர்
ஓதி யெங்கும் ஒழியா அணிநிதி
பூதி யெங்கும் புனைமணி மாடங்கள்.

புன்னைமரத்தின்கீழ் உமையம்மை மயிலுருவுடன் பூசித்த அம் மயிலாபுரியில் வேளாளர் குலத்தில் வாயிலார் என்ற தபோதனர் அவதரித்தார்.

இறைவனை ஒருபோதும் மறவாமையாகிய மனக்கோயிலில் இருத்தி, உணர்வு என்னும் விளக்கேற்றி, இடையறாத ஆனந்தம் என்ற திருமுழுக்காட்டி, அன்பு என்ற அமுதை நிவேதித்து, அர்ச்சித்து வழிபட்டு வந்தார்.

மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம் எனுந்திருமஞ் சனமாட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச் சனைசெய்வார்.

இவ்வாறு, அகப்பூசை ஒழியாது நெடுங்காலம் புரிந்து சிவ பெருமானுடைய திருவடி நிழலை யடைந்து இன்புற்றார்.

விளக்கம்

திருமயிலாப்பூரிலே கபாலீச்சுரனார் திருக்கோயிலில் இவருக்கு ஒரு தனிக்கோயிலுண்டு.

வழிபாடு இருவகை. புறவழிபாடு, அகவழிபாடு எனப்படும். அகவழிபாடில்லாத புறவழிபாடு பயனில்லாதது. சிவபூஜையில்

அந்தர் யாகம் எனப்படும். அந்தர் யாகமின்றிச் செய்யும் சிவபூசை சிறப்புறாது.

இவர் அகவழிபாட்டிலேயே மிகவும் அழுந்தி நின்றவர். இதனால், இவரைத் தபோதனர் என்கின்றார் சேக்கிழார் சுவாமிகள்.

மனக்கோயிலில் இறைவனை எழுந்தருளப் புரிந்து, உணர்வு விளக்கேற்றி, இன்பு நீராட்டி, அன்பு ஊட்டி வழிபட்டார். இதை இடையறாது செய்தார். இப்படிச் செய்யும் அகவழிபாட்டைப் பற்றித் தாயுமானார் கூறுகின்றார்.

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்அன்பு
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே.

துள்ளுமறி யாமனது பலிகொடுத் தேன்கர்ம
துஷ்டதே வதைக ளில்லை
துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே
தொழும்பன்அன் பபிஷே கநீர்
உள்ளுறையில் என்னாவி நைவேத்தியம் ப்ராணன்
ஒங்குமதி தூப தீபம்
ஒருகால மன்றிது சதாகால பூசையாம்
ஒப்புவித் தேன்கருணை கூர்.

❀ ❀ ❀

முனையடுவார் நாயனார் புராணம்

"அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவாற்கு அடியேன்"

சோழவள நாட்டிலே வயல் சூழ்ந்து செல்வம் நீடிய ஊர் நீடூர் என்பது. அத்தலத்தில் வேளாண் மரபில் வந்து அக்குலத் திற்குத் தலைவராய் வாழ்ந்தார் முனையடுவார் நாயனார். அவர் சிவபெருமானிடத்தில் மாறாத காதல்கொண்டு உள்ளம் உருகி வெள்ளம்போல் கண்ணீர் பெருகி வழிபடுவார். அன்பு நெறி நின்ற அவர் வீரஞ் செறிந்து விளங்கினார். மாற்றாரை எதிர்த்துப் போர் புரிந்து வெல்ல வல்லவர். பகைவர்கட்குத் தோற்றவர் இவர்பால் வந்து வேண்டி நிற்பர். நடுவு நிலையுடன் அவர்பால் நிதிபெற்று பகைவரை எதிர்த்து வெற்றி பெறுவார். இந்த வகையில் வந்த பொன்கொண்டு அடியார்க்கு வழங்கித் திருத்தொண்டு புரிந்தார். அடியார்க்கு அறுசுவை யுண்டி அளித்து இன்புறுவார்.

இன்ன வகையால் பெற்றநிதி எல்லாம் ஈச னடியார்கள்
சொன்ன சொன்ன படிநிரம்பக் கொடுத்துத் தூய போனகமும்
கன்னல் நறுநெய் கறிதயிர்பால் கனியுள் ளுறுத்த கலந்தளித்து
மன்னும் அன்பில் நெறிபிறழா வழித்தொண் டாற்றி வைகினார்.

இவ்வாறு, நெடுநாள் சிவத்தொண்டு புரிந்து சைவநெறி நின்று சிவலோக மடைந்து ஆரா அமுதாம் பேராப் பெருவாழ்வு பெற்றார்.

விளக்கம்

முனை - போர். பல முனைகளுக்குச் சென்று பகைவரை வென்றதனால் இவர் முனையடுவார் எனப் பேர்பெற்றார்.

முனைமுகத்து நினைத்தற் கரிய வீரமுடன் மாற்றலரை எதிர்த்துக் கடும்போர் புரியும் வீரராகிய இவர் அதனால் வரும் பெரும்பொருள் அத்தனையும் அடியவர் பணியில் செலவிட்டு மகிழ்வார். மிக்க வலிமையாளரையும் எதிர்ப்பார் என்பதனை, "கூற்று மொதுங்கும் ஆள்வினையால்" என்று வருவதால் அறிக.

முனை என்பது போர் என்ற பொருளில் "முனை முகத்து நில்லேல்" என்றும், "முனை யழிந்தது மேட்டி குலைந்தது" என்றும் வருகின்ற இடங்களால் அறிக.

உயிரைத் துரும்பாக எண்ணிப் போர் புரிந்து அதனால் வரும் நிதியை அள்ளி வழங்கும் வள்ளன்மை மிகவும் போற்றுதற்குரியது.

கழற்சிங்க நாயனார் புராணம்

"கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்"

இந்நிலவுலகிலே பழமைமிக்க பல்லவர் குலத்திலே அவ தரித்தவர் கழற்சிங்க நாயனார். அவர் முப்புரமெரித்த முக்கட் பெருமானுடைய திருவடியை யன்றி வேறு ஒன்றையும் அறிவிற் குறிக்கோளாகக் கொள்ளாது, சேனைகளுடன் நாட்டை நன்னெறி யில் செலுத்தி அரசுபுரிந்து வந்தார்.

படிமிசை நிகழ்ந்த தொல்லைப் பல்லவர் குலத்து வந்தார்
கடிமதில் மூன்றுஞ் செற்ற கங்கைவார் சடையார் செய்ய
அடிமலர் அன்றி வேறொன் றறிவினிற் குறியா நீர்மைக்
கொடிநெடுந் தானை மன்னர் கோக்கழற் சிங்கர் என்பார்.

காடவர் தலைவராகிய கழற்சிங்க நாயனார், மேருமலையை வில்லாகப் பிடித்த சிவபெருமான் கருணையால், வடநாடு சென்று அங்கே பகைத்து நின்ற வடபுல மன்னரை வென்று, நவநிதிகளும் கொணர்ந்தார். அரனார் ஆலயங்கள் பலவுஞ் சென்று ஆராத அன்புடன் பணிந்து, நித்திய நைமித்தியங்கள் அமைத்து, திருத் தொண்டு புரிந்துவந்தார்.

ஒருசமயம் சிவலோகம் போன்ற திருவாரூரை யடைந்தார். பிறப்பை யொழிக்கும் பிறைமுடிப் பெருமான் எழுந்தருளிய பூங்கோயில் புகுந்தார். புற்றிடங்கொண்ட புண்ணியரைக் கண்ணீர் மல்கி, கைகூப்பி, உள்ளம் உருகித் தரிசித்துக் கொண்டிருந்தார்.

அவருடைய பட்டத்து நாயகியாராம் ஒப்பற்ற அழகும் பெருமையும் மிக்க மனைவி கோயிலை வலம் வந்தாள். அக் கோயிலின் பெருமைகளைத் தனித் தனியே கண்டு களிப்புற்றாள். ஆங்கு, ஒருபுறம் இறைவனுக்கு மலர்மாலை தொடுக்கும் மண்டபத் தின் அருகில் கிடந்த ஒரு புதிய மலரை எடுத்து மோந்தாள்.

இறைவனுக்குரிய மலர் மாலைக்கு ஏற்ற புதிய மலரை அவர் எடுத்து மோந்ததைக் கண்ட செருத்துணை நாயனார் என்பவர் "ஆ! இது என்ன அறியாமை; இறைவன் மலர் மாலைக்குரிய பூ

மண்டபத்துள் கிடந்ததை இவள் எடுத்து மோந்தாள்; இது சிவாபராதம்" என்று கூறி, மிக விரைந்து சென்று ஒரு வாள் எடுத்து திருமகள் போன்ற அரசமாதேவியின் மூக்கைப் பிடித்து அறுத்து விட்டார்.

உதிரம் பெருக, மலர்க்குழல் சரிய, சோர்ந்து மண்மிசை வீழ்ந்து மயில்போல் புரண்டு அழுதாள். சிவமூர்த்தியை வணங்கிய பின் மன்னர் கழற்சிங்கர் அங்கு வந்தார். பூத்த கற்பகத்தின் பைந்தளிர்க் கொம்பு புவியில் விழுந்ததுபோல் வீழ்ந்து விம்மியழுகின்ற மனைவியை நோக்கி, "பெண்மணியே! இந்தப் பாரிலே இக் கொடிய செயலை அஞ்சாது செய்தவர் யார்?" என்று வினாவினார்.

அங்கு நின்ற செருத்துணை நாயனார் வேந்தர் பெருமானை நோக்கி, "அரசரேறே! இவள் எம்பிரானுடைய மலர்மாலைக்குரிய பூவை எடுத்து மோந்தாள். அதனால், இக்கருமம் யானே புரிந்தேன்" என்றார். கழற்சிங்க நாயனார், அவரைப் பணிந்து, 'இக்குற்றத்திற்கு ஏற்ற தண்டனை செய்தீரில்லை' யென்று கூறி, வடிவாளை எடுத்தார். "மலரை எடுத்தது கையே யன்றோ, ஆகவே, முதல் குற்றவாளி கையே யாகும். கை எடுக்காதிருந்தால் மூக்கு மோந் திராது. ஆத்லால், குற்றம் புரிந்த கரத்தையும் தண்டிக்க வேண்டும்" என்று கூறி காதல் மிகுந்த மனைவியின் கரமலரை வடிவாளால் வெட்டினார்.

கட்டிய உடைவாள் தன்னை உருவிஅக் கமழ்வா சப்பூத்
தொட்டுமுன் னெடுத்த கையாம் முற்படத் துணிப்ப தென்று
பட்டமும் அணிந்து காதல் பயில்பெருந் தேவி யான
மட்டவிழ் குழலாள் செங்கை வளையொடுந் துணித்தா ரன்றே.

அப்பெருஞ்செயல் நிகழ்ந்தவுடன் திருத்தொண்டர் ஆர்த்தனர். இமையவர் ஆர்த்தனர். மலர்மழை பொழிந்தது.

கழற்சிங்க நாயனார் பின்னர் நெடுங்காலம் அரசு புரிந்து பல திருத்தொண்டுகள் புரிந்து சிவபெருமான் செம்மலர்த்தாள் சேர்ந்து சிவானந்த வெள்ளத்தில் திளைத்து இன்புற்றார்.

விளக்கம்

கழற்சிங்கர்

இவர் இறைவனடியில் இடையறாத அன்பு பூண்டவர். வடபுல மன்னரை வென்ற வீரர்; காதல் மிக்க மனைவி சிவாலயத்தில்

மாலை கட்டும் மண்டபத்துள் கிடந்த மலரை எடுத்து மோந்ததைக் கண்டு ஒருவர் மூக்கினை யரிந்தார். அதைக் கண்ட இவர் மூக்கரிந்தாரை முனியாமல் மனைவியையே முனிந்து முன்குற்றம் புரிந்தது கரமே என்று கருதிப் பட்டத்து தேவியின் கையை வளை யலுடன் துணிப்பாராயின் இவருடைய பக்தி அளவிடற் பாற்றோ? மனைவி எக்குற்றம் புரியினும் பொறுத்து அவளைப் புகழ்ந்து போற்றுவதன்றோ இந்நாள் நாம் காணும் புதுமை.

இதனால், இவர் மனைவியாரிடம் அன்பில்லாதவரன்று. மிக்க காதலுடையவர். அவளும் திருவினும் உருவுடையவள். இவர் தண்டிக்கவில்லையாயின் அவளுக்கு மறுபிறப்பில் அவ்வினை ஒன்றுக்குக் கோடியாக வளர்ந்து வாட்டும். ஆதலால், அவ்வினை அப்பொழுதே கழியும்பொருட்டுக் கருணையுடன் தண்டித்தார் என உணர்க.

இடங்கழி நாயனார் புராணம்

"மட்டல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும்..........அடியேன்"

வளம் மிகுந்த மலர்ச்சோலைகள் சூழ்ந்த கோனாட்டின் தலைநகரம் கொடும்பாளூர் என்பது. குறுநில மன்னர் குலத்திலே, கனகசபையின் முகட்டைப் பசும்பொன்னால் வேய்ந்த ஆதித்தன் குடியிலே அவதரித்தவர் இடங்கழி நாயனார்.

இடங்கழியார் எனவுலகில் ஏறுபெரு நாமத்தார்
அடங்கலர்முப் புரமெரித்தார் அடித்தொண்டின் நெறியன்றி
முடங்குநெறி கனவினிலும் முன்னாதார் எந்நாளும்
தொடர்ந்த பெருங் காதலினால் தொண்டர்வேண் டியசெய்வார்.

சிவபெருமானுடைய திருவடித் தொண்டினை யன்றி மற்றொன்றைக் கனவிலுங் கருதாதவராய், இடையறாத காதலுடன் ஈசனுக்கும் ஈசனடியார்க்கும் வேண்டிய மெய்ம்மையான திருத் தொண்டு புரிந்து வந்தார்.

ஆகமத்திலுள்ள சைவ நெறியையும், வேதத்திலுள்ள தரும நெறியையும் பாதுகாத்து வந்தார். ஆங்காங்குள்ள அரனார் ஆலயங் களில் வழிபாடு மேன்மேலும் சிறப்பாக நடக்குமாறு ஏற்பாடுகளைச் செய்தார். அதற்கு நிலங்களை நிபந்தமாக விடுத்தார். உள்ளம் உருகி வள்ளற்பிரானை வழுத்தி வாழ்த்தி வணங்குவார்.

சிவனடியார்கட்குத் திருவமுது செய்விக்கும் ஓர் அடியார் தாம் புரியும் அன்னதானத்திற்கு முட்டு வந்தது. அதனால், மனந் தளர்ந்தார். செய்வதறியாது திகைத்தார். இடங்கழி நாயனாராகிய இறைவருடைய பண்டாரத்திலே நெல் கூட்டு நிறைகள் நிறைந்த கொட்டகாரத்தில் நடு இரவில் புகுந்து நெல்லை முகந்து எடுத்தார். காவலர்கள் கண்டு அவ்வரைப் பிடித்துக் கொண்டார்கள். அவரைப் பற்றிக் கொண்டுவந்து இடங்கழியார் முன் நிறுத்தினார்கள்.

இடங்கழியார் அவரை நோக்கி, "ஏன் இவ்வாறு செய்தீர்?" என்று வினாவினார். "மன்னர் பெருமானே! அடியேன் அடியார்க்கு இடையறாது அமுது செய்விக்கும் நியதி பூண்டவன். என்பால் இருந்த பொன்னும் நெல்லும் செலவழிந்து விட்டன. வறியவனா

னேன். அடியார்க்கு அமுது செய்விப்பதைக் காட்டிலும் சிறந்த பேறில்லை. அதற்கு இடர் வந்ததனால் இவ்வாறு செய்தேன்" என்றார். மன்னர் பெருமான் அவர்பால் மிக இரங்கினார். "ஆ ஆ! அடியேனுக்கு இவரல்லவா பண்டாரம்" என்றார். அவர் வேண்டிய நெல்லையும் பொன்னையும் முகந்துகொள்ளச் செய்து தொழுது அவரை இனிது அனுப்பினார்.

பின்னர், தம்மிடமுள்ள நெல்குவியல்களையும் பொன்மணி களையும் வந்து முகந்துகொண்டு போகும்படி எங்கும் பறைசாற்று வித்தார். படைத்த நிதியின் பயன்கொள்ள அவ்வாறு புரிந்தார். அடியார்கள் வந்து நெல்லையும் பொன்னையும் கொண்டு போகும்படி செய்து உள்ளம் மிக உவந்து, நெடுங்காலம் திருநீற்றின் நெறி தழைத்தோங்கப் புரிந்து, பின்னர் முன்னவனார் திருவடி நிழலை யடைந்து நீடிய இன்பம் பெற்றார்.

விளக்கம்

ஒரு செயல் குற்றமென்பதும் குணமென்பதும், அது செய்தார் மனநிலையைப் பொறுத்துளது. பொய்யும் களவும்கூட சில சமயத்தில் புண்ணியத்தைத் தருகின்றன.

ஒருவன் ஒரு பசுவை வெட்டுதற்குக் கத்தியைத் தாங்கிப் போகின்றான். பசு வேறு வழிசென்று மறைந்தது. வழியிலுள்ளானை நோக்கிப் பசு இவ்வழி சென்றதா? என்று வினாவினான். பசு போன திசையைச் சொன்னால் அவ்வழி சென்று பசுவைக் கொன்று விடுவான். ஆகவே, வழியில் நின்றான், பசுவைக் காக்க வேண்டும் என்ற கருணையுடன் பசு போன திசையைப் பகராமல், வேறு திசையைக் காட்டினான். அது பொய்யே யாயினும் புண்ணிய மாகும். அப்பொய் என்ன மனநிலையில் புகன்றான் என்று சிந்தித்து முடிவு செய்யவேணும்.

இதுபோல் களவுமாகும். ஒருவன் மாண்டு போகக் கருதி வைரத்தை வைத்திருந்தான். அவனைக் காக்குங் கருத்துடன் அவ் வைரத்தைக் களவு செய்தால் அது குற்றமாகாது. செயல் களவா யினும் கருணையால் நிகழ்ந்த நிகழ்ச்சி. அதற்குப் பாவமில்லை; புண்ணியமுண்டு.

அதுபோல் அந்த அடியார் அடியவர் பசி தீர்த்து உபகரிக்கும் நியதியையுடையவர். தாம் புரியும் அரிய பணிக்கு இடர் வந்த போது, அடியவர் பசி தீர்க்கும் கருணை உள்ளத்துடன் மன்ன

வனார் கருவூலம் வந்து களவுசெய்தார். அதனை அறிந்த இடங்கழி நாயனார் அவரைக் களவு செய்தார் எனக் கருதித் தண்டியாது, அடிபணிந்து வேண்டுமளவுங் கொண்டு போகுமாறு பணித்தார்.

அன்றியும் ஏனைய அடியவர்களையும் வந்து நெல்லையும் பொன்னையும் தேவையான அளவுக்குக் கொண்டு போகுமாறு செய்தார் என்றால் இவருடைய அன்பும் பண்பும் எத்துணைச் சிறந்தன என்று சிந்தியுங்கள். களவு செய்தாரை நோக்கி, "இவரன்றோ பண்டாரம் எனக்கு" என்றார். உள்ளத்திலிருந்த வள்ளன்மை இதனால் வெளியாகின்றது.

> எண்ணில்பெரும் பண்டாரம் ஈசனடி யார்கொள்ள
> உண்ணிறைந்த அன்பினால் உறுகொள்ளை மிகஊட்டித்
> தண்ணளியால் நெடுங்காலம் திருநீற்றின் நெறிதழைப்ப
> மண்ணிலருள் புரிந்திறைவர் மலரடியின் நிழல்சேர்ந்தார்.

என்ற அமுதப் பாடலால் இவருடைய அன்பின் திறத்தையறிக.

செருத்துணை நாயனார் புராணம்

"...............................தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்"

சோழமண்டலத்தில் மருகனாட்டிலே தஞ்சாவூரிலே வேளாளர் திருமரபில் அவதரித்தவர் செருத்துணை நாயனார். இவர் சிந்தையில் அந்திவாணரை மறவாது வைத்து வணங்கித் திருத்தொண்டுகள் பல புரிந்து மகிழ்வார்.

இவர் ஒரு சமயம் திருவாரூரை அடைந்து காலந்தோறும் வன்மீகநாதரை வணங்கி, திருக்கோயிலில் தொண்டு புரிவாராயி னார். அங்கொருநாள் பல்லவ மன்னர் கழற்சிங்கருடைய பட்டத்து மனைவி பூமாலை தொடுக்கும் மண்டபத்தில் கிடந்த ஒரு மலரை எடுத்து மோந்தாள். அதனைக் கண்ட இந்நாயனார் மனம் பொறுக்க வில்லை. இது பெரிய சிவாபராதம் என்று கருதி ஓடிவந்து, அரச மாதேவியின் கூந்தலைப் பிடித்து இழுத்து மண்ணில் தள்ளி, அவள் மூக்கைப் பிடித்து அறுத்தார்.

கடிது முட்டி மற்றவள்தன் கருமென் கூந்தல் பிடித்தீர்த்துப்
படியில் வீழ்த்தி மணிமூக்கைப் பற்றிப் பரமர் செய்யசடை
முடியில் ஏறுந் திருப்பூமண் டபத்து மலர்மோந் திடும்மூக்கைத்
தடிவன் என்று கருவியினால் அரிந்தார் தலைமைத் தனித்தொண்டர்

இவ்வாறு இவர் பலகாலம் அரிய பெரிய பணிகள் பல புரிந்து முடிவில் இறைவனடி சேர்ந்து முடிவிலா இன்பமுற்றார்.

விளக்கம்

செருத்துணை நாயனார்

இவர் பல போருக்குத் துணைபுரிந்ததனால் செருத்துணை யார் என்று பேர் பெற்றார். இவர் அஞ்சா நெஞ்சு படைத்தவர். ஈர அன்பும் வாரம் நிறைந்த நெஞ்சும் பூண்டவராயினும் குற்றங்கண்டபோது தெற்றெனச் சென்று கண்டிக்கும் வீரம் படைத்தவர். அம்மம்ம! இவருடைய வீரம் எம்மால் விளம்புந் தரத்ததோ?

பல்லவர் வேந்தன் பட்டத்து மனைவி; திருவினும் உருவுடைய தேவி; அவள் மலரை எடுத்து மோந்ததைக் கண்ட இவர் சிங்கம் போல் பாய்ந்து, மன்னவனை ஒரு துரும்பாக நினைத்து, சிவாபராதம் செய்தார், தண்டனைக்குரியார் எனக் கொண்டு, அவள் குழலைப் பிடித்து இழுத்துப் புவியில் தள்ளி, மூக்கறுத்தார் எனின் இவருடைய வீரச்செயல் எத்துணை விழுமியது? இத்தகைய வீர அடியவர் இருப்பின் அரனார் உடைமைகளை அபகரிப்பார் இருப்பாரோ? குற்றங் கண்டபோது கண்டிப்பதனாலும் மேலும் அவர் அக்குற்றம் புரியாது திருந்தி உய்வு பெறுவர். ஆதலால், இச்செயல் கருணை யின் விளைவே என வுணர்க.

புகழ்த்துணை நாயனார் புராணம்

"புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடிப்
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்"

சிறப்புமிக்க அரிசில்கரைப்புத்தூரில், ஆதிசைவர் குலத்திலே புகழ்த்துணை நாயனார் என்பவர் அவதரித்தார். இவர் சிவாகம விதிப்படி சிவபெருமானைப் பூசித்து வந்தார்.

அக்காலத்தில் பஞ்சம் வந்துவிட்டது. பசிநோய் வந்து வாட்டிய போதும், மெய்யும் கையும் அயர்ந்தபோதும் உள்ளம் அயராது இரவு பகலும் ஈசன் அடியில் நேசம் வைத்துப் பன்மலர் கொண்டு அர்ச்சித்துப் பூசிப்பாராயினார். சிவலிங்கத்திற்குத் திருமஞ்சனம் புரியும்போது, பசிப்பிணியால் மிகவுந் தளர்வு எய்தி, தண்ணீர் நிறைந்த குடம் கரந் தாங்க மாட்டாது இறைவர் திருமுடி மிசை விழ, அதனால், பெருந் துன்பமுற்று வீழ்ந்து மூர்ச்சித்துவிட்டார்.

சிவபெருமான் அருளால் அங்ஙனமே அயர்ந்து தூங்கி விட்டார். அவர் கனவில் கண்ணுதற் கடவுள் கருணையுடன் தோன்றி, "அன்பனே! பஞ்சம் நீங்கும்வரை உனக்கு நாம் நாள் தோறும் இங்கே ஒரு காசு வைப்போம்" என்று அருளிச் செய்தார். புகழ்த்துணை நாயனார் கண்விழித்து எழுந்தார். எம்பிரானுடைய இனிய அருளை நினைந்து உருகினார். இறைவனது பீடத்தின் கீழ் ஒரு காசு இருக்கக் கண்டு எடுத்து அது கொண்டு வாழ்ந்தார்.

பன்னாளும் பரமன் தந்த காசுகொண்டு பசிதீர்ந்து பனிமலர் கொண்டு அர்ச்சித்துப் பரிவுமிக்க பூசனை செய்துவந்தார். இறுதியில் இறைவன் இணையடி மலர் சார்ந்து இன்பமெய்தினார்.

விளக்கம்

ஆதிசைவர்

"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" என்றபடி இறைவனை மலரிட்டு மஞ்சன மாட்டி வழிபடுவதே பெரிய தவமாகும். அவ்வழிபாட்டில் ஆத்மார்த்தம் பரார்த்தம் என்ற இரு வகையுண்டு; ஆதிசைவர்கள் இவ்விருவகைப் பூசையும் செய்தற்கு

உரியவர்கள். ஏனையோர் ஆத்மார்த்த பூசை மட்டுமே செய்தற்கு உரியவர்.

"பார்ப்பான் என்று பேர்மட்டுங் கொண்ட மற்றையோர் திருக் கோயில்களில் பூசித்தால் மன்னவன் துன்புறுவான்; நாடு பஞ்சத் தால் வாடும்" என்கின்றார் திருமூலர்.

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை யர்ச்சித்தால்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமா மென்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே.

புகழ்த்துணையார்

இத்தகைய சிவமறையோர் திருமரபிலே வந்தவர் இவர். மனிதன் அழிந்தும் அழியாமல் நிற்பது புகழே. புகழொடு தோன்றா தார் தோன்றாதிருத்தல் நன்று என்பர் திருவள்ளுவர். எல்லோருக்கும் புகழ் துணையாக இருக்கும். இவர் புகழுக்குத் துணையாக இருந்தார்.

பஞ்சம் வந்து பசிவந்தும் இவர் தாம் புரியும் பூசையினின்றும் வழுவினாரில்லை. "பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்" என்ற வாக்கை இவர் தவலிமை வென்றது. இவருடைய அன்பின் உறுதியை சேக்கிழார் பெருமான் செப்புந் திறத்தை யறிக.

தங்கோனைத் தவத்தாலே தத்துவத்தின் வழிபடுநாள்
பொங்கோத ஞாலத்து வற்கடமாய்ப் பசிபுரிந்தும்
எங்கோமான் தனைவிடுவேன் அல்லேன்என் றிராப்பகலும்
கொங்கார்பன் மலர்கொண்டு குளிர்புனல்கொண் டருச்சிப்பார்.

அடியார் பசி தீர்ப்பது அங்கணர் அருள் திறமாதலின் பொன்னம்பலவாணர் இவருக்குப் பொற்காசு நாள்தோறும் வழங்கினார்.

இங்ஙனமே இறைவர் வாகீசருக்கும், பாலறாவாயருக்கும் படிக்காசு தந்தனர். வைத்தீச்சுரன் கோயிலில் இருந்த ஓர் அடிகளாருக்கும் தந்தனர். அதனால், அவர் படிக்காசுத் தம்பிரான் என்று பெயர் பெற்றனர்.

இதுபோல் அருணகிரிநாதருக்கும் சென்னிமலையில் முருகன் படிக்காசு வழங்கியதாகச் சென்னிமலைக் காதல் என்ற நூல் புகல்கின்றது.

இதனால், இறைவனை இடையறா அன்புடன் இறைஞ்சுவார் நோயடையார்; பசியுறார்; பேயடையார்; மற்றும் பல துன்புறார் என்பது ஒருதலை. ஆதலால், அருந்துணையாய் அடியவர் தம் அல்லல் தீர்க்கும் ஈசனை நேசமுடன் பூசனை புரிந்து பாசபந்தங் களைந்து அன்பர்கள் உய்வு பெறுக.

அரிசில் கரைப்புத்தூர்

இது குடந்தையிலிருந்து தென்கிழக்கில் நாச்சியார் கோயிலுக்குப் போகும் வழியில், திருநரையூர் என்னும் தலத்துக்கும், சிவபுரம் என்னும் தலத்துக்கும் இடையில் உள்ளது. குடந்தையிலிருந்து நான்கு கல். இவருடைய வரலாற்றை இத்தலத்துத் தேவாரத்தில் சுந்தரர் கூறி யருளியிருக்கின்றார். அப்பாடல் வருமாறு,

அகத்தடி மைசெய்யும் அந்தணன்றான்
அரிசிற்புனல் கொண்டுவந் தாட்டுகின்றான்
மிகத்தளர் வெய்திக் குடத்தையும்நும்
முடிமேல் விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்தவ னுக்குநித் தற்படியும்
வருமென்றொரு காசினை நின்றநன்றிப்
புகழ்த்துணை கைப்புகச் செய்து கந்தீர்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே.

கோட்புலி நாயனார் புராணம்

"அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்"

நலம் பெருகும் சோழ நன்னாட்டிலே நாட்டியத்தான்குடி என்னும் ஊரிலே, வேளாளர் திருமரபிலே வந்து அவதரித்தவர் கோட்புலிநாயனார். இவர் சோழ மன்னனிடம் சேனாபதியாக இருந்து, பல போர்முனை சென்று, மன்னரை வென்று போர் விளைத்துப் புகழ் விளைத்தார்.

மன்னவன் தரும் அளவற்ற நிதிகள் அத்தனையும் கொணர்ந்து, சிவபெருமானுடைய திருக்கோயில்கள்தோறும் திரு அமுதுக்குச் செந்நெல் தந்து பெரும்பணி புரிந்து மகிழ்வார். அப்பணிக்காக நெல்லை மலைபோல் குவித்து, படியளந்த பச்சைவண்ணன் பணியும் பரமனுக்குப் படி கொடுத்துப் பல நாள்கள் அப்படியே பணிபுரிந்து வந்தார்.

ஒருசமயம் மன்னவன் கட்டளைப்படி வேற்று நாட்டின் மீது போருக்குப் புறப்பட்டார். ஆலமுண்ட அரனார் அமுதுபடிக்காகத் தாம் திரும்பி வருமளவும் போதுமான அளவுக்கு நெல் பொதி செய்து புறப்படுகின்றார். தமது சுற்றத்தார்களைத் தனித்தனியே நோக்கி, "இது சிவமூர்த்திக்கு உரியது. இதினின்றும் நெல் எடுக்கக் கூடாது. அங்ஙனம் எடுத்தால் சிவத்துரோகம் ஆகும்" என்று கூறி விட்டுப் போர்க்களம் போனார்.

அவர் அகன்ற சிலகாலத்திற்குப்பின் பஞ்சம் வந்து சேர்ந்தது. சுற்றத்தார், "உணவின்றி இருப்பதைக் காட்டிலும், இறைவனுடைய அமுதுபடிக்காகவுள்ள இவற்றை எடுத்துக் கொள்வோம். பின்னர் நற்காலம் வந்தபின் கொடுத்து விடுவோம்" என்று எண்ணி நெல்கூடுகளை அழித்து அந்நெல்லினை எடுத்து உண்டார்கள்.

போர்முனை சென்ற கோட்புலி நாயனார், வெற்றி பெற்று மீண்டு மன்னவன் தந்த பொற்குவியலுடன் தமது ஊர் வந்தார். சிவபெருமானுடைய அமுதுபடிக்காம் நெற்குவியலை எடுத்து சுற்றத்தார் உண்டதை அறிந்து சினம் மூண்டார்.

சுற்றத்தார் அத்தனைப் பேரையும் அழைத்தார். ஒருவரையும் ஓடிவிடாதபடி தன்பேர் கொண்ட கோட்புலி என்ற வேலைக் காரனைக் காவல் புரியச் செய்து, சிவன் பொருளை வௌவிய அதிபாதகர்களாகிய தந்தை, தாய், உடன்பிறந்தார், மனைவி, சுற்றத்தார் அனைவரையும், பணியாளரையும் வாளினால் துணித்தார்.

தந்தையார் தாயார்மற் றுடன்பிறந்தார் தாரங்கள்
பந்தமார் சுற்றத்தார் பதியடியார் மதியணியும்
எந்தையார் திருப்படிமற் றுண்ணஇசைந் தார்களையும்
சிந்தவாள் கொடுதுணித்தார் தீயவினைப் பவந்துணிப்பார்.

அங்கே பிழைத்த ஓர் ஆண்பிள்ளையைக் கண்ட காவலாளன், "ஐயனே! இது சின்னஞ்சிறு குழந்தை; நம் குடிக்கு ஒரே புதல்வன், இப்பாலகன், அவ்வன்னத்தை உண்டதில்லை, இதனைக் கொல்லாதருள் புரியும்'" என்று வேண்டினார். கோட்புலி நாயனார், "இது நெல் உண்டவளுடைய முலைப்பாலை யுண்டது" என்று அதை எடுத்து எறிந்து வாளினால் துணித்தார்.

அக்கணத்தே சிவபெருமான் அன்பர்முன் தோன்றி, "அன்பனே! உன் கைவாளால் மாண்ட சுற்றத்தார் பாவத்தினின்றும் நீங்கினர். ஆகவே, அவர்கள் பொன்னுலகம் புகுந்து இன்புறுவர். நீ இந்நிலை யுடன் நமது சிவபதம் அடைவாய்'' என்று அருள்புரிந்தார். சுற்றத்தார் சுவர்க்கம் உற்றனர். கோட்புலி நாயனார் ஈசன் இணையடி நிழல் எய்தி இன்புற்றார்.

விளக்கம்

சிவத்துரோகம்

பாவங்களில் மிகக் கொடிய பாவம் சிவத்துரோகமாகும். ஈசனுடைய பொருளைக் கவர்ந்துண்பார் கொடிய நரகெய்திப் பன்னெடுங்காலம் பரதவிப்பார்.

அதனால், கோட்புலி நாயனார், தாய் தந்தையரையும், மனைவி, மைந்தன், சுற்றம் முதலியோரையும் கொன்றார். அது கருணை யின்றிச் செய்த செயலன்று. அவர்கள் நரகிடை வீழ்ந்து நலியா வண்ணம் தண்டித்தார். பட்டினி கிடந்து மாள நேரிட்டாலும் சிவனுடைய பொருளைக் கவரக்கூடாது. அவர் புரிந்த கொலை தொலையன்று. உதிரக் கட்டி வந்தவனை மருத்துவன் அறுத்துச் சுடுவான். அது பார்வைக்குக் கொடுந்தொழில்போல் இருப்பினும்

நோயாளி மீதுள்ள கருணையால் செய்கின்றான். அறுக்கின்றபோது, நோயாளிக்கு வேதனை விளைந்தாலும் பின்னே பலகாலும் துய்க்கும் பெருவேதனையின்றி நலமுறும். அதுபோல், சிவத்துரோகத் தால் பலகாலம் நரகிடை கிடந்து துன்புறாவண்ணம் அவர்களைத் தண்டித்தார். அதன்படியே அவர்களும் பாவத்தினின்றும் நீங்கி பொன்னுலகெய்தினார்கள்.

"குழந்தையைக் கொல்வானேன்? அது அறியாமல் செய்தது தானே? அதற்கு இது சிவத்துரோகமென்று தெரியாதே?" என்று ஐயங்கள் நிகழும்.

சிவத்துரோகம் அறிந்து புரியினும், அறியாது புரியினும் தீமை பயக்கும். நெருப்பை யறிந்து மிதித்தாலும் சுடும்; அறியாமல் மிதித் தாலும் சுடும். வயிரத்தை அறிந்துண்டாலும் கொல்லும்; அறியாது உண்டாலும் கொல்லும். ஆதலால், குழந்தை யறியாது உண்டாலும் அதற்குப் பிறவித் துயரைத் தந்து அவ்வினை தீமையைத் தரும். அதனாலன்றோ கருணை மிகுந்த கோட்புலியார் அக் குழவியை யுங் கொன்றார் என வுணர்க.

கொலையென்பது எல்லாங் கொலையன்று. கொலைபுரிந்தான் ஒருவனை நீதிபதி கொலைபுரிகின்றார். நீதிபதிக்குப் பாவம் வருவ தில்லை. இந்த நீதிபதி பலபேரைக் கொன்ற பாவி என்று பழி யடைவதில்லை. அவர் என்ன கருத்துடன் செய்தார் என்பதை அறிதல் வேண்டும்.

வழியில் வரும் ஒருவனை ஒருவன் வழிமறித்துக் கொன்று அவன்பாலுள்ள பொன்னைக் கவர்ந்து கொண்டான். உலகம் அவனைக் கொலைஞன் என்று பழிக்கின்றது. அரசாங்கத்தாரும் அவனைத் தண்டிக்கின்றனர்.

வழியில் வரும் ஒரு வழிப்போக்கனை இடைமறித்து ஏழு கள்வர்கள் கொல்ல முயன்றார்கள். அவ்வேளை தற்செயலாக அங்கு வந்த ஒருவன், வீரவுணர்ச்சியுடன், கறங்குபோல் சுழன்று, அவ்வெழுவரையுங் கொன்று குவித்து, அவ் வழிப்போக்கனைக் காப்பாற்றினான். இப்போது இவனை உபகாரி என்று புகழ்கின்றது. ஒரு கொலைபுரிந்தானைக் கொலைஞன் என்று இகழ்ந்து, ஏழு கொலைபுரிந்தானை உபகாரி என்று புகழ்கின்றது. காரணம் யாது? அக் கொலைகள் செய்தவர்கள் உள்ளக் கருத்தையொட்டி நன்மையும் தீமையும் ஆகின்றன. அதுபோல், கோட்புலி நாயனார் தாய், தந்தையரையும் மற்ற சுற்றத்தாரையும், சிவத்துரோகத்தி

னின்றும் உய்வுபெற்று அவர்கள் நரகுறாது நலமுறக்கடவர் என்ற நல்ல நினைவுடன் புரிந்ததனால் இது கொலையாகாது என உணர்க.

இவ்வரலாற்றைப் படித்து இற்றை ஞான்று கோயிலைப் பாதுகாக்கும் தலைவர்களும், கோயிலில் பணிபுரியும் பரிசனங்களும் நன்கு உணர்ந்து சிறிது கூடக் கோயில் உடைமைகளை உட் கொள்ளாது, நன்னெறி நின்று நலமுறக் கடவர்.

மந்தமதியினர் இவ்வரலாற்றின் உண்மைக் கருத்தை அறியார். கூர்த்த மதியால் நுனித்துணர்வாரே அறிந்து தெளிவு பெறுவர்.

பத்தராய்ப் பணிவார் புராணம்

"பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்"

பத்தராய்ப் பணிவார்கள் என்போர்கள் சிவனடியார்கள். யாவரையும் கண்டவுடன் அளவற்ற மகிழ்ச்சியுடன் தாய்ப் பசுவைக் கண்ட கன்றைப்போல் உள்ளம் உருகி அன்பு வெள்ளம் பெருகி இனியமொழி கூறிப் பணிவார்கள். எல்லையில்லாத அன்புடன் எங்கும் யாரும் சிவார்ச்சனை புரியக் கண்டவுடன் கண்ணுங் கருத்துங் குளிர்ந்து இன்புறுவார்கள். அரனாரையும் அரனடியார்களையும் ஆராத காதலுடன் வழிபடுவார்கள். மாலும் அயனும் சாருவதற்கு அரிய சரணஞ் சாரும் தவமுடையவர்கள். எல்லாப் பணிகளும் சிவார்ப்பணமாகப் புண்ணியத்தையும் புகழையும் விரும்பாமல் புரிவார்கள். பிறவாநெறி பெற்றவர்கள். அவர்களுடைய புகழ் புவனங் கடந்து நிற்கும். சிவகதையே கேட்டுச் சிந்தை மகிழ்வார்கள். அந்தரங்க பக்தி புரிவார்கள். சிவபெருமானுடைய செம்மலர் நோன்றாட் கமலங்களைச் சேர்வதற்கு உரியவர்கள். பரமனைப் பணிந்து உருகி இன்ப மேலீட்டினால் சிவ சிவ ஹர ஹர என்று கூறி, நாவில் தழும்பேறி நிற்பார்கள். தாரை தாரையாகக் கண்ணீர் பெருக, அதனால் திருநீறழிய, மயிர் சிலிர்க்க, உடல் நடுங்க அன்பு செய்வார்கள். எப்போதும் இடையறாது ஈசனையே நேசமுடன் நினைக்கும் திருவுடையவர்களாக விளங்கினார்கள்.

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடு மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்

விளக்கம்

பத்தி

பத்தி என்பதும் அன்பு என்பதும் ஒரு பொருள் கிளவிகள் பத்தி - வடசொல்; அன்பு - தென்சொல். இறைவனை யடைவதற்கு எத்தனையோ நெறிகள் இருப்பினும், பத்தி நெறியே எளிமையான

வழி. எளிதில் இறைவனுடைய அருளைப் பத்தியினால் பெற முடியும். "பத்தி நெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என்றார் மாணிக்கவாசகர். "பத்திவலையில் படுவோன் காண்க" என்றும் அருளிச் செய்கின்றார். "அன்பெனும் பிடியுள் அகப்படு மலையே" என்ற அமுத வாக்கையும் ஈண்டு நினைவு கூர்க. "பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்" என்கின்றார் திருமூலர்.

பத்தர்களுடைய இலக்கணங்களை இப்புராணம் மிக நன்றாக விளக்குகின்றது. "பாம்பறியும் பாம்புக்கால்" என்றபடி பத்தர்களைப் பற்றிப் பத்த மணிவிளக்காய் விளங்கும் சேக்கிழார் அடிகளாரை யன்றி யாவர் பகர வல்லார்?

இப்புராணத்துள் பத்தர்களது உள்ளத்தின் உயர்வையும் அயலறியாமல் புரியும் அன்பின் திறத்தையும், பயன் கருதாது புரியும் நிஷ்காம்ய கர்மத்தைப் பற்றியும், வழிபாட்டின் சிறப்பையும் இனிது கண்டு மகிழ்க. மகிழ்ந்ததோடு அமையாது ஒவ்வொருவரும் சிவபத்தி செய்து பிறப்பென்னும் பேதைமை நீங்கிச் சிறப்பென்னும் செம்பொருளை யடைக.

❀ ❀ ❀

பரமனையே பாடுவார் புராணம்

"பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்"

பரமனையே பாடும் பரிசுடைய இவர்கள் தென்தமிழும் வட மொழியும் ஏனைய திசை மொழிகளையும் நன்கு பயின்று அவ்வாறு பயின்றதன் பயன் அம்பலவாணரது அடிமலரை நினைந்து உருகி வாயாரப் பாடுவதே என்று உணர்ந்து உள்ளங் குழைந்து பாடிப் பரவச மடைவார்கள்.

தென்றமிழும் வடகலையும் தேசிகமும் பேசுவன
மன்றினிடை நடம்புரியும் வள்ளலையே பொருளாக
ஒன்றியமெய் யுணர்வோடும் உள்ளுருகிப் பாடுவார்
பன்றியுடன் புள்காணாப் பரமனையே பாடுவார்.

விளக்கம்

ஒருவர் மீது ஒருவர்க்கு அன்பு ஏற்பட்டு அது அதி கரிக்குமாயின் அன்புடையாரைப் புகழ்ந்துரைக்காமல் இருக்க முடியாது. சூடு அதிகமானால் பால் பொங்கி வழிகின்றதுபோல் என அறிக. புகழ்ந்துரை பாடலாகின்றது. ஆகவே, இறைவனிடம் அளவற்ற அன்பு மேலிடுகின்றபோது இறைவனை உளங்குழைந்து பாடுகின்றார்கள். "பாடும் பணியே பணியா அருள்வாய்" என்கின்றார்கள். "பாடுகின்ற பனுவலோர்கள் தேடுகின்ற செல்வமே" என்கின்றார் தாயுமானார். பாடுகின்றபோது கருவி கரணங்கள் ஒடுங்குகின்றன. பக்தியுடன் பரமனைப் பாடினால் பவப்பிணி யோடும்; பரகதி கூடும்.

பரமனையே பாடுவார் என்பதில் உள்ள ஏகாரம் பிரிநிலை. சிலர் மனிதர்களையும் பொருள் வேண்டிப் பாடுகின்றனர். சிலர் காமவெறி கொண்டு மகளிரையும் புகழ்ந்து பாடுகின்றனர். அவ்வாறு அழிந்துபடுகின்ற மனிதர்களைப் பாடாமல் அழிவற்ற ஆண்டவனையே பாடவேண்டும்.

சுந்தரமூர்த்தி நாயனார் கூறுகின்றதையும் ஈண்டுக் காண்க.

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்கி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேஎந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே.

பரமனையே பாடவேண்டும். பரமனையே பாடிய பத்தர்களைப் பாடுகின்றார் சேக்கிழார் பெருமான். அவர் பாடும் அழகைப் பார்த்துப் பரவசமடையுங்கள்.

புரமூன்றுஞ் செற்றானைப் பூணாகம் அணிந்தானை
உரனில்வரும் ஒருபொருளை உலகனைத்தும் ஆனானைக்
கரணங்கள் காணாமல் கண்ணார்ந்து நிறைந்தானைப்
பரமனையே பாடுவார் தம்பெருமை பாடுவாம்.

இப் பாடல் தேனினும், பாகினும் இனியதாகக் கனியமுது போல் தித்திக்கின்றது. இத்தகைய இனிய பாடல் வேறு எங்கும் காண இயலாது. ஆ! ஆ! இவ்வாறு பாடும் திறம் குன்றை முனிவர்க் கன்றி வேறு எவர்க்குண்டு?

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் புராணம்

"சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்"

கருவி கரணங்கட்குக் காரணமான ஐந்து பத்ம பீடத்தில் விளங்கும் பிரமா திருமால் உருத்திரர் மகேசுரர் சதாசிவர் என்ற ஐவர்களுடைய பதங்களையுங் கடந்த நிலையில் ஒளிர்வது சிவசோதி. அச்சோதி நிலையையுந் தாரணையால் கடந்து சிவத்தின் பால் திருவுள்ளம் வைத்தவர் சித்தத்தைச் சிவன்பால் வைத்த வராவர்.

விளக்கம்

இடை பிங்கலை வழியே உஸ்வாச நிஸ்வாசமாகச் சென்று மீளும் பிராண வாயுவை யடக்கி, முதுகுத் தண்டின் இடையே

ஓடும் வெண்மை நிறமாகிய தாமரை நூல் போன்று நுண்ணிதான சுழுமுனை நாடி வழியே பிராண வாயுவைச் செலுத்தி, அதனை நிறுத்தி, அதனால் நெடுங்காலமாகக் கறங்குபோல் ஓடியலைகின்ற மனதை எதையும் நினைக்க வொட்டாது அடக்கி, மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறாதாரங்களையும் அகக்கண்ணால் கண்டு, அவைகளில் வீற்றிருக்கின்ற அதிதேவதைகளாகிய விநாயகர், பிரமா, திருமால், உருத்திரர், மகேசுரர், சதாசிவர் என்ற மூர்த்திகளைத் தியானித்து, அவர்களை நேர்முகஞ் செய்து, அவை கடந்து பிரமரந்திரஞ் சென்று அஜபாநலமுற்று, அப்பிரமரந்திரமுங் கடந்து, அதற்கு மேல் கீழ் நோக்கியுள்ள ஆயிரம் இதழ்த் தாமரை முகையை (சகஸ்ராரம்) சோதிபத உச்சரிப்பால் உதிக்கும் சிவசூரியனால் மலரச் செய்து, அத்தாமரைப் பூவின் நுனியில் உள்ள சந்திர மண்டலத்தைச் சுருக்குதலினால், மூலாக்கினியை அக்கினி பீஜ மந்திரத்தால் எழுப்பி, நாடி சக்கிரத்தைப் பிளந்து கொண்டு, அவ்வக்கினியாலே சந்திர மண்டலத்தை இளகச் செய்து, அங்கு பொங்கிவரும் அமிர்தத்தை எல்லா நாடிகளிலும் நிரப்பி, அங்கு உண்டாகிய சுகோதயத்தில் ஞானாமிர்தமுண்டு, சூரியனொளியில் நட்சத்திரங்கள் அடங்குமாறு போல், தன்னிடமுண்டாகிய சிவஞான வொளியில் சூரிய சந்திர ஒளி அடங்க அருட்பெருங் கடலாடி அச் சிவவொளியில் அசைவற நிற்பவர் சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர் என உணர்க.

திருவாரூர்ப் பிறந்தார் புராணம்

"திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்"

திருக்கயிலையில் வாழும் சிவ கணங்கள் உலகை உய்விக்கும் பொருட்டுச் சிறப்புமிக்க திருவாரூரில் பிறந்தார்கள். ஆதலினால், அவர்கள் பெருமை அளவிடற்கரியது. அவர்களைப் பணிந்து ஒருங்கிய உள்ளமுடையவர்க்கு உயர்கதி எளிதாகும்.

விளக்கம்

திருவாரூர்: அரு ஊர் ஆரூர் என வந்தது. இத்தலம் சிவலோகமெனப் பொலிவது. திருத்தொண்டத் தொகை விளைந்த ஞானவயல். தில்லையிலே வந்து வணங்கிய நம்பியாரூரருக்கு

சிவபெருமான் "பொன்னி மடுத்த நீள் வண்ணப் பண்ணை ஆரூரில் வருக நம்பால்" என அசரீரியாக உரைத்தருளினார் எனில் திருவாரூரின் பெருமை அளவிடற் பாற்றோ?

நமிநந்தியடிகள் நாயனார் ஒருசமயம் திருவாரூரிலுள்ள சிவமூர்த்தி மணலி என்னும் ஊருக்கு எழுந்தருளத் தாமும் உடன் சென்றார். விழாவைச் சேவித்துவிட்டுத் திருவாரூருக்கு அருகிலுள்ள தமது ஊருக்குப்போய் விழாவில் பலரையுந் தீண்டியபடியால் குளித்து உள்நுழைய எண்ணிப் புறக்கடையில் படுத்து உறங்கி விட்டார். சிவபெருமான் அவர் கனவில் தோன்றி, "ஞான மறையோய்! ஆரூரில் பிறந்தார் எல்லாம் நங்கணங்கள் ஆன பரிசு காண்பாய்" என்று அருளிச் செய்தார்.

நமிநந்தியடிகள் மறுநாள் திருவாரூர் சென்றபோது அங்குள் ளார் அனைவரும் சிவ கணங்களாய்க் கண்டு களித்து வணங்கினார்.

> தெய்வப் பெருமாள் திருவாரூர்ப் பிறந்து வாழ்வார் எல்லாரும்
> மைவைத் தனைய மணிகண்டர் வடிவே யாகிப் பெருகொளியால்
> மொய்வைத் தமர்ந்த மேனியராம் பரிசு கண்டு முடிகுவித்த
> கைவைத் தஞ்சி அவனிமிசை விழுந்து பணிந்து களிசிறந்தார்.

திருவாரூர்ப் பிறந்தார்களது பெருமையைச் சேக்கிழாரடிகளார் ஒருவாயால் உரைக்க ஒண்ணாது என்று உரைக்கின்றார்.

> அருவாகி உருவாகி அனைத்துமாய் நின்றபிரான்
> மருவாருங் குழலுமையாள் மணவாளன் மகிழ்ந்தருளும்
> திருவாரூர்ப் பிறந்தார்கள் திருத்தொண்டு தெரிந்துணர
> ஒருவாயால் சிறியேனால் உரைக்கலாந் தகைமையதோ.

முப்போதுந் திருமேனி தீண்டுவார் புராணம்

"முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்"

ஆதி சைவர்கள் அளவற்ற அன்புடையவர்கள். எப்போதும் இனிமையான ஈசனை மேலும் மேலும் விருப்புடன் சிவாகமநெறி வழுவாது வழிபாடு செய்வார்கள். செல்காலம், நிகழ்காலம், எதிர் காலம் என்ற முப்போதும் திருமேனி தீண்டிப் பூசனை புரிவார்கள். வழி வழியாக பூசிக்கும் உரிமையுடையவர்களாகிய அவர்களுடைய குலப்பெருமை புகழுந் தரமன்று.

விளக்கம்

சிருட்டி காலத்திலே அநாதி சைவராகிய சதாசிவமூர்த்தியின் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்ற ஐந்து திருமுகங்களினின்றும், கௌசிகர், காசிபர், பாரத்துவாசர், கௌதமர், அகத்தியர் என்ற ஐந்து முனிவர்கள் அவதரித்தார்கள். அவர்களுடைய மரபினர் சிவவேதியர் என்றும் ஆதிசைவர் என்றும் சொல்லப் பெறுவர்.

இவர்களுள்ளே சமயதீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை. ஆசார்ய அபிஷேகங்களைப் பெற்றவர்களே சிறந்தவர்கள். பூசை முதலிய செய்யப் பெரிதும் உரியவர்கள். பரார்த்தப் பிரதிட்டை, பரார்த்த பூசை செய்வதற்கு அவர்களே உரியவர்கள். மற்றவர்கள் உரியவர்கள் அல்லர். ஆதலின், அவர்களே வேதாகமங்களை ஓதி ஆலயங்களில் சிவலிங்கப் பெருமானை முப்போதும் தீண்டிப் பூசிக்க எப்போதும் உரியவர்கள் என உணர்க. அவர்கள் பூசித்தால் உலக நலன் வளரும். ஆதி சைவரல்லாத பிராமணர்கள் பூசித்தால் உலகிற்குத் தீமை வரும்.

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை யர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாமென்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே. - *திருமந்திரம்*

முழுநீறு பூசிய முனிவர் புராணம்

"முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்"

சிவமூர்த்தி அருளிச் செய்த சிவாகமங்களில் திருநீறு கற்பம், அநுகற்பம், உபகற்பம் என உரைக்கப்படும். இம்மூன்று வகையான திருநீற்றை யணிய வேண்டும். அகற்ப நீற்றினை அணியக்கூடாது. விதிப்படி திருநீறு புனைவார் காமாதி யறுபகை கழியப் பெறுவர். இருவினை யொப்பு மலபரிபாகம் எய்தப்பெறுவர்.

கற்பம் : கன்றை யுடைய பசு சாணத்தை, பஞ்சப் பிரம மந்திரங் கூறி ஏற்றுப் பஞ்சகவ்யம் விட்டுப் பிசைந்து உருண்டைகளாகச் செய்து உலர்த்தி, சிவமந்திர ஓம மந்திர ஓம நெருப்பிலுள்ள

அக்கினியால் சிவசிந்தையுடன் எரித்து எடுத்த திருநீறு கற்பம் ஆகும்.

அநுகற்பம் : காட்டில் உலர்ந்த பசுவின் சாணத்தைக் கொணர்ந்து பொடித்துக் கோநீர் விட்டுப் பிசைந்து அஸ்திர மந்திரம் கூறி உருட்டி உலர்த்தி ஓம நெருப்பினால் எரித்தது அநுகற்பம் ஆகும்.

உபகற்பம் : காட்டுத் தீயில் வெந்த நீறும், பசுந் தொழுவத்தில் வெந்த நீறும், வேள்வியில் வெந்த நீறும், எடுத்து கோநீர் விட்டுப் பிசைந்து மந்திரம் கூறி, உருட்டி உலர்த்தித் திருமடங்களில் விளங்கும் சிவாக்கினியால் எரித்து எடுத்தது உபகற்பம் ஆகும். இந்தப்படி அல்லாதது அகற்பம்.

இந்த முறைப்படி எடுத்த திருநீற்றை அகம்புறம் தூய்மை யடையுமாறு சிவபெருமான் திருமுன்னும் குருவின் முன்னும், வழிகளிலும், அக்கினி முன்னும் தூய்மையில்லாத இடத்திலும் அணியக்கூடாது.

திருநீறு திரிபுண்டரமாகவும், அர்த்த சந்திர வடிவாகவும், தீப வடிவாகவும் வட்டவடிவமாகவும் அணிவார்கள். நற்குலத்தில் பிறந் தோர்கள்; தருமகுண சீலர்கள்; உண்மை நெறி உணர்ந்தவர்கள்; நீதி நெறி வழுவாதவர்கள். நித்தியமும் திருநீற்றை உடம்பு முழுவதும் அணிந்து மும்மல நீக்கம் பெறுவார்கள்.

விளக்கம்

திருநீறு வினைகளை நீறாக்குவது. உடல் நோய்களையும் உயிர் நோயாகிய பிறவியையும் போக்க வல்லது. "அருநோய்கள் கெட வெண்ணீறு அணியா ராகில்" என்று அப்பரும், 'திருவெண்ணீறிடா மூடர்' என்று அருணகிரிநாதரும் கூறுகின்றனர்.

பசுவின் சாணம் நச்சுக் கிருமிகளைக் கொல்லும் ஆற்ற லுடையது; நாற்றத்தை மாற்ற வல்லது; ஈயம் பூசிய பாத்திரத்தைப் பசுவின் சாணத்தால் சுத்தி செய்வதும், நேர்வாளத்தையும் பசுவின் சாணத்தினால் சுத்தி செய்வதும் கண்கூடு. தாம்பரத்திலும் தாம்பர பஸ்பம் அதிக ஆற்றல் பெறுவதுபோல், பசுவின் சாணத்தினும், அதனாலாகிய நீறு அதிக ஆற்றல் படைத்தது. சாதாரண சாம்பலைத் தெளித்துச் செடி, கொடிகளிலுள்ள கிருமிகளை மாற்றுகின்றனர். ஆகவே, விதிப்படி செய்த திருநீற்றைக் கலாமந்திரம் சம்மிதா மந்திரங்களைக் கூறி அணிவதனால் பிணி இடர் நோய் முதலியன

நீங்குவதுடன் எல்லா நலன்களையும் பெற்று இன்புறுவர். "கவசத் திருநீறு" என்கின்றார் திருமூலர். அவ்வாறு அணியும்போது "சிவாய நம" என்று ஐந்தெழுத்தை ஓதுதல் வேண்டும். அவ்வாறு, ஓதி யணிந்தேன் சிவகதி கொடு என்று இறைவனிடம் கேட்கின்றார் அப்பர். "திருவாய்ப் பொலிய சிவாயநம என்று நீறணிந்தேன் தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூர் அரனே."

அருள்செய் நீறிடார் அமுதுனக் கிடினும்
அம்ம லத்தினை அருந்துதல் ஒழிக.

என்கின்றார் இராமலிங்க அடிகளார்.

சந்யாசியும் ஒருவேளை திருநீறு அணியானாயின் உபவாச மிருந்து பிரணவ ஜபம் பன்னீராயிரம் புரிந்து அப் பாவத்தினின் றும் நீங்கிப் புனிதனாவானாக என்று பஸ்ம ஜாபால உபநிடதங் கூறுகின்றது.

"யதிர் பஸ்ம தாரணம் த்யக்த்வா ஏகதா
உபோஷ்யத் வாதச ஸஹஸ்ரப் ரணவம்
ஜபத்வா ஸுத்தோபவதி"

அப்பாலும் அடிசார்ந்தார் புராணம்

"அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்"

சேர சோழ பாண்டியர்கள் என்னும் மூவேந்தர்களுக்குரிய தமிழ் நாடேயன்றி அப்புறத்திலுள்ள நாடுகளில் வாழ்ந்து இறைவனடி சார்ந்தவரும், திருத்தொண்டத் தொகைபாடும் காலத்திற்கு முன்னாகவும், பின்னாகவும் உள்ள அடியார்களும் அப்பாலும் அடிசார்ந்தார் ஆவார்.

விளக்கம்

சைவசமயம் மிகவும் பரந்தது. "நிற்பதுவும் சரிப்பதுவும் சைவமேயாம்" என்கின்றார் திருஞானசம்பந்தர். சைவசமயம் தேசத்தாலும் காலத்தாலும் கட்டுப்படாதது. அத்துணைப் பரந்த சமயம். "இன்னும் பதினாயிரம் ஆண்டுகளுக்கு அப்பால் சிவநெறி நின்று முத்தி பெற்றார்களாயினும் அவர்களுக்கும் அடியேன்" என்று கூறுகின்றார்.

எல்லாச் சமயங்களையுந் தனக்கு அங்கங்களாகக் கொண்டு சமயங் கடந்த சாந்த பீடத்தில் அமர்ந்து ஞானச் செங்கோல் தாங்கி அன்பு மயமாய் அருள்ஒளி வீசி அரசு புரிவது சைவ சமயம். அதில் சாரும் ஊழ் பெறல் அரிது.

சைவ சமய மேசமயம் சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி காட்டும் இந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலும் சமயநெறி புகுத வேண்டாம் முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாரும் சகத்தீரே.

- தாயுமானார்

பூசலார் நாயனார் புராணம்

"மன்னியசீர் மறைநாவல் நின்றவூர்ப் பூசல்
....அடியேன்"

எக்காலத்திலும் ஒழுக்கத்தால் உயர்ந்த நாடு தொண்டை நாடு. அந்நாட்டில் நான்மறை யுணர்ந்த வேதியர்கள் நிறைந்து வாழ்கின்ற நற்பதி திருநின்றவூர். செல்வம் மிகுந்த அவ்வூரிலே மறையவர் மரபில் வந்தவர் பூசலார் நாயனார். அவர் உள்ளத்தில் எழும் உணர்வு எல்லாம் சிவபெருமான் திருவடிமீது செலுத்தி, வேதநீதி வழுவாது வாழ்ந்தார். அடியார்க்கு வேண்டியதை மிகவும் முயன்று தேடித் தந்து மகிழ்ச்சியுறுவார்.

கங்கையை முடித்த சங்கரனுக்கு ஒரு திருக்கோயில் புதுக்க வேண்டும் என்று எண்ணினார். தம்மிடத்தில் பொருள் இல்லாமையை எண்ணினாரில்லை. எங்கெங்கும் திரிந்து அலைந்து முயன்று பொருள் தேடினார். ஒரு சிறிதும் பொருள் கிடைக்க வில்லை. "எம்பிரானே! உனக்கு ஒரு கோயில் கட்ட நினைந்த எனக்கு அப் பாழும் பொருள் கிடைக்கவில்லையே; இதற்கு என் செய்வேன்?" என்று நினைந்து உள்ளம் நைந்தார்; ஏங்கினார். பின்னர் மனத்தாலே திருக்கோயில் புதுக்கவேண்டும் என்று துணிந்தார். அதற்கு வேண்டிய நிதி, கருங்கல், மரம், சுண்ணாம்பு முதலிய கருவி கரணங்களை யெல்லாம் மனத்தில் சேகரித்துக் கொண்டார். உள்ளத்திலேயே கோயில் கட்டும் சிற்பிகளையும் அமைத்துக்கொண்டார். ஒரு நல்ல நாள்பார்த்துத் திருப்பணியை மனதில் தொடங்கினார். குறிப்பிட்ட நேரத்தில் இவர் ஒருபுறத்தில் அமர்ந்து, மனதில் கடைகால் போட்டார். இரவிலுங்கூட கண் துஞ்சாது அமர்ந்து ஆலயம் புதுக்குவாராயினார். கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், கல்யாண மண்டபம், யாக மண்டபம், அலங்கார மண்டபம், திருமதில்கள், தூபி, ராஜகோபுரம் முதலிய அனைத்தும் அழகாகப் புதுக்கினார். இவ்வாறு, நெடுநாள் அப்பணியை யாற்றினார்.

அடிமுதல் உபான மாதி ஆகிய படைக ளெல்லாம்
வடிவுறுந் தொழில்கள் முற்ற மனத்தினால் வகுத்து மான

முடிவுறு சிகரந் தானு முன்னிய முழத்திற் கொண்டு
நெடிதுநாள் கூடக் கோயில் நிரம்பிட நினைவாற் செய்தார்.

பின்னர், திருக்குளம், உற்சவ மூர்த்திகள், திருத்தேர், திருவா பரணங்கள் முதலிய யாவும் அமைத்தார். எல்லாம் முடிந்தபின் கும்பாபிஷேக நாளை நிச்சயித்தார். கும்பாபிஷேகத்திற்கு வேண்டிய தர்ப்பை, சமித்து, நெய், சிருக்கு சிரவம் முதலிய அனைத்தும் ஆயத்தம் புரிந்துகொண்டார். இரவு பகலாக அப்பணியைச் செய்து கொண்டிருக்கின்றார்.

காஞ்சிபுரத்திலே காடவர் கோமான் என்ற மன்னவன் மிகுந்த பொருட்செலவு செய்து மிக அழகிய சிவாலயம் ஒன்று புதுக்கிப் பூசலார் நாயனார் வைத்த நாளிலேயே கும்பாபிஷேகம் செய்யத் திட்டமிட்டான். அரசனல்லவா? அவனுடைய தகுதிக்குத் தக்கவாறு கும்பாபிஷேக வேலைகள் துரிதமாக ஆயிரக்கணக்கான ஏவலர்கள் மூலம் நிகழ்ந்து கொண்டிருந்தன.

கும்பாபிஷேகத்திற்கு முன்னாள் காடவர் கோமான் கனவில் கண்ணுதற் கடவுள் தோன்றி, "அன்பனே! திருநின்றவூரிலே பூசலார் என்ற உத்தமன் பல நாள் நினைந்து முயன்று முடித்த திருக்கோயி லில் நாளை கும்பாபிஷேகம்; நாம் அங்குப் புகுதல் வேண்டும். ஆதலின், நீ கும்பாபிஷேகத்தை வேறு ஒரு நாளில் வைக்கக் கடவாய்" என்று கூறி மறைந்தருளினார். பூசலாருடைய அன்பை இவ்வாறு அரசனுக்கு இறைவர் அறிவித்தார்.

காடவர்கோன் கண்விழித்து எழுந்தான். கனவை நினைந்து வியந்தான். "எங்ஙனமோ யாரோ ஒருவர் புதுக்கிய கோயிலின் கும்பாபிஷேகத்தின் பொருட்டு அடியேன் அருமையிலும் அருமை யாக அமைத்த ஆலய கும்பாபிஷேகத்தை மாற்றி யமைக்குமாறு ஆண்டவர் ஆணை தருவாராயின், அவர் எத்துணைப் பெரிய வரோ? அவர் புதுக்கிய திருக்கோயில் எத்துணைப் பெரிய சீரும் சிறப்பும் உடையதோ? ஆகவே, நாம் சென்று அக் கோயிலையும் அப் பெரியவரையுங் கண்டு வணங்குதல் வேண்டும்" என்று ஆவல் கொண்டான். பரிவாரங்களுடன் புறப்பட்டுத் திருநின்றவூர் வந்தான். அங்குக் கோயில் எங்கே என்று தேடினான். காணப்படவில்லை. எதிர்பட்டாரைப் பார்த்து, "ஐயா! பூசலார் நாயனார் கட்டிய திருக்கோயில் எங்கே? இன்று கும்பாபிஷேகமாமே? கும்பா பிஷேகத்திற்குரிய சாதனங்கள் ஒன்றும் காணோமே?" என்று வினாவினான். 'இங்கே கோயில் கட்டவுமில்லை; கும்பாபிஷேகமு மில்லை' என்று அவர்கள் விடையிறுத்தனர். மன்னன்

அவ்வூரிலுள்ள மறையவர்களை யழைத்து, "ஐயன்மீர்! இவ்வூரில், பூசலார் என்பவர் யாவர்? அவர் எங்குளார்?" என்று கேட்டான். அவர்கள் அரசன் வந்து அவரைத் தேடி வினாவும் காரணம் யாதோ? என்று அதிசயமுற்று, "அரசே! பூசலார் என்பவர் இந்த வூரில் உள்ளவர். அவர் அதோ அந்த வீட்டில் இருக்கின்றார்" என்றார்கள். அவரை ஆள்களை விடுத்து அழைக்காமல் தானே சென்று பூசலாரைக் கண்டு அவர் அடிமலர் மீது விழுந்து தொழுதான்.

"பெருமானே! தாங்கள் புதுக்கிய ஆலயம் எங்குளது? கும்பாபிஷேகம் இன்றுதான் என்று அறிந்து வந்தேன்."

"ஐயா! அடியேன் ஆலயம் புதுக்கிய செய்தி ஒருவரும் அறியாரே. உமக்கு எவ்வாறு தெரியும்?"

"அண்ணலே! அடியேன் கச்சியம்பதியை யாளும் காடவர் கோன் மன்னன். கச்சியம்பதியில் கண்ணுதற் பெருமானுக்கு ஒரு கற்கோயில் கவின்பெறப் புதுக்கினேன். இன்று கும்பாபிஷேகம் வைத்திருந்தேன். நேற்று இரவு கறைமிடற்றண்ணல் அடியேன் கனவில் தோன்றி, 'திருநின்றவூரில் பூசலான் புதுக்கிய கோயிலில் நாளை கும்பாபிஷேகம். நாம் அங்குப் போக வேணும்; நீ வேறு நாள் அமைக்கக் கடவாய்' என்று கட்டளையிட்டனர். தங்கள் திருவடியை வணங்கவும், அக் கோயிலைக் காணவும் ஆவலுடன் அடைந்தேன். அத் திருக்கோயில் எங்கே?" என்று வினாவி மீண்டும் பணிந்தான்.

பூசலார் நாயனார் அதுகேட்டு உள்ளம் மருண்டார். "ஆ! ஆ! என்னே! ஐயன் கருணை! அடியேனையும் ஒரு பொருளாகக் கொண்டு உனக்கு அறிவித்தனரோ? அரசே! அடியேன் அரனாருக்கு ஆலயம் புதுக்க அவாவுற்றேன். அலைந்து திரிந்து தேடியும் அதற்குரிய அரும்பொன் அகப்படவில்லை. அதனால் அகத்தில் ஓர் ஆலயம் புதுக்கி இன்று கும்பாபிஷேகம் புரிகின்றேன்" என்றார்.

> மன்னவன் உரைப்பக் கேட்ட அன்பர்தாம் மருண்டு நோக்கி
> என்னையோர் பொருளாக் கொண்டே எம்பிரான் அருள்செய் தாரேல்
> முன்வரு நிதியி லாமை மனத்தினால் முயன்ற கோயில்
> இன்னதாம் என்று சிந்தித் தெடுத்தவா றெடுத்துச் சொன்னார்.

அரசர் பெருமான் அதுகேட்டு அளவற்ற அதிசயமுற்றான். அவருடைய இதயக் கோயிலின் பெருமையையும் அரனார் அதில் எழுந்தருளும் அருமையையும் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்தான்.

பன்முறை அவர் பாத பங்கயம் பணிந்து, தானையுடன் மீண்டுங் கச்சியம்பதி போய்ச் சேர்ந்தான்.

பூசலார் நாயனார் குறித்த நேரத்தில் இதயாலயத்தில் ஈசனை எழுந்தருளச் செய்து, அபிஷேகம், ஆராதனை, திருஉலா முதலிய யாவும் குறைவறப் புரிந்தார். அன்று முதல் நாள்தோறும் ஆறுகாலம் வழுவாமல் இறைவனை மனக் கோயிலில் வழிபட்டு முடிவில் அம்பலவாணருடைய அடிமலர் சார்ந்து ஆராவமுத இன்பம் எய்தினார்.

விளக்கம்

திருநின்றவூர்

தொண்டை நன்னாட்டில் உள்ள திருத்தலம். அறுகோணத்தி லிருந்து சென்னை போகும் இருப்புப் பாதையில் தின்னனூர் என்னும் புகைவண்டி நிலையத்தின் அருகில் உள்ளது. திருநின்றவூர் என்பது இப்போது தின்னனூர் என வழங்குகின்றது. அங்குள்ள ஆலயத்துள் எழுந்தருளிய பெருமானுக்கு இருதயாலயேச்சுரர் என்று திருநாமம். வள்ளல் காளத்தி முதலியாருடைய ஊரும் இதுவேயாகும்.

பூசலார் நாயனார்

இவர் சிவனடியே சிந்திக்குந் திருவுடையராய், மறைநெறி நின்று, அடியவர்க் கன்பு செய்து, கலையுணர் காட்சி பெற்றவர்.

> வருநெறி மாறா அன்பு வளர்ந்தெழ வளர்ந்து வாய்மைப்
> பொருள்பெறு வேத நீதிக் கலையுணர் பொலிவின் மிக்கார்.

அகவழிபாட்டின் உயர்வு

புறவழிபாட்டின் பயன் அகவழிபாட்டால் விளையும். சிவ பூஜையின் முக்கியமான அங்கம் அந்தர்யாகம். அது அகத்தால் வழிபடுவது. புறத்துறவினும் அகத்துறவு மேலானது.

> அறந்தா னியற்றும் அவனிலுங் கோடி யதிகமில்லந்
> துறந்தான் அவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
> மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற்று
> இறந்தான் பெருமையை என்சொல்லு வேன்கச்சி ஏகம்பனே.
>
> *- பட்டினத்தார்*

அகவழிபாடு புரிவது எளிதன்று. புறவழிபாடு புரிவார்க்கே அது கைகூடும். இனி "வழிபாட்டிற்கு ஒன்றும் கிடைக்கவில்லை

யானால் நெஞ்சுண்டு; அந்த நெஞ்சால் வழிபட வேண்டும்" என்ற திருப்பாடலுக்கு இவர் இலக்கியமானவர்.

போதும் பெறாவிடில் பச்சிலை யுண்டு புனலுண்டெங்கும்
ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டு இன்றே இணையாகச்செய்யும்
சூதும் பெறாமுலைப் பங்கர்தென் தோணி புரேசர்வண்டின்
தாதும் பெறாத அடித்தாம ரைசென்று சார்வதற்கே.

பூசலார் சிவபெருமானுக்குத் திருக்கோயில் புதுக்க எண்ணி, எங்கும் பொருள் தேடி, பொருள் கிடைக்கப் பெறாதது குறித்து வருந்தி வாடி, அங்ஙனமே அயர்ந்துவிடாமல் அகக்கோயில் புதுக்கினார். அத்திறத்தை எமது சேக்கிழார் பெருந்தகை கூறுகின்ற அழகைக் காண்க.

மனத்தினால் கருதி எங்கும் மாநிதி வருந்தித் தேடி
எனைத்துமோர் பொருட்பே றின்றி என்செய்கேன் என்று நைவார்
நினைப்பினால் எடுக்க நேர்ந்து நிகழ்வுறு நிதிய மெல்லாம்
தினைத்துணை முதலாத் தேடிச் சிந்தையால் திரட்டிக் கொண்டார்.

இனி, உலகத்தார், "மனக்கோட்டை கட்டுகின்றான்" என்பர். அதுபோல் இவர் இஷ்டப்படி கோயில் கட்ட வில்லை. கோயில் கட்டும் சிற்பிகளையும் வேறு கருவி கரணங்களையும் மனத்தில் ஆயத்தம் புரிந்துகொண்டார். கோயில் புதுக்கும் விதிகளை நன்கு கூறுவன காமிகாதி ஆகமங்கள். அந்த ஆகம விதிப்படியும் நல்ல நாள் பார்த்தும் புதுக்கினார். ஏதோ சிறிது நேரம் புதுக்கிவிட்டு மற்ற நேரத்தில் வேறு வேலைகளைப் பார்த்தாரில்லை. காதலுற்ற வன் கண்துயிலான். அதுபோல் இவர் கோயில் புதுக்குங் காதலி னால் இரவிலும் தூங்காது புதுக்கினார். இச்செயலை நினைத்தால் நெஞ்சுருகுகின்றது.

சாதனத் தோடு தச்சர் தன்மையால் மனத்தால் தேடி
நாதனுக் கால யஞ்செய் நலம்பெறு நன்னாள் கொண்டே
ஆதரித் தாக மத்தால் அடிநிலை பாரித் தன்பால்
காதலில் கங்குல் போதும் கண்படா(து) எடுக்க லுற்றார்.

காஞ்சிபுரத்தில் காடவர்கோன் எத்தனையோ லட்சம் பொன் செலவழித்துக் கற்கோயில் புதுக்கினான். அது இன்றும் கைலாய நாதர்கோயில் என்று காட்சி தருகின்றது. சிற்ப நுணுக்கத்தின் சிகரமாக மேல்நாட்டாரும் கண்டு களித்து அதிசயிக்குமாறு விளங்கு கின்றது.

காடவர் கோனும் பூசலாரும் பிரதிட்டை ஒரேநாளில் அமைத்தார்கள். இறைவன் பூசலார் கனவில் வந்து "கச்சி மன்னன் புதுக்கிய கோயிலுக்கு நாம் எழுந்தருள வேண்டும்; நீ நாளை மாற்றி வைத்துக்கொள்" என்று கூறினாரில்லை. அன்றியும் எங்கும் நிறைந்த பரம் பொருளாகிய பசுபதி இரு கோயிலுக்கு ஒரே சமயத்தில் எழுந்தருளுவர். மன்னன் கனவில் தோன்றி அருளிய காரணம் பூசலாரது அன்பின் பெருக்கை உலகறியக் காட்டவேண்டும் என்ற கருணையின் பெருக்கே எனவுணர்க. இக் கருத்தைச் சேக்கிழாரே "தொண்டரை விளக்கத் தூயோன் அருள்செய" என்று கூறுகின்றார்.

காடவர்மன்னன் கனவில் இறைவன் இயம்பும் இன்னமுத செஞ்சொற்கள் கல்லையுங் கரைக்கும். ஆ! ஆ! என்ன அருமை.

நின்றவூர்ப் பூச லன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டால யத்து நாளைநாம் புகுவோம் நீயிங்கு
ஒன்றிய செயலை நாளை ஒழிந்துபின் கொள்வா யென்று
கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில்கொண் டருளப் போந்தார்.

இனிமையுடைய இவ்வரலாற்றைத் தனிமையில் சிந்தித்து அன்பர்கள் உய்வுபெறுக.

மங்கையர்க்கரசியார் புராணம்

"வரிவளையாள் மானிக்கும் (நேசனுக்கும்) அடியேன்"

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மால் போற்ற லாமே.

மங்கையர்க்கரசியார் சோழமன்னனுடைய திருமகளார். அவர் இளமையிலிருந்து சிவபெருமான் திருவடியை மறவாது சிந்தித்து வந்தார். திருநீற்றில் அளவிறந்த அன்புடையவர்.

பாண்டிநாட்டு மன்னவர் கூன்பாண்டியரை மணந்து கொண்டார். அப்பாண்டியர் சமண் சமயம் புகுந்து சமணராயி னார். பாண்டிநாடு முழுவதும் சமண இருள் மூடியது. அந்த இருளில் ஞானவிளக்குபோல் மங்கையர்க்கரசியார் விளங்கினார். மந்திரியாராகிய குலச்சிறையார் மட்டும் சைவநெறி நின்றார். திருஞான சம்பந்தரை யழைத்துச் சமண இருளை மாற்றி, சைவ ஒளியை ஏற்றிப் பாண்டிநாட்டை உய்வித்தார். நெடுங்காலம் கணவனாருடன் சைவ வாழ்வில் வாழ்ந்து சிவபெருமானுடைய திருவடி சார்ந்து இன்புற்றார்.

விளக்கம்

மானி என்பது இவருடைய இயற்பெயர்; பெண்மணிகளுக் கெல்லாம் தலைவியாம் பேறு பெற்றதனால் மங்கையர்க்கரசி யென்று காரணப் பெயர் பெற்றார். இந்த உலகந் தோன்றிய நாள் தொட்டு வந்த பலகோடி பெண்மணிகளில் இவர் ஒருவரே அரசி யாகும் தகுதி பெற்றார்.

மங்கையர்க்கரசி யென்று ஞானசம்பந்தர் சிறப்பித்தருளினார் சேக்கிழாரடிகள். அதுவும் போதாது என்று கருதி "மங்கையர்க்குத் தனியரசி" என்கின்றார்.

திருஞான சம்பந்தர் சிவஞானப் பாலுண்ட தமது திருவாக் கினால் "மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை வரிவளைக் கைம்மடமானி" என்று சிறப்பித்துப் பாடும் மிகப் பெரும் பெருமை பெற்ற பெருமாட்டி. "பூசுரர் சூளாமணியாம் புகலிவேந்தர் போனக ஞானம் பொழிந்த புனித வாக்கால் தேசுடைய பாடல் பெறும் தவத்தினார்" என்று பாராட்டுகின்றார் தெய்வச் சேக்கிழார். இவர் பிறந்த குலமாகிய சோழர் குலத்தையும், புகுந்த குலமாகிய பாண்டியர் குலத்தையும் உயர்வுறச் செய்தார்.

நேராக அம்மையார் திருவடியைப் போற்றுந் தகுதி தனக்கு இல்லை யென்று கருதி, "பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப் போற்றுவார் கழல்எம்மால் போற்ற லாமே" என்று சேக்கிழார் அடிகள் கூறுவாராயின் இவர் பெருமை இமய மலையினும் உயர்ந்ததன்றோ?

நேச நாயனார் புராணம்

"நேசனுக்கும் அடியேன்"

உயர்வும் ஒழுக்கமும் நிறைந்த உத்தமர்கள் வாழுந் திருநகர் காம்பீலி. அப் பழம்பதியில் சாலியர் திருமரபில் அவதரித்தவர் நேச நாயனார். சிவபெருமானுடைய திருத்தொண்டர்களைப் பணிந்து போற்றும் பண்புடையவர்.

இவர் மனத்தை இறைவன் திருவடிக்கும், வாக்கைத் திரு ஐந்தெழுத்துக்கும், கைத் தொழிலை அடியார்க்குமாகச் செய்து வாழ்ந்தார். சிவனடியார்கட்கு உரியனவாக ஆடையும் கீளும் கோவணமும் நெய்து, அன்புடன் அடியார்கட்கு ஈந்து மகிழ்வார். இவ்வாறு, இடையறாது திருத்தொண்டு புரிந்து கண்ணுதற் பெருமான் திருவடி நிழலைச் சேர்ந்தார்.

விளக்கம்

அடியார்களுக்கு மிகவும் பயன்படக் கூடியவை கோவணமும், கிழித்த ஆடையுமாகும். ஆதலினால், அவைகளை அடியார்கட்கு இடையறாது தரும் .பணி சிறந்ததாயிற்று.

காம்பீலி :-

பல்லாரி மாவட்டத்தில் காம்பீலி தாலுகாவில் காம்பீலி என்று ஒரு நகரம் உண்டு. அத்தலத்தில் அவர் அவதரித்தவர்.

அவர் மாயவரத்தைச் சார்ந்த கூரை நாட்டில் வாழ்ந்தார் என்றும், அங்கே சிவாலயத்துள் காம்பீலியிலிருந்து கொணர்ந்த விநாயகர் தண்டபாணி என்ற மூர்த்திகளைத் தாபித்தார் என்றும் ஆன்றோர் கூறுவர்.

இந்நாயனார் மூன்று கரணங்களையும் தெய்வப் பணிக்கே அமைத்தார் என்பதை அடியில் வரும் திருப்பாடலால் அறிக.

ஆங்கவர் மனத்தின் செய்கை அரனடிப் போதுக் காக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்தஅஞ் செழுத்துக் காக்கித்
தாங்குகைத் தொழிலின் செய்கை தம்பிரான் அடியார்க் காகப்
பாங்குடை யுடையுங் கீளும் பழுதில்கோ வணமும் நெய்வார்.

இதனால், ஆன்மாக்களுக்கு வினையேற மாட்டா.

மணிவாசகர் திருவாக்கும் இங்கு உன்னுக.

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த இச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே.

கோச் செங்கட் சோழ நாயனார் புராணம்

"தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்"

புறவின் பொருட்டுத் துலைபுகுந்து தியாகம் புரிந்த சோழர் கட்கு உரிமையாகிய சோழவள நாட்டிலே, காவிரிநதிக் கரையிலே சந்திர தீர்த்தத்தின் அருகில் ஒரு சோலையுண்டு. அப்பூங்காவில் வெண்ணாவல் மரத்தின்கீழ் விளங்கும் சிவலிங்கத்தை ஒரு வெள்ளானை, தவ உணர்வுடன், தும்பிக்கையில் தண்ணீர் முகந்து ஆட்டி பூங்கொத்துக்களை எடுத்துச் சாத்தி வணங்கி வழிபாடு செய்யும். அதனால், அது ஆனைக்கா என்று பேர் பெற்றது.

அங்கு அறிவுடைய ஒரு சிலந்தி, மரத்தின் சருகு இறைவன் மீது உதிரா வண்ணமிருக்கும் பொருட்டு, அன்புடன் தன் வாய் நூலால் பந்தரிட்டது.

மறுநாள் யானை வந்து, இறைவன்மீது இவ்வாறு வாய் நூலால் பந்தரிடுவது அநுசிதம் என்று கருதி அதனை அழித்துவிட்டு வழக்கம்போல் பூசித்து விட்டுச் சென்றது. சிலந்தி அது கண்டு வருந்தி "அந்தோ! இந்த யானை இறைவனுடைய திருப்பந்தரை அழித்ததே" என்று நினைத்து, மீளவும் அன்புடன் பந்தரிட்டது. மறுநாள் மறுபடியும் யானை அழித்தது.

இவ்வண்ணம் பலமுறை நிகழ்ந்தது. இதுகண்ட சிலந்தி சின முற்றது. "ஆ! இவ்வாறு இறைவனுடைய திருப்பந்தரை அழித்துச் சிவப்பணிக்கு இடர்புரியும் இந்த யானையைக் கொல்ல வேண்டும்" என்று கருதியது. நூலால் பந்தரிட்டு அதில் ஒருபுறம் மறைந்திருந்தது. பூசிக்க வந்த யானை அதை அழிக்கும்போது மெல்ல அதன் தும்பிக்கைக்குள் நுழைந்து, நன்கு கடித்தது. அதன் விஷ வேகத்தாலும், கடியினால் ஏற்பட்ட வேதனையாலும் துன்புற்ற யானை மண்மிசை வீழ்ந்து புரண்டது. தும்பிக்கையைப் பலமுறைப் பூமியில் மோதியது. அதனால், சிலந்தி மாண்டது. சிலந்தி விஷத்தால் யானையும் மாண்டது. இறைவன் அருட்காட்சி தந்த யானைக்கும் சிலந்திக்கும் அருள்புரிந்தார். யானை சிவபதம் உற்றது. இறை வனுக்குப் பந்தரிடும் பணியில் அதிவிருப்புடைய சிலந்தி சோழர்

குலத்தில் மன்னவனாகப் பிறந்து மேலும் கோயில் பணி புரியுமாறு இறைவன் திருவருள் புரிந்தார்.

சுபதேவன் என்ற சோழ மன்னன் கமலவதி என்ற மனைவி யுடன் சோழநாட்டை அரசுபுரிந்தான். மகப்பேறு இன்மை குறித்து வருந்தினான். தில்லையம்பதி சென்று மனைவியுந் தானும் அம்பல வாணரை வேண்டித் தவம்புரிந்து கொண்டிருந்தான். சிவபெருமான் திருவருள் செய்தபடி சிலந்தி வந்து கமலவதியின் வயிற்றில் கருவடைந்தது.

கருவளர்ந்து குழந்தை யுதிக்கும் பருவம் வந்தது. சோதிட வல்லுனர் "இன்னும் ஒருநாழிகை கழித்துக் குழந்தை யுதிக்குமேல் இம்மூவுலகும் ஆளக்கூடியதாக இக் குழந்தை இருக்கும்' என்று கூறினர். அதுகேட்ட அரசமாதேவி கமலவதியம்மையார், "என் மகன் ஒரு நாழிகை கழித்துப் பிறப்பதற்கு வழி யாது?" என்று சிந்தித்தாள். தன் தோழிகளுடன் ஆய்ந்தாள். கால் மேலாகவும் தலை கீழாகவும் தன்னை அமைக்குமாறு கூறினாள். அவ்வண்ணமே அவளைத் தலைகீழாகத் தூக்கிக் கட்டினார்கள். காலமுணர்ந்தார் கூறிய நேரம் வந்தவுடன் கட்டினை நீக்கி மகவைப் பெற்றெடுத் தாள். குழந்தை கண் சிவந்து பிறந்தது. தாய் என்மகன் "செங்கணான்" என்றுகூறி, அக்குழந்தையை அணைத்தாள். ஆவி பிரிந்தாள். தாயைப் பிரிந்த சேயைச் சுபதேவன் இனிது வளர்த்தான். கோச்செங்கண்ணர் வேதாகமங்களையும் வில்வேதத்தையும் கற்றுணர்ந்தார். உரிய காலத்தில் மகனுக்கு மகுடம் புனைந்து சுபதேவன் கானகம் புகுந்து தவஞ் செய்து சிவபதம் புகுந்தான்.

கோச் செங்கட் சோழர் உலகத்தை ஒரு நெறி நிறுத்தி அரசாள் வாராயினார். அவர் திருவருளால் முற்பிறப்பின் உணர்வு பெற்றார். சிவபெருமானுக்குக் காதலோடு ஆலயங்கள் பல புதுக்க எண்ணி னார். திருவானைக்காவில் தாம் முதலில் அருள்பெற்ற காரணத்தால் அங்கு வெண்ணாவலடியில் வாழும் செழுநீர்த் திரளாகிய சிவமூர்த்திக்கு அழகிய ஆலயம் புதுக்கினார். முற்பிறப்பில் ஆனை செய்த இடரை நினைத்து ஆனை நுழையாதபடி திட்டிவாயில் அமைத்துப் புதுக்கினார்.

மந்திரிகளை ஏவிச் சோழ நாட்டில் ஆங்காங்குச் சிவாலயங்கள் பல புதுக்கினார். அக்கோயில்கள் தோறும் அமுதுபடிக்கும் திரு விழாக்களுக்கும் நிபந்தங்கள் அமைத்தார். முடிவில், திருத்தில்லை சென்று அம்பலத்தாடும் ஆடலரசனை ஆறு காலங்களிலும் வழி

பட்டு மகிழ்ந்தார். அங்கு, இறைவனைப் பூசிக்கும் அந்தணர்கட்கும் மாளிகைகள் பல புதுக்கித் தந்தார். இவ்வாறு, பல திருப்பணிகள் புரிந்து உலகைப் பொதுவற ஆண்டு, சஞ்சிதவினை தீர்க்கும் குஞ்சித பாதத்தில் கலந்து இன்பமெய்தினார்.

விளக்கம்

ஆனை

காவிரிக்கு வடகரையில் உள்ள வெண்ணாவல் சோலையில் சிவமூர்த்தியை உள்ளன்புடன் இந்த யானை வழிபட்டது. சிலந்தி எச்சில் நூலால் சிவலிங்கத்தின் மீது பந்தரிடுவது அநுசிதம் என்று கருதி, பலகாலும் அதனை அழித்தது. அக்காரணம் பற்றிச் சிலந்திக் கடியால் மாண்டு சிவபதம் பெற்றது.

இந்த யானை வழிபட்ட தலமே திருவானைக்கா என வழங்கப் பெறுகின்றது. ஐம்பூதத் தலங்களுள் ஒன்றாகிய அப்பு க்ஷேத்திரம். செழுநீர்த் திரளாக சிவலிங்கம் விளங்குகின்றது.

சிலந்தி

சிவபெருமானிடம் அளவற்ற அன்பு கொண்ட இச்சிலந்தி, சிவலிங்கத்தின் மீது சருகுகளும் இலைகளும் உதிர்வதற்கு வருந்தி விசித்திரமாக வாய் நூலால் பந்தரிட்டு வழிபட்டது. அதன் அன்பு எத்துணை விழுமியது! ஆராவன்புடன் அங்ஙனம் புரிந்து மகிழ்ந்தது. அதை அநுசிதம் என்று கருதிய யானை பலகாலும் அழிப்பது கண்டு வருந்தியும் சினந்தும், யானையின் தும்பிக்கைக் குள் நுழைந்து கடித்துக் கொன்று தானும் இறந்தது. அச்சிலந்தி சோழமன்னனாகப் பிறக்கும் பெரும்பேறு பெற்றது.

திருக்கயிலையில் சிவகணத்தவருள் மாலியவான் புட்பதந்தன் என்ற இருவர், தமக்குள் சிவத்தொண்டில் தாம் தாமே சிறந்தவர் என்று கருதி மாறுபட்டனர். ஒருவரை ஒருவர் அது காரணமாகச் சினந்து, மாலியவான் புட்பதந்தனை யானையாகுமாறு சபித்தனன்; புட்பதந்தன் மாலிய வானைச் சிலந்தியாகுமாறு சபித்தனன். இரு வரும் இறைவர் ஆணையின்படி இத்திருத்தலத்திலே யானையும் சிலந்தியுமாகப் பிறந்து, சிவபிரானுடைய திருத்தொண்டிலேயே ஈடுபட்டு, பழம் பிறப்பின் பகைகாரணமாக இபபிறப்பிலும் மாறு பட்டுப் பகைத்து மாண்டு வீடுபேறு பெற்றனர். சிலந்தியே முதலில் யானையைக் கொல்ல முயன்றதனால் அதற்கு மீட்டும் ஒரு பிறப்பு வந்தது என்க. அப்பிறப்பும் மேலானதாக எய்தியது.

மறுபிறப்பு

மறுபிறப்பில்லை என்று மயங்குவாரும் உண்டு. இவ் வரலாற்றினால் மறுபிறப்பு உண்டு என்பதையும், முன்செய்த வினைக்கேற்ற பயன் எய்தும் என்பதையும் அறிக.

வாய்நூலால் பந்தரிட்ட புண்ணியத்திற்கு மன்னனாகப் பிறந்து உலக முழுவதும் பொது நீக்கிப் புரக்கும் பெரும்பேறு சிலந்திக்கு உண்டாகியது என்றால், ஆலயப்பணியின் பெருமையை இதனால் நன்கு உணர்க.

> வாய்ச்சங்கு நூலிழைத்த வாய்ச்சிலம்பி தன்னையுயர்
> கோச்செங்கட் சோழனெனக் கூட்டினையே. - *இராமலிங்கர்*

நூலால் பந்தரிட்ட சிவபுண்ணியம் அரச பதவியைத் தருமாயின், கல்லால் ஆலயம் புதுக்கிய தருமசீலர்கட்கு எத்துணைப் பெரிய பதம் கிடைக்கும் என்பதை அன்பர்களே ஊகித்துணர்க.

தாயன்பு

சுபதேவன் என்னும் சோழன் மனைவியாகிய கமலவதி பிள்ளை பெறுங்காலம் வந்தவுடன், 'ஒரு நாழிகை கழித்து பிள்ளை பிறந்தால் சீரும் சிறப்பும் உடையவனாக அம்மகன் விளங்குவான்' என்று அறிஞர்கள் கூறக்கேட்டு, பிரசவ வேதனையைப் பொறுத்து தலைகீழாகத் தன்னைத் தொங்கவிடச் செய்து, உயிர்க்கு இறுதி பயக்கும் என்று கருதியும் தன் மகனுடைய சிறப்பை எண்ணி, அளக்க முடியாத வேதனையைத் தாங்கி, பிள்ளையைப் பெற்று உயிர் துறந்தாள் என்னில், தாயன்பு எத்துணை உயர்ந்தது! அதற்கு நிகர் உண்டா? தன் உயிரினும் உயர்ந்ததாக மகனுடைய நலனைக் கருதிய அம்மாதரசியின் கருணையை அளவிட வல்லார் எவர்? ஆ! ஆ!! கல்லுங் கரையுமே!

கோச்செங்கட் சோழர்

இவர் முன் தான் சிலந்தியாக இருந்து சிவபூஜை செய்ததை உணர்ந்து, சிவபெருமானுக்கு எழுபது கற்கோயில் புதுக்கினார். முற்பிறப்பின் உணர்ச்சியின் பயனாக யானைமீது பகைகொண்டு யானை ஏறாதபடி எல்லாம் மாடக் கோயிலாகவே புதுக்கினார். இவற்றுள் முதலில் செய்த திருப்பணி திருவானைக்கா கோயில். இக் கோயில் யானை நுழையாதபடி சிறுவாயிலுடன் அமைந் துளது.

கோச்செங்கட் சோழர் சிவபெருமானுக்கு எழுபது கோயிலும், திருமாலுக்கு மூன்று கோயிலும் புதுக்கியதாகத் தெரிகின்றது. இதனைத் திருமங்கை யாழ்வாருங் கூறுகின்றார்.

முருக்கிலங்கு கனித்துவர்வாய்ப் பின்னை கேள்வன்
மன்னெல்லாம் முன்னவியச் சென்று வென்றிச்
செருக்களத்துத் திறலழியச் செற்ற வேந்தன்
சிரந்துணித்தான் திருவடிநும் சென்னி வைப்பீர்
இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின் களே.

இவர் சிவமூர்த்தியிடம் அளவிறந்த காதல் கொண்டு, வாழ்நாள் முழுவதும் ஆலயப் பணியிலே ஈடுபட்டார். இவர் செய்த பணிகளைப்பற்றிச் சேக்கிழாரடிகள் கூறுமாறு காண்க.

மந்திரிகள் தமைஏவி வள்ளல்கொடை அனபாயன்
முந்தைவருங் குலமுதலோ ராயமுதற் செங்கணார்
அந்தமில்சீர்ச் சோணாட்டில் அகனாடு தொறுமணியார்
சந்திரசே கரன்அமருந் தானங்கள் பலசமைத்தார்.

அக்கோயில் தொறுஞ்சிவனுக் கமுதுபடி முதலான
மிக்கபெருஞ் செல்வங்கள் விருப்பினால் மிகஅமைத்து.

இவருடைய பெருமையை அடியில் வரும் தேவாரத்தாலும் அறிக.

சிலந்தியும் ஆனைக் காவில் திருநிழற் பந்தர் செய்து
உலந்தவண் இறந்த போதே கோச்செங்க ணானு மாகக்
கலந்தநீர் காவி ரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ ரட்ட னாரே. - அப்பர்

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணம்

"திருநீலகண்டத்துப் பாணனார்க் கடியேன்"

நடுநாட்டில் எருக்கத்தம்புலியூர் என்று ஒரு தலமுண்டு. அத் திருத்தலத்தில் பாணர்மரபில் அவதரித்தவர் திருநீலகண்ட யாழ்ப் பாணர். இவருடைய மனைவியார் இசையே ஒரு வடிவெடுத்தது போன்றவர். அவர் பெயர் மதங்க சூளாமணியார். சிவபெரு மானுடைய திருவடிகளில் சிறந்த அன்புடையவர் இவ்விருவர் களும் சிவபெருமானுடைய புகழை யாழிசையுடன் இனிது உள்ளம் உருகிப் பாடி வழிபடுவார்கள்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் மதுரை சென்று சோமசுந்தரக் கடவுளை வணங்க விருப்பங்கொண்டார். மனைவியாருடன் புறப்பட்டு இடையில் உள்ள திருத்தலங்களையெல்லாம் வணங்கிக் கொண்டு மதுரையை யடைந்தார். அங்கு ஆலவாயண்ணலாரது ஆலயத்திற்கு முன்நின்று இறைவனுடைய புகழை விதிமுறையாகு யாழில் அமைத்து வாசித்தார். அதனைக் கேட்ட சோமசுந்தரக் கடவுள் திருவுள்ளம் மகிழ்ந்து அன்றிரவு தமது தொண்டர்கள் கனவில் சென்று பாணனாரைத் தமது திருமுன் அழைத்துவருமாறு ஆணையிட்டருளினார். அவ்வாறே பாணனார்க்கும் உணர்ச்சி யினில் உணர்த்தியருளினார். மறுநாள் காலை அடியார்கள் வந்து அவரை அஞ்சலி செய்து ஆலயத்துக்குள் அழைத்துச் சென்றார் கள். ஆண்டவன் அருள்வழி நிற்கும் பாணனார் கோயிலுக்குட் சென்று இறைவர் திருமுன் நின்று யாழ்மீட்டிப் பாடினார். திரிபுரம் எரித்தவாறும், தேர்மிசை நின்றவாறும், கரியினை யுரித்தவாறும், காமனைக் காய்ந்தவாறும், அரியயற் கரியவாறும், அடியவற் கெளிய வாறும், அமைத்துப் பரிவினால் பாடியபோது சோமசுந்தரக் கடவுளது திருவுள்ளம் மிகவும் உவந்தது. பாடலுக்கு உருகாதார் யார்? தரை ஈரமாக இருந்தபடியால் அதன் காரணமாக யாழின் சுருதி குறையும் என்று கருதிய எம்பெருமான், "பாணனாருக்குச் சுந்தரப் பலகையிடுங்கள்" என்று அசரீரியாகக் கூறி யருளினார். அதைக் கேட்ட அடியார்கள் அற்புத மடைந்து அவ்வண்ணமே அழகிய ஒரு பலகையைப் பாணனார் முன் இட்டனர். அந்தப்

பொற்பலகை மீது இருந்து பாணனார் பரமனது கருணைத் திறத்தை நினைந்து கண்ணீர் வடித்து அன்பு பெருகிப் பாடினார்.

அந்தரத் தெழுந்த ஓசை அன்பினில் பாணர் பாடும்
சந்த யாழ் தரையில் சீதந் தாக்கில்வீக் கழியும் என்று
சுந்தரப் பலகை முன்னீர் இடுகெனத் தொண்ட ரிட்டார்
செந்தமிழ்ப் பாண னாரும் திருவருள் பெற்றுச் சேர்ந்தார்.

உமையொரு பாகருடைய கருணையை உலகமறிய ஏத்தினார். சிலநாள் அங்குத் தங்கியிருந்தார். திருவாரூர் சென்று தியாகராஜப் பெருமானை வணங்குதற்கு விரும்பினார். சொக்கலிங்கப் பெருமானிடம் பிரியா விடைபெற்றுப் புறப்பட்டார். இடையில் உள்ள திருத்தலங்களையெல்லாம் சேவித்துக் கொண்டு திருவாரூர் சேர்ந்தார். திருக்கோயிலுக்கு முன்னின்று அன்புடன் என்புருகி யாழ் மீட்டி இறைவனுடைய பெருங்கருணையைப் புகழ்ந்து பாடினார். இறைவன் கட்டளை யிட்டவாறு வடதிசையில் உள்ள வேறு வழியில் கோயிலுக்குட் சென்று தியாகராஜப் பெருமானையும் புற்றிடங் கொண்டாரையும் போற்றினார்.

பலநாள் அங்குத் தங்கியிருந்தார். காலங்கள்தோறும் ஆலயஞ் சென்று யாழ் மீட்டிப் பக்தியுடன் பாடி வழிபட்டார். காழியில் கௌரி திருமுலைப்பால் உண்ட கவுணியனாரைச் சேவிக்கப் பெரிதும் விரும்பிப் புறப்பட்டார். சீகாழியடைந்து திருஞான சம்பந்த மூர்த்தியைக் கண்டு வணங்கினார். அவர் திருப்பதிகம் பாடும்போது அதனை யாழில் அமைத்து வாசிக்கும் திருப்பணியைப் பலகாலம் புரிந்தார். திருநல்லூர்ப் பெருமணத்திலே அவருடன் சிவசோதியில் கலந்து இன்புற்றார்.

விளக்கம்

எருக்கத்தம்புலியூர்

திருமுதுகுன்றத்துக்குத் தெற்கே ஏழு மைலில் உள்ள மிக உயர்ந்த சிவத்தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. இத் தலத்திற்கு ராஜேந்திர பட்டினம் என்னுந் திருப்பெயருமுண்டு. நடுநாட்டிலுள்ள க்ஷேத்திரம். அம்மை பெயர் நீலமலர்க் கண்ணம்மை; அப்பா பெயர் நீலகண்டேசுரர். தலவிருட்சம் வெள்ளெருக்கு.

கோயிலுக்குள் வெள்ளெருக்கஞ் செடியுளது. ஸ்ரீமுஷ்ணம் எனும், விஷ்ணு க்ஷேத்திரத்திற்கு நான்கு மைலில் உள்ள திவ்ய தலம். தொழுவார் பிறவிப்பிணி யறுப்பது.

விண்ணோர் பெருமானே விகிர்தா விடையூர்தீ
பெண்ணா ணலியாகும் பித்தா பிறைசூடீ
யெண்ணா ரெருக்கத்தம் புலியூ ருறைகின்ற
அண்ணா எனவல்லார்க் கடையா வினைதானே. - சம்பந்தர்

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்

சுந்தர மூர்த்தி நாயனாருடைய அவதாரம் திருத்தொண்டத் தொகைபாடுதற் பொருட்டே என்க. எனவே, திருவாரூரிலே இறைவனே அடியெடுத்துக் கொடுக்கப் பாடினார். தொகையடியார் ஒன்பதின்மர். தனி யடியார் அறுபது. ஆக அறுபத்தொன்பது. பின்னே நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டத் தொகை பாடிய சுந்தரர், அவரை ஈன்ற சடையனார், இசைஞானியார் ஆக மூவரையும் சேர்த்து நாயன்மார் எழுபத்திரண்டு என்று அமைத்தனர். எனவே, சுந்தரர் பாடியருளியது அறுபது நாயன்மார்களைப் பற்றியே யென்க. அறுபதுதான் நல்ல எண். அந்த அறுபது நாயன்மார்களில் முதலில் நின்றவர் திருநீலகண்டநாயனார். இறுதியில் நிற்பவர் திருநீலகண்ட யாழ்ப்பாணராகும். தில்லைவாழ் அந்தணர் என்பது இறைவன் அடியெடுத்துக் கொடுத்த தொகையடியாராகும். தனியடி யாரன்று. தனியடியார் அறுபதில் முதலிலும் முடிவிலும் இருந்து அணிசெய்பவர்கள் திருநீலகண்டர் என்ற பேருடையவர்களே. முதலிலே நின்ற, மாது சொன்ன சூளால் துறந்த திருநீலகண்டரினும் இவரைப் பிரித்து அறியும் பொருட்டே இவருடைய பேருடன் யாழ்ப்பாணர் என்ற அடைகொடுத்துச் சேக்கிழாரடிகள் கூறியருளினார். எனவே, சுந்தரர் கூறிய அறுபது நாயன்மார்களில் முடிமணியாக நின்று அலங்கரிப்பவர் இந்நாயனார் எனின் இவர் பெருமை அளவிடற் கரியதன்றோ?

இவர் யாழில் இசையுடன் இறைவனுடைய அருட்புகழை எடுத்து அன்புடன் வழிபட்டு முத்தி பெற்றனர். ஆகவே, இறைவனை இசையுடன் அன்போடு பாடுவது எளியவழி. "இறைவன் தன்சீர் திருத்தகும் யாழிலிட்டுப் பரவுவார்" என்று சேக்கிழார் கூறுகின்றார்.

இவ்வாறு, இவர் பாடும்போது இறைவனுடைய மறக்கருணை அறக்கருணை என்ற கோபப் பிரசாதம் பற்றிக் கூறித் துதிக்கின்றார் இவர்.

மறக்கருணை - அடியாரல்லாதாரைத் தண்டித்துத் திருத்துங் கருணை.

அறக்கருணை - அடியார்க்குப் புரியுங் கருணை.

திரிபுரம் எரித்த வாறும் தேர்மிசை நின்ற வாறும்
கரியினை யுரித்த வாறும் காமனைக் காய்ந்த வாறும்
அரியயற் கரிய வாறும் அடியவர்க் கெளிய வாறும்
பரிவினாற் பாடக் கேட்டுப் பரமனார் அருளி னாலே.

கோயில் வாயில் முன்னடைந்து கூற்றஞ் செற்ற பெருந்திறலும்
தாயின் நல்ல பெருங்கருணை அடியார்க் களிக்கும் தண்ணளியும்
ஏயுங் கருவி யிற்றொடுத்தங் கிட்டுப் பாடக் கேட்டங்கண்
வாயில் வேறு வடதிசையில் வகுப்பப் புகுந்து வணங்கினார்.

இந்த இருபாடல்களில் இறைவனுடைய கோபப்பிரசாதம் வருவதை யுணர்க.

பாணர்கள் பண்டைநாள் ஆலயத்திற்குப் புறத்தே நின்று வழிபட்டார்கள். அந்த நியதி அருள் ஞானங் கைவரப்பெற்ற திரு நீலகண்ட யாழ்ப்பாணர் போன்றோர்க்கு இல்லையென உணர்க. அதனாலேயே, மதுரையில் பெருமான் உள்ளே வரச்செய்து அருளினார். துவாத சாந்தத் தலமாதலின் மதுரையில் நேரே வரச் செய்தும், திருவாரூரில் வேறு வாயிலில் வரச் செய்தும், பெருமான் அருளிய அருள்திறத்தை உன்னுக.

ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான்புகில் அளவில்லை; கிளக்கவேண்டா"

என்கின்றார் திருஞானசம்பந்தர்.

இவருடைய பாடலைக் கேட்ட மதுரைப் பரமனார் ஈரத்தரை யின் குளிர்ச்சிபட்டு நரம்பின் முறுக்கு அவிழ்ந்து சுருதி கெடும். அதனால், பாடலின் இசை கெடும் என்று கருதிப் பொற்பலகை யிடச் செய்தார் எனின், இவருடைய பாடலின் அருமை எத்துணை விழுமியது என்று சிந்தித்துணர்க. மேலும், இறைவர் திருமுன் பீடத்தில் அமரும் பேறு பெற்றார் என்பது அதனினும் விழுமியது.

இவரை நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் திருஞான சம்பந்தரும் பாராட்டி இறுதிவரை தன்னுடனேயே இருந்து யாழ் வாசிக்குமாறு அருளிய அருமைப்பாடும் சிந்தனைக்குரியது.

இவர் இறைவனை யாழில் செந்தமிழ் மொழியாலேயே பாடித் துதிக்கும் திறம் உடையவர். இதனைச் "செந்தமிழ்ப் பாணனார்" என்று குறிப்பிடுவதனால் அறிக.

இவரை அந்தணர் குலமணியாகிய திருநீலநக்க நாயனார் தமது யாக சாலையில் தங்க வைத்ததும், இவர் அங்குச் சென்ற வுடன் யாகாக்கினி வலம் சுழித்ததும் இவர் பெருமையை விளக்கு கின்றன.

பாணர் மரபினர் ஆலயத்துட் சென்று வழிபடும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. அவ்வாறிருந்தும் சிவபக்தியுடைய இவருக்கு அந்த நியதி இலதாயிற்று. எனவே, இவரைப் போன்ற சிவநேசமும் ஒழுக்கமும் உடையார்க்குக் கட்டுப்பாடு இல்லை என இது அறி விக்கின்றது.

யாழ் :- யாழ் வேறு வீணை வேறு என அறிக.

"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்"

- திருவாசகம்

இந்த யாழையும் வீணையையும் முதன்முதலாக அமைத்து ஒடுங்கிய உலகம் மீண்டும் மலரும் பொருட்டுச் சிவபெருமான் வீணை வாசித்தார் என்பதைத் தேவாரத்தாலும் அறிக.

பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்
இருங்கடன் மூடி பிறக்கும் இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமுங் கொண்டு கங்காளராய்
வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே.

-அப்பர்

சடைய நாயனார் புராணம்

**"என்னவனாம் அரனடியே யடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க் கோன்"**

நடுநாட்டில் ஒரு பகுதியாகிய திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூர் என்னும் தலத்திலே ஆதிசைவர் திருமரபிலே அவதரித்தவர் சடைய நாயனார். இவர் இளமையில் வேதாகமங் களையெல்லாம் கற்றனர். நற்குணங்கள் அனைத்தும் அணிகலமாகக் கொண்டவர். இசைஞானியார் என்ற வாழ்க்கை துணைவியாருடன் இனிது வாழ்ந்தனர். மாதவத்தின் பயனாக சுந்தரமூர்த்தி நாயனாரைப் புதல்வராகப் பெற்றனர். இடையறாது சிவபெரு

மானை வணங்கியும் வாழ்த்தியும் பூசித்தும் நேசித்தும் முடிவில் ஈசனார் வாசமலர்ப்பாத நிழல் சார்ந்து இன்புற்றனர்.

விளக்கம்

சடைய நாயனார்

சமயகுரவர் நால்வரில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனாரை மைந்தராகப் பெற்றவர் இவர்.

திருஞான சம்பந்தரைப் பெற்ற சிவபாத இருதயரும், திருநாவுக்கரசரைப் பெற்ற புகழனாரும் அறுபத்துமூன்று நாயன்மார்களில் வைத்து எண்ணப்படவில்லை. என்ன காரணம்? சம்பந்தரும் அப்பரும் சிவபெருமானைப் பாடியவர்கள். சுந்தரர் அடியார்களைப் பாடியவர். அரன் வழிபாட்டினும் அடியார் வழிபாடு சிறந்தது.

> இறைவரோ தொண்டருள் ஒடுக்கம்
> தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

என்றபடி திருத்தொண்டரை வழிபட்டு, திருத்தொண்டத் தொகை சொல்லி, உலகை உய்வித்த திருமகனாரைப் பெற்றதனால் இவர் நாயன்மாருள் ஒருவராம் பேறு பெற்றனர் என்க. "ஒழியாப் பெருமைச் சடையனார்" என்று இவரைச் சேக்கிழாரடிகள் புகழ்கின்றார்.

இனி, இவர் பெரிய தியாக புருஷராகவும் திகழ்ந்தார். இவர் தவஞ்செய்து அரிதிற் பெற்ற ஒரு மகனை, நரசிங்க முனையர் கேட்டவுடனே அவருக்குத் தந்துவிட்டார். இதனால், இவருடைய தியாகம் வெளிப்படுகின்றது. இத்தகைய பல சிறப்புக்கள் இவர்பால் இருந்தபடியால் "மேம்படு சடையனார்" என்று ஆசிரியர் அருளிச் செய்தனர்.

இசைஞானியார் புராணம்

"இசைஞானி காதலன் திருநாவலூர்க் கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே."

திருநாவலூரிலே ஆதிசைவர் மரபிலே உதித்த சடையனாருக்கு வாழ்க்கைத் துணைவியாக இருந்தவர் இசைஞானியம்மையார். அவருடைய கருத்தறிந்து கற்பு நெறி நின்று அறம் பலபுரிந்து அன்புடையவராய் வாழ்ந்தனர். இவர் அரு)பெருந் தவம்புரிந்து நம்பியாரூரரைப் புதல்வராகப் பெற்றனர். சிவபக்தியும் பதிபக்தியும் பூண்டு வாழ்ந்து முடிவில் முழுமுதற் கடவுளாம் பரமேசுவர னுடைய பதமலர் சேர்ந்து பரம சுகமுற்றனர்.

விளக்கம்

"ஏதமில் கற்பின் வாழ்க்கை மனை இசை ஞானியார்" என்று சேக்கிழாரடிகள் கூறுகின்றார். குற்றமில்லாத கற்புடைய இவருடைய புண்ணியத்தின் திரட்சியே ஓர் உருவாகத் திரண்டு வந்தவர் சுந்தரமூர்த்தி நாயனார் என்க.

உலகிற்குப் புரிகின்ற கேடுகளுள் முதன்மையானது தீய மைந்தனைப் பெறுதல். நன்மைகளுள் முதன்மையானது தூய மைந்தனைப் பெறுதல். ஆகவே, திருத்தொண்டத் தொகை பாடி உலகங்களை யெல்லாம் உய்வித்த உத்தமப் புதல்வரை யீன்ற இந்த உத்தமியார் பெருமை உரைக்குந் தரமன்று. எண்ணுக்கும் எழுத்துக் கும் அடங்காதது. ஆதலினாலன்றோ, சேக்கிழாரடிகள் அடியில் வருமாறு கூறுகின்றார்.

இழியாக் குலத்தின் இசைஞானிப் பிராட்டி யாரை என்சிறுபுன்
மொழியால் புகழ முடியுமோ முடியா தெவர்க்கும் முடியாதால்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினோ
டொன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

பெரியபுராணம் முற்றிற்று
திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

பிழை திருத்தம்

பக்க எண்	வரி எண்	பிழை	திருத்தம்
24	37	பரதவிப்பார்	பரிதவிப்பார்
25	21	பரிசனததால்	பரிசனத்தால்
98	14	இருணடதிருக்	இருண்டதிருக்
263	28	செய்த்படியினால்	செய்தபடியினால்
279	3	மெய்யம்மையே	மெய்ம்மையே
328	19	வளைத்து	இளைத்து
479	31	கொளம்பூதூர்	கொள்ளம்பூதூர்
490	16	மகா தோரணம்	மகர தோரணம்
535	3	மூர்க்கற்கும்	மூர்க்கர்க்கும்
544	4	சாக்கியற்கும்	சாக்கியர்க்கும்
607	3	புகழ்ச் சோழற்கு	புகழ்ச் சோழர்க்கு
612	3	முனையரையற்	முனையரையர்க்
613	17	நரசிங்கமுனைய	நரசிங்கமுனையரைய
616	3	அதிபத்தற்	அதிபத்தர்க்
638	3	முனையடுவாற்	முனையடுவார்க்
667	12	அறுகோணத்தி	அரக்கோணத்தி



வெளியீடு:
குகஸ்ரீ வாரியார் பதிப்பகம்